துறைதோறும் கம்பன்



துறைதோறும் கம்பன்

(காரைக்குடி கம்பன் தமிழ்ஆய்வுமையம் நடத்திய கம்பராமாயண உலகத்தமிழ் ஆய்வுக் கருத்தரங்கக் கட்டுரைகளின் தொகுப்பு நூல்)

பதிப்பாசிரியர்கள்

'கம்பன் அடிசூடி' **பழ.பழனியப்பன்**

முனைவர் **சொ.சேதுபதி**

முனைவர் **மு.பழனியப்பன்**

முனைவர் **இரா.குறிஞ்சிவேந்தன்**

பேராசிரியர் **சொ.அருணன்**

கம்பன் தமிழ்ஆய்வுமையம்,
கம்பன் மணிமண்டபம்
காரைக்குடி -630001

வெளியீடு

கபிலன் பதிப்பகம்

321, மூன்றாம் முதன்மைச்சாலை,
மகாவீர் நகர், இலாசுப்பேட்டை,
புதுச்சேரி-605 008
arunankapilan@gmail.com

2014

THURAI THORUM KAMBAN

(Research papers presented at the World Tamil Kambaramayana research Conference.)

Kamban Tamil Research Centre©
Karaikudi.

First Edition - March 2014

Editors:
'Kamban Adisoodi' **Pazha. Pazhaniappan**
Dr. **C. Sethupathi**
Dr. **M. Palaniappan**
Dr. **R.Kurinjivendan**
Prof. **C.Arunan**

Pages: 816
Rate: 750/-

Published By:
KAPILAN PATHIPPAGAM
321. 3rd Main Road,
Mahavir Nagar, Karuvadikkuppam,
Puducherry - 605 008.
arunankapilan@gmail.com

Printed at:
SURYA PRINT & SOLUTIONS
Sivakasi.

ISBN: 978-81-922092-7-2

காரைக்குடி கம்பன் திருநாள் பவளவிழாவை ஒட்டி நடத்தப் பெற்ற கம்பராமாயண உலகத் தமிழ்ஆய்வுக் கருத்தரங்கில் டாக்டர் நல்லி சி.குப்புசாமி செட்டியார் அவர்களால் வெளியிடப்பெற்றது.



நின்னை வணங்கி, நீவகுத்த நெறியில் நிற்கும் அதுஅல்லால்,
என்னை, அடியோம் செயற்பால? **- கம்பன்**

(நாட்டரசன்கோட்டை, கம்பன் அருட்கோயிலில் பங்குனி அத்தத்திருநாள் வழிபாட்டில், உடன் உதவுவோர் மெ.நா.சிதம்பரம், பின்னாளில் கம்பன் அறநிலையத் தலைவரான மு.மெ.முத்துராமன், இந்நாள் கம்பன் கழகச் செயலர் கம்பன் அடிசூடி)

கம்பன் அருட்கவி ஐந்து

1. நாட்டை ராகம்

உலகம் யாவையும் தாம்உள வாக்கலும்
நிலைபெறுத்தலும் நீக்கலும் நீங்கலா
அலகுஇலா விளையாட்டு உடையார் - அவர்
தலைவர் அன்னவர்க்கே சரண் நாங்களே. 1

2. ஆரபி ராகம்

வாணாள் அளித்தி, முடியாமல் நீதி வழுவாமல் நிற்றி- மறையோய்!
பேணாய், உனக்கோர் பொருள்வேண்டும் என்றுபெறுவான் அருத்தி பிழையாய்
ஊணாய், உயிர்க்கும் உயிராகி நிற்றி உணர்வாய பெண்ணின் உருவாய்,
ஆணாகி, மற்றும் அலிஆதி!-ஆர், இவ்அதிரேக மாயை அறிவார்? 8255

3. கௌளை ராகம்

வேதங்கள் அறைகின்ற உலகு எங்கும் விரிந்தன உன்
பாதங்கள் இவை என்னின், படிவங்கள் எப்படியோ?
ஓதம் கொள் கடல் அன்றி, ஒன்றினோடு ஒன்று ஒவ்வாப்
பூதங்கள்தொறும் உறைந்தால், அவைஉன்னைப் பொறுக்குமோ? 2563

'நீஆதி பரம்பரமும்: நின்னவே உலகங்கள்
ஆயாத சமயமும் நின் அடியவே அயல் இல்லை
தீயாரின் ஒளித்தியால் வெளி நின்றால் தீங்கு உண்டோ?
வீயாத பெரு மாய விளையாட்டும் வேண்டுமோ? 2569

4. வராளி ராகம்

வங்கியம் பல தேன் விளம்பின வாணி முந்தின பாணியின்
பங்கி அம்பரம் எங்கும் விம்மின பம்பை பம்பின பல் வகைப்
பொங்கு இயம் பலவும் கறங்கின நூபுரங்கள் புலம்ப, வெண்
சங்கு இயம்பின கொம்பு அலம்பின, சாம கீதம் நிரந்தவே. 1554

5. ஸ்ரீ ராகம்

'உன்னை உள்ளபடி அறியோம் உலகை உள்ளதிறம் உள்ளோம்
பின்னை அறியோம் முன்அறியோம் இடையும் அறியோம், பிறழாமல்
நின்னை வணங்கி, நீவகுத்த நெறியில் நிற்கும் அதுஅல்லால்,
என்னை, அடியோம் செயற்பால?-இன்பதுன்பம் இல்லோனே! 8662

கம்பன் புகழ்பாடி, கன்னித்தமிழ் வளர்க்கும் கம்பன் கழகமும் கம்பன் தமிழாய்வு மையமும்

தென்பாண்டிநாட்டின் செம்மைசால் நகரமாக விளங்கும் காரைக்குடியின் பெருமைமிகு இலக்கியப் பேரமைப்புகளுள் மிகவும் குறிப்பிடத்தக்கது காரைக்குடி கம்பன் கழகமாகும்.

அண்ணல் காந்தியடிகளின் அருமைச்சீடராய் விளங்கிய தேசத் தொண்டர். சா.கணேசன் அவர்கள். கம்பனின் இராமாவதாரக் காப்பியத்தால் பெரிதும் ஈர்க்கப்பெற்று காரைக்குடியில் 1939 ஏப்ரல் 2. 3 ஆகிய நாட்களில் ரசிகமணி டி.கே.சி தலைமையில் கம்பன் புகழ் பாடிக் கன்னித்தமிழ் வளர்க்கும் தம் வாழ்நாள் வேள்வியைத் தொடங்கினார். காரைக்குடியிலிருந்து 30 கல் தொலைவில் உள்ள நாட்டரசன் கோட்டையில் உள்ள கம்பன் சமாதிக்கோயில் வளாகத்தில். கம்பன் கவியரங்கேற்றிய பங்குனி அத்தத் திருநாளிலும். அதற்கு முந்திய மூன்று நாட்களான பங்குனி மகம். பூரம். உத்திரம் ஆகிய நாட்களில் காரைக்குடியிலும் கம்பன் திருநாளைக் கொண்டாடினார்.

கம்பன் திருநாளின் முதல்நாளான திருநாள் மங்கலப் பேரவையை. கம்பன் மலர் வணக்கத்துடன் தொடங்குவார். அதற்கெனவே. 108 போற்றித் தொடர்கள் அடங்கிய அற்புதமான கவிமலரை யாத்தார். இசைக்கலைஞர் ஒருவர் பாட. குழந்தைகள் இருவர் கம்பன் படத்திற்குத் தாமரைமலர் இட்டு வணங்குவர். நாட்டரசன்கோட்டை கம்பன் அருட்கோயிலில் அத்தநாள் வழிபாடு நிகழ்த்துவதற்கென என்று கம்பராமாயணப்பாடல்கள் ஐந்தினை. 'கம்பன் அருட்கவி ஐந்து' எனத்தேர்ந்தெடுத்து அவற்றுக்கு. திருவையாறு தியாகராஜர் சமாதியில் பாடும் பஞ்சரத்னக் கீர்த்தனைக்குரிய அதே ஐந்து கனராகங்களில் ஸ்வரம் அமைத்துப் பாடவும் ஏற்பாடு செய்தார். இன்றும் இந்த நடைமுறைகள் பின்பற்றப்பெறுகின்றன.

தம் இயற்பெயரைவிடவும் 'கம்பன் அடிப்பொடி' என்னும் சிறப்புப் பெயரே அவருக்கு நிரந்தரமாகும் வண்ணம் கம்பன் பெயர் விளங்க நிறுத்தி அவர் ஆற்றிய அரும்பணிகள் மிகப்பலவாகும். கம்பன் பிறந்த நாளை நாம் அறியச் சான்று ஏதும் கிடைக்காததால். அவன் தன் இராமாவதாரக் காப்பியத்தை அரங்கேற்றியதாகத் தனிப்பாடல்

ஒன்றின் துணையால் அறிய நேர்ந்த நாளையே (கி.பி 886, பெப்ருவரி 23உ புதன்கிழமை) கம்பன் கவிச்சக்கரவர்த்தியாக இப்பூவுலகில் அவதரித்த நாளாகக்கொண்டு கொண்டாடி வந்தார் அவர் விடுதலை வேள்வியில் ஈடுபட்டு அலிபூர் சிறையில் இருந்தபோதும் விழா நிகழ்ச்சிகளைச் சிறையிலிருந்தபடியே அமைத்துத் தன் நண்பர் மெ.நா. சித.சிதம்பரம் அவர்களைக் கொண்டு நடத்தினார். ஆண்டு தவறாது 44 ஆண்டுகள் தொடர்ந்து தம் வாழ்நாள் வரை (1982) கம்பனுக்கு விழாக் கொண்டாடினார். 1983முதல் அவர் விரும்பியவண்ணமே அவர்தம் தலைமாணாக்கரான கம்பன் அடிசூடியை செயலாளராகக் கொண்டு அதேமுறையில் தொடர்ந்து 30 ஆண்டுகளாக விழா நடத்தப் பெற்று வருகிறது.

கம்பன் கழகம், தன் பொன்விழாவை ஒட்டி, 1989ல் முதன் முதலில், தமிழகத்திற்குச் சாகித்திய அகாதெமியினரை அழைத்து வந்து, அகில இந்திய இராமாயண மாநாட்டை இருநாட்கள் நடத்திப் பெருமை கொண்டது. அந்த வரிசையில், கம்பன் அடிப்பொடியின் உளப்பாங்கின் வண்ணம் ஒருவார விழாவாக இக்கழகத்தின் பவளவிழா, சென்ற ஆண்டு (2013) இனிதே நிகழ்ந்தேறியது.

உலகில் வேறு எங்கும், எம்மொழிக்கும் இல்லாததான மொழிக்கான திருக்கோயிலை, தமிழக அரசின் ஆதரவோடு கம்பன் மணிமண்டப வளாகத்தில் நிறுவியவர் கம்பன்அடிப்பொடியார். தமிழ்த்தாய், அகத்தியர், தொல்காப்பியர், கம்பன், திருவள்ளுவர், இளங்கோவடிகள், ஒலித்தாய், வரித்தாய் ஆகியோரின் சிலா வடிவங்களோடு அறுகோண அமைப்பிலான கல் திருப்பணித் திருக்கோயிலாக விளங்குகிறது அத்திருக்கோயில். தமிழ்த்தாய், ஒலித்தாய், வரித்தாய் சிலைகள், கம்பன் அடிப்பொடியாரின் வளர்ப்பு மைந்தரான 'சிற்பகுரு', வாஸ்து விஞ்ஞானி வை. கணபதி ஸ்தபதி அவர்களால் வடிவமைக்கப்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

மேலும், 1968ல் நிகழ்ந்த இரண்டாம் உலகத் தமிழ் மாநாட்டில் கலைக் கண்காட்சிக் குழுவிற்குத் தமிழகமுதல்வர், பேரறிஞர் அண்ணாவின் வேண்டுதலால் தலைமையேற்ற கம்பன் அடிப்பொடியார், கண்டோர் வியக்கும்வண்ணம் கலைக்காட்சியை நடத்திய தோடு, 'கையேடு' என்ற கருத்துக் கருவூலத்தையும் பதிப்பித்தார். பிள்ளையார்பட்டித் தல வரலாறு, இராஜராஜன், தமிழ்த்திருமணம், *Some Iconographic Concepts*, கட்டுரைக் களஞ்சியம் உள்ளிட்ட பல்வேறு நூல்களைத் தமிழுலகிற்கு

நல்கிய அவர் பல்துறை ஆற்றல் மிக்க படைப்பாளி கருதியது முடிக்கும் கர்மயோகி.

நெடுங்காலமாய், கம்பராமாயணத்திற்கு, மூலபாடம் இல்லாதிருந்த குறையைப் போக்கப் பெருமுயற்சி மேற்கொண்டார். சில தமிழ் அறிஞர்களின் துணையோடு, எண்ணற்ற ஏட்டுச்சுவடிகள், பழம்பெரும் பதிப்புகளை ஆராய்ந்து முடிந்த அளவிற்குப் பாட பேதமற்ற, கல்லாதாரும் எளிதில் புரிந்து படிக்கும்படியாகச் சந்தி பிரித்து பொருள் மாலையுடன் கூடின ஒரு பதிப்பினை, தம் நண்பர் மர்ரே எஸ் ராஜம் உதவியுடன் சிறப்புறப் பதிப்பித்தார். ஆறு காண்டங்களையும் தனித் தனியாகக் கொண்ட அற்புதக்களஞ்சியம் அது. கூடவே, பன்னருங் கலை தெரி 'பட்டிமண்டபத்தோடு', மேல்முறையீட்டுப் பட்டிமண்டபம், நற்றமிழ் முற்றம், கவியரங்கம், மகளிர் மண்டலம், ஆடகஅரங்கு உள்ளிட்ட மேடைஇலக்கிய வடிவங்களையும் தண்ணார் தமிழகத்திற்கு முன்வந்து அறிமுகப்படுத்திய பெருமை அன்னாருக்கே உண்டு.

காரியதரிசி, செயலர் என்றிருந்ததைச் செயலாளன் என்றதும், பிரசங்கம் என்றிருந்ததைச் சொற்பொழிவு என்றாக்கியதும், அவரே. பழந்தமிழ்ப்பண்பாட்டை நினைவுபடுத்தும் விதமாக அரங்கை அமைக்கும் நேர்த்தியும், நிகழ்வுகளை அறிமுகப்படுத்தும் பாங்கும், பார்வையாளர்களில் தகுதிப்பாடுடையவர்களை நோக்கர்களாகத் தேர்ந்தெடுத்துப் பட்டிமண்டபத்தில் தக்க அணி, வெற்றிபெறக் குடவோலையில் வாக்களிக்கச் செய்வதுமாய்ப் பல்வேறு மரபார்ந்த புதுமைகளைச் செய்ததும் குறிப்பிட்டறிய வேண்டியது. வென்ற அணியினர் போக, எஞ்சிய அணியினர் மேல்முறையீடு செய்து உண்மை வென்றிட உழைக்கும் பட்டிமண்டப நிகழ்வில் இதுவரை வந்த தலைப்பு மறுமுறை வந்ததே இல்லை என்பது வரலாற்று உண்மை. அதுபோல், உரியபொழுதில் வரத்தாமதிக்கும் எவருக்காகவும் காத்திருந்த வரலாறும் இல்லை.

முன்னரே எழுத்தில் இசைவுபெற்று முறையாக நிகழ்வுக்கு முன்னும் பின்னும் பங்கேற்பாளர்களோடு தொடர்புகொண்டு விருந்தோம்பி விழா நடத்தும் கம்பனடிப்பொடியாரின் 'சென்சாருக்கு'த் தப்பாமல் எந்தக் கவிஞரும் அரங்கேறி முழங்க முடியாது. கி.வா.ஜ. முதல் கண்ணதாசன் வரை எல்லாருக்கும் இதுதான் நியதி. நெறியின் புறஞ்செல்லா நேரிய பாங்கில் செறிவாய்க் கம்பனையும் தமிழையும் இலக்கிய, வாழ்வியல்

நேர்த்திகளையும் மக்களுக்கு உணர்த்தும் மாமண்டபமாக விளங்கும் நேர்த்தியை நேரில் கண்டால்தான் உணரமுடியும். என்றாலும் தொடர்ந்து அனைத்து வானொலி நிலையங்களும் அந்நிகழ்வுகளை நேரடியாக ஒலிபரப்பிப் பெருமைபெற்றன. பின்னர் தொலைக்காட்சியமைப்புகளும் அப்பணியைத் தொடர்ந்தன. பத்திரிகை முதலான ஊடகங்களின் பங்கும் குறிப்பிடத்தக்கதாக அமைந்திருக்கக் காணலாம்.

விழாத்தொடங்குமுன், 'கம்பன் வாழ்க, கம்பன் புகழ் வாழ்க, கன்னித்தமிழ்வாழ்க' என்னும் முழக்கத்தை, வெண்கலக் குரலில் கம்பன்அடிப்பொடியார் முன் எழுப்ப, அரங்கிலுள்ளோர் அனைவரும், 'வாழ்க வாழ்க' என்று இணைந்து வாழ்த்தொலிக்க, குறித்த நேரத்தில் நடக்கும் ஒரேவிழாவாக, சாதி, மத, பதவி, அரசியல் சார்பு பேதமற்று, உலகப்பேரறிஞர்களோடு, இந்திய மற்றும், தமிழகத்தின் தலைசிறந்த அறிஞர்கள் எல்லோரும் பங்கேற்கும் தமிழ் இலக்கியவிழாவாகக் கம்பன் விழாவை வடிவமைத்த பெருமைக்கும் அன்னவரே முன்னவர் அவரே, தமிழகம் மற்றும் பிறநாடுகளில் கம்பன் கழகங்கள் தோன்றவும் காரணமாயினார்.

இன்றளவும் புதிதாகத் தொடங்கப் பெறும் சேய்க்கழகங்களுக்கு முதன்முதலில் சீராட்டு நல்கி நல்வாழ்த்தளிக்கும் தாய்க்கழகமாகக் காரைக்குடி கம்பன் கழகம் திகழ்ந்து வருவது யாவரும் அறிந்ததே.

படைப்பாளிகள், பத்திரிகையாளர்கள், கவிஞர்கள், கலைஞர்கள், கல்வியாளர்கள், அரசியலாளர்கள், தமிழகம் மற்றும் புதுவை மேனாள் முதல்வர்கள், அதிகாரிகள், ஆட்சியாளர்கள், நிர்வாகிகள், ஆன்மிகப் பெரியார்கள், மொழியியல் வல்லுநர்கள், மொழிபெயர்ப்பாளர்கள், பல்கலைக்கழகத் துணைவேந்தர்கள், பேராசிரியர்கள், நீதியரசர்கள், வழக்கறிஞர்கள் எனப் பல்துறை வித்தகர்களும் வந்து பங்கேற்றுச் சிறப்பித்திருக்கின்றனர்.

உள்ளூர் தொடங்கி உலக நாடுகள் வரை பல்துறையாளர்கள் வந்து பார்வையாளர்களாக, சுவைஞர்களாகப் பங்கேற்ற பெருமை இந்தக் கழகத்திற்கே உண்டு.

ரசிகமணி டி.கே.சி. தொடங்கி, சொ.முருகப்பா, ராய.சொ., ப.ரா., எம்.எஸ். பூரணலிங்கம்பிள்ளை, ஏ.சி.பால்நாடார், கு.அருணாசலக் கவுண்டர், பண்டிதமணி மு.கதிரேசச்செட்டியார், அ.மு.சரவணமுதலியார்,

ந.மு.வேங்கடசாமிநாட்டார், பொ.திரிகூடசுந்தரன், பி.ஸ்ரீ. ஆச்சார்யா, வெள்ளக்கால் சுப்பிரமணியமுதலியார், எஸ்.வையாபுரிப்பிள்ளை, அ.சீ.ரா, வ.ரா., மு.அருணாசலம், ஞா.தேவநேயப்பாவாணர், ஜி.சுப்பிர மணிய பிள்ளை, நா.கிரிதாரி பிரசாத், பு.ரா.புருஷோத்தமநாயடு, ச.து.சு. யோகியார், ரா.பி.சேதுப்பிள்ளை, மு.இராகவையங்கார், கோவைக்கிழார் சி.எம். இராமச்சந்திரச் செட்டியார், இராஜாஜி, கல்கி, வெ..சாமிநாதசர்மா, தெ.பொ.மீ., தொ.மு.பாஸ்கரத் தொண்டைமான், ஜீவா (ப.ஜீவானந்தன்), எஸ்.ஆர்.கே (எஸ்.இராமகிருஷ்ணன்), அ.ச.ஞா(னசம்பந்தன்),தவத்திரு குன்றக்குடி அடிகளார், ம.பொ.சி (ம.பொ.சிவஞானம்), கி.வா.ஜ(ஜகந்நாதன்), திருலோகசீதாராம், தொ.மு.சி.ரகுநாதன், கலைஞர்.மு.கருணாநிதி, ஹா.கி.வாலம், க.கு.கோதண்டராமன், எஸ்.கே.இராமராசன், ஏ.என். சிவராமன், அ.நடேசமுதலியார், பி.ஜி.கருத்திருமன், திருமுருக. கிருபானந்தவாரியார், ஏவி.மெய்யப்பன், சேவியர் எஸ்.தனிநாயக அடிகள், செக்நாட்டுத் தமிழறிஞர் கமில்சுவலபில், மு.வ(வரதராசன்), கா.நயீனார்முகம்மது, சாரணபாஸ்கரன், ஆல்பெர்ட் ஃபிராங்க்ளின், மறைத்திரு பிரான்சிஸ் முராயிஸ் அடிகள்.சே.ச., மறைத்திரு. சா.லாரன்ஸ் அடிகள், எஸ்.கே.நாயர், சுந்தரசுவாமிகள், பேரூர் சாந்தலிங்க இராமசாமி அடிகள், வை.வேங்கடசுப்பாரெட்டியார், கொத்தமங்கலம் சுப்பு, கண்ணதாசன், ந.சஞ்சீவி, அ.முத்துசிவம், வ.சுப.மா(மாணிக்கம்), நீதிபதியரசர்கள் எஸ்.மகாராஜன், மு.மு.இஸ்மாயீல், செங்கோட்டுவேலர், ஏ. ஆர்.லெட்சுமணன், எம்.கற்பகவிநாயகம், எம்.சொக்கலிங்கம், வி.இராமசுப்பிரமணியன் ஆகியோர், என்.வி.நாயுடு, இரா.இராதா கிருஷ்ணன், புலவர் கீரன், வை.சிட்டிபாபு, நாபாலுசாமி, அரங்க. சீனிவாசன், பூ.அமிர்தலிங்கனார், முடியரசன், சொக்கு.சுப்பிரமணியம், வ.அய்.சுப்பிரமணியம், சு.குழந்தைநாதன், எஸ்.கே.இராமராசன், அப்துல்ரகுமான், ஜெயகாந்தன், சிற்பி பாலசுப்பிரமணியம், மு.மேத்தா, தமிழண்ணல், பா.நமசிவாயம், தா.பாண்டியன், குமரிஅனந்தன், கா.காளிமுத்து, ஔவைநடராசன், அரங்க.சீனிவாசன், அன்புவேதாசலம், எஸ்.எம்.டயஸ், எம்.ஓ.எச். பாரூக் மரைக்காயர், அ.அருணகிரி, மாறியதாஸ், தெ.ஞானசுந்தரம், சோ.சத்தியசீலன், அ.அறிவொளி, அ.வ .ராசகோபாலன், தி.இராசகோபாலன், கி.பக்ஷிராஜன், சுகி.சிவம், நெல்லைக் கண்ணன், சாலமன் பாப்பையா, அப்துல்காதர், கு.ஞானசம்பந்தம், பழ.கருப்பையா, பழ.முத்தப்பன், பழ.முத்துவீரப்பன், பழ.பழனியப்பன், சொ,சேதுபதி, மு.பழனியப்பன், த.இராமலிங்கம், சொ.சொ.மீ.சுந்தரம்,

தினமணி ஆசிரியர் கே.வைத்தியநாதன், நா.நஞ்சுண்டன், நாஞ்சில் நாடன், தமிழருவி மணியன் எனப் பல்வேறு துறைசார் அறிஞர்கள் யாவரும் வந்து வந்து உரை நல்கிய பெருமைஉடையது இந்தக் கழகம்.

பெண்களில் ஆ.ரா.இந்திரா, சிவகாமசுந்தரி, சிவானந்த விஜலட்சுமி, இராஜேஸ்வரிநடராஜன், ந.சரோஜினிதேவி, சி.குழந்தையம்மாள், சக்திப் பெருமாள், இரா.மீனாட்சி, சரசுவதிஇராமநாதன், செல்லப்பாப்பா கீரன், ஆர்.திலகவதி, இளம்பிறைமணிமாறன், இரா.ருக்மிணி, இரா.காந்திமதி, அரசு மணிமேகலை, உமையாள் முத்து, சாரதாநம்பி ஆரூரன், சுதாசேஷய்யன் எனப் பலரும் வந்து உரையாற்றியிருக்கிறார்கள். (இந்தப் பட்டியல்கள் முழுமை பெற்றவையல்ல. விரிக்கிற் பெருகும்)

இவர்களை அடுத்து வந்த தலைமுறைப் பேச்சாளர்களும், அவர்களை அடுத்து வந்த இளம்பேச்சாளர்களும் என, இந்தக் கழகத்தில் ஏறிப் பெருமைபெற்றவர்கள் ஏராளமானவர்கள்.

அத்தோடு, இளந்தலைமுறையினரை இனங்கண்டு நாளைய அறிஞர்களாக உருவாக்கும் வண்ணம், தமிழகம் முழுதுமுள்ள கல்லூரி மாணாக்கர்களுக்கான கம்பராமாயணம், திருக்குறளில் பேச்சு, கட்டுரைப் போட்டிகள் ஆண்டுதோறும் நடத்தி வருகிறது இக்கழகம். இதன்வழி, அடுத்த தலைமுறைப் பேச்சாளர்கள், ஆய்வாளர்கள் சிறப்பாக உருவாகி வருகிறார்கள்.

ஆண்டுதோறும் நடத்தப்பெறும் கம்பன் திருநாட்கள் மட்டுமன்றி, மாதந்தோறும் முதற் சனிக்கிழமைகளில் தக்க அறிஞர் ஒருவரோடு, மாணாக்கர்/இளந்தலைமுறையினர் ஒருவரைக் கொண்டும் புதிய கோணங்களில் கம்பன் காவியம் பற்றிய சொற்பொழிவுகள் நிகழ்த்தப் பெறுகின்றன அவை அச்சில் கொணரும் நோக்கில் தொகுக்கப் பெறுகின்றன.

அந்தவகையில், ஆண்டுதோறும், கம்பராமாயணத்தில் புதிய கூறு ஒன்றைப் பற்றி அறக்கட்டளை ஆய்வுப் பொழிவுகள் இரண்டு இங்கு நிகழ்த்தப்பெறுகின்றன ஒன்று மூத்த அறிஞர்களைக் கொண்டும், மற்றொன்று இளந்தலைமுறைப்பேராசிரியர்களைக் கொண்டும் நடத்தப் பெற்றுவருகின்றன. இப்பொழிவுகள், இதுவரை, **'தாய் தன்னை அறியாத....'**, **'கம்பனின் மனவளம்'**, **'கம்பனில் எண்ணமும் வண்ணமும்'**, **'கம்பனில் நான்மறை'**, **கம்பர் காட்டும் உறவும் நட்பும்'**, **'கம்பர் போற்றிய கவிஞர்'**,

'கம்பனின் அம்பறாத்தூணி', 'கம்பன் காக்கும் உலகு', 'கம்ப வானியல்' என நூல்களாக்கப் பெற்றுள்ளன. அவை, அந்தந்த ஆண்டுகளில் வெளியிடப்பெற்றுள்ளன. இவைபோகக் கம்பன் கழகத்தில் **கம்பன் மணிமலர்** என்னும் பெயரில் மலர்களும் வெளியிடப் பெற்றுள்ளன.

அரங்க நிகழ்வுகளிலும் ஆய்வுத்துறைகளிலும் தொடர்ந்து தடம்பதித்து வரும் காரைக்குடிக் கம்பன் கழகத்தின் பவளவிழாப் போதில், இனிய பிறப்பெடுத்தது, கம்பன் தமிழ்ஆய்வு மையம்.

சங்ககாலத்துக் கபிலர் தொடங்கி, சமகாலத்துக் கண்ணதாசன் வரை நீளும் இலக்கிய வளங்களையும், தொல்காப்பியர் முதலாய்த் தண்டமிழ்ச் சான்றோர் வகுத்துக்கொடுத்த இலக்கணச் செழுமைகளையும் கவிச்சக்கரவர்த்தி கம்பனை முன்னிறுத்தி, உலகளாவிய நிலையில் அடுத்து வரும் தலைமுறையினர்க்கு எடுத்துச்செல்லும் நோக்கில் ஒல்லும்வாயெல்லாம் உடனுக்குடன் தன் பணியாற்றிடத் துடிப்புடன் முனைகிறது இம்மையம். இம்முயற்சியின் ஒரு கூறாக, உலக அளவிலான கருத்தரங்கம், **காலந்தோறும் கம்பன்** (Kamban at all times) என்ற பொருண்மையில், திட்டமிட்டபடி, 2013 மார்ச் 23 ,24 ஆகிய இருநாட்கள் இனிது நடைபெற்றன. இக்கருத்தரங்கில், தமிழகம் மற்றும் இந்தியாவின் பிற மாநிலங்களில் இருந்தும், உலகின் பல்வேறு நாடுகளில் இருந்தும் பேராளர்களும், ஆய்வாளர்களும் பங்கேற்றுச் சிறப்பித்தனர். அக்கருத்தரங்கக் கட்டுரைளைத் தொகுத்து, **"காலமும் கணக்கும் நீத்த காரணன்: கம்பன்", "காசில் கொற்றத்துக்கவிச்சக்கரவர்த்தி: கம்பன்", "வேறுள குழுவையெல்லாம் வென்ற மானுடன்: கம்பன்"** என்னும் முப்பெருந்தொகுப்புகளை வெளியிட்டிருக்கிறது, கம்பன் தமிழாய்வு மையம்.

மேலும், கம்பன் தொடர்பான ஆய்வுகள் வளரவும், நூல்கள் எழுதுவோர் மற்றும் வெளியிடுவோரை ஊக்குவிக்கும் முகமாகவும், 2011, 2012 ஆண்டுகளில் தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் வெளி வந்த கம்பராமாயண ஆய்வு நூல்களுக்கும், அவற்றை வெளியிட்ட பதிப்பகங்களுக்கும் பரிசுகள் வழங்கி மகிழ்ந்தது. இந்த ஆண்டு பவளவிழா நிறைவை ஒட்டி, அவ்வாறு பரிசளிப்பதோடு, மீண்டும் ஒருமுறை உலக அளவிலான கருத்தரங்கைக் கூட்டி, **துறைதோறும் கம்பன்** (Kamban in All Spheres) என்ற பொருண்மையில் இருநாட்கள் கருத்தரங்கினை இனிது நடத்துகிறது இம்மையம்.

இம்மையம் தொடங்கப்பெற்ற பிறகு. சிறப்புக்குரிய கல்வி மையங்களைத் தெரிவு செய்து அவற்றோடு இணைந்து ஆய்வுக் கருத்தரங்குகளை நடத்தியிருக்கிறது.

குறிப்பாக, காரைக்குடி கம்பன் தமிழாய்வு மையமானது. இணைந்து பூவந்தி மதுரை சிவகாசி நாடார்கள் பயோனியர் மீனாட்சி பெண்கள் கல்லூரியில், 20.09.2013 அன்று முத்தமிழ் விழாவையும் திருச்சிராப்பள்ளி தூய வளனார் தன்னாட்சிக் கல்லூரியின் தமிழாய்வுத்துறையுடன் இணைந்து 16.9.2013 அன்று **'கம்பனில் அறநெறிகள் - கம்பராமாயண'** தேசியக் கருத்தரங்கத்தையும், மதுரைத் தமிழ்ச்சங்கத்துடன் இணைந்து. 19.10.2013 அன்று செந்தமிழ்க்கல்லூரியில் **கம்பனில் புத்தம் புதிய திறனாய்வுக்கலைகள்** என்ற முழுநாள் கருத்தரங்கையும் நடத்தி யிருக்கின்றது.

பேரன்புடையீர்,

நலம். பல்லாண்டு தமிழ்ப்பணி ஆற்றிவரும் கம்பன் கழகத்தின் எதிர்கால வளர்ச்சியும் ஆக்கமும் பற்றி நான் நெடுங்காலம் எண்ணியதை உங்கள் மதிப்புடைச் சிந்தனைக்கு எழுதுகின்றேன்.

1. கல்வி ஆராய்ச்சி நிலையம் (kamban Research Institute) ஒன்று ஏற்படுத்த வேண்டும். பொருள்நிலை பற்றித் தயங்காது இவ்வாறு ஒன்று தொடங்கிவிடுவது நல்லது.

2. டாக்டர் தெ.பொ.மீ. பேராசிரியர் அ.ச.ஞானசம்பந்தன், பேராசிரியர் அ.சீனிவாசராகவன் என்ற பெருமக்கள் கம்பன் கழகத்தோடு பல்லாண்டு தொடர்புடைய அன்பர்கள். இப்போது ஓய்வு பெற்றிருப்பவர்கள். இந்த ஆராய்ச்சி நிலையத்தில் இவர்களை ஆராய்ச்சி அறிஞர்களாக அமர்த்திக்கொள்ளலாம். தெ.பொ.மீ. இயக்குநர் ஆக இருக்கலாம்.

3. ஆராய்ச்சி நிலையம் ஏற்படுத்தி இயக்குநர் முதலியோரை அமர்த்தி ஆராய்ச்சித் திட்டங்களையும், திட்டத்தின் ஆண்டுகளையும் அறிஞர்களின் ஊதியங் களையும் பிற செலவினங்களையும் கணித்து மத்திய

அரசுக்கும் பல்கலைக்கழக மானியக் குழுவுக்கும் தமிழக அரசிற்கும் அனுப்பி வைத்து மானியம் கேட்கலாம். ஆராய்ச்சி மாணவர்களைச் சேர்த்துக் கொள்ளவும் நூல் நிலையம் அமைக்கவும் உதவி கேட்கலாம்.

இவ்வகையில் தாங்களும் கம்பன் கழக அன்பர்களும் சிந்திக்க வேண்டும் எனவும் என் கருத்து. இசையுமாயின், விரைவில் ஆராய்ச்சி நிலையம் அமைத்து வழிவகுக்க வேண்டும் எனவும் கேட்டுக் கொள்கிறேன்.

அன்பன்
(ஒப்பம்) வ.சுப.மாணிக்கம்

இப்படி ஒரு கடிதத்தைக் கம்பன் அடிசூடியாருக்கு, தமிழ்ச்செம்மல் எழுதி அனுப்பி (16.10.74) நாற்பது ஆண்டுகளுக்குப்பிறகு, இப்போது கம்பன் கழகத்தின் பவளவிழாநிறைவுப்போதில், முதலாம் ஆண்டில் அடியெடுத்துவைக்கிறது, கம்பன் தமிழாய்வு மையம்.

தொடர்ந்து, கம்பன் உள்ளிட்ட தமிழ், இலக்கிய இலக்கண வளங்களைக் கற்கவும், கற்பிக்கவும் ஓர் ஆய்வு மேற்கோள் நூலகம் ஏற்படுத்தி, ஆய்வு நிகழ்த்துவோருக்கான பணியிட வசதி செய்து, நெறிப்படுத்தி, செம்மொழித் தமிழ் ஆய்வுகளை ஊக்கப்படுத்தவும் முயற்சிகள் தொடங்கி நடைபெற்று வருகின்றன. அவற்றுக்கும் தமிழ்கூறு நல்லுலகம் ஆக்கமும் ஊக்கமும் அளிக்கும் என்று நம்புகிறோம். நன்றி.

– கம்பன் அடிசூடி பழ.பழனியப்பன்

UNEARTHING THE 'WISDOM' AT KAMBAR'S 'SAMADHI'

D.J.Walter Scott

'Kavichakravarthi Kambar', the great Tamil poet is worshiped as a 'God of Wisdom' at his 'samadhi' here and the soil from the place where he was believed to have been laid to rest is revered by one and all.

Local villagers place a drop of this soil mixed with milk in the mouth of newborn babies wishing that this would help the children get the great poet's poetic gift.

Children who visited the temple with their parents were also given 'Kambar man' as 'prasadam' so that they can have it mixed with water or milk to gain wisdom. This unique practice is being followed for nearly a century.

The 'samadhi,' in the midst of a wooded ten-acre site on the outskirts of the town panchayat, is being maintained by the family of Avichi Chettiyar or Kambar Chettiyar belonging to the local Nagarathar community. As of now, it is the fourth generation of the family that is maintaining the 'samadhi' and a priest has been appointed to conduct a one-time pooja in the temple.

Legend has it that Kamban, who was in despair after his son, Ambikapathy, was put to death by King Kulothunga Chola for falling in love with his daughter, princess Amaravathy, reached the village and spent his last days here.

Recalling the history, Mr. Pala.Palaniappan, secretary, Kamban Kazhagam in Karaikudi said the 'samadhi' was first spotted in 1939 by Tamil scholar and Kazhagam founder Sa.Ganesan after seeing people reverently taking soil from the spot and giving it to their children. "People had been removing the earth for several years but it seemed to replenish itself and this was seen as a miracle," he said.

He and Avichi Chettiyar then built a temple over the spot though there was no historic evidence to prove that the poet was laid to rest here, Mr. Palaniappan told The Hindu . A group believes that Kam-

ban lived in the 9th century while the other says that he lived in the 12th century. "Unfortunately, none of the songs of Kamban had any reference to any king to determine the period," he said.

Besides the daily pooja at the 'samadhi' by the Chettiyar family, the Kamban Kazhagam organises an annual four-day festival, three days at Karaikudi and the final day at the 'samadhi' on Panguni Astham, a day when the poet was honoured with the title 'Kavichakravarthy', he said.

"We consider it as a great privilege and our family will continue to maintain the 'samadhi,' says Ms. K.N.Visalatchi of the Chettiyar family. Her father-in-law Ramanatha Chettiyar was fondly called 'Kambar Chettiyar' and the family would like to be identified with the great poet, she says.euphony of a word -- can all delight, for the felicitous use of language does give one a frisson of thrill. But even so, will anyone deify a language, not figuratively, but literally? One man did. Kamban Adippodi Saw. Ganesan.

courtesy: The Hindu

தோரணவாயில்

**கல்லிடைப் பிறந்து போந்து கடலிடைக் கலந்த நீத்தம்
எல்லைஇல் மறைகளாலும் இயம்பஅரும் பொருள் ஈது என்னத்
தொல்லையில் ஒன்றே ஆகி துறைதொறும் பரந்த சூழ்ச்சிப்
பல் பெருஞ் சமயம் சொல்லும் பொருளும் போல் பரந்தது அன்றே.**

கரையிலாக் கம்பமாக் கடல், காரைக்குடிக்கு எழுந்தருளி, இடைவிடாது அலை விரிக்கத் தொடங்கி, ஆண்டுகள் எழுபத்தாறு ஆகிவிட்டன. இன்னும் இன்னும் எழுந்தொலிக்கின்றன அப்பேரொலியின் எதிரொலிகள்.

உலகில் எங்கும் போரொலியேயின்றிப் புகழ்ஒலியும் அருள்ஒலியும் பொங்கி எதிரொலிக்க வேறுள குழுவையெல்லாம் வென்ற மானுடத்தின் பிரவாகம். கம்பன், தேரழுந்தூரில் பிறந்து, நாட்டரசன்கோட்டையில் கலந்த இக்கவியின் எல்லையொன்றில்லாப் பேராற்றலை எண்ணி எண்ணி வியக்காதவரும் சொல்லிச் சொல்லித் துய்க்காதவரும், எழுதி எழுதிப் புகழாதவரும் இல்லை எனும்படி எல்லாப் பொருளும் தன்னுள் தாங்கிய தமிழ்க்கடல். இக்கடலுள் மூழ்கி எழுந்தவர்கள் 'முத்தும் முத்தமிழும்' தந்து தந்து மகிழ்கிறார்கள். 'என்றுமுள தென்றமிழில்' எல்லாத் துறைகளும் இருக்கின்றன என்பதற்கு ஒரே எடுத்துக்காட்டு. ஒப்பற்ற எடுத்துக்காட்டு, கம்பராமாயணம்.

ஒப்பியல், அரசியல், கல்வியியல், உளவியல், வாழ்வியல், கலை-யியல், அழகியல், கவியியல், அறிவியல், ஊடகவியல், சூழலியல், மெய்யியல், எதிர்காலவியல் உள்ளிட்ட பல்வேறு துறைகளும் வந்து கம்பமாக்கடலில் சங்கமிக்கும் ஆய்வுத் துறைமுகமாக, இக்கட்டுரைத் தொகுப்பினை ஆக்கிட உதவியவர்கள் பல்துறை அறிஞர்கள்.

பள்ளி ஆசிரியர் தொடங்கி, பல்கலைக்கழகப் பேராசிரியர்களும், சுவைஞர்கள் முதலாத் தத்தம் துறைகளில் முத்திரை பதித்த வித்தகர் களும், கம்பனைக் கண்டு உணர்ந்து காட்ட எடுத்துக்கொண்ட பெரு முயற்சியின் குறுவெளியீடுகள் இத்தொகுப்பில் சுடர்விடுகின்றன.

பல நூல்கள் படைத்தளித்தவர்களும், முதன்முதலாய்க் கம்பனைப் பற்றி எழுதத் தொடங்கியவர்களும் இந்நூலுள் சங்கமித்திருக்கிறார்கள். மக்கள் இயக்கமாக, காரைக்குடி கம்பன் தமிழாய்வு மையம் பரிணாமம் பெற்றிருப்பதன் நல்ல அடையாளம் இந்தத்தொகுப்பு என்பதற்கு இந்நூலின் ஆய்வாளர்களே சான்று. சென்ற ஆண்டு வந்தவர்களோடு

இந்த ஆண்டு புதிதாய்க் களம் இறங்கியவர்கள் மிகுதி. 'மரத்தில் மறைந்த மாமத யானை'யாய்க் களத்தில் கண்டதைக் கம்பனில் தேடியும் கம்பனில் கண்டதைக் களத்தில் ஒப்பிட்டும் எழுந்த இக்கட்டுரைகளில் பல பாடல்கள், செய்திகள் திரும்பத் திரும்ப வருகின்றன. ஆனால், ஒரு முறை வந்த பாடல் அடியோ, செய்தியோ மறுமுறை வரும்போது அது முற்றிலும் புதிய கோணத்தில் ஒளிவிடுவதை உணரமுடியும். அத்தோடு இன்னொரு தளத்தில் அதனை விரிக்கிற உள்ளுணர்வையும் அவை தூண்டிவிடுவதை, மெல்ல மெல்ல வாசித்துத் துய்க்கலாம்.

வழக்கமாய்ச் செவிநுகர் கனிகளாய்க் கிடைத்த கம்பன் பாடல்கள், இந்நூலுள் விழிநுகர் கனிகளாய் விளைந்துகிடப்பதைக் காணலாம். உட்செவி திறக்க அகக்கண் ஒளி தரக் கம்பன் துறைகள் தோறும் எழுந்தருளி விகசிப்பதைக் கூடியமட்டிலும் எழுதிக் காட்டி-யிருக்கிறார்கள் ஆய்வாளர்கள். துறைகளில் ஆழங்காற்பட்டவர்கள், கம்பனிலும், கம்பனில் ஆழங்காற்பட்டவர்கள் துறைதோறும் இறங்கி-யிருப்பதால் இருவேறு மேடைகளில் அரங்கேறும் ஒருபெருங்கூத்தாக, இவ்வாய்வுப்போக்கு நீளுவதை அறிவியல் கண்கொண்டு புரிந்து கொள்ள வேண்டியது இன்றியமையாதது. இன்னும் விரித்துரைக்க ஆராயக் களம்அமைக்கப் பல்வேறு புதிய துறைகளைக் காட்டும் இம்முயற்சிக்கு உதவிய அனைத்துப் பெருமக்களும் போற்றுதற்குரியவர்கள்.

'காலந்தோறும் கம்பன்' என்று சென்ற ஆண்டு காட்டியவர்களோடு, 'துறைதோறும் கம்பன்' என்று உணர்த்தவேண்டி உலகத் தமிழர் பலர் இவ்வாண்டு காரைக்குடியில் ஒன்றுகூடுகின்றார்கள். இந்தியாவின் தமிழகம் மற்றும் கேரளம், புதுவை, அந்தமான் உள்ளிட்ட மாநிலங்களில் இருந்தும், உலகஅளவில், ஆஸ்திரேலியா, இலண்டன், சிங்கப்பூர் முதலிய நாடுகளில் இருந்தும் பங்கேற்க வரும் ஆய்வாளர்களுக்குச் சிறப்பு வரவேற்பும் சிரந்தாழ்ந்த வணக்கமும் உரித்தாகுக.

'நன்று நும் வரவு என்று நல்லுரை பல பகர்ந்து, என்றுமுள தென்றமிழை இன்று புதிதாக்கிடக் கம்பனைக் கைக்கொண்டு துறை தோறும் புக, தோரணவாயிலில் நின்று வரவேற்கிறோம்.

- கம்பன் தமிழாய்வு மையத்தார்

துறைதோறும் கம்பன்

கம்பன் யார்? கம்பன் அடிசூடி பழ.பழனியப்பன் 24

ஒப்பியல்

கம்பனின் காலமும் கனவும் - சி.க.கோவிந்தராஜ் 35
இலக்கியங்கள் குறிப்பிடும் இராமன் இராவணன் - வீ. ஜெயபுனிதவள்ளி 38
கம்பனும் சங்கப் புலவர்களும் - பரந்தூர் இராமசாமி 42
தொல்காப்பியரும் கம்பரும் காட்டும்..... - முனைவர் சி. சுந்தராம்பாள் 46
கம்பனில் திருவள்ளுவர் - முனைவர் இலலிதா சுந்தரம் 52
இராமகாதையில் வள்ளுவர் கூறும் இனமறிதல் - முனைவர் க.சிவமணி 56
'மடவார் பொறை' திருவள்ளுவரும் கம்பரும் - சு.தி.சங்கரநாராயணன் 61
கம்பரும் கவரிமாவும் கவரியும் - க. கதிரவன் 65
கம்பரும் குலசேகராழ்வாரும் - முனைவர் இரா.அகிலா 73
ஸ்ரீ ஆண்டாள் பாசுரங்களில் இராமாயணக் குறிப்புகள் டி.ஏ. லட்சுமி 79
கம்பனில் முதல் திறனாய்வாளர் வ.வே.சு.ஐயர் - முனைவர் வெ.திலகம் 90
ஜீவா கண்ட கம்பன் - முனைவர் இரா. காமராசு 95

அரசியல்

கம்பனின் அரசியல் கலை - இரா.சுப்பிரமணியன் 103
கம்பன் பார்வையில் அரசு - மு.கவிதா 108
கம்பனின் அரசியல் பார்வை - கோ.மோகன் 112
கம்பனின் அரசியற் சிந்தனைகள் - முனைவர் த.கலாஸ்ரீதர் 119
கம்பன் புலப்படுத்தும் அரசியல்... - முனைவர் கடலூர் மணிமாறன் 124
கம்பரின் அமைச்சியல் - தை. அந்தோணிராஜ் 130

ஆட்சியியல்

கம்பனில் ஆட்சியியல் முனைவர் க. முருகேசன் 135
கம்பன் உபதேசித்த ஆட்சியியல் முனைவர் பீ ரகமத்பீ 138
கம்பனின் சமுதாய லட்சியம் - ஜனநாயகம் - இரா.முல்லை 142
உலகமயச்சூழலில் உலக அமைதிக்கு... -சுவாமி ஸதாசிவானந்தா 146
கம்பனில் அரசு... - டி.என்.கிருஷ்ணமூர்த்தி 152
கம்பனில் மக்கள் கருத்துரையியல்- ர.ரதி 158
கம்பராமாயணத்தில் மனித உரிமைகள் செ- சியாமளா 164
கம்பராமாயணத்தில் நாட்டிடைச் சட்டக் கருத்துக்கள் - ப.மோகன்தாஸ் 168

கல்வியியல்

கம்பன் உணர்த்தும்.... -முனைவர் பொன்.செல்வகுமார் 175
கம்பன் காட்டும் நல்லாசிரியர் - பா.சம்பத்குமார் 180
கம்பனில் கல்விக்கோட்பாடுகளும்..... - ஆ.ரூபா 185
கல்வியியல் நோக்கில் கம்பன்- முனைவர் அ.விஜயன் 191

உளவியல்

கம்பனில் உளவியற் கோட்பாடுகள்- முனைவர் அ.அ.ஞானசுந்தரத்தரசு 200
கம்பனில் உளவியல் - ஆ.அருள்சாமி 207
உளவியல் உணர்ந்த கம்பன் -முனைவர் கே.இரா.கமலாமுருகன் 212
கம்பனில் ஒப்புநோக்கு உளவியல்- முனைவர். அமுத.இளவழகன் 219
கம்பனில் நான்...- பலவான்குடி அண்ணா சுந்தரம் 226

அறவியல்

வாழ்வியல் வழிகாட்டி கம்பன் - சி.இராசாமுகமது 230
கம்பன் பார்வையில் அறநெறி - பெ.குபேந்திரன் 238
கம்பனில் வாழ்வியல் அறங்கள் - பேரா.செ.கணேசமூர்த்தி 243
வாழ்வியல் அறமுரைத்த கம்பன் - முனைவர் இரா.கீதா 247
கம்பனில் துறவறவாழ்வியல் - முனைவர் கி.சியாமளா 252
கம்பர் காட்டும் நட்பு - கு.கார்த்திகா 256
நட்பும் பகையும் - அ.குமார் 264
இராவணன் இழைத்த... - பேரா. ம.ஸ்ரீ. ஸ்ரீகாந்த் 271

ஆளுமையியல்

கம்பன் தந்த மகாமந்திரம் - மகேஸ்வரி சற்குரு 275
கம்பனில் ஆளுமைப் பண்புகள் - ப.கணேஷ் வடிவேல் 279
தாய் ஒக்கும் அன்புத் தயரதன் - ச.கருத்தாளன் 285
தாயினும் நல்லான் குகன் - கமலா சிவம் 288
வாழ்ந்து காட்டிய இராமன் - ஸ்ரீவித்யா இராமகிருஷ்ணன் 291
வீழ்ந்து காட்டிய இராவணன் - ஆ.இரா. பாரதராஜா 294
செய்து காட்டிய சீலன்- அனுமன்- வெ.அ.சம்பந்தம் 298
குலமானம் காத்த கும்பன் - நா.தேவி 300
குறிப்பிற்குறிப்பறியும் கொள்கையர் - கு.அரசு 305

பண்பியல்

கம்பராமாயணம் -விழுமியத்தின் வேர்கள் - ம.வித்யா 307
கம்பனில் சில பாத்திரங்கள் - முனைவர் க.கலாவதி 311
கம்பன் கண்ட இராமன் - முனைவர் மு.மாலா 316
கம்பராமனின் தலைமைப்பண்பு - முனைவர் சு.ஏழுமலை 320
பணிவில் உயர்ந்த பாத்திரம்- குகன்- லெ.பொ. பிரியா 327
பணியில் சிறந்த பாத்திரம் - அனுமன்- ப.ஆனந்தகுமார் 332
குன்றாப் புகழுடைப் பாத்திரம் கும்பன் - இரா. செல்லமுத்து 338
கம்பனில் தோற்றப்பொலியல் - தெய்வ.சுமதி 343
மனிதர் அல்லாத பாத்திரங்கள்- மா.மீனாட்சி 348
கம்பனில் மானுட விலங்கு தொடர்பியல்- மு.ஜெயலட்சுமி 356
காலமறிந்து உதவிய கருடன்- முனைவர் எல்.மாலினி 354

மகளிரியல்

கம்பன் வகுத்த கற்பியல்- சு.சுஜிதா 367
கம்பன் செய்த புதுமை- ஜெஹபர் உசேன் 373
கம்பனில் கற்புடை மகளிர்- தி.ஜெயசித்ரா 376
கம்பன் படைத்த கற்புடை மகளிர்- சு.மகேஸ்வரி 381
கம்பனின் பாத்திரப் படைப்பில் - ப.மெஹருன்னிஸா 386
கம்பன் கண்ட அன்னை உள்ளம்- ம. தமிழரசன் 395
கம்பனில் ஆளுமையியல் - சொக்கன் 399
தாயருள் சிறந்த தாய் - முனைவர் அருணாதினகரன் 403
இராவணன் இழைத்த தீமை- முனைவர் பா. பட்டம்மாள் 408
காப்பியச் சூழலில்..... - முனைவர் சை.வஹிதாகௌசியா 413
பெண்ணியத்திற்கு முதலிடம்- ப.முத்துக்குமாரசுவாமி 422
கம்பனில் பெண்ணியப் புரட்சி - ஜெ.அபூர்ஜென்னி 431
கம்பனில் பெண்ணியம்- ஆர்.முல்லை 437
பெண்ணியப் பார்வையில்....- பேரா.முனைவர் க.சந்திரசேகரன் 441
பெண்ணியம் காலமும்...- ப.அனுராதா 446
கம்பன் காட்டும் சீதை - முனைவர் சே.செந்தமிழ்ப்பாவை 451

கலையியல்

கம்பன் காட்டும்...- முனைவர் வீ.கே. கஸ்தூரிநாதன் 457
கம்பனின் கவின் கலைகள் - க. அறிவுக்கனி 461
கம்பராமாயணத்தில் இசையியல் – பொ.சம்பூரணம் 464
பண் கலிந்து எழு பாடல் - முனைவர் சண்முக. செல்வகணபதி 469

பாணி தள்ளா நடம்புரி மாதர் - முனைவர் செ. கற்பகம் 477
கம்ப நாடகம் - பேராசிரியர் அய்க்கண் 484
கம்பனில் நாடகவியல் - பா.பத்மபிரியா 494
கம்பராமாயணமும் நாடகவியல்.... - முனைவர் கி.பார்த்திபராஜா 498
கம்பராமாயணத்தில் மெய்ப்பாடு - வே.சித்ரா 503
கம்பனில் போர்க்கலையியல் - ந. சிங்காரவேலன் 508
இராவணனின் மறமாட்சி - ந.சரவணன் 513
யுத்த காண்டத்தில் வில்வித்தை - செல்வி. இரா.மூக்காயி 518
அஸ்திரங்களில் அறிவியல்- ப. சபிதா 522

இலக்கியவியல்

கம்பனில் யாப்பியல் - முனைவர் ஏ. இராமநாதன் 527
கம்பனில் விருத்தக் கவியியல் - காப்பியக் கவிஞர் நா.மீனவன் 533
சொலல்வல்ல கம்பன்- மு.செண்பகவள்ளி 539
கம்பன் சொல்லாட்சிகளில் சில.. - முனைவர் வீ. சிவபாதம் 543
கம்பரின் சொல்லாக்க..... - முனைவர் எம் எஸ் ஸ்ரீ லக்ஷ்மி 549
சொல் ஒக்கும் சுடுசரம்- க.ம.சுந்தரவரதன் 553
கம்பர் கவிநயம்- சகோ. ம.அமலோற்பவம் 557
கம்பனில் - காப்பிய வருணனை - நா. மாலதி 563
கம்பனில் சில உத்திகள்- முனைவர் த.நாகம்மாள் 567
கம்பனில் உத்தியாகும் கடல் - என். முத்துவிஜயன் 574
கம்பனின்உவமைகளில்சில துளிகள் -- அன்பு ஜெயா 577
கம்பனில் உருவப்படுத்தம்- முனைவர் ஔவை இரா.நிர்மலா 581
கம்பனில் கற்பனையியல் - முனைவர் ந.கிருட்டிணமூர்த்தி 590
கம்பனில் கற்பனையியல் - முனைவர் வெ.உஷா 597
கம்பனில் சில கற்பனைகள்- சா.சையத் முகம்மது 600
கம்பன் காட்டும் கற்பனை அழகு- முனைவர் மெ.சிவரஞ்சனி 603
கம்பனில் இயற்கைப் புனைவியல் - பேரா. பெ.கி.பிரபாகரன் 606
கம்பன் ஓர் அழகுக் களஞ்சியம் - ஆர். சீதாலட்சுமி 611
கிட்கிந்தா காண்டத்தில் அழகியல்- முனைவர் கூ.இராஜலெட்சுமி 613
கம்பனில் சில கவித்துவக் காட்சிகள்- முனைவர் கி. ஈஸ்வரி 620
கம்பனில் காட்சிப்படிமங்கள்- கோ. ராஜேஸ்வரி 622
கம்பனின் இயற்கை வளம் - முனைவர் சு.பாஸ்கர் 625
உயரியவற்றை..... - டாக்டர் சரோஜினி செல்லக்கிருஷ்ணன் 629
பிரதிக் குறியியல் பார்வையில்... - முனைவர். ஆ.பாண்டி 638
செவ்வியல் நோக்கில்கம்பன் -முனைவர். யாழ் சு. சந்திரா 644

அறிவியல்

கம்பனில் மேலாண்மை - ப. நந்தினி 652
கம்பனும் கட்டுமானத்துறையும் - அ.கி. வரதராசன் 658
கம்பனின் நீர் மேலாண்மை- ப.ப. சுஜாதா 668
கம்பனில் காணலாகும்.... - எறும்பூர் கை. செல்வகுமார் 671
கம்பனில் அறிவியல் .... - முனைவர். நயம்பு. அறிவுடைநம்பி 677
கம்பன் விரிக்கும் வினைமுறைத்திறம் - தி. க. இராமானுஜம் [புதுயுகன்] 686

ஊடகவியல்

கம்பனில் தகவல் தொடர்பியல் முனைவர் கா.வாசுதேவன் 693
கம்பன் காட்டும் தகவல் திறன் - சிவராமன். ரா 700
தினமணி தமிழ்மணியில் கம்பர்...- இடைமருதூர் கி.மஞ்சுளா 704

சூழலியல்

கம்பனில் வேளாண்மையியல் - முனைவர் ச.குருஞானம்பிகா 712
கம்பர் போற்றிய வேளாண்மை - தமிழ். திருமால் 716
கம்பனில் சூழலியல் - ச.விஜயலெட்சுமி 721

மெய்யியல்

கம்பனில் மெய்யியல்.... - முனைவர் நா. பழனிவேலு 727
கம்பனில் மெய்யியல் - முனைவர் கோ.ப.நல்லசிவம் 735
கம்பனில் இறையுணர்வு - முனைவர் கூ. முத்தையன் 742
கம்பனில் இறையியல் -டாக்டர் ந.செல்லக்கிருஷ்ணன் 745
கம்பனில் சைவ சித்தாந்தம் -முனைவர் இரா. மாணிக்கவாசகன் 755
கம்பர் காட்டும்...... - முனைவர் வேல் கார்த்திகேயன் 758
கம்பனில் கடவுள் கொள்கை - தீ.சண்முகப்பிரியா 763
கம்பன் காட்டும் எட்டெழுத்து - இரா.குறிஞ்சிசெல்வன் 770
இராம என்னும்..... - முனைவர் மீரா.எழுமலை 773
கம்பனில் இறையியல் - முனைவர் அறவாழி 776

எதிர்காலவியல்

முன்பு பின்பு இன்றி.. முனைவர் மு.பழனியப்பன் 783
கவிப்போக்கும் காலப்போக்கும் - மருத்துவர் என். ராம் 788
கம்பன் புகட்டும் அரசியல் - பா.கார்த்திகைச் செல்வி 793
தன்னேரிலாத தலைமை... - முனைவர் எஸ். ஆனந்தன் 796
நடந்ததும் நடக்கவேண்டியதும்- முனைவர் சொ.சேதுபதி 798
தனிமைக்கு உற்ற துணை கம்பன்- சொ.அருணன் 807
கம்பனில் இருந்து... - முனைவர் இரா.குறிஞ்சிவேந்தன் 812



உலகமிசை உவந்திருந்தருளும் ஒரு தனிச்செம்மொழியரசியாம் கன்னித் தமிழ்த்தாய் காரைக்குடியில் முதன் முதலாகக் கோயில் கொண்டருளிக் காலமெல்லாம் பயன் சுரக்க அன்னை அவளருளை வேண்டி நிற்போம்.

மணிமண்டபத்து வடபால் அமையும் தமிழ்க்கலை தெரி கழகக் கூடங்களில் மொழி, கலை, பணி மலரவேண்டும். வரலாறு, மொழியின் எழுத்தின்– எண்ணின் இலக்கணத்தின் படிவளர்ச்சி, கட்டடத்துறை, ஓவிய– சிற்ப– படிமக்கலை, இவற்றுடன் இயைந்த கோணிலை, ஒளிநூல், ஆகமம், உருப்பா (தியானசுலோகம்) முதலியவற்றை முறைப்படி கற்பித்து வருங்காலத்தில் இத்துறை அறிவு வளம் பெறச் செய்யும் பயிற்சித்துறை மலர அன்னையவள் அருளை வேண்டுவோம். இந்த உணர்ச்சியை ஊட்டி ஆர்வத்தை உண்டாக்கி, ஈடுபாட்டைக் கொளச் செய்தவன் கவிச்சக்கரவர்த்தி கம்பனே! 'இவன் இசைகள் கூரக் கல்லாத கலையும், வேதக் கடலும் உலகத்து எங்கும் இல்லாத!' என்று சொல்லுமாப்போலே, கல்வியிற் பெரியனாய்ப் பிறங்குகின்றான் கம்பன். 'என்னையுமே தன்னடியாய்க் கொண்டு, கன்னித்தமிழ்ப் பணிக்கு என்னைக் கைகாட்டிவிட்ட, அன்னவன் அடித்துகளே அடியனேன் சென்னிக் கணி!' என நாளும் மகிழ்வேன்.

– கம்பன் அடிப்பொடி

(கம்பன் மணிமண்டபக் கால்கோள் விழாவில், 19.03.1970)

கம்பன் யார்?

கம்பன் அடிசூடி பழ.பழனியப்பன்
செயலாளன், கம்பன் கழகம், காரைக்குடி.

கம்பன் ஒரு கோபுரப்பார்வை

உலகம் உள்ளளவும் அழியாத அற்புதமானதொரு காவியம் படைத்த கவிச்சக்கரவர்த்திதான் கம்பன். இது தூரப்பார்வை.

கம்பனது காவியப்பெருமையின் தனிச்சிறப்பு ஒன்று உண்டு. கதை தெரிந்த கதையாகவும், ஏற்கெனவே, பாரதநாடு முழுவதும் புழக்கத்தில் உள்ளதாகவும் ஆகிவிட்டதால், படிப்பவர்களுடைய கவிதை அனுபவத்தைச் சிறிதும் தடைப்படுத்துவதில்லை. கம்பனின் கற்பனை வளம், நாடகப்பாங்கு, சந்தப்புலமை ஆகியவற்றில் மேன்மேலும் ஈடுபாடு கொள்ளச் செய்வதற்கு ஏதுவாகவும் எளிதாகவும் ஆகிவிட்டது.

மிகஉயர்ந்த கோபுரத்தைத் தூரத்திலிருந்து பார்க்கும்போது கோபுரத்தின் வடிவமைப்பு, வண்ணக்கலவை, நிறைந்த சுதைச்சிற்ப அழகுகள், எழுநிலைமாடங்கள், உருண்டுதிரண்டு கூர்ந்ததான கலசங்கள் ஆகியவற்றில் நம்மை இழந்து மணிக்கணக்கில் நின்று அனுபவிப்போம். அதே கோபுரத்தை மிக அருகில், கோவிலின் மேல்தளத்தில் ஏறி கையால் தொடும் திட்டத்தில் நின்று பார்த்தால், மேற்சொன்ன அழகுகள் ஈர்க்காது. முற்றிலும் மாறுபட்ட வேறுபட்ட கண்ணையும், கூடவே, கருத்தையும் கவரும் நம் கண்ணில் மிகத்துல்லியமாகப்படும் சுதைச் சிற்பங்களின் கோலவடிவம், சிற்பங்களின் வரிசை அமைப்பு, உருவம் தவிர்த்த மற்றைய வடிவங்களின் வளைவு, சுழிவுகள் கம்பீரத் தோற்றங்கள்- இப்படி எத்தனை எத்தனையோ?

கிட்டப்பார்வை கோபுர அழகை நாம் இப்போது ரசிக்கலாம். கம்பனை மிக நெருங்கிநின்று, நிதானித்து, அணுகிப்பார்த்தால் புதியதோர் கம்பன் புலப்படுவான். அவன் யார்? கவிச்சக்கரவர்த்தி அல்லன், அந்தக் கம்பன். கல்வியில் பெரிய கம்பன் அவன். அவன், கல்லாத கலையும், வேதக் கடலும் இல்லை' என்று அனுமனைப்பற்றிக் கம்பன் பதிவு செய்வானே, அதுவே கம்பனுக்கு முற்றிலும் பொருந்தும். 'தென்சொல் கடந்தான், வடசொல் கலைக்கு எல்லை தேர்ந்தான்' என்று இராமனைப் பற்றிக் கம்பன் எழுதுவானே, அதுவும் கம்பனுக்குச் சாலப் பொருந்தும்.

இதை அனுபவித்து உணர, ஒரு பானைச்சோற்றுக்கு ஒரு சோற்றுப் பதமாக, ஒரு பாடலைப் பார்க்கலாம்.

குழைக்கின்ற கவரி இன்றிக் கொற்றவெண் குடையும் இன்றி
இழைக்கின்ற விதிமுன் செல்லத் தருமம் பின் இரங்கி ஏக
மழைக்குன்றம் அனையாள் மௌலி கவித்தனன் வருமென்று என்று
தழைக்கின்ற உள்ளத் தன்னாள் முன் ஒரு தமியன் சென்றான்.

(நகர்நீங்கு படலம்-1)

ஒரு பாடல் ஓங்கு கலை

இப்பாடல் சொல்லும் செய்தி யாது? இராமன் முடிசூடி அரசமரபிற்குரிய சின்னங்களான வெண்சாமரமும், வெண்கொற்றக்குடையும் சூழ வருவான் என்று மனப்பூரிப்போடு எதிர்பார்த்துக் காத்துக்கொண்டிருந்த கோசலையின் முன்னே அப்படிப்பட்ட சின்னங்கள் எதுவுமின்றி இராமன் தன்னந்தனியனாய் வந்ததைக் காட்சிப்படுத்தும் இவ்வளவுதான், இப்பாடலின் செய்தி.

கம்பன் என்ன சொல்கிறான் என்பதைவிட, எப்படிச் சொல்கிறான் என்று கவனம் செலுத்தினால், ஓர் அணுவுக்குள் உள் பொதிந்துள்ள சக்தியைப்போல, மிகச்சாதாரணமான சொற்களையே கொண்ட இப் பாடலுக்குள் அத்துணை ஆற்றல்களைக் காட்டுவதைக் கண்டு உணரலாம். இப்பாடலில் வரும் சொற்கள் எதுவும் அகராதியையோ, நிகண்டையோ தேடிப்பார்த்துப் பொருள் புரிந்துகொள்ள வேண்டியவை அல்ல. ஆனாலும் ஒவ்வொரு சொல்லும் கம்பனுக்குத் தெரிந்த ஒவ்வொரு கலை அறிவை நமக்குப் புகட்டி நிற்பதுதான் இப்பாடலின் தனித்துவம்.

அரசனுக்கு முன்னே வீசிக்கொண்டு வரும் வெண்சாமரத்திற்குப் பதிலாக, வாழ்க்கையைச் செதுக்கிநடத்தும் விதி முன்னே வருகிறது. அரசனுக்குப் பின்னே தொடர்ந்து வரும் வெண்கொற்றக்குடைக்குப் பதிலாக, அறம் இரக்கமாக ஏங்கிக் கொண்டு தொடர்கிறது. முதல் இரண்டடிகள் சொல்கின்ற செய்தி இதுவே.

குழைக்கும் இயற்பியல்- இழைக்கும் வேதியியல்

இதற்குக் கம்பன் பயன்படுத்துகின்ற இரு முக்கியச் சொற்கள் குழைக்கின்ற (கவரி), இழைக்கின்ற (விதி) என்பனவாகும். குழைக்கின்ற கவரி- கவரியை மேலிருந்து கீழுமாய், கீழிருந்து மேலுமாய்,

இடையே சற்று நிறுத்தி, ஒரு சுழற்றுச் சுழற்றி வீசுதல் மரபு. அவ்வாறு வீசினால்தான், காற்று, மேல்.கீழ், இடம், வலம் என்று பரவலாகப் படும். வீசிக் கொள்பவர்க்குப் பரலவான சுகதந்தம் கிடைக்கும். இதுவே கவரி குழைத்தல்.

பொதுவாக, குழைத்தல் என்றால், பதமாதல் என்று பொருள். 'குழையச் சமைத்த பருப்பு' என்பார் பெரியாழ்வார். குழையும்போது, ஒரு பொருள் புறவடிவில் மாற்றம் கொள்ளும். ஆனால், முயன்றால் மீண்டும் பழைய வடிவைப்பெற்றுவிடலாம். சந்தனக்கட்டையையோ, தூளையோ நீருடன் சேர்த்து அரைத்தலை, சந்தனம் குழைத்தல் என்பது வழக்கம். திட வடிவத்தில் இருந்து, திடம் குறைந்த திரவ வடிவிற்கு வந்துவிடும். Solid to liquid solid என்று இந்த மாற்றத்தை இயற்பியல் (Physics)

கூறும். மண்ணை நீரோடு குழைத்தால் ஈரமண் களிமண் வடிவம் பெறும். ஆனால், திரும்பவும் காயவைத்தால் திடவடிவம் மீண்டும் வரும். ஈரம் அல்லாது நீர் காய்ந்ததும், மண் பிதிர்ந்து பழைய மண்ணாகிவிடும். ஈரம் உலர்ந்ததும் சந்தனம் கெட்டியாகி, சந்தனக் கட்டியாகிவிடும். அதாவது, Liquid to Solid நிலை. இது இயற்பியல் காட்டும் பொருள்களின் மாற்றம்.

இந்தக் 'குழைக்கின்ற' சொல்லுக்கு இணையாகக் கம்பன் போடும் சொல், 'இழைக்கின்ற' - கம்பனுக்குத் தச்சுத் தொழிலறிவு (Carpentry) தெரிந்திருக்க வேண்டும். அத்தொழிலுக்கே உரிய சொல் இழைத்தல். செதுக்குதலைக் குறிக்கும் சொல். செதுக்கிய பிறகு, அப்பொருள் திரும்பப் பழைய நிலைவடிவம் பெற முடியாது. ஒரு மரக்கட்டையை இழைக்க, இழைக்க, (இழைப்புளி என்றே அக்கருவிக்குப் பெயர்) இழைத்த துகள்கள் கட்டையிலிருந்து விடுபட்டு விழுந்தபிறகு, என்ன செய்தாலும் முன்னை வடிவம் பெற்றிட முடியாது. இது வேதியியல் (Chemistry) மாற்றம்.

இப்போது இவ்விரு சொற்களும் அடைமொழியாகும் இடத்தைப் பார்த்தால், கம்பன் சொல்ல வருகிற செய்தியின் கனபரிமாணம், ஆழம் புரியவரும். குழைக்கின்ற கவரி கீழே வரும். திரும்ப மேலே போய்விடும். மேலே போனது திரும்பக் கீழே வரும். சுழற்றும்போது, இடமிருந்து வலஞ்சுருண்ட சாமரங்கள், திரும்பும்போது, வலமிருந்து இடமாய்ச் சுருண்டு வந்துவிடும். வடிவம் மாறாது. கவரி குழைக்கின்ற கவரியாகவே இருக்கும்.

விதிக்கு. கம்பன் போடும் 'இழைக்கின்ற' எனும் அடைமொழி விதியின் வலிமையைச் சுட்டும். எப்படி. இழைக்கப்பட்ட பொருள் மீட்டும் தன் பழைய வடிவைப் பெறாதோ. அப்படியே. வாழ்க்கையில் விதி புகுந்து வாழ்க்கையின் போக்கை மாற்றிய பிறகு மீண்டும் பழைய வாழ்வுறவு வராது. பழைய வாழ்க்கை நிலைமை திரும்பாது. இப்போது முடிசூட வேண்டிய தருணத்தில். இராமனின் வாழ்வில் விதி விளையாடி. அதை மாற்றிச் செதுக்கி இழைத்து. காட்டிற்குக் கொண்டு செல்வதால். 'இழைக்கின்ற விதி' என்ற தொடரின் பொருள் முற்றிலும் புலப்படக் காரணமாயது. 'இழைக்கின்ற' என்ற தச்சுத் தொழிலறிவுச் (Carpentry) சொல்லின் வேதியியல் (Chemistry) மாற்ற இயல்பே (Chemical transformation)

இதை வேறுபடுத்திக் காட்டுவது. முன்னால் செல்கின்ற விதிக்குப் பதில் அங்கு. 'முன் செல்லும் கவரி' வந்திருக்க வேண்டும். அது இயல்பியல் மாற்றமாகிய. (Physical transformation) குழைத்தல் இல்லாது.. இப்போது புதிய வடிவு கொண்டு இழைக்கின்ற விதியாக (Chemical transformation) முன் செல்கின்றது. இயல்பியல். வேதியியல் மாற்றங்களைப் பற்றிய கம்பனின் அறிவுதான். 'குழைக்கின்ற' சொல்லைக் கவரிக்கும். 'இழைக்கின்ற' சொல்லை விதிக்கும் அடைமொழியாக்கியது.

கவரி. வெண்குடை என்னும் இருசொற்களும் அரசசின்னங்கள். அடையாள மரபுகள். அரசன் வெளிப்போகும்போது. அவை முன்னும் பின்னும் உடன் வருவது அரசியல் மரபு. அதாவது. இன்று நாம் சொல்லும் Protocol அடையாளங்கள். அரசியல் கலையியலில் (Political Science) கூறப்படும் மரபுச்சின்னங்கள். அரசியல் கலை நுணுக்கத்தின் வெளிப்பாடாய்க் கம்பன் பயன்படுத்தும் சின்னங்கள் இவை.

விதிக்கும் மெய்யியல்

'விதி' என்ற சொல்லாட்சி மிகுந்த ஆழமுடையது. விதிக்கொள்கை தமிழரின் பழம்பெரும் கொள்கை. 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற ஒற்றை அடியால் உலகப்புகழ்பெற்ற கவிஞன். சங்ககாலக் கணியன் பூங்குன்றனின் பாடல் காலத்திலிருந்து வேரூன்றிய மெய்யியல் கோட்பாட்டைக் கம்பன் மிகமிக அழகாகக் காட்டுவான்.

'விதிக்கும் விதியாகும் என் வில் தொழில் காண்டி' என்று இராமனிடமே கொக்கரித்த இலக்குவனையே. 'வெஞ்சின விதியினை வெல்ல வல்லமோ?' என்று கூற வைத்து சீதையைத் தனியே காட்டில் விட்டுவிட்டுச் செல்ல வைத்த வலிமையுடையது. 'தீதும் நன்றும் பிறர்தர வாரா' என்ற பழந்தமிழ் விதிக்கொள்கையை மெய்ப்பித்த நிகழ்வு அது.

அதே போல், வெண்கொற்றக் குடையும் என்றாலும் தனித்த ஒரு பெருமை உடையது. கொற்றவனுடைய குடை, மற்ற குடையினும் ஒரு படி உயர்ந்தது. குடையின் பயன் நிழல் தருவது. பாதுகாப்பு அளிப்பது. குடையின் கீழ் எவர் இருந்தாலும், அவர்தம் சாதி, சமய, சமூக நிலை என்று எந்த வேறுபாடும் பாராது. அவருக்கெல்லாம் நிழலும், பாதுகாப்பும் தரும். அதேபோல், வெண்கொற்றக்குடை மன்னன் பின்னே வருவது, மன்னனுக்கு நிழலுக்கும் பாதுகாப்பும் தர மட்டுமன்று. மன்னனின் மாபெரும் பொறுப்பு, ஒன்றையும் காட்டுவது. அம்மன்னனின் ஆளுகைக்கு உட்பட்ட மக்கள் யாவரும் ஒரு குடைக்கீழ் இருப்பவரே. ஆகவே, அந்த ஒரு குடையின்கீழ் வரும் எவருக்கும் ஒன்று போலவே, பாதுகாப்புத் தருவது குடையாகும்.

இன்னும் கொஞ்சம் விரிவாகச் சொன்னால், குடைக்கீழ் உள்ளவர் யாராயிருந்தாலும், எச்சமயத்தவராய், எச்சாதியினராய், எச் சமூகச் சிறப்புப் பெற்றவராய் - இருப்பவராய் இருந்தாலும் எல்லாருக்கும் எவ்வித வேறுபாடும் காட்டாது, ஒரே மாதிரியான பாதுகாப்பு அளிக்கும் கொற்றக்குடை. இதுதான் Political Scienceஇன் இன்னொரு அங்கமான Equality எனப்படும். 'அனைவருக்கும் ஒரு நீதி'. நீதியின் முன் எல்லாரும் சமமே என்ற கொள்கையாகும்.

இதைத் தனியே கம்பன் காட்ட அன்று நடந்த நிகழ்வுகளைக் கூர்ந்து பார்த்தால் புரியவரும். அதிகாலை வரை கோசல மன்னன் என்ற முத்திரை குத்தப்பட்டவன், திடீரெனக் காடாள்பவனாக வேண்டி வந்தது. அப்படியானால், அவனுக்கு வழங்கப்பட்டிருந்த பாதுகாப்பு வளையம் இப்போது, திடீரென்று காணாமல் போய்விடுகிறது. அவ்வாறாயின், அவனுக்கு வழங்கப்பெற்ற நீதி (Equality) எங்கே காணாமல் போயிற்று? அவனுக்கு மன்னன் என்ற பதவியை மரபுப்படி வழங்கிய தயரதன், இன்று தன் மனைவிக்குக் கொடுத்த வாக்கைக் காப்பாற்ற முன் வழங்கிய நீதி ஒன்றை விலக்கி விடுகிறான். அதனால் மரபா, கொடுத்த வாக்கைக் காப்பாற்ற வேண்டிய வாய்மையா என்ற

முரண்பாடு தோன்றியதும், 'வாய்மையும் மரபும் காத்து மன்னுயிர் துறந்து' விடுகிறான் என்பான் கம்பன்.

நேற்றுவரை, சமமானவர்களில் முதல்வனாக இருந்தவன் இன்று மற்றைய சாதாரண குடிமகன்களைப் போல, அரசனின் விருப்பு வெறுப்புகளுக்கு உட்பட வேண்டிய அரசியலின் அங்கமான அரசியல் சூழ்ச்சிக்குட்படுத்தப் பட்டுவிடுவதைத் தனிப்படுத்திக் காட்டவும் இரண்டாம் முறை, குடைக்கென்று தனியே ஒரு 'இன்றி' என்னும் சொல்லைப் பெய்தான்.

ஆக, கவரி, (வெண்கொற்றக்)குடை என்னும் இருசொற்கள் அரசியல் கலையியலின் (Political Scienceஇன்) அங்கங்களான மரபு (Protocol), இறையாண்மை (Sovereignty) அனைவரும் சமம் (Equality), அரசியல் சூழ்ச்சி (Political Conspiracy) ஆகியவற்றை நுண்மைப்படுத்திக் காட்டும் முகமாகக் கம்பன் சொல்லியவிதம் கம்பனின் பல்துறை அறிவைப் படம்பிடித்துக்காட்டும்.

வானியல் மழை- மண்ணியல் குன்று

இனி பின் இரண்டு அடிகளைக் காணலாம். மழைக்குன்றம் போன்ற நிறமுடையவன் முடிசூடி எப்போது வருவான் என்று வழிமேல் விழிவைத்துக் காத்திருக்கின்ற தாயின் முன்னே தன்னந்தனியனாய் இராமன் சென்றான் என்பதுதான் அவ்வடிகளின் செய்தி.

மழைக்குன்றம் என்ற சொல் கம்பனின் வானியல் (Astronomy) அறிவையும், தாவரஇயல் (Botany) அறிவையும் புலப்படுத்தும். மழை மேகங்கள் விண்ணில் படர்ந்து பரந்து பரந்து செல்லும்போது, மழைக்குன்றுகள் என்று சொல்லப்பெறும் மழையை வரவழைக்கும் தாவரவகைகள் நிரம்பிய குன்றின்மேல் வந்தும், அக்குன்றுகளிலுள்ள தாவரங்களின் ஈர்ப்பால் மழையைப் பெய்விக்கும் என்பது அறிவியல். சிரபுஞ்சியில் மழை அதிகம் பெய்ய இத்தகைய மழைக்குன்றுகளின் அதிக எண்ணிக்கையே காரணம். அதேபோல், மேற்குத்தொடர்ச்சி மலையடிவாரங்களிலும் என்பது வானியல் அறிவியல். அந்த மழைக்குன்றுகளில் தாவரங்கள் நெருங்கிப்படர்ந்து, குன்றின் இயற்கை வண்ணத்தை ஒருவிதக் கரும்பச்சையாக (Deep Greenish Black) காட்டும். அத்தகு வண்ணத்தன் இராமன் என்பதற்குக் கம்பன் தேர்ந்தெடுத்த சொல்லே மழைக்குன்றம் என்பதனால், அவனுடைய Astronomical, Botanical அறிவியல் தெரியவரும்.

மழைக்குன்றம் என்று நிறுத்திவிடாது. மழைக்குன்றம் அனையான் என்றது மழைக்குன்றுகள் எல்லா இடத்திலும் இராது. அவை இருக்கு மிடங்களைத் தெரிய உதவும் மண்ணியல் அறிவியல் (Geological) படி அவை இருக்குமிடங்களில் ஒன்று இராமன் மேனி என்பது படவே மழைக்குன்றம் அனையான் என்றான் கம்பன்.

மழைக்குன்றம் இருக்குமிடங்களில் எப்படி மழை பொழிந்து. பசுமையும் வளமும் செழித்திருக்குமோ, அப்படி, இராமன்- மழைக்குன்றம் அனைய மேனி உடைய இராமன்- தீயோரைஅழித்து நல்லோரைக் காத்து அவர்களுக்கு அருள்மழை பொழியப் புறப்பட்டுவிட்டான். மழைக்குன்று இருந்த இடத்தைவிட்டு அசையாது. நகராது. அது இருக்குமிடத்தில் மட்டுமே மழை பொழியும். ஆனால், இந்த மழைக்குன்றம் அனையான்- மழைக்குன்றம் அல்ல- மழைக்குன்றம் போன்றவன்- எங்கு அருள் மழை தேவையோ, அங்கு சென்று மழை பொழிவிக்கக்கூடியவன் என்பது தோன்றவே, அதாவது மண்ணியல் போல, மழைக்குன்றம் அல்ல, குன்றம் அனையான் என்ற கம்பனின் சொற்பிரயோகம் நினைந்து நினைந்து இன்புறத்தக்கது.

மன்னராட்சி முடி

மெளலி என்கிற திருமுடி ஓர் அரச அடையாளச்சின்னம் மட்டுமன்று. அதனைச் சூடியிருப்பவனிடத்துத்தான் அரச அதிகாரம் அல்லது ஆளும் அதிகாரம் இருக்கும் என்பதைக்காட்டும் அதிகார மையம் (Power Centre).

கம்பன் காலத்திலேயே பலவிதமான அரசியல் அமைப்புகள் (Political Systems) இருந்திருக்க வேண்டும். அவன் காலத்திற்கு முன்பேயும் இருந்திருக்கின்றன. குடியாட்சி (Democracy) இல்லா விட்டாலும், முடியாட்சியிலேயே மன்னராட்சி (Monarchy), மேன் மக்களாட்சி (பிரபுத்துவ ஆட்சி) (Aristocracy) பலராட்சி (Anarchy) எனப் பல அமைப்புகளில் (Systems) ஆட்சி (Ruling) நடைபெற்றிருக்க வேண்டும். இவற்றில் எனப்படும் மன்னராட்சியில் தான் முடிசூட்டப்பெறும் முறை இருந்திருக்கிறது.

தயரதன் ஆட்சி மன்னராட்சி. அதிலும் பல மன்னர்களை அதாவது, அவர்கள் ஆண்ட நாடுகளை (States) உள்ளடக்கிய மாமன்னராட்சி (சக்கரவர்த்தி- பல மன்னர் கொண்ட வட்டத்திற்கு

அதிபதி). ஆகவே, மன்னர்கள் ஒப்புதலுடன் தயரதன் பதவி விலகி, இராமனை, இளவரசனாக்காது நேரிடையாகவே அரசனாக்க முடிவு செய்ததும்.. ஆகவே, மன்னர்கள் முன்னிலையில் அன்றைய அரசியல் முறைப்படி(Political System) அரசனாகப் பதவியேற்கும்போது, அனைத்து அதிகாரமும் பரிமாற்றம் செய்யப்படுவதைக் குறிக்க முடிசூட்டப்பெறுவதையும் அறிந்த கோசலை இப்போது அப்படி இராமன் அதிகாரம் பரிமாற்றமானதற்கு, அடையாளமான மௌலி இன்றி வருவதைக் கம்பன் குறிப்பாலுணர்த்தவே, மன்னராட்சி யின் சின்னமான 'மௌலி' என்ற சொல்லைப் பயன்படுத்துவான்.

அதிலும் அந்த அமைப்பு நடைமுறைப்படி (Political System) முடியை வசிட்டன் சூட்டியிருக்கவேண்டும். அப்போதுதான் ஆட்சிமுறை மாற்றம் ஏற்படும். ஆகவே, மௌலி கவிக்கப்பெறாமல் வருகிறான்.

வேளாண்மை தழை- கவி. உள, நேய இயல்

அப்படி இராமன் முடிசூடி வருகிறானா, வருகிறானா என்று தாயுள்ளத்தின் தவிப்போடு கோசலை பார்க்கிறாள். பள்ளிக்குப் போன மகன் வந்துவிட்டானா என்று எட்டிப்பார்க்கிற தாய், காணாவிட்டால், சிலநொடி கழித்து மீண்டும் வந்துவிட்டானா என்று பார்ப்பாள். அப்படி கோசலை விட்டுவிட்டுப் பார்ப்பதை, 'வரும் வரும்' என்று இரண்டு தடவை ஒரே சொல்லைப் பெய்து கவிதையியல் (Poetics) சுதந்திரத்தைக் காட்டுவான் கம்பன்.

சக்கரவர்த்தித் திருக்கோலத்தில் இராமன் வருவான், வருவான் என்று பலமுறை கற்பனை செய்து நினையுந்தொறும், மகிழ்ச்சி பொங்குகிற மனநிலையைத்தான், 'தழைக்கின் என்ற சொல்லால், கம்பன் படம்பிடித்துக் காட்டுவான். 'பூரித்தல், செழித்தல், தளிர்த்தல் என்ற பொருள்படும் தழைத்தல் என்ற சொல்லை முற்றிலுமாய் உணர, கிராமப்புற நடைமுறை வழக்கில் சொல்லும், 'தோட்டம் முழுதும் கீரை தழைத்துக் கிடக்கிறது' எனும் தொடர் உதவும். தழைத்தல் என்ற வேளாண்துறைக்கே (Agricultural Science) உரிய அபூர்வமான சொல்லாட்சியைக் கம்பன் இங்குப் பயன்படுத்துவது பொருத்தத்திலும் பொருத்தம்.

இதனை மேலும், மெருகூட்டவே, வெட்ட வெட்டத் தழைப்பதுதான் தழைத்தல் என்பதால், இராமன் வருவான் என்ற எண்ணம்

தோன்றித்தோன்றி மறைவதை, 'வரும் வரும்' என்று இருமுறை போடும் சொல் உதவிடும். தழைத்தலை நம் மனக்கண் முன்னே அப்படியே கொண்டுவந்துவிடும்.

இந்தத் தழைத்தல், இங்கே மண்ணில் நடைபெறவில்லை கோசலையின் மனத்தில் நடைபெறுவதால், 'தழைக்கின்ற' உள்ளத்து என்னும் தொடர் பொருந்தும். தழைத்து, வெட்டப்பட்டு, தழைத்து, வெட்டப்பட்டு, தழைத்து ஏங்குகின்ற உள்ளத்தாள் கோசலை என்பது கம்பனின் உளவியல் (Psychology) அறிவைக் காட்டும். அந்தத் தாயுளம் படும்பாட்டை உணர்த்த, 'தழைக்கின்ற உள்ளம்' என்ற உளவியல் சொல் உதவிடும்.

அப்படிப்பட்ட உள்ளம் உடையவள் என்பதை, 'அன்னாள்' என்ற சொல்லாட்சி சுட்டும். அதை மட்டுமா? அப்படிப்பட்ட உள்ளத்தை இயற்கையாகவே உடையவள் என்பதைச் சுட்டும் 'அன்னாள்' கோசலையின் மனிதநேய (Human Relations) மாண்பையன்றோ புலப்படச் செய்யும்? மனிதநேயம் எல்லோருக்கும் வாய்க்காது. சக மனிதரின் துயரம் கண்டு, நிலைகண்டு, தவிக்கின்ற, உருகுகின்றவர்களுக்குத்தான் மனிதநேயம் இயற்கையிலேயே அமையும். அப்படி ஒருநேயம் இயற்கையாகவே உடையவளாதலாலேதான், கோசலையைக் கம்பன், 'தழைக்கின்ற உள்ளத்து அன்னாள்' என்னும் தொடரால், தன் வேளாண் அறிவியல் (Agricultural Science), உளவியல் (Psychology), மனிதநேயவியல் (Human Relations Science) என்ற மூன்றையும் முன்னின்று உதவக் காட்டிடுவான்.

நாடக ஓவியம்

அப்படிப்பட்டவன் முன்னே முற்கண்ட கோலத்துடன் சென்றவன் இராமன். அந்த இராமனை, 'ஒரு தமியன்' என்ற சொல்லால் சுட்டுவான். தலையில் மௌலி இல்லை. முன்னே கவரி வீசப்படவில்லை. பின்னே குடை இல்லை. எந்த அரச அலங்காரமும் இன்றித் தனி ஒருவனாய் இராமன் வந்தான் என முத்தாய்ப்பாய்ச் சொல்வது நாடகப்பாங்கின் உச்சக்கட்டம். கவரியைச் சொல்லி, குடையைச் சொல்லி, உருவ முடைய அவை இன்மையைச் சொல்லி, பிறகு அருவமான விதிமுன் செல்வதையும், தருமம் பின் போவதையும் காட்டி, முடிசூடி அருளாட்சி செய்ய வேண்டியவன், முடிசூடாது வருவதை, 'தமியன்' என்ற சொல்லால் இறுதியில் சுட்டுவதே நாடகத்தின் (Dramaturgy) உச்சம் (Climax) ஆகும்.

'சென்றான்' என்ற இறுதிச் சொல், உச்சக்கட்டத்தை வலியுறுத்தி இப்படி நிகழ்ந்த இறுதிவினையை, செயலைச் சுட்டி நிற்கும்போது, ஏதோ ஒரு பெரிய நாடகத்தைக் கண்ட உணர்வுதான் நமக்கு ஏற்படும். அதைவிட ஒவ்வொரு அடியாக, சொல்லாக நாம் இரசித்துக்கொண்டே வந்தால் ஒரு பெரிய திரைச்சீலையில் தீட்டப்பெற்று முழுமையடைந்த ஓவியத்தைப் (Painting) பார்த்த நிறைவைக் கம்பன் ஏற்படுத்திவிடுகிறான். தூரிகையால் சிறிதுசிறிதாக வண்ணம் தீட்டி ஒருபெரும் பேசும் ஓவியத்தைக் கம்பன் வரைந்து காட்டியதுபோன்ற நிலையில்நம்மை வைத்துவிடுகிறது இப்பாடல்.

கம்பன் கலை

ஒரு பாடலுக்குள் எத்தனை கலைகள், அறிவியல் உண்மைகள், இயற்பியல்(Physics), வேதியியல்(Chemistry), தச்சுத்தொழிற்கலை (Carpentry), அரசியல் கலையியல் (Political Science), மரபியல் (Protocol), இறையாண்மை (Sovereignty), அனைவரும் சமம் (Equality), அரசியல் சூழ்ச்சி (Political Conspiracy) என்ற அங்கங்கள் மெய்யியல் (Philosophy), சமயயியல் (Religious mind), மொழியியல் (Linguistic phraseology), வானியல் (Astronomy) தாவரவியல் (Botany), மண்ணியல் (Geological) அரசியலின் அங்கங்களான அரச அமைப்புகள் (Political System) மற்றும் முடியாட்சி (Monarchy), கவிதையியல் (Poetics) வேளாண் அறிவியல் (Agricultural Science) உளவியல் (Psycology), மனிதநேயவியல் (Human Relations Science), நாடகவியல் (Dramaturgy) ஓவியக்கலை (Painting) என்ற இத்தனை கலைகளும் அறிவியலும் ஒரு பாடலுக்குள் வருமாறு ஒரு கவிஞன், பொதிந்திருக்கிறான் எனில், அவன் வெறும் கவிச்சக்கரவர்த்தியாக மட்டுமே இருக்க முடியாது.

கம்பன் யார்?

அப்படியானால், அவன் யார்? அறிவியல் அறிஞனா? மெய்ஞ் ஞானியா? கலைஞனா? கல்விக்கடலா?

சீதையைத் தேடி இலங்கையில் இறங்கிய அனுமன் அந்நகர் மாடமாளிகைகளையும், கூடகோபுரங்களையும் கண்டு வியந்து நிற்பதை,

'பொன் கொண்டு இழைத்த? மணியைக் கொடு பொதிந்த?
மின் கொண்டு அமைத்த? வெயிலைக் கொடு சமைத்த?
என் கொண்டு இயற்றிய எனத் தெரிகிலாத-

என்று கம்பன் சொல்லிக்காட்டுவானே. அப்படித்தான் நாமும் 'கம்பன் யார்?' என்று தெரியமுடியவில்லையே எனக் கையை விரிக்கத்தான் வேண்டியுள்ளது.

கம்பனின் காலமும் கனவும்

சி.க.கோவிந்தராஜ்.
முனைவர் பட்ட ஆய்வாளர், தூய நெஞ்சக்கல்லூரி, திருப்பத்தூர்.

கம்பன் காலத் தமிழகம்

கம்பன் காலத்திலே தமிழகத்தில் ஐம்பெருங்காவியங்கள் வழக்கில் இருந்திருக்கின்றன. அதுமட்டுமின்றி ஐம்பெருங்காப்பியங்களுக்குப் பின்னே தோன்றிய சூளாமணி, கம்பர் காலத்தில் வழங்கிய ஐஞ்சிறு காவியங்களில் ஒன்று. பெருந்தேவனார் இயற்றிய பாரதமும் இவர் காலத்தில் வழக்கில் இருந்துள்ளது. பெரியபுராணமும் இவருடைய சிறிதுகாலத்திற்கு முன்பு தோன்றி இருந்துள்ளது.

இவைகளைக் கொண்டு பார்க்கும்போது கம்பன் காலத்தில் இருந்த தமிழ்மக்கள் கவிச்சுவை நிறைந்த காவியங்களைப் படிப்பதிலே ஆர்வம் மிகுந்திருந்தனர் என்பதை உணரலாம். "தமிழ்நாட்டில் அக்காலத்தில் வழக்கிலிருந்த காவியங்கள் மக்களின் ஆசையை நிறைவேற்றும் அளவுக்குப் போதுமானவையாக இல்லை. சிந்தாமணியைத் தவிர, சிலப்பதிகாரத்தைத் தவிர, சூளாமணியைத் தவிர ஏனைய காவியங்கள் கருத்தைத் கவரும் கவிச்சுவை நிறைந்தவை அல்ல. பெரிய புராணம் காவியமாகாமல் சமயநூலாகவே போற்றப்பட்டது" என்று சாமி சிதம்பரனார் (கம்பன் கண்ட தமிழகம்) தம் நூலில் குறிப்பிடுகின்றார்.

இதன்காரணமாக கம்பன் இக்காவியத்தை பாடியிருக்கவேண்டும். "கம்பன் தானே தன் இராமாயணத்தைப் பாட முடிவு செய்திருக்க வேண்டும். பிறர் வேண்டுகோளின்படியோ - பிறர் உத்தரவுக்குக் கீழ்ப் படிந்தோ பாடியிருக்க முடியாது. "சடையப்ப வள்ளலின் வேண்டு கோளுக்காகக் கம்பன் இராமாயணம் பாடினான். குலோத்துங்க சோழன் கட்டளைக்குக் கீழ்ப்படிந்து இராமாயணம் படினான்" என்று கதைகள் வழங்குகின்றன. இக்கதைகள் உண்மையானவைகளாக இருக்க முடியாது" என்கிறார் சாமி சிதம்பரனார் (கம்பன் கண்ட தமிழகம்)

கம்பன் பொருளுக்கோ, புகழுக்கோ ஆசைப்பட்டு மற்றவருக்கு கீழ்ப்படிந்து இக்காவியத்தை பாடியிருப்பானாயின் அது செத்த காவியமாகவே இருந்திருக்குமே தவிர, உலகப் புகழ்பெற்ற ஒப்பற்ற உயர்காவியமாக இருந்திருக்காது.

ஆசைபற்றி அறையல் உற்றேன் மற்றுஇக்
காசுஇல் கொற்றத்து இராமன் கதை அரோ

என்று கம்பன் கூறுகிறான். "யாருடைய தூண்டுதலாலும் நான் இராமாயணத்தை பாடவில்லை குற்றமற்ற வெற்றியையுடைய இராமன் வரலாற்றில் உள்ள ஆசையால் இத்தமிழ் மக்கள் படிக்கும்படி இனிய சொற்சுவைக் காவியமாகச் செய்து தரவேண்டும் என்ற ஆசையில் நானேதான் பாடினேன்" என்று கூறுகிறார்.

மனித சமுதாயத்தை ஒழுங்குபடுத்தும் உயர்ந்த எண்ணத்துடன் எழுதப்பட்ட இதிகாசங்களும், புராணங்களும் கம்பன் காலத்திலே மக்களிடையே மதிப்புப் பெற்றிருந்தன. படிக்காத பாமரரும் இத்தகைய வரலாறுகளை - கற்பனைச் சித்திரங்களை கேட்பதிலே ஆர்வம் கொண்டிருந்துள்ளனர். இந்தச் சூழல்தான் கம்பனை ஒரு காவியத்தைச் செய்யுமளவுக்கு அவனை ஆக்கியுள்ளது.

கம்பன் காலத்திலே சமண - பவுத்த மதங்களின் செல்வாக்கு குறைந்து காணப்பட்டது. சைவ, வைணவ மதங்களின் தாக்கம் மேலோங்கி இருந்துள்ளது. அக்கொள்கைகள் கொண்ட சிறந்த காவியங்களும், கவிதைகளும் வேண்டும் என்று அவர்கள் விரும்பி இருக்கின்றனர். இவ்விருப்பத்தின் காரணமாகவே பெரிய புராணம் எழுந்தது. மக்களின் இத்தகைய ஆசையை நிறைவேற்றவே கம்பன் இராமாயணத்தைப் பாடி இருக்கிறான்.

காலத்தின் நிலையறிந்து, அவர்கள் விரும்பும் வழியிலே நின்று, பல நல்ல அறங்களை அவர்களுக்குக் கூறி மனித சமுதாயத்தை மேலோங்கச் செய்வதே ஒரு படைப்பாளனின் கடமை. புலமை என்பது கம்பனுக்குக் கிடைத்த மிகப்பெரிய கருவி அக்கருவியைக் கொண்டு மனித சமுதாயத்தை எவ்வாறு உயர்த்த முடியும் என்று எண்ணி, தமிழ்ப் பண்பாட்டுக்கு ஏற்பக் கம்பன் இக்காவியத்தை படைத்து இருக்கிறான்.

கம்பனின் எழுத்தும் புலமையும்

கம்பனின் காவியம் காலவெள்ளத்தைத் தாண்டி இன்றும் அவன் புகழ்பாடுகின்றது. அதற்குக் காரணம் அவன், இராமன் புகழை பாடியதால் இல்லை; புலமை என்னும் கரையில் நின்று அக்காவியம் காட்சி தருவதனாலேயே இக்காப்பியச் செய்யுட்களைப் படிக்கும்போது

நாவிலும் உள்ளத்திலும் தேனூற்றுப்போல் இனிமை சுவையுடையதாக இருக்கின்றது. இப்பெருங்காப்பியம் செய்யுள் நடை எளிமை, இனிமை, ஆழம் உடைமை என்னும் மூன்று குணங்களை உடையதாக இருக்கின்றது. இது மக்களுடைய வாழ்க்கையில் நிகழும் பற்பல செய்திகளையும், தக்க இடங்களில் மெய்ப்பாடு தோன்றக் கூறுவது அழகுமிக்கது. எண்ணங்களைப் புலப்படுத்தும் குறிப்புகளும், வரலாற்று மாந்தர் இயல்புகளைத் தக்கவாறு அவர்தம் வாய்மொழியில் வெளிப்படுத்தும் திறனும் நன்கு அமையப்பெற்றுள்ளது. தன்மை நவிற்சி, உவமை முதலிய அணிகளைப் புதிய முறையில் வியக்குமாறு எடுத்துக் கூறப்பட்டுள்ளது.

வண்மை இல்லையோர் வறுமை இன்மையால்
திண்மை இல்லைநேர் செறுநர் இன்மையால்
உண்மை இல்லைபொய் உரைஇ லாமையால்
வெண்மை இல்லைபல் கேள்வி மேவலால்

இப்பாடல் எளிமையாகவும், இனிமையாகவும், சொல்லினிமை யாகவும், பொருளினிமையாகவும், தொடரினிமையாகவும், ஓசை-யினிமையாகவும் எனப் பலவாறு காணப்படுகின்றன.

இராமனுக்கும் இராவணனுக்கும் நடந்த முதல் போரில் இராவணன் மகுடம் சிதையுமாறு இராமன் ஏவிய அம்பு விரைந்து சென்று தாக்கி மகுடங்களை வீழ்த்தியவுடன் இராவணன் நின்ற தோற்றத்தை இரண்டு உவமைகளில் கூறுகிறார்.

சொல்லும் அத்தனை அளவையில் மணிமுடி துறந்தான்;
எல் இமைத்து எழு மதியமும் ஞாயிறும் இழந்த
அல்லும் ஒத்தனன்; பகலும் ஒத்தனன்; அமர் பொருமேல்,
வெல்லும் அத்தனை அல்லது, தோற்றிலா விறலோன்

இராவணன் இரவையும் பகலையும் ஒத்தனன் என்று கூறுகிறார். ஆனால் கருமையாகிய பொதுத் தன்மை புலப்படக் கூற வேண்டுமாயின், திங்களை இழந்த இரவினையாதல் வேண்டும்; அல்லது ஞாயிற்றை இழந்த பகலினையாதல் வேண்டும். ஆனால், கம்பன் இருவிதமாகவும் உவமைகளை அழகாகக் கூறுகிறார். இப்படி எத்தனையோ காட்சிகளை உள்வைத்துக் கம்பர் கனவுகளை உள்ளடக்கிக் காவியம் பாடியுள்ளார்.

இலக்கியங்கள் குறிப்பிடும் இராமன்– இராவணன்

வி. ஜெயபுனிதவள்ளி
முனைவர் பட்ட ஆய்வாளர், அவினாசிலிங்கம்
மனையியல் மற்றும் உயர்நிலைக் கல்வி நிறுவனம், கோயம்புத்தூர்

கம்பராமாயணத்தில் வரும் இராமனைப் பற்றியும், இராவணனைப் பற்றியும், சங்க இலக்கியம், சிலப்பதிகாரம், தேவாரம், திருவாசகம், திவ்யப் பிரபந்தங்களில் குறிக்கப்பட்டுள்ளன. சங்கநூல்கள் காப்பியங்களின் வழியாகவும் அறியலாம்.

சங்க நூல்களில்...

இராமன், இராவணனுடன் போர் செய்வதற்காக இலங்கைக்குப் புறப்பட்டான். புறப்பட்ட வழியிலே தனுக்கோடியிலே ஒரு ஆலமரத்தின் அடியிலே தங்கியிருந்தான். வானர வீரர்களுடன் அமர்ந்து இலங்கையைப் பற்றிய செய்திகளை அவர்களுடன் ஆராய்ந்து கொண்டிருந்தான். அப்போது அந்த ஆலமரத்தின் மேல் பறவைகள் அமர்ந்து கூச்சலிட்டுக் கொண்டிருந்தன. அக்கூச்சல் ஆலோசனைக் கூட்டத்திற்கு இடையூறாயிருந்தது. அப்பறவைகளின் கூச்சல் அடக்கப்பட்ட பின்பே இராமன் அமைதியாக இருந்து ஆலோசனை நடத்தினான் என்பது இராமாயணச் செய்தி. இதனை,

வென்வேற் கவுரியர் தொன்முது கோடி
முழங்கிரும் பௌவம் இரங்கும் முன்றுறை
வெல்போர் இராமன் அருமறைக் கவித்த
பல்வீழ் ஆலம் போல
ஒலியவிந் தன்றிவ் வழுங்கல் ஊரே (அகம்-70)

எனும்படி அகநானூற்றுப் பாடல் பகுதியில் காணப்படுகிறது.

இமையவில் வாங்கிய ஈர்ஞ்சடை அந்தணன்
உமை அமர்ந்து உயர்மலை இருந்தனன் ஆக
ஐயிரு தலையின் அரக்கர் கோமான்
தொடிப்பொலி தடக்கையின் கீழ்புகுந்து அம்மலை
எடுக்கல் செல்லாது உழப்பவன்போல (கலித்: 38)

என்ற கலித்தொகைப்பாடலில் இராமாயணக் குறிப்பு இடம் பெற்றுள்ளது.

விரைந்து செல்லும் தேர் உள்ள இராமனுடன் சேர்ந்து காட்டுக்கு வந்த சீதையை வலிமை வாய்ந்த கைகளையுடைய அரக்கனாகிய இராவணன் கவர்ந்துசென்றான். அந்நாளில் சீதையால் கழற்றி எறியப் பட்டு நிலத்தில் கிடந்து ஒளி வீசிய ஆபரணங்களைச் சிவந்த முகங்களை யுடைய குரங்குகளின் பெரியகூட்டங்கள் கண்டன. இதனை,

கடுந்தேர் இராமன் உடன்புணர் சீதையை
வலித்தகை அரக்கன் வௌவிய ஞான்றை
நிலம்சேர் மதர் அணி கண்ட குரங்கின்
செம்முகப் பெரும்கிளை (புறம்: 378)

என்ற புறநானூற்றுவழி அறியலாகும் இராமாயணக் குறிப்பு இது.

பக்க மலையில் விழுகின்ற அருவிகளையுடைய பொதியமலையில் இருக்கும் கடவுளாகிய அகத்தியர், தமிழ்நாட்டை ஆளாதபடி இராவணனை விரட்டியவர். பழமை முதிர்ந்தவர். அத்தகைய முனிவரின் பின்னவனாய் எண்ணப்பட்டுச் சான்றோனாய்த் திகழும் தகுதியைப் பெற்றவன். இதனை,

தென்னவற் பெயரிய துன்னருந் துப்பிற்
றென்முது கடவுட் பின்னர் மேய (மது.காஞ்..40-41)

என்ற மதுரைக் காஞ்சி பாடல் அடிகளால் அறியலாம். 'தென்னவன்' என்பது இராவணனையும், கடவுள் என்பது அகத்திய முனிவரையும் குறிப்பிடுகிறது. இதுபோலவே பரிபாடலில்,

இந்திரன் பூசை, இவள் அகலிகை, இவன்
சென்ற கவுதமன், சினனுறக் கல்லுரு
ஒன்றிய படியிது என்றுரை செய்வோரும் (பரிபா-19)

என்ற பரிபாடல் வரிகளில் அகலிகை சாபம்பற்றிய சித்திரம் திருப்பரங் குன்றத்துச் சித்திர மண்டபத்தில் வரைப்பட்டிருந்ததெனக் குறிக்கப் பட்டுள்ளது.

காப்பியங்களில்...

திருமால் மயக்கம் உற்று, நில உலகிலே இராமனாகத் தோன்றினான். இராவணனைக் கொல்ல- சீதையைச் சிறைமீட்க இலங்கைக்குப் போகும்பொருட்டு கடலிலே அணை போட்டான். அந்நாளில் அணை போடுவதற்காகக் குரங்குகள் தூக்கிக் கொண்டு வந்து கடலிலே வீசிய

பெரிய மலைகள் எல்லாம் வருத்தத்தைத் தரும் கடலின் வயிற்றிலே புகுந்தன.

நெடியோன் மயங்கி நிலமிசைத் தோன்றி
அடல் அரு முந்நீர் அடைத்த ஞான்று
குரங்கு கொணர்ந்து எறிந்த நெடுமலை எல்லாம்
அணங்குடை அளக்கர் வயிறுபுக்கு (மணி9-12)

என்ற மணிமேகலைப் பாடல் அடிகளில் இராமன் சேதுபந்தனம் செய்தான் என்பதை உணர்த்துகிறது.

'காட்டை அடைந்த சிறந்த வல்லமையுள்ள இராமனைப் பிரிந்த அயோத்தி நகரத்தை போல' என்பது சிலப்பதிகாரம். கோவலனும் கண்ணகியும் காவிரிப்பூம்பட்டினத்தை விட்டுப் பிரிந்தவுடன். அவ்வூரில் உள்ளவர்கள் வருந்தினார்கள். கோவலனை நினைத்து உரையாடித் துன்புற்றார்கள் இராமன் காட்டுக்குப் போனவுடன் அயோத்தியில் உள்ளவர்கள் இராமனைப் பற்றி எண்ணிப் பேசித் துக்கமடைந்ததைப் போல வருந்தினார்கள்.

தாதை ஏவலின் மாதுடன் போகிக்
காதலி நீங்கக் கடும்துயர் உழந்தோன்
வேத முதல்வற் பயந்தோன் என்பது
நீ அறுந்திலையோ நெடுமொழி அன்றோ (சில. 14: 46-49)

தந்தையின் கட்டளைப்படி தன் மனைவியாகிய சீதையுடன் காட்டுக்குச் சென்று, மனைவியைப் பிரிந்து கடுமையான துன்பத்தை அடைந்தான் இராமன். அவன் வேதங்களின் முதல்வனாகிய நான்முகனைப் பெற்றவன். இது உனக்குத் தெரியாதா? இது பலகாலமாக வழங்கி வரும் வார்த்தையல்லவா? கோவலனுக்குக் கவுந்தியடிகள் இவ்வாறு கூறியதாகச் சிலப்பதிகாரம் உரைக்கின்றது.

மூவுலகும் ஈரடியால் முறைதிறம்பா வகைமுடியத்
தாவிய சேவடி சேப்பத் தம்பியொடும் கான்போந்து
சோ அரணம் போர்மடியத் தொல் இலங்கை கட்டழிந்த
சேவகன்சீர் கேளாத செவியென்ன செவியே
திருமால்சீர் கேளாத செவியென்ன செவியே (சிலப். காதை.17)

மூன்று உலகங்களையும் இரண்டு அடிகளால் மாபலியின் வாக்குறுதி நிரம்பாதபடி முழுவதும் தாவி அளந்தவன். அவ்வடிகள் சிவக்கும்படி

தம்பியாகிய இலக்குவனுடன் இணைந்து காட்டுக்குப் போனவன். அசுரர்களுடைய நகரத்தைப் போரிலே அழித்தவன். பழமையான இலங்கையையும் அழித்தவன். இந்தச் சிறந்த வீரனாகிய இராமனுடைய புகழைக் கேட்காத காது என்ன காது? திருமாலின் சிறப்பைக் கேட்காத காது என்ன காது? ஆய்ச்சியர்கள் குரவைக் கூத்தாடும்போது இவ்வாறு பாடி ஆடுகின்றனர்.

செயிர்த் தொழில் முதியோன் செய்தொழில் பெருக
உயிர்த்தொகை யுண்ட ஒன்பதிற்று இரட்டிஎன்
றியாண்டும், மதியும் நாளும் கடிகையும்
ஈண்டுநீர் ஞாலம் கூட்டி எண் கொள (சிலம்பு. காதை 27 வரி 7-10)

உயிர்களைக் கவரும் காலனுடைய தொழில் பெருகும்படி, உயிர்களைக் கொள்ளைகொண்டு உண்ட போர்கள் எல்லாம் பதினெட்டு என்னும் எண்ணில் முடிந்தன. அவற்றை, தேவாசுரயுத்தம் பதினெட்டு ஆண்டுகளில் முடிந்தது. இராமராவணயுத்தம் பதினெட்டு நாட்களில், துரியோதனர் யுத்தம் பதினெட்டு நாட்களில் முடிந்தது. செங்குட்டுவன்-கனக விசயர் போர் பதினெட்டு நாழிகைகளில் முடிந்தது என்று உலகினர் எண்ணிக்கொள்கின்றனர்.

இவ்வாறு உலகோர் யுத்தத்தைப் பற்றிப் பதினெட்டு என்னும் தொகையில் எண்ணும்படி, செங்குட்டுவன் போர்செய்து முடித்தான் எனக் கூறுகிறது சிலப்பதிகாரம்.

கம்பராமாயணத்தில் இடம் பெற்றுள்ள கதாபாத்திரங்கள் பற்றிய செய்திகள் சங்க நூல்களிலும் காப்பியங்களிலும் இடம் பெற்றுள்ளதை இவ்வாய்வு எடுத்துக்காட்டுகிறது. கம்பன் தோன்றுவதற்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே, இராமாயணம் தமிழ்நாட்டில் பரவியிருந் திருப்பதை இச்சான்றுகள் காட்டும் வண்ணம் இருக்கின்றன.

கம்பனும் சங்க இலக்கியப் புலவர்களும்

பரந்தூர் இராமசாமி
மணவாள நல்லூர். திருவள்ளூர் மாவட்டம்

தமிழ் இலக்கிய. காப்பிய உலகில் கம்பனால் மானுடத்தின் பெருமை சிறப்பதோடு. தமிழ்நாட்டின் பெருமை உயர்த்தப்படுவது கம்பனுக்குள்ள இடம் ஒப்பற்றது. உலகம் கண்ட மகா மேதைகளில் சிறந்து விளங்குபவன் கம்பன். பாமர மக்களிடையே இலக்கிய ஞானத்தை தந்தவன். வட இந்தியாவுக்கும் தென்னிந்தியாவுக்கும் இடையே நட்புறவுப்பாலத்தை ஏற்படுத்திய கம்பனது தொண்டு இமயத்தைவிட உயர்ந்தது எனலாம்.

காப்பிய அழகு

அகநானூற்றுப்பாடலில் குறிஞ்சி நிலத்தின் அழகுக் காட்சிகளை கபிலர் பாடுகிறார்.

ஆடமைக் குயின்ற அவிர்துளை மருங்கின்
கோடை அவ்வளி குழலிசை யாகப்
பாடின் அருவிப் பனிநீர் இன்னிசை
தோடமை முழவின் துதை குரலாகக்
கணக்கலை இகுக்கும் கடுங்குரல் தூம்பொடு
மலைப்பூஞ் சாரல் வண்டு யாழாக
இன்பல் இமிழிசை கேட்டு கலிசிறந்து
மந்தி நல்அவை மருள்வன நோக்க
கழைவளர் அடுக்கத்து இயலி ஆடுமயில்
நனவுப்புகு விறலியின் தோன்றும்" (அகநா..82)

வனப்பு மிக்க அடர்ந்த காட்டில் ஓங்கி வளர்ந்த மூங்கில்களில் வண்டுகள் செய்த துளைகளின் வழியே நுழைந்து வெளிவரும் காற்று குழலிசையாகவும், மலையிலிருந்து கொட்டுகின்ற அருவியானது. முரசின் இனிமை ஒலியாகவும். துள்ளிஓடும் அழகு மான்களின் குரல் கேட்க வியக்கும் ஓர் இனிமையாகவும் இசைக்குழலாகவும். மலர்களில் தேன் எடுக்கும் வண்டுகளின் ஒலி யாழிசையாகவும் இப்படி வெவ்வேறு ஒலி இசைகளும் கேட்டு மயில்கள் அசைந்து ஆடுவது அரங்கத்தில் பாணப்பெண் ஆடுகின்றாற்போன்ற இக்காட்சியினை மந்திகள் மருண்டு மருண்டு நோக்குவதாக கபிலர் பாடியுள்ளது. கம்பரும் இதுபோன்று

தம் காப்பியத்தில் மருத நிலத்து இன்புறும் அழகைப் பாடியுள்ளதை அறியலாம்.

தண்டலை மயில்கள் ஆடத் தாமரை விளக்கம் தாங்கக்
கொண்டல்கள் முழவி னோங்கக்குவளைகள் விழித்து நோக்கத்
தெண்டிரை எழினி காட்டத் தேம்பிழி மகர யாழின்
வண்டுகள் இனிது பாட மருதம் வீற்றிருக்கும் மாதோ (14)

அழகிய பூஞ்சோலையில் மயில்கள் நடனம் ஆட, தடாகத்தில் தாமரைக் கொடிகளில் பூத்திருக்கும் தாமரைப்பூக்கள் காண்பதற்கு விளக்குகளாக, மேகங்கள் மத்தளம் கொட்டுவதாகவும் பகற்பொழுது மறைந்தூன் கருங்குவளைகளெல்லாம் கண்விழித்து காண்பதாகவும் கடல்களின் அலைகள் எல்லாம் திரைச் சீலையாகவும் வண்டுகள் இனிமையாக ஒலிப்பதாகவும், அதனை கோசல நாட்டின் மருத நிலத்து வேந்தன் கண்கொள்ளாக்காட்சியாக கண்டு களிப்பதாக கம்பன் பாட்டில் அழகை விரித்திருப்பது மனத்துள் நீங்காத காட்சியாக விளங்குகிறது.

தமிழரின் உயிர் நூலாக முதன்மையாக விளங்குவது தொல்காப்பியம் ஆண் பெண் கலந்து வாழும் இல்லற வாழ்வில் தலைவன் தலைவிக்கு உரிய மரபு பற்றி,

யாறும் குளனும் காவும் ஆடிப்
பதிஇகந்து நுகர்தலும் உரிய என்ப (தொ.1137)

தலைவன் தலைவியுடன் ஊரைவிட்டு நீங்கிச்சென்று ஆற்றிலும் குளத்திலும் நீர்விளையாட்டில் ஈடுபட்டு இன்பம் நுகர்வது உண்டென்று கூறுவதை அறியலாம்.

இதற்கொப்ப, குறுந்தொகை 80 :1-3 அகநானூறு 36 - 9:12, 166 11:15,266 குறுந்தொகை, நற்றிணை, கலித்தொகை பரிபாடல் ஐங்குறு.நூறு இப்படி பல பாடல்களில். உரைக்கப்பட்டுள்ளன. இதுபற்றி கம்பன் பாட்டில்,

நதியினும் குளத்தும் பூவா நளினங்கள் குவளை யோடு
மதிநுதல் வல்லி பூப்ப நோக்கிய மழலைத் தும்பி
அதிசயம் எய்திப் புக்கு வீழ்ந்தன. அலைக்கப்போகா
புதியன கண்டபோழ்து விடுவரோ, புதுமை பார்ப்பார்? - (898)

பெண்கள் கொடியைப் போன்றவர்கள். கொடியில் பூத்த தாமரை பூப்போன்றது அவர்கள் முகங்கள் தாமரையில் குவளை சேர பூத்

திருக்கும் காட்சி ஒரு கொடியில் இருவகை மலர்களைப் போன்று புதுமையானது என்பதால் வண்டினங்கள் அந்தப் பெண்களின் முகத்தை சுற்றி வந்தது கண்டு அவள்தன் கைகளால் ஓட்டியும் வண்டுகள் அவளைவிட்டு நீங்காத அந்த புதுமையை காண்பவர்கள். அதனை விட்டு விடுவார்களா அல்லது விலகுவார்களா என்றுரைக்கும் கவிச் சக்கரவர்த்தியின் கூற்றைக் காணலாம்.

நல்ல மழைக்காலத்தில் காடுகளைக் காணும்போது எப்படி இருக்கும்? காடும், காடு சார்ந்த அடர்ந்த முல்லை நிலத்தில் காயாம் பூக்கள், கொன்றை பூக்கள் பூத்துக் குலுங்கிச் செழித்திருக்கும் செம்மண் நிலத்து வழியே தலைவன் தேர் ஏறி வருகிறபோது, அந்த காட்சி முல்லைப் பாட்டில்,

செறியிலைக் காயா அஞ்சன மலர
முறியிணர்க் கொன்றை நன்பொன் கால,
கோடற் குவிமுகை அங்கை அவிழத்
தோடார் தோன்றி குருதி பூப்பக்
கானம் நந்திய செந்நிலப் பெருவழி - (முல்லை 93-97)

இதுபோன்று சிறுபாண் 167-லும், அகநானூற்றில்,

கார்விரி கொன்றைப் பொன்னேர் புதுமலர்த்
தாரன் மாலையன் மலைந்த கண்ணியன்

என்று கடவுள் வாழ்த்திலும் பாடியுள்ளார்கள். இக்காட்சியை மனதிற்கொண்டு அதனோடு உலக இயல்பை கற்பனை வளத்துடன் உவமைப்படுத்தி அழகுறப்பாடுகிறார் கம்பர்.

நன்னெடுங் காந்தள் போதில் நறை விரி கடுக்கை மென்பூ
துன்னிய கோபத்தோடும் தோன்றிய தோற்றம் - தும்பி
இன்னிசை முரல்வ நோக்கி இருநில மகள்கை ஏந்தி
பொன்னொடும் காசைநீட்டிக் கொடுப்பதே போன்றது அன்றே (4178)

மழைக்காலத்தில் பூத்திருக்கும் கொன்றைப் பூக்கள் பொன்னைப்; போலவும் கைப்போன்ற காந்தள் பூக்களில் வந்து சேரும் தம்பலப்பூச்சிகள் பார்க்க மாணிக்கம் போலவும், அங்கே இசைக்கின்ற வண்டுகளின் இசையைக் கேட்டு மகிழ்ச்சியோடு நிலமகள் பொன்னையும், மாணிக்கத் தையும் பரிசாக தருவது போன்ற காட்சியாக இருப்பதை ஒப்பிட்டு, கம்பன், யாழ்ப்பாணர், இசைவாணர் போன்றோர்களின் பாட்டுத்திறம் கண்டு, வேந்தன் பொன்னும், மணியும் பரிசாகத் தருவது போன்று

இருக்கிறது என்று கம்பர் கற்பனையில் எழும் காட்சி எவ்வளவு உயர்வாக, சிறப்பாக அமைத்துள்ளார் என்பதை எண்ணும்போது கம்பன் எல்லாவற்றிலும் தனித்துவம் வாய்ந்தவராக விளங்குகிறார்.

தொல்காப்பியரும் கம்பரும் காட்டும் வண்ணங்கள்

முனைவர் **சி.சுந்தராம்பாள்**
பேராசிரியர், தமிழ்த்துறை,அவினாசிலிங்கம் மனையியல் மகளிர்
பல்கலைக்கழகம்,கோயம்புத்தூர்

'எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே' என்று இலக்கணம் வகுக்கின்றார் தொல்காப்பியர். சொல்லும், சொல்லப்படும் பொருளும் இயைந்து நிற்கும் பாக்களால் உலகமொழிகளில் தமிழ்மொழியின் தரத்தினை நிலைநாட்டிச் சென்ற பெருமைக்குரியவர் கவிச்சக்கரவர்த்தி கம்பர்.

வண்ணங்கள்

செய்யுளின் அமைப்புமுறை, பாவகைபற்றி சொல்லதிகாரப் பகுதிக்குள் எடுத்தியம்பி வரும் தொல்காப்பியர் 'வண்ணங்கள் என்னும் தலைப்பின்கீழ் செய்யுளிடத்துப் பயின்று வரக்கூடிய வண்ணங்கள் இருபதின் அமைப்பு முறைபற்றி தகுந்த முறையில் விளக்கம் தந்து செல்கின்றார்.

வண்ணம் என்பதனை விளக்கவந்த பேராசிரியர் 'வண்ணம் என்பது சந்த வேறுபாடு' - என உரைத்துள்ளார். பாஅவண்ணத்தைத் தொடக்கமாகக் கொண்டு முடுகு வண்ணத்தை இறுதியாகக் கொண்டு இருபது வண்ணங்களைத் தொகுத்துள்ளார். பிற்காலத்தில் பெருவளர்ச்சி கண்ட வண்ணப்பாடல் வகைக்குத் தொல்காப்பியர் முதன்முதலாக இலக்கணம் கூறி, அதன் அடிப்படைகளைக் கோட்பாட்டுப் பார்வையில் சுருக்கமாகத் தருகிறார். இவ்வண்ணங்கள் தொல்லாசான் கருத்துப்படி எழுத்து, சொல், தொடை, ஓசை, நடை என்ற ஐந்தையும் அடிப்படையாகக் கொண்டு அமையும்" என தமிழண்ணல் கருத்துத் தெரிவித்துள்ளார்.

எழுத்துக்களால் ஓசை மற்றும் சந்தம் அமைந்து வருவதனை வல்லிசை வண்ணம், மெல்லிசை வண்ணம், இயைபு வண்ணம், நெடுஞ்சீர் வண்ணம், குறுஞ்சீர் வண்ணம், சித்திரவண்ணம் (குறில், நெடில் கலந்து சமமாக வருதல், நலிபு வண்ணம் (ஆய்தம் மிகுதியாக இடம் பெறுதல்) என்பர். சொல்லை அடிப்படையாகக் கொண்டு பிறக்கும் வண்ணங்கள் சொற்சீர் வண்ணம், எண்ணு வண்ணம், ஏந்தல் வண்ணம் என மூன்றுமாகும்.

தொடை அடிப்படையில் தாஅவண்ணம், (இடையிட்டு வரும் எதுகை அமைப்பு உடையது) அளபெடைகளை மிகுதியாகப் பெற்று வருவது அளபெடை வண்ணமாகும்.

அகவல்போல ஒழுகிய ஓசையை உடையது ஒழுகுவண்ணம் எனவும். துள்ளல் ஓசைத்தாக இடையிட்டு வருவது அகைப்பு வண்ணம் எனவும், தூங்கல் ஓசை உடையது தூங்கல் வண்ணம் எனவும் பெயர்பெறும் நாற்சீரடியில் உருட்டி ஒலிக்கப்படும் அராகம் தொகுத்துப் பாடுவது உருட்டு வண்ணம் எனவும், நாற்சீரின் மிக்க சீர்களையுடைய அடியில் அராகம் தொகுப்பது முடுகு வண்ணம் எனவும் பெயர்பெறும்.

நடை அடிப்படையில் அகப்பாட்டு வண்ணமும், புறப்பட்டு வண்ணமும் செய்யுளில் இடம் பெறும் என இலக்கணத் திறனாய் வாளர்கள் வண்ணத்தின் அமைப்புக் குறித்து எழுதியுள்ளார்.

'வண்ணமோ சொல்லுடனும், சொற்றொருடனும் மட்டும் நிற்பதில்லை. உள் ஒலியினாலும், ஓசையினாலும் முன்பின் உள்ள பொருள்களை ஒன்று சேர்த்து நயமாக அனுபவிக்கும்படி செய்யும் ஆற்றல் உடையது' என்று மு.இராமலிங்கர் விளக்கம் தந்துள்ளார்.

கம்பர் படைப்பில் வண்ணங்கள்

கம்பராமாயணத்தில் ஆற்றுப்படலம் தொடங்கி விடைகொடுத்த படலம் இறுதியாக 4309-கலிவிருத்தப்பாக்கள் இடம் பெற்று இராமனின் பெருமையுடன், அறத்தின் வெற்றியும், பாவத்தின் தோல்வியும் குறித்த இருவேறு செயல்பாடுகளுக்கான தோற்றுவாயுடன் 'நல்லறத்தை' நாளும் நிலைநாட்டும் வகையில் காப்பியச் செய்திகள் ஒன்றுடன் ஒன்று பிணைந்து இணக்கமுடன் செல்லக் காண்கிறோம். காப்பியத்தின் பாடு பொருளை நடத்திச் செல்வதில் பாடல்களின் அமைப்புமுறை பேரளவில் துணை புரிந்துள்ளன எனக்கூறலாம்.

'வண்ணங்களில் மிகவும் நுட்பமான வண்ணங்கள் இரண்டு அவை மாட்டு என்ற செய்யுள் உறுப்புடன் நெருங்கிய தொடர்பைக் காட்டுவன. அந்த வண்ணங்கள் அகப்பாட்டு வண்ணமும், புறப்பாட்டு வண்ணமும் ஆகும்' எனப் பொருட்படலத்தின் உரையாசிரியர் கருத்துத் தெரிவித்துள்ளார்.

'ஞானயோகி' என்று பாராட்டப்பெறும் தொல்காப்பியர் ஒலி அதிர்வு செய்தின்ற அற்புதங்களை இருபது வண்ணங்களில் வகைப்படுத்திக் காட்டியுள்ளார். ஒவ்வொரு வண்ணமும் ஒவ்வொரு வகையான ஒலி அதிர்வுடன் கூடிய சொற்களும் உடையதாய் காப்பியத்தில் பயன் பாட்டுக்குரியதாகவும் கம்பரின் கவிநடையை சிறப்புற எடுத்துக்காட்டும் வகையிலும் அமைந்திருப்பதனைக் காணலாம்.

தொல்காப்பியர் சுட்டிக்காட்டும் முதல் வண்ணம் தாஅ வண்ணமாகும். இடையிட்டு எதுகையால் வருவது. காப்பியத் தொடக்கத்தில் நீறணிந்து, ஆறணிந்து, சேறணிந்து, வீறணிந்து, என அடிதோறும் இரண்டாம் எழுத்து ஒன்றிவரும் எதுகையுடன் தொடங்கியுள்ளார் ஆசிரியர். முதல் சீரும் நான்காம் சீரும் இலக்கணவிதிப்படி 'ண'கரம் ஒரூஉ எதுகையாக வருதல் (பேராசிரியர்) என்னும் நெறிக்குட்பட்டு இரணியன் வதைப்படலத்தில்,

கண்ணினுங் கரந்துளன் கண்டு காட்டுவார்
உண்ணிறைந்திடு உணர்வாகி யுண்மையால்
மண்ணினும் வானினும் மற்றை மூன்றினும்
எண்ணினும் நெடியவன் ஒருவன் எண்ணினான் (பா.எ:201)

என்ற பாடல் அமைந்திருக்கக் காணலாம்.

வல்லெழுத்து மிகுந்தும், மெல்லெழுத்து மிகுந்தும், இருவகை எழுத்து களும் விரவியும் வரும்வகையில் யுத்தகாண்டத்தில் பாடல்கள் பதிவாகி இருக்கக் காணலாம். படைத்தலைவன் வதைப்படலத்தில்,

கிச்சு உறு கிரிபட கிளர்பொன் தேர் நிரை
அச்சு இற செல்கில ஆடல் வாம் பரி
எச்சு உறு துயரிடை எய்த ஈத்து உணா
முச்சு இறு வாழ்க்கையின் மூண்டுளோர் என (:2288)

எனவும்,

வணங்கு நுண் இடை வனமுலை செக்கர் வார் கூந்தல்
அணங்கு வெள் எயிற்று அரக்கியர் களத்து வந்து அடைந்தார்
குணங்கொளும் துணைக் கணவர்தம் பசுந்தலை கொடாது
பிணங்கு பேய்களின் வாய்களைப் பிளந்தனர் பிடித்துதே (2304)

எனவும் வரும் பாடல்களில் வல்லின எழுத்துக்களும் மெல்லின எழுத்துக்களும் கலந்து பாடல் பட்ட நிலையில் வல்லிசை வண்ணமும், மெல்லிசை வண்ணமும் பயின்றுவரக் காண்கிறோம்.

இடையின எழுத்துக்கள் மிகுதியும் கலந்துவர பாடப்பெற்ற அமைப்பினை உடையதாக,

கிளர்ந்தாரையும் கிடைத்தாரையும் கிழித்தான் கனல் விழித்தான்
குளம் தானொரு குழம்பாம் வகையரைத்தா துருக் கரைத்தான்

வளர்த்தான் நிலை யுணர்ந்தா ருலகொரு மூன்றையும் வலத்தால்
அளந்தான்முன மிவனேயென இமையோர்களும் அயிர்த்தார் (2508)

என்ற பாடல் இடம் பெற்றுள்ளது. குறுஞ்சீர் மற்றும் நெடுஞ்சீர் வண்ணங்களுக்குரிய பாடல்களாக, குறில் எழுத்துக்கள் பயன்படுத்தப் பட்ட நிலையில்,

தன்னைக் கொல்லுநர் சாருதலோடும்
பொன்னைக் கொல்லும் ஒளிப்புகழ்பொய்யா (226)

எனவரும் பாடல்வரிகளும், நெட்டெழுத்துக்கள் மிகுதியாகப் பயின்று வர,

எவரே யுலகந் தந்தா ரென்பெய ரேத்தி வாழும்
மூவரே யல்லாராகின் முனிவரே முழுதுந் தோற்ற
தேவரே பிறரே யாரே செப்புதி தெரிய வென்றான்
கோவ மூண்டெழுந்துங் கொல்லான் காட்டுமேற் காட்டுகொள்வான் (249)

என்ற பாடலும் அமைந்து வரக் காணலாம். அளபெடை எழுத்துக்களால் தொகுக்கப்படுவது அளபெடை வண்ணமாகும். இக்கருத்தினை,

அளபெடை வண்ணம் அளபெடை பயிலும் (தொல்.1475)

என்பார் தொல்காப்பியர். குறில், நெடில் எழுத்துக்கள் இணைந்து பயின்றுவரும் சித்திர வண்ணப் பகுதிக்கு விளக்கம் தருமிடத்து,

நெடியவும் குறியவும் சேர்ந்துடன் வருமே (தொல் : 1478)

என விதி அமைத்துள்ளார்.

கொடிக்குழீஇயின கொழுந்தெடுத்தெழுந்து மேற்கொள்ள
இடிக்குழீஇயெழு மறைப்பெருங் குலங்களை யிரித்த
அடிக்குழீஇ கியிடுமிடந்தொறும் பிதிர்ந்தெழுந்தார்த்த
பொடிக்கழீஇ அண்டம் படைத்தவன் கண்ணையும் புதைத்த (2492)

எனவரும் பாட்டில் அளபெடை எழுத்து இடம்பெற்றுள்ளன. பிரம்மாத் திரப் படலத்தில்,

கொடியேன் இவை காண்கிலேன் என் உயிர் கோள்
முடியாய் நமனே முறையோ முறையோ
விடியா இருள்வாய் எனை வீசினையே
அடியேன் உயிரே அருள் நாயகனே (2624)

எனவரும் பாடல் சித்திரவண்ண அமைப்பினை உள்ளடக்கி இருப்பதைக் காணலாம்.

எண்ணுதல், கணக்கிடுதல் என்னும் பொருளில் ஒன்று முதல் எண்கள் பயின்று வர பாடல் அமைக்கப்படுவதால் தொல்காப்பியரும்,

எண்ணு வண்ணம் எண்ணுப் பயிலும் (1484)

என எடுத்துரைக்கின்றார். காப்பியத்தின் தொடக்கமாக அமையும் காப்பியச் செய்யுளில் ஒன்றுமுதல் ஐந்துவரை அமைத்துப் பாடியுள்ளார். இதனை,

ஒன்றா யிரண்டு சுடரா யொருமூன்று மாகிப்
பொன்றாத வேத மொருநான்கா டைம் பூதமாகி
அன்றாகி யண்டத்த கத்தாசியப் புறத்துமாகி
நின்றானொருவன் அவன்நீள் கழல் நெஞ்சில் வைப்பாம்.

என்ற பாடல் வழி அறியலாம்.

பாடலின் அமைப்பு முறையில் செறிந்த ஓசை வெளிப்படுவதும் உண்டும். ஓடைநீர் போல் ஓசை வெளிப்படுவதும் உண்டு. ஓடைநீர் போல் ஓசை ஒழுகிச் செல்லும் தன்மையதாய் மருதநிலக்காட்சி, **தண்டலை மயில்களாட** எனும் பாடலில் வர்ணிக்கப்பட்டிருப்பதனைக் காணலாம்.

அகைப்பு வண்ணம் அறுத்தறுத் தொழுகும் (1485)

என ஓசையிடையிடையே அறுத்து நடப்பதனை அகைப்பு வண்ணம் என்றும்,

சொல்லிய சொல்லில் சொல்லியது சிறக்கும் (1487)

என்ற நூற்பாவில் சொற்கள் பலமுறை பயின்று வந்த பாடலைச் சிறப்பிப்பதனை ஏந்தல் வண்ணம் எனவும் வகைப்படுத்திக் காட்டி யுள்ளார் தொல்காப்பியர்.

நீரிடை யுறங்கும் சங்கம் நிழலிடை உறங்கும் மேதி
தாரிடை யுறங்கும் வண்டு தாமரை உறங்கும் செய்யா
தூரிடை யுறங்கி மாமை துறையிடை யுறங்கு இப்பி
போரிடை யுறங்கு மன்னம் பொழிலிடை உறங்கும் 'தோகை (38)

'உறங்கும்' என்ற சொல் பயின்று வர ஏந்தல் வண்ணமும், ஓசை இடையிட்டு அறுத்தறுத்து நடப்பதால் அகைப்பு வண்ணமும் ஒரே பாடலில் இடம்பெறுமாறு கம்பர் பாடல் அமைத்திருக்கும் திறம் படித்து மகிழ்வதற்கும் எண்ணி வியப்பதற்கும் உரியது எனலாம்.

உருட்டு வண்ணமும், முடுகு வண்ணமும் விரைவான ஓசையினை உடையதாக அமைந்துவரும்.

உருட்டு வண்ணம் அராகந் தொடுக்கும் (1488)

என்ற நூற்பாவின் வழியும்,

முடுகு வண்ணம்ஆடியிறந்தோடி அதனோரற்றே (1489)

எனவரும் நூற்பாவின் செய்தியாலும் விரைந்த ஓட்டத்தினை உள்ளடக்கிப் பாடல் பயின்று வரும் என அறியலாம். போர்க்களக் காட்சிகளைக் கண்முன்னர் நிறுத்தும் வகையில்,

அதிர்ந்தன உலகம் ஏழும் அனற்பெரி அசனி என்னப்
பிதிர்ந்தன மலையும் பாரும் பிளந்தன பிணத்தினி குன்றத்து
உதிர்ந்தன தலைகள் மண்டி ஓடின உதிர நீத்தம்
விதிர்ந்தன அமரர் கைகள் விளைந்தது, கொடிய வெம்போர் (2036)

எனவரும் பாடலில் உருட்டு வண்ணமும், முடுகு வண்ணமும் பயின்று வரக் காணலாம்.

முடிவுரை

கம்பரின் படைப்புக் காப்பியத்தில் தொல்காப்பியர் வகுத்துக் காட்டிய வண்ணங்களை நுணுகி ஆராய்கின்ற பொழுது சொல்விளையாட்டில், கருத்து விளக்கத்தில் கம்பனுக்கு நிகர் எவருமிலர் என்றே துணிந்து கூறுவதற்கு வாய்ப்புக்கள் அதிகம் எனலாம்.

கம்பனில் திருவள்ளுவர்

முனைவர் **இ.லலிதாசுந்தரம்**
சென்னை

கவிச்சக்கரவர்த்தி கம்பரின் பாடல்களையும், உலகப்பொதுமறையாம் திருவள்ளுவரின் குறட்பாக்களையும் ஒப்பாய்வு செய்யும் நோக்கில் அமைகிறது இக்கட்டுரை.

கண்ணொடு கண்

எண்ணரும் நலத்தினாள் இனையள் நின்றுழி
கண்ணோடு கண்இணை கவ்வி ஒன்றையொன்று
உண்ணவும் நிலைபெறாது உணர்வும் ஒன்றிட
அண்ணலும் நோக்கினான் அவளும் நோக்கினாள்

- நகரில் இராமன்- சீதை ஆகியோர் கண்கள் முதன்முதலாகக் கலந்த காட்சியைக் கூறும் பாடல் இது.

கண்ணோடு கண்இணை நோக்கொக்கின் வாய்ச்சொற்கள்
என்ன பயனும் இல

என்று வள்ளுவர் கண்கள் பார்வையில் ஒன்றுபடுவதால் பின்னர் வாயில் இருந்து வரும் சொற்களால் ஒரு பயனும் இல்லை என்கிறார்.

கண்ணோடு கண் என்ற சொல்லாடலில் கம்பரும் வள்ளுவரும் ஒருங்கிணைவது அழகு.

கற்பு

கோசல நாட்டு மக்கள் கற்பில் சிறந்தவர்கள். இதனை,

பொற்பின் நின்றன பொலிவு பொய்இலா
நிற்பின் நின்றன நீதி மாதரார்
அற்பின் நின்றன அறங்கள் அன்னவர்
கற்பின் நின்றன கால மாரியே

என்று பாலகாண்டப் பாடல் சித்திரிக்கிறது.

பெண்ணின் பெருந்தக்க யாவுள கற்பென்னும்
திண்மை உண்டாகப் பெறின்

என்று திருக்குறள் பெண்களுக்குக் கற்புநெறியே மிக உயர்ந்தது என்று கூறுகிறது. இராமாயணத்தில் பெண்கள் கற்பில் சிறந்தவர்களாக விளங்கியதை அறியலாம். கற்பினுக்கணி என்று சீதை அனுமனால் சிறப்பிக்கப்படுவதையும் இங்கு கருதலாம்.

ஒழுக்கமே உயர்வு

கலம் சுரக்கும் நிதியம் கணக்கு இலா
நிலம் சுரக்கும் நிறை வளம் நல் மணி
பிலம் சுரக்கும் பெறுதற்கு அரிய தம்
குலம் சுரக்கும் ஒழுக்கம் குடிக்கு எலாம் 38

என்று பாலகாண்டத்து நாட்டுப்படலம் கூறுகிறது. அயோத்தி மக்கள் ஒழுக்கத்தில் சிறந்தவர்கள். மக்கள் ஒழுக்கமாக இருந்தால்தான் நிலமும், நாடும் நன்கு இருக்கும். இதனையே திருவள்ளுவர்,

ஒழுக்கம் உடைமை குடிமை இழுக்கம்
இழிந்த பிறப்பாய் விடும்

என்று எடுத்தியம்புகிறார். சிறந்த குடியில் பிறந்தவர்களுக்கு நடத்தையே அடையாளமாகும். நன்னடத்தை இல்லையென்றால் உயர்ந்த குடியில் பிறந்தாலும் இழிபிறப்பாய்விடும். இக்குறள் நீதியை ஒப்புக்கொண்டவன் கம்பன். இந்த அறம் தமிழ்நாட்டில் நிலைத்திருக்கத் தனது பாடல்கள்வழி வலியுறுத்துகிறார்.

பிறனில் விழையாமை

பிறன் மனைவியை விரும்புவது மன்னிக்க முடியாத பெருங்குற்றமாகும். இதுவே வள்ளுவர் வகுத்த அறங்களிலே தலைசிறந்தது. பிறர் மனைவியை விரும்புவது மிகப் பெரிய சமூகத் துரோகமாகும்.

வெள்ளெருக்கஞ் சடைமுடியான் வெற்பெடுத்த திருமேனி மேலும் கீழும்
எள்ளிருக்கும் இடமின்றி உயிர் இருக்கும் இடம் நாடி இழைத்த வாறோ
கள்ளிருக்கும் மலர்கூந்தல் சானகியை மனச்சிறையிற் கரந்த காதல்
உள்ளிருக்கும் எனக் கருதி உடல் புகுந்து தடவியதோ ஒருவன் வாளி
(9940)

என்று இராமாயணப் பாடல் கூறுகின்றது. இராவணன் பேராற்றல் மிக்கவன். தேவர்களை வெல்லும் ஆற்றல் பெற்றவன். பெருவரங்கள் பல பெற்றிருந்தாலும் பிறன்மனை நோக்கிய நெறி பிறழ்ந்த தன்மை-

யினால், எல்லோராலும் இகழப்பட்டுக் கீழ் நிலைக்குத் தள்ளப்படுகிறான். ஆகையால்தான் வள்ளுவர்,

பிறன்மனை நோக்காப் பேராண்மை சான்றோர்க்கு
அறன்ஒன்றோ ஆன்ற ஒழுக்கு (148)

என்கிறார். பிறர் மனைவியை விரும்பாமல் இருப்பதே சிறந்த ஆண்மை. சிறந்த நடத்தையாகும். பிறர் மனைவியைத் தீண்டாதவரே மக்களால் விரும்பத்தக்கவர் என்பதையும் குறள் (149) கூறுகிறது.

ஈரம் ஆவதும் இற் பிறப்பு ஆவதும்
வீரம் ஆவதும் கல்வியின் மெய்ந்நெறி
வாரம் ஆவதும் மற்றும் ஒருவன் புணர்
தாரம் ஆவதைத் தாங்கும் தருக்கும் அரோ

என்று கிட்கிந்தா காண்டத்து வாலிவதைப்படலப் பாடல் கூறுகிறது. வாலி பிறர் மனையைக் கவர்ந்தவன். தன் தம்பியின் மனைவியைத் தன் மனைவியாக்கிக் கொண்டவன். சுக்ரீவனுக்காக இராமன் வாலியைக் கொன்றான். அறம் இன்னது, பொருள் இன்னது என்று அறிந்தவர்களிடம் பிறன் மனை நாடும் தீயொழுக்கம் தோன்றுவதில்லை. பிறர் மனைவியை விரும்புபவன் அழியாத பெரும் பழியை எப்போதும் பெறுவான் என்றும் பிறர் மனைவியை விரும்புபவர் செத்தவர் என்றும் குறள் கூறுகிறது.

விளிந்தாரின் வேறு அல்லர் மன்ற தெளிந்தார்இல்
தீமை புரிந்து ஒழுகுவார் (148)

கம்பரும் இராமகாதை வாயிலாக வள்ளுவர் வகுத்த நல்லறத்தை வலியுறுத்துகிறார்.

பேராண்மை

போரிலே இராவணன் எவ்வித ஆயுதமும் இன்றி நிராயுதபாணியாக நிற்கும் நிலையிலே 'இன்று போய்ப் போர்க்கு நாளை வா' என்று இராமபிரான் கூறுகிறார். போரிலே ஆயுதம் இழந்தவனைக் கொல்வது பேராண்மையன்று.

பேராண்மை என்பது தறுகண் ஒன்று உற்றக்கால்
ஊராண்மை மற்றதன் எஃகு (773)

என்று திருக்குறள் கூறுகிறது. பகைவரை எதிர்க்கும் திறன் பேராண்மை. அது ஊரை ஆளும் ஊராண்மை. அதனினும் சிறந்தது உலகை ஆளும் திறன். இராமன் ஊராண்மை மிக்கவர்.

கேள்வி அறிவு

"கல்லாப்புல்லர்க்கு நல்லோர் சொன்ன பொருளெனப்போயிற்று" எனக் கம்பர் பாடுகிறார். புல்லர்க்குச் சொல்லப்பட்ட கருத்து ஒரு காதில் நுழைந்து மறு காதில் போவதைப்போல் - என உவமை கூறுகிறார். இவ்விதம் கம்பர் பயன்படுத்தும் உவமையே தனி. செவியில் வந்து விழுந்த கேள்வி அறிவு செவிவழியாகச் சென்றுவிடாமல் நெஞ்சில் நிலைக்க வேண்டும் என்பதில் கம்பர் மிக உறுதியாக இருக்கிறார்.

கற்றிலன் ஆயினும் கேட்க அ..தொருவற்கு
ஒற்கத்தின் ஊற்றாம் துணை (414)

என்ற குறளில் வள்ளுவர் கற்கவில்லை எனினும் கேள்வி அறிவு மனத் தளர்ச்சி ஏற்படும்போது தக்கதுணையாக அமையும் என்று குறிக்கிறார்.

"செவிவாயாக நெஞ்சு களனாகக் கேட்டவை கேட்டவை விடாது உளத்து அமைத்து" என்று பவணந்தி முனிவர் கூறும் பாடலும் இங்குக் கருதத்தக்கது.

எங்கெங்கு சிறந்த கேள்வி அறிவு கிடைக்கின்றதோ, அங்கு செவி கொடுத்துக் கேட்பதில் இராமன் மிகச்சிறந்தவன்.

அன்னவன் கழறிற்று எல்லாம்
கேட்டனன் என்ப மன்னோ
கேள்வியால் செவிகள் முற்றும்

என்று சபரி பிறப்பு நீங்கு படலம் கூறுகிறது. இராமன் சீதையைப் பிரிந்து இருந்தபோதும், சபரி கூறிய அனைத்தையும் இராமன் உன்னிப்பாகக் கேட்டான். இதனைத் திருவள்ளுவர்,

எனைத்தானும் நல்லவை கேட்க அனைத்தானும்
ஆன்ற பெருமை தரும் (416)

என்கிறார். தொட்ட இடந்தோறும் கம்பர் வள்ளுவரைக் காட்டி நிற்கும் பாங்கில் சிலவற்றைத் தொட்டுக்காட்டியமைகிறது இக்கட்டுரை.

இராமகாதையில் வள்ளுவர் கூறும் இனமறிதல்

முனைவர் **க. சிவமணி,**
உதவிப் பேராசிரியர்,தமிழ்த்துறை & ஆய்வு மையம்,
அரசுக் கல்லூரி, சித்தூர் பாலக்காடு

காலந்தோறும் தமிழ் இலக்கியங்கள் வலியுறுத்தி வரும் அறக் கருத்துக்கள் பற்பல. அவற்றுள் மனித இனம் முழுமைக்கும் வளம் சேர்க்கும் கருத்துக்களின் களஞ்சியமாகத் திகழும் நூல் திருக்குறள். பின்னர்த் தோன்றிய இராமகாதையில் காணப்படும் எண்ணற்ற அறக் கருத்துக்கள் கதைக்களக் காட்சிகளுக்குப் பொருத்தமாயும் மக்கள் மனங்கொள்ள ஏதுவாயும் அமைந்திருத்தல் கண்கூடு. அவ்வகையில் இனமறிதல் தொடர்பான வள்ளுவரின் அறக்கருத்துக்களைக் கம்பன் தமது இராமகாதையில் கையாண்டுள்ளவற்றிலிருந்து சிலவற்றை அறிமுகப்படுத்துவதாக இக்கட்டுரை அமைகிறது.

பெரியாரைத் துணைக்கோடல்

தவறு செய்கையில் இடித்துரைப்பவரைப் பக்கத்தில் வைத்துக் கொள்ளாத அரசன் பகைவர் கெடுக்காத நிலையிலும் தானே கெட்டுப் போவானென்பதை எடுத்துரைக்கும் வள்ளுவர்

இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்
கெடுப்பார் இலானும் கெடும். (448)

என்ற குறளில் இடித்துரைத்துள்ளார். இக்கருத்தைத் தனது காவியத் துள் கையாளும் கம்பன், சுந்தர காண்டம் காட்சிப் படலத்தில்,

கடிக்கும் வல்அரவும் கேட்கும், மந்திரம் களிக்கின்றோயை
அடுக்கும் ஈதுஅடாது! என்று ஆன்ற ஏதுவோடு அறிவு காட்டி,
இடிக்குநர் இல்லை உள்ளார் எண்ணியது எண்ணி உன்னை
முடிக்குநர் என்ற போது, முடிவு அன்றி முடிவது உண்டோ?
(கம்ப.: 5204)

என்ற பாடலில், கடிக்கும் இயல்புடைய பாம்புகூட மந்திரத்திற்குக் கட்டுப்படும். உன் அவையில் செருக்கு மிக்க உன்னைத் திருத்துவார் யாரும் இல்லை போலும்! நீ நினைத்ததையே ஆமோதிக்கும் கூட்டம் உன்னைச் சுற்றி இருந்துகொண்டிருப்பதால் உனது அழிவை யாரால் தடுக்க முடியும்? என இராவணனைக் கடிந்துரைக்கிறாள் சீதை.

இப்பாடலில், வள்ளுவர் கருத்தை மனத்துட்கொண்ட கம்பன், குறள் கூறும் நெறியைப் பின்பற்றாதவர்க்கு யாது நேரும் என்பதை சீதையின் கூற்றுவழி எடுத்துரைத்துள்ளமை வள்ளுவர்பால் கம்பன் கொண்ட ஈடுபாட்டை வெளிப்படுத்தி நிற்கிறது.

சிற்றினம் சேராமை

உயர்ந்தோருடனான தொடர்பினால் விளையும் நன்மைகளைப் பத்துக் குறள்களில் பகுத்துரைத்த வள்ளுவர் தொடர்ந்து வரும் சிற்றினம் சேராமை என்னும் அதிகாரத்தில் தீய குணங்களின் தலைமையிடமாய் விளங்குபவரிடம் தொடர்பு கொள்ளாமை வேண்டும் என்பதை வற்புறுத்தியும் வலியுறுத்தியும் செல்கிறார்.

இழிந்த குணமுடையோரை அடையாளம் காணத் துணைபுரியும் வள்ளுவர், உயர்ந்தோர் யாரும் இத்தகையோரிடம் தொடர்பு கொள்தலை விரும்புவதில்லை எனவும், தீயோர் தமது உற்றார் உறவினர்களைப் போலத் தீமைகளைச் சூழ்ந்துகொண்டு மகிழ்வடைவர் என்பதை,

சிற்றினம் அஞ்சும் பெருமை சிறுமைதான்
சுற்றமாச் சூழ்ந்து விடும் (451)

என்னும் குறட்பாவில் எடுத்துரைக்கிறார். இதனைக் கம்பன் யுத்த காண்டம் வீடணன் அடைக்கலப் படலத்தில் பிரமதேவனின் அம்சமாகத் தோன்றி கல்வி, கேள்விகளில் வல்ல தன்னிகரற்றவனான சாம்பவந்தன் என்பான் கூற்றாக வரும்,

வெற்றியும் தருகுவர், வினையம் வேண்டுவர்
முற்றுவர், உறுகுறை முடிப்பர், முன்பினால்
உற்றுறு நெடும்பகை உடையர். அல்லதூஉம்
சிற்றினத் தவரொடும் செறிதல் சீரிதோ? (6435)

என்னும் பாடல் அடிகளில், வீடணனை இராமனுடன் சேர்த்துக் கொள்வதில் தனக்குரிய ஐயத்தை முன்வைக்கிறான். வீடணனைப் போன்றோரைத் தம்முடன் சேர்த்துக்கொள்வதால் உரிய நேரத்தில் தக்க யோசனையும் ஒருவேளை வெற்றியும் கிட்டுமாயினும் அரக்கர்களின் பொதுவான குணத்தை வீடணனும் பெற்றிருப்பின் யாது செய்வதென ஐயுறுகிறான். காலங்காலமாக அரக்கர்கள் பகை கொண்டவர்கள் ஆகை-யினால் இவர்களைப் போன்ற சிற்றினத்தாருடன் சேர்ந்து கொள்ளுதல்

சிறப்புடையதாகுமோ என வினவுகிறான். இங்கு கம்பன் திருவள்ளுவரின் குறட்கருத்தைக் கையாண்டுள்ளமை இனிது புலனாகும்.

ஒருவன் அறிவாற்றல் மிக்கவனா அறிவீனம் உடையவனா என்பதை அவனது இயற்கையான மன நிலையைக் கொண்டு அறிந்துகொள்ள முடியும். ஆனால் ஒருவனது ஒழுக்கம் என்பது அவன் தொடர்பு வைத்திருக்கும் நண்பர்கள் கூட்டத்தைக் கொண்டே மதிப்பிட முடியும் என்பதை,

மனத்தானாம் மாந்தர்க்கு உணர்ச்சி இனத்தானாம்
இன்னான் எனப்படும் சொல் (453)

என்னும் குறளில் எடுத்துரைத்துள்ளார். கம்பன் யுத்தகாண்டம் வீடணன் அடைக்கலப் படலத்தில் வீடணன் கூற்றாக வரும்

நல்லது சொல்லினீர் நாமும் வேறு இனி
அல்லது செய்துமேல், அரக்கர் ஆதுமால்;
எல்லை இல் பெருங் குணத்து இராமன் தாள் இணை
புல்லுதும் புல்லி இப்பிறவி போக்குதும். (6383)

என்னும் பாடல் வருகிறது. இப்பாடலில் இராமனைக் காணுமாறு அமைச்சர்கள் கூறியதைக் கேட்ட வீடணன் எல்லையற்ற நற்குணங்களின் அதிபதியான இராமனைச் சேர்வதன்றி வேறு செயல்களைச் செய்தால் மீண்டும் அசுரத்தன்மை பெற்றிடுவோம் எனக் கூறுகிறான். இங்கு வள்ளுவரின் மேற்காணும் குறள் நினைவுகூரத் தக்கதாகும்.

மனிதனின் இயல்பான குணமும் அறிவும் எல்லாக் காலத்திலும் நிலையானதாக இருப்பதில்லை. அது அவரவர்கள் கொண்டிருக்கும் தொடர்புடைய மக்களின் குணாதிசயங்களை ஒட்டி மாறும் இயல்புடையது. இதனை

நிலத்துஇயல்பான் நீர்திரிந்து அற்றுஆகும் மாந்தர்க்கு
இனத்துஇயல்பது ஆகும் அறிவு (452)

எனும் குறளில் எடுத்தியம்பி இத்தகைய மாறும் இயல்புடைய மனிதர்க்குத் தண்ணீரின் மாறும் குணத்தை உவமித்துள்ளார். இதனையே கம்பரும் தனது இராம காதையில் பொருத்தமுறக் கையாண்டுள்ளார்.

புலத்தியன் வழிமுதல் வந்த பொய்அறு
குலத்துஇயல்பு அழிந்தது கொற்றம் முற்றுமோ?

வலத்துஇயல் அழிவதற்கு ஏது மைஅறு
நிலத்துஇயல் நீர்இயல் என்னும் நீரதால் (7353)

என்னும் பாடல் யுத்தகாண்டம் கும்பகருணன் வதைப்படலத்தில் கும்பகருணன் இராவணனுக்குக் கூறும் அறிவுரையாக அமைந்திருக்கிறது. இப்பாடலில் புலத்தியன் மரபிலே வந்த தருமத்தின் வழிப்பட்ட குலத்தின் தன்மை சீதையைக் கவர்ந்து வந்த உன் செயலால் அழிவைப் பெற்றுவிட்டது. உனது இச்செயலே வெற்றித்தன்மை அழிவதற்குக் காரணமாகும் எனவே உனக்கு எங்ஙனம் வெற்றி கிட்டும்? இது நிலத்தின் இயல்புக்கு ஏற்றபடி நீரின் இயல்பு மாறுபட்டு அமைவது போன்றதாகும் என எடுத்துரைக்கிறான். இவ்விடத்து வள்ளுவரின் குறட்கருத்தை கம்பன் அப்படியே எடுத்தாண்டுள்ளமை நோக்கத்தக்கதாகும்.

மனிதன் என்பதன் உட்பொருள் மனத்தூய்மையுடையவன் என்பர் சான்றோர். அத்தகைய மனிதன் மனத்துக்கண் மாசிலனாதல் அறம் என்பதை வலியுறுத்திச் சென்ற வள்ளுவர் தூயமனமுடையோர்க்கு ஆன்ம முன்னேற்றம் போன்ற நன்மைகளும் வாய்க்கும் என்பதை உணர்த்தி ஒருவன் தொடர்பு வைத்திருப்பவர்களின் இனம்குறித்த தெளிவான அறிவைப் பெற்றிருப்பது அவசியம் எனவும், நல்ல இனத்தாருடன் கூடி-யிருத்தல் எல்லாப் புகழையும் பெற்றுத் தரும் என்பதையும்

மனநலம் மன்னுயிர்க்கு ஆக்கம் இனநலம்
எல்லாப் புகழும் தரும் (457)

என்ற குறளில் எடுத்துக்காட்டியுள்ளார். இதனையே கம்பரும் பால காண்டம் நீர்விளையாட்டுப் படலத்தில்

ஆன தூயவரோடு உடன் ஆடினார்
ஞான நீரவர் ஆகுதல் நன்றுஅரோ! -
தேனும் நாவியும் தேக்கு அகில் ஆவியும்
மீனும் நரின வேறு இனி வேண்டுமோ? (948)

என்ற பாடலில் மனத் தூய்மையை மாசறப் பெற்ற ஞானியருடன் இடையறாது தொடர்புகொண்டு பழகியவர்கள் அந்த ஞானியர்களின் இயல்பினை இயல்பாகவே பெற்றுவிடுவர் என்பதை விளக்க வந்த கம்பன், புனலில் ஆடவரும் மகளிரும் தழுவியும் நீரினை இறைத்தும், புனல் விளையாட்டில் ஈடுபட்டனர். அவ்வாறு நீராடும் மகளிர் தங்கள் மேனியிலிருந்து வெளிப்படும் தேனின் மணமும்

கத்தூரி மணமும் தேக்கின் புகை மணமும் அகிலின் புகை மணமும் ஆகியவற்றை அப்புனலில் நீந்திக் களித்த மீனினமும் பெற்றன என எடுத்துரைத்துள்ள கம்பரின் பாடல் கருத்து திருக்குறட் கருத்தோடு ஒப்பு நோக்கத்தக்கதாகும்.

ஒருவரது மனமும் செயலும் தூய்மையுடையதாக இருத்தல் என்பது அவர்களது உள்ளத்தைச் சார்ந்தது மட்டுமன்று. அவரைச் சார்ந்த நபர்களின் உள்ளத்தையும் சார்ந்ததாகும். நம்மைச் சார்ந்தவர்கள் மனத்தாலும் செயலாலும் தூய்மையுடையவர்களாக இருத்தல் வேண்டும் என்பதை.

மனம்தூய்மை செய்வினை தூய்மை இரண்டும்
இனம்தூய்மை தூவா வரும் (455)

என்னும் வள்ளுவரின் குறள் விளக்கிச் செல்கிறது. இதனை மனத்துட் கொண்ட கம்பன், கிட்கிந்தா காண்டம் நட்புக்கோட்படலத்தில் இராமனும் சுக்ரீவனும் நட்புக்கொண்டதைக் கூறும் இடத்தில் அனுமன் கூற்றாக வரும்.

மாயையால் மதிஇலா நிருதர்கோன், மனைவியைத்
தீயகான் நெறியின் உய்த்தனன் அவள் தேடுவார்.
நீஐயா, தவம் இழைத்து உடைமையால் நெடுமனம்
தூயையா உடைமையால், உறவினைத் துணிகுவார். (3799)

என்னும் பாடலில் அறிவற்ற அரக்கர்களின் தலைவனாகிய இராவணன் இராமனுடைய தேவியை வஞ்சனையால் கொடிய காட்டின் வழியே கவர்ந்து சென்றான். சீதையைத் தேடும் பொருட்டே இராம இலக்குவர் இவ்விடம் வந்தனர். அவர்கள் உம்மிடம் நட்புப் பாராட்டத் துணிதற்குக் காரணம் அவர்கள் முன்னர் செய்த தவமும் மனத்துள் அவர்கள் கொண்டுள்ள தூய்மையுமேயாகும் என எடுத்துரைக்கிறார் கம்பன். இப்பகுதியில் திருவள்ளுவரின் குறட்சிந்தனையைத் தமது இராம காதையில் பொருத்தமுறக் கையாண்டுள்ளமை பெறப்படும்.

வள்ளுவர் கூறும் இனமறிதல் குறித்த சிந்தனைகளைத் தமது இராமகாதையில் பெரும்பாலான இடங்களில் கம்பன் பொருத்தமுறக் கையாண்டிருத்தலை நோக்குகையில், வள்ளுவர் கருத்துக்கள்மீது கம்பன் கொண்டிருந்த நன்மதிப்பையும் கதைப்போக்கிற்கு ஏற்ப அவற்றைப் பயன்படுத்தும் அவர் ஆற்றலையும் நாம் அறிந்து கொள்ள முடிகிறது.

'மடவார் பொறை' - திருவள்ளுவரும் கம்பரும்

வித்துவான் **சு.தி.சங்கரநாராயணன்**
பட்டினங்காத்தான், இராமநாதபுரம்

'வன்மையுள் வன்மை மடவார் பொறை' - என்ற தொடருக்குப் பண்டைய உரையாசிரியர்கள் தரும் விளக்கங்களைக் காண்போம்.

மணக்குடவர்- வலிமையுடைமையுள் வைத்து வலிமையுடைமை யாவது அறியாதாரைப் பொறுத்தல்.

பரிதியார்- வன்புக்குள் வன்பு அறிவிலாதார் செய்த குற்றம் பொறுத்தல்.

காளிங்கர்- ஒருவர் தாம் செய்யவல்ல செய்தி. வலிமைகளில் வைத்துக் கொண்டு மிகவும் வலிமையாவது யாதோ எனில், அறிவுக்கேடாகிய மதிப்பைப் பொறுக்கும் பொறையுடைமை ஆகும்.

பரிமேலழகர்- வன்மையுள் வைத்து வண்மையாவது அறி-வின்மையான் மிகை செய்தாரைப் பொறுத்தல்.

மேற்காட்டிய உரைகளில், 'மடவார்' என்ற சொல்லுக்கு, 'அறிவிலாதார்' என்றே உரையாசிரியர்கள் நால்வரும் பொருள் தந்துள்ளமை காணலாம்.

நாணம், அச்சம், மடம், பயிர்ப்பு எனும் நான்கு பண்புநலம் கொண்டவர் மகளிர். இதில். 'மடம்' எனும் பண்பைச் சிறப்பித்து மகளிருக்கு, 'மடவார்' என்று ஒரு காரணப்பெயரும் வழங்குகிறது. இதை நோக்கும்போது, இடையூறு பல நேரிடினும் தம் கற்பு எனும் நிறையைப் பேணிக் காப்பதே வன்மையுள் வன்மையாகும். இதுவே, மடவாருக்கு உரிய பொறையுடைமைச் சிறப்பாகும்' என்று பொருள் கொள்ளலாம். மடவார் பொறை- என்பது வேற்றுமைத்தொகை.

மடவார்+ஐ+பொறை- இவ்வாறு 'மடவார்' என்னும் சொல்லோடு இரண்டாம் வேற்றுமை உருபைச் சேர்த்துப் பொறைக்கு விளக்கம் தருவதால், அறியாதாரைப் பொறுத்தல்- என உரை கண்டுள்ளனர். மடவார் பொறை - இதனை ஐந்தாம் வேற்றுமைத் தொகையாகவும் கொள்ளலாம். மடவார்+இன்+ பொறை- என விரிவாக்கினால், மகளிரின் (மடவார்) கற்புடைமையாகிய பொறுமைதான், 'வன்மையுள் வன்மை யாகும்' எனவும் பொருள் கொள்ளலாம்.

இக்குறள் நிற்கும் பொறையுடைமை அதிகாரத்திற்கு முந்தியது பிறனில் விழையாமை ஆகும். அதில்.

பிறன்மனை நோக்காத பேராண்மை சான்றோர்க்கு
அறன்ஒன்றோ ஆன்ற ஒழுக்கு (148)

உள்ளது.

இது, பிறனில் நோக்காத அறத்தை ஆடவருக்கு உரியதாக்குகிறது. இக்குறளை விளக்குவதற்கு ஏற்ற எதிர்மறைக் காட்சியாளனாக, இராவணனைக் கம்பர் படைத்துள்ளார். அடுத்துவரும் பொறையுடைமை அதிகாரத்தில் காணும் மடவார் பொறை என்பது மகளிர்க்கு உரியதாகிறது. இக்குறளை விளக்குவதற்கு ஏற்ற எதிர்மறைக் காட்சியளாகக் கைகே-யியைக் கம்பர் படைத்துள்ளார்.

பெருமை என்னும் பண்பு நலம் இருபாலருக்கும் பொதுவானதாகும். பல்வேறு நிலைகளிலும் வைத்துக் காணத் தகுவதும் ஆகும். ஆயினும், சிறந்த கற்பு நிலையே மகளிர்க்கு உரிய பெருமை ஆகும். இதனைப் பெருமை என்னும் அதிகாரத்தில் உள்ள,

ஒருமை மகளிரே போலப் பெருமையும்
தன்னைத்தான் கொண்டொழுகின் உண்டு (974)

எனும் குறள் அடையாளம் காட்டுகிறது.

ஒருமை மனம் பெற்ற மகளிர்- கற்புடையார்
இருமை மனம் பெற்ற மகளிர் - கற்பிழந்தார், புன்னலம் பாரிப்பார்

'பெருமை' அதிகாரத்தில் ஒருமை மகளிருடைய கற்பின் சிறப்பைக் குறிப்பது போலவே, பொறையுடைமை அதிகாரத்தில் மடவார்ப் பொறையாகிய கற்பின் சிறப்பும் எடுத்துக்காட்டு உவமை அணியாகக் கூறப்பட்டுள்ளது எனலாம். இச்சிந்தனைக்கு, கம்பர் தரும் இராமாயண காவியம் நமக்கு வழிகாட்டுகிறது.

தற்காத்துத் தற்கொண்டான் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண் (56)

எனும் குறள் வாழ்க்கைத் துணைநலத்திற்கு விளக்கம் தருகிறது. தற்கொண்டானுக்கு உரிய புகழைக் கைகேயி பேணவில்லை. மூத்த மகன் முடிசூட்டிக் கொள்வது அரசகுல மரபாகும். அந்த நிலைமையைத்

தடுத்துத் தன்மகன் பரதன் அரசு பட்டம் பெற வேண்டுமெனக் கைகேயி விரும்பினாள். சம்பரனை வென்ற காலத்தில் தனக்கு வழங்கிய இரு வரங்களை நிறைவேற்றித் தரவேண்டுமென்று தற்கொண்டானாகிய தயரதனைக் கைகேயி வற்புறுத்தினாள்.

இராமன் முடிசூட்டிக் கொள்வான் என்று அரசவையில் தான் வழங்கிய வாக்குறுதியை நிறைவேற்ற இயலாத நிலையை எண்ணி மனம் மாழ்கித் தயரதன் உயிர்விட்டான். ஆகவே, திருவள்ளுவர் குறிப்பிட்ட தற்கொண்டானுக்கு உரிய தகைசான்ற சொல், (புகழ்) காக்கத் தவறிய கற்பிழந்தவள் ஆனாள் கைகேயி. இந்த நிறை தவறிய கைகேயினுடைய செயலைத் தன் காவியத்தில் பரதன் வாயிலாகக் கம்பர் சுட்டிக் காட்டுகிறார்.

மூத்த மகன் முடிசூட்டி அரசாள்வதே குலமரபாகும். இம்மரபினை அழித்துத் தன்னுடைய தாயான கைகேயி தனக்காக அரசுரிமை பெற்றது தகாதது ஆகும். மூத்த மகனான இராமன் நாட்டுக்கு அழைத்து வரப் பரதன் கங்கைக் கரை சென்றான். இதனை அயோத்தியா காண்டம், திருவடி சூட்டுப் படலம் கூறுகிறது.

நிறையின் நீங்கிய மகளிர் நீர்மையும்,
பொறையின் நீங்கிய தவமும் பொங்கு அருள்
துறையின் நீங்கிய அறமும் தொல்லையோர்
முறையின் நீங்கிய அரசின் முந்துமோ?

வாழ்க்கைத் துணைநலம் அதிகாரத்தில்,

சிறைகாக்கும் காப்பு எவன் செய்யும் மகளிர்
நிறைகாக்கும் காப்பே தலை (57)

என்னும் குறள் நிறை என்பதற்கு மகளிரின் கற்புடைமை என விளக்கம் தருகிறது. பொறையுடைமை அதிகாரத்தில் உள்ள,

நிறையுடைமை நீங்காமை வேண்டின் பொறையுடைமை
போற்றி ஒழுகப் படும் (154)

என்னும் குறள், பொறையுடைமையை ஆடவர், மகளிர் ஆகிய இருபாலருக்கும் உரிய நிறையாகக் கூறுகிறது. திருவள்ளுவரின் இக்கருத்துகளுடன், நிறை- பொறை என்னும் சொற்களையும் கைக் கொண்டு பரதன் கூறுவதாக இப்பாடலைக் கம்பர் படைத்துள்ளார் எனலாம்.

கவ்வும் அரவு இதுஎன இருந்தீர் கற்பெனும்
அவ்வரம்பு அழித்துஉமை அகத்துளே வைத்த
வெவ்வரம் பொருதவேல் அரசை வேர்அறுத்து
இவ்வரம் கொண்டீர் நீர் இனிதுஎன் கோடிரோ?

எனப் பரதன் தன் தாயை நேரிடையாகவே பழித்து. அவளை விட்டு. விலகி வந்ததைப் பள்ளியடைப் படலத்தில் காணலாம். இப்பாடலில், **'கற்பெனும் அவ்வரம்பு அழித்தவள்'** கைகேயி என்று பரதன் குறிப்பிடுகிறான். இதையே 'நிறையின் நீங்கிய நீர்மை மகளிர்' ஆவாள் கைகேயி என்று திருவடிசூட்டுப் படலத்தில் இராமனிடம் மீண்டும் பரதன் கூறுவதாகக் கொள்ளலாம்.

'நிறையின் நீங்கிய நீர்மை'- ஏற்புடைமையது அல்ல என்னும் பரதனுடைய வாய்மொழியானது. "வன்மையுள் வன்மை மடவார் பொறை" - எனும் திருவள்ளுவரின் சமுதாயக் கோட்பாடு எனும் இலக்கணத்திற்கு உரிய விளக்கம் தரும் இலக்கியமாக அமைந்துள்ளது. ஆரணிய- இராவணன் சூழ்ச்சிப்படலத்தில்,

தறைவாய் அவன்வந்து அடிதா ழுதலும்
கறைவான் பட ஆவி கலங்கினான் போல
இறைவா இளையோய் எனஏங் கினளால்
பொறைதான் உருவானது ஓர் பொற்புடையாள் - என்னும் பாடல்.

மாரீசன் மாயமானாக வந்து சீதை, இராமன், இலக்குவன் ஆகிய மூவரையும் தனித்தனியே பிரித்தான். தனிமையில் இருந்த சீதையைப் பர்ணசாலையோடு பெயர்த்தெடுத்து இராவணன் வான்வழியே சென்றான். தவறு உணர்ந்தாள் சீதை. ஏங்கினாள்; அழுதாள் என்று கூறுகிறது. அதை இங்கே, 'பொறைதான் உருவானதோர் பொற்பு உடையாள்' என்ற சொல் காட்டுகிறது.

ஆகவே, மடவார் பொறை - என்ற திருக்குறளின் தொடருக்கு, அறிவிலாதார் செய்யும் பிழைகளைப் பொறுத்தல்- என உரையாசிரியர்கள் தரும் விளக்கத்தை மாற்றலாமோ எனச் சிந்திக்க வைக்கிறது. எனவே, மடவார் பொறை எனும் தொடருக்கு எத்தகைய இடையூறுகள் நேரிட்டாலும், மகளிர் அசோகவனத்தில் இருந்த சீதாப்பிராட்டியார் போல, பொறுமையுடன் கற்பை நிலை நிறுத்துவதே மன வலிமையுள் வலிமையாகும் என்ற உரை தருவது பொருத்தமாகும்.

கம்பனும் கவரிமாவும், கவரியும்

க. கதிரவன்,
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை & ஆய்வுமையம், அரசுக்கல்லூரி சித்தூர்,
பாலக்காடு, கேரளா.

கவரி என்னும் சொல்லுக்கு மயிர் எனவும் எருமை எனவும் பொருளுண்டு.

கவரியே சவரி மேதி (சூடாமணி னகர எதுகை : 300)

கவரி என்பது இமயமலை அடிவாரத்தில் வசிக்கும், உடல் முழுதும் மயிரடர்ந்த எருமையினைக் குறிக்கும் தமிழ்ச்சொல்லாகும். திபெத் பகுதியில் வசிப்போர் கவரியினை வீட்டுவிலங்காக வளர்த்து அதன் பாலை உணவாகக் கொள்கின்றனர்.

வீட்டில் ஆடு, மாடு, கோழி, குதிரைகளுடன் கவரி எருமைகளையும் வளர்த்தனர். கவரி எருமை (Yak) கடல் மட்டத்தில் இருந்து 10,000 அடிகளுக்கு மேலும் உயிர் வாழும், பாரம் சுமக்கும், பால் கொடுக்கும் நண்பன். 'உடலுக்குத் தேவைப்படும் சத்துப்பொருள்கள் நிரம்பிய இந்தப் பாலைக் குடித்து வளர்ந்ததால்தான் இந்த வயதிலும் இன்னும் சுறுசுறுப்புடன் என்னால் மலைப்பகுதிகளில் ஏறி இறங்க முடிகிறது' என்று தலாய் லாமா அடிக்கடி நினைவுகூர்வது வழக்கம். (தலாய் லாமா : அரசியலும் ஆன்மிகமும்,. ஜனனி ரமேஷ்)

கவரிமாவின் உடல்முடியும் வால்முடியும் ஆடைநெய்யவும் சாமரம் செய்யவும் பெண்களின் பொய்முடி தயாரிக்கவும் பயன்பட்டிருக்கின்றன. பேராசைக்காரர்கள் கையில் சிக்கிய கவரி தன் மதிப்புறு மயிரை முற்றிலும் இழந்து உறைகுளிரில் வாடி உயிர் விடுகிறது.

இக்கவரிமாவை அறிந்த வள்ளுவர் தன் குறளில் உவமையாக்கி யிருக்கிறார்.

மயிர்நீப்பின் உயிர்வாழாக் கவரிமா அன்னார்
உயிர்நீப்பர் மானம் வரின் (969)

என்னும் குறளில் மானம் இழக்கும் நிலைவரின் தங்கள் உயிரைப் போக்கிக் கொள்ளும் மானிகளுக்கு மயிரைப் போக்கினால் உயிர்வாழாக் கவரிமாவை உவமையாக்குகிறார் வள்ளுவர். கவரிமாவுக்கும்

மானத்துக்கும் எந்தத் தொடர்புமில்லை. தொடர்பினை ஏற்படுத்துபவர் வள்ளுவரே. இந்த உவமையாட்சி கம்பனின் மனத்தையும் கவர்ந்திருக் கிறது. தசரதனின் அமைச்சர்களின் சீர்மிகு தன்மையினை விளக்க வரும் கம்பன்,

உற்றதுகொண்டு மேல்வந்து உறுபொருள் உணரும் கோளார்
மற்றுஅது வினையின் வந்தது ஆயினும் மாற்றல்ஆற்றும்
பெற்றியர் பிறப்பின் மேன்மைப் பெரியவர் அரியநூலும்
கற்றவர் மானம் நோக்கின் கவரிமா அனைய நீரார் (1405)

எனும் பாடலை வரைந்துள்ளார்.

இப்பாடலில் வள்ளுவர் வழியில் நின்றே கவரிமாவை மானத்தின் குறியீடாக அமைத்துள்ளது காணத்தக்கது. வள்ளுவரைப் போன்றே கம்பனும் கவரியை, கவரிமா என்றுதான் குறிப்பிடுகிறார். கவரிமான் என்று குறிப்பிடவில்லை. மயிர் நீப்பின் உயிர்வாழாத் தன்மையை உளங்கொண்டு எழுதியுள்ளாரெனினும் அதனைப் பாடலில் வெளிப்படக் கூறாது விட்டுள்ளார் வள்ளுவத்தின் பரவலும் ஆளுமையு முணர்ந்த கம்பன். இப்பாடலுக்கு கம்பன் அறநிலை விளக்க உரைக்குழுவினர் சிறந்த உரை வரைந்துள்ளனர்.

மேற்சுட்டிய குறளுக்கு உரை எழுதிய பரிமேலழகரும் அவர்தம் கருத்துத் தொடர்ச்சியுடையோரும் கவரிமாவுக்குத் தவறான விளக்கம் அளித்துள்ளனர். ஆனால் கம்பனும் கம்பன் அறநிலை விளக்க உரைக்குழுவும் அந்த தவறைத் தவிர்த்துவிட்டனர். அவ்உரையினைக் காணலாம்.

"நடந்ததைக் கொண்டு எதிர்காலத்து வந்து நேரத் தக்கவற்றை கணித்து அறியும் அறிவு வன்மையுடையவர்கள்; அந்த வேண்டாத கேடு ஊழ்வினையினால் ஒருகால் வந்தாலும் அதனை மாற்றவல்ல முயற்சித்திறம் உடையவர்கள்; நற்குடிப் பிறப்பினால் வந்த சிறப்பினை யுடைய பெரியவர்கள்; கற்றற்கு அரிய நுண்ணிய நூல்களையும் கற்றுத் தேர்ந்தவர்கள்; மானத்தை நோக்குமிடத்தில் கவரிமானைப் போன்ற தன்மையுடையவர்கள்.

இதனால் அமைச்சர்களின் முன்னறிவும் திறனும், தளராது முயலும் திட்பமும், குடிப்பிறப்பும், கல்விச்சிறப்பும், மானமுடைமையும் கூறப்பட்டன. மானம் - எந்நாளும் தன்னிலையில் தாழாமையும்,

ஊழால் தாழ்வு வந்துழி உயிர் வாழாமையும் ஆம். கவரிமான், இமயமலைபோலும் குளிர் மிகுந்த மலைப்பகுதிகளில் வாழும் ஒருவகை மான். அந்த மானின் உடலிலிருந்து மயிர் உதிர்ந்தால், அது குளிர் தாங்காது மாண்டுபோகும். அதுபோலத் தம் புகழுக்கு இழுக்கு நேரும்காலம் வந்துழி உயிர் வாழார்; அழிவர் என்பதாம்.

மதிநுட்பம் நூலோ டுடையார்க் கதிநுட்பம்
யாவுள முன்நிற் பவை (636)

மயிர்நீப்பின் வாழாக் கவரிமா அன்னார்
உயிர்நீப்பர் மானம் வரின் (969)

என்னும் குறட்பாக்களை ஒப்பு நோக்கலாம்.

கவரிமாவின் மயிர் எதற்குப் பயன்பட்டது? கவரியில் கருங்கவரியும் உண்டு. வெண்கவரியும் உண்டு. கருங்கவரியின் மயிர் பெண்களின் தலைமுடிக்குப் பதிலியாகப் பயன்படுத்தப்பட்டது. வெண்கவரியின் மயிர் அரசர்களுக்குச் சாமரம் வீசப் பயன்படுத்தப்பட்டது. கண் உறு கவரியின் கற்றை சுற்று உற தசரதன் அரியணையில் சென்று அமர்வதாக, கம்பரும் குறித்துள்ளார்.

அரசர்க்குக் கவரி வீசுகின்றபோது கவரியிலிருந்து காற்று பலமாய் வீசிய செய்தியைக் கம்பன் பல இடங்களில் படமாக்கியிருக்கிறார்.

துந்துரபியின் உடலைத் தூக்கி வீசிய வாலி, கவரி வீசுவது போல சுழற்றி வீசினான் எனக் கம்பன் பாடும்போது கவரி வீசுதலின் வேகம் புலனாகிறது.

கவரி இங்கு இது எனக் கரதலம் கொடு திரித்து
இவர்தலும், (கம்ப. 4000)

இராவணனுக்கு அரம்பையர்கள் கவரி வீசும்போது எழும் காற்று சுழிபடு பசுங்காற்று என்கிறான் கம்பன். அக்காற்றில் வானுலகத்து கற்பக மலர்களினின்றும் தேன் சிந்துகிறதாம்.

ஆயபொன்தலத்து ஆய்வளை அரம்பையர் ஆயிரர்அணிநின்று
தூய வெண்கவரித்திரள் இயக்கிடச் சுழிபடு பசுங்காற்றின்
மீய கற்பகத் தேன்துளி விராயன (கம்ப. 5149)

கவரி வீசும்போது இராவணனின் மேல்துண்டு அவன் நெடுமார்பினில்

இங்கும்அங்கும் எழுந்து புரண்டு கொண்டிருப்பது நீண்டமலை-யிலிருந்து தத்தி வீழும் அருவி போலிருக்கிறதாம்.

கைத் தரும் கவரி விசிய காலால்
நெய்த்து இருண்டு உயரும் நீள்வரை மீதில்
தத்தி வீழும் அருவித் திரள் சாலும்
உத்தரீகம் நெடு மார்பின் உலாவ (கம்ப. 6991)

கவரிமானின் உடல் முழுதும் மயிர் அடர்ந்திருந்தது. எனினும் கவரிமாவின் வாலிலிருந்தே கவரி செய்யப்பட்டது என்னும் அரிய தகவலைக் கம்பன் நமக்குத் தருகிறார்.

வரப்பு அறு மணியும் பொன்னும் ஆரமும் கவரி வாலும்
சுரத்து இடை அகிலும் மஞ்ஞைத் தோகையும் தும்பிக் கொம்பும்
(574)

கவரியின் வால் கற்றையாக மயிரடர்ந்து காணப்படும் என்பதையும் மலையடிவாரத்தில் மேயும் கவரிகளின் வெண்ணிற வால் அசைவது பவளமால் வரையில் அருவி வீழ்வதைப் போன்றிருந்தது என்பதையும் கம்பனே நம்மிடம் கூறுகிறார்.

உவரிவாய் அன்றிப் பாற்கடல் உதவிய அமுதே!
துவரின் நீள் மணித் தடம்தொறும் இடம்தொறும் துவன்றி,
கவரி மால் நிற வால் புடை பெயர்வன, கடிதின்
பவள மால் வரை அருவியைப் பொருவிய - பாராய்! (2139)

மேலும் கவரி வால் கடைவீதியில் பொன்னோடும் ஆரத்தோடும் வைத்து மதிப்புடைய பொருளாக விற்கப்பட்டது என்னும் தகவலையும் (574) கம்பன் தருகிறார்.

கவரி பொன்னோடும் ஆரத்தோடும் வீற்றிருக்கும் தகுதி பெற்றது யாங்ஙனம்? அரசனுக்குக் கவரி வீசுதல் அவனுக்கு காற்றுவருவதற்காக மட்டுமன்று. அது அவனுக்குத் தரப்படும் மரியாதை. கவரி வீசுதல் அரச சின்னங்களில் ஒன்றாகவே கருதப்பட்டுள்ளது.

பட்டம் என்னும் சொல்லின் பொருளாக கவரிமாவையும் பதவியையும் நிகண்டுகள் குறிக்கின்றன என்பது இங்கு குறிக்கத்தக்கது. பட்டமே ஓடை தூசு பதவி வாள் கவரிமா வாம் (சூடாமணி: னகர எதுகை : 300)

பட்ட மெனும்பெயர் மேம்படு பதவியும்
வழியுங் கவரி மாவுந் துகிலும்
வாயிலு மதகரி முகப டாமும்
விலங்கு துயிலிடமும் படமும் விளம்புவர் (வடமலை நிகண்டு 1027)

இராமன் காடேகும் காட்சியை வர்ணிக்கும்போது அரசபதவி இழந்தவனாய்ச் செல்கிறான் என்பதைக் குறிப்பிட விரும்பும் கம்பன் கவரியும் வெண்கொற்றக்குடையும் இன்றிச் செல்கின்றான் என்றே குறிக்கின்றான். இங்கு, கவரி வீசப்படுதல் வெண்கொற்றக்குடை வைத்திருத்தலுக்கு இணையாகச் சொல்லப்படுவதை உணரலாம்.

குழைக்கின்ற கவரி இன்றிக், கொற்ற வெண் குடையும் இன்றி,
இழைக்கின்ற விதி முன் செல்லத், தருமம் பின் இரங்கி ஏக,
மழை குன்றம் அனையான் மௌலி கவித்தனன் வரும் என்று என்று,
தழைக்கின்ற உள்ளத்து அன்னாள் முன், ஒரு தமியன் சென்றான்.
(1695)

இங்கு மட்டுமன்று, வெண்கொற்றக்குடையும் கவரியும் ஒருங்கே குறிப்பிடப்படும் இடங்கள் பல உண்டு கம்பனிடம்.

சந்திரர் கோடி என்னத் தரள வெண் கவிகை ஓங்க,
அந்தரத்து அன்னம் எல்லாம் ஆர்ந்து எனக் கவரி துன்ன, (1635)

கவரி வீசப்படும் காட்சி அன்னப்பறவைகள் பறந்த காட்சியை ஒத்திருப்பதாகக் காட்டும் கம்பனின் கற்பனை நயமுடைத்து. கவரி கரிய நிறத்திலும் இருக்கும்; வெண்ணிறத்திலும் இருக்கும். இங்கு வீசப்படும் கவரி வெண்ணிறமுடையது என்பது உவமையால் தெளிவுபெறும். மேலும் அன்னத்தைக் குறிக்கும் எகினம், ஓதிமம் என்னும் சொற்கள் கவரிமாவையும் குறிப்பன என்பது இவண் எண்ணிப்பார்க்கத்தக்கது.

எகினமே புளி மா ஞாளி கவரிமாநீர்நா யன்னம் (சூடா.நிகண்டு 5)

ஓதிமம் எனும்பெயர் அன்னமும் வெற்பும்
கவரி மாவின் பெயருங் கருதுவர் (வடமலை நிகண்டு 345)

வானர குலத்து அரசர்க்கும் கவரி வீசப்பட்டது. வெண்குடை தாங்கப் பட்டது.

சுண்ணமும் தூசும் வீசி, சூடகத் தொடிக் கைம் மாதர்,
கண் அகன் கவரிக் கற்றைக் கால் உற, கலை வெண் திங்கள்

விண் உற வளர்ந்தது என்ன வெண் குடை விளங்க, வீர
வண்ண வில் கரத்தான் முன்னர் கவிக் குலத்து அரசன் வந்தான்.
(4475)

இப்பாடலில் பணிப்பெண்கள் கவரி வீச வெண்கொற்றக்குடையுடன் நடந்துவரும் அரசன் சுக்கிரீவன். காடேகிய இராமனிடம் இல்லாதவை காட்டுவாசியான சுக்கிரீவனிடம் இருக்கின்றன என கம்பனால் சுட்டப் படுகின்றது. மேலும் இப்பாடலில், வீசப்படும் கவரி அகன்றதாகவும் கற்றையாகவும் இருப்பதைக் காணமுடிகிறது.

இராமனிடம் இல்லாத கவரியும் குடையும் சுக்கிரீவனிடம் இருக்கின்றன. இலங்கை நகரிலோ அவை இயற்கையில் தெரிகின்றன.

கற்றை வெண்கவரி போல் கடலின் வெண்திரை
சுற்றும் நின்று அலமரப் பொலிந்து தோன்றிற்றால்!
'இற்றது என் பகை 'என எழுந்த இந்திரன்
கொற்ற வெண் குடை எனக் குளிர் வெண் திங்களே (4995)

இங்கே வானில் நிறைமதி தோன்றுகிறது. நிறைமதி நாளில் கடல் அலைகள் ஆர்ப்பரிக்கின்றன. வானின் நிறைமதி இந்திரனின் வெண்கொற்றக்குடை போலத் தோன்றுகிறது. கடலின் பேரலைகள் சுற்றும் நின்று வீசப்படும் வெண்கவரிபோலத் தோற்றம் தருகிறது. வழக்கமாய்த் திங்களைப் போன்று வெண்கொற்றக்குடை விளங்கும் என உவமை கூறுவர். இங்கு உவமை உவமேயமாகவும் உவமேயம் உவமையாகவும் மாறி நிற்கிறது. கவரியும் கடலலையும் அவ்வண்ணமே அழகுகாட்டுகின்றன. இலங்கையின் வேந்தன் இராவணன் போருக்குக் கிளம்பியபோது வெண்கொற்றக்குடைக் கீழ் கவரி வீசப்பட காட்சியளித்ததைப் பின்வரும் பாடல் உணர்த்துகிறது. இங்கு கவரிக்கு கடலலை உவமையாகிறது. இராமன் கவரியும் வெண் கொற்றக்குடையும் இன்றி நிற்கிறான். இராவணனோ இவ்விரண்டும் உடையவனாகப் பொலிகிறான்.

பேரும் கற்றைக் கவரிப் பெருங்கடல்
நீரும் நீர் நுரையும் என நின்றவன்
ஊரும் வெண்மை உவாமதிக் கீழ் உயர்
காரும் ஒத்தனன் முத்தின் கவிகையான் (7241)

கரன் வதைப்படலத்தின் போர்க்களத்தில் இரத்த ஆற்றில் நீந்திச் செல்லும்போது கவரியும் வெண்கொற்றக் குடையும் நுரைகளாகத் தோற்றமளித்தன என்று கம்பன் பாடுகிறான்.

கவரி வெண் குடை எனும் நுரைய கைம்மலைச்
சுவரன கவந்தம் ஆழ் சுழிய தண் துறை
பவர் இனப்படு மணி குவிக்கும் பண்ணைய
உவரியைப் புதுக்கின உதிர ஆறுஅரோ (3091)

அரச சின்னமாக மதிக்கப்பெறும் வெண்கொற்றக்குடைக்கு இணையாக கவரியும் மதிக்கப்பட்டமை கம்பனால் பதிவுசெய்யப்பட்டிருக்கிறது.

வானரகுலமாயினும் மானுட குலமாயினும் அரக்கர் குலமாயினும் அரசனுக்கு கவரி வீச பணிப்பெண்கள் இருந்தனர்.

சுண்ணமும் தூசும் வீசி, சூடகத் தொடிக் கைம் மாதர்,
கண் அகன் கவரிக் கற்றைக் கால் உற (4475)

என்றும்,

ஆய பொன் தலத்து ஆய்வளை அரம்பையர் ஆயிரர் அணி நின்று
தூய பொன் கவரி திரள் இயக்கிட (5149)

என்றும்,

மரகதச் சயில மீது வான் நிலாப் பாய்வது என்ன
இருகுழை இடறும் வேற்கண், இளமுலை, இளநலார்தம்
கரகமலங்கள் பூத்த கற்றை அம் கவரி தெற்ற (10499)

என்றும்,

கவரி வீசிய பணிப்பெண்களைக் குறிப்பிடுகிறான் கம்பன். தேவ லோகத்து ரம்பை, ஊர்வசி முதலான பெண்களே பணிப்பெண்களாய் இராவணனுக்கு கவரி வீசியிருக்கின்றனர் என்பது இராவணனது ஆற்றலுக்கு சான்று பகர்கிறது.

அரம்பையர் கவரியோடு ஆடும் தாரினான் (6203)

பணிப்பெண்கள் கவரி வீசுவது அன்றியும் சில முதன்மை நிகழ்வுகளின் போது முதன்மையானவர்களே கவரி வீசுகின்றனர். எனில் இங்கு 'கவரி வீசப்படுதல் மதிப்பு' என்பது போல 'கவரி வீசுதலும்' இங்கே மதிப்பு பெறுகிறது.

இராமனுக்கு வசிட்டன் மணிமுடி சூட்டும்போது இராமனின் அன்புக்குரிய தம்பியர் மூவரில் பரதன் வெண்கொற்றக்குடை பிடிக்கிறான்; இலக்குவன் சத்துருக்கனனோடு இணைந்து கவரி வீசுகிறான்.

அரியணை அனுமன் தாங்க, அங்கதன் உடைவாள் ஏந்த,
பரதன் வெண்குடை கவிக்க, இருவரும் கவரி வீச
விரைசெறி குழலி ஓங்க வெண்ணெயூர்ச் சடையன் தங்கள்
மரபுளோர் கொடுக்க வாங்கி வசிட்டனே புனைந்தான் மௌலி
(10492)

இராமன் அரசனாய்ப் பொறுப்பேற்குமுன்னர் தேரில் வரும்போது செங்கோல் தாங்குகிற பொறுப்பு பரதனுக்கு இருப்பதால், பரதன் தன் கையிலிருந்த வெண்கொற்றக்குடையை இலக்குவனிடம் கொடுத்து விடுகிறான். எனவே சத்துருக்கனன் மட்டும் கவரி வீசுகிறான்.

ஊழியின் இறுதிகாணும் வலியினது உயர்பொன் தேரின்,
ஏழ் உயர் மதமா அன்ன இலக்குவன் கவிகை ஏந்த,
பாழிய மற்றைத் தம்பி பால் நிறக் கவரி பற்ற,
பூழியை அடக்கும் கண்ணீர்ப் பரதன் கோல் கொள்ளப் போனான்
(10457)

மற்றொரு பாடலிலும் இதே வருணனை காணப்படுகிறது.

அனையது ஓர் தேரினில் அருணன் நின்று எனப்
பனி வரு மலர்க் கண் அப் பரதன் கோல் கொளக்,
குனி சிலைத் தம்பி பின் கூட, ஏனையன்
இனிய பொன் கவரி கால் இயக்க, ஏகினான். (1317)

கவரி அரசனுக்குரிய சின்னங்களில் ஒன்றாய் விளங்கியதைக் கம்பன்வழி உணரமுடிகிறது. எனில் மோசிகீரனுக்குக் கவரி வீசிய இரும்பொறையின் செயலும் சேக்கிழாருக்குக் கவரிவீசிய குலோத்துங்கன் செயலும் இன்னும் பொருள் துலக்கமுறுகின்றன. இவ்அரசர்கள் தம்மைச் சேவகர்களாயும் தாம் மதிக்கும் கவிஞர்களை அரசர்களாயும் கருதிக் கவரி வீசியமை புலனாகின்றது; தமிழ் பெற்ற மேன்மை புரிகின்றது.

கம்பரும் குலசேகர ஆழ்வாரும்

முனைவர். இரா. அகிலா
உதவிப் பேராசிரியர், தாகூர் கலைக்கல்லூரி, புதுச்சேரி.

திருமாலின் அவதாரமான இராமனின் திருவிளையாடல்கள் அனைத்தையும் நாரதமுனிவர் கூற அதனைக் கேட்ட வால்மீகி முனிவர் வேதத்துக்குச் சமமான வடமொழியில் இராமாயணத்தை எழுதினார்.

அதுபோல, வால்மீகி இயற்றிய ஆதி காவியத்தை ஒட்டிக் கம்பர் தம் காப்பியத்தை எழுதினாலும், கம்பராமாயணத்தை ஒரு மொழி பெயர்ப்போ அல்லது வெறும் தழுவலோ போலல்லாமல் ஒரு புதிய காப்பியம் போலவே படைத்துள்ளார். ஆழ்வார்களில் பலர் இராமபிரானிடம் கொண்ட பக்தியால் பல பாசுரங்களைப் பாடியுள்ளனர். பெருமாள் திருமொழியைப் பாடிய குலசேகர ஆழ்வார் 8-ஆம் திருமொழியில், கௌசலை இராமனைத் தாலாட்டிப் பாடுவது போல பாசுரங்களையும் பாடியுள்ளார். 9-ஆம் திருமொழியில் வனவாசம் சென்ற இராமனை நினைத்துத் தசரதர் புலம்புவதுபோன்ற பாசுரங்களையும் பாடியுள்ளார். எனவே, கம்பராமாயணப் பாடல்களோடு குலசேகர ஆழ்வாரின் பாசுரங்கள் எவ்வாறு ஒத்துப் போகின்றன என்பதை இக்கட்டுரை ஒப்பிட்டு, திறனாய்வு முறையில் தேர்கிறது.

அயோத்தியும், கணபுரமும்

திருமாலின் நூற்றியெட்டுத் திருப்பதிகளுள் அயோத்தியும், கணபுரமும் ஒன்று. அயோத்தி என்னும் நகரம் வட தேசத்தில் அமைந்துள்ளது. அயோத்திய மாநகரத்தை,

உலகத்தோர் இழிவதற்கு அருந்தி
புரிகின்றது அயோத்தி மாநகரம். (94)

என்கிறார் கம்பர்.

மிகுந்த தவத்தை மேற்கொண்டு ஒழுகுபவர்களும் மோட்ச உலகத்தில் இருப்பவர்களும் இறங்கிவந்து இந்த நகரத்தில் பிறக்கமாட்டோமா என்று ஆசைபடுகின்ற சிறப்பு மிக்க நகரம் என்கிறார். ஆழ்வாரோ சோழநாட்டில் இருக்கின்ற திருக்கண்ணபுரத்தை அயோத்தி மாநகராகவே காண்கின்றார். இங்கு உறையும் சௌரிராஜப் பெருமானை

இராமனாகவே பார்க்கின்றார். இத்தலத்தில் இருக்கும் இறைவனை யார் கண்டார்களோ, கண்டவுடன் தங்களுடைய நெஞ்சையே இவரிடத்திலே ஒப்படைத்துவிடுவர். அத்தகு சிறப்புமிக்க இத்தலத்தில் சிறந்த ஞானிகளும், கல்வி வல்லார்களும் வாழ்கின்றனர் என்பதை,

கண்டவர் தம் மனம் வழங்கும் கணபுரம் (8-ஆம் திமொழி பாசு எண 2) 3-வது வரி)

என்றும்,

கற்றவர்கள் தாம் வாழும் கணபுரம் (8-ஆம் திமொழி பாசு என் 6) 3-வது வரி)

என்றும் பாடுகிறார்.

மதில் அழகு

கற்றறிந்த அறிவுடையவரின் பேரறிவு போல அயோத்தியில் இருக்கக் கூடிய மதில்கள் சிற்ப நூலின் விதிப்படி சிறப்பாக அமைக்கப்பட்டுள்ளது என்பதை

நூல் வரைத் தொடர்ந்து பயத்தொடு பழகி
நுணங்கிய நூலவர் உணர்வே (101)

என்கிறார் கம்பர். அதுபோலவே திருக்கணபுரமும் வானளாவ உயர்ந்த பெரிய மதில்களைக் கொண்டதாக இருக்கிறது. மேலும், நான்கு புறமும் மதில்கள் சூழப்பட்ட நகரம் கணபுரம் இதை ஆழ்வார்,

கன்னி நன்மா மதில் புடைசூழ் கணபுரம் (8-ஆம் திமொழி பாசு.என்.1)

என்று பாடுகிறார்.

நதியின் சிறப்பு

நம்முடைய நாட்டில் வற்றாத புண்ணிய நதிகள் ஓடிக் கொண்டிருக்கின்றன. அயோத்தியிலே மகரந்தம் சித்தும் சோலைகள் தோறும், அருமையான பூக்கள், மலரும் பொய்கைகள்தோறும், நான்கு கதிகள் என்று நூல்களில் சொல்லப்பட்ட உடம்புகள்தோறும் உயிர் சென்று புகுவது போல 'சரயு" நதி ஒடுகிறது. இந்நதி உலகத்து மக்களுக்கெல்லாம் தாய்முலை போலப் பலனளிக்கிறது. என்பதை

சரயு என்பது தாய்முலை அன்னது இவ்
உரவு நீள் நிலத்து ஓங்கும் உயிர்க்கு எலாம் (24)

என்று கம்பர் கூறுகிறார்.

எல்லா நதிகளையும் விட மேன்மை பொருந்தியது கங்கை. இதனைப் புண்ணிய நதி என்று மக்கள் கூறுவர். இறைவன் வாமன உருவில் வந்து ஓங்கி உலகளந்த உத்தமனாகத் தோன்றுகையில் அவனுடைய பாதம் சத்தியலோகம்வரை சென்றது. அப்பாதத்தைப் பிரம்மன் தன் கமண்டலத்தில் உள்ள நீரால் கழுவினான். கழுவிய நீர்தான் இங்கு ஓடுகின்ற நதியாக உள்ளது. இத்தகைய நதி கங்கை நதியைக் காட்டிலும் உயர்வானது என்கிறார் ஆழ்வார். இச்செய்தியை,

கங்கையிலும் தீர்த்தமலி கணபுரம் (8-ஆம் திமொழி பாசுஎண் 3,(3-வது வரி)

என்றும்,

காலின் மணி கரையலலைக்கும் கணபுரம் (8.திமொழி பாசு எண் 7,(3-வது வரி)

என்றும் பாடுகிறார்.

தசரதனின் சிறப்பு

தசம் என்றால் பத்து- ரதம் என்றால் தேர் என்பது பொருள். பத்துத் திக்கிலும் தடையின்றிச் செலுத்தும் தேரையுடையவன்தான் தசரதன். இவன் மாட்சிமை மிகுந்த அயோத்தி நகருக்கு அரசன். சிறந்த முறையில் ஆட்சியைச் செய்கின்ற அரசர்களுக்கு எல்லாம் அரசன். இராமாயணம் என்னும் காப்பியத்திற்குரிய தலைவனான இராமனைப் பெற்றுத் தந்த தரும சீலன் என்பதை,

இம் மாண் கதைக்கு ஓர் இறை ஆய இராமன் என்னும்
மொய்ம் மாண் கழலோன் தருநல் அறமூர்த்தி (169)

என்று கம்பர் கூறுகிறார். ஆழ்வார், கட்டவிழும்படியான நாற்றமுடைய மயிர் முடியை உடையவனான தசரதச் சக்கரவர்த்திக்கு மகனாகத் தோன்றிய இராமனை 'தாசரதி" என்கிறார். மேலும், தாமரைப் பூவின் மேல் அயனைப் படைத்த திருமாலே உன்னை தசரதன் மகனாய் பெற்றெடுத்தான் என்கிறார். இச்செய்தியை,

தளையவிழும் நறும் குஞ்சித் தயரதன் தன் குலமதலாய்

(8-ஆம் திமொ. பாசு. எண்9 (1-வது வரி)

என்று பாடுகிறார்.

கௌசலையின் சிறப்பு

ஊழக் காலத்தில் ஈரேழு பதினான்கு உலகங்களையும் தன் திரு

வயிற்றில் அடக்கியவன் திருமால். ஆரிய வேதங்களை அறிவதற்கு அருமையானவன். மையையும், கருமேகத்தையும் ஒத்த நிறத்தை உடையவன். இத்தகைய நிலைத்த உலகுண்ட பெருவாயனை தன் மணி வயிற்றிலே சுமர்ந்தவள் கௌசலை என்பதை,

மண் வயிற்றின் அடக்கிய மாயனைத்
தன் வயிற்றில் அடக்கும் தவத்தினள் (93)

என்று கம்பர் பாடுகிறார். ஆழ்வாரோ,

மன்னு புகழ்க் கௌசலைதன் மணி வயிறு வாய்த்தவனே

(8-ஆம் திமொழி பா.எண் [illegible] -வது வரி)

என்று பாடுகிறார்.

கைகேயி இராமன்

இராமனுக்கு மகுடாபிஷேகம் நடக்க இருப்பதால் அயோத்தி மாநகரமே விழாக்கோலம் பூண்டு, சொர்க்கலோகம்போல் அலங்கரிக்கப் பட்டிருந்தது. இச்செய்தியை அறிந்த மந்தரை என்றழைக்கப்படுகின்ற கூனி, இராமன் குழந்தைப் பருவத்தில் கையில் உள்ள வில் வெளிப் படுத்திய களிமண் உருண்டை தன் மேல் பட்டுத் துன்பம் செய்ததை மனதில் நினைத்துக் கொண்டாள்.

கோபத்தினால் தீமையையே உண்டாக்குகின்ற கேது என்னும் கிரகத்தைப்போல, கைகேயியின் அரண்மனையை அடைந்தாள். தெளிந்த மனதோடு இருக்கின்ற கைகேயியிடம் நஞ்சைக் கலக்கின்ற வார்த்தைகளைப் பேசினாள். அப்போது கைகேயி பிறரால் புகழ்வதற்கு உரிய நற்குணமுடைய புதல்வர்களைப் பெற்ற எவரும் வலிமை மிகுந்த துன்பத்தை அனுபவிக்க மாட்டார்கள். அதனால்,

இராமனை பயந்த எற்கு இடர் உண்டோ (140)

என்று கைகேயி கூறுவதாகக் கம்பர் கூறுகிறார். ஆழ்வார், கூனியாகிய மந்தரை கலகம் செய்வதற்கு முன்பே, கைகேயி பரதனிடத்தில் எவ்வாறு பற்று வைத்திருந்தாளோ அதைவிட அதிகப் பாசத்தோடு இராமனிடம் அன்பு வைத்திருந்தாள் என்பதை,

உன்னைப் பயந்தகை கேசி (9-ஆம் திமொழி பாசு.எண்.1) 3-வது வரி)

என்று தசரதன் கூறுவதாகப் பாடுகிறார்.

தாடகை வதம்

சுகேது என்னும் யக்ஷனது மகள், ஸீந்த என்பவனது மனைவி ஆயிரம் வலிமை கொண்டவள். அகத்திய முனிவரின் சாபத்தால் தன் கணவன் அழிந்ததை அறிந்தாள். இவள் தன் மகன்களாகிய சுபாகு, மாரிசனுடன் அம் முனிவரை அழிக்கச் சென்றாள். அவரிட்ட சாபத்தால் தம் மக்களோடு அரக்கத் தன்மையை அடைந்தாள். அவள் தான் தாடகை.

அவள் முனிவர்கள் செய்கின்ற யாகங்களை எல்லாம் அழித்தாள். அவளை அழிப்பதற்காக விசுவாமித்திரர் தசரதனின் அனுமதி பெற்று இராம, இலக்குவனரைக் கானகத்திற்கு அழைத்துச் சென்றார். தாடகியின் வரலாற்றையும் இவர்களிடத்தில் கூறினார். அம்முனிவரின் கட்டளைப்படி பெண் என்றும் பாராமல் தாடகையை இராமன் வதம் செய்தான். இச் செய்தியைக் கம்பர்,

கல் நெடு மாரி பெய்யக் கடையுகத்து எழுந்த மேகம்
மின்னொடும் அசணியோடும் வீழ்வதே போல வீழ்ந்தான் (394)

என்று பாடுகிறார். இச்செய்தியைக் குலசேகர ஆழ்வார்,

திண்டிறலாள் தாடகைத் தன் உரமுருவச் சிலைவளைத்தாய்

(8-ஆம் திருமொழிபாசுர எண் 2) 2-வது வரி)

என்று பாடுகிறார்.

தசரதனின் துயர்

கைகேயி தன்னைக் காண வந்த இராமனிடம் மகனே, உன் தந்தை உனக்குத் சொல்ல வேண்டும் என்று விரும்பிய செய்தி ஒன்று உண்டு. அச்செய்தியை இப்போது உனக்குத் தெரிவிக்க விரும்புகிறேன் என்றாள். தந்தையின் கட்டளை எதுவாகிலும் சொல்லுங்கள் நான் சிரமேற் கொள்கிறேன் என்று இராமன் கூறினான். அப்போது கைகேயி,

ஆழிசூழ் உலகம் எல்லாம் பரதனே ஆள நீபோய்த்
தாழ்இருஞ் சடைகள் தாங்கித் தாங்க அருந்தவம் மேற்கொண்டு
பூழி வெங்கானம் நண்ணிப் புண்ணியத் துறைகள் ஆடி
ஏழ் இரண்டு ஆண்டின் வா என்று இயம்பினள் (288)

என்று கூறினாள். இச்செய்தியை ஆழ்வார் 9-ஆம் திருமொழியில் பின்வருமாறு கூறுகிறார்.

நாட்டை விட்டுக் காட்டுக்குச் செல் என்ற வார்த்தைகளை நான் சொல்லாவிட்டாலும், அவ்வாறு கைகேயி பேசுவதற்கு இடம் கொடுத்தேனே, அவள் கூறும் போது மௌனமாய் இருந்தேனே, நான் உன்னை கானகம் போகச் சொல்வதாகச் சொல்லி விட்டாளே, அதற்கு நானே காரணமாகி விட்டேனே என்பதை,

பெரும்பாவியேன் மகனே, போகின்றாய் கேயர் கோன் மகளாய்ப் பெற்ற
அரும் பாவி சொற்கேட்ட அருவினையேன் என்செய்கேன்

(9 ஆம் திமொழி பாசு எண் 5(3 4வது வரி)

என்று தசரதன் புலம்புவதாகப் பாடுகிறார்.

எனவே, குலசேகர ஆழ்வார் இராமாயணக் கருத்துக்கள் அடங்கிய பாசுரங்களை சிறிதளவே பாடினாலும், அப்பாசுரங்கள் கம்பன் பாடல்களோடு ஒத்துப்போகின்றன என்பதை இக்கட்டுரை மூலம் அறியலாம்.

ஆண்டாள் பாசுரங்களில் இராமாயணக் குறிப்புகள்

டி.ஏ.இலட்சுமி
சிங்கப்பூர்

கரிய திருமால் கண்ணன் பேரில் காதல் கொண்டவர் பெரியாழ்வார். அவர் மகளான ஆண்டாளும் கண்ணனை நோக்கியே காதல் கொண்டு வாழ்ந்ததில் வியப்பேதும் இல்லை. 'தான்' என்ற தன்னிலை மறந்து இறைபக்தி என்ற ஆனந்தத்தில் திளைத்து சரணாகதியென்ற பிரேமை பூண்டு பரிபூரணனையடைந்த பிராட்டி. உயர் அரங்கற்கே தன்னை உகந்தளித்த ஆண்டாளின் பாசுரங்களில் கண்ணனும் அவன் லீலைகளையும் தவிர பலவிடங்களில் இராமனும் அவன் சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகளும் விரவி வருகின்றன. நேரடிக் குறிப்புகளாகவும், மறை முகக் குறிப்புகளாகவும் தரப்பட்டுள்ளன. ஏனென்றால் அவள் மாலை தேடி மாலை சூடிய மாலரங்கன் இராமனின் குலதனம். இக்ஷ்வாகு குல தெய்வம். எனவே அவள் இராமனைப் பாடியது தகும்.

பாசுரங்களில் விரவியுள்ள இராமாயணக் குறிப்புகள்
தாயார் கோசலைத்தேவி

தாயைக் குடல்விளக்கம் செய்த தாமோதரனை (திரு.பா.5) என்றவிடத்து ஆண்டாள் மன்னு புகழ் கோசலைத் தன் மணிவயிறு வாய்த்த இராமனையும் குறிப்பாலுணர்த்தி தேவகி யசோதை நிகர் கோசலையின் புகழைக் கூறுகிறாள்.

மனத்துக்கினியான் இராமனின் சிறப்பு

திருப்பாவைப்பாடல் 12ல் **சினத்தினால் தென்னிலங்கைக் கோமானைச் செற்ற மனத்துக்கினியானைப் பாடவும் நீ வாய் திறவாய்** என்று இராமனை **மனத்துக்கினியான்** என்று பெருமைப்படுத்துகிறாள்.**மனத்துக்கினியான்** என்ற பதத்திற்கு இரண்டு பொருள் உண்டு.

(1) நண்பர்களுக்கும் பொதுமக்களுக்கும் உகந்தவன்
(2) எதிரிகளுக்கும்கூட உகந்தவன்

நண்பர்களுக்கும் பொதுமக்களுக்கும் உகந்தவன்

இராமனை அயோத்தி மக்கள் மட்டும் விரும்பவில்லை; தண்டகாரண்ய ரிக்ஷிகளும் விரும்பினர். அவனுடன் என்றும் இருக்க ஆசைப்பட்டு

கிருக்ஷ்ணாவதாரத்தில் கோபிகைகளாகப் பிறந்தனர்.

ராமா என்ற பெயரே அனைவருக்கும் உகப்பை தந்தது. கம்பர் ராமா என்ற இரண்டெழுத்தின் மகிமையை இவ்வாற்றான் சொல்வார்:

நன்மையும் செல்வமும் நாளும் நல்குமே;
தின்மையும் பாவமும் சிதைந்து தேயுமே;
சென்மமும் மரணமும் இன்றித் தீருமே -
இம்மையே 'ராம' என்று இரண்டு எழுத்தினால். (காப்பு. பாடல் 13)

எதிரிகளுக்கும்கூட உகந்தவன்

மூக்கறுபட்டு பெண்மைக்கு பங்கம் ஏற்பட்டபோதும் சூர்ப்பணகை இராமன் மேலுள்ள ஈடுபாட்டினால் "நீங்கள் எந்த தவறும் செய்ய வில்லை; பிற ஆண்கள் என்பால் கவரப்படக்கூடாது என்றுதானே செய்திருக் கிறீர்கள். உங்கள் மேலுள்ள காதல் இரு மடங்காகியது" என்றாள்.

மறைந்திருந்து அம்பெய்து இராமன் தன்னை வீழ்த்தியபோதும் இறுதியில் வாலி கைகூப்பி," அரந்தை எம் பிறவி நோய்க்கு அருமருந்து அனைய ஐயா! வரந்தரு வள்ளல்" என்றான்.

"இன்று போய் நாளை வா" என்று இராமனால் உயிர்ப்பிச்சை பெற்று திரும்பிய இராவணன் மால்யவானிடம், "நாசம்வந்துற்றபோது நல்லதோர் பகையைப் பெற்றேன்" என்றான்.

தன் கணவனை மாய்த்த இராமனைக் கண்ட மண்டோதரி வெகுளாமல் "ஆரா அமுதாய் அலை கடலில் கண் வளரும் நாராயணன்" என்று அழுகிறாள்.

இந்த 15ம் பாட்டில் ஆண்டாளின் குறும்பையும் ரசிக்கலாம். ஆய்ச்சிகளுக்கு இராமன்தான் "மனத்துக்கினியான்". ஏனென்றால் பெண்ணின் வருத்தம் தெரிந்தவன் அவன்தான். கண்ணன் குறும்புகள் செய்து தொல்லை கொடுப்பவன். இராமன் தர்மாத்மா. கண்ணன் திருடன். நாச்சியார் திருமொழியில் (13-7) "பெற்றதாய் வேம்பேயாக வளர்த்தாளே" என்பதை இங்கு நினைவு கூறவேண்டும்.

அகலிகை சாபவிமோசனம்

தலைவி கண்ணன் அணிந்த ஆடை முதலியவற்றால் தன் வாட்டத்தைத் தணிக்க வேண்டுகிறாள்.

"கொடியகடியதிருமாலால் குளப்புக்கூறுகொளப்பட்டு
புடையும்பெயரகில்லேன்நான் போட்கன்மிதித்த அடிப்பாட்டில்
பொடிதான்கொணர்ந்துபூசீர்கள் போகாவுயிரென்னுடம்பையே"
(நா திரு.13 பா.6)

"கண்ணன் திருவடிபட்ட தூளினைக்கொண்டு என்மீது தடவினால் என் உயிர் போகாது", என்று சொல்லுமிடத்து, விசுவாமித்திரரோடு இராமனும் இலக்குவனும் மிதிலை நோக்கிச் செல்லும்பொழுது இராமன் காலடிபட்டு கற்சிலையான அகலிகை சாபவிமோசனம் பெற்ற சம்பவத்தை குறியிட்டுக் காண்பிக்கிறாள்.

இராமன் சீதையைக் கண்டு அவளை மணந்து உடனுறைதல்

கருவுடை முகில் வண்ணன் காயாவண்ணன்
கருவிளைபோல் வண்ணன் கமலவண்ணத்
திருவுடை முகத்தினில் திருக்கண்களால் திருந்தவே நோக்கெனக்
கருள்கண்டாய் (நா திரு.1 பா.6)

என்று கண்ணன் தன்னை நோக்கித் திருத்திப்பணி கொள்ளவேண்டும் என்று சொல்லுமிடத்து, "அண்ணலும் நோக்கினார் அவளும் நோக்கினாள்" என்று இராமர், சீதை கண்கள் படைத்த காவியத்தை ஒப்பீட்டுக் குறிப்பால் உணர்த்துகிறாள்.

"வாரணமாயிரம்" என்று துவங்கி "மஞ்சனமாட்டக் கனா கண்டேன் தோழீ நான்" என்று ஆயனை மணஞ்செய்து கொள்வதாக தான் கண்டகனாவை நாச்சியார் திருமொழியில் 6ஆம் பதிகத்தில் சொல்லும் பொழுது சீதாப்பிராட்டி இராமனின் திருமண வைபவத்தையே கண்முன் வைக்கிறாள்.

செய்யதாமரைக்கண்ணினாய்! சீதை வாயமுதமுண்டாய்! (நா திரு.2 பா.4,10) சீதை இராமனின் பிரேமையைக் குறிப்பிடுகிறாள்.

இராமர் சீதை பிரிவு

'மாயனை மன்னு வடமதுரை மைந்தனை தூய பெருநீர் யமுனைத் துறைவனை' (திருப்பா-5) என்று யமுனை நதியை ஏற்றிப் பாடுமிடத்து கோதாவரியையும் சீதை இராமர் பிரிவினையும் ஒப்பீட்டுக் குறியாய்ச் சொல்லுவாள். தூய நீர். ஏனென்றால் வசுதேவர் கண்ணனைக் காப்பாற்றிக் கொண்டு செல்ல யமுனை உதவினாள். பெருநீர்.

கண்ணன் திருவடி தொடவேண்டுமென்று வசுதேவர் தோள்வரை பெருகி வந்தவள். யமுனை சேர்ப்பதற்கு உதவினாள். கோதாவரியோ சீதையை இராவணன் தூக்கிச்சென்றதைப் பற்றி இராமருக்கு ஒரு குறிப்பும் தரவில்லையே. இத்தனைக்கும் இராமர் குறிப்பால் உணரும் குணம் படைத்தவர். கம்பராமாயணத்தில், இராவணன் சூழ்ச்சிப் படலம் 78ஆம் பாட்டில்

கோதாவரியே! குளிர்வாய், குழைவாய்!
மாதா அனையாய்! மனனே தெளிவாய்;
ஓதாது உணர்வாருழை, ஓடினை போய்,
நீதான் வினையேன் நிலை சொல்லலையோ?

கோதாவரியே! நீ வாய் திறந்து ஒன்றும் சொல்லத் தேவையில்லை. குழைந்து ஓடினாலேயே என் இராமர் புரிந்துகொள்வார். சர்வஞானி.

சூர்ப்பணகை மூக்கரிதல் மற்றும் வாலி வதம்

"கொல்லையரக்கியை மூக்கரிந்திட்ட குமரனார்
சொல்லும் பொய்யானால் நானும் பிறந்தமை பொய்யன்றே"
-(நா.திரு 10. பா 4).

இங்கு தண்டகாரண்யத்தில் வனவாசம் வந்த இராமரைக் கண்டு சூர்ப்பணகை மோகித்து அவரை அடைய ஆசைப்பட்டு, உடனிருக்கும் சீதாப்பிராட்டியை வெருட்ட இலட்சுமணன் கோபம்கொண்டு அவள் மூக்கை அரிந்து அங்கஹீனம் செய்ததை நேரடியாய் குறிப்பிடுகிறாள். வாலி வதத்தை மறைபொருளாக குறிப்பிடுகிறாள். "இலட்சுமணன் சொல்லும் பொய்யானால்" என்றவிடத்தில் மறைந்து நின்று இராமர் எய்த அம்பால் உயிர் போகும் தருவாயில் இருக்கும் வாலி, "இது வீரனுக்கு அழகா? தர்மாத்மாவான நீ இப்படி செய்யலாமா? என்று கேட்க இலட்சுமணன் சொன்ன விளக்கத்தை குறிப்பிடுகிறாள். சரணாகதி என்று வந்தவரைக் காப்பது என் அண்ணனின் கடமை. ஒரு சொல், ஒரு அம்பு, ஒரு மனைவி என்ற கொள்கையுடன் வாழ்பவர். உனக்கு முன்பே உன் தம்பி சுக்ரீவன் அவரிடம் அடைக்கலம் அடைந்ததால், உன்னைக் கொன்று அவருக்கு இராஜ்ஜியம் அளிப்பதாக வாக்கு கொடுத்துவிட்டார். ஏனென்றால் நீ சொந்தத் தம்பியின் மனைவியை அபகரித்து அதர்மனானாய். நேரில் நின்று உன் மீது அம்பெய்தால் நீயும் அவர் கால்களில் விழுந்து சரணடைந்தால் சுக்ரீவனுக்குக் கொடுத்த

வாக்கைக் காப்பாற்ற முடியாது". இப்படியாக கொடுத்த வாக்கை கப்பாற்ற, பித்ரு வாக்ய பரிபாலனத்திருக்காக கானகமடைந்து, சீதையைப் பிரிந்த இராமன் சொல் உண்மையென்றால் ஆண்டாளாகிய நான் இந்த தேகம் என் அரங்கனுக்கு மட்டுமே அர்ப்பணம் என்ற சொல்லும் உண்மையே.

இமைப்பிலோன் இலக்குமணன் சிறப்பு

என்புருகிஇன வேல்நெடுங்கண்கள் இமைபொருந்தா பலநாளும்
துன்பக்கடல்புக்கு வைகுந்தனென்பது ஓர் தோணிபெறாது உழல்கின்றேன்
அன்புடையாரைப் பிரிவுறு நோயது நீயும் அறிதிகுயிலே

-(நா.திரு 5- பா 4).

இப்பாடலில் ஆண்டாள் வைகுந்தனை இன்னும் அடையாது தான் தவிக்கின்றதாய்ச் சொல்லுமிடத்தில் இராமர் சீதை பிரிவினைக் கோடிட்டுக் காட்டி, 14 வருடங்கள் இலக்குமணன் இமைப்பிலனாய் வாழ்ந்த காவியத்தையும் குறிப்பிடுகின்றாள். எலும்புகள் கோவிந்தன் என்னும் ஏக்கத்தினால் உருகி, வேல் போன்ற கண்கள் இமையுடன் பொருந்தவில்லை. ஏனென்றால் கண்மூடவில்லை. யாரைப் போல்? நாராயணனை சதா சர்வகாலம் பிரியாது உடனிருக்கும் ஆதிசேஷன் இராமாவதாரத்தில் இலக்குமணனாய்ப் பிறந்து கானகத்தில் 14 வருடங்கள் கண்கள் மூடாமல் சீதாப்பிராட்டியையும் இராமனையும் காக்க நின்றது போல். இலக்குமணன் தூங்காததைக் குகன் வாயிலாய் கம்பர் சொல்லுவார்:

அல்லை ஆண்டு அமைந்த மேனி அழகனும் அவனும் துஞ்ச
வில்லை ஊன்றிய கையோடும், வெய்து உயிர்ப்போடும் வீரன்
கல்லை ஆண்டு உயர்ந்த தோளாய்! கண்கள் நீர் சொரிய கங்குல்
எல்லை காண்பு அளவும் நின்றான்; இமைப்பிலன் நயனம்

மேலும், சீதையைப் பிரிந்த இராமன் வருந்தியதை குயிலுக்குச் சொல்வதுபோல் தெரிவிக்கிறாள். குயிலையே இராமனாக வரித்து அன்புடையாரை பிரிவுறும் நோய் எப்படிப்பட்டது என்பது நீயும் அறிவாய் அல்லவா? அப்படியிருந்தும் இந்த கிருஷ்ணாவதாரத்தில் என் அன்பை, உன்னைப் பிரிந்து வாடும் துன்பத்தையும் உன்னால் புரிந்து கொள்ள முடியவில்லையா?

சபரி சுவை பார்த்து அளித்த எச்சில் பழங்கள்

மன்னாகி நின்ற மதுசூதன் வாயமுதம்,
பன்னாளும் உண்கின்றாய் பாஞ்சசன்னியமே (நா.திரு7 ; பா 5)

மதுவாயில் கொண்டாற்போல் மாதவன் தன்வாயமுதம்.
பொதுவாக உண்பதனைப் புக்கு நீயுண்டக்கால் (நா.திரு 6; பா 9)

என்றென்றும் மாதவனின் வாயில் பொருத்தப்பட்டு அவன் வாயமுதத்தை உண்ணுகின்ற நெருங்கிய சுற்றமாக பாஞ்சசன்னியம் இருக்கின்றது என்று ஏற்றம் செய்யும் அதேநேரத்தில், ஆரண்ய காண்டத்தில் இராமன் தன் பக்தையான வயதுமுதிர்ந்த சபரி சுவைபார்த்து அளித்த எச்சில் பழங்களை உண்டு அவளுக்கு மோட்சம் அளித்த கதையை ஒப்பீட்டாய்க் காட்டித்தருவாள். கிருஷ்ணாவதாரத்தில் கண்ணனின் எச்சிலை ஒரு சங்கு உண்கிறது. இராமவதாரத்தில் அந்தப் பரமனே பக்தையின் எச்சிலை உண்கிறான் என்பதே ஏற்றம்.

கிஷ்கிந்தை குரங்குகளோடு கொண்ட உறவு

கண்ணன் நீராடவந்த கோபிகைகளின் ஆடைகளையெல்லாம் கவர்ந்துகொண்டு ஆற்றின் நடுவில் உள்ள ஒரு மரத்தில் அமர்ந்து கொண்டு, கோபிகைகளை இம்சிக்க, அவர்கள் பலவாறாய்க் கெஞ் சுவதையும் ஆண்டாள் நாச்சியார் திருமொழி மூன்றாம் திருமொழியில் படம்படித்துக் காட்டுகிறாள். இதில் அவள் குறும்பும் ஹாஸ்ய உணர்ச்சியும் வெளிப்படுகின்றன.

இரக்கமெலொன்னு மிலாதாய்! இலங்கையழித்த பிரானே!
குரக்கரசு ஆவது அறிந்தோம் குருந்திடைக்கூரைப்பணியாய்.
-(நா.திரு 3- பா 4).

எங்கள் ஆடைகளை எடுத்துக்கொண்டு இரக்கமில்லாமல் எங்களை அலைக்கழிக்கிறாயே; மரத்தின் மேல் ஏறிக்கொண்டிருக்கிறாயே; ஒரு விதத்தில் நீயும் குரங்குகளின் அரசன்தானே. சுக்ரீவனிடம் சிநேகம் கொண்டு அவன் இராஜ்ஜியத்தை மீட்டுக் கொடுத்து குரங்குகளுடன் சில காலம் வாழ்ந்தவன்தானே. அதனால்தான் குரங்கின் குணநலன்கள் உனக்கும் வந்திருக்கின்றன போலும். இவ்வாறாக, கிஷ்கிந்தையில் இராமனுக்கு வானர இராஜனுடனான சம்பந்தத்தைக் குறிப்பிடுகிறாள்.

அசோகவனத்தில் சீதைவாடுதல்

மாசுடையுடம் பொடுதலையுலறி வாய்ப்புறம் வெளுத்து ஒருபோதுமுண்டு
தேசுடைத் திறலுடைக் காமதேவா! நோற்கின்ற நோன்பினைக் குறிக்கொள் கண்டாய்
(நா.திரு 1- பா 8).

கண்ணனையே எண்ணியெண்ணித் தன்னை மறந்து கூடுவதற்காக நோன்பு நோற்று இருக்கும் தவக்கோலம் மாசுபடிந்த உடையணிந்த உடம்பு. எண்ணெய் காணாத கூந்தல். பசலையால் வெளுத்த உதடுகள். நீர் இன்றி உலர்ந்த உதடுகள். கண்களிலிருந்து சொரியும் கண்ணீரின் உப்பு உதடுகள் மேல் தங்கி உலர்ந்ததில் ஏற்பட்ட வெண்மை நிறம் என்றும் கொள்ளலாம். இங்கு அசோகவனத்தில் சீதை இராமனின் வருகைக்காக காந்திருந்த கோலத்தை ஒப்பிட்டுக் குறிப்பிடுகிறாள்.

ஒளி வண்ணம் வளைசிந்தை உறக்கத்தோடு இவையெல்லாம்
எளிமையால் இட்டு என்னை ஈடழியப்போயினவால்
குளிரருவிவேல்கடத்து என் கோவிந்தன் குணம் பாடி
அளியத்தமேகங்காள்! ஆவிகாத்திருப்பேனே -(நா.திரு 8- பா.3).

இங்கு, மேகத்தை கோவிந்தனிடம் தூதுவிடுகிறாள் ஆண்டாள். என்னவென்று? தேக ஒளி, நெகிழ்ந்து விழும் வளைகள், சிந்தனைத் திறன், உறக்கம் இவையெல்லாம் கோவிந்தனால் என்னைவிட்டுப் போயினவால், நீங்கள் எந்த கோவிந்தனின் குணங்கள் பாடி இவ்வேங்கட மலையில் இருக்கின்றீரோ, அவன் வரும்வரை என் ஆவி காத்திருப்பேன். அவன் என்னுடன் ஒரு நாள் இருப்பானேயாயின் என் ஆவி தங்கும். ஆண்டாள் நமக்கு அசோகவனத்தில் சிம்சுபா மரத்தினடியில் இராம நாமத்தையேச் சொல்லி காத்திருந்த சீதாப்பிராட்டியிடம், இராமநாமஜபம் செய்துகொண்டே அணுகி இராமன் கணையாழியைக் காட்டி அவர் சொன்ன செய்திகளை அனுமன் சொல்லியபொழுது, சீதாப்பிராட்டி சூடாமணி கொடுத்து, "இன்னும் ஒரு மாதம்தான் என் ஆவி தங்கும் என் ஆரியர் வருவதற்கு" என்று சொன்ன காட்சியை ஒப்பிட்டுக் குறிப்பிடுகிறாள். மேலும், அனுமன் வாயுபுத்திரன். அவனைச் சீதை தூதுவிடுத்தாள். இங்கு ஆண்டாள் காற்றாய்ச் செல்லும் மேகங்களை தூதுவிடுத்தாள்.

கோங்கலரும் பொழில் மாலிருஞ்சோலயில் கொன்றைகள் மேல்
தூங்குபொன்மாலைகளோடு உடனாய் நின்றுதூங்குகின்றேன்
பூங்கொள் திருமுகத்து மடுத்தூதிய சங்கொலியும்,
சார்ங்கவில்நாணொலியும் தலைப்பெய்வது எஞ்ஞான்றுகொலோ
(நா.திரு 9; பா 9)

"திருமாலிருஞ்சோலை வெட்டவெளியில் கொன்றைப்பூக்கள் மேல் நானும் உணர்வற்றுக் கிடக்கின்றேன். மாதவனின் சங்கொலியும்,

சாரங்க வில்லின் நாணொலியும் கேட்பதற்காக காத்துக்கிடக்கின்றேன்" என்று ஆண்டாள் சொல்லுமிடத்தில், அசோகவனத்தில் மரத்தினடியில் வெயில் மழையென்று பாராமல் அமர்ந்துகிடக்கும் சீதை இராவணனைத் தோற்கடித்துத் தன்னை மீட்டுப் போகவரும் கோதண்டத்தின் சப்தம் கேட்கக் காத்துக்கிடப்பதை நினைவுறுத்துகிறாள்.

நாச்சியார் திருமொழி 3ஆம் பதிகத்தில் தனக்காக எம்பெருமானைக் கூவியழைக்கும்படி குயிலை ஆண்டாள் வேண்டும் பொழுது, பாடல்கள் 7,8ல் குயிலைப் பார்த்து "நீ சாலத்தருமம் பெறுதி" என்றும், "சாரங்கம் வளைய வலிக்கும் தடக்கைச் சதுரன் பொருத்தமுடையன். நாங்கள் எம்மிலிருந் தொட்டிய கச்சங்கம் (ஸங்கேதம், இரகசியங்கள்) நானும் அவனும் அறிதும்" என்றும் சொல்கிறாள். இங்கு அவள் குறிப்பிடுவது, சீதை அனுமனைப் பார்த்து "நீ என்னை இரட்சித்தாய். என்னை இரட்சிப்பதன் மூலம் இராமனை இரட்சித்தாய். பெருமானை இரட்சிப்பதன் மூலம் உலகத்தையே இரட்சித்தாய்" என்று சொன்னதையும், "மேலும் சாரங்கத்தைச் சொல்லுமிடத்தில் கோதண்டம் ஏந்திய இராமனுக்கும் எனக்கும் மட்டுமே அறிந்த நிகழ்வுகள் உண்டு" என்று சொன்ன நிகழ்வுகளையும் குறிப்பிடுகிறாள்.

சேதுபந்தம்

"கண்டனன் கற்பினுக் கணியைக் கண்களால்" என்று அனுமன் வந்து சொன்னதும், குரங்குகளின் உதவியுடன் கடலை ஊடறுத்து சேதுபந்தனம் அமைத்து இலங்கை அடைந்தமையைப் பல பாடல்களில் ஆண்டாள் குறிப்பிடுகிறாள். இடைப்பெண்கள் தங்கள் சிற்றில் சிதைக்க வேண்டாமென்று கண்ணனை வேண்டிப் பாடும்போது,

கடலையடைத்து அரக்கர் குலங்களை முற்றிலும் செற்று இலங்கையை பூசலாக்கிய கேசவா! -(நா.திரு. 2- பா.6).

ஓதமாகடல் வண்ணா! உன்மணவாட்டிமாரொடு சூழறும் சேதுபந்தம் திருத்தினாய்!

எங்கள் சிற்றில் வந்து சிதையேலோ. -(நா.திரு. 2- பா.7).

இங்கு, இராமனைச் சொல்லும்போது "உன் மணவாட்டிமாரொடு" என்று சொல்லுவது ஆச்சரியமல்லவா? ஒரு சொல், ஒரு அம்பு, ஒரு மனைவி என்று வாழும் இராமனுக்கு மணவாட்டிமார் என்று பன்மையில் எப்படி வரும்? சீதாப்பிரட்டி, பூமிதேவி ஆவாள்.

ஆண்டாளும் பூமிதேவி ஆவாள். எனவே தன்னையும் சேர்த்து மணவாட்டிமார் என்று சொன்னதாய் கொள்ள வேண்டும்.

உண்ணாது உறங்காது ஒலிகடலையூடறுத்து
பெண்ணாக்கையாட்புண்டு தாமுற்றபேதெல்லாம்" -(நா.திரு. உ- பா.7).

என்ற வரிகளில் இராமபிரான் சீதையைப் பிரிந்து உண்ணாது உறங்காது இருந்து கடலை ஊடறுத்து சேதுபந்தம் செய்தமை குறிக்கப்படுகிறது.

கூற்றத்தின் வாய்வீழ்ந்த கும்பகர்ணன்

திருப்பாவை 10ஆம் பாட்டில் "கூற்றத்தின் வாய்வீழ்ந்த கும்பகரணனும் தோற்றும் உனக்கே பெருந்துயில் தான் தந்தானோ?". என்ற வரிகளில் கும்பகர்ணம் விதியின் வசத்தால் இருமுறை வாழ்க்கையில் உய்யும் சந்தர்ப்பத்தைத் தவறவிட்டு தன்சாவைத் தேடிக்கொண்டதை குறப்பிடு கிறாள். முதல்முறை பிரம்மனிடம் வரம் கேட்கும்போது வாய்தவறி ஆறுமாதம் தொடர்ந்து தூங்க வேண்டும் என்று கேட்டது. இரண்டாம் முறை தர்மவான் விபீஷணன் இராமனிடம் சென்று சரணடையலாம் என்று எவ்வளவோ எடுத்து சொன்னபொழுதும் தர்மத்தின் பக்கம் செல்லும் வாய்ப்பை தவறவிட்டு அண்ணனுடைய பக்கத்தில் இருந்து போரில் இறந்ததைச் சொல்கிறாள்.

வீடணன் சரணாகதி

நாச்சியார் திருமொழி 10ஆம் திருமொழியில் கண்ணனைப் பிரிந்த தலைவி கார்கோடல் பூக்கள், முல்லை, குயில்கள், மயில்கள், மழை, கடல் என்ற ஒவ்வொன்றிடமும் தன்னைக் கண்ணன் தன்னோடு சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று சொல்வது விபீஷணன் சரணாகதியைப் பற்றிச் சொல்வதாக குறித்துக் கொள்ளலாம். 2ஆம் பாட்டில் "எம்மை மாற்றோலைப்பட்டவர் கூட்டத்து வைத்துக் கொள்கிற்றிரே' 4ஆம் பாட்டில் "உன்னடைக்கலம்'ங் 5ஆம் பாட்டில் "கருளக்கொடியுடையார் வந்து அருள் செய்து கூடுவராயிடில்'ங் 6ஆம் பாட்டில் "அடிவீழ்கின்றேன்' 7ஆம் பாட்டில் "எம்மை உடைமாடு கொண்டான்'ங் 8ஆம் பாட்டில் "அழகப்பிரானார் தம்மை என்னெஞ் சத்தகப்படத் தழுவிநின்று" என்ற சொற்பிரோயகங்கள் விபீஷணன் இராமனை அனுமன் துணைக்கொண்டு அடைக்கலம் புகுந்ததைக் குறிப்பதாகும்.

இராவணன் வதம், இலங்கையை அழித்தல்

திருப்பாவை

12ஆம் பாட்டில், "சினத்தினால் தென்னிலங்கைக் கோமானைச் செற்ற மனத்துகினியாளை" என்கிறாள். இராமருக்கு எதனால் பெருங்கோவம்? தனக்கு உகந்தவனான அனுமனை இராவணன் வாலில் தீவைத்து ஹிம்சித்ததால். பெருமாள் தனக்குச் செய்யபடும் குற்றங்களைப் பொறுப்பார். ஆனால், தன் அடியார்க்குத் தவறிழைப்பவரை சகிக்க மாட்டார்.

13ஆம் பாட்டில் "பொல்லா அரக்கனை கிள்ளிக்களைந்தானைக் கீர்த்திமை பாடிப்போய்" என்று பொல்லாத அரக்கனான இராவணனின் பத்துத் தலைகளைக் கிள்ளியெறிந்ததை சொல்கிறாள். இங்கு பொல்லா அரக்கனை என்று சொல்லும்போது நல்ல அரக்கனான விபீஷணனையும் ஞாபகப்படுத்துகிறாள்.

15ஆம் பாட்டில், "மாற்றாறை மாற்றழிகை வல்லானை மாயனை" என்று தர்மத்திற்கு மாறாக நடந்த வாலி மற்றும் இராவண வதங்களைக் குறிப்படுகிறாள்.

24ஆம் பாட்டில், 'சென்றங்கு தென்னிலங்கை செற்றாய் திறல் போற்றி"- ஒரு தலைவனின் சிறப்பு அம்சங்களான அவன் திருவடி, திறன், வீரம், குணம், ஆயுதங்கள் என்று இவற்றை போற்றுமிடத்து, திறமைக்கு கடலை அடைத்து சேதுபந்தம் செய்து வானரங்களின் துனைக்கொன்டு வலிய அரக்கனான இராவணனை "இன்று போய் நாளை வா" என்று வென்ற இராமனை போற்றுகின்றாள்.

நாச்சியார் திருமொழி

3ஆம் திருமொழியில், 3ஆம் பாட்டில், "வில்லால் இலங்கை அழித்தாய்" என்று சொல்லுமிடத்து,

முதன்முதலில் சிவதனுசை முறித்து சீதைக்கரம் பற்றிய அந்திகழ்ச்சி முதல் இராவணனை வதம் செய்த கோதண்டம் முதலான நிகழ்வு களை இருவார்த்தைகளில் அடக்கிவிடுகின்றாள். 4ம் பாட்டிலும், இலங்கை யழித்த பிரானே என்கிறாள். 5ம் திருமொழி 3ம் பாட்டில்

மாதலி தேர் முன்புகோல் கொள்ள மாயன் இராவணன்மேல் சரமாரி
தாய்தலை அற்ற்ற்றுவீழத் தொடுத்த தலைவன் வரவெங்கும் காணேன்

இந்திரனின் தேரோட்டி மாதலி இராமனுக்காகத் தேரோட்டுகின்றான். இராவணனுக்கு நேர் எதிரேநின்று சரமாரியாக இராமன் அம்பு பொழிந்து அவன் தலைகள் துண்டித்து விழுகின்றன. இங்கு மாதலி தேரோட்டினான், இராவணன் முன்பு நின்றான் என்று சொல்லுமிடத்து, இராவணன் இதற்கு முன்பு இந்திரனுடன் சண்டை போடும் பொழுதெல்லாம் மாயமாய் மறைந்து இருந்து தாக்கியதை நினைவு கூறுகிறாள். அப்படிபட்ட இராவணனை இராமன் நேருக்குநேர் நின்று வதம் செய்தான்.

முடிவுரை

நாமமாயிரம் ஏத்தநின்ற நாராயணனின் ஏற்றம் கண்ணனாகவும் இராமனாகவும் பலவிடங்களில் ஆண்டாளின் பாடல்களில் இலைமறை காய் மறைவாகவும் சொல்லப்பட்டுள்ளது. "சுந்தரத்தோளினன், செய்யத் தாமரைக்கண்ணினன், புண்ணியன், மனத்துக்கினியன் என்றெல்லாம் இராமனின் குணநலங்களை எடுத்துச் சொல்லி உள்ளாள்.

கம்பனின் முதல் திறனாய்வாளர் வ.வே.சு.ஐயர்

முனைவர் **வெ.திலகம்.**
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை, ஸ்ரீபராசக்தி மகளிர் கல்லூரி, குற்றாலம்.

முன்னுரை

படைப்பாளியின் படைப்புத்திறன் ஆய்வு செய்தல் எனும் பொருளில் ஒரு தொகைச் சொல்லாக உருவாக்கம் பெற்ற "திறனாய்வு" எனும் சொல்லை முதன் முதலில் வழங்கியவர் (1953இல்) பேராசிரியர் அ.ச. ஞானசம்பந்தன் ஆவார். அ.ச. ஞானசம்பந்தன் அவர்கள் 1953இல் எழுதிய இலக்கியக் கலை எனும் நூலில் இச்சொல்லை அறிமுகம் செய்கிறார். "கவிஞன் எந்த இடத்தில் விட்டுச் செல்கின்றானோ அந்த இடத்தைத் திறனாய்வாளன் பிடித்துக் கொள்கிறான்" இலக்கியத்தை ஒரு தளமாக எடுத்துக் கொண்டும், திறனாய்வு ஓர் அறிவுத் தேடலாகவே அமைந்துள்ளது என தி.சு. நடராசன் தமது திறனாய்வுக் கலை எனும் நூலில் அறிவுறுத்துகின்றார்.

திறனாய்வில் தொடக்கால வளர்ச்சி நிலை

கி.பி. 15ம் நூற்றாண்டுக்குப் பின் ஓரிரண்டு நூற்றாண்டு ஒதுங்கி, ஒடுங்கிக் கிடந்த தமிழ் இலக்கியம் ஐரோப்பியரின் வருகையாலும் அறிவியல் வளர்ச்சியாலும் புத்துணர்வும் புத்துயிரும் பெற்று எழுந்தன. தமிழ்இலக்கியங்கள் குறித்த விவாதங்களும், விசாரணைகளும் பெருகத் தொடங்கின. 20ம் நூற்றாண்டின் தொடக்கக்காலம்வரை திறனாய்விலிருந்து முற்றிலும் மாறுபட்ட, வேறுபட்ட ஆராய்ச்சியே நிலை பெற்றிருந்தது. கால்டுவெல், விபுலானந்த அடிகள், நடேச சாஸ்திரி, சேஷையர், மு. இராகவையங்கார் போன்றோர் ஆராச்சியில் தான் பெரிதும் ஈடுபாடு காட்டினர். இலக்கியங்களின் வரலாறுகளிலும், அவை கூறும் செய்திகளிலும் மட்டுமே அவர்கள் ஆர்வம் காட்டினர். திறனாய்வின் தொடக்கால வளர்ச்சியில் கவனிக்கத்தக்க ஆராய்ச்சியாளராய்த் திகழ்பவர் பேராசிரியர் பெ. சுந்தரம்பிள்ளை அவர்கள். அவரது பத்துப்பாட்டு ஆராய்ச்சியும், திருஞானசம்பந்தர் கால ஆராய்ச்சியும் குறிப்பிடத்தக்கவை. கடந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் வாழ்ந்த மறைமலையடிகள் பழைய உரையாசிரியர்களைப் பின்பற்றாமல் தனக்கென ஒரு புது தனி வழி வகுத்து இலக்கியத்தின் திறனையும் அழகையும் வெளிப்படுத்தி முல்லைப்பாட்டு ஆராய்ச்சியுரை (1903)

பட்டினப்பாலை ஆராய்ச்சியுரை (1906) ஆகியவற்றை எழுதினார். இவ்விரு ஆராய்ச்சியுரைகளும் அவர்தம் கூர்த்த மதியையும், ஆய்வுத்திறனையும், மதிப்பீட்டு முறையையும் விளக்கும் சான்றுகளாய் அமைந்துள்ளன. அடுத்துவந்த வ.வே.சுப்பிரமணிய ஐயர் 1924இல் எழுதிய கம்பராமாயண ரசனையும், ஆங்கிலத்தில் எழுதிய Comparative Study of Kamban என்ற நூலும் குறிப்பிடத்தக்கவை. கம்பனை ஆராயும் போது கம்பனே உலக மகாகவி என்ற முன் முடிவை முன்னிறுத்தித் தன் பயணத்தைத் தொடர்கிறார். ஒப்பிலக்கிய ஆராய்ச்சிக்கு இ.து உகந்தது என்றும், ஒப்பீட்டுத் திறனாய்வு கண்டமைக்கு இவரே முன்னோடி என்பதில் ஒருவேறு ஐயமில்லை.

திறனாய்வு வளர்ச்சியில் வ.வே.சு.ஐயரின் பங்கு

கம்பனின் முதல் திறனாய்வாளர் வ.வே.சு.ஐயரே எனத் தமிழ்ப் பேரறிஞர் அ.ச.ஞானசம்பந்தன் போற்றிப் புகழும் பாராட்டுரை ஐயரின் திறனாய்வுத்திறனை ஐயந்திரிபற விளக்குகிறது. 1918இல் வெளியான ஐயரது 'கவிதை' எனும் கட்டுரையே தமிழ் விமர்சனத் துறையின் திறவுகோல் என்று பெ.சுப்பிரமணி பாராட்டுகிறார். கம்பனுக்குள்ள தனிச்சிறப்புகளை எடுத்துக்காட்டித் தமிழ்மொழிக்கே பெருமை சேர்த்தவர் வ.வே.சுப்பிரமணிய ஐயர் என, சிலம்புச் செல்வர் ம.பொ.சி புகழ்வது அவரது திறனாய்வுப் பணிக்குக் கிட்டிய அங்கீகாரமே. மகாகவி பாரதியாரைப் போன்று வ.வே.சுப்பிரமணி ஐயரின் இலக்கியப் பணியும் புதுச்சேரி கால வாழ்க்கையில் முதலிடம் பெற்றுச் செழிப்புற்றது என்பதை ஆய்வாளர் பெ.சுப்பிரமணி தனது வ.வே.சுப்பிரமணி ஐயரின் கம்பராமாயணக் கட்டுரைகள் எனும் நூலில் சுட்டிக் காட்டுகின்றார்.

தேசியத் தலைவர்கள் பலரது இலக்கியப் படைப்புகள் அவர்தம் சிறைவாசங்களிலேயே உருவாக்கப்பட்டவை. வ.வே.சுப்பிரமணிய ஐயரும் அதற்கு விதிவிலக்கன்று. 1921 செப்டம்பரில் கைதாகி பெல்லாரி மத்திய சிறையில் அடைக்கப்பட்டிருந்த காலத்தில்தான் அவரது மிகப்பிரசித்தி பெற்ற கம்பராமாயணம் - ஓர் ஆய்வு (Kambaramayanam - A Study) எனும் ஆங்கில நூல் உருவானது. ஐயரின் கூர்ந்த மதியும், பன்மொழிப் புலமையும், அப்புலமை மூலம் உலக இலக்கியங்கள் பலவற்றில் அவர் பெற்றிருந்த தேர்ச்சியும், தமிழிலக்கியத்தின் உயர்வையும், சிறப்பையும், பாங்கையும் கண்டுணர உதவின.

மூலநூலாம் வால்மீகியையும் வழி நூலாம் கம்பனையும் ஏறத்தாழ, பத்தாண்டு காலமாய்த் தீவிரமாய் பயின்று, ஆழமாய்ச் சிந்தித்து நுணுகி ஆராய்ந்தும் அவர் மேற்கொண்ட முடிவுகளை கம்பராமாயணம் ஓர் ஆய்வு (Kambaramayanam - A Research) எனும் நூலின் முன்னுரை-யிலேயே அழகுறப் பதிவு செய்து விடுகிறார். "நாட்டுப்பற்றின் உத்வேகத்தால் விளைந்த பாராட்டன்று" (This is not the Language of Mere patriotic enthusiasm) எனக்கூறுகிறார். மேனாட்டு உயர்காவியங்களான இலியது (Iliad), ஏனீத் (Aeeid), துறக்கநீக்கம்(Paradise Lost) போன்றவற்றை மட்டுமன்றி இந்திய மகாகாவியமான மகாபாரதத்தையும் - ஏன் - மூலநூலான வால்மீகி இராமாயணத்தையும் எல்லாவகையிலும் மிஞ்சி நிற்கிறது கம்பன் காவியம் எனப் பாராட்டுரை மொழிகிறார்.

கம்பகாப்பியத்தின் ஆறு காண்டங்களையும் காவிய இலக்கணத்தின் நிர்ணயிப்பதில் காவிய ஒருமை அல்லது கட்டமைப்பின் (Unity) இன்றியமையாமை குறித்தும் கூறுகிறார். மனைச் சிற்ப நூலில் எடுத்தாளப்படும் கட்டடக்கலை நுண்திறன் (Architectionics) என்ற சொல்லையே காவிய நிர்மாணத்துக்கும் மேநாட்டவர் பயன் படுத்துகின்றனர். இதையே தண்டியும் தனது காவிய தரிசனம் எனும் நூலில் பாவிகம் எனக் குறிப்பிடுகின்றார். ஓர் அரண்மனையை எழுப்பப் பல்வேறு வழிமுறைகள் உள்ளனவே போல் ஒரு காவியம் படைக்கவும் பல்வேறு வழிமுறைகள் உள்ளன. இத்தகு ரசனைச் சுவை கம்ப காவியத்தில் உயர்ந்தோங்கி நிற்கிறது என்பதைப் பல்வேறு சான்றுகளுடன் நிறுவுகிறார். கம்பராமாயணம் ஆறு காண்டங்களை நுணுகி ஆராய்ந்து ரசனைச் சுவையில் கம்பன் வால்மீகியை எங்ஙனம் மிஞ்சி நிற்கிறான் என்பதை எள்ளளவும் எள்முனையளவும் கருத்து பேதமின்றி விளக்குகிறார்.

"சீதை இலட்சுமணனைச் சீறி இராமனை நோக்கிப் போகச் செய்யும் கட்டத்தில் வால்மீகியின் வேலைப்பாட்டுக்கும் கம்பனுடைய கைநயத்துக்கும் உள்ள தாரதம்மியம் மற்றெங்கேயும் விட அதிகமாக விளங்குகிறது.

இனத்தால், மொழியால், காலத்தால், நாடு இவை யாவிலும் வேறுபட்டிருப்பினும் கிரேக்கத் தத்துவஞானி அரிஸ்டாட்டிலும் இந்தியத் தண்டியும் காப்பியங்களில் இடம் பெற வேண்டிய தலையாய கருத்தென ஒன்றையே வலியுறுத்துவது வியப்புக்குரிய செய்தியே.

காப்பிய ஒருமை அல்லது கட்டுக்கோப்பு என்பது உறுப்புக்குள் பல்வேறாயினும் அவை அனைத்தின் பணியும் ஒரே உடலின் நலம் மற்றும் வளர்ச்சி குறித்ததே போல், வேர், இலை, கிளை, மலர், காய், கனி என்ற பல்வேறு அங்கங்களும் சேர்ந்து ஒரு நல்மரத்தை உருவாக்குவது போல் காப்பியத்தில் எத்துணை நிகழ்வுகள் நிகழ்ந்திடினும் அவை அனைத்தும் காப்பியத்தின் மையக் கருவை நோக்கியே நகரவேண்டும் என்பதை இவ்விரு அறிஞர்களும் வலியுறுத்துகின்றனர்.

கம்பன் இதை எச்சூழலிலும் மறந்தானில்லை என்பதைத் தக்க சான்றுகளுடன் நிறுவும் ஐயரின் திறனாய்வுத் திறன் வியந்து போற்றத்தக்கதே. விஸ்வாமித்திரரின் தவத்தைக் கெடுக்கும் தாயாக இராமபாணம் பட்டு வீழ்வதுகூட இராவணனது எதிர்கால விதியை நினைவூட்டும் வகையில் அவனது வெற்றிக்கொடி தலை சாய்ந்து வீழ்ந்தது போல, தாடகை வீழ்த்தனளே எனக் கம்பர் வருணிக்கிறார். இராமனின் வனவாசமும் இந்திரனால் ஏற்கெனவே தீர்மானிக்கப்பட்டவையே எனப் புலம்பும்போதும் கம்பன் கதையின் மையக்கருவான ராவண வதத்தை மறக்காமலேயே கதையை நடத்திச் செல்கிறான் என்பது புலனாகும் என விளக்குகிறார். இதை போல இயற்கைக் கூறுகளைப் (Super Natural Elements) பயன்படுத்துவதிலும் தனக்கெனத் தனிவழி அமைத்துக் கொண்டான் கம்பன்.

வ.வே.சுப்பிரமணிய ஐயர் ஒப்பியல் ஆய்வு முறையில் கம்பன் படைத்த பாத்திரப் படைப்புக்களைத் தனித்தனியாக ஆராய்ந்து கூறியுள்ளார். இராமனை மேனாட்டுக் காவிய நாயகர்களுடன் ஒப்பிடும் ஐயர் பிற கதாபாத்திரங்களை வால்மீகி, துளசிதாசர், பாஸ்கர் போன்றோர் இயற்றிய இராமாயணங்களின் பாத்திரப் படைப்புக்களுடன் ஒப்பிடுகிறார்.

இராமகாதையின் நாயகனான இராமன் திருப்பாற்கடலில் பள்ளி கொள்ளும் நாராயணனின் மறுஉரு என்பதை இந்தியாவில் உள்ள ஒவ்வொரு பாமரனும் தெரிந்தே வைத்துள்ளதை எந்நிலையிலும் மறவாத கம்பன் அவன் தெய்வத்திரு அவதாரம் என்பதைப் பல்வேறிடங்களில் சிறப்பித்துக் கூறியுள்ளார். காதல் மனைவியின் பிரிவு, பாசமிகு தந்தையின் இழப்பு, பரதனின் பாசம், குகனின் நட்பு, இராமனை எவ்விதம் உணர்ச்சி வசப்படுத்தி அலைக்கழிக்கின்றன என்பதையும் சுட்டிக் காட்டுகின்றார்.

இலங்கையை அனுமன் எரிக்கும் சம்பவத்தில், கடல்தாவு படலத்தில் போல வால்மீகியின் வருணனை, கம்பனைவிட மிகவும் அழகாகச் சித்திரித்து காட்டியுள்ளார். அதேபோல, கடல் வருணனையோடு தொடங்கும் யுத்த காண்டத்தில் அவ்வருணனை மூன்றாம் தரத்ததே. "பைரனுடைய (Byrobn) கம்பீரமான கடல் வருணனையை நினைவுறுத்தக் கூடிய செய்யுள் ஒன்றேனும் அவ்விடங்களில் இல்லை என்பதையும் துணிந்து சுட்டிக் காட்டுகின்றார்.

முடிவுரை

கம்பனுக்குள்ள தனிச் சிறப்புக்களை எடுத்துக் காட்டிய வ.வே.சுப்பிர மணிய ஐயர், கம்பன் பாடிய 6 காண்டங்களையும் தனித் தனியே எடுத்து ஆராயும் ஐயரின் கட்டுரைகளும் இராமன் முதல் இராவணன் ஈடாக அவர் எடுத்தாண்ட பாத்திரப் படைப்புக்களும் தரமிக்கவை என்பதில் கூறுவதில் ஐயமில்லை எனலாம்.

ஜீவா கண்ட கம்பன்

முனைவர் **இரா.காமராசு**
உதவிப்பேராசிரியர், இலக்கியத்துறை,தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

பேராசான் ஜீவா தமிழ்ப் பண்பாட்டுப் பெருமிதத்தின் அடையாளம். அரசியல் களத்திலும், தொழிற்சங்கத் தளத்திலும் அவரின் அர்ப்பணிப்பு மிக்க உழைப்பு அளப்பெரியது. ஆனால் அவர் விரும்பி, தன் தோள்களில் சுமந்து நின்றது பண்பாட்டைத்தான். தமிழின், தமிழனின் ஆதிப்பண்பாட்டில் உழைப்புக்கும், உழைக்கும் மக்களுக்கும் பெரியப் பங்குண்டு என அவர் கருதினார். சமத்துவத்தையும் சமதர்மத்தையும் தமிழ் வேர்களிலே அவர் கண்டார். பேராசிரியர் கா. சிவத்தம்பி அவர்கள் கூறுவது போல ஜீவாவின் கம்யூனிசம் வள்ளுவனிடமிருந்தும் கம்பனிடமிருந்தும் எழுந்தது.

ஜீவா தன் காலத்தின் குரலாக விளங்கினார். தமிழ் இலக்கியத்தின் இரண்டாயிரம் ஆண்டுத் தொன்மையைச் சிறப்பை தம் பேச்சிலும் எழுத்திலும் பரப்புகை செய்தார். தொல்காப்பியர் தொடங்கி பிசிராந்தையார், இளம்பெருவழுதி, நக்கீரர், கபிலர், நல்லுருத்திரன், கோப்பெருஞ்சோழன், கணியன் பூங்குன்றனார், பக்குடுக்கை நன்கணியார், ஔவையார் முதலிய சங்கப்புலவர்களைக் கொண்டாடினார். வள்ளுவன், கம்பன், பாரதி ஆகியோரை தமிழின் விழுமிய மகாகவிகளாக உயர்த்திப் பிடித்தார். தமது காலத்தின் கலை இலக்கிய வாணர்களை வரிசைக்கட்டி வழிமொழிந்தார்.

ஜீவாவின் கலை இலக்கியப்பார்வை

ஜீவாவின் கலை இலக்கியம் குறித்த பார்வை தான் அவரை பண்பாட்டு முகாமின் முன்னோடியாக்கியது எனலாம். இலக்கியங்களை அதுவும் குறிப்பாக பண்டைய இலக்கியங்களை எப்படி அனுக வேண்டும் என வழிகாட்டுகிறார்.

"நாம் வாழும் இந்த ஜனயுகம் வாழ்க்கையின் பழைய பாதையில் சல்லி வேரோடு பக்கவேரோடு மட்டுமல்ல ஆணிவேரின் அடிமூலம் தொட்டு மாறுதலைக் கொண்டு வருகிற யுகம். உலகத்தை உண்மையில் மாற்றி அமைத்துக்கொண்டிருக்கிற மகத்தான சக்தி தன்னிடம் பொதிந்து கிடக்கிறது என்பதை சராசரி மனிதன் சொந்த

அனுபவத்தின் வழி தேர்ந்து தெளிகிறான். தெளிந்து தனது தரத்தின் உயர்வில் விழிப்படைகிறான். அவ்வாறு மனிதமதிப்பீடு வான்முகட்டை எட்டிப்பிடிக்கும் யுகம் இந்த யுகம்". (கலையும் இலக்கியமும் ப.16) என்று இந்த யுகத்தின் போக்கைப் படம் பிடித்துக் காட்டுகிறார் ஜீவா. மேலும் இலக்கியப் படைப்பு குறித்தும் எழுத்தாளர் குறித்தும் சரியான வழிகாட்டுதலைத் தருகின்றார்.

கம்பன் குறித்த தமிழக நிலை

ஜீவா வாழ்ந்த காலத்தில் கம்பராமாயணம் பற்றி இருவேறு பார்வைகள் இருந்தன. ஒருபுறம் ஊர்தோறும் கம்பன் கழகங்கள் அமைந்தன. கம்பரா மாயணச் சொற்பொழிவுகள், ஆய்வுகள், பட்டிமண்டபங்கள் பட்டித் தொட்டி எங்கும் பரவின. கம்பராமாயணத்தை இரசனை அடிப்படையில் விதந்தோதினர். இதில் ஒரு சாரார் வைணவ இலக்கியமாகவும், இராமனை அவதார புருராகவும் முன்நிறுத்தினார். இதற்கு மறுபுறம் திராவிட இயக்கமும் குறிப்பாக அண்ணாவும் கம்பராமாயணத்தில் கம்பரசத்தைக் கண்டார்கள், கம்பராமாயணத்தை இதிகாச மறுபிரதியாகவும், கம்பனை சிருங்கார ரசத்தை ஊட்டியவ னாகவும் கண்டனம் செய்தனர்.

"கம்பன் தமிழரின் கலையையும் நிலையையும் குலைக்கும் ஆரியத்தை எப்படியாவது புகுத்த வேண்டும் என்பதற்காக எத்தகைய ரசத்தைக் கவிதையிலே கூட்டியிருக்கிறார் என்பதைக் கண்டு சரியா, முறையா என்பது பற்றி ஓர் தீர்ப்பளியுங்கள்" (கம்பரசம், ப.8) என்று அண்ணா அறைகூவல் விடுத்தார்.

இதற்கு எதிர்நிலையில் ஜீவா கம்பனைப் பாரதி வழியில் மானிடனாகப் பார்த்தார். அதை ஒரு கலைப் படைப்பாகப் பார்த்தார். கம்பராமாயணத்தில் மிளிரும் சமுதாய நெறிகளை, மனித உறவு நெகிழ்வுகளை, அரசியல் அறத்தை, சமுதாய மேம்பாட்டுக் கருத்தியலை ஜீவா முன்னிலைப் படுத்தினார். கம்பனின் காவியச் சிறப்பை எடுத்துரைத்தார்.

கம்பன் விழாவில் ஜீவா

உலகில் உள்ள கம்பன் கழகங்களில் தாயிடம் காரைக்குடி கம்பன் கழகம். தன் வாழ்வெல்லாம் கம்பனைக் கொண்டாட மட்டுமே என வாழ்ந்த கம்பனடிப்பொடி அவர்கள் மிகுந்த கட்டுப்பாடும், நேர்த்தியும், ஒழுங்கும் கொண்ட விதத்தில் கம்பன் விழாக்களை நடத்தியவர். பொது வுடைமை மேடைகளில் சண்டமாருதமாக முழக்கமிடும் ஜீவா எப்படி,

எப்பொழுது காரைக்குடிக்கு வந்து சேர்ந்தார் என்பது வியப்பிற்குரியது. எழுத்தாளர் பொன்னீலன் இதனைச் சுவைபடக் கூறுவார்:

"ஜீவாவின் பேச்சுவன்மை அவருடைய இலக்கிய ஆழம், பண்டைய இலக்கியங்களை அணுகும் முறை ஆகியவை தமிழ் அறிஞர்களை வெகுவாகக் கவர்ந்தன. எனவே காரைக்குடியில் ஆண்டுதோறும் நடக்கும் கம்பன் விழாவில் ஜீவாவையும் அழைக்க வேண்டும் என்ற கோரிக்கை கம்பன் விழாக்குழுவில் எழுப்பப்பட்டது. ஜீவா ஒரு கம்யூனிஸ்ட். எதைப் பேசினாலும் அதைப் பொதுவுடைமையோடு இணைத்திடுவார். எனவே அவரை அழைக்கக் கூடாது என ஒரு சாரார் எதிர்த்தனர். ஆனால் கம்பர் அடிப்பொடி சா. கணேசனோ ஜீவா இலக்கிய உணர்வுடன் தான் பேசுவார். அதற்கு நான் பொறுப்பு என்று வற்புறுத்தி ஜீவாவை அழைத்தார். பேராசிரியர் வையாபுரிப் பிள்ளை தலைமையில் ஜீவா பேசினார். அவருக்கு ஒதுக்கப்பட்ட நேரம் அரைமணி. ஆனால் பெரிதினும் பெரிதே விரும்பும் ஜீவா நேரம் தாண்டி பேசிக் கொண்டிருந்தார். தலைவர் பேச்சை நிறுத்துமாறு மணி அடித்தார். ஆனால் ஜீவாவோ என் தலைப்பு இராவணன் ஒரு சத்தியாக்கிரகி. அந்த அடிப்படையில் நானும் சத்தியாக்கிரகம் பண்ணிப் பேசுவேன் என்று மிக அருமையான சொற்பொழிவை நிகழ்த்தி, தன் காலம் மட்டும் தான் இல்லாமல் கம்பன் விழா இல்லை என்ற நிலையை ஏற்படுத்தி விட்டார்." (ஜீவா என்றொரு மானுடன், ப. 296)

கம்பன் கண்ட தமிழகம்

காரைக்குடி கம்பன் விழாவில் 1954 மார்ச் 19ஆம் நாள் ஜீவா 'கம்பன் கண்ட தமிழகம்' என்ற தலைப்பில் பேசினார். இது ஜீவா கண்ட கம்பனை நமக்கு இனம் காட்டும். அதில்,

"சாதாரணமாக, இம்மாதிரி விழாக்களில் பங்கு கொள்வதைப் பார்க்க முடியாத என் போன்ற அரசியல்வாதி ண் அதிலும் தீவிர அரசியல்வாதி ண் ஒரு கம்யூனிஸ்ட்டு இந்த விழாவில் கலந்து கொள்ள வாய்ப்பு கிடைத்திருக்கிறது. அதுதான் தமிழின் பெருமை, தமிழ் மேடையின் சிறப்பு என்பதை நாம் உணர வேண்டும்" (ப. ஜீவானந்தம் ஆக்கங்கள், ப. 177) என்று கூறி கம்பனின் சிறப்பை எடுத்துரைக்கிறார்.

கம்பன் விழா நடத்தியப் பாங்கை விவரித்த ஜீவா, தனது சொற்பொழிவில் "கம்பன் ஒரு சிறந்த யதார்த்தவாதி" என்றார். மேலும் அவன் வாழ்ந்த

காலத் தமிழகத்தின் யதார்த்த நிலைக்கொப்ப அன்றையத் தமிழ் மக்களின் உணர்ச்சித் தரத்திற்கேற்ப தமிழர் பண்பாட்டிற்கு இசைய இராமகாதையின் உருவம், உள்ளடக்கம் இரண்டையும் சமைத்தான். "தெய்வமாக்கவி தேவபாஷையில் செய்த கதையை தமிழ்ப் பாவினால் உணர்த்தினேன் என்று கம்பன் அவையடக்கம் கருதி கூறியபோதிலும், வால்மீகி இராமாயணத்திலிருந்து, உருவத்திலும் உள்ளடக்கத்திலும் எத்தனை எத்தனையோ இடங்களில் கம்பன் மாறுபட்டிருக்கிறான்" (அதே நூல், ப. 178) என்றும் கூறி தொடர்கிறார்.

கம்பனின் பெருங்காப்பியம் உலக இலக்கியங்களின் முதல் வரிசையில் வைக்கத் தக்கது.. கம்பன், வடமொழி இலக்கியத்திலிருந்து சிறந்த அம்சங்களை எடுத்து, தமிழிலக்கியத்தைச் செழிப்படையச் செய்தான். தமிழில் சிறந்த பேரிலக்கியத்தைப் படைத்ததன் மூலம், உலக இலக்கியத்தையும் செழிப்படையச் செய்திருக்கிறான். இத்தகைய பெருங்காப்பியத்தைப் படைத்ததன் மூலம் ஒரு மனிதன் நூறு தலைமுறைகளில் கூடச் சாதிக்க முடியாத அரிய சாதனையை, கம்பன் ஒரே தலைமுறையில் சாதித்துவிட்டான்.

இத்தகைய ஒரு வரையறையை செய்வதற்கு கம்பராமாயணத்தில் ஜீவா அப்படி எதைக் கண்டார். ஜீவா பேசுகிறார்:

கம்பன் கண்ட தமிழகத்திற்கு, கம்பராமாயணத்தில் அகச்சான்று இருக்கிறதா? இருக்கிறது. அதில் கம்பன் தமிழகத்தைப் பற்றிய தனது கருத்துகளை, லட்சியங்களைக் கூறியிருக்கிறானா? இல்லை. அவற்றைப் பற்றி எங்கே கூறியிருக்கிறான் என்பதை பின்னர் கவனிப்போம். முதன்முதலில் கம்பன் தமிழ்நாட்டைப் பற்றி நேரடியாகக் கூறும் பகுதிகளைக் கவனிக்கலாம்.

வாலிவதம் முடிந்த பின்னர், சுக்ரீவன் தனது படைகளை சீதையைத் தேடும் பொருட்டு தென்திசைக்கனுப்புகிறான். அவர்களுக்கு அவர்கள் செல்ல வேண்டிய மார்க்கத்தைப் பற்றி கூறுகிறான். முதலில் விந்திய மலையை அடையுங்கள், பின்னர் நர்மதை நதியை அடையுங்கள், அப்பால் ஏமகூட பர்வதத்தை அடையுங்கள், பின்னர் சூரியகாந்த, சந்திரகாந்த மலைகளைத் தாண்டி, பாலைவனங்களையும் சுனைகளையும் கடந்து, அங்கு செல்லுங்கள், இங்கு செல்லுங்கள் என்கிறான். எல்லாவற்றையும் முறையாகச் சொல்ல நேரமில்லை. கடைசியில் திருவேங்கடத்திற்கும் அதற்குத் தெற்கேயும் செல்லுங்கள் என்கிறான் சுக்ரீவன்.

கம்பனின் சமுதாய நோக்கு

ஜீவா கம்பனின் சமுதாய இயல்புகளை அடுக்கிச் செல்கிறார். "கதைக்கு நேர் தொடர்பில்லாத பாலகாண்டத்தில், ஆற்றுப்படலம், நாட்டுப்படலம், நகரப்படலம், அரசியல் படலங்களில் கோசல நாட்டைப் பற்றிண் ராமராஜ்ஜியத்தைப் பற்றி விரிவான அளவில் அற்புதமான சொல்லோவியங்கள் தீட்டியிருக்கிறான். கம்பன் தான் கனவு கண்ட தமிழ்நாட்டைத்தான் கோசல நாடாகப் பாடியிருக்கிறான்.

கம்பன் கற்பித்துச் சித்தரித்த கோசல நாடு எது? அவன் கனவு கண்ட பொன்னான தமிழகம் எது? என்பதைப் பார்ப்போம்.

"ஆனால், அதைப் பார்க்குமுன் கம்பன் வாழ்ந்த காலம் கம்பன் வாழந்த தமிழகம், கம்பனுடைய வாழ்க்கை ஆகியவற்றைப் பற்றி முதன் முதலில் சிறிது நாம் கவனத்திற்குக் கொண்டுவர வேண்டியது அவசியமென்று கருதுகிறேன்."

"ஏறக்குறைய 800 ஆண்டுகளுக்கு முன் கம்பன் வாழ்ந்தான். கல்வி, கலைச்செல்வங்களில் நிறைகுடமாக விளங்கிய கம்பனுக்கு, சங்க காலத் தமிழர் வாழ்வின் சீரும் சிறப்பும் நன்றாகத் தெரியும். ......நூற்றுக்கணக்கான மதிநலமிக்க சான்றோர்களின் வாழ்க்கைக் குறிக்கோள், அவர்களுடைய புனிதமான வாழ்க்கையின் தரம், திறன், மேம்பாடு ஆகியவற்றைப் பற்றி கம்பனுக்குத் தெளிவாகத் தெரியும்."

"... முப்பெரும் வேந்தர்தம் பேரரசின் மாட்சியை கம்பனுக்கு நன்றாகத் தெரியும். அந்தக் காலத்தில் நிலவிய தமிழ் மக்களின் சமயமும் தத்துவஞானமும் நாகரிகச் சிறப்பும் பின்னர் இங்கு நுழைந்த வைதீக மதமும் அதன் பின்விளைவுகளும் கம்பனுக்குத் தெரியும்."

சோழ மன்னர் கலிங்கத்தில் பரணி பாடியதும் தமிழரசர்கள் போர்வெறி கொண்டு கொலைக் கூத்துக்கள் நிகழ்த்தியதும் அவனுக்குத் தெரியும். சங்ககால மூவேந்தர்களுக்குப் பின்னால், பல்லவ, சாளுக்கிய, சோழ மன்னர்கள் பற்பல கோயில்களை நாடு முழுவதும் எழுப்பி, பலப்பல நுண்கலைகள் தழைக்கச் செய்த சிறப்புகளும் கம்பனுக்குத் தெரியும். 12 ஆம் நூற்றாண்டில் சமய உணர்ச்சி, சாஸ்திர அறிவு, காவியக் கலை அறிவு முதலியன மேம்பாடைந்திருந்தன. அந்தக் காலம் கம்பன் காலம் என்பதை நாம் கவனிக்க வேண்டும். "...அவன்தன் காலத்து பெருவாரியான மக்களான உழவர் பெருமக்களையே ஏற்றிப் போற்றிப் பாடியிருக்கிறான்" (அதே நூல், பக் 182-188)

கம்பனின் தனிச்சிறப்பு

அன்றையச் சூழலில் தமிழ்நாட்டில் நிலவிய கம்பன் குறித்த சித்திரத்தை மாற்றுகிறார்:

"இச்சகம் பேசாமல், குறித்த சித்திரத்தை உண்மைக்காகப் போராடியதால் கம்பன் பல இன்னல்களை அனுபவித்திருக்கிறான் என்று கர்ண பரம்பரைச் செய்தி.

மகாகவியான கம்பன் கூலிக்காக மண்சுவர் எழுப்பும் வேலை செய்தான் என்றும் ஒரு தனிப்பாடல் தெரிவிக்கிறது. அவன் நாடோடியாய்த் திரிந்திருக்கிறான் என்றும், இறுதியில் ஒரு அரசனால் துர்மரணம் அடைந்தானென்றும் கூட சரித்திரம் சொல்கிறது.

கம்பன் தனது இராமாயணத்தைத் தில்லையிலும் திருவரங்கத்திலும் அரங்கேற்ற விரும்பி முனைந்தான். தில்லை வாழ் தீட்சதர்களிடம் சென்றான். காத்து நின்றான். தீட்சதர்கள் கம்பன் காவியத்தை, வைணவ காவியமாகக் கருதி, அரங்கேற்ற அனுமதி மறுத்தனர். ஸ்ரீரங்கத்து அய்யங்காரர்களிடம் சென்றான், தனது காவியத்தை அரங்கேற்ற, அங்கும் கம்பன் சிவனையும் பரம்பொருளாகப் பாடியிருக்கிறான் என்ற ஆட்சேபத்தால் கம்பனுடைய இராமகதையை அரங்கேற்ற அனுமதிக்கவில்லை.

இறுதியாக மக்கள் கவியான கம்பனின் இராமகதை, திருவெண்ணெய் நல்லூரில், மக்கள் மன்றத்தில் கம்பன் காவியம் அரங்கேற்றப்பட்டது. கம்பனுக்கு கவிச்சக்ரவர்த்திப் பட்டம் சூட்டியதும் மக்கள்; மன்னனல்ல" (அதே நூல், பக், 184,185)

ஜீவா தனது உரையை மேலும் தொடர்கிறார். அதில் கோசலத்தைக் கம்பன் கற்பனை செய்த திறத்தை அறிவியல் பார்வையோடு விமர்சனம் செய்கிறார்.

கம்பன் உருவாக்கிய நாடும் சமுதாயமும்

"இப்படியயல்லாம் கோசல நாட்டைப் பற்றி கம்பனுடைய கற்பனையில் கருத்துக்கள் பட்டுத் தெறித்தன. யதார்த்தமாகவே கம்பன் அன்று வாழ்ந்த தமிழகம் இவ்வாறு இருந்ததா இல்லை. இந்தக் கருத்துக்கள் கம்பனுடைய சிறந்த கற்பனைக் கருத்துக்கள். இந்த உண்மையை விளக்கக் கம்பனிலிருந்தே சில பாடல்களை உங்கள் கவனத்திற்கு

கொண்டு வர விரும்புகிறேன் என்று பேசிய ஜீவா, நாட்டுப் படலத்தில் வரும் ஒரு பாடலை எடுத்துக்காட்டாகத் தருகிறார்.

எறிதரு மரீயின் சும்மைஎடுத்து வான் இட்ட போர்கள்
குறிகளும் போர்த்திக் கொல்வார் கொன்ற நெற்குவைகள் செய்வார்
வறியவர்க்கு உதவி மிக்க விருந்துண மனையில் உய்ப்பான்
நெறிகளும் புதைய பண்டி நிறைத்துமண் நெளிய உளர்வார்" (பக்.186)

எல்லாரும் எல்லாம் பெருஞ்செல்வமும் எய்தலாலே இல்லாரும் இல்லை, உடையாரும் இல்லை என்று காட்டுகிறான். இது ஒரு முரண்பாடு. கம்பன் கண்ட லட்சிய நாடும் நகரமும் கற்பனை, யதார்த்தமல்ல, ஆகவே இந்த முரண்பாடுகளைப் பார்க்கிறோம். 800 ஆண்டுகளுக்கு முன்பே இன்றைய புதிய சமுதாயக் கருத்துக்களுக்கேற்ப, கற்பனைக் கருத்துக்களை அள்ளி வீசினானே அதுதான் கம்பனுக்கு என்றும் பெருமையேயன்றி, அவன் முன்னுக்குப் பின் முரணாகக் கூறி விட்டான் என்று சிறுமையாகாது.

காலத்தின் வரையறைகள் எல்லோரையும் பாதிக்கத்தான் செய்யும். மனித வாழ்விலும், மனிதனிடத்திலும் முரண்பாடுகள் எழத்தான் செய்யும். அதே நிற்கிற தூண்தான் முரண்பாடில்லாது நின்றபடி நிற்கும்" (அதே நூல், பக் 187)

சாதியைச் சாடிய கம்பன், வருணத்தைச் சாடிய கம்பன் போரை வெறுத்த கம்பன், சகோதர வாஞ்சையின் மேன்மையைக் குறித்த கம்பனின் பாடலையும் சுட்டுகிறார். விபீணனிடம் கம்பனின் இராமன் கூறுகிறான்;

குகனொடும் ஐவரானோம் முன்பு; பின்குன்று சூழ்வான்
மகனொடும் அறுவரானோம்; எம்முளை அன்பின் வந்த
அகனமர் காதல் அய்ய நின்னொடும் எழுவரானோம்;
புகலரும் கானம் தந்து புதல்வரால் பொலிந்தான் உந்தை

இப்பாடலின் பொருளை ஜீவா பின்வருமாறு விளக்குகிறார்.

குகனையும், குரங்கையும், அரக்கனையும் தனது சகோதரர்களாகக் கொள்கிறான் இராமன், விபீணனிடத்தில் சகோதர அன்போடு நின்னொடும் எழுவரானோம் என்று இதயத்தை தொட்டுக் கூறுகிறான். சகோதர அன்பின் ஆழத்தை இன்னும் பெருக்கி, என்னைக் காட்டுக்கு அனுப்பியதன் மூலம், நாலு புதல்வருக்குப்பதில் ஏழு புதல்வர்களைப்

பெற்றுச் சிறப்புற்றான் உனது தந்தையாகிய தசரதன் என்று விபீ-ணனிடம் இராமன் கூறுகிறான். இராமகாதை முழுவதிலும் இந்த சகோதர வாஞ்சையை, ஒப்பற்ற பாத்திரங்களில் வடித்தெடுத்து இயங்குகிறானாம் கம்பன் (அதே நூல், பக் 190-191). இப்படியயல்லாம் கம்பராமாயணத்தில் வரும் இனிய காட்சிகளையயல்லாம் ஜீவா விவரித்தார். தனது உரையை முடிக்கும் பொழுது ஜீவா வெளியிட்ட நிர்ணயிப்புகள் நாம் கவனத்தில் கொள்ளத்தக்கவையாக விளங்குகின்றன.

ஜீவாவின் கம்பன்

ஜீவா கம்பனை மகாகவியாக மட்டுமல்ல. மானிடனாகவும் பார்க்கிறார். வரலாற்றியல், இயங்கியல் நோக்கில் கம்பனை வரையறை செய்கிறார். மரபு வழிபட்ட பார்வை, குறுகிய இன வாதப்பார்வை ஆகிய இரண்டையும் விடுத்து இயல்புப் பார்வையை ஜீவா கைக்கொண்டார். ஜீவா கண்ட கம்பன் தமிழ்ச் சமூகத்தின் பண்பாட்டு முன்னோடி என்றால் மிகையில்லை.

கம்பனின் அரசியல் கலை

இரா.சுப்பிரமணியன்
ஈரோடு

சமுதாயத்தின் ஒட்டுமொத்த நடவடிக்கையும், அரசியலில் அடங்கி நிற்கிறது. எனவே அரசியலில் அறம் மிகவும் அடிப்படையானது. கம்பன் பல்வேறு நிலைகளில் அரசியல் அறத்தினைத் தன் காப்பியத்தில் படைத்துள்ளான். அரசியல் என்று சொல்லும்போது அது நாட்டை ஆளக்கூடிய அரசனையும், அரசனுக்கு ஆலோசனை கூறும் அமைச்சர்களையும் நாட்டிலே வாழும் மக்களையும் ஒருங்கே இணைக்கக்கூடியது. வறுமையில்லாத பகையில்லாத ஒரு நாட்டை அரசியலின் வழியே உருவாக்க நினைத்த கம்பர்,

கள்வர் இலாமைப் பொருள் காவலும் இல்லை யாதும்
கொள்வர் இலாமைக் கொடுப்பார்களும் இல்லை மாதோ (165)

என்றும்,

எல்லாரும் எல்லாப் பெருஞ்செல்வமும் எய்தலாலே
இல்லாரும் இல்லை, உடையார்களும் இல்லை யாதோ (166

என்று கூறுவதிலிருந்து சிறந்த அரசியலை உருவாக்கிட முனைந்துள்ள பாங்கு பாராட்டுதற்குரியது. இத்தகைய அரசியலையும் அதுபற்றிச் செல்லக்கூடிய அறநெறியையும் எக்காலத்தவரும் பாராட்டும் விதமாக கம்பன் படைத்துள்ளான்.

அரசியல் அறம்

கம்பராமாயணத்தில் தயரதனின் மகனான இராமபிரானைக் காவியத் தலைவனாகக் கொண்டும், இலங்கை வேந்தனான இராவணனை எதிர் நிலைத் தலைவனாகக் கொண்டும் இயங்குகின்ற இக்காப்பியத்தில் அரசியல் குறித்த செய்திகளும், அரசியல் ஆலோசனைகளும், அமைச்சர்களின் பங்களிப்பும் பரவலாக இடம் பெற்றுள்ளன. ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர்த் தோன்றிய இராமகாதையில் மக்களாட்சி தழைந்தோங்கும் இக்காலகட்டத்திற்கும் ஏற்ற அரசியல் அறங்களைக் கம்பர் வழங்கியுள்ளார்.

அரசியல் அறம் பற்றி தயரதன் தன் கருத்தை வெளியிடும்போது

'சூரிய குலத்தல் தோன்றிய என் முன்னோர்களான சிறந்த அரசர்களைப் போலவே, நானும் ஒழுக்கம் தவறாது, உங்களின் சிறந்த துணையோடு அறுபதினாயிரம் ஆண்டுகள் இந்த அரச பாரத்தைச் சுமந்து ஆட்சி செய்து வந்தேன்'. நான் வெகுநாளாக விருப்பத்தோடு எதிர்நோக்கிய மூப்பு என்னும் விடுதலைக் காலத்தை இப்போது கண்டிருக்கிறேன். நான் தாங்கிவந்து பொறுத்தற்குரிய இந்த அரசாட்சி என்னும் பாரத்தை இனிமேல் சிறிது காலமும் சுமக்கும் வல்லமை அற்றவன் ஆகிவிட்டேன், என்று தயரதன் கூற்றாக அரசியல் அறத்தை உணர்த்துகின்றான், கம்பன்.

அரசியல் உலகில் அரசன்

அரசனைத் தெய்வத்தின் பிரதிநிதியாக, அல்லது தெய்வாம்சம் பொருந்தியவனாக எண்ணும் வழக்கம் அரசியல் உலகில், ஒரு சாராரிடையே முன்னாளில் இருந்து வந்தது. ஆனால் இந்தக் கொள்கை தமிழகத்தில் எந்தக் காலத்திலுமே ஏற்றுக் கொள்ளப்படவில்லை.

முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
இறையென்று வைக்கப் படும் (388)

என்ற குறளில், 'மன்னன் கடவுளுக்குச் சமம்' என்ற கொள்கைக்குத் திருத்தம் கண்டார் திருவள்ளுவர். பொதுவாக, மன்னனைத் தெய்வமாக அல்லது தெய்வாம்சம் பொருந்தியவனாகக் கருதும் வழக்கம் சங்ககாலத் தமிழரிடையே இருந்ததில்லை. ஆயினும் சங்கப்பிற்காலம் தொடங்கிக் கம்பர் காலம்வரை வாழ்ந்துவந்த தமிழ்மக்கள் இராமனைத் திருமாலின் அவதாரமாகவே நம்பினர். சிலப்பதிகாரம் போன்ற இலக்கியங்களில் இதற்குச் சான்று உண்டு.

ஆகவே, கம்பரும் இராமனைத் தெய்வமாக-திருமாலாகக் கருதி வாழ்த்துக் கூறினார். மன்னனை உடலாகவும், மக்களை உயிராகவும் கூறினார் சீத்தலைச் சாத்தனார். தயரதனுக்கு சிறப்பு கூறிய கம்பரும் 'உயிரெல்லாம் உறைவதோர் உடம்பும் ஆயினான்' என்ற வரியில் கூலவாணிகன் சாத்தனாரின் கொள்கையையே உறுதி செய்தார். மக்கள் உயிருக்குச் சமம், மந்திரி சபை உணர்வுக்குச் நிகர், மன்னனே அந்த உயிரும் உணர்வும் குடிபுகுந்திருக்கும் உடம்பை ஒத்தவன். இது கம்பரின் அரசியல் தத்துவம்.

அரசியல் நெறியும், பண்பும்

இராமாயணத்தில் ஆட்சி நிர்வாகத்தைவிட அரசியல் நெறிக்கே

முதலிடம் தரப்படுகின்றது. அரசர் முதலியோரின் உரிமைகளைக் கூறாமல் கடமைகளே வற்புறுத்தப்படுகின்றன. கடமையைச் செய்யாத ஒருவனுக்கு, உயர் வாழவே உரிமையில்லை என்றால் பிற உரிமைகள் எங்ஙனம் பிறக்கும்?.

கம்பராமாயணத்தில் வரும் தயரதன், இந்நாளில் அதிகாரப்பதவிகளில் இருக்கும் 'அரசியல் கிழவர்களு'க்கு நல்ல வழிகாட்டியாக விளங்குகின்றான். வழக்கம்போல் ஒருநாள் தசரதன் கண்ணாடியில் தனது முகத்தைக் கண்டான். அப்பொழுது காதோரத்தில் நரைத்திருந்த ஒரு மயிரையும் கண்டுவிட்டான். இதனைத் "தீங்கிழை இராவணன் செய்த தீமைதான், ஆங்கொரு நரையதாய் அணுகிற்று" என்றார் கம்பர். தன் நரை மயிரைக் கண்டதுமே தனக்கு மூப்பு வந்துவிட்டதாக உணர்ந்து, தன் மைந்தர்களில் மூத்தவனான இராமனிடம் அரசை ஒப்புவித்துத் தான் தவம்புரிய முடிவு செய்கிறான் தயரதன். இந்தக் கடமைக் குணம் தன்னிடமேயன்றி கோசல நாட்டின் அரச மரபிற்கே உண்டென்கிறான் தயரதன்.

தயரசன் சுமந்த அரசுப் பொறுப்பு, மூத்தவன் என்ற காரணத்தால் இராமனுக்குத்தான் உரியது. ஆனால், இராமன் அரசு பீடத்திற்காக ஏங்கி நிற்கவில்லை. அரசுப் பொறுப்பை ஏற்றுக்கொள்ளும்படி தயரதன் மைந்தனிடம் மன்றாடுகின்றான். தந்தையினுடைய வேண்டுகோளை ஏற்றுக்கொண்டதாக மைந்தன் இராமன் ஒரு வார்த்தைகூடக் கூறவில்லை என்றாலும் மௌனத்தின் மூலமாகத் தன் வேண்டுகோளை மைந்தன் ஏற்றுக் கொண்டதாகக் தயரதன் கருதுகின்றான். தன் கடமை உணர்வால் இராமன் அதை ஏற்கின்றான்.

அரசியல் பதவி வருவதும் போதுவதும் இயல்பு. இராமனுக்குத் தந்தையால் கிடைத்த அரசியற்பொறுப்பு சிற்றன்னையாகிய கைகே-யியால் பறிக்கப்படுகிறது. "தம்பி பரதன் நாடாளவும், நீ காடாளவும் வேண்டும், இது உன் தந்தையின் கட்டளை" என்று கைகேயி கூறிய பொழுது இராமன் அவள்மீது ஆத்திரப்படவில்லை. "மன்னவன் பணியென்றாகின் நும்பணி மறுப்பனோயான்" என்று பண்புரை பகர்கின்றான். அப்பொழுது "என் பின்னவன் பெற்ற செல்வம் அடியேனென் பெற்றதன்றோ?" என்று மனமாரக் கூறுகின்றான். அப்பொழுது அவன் முகம் அன்று அலர்ந்த செந்தாமரையினை வென்றதுபோல் இருந்தது என்று கம்பர் ஓவியம் எழுதிக் காட்டுகின்றார்.

ஆம்! அரச பதவி மேவியபோதும் இராமன் களிப்படையவில்லை. சிற்றன்னை அதைப் பறித்தபோதும் அவன் கவலைப்படவில்லை. அதுவன்றோ அரசியற்பண்பு!

அரசியல் காட்சிகள்

"அன்பில் ஈன்று வளர்த்த தாய்க்கு இணையானவன். இம்மைப்பயனில் முற்பிறப்பில் செய்த தவத்திற்கு நிகரானவன். மறுமைக்கு நற்கதி தருவதில் மகனுக்குச் சமமானவன், நோயாளிக்கு மருந்துக்குச் சமமானவன் சான்றோர்க்கு அறிவாக இருந்து உதவிபுரிபவன்" என்று தயரதனை அறிமுகப்படுத்துகின்றான் கம்பன். தயரதனுடைய நாட்டில் பருவமழை தவறாது பெய்வதோடு, அளவறிந்து பெய்கின்றதாம். அதனால் ஆற்று வெள்ளம் வரம்பு கடவாமல் ஒழுங்காகச் செல்கின்றதாம். பறவைகளும், விலங்குகளும் இடம் பெயர்ந்து திரிந்து மக்களுக்கு இன்னல் தருவதில்லையாம். இருமனப்பெண்டிர் ஆகிய வேசையரும் ஒரு மனம் கொண்டு ஆயுள் முழுவதும் ஒருவனையே நேசித்து வாழ்கின்றார்களாம். இத்தனையும் கொடுமனக் கூனிகள், அரசியல் அரங்கில் தோன்றுவதற்கு முன்புள்ள சாட்சிகள்.

தயரதன் செய்த முடிவும், ஆராய்ச்சியும்

இராமனைச் சக்கரவர்த்தியாக்கி, தான் தவக்கோலம் கொள்ள முடிவு செய்தான் தயரதன், உடன் அரசவையைக் கூட்டி, சூரிய குலத்தில் தோன்றிய என் முன்னோராகிய மன்னர்களின் பெருமைகளுக்கு இழுக்குஇன்றி, ஒருமுறை திறம்பல்இன்றி, நான் இதுவரை அறுபதினாயிரம் ஆண்டுகள் ஆட்சி செய்தேன். அதற்குக் காரணம் உங்கள் மதிநுட்பமும், மாட்சியும்தான்" என்கிறான். ஆண்மையிற் சிறந்த என் மகன் இராமன், சீதையாகிய திருமகளை மணந்த காட்சியைக் கண்ணாரக் கண்டேன். இனி அவன் நிலமகளை மணந்து கொள்ளும் காட்சியையும் கண்டு மகிழ விரும்புகின்றேன்" என்கின்றான். கோசலநாடு உட்பகை, புறப்பகை இன்றி அமைதியாக வாழ்கின்றது என்றாலும், தன்னுடைய சொந்தப் பகைவர்களை அற்றை நாள்வரை தயரதன் வென்றானில்லை. யார் அந்தப் பகைவர்கள்? காமம், வெகுளி மயக்கம் என்ற தீயோர்களே ஆவார்கள். அவர்கள் உட்பகைவர்கள், அவர்களையும் வெல்வதென்ற முடிவுக்கு வந்துவிட்டான் தயரதன். காமமாதி தீமைகளை வென்றவர்களே பேரின்பத்தைப் பெறமுடியும் என்பது தயரதனின் நினைப்பு.

சிற்றரசர்களும் சாமான்ய மக்களும்

சிற்றரசர்களுக்கெல்லாம் ஒரே ஆனந்தம். உவகையால் அவர்களுடைய உடல்கள் மயிர்க் கூச்செறிந்தன. அயோத்தியிலுள்ள சமான்ய மக்களோ, முடிசூட்டிக்கொள்ள இருப்பவன் இராமன் என்றுகூட எண்ணாமல் தாமே அயோத்திக்கு மன்னர்களாக வரப்போவதாக எண்ணி மகிழ்ந்தார்களாம். இவ்வாறு அயோத்தி மக்கள் இராமஆட்சியை வரவேற்ற காட்சியைக் காட்டுகின்றார் கம்பர். சூரியகுல அரசர்களிடத்தில் உள்ள அரசியல் நெறியும், அரசியல் அறங்களும் உலகில் ஒவ்வொரு அரசனும் கடைபிடிக்க வேண்டிய அறங்களாக கம்பர் தம் காப்பியத்தில் அரசியல் சூழலை விவரித்துச் செல்கிறார்.

முடிவுரை

கம்பர் தம்முடைய நூலில் எப்படி இலக்கியப் புரட்சி செய்து, புதுக் கருத்துக்களைத் தெரிவித்தாரோ அப்படியே அரசியல் நெறியிலும் பெரிய புரட்சிக் கருத்துக்களை வெளியிட்டு இருக்கிறார். வறுமை-யில்லாத, பகையில்லாத ஒரு நாட்டை அரசியலின் வழியே உருவாக்க நினைத்தார் கம்பர். தயரதனின் மகனான இராமபிரானைக் காவியத் தலைவனாகக் கொண்டும், இலங்கை வேந்தனான இராவணனை எதிர்நிலைத் தலைவனாகக் கொண்டும் இலங்குகின்ற இக்காப்பியத்தில் அரசியல் குறித்த செய்திகளும், அரசியல் ஆலோசனைகளும் அமைச்சர்களின் பங்களிப்பும் பரவலாக இடம் பெற்றுள்ளன.

கம்பன் பார்வையில் அரசு

மு. கவிதா
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை, அவிநாசிலிங்கம் பல்கலைக்கழகம், கோவை.

முன்னுரை

மக்களுக்கும் மன்னனுக்கும் உள்ள தொடர்பை மக்களாட்சி முறையாகக் கொண்டு அரசியல் வகுத்தவர் கம்பர். வள்ளுவரின் கருத்துக்கு ஏற்பப் பல்வேறு இடங்களில் அரசனையும், அமைச்சனையும் வகுத்துக் காட்டுகின்றார். முன்னோர்களின் அரசியல் கருத்துக்களைக் கசடறக் கற்றுத்தேர்ந்து தெளிந்த கம்பர் கொள்வன கொண்டும், விடுப்பன விடுத்தும், புதியன புனைத்தும் ஆட்சிக் கலையில் புரட்சி செய்வதை இக்கட்டுரை எடுத்துரைக்கின்றது.

மன்னன் பற்றிய கருத்து

ஒரு நாட்டுக்கு உயிர் மூச்சாய் இருப்பது நெல்லும் நீரும் அன்று, மன்னனுடைய செங்கோல் முறையே என்பது புறநானூறு சொல்லும் செய்தி. இதனை,

நெல்லும் உயிர் அன்றே நீரும் உயிர் அன்றே
மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம் (புறம் 186)

என்னும் பாடல் வரிகளால் அறியமுடிகின்றது. சிலப்பதிகாரம் இதனை வலியுறுத்தி வேறு கருத்தையும் பேசுகின்றது.

மழைவளம் கரப்பின் வான்பேர் அச்சம்
பிழைஉயிர் எய்தின் பெரும்பேர் அச்சம்
குடிபுர உண்டும் கொடுங்கோல் அஞ்சி
மன்பதை காக்கும் நன்குடிப் பிறத்தல்
துன்பம் அல்லது தொழுதகவு இல்என (சிலம்பு - காட்சி 100- 104)

இதனைப் போலவே 12-ஆம் நூற்றாண்டில் தோன்றிய பெரிய புராணம் அரசன் இல்லாத நாடு உயிர் இல்லாத உடல் போன்றது என்கிறது.

மன்னரை இன்றி வைகும் மண்ணுலகு எண்ணுங்காலை
மன்னுயிர் இன்றி வைகும் யாக்கையை ஒக்கும்

என்கிறது பெரியபுராணம்.

சங்க காலம் முதல் 12-ஆம் நூற்றாண்டு வரை நிலைபெற்று இருந்த கருத்தை மாற்றிக் கூற விரும்புகிறார் கம்பர். தன்னாட்டில் வாழும் மக்கள் முதல் எந்த உயிராக இருப்பினும் அவற்றின் விருப்பத்தை நிறைவேற்றும் ஓர் உடம்பே மன்னன் என்பதை,

வயிரவான் பூண் அணி மடங்கல் மொய்ம்பினான்
உயிர் எலாம் தன் உயிர் ஒப்ப ஓம்பலால்
செயிர் இலா உலகினில் சென்று நின்றுவாழ்
உயிரெலாம் உரைவது ஓர் உடம்பும் ஆயினான் (177)

என்று காட்டுகிறார் கம்பர். மன்னனின் உயிர் நாட்டு மக்களின் உயிர், நாட்டு மக்களின் நலம் மன்னம் நலம். மக்களின் வாட்டம் மன்னனின் வாட்டம் எனப் பொருள் தந்து கம்பர் அரச இலக்கணத்தை அறிவிக்கின்றார்.

உடம்பாகிய மன்னன் உயிராகிய மக்களை எவ்வாறு கருதினான் அவ்வாறு நடத்தினான் என்பதை,

வையகம் முழுவதும் வறிஞன் ஓம்பும் ஓர்
செய் எனக் காத்து இனிது அரசு செய்கிறான் (கம்ப-84)

அமைச்சர்கள் பற்றிய கருத்து

கம்பன் கண்ட அமைச்சர்கள் நல்ல குடியில் பிறந்து பல கலைகளையும் கற்றுத் தேர்ந்து கேள்விஞானம் மிகுதியும் பெற்று அவற்றின் பயனை அடைந்தவர்கள் நடப்பதைக் கொண்டே இனி என்ன நடக்கும் என்பதை உணரும் ஆற்றல் பெற்றவர்கள். தீமை வினையால் வந்தாலும் அதைப் பற்றிக் கவலை கொள்ளாமல் அதனையும் மாற்றும் திறம் வாய்ந்தவர்கள் பரம்பரையாக நற்குடியில் தோன்றியவர்கள்.

அரிய அரசியல் நூல்களையும் கற்றுத் தேர்ந்தவர்கள், எல்லாவற்றையும் விட மானமே பெரிது என எண்ணும் இயல்பினர் என்னும் பொருளில்,

குலம் முதல் தொன்மையும் கலையின் குப்பையும்
பல முதல் கேள்வியும் பயனும் எய்தினர்
நல முதல் நலியினும் நடுவு நோக்குவார்
சல முதல் அறுத்து அரும் தருமம் தாங்கினார் (1318)

உற்றது கொண்டு மேல்வந்து உறுபொருள் உணரும் கோளார்
மற்றது வினையின் வந்தது ஆயினும் மாற்றல் ஆற்றும்
பெற்றியர் பிறப்பின் மேன்மைப் பெரியவர் அரிய நூலும்
கற்றவர் மானம் நோக்கின் கவரிமா அனைய நீரார் (1319)

என்று கம்பர் காட்டுகின்றார்.

ஆட்சி செய்யும் முறை

"உயிர் எலாம் உறைவதோர் உடம்பும் ஆயினான்" என்று கூறிய கம்பர் தசரதன் மூலம் ஆட்சி செய்யும் முறையினையும் குறிப்பிடுகின்றார். தசரதன் உயிர்களுக்குத் தாய்போல் அன்பு காட்டினான். மேலைத் தவம் போல் நலம் புரிந்தான். குழந்தையாக நின்று அவர்கள் நற்கதியடையச் செய்தான். நோயாக விளங்கிய மக்களுக்கு மருந்தாக நின்றான். அறிவாக நின்ற யாவர்க்கும் துணை புரிந்தான் என்பதை,

தாய் ஒக்கும் அன்பின் தவம் ஒக்கும் நலம் பயப்பின்
சேய் ஒக்கும் முன்நின்று ஒரு செல்கதி உய்க்கும்
நோய் ஒக்கும் என்னின் மருந்து ஒக்கும் நீரால் நுணங்கி கேள்வி
ஆயப் புகுங்கால் அறிவு ஒக்கும் எவர்க்கும் அன்னான் (171)

என்றெல்லாம் ஆட்சி செய்யும் முறைகளைக் கம்பர் தெரியப்படுத்துகிறார்.

அரசன் முறைதவறி மக்களால் வெறுக்கப்படுவானாயின் அந்நாடு பாழடையும். தாடகை வாழ்ந்த இடம் பாழ்பட்ட ஒன்றாக இருந்தது. அதனை விளக்க வந்த கம்பர், **பழிபடர் மன்னவன் படைத்த நாடு போல அழிவது** என்று குறிப்பிடுகின்றார்.

அரசர்க்குரிய தகுதிகள்

அரசபதவி ஆணவம் மிக்கது. பிறர் மீது அதிகாரம் செலுத்தி அடக்கி ஆள எண்ணுவது செருக்கில் ஆழ்வது என்பது கம்பரின் கருத்தாகும். இதற்குச் சான்றும் தருகின்றார். கார்காலம் கழித்து வருகின்றேன் என்று சொல்லிச் சென்ற சுக்ரீவன் வரவில்லை சுக்ரீவன் காலம் தாழ்த்துவதைக் கண்ட இராமன்,

பெறலருந் திருப்பெற்று உதவி பெருந்
திறம் நினைத் தாலன் சீர்மையின் தீர்ந்தனன்
அறம் மறந்தனன் அன்பு கிடக்க நம்
மறம் அறிந்திலன் வாழ்வின் மயங்கினான் (4270)

சுக்கிரீவன் அரச பதவி பெற்றதும் நாம் செய்த நன்றியை மறந்து விட்டான். நெறி மறந்தான்; அறம் மறந்தான் என்று ஒருவர் செய்த உதவியை மறக்கும் தகாத செயலைக் குறிப்பாக உணர்த்துகிறார் கம்பர்.

அரசில் செருக்கு

அரசியல் ஆணவம் கண்ணை மூடுகிறது. அறிவைக் கெடுக்கிறது. நெறி பிறழச் செய்கிறது. அரச பதவி செருக்குடன் விளங்கும் என்பதைக் கம்பர் வாலி வாயிலாகவும் விளக்குகின்றார். இறக்கும் நிலையில் வாலி தன் தம்பி சுக்கிரீவனைப் பார்த்து அறம் உரைக்கின்றான்.

'அரச செல்வம் களியூட்டும்; ஆழ்த்தும்; மயக்கும். பிறரை எண்ணி இகழ வைக்கும். நீ அந்நிலை எய்தாமல் உனக்கு அரசு தந்தவனை மறவாது வாழ்; மன்னர்கள் நிகர் உரிமையுடையோர் நம் குற்றத்தைப் பொறுப்பார் என்று எண்ணாதே. அவர் தம் கருத்தறிந்து அதற்கு ஏற்ற முறையில் இணங்கி வாழ்க!' என்று அரசனின் ஒழுக்கம் குடிகளின் ஒழுக்கம் எல்லாவற்றினையும் கம்பர் வாலியின் மூலம் குறிப்பிடுவது தனித்துச் சுட்டுதற்குரியது.

அரசு அமையும் முறை

அரசு அமையும் முறைமையையும் கம்பர் வெளிப்படையாகத் தருகின்றார்.

முறையறிந்து அவாவை நீக்கி முனிவுழி முனிந்து வெஃகும்
இறையறிந்து உயிர்க்கு நல்கும் இசைகெழு வேந்தன் காக்கப்
பொறை தவிர்ந்து உயிர்க்கும் தெய்வம் பூதலம்

அரசன் அறமுறை அறிந்தவனாதல் வேண்டும். அவா அற்றவனாதல் வேண்டும். ஒறுத்தற்குரிய இடத்தில் ஒறுத்து அணைத்ததற்குரிய இடத்தில் அணைத்து முறையோடு இறைபெற்று குடிகளுக்கு உதவி புகழ் பெற்று மக்களின் துன்பத்தை நீக்கி இம்மண்ணுலகைப் பொன்னுலகாக்கி நிற்றல் கடன் என்பதனைக் கம்பர் தெளிவுபடுத்துகின்றார்.

கம்பனின் அரசியல் பார்வை

கோ.மோகன்

முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை, தூய நெஞ்சக்கல்லூரி, திருப்பத்தூர்.

கம்பன் தன் பாடுபொருளாகத் தேர்ந்த இராமாயணக்கதை அரசியல் நிகழ்ச்சிகளையே ஆதாரமாகக் கொண்டிருக்கிறது. கம்பன் இந்த நிகழ்ச்சிகளைக் கையாளும் முறையில் இருந்து அவரின் திறனாய்வுப் பார்வை வெளிப்படுகிறது. அரசியல் கோட்பாட்டை அணுகுவதையும் இராமயணத்தில் வரும் கோசலம், கிட்கிந்தை, இலங்கை ஆகிய மூன்று முடியாட்சிகளிலும் அவற்றின் குறைகளைச் சுட்டிக்காட்டும்பொழுது கம்பன் ஓர் அரசியல் கோட்பாட்டாளனாகச் செயல்பாடுகின்றான். அதே நேரத்தில் ஓர் அரசியல் தத்துவ ஞானியாகவும் நின்று, ஓர் இலட்சிய அரசு எப்படி இருக்கவேண்டும் என்பதை விவரிக்கிறார். இக்கருத்துகள் வாயிலாகக் கம்பனின் தனித்ததோர் அரசியல் கோட்பாட்டை எடுத்துரைப்பதே இக்கட்டுரையின் மையப்பொருளாக அமைய உள்ளது.

தயரதனின் பலவீனங்கள்

நாடாளும் மன்னனுக்குத் மனதிட்பமும் உறுதியும் தவிர்க்கமுடியாத குணங்களாகும். பலவீனங்கள் உடையவன் மன்னனாக இருந்தால் மனம்போன போக்கின்படி நடந்து நாட்டிற்குப் பெரும் துன்பத்தை விளைவித்து விடுவான். இவை முடியாட்சியின் குறைகளுள் ஒன்றாக அரசியல்நூலார் குறிப்பிடுகின்றார். அயோத்தியின் அரசியல் குழப்பங்களுக்குத் தயரதனின் பலவீனங்களும் காரணமாகின்றன. தயரதனின் முதல் பலவீனம் அவனுக்கு நான்கு புதல்வர்கள் இருந்தும், இராமன்மேல் மட்டும் அவன் காட்டும் மிகுதியான அன்பும், பாசமும் அவன் பலவீனத்தின் முதல் தொடக்கம் என்பதை வெளிப்படுத்தும் விதமாக அமைந்துள்ளது. இதனை,

மகன்வயின் அன்பினால் மயங்கி யான் இது புகல (1391)

என்று தயரதனே வேத்தவையோரிடம் கூறுவதிலிருந்தும், இராமன் என் மகன், என்கண், என்உயிர் என்று கைகேயிடம் கூறுவதிலிருந்தும் தெரிந்து கொள்ளலாம். கைகேயிடம், 'பெறுவாயேல் மண்ணேகொள் நீ மற்றையதொன்றும் மற' '(1522) என்று கூறுவதிலிருந்தும் நாட்டைவிட

இராமனையே அவன் மிகுதியாக நேசிக்கின்றான் என்பதும், அந்தக் கண்மூடிய பாசத்தால் மகனுக்காக நாட்டையே கைகேயிக்குத் தாரை வார்க்கத் தயாராக இருக்கிறான் என்பதும் புலப்படுகிறது. புத்திர பாசத்தால் புத்தி தடுமாறித் தயரதன் ஒரு தந்தையாகவே நடந்து கொள்கிறான். தான் ஒரு மன்னன் என்பதையே அவன் மறந்து விடுகின்றான். அதனாலேயே மரபுக்கும், தண்ட நீதிக்கும் மாறான வரங்களைத் தர முடியாது என மறுக்க அவனுக்குத் தோன்றவில்லை.

'ஆட்சிப் பொறுப்பிலே உள்ளவர்கள் ஒரு குறிப்பிட்ட பெண்ணின் மீதோ, குழந்தையின்மீதோ அன்பு பாராட்டுவது சார்புணர்வை உண்டாக்கி நல்லாட்சிக்கு இடையூறு விளைவிக்கும்' என்று கிரேக்க அறிஞர் பிளேட்டோ கூறுவதை இங்கே நினைவில் கொள்ளலாம். இந்தச் சார்புணர்வு தோன்றாமலிருக்க அவர் பரிந்துரைக்கும் குடும்பப் பொதுவுடைமை என்ற கருத்து அருவருக்கத்தக்கது எனினும் சார்புணர்வினால் ஆட்சியாளர்கள் நடுநிலை தவற நேரும் என்ற கருத்திலிருக்கும் உண்மையை மறுக்க முடியாது.

தயரதன் இராமன்மீது காட்டும் அளவுகடந்த அன்பும், கைகேயி மீது கொண்ட மோகமும் அவனை அரசன் என்ற நிலையில் செயல்படவிடாமல் தடுப்பதோடு முறை தவறவும் செயல்படுகின்றன. அரசனின் பலவீனங்கள் அரசியலில் விரும்பத்தகாத தீமைகளை விளைவிக்கும் என்பதைக் கம்பன் இங்கே தயரதன் மூலம் சுட்டிக் காட்டுகிறான். அதோடு சிலம்பிலும் ஓர் உதாரணம் காணப்படுகிறது.

மன்பதை காக்கும் நன்குடிப்பிறத்தல்
துன்பம் அல்லது தொழுதகவு இல் (சிலம்: 3:2.10-104)

என்ற கடமை உணர்வு மறைந்து போய், அது அதிகாரத்தையும், ஆனந்தத்தையும் அனுபவிப்பதற்கு வாய்ப்பளிக்கிறது என்ற எண்ணமும் முதிர்ந்துவிட்ட நிலையில் அதிகார வேட்டையும், சூழ்ச்சியும் இயல்பாகவே தோன்றத்தான் செய்யும். இவை முடியாட்சியோடு சேர்ந்து வளர்ந்த தீமைகள் அயோத்தியின் அரசியல் குழப்பங்களை விவரிக்கும் போக்கில் கம்பன் தயரதனுடைய ஆட்சியின் குறைகளை மட்டுமல்ல வரம்பிலா முடியாட்சியின் முறைகளையும் சுட்டிக் காட்டுகிறான்.

வாலி அரசாட்சியின் வீழ்ச்சிக்கான காரணங்கள்

இராமன் வாலியைக் கொன்றதற்கு இரண்டு காரணங்கள் கூறுவதைப்

பார்க்கமுடிகிறது. ஒன்று சுக்கிரீவன் அரசாட்சியை ஒத்துக்கொள்ள நேர்ந்த சூழ்நிலையை எடுத்துக்கூறியும் அதனை நம்பாமல் தம்பி என்றும் கொஞ்சமும் இரக்கம் காட்டாமல் அவனை பல்வேறு வகையில் துன்பப்படுத்தியது. அடுத்ததாக தம்பியின் மனைவி என்றும் பாராது சுக்கிரீவன் மனைவியைக் கவர்ந்தது.

இராமனின் குற்றச்சாட்டுக்கு எதிர்மொழி கூறமுனைந்த வாலி முதல் குற்றத்திற்கு மறுமொழி கூற இயலாமல் இரண்டாவது குற்றத்திற்கு மட்டும் மறுமொழி கூறுகின்றான். இராமனைப் போன்ற உயர்ந்த குலத்தில் பிறந்தவர்களுக்கு விதித்ததைப் போல் ஒருவனை மணந்து ஒருவனையே புணரும் கற்பு நெறியைப் பிரமன் தங்களுக்கு விதிக்கவில்லை என்றும், நேர்ந்தால் நேர்ந்தபடி துய்ப்பவர்களாகவே தங்களைப் படைத்திருக்கிறான் என்றும் கூறுகிறான். இப்பாடலில் மேலும் மனம் போன வழியே செல்வதுதான் தங்கள் ஒழுக்கம் என்னும் வேதநெறிப்படி செய்யும் மணமோ, உயர் குலத்தவர்க்குரிய குணமோ தங்கட்கு இல்லை என்று கூறுகிறான்.

மணமும் இல்லை மறைநெறி வந்தன
குணமும் இல்லை குலமுதற்கு ஒத்தன
உணர்வு சென்றுழிச் செல்லும் ஒழுக்கு அலால் (4047)

முதல் குற்றச்சாட்டிற்கு மறுமொழி கூறாமல் நழுவுவதிலிருந்து வாலி அந்த குற்றத்திற்குரியவன் என்பதை அறியலாம். சுக்கிரீவன் தான் அரசாட்சியை ஏற்க நேர்ந்த சூழ்நிலையை உண்மையாகவே எடுத்துரைத்தும், வாலி அவனை நம்பவில்லை. சுக்கிரீவனை நம்பாதவன் அமைச்சர்களை விசாரித்து உண்மை நிலைமையைத் தெரிந்து கொண்டு இருக்கலாம். அவ்வாறு அவன் செய்யவில்லை சினமும் ஐயமும் அவன் அறிவை அழித்துவிட்டன என்பதையே நாம் உணரமுடிகிறது.

வாலிபுரியும் இரண்டாம் குற்றம்

இரண்டாவது குற்றச்சாட்டிற்கு வாலி சமாதானம் கூற முற்படுகிறான். வானரர்களுக்குக் கற்புபோன்ற ஒழுக்கங்களைப் பிரம்மன் விதிக்க வில்லையாம். மனம் விரும்பியபடி இன்பம் நுகர்வது அவர்கள் வழக்கமாம். இந்த சமாதானத்தின் போலித்தன்மையை இராமன் தோலுரித்துக் காட்டுகிறான். வாலி, இராமனை ஏசும்போது 'கோவியல்

தருமம்;' (4020) பற்றியும், 'மனுநெறி' (4021) பற்றியும், 'ஒழுக்கம்' (4022) பற்றியும்,' சீலம்' (4031) பற்றியும், குறிப்பிடுகிறான். இதிலிருந்து வாலி இவற்றை எல்லாம் அறிந்திருக்கிறான் என்பது தெரிகிறது.

எல்லாம் கற்றிருந்தும், அதற்குத்தக நில்லாதது மட்டுமின்றி, இவற்றை, பிரம்மன் தங்கள் குலத்திற்கு விதிக்கவில்லை என்று கூறித் தன் இழிந்த ஒழுக்கத்துக்குக் காரணம் காட்டித் தப்பிக்க முயல்கிறான். அறநெறி பிறப்பால் வருவதல்ல. அறிவால் அறிவது. அறநெறியெல்லாம் அறிந்த வாலி அவற்றுக்கு மாறான தவறுகளையும் செய்துவிட்டு, தான் செய்வது சரியே என்று சாதிப்பது முறையோ என இராமன் வாலியைக் கேட்கிறான். இராமனின் இந்த வினாவில் உள்ள நியாயத்தை உணர்ந்த வாலி தனது தவறுகளை ஒப்புக் கொள்வதைப் பார்க்கமுடிகிறது.

வாலியிடம் இம்மூன்று குற்றங்களும் அமைந்திருந்தன. அவன் தன் குற்றம் காணாமல் பிறர் குற்றம் காண்பவனாகவும் இருக்கிறான். கல்வி கற்றிருந்தும் அதற்குத் தக அவன் நிற்கவில்லை. தம்பியின் தாரத்தையே கவர்ந்து வற்புறுத்தி இழிந்த ஒழுக்கத்தில் ஈடுபடுகிறான். யாருடைய சொல்லையும் கேட்காமல் இரக்கமற்றவனாகவும் நடந்து கொள்கிறான். இவையெல்லாம் ஓர் அரசனுக்கு இருக்கக்கூடாத பண்புகள். இந்தக் குற்றங்களே அவன் அழிவுக்குக் காரணமாகின்றன. அரசனின் தீய ஒழுக்கங்கள் அவன் ஆட்சியை எவ்வாறு சீரழிக்கும் என்பதை வாலியின் வாயிலாகக் காட்டும் கம்பன், பக்குவம் பெறாதவன் பதவி பெற்றால் பதவி சுகத்தில் மயங்கித் தவறு செய்ய வாய்ப்புண்டு என்பதைச் சுக்கிரீவன் வாயிலாக உணர்த்துகிறான்.

இராவணனின் அரசியல் நிலைப்பாடு

இராவணனின் அரசு ஒரு வல்லரசாக உள்ளது. இராவணன் அருந்தவமாற்றி அளவற்ற ஆற்றலைப் பெற்றிருப்பினும் அந்த ஆற்றலால் செருக்கி அற ஒழுக்கமற்ற வழியில் ஆட்சி செய்கிறான். மற்றவர்களுக்கு அளவற்ற துன்பத்தை ஏற்படுத்துகிறான். அவர்களை அடிமைப்படுத்தி அல்லற்படுத்துகிறான். அறமற்ற முறையில் அவன் ஈட்டிய செல்வம் அவனைத் தீயவழியிலேயே செலுத்துகிறது. அவனும் இலங்கை மக்களும் புலனின்பப் போகப் புதைச்சேற்றில் சிக்கிச் சீரழிகின்றனர். இந்த போக வேட்கையே இராவணனைப் பிறன்மனை நயக்கும் பேதைமையின்பால் செலுத்துகிறது. காமம், வெகுளி, கடும் பற்றுள்ளம், மானம், உவகை, மதம் என்று ஆறு பகைவர்களும்

ஒன்றிணைந்து அவனுக்குள் குடிபுகுந்துள்ளது. தன்னையே மறந்து தவறிழைக்கிறான். நல்லார் தொடர்பை நயவாது நாசமுறுகிறான். பழுதெண்ணும் மந்திரிகளைப் பக்கத்தில் வைத்துக்கொண்டு பாழா கின்றான். இந்த குற்றங்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து அவனை அழிப்ப தோடு, அவன் நாட்டையும் சீரழிக்கின்றன.

வரம்பில் அதிகாரங்களை வசப்படுத்திக் கொள்ளும் முடி மன்னர்களால் விளையும் தீமைகளை அரசியல் நூலார் விவரிக்கின்றனர். அவர்கள் சர்வாதிகாரிகளாக மக்கள் கருத்தைத் துச்சமாக மதிப்பர். உலக அமைதிக்கு பங்கம் விளைவித்து பலவீனமான அரசுகளின் மீது படையெடுத்து அவர்களை அடிமைப்படுத்துவர். போர்ச்செயலே அவர்கள் பொழுது போக்காகும். வரலாற்றில் ஹிட்லரும், முசோலினியும் இதற்கு எடுத்துக்காட்டாக விளங்குகின்றனர். இராமாயணம் இராவணனை எடுத்துக்காட்டுகிறது.

முடியாட்சியை உடைய அரசு எவ்வளவுதான் அறிவும் திறமையும் பெற்றிருந்தாலும், நாகரிகமும் அறிவும் பெற்ற மக்களுக்கும் பொருந்தாத குறையுடைய அரசாகும். அரசியல் அக்கறை, சமூக ஒற்றுமைப் பேணுதல் ஆகியன நல்லரசின் குறிக்கோளாகும். முடியாட்சி இந்தக் குறிக்கோளை அடைவதிலும், நல்ல குடிமக்களை உருவாக்குவதிலும் எப்பொழுதும் தோல்வியே அடைகிறது. என்பார் அறிஞர் கெட்டல். கோசலம், கிட்கிந்தை, இலங்கை என்னும் மூவரசுகளின் முறைகேடுகளைச் சுட்டிக் காட்டியதன் மூலம் கம்பனும் அதே கருத்தை வலியுத்துகின்றான்.

முடியாட்சியின் விளைவும் - குடியாட்சியின் தேவையும்

தமிழ் நூல்கள் முடியாட்சி பற்றி மட்டுமே பேசுகின்றன. குடியாட்சி பற்றிய கம்பனின் கோட்பாட்டில் மக்களுக்கும், அவர்களின் உடைமைகளுக்கும் அவன் அளிக்கும் முக்கியத்துவம் குறிப்பிடத் தகுந்ததாகும். இராமன் முடிச்சூடப்போகிறான் என்பதை அறிந்தபோது மக்கள்,

பூவலயம் இன்று தனி அன்று பொது (1592)

என்று கூறி மகிழ்ந்ததாகக் கம்பன் குறிப்பிடுகிறான். மிகச்சிறிய இந்த வாக்கியம் 'அணுவைத் துளைத்து ஏழ் கடலைப் புகட்டியது' போலக் கம்பனின் அரசியல் கோட்பாடு அனைத்தையும் தன்னகத்தே கொண்டு விளக்குகிறது. இதுவே அவன் கோட்பாடு அனைத்துக்கும் அடிப்படை

யாகவும், கோட்பாட்டின் மூலவாக்கியமாகவும் பார்க்கமுடிகிறது.

நாடு தனியொருவனுக்கு உடைமையானதல்ல; மக்கள் அனைவருக்கும் பொதுவானது என்ற கருத்து குடியாட்சிக் கொள்கை பரவிய இக்காலத்தில் சாதாரணமாகத் தெரியலாம். கம்பன் இதைக் கூறிய காலம் ஒன்பதாம் நூற்றாண்டு என்பதை நினைவில் கொண்டால்தான் இதன் மகத்துவம் புரியும். ஆள்பவன் ஆண்டவனின் அம்சம், நாடும் மக்களும் அவனுடைய உடைமைகள் என்ற கோட்பாடு கோலோச்சிய நாட்டில்,

தெண்கடல் வளாகம் பொதுமை இன்றி
வெண்குடை நிழற்றிய ஒருமையோர் (புறம்-189)

என்றும்,

வையம் காவலர் வழிமொழிந்து ஒழுகப்
போகம் வேண்டிப் பொதுச் சொல் பொறா அது
கடந்தடு தானைச் சேரலாதன் (புறம்-8)

என்றும்,

வையம் மன்னுயிராக அம் மன்னுயிர்
உய்யத் தாங்கும் உடல் அன்ன மன்னன் (1423)

கம்பன் இந்த இடங்களில் மக்களே உயிர் என்று கூறியதன் மூலம் மன்னனை விட மக்களே உயர்ந்தவர்கள் என்று தெரிவிக்கிறான். இந்திய மதங்களின் கொள்கைப்படி உயிர் அழியாதது உடல் அழிவது. உடல் தன்னைக் காக்கும் ஆற்றலை இழந்துவிட்டால், உடல் அவ்வுடலைக் கைவிட்டு வேறோர் உடலை எடுத்துக் கொள்ள முடியாது. இந்த கருத்துகளின் பின்னணியில் கம்பனின் உவமைக்குப் பொருள் காணும்போது மக்களுக்கு அவன் தரும் உயர்வும், சிறப்பும் மிகுதியாகப் புலப்படுத்துகிறது. இதன்மூலம் மக்களுக்காகத்தான் மன்னனே அன்றி, மன்னனுக்காக மக்கள் அல்ல; இதை அவன் அழுத்தமாகச் சொல்கிறான். அந்தவகையில் பார்க்கும்போது கம்பன் எந்த அளவிற்குக் காலவுணர்விலிருந்து வேறுபட்டு நிற்கும் புரட்சியாளன் என்பதைப் புரிந்து கொள்ளலாம்.

மேலைநாட்டு அறிஞர்களின் கோட்பாடு

மேனாட்டு அறிஞர்களில் சிலரும் இத்தகைய கலப்பு வடிவத்தைப்

பரிந்துரைத்துள்ளனர். பழங்காலத்தில் அரிஸ்டாட்டிலும். பதினேழாம் நூற்றாண்டில் ஸ்பினோஸாவும் உயர்குடிஆட்சி, முடியாட்சி ஆகிய இரண்டும் கலந்த வடிவமே சிறந்தது என்று கருதுகின்றனர். நடைமுறையில் இவ்வாறான கலப்புவடிவ அரசாங்கங்களை நாம் பார்க்க முடிகிறது. அடுத்ததாக. கம்பன் கூறுவது அரசன் என்பவன் குறிப்பிட்ட இனத்தின் நலம் காப்பதற்காக ஏற்படுத்தப்பட்டவன் இல்லை. அவ்வாறான ஆட்சி சமூக நீதிக்கும். சமூக முன்னேற்றத்திற்கும் உதவாது என்பதால் அதை நல்லாட்சியாக கருதமுடியாது என்ற கொள்கையைக் கம்பன் இராமன் வாயிலாகவே எடுத்துக்காட்டுகிறான்.

முடிவுரை

கம்பனுடைய அரசியல்பார்வையாக நாம் பார்க்கும்பொழுது அவன் அரசியல்பற்றி மிகத்தீவிரமாகவும். ஆழமாகவும் சிந்தித்து இருக்கிறான் என்பதை உணர்த்துகிறது. முடியாட்சிக் காலத்தில் வாழ்ந்திருந்தாலும் அந்த ஆட்சி முறையை ஏற்காதவனாகவே கம்பனைக் காணமுடிகிறது. முடியாட்சியின் தீமைகளைக் கோடிட்டுக் காட்டுவதோடு அவற்றை நீக்கவும் முற்படுகிறான். ஒரு நல்லரசுபற்றி மட்டும் அல்லாமல் இலட்சிய அரசு எவ்வாறு அமையவேண்டும் என்பதையும் பட்டியல் இடுகிறான். எல்லாரும் எல்லாம் பெற்று இருக்கவேண்டும். ஏற்றத் தாழ்வற்ற சமூகம் பெண்களின் முன்னேற்றம். பிறப்பால் உயர்ந்தோர் தாழ்ந்தோர் என்று பேதைமை அற்று இருத்தல் எனும் கருத்துகள் அவன் காலத்தில் யாரும் சிந்திக்காதவை என்பதை உணர்ந்து கொள்ள முடிகிறது.

அவனிடம். பிற்போக்கான கருத்துகளை எல்லாம் எதிர்க்கும் மனம் காணப்படுகிறது. மேனாட்டு அறிஞர்கள் கண்டறிந்த பல அரிய உண்மைகளைக் கம்பன் ஒன்பதாம் நூற்றாண்டிலேயே கூறியிருப்பது வியப்பை அளிக்கிறது. கார்ல் மார்க்ஸின் புரட்சிகரமான தத்துவத்தில் காணப்படும் பொதுவுடைமை. அரசற்ற சமூகம் போன்ற கருத்துகளின் மூலவடிவத்தை அப்பொழுதே கம்பன் உணர்த்தியிருப்பது அவனது மேதைமையைக் காட்டுகிறது. கம்பன் கவிதையில் மட்டும் அன்றி. தனது அரசியல் கோட்பாட்டினாலும் தமிழ்க் கவிஞர்களுள் தனித்தன்மை வாய்ந்தவனாகவே திகழ்கிறான். ஆக. கம்பனின் அரசியல் கோட்பாட்டுப் பார்வையை. தமிழ்ச்சமூகத்தில் ஒரு போற்றுதலுக்குரிய ஒன்றாகவே நாம் காணவேண்டியுள்ளது.

கம்பனின் அரசியற் சிந்தனைகள்

முனைவர் **த.கலாஸ்ரீதர்.**
தலைவர். அரியகையெழுத்துச் சுவடித்துறை. தமிழ்ப்பல்கலைக் கழகம். தஞ்சாவூர்.

கம்பன் படைப்பு ஒரு மொழியினருக்கே இனத்தனருக்கோ நாட்டினருக்கோ தனியுரிமையுடையதன்று: உலகம் முழுமைக்கும் பொதுவானது. இடத்தால் பரந்து நிற்கின்ற காப்பியம். காலத்தையும் வென்றமைந்தது. எக்காலத்திற்கும் உரிய நடப்பியல் காப்பியமாகப் புலப்படுகின்றது. தமிழனின் வாழ்வுக்கும் வழக்கத்துக்கும் பண்பாட்டுக்கும் மரபுக்கும் சொல்வழக்கும் சூழ்நிலைக்கும் தகுந்தாற்போல் கம்பனினால் படைக்கப்பட்ட இக்காவியம் வரலாறு போற்றும் செய்திகளை அதிகம் வெளிப்படுத்துகின்றன.

கம்பன் காட்டும் அரசியல் படலம்

கம்பன் அரசியல் நிலைகளை மிகவும் சிறப்பித்துக் காட்டுகிறான். அயோத்திய அரசும். சுக்கிரீவனின் அரசும். அரக்கனின் அரசுமாகக் காப்பியத்தில் பல அரசுகளையும் அரசரையும் தருவதனால் அரசியல் எண்ணங்கள் வெளிப்பட வாய்ப்பு அமைகின்றது.

சோழநாட்டு அரசியலில் கம்பன் வாழ்ந்தால்தான் கண்டுணர்ந்த கருத்துகளை இணைந்து அளிக்கும் பாங்கு பொருந்தியிருக்கலாம். அரசியல் படலத்தில் தசரதனின் ஆட்சியைக் காட்டுவதன்மூலம் ஓர் இலட்சிய அரசியலைப் படைக்கின்றது. அரசன் உயிராக மக்கள் உலகாக வாழ்ந்த பண்டை உலக அரசியலுக்கு மாறாக அரசனே உடம்பாக வாழும் மக்கள் எல்லாம் உயிராக அமையும் நிலையைக் காட்டுகின்றான். கம்பன் (177) அரசன் தன் உயிரே போன்று உலக மக்கள் அனைவரின் உயிரையும் பாதுகாத்துப் போற்றியுள்ளான். சென்று வாழ் உயிரும் நின்று வாழ் உயிரும் காக்கும். எங்கும் நின்று நிலவும் கதிரவனாக மன்னன் கருதப்படுகிறான் (178). தன் நலனில் மட்டும் அக்கறை உடையவனாக அன்றித் தன்நாட்டு மக்கள் அனைவரின் நலனிலும் சிந்தை கொண்டமைபவன் சிறந்த அரசன். உழவன் பாதுகாக்கும் வயல் போன்று பகை எனும் களை நீக்கி அன்பு எனும் நீர்பாய்ச்சி அறிவு எனும் நல்உரம் இட்டு கடமையுணர்வால் ஆழ உழுது கல்வி எனும் பருவத்தால் விளைவுறச் செய்கிறான். இவ்

உழவுக் காட்சியை அரசியலில் பொருத்திக் காட்டி அரிதின் பெற்ற அருமையான செல்வத்தை ஓம்பிக் காப்பது போன்ற அரசாட்சியைப் புலப்படுத்துகின்றான் கவிஞன்.

எய் என எழுபகை எங்கும் இனிமையால்
மொய் பெறாத் தினவு உறு முழவுத் தோனினான்
வையகம் முழுவதும் வறிஞன் ஓம்பும் ஓர்
செய் எனக் காத்து இனிது அரசு செய்கின்றான் (179)

தசரதனின் தனிப்பெருமை சுட்டும்போது எடுத்து மொழியும் நல்லியல்புகள், ஒரு சிறந்த அரசனுக்குரிய இலக்கணமாக அமைகின்றன. நல்லரசனின் நல்லாட்சி, வளமுடைய உலகநிலையாக அமைவதனை தசரதன் வினாவுக்கு வேத்தவையோர் தந்த விடை புலப்படுத்துகின்றன. ஊருணி நிறைந்தது போன்றும், பயன்மரம் பழுத்தது போன்றும், பருவ மழை பொழிவது போன்றும், கழனியில் பாயும் நதியின் நீர் பெருகியது போன்றும், வரவேற்கத்தக்கதாகவும், இனிமையும் இன்பமும் வளமும் தருவதாகவும் நல்லாட்சி அமைதலுக்கு இவை குறியீடாகின்றன (1394).

இராமனுக்கு வசிட்டன் கூறும் அறிவுரையில் அரசியல் உறுதிப் பொருள் பலவும் காட்டப்படுகின்றன. காட்சிக்கு எளியனாகவும், கடுஞ் சொல் அல்லாதவனாகவும் அமையும் அரசனை வள்ளுவன் சுட்டியது போன்று பல நல்லியல்புகளுக்கும் களனாகி இலட்சிய மன்னனாகி வேண்டப்படுகின்றது.

இனிய சொல்லினன் ஈகையன் எண்ணினன்
வினையன் தூயன் விழுமியன் வென்றியன்
நினையும் நீதிநெறி கடவான் எனின்
அனைய மன்னற்கு அழியும் உண்டாம் கொலோ (1424)

இராமன் சுக்கிரீவனுக்கு உணர்த்தும் நல்லரசு பற்றிய எண்ணங்களும் கம்பனை ஒரு அரசியல் வல்லுநனாக காட்டுகின்றன. வள்ளுவர் உணர்த்திய அரசியல் கோட்பாடுகள் பற்றிய பல எண்ணங்களும் இங்கு கம்பனால் கொள்ளப்படுகின்றன (4123-30). நல்லரசுக்கு, நல்லாட்சிக்கு அரசியல் தலைவனுக்கு நன்றே உதவும் மதிமந்திரியரின் தேவையும் காப்பியத்தில் சுட்டப்படுகின்றது.

வாய்மைசால் அறிவின்வாய்த்த மந்திர மாந்தர் (4122).

இந்திரற்கு இமையவர் குருவைஏய்ந்த மந்திரக் கிழவர் (1316)

என அவரை சிறப்பிக்கின்றார் கவிஞர்.

குலம் முதல் தொன்மையும், கலையின் குப்பையும்
பல முதல் கேள்வியும் பயனும் எய்தினார்
நலம் முதல் நலியினும் நடவு நோக்குவார்
சலம் முதல் அறுத்து அருந் தருமம் தாங்கினார் (1318)

என அவ்அமைச்சரின் மாண்பு சுட்டப்படுகின்றது. அரசனுக்கு அமைச்சன் மருத்துவன் போன்று அமைகின்றான். நல்லவும் தீயவும் நாடி உதவுகின்றான். காலமும் இடமும் அறிந்து செயற்படுகின்றான். நீதி விடாது நிற்கின்றான். மன்னன் முனிந்தபோதும் மேற்சென்று இடிக்கின்றான். உயர் பிறப்பும், நூலறிவும், கவரிமாஅன்ன மானமும் இடையவனாக அமைகின்றான். வந்தது கொண்டு வருவதைக் கணிக்கின்றான், வினையையும் மாற்றியமைக்கும் பெற்றியினனாகின்றான் என அவர் பல்லியல்பினை எடுத்துமொழியுமிடத்தும் (1319-22) கம்பனின் அரசியல் அறிவு புலப்படுகின்றது. 'என் உணர்வு அனையநீர்' என அமைச்சரைத் தசரதன் சுட்டுவதிலும் (1325), 'அவன் மனம் அனையான்' (1361) எனத் தசரதனையும் சுமந்திரனையும் கம்பன் இணைப்பதிலும் மன்னனும் அவன் அறிவுச் சுற்றமும் கொண்ட நெருக்கம் புலப்படுகின்றது.

ஓரரசனின் ஆட்சி நீக்கி மாற்றரசனின் தலைமைக்கு அரசு மாறும் உலகியலைக் காப்பியக்களனிலும் காண்கின்றான் கம்பன். இத்தகைய மாற்றத்தால் அமைதியான ஆட்சி நிலை குலைதலும், மக்கள் குழப்பம் உருவாதலும், பல தீமைகள் நிகழ்தலும் கூடும். ஒருநிறை அரசு இவ்வாறு அரசியல் தலைவன் மாற்றச் சூழலால் நிலைகுலையும் போதும், அறிவும் பொறுமையும் உடையோரின் பேருதவியாலேயே மீண்டும் நிலையும் நிம்மதியும் பெற இயலும். வாலியின் ஆட்சியிலிருந்த அரசு, இராமனின் வாயிலாகச் சுக்கிரீவனுக்கு ஆய சூழலில், அவ்அரசுக்கு மாருதியின் துணையின் தேவை புலப்படுத்தி இத்தகு செய்திகளைக் கூறுகின்றான் இராமன்.

நிரம்பினான் ஒருவன்காத்த நிறையரசு இறுதிநின்ற
வரம்பு இலாததனை மற்றுஓர் தலைமகன் வலிதின்
அரும்பு நலனும் தீங்கும், ஆதலின் ஐய நின்போல்
பெரும் பொறை அறுவினோரால் நிலையினைப் பெறுவது (4143)

ஒரு பேரரசன் ஆண்ட நிலத்தில், அவன் மறைவுக்குப்பின், சிற்றரசர் பலர் தலையெடுத்தல் உலக இயல்பு. தலைவன் ஒருவன் இல்லா ஆட்சியில் தருக்கி எழும் இக்குறுநில மன்னரைக் கதிவன் விழத் தோன்றும் புன்மாலையில் காட்டுகின்றார் இளங்கோ. கம்பன், இவ் அரசியல் நிலையை மாலை மலரும் சோதாம்பலில் சுட்டுகின்றான்.

உரைசெய் திகிரி தனை உருட்டி ஒருகோல் ஓச்சி உலகு ஆண்ட
அரைசன் ஒதுங்க தலைஎடுத்த குறும்பு போன்றது அரசுக்கு ஆம்பல்
(554)

இயற்கையிலும் அரசியலைக் காணும் அளவிற்கு அவ்அரசியல் தோய்வுடையவனாக அமைகின்றான் கம்பன்.

அரசியலில், தூதுவர்க்குச் சிறந்த பங்கு அமைகின்றது. மிகுதியான கருத்து வேறுபாடும், பகையும், போரும் உள்ள காப்பியக்களன் தூதுக்கும் மிகுந்த இடம் அளிக்கின்றது. ஓலை கொணர்தல் அன்றி, வாய்மொழியாகவும் தூது அமைதலை அனுமன், அங்கதன் போன்றோர் தூது காட்டுகின்றன. பாசத்தால் கட்டுண்டு நின்ற அனுமனைத் தூதுவன் ஆனமையின் கொல்லலாகாது என வீடணன் கூறும் (5914-21) நிலை அரச முறையைச் சுட்டுகின்றது. பகைவரின் தூதுவனைத் தண்டிக்க முயலலும் இங்கு அமைகின்றது.

போருக்கு எழுமுன் தூதுவிடுதல் அரசியல் நெறியாக,அமைதலையும் இராமாயணம் காட்டுகின்றது. இராமன் முதற்போருக்கு முன், இளவல் மறுத்த போதும், நெறியிது என விரும்பி அங்கதனைத்தூதாக்குகின்றான். 'அறனும் அஃதே நீதியும் அஃதே' (6975) எனத் தம்பிக்கு உணர்த்தித் தூது விடுப்பது நீதிநூல் முறை என இராமன் வாயிலாகச் சுட்டுகின்றான் அரசியல் அறிஞன்.

அயர்த்திலென் முடிவும் அஃதே, ஆயினும் அறிஞர் ஆய்ந்த
நயத் துறை நூலின் நீதி நாம் துறந்து அமைதல் நன்றோ
புயத் துறை வலியரேனும், பொறையொடும் பொருந்தி வாழ்தல்
சயத் துறை, அறனும் அஃதே என்று இவை சமையச் சொன்னான்
(6981)

ஓலையுடன் வந்த தூதினைச் சனகன் தயரனுக்கு அனுப்பிய மணச் செய்தியில் காண்கின்றோம். அரசனுக்கு வரும் ஓலையாயினும் அதனை வாசிக்க 'வேறு ஒரு புலமகன்' (784) இருந்ததையும் அரசன்

ஆணைப்படி ஓலைச்செய்தியை அவன் படித்து வெளியிடலும் அரசியல் வழக்காக அமைகின்றன. இராமனுக்கு முடிபுனையும் செய்தியை மன்னர் பலருக்குத் தெரிவிக்க, அவரை 'வருக' என அழைக்கும் உவணம் வீற்றிருந்த 'பொன் திணித் தோட்டு அரும் பெறல் இலச்சினை' உடைய ஓலை போக்குதலும் அரசமுறையாக வருகின்றது (1385). நற்செய்தியுடன் வரும் தூதுவர்க்கு வரையாது பெரும் பரிசில் அளித்தலும் அமைகின்றது (737) அரசர்க்கு. வெளிப்படையாகத் தூதும் ஓலையும் போக்குதல் ஒருபுறமாக, மக்களுக்கு அரசியல் செய்தி தெரிவிக்க முரசு அறைதல் முறையாகக் காணப்படுகின்றது.

கம்பன் புலப்படுத்தும் அரசியல் நோக்கும் போக்கும்

முனைவர் **கடலூர் மணிமாறன்**
முன்னைத் தமிழ்ப் பேராசிரியர், கற்பகம் பல்கலைக் கழகம், கோவை

மன்னராட்சிக் காலத்தில் தோன்றிய காப்பியம் கம்பராமாயணம். அரசியல் ஆட்சி நிகழ்வுகளையே முதன்மைப்படுத்தி இராமாயணத்தின் கதைப்போக்கு இயங்குகின்றது. கோசலம், கிட்கிந்தை, இலங்கை ஆகிய மூன்று முடியாட்சிகளையும் பல பாடல்களில் ஆய்வுக்கு உட்படுத்தி ஓர் அரசு எப்படிச் செயல்படவேண்டும் என்பதையெல்லாம் கம்பன் விளக்கியுள்ள பாங்கு கவனத்தை ஈர்ப்பதாகும். தமது காலத்து அரசியல் தொடர்பான நிலைப்பாட்டில் இருந்து கம்பன் மாறுபடுவதைப் பாடல்கள் வெளிப்படுத்துகின்றன. இப்போக்குகள் கம்பனை ஒரு புரட்சியாளனாகவும் எதிர்காலச்சூழலை முன்னுணர்ந்த தொலை நோக்குச் சிந்தனையாளனாகவும் அடையாளம் காட்டுகிறது. இதனை ஆய்ந்துரைப்பதே இக்கட்டுரையின் நோக்கம்.

அமைதியாகவும் பாதுகாப்பாகவும் வாழ்வதற்கு நல்ல அரசும், இனிய சமூகமும் வேண்டும். அறம், பொருள், இன்பம் என்னும் உறுதிப்பொருள்கள் மூன்றனுள் பொருளின் பகுதியாகக் கூறப்படுவது அரசியல் ஆகும். அரசியலை அரச நீதி என்று குறிப்பிடும் பரிமேலழகர் அதற்குக் காவலை நடாத்தும் முறைமை என விளக்கம் தருகின்றார். மேலும் மலர்தலை உலகிற்கு உயிரெனச் சிறந்தவன் அரசன் என்றும் சுட்டுகின்றார். அரசனுக்குப் பின் அவனது மூத்த மகன் அரசுகட்டில் ஏறுவது என்பது அக்காலத்து மன்னராட்சி மரபாக இருந்து வந்தது. அயோத்தியை ஆண்ட தயரதனுக்குப் பிறகு அவனின் மூத்த மகன் இராமன் முடி சூட்டிக் கொண்டு ஆளும் வாய்ப்பினை இராமனின் வளர்ப்புத்தாய் கைகேயியின் சூழ்ச்சி பறித்து விடுகிறது. நாடாள வேண்டிய இராமன் பதினான்கு ஆண்டுகள் காட்டுக்குத் துரத்தப்படுகின்றான். கோசலத்தில் நேர்ந்த இத்துயரம், காப்பியப் போக்கினால் கிட்கிந்தையிலும் இலங்கையிலும் எதிரொலிக்கின்றது.

கோசல அரசு

தயரதன் அரசர்கட்கு அரசனாய் விளங்கியவன். அவன் ஆட்சியின் கீழ்க் குறுநில மன்னர்கள் சில பகுதிகளை ஆண்டு வந்தனர்.

தயரதனைப் பாடும்போது 'செம்மாண் தனிக்கோல் உலகு ஏழினும் செய்ய நின்றான்' (168) என்று பாடும் கம்பன் அவனைப் பேரரசன் எனக் குறிப்பிடுகிறான். இராமன் பெற்ற தாயினால் வளர்க்கப்பட்டவன் அல்லன். இராமனை வளர்த்தவள் கைகேயி. அவள் முன்பிறவியில் செய்த தவத்தால் இப்பேறு பெற்றாள். இராமன் அரசன் ஆவதால் பாவமும் தீராத துயரங்களும் அடியோடு அழியும் என்பார் சிலர். இம்மண்ணுலகம் இன்று முதல் இராமனுக்கு மட்டும் தனி உரிமை உடையதன்று. உலகோர் அனைவர்க்கும் இது பொதுவுடைமை என்பார் சிலர். தேவர்களுக்கு இன்னும் பகைவர்கள் உள்ளனர். அவர்களை இராமன் அழிப்பான் என்பார் சிலர். இராமன் ஏவிய பணிகளைச் செய்யும் மன்னர்கள் செய்த நல்வினை எத்தன்மையதோ என்பார் சிலர் என்று இராமன் முடிசூட இருந்த வேளையில் பலரும் பலவாறாகக் கூறிய வண்ணம் இருந்தனர் எனப் பாடுகிறான் கம்பன்.

இராமன் பதினான்கு ஆண்டுகள் காட்டுக்குச் செல்ல வேண்டும் என்ற கைகேயியின் வரத்துக்கு இணங்கியதன் மூலம் தயரதன் அரசனுக்குரிய நீதி நெறியிலிருந்து பிறழ்கின்றான். காட்டுக்கு அனுப்புவது என்பது நாடு கடத்தலை ஒக்கும். இப்பெரிய தண்டனை அரச இரண்டகத்துக்கு (இராசத்துரோகம்) அளிக்கப்பட வேண்டிய கடுந்தண்டனை ஆகும். எந்தக் குற்றமும் செய்யாத இராமனுக்கு இழைக்கப்பட்ட பெரும் அநீதி இதுவாகும்.

அன்பு இழைத்த மனத்து அரசற்கு நீ என் பிழைத்தனை? (1617)

என இராமனுக்காகப் பரிந்து பெற்றதாய், கோசலை எழுப்பிய வினாவை வசிட்டன் போன்ற அமைச்சர்களும் எழுப்பாமல் அமைதி காத்தனர் என்பதைப் பதிவு செய்கிறான் கம்பன்.

நாட்டு மக்கள் நலத்தினும் தன்மகன் நலத்தையே பெரிதென எண்ணிய தயரதன் அரசியல் மரபைவிடத் தன் வாய்மையை உயர்வாக எண்ணி வரத்தினை நிறைவேற்ற இசைந்தபோதும் அவையின் கருத்தையோ மக்களின் கருத்தையோ அறிவதில் நாட்டம் இல்லாது போயினன். அவன் அமைச்சரவையும் அரசனின் பொறுப்பையும் கடமையையும் சுட்டிக்காட்டத் தவறிவிட்டது. மக்களும் மன்னன் முடிவை மாற்றிட முயலவில்லை. இவையாவும் சேர்ந்து கைகேயியின் சூழ்ச்சி வென்றிடத் துணைபோய் விட்டதாக எண்ணத் தோன்றுகிறது என அப்துல்ரகுமான் தமது நூலில் (கம்பனின் அரசியல் கோட்பாடுகள்) குறிப்பிடுகின்றார்.

கிட்கிந்தை அரசு

வானரர்க்கு மட்டுமே உரிய சமுதாய அரசு கிட்கிந்தை அரசு. தோற்றத்தில் குரங்குகளாகவும் செயலில் மனிதர்களாகவும் இருப்போர் வானரர் என வான்மீகி, கம்பன் இருவருமே குறிக்கின்றனர். வானரர்கள் பேசுபவர்களாக இருந்தனர். 'யார்கொல் இச்சொல்லின் செல்வன்' (3768) என இராமனே வியக்கும் அளவுக்கு நாவளம் மிக்கவனாக அனுமன் காட்சிப்படுத்தப்படுகிறான். கிட்கிந்தையில் வாலி, சுக்கிரீவன் ஆட்சி மாறி மாறி நடைபெறுகின்றது. அறிவு, ஆண்மை, பெருமை ஆகியவற்றில் சிறந்தவனான வாலி ஒரு சிவனடியான்; பாற்கடலைத் தனி ஒருவனாய்க் கடைந்தவன்; தன்னோடு போர்தொடுக்க வருவோரின் வலிமையில் பாதியைத் தான் அடைகின்றவன்; இராவணனையும் வென்று அடக்கியவன்; எழுபது வெள்ளம் சேனையைக் கொண்டவன் இத்தகையோன் இராமனின் அம்புக்கு இரையாகி இறப்பைத் தழுவு கிறான்.

சுக்கிரீவன் மனைவி உருமையை விரும்பி வாலி கவர்ந்து கொண்டான். சீதையை மீட்பதற்குச் சுக்கிரீவனின் துணை நாடி வந்த இராமனோடு சுக்கிரீவன் நட்புக்கொண்டான். வாலியின் கொடுமையில் இருந்து தன்னைக் காக்க வேண்டினான் சுக்கிரீவன். வாலி சுக்கிரீவனுக்கு இழைத்த கொடுமைகளை அனுமன் வாயிலாக அறிந்து சினம் கொண்டு வாலியைக் கொன்று 'உன் மனைவியை மீட்டுத் தருவேன்' என்று உறுதி கூறி, அவ்வாறே வாலியைக் கொன்று அரசையும் அவன் மனைவியையும் மீட்டுத் தருகிறான். செருக்கும் சினமும், காமமும் ஓர் அரசனுக்குப் பெருங்குற்றங்களாகும் என்பதனை,

செருக்கும் சினமும் சிறுமையும் இல்லார்
பெருக்கம் பெருமித நீர்த்து (431)

என்று திருவள்ளுவர் குறிப்பிடுகிறார். இம்மூன்றும் இருந்தமையால் வாலி அழிவுக்கு ஆட்படுகிறான். அரசனின் தீயஒழுக்கங்கள் அவன் ஆட்சியை எங்ஙனம் அழிக்குமென்பதை வாலியின் வாயிலாக உணர்த்தும் கம்பன், 'பக்குவம் பெறாதவன் பதவி பெற்றால் பதவி இன்பத்தில் மயங்கித் தவறுகள் செய்வான்' என்பதைச் சுக்கிரீவன் வயிலாக உணர்த்துகிறான்.

இராமனை வாலி பழித்தல்

மேன்மையான குலம், சிறந்த கல்வி, வெற்றி, பொருந்திய நற்குண

நற்செயல்கள், மூன்று உலகங்கட்கும் தலைமை, சிறந்த வலிமை, இவ்வுலகைப் பாதுகாக்கும் மேன்மை இவையாவும் நின்னுடையது. இங்ஙனம் இருக்க எல்லாம் அறிந்திருந்தும் எல்லாவற்றையும் மறந்தவர் போல அந்தத் திண்மைகள் எல்லாம் கலங்குமாறு நீ இப்படிச் செய்வது நல்லதோ? என வினவுகிறான் வாலி. இதனை

குலம்இது கல்விஈது கொற்றம்ஈது உற்றநின்ற
நலம்இது புவனம்மூன்றின் நாயகம்உன்னது அன்றோ
வலம்இது இவ்வுலகம்தாங்கும் வண்மைஇது என்றால் திண்மை
அலமரச் செய்யலாமோ? அறிந்திருந்து அயர்ந்து ளார்போல் (311)

என்னும் பாடலில் கம்பன் விளக்குகிறான்.

இராமன் கூறும் நல்லரசு

இராமன் சுக்கீரீவனுக்குக் கூறும் அறிவுரை வாயிலாக நல்லரசின் இலக்கணத்தை நவில்கின்றான் கம்பன். புகை இருக்குமிடத்தில் எரியும் தீயும் உண்டென்பதை மக்கள் அறிவர். மலர்ந்த முகமும் இனிய சொற்களைப் பேசும் இயல்பும் பெருஞ்செல்வத்தைக் காப்பதில் கவனமும் இருத்தல் வேண்டும். பகைவர், நடுநிலையினர், நண்பர் என்னும் மூவகையினருள் எவர்க்கும் தீங்கு எண்ணாமல் செய்ய வேண்டியவற்றைச் செய்தல் பிறர் கூறினும் வசைச்சொற்களைத் தவிர்த்து இன்சொற்களைக் கூறல், உண்மை பேசுதல், இரப்பவர்க்கு வேண்டியன கொடுத்தல், பிறர் பொருளைக் கவர எண்ணாதிருத்தல் இவற்றை விருப்புடன் செய்க என்பதை.

செய்வன செய்தல் யாண்டும் தீயன சிந்தியாமை
வைவன வந்த போதும் வசையில இனிய கூறல்
மெய்யன வழங்கல் யாவும் மேவின வெகல் இன்மை
உய்வன ஆக்கித் தம்மோ டுயர்வன உவந்து செய்வாய் (417)

என்னும் பாடலில் அறிவிக்கும் கம்பன் 'நாயகன் அல்லன் நம்மை நனிபயந்தெடுத்து நல்கும் தாயென இனிது பேணித் தாங்குதி (420) என அறிவுறுத்துவதையும் அறிய முடிகின்றது.

ஒரு நல்லரசுக்கு, அறிஞர்கள் நிரம்பிய அமைச்சரவை கட்டாயம் இருத்தல் வேண்டும் என்றும், வாய்மையும் அறிவும் உடைய அமைச்சர்களோடு குற்றமற்ற சேர்க்கையை விரும்பிப் பிழையற்ற செயல்கள் புரிந்து அவர்களை அகலாமலும் அணுகாமலும் இருக்க

வேண்டும் என்றும் கம்பன் கூறியிருப்பது நோக்கத்தக்கது.

தாடகையையும் வாலியையும் கொன்ற இருசெயல்களும் வில்லறத்துக்கு எதிரான குற்றங்கள் என்பதை உணர்ந்து இராமன் வருந்துவதையும் கம்பன் குறிப்பிடத் தவறவில்லை (4137) அறத்துக்கு எதிராக நடந்த வாலியையும் இராவணனையும் இராமன் அறத்தின் வடிவமாய் வந்து கொல்கிறான் அறத்தின் மூர்த்தி என்றே கம்பன் இராமனைக் குறிப்பிடுகிறான் (3257)

'கிட்கிந்தை நகருக்குள் நாங்கள் வந்து தங்கினால் எங்கட்குப் பணிவிடைகள் செய்வதிலேயே உனக்குப் பொழுது கழிந்து விடும். எனவே தேர்ந்து செய்ய வேண்டிய அரசியல் நெறியில் தவறியவன் ஆவாய்' (426) என்று இராமன் வாயிலாகச் சுக்கிரீவனுக்கு அரசநீதியைக் கம்பன் பக்குவமாகப் புலப்படுத்துகிறான்.

இலங்கை அரசு

தமது தவத்தின் பயனாய்ப் பிரமனிடம் இருந்து மூன்றரைக் கோடி வாழ்நாளும் (அரைகடை இட்டு அமைவுற்ற முக்கோடி ஆயுள் 9944) முப்பத்து முக்கோடித் தேவர்களாலும் வெல்லப்படாத தன்மையும் (9899) ஆயிரம் மறைப் பொருள் உணர்ந்த அறிவும் (6118) போரில் வெற்றியே அன்றித் தோல்வியை அறியாத பேராற்றலும் பேரறிவும் வாய்ந்தவன் இராவணன் என்று பெருமிதம் பொங்கப் பேசுகின்றான். இத்தகு இராவணன் அழிவை நோக்கி விரைந்ததை இலக்குவன் மூலமாக உணர்த்தும் கம்பன்,

_தேவியைச் சிறையில் வைத்தான்தேவரைஇடுக்கண் செய்தான்
பூசுரர்க்கு அலக்கண் ஈந்தான் மன்னுயிர் படைத்துத் தின்றான்
ஆசையின் அளவும் எல்லா உலகமும் தானேஆள்வான்
வாசவன் திருவும் கொண்டான் வழிஅலா வழிமேல் செல்வான் (6977)

என்னும் பாடலில் இராவணன் செய்த குற்றங்களைப் பட்டியல் இடுகின்றான். இராவணன் உள்ளத்தில் மூண்டெழுந்த காமத்தீ அவனின் வீரம், மானம் போன்ற சில உயர்ந்த பண்புகளை எரித்தது. பின்னர் அவனுடைய நகரத்தையும் எரித்தது. இறுதியில், அவனையே எரித்து அழித்தது. சீதையை வஞ்சகமாகக் கவர்ந்து இராவணன் அரசநீதியைப் புறந்தள்ளி, சூர்ப்பணகை தூண்டலால் மாரீசனின் துணை நாடி இவ்இழி செயலை மேற்கொண்டதாகக் கம்பன் பாடுகிறான்.

அறியாமைக் குற்றத்துக்கு வாழ்வு உண்டு. ஒழுக்கக் குற்றத்துக்கு இனத்தோடு அழிவுதர வாழ்வில்லை. இராவணன் எல்லாச் செல்வமும் எல்லாஅறிவும் பெற்றிருந்தும், பலவரங்கள் பெற்றிருந்தும் தாய்போல் தொழத்தக்க பிறன்மனைவியைக் காமுற்று வேண்டாதன செய்தமையால், ஒருமுறை தவறிய ஒழுக்கத் தீமையால் அழிந்தான். முக்கோடி வாழ்நாள் வாழ்வதற்கு இருந்தும், தன்தீமையைப் பல படிவங்களும் தடுக்கமாட்டாது குறுகிய காலத்தில் பழியோடும் மடிந்தான். இனத்தோடும் குடும்பத்தோடும் மடிந்தான்.

தலைவன் ஒருவனது ஒழுக்கத்தீமை எவ்வளவு பெரிய அழிவு செய்யும் என்பதனை இராமாயணக் காப்பியம் பைஞ்ஞிலத்துக்குப் பாடிக் காட்டியிருக்கின்றது. இருதலைவர்களின் இரு குற்றங்களால் தோன்றிய இராமாயணத்தால் நாம் அறிவது என்ன? முக்கியமான இடத்தில் தலைவர்கள் பேரறியாமைப்படக் கூடாது எனவும் விழுப்பமான ஒழுக்கத்தைக் கைவிடக்கூடாது எனவும் தலைவனே பேரறியாமையுற்றால் தலைவனே தீயொழுக்கனானால் விளைவுகள் காப்பியம் ஆகும். அறிவு வேண்டும். அதனினும் சிறந்த ஒழுக்கம் வேண்டும் என்று காட்டுவது இராமாயணம். தலைவர்களுக்கு இவை தவறின்றி வேண்டும் என்று காட்டுவது இராமாயணம். தலைவர்கள் தவறினால் உலகமும் ஏனை உயிர்களும் எவ்வளவு தொல்லையும் இழப்பும் பட நேரிடும் என்று காட்டுவது இராமாயணம் என்று அறிஞர் வ.சுப.மாணிக்கனார் இராமாயணம் குறித்த தமது சிந்தனையை வரையறுத்துக் கூறியுள்ளார்.

முடிவுரை

அரசியல் நெறிபிழைத்த வாலி, இராவணன் போன்றோர் மாண்டதைத் தெரிவிக்கும் கம்பன் எல்லாரும் எல்லாப் பெருஞ்செல்வமும் எய்தலாலே இல்லாரும் இல்லை உடையார்களும் இல்லை (166) என்னும் சமன்மைச் சமுதாயத்தைப் படைத்துக் காட்டுகிறான். மேலும் சாதி, இனம், பால், செல்வம், பிறப்பு இவற்றின் அடிப்படையில் சிறியர் என்று இகழப்படும் நிலை எவர்க்கும் இல்லை என்பதையும் பெண்களும் பொருந்திய கல்வியைப் பெற்றுச் சிறந்து விளங்கினர் என்பதையும், குடியாட்சி மாண்பையும் பொதுவுடைமைச் சிந்தனையையும் அந்நாளிலேயே வலியுறுத்திப் பாடிய கம்பன் புலப்படுத்தும் அரசியல் நோக்கையும், போக்கையும் ஒருவாறு ஊகித்து உணர முடிகின்றது.

கம்பரின் அமைச்சியல்

தை. அந்தோணிராஜ்
விரிவுரையாளர், தமிழ்த்துறை, ஸ்ரீசேவுகன் அண்ணாமலை கல்லூரி, தேவகோட்டை.

மக்களின் தேவைகளை நிறைவேற்றும் அரசும், நலத்திட்டங்களைச் செயல்படுத்துவதில் மன்னனுக்குத் தகுந்த ஆலோசனைகளை வழங்கும் அமைச்சரவையின் பங்கும் முக்கியமானது. கம்பராமாயணத்தில் காண லாகும் அமைச்சர்கள், அரசர்கள் ஆகியோரின் பண்புகளையும் செயல் திறன்களையும் ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

அமைச்சர்

ஒரு சிறந்த அமைச்சர் சொல்லாற்றல், செயல் தூய்மை, செயல் திறமை, நூலறிவால் செயல்களைச் செய்யும் திறன், மனஉறுதி, முயற்சி, குடிமக்களைக் காக்கும் கடமை இவற்றில் சிறந்தவராகவும் இருக்க வேண்டும். அரசரின் குறிப்பறிந்து நடக்கத் தெரிந்திருக்க வேண்டும். அரசருடன் எப்போதும் இணைந்தும் அரசியல் அறங்களை அறிந்திருக்க வேண்டும். கல்வியில் நிறைந்தவராகவும் அடங்கிய சொல்லை உடையவராகவும் திகழ வேண்டும். மேலும் மக்களுக்கும் அரசனுக்கும் நெருங்கிய தொடர்புடையவராக இருக்க வேண்டும். அஞ் சாமை, நற்குடிப்பிறப்பு, காக்கும் திறன், தேர்ந்த கல்வியறிவு, முயற்சி ஆகிய 5 குணங்களும் சிறப்பாக உடையவரே அமைச்சராவதற்குத் தகுதியானவர்கள் என்பதை,

வன்கண் குடிகாத்தல் கற்றறிதல் ஆள்வினையோடு
ஐந்துடன் மாண்டது அமைச்சு (632)

எனும் இக்குறளின் வழியாக விளக்குகிறார் வள்ளுவர். இக்கருத்துக்கள் பிரதிபலிக்கும் வகையில் கம்பரும் அமைச்சர்களைப் பற்றி விளக்குகிறார்.

நல்ல தொன்மையான குடியில் பிறந்தவர்களாகவும், பல கலைகளைக் கற்றவர்களாகவும், கேள்விச் செல்வமும் உலகியலறிவும் பெற்றவர்களாகவும் நடுநிலை மேற்கொண்டு கோபத்தினை ஒழித்து அறச்செயல்களை மேற்கொள்பவர்களாகவும் இருக்க வேண்டும் இதனைக் கம்பர்,

குலமுதல் தொன்மையும் கலையின் குப்பையும்
பலமுதல் கேள்வியும் பயனும் எய்தினார்
நலம்முதல் நலியினும் நடுவு நோக்குவார்
சலம்முதல் அறுத்து அருந்தருமம் தாங்கினார் (1318)

கேள்வி அறிவு பெற்றதும், கலைகள் பல கற்ற அமைச்சர்கள் அரசனுக்கு உற்றுழி உதவும் தூண் போன்றவர்கள் என்னும் கருத்தினையே கம்பர் இப்பாடல்வழி விளக்கியுள்ளார்.

அமைமாந்தரின் செயல்கள் எவ்வாறு அமைய வேண்டும் என்பதற்கான அடிப்படைக்கூறுகளைக் கம்பர் தம் காப்பியத்தில் உணர்த்துகின்றார். அது பின்வருமாறு:

உற்றது கொண்டு மேல்வந்து உறுபொருள் உணரும் கோளார்
மற்றது வினையின் வந்தது ஆயினும் மாற்றல் ஆற்றும்
பெற்றியர், பிறப்பின் மேன்மைப் பெரியவர் அரிய நூலும்
கற்றவர் மானம் நோக்கின் கவரிமான் அனைய நீரார் (1319)

நிகழ்ந்தவற்றால் நிகழப் போவதை உய்த்துணர்பவர்களாகவும், ஊழ்வினையால் விரும்பத்தகாதவை நிகழ்ந்தால் அதனை மாற்ற வல்ல முயற்சி உடையவர்களாகவும் மானத்தில் கவரிமானை ஒத்தவர்களாகவும் இருக்க வேண்டும். மொத்தத்தில் அமைச்சர்கள் முக்காலத்தையும் உணர்ந்தவர்களாக மன்னனுக்குப் பக்க பலமாக இருக்க வேண்டும் என்கிறார்.

தம்முயிர்க்கு இறுதி எண்ணார் தலைமகன் வெகுண்ட போதும்
வெம்மையைத் தாங்கி, நீதிவிடாது நின்று உரைக்கும் வீரர் (1320)

இப்பாடலில் அரசன் கோபம் கொண்டாலும், தன்னுடைய உயிரை எண்ணிக் கலங்காது, நீதியை எடுத்துரைப்பதே சிறந்த அமைச்சரின் கடமையாகும்.

அமைச்சரின் கடமை எவ்விதம் அமைய வேண்டும் எனில் அரசருடைய குறிப்பை அறிந்து, தக்க காலத்தை எதிர்நோக்கி, வெறுப்பில்லாதவற்றையும் விருப்பமானவற்றையும் அரசர் விரும்புமாறு சொல்லவேண்டும் என்னும் வள்ளுவரின் கருத்தும் இங்கு குறிப்பிடத் தக்க ஒன்றாகும்.

அமைச்சரவை எவ்வாறு திகழ வேண்டும் என்பதற்கும் எவ்வாறு இருக்கக்கூடாது என்பதற்கும் கம்பராமாயண நிகழ்வுகளே சான்றாகின்றன.

சுக்கிரீவனின் அமைச்சரவை

ஒரு நல்லரசுக்கு அறிஞர்கள் நிரம்பிய அமைச்சர் அவையும் இன்றி யமையாதது என்பது கம்பரின் கருத்தாகும். சுக்கிரீவனுக்கு முடிசூட்டிய பின் இராமன் அவனுக்கு அறிவுரையில் முதற்கண் அமைச்சர் அவையைத்தான் வற்புறுத்துகிறான்.

வாய்மைசால் அறிவின் வாய்த்த மந்திரமாந்தரோடும்
தீமைதீர் ஒழுகின்வந்த திறத்தொழில் மறவரோடும் (4122)

என்று வாய்மையொடு பொருந்திய அறிவுரை தரும் அமைச்சர் பெரு மக்களும், தீமை, செய்யாத மறவரும் ஒரு நாட்டிற்குத் தேவை என்பதை கம்பர் இப்பாடல் வழி விளக்குகிறார்.

சுக்கிரீவனுக்கு முடிசூட்டியபின் இராமனுக்குப் பணி செய்ய விரும்பும் அனுமனை நோக்கி,

———— ஐயநின்போல
பெரும்பொறை அறிவினோரால் நிலையினைப் பெறுவது அம்மா (4143)

எனக் குறிப்பிடுகிறார். அனுமனைப் போன்று பெரும்பாரத்தைத் தாங்க வல்ல அறிவுடையவர்களாலேயே அவ்வரசு நிலைபெறும் என்ற கருத்து குறிப்பிடுகின்றது.

இராவணனின் அமைச்சரவை

இராவணன் ஆட்சியிலும் அமைச்சர்கள் இருந்தனர். அரக்கர் இனமாயினும் அங்கேயும் நல்ல அமைச்சர்கள் அரசவையை அணி செய்தனர்.

ஆட்சியும் அமையும் என் அரசும் நன்றென
சூழ்ச்சியின் கிழவரை நோக்கிச் சொல்லுவான் (6081)

இராவணன் அமைச்சரவையில் சூழ்ச்சியில் வல்லவர்கள் இருந்தனர் என்பதை இப்பாடல்வழி அறியலாம். இராவணனின் அமைச்சர்கள் அறிவுடையவராக இருந்தும் அவன் அவர்கள் சொல்லைக் கேட்க வில்லை. இத்தகைய அரசன் எவ்வாறு கெடுவான் என்பதை வள்ளுவர்,

இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னர்
கெடுப்பா ரிலானுங் கெடும் (448)

அரசின் தவறுகளைக் கடிந்து தவற்றைச் சுட்டிக் காட்டுபவர் இல்லாமல் போனால் அந்த அரசு அழியும் என்பது வள்ளுவரின் கருத்தாகும். சீதை, தன்னைக் கவர்ந்து வந்து சிறை வைத்த இராவணனை நோக்கி,

கடிக்கும் வல்அரவும் கேட்கும் மந்திரம் களிக்கின்றோயை
அடுக்கும் ஈதுஅடாது என்று ஆன்ற ஏதுவோடு அறிவுக்காட்டி
இடிக்குநர் இல்லை, உள்ளார், எண்ணியது எண்ணி உன்னை
முடிக்குநர் என்றபோது முடிவு அன்றி முடிவது உண்டோ? (5204)

எனக் கூறினாலும், இராவணன் அமைச்சர் அவையில் அவனின் தவறுகளைக் கூறி, இடித்துரைப்போரும் இருந்தனர். அறம் உரைத்த மூத்த அறிவுடையோரின் நட்புப் பெற்றிருந்தும் அவர்களின் சொல்லைக் கேளாமல் நடந்து கொண்டான். இவ்வாறு ஒரு அரசன் சீரும் சிறப்புமாக ஆட்சி புரிவதற்கு அமைச்சர்களின் துணை மிக இன்றியமையாதது என்பதை தெளிவாக உணர முடிகிறது.

கம்பர் பொதுமைக் கருத்தை சிறப்பிக்கிறார். தாம் எதிர்நோக்கும் தலைமையின் தன்மையை வெளிப்படுத்தும்பாங்கு வியப்படையச் செய்கிறது. தசரதச்சக்கரவர்த்தியைத் தான் காண விரும்பும் அரசனாகவும் ஓர் உண்மைத்தலைவனாகவும் சித்திரிக்கிறார். 'உயிரெலாம் உறைவதோர் உடம்பும் ஆயினான்' என்ற வரிகளிலிருந்து காக்கும் கடமை நெஞ்சம், நாடாளும் தலைவனுக்கு இருக்க வேண்டும் என உணர்த்துகிறார். மேலும், தானே முடிவெடுக்காமல் தக்காரைக் கலந்து கேட்கும் பண்பு அரசுக்குத் தேவை இதில் இரண்டு முறையுண்டு. முதலாவது அவையைக் கூட்டி நல்லதைத் தேர்ந்தெடுப்பது. இரண்டாவது தன் கருத்தை மன்னன் தெரிவிப்பதற்குச் சபையைக் கூட்டுவது, அயோத்தி அரசு முன்னதற்கும், இலங்கை அரசு இரண்டாவதற்கும் சான்றாகும். இராமன் இலக்குவன், அனுமன் சுக்கீவன் போன்றோரையும் ஆங்காங்கே கலந்து முடிவெடுப்பதையும் காண முடிகிறது. இதுவே அரசியலறத்தின் முதல்படி எனலாம்.

அரசனின் நற்கொள்கை, அமைச்சர் போன்ற துணையாளர்களின் அருமை ஆகியவற்றை பின்வரும் பாடல்வழி விளக்குகிறார்.

உமைக்கு நாதற்கும், ஓங்குபுள் ஊர்திக்கும்
இமைப்புஇல் நாட்டம்ஓர் எட்டுடை யானுக்கும்
சமைத்த தோள்வலி தாங்கினர் ஆயினும்
அமைச்சர் சொல்வழி ஆற்றுதல் ஆற்றலே (1421)

மந்திரிகள் சொல்லும் வழிநின்று அரசு செய்தலே ஆற்றல் என்று கம்பர் கூறுகிறார்.

கம்பனில் ஆட்சியியல்

முனைவர் **க. முருகேசன்**,
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை, தேசியக்கல்லூரி (தன்னாட்சி), திருச்சி

மக்களுக்கு நல்வாழ்வு வழங்கி அவர்கள் ஒன்றுபட்டு வாழ்வதற்கு உதவுவதுதான் ஒரு நாட்டு அரசின் தலையாய கடமையாகும். அதை 'கம்பனில் ஆட்சியியல்' என்ற தலைப்பில் ஆய்வதே இவ்வாய்வுக் கட்டுரையின் நோக்கமாகும்.

நம் பழங்காலத்தமிழ் நூல்கள் அனைத்தும் முடி அரசனைத்தான் பாராட்டிப் புகழ்ந்துரை வழங்கி இருக்கின்றன. அரசன் எப்படி ஆட்சி செய்ய வேண்டும் என்று இலக்கணம் வகுத்த வள்ளுவர்,

முறைசெய்து காப்பாற்றும் மன்னன் மக்கட்கு
இறைஎன்பது வைக்கப் படும் (388)

என்கிறார். மக்களைப் பிறர் நலியாமல் காப்பாற்றும் வல்லமையுடைய அரசன், பிறப்பால் மனிதனே ஆயினும் செயலால் கடவுளாக மதிக்கப்படுவான். மக்கள் நலத்தையே முதன்மையாக்கிக் கொண்டு அரசாட்சி செய்த ஒரு முடியாட்சி மன்னனைத்தான், கவிச்சக்கரவர்த்தி நம் காவியத்தில் அமைத்துக் காட்டுகிறார். ஆனால், அம்முடியாட்சியால் குடியாட்சிக்குரிய சுதந்திர இன்ப வாழ்க்கையைப் படைத்துக் காட்டு கிறார் கம்பர். அயோத்தி கோசல நாட்டின் தலைநகர்.

அம்மாண் நகருக்கு அரசன் அரசர்க்கு அரசன்:
.... மொய்ம்மாண் கழலோன் - தரு நல்லற
மூர்த்தி அன்னான் (168)

'நான் கூறப்போகும் காப்பியத்தலைவன் இராமன் அறத்தின் மூர்த்தி. அவனை இந்த உலகனுக்குத் தந்த, தந்தையாக இருப்பவன், நல்லறத்தின் மூர்த்தி அன்னான்' என்று தசரதனை முதன் முதலாக அறிமுகப்படுத்துகிறார் கம்பர்.

நல்லறம்

தசரதனும் வாய்மை குன்றா மன்னன், வாய்மை அறத்தைப் பற்றி நிற்பவர்களுக்கு வாழ்க்கையில் சோதனை வரும். தசரதன் பின்பற்றி வந்த வாய்மைக்கும் வந்த சோதனைகளும் அப்படித்தான்.

கோசல நாட்டு அரியாசனத்தில் இருந்த தசரதன் கொடுத்த வாக்கு ஒன்றிற்கும் மேற்பட்டவையாகும். கேகய நாட்டு மன்னனுக்குக் கொடுத்தது ஒன்று. மற்றொன்று. சம்பராசுரப்போரில் வெற்றிக்குக் காரணமான கைகேயிக்கு கொடுக்கப்பட்டது. அரசவையில் அமைச்சர்கள் முன்னிலையில் இராமனுக்கு முடிசூட்டுவேன் என்ற வாக்குத் தசரதனுக்கு காலனை அழைக்கும் காலமாயிற்று.

வாய்மை, இரகுவம்சத்தின் மரபு இவ்விரண்டையும் காக்க விரும்பிய தசரதன் அறிவில் ஒரு தெளிவு ஏற்பட்டது. இதற்காக, இராமனைக் கைகேயியிடமும், பரதனைக் கோசலையிடமும் வளர வைத்தான்.

கொள்கை பெரிதா? உயிர் பெரிதா? சான்றோர்களுக்குக் கொள்கை பெரிதாக இருக்கும். உயிர் சிறிதாகிவிடும். கொள்கைச் சான்றோன் தசரதன். அதனால் இந்த இரண்டன் நல்லறத்தையும் காக்க வேண்டி உயிர் கொடுத்தான்.

கேகய நாட்டு மன்னனிடம் கொடுத்த வாக்கின்படி, பரதன் நாடாள கோசல நாட்டு ஆட்சியில் உள்ளான். கைகேயிக்குத் தந்த வாக்கின்படி நின்மகன் ஆள்வான் என்றும், என்சேய் வனம் ஆள வேண்டும் என்றும் வரம் கொடுத்து வாய்மையை நிலைநாட்டிவிட்டான்.

கோசல நாட்டு மன்னனிடம் கொடுத்த வாக்கின்படி. பரதன் நாடாள கோசல நாட்டு ஆட்சியில் உள்ளான். கைகேயிக்குத் தந்த வாக்கின்படி நின்மகன் ஆள்வான் என்றும், என் சேய் வனம் ஆள வேண்டும் என்றும் வரம் கொடுத்து வாய்மையை நிலைநாட்டிவிட்டான்.

கோசல நாட்டு அரியாசனத்தில் இராமன் பாதுகை அமர்த்தப்பட்டு இருப்பதால், 'மூத்த மகன் ஆள்தல்' என்ற மரபும் காக்கப்பட்டது. அரசவையில் சொன்னவாக்கும் நிறைவேற்றப்பட்டது. இவ்வளவு பெருஞ்சோதனைக்கு இடையில் வாய்மையும் மரபையும் காப்பாற்றிய தால் தான் தசரதன் நல்லறமூர்த்தி அன்னான் ஆகிறான். அரசாட்சியில் இருப்பவர்கள் எதற்கு முதல் இடம் கொடுத்து நாட்டை ஆள வேண்டும் என்பதற்கு, தசரதன் அரச வாழ்க்கை ஓர் எடுத்துக்காட்டாகும்.

முடியாட்சியில் குடியாட்சி

மக்கட்கவிஞர்கள், தம் நிகழ்கால நிகழ்ச்சியில் நின்றுகொண்டு, கடந்தகாலச் செயலைத் திரும்பிப்பார்த்து எதிர்கால நல்வாழ்விற்கு வழி

காட்டுவார்கள். கம்பர் கடந்தகால நாட்டுஅரசியல் அமைப்பைக் கூர்ந்து கவனித்தான். தம்காலத்திலும், அந்த பழைய அரசியலே நடப்பதைப் பார்த்தார். அந்த அரசியலமைப்பில், தாம் கண்ட குறைபாடுகளை எடுத்துக்காட்டத் துணிந்தார் கவிச்சக்கரவர்த்தி.

'மன்னனுக்காகத்தான் மக்கள் மக்களுக்காக அல்ல மன்னன்' என்ற அடிப்படையைக் கொண்டது பழைய அரசியல் அமைப்பு.பழம் புலவர்கள்,

நெல்லும் உயிர்அன்றே நீரும் உயிர்அன்றே
மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்"

என்று இலக்கணம் வகுத்து விட்டனர்.

மன்னனாகிய உயிர், மக்களாகிய உடலை எப்படி வேண்டுமானாலும் ஆட்டிப் படைத்துக்கொள்வது பழைய அரசியல் அமைப்பு மக்கள் நலத்திற்காகத்தான் மன்னன் செயல்பட வேண்டும். தனது நலத்தைத் துறப்பது தான் சிறந்த அரசியலாகும். கம்பர் தம் காப்பியத்தில், வரும் கதாபாத்திரத்தின் மூலமாக அந்த நல்ல அரசியலை அமைத்துக் காட்டுகிறார். இவர்கூறும் அரசியல் அமைப்பிலும் உயிர் உடல் காட்டப்படுகின்றன. ஆனால் அவை, பழைமையினின்றும் மாற்றிப் புதுப்பித்துக் காட்டப்படுகின்றன. 'உயிரெலாம் உறைவது ஓர் உடம்பும் ஆயினான்'(138) என்று, கோசல நாட்டு மன்னன், 'சென்று வாழ் உயிர், நின்று வாழ் உயிர் எல்லாம்' தாங்கிக் கொள்ளும் உடம்பாக இருந்தான். இவ்வாறு முடியாட்சியில் குடியாட்சி நடத்தும் பாங்கினை பண்புடனே நெறிப்படுத்தியுள்ளார்.

பொதுவுடைமை

தனி உடைமைக்கு மறுதலையானது பொதுவுடைமை. அரசாட்சி அமைப்பில், தனிஉடைமைதான் செல்வாக்குப் பெற்றிருந்தது. பழங்காலம் முதல் கம்பர் காலம் வரை 'தனி உடைமை ஆட்சி அமைப்பில் என்ன குறை நேர்கின்றது? அதனை எப்படி மாற்றி அமைக்கலாம்? என்ற சிந்தனை கம்பருக்கு முற்பட்ட கவிஞர்களிடையே தோன்றியிருக்க வாய்ப்பில்லை.

கம்பர் தன் காப்பியத்துள் வரும் கதாபாத்திரங்களே இந்த நற் சிந்தனையைக் கம்பர் மனத்தினுள் தோற்றிவிக்கலாம் தசரதன் மூலமாகத் தனியுடைமையின் இந்தக் குறைபாட்டைக் கண்ட கம்பர், அம்மன்னனுடைய மகன் மூலமாக, இந்தக் குறைபாட்டுக்குரிய ஆட்சி அமைப்பாகிய தனியுடைமையை மாற்றிக் காட்டித் துணிந்துவிட்டார்.

கம்பன் உபதேசித்த ஆட்சியியல்

முனைவர் **பீ ரகமத்பீ**

உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை, சீனிவாசன் கலை அறிவியல் கல்லூரி, பெரம்பலூர்.

கம்பனின் காவிய நாயகன் இராமன், இராவணன் என்னும் அசுரனை அழிப்பதற்காக பிறப்பெடுத்த அவதாரபுருஷன். மனிதப் பிறப்பில் உயர்ந்தவன். அவனுக்கு ஐம்பூதங்களும் கட்டுப்படும். இராமன் புனிதன்; உத்தமன். நல்லறங்களை இளமையிலேயே தெரிந்து நடப்பவன். அவனுக்குத் தேவையா அறிவுரை? என்றில்லாமல் தசரதன் இராமனுக்கு முடிசூட்ட விழைந்தபின் வசிட்ட முனிவரை அழைத்து மன்னனாகப் போகும் இராமனுக்கு, அரியணையில் அமரப்போகும் மன்னவனுக்கு என்னென்ன நீதிகளைக் கூற வேண்டுமோ? அதனை எல்லாம் கூறி உபதேசியுங்கள் என்று கூறுவதாகக் கம்பன் பாடல்கள் இயற்றியுள்ள விதம் அருமை.

"மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்" மன்னன் ஒழுக்க சீலனாகவும், பெரியோரை மதிப்பவனாகவும், அறிஞர் சொற்படி நடப்பவனாகவும், அந்தணரை மதிப்பவனாகவும் இருக்க வேண்டும் என்பதனை வெகுஅழகாக வெளிப்படுத்தியுள்ளார். அதுவும் ஒவ்வொரு அறிவுரையும் கூறிவிட்டு இதனைச் செய்யாவிட்டால் கேடு விளையும் என்பதையும் வினாத்தொடுப்பது போலக் கூறியுள்ளமை சிறப்பாகும். அந்தணர்களைப் பேணுதல் வேண்டும் என்பதனை அரசனுக்குரிய முதல் அறமாகப் போதிக்கிறார் வசிட்டர்.

அந்தணர்களைப் பேணுதல் எத்துணை அவசியம் என்பதை வள்ளுவர் குறிப்பிடுகையில் அந்தணர்கள் எப்பொழுதும் அறவழியில் நடப்பவர்கள். அவர்கள் எல்லா உயிர்களிடத்தும் அறத்தைக் கடைபிடிப் பதனால்தான் அந்தணர் என்கிறார்கள். அதோடு மட்டுமல்லாமல் அவர்கள்கூறும் அறம் நிறைந்த அறிவுரைகள் அவர்கள் எத்தனை உயர்ந்தவர்கள் என்பதைக் காட்டிவிடும் என்கிறார். இதே கருத்தைக் கம்பனும் இராமனுக்கு வசிட்டரின்மூலம் அந்தணர் பேணுதல் எத்தனை அவசியம் என்பதை, **"பெரியார் அந்தணர் பேணுதி உள்ளத்தால்"** (அயோ-15) என்ற பாடலின்மூலம் விளக்குகிறார். மேலும் ஒரு மன்னனாகும். பேறுபெற்றவன் அந்தணர்களை முனிதல் கூடாது. அவர்கள் மனம் மகிழ்ந்து அருள் செய்யும்படி நடந்துகொள்ள

வேண்டும். தேவர்களில் துன்பப்படுபவர்களையும், துன்பப்பட்டு உயர்ந்தாரையும் அவர்களை முறையோடு பேணுதல் வேண்டும் என்பதை,

அந்தணாளர் முனியவும் ஆங்கு அவர்
சிந்தையால் அருள் செய்யவும், தேவருள்
நொந்து உளாரையும், நொய்து உயர்ந்தாரையும்,
மைந்த! எண்ண வரம்பும் உண்டாம்கொலோ? (16)

என்று இப்பாடலின்மூலம் விளக்குகிறார். தீவினையின் நீங்கிய மேலவர்களின் தாளைச் சென்னிமேற்கொண்டு வணங்கி, அவர்களைப் புகழ்ந்து போற்றினால், அவர்களிடம் இனிய மொழிபேசி அவர்கள் இட்ட கட்டளையை விரும்பிச் செய்வதால் உண்டாகும் நன்மையோ பெரியதாகும். அறவோர்கள் கூறினால் எல்லாம் நடக்கும். விதியையே மாற்றியமைப்பவர்கள் அவர்களைப் பேணுதல் உன் தலையாயக் கடமை என்கிறார்.

தெருளும் நல்அறமும், மனச் செம்மையும்
அருளும், நீத்தபின், ஆவது உண்டாகுமோ? (19)

என்ற பாடலில் நல்லறம் பேணாமை, மனதில் செம்மைப் பண்பு, அருளுடைமை இவையாவும் இல்லாமல் போனால் அது மன்னனுக்கு அழகல்ல. ஆகையினால் அறத்தைக் கடைப்பிடிக்க வேண்டும் என்கிறார். சூதும் வாதும் இராமனிடம் இல்லையே எப்படி அறிவுரை சொல்லுவது என்று கம்பனுக்குத் தோன்றி இருக்கும் போலும். ஆகை-யினால் நீதிக்கே மைந்தனான இராமனே சூதும் வாதும் உன்னிடம் இல்லை. ஆனாலும் துன்பம் தருபவை இவையெனச் சுட்டுவது என்கடமை. அதனால் இதனையும் கேட்டுக் கொள் என்று வசிட்டர் இராமனிடம் கூறுவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

சூது முந்துறச் சொல்லிய மாத்துயர்
நீதிமைந்த! நினக்குஇலை; ஆயினும்
ஏதம் என்பன யாவையும் எய்துதற்கு
ஓதும் மூல அவை என ஓர்தியே (20)

மன்னன் என்பவன் யாருடனும் பகை கொள்ளாமல் இருந்தால் போரே இல்லாமல் நாடு அமைதியாக இருக்கும். போரில்லாமையினால் புகழ் குறைந்து விடாது. மன்னனின் படைகளும் குறைந்து விடாது.

படைகளும் புகழும் குறையும்படி பகை கொண்டானால் எல்லாம் அழிந்துவிடும் என்கிறார்.

யாரொடும் பகை கொள்ளலன் என்ற பின்
போர் ஒடுங்கும்; புகழ் ஒடுங்காது; தன்
தார் ஒடுங்கல் செல்லாது; அது தந்தபின்
வேரொடும் கெடல் வேண்டல் உண்டாகுமோ? (21)

என்ற பாடலின் மூலம் விளக்குகிறார்.

ஒரு செயலுக்குரிய கருவியும் காலமும், செய்யும் வகைமையும், செய்யப்படும் தொழிலையும் சிந்தித்துச் சிறப்பாகச் செய்ய வல்லவனே அமைச்சன். ஆகையினால் அமைச்சனின் சொற்படி மன்னன் நடக்க வேண்டும் என்பதை,

அமைச்சர் சொல்வழி ஆற்றுதல் ஆற்றலே (23)

என்ற பாடலடியில் விளக்குகிறார். எவ்வுயிரும் தம்முயிர் போல் காக்கும் தன்மை உடையவனாக மன்னன் இருக்க வேண்டும் என்பதனை,

அன்பின் நல்லது ஓர் ஆக்கம் உண்டாகுமோ? (.24)

என்புதோல் போர்த்த, மனிதர்கள், தேவர்கள் மூவுலகிலும் அன்பைக் காட்டிலும் சிறந்தது உண்டோ? என்கிறார் கம்பர். உலகமே உயிராக, உயிராகிய உலகைத் தாங்குபவன் உடலாகிய மன்னன் அறத்தோடு மக்களைக் காத்தாலே போதும், வேள்வி செய்து பெறவேண்டிய அறங்கள் உண்டோ? என்கிறார் கம்பர்.

காட்சிக்கு எளியன் கடுஞ்சொல்லன் அல்லனேல்
மீக்கூறும் மன்னன் நிலம் (386)

நலிந்தவர்களும், வறியவர்களும் எளிதாகக் காணத்தக்கவனாகவும், கடுஞ்சொல் கூறாதவனாகவும் உள்ள அரசன் நாட்டை உலகமக்கள் உயர்த்திக் கூறுவார்கள் என்கிறது குறள் இதனை கம்பன் கூறுகையில் இனிய சொற்களைப் பேசுபவனாகவும், கருணையாளனாகவும், வினைபுரிபவனாகவும், நல்ல சிந்தனையாற்றலும், மனத்தூய்மை உடையவனாகவும், விழுமியப் பண்புடையவனாகவும், எங்கும் வெற்றி உடையவனாகவும், எந்த நேரத்திலும் நீதிநெறி தவறாதவனாகவும் இருக்கும் மன்னவனுக்கு எந்த நாளிலும் அழிவே கிடையாது எனவும்,

இனிய சொல்லினன் ஈகையன் எண்ணினன்
வினையன் தூயன் விழுமியன் வென்றியன்
நினையும் நீதிநெறி கடவான் எனின்
அனைய மன்னற்கு அழிவும் உண்டாம் கொலோ (26)

என்ற பாடலில் திருக்குறளின் கருத்துக்கு ஏற்பக் கம்பனின் கவிப் புலமை பெருமையுறுகிறது. மேலும் ஒழுக்கம் நீங்கிய செயல்களைத் தவிர்த்து, நல்லவர்களைச் சார்ந்தே வாழ்ந்தால் மன்னனுக்கு எந்தத் துன்பமும் இருக்காது என்றும், நல்வழி நடப்பவர்கள் கூறும் அறவுரைகளைக் கேட்டு நடத்தல் என்பது வழிவழியாகப் பின்பற்றி வரும் வழக்கமாகும். அதனைப் பின்பற்ற வேண்டும். செம்மையானவர்களின் தொடர்பு மன்னனுக்கு இருந்தால் அவர்களே மன்னனுக்கு போரில் உதவும் ஆயுதம் போல் இருந்து காப்பார்கள். எல்லாவற்றையும் விடவும் முக்கியமான ஒழுக்கமாகக் கம்பன் கூறுவது,

தூமகேது புவிக்கு எனத் தோன்றிய
வாம மேகலை மங்கையரால் வரும்
காமம் இல்லை எனின், கடுங்கேடு எனும்
நாமம் இல்லை நரகமும் இல்லையே (29)

என்ற பாடலின் மூலம் அழகிய மங்கையரின் மோகம் இல்லையெனில் மன்னவனுக்கு கெட்ட பெயரும் வராது. அவனுக்கு நரகமும் இல்லை என்கிறார். திருமாலின் அவதாரமான இராமனாக இருந்தாலும் அவன் அயோத்தி மன்னனாக வேண்டிய மானிட மன்னன். அவனுக்கு அறிவுறுத்தல் என்பது அவசியம் என்பதனை தசரதன் சொல்ல, வசிட்டரை இராமனுக்குப் போதிக்க வைக்கிறான் கம்பன். கம்பனுக்கு நிகர் கம்பனே தான்.

கம்பனின் சமுதாய லட்சியம் – ஜனநாயகம்

இரா.முல்லை,
செயலாளர், வாணியம்பாடி பாரதி தமிழ்ச்சங்கம், கேத்தாண்டப்பட்டி, வே. மா.

சங்க இலக்கிய மரபின் அடிப்படையில் படைத்த அனைத்து படைப்பாளிகளும் உலகம் முழுமைக்குமான இலக்கியமாக படைத்ததைத் துவக்க வரிகளிலேயே தெளிவாகக் குறிப்பிடுகிறார்கள். இம்மரபைத் தொடர்ந்து கம்பனும், தன் காப்பியத்தில் இயற்றியுள்ளான்.

தமிழ்நாட்டு வளம்

கம்பன் தன்காப்பியத்தில் கிட்கிந்தா காண்டம் - நாடுவிட்ட படலத்தின் பாட்டுக்களில் திருவேங்கடத்திற்குச் சென்று இங்கிருந்து தொண்டை நாட்டுக்கும், சோழநாட்டுக்கும், மலைநாட்டுக்கும், தமிழ்நாட்டுக்கும் சென்று தேடுங்கள் என்று சுக்ரீவன் கூறுவதாகக் கூறும் கீழ்க்கண்ட பாடல் வலியுறுத்துகிறது. இதில் தமிழகப் பகுதிகளின் வளத்தைக் குறிப்பிடுகிறான்.

வடசொற்கும் தென் சொற்கும் வரம்பு ஆகி,
நான் மறையும்,மற்றை நூலும்,
இடைசொற்ற பொருட்கு எல்லாம் எல்லை ஆய்,
நல் அறிவுக்கு ஈறு ஆய், வேறு
புடைசுற்றும் துணை இன்றி, புகழ் பொதிந்த
மெய்யேபோல் பூத்து நின்ற
அடைசுற்றும் தண் சாரல் ஓங்கிய
வேங்கடத்தில் சென்று அடைதிர் மாதோ.

தொண்டை நாட்டைப்பற்றியும், அதன் நீர்வளத்தை பற்றியும், கூறுமிடத்தில் தொண்டைநாடு சான்றோருடைத்து என்பதனையும் கம்பன் சுக்ரீவனின் வார்த்தைகளாலே பதிவு செய்து இதன் வழியாகச் செல்லுகிறபோது வீரர்கள் தங்களின் மனதைப் பறிகொடுத்து சற்று மயங்கி மோட்சமடைந்து விடுவார்கள் என்பதைக் குறிப்பிடுகிறார். இதனால் சீதையைத் தேடுகிற நோக்கத்தில் குறைபடும் என்பதைக் குறிப்பிடுகிறான். அதேபோல் காவிரி ஆற்றையும் அதன் வளத்தையும் குறிப்பிட்டு இவ்வழியிலே செல்லுகிறபொழுது முன்னெச்சரிக்கையுடன் செல்ல வேண்டும் என்று எச்சரிக்கின்றான்.

கோடுறுமால் வரை அதனைக் குறுகுதிரேல்,
உம்நெடிய கொடுமை நீங்கி,
வீடுஉறுதிர் இதலான் விலங்குதிர் அப்புறத்துள்
நீர்மேவு தொண்டை
நாடுஉறுதிர்; ஊற்று ஆதனைநாடி, அதற்பின்னை
அவைநளிர் நீர்ப்பொன்னிச்
சேடுறு தண்புனல் தெய்வத்திரு நதியின் இருகரையும்
சேர்திர் மாதோ -

என்றும், கம்பனின் தமிழ்ப்பற்றைக் கீழ்க்கண்ட பாடல் நன்கு உணர்த்துகிறது.

அத்திருத்தகு நாட்டினை அண்டர் நாடு
ஒத்திருக்கும் என்றால் எரை ஒக்குமோ?
எத்திறத்தினும் ஏழ் உலகும் புகழ்
முத்தும் முத்தமிழும் தந்து முற்றலால் -

என்றும் குறிப்பிடுகின்றார்.

கோசல நாட்டு வளம்

கம்பன் தன் காவியத்தில் கோசல நாட்டை புகழ்கிறபொழுது காவிரி யாற்றின் செழிப்பை ஒப்பிட்டுக் காட்டுகிறான். ஆகவே கம்பன் மக்கள் கவிஞனாக இருந்த காரணத்தினால் பெருவாரியான மக்கள் ஈடுபடும் தொழிலாகி உழவுத்தொழிலை உயர்த்திப் பாடியிருக்கிறார். கம்பனுக்கு உதவி புரிந்த சடையப்பவள்ளலைப் புகழ்ந்து பாடியிருக்கிறார். மன்னர்களை வாழ்த்திப் பாடவில்லை.

கம்பனின் சமுதாய இலட்சியத்தைக் கோசல நாட்டு ஓவியமாகத் தீட்டிக் காட்டுகிறான். இவ்வாறு சொல்கிறபொழுது கோசலநாட்டில் பொய்யும் புனைசுருட்டும் இல்லை என்றும், அறியாமை இல்லை என்றும், ஆங்கே வறுமை இல்லை என்றும் இருப்பவர், இல்லாதவர் என்கிற நிலை இல்லை என்பதையும் கீழ்க்கண்ட வரிகள் உணர்த்துகின்றன.

வண்மையில்லை- ஓர் வறுமை இன்மையால்
திண்மையில்லை - நேர் செறுநர் இன்மையால்
உண்மையில்லை - பொய்யுரை இலாமையால்
வெண்மையில்லை - பல் கேள்வி மேவலால்

அயோத்தி நகர வளம்

அயோத்தி மாநகரை குறிப்பிடுகிறபொழுது அங்கே திருடர்கள் இல்லை என்பதால் அங்கே காவல் செய்யவேண்டும் என்கின்ற அவசியம் ஏற்படவில்லை. மேலும் அங்கே உயர்ந்தவர், தாழ்ந்தவர், கொடுப்பவர், வாங்குபவர் இல்லாத நிலையைக் கம்பன் காட்டுகிறான். ஆங்கே எல்லோரும் சமமாக இருப்பதை சுட்டிக் காட்டுகிறான். இச்சமூக அமைப்பின் பாடல் வரிகளைப் பின்வரக் காணலாம்.

தெள்வார் மழையும் திரை இழியும் உட்க நாளும்
வள்வார் முரசம் அதிர் மாநகர் வாழு மக்கள்
கள்வார் இலாமைப் பொருட் காவலும் இல்லை; யாதும்
கொள்வார் இலாமைக் கொடுப்பார்களும்; இல்லை மாதோ
எல்லாரும் எல்லாப் பெருஞ் செல்வமும் எய்தலாலே

இல்லாரும் இல்லை, உடையாரும் இல்லை மாதோ - என்றும் கம்பனின் இலட்சியத்தை குறிப்பிடுகிறான். மன்னன் எவ்வாறெல்லாம் செயல்படவேண்டும், நடந்துகொள்ளவேண்டும் என்றும் இலக்கணம் வகுக்கிறான். பாலகாண்டத்தில் மன்னன் உயிரெல்லாம் உறையும் ஓர் உடம்புமாக இருக்கிறான் என்றும், மன்னன் உயிராகவும், மக்கள் உடம்பாகவும் இருக்கிறார்கள் என்று குறிப்பிடுகிறான். இதன்மூலம் கம்பன் குடியரசு என்கிற ஆட்சி இலக்கணத்தைத் தெளிவாகப் பதிவு செய்கிறான். இதே கருத்தை வசிட்டர் இராமனுக்கு அரசநீதி பற்றி எடுத்துரைப்பதாகவும் அமைகிறது கீழ்க்கண்ட பாடல் வரிகள்:

வய்யம் மன்னுயிராக, அம்மன்னுயிர்
உய்யத் தாங்கும் உடலன்ன மன்னனுக்கு
அய்யமின்றி, அறங்கட வாது ஆருள்
மெய்யின் நின்றபின் வேள்வியும் வேண்டுமோ? - என்றும்.

யாரொடும் பகைகொள்ளலன் என்றபின்
போரொடுங்கும்; புகழ்ஒடுங்காது தன்
தாரொடுங்கல் செல்லாது தந்தபின்
வேரொடும் கெடல்வேண்டல் ஊண்டாகுமோ? -

எனவும் அமைகின்றன.

அனைத்துப் பகுதி மக்களையும் மனித நேயத்தோடும், சகோதர உணர்வோடும் இணைக்கக்கூடிய செயலை, ஒற்றுமையை வலியுறுத்துவதை

காணலாம். இது உயர்ந்த பட்ச ஒருமைப்பாட்டை வலியுறுத்தும் ஜனநாயகப் பண்பாடு. வீடணனிடம் கம்பனின் இராமன் கூறுகிறான்

குகனொடும் ஐவர்ஆனேம் முன்புபின், குன்றுசூழ்வான்
மகனொடும், அறுவர்ஆனேம்; எம்முழை அன்பின்வந்த
அகன்அமர் காதல்ஐய! நின்னொடும் எழுவர்ஆனேம்;
புகல்அருங் கானம்தந்து, புதல்வரால் பொலிந்தான் நுந்தை.

இவ்வாறு வேறுள குழுவையெல்லாம் மானுடம் வென்றது என்கின்ற அடிப்படையில் ஜனநாயகப் பண்பைக் கம்பன் வலியுறுத்துகிறான். கம்பனை, பாரதி முன்னோடியாகக் கொண்டதால்தான் மகாகவி பாரதி ஜனநாயகப் பண்பை வலியுறுத்தும் வகையில் தனது பாடல் வரிகளைக் குறிப்பிடுகிறான்.

எல்லாரும் ஓர்குலம் எல்லாரும் ஓரினம்
எல்லாரும் இந்திய மக்கள்
எல்லாரும் ஓர்நிறை எல்லாரும் ஓர்விலை
எல்லாரும் இந்நாட்டு மன்னர்

முடிவுரை

'கம்பன் இராமகாதையின் உருவத்தையும், உள்ளடக்கத்தையும் தமிழ்ப் பண்பாட்டோடு படைத்தளித்தான். ஒருமனிதன் நூறு தலைமுறைகளில் கூடச் சாதிக்க முடியாத அரிய சாதனைகளைக் கம்பன் ஒருவனே சாதித்தவன் ஆவான்' என்று இலக்கிய பேராசான் ப.ஜீவனந்தம் அவர்கள் குறிப்பிடுகிறார். மக்கள்தான் கம்பனுக்கு கவிச்சக்கரவர்த்தி என்ற பட்டத்தைச் சூட்டினார்கள். ஆகவே, மக்கள் கவியான கம்பன் ஜனநாயக சமூகத்தைப் படைக்க வலியுறுத்தினான் என்பதே இவ்வாய்வின் முடிவாகும்.

உலகமயச்சூழலில் உலக அமைதிக்கு கம்பர் காட்டும் அரசு

சுவாமி ஸதாசிவானந்தா
ஆராய்ச்சி மாணவர், சைவசித்தாந்தத் துறை, மதுரை காமராசர் பல்கலைக்கழகம்.

உலகம் இன்று தகவல் தொழில்நுட்பம் காரணமாக ஒரு கிராமமாக மாறியுள்ளது. இன்று பிரச்சனைகளும், தீர்வுகளும் பன்னாட்டு சம்பந்தப் பட்டுள்ளன. ஒரு காலத்தில் அமெரிக்காவிற்கும், ரஷ்யாவிற்கும் பனிப்போர் நடைபெற்று வந்தது. ரஷ்யாவின் சிதறலுக்குப் பின்பு அமெரிக்காதான் உலகின்போக்கை முடிவெடுக்கும் சக்தியாக வருமென்று உலகத்தவர்கள் கருதினார்கள். ஆனால் அமெரிக்காவும் வீழ்ந்து வருகின்ற காரணத்தினால் அடுத்து உலகின் போக்கை முடிவெடுக்கும் சக்தி எது? என்பது குறித்து அறிஞர்களிடையே பல்வேறு விவாதங்கள் நடைபெற்று வருகின்றன. இதுகுறித்து ஹார்வர்டு பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற ஆய்வில் எதிர்கால மோதல்கள் பண்பாட்டின் அடிப்படையில்தான் அமையும் என்று முடிவு செய்யப்பட்டது. இம்மோதலைத் தவிர்க்க அமைதியான உலகம் உருவாக உலகம் முழுவதிலும் உள்ள பண்பாடுகளில் உள்ள சிறந்த குணங்களை தேர்ந்தெடுத்து அவற்றின் கலவையால் புதியதொரு உலகப் பண்பாட்டை உருவாக்க வேண்டும். அத்தகைய உலகப் பண்பாட்டிற்கு, நமது பண்பாட்டின் சார்பாக உலகிற்கு ஒரு கருத்தை வழங்க முடியுமென்றால் அது கம்பன் தந்த ராமராஜ்ய கருத்தேயாகும். அந்த கருத்து என்னவென்பதை இக்கட்டுரையில் காணலாம்.

சாமுவேல்பி.ஹண்டிங்டன்: ஹார்வர்டு பல்கலைக்கழகத்தின் பேராசிரியர். சாமுவேல் பி.ஹண்டிங்டன் என்பவர் தனது பண்பாடுகளின் மோதல் (Clash of Civilization) என்கின்ற நூலில் 7 வகையான இனக்கூறுகளைக் கூறுகின்றார். இந்த இனக்கூறுகளின் பண்பாடுகள் உருவாக அவற்றின் சமயங்களே காரணம் அவை.

1. யூத தேசியம். (யூத சமயம்)
2. அமெரிக்க தேசியம் (புரட்டஸ்ட்டண்ட் கிறிஸ்தவம்)
3. ஐரோப்பிய தேசியம் (கத்தோலிக்க கிறிஸ்தவம்)
4. அரபு தேசியம் (இஸ்லாம் சமயம்)
5.சீன தேசியம் (கம்யூனிஸம்)

6. ஆப்பிரிக்க தேசியம்(பூரட்டஸ்ட்டண்ட் கிறிஸ்தவம்)
7. இந்து தேசியம் (இந்து சமயம்)

என்று 7 இனக்குழுக்களை, தேசியங்களை அடையாளப்படுத்தியுள்ளார். எதிர்காலப்போர் என்பது இந்தப் பண்பாடுகளுக்கிடையில்தான் நடைபெறும் என்று கூறுகின்றார். ஒவ்வொரு பண்பாடும் தனது அடையாளத்தை நிலைநிறுத்தவே முன்னிற்கும். இதன்மூலமாக உலகில் நிரந்தரமான போட்டியும், பதற்றமும் நிலவும். அதனால் உலகில் அமைதியை ஏற்படுத்த முடியாது. எனவே, அவரே மோதலைத் தவிர்க்க சிங்கப்பூர் அரசை மாதிரி அரசாங்கமாகக் கூறுகின்றார். இந்த சிங்கப்பூர் அரசு இராமனது அரசு போன்றதேயாகும்.

கம்பர் காட்டும் அரசு

கம்பராமாயணத்தில் மூன்று அரசுகள் பேசப்படுகின்றன. அவை 1) இராமனது அயோத்தி அரசு (கோசலை நாடு) 2) அனுமன், சுக்ரீவனின் கிட்கிந்தை அரசு. 3) இராவணனின் இலங்கை அரசு.

இராமனது அரசு: இங்கு மக்கள் அக அழகும், புற அழகும் பொருந்தி வாழ்ந்தார்கள். அதாவது பொருளாதாரத்திலும், பண்பாட்டிலும், வீரத்திலும் சிறந்து விளங்கினார்கள். இதனை கம்பராமாயணத்தில் கம்பர், பின்வருமாறு கூறுகின்றார். ராமராஜ்யத்தின் கட்டமைப்பு, ஆடவர் பெண்கள் பண்புகள், சமூக நல்லொழுக்கம், விருந்தோம்பல், வறியவர்க்கு ஈதல், கிராமமே விருந்தினர்களுக்காக அன்னசாலைகள் அமைத்தல் போன்றவற்றைக் கூறுகின்றார்.

வண்மை இல்லை, ஓர் வறுமை இன்மையால்;
திண்மை இல்லை, ஓர் செறுநர் இன்மையால்;
உண்மை இல்லை, பொய் உரை இலாமையால்;
வெண்மை இல்லை, பல் கேள்வி மேவலால். 84

இப்பாடல்மூலம் அந்நாட்டில் வறுமையில்லை, பகையில்லை, மக்களிடத்திலே பொய்யில்லை என்பதனை அறிகின்றோம். நாட்டு மக்களைப் பற்றிக் கூறும்பொழுது,

பொற்பின் நின்றன, பொலிவு; பொய் இலா
நிற்பின், நின்றன, நீதி; மாதரார்
அற்பின் நின்றன, அறங்கள்; அன்னவர்
கற்பின் நின்றன, கால மாரியே. (90)

கள்வார் இலாமைப் பொருள் காவலும் இல்லை; யாதும்
கொள்வார் இலாமைக் கொடுப்பார்களும் இல்லை மாதோ. - (165)

இப்பாடல்களில் இருந்து பெண்களின் பண்பாடும், அறம் சார்ந்த சமுதாயமும், திருட்டில்லாத சமுதாயமும் இருந்ததனைக் காண்கின்றோம். மேலும்,

அருந் தவத்தின் சாகம் தழைத்து, அன்பு அரும்பி, தருமம் மலர்ந்து,
போகங் கனி ஒன்று பழுத்தது போலும் அன்றே. - (167)

இப்பாடல் மூலம் அந்நாட்டு மக்கள் மத்தியில் தவமும், தர்மமும் பழுத்திருந்தனை அறிகின்றோம். மேலும்

பெருந் தடங்கண் பிறைநுதலார்க்கு எலாம்,
பொருந்து செல்வமும் கல்வியும் பூத்தலால்,
வருந்தி வந்தவர்க்கு ஈதலும், வைகலும்,
விருந்தும், அன்றி, விளைவன யாவையே? (67)

பிறை முகத் தலை, பெட்பின், இரும்பு போழ்,
குறை நறைக் கறிக் குப்பை, பருப்பொடு,
நிறை வெண் முத்தின் நிறத்து அரிசிக் குவை,
உறைவ-கொட்பின ஊட்டிடம் தோறெலாம். (68)

இப்பாடல்களிலிருந்து அந்நாட்டு மக்கள் பிறர் நலனுக்காக உணவுக் கூடங்களை அமைத்து, சிறந்த உணவுகளை தானமாக வழங்கி வந்ததை அறிகின்றோம். இதன் மூலம் நமது நாட்டில் உணவை விற்காத காலமிருந்ததை உணர்கின்றோம். இதனையே, இன்று நமது நாட்டு நோபல் பரிசு பெற்ற அமர்தியாசென் அவர்கள் நலப்பொருளாதாரம் (Welfare Economics) என்கின்றார். மேலும் திருவள்ளுவரும் நாட்டைப் பற்றிக் கூறும்பொழுது,

நாடுஎன்ப நாடா வளத்தன நாடுஅல்ல
நாட வளம்தரு நாடு 739

என்கின்றார்.

கலம் சுரக்கும், நிதியம்; கணக்கு இலா,
நிலம் சுரக்கும், நிறை வளம்; நல் மணி
பிலம் சுரக்கும்; பெறுதற்கு அரிய தம்
குலம் சுரக்கும், ஒழுக்கம்-குடிக்கு எலாம் 69

மேற்கண்ட பாடல்கள் மூலம் கம்பன் காட்டும் அரசாட்சியில் சமூகம், அரசியல், பொருளாதாரம் மற்றும் பண்பாடு (கல்வி ஆன்மிகம்) ஆகிய பல்வேறு துறைகளில் முன்னேறிய அரசினைக் காண்கின்றோம்.

இராமனின் பெருமை

இராமன் என்றாலே ஒருவில், ஒருஇல், ஒருசொல் என்பதாகும். ஏகபத்தினி விரதன் ராமன் தந்தையின் சத்தியத்தைக் காப்பாற்ற 14 ஆண்டுகள் காடு சென்றான். கிட்கிந்தையையும், இலங்கையையும் வென்றபோதிலும் இராமன் அரசனாக விரும்பவில்லை. மாறாக, சுக்ரீவனுக்கும், வீடணனுக்கும் பட்டம் சூட்டினான். மலைவாசிகளின் தலைவனாகிய குகனையும், கிட்கிந்தையில் சுக்ரீவனையும், இலங்கையில் வீடணனையும் சகோதரர்களாக்கித் தனது குடும்பத்தை விரிவாக்கினான். உலகம் முழுவதும் நல்லவர்கள் ஆட்சியை மலரச் செய்தார். அயோத்தி மீண்ட இராமன் பரதன் விரும்பினால் அவரிடமே நாட்டை ஒப்படைக்க விரும்பினான். பரதன் விரும்பாமையால் குலகுருவின் ஆசியோடும், தம்பியர் துணையோடும் அறத்தோடும் சேர்ந்து அறநெறிவழிப்பட்ட ஆடசியை நிலைநிறுத்தினான். இதன் மூலம் இராமன் குறைகளை நிவர்த்தி செய்யவே சென்றான். அழிக்கச் செல்லவில்லை என்பதை உணரமுடிகிறது. (He went to fulfill not to destroy) இதனைக் கம்பன்

குகனொடும் ஐவர் ஆனேம் முன்பு; பின், குன்று சூழ்வான்
மகனொடும், அறுவர் ஆனேம்; எம்முழை அன்பின் வந்த
அகன் அமர் காதல் ஐய! நின்னொடும் எழுவர் ஆனேம்;
புகல் அருங் கானம் தந்து, புதல்வரால் பொலிந்தான் நுந்தை (6507)

என்ற பாடல் மூலம் தெளிவாக்குகிறான். இராமன் ஆளவேண்டுமென்ற எண்ணமற்ற அரசன். இத்தகைய அரசர்கள் தான் வேண்டுமென்று பிளாட்டோ தனது குடியரசு (Republic) என்ற நூலில் ஆள வேண்டு மென்ற எண்ணமற்றவர்கள் ஆட்சிக்கு வரவேண்டும் என்று கூறுகின்றார். இராமன் அத்தகைய அரசனாக விளங்கினான். சிறந்த அரசனும், சிறந்த குடிமக்களும், சிறந்த சமுதாயமும் ஒரு சிறந்த அரசாட்சியை வழங்கியது.

கிட்கிந்தை அரசு

வாலி, சுக்ரீவன், வாலியின் மைந்தன் அங்கதன் மற்றும் அனுமன்

போன்றோர் கிட்கிந்தையைச் சார்ந்தவர்கள். இவர்கள் உள்ளத்தால் நல்லவர்கள், அதாவது அக அழகு உடையவர்கள். ஆனால் புற அழகு இல்லாதவர்கள், புற அழகு என்பது அவர்களது சமுதாயப் பழக்கவழக்கங்கள், பேச்சு மொழி, மெய்ப்பாடு போன்றவை அடங்கும். இவர்களுக்கும் குடிக்கின்ற பழக்கம், பிறன்மனை நோக்குதல் போன்ற பழக்கங்கள் உண்டு.

இராவணனின் இலங்கை அரசு: இராவணனின் இலங்கை நகர அமைப்புகளாலும், மாடமாளிகைகளாலும், அழகிய அமைப்பைக் கொண்ட தங்கமயமானது. செல்வ வளமும் பெருகிக் கிடந்தது. இரத்தினங்களின் ஒளியினால் நகர் ஒளிபெற்று விளங்கியதால் சூரியனே விலகிச் சென்றதாகப் பார்க்கின்றோம். ஆனால் தனி மனித ஒழுக்கத்தில் அறம் சாராத வாழ்க்கையால், கருத்துச் சுதந்திரமின்மையால் போகம் அதிகரித்து இருந்த காரணத்தினால் அங்கு அக அழகில்லை.

சிறந்த அரசு எது? எந்த நாட்டில் பண்பட்ட மக்களும், சமூக அமைப்பும், அரசும் உள்ளதோ, அது சிறந்த அரசாகும். பண்பட்ட மக்களைக் கொண்ட பண்பட்ட நாடு சிறந்த ராஜ்யமாகும். (Ideal Nation with Ideal Men and Women) இதுகுறித்து சமூகச் சான்றோர்கள் என்ன கூறுகிறார்கள் என்பதைக் காண்போம்.

சுவாமி விவேகானந்தர்

மேலை நாடுகளுக்குச் சென்று வந்த சுவாமி விவேகானந்தர் நமது இந்து ஆன்மீகமும், மேற்கத்திய நாடுகளின் விஞ்ஞானமும் இணைந்த உலகம் உருவாகவேண்டுமென்றார். இந்து உள்ளமும், இஸ்லாமிய உடம்பும் கொண்ட மக்களை உருவாக்க வேண்டுமென்றார். சமய நல்லிணக்கத்தின் வழி உலக அமைதிக்குப் பாடுபட்டார். எனவே அவர் அக அழகும், புற அழகும் உடைய ஒரு சமுதாயத்தைப் படைக்கவிரும்பினார்.

மகாத்மா காந்திஜி

கம்யூனிஸம் என்பது பெரும்பான்மை மக்களாகிய தொழிலாளர்களின் நலனுக்காகப் பாடுபடுவது. (Welfare of Majority) முதலாளித்துவம் என்பது சிறுபான்மை முதலாளிகளின் நலன்வேண்டுவது. (Welfare of Minority) இவை இரண்டுமே மேற்கத்தியச் சிந்தனைகள். மகாத்மா காந்திஜி நமது இந்துஸ்தானத்தின் பண்பாட்டின்படி உலகை ஒரு

குடும்பமாக நினைத்து எல்லோரின் நலன் என்பதாக சர்வோதயம் (Welfare of All) என்ற கருத்தை வழங்கினார்.

டாக்டர் அப்துல்கலாம்: நமது முன்னாள் குடியரசுத் தலைவர் அவர்கள், நமது நாட்டை ஒரு முன்னேறிய நாடாக (Developed Country) மாற்றவேண்டும் என்று கூறினார். பலரும் இந்தக் கருத்துக்கு செயல் வடிவம் கொடுக்கும்போது நமது நாடு செல்வ வளத்தாலும், இராணுவ பலத்தாலும் தான் முன்னேறிய நாடாக இருக்குமென்று நினைக்கின்றார்கள். ஆனால் முன்னேற்றத்தில் பண்பாட்டைச் சேர்ப்பதில்லை. ஒரு பண்பாடு இல்லாமல் பாரதமில்லை. அந்தப் பண்பாட்டிற்கு அடிப்படையாக விளங்குபவை.

1) ஒருவனுக்கு ஒருத்தி என்பது. 2) வேற்றுமையில் ஒற்றுமை 3) கருத்துச் சுதந்திரம் 4) வழிபாட்டுச் சுதந்திரம் 5) ஜனநாயகம் 6) அனைத்து மதங்களையும் மதிப்பது. 7) எளிய வாழ்க்கை உயர்ந்த சிந்தனை 8) தியாக உணர்வு 9) சேவை மனப்பான்மை 10) பகிர்ந்தளிப்பதும், விருந்தோம்பலும் போன்ற குணங்களேயாகும்.

முடிவுரை

எப்படித் திருவள்ளுவர் சிறந்த கருத்துக்களையெல்லாம் தொகுத்து தனது திருக்குறளில் கூறினாரோ, அதுபோன்று உலகில் உள்ள சிறந்தனவற்றை எல்லாத் தேசிய இனக் குழுக்களிலிருந்தும் தேர்ந்தெடுத்து புதியதோர் உலகைப் படைக்கவேண்டும். இதற்கு உலகில் உள்ள சமூகவியல் அறிஞர்கள், ஆன்மிக அறிஞர்கள், அரசியல் அறிஞர்கள் மற்றும் விஞ்ஞானிகள் முன்வரவேண்டும். அப்படி வருகின்றபொழுது கம்பர் காட்டிய நல்லரசு முன்னுதாரணமாக இருக்கும். . இதன் மூலம் உருவாகும் அக அழகும், புற அழகும் உடைய புதியதோர் சிறந்த உலகம் ஆக இருக்கும்.

கம்பனில் அரசு கடைபிடிக்கத்தக்க மரியாதை முறையியல்

டி.என்.கிருஷ்ணமூர்த்தி
துணைத் தலைமைப் பெரியாளர், அந்தமான் லட்சத்தீவுகள் துறைமுகப் பணிகள்,
போர்ட் பிளேயர், அந்தமான் & நிகோபார்

முன்னுரை

கம்பர் காலத்து அரசாட்சியினையும் இன்றைய காலத்து அரசாட்சியினையும் ஒரே கண்கொண்டு பார்ப்பது என்பது ஓரளவு சிக்கல் நிறைந்த செயல்தான். எனினும், மக்களை ஆள்பவர்களைத் தேர்வு செய்வதில்தான் மாற்றம் இருக்கின்றதே ஒழிய, ஆட்சி செய்யும் முறை, நெறி ஆகியவற்றில் கம்பகாலமும் இக்காலமும் ஒன்றும் வெவ் வேறானதல்ல என்கின்ற மனஅலசலின் முடிவாய்த்தான் இக்கட்டுரை எழுகிறது. பாலகண்டப்பகுதியில் வரும் அரசு கடைபிடிக்கத்தக்க மரியாதை முறையியல் குறித்து மட்டும் இனி காண்போம்.

அறம் சார்ந்த அரசு

மக்களைக் காக்கின்ற அரசிடம், எப்போதும் அறம் சேர்ந்தே இருத்தல் வேண்டும். அறமற்ற வழிகளால் வருகின்ற பொருள்மீது எந்த அரசும் ஆசை வைக்காதிருத்தல் வேண்டும். சினம் கொள்ள வேண்டிய இடத்தில் சினமும் கொள்ளல் வேண்டும். அரசு பெற வேண்டிய வரிப்பணம், இவ்வளவுதான் இருக்க வேண்டும் என்பதை நன்கு அறிந்து கொள்ளல் வேண்டும். மக்கள்மீது சுமத்தப்படும் வரிகள் அவர்களுக்கு சிரமம் தராது, விரும்பியே அதனைச் செலுத்தும் வகையில் இருத்தல் வேண்டும். தன் ஆட்சிக்கு உட்பட்ட பகுதியில் வாழும் மக்களிடத்து மட்டுமல்லாது, அனைத்து உயிர்களிடத்தும் அன்பு காட்டி இரக்ககுணம் கூட்டி வாழ்ந்திடும் அரசு இருத்தல் அவசியம் என்பதை கம்பர் தனது வரிகளில் காட்டுகின்றார்.

முறை அறிந்து அவாவை நீக்கி முனிவுழி முனிந்து வெஃகும்
இறை அறிந்து உயிர்க்கு நல்கும் இசை கெழு வேந்தன் காக்கப்....

பெண் கல்வியும் செல்வமும்

ஒரு நாடு சிறப்புற்ற நிலையில் இருந்து, தொடர்ந்து அப்படியே இருந்திட வேண்டுமா? கம்பர் காட்டும் உன்னதமான வழி ஒன்று உளது.

அந்த நாட்டில் உள்ள பெண்களிடம் நீங்காத செல்வமும், நீங்கிடாத கல்வியும் இருந்திட வழிவகை செய்திடல் வேண்டும். மகளிரிடம் ஒரு முறை மட்டும் சேர்ந்திட்ட செல்வத்தினால் பயன் இல. அச்செல்வம் அவர்களிடமே நீங்காது இருந்திடவும் அரசு வழிவகை செய்திட வேண்டும். மேலும் மகளிர்க்கெனக் கல்வியும், அதுவும் நீங்கிடாத கல்வியாய் அமைந்திட அறிவுரை தருகின்றார் கம்பர்.

பெருந் தடங் கண் பிறை நுதலார்க்கு எலாம்
பொருந்து கல்வியும் செல்வமும் பூத்தலால்

பேரிடர் மேலாண்மை

இந்தியக் கடலோரப் பகுதிகள் சந்தித்த 2004ஆம் ஆண்டின் சுனாமிப் பேரலை, இந்திய அரசின் திட்டமிடும் இயக்கத்தையே மாற்றி அமைத்திருக்கிறது என்று கூறினால் அது மிகையாகாது. இத்தகைய பேரிடர் மேலாண்மையின் இருப்பை உணர்ந்து இதன்மீது கவனமும் செலுத்த ஆயத்தமாய் உள்ளது இப்போதைய அரசு. ஆனால் கம்பர் காலத்து கோசலஅரசு இதற்கெல்லாம் ஏற்கனவே தயாரான நிலையில் இருந்ததை கம்பர் கூறும்போது ஆச்சரியப்படாமல் இருக்க வாய்பில்லை. நிலத்தை அழித்துக் கொண்டிருத்தல்தான் கடல் நீரின் தன்மை என்கிறார் கம்பர். அத்தன்மையுடைய கடல் நீர் ஊழிக் காற்றால் மேலும் உந்தப்பட்டால் என்ன ஆகும்? கடல் நீர் தன் எல்லையினைக் கடந்து நிலத்தினூடே பாய்ந்து வரும். அப்படி வந்தாலும் எந்த அழிவும் இல்லாத சிறப்பைப் பெற்றதாக கோசல நாட்டின் பெருமை தனைக் கம்பர் கூறுகிறார். பேரிடர் மேலாண்மையின் ஆசான் என்று நாம் கம்பரை அழைக்க யார் தடை சொல்ல இயலும்?

வீடு சேர நீர் வேலை கால் மடுத்து
ஊடு பேரினும் உலைவு இலா நலம்
கூடு கோசலம்

குற்றமிலா குடிமக்கள்

அரசுஇயந்திரம் என்று, இதயமிலாத தன்மை பற்றிச் சொல்லிட்டாலும், அரசு என்பது, இதயமுள்ள மக்களின் கூட்டுத் தொகுப்பு தான் என்பதனை யாரும் மறுதலித்திட இயலாது. அத்தகைய அரசின் அங்கமாய் அமைந்திட்ட குடி மக்களும், தத்தம் பொறுப்பினை உணர்ந்து வாழ்தல் மட்டுமே, ஒட்டு மொத்த அரசின் வளர்ச்சிக்கு

தோள் கொடுப்பதாய் அமையும். அயோத்தி நகரின் மாண்பினைப் பேச வந்த கம்பர், இத்தகைய குடிமக்களைப் பெற்ற அரசு, என்பதாய்க் கவி வரைகின்றார். குற்றமே இல்லாத தரும சிந்தனையுடன் வாழும் அரசன் போலவே அளவற்ற குடிமக்கள் இருந்ததாய் அறிவிக்கின்றார் கவிஞர். மக்கள் எவ்வழி, மன்னர் அவ்வழி. இது பெரும்பாலோர் கூற்று. பெருங்கவியோ மன்னர் எவ்வழி மக்கள் அவ்வழி என்கின்றார். ஊனம் இல் அறநெறி உற்ற எண் இலாக் கோன் நிகர் குடிகள் என்ற நகரப் படலத்தின் கம்ப வரிகளே இதற்கு சான்று பகர்கின்றன.

அரசின் கடமைகள்

அரசு என்பது எப்படி அமைந்திட வேண்டும்? என்பதில், திடமான சிந்தனையினைக் கம்பர் தந்திருக்கின்றார். அரசோடு அறிவு கைகோர்த்திருத்தல் வேண்டும். அந்த அறிவு உண்மையான அறிவாய் அமைந்திருத்தல் வேண்டும். மேலும் முதன்மையுடையனவாகவும் இருந்திடல் வேண்டும். கருணை, தருமம், சாந்தம் இவைகளும் அரசோடு ஒட்டி உறவாடிக் கொண்டிருத்தல் வேண்டும். வீரம் அரசோடு கைகோத்திருத்தல் மிக அவசியம். அந்த வீரமோ, வலிமையோடு கூடியதாயும் இருந்திட விருப்பம் தெரிவிக்கின்றார் கவிச்சக்கரவர்த்தி. இத்துடன் கொடை, நீதி நெறியில் தவறாது நிற்கும் திறன் அவை அனைத்தும் அரசின் அத்தியாவசியத் தேவைகள் என்கிறார் கவிஞர். அவரது வார்த்தைகள் இன்றளவும் இம்மியும் மாற்றமில்லாமல் பயன் படுத்த ஏதுவாய் இருப்பதுதான் காலம் கடந்து வாழும் கவியின் சிறப்பு. இதோ அரசு நியதியினைக் கம்பர் அன்றே சொன்ன தீர்க்க தரிசன வார்த்தைகள்:

ஆதிம் மதியும் அருளும் அறனும் அமையும்
ஏதில் மிடல் வீரமும் ஈகையும் எண் இல் யாவும்
நீதிந் நிலையும் (அரசியல் படலம்)

மன்னராட்சியில் மக்களாட்சியின் மாண்பு

இன்றைய அரசின் மிகப்பெரிய குற்றச்சாட்டே, அவை மக்களை விட்டு விலகி இருப்பதான காரணம்தான். மக்களால் மக்களுக்காக ஆள உருவான அரசே, இப்படி மக்களை விட்டு விலகி நிற்பது வேதனையான உண்மை. ஆனால் மன்னராட்சி நடந்த கம்ப காலத்தில் அரசு எவ்விதம் மக்களோடு இருந்தது என்பதை ஒரு சிறு சம்பவம்

கொண்டு விளக்குகின்றார் கம்பர். காப்பிய நாயகனான இராமபிரான் நகர்வலம் வந்த போது, எதிர்ப்பட்ட மக்களை எவ்விதம் எதிர் கொண்டார் என்பது எல்லோரும் கவனிக்கத் தக்கதான ஒன்று. கருணையான முகம் துணை கொண்டு, செந்தாமரை மலர் போன்ற ஒளி வீசும் முகத்தின் தன்மை சற்றேனும் குறையாமல் குடிமக்களை வினவுகின்றாராம். அரசின் பார்வைக்கு தரத்தக்க செய்திகள் ஏதும் உண்டா? அரசின் முடிவுகள் உங்களுக்கு ஏதும் சிரமத்தை தரவில்லையே? இல்லறம் இனிதாய் இல்லாளும், வாரிசுகளுடனும் சுகமாயும் நோயற்று வலிமை பெற்றவர்களாக இருக்கிறார்களா? என்ற நலன் விசாரிப்பை நல்கிச் செல்கிறார் கம்பர் கதை நாயகன் வாய் வாயிலாக.

எதிர்வரும் அவர்களை எமையுடை இறைவன்
முதிர்தரு கருணையின் முகமலர் ஒளிரா
எது வினை இடல் இலை இனிதும் நும் மனைவியும்
மதிதரு குமர்ரும் வலியர்கொல் எனவே (திரு அவதாரப் படலம்)

பொதுவான நடைமுறை விதி

இன்றைய நவீன காலத்து மேலாண்மை சார்ந்த அறிவியல் துறை, வெளிப்படையான நிர்வாகம் நடந்திட அரசின் எல்லா நடவடிக் கைகளையுமே, எவ்விதம் செய்திடல் வேண்டும் என்பதைனை விதிகளாக்கி அதனை பொதுவான நடைமுறை விதி (Standard Operating Procedure) என்று பெயரிட்டு அழைப்பர். கம்பன் காவியத்தில் இப்போற்பட்ட அரசின் சிறு நடைமுறையிலும் எப்படி நடந்து கொள்ள வேண்டுமோ அப்படி நடந்து கொண்ட்தாய்க் குறிப்பு வருகின்றது. எனவே அப்பேற்பட்ட நடைமுறை விதிகள் இருந்திருக்கின்றது என்பதையும் அதனைத்தான் அக்கால அரசு கடைபிடித்திருக்கின்றது என்பதினையும் ஊகிக்க முடிகின்றது. "முகந்தனர் திருவருள் முறையின் எய்தினார்..." என்ற எழுச்சிப்படலப் பாடல் மூலம் தூதுவர்கள் அரண்மனையில் நடந்து கொள்ள வேண்டிய முறை இருந்ததை கம்பர் கவி உறுதி செய்வதை உற்று நோக்கிக் காண்க.

விசாரிப்பு மரியாதை

பொதுமக்களின் பார்வையில் அரசு கடைபிடிக்கத் தக்க மரியாதை முறையியல் (PROTOCOL) என்ற வார்த்தைப் பிரயோகம், அரசு சார்ந்தவர்களைக் கௌரவப்படுத்தும்போதும், அவர்களை அமர

வைத்தலின் போதும்தான் பொதுவான தேவையாகக் கருதுகின்றனர். அவ்வரிசையில் மாற்றம் ஏற்படும்போது அதனை அரசின் அங்கம் வகிப்போர் தனக்கு இழைக்கப்பட்ட அவமானமாய்க் கருதுகின்றனர் இன்றும் ஆளும் அரசின் அதிகாரிகள். இந்தச் சிக்கல் கம்ப காலத்திலும் இருந்திருக்க வேண்டும். இல்லையென்றால் சனகனின் சபையில் தசரதர் விசாரிக்கும்போது, மிகுந்த எச்சரிக்கையுடன் குற்றமற்ற முறையில் வரிசை முறையோடு விசாரித்த குறிப்பை கம்பர் ஏன் குறிப்பிட்டிருக்க வேண்டும்? "வழுஇல் சிந்தனையினான் வரிசையின் அளவளாய்" என்ற எதிர்கொள்படல வரிகள் இதற்குச் சான்று பகர்கின்றன.

அனைவர் மேலும் அன்பு

இன்றைய காலகட்டத்தில் குடும்ப அரசியல் என்பதினை மத்திய மாநில அரசியல் காட்சிகளில், சரவ சாதாரணமாய் இந்திய நாடு முழுவதும் காண முடிகின்றது. அனைவருக்கும் வாய்ப்புத் தரும் அரிய முயல்வு. தெரிந்தோ தெரியாமலோ முறியடிக்கப் பட்டுவிடுகின்றது இந்தக் குடும்ப அரசியல் காரணமாய்க் கம்பர் இதனை ஆதரிக்கின்றாரா? என்ற கேள்வியினை எழுப்பி அதற்கான விடையினைக் கம்பரிடமிருந்தே பெறவும் முடிந்தது. சனகர் அரண்மனையில் திருமண விருந்து நடக்கின்றது. அப்போது தாழ்ந்த நிலையில் உள்ளோர்க்கும் அழைப்புத் தந்து அவர்களும் வந்துள்ளனர். அவர்களை உபசரிக்கும் விதம்தனைப் பார்த்தால், மாப்பிள்ளையினை எப்படி உபசரிப்பரோ அதே மாதிரியாய் இருந்ததாய் கம்பர் காவியம் அறியத் தருகின்றது. "கொண்டாடலின் அன்புதான் இழிந்துளார்க்கும் இராமற்கும் ஒத்ததே" என்ற உலாவியல் படலப் பாடல் அதனை உறுதி செய்கின்றது. குடும்ப உறவு போன்று மக்களைப் பாதுகாத்த பேருண்மை கவிவரி மூலம் புலனாகின்றது.

முடிவுரை

கம்பன் காலத்து அரசியல் சூழல் மன்னராட்சி உள்ளடக்கியதான ஒன்று. ஆனால் அதிலும் மக்களாட்சியின் மாண்பினைப் பல இடங்களில் கம்பர் கண்டு நமக்கு பாடலாய்த் தந்திருக்கின்றார். அவை இப்போதைய அரசு நடந்து கொள்ள வேண்டிய மரியாதை முறைகளில் சற்றும் மாற்றமில்லாது இருப்பதுதான் வியப்பான செய்தியாகும். அரசு கடைபிடித்த மரியாதை முறையியல் கம்பகாலத்தில் ஓங்கி செழிப்பாய் இருந்திருக்கின்றது. பாலகாண்டத்தினுள் மட்டுமே ஆதாரமாய் கிடைத்தவற்றை இக்கட்டுரை பதிவு செய்திருக்கிறது.

இன்னும் முழு காப்பியத்திலும் இதன் தொடர்புகள் இருக்கின்றது என்பதையும் அறிஞர் பெருமக்கள் ஒப்புக் கொள்வர். இந்த மரியாதை முறையியல் இக்காலத்து மக்களாட்சிக்கும் ஒத்துப் போவதாய் ஒப்பு நோக்கும்போதுதான் கம்பரின் பார்வையில் இருக்கும் விசாலம் புலனாகின்றது.

கம்பனில் மக்கள் கருத்துரையியல்

ர.ரதி
முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை, ஆய்வுமையம், அரசுக்கல்லூரி, சித்தூர்
பாலக்காடு (கேரளா)

'கருத்து' என்னும் சொல் 'கருத்துரை' என்னும் பொருண்மையிலும் வழங்கப்பட்டிருக்கிறது. அகராதிகள் 'கருத்து' என்பதற்கு கருத்துரை, எண்ணம், நோக்கம், என்பதுபோன்ற பல பொருள்களைத் தருகின்றன. இதேபோன்று, "கருத்துப் பதப்பொருள் காட்டு மூன்றிலும்" (நன்னூல்-சிறப்புப்பாயிரம்-22) என்னும் நன்னூல் அடியில் வரும் 'கருத்து' என்னும் சொல்லுக்கு ஆறுமுகநாவலார் 'கருத்துரை' என்றே உரை கூறுகிறார். அதேபோல 'இயல்' என்பது தன்மை, ஒழுங்கு, நடை என்பது போன்ற பல பொருள்களைத் தருகின்றன. ஆகவே 'கருத்துரையியல்' என்பதற்கு கருத்துக்களை வெளிப்படுத்தும் தன்மை என்று பொருள் கொள்ளலாம். அந்தவகையில் மக்கள் கருத்துரையியல் என்பது மக்கள் தங்கள் உள்ள உணர்வுகளை உரையாடல்கள் வாயிலாக ஒருவரோடு ஒருவர் வெளிப்படுத்திக்கொள்ளுதல் எனலாம். அதை எத்தகைய நோக்கோடு, எத்தகைய தன்மையில் கம்பர் வெளிக்காட்டியிருக்கிறார் என்பதை உள்ளீடாகக் கொண்டதே கம்பனில் மக்கள் கருத்துரையியல்.

கம்பனில் மக்கள் கருத்துரையியல்

கம்பனில் மக்கள் கருத்துரைகள் வெளிவரும் இடங்களில் எல்லாம் அவருள் ஒளிந்திருக்கும் இலட்சியவாதங்களும் ஒளிர்விட்டு வெளி வருவதை நம்மால் உணர்ந்து கொள்ள இயலும். அவர், தான் வாழ்ந்த சூழலிலும் தமக்குமுன்னர் உள்ள சூழல்களிலும் நிலவியிருந்த குறைபாடுகள் நீங்கி மக்கள் இன்பமாக வாழ மக்களோடு மக்களாக அவர்கள் நிலையில் நின்று சிந்தித்தவர். அதன் வெளிபாடாக அவர் படைத்துக்காட்டிய கதாப்பாத்திரங்களைப் பற்றியும், அவற்றினது செயல்பாடுகள் பற்றியும் உள்ள கருத்துரைகளை மக்கள் வா-யிலாகவே கூறச்செய்து, மக்கள் இருப்பின் இன்றியமையாத் தன்மையை உலகுக்கு எடுத்துக்காட்டியவர். மட்டுமல்ல, தன்னுடைய கதாபாத்திரங்கள் சார்ந்த விஷயங்களைத் தானே விமர்சித்தலினும் அதை மக்கள் கருத்தாகத் தருவதே மேல் எனக்கொண்ட கம்பர்,

அதன் நிறைகுறைகளை அவர்கள் வாயிலாகவே தந்து. அவற்றிற்குத் தான் ஒரு நடுநாயகமாக நின்று சமரசம் செய்யும் பான்மையில் தனது இருப்பை வெளிக்காட்டியுள்ளார். அந்தவகையில் இராமனின் பிறப்பு முதல் காடேகியது வரையிலான சில நிகழ்வுகளை எடுத்துரைக்கும் பான்மையில் இக்கட்டுரை அமைகிறது.

கருத்து வெளிப்பாட்டில் கம்பரின் ஆளுமை

மக்கள் தங்கள் கருத்துக்களை கூற்றுக்கள் வாயிலாகவும், செயல்பாடுகள் வாயிலாகவும் வெளிப்படுத்தக்கூடியவர்களாக வலம் வந்து, தம்முடைய இருப்பின் இன்றியமையாத் தன்மையை கதையோட்ட நிகழ்வுகளில் ஆங்காங்கே பதிவு செய்து சென்றிருப்பதை கம்பர் தம் ஆளுமைத் திறத்தோடு மிகச் சிறப்பாக வெளிக்காட்டியிருப்பார். காரணம் சில வேளைகளில் காலம், இடம், சூழல் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு பேச வேண்டிய கட்டாயம் கம்பருக்கு நிகழலாம். ஆனால் ஒவ்வொரு நிகழ்வுகளைப் பற்றியும், கதாப்பாத்திரங்களின் செயல்பாடுகள் பற்றியும் மக்கள் தங்களுக்குள் நிகழ்த்தும் கருத்துரைகளுக்கு அத்தகைய வரன்முறைகள் கிடையாது. ஆகவேதான் மக்களை உள்ளது உள்ளபடி தங்களது உள்ள உணர்வுகளை வெளிக்காட்டக் கூடியவர்களாக படைத்து முக்கியத்துவம் பெறச் செய்துள்ளார்.

மக்கள் விரும்பும் அரசு

இராமன் ஆட்சியாளனாவதற்கு முன்னும் பின்னும் மக்கள் நலன் விரும்பும் நல்லாட்சியாளனாகவே விளங்கியுள்ளான். மக்களின் நலனை அவர்களிடமே சென்று விசாரிக்கும் நலன் விரும்பியாகவும் இருந்துள்ளான். மக்களும் இராமனை இளவரசன் என எண்ணாது அரசனாகவே கண்டு வந்துள்ளனர் என்பதை, **அஃதைய நினையெம தரசென வுடையேம்** (பாலகாண்டம்-313) என்று கூறுவதினின்று அறிய இயலுகின்றது. மேலும் "எங்கள் உயிரோடு ஏழாகவுள்ள இப் பூமண்டலம் முழுவதையும் இப்பிரம்மன் அழியும் காலம் வரை ஆட்சி புரிய வேண்டும்" என்று கூறுவதினின்று இராமனைத் தவிர வேறு யாராலும் ஒரு சிறந்த மக்களாட்சி முறையோடு கூடிய ஆட்சியை நிகழ்த்தவியலாது என்பதை மக்கள் வாயிலாகவே எடுத்தியம்புகிறார். அவ்வாறு, "நீர் வேண்டும்" என்னும் வேட்கையுடையவனுக்கு நீர் கிடைத்தாற் போன்றதுதான் மக்களுக்கு இராமனின் பட்டாபிஷேக செய்தி. ஆகவேதான் தங்களை மறந்தவர்களாக தங்களது உள்ளக்கிடக்கையை வெளிப்படுத்துகிறனர். அதன் வெளிப்பாடே,

"பாவமு மருந்துயரமும் வேர்பறியு மென்பார்
பூவலய மின்றுமுத லன்றுபொது வென்பார்" (283)

என்பதாகக் காட்டுகின்றார். அதாவது இப்பூவுலகம் இன்றுமுதல் நம்முடையது என்ற தோற்ற வெளிப்பாடாக மக்கள் கூறுவதிலிருந்து இதற்கு முன்னர் உள்ள நிலையை நம்மால் தெளிவாகவே உணர்ந்து கொள்ள இயலும். மட்டுமல்ல, மக்களை விரும்பும் நல்லாட்சியாளனால் மட்டுமே சிறந்தவொரு குடியாட்சியை அமைக்க இயலும். அத்தகைய ஆட்சியை இராமராஜ்யத்தில் காணவேண்டும் என்ற கம்பரின் இலட்சிய உள்ளத்தை மக்கள் கூற்றாக வரும் ஒவ்வொரு நிகழ்வுகளும் நமக்கு விளங்க வைக்கின்றன.

மக்கள் சக்தியின் வெளிப்பாடு

"'அரசு என்றால் மக்கள் சமுதாயத்தைத் தாண்டி எங்கோ காண முடியதாத அச்சந்தரக்கூடிய ஆணை பிறப்பிக்கின்ற அதிகாரி என்ற எண்ணத்தை அறவே நீக்கி, அன்பே இன்பவெள்ளமிட்டுகின்ற கோசலத்தைப் படைத்தவர் கம்பர்." (கம்பராமாயணத்தில் காணப்பெறும் சமுதாயப் பழக்கங்கள், ப-206) என்று டாக்டர். சு.நவநீதகிருஷ்ணன் கூறும் கருத்தே கோசலத்தில் மக்களின் நிலைப்பாடுகள் எத்தகைய தன்மையில் இருந்திருக்கும் என்பதை அறிய இடம் தருகிறது. ஆகவே கம்பராமாயணத்தில் காணும் அரசுகள் யாவும் முடியரசுகளாகவே இருப்பினும், கம்பர் கண்ட அரசு மக்களால் தேர்ந்தெடுக்கப்படக் கூடியதாகவே இருக்க வேண்டும் என்பதாகும். ஆகவேதான் மக்கள் சக்திக்கு மாபெரும் வலிமை உள்ளது என்பதையும், அவர்கள் நினைத்தால் ஒரு அரசையே உருவாக்க இயலும் என்றும் காட்டுமிடமே இராமன் காட்டிற்குச் செல்லப் போகிறான் எனக் கேட்டு அங்கு அவர்கள் நிகழ்த்தும் உரை. அதாவது இராமன் நாடாளுவதற்கு பதில் காடேகப் போகிறான் என்பதை அறிகின்றனர். அதற்குக் காரணம் கைகேயிக்கு வரம் கொடுத்த தசரதனே, என அறிந்து அவனையும், அவனது ஆட்சியையும் பலவாறாகப் பழிக்கின்றனர். இங்கு வரம் கேட்ட கைகேயியால்தான் இது நிகழ்ந்தது என்ற எண்ணத்தின் வெளிப்பாடாக அவர்கள்,

"பெற்றுடைய மண்ணவளுக் கீந்து பிறந்துலகம்
முற்றுடைய கோவைப் பிரியாது மொய்த்தீண்டி
உற்றுறைதும் யாரு முறையவே சின்னாளில்

புற்றுடைய காடெல்லா நாடாகிப் போமென்பார்" (404)

என்பதாகக் காட்டுகிறார். இவ்வாறு மக்கள் சக்தியின் வீரியத்தை மக்கள் வாயிலாகவே படைத்துக் காட்டுகிறார்.

மக்களின் நியாயப் போராட்டம்

தரணியை ஆளும் மன்னன் தவறிழைக்கும் போது அதை மக்கள் தட்டிக் கேட்க வேண்டும் என்ற எண்ணம் கொண்டவராகவே கம்பர் இருந்துள்ளார் என்பதைக் காப்பியத்தில் காணப்படும் சில பதிவுகள் மூலம் நம்மால் விளங்கிக்கொள்ள இயலும். இக்காலச் சூழலில் இது ஒரு பெரிய விஷயமாக இல்லாவிடினும் கம்பர் இதைக் கூறிய கால கட்டத்தை மனதில் கொண்டு பார்க்கும் போதே அவரது புரட்சியின் தனித்துவம் புரியும். மட்டுமல்ல,

"ஆள்பவன் ஆண்டவனின் அம்சம்; நாடும் மக்களும் அவனுடைய உடைமைகள் என்ற கோட்பாடு கோலோச்சிய நாடு" (கம்பனின் அரசியல் கோட்பாடு, ப-98) என்ற அப்துல்ரகுமானின் கூற்றை எண்ணிப் பார்த்தோமேயானால் மக்கள், அரசன் ஆட்டி வைக்கும் பொம்மைகள் மட்டுமே. ஆனால் கம்பர் கண்ட மக்களோ, தங்களை அரசாளும் மன்னனேயானாலும் அவன் வாய்மை தவறும் போது அவனைக் கடிந்துரைக்கும் திறன் வாய்ந்தவர்களாகவே விளங்கியுள்ளனர். அதாவது முன்னர் இராமனிடம், "என் சுமை நீங்க நீ அரசாள வேண்டும்" என்று இசைவைப் பெற்ற தசரதன், பின்னர் கைகேயியின் வரம் காரணமாக அம்முடிவை மாற்றியதை அறிந்த மக்கள், "ஒரு வாய்மையை நிலை நாட்ட வேறொரு வாய்மையைக் கொல்லுதல் என்ன நியாயம்? மூத்த மகன் அரசாள வேண்டும் என்ற நியதி பொய்க்கச் செய்த அரசனின் ஆளுமையை என்னவென்பது? அரசன் கைகேயிக்கு வரம் கொடுத்தது நாட்டில் உள்ள உயிர்கள் யாவற்றையும் கொன்று ஒழித்து விட வேண்டும் என்ற எண்ணத்திலா?" எனக் காட்டுமிடங்கள் யாவும் முடியாட்சியை ஒழித்துக் குடியாட்சியை ஏற்படுத்த வேண்டும் என்ற கம்பரின் எண்ண வெளிப்பாட்டையே காட்டுகின்றன. இதைக் கம்பர்,

"முன்னர் கொடுத்து முறைதிறம்பத் தம்பிக்குப்
பின்னே கொடுத்தாற் பிழையாதோ" (405)

என்பதாகவும்,

நின்று தவமியற்றித் தான்றீர நேர்ந்ததோ

அன்றி யுலகத்து ளாருயிராய் வாழ்வாரைக்
கொன்று களையக் குறித்த பொருளதுவோ
நன்று வரங்கொடுத்த நாயகன்ற னெண்ண மென்பார்" (403)

என்பதாகவும் மக்கள் கூறுவதாகக் காட்டுகிறார்.

அரச அறம் கூறும் மக்கள்

தசரதன் சிறந்த ஆட்சியாளன் என்பதை அவனுடைய ஒவ்வொரு செயல்பாடுகளும் நமக்கு விளங்க வைக்கும். ஆயினும் தசரதன் செய்யாத சில விஷயங்களையும் இலட்சியநாயகன் இராமன் மூலம் படைத்துக் காட்டி நிறைவுகாண விழைந்திருப்பார் கம்பர். ஆனால் அவனிடம் கூட சில விஷயங்களில் முழுமைத்தன்மை காணவியலாமல் தடுமாறும் சூழலில் மக்கள் கூற்றின் வாயிலாக எடுத்துக்காட்டியும், தமது இலட்சிய நாயகனுக்கு பாதகம் வரா நிலையில் அமைதி கூறியும் தனது காப்பியக் கதைக்கு மெருகேற்றி அழகு செய்திருப்பார்.

கருத்தில் நின்றுயர் நாயகன் இராமனும் சில தவிர்க்க இயலாத சூழலில் தனக்கென உள்ள அரச அறத்தை விடுத்து தனிமனித அறத்தை உயர்த்தும்போது அதை மக்கள் வாயிலாகவே விமர்சித்திருப்பார். "முதுமைப்பருவத்தில் பெண்ணிடம் மயங்கி முறை தவறிய தந்தையின் தவற்றைச் சுட்டிக்காட்டி காட்டிற்குப் போகாதிருத்தற்குரியன். ஆனால் தன் தந்தை வாய்மையினின்று தவறுதலை அறிந்திருந்தும் அவன் சொல்லுக்கு உடன்பட்டுக் காடு செல்லும் இராமனும் நாட்டிற்கு தீங்கு விளைவித்த அக்கைகேயிக்கு ஒப்பானவனே!" என்பதை,

வலங்கடிந் தேழைசொற் கொண்ட மன்னனை
நலங்கடிந் தறங்கெட நயத்தி யோவெனாக்
குலங்கடிந் தான்வலி கொண்ட கொண்டலை
நிலங்கடிந் தாளொடு நிகரென் றார்சிலர்" (484)

என்று காட்டுகிறார் கம்பர்.

இங்கு மக்கள் இராமன்மேல் கொண்ட அன்பினாலும், அவனுக்குக் கொடுமை இழைத்து விட்டனர் என்ற ஆதங்கத்தினாலுமே அவர்கள் சீற்றம் கொண்டு இவ்வாறு பேசுகின்றனர் என்று சமாதானம் கூறினாலும், கோபத்தில் வரும் கூற்றுக்களை ஒதுக்கிவிட்டுப் பார்க்காமல் அதன் உண்மைத்தன்மையையும் பார்க்க வேண்டிய தேவை உள்ளது. இதைச் சூழல் சார்ந்தும், கதையோட்டம் சார்ந்தும் சுட்டிக்காட்டி

சொல்லுமிடத்தில் எதிர்கால நோக்கும். அதை இராமன் வாயிலாக நியாயப்படுத்துமிடத்தில் நிகழ்காலச் சூழலின் நிலைப்பாட்டையும் எடுத்துரைத்து தனது இலட்சியவாதத்தை மிக இயல்பாக வெளிப்படுத்திக் காட்டியிருப்பார்.

முடிவுரை

கம்பர் தான் வாழ்ந்த காலகட்டத்திற்கேற்ப காவியம் படைத்திருப்பினும் அக்காலச் சூழலோடும் அங்கு நிலவிய கருத்துக்களோடும் ஒன்ற இயலாத நிலையை ஆங்காங்கே குறித்துச் செல்வதில், மக்களை ஒரு கருவியாகப் பயன்படுத்தியிருப்பார். மக்களும் அரசியல் செயல்பாடுகளில் பங்குபெற வேண்டும் என்ற கம்பரின் உயரிய கொள்கை காப்பியத்தில் மக்களுக்கு என தனித்துவமான இடத்தைக் கொடுத்துள்ளது. மக்களின் கருத்துரைகள் நிகழ்கால, எதிர்காலச் சூழலின் நிறைகுறைகளை விளக்குகின்ற விதத்தில் அமைந்து காப்பியக் கதைக்கு மேலும் வலுச் சேர்த்துள்ளன. கம்பரைப் பல கோணங்களில் பல துறைகளில் கண்டு வந்த நமக்கு அவர் ஒரு புரட்சிகரமான இலட்சியவாதி என்பதையும்கூட மனதில் கொண்டு பார்க்குமளவிற்கு கம்பனில் மக்கள் கருத்துரைகள் அமைந்துள்ளன.

கம்பனில் மனித உரிமைகள்

செ.சியாமளா
வரலாற்றுத்துறை., தருமபுரம் ஞானாம்பிகை அரசினர் மகளிர் கல்லூரி.
மயிலாடுதுறை.

மனித உரிமைகளைத் தடுக்கும் முடியாட்சி அமைப்புகள் இருந்து வந்த காலத்தில் கம்பர் தனது காப்பியத்தில் மனித உரிமைகளை நிலை நாட்டிப் புரட்சி செய்துள்ளார்.

மன்னர் உயிர்த்தே மலர்தலை உலகு என்ற முடியாட்சி அடித்தளத்தை அழித்து, குடிமக்கள் நலன் கருதியே வாழும் உயிரெலாம் உறையும் ஓர் உடம்பாகத் தயரதனைப் படைத்துள்ளார். மேலும், வையம் மன்னுயிர் அனைத்தையும் தன்னுயிராகக் கருதிக் காக்கும் மன்னனாக அவனை ஆக்கியுள்ளார்.

அயோத்தி, இலங்கை, கிட்கிந்தை ஆகிய மூன்று அரசுகளைக் கொண்ட இக்காப்பியத்தில், மனித உரிமைகளை மதித்துப் போற்றும் அரசாக, தயரதனின் நாடு திகழ்கின்றது.

மனித உரிமைகளைப் போற்றும் அரசு

அயோத்தியில் வாழும் மக்கள் அஃறிணை உயிர்கள் தத்தமது நிலைக்கு ஏற்ப அமைதியுற்று உயிர்களாக வாழ்வதை, **நீரிடை உறங்கும் சங்கம்** எனும் பாடல் எடுத்துக்காட்டும். அதுபோல், இல்லாமை இல்லாத எல்லாரும் எல்லாச் செல்வமும் பெற்ற நாடாக இருந்ததை, **வண்மை இல்லை ஓர் வறுமை இன்மையால்'** என்னும் பாடல் எடுத்துக் காட்டும்.

அக்குல மரபில் வந்த மற்றொரு மன்னனாகிய மாந்தாதா என்பவனின் ஆட்சிச்சிறப்பைக் கூறும்போது, கம்பர் அவனது நாட்டில், **புலிபோத்தும் புல்வாயும் ஒருதுறையில் நீர் உண்ண** வாழும் காட்சியைக் கம்பர் உணர்த்திக்காட்டுவார்.

மாண்புடைய ஒருவன்

இராமனைக் காட்டும் கவிஞர், அவன் இராமகாதை முழுவதும் மனித உரிமைகளைக் காத்து வந்த வகைமையை விளக்கிச் சொல்வது மிக நயமானது.

மறக்கடை அரக்கி வடவைக் கனல் இரண்டாய்
நிறைக்கடல் முளைத்ததென நெருப்பென விழித்தாள்

என்ற நிலையில் தாடகை தன் கண்முன்னே தோன்றியபோதும் அவள் கொடிய இயல்பைக் கோசிக முனிவன் கூறியபோதும்,

துண்ணனும் வினைத்தொழில் தொடங்கி உள்ளேனும்
பெண்ணென மனத்திடை பெருந்தகை நினைத்தான்

இராமன். இத்துடன் நில்லாமல், அயோத்தியில் தேனையும் மீனையும் கொணர்ந்த குகனைத் தன் தோழனாக ஏற்று, மனிதர்களின் அன்புரிமைக்கு உயரிய இடம் கொடுத்துநிற்கிறான்.

இவ்வாறு பிறர் உரிமையை மதித்துப்போற்றும் இராமனும் கூனியாகிய மந்தரையிடம் தன் உரிமை மீறிச் சிறுவயதில் விளையாட்டாக இழைத்த சிறு துன்பம்தான் பின்னாளில் பெருந்துன்பம் அடைவதற்குக் காரண மானது.

இதனைச் சுக்ரீவனிடம் பின்வருமாறு எடுத்துரைக்கிறான் இராமன்.

சிறியர் என்று இகழ்ந்து நோவு செய்வன செய்யல்; மற்று, இந்
நெறி இகழ்ந்து, யான் ஓர் தீமை இழைத்தலால், உணர்ச்சி நீண்டு,
குறியது ஆம் மேனி ஆய கூனியால், குவவுத் தோளாய்!
வெறியன எய்தி, நொய்தின் வெந் துயர்க் கடலின் வீழ்ந்தேன்.

பகைவர்பால் கருணையாகிய உரிமை

இராமன் மனித உரிமையைப்போற்றியமைக்கு மற்றும் ஒரு சிறந்தசான்று, வானர வேடங்கொண்டு அரக்கர்கள் இருவர் வானரப்படையில் புகுந்து ஒற்றராய் வேவு பார்த்து, வீடணனிடம் சிக்கிக் கொண்டு வானரப் படை அவர்களைத் தாக்கி நலியத் தொடங்கிய வேளையில்,

தாழ்பிழை செய்தாரேனும் தஞ்சம் என்று அடைந்தோர் தம்மை
தாழ்பிழை செய்யலாமோ? நலியவீர் விடுதீர்

என்று கூறிப் பகைவர்பாலும் கருணை காட்டிப் பின் தன் படை-யினரை நோக்கி,

வாக்கினில் மனதில் கையில் மற்று இனி நலியா வண்ணம்
போக்குயின் விரைவில்

என்று கூறியவிதம் மனித உரிமைக்கு எடுத்துக்காட்டாக அமைகிறது.

இதுபோல், போர்க்களத்தில் கும்பன், தன் உறுப்புகள் எல்லாம் இழந்து தனித்து நின்றபோது,

நின்னுயிர் நினக்கு ஈவென், போதியோ பின்றை வருதியோ
அன்றுஎனின், போர் புரிந்த இப்போ சாதியோ உறுவது சொல்லுதி

என்று கூறுகிறான். அனைத்துக்கும் உச்சமாக, இன்று போய்ப் போர்க்கு நாளை வா என்று இராவணனிடம் இரக்ககம் காட்டியது குறிப்பிடத்தக்கது.

குரங்கின அரசில் மனித உரிமைநிலை

கிட்கிந்தையில் வாலி தன் உடன்பிறந்த தம்பியின் செய்கையை ஐயுற்றுக் கொல்லத்துணிந்து தாக்கினான். பின்பு உருமை என்று இவற்கு உரியதாரமாம் அருமருந்தையும் விரும்பினான். என்று அனுமனே கூறும் அளவிற்குத் தம்பியின் தாரத்தைப் பற்றி அவனது இல்லறத்தைக் குலைத்தும் செயற்படுத்தினான். இது மனிதஉரிமைமீறல் ஆகும்.

என்னதான் அவன் சிவவழிபாட்டில் சிறந்து விளங்கினாலும், மனித உரிமை மீறல் செய்தமையால், தனக்கு ஏற்பட்ட சூழ்ச்சியில் சிக்கி உயிர் துறந்தான்.

மனித உரிமைக்கு எதிரான இலங்கை அரசின் நிலை

மனித உரிமைக்கு எதிராகச் செயல்பட்ட நிலையே இலங்கை அரசாட்சியில் மிகுதியும் உண்டு.

இரக்கம் என்றுஒரு பொருள் இலாத நெஞ்சினர்
அரக்கர் என்று உயர்சிலர் அறத்தின்நீங்கினார்

என்று கம்பர் கூறும் வண்ணம் வாழும் அரக்கர் மிக்க தேசம் அது. காப்பியப்போக்கில் அவர்களுள் முதலில் வருபவள் தாடகை.

முன் உலகு அளித்து முறைநின்ற உயிர்எல்லாம்
தன் உணவு எனக் கருது தன்மையிளாள்

தாடகை. அவள் மனித உரிமைகளை மட்டுமன்றி, பிறஉயிர்களின் உரிமைகளையும் பறித்தவள். அவளுடைய வீழ்ச்சியை, அரக்கர்குல வீழ்ச்சிக்கு அடித்தளமாக்கியவர் கம்பர்.

மனிதஉரிமைகளை மதிக்காத, விராதனையும், பல அரக்கர்களையும் இராமன் அழித்தான். இத்தகைய நிலையில் இலங்கையர்கோனும் அழிந்தான்.

மனித உரிமைகளை மீறிப் பல துயர்ப்பணிகளை ஆற்றிய இராவணன் பற்றிய சூர்ப்பணகையின் கூற்று ஒன்று இங்குக் கருதத்தக்கது.

அவனிடம், 'உன் தங்கை மூக்கு அறுபட்டாள் என்று எவரேனும் கூறினால், உடனே அச்செய்தி உரைத்தோர் நாவினை அறுத்து எறிந்துவிடுவானாம்.

ஆக்கரிய மூக்கை உங்கை அரியுண்டாள் என்றாரை
நாக்கரியும் தயமுகனார்

என்றமைந்த பாடல், மனித உரிமைகட்குச் சிறிதும் மதிப்பளிக்காத இலங்கையர்கோனை, நமக்கு இனங்காட்டுகிறது. இந்திரசித்தனின் மரணச்செய்தியைக் கூறிய தூதுவரை,

தடற்றுவாள் உருவித் தரும் தூதரை
மிடற்று வீசல் உறா விழுந்தான்அரோ

என்று வாள்வீசிக் கொன்ற கொடுமைக் கம்பர் பாடுவார். பிழைஏதும் புரியாத தூதுவரைக் கொன்று மனித உரிமைகளுக்குக் கேடு விளைவித்த மாபெரும் பிழையாளனாக, இலங்கையர்கோனை இக்காப்பியம் எடுத்துக் காட்டுகிறது.

இவ்வாறு பல்வேறு பாத்திரங்களையும் கதைநிகழ்ச்சிகளையும் கொண்டு ஆராய்ந்தால், மனித உரிமைகட்கு, உயிர்நேயத்திற்கு எதிராகச் செயற்பட்டவர்கள் அனைவரும் வீழ்ச்சி உறுவதையும், மதித்துப் போற்றியோர் வாழ்வாங்கு வாழ்ந்ததையும் நன்கு அறியலாம்.

கம்பராமாயணத்தில் பொதிந்துள்ள நாட்டிடைச் சட்டக் கருத்துக்கள்

ப.மோகன்தாசு
வழக்குரைஞர், புதுச்சேரி.

உலகமயமாக்குதல் போன்ற புதிய பொருளாதார மற்றும் சமூக மாற்றங்கள் காரணமாக உலகின் பல்வேறு நாடுகளுக்கிடையே உள்ள உறவுகளிலும் மாற்றங்கள் ஏற்படுகின்றன. இன்றைக்கு இந்திய அரசியலில் ஒரு முக்கிய நிகழ்ச்சியை இத்தருணத்தில் சுட்டிக்காட்டுவது பொருத்தமாக இருக்கும். அமெரிக்காவுக்கான இந்திய துணைத்தூதர் தேவயானி பணிப்பெண்ணுக்கு முறைகேடான வகையில் விசா பெற்றது உள்ளிட்ட குற்றசாட்டுக்களுக்காக அமெரிக்க அரசு அதிகாரிகளால் நடுத்தெருவில் விலங்கிட்டு இழுத்துச்செல்லப்பட்டு, உடல் பரிசோதனை செய்யப்பட்டு பயங்கரக் குற்றவாளிகளுடன் அடைத்து வைக்கப்பட்ட சம்பவம் காரணமாக இரு நாடுகள் இடையேயும் தூதரக உறவுகளில் விரிசல் ஏற்பட்டுள்ளது. பல்வேறு நாடுகளுக்கிடையேயான தூதரக உறவுகள் மற்றும் இதர தொடர்புகள் பற்றிய சட்டக் கருத்துக்கள் பல்வேறு உடன்படிக்கைகளில் கூறப்பட்டுள்ளன். இது போன்ற நாட்டிடைச் சட்டக் கருத்துக்கள் பலவும் கம்பராமாயணத்தில் மலிந்து கிடக்கின்றன.

தூதரக உறவு தொடர்பான சட்டக் கருத்துக்கள்

இத்தருணத்தில் ஐக்கிய நாடுகள் சபை மூலமாக 1961 ஆம் ஆண்டு நாடுகளுக்கிடையே ஆன தூதரக உறவுகள் தொடர்பான வியன்னா உடன்பாட்டில் உள்ள விதிமுறைகளைச் சுட்டிக்காட்டலாம். விதி 29-ன்படி தூதரக அதிகாரியை அவர் சென்றுள்ள நாட்டின் அரசு மரியாதையாக நடத்த வேண்டும். அவருக்கு கண்ணியக்குறைவு ஏற்படுத்தலாகாது: அவரைக் கைது செய்தல், சிறையில் அடைத்தல் மற்றும் இதரத் துன்புறுத்தலுக்கு உட்படுத்தக் கூடாது. கம்பராமா யணத்தில் மயிடன் என்ற இராவணனின் தூதன் இராமனை அடைந்தபோது வானரசேனை அவனைத் தாக்க முனைந்தபோது தூதனை விடுமாறு இராமன் வானரரிடம் கூறியதாக கம்பர் படம் பிடித்துக்காட்டுகிறார். "போதம் முதல் வாய்மொழியே புகல்வான்

ஏதும் அறியான் வறிது ஏகினனால் தூதன் இவனைச சுளியன்மின்" (யுத்த காண்டம்- அதிகாயன் வதைப் படலம், பாடல் 1714) மேலும் அனுமன் இராவணனின் அரண்மனைக்குச் சென்று இராவணனிடம் நீதிபோதனைகளைக் கூறி சீதையை விடுவிக்கும்படி ராமனின்: சார்பாக வேண்டுகோள் விடுத்தான். மாருதி உரைகளைக் கேட்ட இராவணன் சினந்து அனுமனைக் கொல்லுமாறு அரக்கர்களை நோக்கிக் கூறிய போது வீடணன் தடுத்தது இங்கு ஒப்புநோக்கத்தக்கது. "வேதங்களை எல்லாம் நன்கு ஓதி உணர்ந்துள்ள நீங்கள் பிறர்சொல்லியவற்றைச் சொல்லவந்துள்ள ஒரு தூதனைக் கொல்லமுயல்வது அதிசயமாய் உள்ளது. அன்று முதல் இன்றுவரையும் எந்த அண்டத்திலேயும் எந்த அரசராவது தம்பால் வந்த தூதுவனைக் கொன்றதுண்டோ? தனது தலைவன் சொல்லியனுப்பிய உறுதி மொழிகளைக் கருதி வந்து பகைவருடைய ஊருக்குள் புகுந்து அரசனைக் கண்டு வரிசையோடு உண்மைகளைக் கூறிப்போவதையே விரதமாக கொண்டுள்ள தூதனைக் கொல்ல நேரின் அது கொடிய பழி பாதகமேயாம்.

போர் தொடர்பான சட்டக் கோட்பாடுகள்

1. போர் மறுப்புக் கோட்பாடு

அண்மைக் காலங்களில் நாடுகளுக்கிடையே மூளும் போர்களை சட்ட பூர்வமாக நெறிமுறைப்படுத்தும் விதிமுறைகள் தெளிவாக வரையறுக்கப் பட்டுள்ளன. அவற்றில் கூறப்பட்டுள்ள நிறைய கருத்துக்கள் கம்பராமாயணத்தில் சுட்டிக் காட்டப் பட்டுள்ளன உதரணமாக 1928-ல் நாடுகளுக்கிடையே ஏற்;பட்ட பாரிஸ் உடன்படிக்கையைக் குறிப்பிடலாம் அந்த உடன்படிக்கையின்படி ஒப்பந்தத்தில் சம்பந்தப்பட்ட நாடுகள் முடிந்தவரை அண்டை நாடுகளுடன் போரிடுவதைத் தவிர்ப்பதைத் தேசியக்கொள்கையாகக் கடைப்பிடிக்க வேண்டும். மேலும் அண்டை நாடுகளுடனான பூசல்களை அமைதியான முறையில் தீர்த்துக் கொள்ள வேண்டும். மேலும் ஐக்கிய நாடுகள் சபையின் 1945ஆம் ஆண்டின் சாசனத்திலும் சமாதானத்துடன் அண்டை அயல் நாடுகள் தங்களுக்கிடையேயான பூசல்களைத் தீர்த்துக் கொள்வது வலியுறுத்தப்படுகிறது. இச்சமயத்தில் கம்பன் காட்டும் போர் மறுப்புக் காட்சி நினைவில் கொள்ளத்தக்கது. ஓர் அரசன் எவரிடமும் பகை கொள்ளாதவன் என்னும் நிலை உண்டான பின்பு அவன் நாட்டில் போர் இல்லாமல் போகும் ஆனால் அவனுடைய புகழ் குறையாது.

அவனது படையும் அழியாது. அத்தகைய நன்மை உண்டான பின்பு அந்த அரசன் வேரோடு அழியும் நிலை உண்டாகுமோ? உண்டாகாது. பகைக்குணமும் போரும் அயோத்தியில் தசரதன் ஆட்சியில் இல்லை என்பது உண்மையில் கம்பர் விரும்பிய போர் அறம் ஆகும்.

யாரொடும் பகை கொள்ளலன் என்ற பின்
போர் ஒடுங்கும் புகழ் ஒடுங்காது தன்
தார் ஒடுங்கல் செல்லாது அது தந்தபின்
வேரொடும் கெடல் வேண்டல் உண்டாகுமோ

போர் ஏற்பட்டபின் வரையறையற்ற தாக்குதல் தவிர்க்கப்படுதல்

மேற்கூறியவாறு சமாதானமாக இருக்க முடியாமல் நாடுகளுக்கிடையே போர் மூண்டபின் போரில் ஈடுபடும் நாடுகள் கடைப்பிடிக்க வேண்டிய சட்டக் கோட்பாடுகள் இக்காலத்தில் தெளிவாக வகுக்கப்பட்டுள்ளன. போரில் பாதிக்கப்பட்டுள்ள காயம் உற்றவர்கள், போர்க் கைதிகள் மற்றும் போரால் நலிவுற்றவர்கள் ஆகியோரின் நலம் காக்கும் வகையில் உருவாக்கப்பட்டுள்ள 1949-ஆம் ஆண்டின் ஜெனிவா உடன்படிக்கை இங்கே குறிப்பிடத்தக்கது.

போர்க்கைதிகள் மற்றும் போரால் பாதிக்கப்படும் இதர குடிமக்களின் மருத்துவ சிகிச்சை மற்றும் இதர நலவழிக் கருத்துக்கள். மேற்படி உடன்படிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. முக்கியமாக விதி-51-ன் படி வரையறையற்ற மற்றும் தான்தோன்றித்தனமான தாக்குதல்களைப் போர் புரியும் நாடுகள் தவிர்க்க வேண்டும். அந்த ஒப்பந்தத்தின் கருத்தை ஒட்டிய அறப்போர் கம்பர் கண்ட அரசாட்சியிலே நிகழ்ந்துள்ளது. சில எடுத்துக்காட்டுகள். முதல் நாள் போரில் தோல்வியுற்ற இராவணன் களத்தில் அனைத்தையும் இழந்து நிராயுதபாணியாக நிற்பதைக் கண்ட இராமன் அவன் தனிமை கண்டு இரங்கி "இன்று போய் நாளை வா" என்று மற்றொரு வாய்ப்பைத் தந்தான்.

யுத்தகாண்டத்தில் கும்பகருணன் வதைப்படலத்தில் இன்னொரு நிகழ்ச்சி நம் மனதில் பதிவு செய்யப்படவேண்டியது ஆகும். இராமன் கும்பகருணனிடம் வினவுகின்றான் "உன் படைக்கருவிகளோடு எதிர்த்துப் போரிடப் பெருந்துணையாக நிற்கும் படையையும் இழந்தனை. இப்போது என் எதிரே நீ ஒருவனாய் தனித்து நிற்கிறாய். நீதிமானாகிய வீடணனுடன் பிறந்தவன் நீ; உன் உயிரைக் கொல்லாமல்

உன்னை விடுகின்றேன். இப்போது திரும்பிச் செல்கிறாயா? வருகின்றாயா? அல்லது இப்போதே என்னுடைன் மீண்டும் போரிட்டுப் பிறகு இறக்கின்றாயா? உனக்குப் பொருத்தமானதை நன்றாக ஆராய்ந்து தெளிவாகச் சொல்". (பாடல்:1536) அடுத்து நீலன் என்னும் வானரவீரன் கும்பகருணனது தேரின் எதிரே ஓடிச்சென்று தன் கைகளை உயர்த்திக் குத்தினான். கால்களால் பலமுறை உதைத்தான். நீலனை தனது இடக்கையால் அடித்தான் கும்பகருணன். ஆனால் "இவன் ஆயுதம் இல்லாமல் வெறும் கையோடு இருக்கிறான் என்று எண்ணி கும்பகருணன் சூலத்தை நீலன் மீது எறியவில்லை என்பதை கம்பர் விளக்குவது இங்கு ஒப்பு நோக்கத்தக்கது.

போரில் காயமுற்றோர் மற்றும் நலிவுற்றோர்க்கு பாதுகாப்பு அளித்தல்

இராணுவப் படைகளால் போரில் பாதிக்கப்பட்டுள்ள, காயம் பட்டுள்ள மற்றும் உடல் நலிந்துள்ளவர்களின் சீரமைப்பு தொடர்பான ஜெனீவா உடன்படிக்கை (12.08.1949)-யின்படி இராணுவப் படையைச் சேர்ந்த மற்றும் இதர காயமுற்றுள்ள அல்லது நலிந்துள்ள எதிரி நாட்டைச் சேர்ந்தவர்களை அனைத்துச் சூழ்நிலைகளிலும் மதித்துப் பாதுகாக்க வேண்டும்; அவர்கள்மீது ஆதிக்கம் செலுத்துக்கின்ற போரில் ஈடுபடும் நாடு அவர்களைப் பாலின, மத, அரசியல் கருத்து மற்றும் இதுபோன்ற இதர பாகுபாடுகளுக்கு அப்பாற்பட்டு அவர்கள்மீது அக்கறை செலுத்தி மனிதாபிமான அடிப்படையில் நடத்த வேண்டும். விதி 48-ன்படி உடன்படிக்கையால் பாதுகாக்கப்பட்டுள்ள காயமுற்ற மற்றும் நலிவுற்றுள்ள மக்கள், கட்டிடங்கள் மற்றும் உபகரணங்கள் ஆகியவற்றின் மீது தாக்குதல் நடத்துவது தடை செய்யப்பட்டுள்ளது.

மேற்கூறிய சட்டக்கோட்பாடுகளுக்கு முன்னோடியாக கம்பரது சட்டக் கோட்பாடுகள் அமைந்துள்ளன. "இராமன் பகைவனான இராவணன் படைக்கலம் இழந்தவனாய், உடலை விட்டு உணர்வு நீங்கியவனாய் வீழ்ந்த அளவில் போர் அறத்தினை நினைத்து அவன்மீது அம்பு செலுத்துவதை நிறுத்தினான்." "தன் கையிலுள்ள படையினையும் துறந்து மயக்கம் அடைந்த தன்மையினை உடைய இராவணன் போரிடையே அடைந்த துன்பத்தினைப் பார்த்தபின்பும், அறத்தின் ஒழுக்கத்தினைத் துறந்து, அவன் உயிரைக் கொல்லுதல் நல்லதோ? என் உள்ளம் இம்மாதிரி போர்புரிவதை முற்றிலும் நீக்கிற்று" இங்கே இராமனின் உள்ளமாக சித்தரிக்கப்பட்டுள்ளது உண்மையில்

கவிச்சக்கரவர்த்தி கம்பரின் தன்னேரிலா எண்ணம்தான்.

இதுபோன்றே இலக்குவனும் அறப்போர் புரிந்ததை அதிகாயன் வதைப்படலத்தில் காணலாம். இலக்குவன் ஏவிய நூறு அம்புகள் தனது கவசத்தைக் கிழித்துக் கொண்டு உட்புகுந்தவுடனே தளர்ச்சி தலைகாட்ட, அதிலிருந்து மீளும் அளவும், தனது வில்லைத் தேரின் மீது ஊன்றிக் கொண்டு அதிகாயன் இளைப்பரினான். அச்சமயத்தில் அந்தக்களத்தில் இருந்த அவனுடைய சேனைகள் யாவற்றையும் இலக்குவன் தன் அம்புகளால் துண்டு துண்டாக்கிக் கோடிக்கு மேற்பட்ட உயிர்களைக் கொன்றுவிட்டான். ஆனால் அதிகாயனது தளர்ச்சி நீங்கும்வரை இலக்குவன் அவன்மீது அம்பு எய்தலை நிறுத்தினான். அவன் தளர்ச்சி நீங்கி மீண்டும் போர்க்குத் தயாரான பின் இலக்குமணன் அவன்மீதான தாக்குதலைத் தொடர்ந்தான்.

போரில் மகளிருக்கு சிறப்புப் பாதுகாப்பு அளித்தல்

அடுத்து ஜெனிவா உடன்படிக்கையின் விதி 76 மகளிருக்கு தனிப் பாதுக்காப்பை அளிக்கிறது. "பெண்கள் சிறப்பாகப் பாதுகாக்கப் படவேண்டிய மக்கள் ஆவர். அவர்கள் எந்தவித இழிவான தாக்குதல் களிலிருந்தும் பாதுகாக்கப்பட வேண்டியவர்கள். போரில் ஈடுபடும் நாடுகள் பெண்களுக்கு அவர்களது வயது மற்றும் இதர காரணங்களைப் பொறுத்து தேவையான உதவி மற்றும் பாதுகாப்பை உறுதிசெய்ய வேண்டும்". யுத்தகாண்டம் - வீடணன் அடைக்கலப்படலத்தில் வீடணனைத் தன் அணியில் சேர்த்துக் கொள்ளலாமா என்று இராமன் அனுமனிடம் ஆலோசித்தபோது மாருதியின் கருத்துகளை கம்பர் பதிவு செய்துள்ளது ஒப்புநோக்கத்தக்கது. "பெண்டிரைக் கொல்லுதலும் வீரத்தினின்று நீங்கிய இழிந்தவரைக் கொல்லுதலும், தூய்மையுடையது ஆகாது; குற்றமுடைய செயலாகும் என்று இதற்கு ஏற்ற காரணங்களை இந்த வீடணன் இராவனனுக்கு அப்போது எடுத்துக் கூறினான்". என்று அனுமன் இராமனிடம் கூறினான். (பாடல்: 400)

நாடுகளுக்கிடையேயான இறையாண்மைத் தத்துவம்

நாடுகளுக்கிடையேயான உறவுகளில் ஒரு நாட்டின் தனித்து இயங்கும் தன்மை இறையாண்மையைக் குறிக்கிறது. உலகின் ஒரு பகுதியைத் தனதாக்கிக்கொண்டு அரசாளும் அதிகாரத்தை மற்ற நாடுகளினின்றும் நீங்கலாகத் தனித்து முழுமையாக அப்பகுதியில் உபயோகிப்பது

இறையாண்மைச் செயலாகும். (American Journal of International Law, 1928 Vol.22 Page 875). ஐக்கிய நாடுகள் சபையின் அடிப்படைச் சாசனமும் நாடுகளுக்கிடையேயான இறையாண்மைக் கோட்பாட்டின் சமத்துவத்தைக் குறிப்பிடுகின்றது. சிறந்த அறமாக அரசாட்சித் தத்துவத்தைப் போதிக்கும் கம்பரும் அயோத்தி மன்னன் இராமன் மூலமாக மேற்கூறிய கோட்பாட்டுக்கு சிறப்பு செய்கிறார். கிட்கிந்தை காண்டத்தில் வாலியை வதம் செய்தபின் அரசியல் படலத்தில் இலக்குவன் மூலமாக சுக்ரீவனுக்கு கிட்கிந்தை அரச முடியைச் சூட்டுதல் மற்றும் யுத்தகாண்டத்தில் இராவணனது வீழ்ச்சிக்குப் பின் மீட்சிப் படலத்தில் வீடணனுக்கு இலங்கை அரசனாக முடிசூட்டுதல் ஆகியவற்றை இங்கு ஒப்பு நோக்கலாம்.

அரசியல் நோக்கில் அடைக்கலம், புகலிடம் அளித்தல்

ஒரு நாட்டின் அரசியல் அகதி மற்றொரு நாட்டின் அரசை அணுகி அதன் அனுமதியுடன் உறைவிடம் மற்றும் உயர்பாதுகாப்பு பெறுவது அடைக்கலக் கோட்பாட்டின் சிறப்பு ஆகும். (I.G.Starke- Introdutiona to International Law, 10th Edition (1989) Page 358). உலக நாடுகளுக்கிடையேயான மனித உரிமைகள் சாசனம் (Universal Declariona of Human Rights) அதன் விதி 14ல் ஒவ்வொரு குடிமகனுக்கும் மற்றொரு நாட்டின் அடைக்கலத்தைப் பெறும் உரிமை உள்ளதைச் சுட்டிக் காட்டுகிறது. 1967ல் ஏற்பட்ட ஐக்கிய நாடுகள் சபையின் நாட்டுப் பரப்பிற்குள் புகலிடம் வழங்குதல் தொடர்பான அறிவிப்பின் படி அடைக்கலம் கேட்பவரின் கோரிக்கையை எடுத்த எடுப்பில் கண் மூடித்தனமாக நிராகரிக்ககூடாது என்பது சுட்டிக் காட்டப் பட்டுள்ளது.

மேற்கூறிய சட்டக்கோட்பாடு கம்பராமாயணத்தில் வீடணன் அடைக்கலப்படலத்தில் மிகவும் உன்னத நிலையை அடைந்துள்ளது முக்கியமாகக் குறிப்பிடப்படவேண்டிய ஒன்றாகும். வீடணன் இராமனை அணுகியபோது அவனுக்கு அடைக்கலம் கொடுப்பது தொடர்பாக இராமன் விலங்கின நண்பர்களிடம் கருத்துக்களைக் கேட்டுப் பெரிய ஆலோசனை செய்தான் அனுமன் மற்றும் இராமனின் சொல்வித்தைகள்; மூலமாகக் கம்பரின் உள்ளக்கிடக்கை வெளிப்படுகிறது. "பகைவரைச் சார்ந்தவர் துணையாக மாட்டார் என்று சொல்லி, இந்த வீடணனை ஏற்றுக்கொள்ளாது விட்டோம் என்றால் அரச நீதிநூலை அறிந்தவர் பார்ப்பராயின் நகைப்பிற்குரியதாகிவிடும்"

என்று அனுமன் வாயிலாகவும் (பாடல்: 406) அற்பர்களாக இருந்தாலும் ஒருவர் அடைக்கலம் அடைந்தால் அவர்களுக்காக அளவற்ற மன்னர் அழியாத தம் உயிரைக் கொடுத்தேனும் காத்துள்ளனர்" என இராமன் வாயிலாகவும் (பாடல்: 421) சட்டக் கோட்பாட்டிற்கு உயிர் கொடுத்துள்ளது கம்பர் காவியம்.

அரசின் பொறுப்புக்கள் தொடர்பான நாட்டிடைச் சட்டக் கருத்துக்கள்

நாட்டிடைச் சட்ட விதிகளின்படி ஒரு நாடு தனது குடிமக்களுக்கு வழங்கும் உரிமைகள் அனைத்தையும் அந்நாட்டில் வசிக்கும் இதர நாட்டுமக்களுக்கும் வழங்கவேண்டும். மேலும் தனது குடிமக்களின் உரிமைகளைப் பாதுகாப்பதுபோல் இதரநாட்டு மக்களின் உரிமை களையும் பாதுகாக்க வேண்டும் (Dr. S.K.Kapoor - International Law & Human Rights - 18th Edition P.139). அயோத்தி அரசன் தயரதன் இவ்வுலகம் முழுவதையும் வறியவன் ஒருவன் பாதுகாக்கும் ஒரு சிறு வயலைப் போலப் பாதுகாத்து மிகச் சிறந்த முறையில் ஆட்சி செய்தான் என்றும் (பால காண்டம் - அரசியல் படலம் - பாடல் 180) இராமன் வையகம் முழுவதும் செங்கோலானது மனுவற நூலில் கூறிய படி நிகழ பூபாரங்களைப் போக்கிக் காத்து வந்தான் என்றும் (யுத்த காண்டம் - விடைகொடுத்த படலம் - பாடல் 4308) கம்பர் கூறும் அரசியல் அறம் அனைத்து மக்களையும் பாகுபாடின்றி நடத்தும் நாட்டிடைச் சட்ட விதிகளுக்கு முன் மாதிரியாக அமைந்துள்ளது.

முடிவுரை

இலக்கியம் மக்களின் வாழ்வைக் காட்டும் காலக் கண்ணாடி என்பதை பல்வேறு அறிஞர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். கம்பராமாயணத்தில் பொதிந்துள்ள நாட்டிடைச் சட்டக் கருத்துக்களைப் பார்க்கும்போது கம்பர் காணும் உலகில் நாட்டிடைச் சட்டக் கோட்பாடுகள் உயர்நிலை எய்துவதை அறிய முடிகிறது. கம்பராமாயணம் வெறும் இலக்கிய நூலாக இல்லாமல் சிறந்த சட்ட நூலாகவும் அமைந்திருப்பது இலக்கியம் மற்றும் சட்டத்துறையைச் சார்ந்தவர்களுக்கு மிக்க மகிழ்ச்சி தரும் செய்தியாகும்.

கம்பன் உணர்த்தும் கல்விக் கொள்கைகள்

முனைவர் பொன்.செல்வகுமார்,
துணைப் பேராசிரியர், தமிழ்த்துறைத்தலைவர், தூய நெஞ்சக் கல்லூரி, திருப்பத்தூர்

.கம்பன் அறிவார்ந்த தமிழ்ச்சமூகத்தைப் படைக்க முனைந்ததன் அடையாளங்களைக் காவியத்தில் பரவலாகக் காணமுடிகின்றன. அவற்றுள் கம்பன் தமிழுலகிற்கு உணர்த்த விழையும் கல்விக் கொள்கைகளைப் பாலகாண்டத்தின்வழி ஆராய்வது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

கல்விக்கொள்கை

"கல்லுதல்" என்ற சொல்லுக்குத் "தோண்டுதல்" என்று பொருள் கொள்ளப்படுகிறது (தமிழ் லெக்சிகன்-தொகுதி-2, பகுதி-1 ப.773.) ..மாணவர்களிடையில் இயல்பாகக் காணப்படும் திறமைகளை வெளிக் கொண்டு வருகின்ற நிகழ்வாகக் கல்வி அமைந்துள்ளது.

கம்பன் வாழ்ந்த சோழர்காலத்தில், "ஊர்ப்பொதுமக்கள் பிழையற எழுதும் அளவுக்குக் கல்வியறிவு பெற்றிருக்கவில்லை. அரசின் ஆணைகளையும் உடைமை மாற்று ஆவணங்களையும் புனிதம் படைத்த கோயில் சுவர்களில் பொரிக்கும் கல்வெட்டுகளில் நூற்றுக் கணக்கான எழுத்துப்பிழைகளைக் காண்கிறோம். ஒரு சில தொடர்களைக்கூடப் பிழையின்றி எழுதும் இலக்கண அறிவை அவர்கள் பெற்றிருக்கவில்லை." (க.ப.அறவாணன், தமிழ் மக்கள் வரலாறு, அலைகடல் நடுவுள் பலகலம் செலுத்திய சோழப்பேரரசின் காலம், ப.212) என்பதை அறியும் போது கம்பன் காணவிரும்பிய கல்விக்கொள்கையை அவர்தம் பாடல்கள் உணர்த்துகின்றன.

"ஒரு நாட்டின் வளம் அந்நாட்டில் வாழும் மக்களின் கல்வி ஆற்றல், ஒழுக்கம் என்ற உயர்பண்புகளைப் பொருத்ததே. நாட்டின் வளர்ச்சியின் முதுகெலும்பாகக் கல்வி கருதப்படுகிறது" (கி.நாகராஜன், தேவசகாயம் செல்வகுமார், கல்வியில் புதுமைகள், ப.200.)

கோசல நாட்டின் மருத வளத்தைக் குறிப்பிடும் கம்பன், கோசல நாட்டு மக்களின் நாவில் உண்மையும் புகழ் வாய்ந்த நூல்கள் கூறும் பொருளும் தங்கியிருப்பதை,

தாமரைப் படுவ, வண்டும் தகை வரும் திருவும் தண் தார்க்------
நாமுதல் படுவ, மெய்யும் நாம நூல் பொருளும் மண்ணோ.

(கம்பன். 36)

என்று பாடுகிறார்.

கோசல நாட்டில் மக்கள் கல்வி அறிவு பெற்றிருந்ததைக் காட்டுவதன் மூலம், நாட்டு மக்கள் கல்வியறிவு பெற்றவர்களாக இருத்தல் வேண்டும் என்பதைக் கம்பன் உணர்த்தியுள்ளதை அறிய முடிகிறது.

குறையாத விளைபொருளும் தக்க அறிஞரும் கேடில்லாத செல்வமும் உடையவரும் கூடிப் பொருந்தியுள்ள நாடே நாடாகும் என்பதை

தள்ளா விளையுளும் தக்காரும் தாழ்விலாச்
செல்வரும் சேர்வது நாடு (திருக்குறள்- 731)

என்று குறிப்பிட்டு நாட்டிற்கு அறிஞர்கள் வேண்டும் என்பதைத் திருவள்ளுவர் வற்புறுத்துகிறார். திருக்குறள் கருத்துகளில் தோய்ந்த கம்பன் கல்வியறிவுள்ள நாட்டைப் படைத்துக் காட்டுகிறார்.

படைப்புத் திறன்

கல்வியில் தன்னிறைவு பெற்ற சமூகம் இலக்கிய இலக்கணம் படைக்கின்ற சமூகமாக உயர்வடையும். கோசல நாட்டில், கவிஞர்களின் காப்பியங்கள் செவிக்கினிய பாடல்கள் தருவதைக் கம்பன்.

கோதைகள் சொரிவன, குளிர் இள நறவம்
பாதைகள் சொரிவன, பரு மணி கனகம்
ஊதைகள் சொரிவன, உறை உறும் அமுதம்
காதைகள் சொரிவன, செவி நுகர் கனிகள், (கம்பன். 82)

என்று எடுத்துக்காட்டுகிறார்.

படைப்பாளர்களும், படைப்பினைச் சுவைத்து உணர்பவர்களும் இருப்பதைக் குறிப்பிடுவதிலிருந்து படைப்புத்திறன் பெற்றவர்கள் இருந்துள்ளதை அறிய முடிகிறது.

அயோத்தியின் அழகைக் குறிப்பிடும் போது, செம்மையும் இனிமையும் நிறைந்து, நல்ல பொருட்சுவையும் நுட்பமும் கொண்டு கேட்போர் உள்ளத்தைக் கவர்ந்தவர்கள் கவிஞர்கள் என்பதை,

செவ்விய மதுரம் சேர்ந்த நல் பொருளின் சீரிய கூரிய தீம் சொல்,

வவ்விய கவிஞர் அனைவரும்"................. (கம்பன். 93)

என்று கம்பன் எடுத்துரைத்துள்ளார்.

அயோத்தியில் உள்ள அகழியின் சிறப்பைக் குறிப்பிடும்போது, ஆழமாகத் தெளிவின்மையால் புல்லறிவாளரின் இழிந்த பாடல்களைப் போல் தெளிவில்லாமல் இருந்ததைக் கம்பன்,

புன் கவி எனத் தெளிவு இன்றி (கம்பன்.106)

என்று குறிப்பிடுகிறார்.

இலக்கியமும், கணிதமும் கல்வி என்று போற்றப்பட்ட காலத்தில் கவிதைக்கான தெளிவினைக் கம்பன் சுட்டிக்காட்டியிருப்பதன் மூலம் கவிதைக்கான கொள்கைகளாக .இருந்ததை அறிய முடிகிறது.

கேள்விச் செல்வம்

அயோத்தி மக்கள் கல்வியில் கற்று கேள்விச்செல்வம் பெற்று தவம் .அன்பு, அறம், அனுபவம் ஆகியவற்றைக் கொண்டு விளங்கியதாகக் கம்பன் காட்டுகிறார்.

ஏகம் முதல் கல்வி முளைத்து எழுந்து, எண் இல் கேள்வி
ஆகும் முதல் திண் பணை போக்கி அருந் தவத்தின்
சாகம் தழைத்து, அன்பு அரும்பு, தருமம் மலர்ந்து
போகம் கனி ஒன்று பழுத்துது போலும் அன்றே. (கம்பன் 167)

என்று குறிப்பிடுகிறார்.

கல்வி கற்க வாய்ப்பில்லாதவர்கள் கேள்விச்செல்வம் மூலம் திறன்களை வளர்த்துக்கொண்டதைக் கம்பன் வலியுறுத்தியுள்ளார்..

நூல்களைக் கற்கவில்லையாயினும், கற்றறிந்தவரிடம் கேட்டறிய வேண்டும். அக்கேள்விச்செல்வம் வாழ்க்கையில் தளர்ச்சி வந்தபோது ஊன்றுகோல் உதவும் என்ற கருத்தினைக் கொண்ட,

கற்றில னாயினும் கேட்க அஃதொருவற்கு
ஒற்கத்தின் ஊற்றாந் துணை (குறள்- 414)

குறளோடு கம்பன் கருத்தினை ஒப்பிட்டு நோக்கலாம்.

பட்டிமண்டபம்

தாம் ஏற்றுக்கொண்ட கருத்துக்கு மாறான கருத்து உடையவரிடம்

வாதம் புரிந்து தம் கருத்தை நிலை நாட்டுவது பட்டிமண்டபமாகும்.

சிலப்பதிகாரத்தில் சோழ மன்னனுக்குத் திறை செலுத்திய வடநாட்டைச் சேர்ந்தவர்கள் பட்டிமண்டபத்தைப் பரிசாகத் தந்த செய்தி இடம் பெற்றுள்ளது.

பகைபுறத்துக் கொடுத்த பட்டி மண்டபமும் (சிலம்பு. 102)

மணிமேகலை காப்பியத்தில்,

ஒட்டிய சமயத்து உறு பொருள் வாதிகள்
பட்டி- மண்டபத்து, பாங்கு, அறிந்து, ஏறுமின்

(மணி.மே. வி.அ.காதை 60-61)

என்று அவரவர் சமயக்கருத்துக்களைச் சூளுரைத்து வாதிக்கும் சமய வாதிகள் பற்றிய குறிப்பு உள்ளது.

கம்பன் அரசியல்கடமைகள், கலைத்துறைப்பணிகள், சமயத் தொண்டு ஆகியவற்றிற்கெனத் தனித்தனி மண்டபங்கள் இருந்ததைக் குறிப்பிடும் போது, அறிவுநலம் வளர்க்கும் ஆய்வுக்கென பட்டிமண்டபம் இருந்ததைச் சுட்டிக்காட்டியுள்ளதை,

மன்னவர் தரு திறை அளக்கும் மண்டபம்
அன்னம் மென் நடையவர் ஆடு மண்டபம்
உன்ன அரும் அரு மறை ஓது மண்டபம்
பன்ன அருங் கலை தெரி பட்டி மண்டபம் (154)

என்று எடுத்துக்காட்டியுள்ளார்.

நூல்களின் சிறப்பு

அயோத்தியில் உள்ள மதிலின் உயர்வை எடுத்துக்காட்டும்போது,

நூல் வரைத் தொடர்ந்து, பயத்தோடு பழகி
நுணங்கிய நுவல அரும் உணர்வே
போல் வகைத்து அல்லால் உயர்வினோடு
உயர்ந்தது என்னலாம்.......... (கம்பன்.100)

என்று உணர்த்துகிறார்.

ஞானநூல்களைக் கற்பதும், அதன்பயனாக அவற்றின் நுணுக்கத் தினையும், கூறுவதற்கரியதுமான மெய்யுணர்வையும் பெற்று உயர

வேண்டும் என்பதை எடுத்துரைத்துள்ளார்.

அயோத்தியில் வாழ்கின்ற மக்களின் அறிவுப் பெருக்கத்தைக் குறிப்பிடும் கம்பன் அங்கு நல்ல கலை நூல்களைப் படிக்காது நிற்பவர்களாகிய வீணர்கள் இல்லாமையால் கல்வியில் முற்றும் வல்லவர் என்று எவரும் இல்லை என்று குறிப்பிடுகிறார். இதனை,

கல்லாது நிற்பார் பிறர் இன்மையின், கல்வி முற்ற
வல்லாரும் இல்லை அவை வல்லவர் அல்லாரும் இல்லை 166

என்று சுட்டிக்காட்டியிருப்பதால், நல்ல கலை நூல்களைக் கல்லாதவர்கள் வீணர்கள் என்ற கருத்தினை வலியுறுத்தியுள்ளார்.

ஆராய்ச்சித் திறன்

தசரதனின் சிறப்பினைக் கூறும்போது அறிவு என்ற கடலை எண்ணற்ற நுண்ணிய நூலாராய்ச்சி என்ற படகு கொண்டு தாண்டியவன் என்ற கருத்தினை,

ஈந்தே கடந்தான், இரப்போர் கடல் எண் இல் நுண் நூல்
ஆய்ந்தே கடந்தான், அறிவு என்னும் அளக்கர் 172

என்று பாடுவதின் மூலம் கல்வி என்பது ஆய்வினை நோக்கிச் செல்ல வேண்டும் என்ற கருத்து உணர்த்தப்பட்டுள்ளது.

"ஆய்வு என்பதன் அடிப்படைச்சொற்பொருள் ஏதேனும் ஒன்றை மிக்க கவனத்தோடு விடாமுயற்சியோடும் நுட்பமாய்த் தேடுவது என்பதாகும். ஏதேனும் ஒன்று என்பது புதிய மெய்ம்மைகளைச் சுட்டும். சில கொள்கை விதிகளை வகுக்கக் கூடிய அளவு, அடிப்படையான மெய்ம்மைகளைத் தேடிக் காண்பதே ஆய்வாகும்" (டாக்டர் தமிழண்ணல், டாக்டர் எம்.எஸ்.இலக்குமணன், ஆய்வியல் அறிமுகம்- ப.11)

உயர்கல்வியில் ஆய்வு என்பது அவசியம் என்பதைத் தற்காலத்தில் வலியுறுத்தும் நிலையில், கம்பன் ஆய்வின் இன்றியமையாமையைத் தம் காவியத்தில் உணர்த்தியுள்ளார்.

கம்பன் தான் காண விரும்பிய சமூகத்தில், கல்வி வளர்ந்தோங்க வேண்டும் என நினைத்தான். அதன் பயனாக, தம் காப்பியத்தில் கல்வியின் முக்கியத்துவத்தையும், கவிதையின் சிறப்பினையும், பட்டி மண்டபத்தின் மேன்மையினையும், ஆராய்ச்சித் திறனையும் உணர்த்திக் காட்டியுள்ளார். தற்காலக் கல்வி முறை சிறக்க கம்பனின் படைப்பு ஒரு அளவுகோலாக அமைகிறது.

கம்பன் காட்டும் நல்லாசிரியர்

பா. சம்பத்குமார்
தமிழ்த்துறை விரிவுரையாளர். அரசினர் திருமகள் ஆலைக் கல்லூரி.
குடியேற்றம். வேலூர் மாவட்டம்

அண்மையில் ஆசிரியருக்கு இருக்க வேண்டிய தகுதிகள் (Teacher Competencies) பற்றி ஒரு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இதன் முடிவாக ஆசிரியர்க்கு இருக்க வேண்டிய தகுதிகளில் எல்லாம் மிகவும் முக்கியமானது "ஆசிரியர் மாணவரிடம் காட்டும் அன்பு" என்ற ஆய்வு அறிக்கை கிடைத்தது. அது கம்பனில் இடம்பெறும் வகையை இக்கட்டுரையில் காணலாம்.

பாலையும் குளிர் நீரோடை ஆயிற்று

அனல் பற்றி எழுகின்ற கொடிய பாலையின் வெப்பத்தை அரசு குமாரர்கள் எப்படித் தாங்கிக் கொள்ளுவார்கள் என்ற கவலை விசுவாமித்திரருக்கு ஏற்பட்டது. அரசு குமாரர்கள் வலிமை படைத்தவர்கள்தாம் என்றாலும் பூவினும் மெல்லிய இளமை படைத்தவர்கள் அன்றோ!

இவர் பெரிது அளவில் ஆற்றலைப்
பொருந்தினர்: ஆயினும் பூவின் மெல்லியர்:
வருந்துவர் சிறிது' என மனத்தில் நோக்கினான்

விசுவாமித்திரர் அரசகுமாரர்களை நோக்கிய அளவிலே, குறிப்பு அறியும் அவ்விருவரும் குருவின் திருவடிகளைச் சேர்ந்தனர். அப்போது விசுவாமித்திரர் பாலை நிலத்தின் வெப்பம் தோன்றாமல் இருப்பதற்கு பிரம்மதேவனால் உண்டாக்கப்பட்ட இரண்டு வித்தைகளை அவர்களுக்கு உபதேசித்தார். பலை, அதிபலை என்பன அவ்விரண்டு வித்தைகள் ஆகும். அந்த இரண்டு வித்தைகளையும் அவ்விருவரும் மனத்திலே நன்றாகச் சிந்தித்துக் கொண்டார்கள்.

நோக்கினான் அவர்முகம்: நோக்க, நோக்குடைக்
கோக்குமரரும் அடிகுறுக, நான் முகன்
ஆக்கிய விஞ்சைகள் இரண்டும் அவ்வழி
ஊக்கினன். அவை, அவர் உள்ளத்து உள்ளினார் (18)

ஆசிரியர் மாணவர் உறவை இப்பாடல் தெரிவிக்கும் விதம் மிக அற்புதமாக உள்ளது. ஆசிரியர் அன்பு உடையவர், சிறந்தவர். மாணவரும் ஆசிரியரின் குறிப்புணரும் ஆற்றல் படைத்தவர்கள, கற்கும் ஊக்கம் உடையவர்கள். 'பின்னர்' அவர்கள் வித்தையைப் பெறத் தடை ஏது' என்பதையே இப்பாடல் தருகிறது. இப்பாடலில் மற்றோர் குறிப்பிடத்தக்க செய்தி உள்ளது. ஆசிரியர் நோக்கிய அளவிலேயே அரசு குமாரர்கள் அவர் திருவடிகளிலே பணிந்தனர் என்ற மாணாக்கரின் பணிவுடைமை மிக ஆணித்தரமாகக் குறிக்கப்பட்டுள்ளது.

முனிவர் உபதேசித்த இரண்டு மந்திரங்களை அவர்கள் மனத்தில் சிந்தித்த பொழுதிலே ஊழித் தீயையும் வென்ற அப்பாலையின் கொடிய வெப்பம் குளிர்ந்த நீரோடை போல ஆயிற்றாம்.

ஆசிரியர் மாணவனின் துன்பம் போக்குதலும், அதனாலே மாணவன் பெறுதற்கரிய பல நன்மைகளைப் பெறுதலும் இப்பாடலில் மிக அழுத்தமாகக் தெரிவிக்கப்பட்டுள்ளன.

நெஞ்சில் நிலைத்த வருத்தம்

விசுவாமித்திரரால் இராமனுக்கு வாய்த்;த குருவருள், வில்வித்தையாக மட்டும் நின்றுவிடாமல் அவனது திருமணமாக நிறைவு எய்துகிறது.

இங்கே மற்றொரு கருத்தையும் சிந்தித்தல் வேண்டும். விசுவாமித்திரர் தாடகையை அழிப்பதற்கு மட்டும் இராமனை அழைத்து வரவில்லை. கல்லாகிப் போன அகலிகையை எழுப்புவதற்கும்தான். விசுவாமித்திரர், மிதிலையில் சதானந்த முனிவருக்கு இராமனது பெருமையைக் கூறி அறிமுகம் செய்து வைக்கும் போது கூறும் மொழிகளால் இது புலப்படுகிறது.

"மாதவத்தை உடைய சதானந்த முனிவரே! வள்ளல் தன்மையை உடைய இராம பிரான், இடி போன்ற குரலை உடைய தாடகையின் உடலையும், எனது வேள்வியையும், உனது தாயான அகலிகையின் சாபத்தையும் ஒன்றன் பின் ஒன்றாக முடித்து வைத்தான். இவை மூன்றும் நெடிது நாட்கள் முடிவுறாமல் இருந்தமையாலே என் நெஞ் சிலே வருத்தம் நிலைத்திருந்தது. எனது மனத்தில் இருந்த வருத்தத்தைப் போக்கியவன் இராமன் ஆவான்" என்றார் விசுவாமித்திரர்.

வடித்த மாதவ கேட்டி! இவ்வள்ளல் தான்,
இடித்த வெங்குரல் தாடகை யாக்கையும்

அடுத்து என் வேள்வியும், நின் அன்னை சாபமும்,
முடித்து என் நெஞ்சத்து இடர் முடித்தான் (கம்ப. மிதி - 88)

என்ற பாடல் விசுவாமித்திரரது மொழியில், இராமனது பெருமையை மிகவும் உயர்த்திக் காட்டுகிறது. இராமன் விசுவாமித்திரருக்கு உரிய தருணத்தில் உதவி புரிந்த மாணவன் ஆகிறான்.

துலாக்கோல் போன்றவர் ஆசிரியர்

நிறுத்தப்பட்ட பண்டத்தின் நிறையை ஐயத்திற்கு இடமின்றிக் காட்டுவது நிறைகோல். துலாக்கோல் இருதட்டுக்களுக்கும் இடையே நின்று நீதியின் சான்றாக இருக்கிறது. நீதி வேறு அறம் வேறு அன்று.

ஐயம் தீரப் பொருளை உணர்த்தலும்
மெய்நடு நிலையும் மிகு நிறை கோற்கே (நன் பொது- 29)

துலாக்கோலைப்போல ஆசிரியர் இருக்க வேண்டும் என்று நன்னூல் கூறுவதும் இங்குக் கருதத் தக்கது. இழிகுண இயல்பு ஆசிரியருக்குக் கூடாது எனவும் நன்னூல் விதித்திருப்பதையும் இங்கே சிந்திக்க வேண்டும்.

ஆசிரியரின் வழிகாட்டும் பொறுப்பு

தற்காலக் கல்வி வல்லுநர்களும் ஆசிரியர்க்கு ஆராய்ச்சி அறிவு மிக முக்கியமானது என்பதை, "ஒவ்வொரு ஆசிரியரும் இயன்றவரை ஆராய்ச்சியில் ஈடுபட்டுத் தமது பணித்திறனை உயர்த்திக் கொள்ள முற்பட வேண்டும். எந்தக் கல்விப் பிரச்சினையினையும் ஆராய்ச்சி மனப்பான்மையுடனும் அறிவியல் மனப்போக்குடனும் அணுக. ஆராய்ச்சிப் பணி ஆசிரியரை ஆயத்தப்படுத்தும்" என்று கூறுவர். வழிகாட்டும் பொறுப்பு (Guidence Function) ஆசிரியருக்கு இருப்பதால் ஆராய்ச்சி அறிவுடன் கூடிய அவரது ஆளுமைத்திறன் (Personality) எப்போதும் வலியுறுத்தப்படுகிறது.

வாழ்க்கைப் பிரச்சனைகளுக்குத் தீர்வு காண்பதில் மாணாக்கர்களுக்கு வழிகாட்டுதல் (personal Guidance) இன்றைய கல்வியில் மிக முக்கிய இடம் பெற்றுள்ளது. பள்ளிகள் கல்லூரிகளில் அறிவுரை பகர்தல் மற்றும் வழிகாட்டலுக்கான பிரிவு (Counselling and Guidance Cell) வருகிறது.

இக்கண்ணோட்டத்தில் கம்பராமாயணத்தை உற்றுநோக்கும்போது, இராமன் தரும் சங்கடத்தில் ஆழ்ந்திருந்த நிலையில், விசுவாமித்திரர் மிக நுட்பமாகச் செயல்பட்டு வழிகாட்டுவதைக் கம்பன் அற்புதமாக

வடித்துத் தந்திருப்பதைப் பார்க்க முடிகிறது. "தாடகையாகிய பெண்ணைக் கொல்வதா? அது அறமா? என்ற இராமனின் மனத்தில் எழுந்த விவாதத்திற்குத் தக்க சான்றுகளையும் வரலாறுகளையும் எடுத்துக்காட்டி "அரக்கியைக் கொல்க" என்ற தீர்க்கமான முடிவையும் (Guidance) வழங்கும் கம்பனின் காப்பியப் போக்கு மிகவும் சிறப்புடையதாகும். எப்போது படித்தாலும் கல்வி வல்லார்க்கு அவர்கள் அன்றாடம் காணுகிற சவால்களுக்குரிய தீர்வாகக் கம்பன் வாக்கு அமைந்துள்ளது.

வழிகாட்டுதல் வளர்ச்சிக்கு வித்து

இவ்வாறு தக்க முறையில் ஆசிரியர் வழிகாட்டுவதால் மாணவனுக்குப் பலவிதமான நன்மைகள் ஏற்படுகின்றன.

"வழிகாட்டுதல் என்பது மாணவன் மிக உயர்ந்த வளர்ச்சியைப் பெற உதவுகிறது. மாணவன் தன்னிடம் அடங்கியிருக்கும் அனைத்துத்திறமைகளையும், சக்திகளையும், நற்குணங்களையும் புரிந்துகொள்ள வழிவகுக்கிறது. மேலும் அவன் வாழுகின்ற சமூகப் பண்பாட்டுச் சூழ்நிலையுடன் பொருந்திச் செல்வதற்கும் உதவுகிறது. தானே, கற்றலுக்கும், மற்றவர்களுடன் இணைந்து செல்வதற்கான மனப்பாங்கைச் சுயமாக வளர்த்துக் கொள்வதற்கும் துணை புரிகிறது. இத்தகைய வழிகாட்டுதல் என்பது கல்வியின் எல்லா நிலைகளிலும் அத்தியாவசியமாகத் தேவைப்படுகிறது" என்ற அறிஞர் கருத்தும் இங்கே ஒப்புநோக்கத் தக்கது ஆகும்.

இராமன் பெற்ற கல்வி

மணமகனாக வருபவனின் படிப்பறிவு எப்படிப்பட்டது என்பதைப் பெண்ணின் பெற்றோர் அறிந்து கொள்வதிலே மிகவும் ஆர்வமாக இருப்பார்கள். அதனால் விசுவாமித்திரரும், இராமன் கல்வி கற்ற முறைமையைப் பின்வருமாறு கூறினார்.

திறையோடும் அரசு இறைஞ்சும் செறிகழற்கால் தசரதனாம்
பொறையோடும் தொடர் மனத்தான் புதல்வர் எனும் பெயரே காண்
உறையோடு நெடுவேலாய்! உபநயன விதி முடித்து
மறையோது வித்து இவரை வளர்த்தானும் வசிட்டன் காண்! (24)

இப்பாடல் சனக மன்னனின் உள்ளத்தில் தோன்றும் ஐயத்தினை நீக்குவதற்கான விடையைத் தருகிறது. இராமனின் தந்தை தயரதன் அறுபதினாயிரம் மனைவியரை உடையவன் என்பதனாலே, இராமனின்

நிலை எத்தகையதோ என்ற ஐயம் சனகருக்குத் தோன்றுவது தயரதனாக இருந்தாலும், "இராம இலக்குவர்களுக்கு வேதவிதிப்படி செய்ய வேண்டிய உபநயனத்தைச் குழந்தைப் பருவத்தில் வளர்த்தவன் வசிட்டனே! தயரதன் இவர்களைப் பெற்று எடுத்தவன் என்பதைத் தவிர கல்வியைப் பொருத்த வரையில் அம் முழுப்பொறுப்பும் வசிட்டரையே சார்ந்தது: "இவர்கள் வசிட்டர் வீட்டிலேயே வளர்ந்தவர்கள்" என்றார் விசுவாமித்திரர்.

ஆசிரியருக்கு மனநலம் இன்றியமையாதது

"மனநலம் இல்லாத ஆசிரியர் தனது வாழ்க்கையை வீணடிக்கின்றார். அம்மாட்டோடன்றி அன்றாடம் தாம் மிகவும் நெருக்கமாகப் பழகுகின்ற குழந்தைகளின் மனநலத்தையும் பலவகையிலும் சிதைத்து விடுகின்றார்" என்கிற அறிஞர் கருத்தையும் ஒப்புநோக்கும் போது ஆசிரியரின் உடல் நலமும் மனவளமும் மிகவும் முக்கியமானவை என்பது தெளிவாகும்.

விசுவாமித்திரரின் வாழ்க்கை வரலாற்றைக் கூறும் சதானந்த முனிவர் இராம இலக்குவர்களை நோக்கி, "இம் முனிவருக்கு ஒப்பாக மாதவத்தால் உயர்ந்த மாண்பு உடையவர் யாரும் இல்லை! நியமம் தவறாத மெய்யுணர்வுக்கு இருப்பிடமானவர் இவர். இவருடைய கருணையை நீங்கள் முழுமையாகப் பெற்றிருக்கிறீர்கள். இனிமேல் உங்களால் செய்ய முடியாத செயல் யாது உளது?" என்று கேட்கின்றார்.

தவ மாண்பும், நியமம் தவறாமையும் ஆசிரியருக்குரிய பண்புகளாகக் கம்பனால் வீதிக்கப்பெறுவதை இங்கே காண்கிறோம். குருவருளின் துணை இருந்தால் எந்தச் செயலிலும் மாணவன் வெற்றி காண முடியும் என்ற கம்பனின் கோட்பாடும் இங்கே விளக்கம் பெறுகிறது.

வித்தகன் தன் அருள் நேர்ந்தனிர் யாது உமக்கு அரிது? (137)

என்ற சதானந்தரின் வினாவால், மாணவனுக்குக் குருவருள் தேவை என்ற கம்பனின் கருத்து வலிவு பெறுகிறது.

கம்பனின் கல்விக் கோட்பாடுகளும் ஆசிரியர் மாணாக்கர் உறவும்

ஆ.ரூபா
முனைவர்பட்ட ஆய்வாளர், தூயநெஞ்சக் கல்லூரி, திருப்பத்தூர், வேலூர்மாவட்டம்

"பிற்றைநிலை முனியாது கற்றல் நன்றே" என்று புறநானூற்றில் கூறப்படுவது சிந்திக்கத்தக்கது. ஆசிரியரின் பின்னால் சென்று அவருடைய மனோநிலைக்கு ஏற்பச் செயல்பட்டுக் கல்வி கற்க வேண்டிய நிலை சங்க காலத்தில் இருந்துள்ளது என்பதையே இது காட்டுகிறது. ஆசிரியரைப் பின் தொடர்ந்து சென்று அவர் எப்போது கற்றுத் தருவார் என்று "ஏங்கும்" நிலை வள்ளுவர் காலத்திலும் இருந்துள்ளது.

உடையார் முன்இல்லார் போல்ஏக்கற்றும் கற்றார்;
கடையரே கல்லா தவர் (குறள் 365)

இக்குறள் வள்ளுவர் காலத்தில் மாணவன் மற்றும் ஆசிரியரிடம் இருந்துள்ள தொடர்பை நன்கு காட்டுகிறது. கல்வியை எவ்வாறு மிகவும் துன்பப்பட்டுக் கற்றுக் கொண்டார்கள் என்பதையும் காட்டுகிறது. கற்றறிந்த ஆசானின் பெருமிதநிலையையும், கல்வியில்லாத ஒருவனின் தாழ்ந்த நிலையையும் சுட்டிக் காட்டுகிறது. பொருள் நிறைந்த பணக்காரர்களைப்போல அன்றைய கற்றறிந்த ஆசான்கள் இருந்திருக்கிறார்கள். செல்வம் மிக்கவரிடம் அவர்களுடைய "செவ்வி" நோக்கி செல்வத்தை வேண்டுகின்ற இரவலர் போன்ற தாழ்வு மனம் கொண்டவர்களாக கல்விப்பசியால் தவித்தவர்கள் இருந்திருக்கிறார்கள்.

கல்விப் பயன்பாடு

இத்தகைய இடர்ப்பாடுகள் இருந்த போதிலும் கல்வியைக் கற்றுக்கொள்வதிலே பின்னடைவு இருக்கக் கூடாது என்பதே திருவள்ளுவரின் தீர்ப்புரை ஆகும். சாகும்வரையிலும் கற்க வேண்டும் (குறள்-397) எனவும், ஒரு பிறப்பில் கற்ற கல்வியானது ஏழுபிறவிகளிலும் சென்று உதவும் (குறள் - 398) எனவும் கல்வியின் இன்றியமையாமையையும், பயன்பாட்டையும் வள்ளுவப் பெருந்தகை அறுதியிட்டுக் கூறுகின்றார்.

ஆசை எதற்கு?

"உடையார்முன்" என்ற தொடங்கும் திருக்குறளில் "ஏக்கற்றும்" என்ற தொடர் வருகிறது. இதற்குப் பொருள் வரையும் பரிமேலழகர் "ஏக்கறுதல் - ஆசையால் தாழ்தல்" என்று குறிப்பிட்டுச் சொல்லுகிறார். பொதுவாக ஆசை மனித உள்ளத்தில் பெருகி வரும்போது மனிதன் தன் அகங்காரத்தை விட்டு ஒழித்து அந்த ஆசைக்கே அடிமை ஆகிவிடுகிறான். இதனைக் கம்பனும் நன்கு காட்டுகிறான். உடல் நடுங்கிப் பேதுறுகின்ற சீதையை நோக்கி இராவணன் வருகின்ற காட்சியை அனுமன் ஒரு மரத்தின் மேல் இருந்து. தனது இரண்டு கண்களும் சான்றாகக் காண்கின்றான். அப்போது இராவணின் காம ஆசை மீதூர்ந்து வருகின்றான். இராவணனின் காம ஆசை காரணமாக அவனுடைய உயிரின் அடித்தளமும் ஆட்டம் கண்டது. காமம் பெரியதாயிற்று. அதன் முன்னே அவன் உயிரும் உடம்பும் சிறிதாகி நிலை குலைந்தன. கம்பன். **ஆசையால் உயிர் ஆசு அழிவானையும்** என்று பேசுகிறான். ஆக ஆசை பெரிதாகும் போது உயிரும் உடலும் தாழ்ந்து போகும் என்பதனைக் கம்பன் பாட்டாலும் நாம் தெரிந்து கொள்கிறோம்.

கல்வி யோகம்

ஆசிரியர் மாணவனைக் கரும யோகத்திற்கு ஊக்குவிப்பவராக இருக்க வேண்டும் என்பதனையே கம்பராமாயணத்தின் கல்விக் கோட் பாடு நமக்கு உணர்த்துகிறது.

ஒவ்வொரு மாணவனும் பயன்உள்ள ஏதேனும் ஒரு பொருளை செய்து முடிப்பதன் வாயிலாகத் (Productivity) தனது கல்வியைக் கற்றுக் கொள்ள வேண்டும் என்பதை அமெரிக்கக் கல்வி வல்லுநர் ஜான் டூயி (John Dewey) (1859-1952) வலியுறுத்தினார். அவரது கல்விக் கொள்கையில் பயனுள்ள பொருள் உற்பத்தி (Pragmatism) என்பது வலியுறுத்தப்பட்டது. ஒவ்வொரு மாணவனும் கல்வி கற்கும்போது ஒரு செயல்திட்டத்தை முடிப்பதற்கு (Project Method) ஏதுவான கல்வியைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்பதே ஜான் டூயியின் மிகச் சிறந்த கோட்பாடு ஆகும். "கல்வியின் மூலமாக மாணவனின் இயற்கையான உணர்வுகள் தூண்டப்பட வேண்டும். அக்கல்வியால் மாணவன் எதிர்காலத்தில் சமுதாயச் சூழ்நிலைகளை

வெற்றியுடன் எதிர்கொள்பவனாக உருவாக் கப்பட வேண்டும்" என்பதே ஜான்டூயியின் கல்விக் கருத்துகளின் சாராம்சம். இத்தகைய செயல் திட்டத்தின் மூலமான கல்வி முறை அமெரிக்காவில் பெரும் வரவேற்பைப் பெற்றது. செயல்திட்ட முறைக்கல்வி என்பது, இந்தியத் தத்துவத்தின் அடிப்படையில் பார்க்கும் போது கருமயோகமாக அது அமைவதைக் காண்கிறோம்.

மேலைநாட்டுக்கல்விக் கோட்பாட்டுடன் கம்பனை ஒப்பிட்டுப் பார்க்கும்போது கம்பன் பல இடங்களில் பயன் உள்ள பணிக்கு (Pragmatism) மாணவனை ஊக்குவிக்கின்ற கல்வியை வலியுறுத்தி இருப்பதைக் காண முடிகிறது.

சிறுவனாக இருக்கும் இராமனை 'வேள்வியைக் காப்பதற்காக அனுப்புக' என்று விசுவாமித்தரர் கூறும்போது, தயரதனின் குல குருவாகிய வசிட்டர் அதனை வழிமொழிகின்றார்.

பெய்யும் மாரியால் பெருகும் வெள்ளம் போய்
மொய் கொள் வேலைவாய் முடுகும் ஆறுபோல்
ஐய! நின் மகற்கு அளவு இல் விஞ்சை வந்து
எய்து காலம் இன்று எதிர்ந்தது' என்னவே (கம்ப. கைய-16)

என்று வசிட்டர் பேசுவது மிகவும் சிறப்பு வாய்ந்தது.

'அளவுஇல் விஞ்சை' என்பது இங்கு 'எல்லையற்ற பல வித்தைகள்' என்று பொருள் தருகிறது. விசுவாமித்திரர் வில்வித்தையில் பேராற்றல் பெற்றவர். அரசுகுமாரனாகிய இராமன் வில்வித்தையில் தேர்ச்சி பெற்றால் தான் அவன் எதிர்காலத்தில் மிகச்சிறந்த அரசனாக வர முடியும். எனவே அவனுக்கு வில்வித்தை தொடர்பான கல்வி மிகவும் அவசியமானது. அவ்வில்வித்தையில் கை தேர்ந்து, அவன் விசுவா மித்திரரின் தவத்துக்குக் காட்டிலே இடையூறு செய்யும் தாடகை என்னும் கொடிய அரக்கியை அழித்து ஒழிக்க வேண்டும் என்ற எதிர்காலச் செயல்திட்டத்தை (Project) வசிட்டர் வெளிப்படையாகக் கூறவில்லையென்றாலும், 'இராமனைக் காட்டுக்கு அனுப்புக' என்ற அவரது அறிவுரையில் உட்பொதிவாக அமைந்து கிடக்கிறது.

தொலைநோக்குப் பார்வை (Vision)

பின்னாலே இராமன் தனது வில்லாற்றலின் மூலமாக இலங்கையின் கொடிய அரக்கர்களை வீழ்த்தி, அறத்தின் மூர்த்தியாக விளங்க

இருக்கிறான் என்பதை வசிட்டர் தீர்க்கதரிசனமாக இங்கு குறிப்பாக உணர்த்துவதையும் பார்க்க வேண்டும்.

நின் மகற்கு...உறுத்தலாகா உறுதி எய்தும் நாள் மறுத்தியோ (14)

என்பது வசிட்டன் வாக்கு.

'யாராலும் செய்து விட முடியாத பல நன்மைகள் உன் புதல்வனுக்கு வந்து சேர்கிற காலத்தில் அவற்றை நீ தடுக்கலாமோ' என்ற வசிட்டர் மொழியில், அவரது ஞானக்கண் பார்வைமிகத் துல்லியமாக வெளிப் படுகிறது.

இதற்கு உரைவரையும் வை.மு.கோபால கிருஷ்ணமாசாரியார் "விசுவாமித்திரனது புருஷாகாரத்தில் இராமனுக்கு நிகழும் சீதா விவாகத்தையும் வசிஷ்டன் ஞானக்கண்ணால் உணர்ந்ததுவும் அடங்க" என்று கூறுகின்றார். சீதையைத் திருமணம் கொள்வது மட்டும் அல்லாமல், அதற்கும் பலபடி மேலே சென்று, ஊழி பெயரினும் பெயராத ஏழு மராமரங்களையும் சுக்கிரீவன் பணித்த போது வீழ்த்தினான் அல்லனோ! அதனை அடுத்து, அறம்புகாத இலங்கையிலும் புகுந்து, யாராலும் வெல்லப்படாதவன் என்ற வரம்பெற்ற இராவணின் உரம் கிழித்தான் அல்லனோ! அவ்வில்வித்தைப் பயிற்சியின் வாயிலாக,

சூர் அறுத்தவனும், சுடர்நேமியும்,
ஊர் அறுத்த ஒருவனும், ஓம்பினும்
ஆர் அறுத்தினொடு அன்றி நின்றார் அவர்
வேர் அறுப்பென்: வெருவன்மின் நீர் (22)

என்று இராமன் தவ முனிவர்க்குத் தண்டக வனத்தில் அபயம் அளித்து, அதனால் 'அறம் வெல்லும் பாவம் தோற்கும்' என்ற நல்லறத்தை உலகில் நிலைநாட்டினான். அல்லனோ! இத்தனையும் உள்ளடக்கியதாகவே மேலே கூறப்பட்ட வசிட்டனின் சொற்கள் அமைந்துள்ளன.

இந்த இடத்தில் உலகியலில் உள்ள ஒரு நிகழ்ச்சியையும் ஒப்பிட்டுப் பார்த்தால் ஆசிரியர்க்குத் தொலைநோக்குத்தேவை என்பது உறுதிப்படும்.

மாணவன் நிழல்

ஆசிரியர் மாணவர் உறவைக் கம்பன் மிக நேர்த்தியாகப் படைக்கின்றான். தயரதன் இராம இலக்குவரை விசுவாத்திரரிடம் கானகம் செல்வதற்காக ஒப்படை செய்தான். இருவரும் விசுவாமித்திரருடன்

சென்றனர். ஆசிரியரை விட்டு அகலாது வித்தைகளைக் கற்க வேண்டும் என்ற துடிப்பு இராம இலக்குவர்களுக்கு உண்டு அவர்கள் முனிவன் பின்னே சென்ற காட்சியைக் கம்பன்.

சொன்ன மாதவன் தொடர்ந்து சாயை போல்
பொன்னின் மாநகர்ப் புரிசை நீங்கினான் (கம்ப. கையடை.20)

என்று தெரிவிக்கின்றான்.

விசுவாமித்திரரின் நிழலைப்போல இராமன் செல்ல, அவன் பின்னாலே இலக்குவன் சென்றான். பெரும்பேராசானை, இராம இலக்குவர்கள் விடாது பற்றிக் கொள்ளுகிற பாங்கை இப்பாடல் தெரிவிக்கிறது.

மாணவன் எவ்வாறு இருக்கவேண்டும் என்பதை நன்னூல் இயற்றிய பவணந்தி முனிவர் விதியாக விரைந்துள்ளார். அதிலே மாணவன் ஆசிரியரை 'நிழலின் நீங்கானாக' வழிபட வேண்டும் என்று விதிக்கப் பட்டுள்ளமையும் இங்கே கருதத்தக்கது.

யார் ஆசிரியர்?

குருவருள், திருவருள் ஆகிய இரண்டையும் பற்றிக் கம்பன் பல இடங்களில் பேசுகிறான். குருவருளைப் பற்றிக் கம்பன் மிகவும் சிறப்பாகப் பேசுகின்ற இடம் விசுவாமித்திரருடைய வரலாற்றைக் கூறும் பகுதி ஆகும்.

ஆசிரியரின் தகுதியைக் கம்பன், பலரைக் கொண்டு விளக்குகிறான். வசிட்டர், விசுவாமித்திரர், சதானந்தர் முதலான பலரைப் பற்றிக் குறிப்பிடும் இடங்களில் எல்லாம் குரு அல்லது ஆசிரியரின் தகுதி எத்தகையதாக இருக்க வேண்டும் என்பது மிளிர்கின்றது.

விசுவாமித்திரரை நூல்தோய்ந்த சிந்தையன் (மிதிலைக் காட்சிப் படலம் -88) என்று கம்பன் கூறுவான். விசுவாமித்திரரின் சிந்தை எப்போதும் சாத்திரங்களிலேயே மூழ்கி இருக்குமாம்.

இதுமட்டும் அன்றி விசுவாமித்திரரின் பெருமையைச் சதானந்த முனிவர் இராம இலக்குவர்களுக்கு மிக விரிவாக எடுத்துரைக்கின்றார். இராம இலக்குவர்கள் மிதிலையை வந்து அடைந்தனர். அப்போது, விசுவாமித்திரரால் இச்சதானந்தர் என்பவர் இராம இலக்குவர்களுக்கு அறிமுகப்படுத்தப்படுகின்றார். சதானந்தர் என்பவர் கௌதம முனிவர்க்கும் அகலிகைக்கும் மைந்தராகத் தோன்றிய தவசீலர். சனக

மன்னரின் அவைக் களத்தில் புரோகிதராக இருப்பவர்.

மிதிலையை அடைவதற்கு முன்பாக, கல்லாகக் கிடந்த அகலிகையை தனது பாதம் பட்டதன் வாயிலாக உயிருடன் எழுப்பித் தந்தவன், இராமன் அதனால் சதானந்தருக்கு இராமனிடம் பேரன்பு பிறக்கிறது. இராம இலக்குவர்களை அந்த இடத்திற்கு அழைத்து வந்தவர் விசுவாமித்திரர் அல்லரோ? எனவே, விசுவாமித்திரன் பெருந்தவ வலிமையைப் போற்றி அவரது வரலாற்றினை இராமனுக்குச் சதானந்தர் எடுத்து உரைக்கின்றார். இதன் காரணமாக தமது ஆசானாகிய விசுவாமித்திரரை எண்ணி இராம இலக்குவர்கள் பெருமிதம் கொள்கின்றனர்.

முடிவுரை

எத்தகைய சூழலிலும் கம்பனின் இராமாயணம் பயணப்படுகிறது. கல்வி சார்ந்த கோட்பாடுகளை உள்ளடக்கி ஆசிரியர் மாணவர் உறவு எவ்வாறு அமைய வேண்டும் என்பதனையும் அறிய இயலுகின்றது.

கல்வியியல் நோக்கில் கம்பன்

முனைவர். **அ.விஜயன்**
உதவிப் பேராசிரியர், அரசுக் கல்லூரி, சித்தூர், பாலக்காடு மாவட்டம், கேரளா

கல்வி' என்பதற்கு பல்வேறு கருத்துரைகள் கூறப்படினும் 'ஓர் மனிதனைத் தனக்கும் தன் வீட்டிற்கும் நாட்டிற்கும் பயனுடைய மனிதனாக மாற்றுவதே கல்வி' என்ற கருத்துரை முக்கிய இடம் பெறுகிறது.

நுண்ணிய நூல்பல கற்பினும் மற்றுந்தன்
உண்மை யறிவே மிகும்

என வள்ளுவர் கூறினாலும் 'மனிதனுள் ஒரு நல்ல மாற்றத்தை உருவாக்குவதே/ உருவாகத் தூண்டுவதே கல்வி' என்பது இன்றைய கல்வியாளர்களின் உறுதியான ஆழமான கருத்துரையாகும். அத்தகைய நல்ல மாற்றத்திற்குக் கம்பராமாயணம் ஒன்றே போதுமானது.

இன்றைய துரித, கணினியுகத்தில் பெரும்பாலான மக்களுக்கு வாசிக்கும் நேரமும் குறைவு; அந்தப் பழக்கமும் குறைவு. எனவே தேவையானவர்கள்கூட மிகவும் அவசிய கட்டத்தில் மட்டுமே கம்பனைப்படிக்கிறார்களே தவிர அதன் சிறப்புக்காக, காப்பிய அழகிற்காக, இரசிப்பதற்காக, அறிவு பெறுவதற்காகப் படிப்பது என்பது மிகவும் அரிதாகி வருகிறது.

இந்நிலையில் கல்லூரிகளில் இராமாயணத்தின் எப்பகுதி பாடப்பகுதியாக வைக்கப்பட்டுள்ளது, வைக்கப்படுகிறது, கற்பிக்கப்படுகிறது என்பது முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைகிறது. மாணவர்களின் பன்முக ஆளுமையை வளரச்செய்வதற்கு இராமாயணம் போதுமானதெனில் அதில் எந்தப்பகுதி பாடப்பகுதியாக இடம்பெற வேண்டும் அல்லது இடம்பெறுகிறது என்பது ஆராயத்தக்கது.

பாடப்பகுதிகள்

ஒரு சில பல்கலைகழகங்களில் இளங்கலை, முதுகலை வகுப்புகளில் பாடப்பகுதியாக இடம்பெற்றுள்ள தமிழ் இராமாயணப்பகுதிகள் கீழே தரப்படுகின்றன.

வ . எண்	பல்கலைக் கழகம்	இளங்கலை	முதுகலை
1	கேரளா	கடல் தாவு படலம்	சுந்தரகாண்டம் முதல் 3 படலம்
2	கோழிக் கோடு	குகப் படலம்	சுந்தரகாண்டம் முதல் 5 படலம்
3	மகாத்மா காந்தி	குகப் படலம்	-----
4	பாரதியார்	சூளாமணி படலம்	சூளாமணி படலம்
5	பாரதிதாசன்	பாடப்பகுதி இல்லை	
6	பெரியார்	வாலிவதைப் படலம் கங்கைகாண் படலம் (மொழிப்பாடம்)	வாலிவதைப் படலம்
7	திருவள்ளுவர்	கடிமண படலம் (பா.கா)	கும்பகர்ண வதைப் படலம்

ஒரு சில பல்கலைகழகங்களில் இளங்கலை, முதுகலை வகுப்பு களில் பாடப்பகுதியாக இடம்பெற்றுள்ள மலையாள மொழி இராமாயணப் பகுதிகள் கீழே தரப்படுகின்றன.

வ. எ	பல்கலைக் கழகம்	இளங்கலை	முதுகலை
1	கேரளா	சு.காண்டம்- கிளிப்பாட்டு	கிஷ்கிந்தா காண்டம்
2	கண்ணூர்	இல்லை (மகாபாரதம்)	சுந்தர காண்டம்

3	மகாத்மா காந்தி	இராமன் கதை 3 நாடகங்கள்	சுந்தர காண்டம்
4	கோழிக்கோடு	கிஷ்கிந்தா காண் - எழுத்தச்சன் இராமா. சு.காண்- கண்ண்ஷ்ய இராமா 11 பாடல்கள் சீதா சுயம்வரம் -இராமாயணம் சம்பு -உரைநடை	சுந்தர காண்டம், அத்யாத்ம இராமா -மகாபாரதம் கிளிப்பாட்டு ஒப்பீடு தேர்வுப் பாடம்: ஆரண்ய காண்டம்

இரண்டு பல்கலைக்கழகங்களில் இளங்கலை, முதுகலை வகுப்புகளில் பாடப்பகுதியாக இடம்பெற்றுள்ள இந்தி மொழி இராமாயணப்பகுதிகள் கீழே தரப்படுகின்றன.

1	மகாத்மாகாந்தி	அறிமுகம் மட்டும்	உத்தர காண்டம். புஷ்பவாடிகா பிரசங்கி
2	குசாட் (cusat)	----	பாலகாண்டம் (இராமசரிதமானஸ்) தேர்வு: உத்தர காண்டம்

பெரும்பாலான பல்கலைக்கழகங்களிலும் சுந்தரகாண்டமே பாடப் பகுதியாக இடம்பெற்றுள்ளது.. இங்கே பிற காண்டங்களிலிருந்து பாடப் பகுதிகள் இடம்பெறாதது ஏன் என்று சிந்தனை செய்தல் வேண்டும். அந்தப் பகுதிகளில் சொல்வளமும் கருத்துவளமும் இல்லையா? அவை மாணவர்களின் இரசனைக்கு ஏற்றதாக இல்லையா? அவர்கள் புரிந்து கொள்வதற்குக் கடினமான பகுதிகளா? என்பன சிந்தனைக்குரியன.

மலையாள மொழியைப்பொருத்தமட்டில் சுந்தரகாண்டமும் கிஷ்ந்தா கண்டமும் பாடப்பகுதியாக வைக்கப்பட்டுள்ளன. ஆனால் மலையாள மொழியில் ஒரு காண்டம் முழுவதும் பாடப்பகுதியாக (தமிழைவிட எண்ணிக்கையில் குறைவானாலும்) வைக்கப்பட்டுள்ளபோது தமிழில்

ஒரு சில படலங்களே இடம்பெற்றுள்ளன என்பது நோக்கத்தக்கது. ஒருவர் எழுதிய இராமாயணம் மட்டுமன்றி மூன்று ஆசிரியர்கள் எழுதிய இராமாயணங்களும் இடம்பிடித்துள்ளன. (எழுத்தச்சன், இராம பணிக்கர்) மட்டுமின்றி, வெவ்வேறு மொழி வெளியீட்டு வடிவங்களிலும் தரப்பட்டுள்ளது. சான்று: இராமாயனம் சம்பு (கவிதையும் உரைநடையும் கலந்தது)

தமிழில் ஒரு காண்டம் முழுதும் கற்பதற்காகத் தரப்படவில்லை. கம்பராமாயணம்தவிர அதனுடன் தொடர்புடைய வேறு நூல்கள் (சக்கரவர்த்தித் திருமகன் -ராஜாஜி--உரைநடை, அவதார புருஷன்-புதுக்கவிதை, கம்பராமாயணம்-ராமசரிதம் ஒப்பீடு-மீனாட்சிநாதபிள்ளை) பாடநூல்களாக இல்லை. இராமாயணம் தொடர்புடைய விளக்க நூல்கள், திறனாய்வு நூல்கள், கட்டுரைகள், ஒப்பீடு போன்றன பார்வை நூல்களாக இடம்பெற்றிருக்கலாமே தவிர மலையாள மொழியில் உள்ளது போல பாடநூல்களாக இடம்பெறவில்லை என்பது நோக்கத்தக்கது.

பள்ளிக் கல்வித்துறையில் இருப்பதுபோல அனைத்துப் பல்கலைக் கழகங்களிலும் கல்லூரிகளிலும் சமச்சீர்க்கல்வி என்ற நிலையில் ஒரே பாடத்திட்டத்தினை இடம்பெறச்செய்வது நன்று. அப்போது மாணவர்களுக்கு உயர்கல்விக்கும் வேலைக்கும் சமமான பாட்த்திட்டம் (Equvalance certificate) என்ற சான்றிதழின் தேவையும் எழாது.

தேர்ந்தெடுத்தல் (SELECTION)

பொதுவாக, பள்ளிக்கூட வகுப்புக்களுக்கான பாடப்பகுதிகளின் தேர்வு கல்வித்திட்டத்தின் (பாட ஏற்பாடு) அடிப்படையில் அமையும். அப்போது யாருக்காக? எதற்காக? எப்படி? என்ற வினாக்கள் முன்வைக்கப்படும். சான்றாக, தேசிய ஒருமைப்படு, மதநல்லிணக்கம், மனிதம், இயற்கைப் பாதுகாப்பு போன்றவற்றைச் சொல்லலாம். அதற்கேற்ற பகுதிகள், மாணவர்களின் அறிவு, வயது, முன் அனுபவம் போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டு தேர்வு செய்யப்படும். ஆனால் கல்லூரி, பல்கலைக்கழக வகுப்புக்களுக்கு இம்முறை கடைபிடிக்கப்படுவதில்லை. ஏதேனும் ஒரு பகுதி சில வருடங்களுக்குத் தொடரும். அடுத்த சில வருடங்களுக்கு வேறு ஏதேனும் ஒரு பகுதி என்ற நிலையிலேயே பாடப்பகுதிகள் இடம்பெறுவது உற்றுநோக்கத்தக்கது.

இத்துணைத் துறைகளில் கம்பனைக் காணமுடியுமென்றால்,

இன்றைய சமகாலப் பிரச்சினைகள்- நாடு தழுவியன, உலகளாவியன- எவையெவை? அவற்றிற்குரிய அறிவியல் , உணர்வு ரீதியிலான தீர்வுகள் என்னென்ன? , அவற்றிற்கு ஏற்ற பகுதிகள் கம்பராமயணத்தில் இருக்கின்றனவா? என கண்டுபிடித்து அப்பகுதிகள் பாடப்பகுதிகளாக வைக்கப்படுதல் அவசியம்.. சமகாலத் தேவையினை அறிந்து வைக்கும்போதுதான் கம்பரின் பெருமையினையும் சிறப்பினையும் மாணவர்களும் உலகமும் அறிந்துகொள்ள வாய்ப்புக் கிடைக்கும். தேர்வு செய்யும் பகுதி முழுவதுமாக குறிப்பிட்ட பொருண்மையில் அமைய வேண்டும் என்பதில்லை. ஒருபகுதியேனும் அக்கருத்தினைக் கொண்டதாக இருந்தால் போதுமானது. சான்றாக, மனிதம், நட்புறவு, விருந்தோம்பல் போன்ற பொருண்மைகளுக்காக குகப்படலத்தைத் தேர்வுசெய்யலாம். சகோதர பாசத்திற்காகக் கும்பகர்ண வதைப்படலம் வைக்கலாம்.. இவ்வாறே பிற பகுதிகளையும் காணலாம். ஒரு பகுதியில் பல பொருண்மைகள் கலந்திருப்பது கம்பராமாயணத்தின் சிறப்புக்களுள் ஒன்று.

கற்பித்தல் (TEACHING)

இன்றும் அதிகப்படியான பள்ளிக்கூடங்களிலும் கல்லூரிகளிலும் கம்பராமாயணம் பாரம்பரிய முறையிலேயே கற்பிக்கப்பட்டுவருகின்றது என்பது உற்றுநோக்கத்தக்கது. பேராசிரியர் செய்யுட்பகுதியை வாசித்து அதற்குரிய சொற்பொருளை விளக்கிச் செல்வதே பெரும்பாலும் வழக்கமாக உள்ளது.

விருத்தப்பாவை அதற்குரிய ஓசையுடன் பாட இயலாவிடினும் ஏதேனும் ஒரு இராகத்தில் - மாணவர்கள் விரும்புமாறு, இரசிக்குமாறு வகுப்பறையில் பாடிக்கற்பித்தல் அரிதாகவே உள்ளது.. கம்பராமாயணம் முழுவதும் ஒரே ஓசையில் பாடப்படவில்லை வெவ்வேறு ஓசைகளில் பாடப்பட்டுள்ளதும் கருத்தில் கொள்ளப்படவேண்டும். அங்குமிங்குமாக ஒருசில பேராசிரியர்கள் அதற்கு முயற்சிசெய்கிறார்கள் என்பதும் உண்மையே.

தங்களுடைய பேராசிரியர்கள் தங்களுக்குக் பாடிக்காட்டவில்லை என்ற காரணத்தினால் தற்கால ஆசிரியர்கள் பாடுவதில்லை; பாடமுயற்சிப்பதில்லை. காரணங்கள் சில நாமறிந்ததே. வேலைப்பளு, நேரம் போதாமை, குறிப்பிட்ட காலத்திற்குள் பாடப்பகுதிகளை முடிக்க வேண்டிய கட்டாயம், பணியிடைப்பயிற்சி, புத்தாக்கப் பயிற்சி,

பயிலரங்குகள், கருத்தரங்குகளில் கலந்துகொள்ளுதல், கட்டுரை வழங்குதல், விடைத்தாள் திருத்தும் பணி இன்னபிற காரணங்கள் அவற்றுள் சில. இத்துணை வேலைகளுக்கிடையே அமைதியாக இருந்து இராகத்துடன் பாட முயற்சிப்பது சற்றுக் கடினமாகத் தோன்றலாம். மேலும் மாணவர்களின் முன்னிலையில் பாடுவதற்கு கூச்சப்படலாம். அவர்களது கேலிக்கு ஆளாகிவிட நேர்ந்துவிடுமோ என அச்சப்படலாம். அது தேவையற்ற அச்சம். அதைக் கவனத்தில் கொள்ள வேண்டியது இல்லை.

புத்தாக்கப்பயிற்சி, கருத்தரங்குகள், பயிலரங்குகள் ஆகியவற்றில் பேராசிரியர்கள் பாடுவதற்கான பயிற்சியும் வாய்ப்பும் அளிப்பது அவசியம் மட்டுமல்ல, காலத்தின் கட்டாயமுமாகும்.. தமிழாய்வு மன்றங்கள் இராகமாகப் பாடி குறுந்தகடாக வெளியிடுவது மிக்க பலன் தரும். இசையோடு தொடர்புடையவர்களும் இசையமைப்பளர்களும் கூட அதற்கு முயல வேண்டும். அதற்கு இராமாயணத்தை இந்துக்களின் சொத்தாகக் கருதாமல் தமிழின் சொத்தாக, இந்தியச் சொத்தாகக் கருதுதல் வேண்டும்.

கேரளத்தில் இராமாயண மாதம் என்றழைக்கப்படும் (கற்கிடக) ஆடி மாதத்தில் காலை, மாலை நேரங்களில் இராமாயணத்தைப் பாராயணம் (இராகத்துடன் மொழிதல்) செய்வதுண்டு. ஆகவே அங்கு மலையாளப் பள்ளிக்கூட மாணவர்களும் கூட அழகாக, தெளிவான உச்சரிப்புடன் பாராயணம் செய்வதைப் பார்க்கலாம். தமிழில் முதுகலை மாணவர்களுக்குக்கூட அவ்வாறு பாராயணம் செய்யத்தெரிவதில்லை. பேராசிரியர்களுக்கும்.

தமிழ்ப்பேராசிரியர்களில் பலர் தற்கால அறிவியல், தொழில்நுட்ப வளர்ச்சியில் போதுமான பயிற்சி இல்லாதவர்கள் என்பது பொதுவாகச் சொல்லப்படும் உண்மை. ஆசிரியர்கள் கற்பித்தலுக்கு அவற்றைப் பயன்படுத்துகின்றார்களா? அரிது. எனவே அது குறித்த வினாக்கள் எழுப்பி விடை காண விழைவது இன்றியமையாதது.

கற்றல் (LEARNING)

மாணவர்கள் கம்பரை அவரது சிறப்புக் கருதி சுயமாகக் கற்பது குறைவு. பொதுவாகப் பாடப்பகுதிகளைத் தேர்வுக்காகக் கற்பதே வழக்கம். அப்போதும்கூட சொல், பொருள் ஆழம் கருதிக்

கற்பதும் குறைவு. ஓசைநயத்துடன் பாடிப்பழகுவதும் இல்லை; பிற தொடர்புடைய நூல்களை, விமர்சனங்களைக் கற்கிறார்களா எனில் அது எந்த அளவுக்கு? என்பதும் கண்டறியப்பட வேண்டும்.

இக்கால மாணவர்கள் தகவல் தொடர்புக் கருவிகளைச் சிறப்பாகப் பயன்படுத்துவதால் அவற்றைப் பயன்படுத்தி பாடக்கற்றுக்கொள்வது நன்று. அதனைப்பதிவு செய்து துறை, கல்லூரி அளவில் வெளி-யிடுவதோடு மட்டுமின்றி ஊடகங்களின் வாயிலாக உலகளாவிய நிலையிலும் வெளியிட இன்று வாய்ப்புக்கள் அதிகம் உள்ளன. தகவல் தொழில்நுட்பக் கருவிகளைக் கற்றலுக்காக ஆக்கப்பூர்வமான முறையில் பயன்படுத்த மாணவர்களைத் தூண்ட வேண்டியது பேராசிரியர்களின் கடமை. அவர்களிடமிருந்து நவீன கருவிகளைப் பயன்படுத்தும் முறையினையும் பேராசிரியர்கள் எளிதாகக் கற்றுக்கொள்ளலாம். மாணவர்கள் பன்முகத்திறன் வாய்ந்தவர்கள் அத்திறன்களை ஆக்கப் பூர்வமான வழிகளில் செலவிட ஆவன செய்தால் அது அவர்களுக்கு மட்டுமல்லாமல் சமூகத்திற்கும் நலம் தரும்.

மதிப்பீடு (EVALUATION)

இன்றைய மதிப்பீடு இரண்டு நிலைகளில் அமைகிறது. அவை

1. பருவ மதிப்பீடு (Term Evaluation)
2. தொடர் மதிப்பீடு (Continous Evaluation)

பருவ மதிப்பீடு பொதுவாக மாணவர்களின் நினைவாற்றலை (மனப்பாடத் திறனை) மட்டும் அளவிடுவதாகவே உள்ளது. ஒவ்வொரு வினாவை உருவாக்கும் போதும் அதற்கு விடை எழுதும் மாணவர்கள் எந்தெந்த உளச்செயல்பாடுகளின் வாயிலாகக் கடந்து செல்கிறார்கள் என்பதும் கருத்தில் கொள்ளப்படல் வேண்டும். சில உளச்செயல்பாடுகள் (Mental Process) கீழே தரப்படுகின்றன.

1. நினைவு கூறல்/ திரும்பக்கூறல்
2. முன் அனுபவங்களுடன் தொடர்புபடுத்தி அலசி ஆராய்தல்
3. பகுப்பாய்வு செய்தல்
4. தொகுத்தல்/ வகைப்படுத்தல்
5. ஒப்பீடு செய்தல்
6. முடிவுக்கு வருதல்
7. தெளிவு படுத்துதல்

8. புதிய சூழலில் பயன்படுத்துதல்
9. வெளியிடுதல் போன்றன

மாணவர்கள் ஒவ்வொரு விடை எழுதும் போதும் அவர்கள் உள்ளத்துள் இவற்றில் ஒருசில உளச்செயல்பாடுகளாவது நடைபெறுதல் வேண்டும். அவை அவர்களது எழுத்துக்களின் வாயிலாக மதிப்பிடப் படவும் வேண்டும்.

தொடர்மதிப்பீட்டைப் பொறுத்தவரை மாணவர்கள் தாங்கள் எழுதும் ஒப்படைவு, வகுப்பறைக் கருத்தரங்குக் கட்டுரை, அதன் வெளியீடு, ஏதேனும் செயல்திட்டம் போன்ற சில படைப்புக்களை வைத்தே மதிப்பிடப்படுகிறார்கள். ஆனால் மாணவர்களோ நூல்களி லிருந்தும் இணையத்திலிருந்தும் தகவல்களைப் பதிவிறக்கம் செய்து எழுதித்தந்துவிடுகிறார்கள். அது தவறு என்று தெரிந்திருந்தும் அந்தப் படைப்பினை மட்டுமே பார்த்து மதிப்பெண்/ தரம் வழங்கும் முறைதான் அதிகப்படியான இடங்களிலும் நடைமுறையில் உள்ளது. ஒவ்வொரு ஒப்படைவுக்காக மாணவர்கள் கடந்து செல்லும் ஒவ்வொரு செயல்பாடுகளும் தொடர்ந்து மதிப்பீடு செய்யப்பட வேண்டும். சான்றாக ஒரு கருத்தரங்குக் கட்டுரை தயார்செய்யப் பணித்துள்ளது என்றால் மாணவரின் திட்டமிடல், தரவுகள் சேகரிக்கும் வாயில்கள், முறைகள், காலம், பகுத்தாயும் தன்மை, தொகுத்தாயும் திறன், வகைப்படுத்தல், ஒப்பீடு போன்ற அத்தனை செயல்படுகளும் மதிப்பிடப்படுதல் அவசியம்

மதிப்பீடு தனிமதிப்பீடாக மட்டும் அமையாமல் குழுமதிப்பீடாகவும் அமைதல் சிறப்பு. அதன் வாயிலாக மாணவரின் தலைமைப்பண்பு, கூட்டுணர்வு, பிறர்க்கு வாய்ப்பு அளிக்கும் தன்மை, பிறர் கருத்தை ஏற்கும் பண்பு போன்றவற்றை மதிப்பிடலாம்.

மாணவர்கள் கம்பராமாயணக் கருத்துக்களை, கதையைக் குறும் படமாகத் தயாரிக்கலாம், நாடகமாக நடிக்கலாம், பட்டிமன்றம், வழக்காடு மன்றம், விவாதம் நடத்தலாம், கருத்தரங்கு, கண்காட்சி நடத்தலாம். இத்தகைய செயல்பாடுகளின் போது மாணவர்கள் கடந்து செல்லும் அனைத்து செயல்பாடுகளையும் மதிப்பிட வேண்டுவது அவசியம். அத்தகைய மதிப்பீடு சிறந்ததாக இருக்கும் என்பதில் ஐயமில்லை.

பேராசிரியர்களும் மாணவர்களும் கூட்டாகச் செயல்பட்டால் மட்டுமே கம்பரையும் இராமாயணத்தையும் ஆழமாகப் புரிந்துகொள்ள இயலும்.

அத்துடன் பயனை அடுத்த தலைமுறையினருக்கும் எடுத்துச்செல்ல முடியும். கம்பராமாயணக் கதைகளைப் பிற வெளிநாட்டு மொழிகளிலும் வாசகர்களின் வயதிற்கேற்ப மொழிபெயர்த்து வெளியிடுவதும் சிறந்த பலன் விளைவிக்கும்.

கம்பனில் உளவியற் கோட்பாடுகள்

முனைவர் அ.அ.ஞானசுந்தரத்தரசு,
ஆலோசகர், வெங்கடேஸ்வரா கல்வியியல் கல்லூரி, புதுக்கோட்டை .

உளவியலின் வளர்ச்சி

ஆங்கிலத்தில் உளவியல் என்பது சைக்காலஜி (Psychology) எனப்படும். ஆன்மா அல்லது ஆவி (Soul) என்பது பற்றிய இயல் என்பதே இதன் அடிப்படைப் பொருளாகும். இயற்பியல், தாவரவியல் போன்ற அறிவியல் துறைகள் வளர்ந்த பின்னரே உளவியல், சமூகவியல் போன்ற துறைகள் எழலாயின. கி.மு.384-322 -இல் வாழ்ந்த கிரேக்கத் தத்துவ அறிஞர் அரிஸ்டாடில் எழுதிய 'ஆன்மாவின் இயல்புகள்" (De Anima) என்ற நூலே உளவியல் பற்றி முதலாவதாக எழுந்த நூலாகும். உளவியல் என்பதனைத் தற்காலத்தில் நடத்தை மற்றும் அனுபவத்தை அறிவியல் முறையில் ஆராய்வது என வரையறுக்கின்றனர்.

உளவியலும், இலக்கியமும்

வாழ்க்கையைப் படம் பிடிப்பது இலக்கியம். வாழ்க்கை என்பது பெரிதும் உள்ளத்தைச் சார்ந்து அமைகிறது. வாழ்வியல் தத்துவங்களின் அடிப்படையிலேயே, இலக்கியங்கள் எழுகின்றன. தத்துவ சாத்திரத்தின் உட்பிரிவாகவே உளவியல் பல்லாண்டுகள் வளர்ந்து வந்துள்ளது என்பது இங்கே உற்றுநோக்கத் தக்கதாகும். டேகார்ட், வில்லியம், ஜேம்ஸ், ஜான்டுயி போன்ற தத்துவமேதைகள் உளவியல் அறிஞர்களாகவும் திகழ்ந்தனர். இவ்வாறே தமிழ்ப் புலவர்களில் பலர் உளவியல் மேதைகளாக உள்ளனர்.

கம்பனைப் பொருத்தவரை அவன் 'உளவியல் வல்லுநனாகக் காப்பியத்தில் வெளிப்படுகின்றான்" என்பர் ச.வே.சுப்பிரமணியன:; (கம்பனும் உலகியல் அறிவும், ப.90)

கம்பனை நன்கு ஆராயும்போது மனித நடத்தை பற்றிய பல உளவியற் கூறுகளை அவன் மிக நுட்பமாகக் கையாண்டிருப்பது புலனாகின்றது.

நினைவு மறதி பற்றிய கம்பனின் உளவியற் கூறுகள்

'எல்லா உயிரிகளிடமும் தமது அனுபவங்களைச் சேர்த்துச் சேமித்து வைக்கக்கூடிய திறன்உண்டு. இத்திறனை நினைவு (Memory) எனலாம்.

இத்திறனைப் பயன்படுத்துதலை நினைவுகூர்தல் (Remembering) என்கிறோம். (எஸ்.சந்தானம் கல்வி உளவியலும் கல்விச் சமூகவியலும், ப.281)

நினைவு இருவகைப்படும். நாம் உற்று நோக்கிய பொருள்களையோ, வெளியுலக நிகழ்ச்சிகளையோ நினைவில் வைத்திருத்தல் 'நோக்கல் நினைவு" (Observation Memory) எனப்படும். சொற்களையும், பொருள்களைக் காட்டும் குறிகளையும் கற்று நினைவில் வைப்பது 'நெட்டுரு நினைவு" (Roto memory) எனப்படும். இவற்றைக் கம்பன் மிகுந்த உளவியல் நுட்பத்துடன் பயன்படுத்தியுள்ளான். இலக்குவன், சூர்ப்பணகையின் மூக்கு முதலாகிய உறுப்புகளை அரிந்தான். அவன் தன் தமையன் இராவணனிடம் ஓடி வந்தாள். அப்போது இராவணன் 'இது யாருடைய செயல்" என வினவினான். சூர்ப்பணகை தனது விடையாக,

மன்மதனை ஒப்பர் மணிமேனி வடமேருத்
தன்எழில் அழிப்பர் திரள் தோளின் வலி தன்னால் (கம்ப . சூர்சூழ்- 52)

எனவும்,

வானத்து....
இந்துவின் முகத்தர், எறிநீரில் எழுநாளக்
காந்த மலரைப் பொருவு கண்ணர், கழல், கையர் (கம்ப சூர்.சூழ்-53)

எனவும் குறிப்பிடுகின்றார். கம்பன் சூர்ப்பணகை வாயிலாக வெளியிடும் இத்தகைய கூற்றுகள் நோக்கல் நினைவு (Observation Memory) வகை-யின இவற்றைக் கம்பன் உளவியலுக்கு ஒத்த பாங்கில் அமைத்திருப்பது நுனித்து அறியத்தக்கதாகும்.

இராமன் கூறிய அடையாள மொழிகளை அனுமன் அப்படியே சீதையிடம் சென்றுரைப்பதாகக் கம்பன் அற்புதமாகப் படைக்கின்றான். இதனைக் கூறிவரும் கம்பன்,

அயல் நின்றதும் இசைப்பாய் (கம்ப உருக்காட்டு படலம் - 60)

யாண்டையது தான் என இசைத்ததும் இசைப்பாய் (மேலது, 61)

உணர்த்துதி பெயர்த்தும் (மேலது, 62)

என்று சொல்வதால் இவை அப்படியே மீண்டும் கூறப்பட வேண்டும் என்று பொருள் தருகின்றன. இவற்றில் அடங்கிய நினைவுகள் நெட்டுரு

நினைவு (Roto memory) ஆகும்.

நாம் கற்றவைகளை அல்லது அனுபவித்து உணர்ந்தவைகளைப் பல நேரங்களில் மறந்துவிடுகிறோம்.

உளப்பகுப்புக் கோட்பாட்டினைக்கண்டறிந்தவரான ஆஸ்டிரிய உளவியல் மருத்துவராகிய சிக்மண்ட் பிராய்ட், மறதி பற்றிப் பின் வருமாறு குறிப்பிடுகின்றார்:

"தன்மானத்தைக் குறைக்கக் கூடிய நிகழ்ச்சிகளும், எண்ணங்களும் குற்றஉணர்ச்சியைக் கொடுக்கக்கூடிய நிகழ்ச்சிகளும் நனவிலி நிலைக்கு (Unconsious Mind) ஒடுக்கப்படுதல் அவற்றை மறப்பதற்குக் காரணமாகும்". (பேரா. எஸ். சந்தானம், கல்வி உளவியலும், கல்விச் சமூகவியலும் ப.290

மேற்காணப்படும் சிக்மண்ட் பிராய்டின் கோட்பாடு கம்பனில் அற்புதமாகப் பிரிதிபலிக்கப்பட்டுள்ளது.

சூர்ப்பணகை 'மானிடர் இருவர் என்னை அவமதித்து என் மூக்கு முதலானவற்றை அரிந்தனர்" என்று கூறினாள். இலங்கையர் கோனுக்குச் சூர்ப்பணகையின் மீது இரக்கம் பிறந்தது. இழிவான மானிடர் இச்செயலைச் செய்து இதனை 'அறிந்தும் உயிர் வாழ்வார்" (கம்ப. சூர்ப்பணகை சூழ்ச்சிப் படலம் - 58) என்பது வேடிக்கைக்கு உரியதே என இகழ்ச்சி பொங்கப் பேசினான். அது மட்டும் அன்றி 'பத்து உள தலைப்பகுதி தோள்கள் பல அன்றே" (மேலது -61) என்று தனது வீரத்தின் முன்னே இழிந்த மானிடர் உயிர் பிழைத்தல் அரிது என்றும் சூர்ப்பணகைக்கு ஆறுதல் மொழிந்தான்.

சூர்ப்பணகை 'மானுடரால் மூக்கு அறுபட்டேன்" என்று கூறிய போது அதனைத் தன்மானத்திற்குக் குறைவானது என்று கருதிய இராவணன்,

மருந்து அனைய தங்கை மணிநாசி வடிவாளால்
அரிந்தவரும் மானிடர் (மேலது - 60)

என அலட்சியப்படுத்துவது அதனை அவன் நனவிலிக்கு (Unconscious) ஒடுக்குவதையே காட்டுகிறது.

தீவிர மனவெழுச்சிகளால் (Emotions) நினைவு தடைப்படுகிறது என்ற உளவியல் உண்மையின் அடிப்படையில் சூர்ப்பணகையின் காம மன எழுச்சிக்கு ஆட்படுத்தப்பட்ட இராவணன், பலவற்றை மறந்து போனான். தங்கை குற்றம் இழைத்ததன் காரணமாக அவளது

மூக்கினை அரிந்த இராம இலக்குவர் பேராற்றலும் பெருவலியும் படைத்த கரனோடும் போரிட்டு அவனையும் அழிக்க வல்ல பெருவலி படைத்தவர்கள் என்பதனை மறந்தான். 'தங்கைக்காகப் போரிடாமல் காமத்திற்காகப் போரிட்டவன்" என்ற குலப்பழி ஏற்படுமே என்பதை மறந்தான். தவம், வரங்கள் ஆகியவற்றை மறந்தான். காமனின் அம்புகளிலே வீழ்ந்துவிட்டான். 'குலமானம், காமவெறி என்ற இரண்டின் இடையே நடந்த போட்டியில் காமவெறி வென்றுவிட்டது" என ஆரணியகாண்ட முன்னுரையில் அ.ச.ஞானசம்பந்தன் குறிப்பர். (கம்பராமாயணம், கம்பன் அறநிலை, கோவை, ப.35)

கரனையும் மறந்தான் தங்கை மூக்கினைக் கடிந்து நின்றான்
உரனையும் மறந்தான் உற்ற பழியையும் மறந்தான் வெற்றி
அரனையும் கொண்ட காமன் அம்பினால் முன்னைப் பெற்ற
வரனையும் மறந்தான் கேட்ட மங்கையை மறந்திலாதான்

(கம்ப. சூர்ப்பணகை சூழ்ச்சிப் படலம் - 81)

என்ற கம்பன் பாட்டு முழுதும் உளவியல் கோட்பாடுகளின் அடிப்படையிலே அமைந்திருக்கிறது.

முரண்பட்ட உளநிலையும் சிக்மண்ட் பிராய்டின் கோட்பாடும்

அனுமன் இலங்கை மதிலின் உள்ளே புகுவதற்கு முன்பாக இலங்கிணி என்ற காவல் பெண்ணைச் சந்திக்கிறான். இலங்கிணி மிகச் சிறிய பாத்திரம்.பெரிய கோவில் ஒன்றில் எங்கோ ஒரு மூலையில் இருக்கின்ற மிக அரிய நுட்பமான சிலையைப் போல இப்பாத்திரத்தைக் கம்பன் படைத்திருக்கிறான். இலங்கிணி என்ற பாத்திரத்தின் வாயிலாக முரண்பாடான நடத்தை (Behaviour) ஒன்றுக்குக் கம்பன் தீர்வு காண்கிறான்.

இலங்கையைக் காவல்காக்கும் படியாக இராவணன் அனுப்பினான் என்று வான்மீகத்தில் கூறப்பட்டுள்ளது. இதனைக் கம்பன் மாற்றுகிறான். இலங்கையைக் காக்க, இலங்கிணியைப் 'பிரமன்" அனுப்பினான் என்று கம்பன் திருத்தம் செய்துள்ளான். கம்பன் இவ்வாறு மாற்றம் செய்தது ஏன்? என்ற வினா எழுகிறது. இதற்கு உளவியலின் துணைகொண்டு தீர்வு காணமுடியும்.

இலங்கையின் மதிலை மிகுந்த அன்புடனும் ஆர்வத்துடனும் காவல் செய்பவள் இலங்கிணி. இலங்கையைக் காப்பதில் அவள் உண்மையாக

இருந்தாள்.

எல்லாம் உட்கும் ஆழி இலங்கை மூதூர்
நல்லாள் அவ்வூர் வைகுஉறை ஒக்கும் நயனத்தாள்

(கம்ப. ஊர்தேடு படலம் - 81)

என்ற பாடலில் அவள் 'நல்லாள்' என்று குறிப்பிடப்படுகின்றது. கண்ணின் உள்ளே இருக்கும் கருமணியை இமை காப்பதைப்போலே இலங்கையைக் காக்கும் குணமும் குறிக்கோளும் உடையவள் அவள் என்று வருணிக்கப்பட்டுள்ளாள். அத்தகையவள் அனுமனால் அடியுண்டபோது அவனிடம் 'சித்திர நகரம் பின்னர்ச் சிதைவது திண்ணம்' (கம்ப. ஊர்தேடு படலம் - 94) என்று பிரமன் கூறியதாக எடுத்துரைக்கிறாள்.

கம்பனின் ஆளுமை

தன்னை ஆதரிக்கும் ஒருவருக்குத் தீமை வரும் என்று சொல்வதற்குக் கம்பனின் மனம் இடம் தரவில்லை. அதனால் தான் இலங்கையைக் காவல் காக்கும் படியாக 'இராவணன்' அனுப்பினான் என்ற முதனூல் கருத்தை மாற்றிப் 'பிரமன்' அனுப்பினான் என்று படைத்தான். இந்த மாற்றத்தில் கம்பனின் 'நன்றி மனம்' என்ற அவனது ஆளுமைக் கூறு எதிரொலிக்கிறது.

மேலும் 'அறம் வெல்லும், பாவம் தோற்கும்' என்ற பாவிகம் அல்லது காப்பியப் பிழிவுக் கருத்து இலங்கிணியின் சொற்களாக வருகிறது.

இதனால் அறத்திற்குத் துணைநிற்பவள் இலங்கிணி என்பது நிலைநாட்டப்பெறுகிறது.

இலங்கிணியின் செயல்பாட்டில் இருபக்கங்கள்

இலங்கிணியின் செயல்பாட்டில் இரண்டு பக்கங்கள் காட்டப்படுகின்றன. ஒன்று அவள் இலங்கையை மிகுந்த கவனத்துடன் பாதுகாத்தல். மற்றொன்று இதற்கு எதிராக ஒரு குரங்கை, இலங்கை அழியுமாறு உட்புகவிடுதல். இவை இரண்டும் ஒன்றுக்கு ஒன்று முரணானவை. இலங்கிணியின் இந்த இரண்டு முரண்பட்ட நிலைகளை அவளது அடிமனத்தில் உள்ள 'அறம்' என்பதை எழுப்பிக் கம்பன் சமன் செய்து விடுகிறான்.

அறத்துக்கு மாறுபாடானவை இலங்கையில் நாள்தோறும் நடந்து வருகின்றன என்பதை இலங்கிணி நன்கு அறிவாள். ஆனால் அவள் இதற்கு எதிர்மாறாக என்ன செய்ய முடியும்? அவளோ ஊரைக் காக்கும்

காவல் தெய்வம். இருப்பினும் இலங்கையில் நடைபெறும் அறத்துக்கு மாறான போராட்டம் அவள் நனவிலி மனத்தில் அழுத்தப்படுகிறது.

நமது மனம் மூன்று நிலைகள் அல்லது படிகளைக் கொண்டது. உடனே உணரக்கூடிய அனுபவங்களைக் கொண்ட பகுதி நனவுநிலை (Conscious Mind) எனப்படும். இது மனத்தின் மிகச் சிறிய பகுதி: இதற்கு அடுத்த பகுதி இடைமன நிலை (Sub - Conscious Mind) எனப்படும். இந்த நிலையில் உள்ள நினைவுகள், எண்ணங்கள் ஆகியவற்றைத் தற்சமயம் நாம் உணர்ந்திராவிட்டாலும் எப்பொழுது இவை நமக்குத் தேவையோ அப்பொழுது இவற்றை நனவுநிலைக்கு உயர்த்தி நாம் உணர முடியும். நம்மனத்தின் பெரிய பகுதி, மூன்றாவதான 'நனவிலி" (Unconscious Mind/Id) நிலையே ஆகும். வெற்றி கிட்டாமல் நசுக்கப்பட்ட மனவெழுச்சிகளும், நிறைவேறாத எண்ணங்களும், முயற்சிகளும் இப்பகுதியில் அழுத்தப்படுகின்றன என்பதனை சிக்மண்ட் பிராய்ட் என்ற உளவியலறிஞர் தெளிவுறுத்தியுள்ளார்.

இந்த நனவிலியின் இயக்கச்சக்தி (Dynamism) மேலழுந்து வரும் போது உளப்போராட்டத்துக்கு (Mental Conflit) மனிதன் உட்படுகிறான் என்பது உளப்பகுப்புக் கோட்பாடு ஆகும்.

இத்தகையதொரு நிலையையே நாம் இலங்கிணியிடம் பார்க்கிறோம். அவளது நனவிலியில் அழுத்தப்பட்ட, அறத்துக்கு எதிர்மறையான இலங்கைப் போராட்டம் அனுமன் வரவால் விடிவு காண்கிறது. அதனால்தான் அவள் அனுமனிடம், 'செய்தொழில் இழுக்கிஞ்..சிறுமை செய்தேன்" (கம்ப. ஊர்தேடு படலம் - 93) என்று தன் செயலுக்காக வருந்தி மன்னிப்பு வேண்டுகிறாள்.

மனப்போராட்டத்திற்கான விடிவு

நிறைவேறாது நனவிலிமனத்தில் (Id) அழுத்தப்பட்ட மனப் போரட்டங்களுக்குத் தீர்வு காண ஒவ்வொரு மனிதனும் முனைகின்றான் என்பதைக் கம்பன் இலங்கிணியின் வாயிலாக அற்புதமாகப் படைத்துள்ளான். நனவிலி மனத்திலிருந்து எழுந்து வந்த - இலங்கைக்கு எதிரான - இலங்கிணியின் மனப் போராட்டத்தின் விடிவாகவும், மடைமாற்ற வாய்க்காலாகவும், அனுமன் திகழ்வது மாபெரும் சிறப்பு. இராவணனை விடவும், அவனது நாட்டை விடவும் அறம் உயர்ந்தது என்ற கருத்து இலங்கிணியால் நிலைநாட்டப்படுகிறது.

எல்லையற்ற வல்லமை கொண்ட, இராவணனின் கட்டுப்பாட்டுக்குள் அடங்கியிருந்த காவல் பெண்டு, 'இலங்கை அழிவது சரியானதே" என்று தன் நாவால் எடுத்து இயம்புவது அடிமான ஆழத்தில் நசுங்கிக் கிடந்த ஓர் உணர்வின் விடிவே என்பதைக் கம்பன் மிக நயமாகக் காட்டுகிறான்.

அன்னதே முடிந்தது ஐய! அறம் வெல்லும் பாவம் தோற்கும்
என்னும் ஈது இயம்ப வேண்டும் தகையதோ? இனி மற்று உன்னால்
உன்னிய எல்லாம் முற்றும் (கம்ப. ஊர்தேடு படலம் - 95)

என்ற இலங்கிணியின் விடிவுக்குரல் அனுமனுக்கு மட்டும் அல்ல, மானிடத்துக்கு விடுக்கப்பெற்ற விடுதலைச் செய்தி ஆகும்.

உளவியல் நோக்கில் கம்பன்

ஆ.அருள்சாமி,
முனைவர்பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை, அழகப்பா பல்கலைக்கழகம், காரைக்குடி.

மனித உள்ளத்தைப் பற்றி ஆராயும் அறிவியலே உளவியலாகும். மனித ஆளுமையின் ஒரு வகை வெளிப்பாடே இலக்கியம் ஆகும். மனித ஆளுமையை முழுமையாக அறிய உதவும் அறிவுத்துறையே உளவியலாகும்.

மனிதனின் நடத்தையைப் பற்றிக் கூறும் ஓர் அறிவியல் துறையே உளவியல் என்று ஆய்வாளர்கள் மதிப்பிடுகின்றனர். ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையில், குறிப்பிட்ட நேரத்தில் மனிதன் என்ன செய்கிறான்? என்பதைப் பற்றியும், அவன் அவ்வாறு ஏன் செய்கிறான்? என்பதைப் பற்றியும் ஆராய்வதே உளவியலாகும். கம்பனின் காவியத்தை இன்றைய உளவியல் அணுகுமுறையின் அடிப்படையில் காண்பது இக்கட்டுரையின் நோக்கமாகும்

அக மனக்கூறுகள்

உள்ளத்தின் இயல்புகளை உணர்ந்து ஆராய்வதே அகமனக்கூறு ஆகும். ஒருவனின் நடத்தை மாறுபாடுகளுக்கு அடிப்படையாய் இருப்பது அகமனக் கூறுகள் ஆகும். மனிதனின் அகமனக் கூறுகளை அடிப்படையாகக் கொண்டு மனித மாண்புகளை அடையாளப்படுத்துவது உளவியல் பார்வை ஆகும். மனித எண்ணத்தின் விளைவே அவனை மதிப்பிடும் கருவியாகச் செயல்படுகிறது.

மனிதர்களுக்கிடையே இருக்கக்கூடிய வேறுபாடு ஒரு மனிதனை மற்றொரு மனிதனிடமிருந்து அவனுடைய செயல்களின் மூலம் வேறுபடுத்திக் காட்டுகிறது. இதுவே தனிமனித மாற்றம் என்பர் உளவியல் அறிஞர் எஸ்.கே.காட்டல்.

அகமனக்கூறுகள் ஐம்புலன்களின் செயல்பாடுகள் வாயிலாக வெளிப்படுகின்றன. ஐம்புலன்களின் வாயிலாகவே மனிதனுக்கு இன்ப, துன்ப உணர்வுகள் வெளிப்படுகின்றன. மனிதனின் இன்ப, துன்ப உணர்வுகள் பெருகுகின்றபொழுது ஐம்புலன்களைக் கொண்டே அவை வராமல் தடுத்துவிடலாம் என்ற கருத்தைப் பதிவு செய்கிறார் கம்பர்.

கோசல நாட்டு மக்களிடம் ஐம்புலன்களையும் அடக்கி ஆளும் பண்பு இயல்பாக அமைந்திருந்தது என்பதை.

ஆசலம் புரி ஐம்பொறி வாளியும்
காசு அலம்பு முலையவர் கண் எனும்
பூசல் அம்பும் நெறியின் புலம் செலாக்
கோசலம் (ஆற்றுப்படலம் -1)

என்னும் அடிகள் விளக்குகின்றது. இதனால் அகமனக் கூறுகளுக்கு அடிப்படையாய் அமைவது ஐம்புலன்கள் என்பது புலனாகும்.

படைப்பாளி உளவியல்

படைப்பாளியின் உளவியல் என்பது முதல்நிலைக் கூறு ஆகும். ஒரு படைப்பாளன் தன் அனுபவம். தன் காலச்சூழல். தன் விழைவுகள் இவற்றை அடிப்படையாகக் கொண்டே படைப்புகளைப் படைக்கின்றான். படைப்பாளி தன் எதிரில் இருக்கும் சமூகத்தைப் பார்த்து. உணர்ந்து படைத்தாலும் அவன் தன்னையும் மீறி அதில் வெளிப்படுத்திக் கொள்கிறான். படைப்பாளியின் வேட்கைத் தீர்வே படைப்பு என்றும், கலைஞன் காணும் கனவே படைப்பு என்ற ஃபிராய்டியக் கருத்துப்படி கம்பரின் படைப்பை அணுகும் பொழுது கம்பரின் அமுக்கப்பட்ட, ஒடுக்கப்பட்ட உள்ளத்தின் குரலே கவிதையில் வெளிப்பட்டுள்ளது எனலாம். கம்பரின் வாழ்வில் நடந்த மிகப்பெரிய துன்பம் தனது மகனாகிய அம்பிகாபதி ராஜதண்டனை பெற்று மரணமுற்றதாகும். தன் மைந்தனின் பிரிவுத் துயரத்தைத் தாங்க இயலாத தசரதனின் புலம்பல்கள் கம்பனது தந்தை உணர்வின் வெளிப்பாடாகும். இதனை,

கண்ணே வேண்டும் என்னினும் ஈயக்கடவேன் என்
உண்ணே ராவி வேண்டினும் இன்றே உனதன்றோ
(கைகேயி சூழ்வினைப்படலம் -32)

என்றும்,

என்மகன் என்கண் என்உயிர் எல்லா உயிர்கட்கும்
நன்மகன் இந்த நாடிறவாமை நய என்றான் (கைகேயி சூழ்-36)

என்பன போன்ற தயரதன் கூற்றுகள் விளக்கும். தயரதன் கைகேயியிடம் இரந்து நிற்பது. துன்பக் கடலில் வீழ்ந்து தவிப்பதும் கம்பனின் ஆழ்மனத்தை வெளிப்படுத்தும் இடங்களாகும். தயரதன் நிலையை,

வீழ்ந்தான் வீழா வெய்துயரத்தின் கடல் வெள்ளத்து
ஆழ்ந்தான்; ஆழா அக்கடலுக்கு ஓர் கரை காணான் (மேலது - 40)

என்னும் அடிகள் விளக்கும்.

இந்திரசித்தைப் பிரிந்து இராவணன் புலம்பும் வார்த்தைகள் கம்பனின் காயம்பட்ட இதயத்தினின்று புறப்பட்ட குருதித் துளிகள் ஆகும்.

இருபது என்னும் எரிபுரை கண்களும்
உருகு செம்பென ஓடியது ஊற்று நீர் (இராவணன் சோகப்படலம் -8)

மைந்தவோ எனும் மாமகனே எனும்
எந்தையோ எனும் என்உயிரே எனும்
முந்தினேன் உனைநான் உளனோ எனும்
வெந்த புண்ணிடை வேல்பட்ட வெம்மையான் (மேலது -10)

என்னும் பாடலடிகள் கம்பன் தன் துன்பத்தை இராவணன் வழியாக வெளியிடும் இடங்களாகும்.

படைப்பாக்க உளவியல்

படைப்பாளிகள் உளவியலில் அடுத்தமைவது படைப்பாக்க உளவியல் ஆகும். கம்பன் மானுடத்தைப் பாடிய கவிஞன் ஆவான். மானுட வளர்ச்சிக் காரணிகளில் மரபும், சூழ்நிலையும் முக்கியப் பங்கு வகிக்கின்றன. ஒருவனது குலப்பிறப்பும், அவன் சந்திக்கின்ற சூழ்நிலைகளுமே அவனை நல்லவனாகவும், கெட்டவனாகவும் ஆக்குகின்றன. அவ்வாறே இராமனும், இராவணனும் தங்களது குலத்திற்கு ஏற்றவாறும், சூழ்நிலைகளுக்கு ஏற்றவாறும் கதை மாந்தர்களாகச் செயல்படுகின்றனர் என்பதைக் கம்பன் பதிவு செய்கின்றான். இராமபிரானை உயர்ந்த கதாபாத்திரமாகப் படைத்து மனித உளவியலின் வெளிப்பாடே அவனது பண்பு நலன்கள் என்பதை இராமனின் வாழ்வியலோடு தொடர்புபடுத்தியுள்ளார் கம்பர்.

இராமன் அடுத்தவர் மனம் புண்படக்கூடாது என்ற எண்ணத்தில் வாழ்ந்தவன். குகன் இராமனுக்கு மீனை உண்ணக் கொடுக்கிறான். அதை இராமபிரான் மகிழ்வுடன் ஏற்றுக் கொள்கிறான். குகன் கொடுத்த உணவானது தன்னலமற்ற காதலோடு, அமிழ்தைவிட உயர்ந்ததாகும் என்பதை,

அரியதாம் உவப்ப உள்ளத்து அன்பினால் அமைந்த காதல்
தெரிதரக் கொணர்ந்த என்றால் அமிழ்தினும் சீர்த்த அன்றே?

பரிவினின் தழீஇய என்னின் பவித்திரம், எம்மனோர்க்கும்
உரியன இனிதின் நாமும் உண்டனெம் அன்றோ (கம்ப.1967)

என்னும் அடிகள் விளக்கும். அறத்தின் வடிவமாகவும், பெண்ணியத்தைப் பேசும் பெண்மணியாக சீதாப்பிராட்டியைக் கதைத் தலைவியாகப் படைத்து உணர்வுகளை வெளிப்படுத்துகிறான் கம்பன். ஒருவனின் செயலைக் கொண்டு அவனுக்கு உரிய மதிப்பு சமூகத்தில் ஏற்படுகின்றது என்பதை அனுமனின் வாழ்வியலோடு படைத்துள்ளார் கம்பர். அனுமன் இராமனைப் பார்த்தபொழுது அவன் உரைத்த உரைகளே இராமனைக் கவர்ந்தன. இதனை,

துன்பினைத் துடைத்து மாயத் தொல்வினை தன்னை நீக்கி
தென்புலத்து அன்றி மீளா நெறி உய்க்கும் தேவரோ தாம்?
என்பு எனக்கு உருகுகின்றது; இவர்கின்றது அளவு இல் காதல்
(கம்ப.3769)

என்னும் அடிகள் விளக்கும் அனுமனின் வார்த்தைகள் இராமபிரானைக் கவர்ந்ததால் அனுமனைச் சொல்லின் செல்வன் எனக் குறிப்பிடுகின்றார். இதனை,

இல்லாத உலகத்து எங்கும் இங்கு இவன் இசைகள் கூரக்
கல்லாத கலையும் வேதக் கடலுமே என்னும் காட்சி
சொல்லாலே தோன்றிற்று அன்றே?யார் கொல்இச் சொல்லின் செல்வன்?
வில் ஆர் தோள் இளைய வீர! - விரிஞ்சனோ? விடைவலானோ?
(கம்ப.3768)

என்னும் அடிகள் விளக்கும். அனுமனின் வெளிப்பாடு படைப்பாக்க உளவியலை வெளிப்படுத்தும் பாங்கில் அமைந்துள்ளது.

நடத்தையைப் பற்றிய அறிவியலே உளவியலாகும். தனிமனிதனுடைய உளவியலானது பரம்பரைக் காரணிகளைவிட சூழ்நிலைக் காரணிகளால் அதிக மாறுதல்கள் அடைகின்றன. சமூகச் சூழலும், தனிமனிதன் பின்பற்றும் பண்பாட்டுச் சூழலும் படைப்பாக்க உளவியல் கூறுகளாக அமைந்துள்ளன.

இராவணன் அரக்கர், தேவர், வித்தியாதரர் ஆகிய அனைத்து இனத்தவருக்கும் தலைவனாக விளங்கினான். சிறந்த வீரச் சிறப்புடையவனாகத் திகழ்ந்தான். அவனைக் கண்டு தேவர்களும், அரக்கர்களும் அஞ்சினர். சிவன் உறைந்திருக்கும் கைலாய மலையினையே தன் கரத்தால் தூக்கிய வலிமை உடையவன். அதுமட்டுமல்லாது எண்

திசை யானைகளுடன் போரிட்டு அவற்றின் தந்தங்களை ஒடித்த சிறப்புடையவன் என்பதை,

வண்டலங்கு நுதற்றிசைய வயக்களிற்றின்
மருப்பொடிய அடர்ந்த பொற்றோன்
விண்டலங்க ஓற வீங்கி யோங்குதய
மால்வரையின் விளங்க மீதில்
குண்டலங்கள் குலவரையை வலம் வருவா
விரவி கொழுங் கதிர்சூழ் கற்றை
மண்டலங்கள் பன்னிரண்டு நாலைந்தாய்
பொலிந்தவென வயங்கோ மன்னோ" (மாரீசன் வதை-3)

என்னும் அடிகள் விளக்கும். பல்வேறு சிறப்புகளைப்பெற்ற இராவணன், சீதையின் மீது கொண்ட பற்றால் அனைத்து சிறப்புகளையும் இழந்து நிற்கும் நிலையை அடைகின்றான். மனிதன் பிறக்கும்பொழுதே உளவியலுக்கான சில பரம்பரைப் பண்புகளைப் பெற்றுள்ளான். அவன் சமூகத்தில் வளரும் பொழுது வெளியுலகைப் புரிந்துகொள்ளும் திறன் வளர்வதுடன் அவனுடைய செயல்பாடுகளும் வெளிப்படுகின்றன. வாலி அனைவராலும் விரும்பப்படுபவனாகவும், மிகுதியான ஆற்றல் உடையவனாகவும் படைக்கப்படுகிறான். தம்பியாகிய சுக்ரீவன் மீது கொண்ட வெறுப்பின் காரணமாக அவன் மனைவியாகிய உருமையைக் கவர்ந்த பாத்திரமாகக் கம்பனால் படைக்கப்படுகிறான். இதனை,

உருமை யென்றிவற் குரிய தாரமாம்
அரும ருந்தையும் மவன் விரும்பினான் (கி.கா.நட்பு.படலம் -71)

என்னும் அடிகள் விளக்கும். இராவணனும், வாலியும் மனிதப் பண்பில் சிறந்து விளங்கியவர்கள். சூழ்நிலை என்னும் இச்சையின் காரணமாக இழிந்த நிலையை அடைந்த இழிநிலைப் பாத்திரமாகக் கம்பனால் படைக்கப்பட்டுள்ளனர் என்பதை அறியமுடிகின்றது.

முடிவுரை

கம்பனின் படைப்பில், காலங்கள் பல கடந்து தோன்றிய ஒரு புதிய அறிவியல் துறை கால்கொண்டிருப்பதைக் காணமுடிகின்றது. மனித செயல்பாடுகளின் வெளிப்பாடான உளவியல் என்னும் அறிவியல் துறைக்குறிப்புகள் கம்பனின் பாடல்களில் பொதிந்திருப்பதை அறிய முடிகின்றன.

உளவியல் உணர்ந்த கம்பன்

முனைவர் **கே.இரா. கமலா முருகன்**
உதவிப் பேராசிரியர், இராணிமேரி கல்லூரி, சென்னை.

"நடத்தை பற்றிய அறிவியல்" என்று உளவியலை வாட்சன் உள்ளிட்ட உளவியலறிஞர்கள் கூறுகின்றனர். உளவியல் என்பது இன்று மிகச் சாதாரண மனிதர்களும் பேசக் கூடியதான ஒரு நிகழ்வாக வளர்ந்துள்ளது'. காரணம், 'காலம் கருதி செயின் ஞாலமும் கைகூடும்' என்று வள்ளுவனார் காட்டும் வழிமுறை வாழ்வியலுக்கு மிகமிக அவசியமாகின்றது.

நம்முடைய கூட்டுச் சமுதாய வாழ்க்கையில் நம்முடன் உள்ள ஒவ்வொருவரின் மனநிலைகளை உணாந்தே பல நேரங்களில் நாம் செயல்பட வேண்டியது அவசியமாகின்றது. எனவே இத்தகைய நடத்தை பற்றிய உணர்வை உள்ளடக்கியது உளவியல். இதனை, "மனித உள்ளம் உள்ளத்தைத் தன்னகத்தே கொண்ட உடல், இவ்வுடலில் தோன்றும் உணர்வுகள் அவ்வுணர்ச்சிகளின் வெளிப்பாடாக அல்லது வடிகாலாகத திகழும் நடத்தை ஆகியவற்றை உள்ளடக்கியது" என்று (சாரதாம்பாள், இலக்கியமும் உளவியலும், ப. 2) உளவியளாரின் கருத்தினை எடுத்துரைப்பதனையும், கலைக்களஞ்சியம் (தொகுதி 2. ப.310)

1. **உள நிகழ்ச்சிகள் அல்லது உளச் செயல்களைப் பற்றி ஆராயும் விஞ்ஞானம்,**
2. **மனிதனுடைய நடத்தையை ஆராயும் விஞ்ஞானம்**
3. **தனி மனிதனுடைய உள்ளம் பற்றிய விஞ்ஞானம்**

என்று உளவியலுக்கு விளக்கம் கூறுகின்றது. ஃபிராய்டு உள்ளிட்ட பலர் பல்வகையான ஆய்வுகளை உளவியல் தொடர்பாக உணர்த்துகின்றனர்.

உளவியல் உணர்ந்த கம்பன்

கவிஞன் தான் கண்டு, கேட்டு உணர்ந்த நிகழ்வினை, அதன் இன்பத்தினை இலக்கியமாகப் பதிவு செய்கின்றார். அவ்வகையில் மிகப் பெரும் காப்பியத்தினை இராமனின் வாழ்வியலை அணு அணுவாக அனுபவித்து மகிழ்ந்து அதனை எடுத்துரைத்திட்ட கம்பர் இராமனுடன் நடை பயிலும் பல்வேறு பாத்திரங்களிலும் இராமன் உட்பட உளவியல்

உணர்ந்தவராகப் படைத்தளித்துள்ளதனைக் காண முடிகின்றது.

இராமன்

கம்பனில், கைகேயி, 'ஏயவரங்கள் இரண்டின் ஒன்றினால்' இராமன் பதினான்கு ஆண்டுகள் வனவாசம் செல்ல வேண்டும்' என்று தன் கணவனிடம் வரங்கள் வேண்டி, இராமன் தன்னை நாடி வந்த போது "பூழிவெம் கானம் நண்ணி புண்ணியத் துறைகள் ஆடி ஏழிரண்டாண்டில் வா என்று இயம்பினான் மன்னன்" என்று கூறிய போதும், இராமன் தன்னுடையது தான் அரசு என்று உரிமை பேசாமலும், தனக்குத் தரக் கூடாதா? என்று பணிந்து வேண்டாமலும்,

...... இராமன் திருமுகச் செவ்வி நோக்கின்
அலர்ந்த செந்தாமரையினை வென்றதம்மா

என்று கம்பன் காட்டும் அடிகளில் இராமன் உணர்ச்சிகளில் ஆட்பட்டுழலும் மனநிலையினைக் கடந்தவனாகவும், தாய் தந்தை சொல்லினைக் கேட்டு ஏற்றுப் போற்ற வேண்டும் என்று மனநிலை உடையவனாகவும், இருந்துள்ள மனநிலையினை உணர்த்துகின்றார். மேலும் இராமன் குகன் சந்திப்பின் போது நிகழும் செயல்களில் இராமனைக் காண வரும் குகன் கையில் மீனும் தேனும் உணவாகக் கொண்டு வருகின்றான். மீன் உண்ணும் இயல்பு இல்லாதவனாக இராமன் இருந்த போதும், 'இவை நான் விரும்பும் உணவு இல்லை' என்று முகத்திற்கு நேராகக் கூறி குகனின் மனம் வருந்தும் படியாகச் செயல்படாமல்,

அரிய தாம் உவப்ப உள்ளத்து அன்பினால் அமைந்த காதல்
தெரிதரக் கொணர்ந்த என்றால் அமிழ்தினும் சீர்த்த அன்றே?
பரிவினில் தமீயிய என்னில் பவித்திரம் எம்ம னோர்க்கும்
உரியன இனிநிம் நாமும் உண்டனம் அன்றோ? என்றான்

(கங்கை -43)

என்று கம்பன் காட்டும் இக்காட்சியில், இராமன், தம்மீது மிகுதியான அன்புடையவனாக மட்டுமின்றி, மிகுந்த பணிவுடையவனாகவும் தம்மை நோக்கி வந்த குகனை வேடர் இனத்தினைச் சேர்ந்தவனாக இருப்பினும் அதீத அன்புடனும் மரியாதையுடனும் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்ற உயர்ந்த மன உணர்வுடையவனாகக் காட்டுகின்றார்.

இதனால்தான் பின்னர் வீடணனைச் சந்தித்துச் சூழலில் உன்னைச்

சகோதரனாக ஏற்றுக்கொண்டேன் என்று கூறுகின்றபோது, 'குக னொடும் ஐவரானோம் முன்புபின்பு குன்று சூழ்வான் மகனொடும் அறுவரானோம் எம்முழை அன்பின் வந்த அகனமர் காதல் ஐய நும்மொடும் எழுவரானோம்' என்று அகம் மகிழ்ந்து பேசுகின்றான்.

காண்பவர்களில் மிகுதியான அன்புடையவர்களையும், தம்மை நாடி வருபவர்களையும் தம்முடைய சகோதரனாகவும், உறவாகவும் ஏற்றுக் கொள்கின்ற மன உணர்வு பொதுவாக ஒவ்வொரு மனிதனுக்கும் உள்ளது. இதனை நாம் வளர்த்துக் கொண்டோம் என்றால், உலகில் எந்தவிதமான அசம்பாவிதங்களும் வன்முறைகளும் நடக்காது. இதற் குரிய சமுதாய அக்கரையுடனும், தனி மனித மன உணர்வுகளைப் புரிந்த மன உணர்வுனும் தான் பல்வேறு சூழல்களிலும் இராமனைக் கம்பன் காட்டுகின்றார்.

கைகேயியும் கூனியும்

தசரனின் மூன்று மனைவியரும் நான்கு பிள்ளைப் பெற்றெடுத்தனர். முறையே கைகேயி வரதனையும் கோசலை இராமனையும் சுமித்திரை இலக்குவன் மற்றும் சத்ருக்கனனையும் பெற்றெடுத்தனர். எனினும் நால்வரில் மூத்தவனான இராமனின் மீது கைகேயி மிகுந்த பாசமுடையவளாகக் காட்டுப்படுகின்றாள். இடையில் கைகேயியின் மனம்திரிந்து மிகவும் கொடுமனம் உடையவளாக சீராட்டி அன்பு பாராட்டி வளர்த்த இராமனிடமே 'பதினான்கு ஆண்டுகள் காவி உடுத்திக் காட்டில் தவவாழ்க்கை வாழ வேண்டும்' என்று கட்டளை யிட்டு காட்டிற்கு அனுப்புகின்றாள். எனவே இன்று வரை அனைவரின் பார்வையிலும் கைகேயி மிகுந்த கொடிய மனமுடைய பெண் என்று ஏசப்படுகின்றாள். ஆனால் கைகேயி மிகுந்த ஆழமான உளவியல் மற்றும் அரசியல் சூழல்களை உணர்ந்து செயல்பட்டவள் என்பதனை அவளைப் படைத்துக் காட்டுகின்ற கம்பனும் தெளிவாக உணர்ந்துள்ளான். எனவே தான், மிகச் சிறப்பாக அக்கைகேயின் பாத்திரத்தினையும் படைத்து நகர்த்துகின்றார். உடன் வரும் பாத்திரமாக கைகேயி அமைக்கப்படுகின்றாள். ஆம் எளிதில் அன்பு வசப்படும் இயல்புடையவர்கள் பெண்கள் அதற்கு கைகேயி விதிவிலக்கல்ல. தன் கணவனுக்காக எதனையும் செய்யக் கூடியவர்கள் பெண்கள். இத்தகைய தன்மையினையும் கைகேயியிடம் காணமுடிகின்றது. ஆம்;. இராமனுக்குப் பட்டாபிஷேகம் என்ற செய்தியினைத் தசரதன் அறி-

வித்தனை உணராமல், உறங்கிக் கிடந்தவளை கூனி வந்து எழுப்பி 'உன்னை பெருங்கேடு வந்து சூழ்கிறது. நீயே உறங்குகின்றாய்' என்று கூறுகின்றாள்.

ஆனால் கைகேயியோ, 'இராமனை மகனாகப் பெற்ற எனக்கு என்ன துன்பம் வர முடியும்? என்று கேட்கின்ற வார்த்தைகளில் 'இராமன் துன்பம் தராதவன், தனக்கு இங்கு எந்த ஆபத்தும் துன்பமும் வராது என்ற அவளது அழுத்தமான நம்பிக்கை உணர்வு வெளிப்படுகின்றது. ஆனால் கைகேயி 'அங்கே கோசலை பெருவாழ்வு பெற்றுவிட்டாள்' என்று கூறுகின்றாள். இதன் மூலம் 'உன்னுடைய பெருவாழ்வு சிதைந்து விட்டது' என்று கூறும் கூனியின் வார்த்தைகளில் கைகேயின் மனதினைத் தன்னால் தகர்க்க முடியும், அதன் மூலம் இராமனின் வாழ்வினையும் சிதைக்க முடியும் என்ற மன உணர்வும் சேர்ந்தே எடுத்துரைக்கப்படுகின்றது. கைகேயி இராமனுக்குப் பட்டாபிசேகம் என்பதனைக் கேட்டு உண்மையில் மனம் மகிழ்ந்த கூனிக்குப் பரிசுகளை வழங்குகின்றாள். ஆனால் கூனி கோபத்துடன் அம்மாலை-யினைத் தூக்கி வீசி எறிவதனைக் கண்டபோது தான் கைகேயின் மனம் சிறிது துணுக்குகின்றது. பின்னர் கூனி கூறிய வார்த்தைகள், அவனை சிந்திக்கத் தூண்டுகின்றன. தொடர்ந்து தன் கணவனிடம் இரண்டு வரங்களைப் பெற்று, இராமனைக் காட்டுக்கு அனுப்புகின்றாள். ஆனால் இதனை ஒட்டி தசரதனின் உயிருக்கு ஆபத்து நேர்ந்ததும் இராமனைக் காட்டிற்கு அனுப்பியதும் தான் கைகேயினை நம் முன் குற்றவாளியாக்குகின்றது.

ஆனால் ஒரு நல்ல மனைவி, திருவள்ளுவனார் காட்டுவது போல் கணவனின் பெருமையினைக் காத்திட முனைவதுடன் அவனது வார்த்தைகளையும் காத்திட உதவ வேண்யுடும். இதன் அடிப்படையில் கைகேயி, நல்ல மனைவியாக மற்றும் சிறந்த தாயாக செயல்படுகின்றாள் என்பதனை நாம் உற்றுணர முடிகின்றது.

ஆம், தன் கணவன் தசரதன் தன்னைத் திருமணம் செய்து கொள்கின்ற போது, தன்னுடைய தாய் வீட்டினருக்குச் செய்து கொடுத்த திருமண உறுதியினை (சுல்கிதிப்பிரதிஞை காத்திட வேண்டும் என்பதற்காகவே பரதனுக்குப் பட்டம் சூட்டினாள். ஒருவன் மன்னனாக முடி சூடுவதற்கு முன் நாடு நகரங்களைச் சுற்றி அரசியல் நுட்பங்களையும் சமூகச் சூழலையும் உணர்ந்த பின்னர் ஏற்கும் மணிமுடி நல்ல சூழல்களை

உருவாக்கும் என்பதான அரசியல் நோக்கினை உணர்ந்ததாலும் ஒருசேர பரதனுக்கு மணி முடியும், இராமனுக்கு வனவாசமும் என்பதான முடிவினை செயல்படுத்தித் தன் கணவனின் புகழினைக் காத்திட முனைந்தாள். எனவே தான் பரதனுடன் இராமனை மீண்டும் சந்திக்கக் காட்டிற்கும் செல்கின்றாள். ஆனாலும் உலகத்தவரின் பார்வையில் தீயளாகக் கற்பிகப்பட்டாள். மிகவும் பரிதாபத்திற்குரியவள் கைகேயி. ஆனால் இராமன் அவளது மன உணர்வினைப் புரிந்தனாலேயே அவளது வார்த்தைகளை ஏற்றதுடன், தன் தந்தையிடமும் அவளுக்குப் பரிந்து பேசுகின்றான்.

அனுமன்

'சொல்லின் செல்வன்' என்ற பட்டம் சொல்லினை ஆளும் திறன் மட்டுமின்றி உளவியலும் உணர்ந்ததனாலேயே அனுமன் பெற்றான். ஆம், சுக்ரீவனுடன் இராமனை இணைத்துச் சூழல், சீதையினைத் தேடும் மனநிலையில், இராமனின் உயிருக்கு ஆபத்து நேர்;ந்த போது எனப்பலச் சூழல்களில் நாம் உணர முடிகின்றது.

சீதையினைத் தேடிச் சென்ற போது என்ன பதிலுடன் வருவானோ? என்று ஏங்கிக் கிடந்த இராமனின் மன உணர்வினை உணர்ந்த அனுமன், திரும்பிய உடன் பேசியது 'கண்டனன் கண்களால் கற்பினுக் கணியினை' என்று பேசுகின்றதனைக் கம்பன் சுட்டுகின்றார். காரணம் 'சீதை கிடைத்து விட்டாள்! அவள் உயிருடன் உள்ளாள் என்பதனையே முதலில் சொல்ல வேண்டும். ஆனால் இங்கு இராமன சீதை கிடைப்பாளா? உயிருடன் கிடைப்பாளா? கற்பு நிலையுடன் கிடைப்பாளா? என்று பலவற்றை எண்ணிக் கலங்கிக் கொண்டிருந்திருப்பான். எனவே 'பார்த்து விட்டேன்: நானே என்னுடைய கண்களால் பார்த்தேன். அதுவும் தன்னுடைய கற்பு நிலையில் எந்தவிதமான கலங்கவும் ஏற்படாமல் உள்ளதனைக் கண்டேன்' என்று கூறிய உளப்பாங்கு ஒவ்வொரும் அறிய வேண்டியதான நிகழ்வாகும். ஒரு சிலர் நாம் ஏதாவது இத்தகைய முக்கிய பணியின் நிமித்தம் அனுப்பி பதில் எதிர்பார்க்கும் பொழுது, வந்தவுடன் பதிலைச் சொல்லாமல், 'நான் போனோனா, ஒரே டிராபிக் அப்படி இப்படி' என்று ஏதேதோ பேசி நம் பொறுமையை சோதித்த பின்னரே நடந்தனைக் கூறுவார்கள். இது தவிர்க்கப்பட வேண்டியதாகும்.

இராவணன்

இராவணன் இல்லையென்றால் இராமாயணக் கதைக்கு எந்தவிதமான மதிப்பும் இல்லை. இராவணன், தன் வலியின் மீது அசைக்க முடியாத நம்பிக்கை உடையவன். அத்தகைய ஆற்றலுடையவர்களாக இருந்தாலும் ஆடவர்கள் எளிதில் வீழந்து விடும் இடம் பெண் மயக்கத்திலேயே ஆகும். அவ்வகையில் வீழ்ந்தவர்களில் முதன்மை நிலையில் பேசப்படக் கூடியவர்களில் இராவணன் ஒருவன். ஆனால் பல்வகை ஆற்றலும் பொருந்திய இராவனும் முதல் நாள் போரில் இராமனிடம் தன் ஆயுதங்களை இழந்து திரும்புகின்றான். தன் நிலை-யினை எண்ணி அவன் வெட்கப்படவில்லை. தன்னுடைய மகன், தம்பி போன்ற போரில் இறந்ததனை எண்ணி வருந்தவில்லை. ஆனால் தான் முதல் நாளே இராமனிடம் தோற்று நிற்பதனைக் கேள்வியுற்றாள் 'சீதை என்னை நகைப்பாள்' என்று எண்ணி மன வேதனை அடைகின்ற

வான் நகும் மண்ணும் நகும் மணி வயிரத்
தான் நகு பகைவர் எல்லாம் நகுவர் என்று அதற்கு நாணுன்
வேல் நகு நெடுங்கண் செவ்வாய் மெல்லியல் மிதிலை வந்த
சானகி நகுவள் என்றே நாணத்தால் சாம்புகின்றான்

என்று காட்டுகின்றார் கம்பர். மிகச் சாதாரண மனிதர்களும் தெருவில் வண்டியிலோ, நடந்தோ செல்லுகின்றபோது நாம் கீழே விழுந்துவிட்டால், அதிலும் குறிப்பாக இளைஞர்கள் விழுந்து விட்டால், அவர்கள் தன்மை யாராவது பார்த்துவிட்டார்களோ என்றே வெட்கப்படுவார்கள். குறிப்பாக இளைஞர்கள், பெண்கள் பார்த்து சிரிப்பார்களோ என்றே வேகமாக எழுந்திட முனைவார்கள். அவ்வாறே இராவணனின் மனநிலை இருந்தது.

சூர்ப்பணகை

இராமாயணக் கதையின் போக்கிற்குத் திருப்புமுனை செய்து கதையின் போக்கினை மாற்றும் திறன் உடையது சூர்ப்பநகையின் பாத்திரமே ஆகும். அவள் இராமனிடம் தன் உள்ளத்தில் தோன்றிய காதலை (காமத்தை) உணர்ந்த வந்த போது தன் உடலினையும் மென்மையாக மாற்றிச் செயல்பட்ட அவள் மனப் போக்கினை கம்பனும் மெல்லெழுத்து கொண்டே படைத்துக் காட்டுகின்றார் இப்பாடல் வழியாக.

பஞ்சி யொளிர் விஞ்சு குளிர் பல்லவம் அனங்கச்
செஞ்செவிய பூஞ்ச நிமிர் சீறடியளாகி
அஞ்சொலிள மஞ்சையென அன்ன மென மின்னும்
வஞ்சியென நஞ்சமென வஞ்ச மகள் வந்தாள்

நிறைவுரை

'மனத்துக் கண்; மாசிலன் ஆதல்' என்று வள்ளுவர் கூறும் அறன் மனதினை நன்னிலைப் படுத்தும் முகத்தானே ஆகும். இன்றைக்கு அனைத்து சிக்கலுக்கும் பெரும்பாலும் முதலில் உளவியல் நிபுணர்களிடமே ஆலோசனை பெற வேண்டியது அவசியமாகின்றது. ஆனால் கம்பன் படைத்த பாத்திரங்களில், அவர்களின் ஆழமான மன உணர்வின் வெளிப்பாட்டினை படம் பிடித்துக் காட்டுவதனால் அவர்களின் மன உணர்;வினையும் பண்பினையும் நம்மால் உணர முடிகின்றது. அவ்வகையில் இராமன், சீதை, பரதன், இலட்சுமணன், அனுமன் போன்றோர்களை நம் வாழ்வின் முன்னோடிகளாகக் கொள்வது மட்டுமின்றி, உளவியல் உணரும் வல்லுநர்களாய் நாம் ஒவ்வொருவரும் மாறி விட்டால், மற்றவர்கள் உணர்வுகளை மதித்து நடந்து நாடும் வீடும் சிறக்க உதவ இயலும். இலக்கியத்தின் நோக்கமும், உளவியல் உணர்தலின் நோக்கமும் இதுவே ஆகும்.

கம்பனில் ஒப்புநோக்கு உளவியல்

முனைவர். அமுத.இளவழகன்,
இணைப்பேராசிரியர், தமிழ்த்துறைத் தலைவர், பச்சையப்பன் ஆடவர் கல்லூரி,
காஞ்சிபுரம்.

முன்னுரை

ஒப்புநோக்குதல் உளவியல் சார்ந்த ஓர் உயிர்ப்பண்பாகும். எதற் கெடுத்தாலும் பழமொழிமுதலாக எடுத்துக்காட்டுகளை வழங்கிப் பேசுதல் ஒப்புநோக்குதல் அடிப்படையில் அமைந்த வாழ்வியல் பண்பாகும். அதுவே வளர்ந்து அணிநலனாய் இலக்கியத் தகுதிபெற்றது. இளஞ் சிறார் இடையே ஒப்புநோக்கி உரைக்கும் அறவுரைகள் எதிர்மறை விளைவுகளை ஏற்படுத்துவதாய்க் கல்வி உளவியலார் கண்டுரைத்தணர். வளர்நிலையில், ஒப்புநோக்குதல் ஊக்கப்படுத்தி உயர்த்தும் ஆக்கப் பணியையும் புரிவது, வெளிப்படை. அறிவுத்தேடலில் தம்மினும் மேம்பட்டவரையும் செல்வத்தேடலில் தம்மினும் எளியாரையும் ஒப்பிட்டு நோக்க வலியுறுத்துவது ஓர் தமிழ்ப் பாடல்.

'ஒப்புநோக்கும் உளவியல்' வழி ஒன்றுபட்ட இரு செயல்களின் விளைவுகளையும் உற்றுநோக்கலாம். செய்தக்க செய்யாமை செய்தக்க அல்ல செய்தமை என்னும் இரு கூறுகளையும் இணைத்து நினைக்கலாம். ஒருவரின் இருவேறு செயல்களையும் - ஒன்றுக்கு மேற்பட்டவரின் ஒரேவகையான செயல்பாடுகளையும் ஒப்பிட்டு உளவியல் பாங்கில் முடிவு காணலாம்.

கம்பன் படைப்பில் - மாந்தர் படைப்பியலில் இயல்பாய் அமைந்த ஒப்புநோக்கு உளவியல் கூறுகள் சிலவற்றை உற்றுநோக்குவதாக இவ்வெழுத்துரை அமைகின்றது.

வனம் ஏகுதலும் உயிர் வீகுதலும்

கையடைப் படலத்தில் - முனிவர், 'கரியசெம்மல் ஒருவனைத் தந்திடுதி' எனக்கேட்டார். அப்போது தசரதன் மனநிலையைக் கூறும் பாடல் ஒப்புநோக்கு உளவியல் பார்வைக்குரியது. 'புண்ணில் ஆம் பெரும் புழையில் நுழைந்த கனலாக' - தவ முனிவர் இயம்பிய சொல் தசரதன் காதில் நுழைந்தது. உடனே உள்நிலாவிய துயரம் பிடித்து உந்தியது. புண்ணாகவும் உள் நிலாவிய துயரமாகவும் உணரத்தக்கது

சிரவணனின் பெற்றோர் இட்ட சாபமே. அப்பழைய வரலாற்றை முனிவரின் வேட்கையோடு ஒப்புநோக்கிய தசரதனுக்கு ஏற்பட்ட துயரம் கண்ணிலான் பெற்று இழந்ததற்கு ஒப்பானது. எனவே 'படைஞற்றம் இலன் சிறியன்' என்றும் 'இடைஞற்றுக்கு இடைஞறா யான் காப்பென்' என்றும் தசரதன் உரைத்தான். (கையடைப்படலம், 11, 12,13.) அவனது உரையின் விரைவுக்கும், விழைவுக்கும் உள்ளீடாக அமைவது உளவியல் சார்ந்த ஒப்புநோக்கு அன்றோ.

முனிவருடன் இராமனை அனுப்ப மறுத்துப் பின் இசைந்து - அந்நிகழ்வு நல்லவாறு நிறைந்தது. அதன் பின் கைகேயியின் வரம் சார்ந்த நிகழ்வுகள் தசரதனுக்குள் மீண்டும் ஒப்புநோக்கு உளவியலை உருவாக்கின. இராமன் பிரிந்து, தானும் உயிர் துறக்கும் தருவாயில் தசரதன் கோசலையிடம் பேசிக்கொண்டிருந்தான். அப்போதும் முந்தைய சாப வரலாறு நினைவுக்கு வர அதனை வெளிப்படையாகக் கோசலையிடம் உரைத்தான்.

'எம்போல் விடலை பிரிய, பன்னும் பரிமாஉடையாய் அடை வாய் படர்வான்
(நகர் நீங்கு படலம், 85.)

"கடிய சாபம் கருதேன். ஏவா மகவைப் பிரிந்துபோவாய் அகல் வான்"
(மேற்படி, 86.)

என, சிரவணனின் பெற்றோர் வழங்கிய சாபத்தைக் குறிப்பிட்ட தசரதன், 'அதனால் அப்போது தமக்கு ஏற்பட்ட மகிழ்வையும் இப்போது அடையப் போகும் துயரத்தையும்' ரிதொரு பாடலில் வெளிப்படுத்தினான்.

சிந்தை தளர்வுற்று அயர்தல் சிறிதும் இலெனாய் இன்சொல்
மைந்தன் உளன் என்றெதனால் மகிழ்வோடு இவண் வந்தனனால்
அந்தமுனி சொற்றமையின் அண்ணல்வனம் ஏகுதலும்
எந்தம் உயிர் வீகுதலும் இறையும் தவறாது என்றான் (மேற்படி, 87.)

என்பது அப்பாடல்.

'மைந்தன் பிறப்பான்' என்று சொல்லக்கேட்டபோது அடைந்த மகிழ்ச்சி நிறைவேறியது. அவ்வாறே முனிவர் கூற்றின் மறுபாதியும் நிறைவேறுதல் உறுதி என்னும் கருத்தை தசரதன் வெளிப்படுத்தும் இவ் இடத்திலும் உளவியல் சார்ந்த ஒப்புநோக்குதல் அமையக் காண்கிறோம்.

வளர்த்தானும் வசிட்டன்காண்

இராமனைச் சனகனிடம் முனிவர் அறிமுகப்படுத்தும் நிகழ்ச்சியில்

ஒப்புநோக்கு உளவியலின் உள்ளார்ந்த பதிவினைக் காணமுடிகிறது.

திறையோடும் அரசு இறைஞ்சும் செறிகழல்கால் தசரதனாம்
பொறையோடும் தொடர்மனத்தான் புதல்வர் எனும் பெயரே காண்.
உறையோடு நெடுவேலாய்! உபநயன விதி முடித்து
மறையோது வித்து இவரை வளர்த்தானும் வசிட்டன்காண்

(குலமுறை கிளத்துப்படலம்-24.)

என்பது சிந்தனைக்குரிய பாடலாகும்.

இப்பாடலில் இடம்பெறும் 'புதல்வர் எனும்பெயரே காண் - வளர்த் தானும் வசிட்டன்காண்' என்னும் இரு தொடர்களும் ஆய்வாளர்களால் ஒப்புநோக்கப்பட்டன. அதன் விளைவாய்ச் சனக மாமன்னனின் ஒப்புநோக்கு உளவியல் சார்ந்த கருத்தொன்று வெளிப்படுத்தப்பட்டது.

வில் வளைத்தல் என்னும் வித்தையில் வென்ற இராமனுக்குத் தன் மகளை மணம் முடிப்பதில் பெரு மகிழ்ச்சி கொண்டாலும் சனகனின் உள்ளத்தின் உள்ளீடாய்த் தந்தை தசரதனின் அக வாழ்வியல் பற்றிய ஒப்பியல் கருத்தொன்றும் எழுந்தது. அதனை நீக்கும் நோக்கில் முனிவரின் உரை அமைந்தது. 'இராமன் - தசரதனுக்கு மகன் என்ற உறவுமுறைப் பெயரளவோடு மட்டுமே நினைக்கத்தக்கவன். அவனிடம் அமைந்திருக்கும் பண்புகள் அனைத்தும் வசிட்டனால் வழங்கி வரையறுக்கப்பட்டவை. பெற்றவன் தசரதனாக - வளர்த்தவன் வசிட்டனாக அமைந்தார்கள்' என முனிவர் உரைத்தார். அவரது உரையால் தசரதனின் ஐயம் நீங்கியது.

இவ்வாறு மேற்காண் பாடலுக்கு நயவுரையாக வழங்கப்படும் கருத்தியலுக்கு அடிப்படையாக அமைந்தது சனகனின் ஒப்புநோக்கு உளவியலே. அதனைக் குறிப்பால் உணர்ந்த முனிவரின் தெளிவுரையும் மன்னின் ஐயத்தைக் குறிப்பால் நீக்கியது.

அகமும் புறமும்

இராமன் மிதிலைக்கு வந்தபோது சீதை அவனைக் கண்ட முதற் காட்சியைக் கம்பர் தமிழிலக்கண அகப்பொருள் மரபுடன் அழகுறப் படைத்துள்ளார். இருவரும் மாறிப்புக்கு இதயம் எய்தியது, முதல் நிகழ்வாகும். அதன் பின்னரே வித்தையின் வெற்றி அமைந்தது. அவ்வாறு வென்றவன் தன் நெஞ்சில் நின்றவன்தானா என்னும் ஐயமும் சீதைக்கு இருந்தது. அது நீலமாலை என்பாள் வழியாக

ஓரளவு நீங்கியது. அதனை,

கோமுனியுடன் வரு கொண்டல் என்றபின்
தாமரைக்கண்ணினான் என்ற தன்மையால்
ஆம் அவனேகொல் என்று ஐயம் நீங்கினாள் (கார்முகப்படலம் -61.)

என்னும் பாடல் புலப்படுத்தும்.

அவ்வாறு ஐயம் நீங்கிய சீதை மேலும் தெளிவுபெற்ற நிலையைப் பின்னரும் காணமுடிகின்றது. அவள் இராமனுக்கு அருகில் அமரும் ஏழலில் முற்றிலுமாகத் தனது ஐயத்தை நீக்கிக்கொண்டாள். அவளது ஒப்புநோக்குதல் என்னும் பண்பே ஐயம் போக்குதலுக்கும் உதவியது. இதனை,

எய்யவில் வளைத்ததும் இறுத்ததும் உரைத்தும்
மெய்விளைவிடத்து முதல் ஐயம் விடலுற்றாள்
ஐயனை அகத்து வடிவே அல புறத்தும்
கைவளை திருத்துபு கடைக்கணின் உணர்ந்தாள்
(கோலம்காண் படலம்-37.)

என்னும் பாடல் இனிது உணர்த்தும்.

அகத்தில் பதிந்த வடிவத்தையே புறத்தும் தன் அருகில் கண்டபோது - இரண்டையும் ஒப்பிட்டுக்கொண்டபோது அவளது உளவியல் சார்ந்த ஐயம் நீங்கியது. அவ்வாறு ஒப்பிட்டுக்காண்பதற்கு அவள் மேற்கொண்ட முறையும் முயற்சியும் கவின் மிகுந்தது பண்பாட்டுப் பதிவாகவும் கருதத்தக்கது.

திருத்தியதும் திருந்தியதும்

கம்பனில் அமைந்த மாந்தர் படைப்பியலில் 'பக்திப்பண்புகளின் முழுவடிவ முன்மொழிதலாக' அமைந்தவன், குகன். அவன் கங்கைக் கரைப்பகுதியில் இராமனைக் கண்டு வணங்கிய காட்சி, கங்குகரை இல்லாது கரை புரண்டோடிய அன்பு வெள்ளத்தின் ஆட்சி.

'தேனையும் மீனையும் திருத்திக்கொண்டு வந்தேன். தங்கள் திருவுள்ளம் யாதோ?' என்று விழைந்து நோக்கிய குகனுக்கு - அருகில் இருந்த முனிவர்களை நோக்கியவாறே புன்றுவலுடன்

பரிவினில் தழீஇய என்னின் பவித்திரம் எம்மனோர்க்கும்
உரியன இனிதின் நாமும் உண்டனெம் (குகப்படலம்-14.)

என்று இராமன் உரைத்த பதில் மதிநுட்பத்தின் வெளிப்பாடாகும்.

தன்னையும் தவமுனிவர்குழாத்தையும் ஒப்புநோக்கி, உண்ணாமலே உண்டதாக ஏற்கச் செய்ததை - அதுசார்பாய் முகிழ்த்த முறுவலைக் குகன் உற்றுநோக்கினான். அச்சூழலைக் குகன் தெளிவாக உணர்ந்து கொண்டான் என்பதை அடுத்த நிலையில் அவன் உரைத்த மொழிகளால் உணரலாம். அவற்றால் உளவியல் சார்ந்த ஒப்புநோக்குப்பார்வையுடன் குகன் விளங்கியமை புலப்படுகிறது.

தானும் உடனிருப்பேன் என்று சொல்லுமிடத்தில் தன்னால் அமைத்துத் தரப்படும் உணவினங்களைக் கூறும்போது மீனை நீந்த விட்டு (நீக்கிவிட்டு) "தேனுள தினையுண்டால்" என்கிறான். அவ்வாறே சித்திர கூடத்திற்கு வழிகேட்டபோதும்

நெறியிடு நெறிவல்லேன் நேடினென் வழுவாமல்
நறியன கனிகாயும் நரவு இவை தரவல்லேன் (மேற்படி-29.)

என்று கூறுகிறான்.

இவ்உரைகளில் புலப்படும் குகனது தெளிவு சிந்திக்கத்தக்கது. தொடக் கத்தில் திருத்திய மீனைக் கொண்டுவந்த குகன் வேடனாகவும், தொடர்ந்து மீனைத் தவிர்த்து தரவல்லவை இவையெனச் சொல்லும்போது திருந்திய சீடனாகவும் திகழ்கிறான். இவ்வாறு குகனுக்குள் நிகழ்ந்த மாற்றம் அவன் கொண்ட ஒப்புநோக்கு உளவியலின் விளைவே எனலாம்.

பிழைத்ததும் பிழையாததும்

கம்பனின் கதையும் அதில் இடம் பெற்ற வாலியின் வதையும் நெடுங்காலமாய் நிலைபெற்றவை. வதம் சரியா? தவறா? எனும் வாதம் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. தொடக்கத்தில் இராமனிடம் பல்வேறு வினாக்களை எழுப்பிய வாலி, பிறகு இராமன் மீது கொண்ட அன்பால் அவனது செயலுக்கு நியாயம் கற்பிப்பது போல ஒரு காரணத்தையும் தானே குறிப்பிடுகிறான்.

ஆவியை, சனகன் பெற்ற அன்னத்தை, அமிழ்தின் வந்த
தேவியைப் பிரிந்தபின்னைத் திகைத்தனை போலும் செய்கை

என்பது வாலி குறிப்பிட்ட காரணம் ஆகும்.

இராமனது செயலுக்கு, 'அவன் சீதையைப் பிரிந்ததால் ஏற்பட்ட

திகைப்பே காரணம்' என்பதாக வாலி குறிப்பிடுவது ஒப்புநோக்கு உளவியலின் வெளிப்பாடாகும். வாலியின் உடனிருந்த அவன் மனைவி தாரை அரியதோர் அறிவுரை நல்கினாள். 'இதுநாள்வரை எதிர்க்க அஞ்சிய உன் தம்பி இப்போது துணிந்து நிற்பதற்கு ஓர் காரணம் உண்டு. அவனுக்கு நெடுந்துணையாக ஒருவர் அமைந்துளார். அவ்வாறு உன் உயிர் கோடலுக்கு உடன் வந்திருப்பது இராமனே' என்பது தாரை வழங்கிய விளக்கமாகும். இதனை.

பெற்றிலன் பெருந்திறல் பெயர்த்தும் போர்செயற்கு
உற்றது, நெடுந்துணை உடைமையால் என்றாள்

இன் உயிர் நட்பு அமைந்து இராமன் என்பவன்
உன் உயிர் கோடலுக்கு உடன் வந்தான்

என்னும் பாடல் பகுதிகளால் அறியலாம்.

தாரையின் கருத்தைக் கேட்டு வெகுண்டெழுந்த வாலி, இராமனைத் தவறாக மதிப்பிட்டதற்கு அவளது பேதைமையே காரணம் என முடிவு செய்தான். 'பிழைத்தனை பாவி உன் பெண்மையால்' என்று எச்சரிக்கையும் செய்தான். ஆனால், தாரை சொன்னவாறே இராமனின் துணையுடன் சுக்ரீவன் மேற்கொண்டபோரில் தனக்கு இழப்பு ஏற்பட்டதை எண்ணிப் பார்த்த வாலி ஓர் ஒப்புநோக்கினை நிகழ்த்தினான். தன்னுடன் அருகில் இருந்த மனைவி சொன்ன நற்கருத்தை ஏற்காமல் - மாறாக - அவளையும் வசைபாடிப் பின்னர் அவள் சொன்னவாறே நிகழ்ந்துவிட்ட ஏழலில்;. உரியவாறு அறிவுரை வழங்க இராமனின் மனைவி உடனில்லாததே அவனது தவறுக்குக் காரணம் என்பதாக வாலி முடிவு செய்கிறான்.

'பிழைத்தனை' என்று வாலி தாரையைக் குறிப்பிட்டான். ஆனால் தாரையைப் பொறுத்தவரை பிழையாதவளாக விளங்கினாள். அவள் கருத்தை ஏற்காத தன் பிழையால் தானும் உயிர் பிழையாதவனாக வாலியின் நிலை அமைந்துவிடுகிறது.

மீளாததும் மீட்டிலாததும்

ஒப்புநோக்கு உளவியல் பார்வையின் தொடர் நிலையாய் வெவ்வேறு மாந்தரின் உரைகளை ஒப்புநோக்கி அவர்களது உளவியல் பார்வை ஒன்றுபட்டதாக விளங்குவதை எண்ணிப் பார்ப்பதும் இங்கு ஏற்புடையதாக அமையும். அவ்வகையிலும் ஒரு சிந்தனை இங்கே இடம்பெறுகிறது.

அனுமன் இலங்கையை அடைந்தபோது முதலில் இராவணனைக் காணுகிறான். அவனை அழிக்கத் துடிக்கிறான். ஆனால்,

முற்றப்போர் முடித்தது ஒரு குரங்கு என்றால் முனைவீரன்
கொற்றப்போர் சிலைத்தொழிற்குக் குறைவுண்டாம்

என்று எண்ணி அமைதி அடைகிறான். பிறகு சீதையைக் கண்டு தன்னுடன் வருமாறு வேண்டுகிறான். அப்போது சீதை உரைத்தது நாமறிந்ததே.

எல்லை நீத்த உலகங்கள் யாவும் என்
சொல்லினால் சுடுவேன்; அது தூயவன்
வில்லின் ஆற்றற்கு மாசு

என்பதே சீதையின் பதிலாகும்.

அனுமன் தன் எண்ணத்தைச் செயல்படுத்தாமல் அமைதி அடைந்ததற்கும் சீதை தன் ஆற்றலை வெளிப்படுத்தாமல் அமைதி அடைந்ததற்கும் காரணம் ஒன்றாகவே அமைகிறது. இருவருமே இராமனின் வில் ஆற்றலுக்கு மாசு வராமல் காப்பதற்காகவே தற்காத்துக் கொண்டனர். இவ்விருவரின் சிந்தனை இணையை மிகுந்த நினைவாற்றலோடு இராமன் வழியாகவும் வழிமொழிகிறார் கம்பர்.

கிளிமொழிச் சீதையைக் கிடைத்தும்
மீட்டிலாதது என் வில்தொழில் காட்டவோ?

என்று சொல்லின் செல்வனிடம் சொல்லிக்காட்டுகிறான் இராமன். இவ்வாறு மூவர் உள்ளமும் ஒன்றுபட்டது உணரவும் ஒப்புநோக்குதல் முறை உரியதாகிறது.

தொகுப்புரை

அமைதி காணுதல் - தெளிவு பெறுதல் - அருமை தெரிதல் முதலான பயன்பாடுகளை ஒப்பீட்டு உளவியல் உருவாக்கும். இக்கருத்துரு வாக்கத்தை இவ்வெழுத்துரை வழங்கி நிற்கிறது. இவ்வுரைவழிப் பயணம் தொடர்வோர் மேலும் பல ஒப்பீடுகளை - உளவியல் உள்ளீடுகளைக் கண்டறியலாம். அதற்கான களங்கள் பல கம்பனில் உள. அப் பயணத்திற்கான ஆற்றுப்படையாக இவ்வுரை அமைவதாகுக.

கம்பனில் நான் காணும் உணர்வு பூர்வ அறிவு (EMOTIONAL INTELLIGENCE)

பலவான்குடி அண்ணா சுந்தரம்
சிட்னி, ஆஸ்ட்ரேலியா

முன்னுரை

கம்பன் ஒரு மாபெரும் உளவியல் மேதை என்ற உணர்வு என்னுள் எழுந்தது. அதன் விளைவே நான் கம்பனில் காணும் உணர்வு பூர்வ அறிவு (EI) எனும் இக்கட்டுரையாகும் கம்பராமாயணத்தில் உணர்வுகளின் வெளிப்பாடு மிகுந்த கதாபாத்திரங்கள் பல. அதில் தசரதன், வசிட்டர், இராமர் இம்மூவரிடமும் கம்பன் எங்ஙனம் உணர்வுப்பூர்வ அறிவினை முரண்பட்ட இரண்டு சம்பவங்கள் மூலம் கண்டார் என்பதையும், அந்த உணர்வுபூர்வ அறிவுக் காட்சிகள் மூலம் நமக்கு கிடைப்பது என்ன என்பதையும் ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

அறிமுகம்

படிப்பறிவு (IQ), பட்டறிவு (அனுபவ அறிவு) இவ்விரண்டும் நாம் அறிந்த ஒன்று. படிப்பறிவு மிக்கோர் சாதனையாளர்கள் ஆவது சாத்தியம். இருப்பினும் படிப்பறிவு இல்லாத சாமானியர் ஒருவர் சாதனையாளன் ஆக 'உணர்வு பூர்வ அறிவு' தான் உதவுகிறது என்பதை உளவியல் மேதை டேனியல் கோல்மன் தன் ஆய்வின் மூலம் உலகுக்கு உணர்த்தினர். (1) மேலும் அவர் உணர்வு பூர்வ அறிவினை 5 கூறுகளாகப் பிரித்தார். அவையாவன:

1. **உணர்வுகளை உணர்தல்** (Understand your feeling)
2. **உணர்வுகளை மேம்படக் கையாளுதல்** (Manage your feeling)
3. **உள் ஊக்கம்** (Self motivation)
4. **தன்னைப் போல பிறரை நினை** (Empathy)
5. **வாழ்வியல் திறன்கள்** (Life skills)

மேற்சொன்ன 5 கூறுகளையும் சாமானிய மனிதன் அன்றாட வாழ்வில் கற்பதின் மூலம் சந்தர்ப்பங்களை தனக்கும் தான் சார்ந்த சமுதாயத்துக்கும் சாதகமாக்கும் கலையைப் பெற்று சாதனையாளன் ஆகிறான் என்கிறார் டேனியல் கோல்மன். இக் கட்டுரையில் கம்பராமாயணத்தில் முரண்பட்டு வெளியாகும் இரண்டு சம்பவங்களில் உள்ள உணர்வு

பூர்வ அறிவையும். அதன் பயனையும் கலந்துரையாடலில் காண்போம்.

கலந்துரையாடல்

சம்பவம் 1 - குருவின் ஆலோசனையால் கடமை ஆற்றல்

விசுவாமித்திரர் தன் யாகத்தை அசுரர்கள் கலைத்துவிடா வண்ணம் காவல் செய்ய ராமன் வேண்டும் என தசரதனிடம் கேட்கிறார். அப்போது தசரதனின் பய உணர்வுகளை கம்பன் அழகாக கீழ்க்கண்ட வரிகளில் கூறுகிறார்.

எண்ணிலா அருந்தவத்தோன் இயம்பியசொல் மருமத்தின் எறிவேல் பாய்ந்த
புண்ணிலாம் பெரும்புழையில் கனல் நுழைந்தால்எனச் செவியில் புகுதலோடும்
உண்ணிலா வியதுயரம் பிடித்து அந்த ஆருயிர் நின்று ஊசல் ஆடக்
கண்ணிலான் பெற்றிழந்தான் எனஉழந்தான் கடும்துயரம் காலவேலோன்

பய உணர்வுகளை உணர்ந்த தசரதரால் உணர்வுகளை மேம்படக் கையாண்டு. தன்னை ஊக்கப்படுத்திக் கொள்ள இயலாத நிலையில் விசுவாமித்திரரிடம் "நான் காவல் செய்ய வருகிறேன் இராமன் வேண்டாம்" என்கிறார். விசுவாமித்திரர் கோபம் கொள்கிறார். சந்தர்ப் பத்தை தனக்கும் சமுதாயத்திற்கும் சாதகம் ஆக்கிக் கொள்ள இந்த இடத்தில் தசரதன் தவறியதை நாம் காண்கிறோம்.

இச்சூழலில் வசிஷ்டர் - தசரதனின் குரு - விசுவாமித்திரர் மூலம் இராமனுக்கு வர உள்ள அனுபவங்களை தடுக்க வேண்டாம் என்று அறிவுரை கூறி. தசரதனுக்கு தந்தை மகனுக்கு ஆற்றவேண்டிய கடமையை நாசூக்காக உணர்த்துகிறார். உடனே தசரதர் ஒத்துக் கொள்கிறார்.

இங்கு கடமை உணர்வைப்பற்றி கம்பன் கோடு காட்டாவிடினும். வசிட்டர் தனது உணர்வு பூர்வ அறிவு மேம்பாட்டால் தன் கடமை யையும். தசரதன் கடமையையும் செய்யும்படி செயல்பட்டார் என்று கொள்ளலாம். மேலும் தசரதனின் பயஉணர்வு அவரது கடமை உணர்வைப் பலி வாங்கிய தருணத்தில் தசரதனின் வாழ்வியல் திறன் களில் ஒன்றான ஆசானின் அறிவுரை ஏற்றல் என்ற திறன் தசரதன் நிலையை மேம்படுத்தியதையும் உணரலாம். இடுக்கண் வருங்கால் உள் ஊக்கத்தை உருவாக்கும் வழி அறிதலும் தேவைப்படின் பிறர் ஆலோசனைகளை ஆராய்ந்து ஏற்றலும் நன்று என்பதை நாம் இங்கு அறியலாம்

சம்பவம் 2 - இடுக்கண் வருங்காலும் கடமைதனைக் காட்டி குருவின் ஆலோசனை மறுக்கப்படல்

கைகேயி இராமனிடம், " பரதன் நாடாள வேண்டும், நீ 14 ஆண்டு காட்டிற்கு செல்ல வேண்டும்" என்பது தந்தையின் கட்டளை என்ற போது இராமனின் முகத்தை "அன்றலர்ந்த செந்தாமரை போன்றே" என்கிறார் கம்பன். "அகத்தின் அழகு முகத்தில் தெரியும்" என்பதை அறிந்த கம்பன் இங்கு நமக்கு இராமனின் மனநிலையின் தெளிவை இப்படிச் சொல்கிறார் என்றே கருதுகின்றேன். இராமர் தன் உணர்வுகளை மேம்படக் கையாண்டு, தன்னை தானே ஊக்கப்படுத்திக் கொண்டதற்கு சான்று அவர் கைகேயி சொன்னதை அப்படியே மறுப்பின்றி ஏற்றதன் மூலம் தெரிகிறது. மேலும், ஒரு படி மேல் போய் இராமரின் உள் ஊக்கத்தை கம்பன் கீழ்க்கண்ட வரிகளில் காண்கிறார்.

மன்னவன் பணி அன்றாகினும் நும் பணி மறுப்பேனா என்
பின்னவன் பெற்ற செல்வம் அடியனேன் பெற்றதன்றோ!

அதுபோலவே தன்தாய் கோசலையிடம் விடைப்பெறும்போதும், அம்மா நான் நன்னெறியில் உய்யும்பொருட்டு மன்னன் இட்ட கட்டளை ஒன்றும் இருக்கிறது என்றான்.

உணர்வு பூர்வ அறிவின் உச்சக்கட்ட வெளிப்பாடு தனிமனித பொறுப்புணர்வும் மற்றும் சமுதாயப் பொறுப்பு உணர்வுமேயாகும். பொறுப்புணர்வு வரவேண்டுமாயின் ஒருவன் தன் கடமை தனை, இடுக்கண் வரும் காலத்தில்கூட நினைக்க வேண்டும் என்பதை கம்பன் தன்காவியத்தில் இராமர்- வசிட்டர் உரையாடல் மூலம் நமக்கு காட்டுகிறார்.

காட்டுக்குப் போக ஆயத்தம் ஆகும் இராமரிடம் குலகுரு வசிட்டர் வந்து, "இராமா நீ காட்டுக்கு போனால் உன் தந்தை இறக்க நேரிடலாம்" எனும் போது தான் இராமர் தன் கடமையையும் வசிட்டரின் கடமையையும் எடுத்துக் காட்டுகிறார்.

அன்னவன் பணிதல் லேந்தி யாற்றுதல்
என்னது கடனவ நிடரை நீங்குதல்
நின்னது கடனிது நெறியு மென்றனன்
பன்னகப் பாயலுட் பள்ளி நீங்கினான் (அயோத்தி காண்டம்-167)

இந்த இடத்தில் வசிட்டர், "கானகம் செல் என்றது மன்னவன் பணியன்று" என்று சொல்கிறார். ஆனால் இராமரின் கடமை உணர்வு,

வசிஷ்டரையும் வசியப்படுத்தியதை அழகாகக் கம்பன் வர்ணிக்கின்றார். இராமர் தனது தெளிந்த மனநிலையால் தன்னைப் போல் தந்தையையும் நினைத்து அவர் கொடுத்த வாக்கை தான் காப்பாற்றுவது தன் கடமை என்று எடுத்த முடிவால், தனக்கும், தன்னை சார்ந்தவர்களுக்கும் சாதக நிலையை உண்டாக்கினார் என்று உணர்க. இக்கட்டான சூழலில் சிறந்த முடிவு எடுக்க நாம் உணரவேண்டிய இலக்குகள் கடமை , சுயநலம் இன்மை, நடப்பதெல்லாம் நன்மைக்கே என்ற மனப்பாங்கு என்பது இச்சம்பவம் மூலம் தெளிவாகத் தென்படுகிறது

முடிவுரை

இவ்ஆய்வில் கம்பனின் கைவண்ணத்தில் உருவான, முரண்பட்ட, இருவேறு சம்பவங்களைக் கொண்டு, தசரதர், வஷிஸ்டர் மற்றும் ராமர் ஆகியோரின் உணர்வுபூர்வ அறிவு வெளிப்பாட்டினை அதன் ஐந்து மூலக்கூறுகள் கொண்டு நோக்கினோம். முக்கியமாக உணர்வுகள் கொந்தளிக்கும் இக்கட்டான சூழலிலும் ராமர், வஷிஸ்டர் ஆகியோரின் உணர்வுபூர்வ அறிவு எவ்வாறு கடமை, கண்ணியம் மற்றும் கட்டுபாடுடன் கூடிய செயல்பாடுகளை அவர்களுக்கு தந்தன என்றும் பார்த்தோம். இதிலிருந்து நாம் அறிவது என்னவெனில், இக்கட்டான சூழலில் இருக்கும்போது பய உணர்வு வராதவாறு பார்த்துக்கொள்ள வேண்டும். தனிமனிதப் பொறுப்பையும் சமுதாயப் பொறுப்பையும் உணர்ந்து நமது கடமையைச் செவ்வனே செய்ய வேண்டும் மற்றும் பயஉணர்வில் இருக்கும்போது கடமை உணர்வை பலி கொடுத்து விடக் கூடாது என்பன போன்ற பல அரிய உணர்வுபூர்வ அறிவுக் கலைகளை கம்பன் தன் கவிநயத்தால் நமக்கு தந்துள்ளான். இது போன்று பல இடங்களில் கம்பன் உளவியல் ஞானியாகத் திகழ்ந்துள்ளான் என்பதற்கான ஆதாரங்கள் கம்பராமாயணத்தில் உள்ளன.

வாழ்வியல் வழிகாட்டி கம்பன்

சி. இராசா முகம்மது
ஒருங்கிணைப்பாளர், பொதிகை இலக்கிய வட்டம், தென்காசி.

காப்பிய நோக்கம்

'அறம் அழித்து அநீதி செழித்தால் திறம் என்றே தீமை வென்றிட்டால் அரக்கர் ஆட்சியில் ஆன்மா சிதைந்தால் பிறப்பேன் வருவேன் பேரறம் காக்கவே' என்று துவாபர யுகத்தில் கண்ணன் பிரகடனப்படுத்தும் முன்பே, திரேதாயுகத்தில் இராமபிரான் அவதரித்தது இந்தியத் திருநாட்டின் ஈடிணையில்லா இதிகாசம் ஆகத் திகழ்கின்றது. இதிகாசம் என்ற சொல்லுக்குப் பொருளே 'இது இப்படி நடந்தது' என்பதுதான். ஆம், "தருமமும் தகவும் இவர் தனமெனும் தகையராய்" (3757) வாழ வந்தவர் இதிகாசத் தலைவர் இராமபிரான். அதற்காகவே, 'தவம் செயத் தவம்செய்த தவம்' (2749) என,

மூலமும் நடுவும் ஈறும் இல்லது ஓர் மும்மைத் தாய
காலமும் கணக்கும் நீத்த காரணன் கைவில் ஏந்திச்
சூலமும் திகிரி சங்கும் கரகமும் துறந்து தொல்லை
ஆலமும் மலரும் வெள்ளிப்பொருப்பும் விட்டு அயோத்தி வந்தான்

மனிதரைத் தெய்வநிலைக்கு உயர்த்தும் புனிதவாழ்வைப் புவி மாந்தர்க்கு உணர்த்த வந்தவன் இராமபிரான். காமத்தால் ஏமம் இழந்து, பிறன்மனை கவர்ந்து பெரும் அழிவுக்கு ஆட்படும் மாந்தரின் நிலையை ஐயமின்றி வையத்தார்க்கு அறிவுறுத்தவே வாலி வதத்தையும், இராவணவதத்தையும் நிகழ்த்தினான்.

உடைந்தவர்க்கு உதவானாயின் உள்ளது ஒன்று ஈயான்ஆயின்
அடைந்தவர்க்கு அருளான்ஆயின் அறம்என்னாம் ஆண்மைஎன்னாம்
(6472)

என்ற வினாவுக்கு விடையளிப்பது போல் சுக்கிரீவனின் துன்பம் துடைக்க இராமபிரான் மேற்கொள்ளும் வாலிவதை அமைகிறது. ரிதின் நோய் தன்நோய் போல் போற்றும் அறிவினான் ஆகும் பயனை இராமபிரான் வெளிப்படுத்துகின்றான்.

ஏதிலாரும் எளியரென்றால் அவர்
தீதுதீர்ப்பது என் சிந்தை கருத்து

என விவிலியம் கூறும் வேதவாக்கும் மெய்ப்பிக்கப்படுகிறது. அதற்காகவே,

காலமாக் கணிக்கும் நுண்மைக் கணக்கையும் கடந்து நின்ற
மூலமும் ஆய், முடிவு இலாதமூர்த்தி இம்முன்பன் (1585)

எனவும்,

வான்நின்று இழிந்து வரம்பிகந்த மாபூதத்தின் வைப்பெங்கும்
ஊனும் உயிரும் உணர்வும்போல் உள்ளும் புறத்தும் உளனென்ப
கூனும் சிறிய கோத்தாயும், கொடுமை இழைப்பக் கோல்துறந்து
கானும் கடலும் கடந்து இமையோர் இடுக்கண் காத்த கழல்வேந்தைத்
(அயோ. காண்டம். காப்புச்செய்யுள்)

தலைவனாகத் தேர்ந்து கம்பன் காப்பியம் யாத்தனன்; பாத்திறம் காட்டினன். சுந்தர காண்டம் - காப்புச்செய்யுள் சுட்டுவதுபோல, மறைகளுக்கு இறுதியாகும் மானுட ஆற்றலின் மகிமை சாற்றினன்.

அறத்திற்கோர் காப்பியம்

கம்பன் 'ஆசையற்றி அறையலுற்ற காசில் கொற்றத்து ராமன் கதை'க்கு அதில் விஞ்சிநிற்கும் மனிதநேயமும் ஒழுக்கநெறியும் அறத்தின் வழுக்காத நடத்தைச் சிறப்பும் வண்ணம் சேர்த்து நம் எண்ணத்தை ஈர்த்து நிற்கின்றது. இதனாலேயே கம்பனின் காப்பியம் அறத்திற்கு ஒரு காப்பியம் (Epic of Virtue) என்று ஆர். கிருஷ்ணமூர்த்தி போன்ற ஆன்றோரும் போற்றுகின்றனர்.

மன்னுயிர் எல்லாம் தன்னுயிராக

மனிதனாகப் பிறந்து, மனித உணர்வுகளோடு வாழ்ந்து, துன்பங்களுக்கு ஆட்பட்டுத் துயர் உழந்து, மானுடத்தின்வெற்றிக்கு வழிகாட்டி மன்னுயிரெல்லாம் தன்னுயிர் என்று நேசித்து,

குகனொடும் ஐவரானோம் முன்புபின் குன்று சூழ்வான்
மகனொடும் அறுவர் ஆனோம் எம்முழை அன்பின்வந்த
அகனமர் காதல்ஐய நின்னொடும் எழுவர் ஆனோம்
புகல்அரும் கானம்தந்து புதல்வரால் பொலிந்தான் நுந்தை
(கம்பன். யுத்த. 143)

என்று தன்னைக் கானகம் அனுப்பி வானகம் சென்ற தந்தையின் செயலுக்கும் அமைதி கற்பிக்கும் இராமபிரானின் உளப்பாங்கு நம்முள்

ஓங்கி நின்று ஒளியூட்டுகின்றது - வழிகாட்டுகின்றது!

காப்பியத்தின் வெற்றி

"மக்களுடைய வாழ்க்கையின் மீதும் சிந்தனையின் மீதும் இராமாயணம் பெற்றுள்ள ஆழ்ந்த செல்வாக்கைப்போல, வேறுஎந்த உலகக்காப்பியமும் பெறவில்லை" என்ற சிறப்பை இராமகாதை பெற்றதற்கு இந்த மானுடம் வென்ற மாண்பே காரணம். (A.A.Macdonell - Encyclopedia of Religion)

இதனால், திரு. வ. வே. சு. ஐயர் அறைகூவல் விட்டுத் தெரிவிப்பதுபோல் கம்பனின் காப்பியம் எல்லா உலக இலக்கியங்களைவிடவும், ஏன் மூலகாவியம் தந்த வான்மீகியை விடவும் மேம்பட்டு நிற்கிறது. (Kambaramayana A Study P.1VVS.Iyer)

குருவின் கூற்றே அறத்தின் ஆறு

குருவின் "உரை வேதம்" எனக்கொண்டு, "அறம் செயும் ஆறு" எனச் செயல்பட்டுத் தாடகைவதம் புரிகின்றான் இராமபிரான். அவ்வழியில் செவ்வழியில் இன்றைக்கும் மாணாக்கர் நடந்தால் "பாருக்குள்ளே நல்ல நாடு நம் பாரத நாடு" என்று பாரதி பாடுவது போல் பரிமளிக்குமன்றோ!

இராமபிரான் மூலம் அண்ணல் காந்திக்கு வழிகாட்டிய கம்பன்

"காகுத்தன் கழல்துகள் கதுவ" (455) நெஞ்சில் பிழைப்பு இலா அகலிகை "பண்டைவண்ணமாய்" எழ, 'நீ அன்னை' என்று அவள் பொன்னடி வணங்கி 'கஞ்சமா மலரோன் அன்ன முனிவனுடன்' சேர்த்து வைத்தான் இராமபிரான். இச்செய்கை பாலியல் வன்கொடுமைகளுக்கு ஆளான பெண்களுக்கு வாழ்வு கொடுக்கும் வகையிது என்று அண்ணல் காந்திக்கு வழிகாட்டிய செயலாக அமைந்தது போலும்.

மனத்துக்கண் மருவிலாத மங்கையர் மறுவாழ்வுக்கான மார்க்கம் இதுவே என்று மன்பதைக்கு உணர்த்தும் செயலன்றோ இது. அம்மட்டோ! நடையில் நின்றுயர் நாயகனாய்,

எது வினை, இடர் இலை இனிது நும் மனையும்?
மதி தரும்குமரரும் வலியர்கொல் (311)

எனப்பாமர மக்கள்பால் இராமபிரான் மனிதநேயத்தை வெளிப்படுத்து கின்றான்.

செந்நெறி நடந்த அண்ணல்

அதனால்தான்.

அறம்தலை நிறுத்தி வேதம் அருள்சுரந்து அறைந்த நீதித்
திறம் தெரிந்து உலகம் பூணச்செந்நெறி செலுத்தி தீயோர்
இறந்துக நூறித் தக்கோர் இடர் துடைத்து ஏக ஈண்டுப்
பிறந்தனன் தன்பொற்பாதம் ஏந்துவான் பிறப்பறுப்பான் (5885)

இப்படி மண்ணிடை வந்து. தன்னலம் இல்லாத தன்மையில் மன்னுயிர் யாவும் தன்னுயிர் என்று எண்ணி வாழ்ந்து காட்டியதனால்தான்,

கண்ணினும் நல்லன் கற்றவர் கற்றிலாதவரும்
உண்ணும் நீரினும் உயிரினும் அவனையே உவப்பார் (1352)

என்று மாநிலத்து மக்களெல்லாம் இராமபிரான்பால் அன்பால் கட்டுண்டனர்.

அரசியலில் ஓர் அற்புதம்

முனைவரும் அமரரும் மூவர் தேவரும்
எனையவர் எனையவர் யாவர் யாவையும்
நினைவரும் இரு வினை முடிக்க (10020)

வந்த ஏந்தல் தங்கள்பால் காட்டிய அளப்பரும் அன்பால்.

மைந்த. நீ கோடி எங்கள் வாழ்க்கைநாள் யாவும் என்பார் (1582)

என்று இராமபிரானைப் போற்றி அவனுக்காகத் தங்கள் வாழ்க்கை நாள் யாவையும் தியாகம் செய்யத் துணியுமளவு மக்கள் மனம் கவர்ந்தவர் என்று கம்பன் படைத்துக் காட்டும் இராமபிரான் பாதை. அரசியலில் ஓர் அற்புதமாகும் என்பதைப் பாருங்கள்.

மன்பதை காக்கும் மகுடம் துறந்த மாண்பு

உருளுடை சகடம் பூட்ட உடையவன் உய்த்த கார்ஏறு
அருளுடை ஒருவன் நீக்க அப்பிணி அவிழ்ந்தது ஒத்தான் (1603)

என்று இருளுடை உலகம் தாங்கும் இன்னலுக்கு இயைந்து நின்றான் தெருளுடை மனத்து மன்னன் ஏவலில் திறம்பல் அஞ்சி

.... வாசகம் உணரக் கேட்ட
அப்பொழுது. அலர்ந்த செந்
தாமரையினை வென்றதம்மா (1602)

என்று மகுடம் தனக்கில்லை என்றபோதும் அகமும் முகமும் மலர்ந்த தன்மை, வாழ்வில் பற்றினை முற்றும் விட்ட பற்றற்ற நிலைபெற்றால் நோதல் இல்லையல்லவா!

சிற்றன்னைபால் உற்ற மரியாதை

மன்னவன் பணி அன்றாகின் நும்பணி மறுப்பெனோ என்
பின்னவன் பெற்ற செல்வம் அடியனேன் பெற்றது அன்றோ?
என்இனி உறுதி அப்பால்? இப்பணி தலைமேல் கொண்டேன்
மின்ஒளிர் கானம் இன்றே போகின்றேன் விடையும் கொண்டேன்
(1604)

என்ற பகுதி இராமபிரான் தன் சிற்றன்னை கைகேயி பால் உற்ற மரியாதைக்கு அடையாளம் அன்றோ.

பின்னவன் மன்னவன் ஆகிடத் தன்னலம் துறந்த தயாளன்

இராமபிரான் "பின்னவன் பெற்ற செல்வம் அடியவன் பெற்றது அன்றோ" என்றுமகிழும் மாண்பு எண்ணியெண்ணிப் பின்பற்றத் தக்க தன்றோ. மாந்தரெலாம் இப்படி மனப்பாங்கு கொண்டுவிடின் மாபாரதம் காட்டிய குருக்ஷேத்திரப் போர் தொடங்கி, இன்று வரையிலும் நிகழும் அதிகாரப் போட்டியும் அரசியல் வீழ்ச்சியும் அறவே இடம் பெறாமல் மானுடம் மகிழும் நிலை பிறக்குமன்றோ - மன்பதை சிறக்கு மன்றோ. இந்த மாண்பினால் தான் வசிட்டர் மவுலி புனைந்தபோது,

ஒத்த மூவுலகத்தோர்க்கும் உவகையின் உறுதி என்னின்
தத்தும் உச்சியின் மேல்வைத்தது ஒத்தது அத்தாம மோலி (10329)

என்கிறார் கம்பர்.

மகளிர்க்கு வழி காட்டும் மங்கை நல்லாள்

"தாயர் தவ்வையர் தன் துணைச் சேடியர் ஆயம் மன்னிய அன்பினர் சூழ" (1831) வண்ணச்சீரடி மண்மகள் அறிந்திலாத வகையில், மிதிலையில் - அரண்மனையில் - அம்சதூளிகா மஞ்சத்தில் துயின்று வளர்ந்த ஆரணங்காம் கள்ளிருக்கும் மலர்க் கூந்தல் சானகி, "நின் பிரிவினும் சுடுமோ அப்பெருங்காடு" (1827) என்று கணவனுடன் காடேகிய தன்மை, "தவம் செய்த தவமாம் தையல்" (6037) என்ற உயர்வைத் தருகின்றது. வாழ்வில் காதலர் இருவர் கருத்தொருமித்து இல்லறம் புகுங்கால், எப்படி மனைத்தக்க மாண்பு காட்டவேண்டும்

என்பதற்கு எடுத்துக்காட்டாகும்.

அற்றம் நீத்த மனத்தினன் அன்பினன் "தேனும் மீனும் அமுதினுக்கு அமைவது ஆகத் திருத்திக் கொணர்ந்த" (1966) போது. "பவித்திரம் எம்மனோர்க்கும் உரியன இனிதின்; நாமும் உண்டனம் அன்றோ அமிழ்தினும் சீர்த்த அன்றே" (1967) என்றும் நட்பு பாராட்டி, ஏழை வேடனை "எம்பி நின் தம்பி, தோழன் நீ, மங்கை கொழுந்தி"(5091) எனச் சொல்லி "யாதினும் இனிய நண்ப" (1970) என்று அன்பு காட்டிய, என்பும் பிறர்க்கீயும :(குறள். 72) அன்பு மிக்கவனின் பண்பு நலப்பான்மைக்கு இணையுண்டோ?

பகைவனுக்கு அருளல்

இன்றுபோய்ப் போர்க்கு நாளை வா" (7271) என இராமபிரான் கூறி இராவணனை அனுப்பி வைக்கும் அறநெறி வழுவாத தன்மை. பகைவர்க்கும் அருளும் பான்மை மிகு நன்னெஞ்சத்தைப் பயிற்றுவிப்பது அன்றோ?

வாளியினால் இராவணன் உயிர் போக்கிய பின்னர், சீதையைத் தீப்புகச் செய்தது ஏன்?

நீ வெருவலை நின்றனை, வேறு என் யான்
இனி எரியிடைக் கடிது வீழ்ந்து இறப்பென் ஈண்டு (3331)

என்று உறங்கா வில்லியை - தருமத்தின் தனிமை தவிர்த்த இலக்குவனைச் சொல்லால் சுட்ட தோகைக்கு ஒரு சோதனை வைத்தான் போலும் இராமபிரான். அக்கற்பின் கனலியைத் தீக்கடவுள்,

அழிப்பு இல சான்று நீ உலகுக்கு ஆதலால்
இழிப்பு இல சொல்லி, நீ இவளை யாதும் ஓர்
பழிப்பு இலள் என வெளிப்படுத்த பழியும் இன்று, இனிக்
கழிப்பிலள் என்ற (10048)

கருணை உள்ளத்தானின்கூற்று சீசரின் மனைவி ஐயத்திற்கு அப்பாற் பட்டவளாக இருக்க வேண்டும் என்ற உலகியல் நெறிக்கு ஓர் எடுத்துக் காட்டாகும்.

இன்னா செய்தாரை அன்னை எனல்

தீயள் என்று நீ துறந்த என் தெய்வமும் மகனும்
தாயும் தம்பியும் ஆம் வரம் தருக (10079)

என்று தயரதனிடம் வரம் வேண்டி நிற்கும் இராமபிரானின் அருள் உள்ளம், இன்னா செய்த கைகேயியையும் அன்னையாக ஏற்க வேண்டும் பண்புக்கு இணையேது!

சமயப் பொறை

வாள்கொண்ட கண்ணார் யாரே வடிவினை முடியக்கண்டார்
ஊழ்கொண்ட சமயத்து அன்னான் உருவு கண்டாரை ஒத்தார்
(1081)

என்று கூறி சமயப்பொறையுடன் எச்சமயத்தாரும் ஏற்கும்.

கடவுள் வணக்கப் பாடலில் ஏக இறைவனை சமயக் காழ்ப்பின்றிச் சரண்புகக் கூறும் சிறப்பு ஆன்மீகப் பரப்பிலும் கம்பனின் வழிகாட்டல் நமக்கு ஒளியூட்டுகின்றது.

வாழ வழிகாட்டி எழில்கூட்டும் வள்ளல் கம்பன்

தெய்வம் மனிதனாக வந்து கால் தரைதோய மண்ணை மிதித்த பிறகு, முழுக்க முழுக்க ஒரு மனிதனாக - நல்ல மனிதனாக நடையில் நின்றுயர் நாயகனாக - அறம் வளர்க்கும் கண்ணாளனாக "இறப்பினும் திருவெலாம் இழப்ப நேரினும் துறப்பிலர் அறம் எனல்" என்பதற்கு இலக்கியமாக வாழ்ந்ததே கம்பன் சுட்டும் இராமபிரானின் வாழ்வியல். தனித்திருந்து, விழித்திருந்து, பசித்திருந்து பரம்பொருளை நினைத்திருந்து துதித்திருந்து அறத்தினில் மனத்தை நிலைப்படுத்தி இருந்து வாழும் தவவாழ்வுக்கு அசோகவனத்தின் சீதையின் தவக்கோலம் மூலம் வழிகாட்டுவது கம்பனின் காப்பியம்.

நன்றிக்கு வித்திட்ட வெற்றி

இந்திரஜித்தால் இலக்குவன் மூர்ச்சையுற அது கண்டு ஆவி உயிர்த்து உயிர்த்து உருகி இராமபிரானும் சிந்தையிழக்க, நிர்க்கதியான நிலையில், சஞ்சீவி மலையுடன் வந்து அனைவரையும் உயிர்ப்பித்த அனுமனைப் போற்றி இராமன், '**மாரியை நோக்கிக் கைம்மாறு இயற்றுமோ வையம்**' என்றும் கூறிடும் மொழிகள் நம் சிந்தை கவர்வன. எல்லோருக்கும் இறுதியில் பரிசில்கள் தரும் இராமபிரான் அனுமனைப் பொருந்துறப் புல்லுக (10351) என்றும் "ஆர்உதவிடுதற்கு ஒத்தார் நீ அலாய்" என்றும் சிறப்பித்ததும் எண்ணி எண்ணி மகிழத்தக்கது. அனுமனின் இராம பக்தியும், மெய்ப்பொருளை அடைந்த பின் வேறெதுவும் வேண்டாமல்

மெய்ப்பொருள் சார்ந்து வாழும் மேன்மையுறு வாழ்வால் அமரத்துவம் பெறும் வழியையும் தெளிவிப்பது இராமகாதை.

"இன்று என இருத்தி" (5299) என்று சீதாப் பிராட்டியால் வாழ்த்துப் பெற்று, என்றென்றும் இளமையோடு இருக்கும் அனுமனின் நிலை ஷஷபயன்தூக்கார் செய்த உதவி நயன் தூக்கின் நன்மை கடலிற் பெரிது" என்பது உணர்ந்து கைமாறு செய்யும் கடமையுணர்வைக் காட்டுகின்றது. இப்படி நூற்றாண்டுகளைக் கடந்தும் எல்லாக் காலங்களிலும் மனித குலம் அடையும் அல்லல்களுக்கும் விடையளிப்பதாய் கம்பன் காலமும் கணக்கும் தீர்த்த காரணனாகத் திகழ்கிறான். (The Kamban P.1.Justice S.Maharajan)

முடிவுரை

பழங்குடிமக்களின் நாட்டுப்புறக் கதைப்பாடலாகவும், பௌத்த ராமாயணம், அத்யாத்ம ராமாயணம், ஆனந்த ராமாயணம், என்றும் வான்மீகி காலத்திற்கு முன்பே அறியப்பட்டு இராமகாதை. 48 செவ்வியல் வடிவங்களாகத் திகழ்ந்த போதிலும், தாய்லாந்து முதல் கிரேக்கம் வரை பல்வேறு நாடுகளின் இலக்கியங்களிலும் தன் ஒப்பிலாத் தாக்கங்களைத் தந்து உச்சி மேல் வைத்து மெச்சிடும் உயர்வுக்குக் காரணம் கம்பனின் வாழ்வியல் உத்தியேயாகும். மகுடம் தனக்கில்லை என்ற போது, வான்மீகி ராமன் கூறுவன வரம்பிகந்த சுடுமொழிகள். ஆனால் கம்பனின் ராமனோ, விதிக்கு விதி செய்யத் துடிக்கும் இளைய பெருமாளின் கோபத்திற்கு அணையிட்டு விதியின் பிழை நீ இதற்கு என்னை வெகுண்டது? (1734) என்று அமைதிப்படுத்துவது மானுட சமூகத்திற்கு ஓர் ஒப்பிலாப் புதுமை காட்டும் தப்பிலாத் தன்மையாகும். (கம்பரும் வால்மீகியும், நாமக்கல் கவிஞர், ப. 29) வையத்துள் வாழ்வாங்கு வாழக் கற்றுக் கொடுக்க மன்பதையில் இன்பமுற வாழ அன்பும் அறமும் தழைக்க, **இழைக்கின்ற விதிமுன் செல்ல தருமம் பின் இரங்கி ஏக மழைக்குன்றம் அணையான்"** (1606) மண்ணில் வந்துதித்து, வாழ்ந்து காட்டிய மகத்துவத்தைத் தன் கவித்துவத்தால் கம்பன் பாடியுள்ளமை படிப்போர்க்கு என்றென்றும் வாழ்வியல் நெறி காட்டும் ஈடிணையில்லாச் சிறப்புடன், கம்பனைக் கவிச்சக்கரவர்த்தியாக நம் இதய மேடையில் சிம்மாசனம் இட்டு அமர வைக்கும் அமரத்துவம் வாய்ந்ததாகும்.

கம்பன் பார்வையில் அறநெறி

பெ. குபேந்திரன்
ஆய்வியல் நிறைஞர், தமிழ்த்துறை, அழகப்பா பல்கலைக் கழகம், காரைக்குடி.

அறம் என்பது அறுத்துச் சொல்வது, வழியை உண்டாக்குவது எனப் பொருள் உரைக்கப்படுகிறது. திருக்குறளில் முப்பாலின் முதற்பாலே அறத்துப்பால் ஆகும். அறத்தான் வருவதே இன்பம் என்று பண்டைய நூல்கள் யாவும் அறத்திற்குத் தனியிடம் தருகின்றன.

ஞாயிறும் திங்களும் அறனும் ஐவரும் (பரிபாடல் - 3)

அறம் புலந்து பழிக்கும் (ஐங்குறு - 393)

அறம் புணையாகலுமுண்டு (கலி - 144)

அல்லவை செய்வார்க்கு அறம் கூற்றாகும் (நான்மணி. - 82)

அரசியல் பிழைத்தோருக்கு அறம் கூற்றாகும் (சிலம்பு, 55)

என்ற அடிகளில் அறம் அறக் கடவுளாகக் கருதப்படுகிறது. அவ்வகையில் கம்பராமாயணம் பல்வேறு மாந்தர் செயல்களின் மூலம் அறவாழ்க்கையை எடுத்துரைக்கும்.

கம்பன் காட்டும் நாடு

கோசல நாட்டு மக்கள் அறத்தின் வழி வாழ்ந்த பாங்கை,

மானம் நேர்ந்து, அறம் நோக்கி, மனு நெறி
போன தண்குடை வேந்தன் புகழ் என,
ஞானம் முன்னிய நான்மறை யாளர்கைத்
தானம் என்னத் தழைத்தது - நீத்தமே (16)

என்று விளக்கும்.

இராமன் பின்பற்றிய அறநெறி

தந்தைக்கும் மகனுக்கும் உள்ள அன்புறவைத் தசரதன் இராமன் வழியே காட்டுவார் கம்பர். தன்னையழைத்து நாடாள்க எனச் சொன்ன போது அப்படியே ஏற்றவன் இராமன். இதனை,

தாதை யப்பரி சுரைசெயத் தாமரைக் கண்ணன்
காதல் உற்றிலன் இகழ்ந்திலன் கடனிதென் றுணர்ந்தும்
யாது கொற்றவன் ஏவிய ததுசெய லன்றோ
நீதி யெற்கென நினைந்துமப் பணிதலை நின்றான்

என்பது உணர்த்தும். இதில் காட்டிற்குப்போ என்று தந்தை கட்டளையிட்டான் எனக் கைகேயி சொன்னபோதும் அப்படியே இராமன் ஏற்றதைக் காட்டுகின்றார் கம்பர். இதனை "கடமை உணர்வாலும் நாம் செயல் புரியலாம் இப்படிச்செய்வதை அறச்செயலின் தலை சிறந்த நிலையாகவும், கடமையுணர்ச்சியின் அறநெறியாகவும் கொண்டவன் இராமன். தந்தை சொல் மிக்க மந்திரமில்லை என்பதை உலகிற்கு அறநெறியோடு எடுத்துக் காட்டியுள்ளார்". என்பர் அ. அறிவுநம்பி.

மேலும், கம்பன் இராமனின் எளிமையினைக் குறிப்பிடும் பொழுது அந்நாட்டு மக்கள் நல்லமுறையில் வாழ்கிறார்களா என, வரும் வீதியில் எதிர்வரும் மக்களிடம்,

எதிர் வரும் அவர்களை எமையுடை இறைவன்
முதிர்தரு கருணையின் முகமலர் ஒளிர
எதுவினை? இடர் இலை? இனிது நும் மனையும்
மதிதரு கமரரும் வலியர் கொல்? எனவே! (311)

என்று வினவினன் இதில் நீங்கள் துன்பம் இல்லாமல் வாழ்கிறீர்களா? உங்கள் மனை வளமாக இருக்கிறதா? உங்கள் பிள்ளைகள் அறிவில் சிறந்து உள்ளார்களா? என்று கேட்டறியும் பாங்கின்மூலம் மக்கள் அறநெறியில் வாழ விழைந்தமையை அறிய இயலும்.

இலக்குவன் பின்பற்றிய அறநெறி

இராவணன் சீதையைக் கவர்ந்ததனால் இராமன் சீதையைக் காக்கும் திறனற்றவன் என்று ஊரார் தூற்றும் முன், என் உயிரைக் துறப்பது தான் நல்லது என்கிறான் இராமன். அதைக் கேட்ட இலக்குவன்,

என்தாய், 'உன்முன் ஏவிய யாவும் இசை, இன்னல்'
பின்றாது எய்தி, பேர் இசையாளற்கு அளிவு உண்டேல்,
பொன்றா முன்னம் பொன்றுதி' என்றாள்; உரை பொய்யா
நின்றால் அன்றோ வாய்மை நிலை அம்மா'?

(கவந்தன் படலம், ஆரண்ய காண்டம்)

எனும் பாடல்அடிகள், கானகம் ஏகும்போது என் தாயான சுமத்திரை என்னை நோக்கி, 'உன் தமையன் இடுகின்ற கட்டளைகள் அனைத்தையும் ஏற்று நட, அவ்வாறு நடப்பதால் எத்தனை துன்பங்கள் வந்தாலும் பின் வாங்காமல் ஏற்றுக்கொள்; இராமனுக்கு அழிவு ஏற்படும் என்று அறிந்தால், இராமனுக்கு முன் நீ உன் உயிரைத் துறந்துவிடு' என்றாள். என் அன்னையின் சொற்படி நடப்பதே நான் பின்பற்றும் அறநெறியாகும் என்பது அன்பு எனும் அறநெறியை விளக்கும்.

பாசத்தின் அறநெறி

இராமன் இலக்குவனிடம் கொண்ட பாசம், இராவணன் கும்பகர்ணன், வீடணனிடம் கொண்ட பாசம், இராமன் காட்டில் கங்கைக் கரையில் ஒரு தம்பியும், எழிலார் கிட்கிந்தை மலையில் ஒரு தம்பியும், இலங்கை வீடணனையும் தம் தம்பியாய் தன் தந்தை தசரதனுக்கும் அவர்களைப் புதல்வர்களாக்கிப் பார்த்து உலகுதழுவிய நாடாக அயோத்தி, ஆரண்யம், கிட்கிந்தை, இலங்கை எனப் பல பகுதிகளில் பாசத்தின் கொடியை உயர்த்திப் பிடித்தவன் இராமன்.

தசரதன் ஆட்சியில் அறநெறி

வாய்மையும் அறமும் காத்து நிற்கும் மன்னன் தசரதன். இவன் ஆட்சிக்காலத்தில் அறநெறியோடு ஆட்சி செய்து வந்தான். 'எல்லா உயிர்களுக்கும் நன்மையே புரிந்து வந்தேன்' எனச் சொல்லும் அளவிற்கு அவனது ஆட்சி விளங்கியதை,

கன்னியர்க்கு அமைவரும் கற்பின் மாநிலம்
தன்னை இத்தகைதரத் தருமம் கைதர
மன்னுயிர்க்கு உறுவதே செய்து வைகினேன்
என் உயிர்க்கு உறுவதும் செய்ய எண்ணினேன் (1327)

என்னும் பாடல் விளக்கும். தன் மாசற்ற பூமியில் தருமத்தை நிலை நிறுத்தி நீர்வளத்தாலும், நிலவளத்தாலும், பால் வளத்தாலும், பயிர்வளத்தாலும் எந்த குறைவும் ஏற்படாமல் கண்ணிமை போல் தன்நாட்டினை ஆட்சி புரிந்தான். 'கடமையினைச் செவ்வனே செய்தேன்' என்ற பெருமை தசரதனுக்கும் அவனை வழிநடத்திச் சென்ற அமைச்சர்களையும் சாரும். மேலும் மன்னன் என்பவன் தன் நாட்டில் வாழுகின்ற மக்களாகிய உயிர்களையும், செடி, கொடி, மரங்கள், தாவரங்கள் ஆகிய ஏனைய உயிர்களையும் கூறும் பொழுது -'மன்னுயிர் எல்லாம் தன் உயிர்' என

மன்னன் எண்ணியதை,

வயிரவான் பூண் அணி மடங்கல் மொய்ம்பினான்'
உயிர் எலாம் தன் உயிர் ஒக்க ஓம்பலால்,
செயிர் இலா உலகினில் சென்று, நின்று, வாழ்
உயிர் எலாம் உறைவது ஓர் உடம்பும் ஆயினான் (191)

என்னும் பாடல் விளக்கும். அரசர்க்கு இருக்க வேண்டிய அருங் குணங்களோடும் தருமத்தையே கவசமாக ஆட்சியினை அறநெறியோடு நடத்தி வந்ததினை இதன் வழி அறிய இயலும்.

கும்பகருணன் பின்பற்றிய அறநெறி

இலங்கை மன்னன் இராவணனின் தம்பி கும்பகருணன். இவன் தன் சகோதரன் செய்த செயலை மறுத்து,

ஆசு இல் பர தாரம்அவை அம் சிறை அடைப்பேம்
மாசு இல் புகழ் காதலுறுவேம்; வளமை கூரப்
பேசுவது மானம்; இடை பேணுவது காமம்
கூசுவது மானுடரை நன்று நம் கொற்றம் (6122)

என அறநெறியைப் பின்பற்றியவன். இதனை, குற்றமற்ற பிறருடைய மனைவியைச் சிறையில் வைப்பது நல்லரசுக்குரிய நடை முறையன்று, காமமும் மானமும் ஓரிடத்தில் இருத்தல் இயலாது' என்று கடிந்து கூறுவதன் வழி அறிய இயலும்.

இராம - இராவணப் போரில் அறநெறி

இலங்கை மன்னன் இராவணன் போர்க்களத்தில் ஆயுதங்களை இழந்து நின்றான். அதனால், இராமனோ மீண்டும் இராவணனுக்கு, படைதிரட்டிக் கொண்டு வர வாய்ப்பளிக்கிறான். இதனை,

ஆள்ஐயா உனக்கு அமைந்தன மாருதம் அறைந்த
பூளை ஆயின கண்டனை; இன்றுபோய், போர்க்கு
நாளை வா! என நல்கினன் - நாகு இளங் கமுகின்
வாளை தாவுறு கோசல நாடுடை வள்ளல் (7271)

என்னும் பாடல் விளக்கும். ஆயுதம் இல்லாத வெறுங்கையினனாக நிற்கும் உன்னை நான் கொல்ல மாட்டேன். காலம் கருத்து அடிப்படையில் 'இன்று போய், நாளை வா' என்று இராவணனுக்கு இராமன் கூறினான்.

இது போர்க்களத்தில் இராமன் பின்பற்றிய அறநெறியாகும்.

வாய்மை என்னும் தூய்மையின் அறநெறி

இராமனைக் கானகத்தில் சந்தித்து நாடாள வர வேண்டும் என்று அழைத்தான் பரதன். அதனைச் செவிமடுத்த இராமபிரான்,

வாய்மை என்னும் ஈது அன்றி வையகம்
தூய்மை என்றும் ஒன்று உண்மை சொல்லுமோ?
தீமைதான், அதின் தீர்தல் அன்றியே
ஆய் மெய்யாக; வேறு அறையல் ஆவதே?

எனக் கூறுவர். தாய் கைகேயி தந்தை தசரதனிடம் பெற்றுக்கொண்ட வரத்தின்படி பதினான்கு ஆண்டுகள் வன வாசம் மேற்கொள்வதுதான் முறை என்று எடுத்துரைத்தாள். எனவே பரதனே நாடாள வேண்டும் என்று இராமபிரான் பரதனுக்குச் சொல்லும் போது வாய்மை என்ற சிறந்த பண்பிற்கு இணையான வேறோர் அறம் இல்லை. வாய்மை-யிலிருந்து தவறுவதனால் தீமை தான் உண்டாகும். எனவே எந்தச் சூழ்நிலையிலும் வாய்மை என்னும் அறநெறியில் தவறுதல் கூடாது என்கிறார் இராமன்.

தனி மனித அறம், குடும்ப அறம், போரறம் என மனிதன் வாழ்வில் பின்பற்ற வேண்டிய அனைத்து அறநெறிகளையும் தன் நூலில் உரைத்து தமிழர்களின் வாழ்வியல் அறத்தை உரைத்த பெருமை கம்பனுக்குண்டு.

கம்பனில் வாழ்வியல் அறங்கள்

பேராசிரியர் **செ. கணேசமூர்த்தி**
தமிழ்த்துறை சுவாமி தயானந்தா கலை அறிவியல் கல்லூரி, மஞ்சக்குடி

பேருக்கு வாழ்வது வாழ்க்கை இல்லை உறவுக்காக பிறருக்காக வாழ்வதுதான் உயரிய வாழ்க்கையாகும். ஒழுக்கத்தோடும், நற்பண்பு களோடும் வாழ்வதுதான் சிறந்த வாழ்கையாகும். இத்தகைய வாழ்வியல் நெறியினை கம்பன் தன் இராம அவதாரத்தில் அழகுபட சித்தரித்துள்ளான். அவற்றில் தாய் தந்தையரை போற்றுதல் அவர் சொற்படி நடத்தல் தன் முன்னவரை போற்றுதல், ஆசானை வழிபடல், சகோதர உறவோடு வாழ்தல் ஆகிய வாழ்வியல் அறங்களை மட்டும் இக்கட்டுரை ஆய்கிறது.

தாய் தந்தையரை போற்றுதல்

தெய்வங்களுக்கு இணையாகப் போற்றி வணங்கத்தக்கவர்கள் தாய், தந்தை ஆகியோர் ஆவர். இதனைப் பல தமிழ் இலக்கியங்கள் வலியுறுத்துகின்றன. இருப்பினும் கம்பன் தன் இராமஅவதாரத்தில் தனக்கே உரிய நடையில் திறம்பட குறிப்பிட்டுள்ளார். தாயின் கட்டளைப்படி, காட்டிற்கு சென்ற இராமனைப் பரதன் வணங்கி நாட்டிற்கு வந்து அரசு ஆள வேண்டும் என்று கேட்டபோது பரதனே நான் கூறிய சிறந்த பெருமையுடைய குரவர்கள் தாயும், தந்தையுமே ஆவர். சிறப்பித்து கூற வேறு ஒருவருமில்லை என்பதை,

அந்த நல் பெருங் குரவர் ஆர்எனச்
சிந்தை தேர்வுறத் தெரிய நோக்கினால்
தந்தை தாயார் என்று இவர்கள் தாம் அலால்
எந்தை கூற வேறு எவரும் இல்லையால்! (2481)

என்ற பாடல் வழி கம்பர் குறிப்பிடுகிறார்

தாய் தந்தையரைப் போற்றி வணங்குவதோடு மட்டுமல்லாமல் அவர் களின் சொற்படி நடத்தலே சிறந்த பண்பாடாகும். சிறந்த அறமும் அதுவே.

தாயாகிய கைகேயி வரம் பெற்றுக் கொள்ளத் தந்தையாகிய தசரதன் கட்டளையாலே தாய்,தந்தையர் சொற்படி நடத்தல் என்கிற தம் குலத்திற்குரிய தருமத்தை மேற்கொண்டேன் என்று இராமன் பரதனிடம்

கூறுவதை,

தாய் வரம் கொள, தந்தை ஏவலால்
மேய நம் குலத் தருமம் மேவினேன் (2482)

என்ற பாடல்வரிகள் குறிப்பிடுகின்றன.

இவற்றிலிருந்து தாய்தந்தைசொற்படி நடப்பதும் அவர்களது சத்தியத்தை காப்பதும் வாழ்வியல் அறங்களில் ஒன்று என்பது புலனாகிறது.

மேலும் மகனாகப் பிறந்தவர்கள் புதல்வர் என்னும் சிறப்பினை பெறுவது தம் தாய் தந்தையை தாம்செய்யும் செயலால் நல்லதாகிய புகழை அடையச் செய்வதாகும். நீங்காத பழியை அல்ல என்ற கருத்தையும் கம்பராமயணம் 2483 பாடல் வலியுறுத்துகிறது.

தன் முன்னவரை வணங்குதல்

தாய் தந்தையரை மட்டும் அல்லாது தம்முன் பிறந்தோரையும் தாய் தந்தையருக்கு இணையாக போற்ற வேண்டும் வழிபடல் வேண்டும் என்பது சான்றோர்களின் கருத்தாகும். இதனை கம்பன் தம் காப்பியத்தில் திறன்பட விளக்கிச் செல்கிறான். இலக்குவன் இராமனை போற்றுகின்ற போது,

நல் தாதையும் நீ, தனிநாயகன் நீ, வயிற்றில் பெற்றாயும் நீயே (737)

எனக் குறிப்பிடுகின்றான். மட்டுமல்லாது பரதனும் இராமனைப் போற்றும்போது,

எந்தையும் யாயும் எம்பிரானும் எம்முனும்
அந்தம்இல் பெருங் குணத்து இராமன் - ஆதலால்
வந்தனை அவன்கழல் வைத்தபோது அலால்
சிந்தை வெங் கொடுங் துயர் தீர்கலாது என்றான் (பா.2159)

என்ற பாடலால் தாயாக தந்தையாக என் கடவுளாக, என் அண்ணனாக எல்லை இல்லாத பெருங்குணங்களை உடையவனாக விளங்குபவன் இராமனே ஆவான். அவனுடைய திருவடிகளை வணங்குதல் செய்த போது அல்லாமல் என் மனத்து மிகக் கொடிய துன்பம் நீங்காது என்று கூறுகின்றான். இவற்றிலிருந்து தம்முன்னோனை தாய், தந்தைக்கு இணையாகப் போற்ற வேண்டும், மதிக்கப்பட வேண்டும் என்ற நற்பண்பு வலியுறுத்தப்படுகிறது.

ஆசானைப் போற்றல்

தாய் தந்தையரைப் போற்றுவதைப் போன்று ஆசிரியனையும் போற்றி

வணங்க வேண்டும். அவர் சொல்வழி நடத்தல் வேண்டும் என்பது அறிஞர்களின் கருத்தாகும். கம்பன் பலஇடங்களில் வலியுறுத்தி உள்ளான். வசிட்டன் இராமனுக்கு அறிவுரை கூறுகின்றபோது குற்ற மற்ற கல்விகளைப் பக்குவப்பட இம்மை மறுமை இரண்டிலும் பயன் கொள்ளுமாறு அன்போடு கற்பித்துக் கொடுத்தல் ஆசிரியனே நன்மை தரும் இயல்பினைச் செய்த எல்லாரினும் மேன் படுவான் என்கிறார் இதனை.

இத இயல் இயற்றிய குரவர் யாரினும்
மத இயல் களிற்றானாய்! மறுகில் விஞ்சைகன்
பதவிய இருமையும் பயக்க, பண்பினால்
உதவிய ஒருவனே, உயரும் என்பரால் (பா.2497)

என்ற பாடல் சுட்டுகிறது. இவற்றிலிருந்து கற்பித்த ஆசிரியனையும் வணங்குதல் வேண்டும் அவர் சொற்கேட்டு நடத்தல் வேண்டும் என்று அறிவுறுத்தபடுகிறது.

சகோதர உறவோடு வாழ்தல்

'யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற புறநானூற்றுக் கணியன் பூங்குன்றனின் வரிகளுக்கு இணங்கத் தம்மை ஒத்த பிறரையும் தம் உடன் பிறப்புகளாக, உறவாக நினைக்க வேண்டும் என்ற உயரிய சிந்தனையைக் கம்பன் தம் பாத்திரப் படைப்புகளில் பதிவு செய்துள்ளான். நாட்டைவிட்டு காட்டிற்கு புறப்பட்ட இராமன் செல்லும் வழியால் குகன் என்ற வேட்டுவனைச் சந்திக்கின்றான் குகன் தன்மீது கொண்ட பக்தியினால் மெய்சிலிர்த்த இராமன்,

என்உயிர் அனையாய்நீ இளவல்உன் இளையான்இந்
நன்னுதலவள் நின்கேள் நளிர்கடல் நிலம்எல்லாம்
உன்னுடையது நான்உன்தொழில் உரிமையின் உள்ளேன் (பா.1994)

என்று குறிப்பிடுகின்றான். வேட்டுவ எனக் குகனைத் தன் உடன் பிறப்பாக ஏற்றுக் கொண்டதோடு தன்னுடைய உறவுகளுக்கும் நீ உறவு உடையவன் என்பது இராமனின் மனித நேயத்தை காட்டுகிறது.

அரக்கர் இன வீடணனையும், குரங்கினத் தலைவன் சுக்ரீவனையும் தன் சகோதரர்களாக போற்றுவது அவனது தெய்வீகத் தன்னையினைக் காட்டுவதாக விளங்குகிறது.

......வானிடை மண்ணில், நின்னைச்
செற்றவர் என்னைச் செற்றார் தீயரே எனினும், உன்னோடு

உற்றவர் எனக்கு உற்றார், உன் கிளை எனது என் காதல்
சுற்றம் உன் சுற்றம் நீ என் இன் உயிர்த் துணையவன் (3812)

என்ற பாடலின்மூலம் சுக்ரீவனிடம் இராமன் கொண்ட நட்பு புலனா கிறது. வீடணனிடம் இராமன் பேசும்போது.

குகனோடு ஐவர் ஆனோம் முன்பு, பின்குன்று சூழ்வான்
மகனொடும் அறுவர் ஆனோம் , எம்முடைஅன்பின் வந்த
அகன் அமர் காதல் ஐய நின்னோடு எழுவர் ஆனோம்

என்ற பாடல் வரிகளால் வீடணனை தன் உறவாக கொண்டுள்ளமையை அறிய முடிகிறது. இவற்றிலிருந்து தம்மை ஒத்த பிறரையும் சகோதரனாக ஏற்றுக் கொள்ளும் மனபக்குவம் ஒவ்வொருவருக்கும் வேண்டும் என்ற கருத்து வலியுறுத்தப்படுகிறது.

முடிவுரை

தாய் தந்தை முதலான பெரியோரைப் போற்றுதலும், அவர் சொல்படி வாழ்தலும் உயர்ந்தர வாழ்வியல் அறங்களாகும். அவற்றை மானிட வாழ்க்கையில் கடைபிடிக்க வேண்டியது தலையாய கடமையாகும். வாழ்வியலை கற்க கம்பனை கற்போம் கம்பனின் இராம அவதாரத்தை கற்போம்.

வாழ்வியல் அறமுரைத்த கம்பன்

முனைவர் **இரா.கீதா**
உதவிப் பேராசிரியர், இராமசாமி தமிழ்க் கல்லூரி, காரைக்குடி.

மனிதவாழ்வு ஒரு கலை. அறமும், நீதியும், அன்பும், நடுவுநிலைத் தன்மையும், அரசியலும் மனிதவாழ்வினைச் செம்மைப்படுத்தும் பண்புகள். பொதுவாகத் தமிழ்மொழியில் உள்ள பல நூல்கள் அறத்தினை அடிப்படையாகக் கொண்டே எழுந்துள்ள கம்பநாடன் காப்பியத்திலும் வாழ்க்கைக்குத் தேவையான அறங்கள் பல பேசப்படுகின்றன.

நீதியறம்

இராமகாவியத்தில் நீதியினை வெளிப்படுத்தியிருக்கும் விதத்தில் கம்பனாரின் அறிவு நுட்பம் பளிச்சிடுகின்றது. 'நீதி' என்பது நியாயம், முறைமை, மெய்ம்மை என்று அகராதிப் பொருள் கூறுகின்றது. இதனடிப்படையில் கம்பன் தனது காப்பியத்தில் புலப்படுத்தியிருக்கும் நீதியறம் பற்றிய நுணுக்கம் நம் சிந்தனையை நெகிழ வைக்கின்றது.

இராமன் வாலியை மறைந்திருந்து அம்பு எய்தித் தாக்கிக் கொன்றது அறம் ஆகுமோ? என்ற கேள்விக்குக் கம்பர் சிறந்ததொரு சட்ட நுட்பத்தினை எடுத்துரைக்கின்றார். தமது காப்பியத்தில் வாலி கேட்கும் கேள்விக்கு இராமன் விடையளித்து விட்டாலும் கம்பர் தன் சட்ட நுட்பத்தால் வாலியின் பக்கமே நிற்பது தெளிவுறுகின்றது.

இராமன் வாலியைக் கொன்றதற்குக் காரணம் கூறுகின்றான். விலங்கினத்தில் பிறந்தாலும் இது உயர்ந்த செயல், இது தாழ்ந்த செயல் என்று பகுத்தாராயத் தெரிந்தால் விலங்காக இருந்தாலும் தெய்வமாகப் போற்றப்படுவர் என்கிறான். இதனை,

நலங்கொள் தேவரின் தோன்றி நவையறக்
கலங்கலா அறநன்னெறி காண்டலின்
விலங்கலாமை விளங்கிய தாகலின்
அலங்க லார்க்கி தடுப்பதன் றாமரோ (107)

என்னும் பாடல் விளக்கும்.

இப்பதில் வாலியைத் திகைக்க வைக்கின்றது. அங்ஙனம் தன்னை மனிதன் என்றுகொண்டால் ஓர் விலங்கினைப்போல மறைந்து

நின்று அம்பு எய்து கொன்றது என்ன நியதி? என்று கேட்கின்றான். வாலியின் அந்தக் கேள்விக்கு இராமனிடம் பதில் இல்லை. வாலியின் இக்கேள்வி நீதியறம் பற்றியச் சிந்தனையை ஏற்படுத்துகின்றது. எப்படிப்பட்ட உயர்ந்தவராக இருந்தாலும் நீதியின் முன் சமமாகக் கருதப்படவேண்டியவரே ஆவர் என்ற கொள்கைக்கு இணங்க இராமனே ஆனாலும் மறைந்திருந்து - அம்பு எய்த செயல் சரிதானா? என்று கேட்கும் வாலியின் திறம் சிந்தித்து நோக்கத்தக்கது. இங்கு நம் தமிழ்ச் சமுதாயத்தில் நீதியின் முன் அனைவரும் சமம் என்பதை கம்பராமாயணம் உணர்த்துவதை அறியமுடிகின்றது.

அன்பு

அன்பு என்ற சொல்லைப் பற்று, பாசம், அருள், காதல், நட்பு, பக்தி, கருணை, நேயம் எனப் பல சொற்களில் வழங்கலாம். தமிழ்ப் பேரகராதி 'நேயம்', நேசம் என்னும் சொற்களுக்கு அன்பு என்று பொருள் தருகின்றது." (தமிழ்ப் பேரகராதி, சென்னை பல்கலைக் கழகத் தமிழ் லெக்சிகன் ப.2353)

தூய்மையான அன்பினை மனதில் கொண்டவர்கள் தாம் அன்பு கொண்டிருப்பவரிடத்தில் எந்தப் பயனையும் எதிர்பார்ப்பதில்லை. அவர்களின் உடல், பொருள், ஆவி அனைத்தும் அன்பு வடிவமாகும். சிவபெருமான் மீது கண்ணப்பநாயனார் கொண்ட அன்பு அத்தகையது. அவ்வன்பினைப் போலவே இராமன் மீது குகன் கொண்ட அன்புமாகும்.

குகன் வேடன்; ஞானிகள் முனிவர்கள் என்ற எவருடனும் பழகாதவன்; இராமனைக் காண வந்துள்ள முனிவர் கூட்டம் தாம் வீடுபேறு அடைய வேண்டும். இராமனிடத்தில் சேர்ந்தால் அது நடக்கும் என்ற எதிர்பார்ப்பும் இல்லை. இராமனுக்காக ஒரு கலையத்தில் தேனையும் மீனையும் கொண்டு வருகின்றான். அவன் வந்துள்ளதை இலக்குவன் இராமனிடம் கூறும்பொழுது,

கொற்றவ, நின்னைக் காணக் குறுகினன், நிமிர்ந்த கூட்டச்
சுற்றமும், தானும், உள்ளம் தூயவன், தாயின் நல்லான் (11)

என்கிறான்.

இக்கூற்றின் மூலம் குகனின் அன்பு நிலை தெளிவுறுகின்றது. இங்கு இலக்குவன். உள்ளம் தூயவன்; தாயின் நல்லவன் என்பன குகனுக்கு இலக்குவன் தரும் அடைமொழிகள். ஒரு தாயின் அன்பு எத்தகையத்

தூய்மை வாய்ந்ததாக அமைகின்றதோ அத்தகைய தூய்மை வாய்ந்தது குகனின் அன்பு. அன்பை மட்டுமே பயனாகக் கொண்டவன் குகன். வேறு எந்தப் பயனையும் அவன் விரும்பவில்லை. அதனாலே இராமபிரான் குகனை ஏற்றுக் கொள்கின்றார். இங்கு எதையும் எதிர்பாராமல் செலுத்தும் அன்பே மனிதகுலம் ஒன்றுபட உதவும் என்பதைக் கம்பராமாயணம் உணர்த்துகின்றது. ஒவ்வொரு மனிதனுக்கும் அன்பு என்பது உயிரோடு ஒன்றியதாகும் என்பதனைத் திருவள்ளுவர்.

அன்பில் வழியது உயிர்நிலை அஃதிலார்க்கு
என்புதோல் போர்த்த உடம்பு (80)

என்கிறார். இத்தகைய அன்பு மனித வாழ்வை இன்பமாக்குகின்றது. உண்மையான அன்பு நெறியினை உலகினுக்கு உணர்த்த இராமபிரான் குகனோடு அன்பு கொண்டான் என்பதைக் கம்பர் தனது கதைக் காப்பியத்தின் வழிப் புலப்படுத்துயுள்ளார்.

நடுவுநிலைமை

மகிழ்ச்சியும் துன்பமும் வாழ்க்கையில் மாறிமாறி வருவதாகும். எந்நிலையிலும் நடுவு நிலைமை தவறாது நிற்பவர் சான்றோர். அச் சான்றாமையானது உயர்பண்பு உடையவரிடத்து நிலைபெறுகின்றது. உயர்ந்தோர் கண்ட அறங்களில் நடுவுநிலைமை சிறந்த அறமாகக் கொள்ளப்படுகின்றது.

தகுதி எனவொன்று நன்றே பகுதியாற்
பாற்பட்டு ஒழுகல் பெறின் (111)

இதில் நண்பர், பகைவர், அயலார் என எவரிடத்தும் நடுவுநிலையோடு நடப்பதே ஒருவனுக்குப் பெரும் அறமாய் மதிக்கப்படும் என்கிறார். திருவள்ளுவர். இந்த நடுவுநிலைமைப் பண்பு இராம அவதாரத்தில் சிறப்பாக பேசப்படுகின்றது.

இராமன் உலகத்தினை நடுவுநிலையுடன் நோக்கக் கூடியவன். அனைத்து உயிர்களிடத்தும் அன்பு கொண்டவன் குரங்கினத்தவரையும். அரக்கரையும்கூடச் சகோதரர்களாக ஏற்றுக் கொண்டவன். தனக்குத் துன்பம் தருபவரையும் இன்முகத்தோடு நோக்ககூடிய அவதார நாயகன். கைகேயி இராமனிடம், உலகனைத்தையும் பரதன் ஆள, நீ சடைமுடி தரித்துத் தவவேடம் பூண்டு, காட்டை அடைந்து. புண்ணிய நதிகளில் நீராடி பதினான்கு ஆண்டுகள் கழிந்து திரும்பி வருக ! என்று

அரசன் ஆணையிட்டான் என்றாள். இக்கூற்றினைக் கேட்ட இராமன் முகம் சற்றும் அதிரவில்லை. மாறாக கேட்ட பின்பும் வருத்தமடையாத முகத்தினை அவதார நாயகன் இராமனிடத்தில் மட்டுமே காணமுடியும். கம்பர் இக்காட்சியினை அற்புதமாகப் புனைந்துள்ளார்.

இராமனின் திருமுகத்தினை மிகச்சிறந்த முறையில் ஒப்புமை செய்துள்ளார் கம்பர். சடைமுடி தரித்துப் பதினான்கு ஆண்டுகள் காடுசெல்ல வேண்டும் என்று கேட்டவுடன் சுருங்கவேண்டிய முகம் அப்பொழுதே மலர்ந்த செந்தாமரையினை வெல்லும் அளவிற்கு மலர்ந்தது. என்ற கவிஞரின் கற்பனைத் திறன் விந்தையிலும் விந்தை. இராமனின் இப்பண்பு, உலகில் மனிதன் தன் வாழ்வில் ஏற்றத்தாழ்வுகள் வரும்பொழுது நடுவுநிலைமையுடன் இருந்து வாழ்வதோ சிறந்த வாழ்வியலறம் என்பதைப் புலப்படுத்துகின்றது..

அரசியலறம்

"தமிழில் அரசியல் என்பது அறம், பொருள், இன்பம் என்ற உறுதிப் பொருள்கள் மூன்றனுள் பொருளின் பகுதியாகக் கூறப்படுகின்றது. திருக்குறள் பொருட்பாலுக்கு எழுதிய முன்னுரையில் அரசியலை அரசநீதி என்று பரிமேலழகர் குறிக்கிறார். அதற்குக் 'காவலை நடத்தும் முறைமை' என்று அவர் விளக்கம் தருகிறார்"

இராமாயணக்கதை, பெரிதும் அரசியல் நிகழ்ச்சிகளையே ஆதார மாகக் கொண்டிருக்கின்றது. அரசாட்சி புரியும் மன்னவன் எந்த நிலை யிலும் தனது அரசியல் அறத்தினின்று வழுவாதிருக்க வேண்டும் என்பது அரசஅறம் பற்றிய நுட்பமான கருத்து கம்பனின் காவியத்தில் வெளிப்படுகின்றது. இதில் தயரதன் இராமன் மீது கொண்ட பாசத்தின் காரணமாக அரச நீதியினை மறந்து சற்றுத் தடுமாறுகின்றான். கைகேகி இரு வரங்கள் கேட்டபொழுது இராமன் தன்னைவிட்டுக் காட்டிற்குச் செல்லப்போகின்றானே என்ற கவலை மேலோங்குகின்றது. கைகேயிக்கு அளித்த வாக்கினைக் காப்பாற்ற வேண்டும் என்று நினைத்த தயரதன். இராமனுக்கு முடிசூட்டுவதாக அமைச்சரவையின் இசைவோடு முடிவெடுத்து வாக்களித்தது பற்றிச் சிந்திக்கவில்லை. ஆனால், மக்கள் அதனைக் கேட்கின்றனர்.

என்னே, நிருபன் இயற்கை இருந்தவா!
தன்னேர் இலாத தலைமகற்குத் தாரணியை

முன்னே கொடுத்து, முறை திறம்பத் தம்பிக்குப்
பின்னே கொடுத்தால் பிழையாதோ மெய்? (.1713)

என்று மக்கள் கேட்பதாகக் கம்பர் கூறுகின்றார். மக்களுக்குப் புரிந்த இச்சிக்கல் மன்னனுக்கு புரியவில்லை. மன்னன் அந்நிலையில் எப்படியாவது இராமன் தன்னைவிட்டுப் பிரியக்கூடாது என்ற எண்ணத்தை மட்டுமே கருத்தில் கொண்டவனாக இருந்தான். மேலும் மூத்தவனுக்கு முடிசூடும் உரிமை என்பது மன்னராட்சியின் மரபு. மன்னன் இந்த மரபைக் காக்கும் உரிமை உடையவன். இம்மரபினை மாற்ற மன்னனுக்கு உரிமை இல்லை. இதனை மறந்தவனாகின்றான் தயரதன். மேலும் இராமனைக் காட்டிற்கு அனுப்பும் வரம். ஒருவனைக் காட்டிற்கு அனுப்புவது என்பது நாடுகடத்துதற்குச் சமம் ஆகும். பொதுவாக அரசரோகம் செய்தவர்களையே நாடு கடத்துவர். எந்தக் குற்றமும் செய்யாத இராமனை நாடுகடத்துவது எந்த விதத்தில் நியாயம்? இக்கேள்வி கோசலை ஒருத்தியிடம் மட்டுமே எழுகின்றது.

அன்பு இழைத்த மனத்து அரசற்கு நீ என் பிழைத்தனை? (1617)

எனக் கேட்கின்றாள் கோசலை. இராமன்மீது கொண்ட மிகுந்த பாசத்தால் அரசியல் அறத்தினின்று பிறழ்கின்றான். ஒருமன்னன் எந் நிலையிலும் அரச நீதியிலிருந்து தவறாதிருக்கவேண்டும் என்பதனை வெளிப்படுத்தும் விதத்தில் இராம காப்பியம் அமைந்திருக்கின்றது. இதனை கைகேயின் கூற்று மெய்ப்பிக்கின்றது. நீ என்ன பிழை செய்தாய்? என்ற கேள்வி இராமன் காட்டிற்குச் செல்லுவது நியாமில்லை என்பதைப் புலப்படுத்துகின்றது. எனவே மன்னன் எந்நிலையிலும் அரச நீதியிலிருந்து தவறாமல் இருத்தலே அவன் கொண்டிருக்கும் சிறந்த அரசியலறமாக அமையும் கம்பன் காவியம் இதனை வெளிப்படுத்துகின்றது.

முடிவுரை

கம்பரின் இம்மகா காப்பியத்தில் நீதியறம், அன்பு நடுவுநிலைமை, அரசியலறம் போன்ற அறங்கள் பல பரந்து விரிந்து கிடக்கின்றன. இவ்வறங்கள் யாவும் மக்களை வளப்படுத்தும் போக்காக அமைகின்ற. இராமயணம் உணர்த்தும் வாழ்வியல் அறங்கள் குடிமக்களை நற்குடி மக்களாக உயர்த்தும் கருவிகளாகும். இத்தகைய கருவிகளைத் தகுந்த முறையில் பயன்படுத்தித் தனது காப்பியத்தைத் நம் பண்பாட்டிற்கிணங்க முறைப்படுத்தியுள்ளார் கம்பர்.

கம்பனில் துறவற வாழ்வியல்

கி. சியாமளா
முனைவர் பட்ட ஆய்வாளர், அ.வீ.வா.நி. புட்பம் கல்லூரி, பூண்டி, தஞ்சாவூர்.

மனித வாழ்வின் இரண்டு கண்களாக விளங்குவது, இல்லறநெறி மற்றொன்று துறவறநெறி. இவற்றில் இல்லறத்திலிருந்து பின் துறவறம் பூண்டவரும், துறவறத்திலிருந்து இல்லற வாழ்வு மேற்கொண்டவரும் உண்டு. கம்பர் இவ்விரு வகையினரைப் பற்றியும் கூறியுள்ளார். ஒரு மனிதனின் வாழ்வானது உற்றவருக்கும் உலகத்தாருக்கும் பயன்படும் வகையில் அமைய வேண்டும். சாதாரண மனிதனுக்கும் அவனே அரசனானால், அவருடைய வாழ்விற்கும் சில வேறுபாடுகள் காணப் படுகின்றது. ஆனால், ஒரு தனி மனிதனோ, அரசனோ துறவு மற்றும் தவத்தின் மகிமை யறிந்து முனிவனானால் அவருடைய வாழ்வியலே மாறுபடுகின்றது. கம்பர் இருபதிற்கும் மேற்பட்ட முனிவர்களைப் பற்றிக் குறிப்பிடுகின்றார். இதிலிருந்து கம்பர், முனிவர்களின் துறவறம், தவம் பற்றிய சிறந்த கருத்தி னையுடையவர் என்பது விளங்கும். அவ்வகையில் முனிவர்கள் பற்றிய பல வாழ்வியல் செய்திகள் காணப்படினும் அவர்களே துறவறம், தவம் பற்றியும் உணவு, உடை, உறைவிடம் பற்றியும் இக்கட்டுரையில் காணலாம்.

துறவறம்

முனிவர்கள் நாட்டில் வாழும் வாய்ப்பிருந்தும்கூட காடுகளில் வாழ்ந் தவர்கள். "புறமாகிய செல்வத்தின் கண்ணும், அகமாகிய யாக்கையின் கண்ணும் உளதாகிய பற்றினை நிலையாமை காரணத்தினால் விடுதலை துறவு" எனப் பரிமேலழகர் கூறுகின்றார்.

துறவு நிலையில் நிற்போகும், துறவு நிலைக்குச் செல்வோரும் பேணக்கூடிய அறமே துறவறமாகும். மானுடராகப் பிறந்து, வாழ்ந்து பின் தெய்வத் தன்மையுடன் பற்றுகளை ஒழித்து, தவநிலையில் வாழும் முனிவர்கள் சொன்னது பலிக்கும் தவவலிமை உடையவர்கள். தாடகை வசித்த பாலைநில வருணனையின்போது கம்பர்,

தாவரும் இருவினை செற்றுத் தள்ளரும்
மூவகைப் பகையரண் கடந்த முத்தியில்
போவது புரிபவர் மனமும் போல (15:1-3)

துன்பம் வருவதற்கு காரணமாகிய நல்வினை, தீவினை என்ற இருவினைகளையும் உண்டாக்குகின்ற காமம், வெகுளி, மயக்கம் ஆகிய மூவகையான குற்றங்களை ஒழித்து மேன்மையுறும் முனிவர்களின் மனம் போல, பாலையானது ஈரப்பசையின்றி காட்சி தந்ததாக கூறுகின்றார். இதிலிருந்து முனிவர்கள் செல்வம், இளமை, யாக்கை நிலையற்றது என்பதனால் பற்றற்றவராக விளங்கினார் என்பது புலனாகும்.

தசரதன் வீடுபேற்றைப் பெறவிரும்பி துறவு மேற்கொள்வதன் அவசியம் பற்றி இராமனிடம் தெரிவிக்கையில்,

ஐந்தொடு ஆகிய முப்பகை மருங்கற அகற்றி (.66:3)

என்பதனால், ஐம்புல ஆசைகளையும், முப்பகையையும் அடியோடு அகற்றினாலொழிய துறவுபூண்டு முத்தி பெறல் இயலாது என்பது தெளிவாகிறது.

தவம்

குற்றமற்ற நோன்புகளை செய்யக்கூடியவர்கள் தவத்தில் சிறந்த முனிவர்கள். அவர்கள் 'மனம் பொறி வழி போகாது,' நிற்கும் பொருட்டு விரதங்களால் உண்டி சுருக்கலும், கோடைக்கண் வெயிலில் நிற்றலும், மாரியிலும் பனியிலும் நீர்நிலையில் நிற்றலும் முதலிய செயல்களால் தம் உயிருக்கு வரும் துன்பங்களைப் பொறுத்து பிற உயிர்களை ஓம்புதலே தவமெனப் பரிமேலழகர் குறிப்பிடுகின்றார். அதனை வள்ளுவர்,

வேண்டிய வேண்டியாங்கு எய்தலால் செய்தவம்
ஈண்டு முயலப்படும் (குறள்.265)

முயன்று செய்யப்படும் தவத்தினால் வேண்டியவற்றை வேண்டியவா றே பெறமுடியும் என்கிறார்.

பெருந்தவன், மாதவன், அருந்தவன் எனத் தவத்தால் சிறப்புப்பெற்ற முனிவர்களும், அரசராயிருந்து தவத்தின் ஆற்றலை உணர்ந்து தவமியற்ற முற்பட்ட கௌசிகரது தவமுயற்சி, முயற்சியின் உச்சத் தைக் காட்டும். கௌசிகர் கிழக்கு, தெற்கு, மேற்கு என்ற மூன்று தி சைகளிலும் சென்று மேற்கொண்ட பெருந்தவமானது காமம், கோபம், கருணை முதலியவற்றால் பாழ்பட்டாலும், தன் முயற்சியால், தவத்தால் தரத்தில் உயர்ந்தவர். பின் வடதிசை நோக்கி கடுந்தவம் புரிந்து தவ முதிர்ச்சியால் ஏனைய முனிவர்களாலும், தேவர்களாலும்

பிரமரிஷியெனப் போற்றப்பட்டு, உலக உயிர்களின் நன்மையிலேயே தம் நாட்டத்தைச் செலுத்தி விசுவாமித்திரர் என்றழைக்கப்பட்டார்.

பாதி மாமதி சூடியும் பைந்தமிழாய்ச்
சோதி யானுமத் தூய்மல ராளியும்
தேவ பாரகர் வேறிலர் நீயலான்
மாத போதன வென்ன வழங்கினர் (135)

மேலும், கம்பர், சேர்த்து வைக்க விரும்புவர்கள் தவத்தைச் செய்து புண்ணிய பலனைச் சேர்க்க வேண்டும்; தவமல்லாத செல்வம் அவமாய் முடியும் என்கிறார்.

ஈட்டுவார் தவமலால் மற்று ஈட்டினால் இயைவதின்மை (104)

இராமன் வாயிலாக, தவமென்பது பற்றி கம்பர்,

மனைக்கு அரும்புதல்வனை என்றன் மன்னவன்
தனக்கு அருந்தவம் அது தலைக்கொண்டு ஏகுதல்
எனக்கு அருந்தவம் (32:2-4)

என்கிறார். வாய்மை தவறாதிருத்தலும், தந்தை சொற்படி நடத்தலுமே சிறந்த தவம் என்கிறார்.

'நனி மாதவமுடையாய்' எனக் கம்பரால் போற்றப்படும் காசியப முனிவரின் மனைவி, திதி, மூவுலகையும் வெல்லவல்ல புதல்வனைப் பெறும்பொருட்டுத் தவம்செய்ய அனுமதி கேட்டாள். அதற்கு காசியபர் முனிவர்,

சென்று பாரிடைப் பருவமோ ராயிரந்தீர
நின்று மாதவம் புரிதியே னினைவு முற்றுதியென்று
அன்று கூறிடப் புரிந்தன னருத்தவ மனையாள் (28:2-4)

கூறினார். இதிலிருந்து முனிவர்களின் மனைவிகளும் தவவாழ்க்கையை மேற்கொண்டார் என்பது தெளிவாகிறது.

உணவு, உடை, உறைவிடம்

முனிவர்கள் காய், இலை தின்றும், கானிலுறைந்தும், தீயிடை நின்றும் ஐம்புலவாசையை ஆசறவறுத்து உடலை உலர்த்தி முற்றுந்துறந்தவர்கள். தண்டகாருணியத்தில்,

பண்டைய வயன்றரு பால கில்லரும்
முண்டரு மோனரு முதலினோர் களத்
தண்டக வனத்துறை தவத்துளோர் (3:1-3)

பழமையாகிய பிரமதேவன் பெற்றருளிய வாலகில்லியரும், மழித்த தலையையுடைவர்களும், மௌனவிரதமுடையவர்களும் இருந்ததாகக் கூறுகின்றார் கம்பர். மேலும்,

காயுங் கானிற் கிழங்குங் கணிகளும்
தூய தேடிக் கொணர்ந்தனர் ('15:1-2)

என்பதிலிருந்து அவர்கள் இயற்கையில் கிடைக்கும் காய்கள், கனிகள், கிழங்குகள் இவற்றினை உணவாக உடையவர்கள் என்பது புலனாகும்.

முனிவர்கள் காவியுடை உடுத்தவராகவும், மரவுரி உடுத்தியவராகவும் தவத்தினை மேற்கொண்டவர்களாவார்கள்.

திருமுருகாற்றுப்படையில் நக்கீரர், முனிவர்கள் மரவுரியை உடுத்தவராகவும், நரைமுடியை உடையவரும், அழுக்கற்ற திருமேனியுடையவரும், மானின் தோலினைப் போர்த்தவராகவும் நோன்பாலே தசைகெட்ட மார்பினை உடையவராகவும், பலநாட்களுக்கு ஒருமுறை உண்ணும் இயல்புடையவராகவும் விளங்கியதாகக் கூறுகின்றார் (முருகு.126-137).

இவ்வகையில் கம்பர், முனிவர்களின் வாழ்வியலான துறவறம் பற்றிக் குறிப்பிகின்றார். வாழ்வில் தவத்தின் இன்றியமையாமையைப் புலப்படுத்துகின்றார். முனிவர்களில் உணவு, உடை, உறைவிடம் பற்றியும் குறிப்பிடுகின்றார். மேலும், முனிவர்கள் தவத்தினால் பல ஆற்றல்களைக் கொண்டு விளங்குவதாகவும், வரமும், சாபமும் அளிக்கக்கூடிய வல்லமையுடையவராகவும், ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், தவஞ்செய்தல் முதலிய செய்கைகளை உடையவராவும், புதுமையான உலகையே படைக்கக்கூடிய ஆற்றலுடையவர்களாகவும் விளங்கினர் என்பது கம்பர் மூலம் நமக்கு கிடைக்கும் உண்மையாகும்.

கம்பர் காட்டும் நட்பு

கு.கார்த்திகா

முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்முதுகலை மற்றும் ஆய்வுத்துறை,
தூய நெஞ்சக் கல்லூரி, திருப்பத்தூர், வே.மா.

உலகில்வாழும் உயிரினங்கள் ஏதோ காரணங்களை அடிப்படையாகக் கொண்டு ஒன்றையொன்று சார்ந்து வாழ்கின்றன. நட்பு மனிதர்களுக்கு மட்டும் ஏற்படுவதில்லை. விலங்குகள் மற்றும் உயிரினங்கள் இடையேயும் ஏற்படுகின்றன. ஒத்த பருவம், அறிவு, நிலை, குணம் முதலியன மக்கள் இருவர் ஒருவரை ஒருவர் நெருக்கமாகப் பழக வாய்ப்பு ஏற்படும்போது தான் அவர்களின் நட்பு அன்பு என்னும் உயர்வு பெற்று பண்பாடு எழுகின்றது. நட்பு என்பது சமூக உறவைச் சார்ந்தவையாகும். ஒரு சமுதாயத்தில் மக்கள் வாழும் சூழ்நிலை, அவர்களின் தன்மைக்கு ஏற்ப அவை மாறும். நெருக்கம், செறிவு, குறிக்கோள், உறவுமுறை ஆகியவற்றின் அடிப்படையில் நட்புத் தோன்றும். இலக்கியங்கள் மற்றும் புராணங்கள் போன்றவையும் நட்டைப் பற்றிக் கூறுகின்றன. கம்பர் நட்பின் தேவையும், அதன் ஆழத்தையும் அவர்கள் ஏற்படுத்திக் கொள்ளும் சூழ்நிலையும் கம்பராமாயணத்தில் கூறியுள்ளார். அந்த வகையில் கம்பர் காட்டும் நட்பு என்னும் தலைப்பில் ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கம் ஆகும்.

நட்பு என்னும் சொல்

தமிழிலக்கியங்களில் நட்பு என்னும் சொல்லிற்கு பல சொற்கள் வருகின்றன. நட்டோர் (அகம்.279) நட்டார் (கம்ப.4237) நட்பன் (கம்ப.270) என்ற சொற்கள் நண்பரைக் குறிக்கின்றன. 'நண்' என்ற சொல்லின் அடியாகப் பிறந்த சொற்களே மிகுதி. நண்பினன் (புறம்.216) நண்மையன் (புறம்.380) நண்பன் (கம்ப.4344) நண்பினோர் (கம்ப.857) என்ற சொற்களில் வருகின்றன.

நட்பின் இலக்கணம்

புணர்ச்சி பழகுதல் வேண்டா உணர்ச்சிதான்
நட்பாங் கிழமை தரும் (785)

என்று நட்பின் இலக்கணமாக வள்ளுவர் கூறுவதை அறியலாம். நட்புச்செய்வதற்கு ஒருவரோடு ஒருவர் கலந்து பேசிப் பழகுதல் வேண்டியதில்லை. இருவரிடம் உள்ள ஒத்தஉணர்ச்சி நட்பைத் தந்து விடும் என்கிறார் வள்ளுவர். நாலடியாரில் 216 பாடலில் நட்பிற்கான இலக்கணத்தைக் குறிப்பிட்டுள்ளார். தலையாயார் நட்பு, இடையாயார் நட்பு, கடையாயர் நட்பு என நட்பின் மூன்று கூறுகளை விளக்குகிறது. நட்பு முறையில் கடை, இடை, தலைமக்களுக்கு முறையே கமுகு, தெங்கு, பனை உவமைப்படுத்தியுள்ளார். பனை மரத்திற்குத் அவற்றிற்கு தண்ணீர் ஊற்றுவதில்லை. அதுபோலவே நண்பன் எந்தவிதமான பணி விடைகள் செய்யாமல் இருந்தால் குறிப்பறிந்து அவனுக்கு உதவி செய்தலே தலையாயர் நட்பு ஆகும்.

இடையார் நட்புக்கு தெங்கு உவமை கூறியுள்ளார். தெங்கிற்குத் தண்ணீர் தேவைப்படுகிறது. தம் நண்பரிடமிருந்து இடையிடையே உதவிகளை எதிர்பார்ப்பவர் நட்பு இடையாயர் நட்பாம். கடையாயர் நட்பு கமுகுக்கு தண்ணீர் பாய்ச்சிக் கொண்டேயிருக்க வேண்டும். அது போல நண்பனுக்கு பல நலன்களைச் செய்து கொண்டே இருக்க வேண்டும். இல்லாவிடில் நட்பு முறிந்துவிடும் என்று நட்பிற்கு இலக்கணம் வகுத்துள்ளனர் புலவர்கள்.

நட்பு என்னும் பண்பு இரு ஆண்களிடையிலோ, இரு பெண்களிடை-யிலோ அல்லது ஆண், பெண் இடையிலோ அன்றி பலரிடையிலோ நட்பு என்னும் உறவு வளரும் தன்மையுடையது. அன்பின் முதிர்ச்சியின் காரணமாகவே நட்பு தோன்றுகிறது எனலாம்.

நண்பர்களின் குணங்கள்

சாதல், பொருள் கொடுத்தல், இன்சொல், புணர்வு உவத்தல் போன்றவை நண்பர்களின் குணங்களாகக் குறிப்பிடுள்ளனர்.

நோதல் பிரிவில் கவறலே ஓதலின்
அன்புடையார்க்கு உள்ளன ஆறுகுணம் ஆக
மென்புடையார் வைத்தார் விரித்து (ஏலாதி - 68)

நண்பன் இறந்தவுடன் தாமும் இறத்தலும், நண்பர்களுக்குப் பொருள் கொடுத்தலும் இனிய சொற்களைப் பேசிக் கூடிஇருத்தலும் அவர் வருத்தம் அடையும்போது தானும் வருந்தி அவர்களின் பிரிவால் வருந்தி இருத்தலும் ஆகிய இவ்வகைக் குணம் உடையவர்களே

சிறந்த நண்பர்கள் என்று புலவர் கூறுவர்.

நட்பின் இன்றியமையாமை

வாழ்க்கை வளம்பெறத் தேவையானவற்றில் நட்பு இன்றியமை யாததாகும். நல்லோர் நட்பு ஒருவனுக்கு இன்பம் அளிக்கும். ஒன்றுபட்ட உணர்வுடையார் இருவர் தம்முள் வேறுபாடின்றிக் கலந்து பழகி இன்ப துன்பங்களில் பங்கு கொண்டு வாழும் அன்பு உணர்ச்சியே நட்பாகும். பெற்றோர் குழந்தையிடம் செலுத்தும் 'அன்பு' 'பற்று' 'பாசம்' எனப் பெறும். கணவன் மனைவியரிடையே தோன்றும் அன்பு 'காதல்' எனப் பெறும். குருவினிடத்தும் இறைவனிடத்தும் செலுத்தும் அன்பு 'பக்தி' எனப் பெயர் பெறும். இவ்வகையில் ஒத்த அன்புடையார் இருவர் தம்முள் பரிமாறிக் கொள்ளும் அன்பே நட்பு என்றழைக்கப்பெறும். வேற்றுமையின்றிக் கலந்து இருவர் கொள்ளும் நட்பினால் விளையும் நன்மைகள் அளவிடற்குரியனவாகும். நட்பு துன்பத்தைப் பாதியாகக் குறைக்கும். இன்பத்தைப் பன்மடங்காகப் பெருக்கும். ஒருவனுக்கு வாழ்விலும் தாழ்விலும் பங்கு கொண்டு அவனுக்கு உற்ற துணையாக உதவுபவர் நண்பரைத் தவிர வேறு எவரும் இல்;லை.

நட்பின் அடையாளம்

காவிய நாயகன் இராமன் குகனிடமும், சுக்கிரீவனிடமும், வீடணனி டமும் கொண்டிருந்த நட்பின் பரிணாமம் கொஞ்சம் மாறுபட்டது. இவர்கள் மூவரையும் நண்பர்களாக ஏற்றுக்கொண்டு அவர்களைத் தனது சகோதரர் நிலைக்கு உயர்த்துகிறான். குகன் வேட்டுவன், சுக்கிரீவன் குரங்கினம், வீடணன் அரக்க இனம் இருப்பினும் மூவரையும் நட்புக்கு மேல் உடன் பிறப்பாக ஏற்றுக் கொள்ளும் இராமனின் மன உயர்வை கம்பர் அழகாக எடுத்துக்காட்டியிருக்கிறார். இராமன் தனது நான்காவது தம்பியாக குகனை ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதனால் ஏற்றம் பெற்று சிறந்த வீரனாக திகழும் குகனைப் பார்த்து இராமன் கூறுகையில்,

யாதினும் இனிய நண்ப! ஈண்டு எம்மொடு என்றான் (670(9)

என்ற வரிகளின் மூலம் நட்பை வெளிப்படுத்துகிறார் கம்பர். சீதையும் இலக்குவனையும் பார்த்து இராமன், உங்களைப் போலவே குகன் என்பால் அன்பு வைத்துள்ளான் என்பதைக் குறிப்பாகக் காட்டுவதற்காகவே அமைந்துள்ளது. மேகம் போன்று கைம்மாறு கருதாது இராமன் மீது அன்பு செலுத்தியவன் குகன். இவன் நம்மிடத்து

நீங்காத பக்தி உடையவன் என்று முடிவு செய்து, அந்தக் குகன் மீது அருள் பொருந்திய பார்வை உடையவனாய் எல்லாப் பொருளினும் மேம்பட்ட உள்ளன்பு கொண்ட நண்பனே! இன்று இவ்விடத்தில் எம்மோடு இருப்பாயாக என்று கூறி குகனுக்கு அனுமதி தருகிறார். மகிழ்ச்சி பொங்க திருவடிகளை வணங்குகிறான் குகன்.

இராமபிரான் குகனுடன் தோழமைப் பாராட்டி, அவனை அவன் சுற்றத்தார்களுடன் இருக்குமாறு கூறுதல்.

என்னுயிர் அனையாய் நீ, இளவல் உன் இளையன் இந்
நன்னுதல் அவன் நின்கேள் (697 (46)

என்ற பாடல் வரிகளில் என்னுயிர் போன்றவன் நீ, என் தம்பி, உனக்கு இளையவன் ஆவான். அழகிய நெற்றியையுடைய இச்சீதை உனக்குக் கொழுந்தி என்ற உறவு முறையினள் ஆவாள் என்று கூறுகிறான். குகன் ஒரு வேட்டுவ இனத்தை சார்ந்தவன் என்பதைக் கருதமால் இராமபிரான் சமமான நிலையில் வைத்துப் பார்ப்பதாகக் கம்பர் உணர்த்துகிறார்.

இராமபிரான் குகனது வார்த்தைகளையெல்லாம் மிகுந்த கவனத்துடன், அவனது கைம்மாறில்லாதத் தொண்டினை எண்ணிப்பார்த்து அவனைத் தன்னுடைய தம்பியாக ஏற்பதாகப் இப்பாடல் அமைகிறது.

துன்புளது எனின், அன்றோ சுகமுளது அதுவன்றிப்
பின்புளது இடை மன்னும் பிரிவுளது என உன்னேல்
முன்பு உளம் ஒரு நால்வேம் முடிவுளது என உன்னா
அன்புஉள, இனி நாமோர் ஐவர்கள் உளரானோம். (698 (47)

என்ற பாடல் வரிகளில் துன்பம் என்ற ஒன்று வந்தால் மட்டுமே இன்பத்தின் பயனை அறிய முடியும். அத்தகைய இன்பம் பின்னால் உன்னைக் காணப் போகின்ற காலத்தில் வரும். ஆனால் இடையில் ஏற்படும் பிரிவினைத் துன்பம் என்று வருந்த வேண்டாம். உன்னோடு நட்புக் கொள்வதற்கு முன் நாங்கள் சகோதர்கள் நால்வராக இருந்தோம். முடிவு உளது என்று எண்ணுதற்கு முடியாத ஒப்பற்ற பேரன்பினைக் கொண்டுள்ள நாம் இனிமேல் ஐந்து சகோதர்கள் ஆகிவிட்டோம். இதற்கு முன்பு தயரத மன்னனின் குமாரர்கள் நால்வராயிருந்தனர். இன்று உம்மையும் சேர்த்துக் கொண்டதனால் ஐவரானோம் என்று தமக்குள் ஏற்பட்ட அன்பை எண்ணிப் பார்த்துத் துன்பத்தை மறக்குமாறு

இராமபிரான் குகனிடம் கூறுவதாக அமைகிறது. இந்த நட்பு எந்த ஒரு எதிர்ப்பார்ப்பும் எதிர்பார்க்காமல் அமைகின்ற நட்பாக உள்ளது.

நட்பின் தேவையும், குறிக்கோளும்

இராமனுக்கும் சுக்கிரீவனுக்கும் நட்பு ஏற்படுதல். சுக்கிரீவன், இராமனை நோக்கி உன்னை அடையப் பெற்ற என்னினும் புண்ணியர் எவருமில்லை. எனது நல்வினைப்பயன் உன்னை அடையும் படி எனக்கு உதவியது விதியே. இராமன், நீ இந்த மலையிலிருக்கின்றாயென்று சவரியென்னும் தவமுதியாள் சொல்வதைக் கேட்டோம். எங்கள் கவலை உன்னால் நீங்குமென்று இங்கே வந்தோம் என்றான். இதைக் கேட்ட சுக்கிரீவன் என் தமையன் வாலி, என்னைக் கொல்வதற்கு ஓங்கிய கையினால் நான் உலகெங்கும் ஓடியும் விடாது தொடரத் தப்பிப் பிழைத்து, இந்த மலையில் வந்து சேர்ந்தேன். உன்னைச் சரணடைந்தேன் என்னைக் காப்பாயாக என்றான். இதனை,

என்றவக் குரக்கு வேந்தை யிராமனு மிரங்கி நோக்கி
உன்றனக் குரிய வின்ப துன்பங்க ளுள்ள முன்னாள்
சென்றன போக மேல் வந் துறவன தீர்ப்ப லன்ன
நின்றன வெனக்கு நிற்கு நேரென மொழியு நேரா (கம்ப.8)

மற்றினியு ரைப்ப தென்னே வானிடை மண்ணி லுன்னைச்
செற்றவ ரென்னைச் செற்றார் தீயரே யெனினு முன்னோ
குற்றவ ரெனக்கு முற்ற ருன்கிளை யென தென் காதல்
சுற்றமுன் சுற்ற நீயென் னின்னுயிர்த் துணைவ னென்றான் (கம்ப.9)

என்ற வரிகளின் மூலம் என்னைக் காப்பாயாக என்று சொன்ன சுக்கிரீவனை இராமன், மனம் இரங்கிக் கருணையோடு நோக்கி உனக்குரிய இன்ப துன்பங்களுள் இதற்குமுன் நீ அனுபவித்துக் கழிந்தவை போகட்டும். இனிமேல் வரும் துன்பங்களை நீக்குவேன். அவைகள் தம்முன், ஒரு கால் எவைகளேனும் நீக்கப்படாமல் எஞ்சி நின்றால் அப்படி நின்ற துன்பங்கள் எனக்கும் உனக்கும் சமம். அவற்றில் நானும் உன்னோடு பாதி பாதியாகப் பகுத்து அனுபவிப்பேன் என்று வாக்கு அளித்து அதனை வலியுறுத்துவானாய், இனி வேறு கூறுவானேன்? விண்ணிலாயினும் மண்ணிலாயினும் வேறெங்காயினும் உன்னை வருந்தினோர் என்னை வருத்தினோராவர். உன் நண்பர்கள் எனக்கும் நண்பர்கள் ஆவர். உன் உறவினர் என் உறவினராவர். என்

பந்தங்கள் உன் பந்தங்களாவர். நீ என் உயிர் நண்பன் என்கிறான் இராமன். இங்கே நட்பின் ஆழத்தை வெளிப்படுத்துகிறார் கம்பர்.

அரசியல் காரணமாகவும், இழந்த தன் மனைவியை மீட்பது காரணமாகவும் பயன் கருதிச் சுக்கிரீவன் இராமனுடன் நட்புக் கொண்டான் என்றாலும் இராமனுக்காகத் தன்னுயிரை அற்பமாக மதித்துப் போராடும் சீரிய நட்பின் திறமும் அவனிடம் அமைந்திருக்கிறது.

இராம சுக்கிரீவன் நட்பு இருவருக்கும் ஏற்படும் உதவியின் காரணமாக ஏற்பட்ட நட்பு ஆகும். இராமனுக்கு சுக்கிரீவன் இனத்தின் குரங்கினக் கூட்டம் சீதையை மீட்டுவதற்குக் காரணமாக அமைந்தது. சுக்கிரீவனுக்குத் தன் அண்ணன் வாலியிடம் தன்னைக் காத்துக் கொள்வதற்காகவும் இராமனிடம் உதவி தேவைப்படுகிறது. இவர்கள் இருவரும் பரஸ்பர அடிப்படையில் நட்புக் கொண்டாலும் ஏதோ ஒரு காரணத்திற்காக நட்புக் கொள்கின்றனர்.

பிரிய நட்பு

வேடர் தலைவனையும், கிட்கிந்தையிலே வானரத் தலைவனையும் நண்பர்களாகப் பெற்ற இராமன் தான் முனைந்து நின்ற வினை முற்றுவதற்காக மாற்றார் அணியினின்று இன்னொரு நண்பனையும் துணையாகப் பெறுகின்றான். அறச் செயல்களையே குலத்தொழிலாகக் கொண்ட அரக்கர் இனத்திலே தோன்றிய வீடணன், அறநெறியைத் தழுவி வாழ்ந்தவன்.

வீடணன் தன் அண்ணன் இராவணனிடம் பிரச்சனையின் காரணமாக நாட்டை விட்டு வெளியேறிச் செல்கிறான். அப்பொழுது வீடணன் இராமனிடம் தஞ்சம் புகுகின்றான். சிநேகிதம் என்று சொல்லிக் கொண்டு ஒருவன் என்னிடம் வந்தால் அவனை நான் எப்படித் தள்ள முடியும். இது என்னுடைய தருமம். எனக்கு நண்பர்களாக அமைந்து எனக்காகப் பாடுபடும் நீங்கள் அனைவரும் இதை அறிய வேண்டும். உங்களை சரணடைகிறேன் என்று ஒருவன் வந்தால் அவனிடத்தில் காணப்படும் குற்றங்களை பொருட்படுத்தக் கூடாது என்கிறான் இராமன். வீடணனும் எங்களைப் போல் பிரிய நட்புக் கொண்டவன் ஆகுக! என்று சொல்லி சுக்கிரீவன் வீடணனிடம் சென்றான். வீடணன் சரண் புகுந்தவுடன் இராமனுடைய உத்தரவின் பேரில் இலக்குவனும் அந்த இடத்திலேயே வீடணனுக்கு இலங்கை அரசுப் பட்டம் தந்து

சமுத்திர தண்ணீரைக் கொண்டு பட்டாபிசேகமும் செய்துவிட்டார்கள். வீடணன் இராமனுடன் நட்பை உறுதி செய்துவிட்டான். சகோதர்கள் ஆனோம் என்பதை.

குகனொடும் ஐவர் ஆனேம் முன்பு, பின் நின்று சூழ்வான்
மகனொடும் அறுவர் ஆனேம், எம்முழை அன்பின் வந்த
அகம் அமர் காதல் ஐய! நின்னோடும் எழுவர் ஆனோம்
புகழ் அருங் கானம் தந்து புதல்வரால் பொயிந்தான் நுந்தை' (.6507)

இப்பாடலில் குகனுடன் சேர்ந்து நாங்கள் ஐந்து பேர் சகோதர்கள் ஆனோம். அதன் பின்மேருமலையைச் சுற்றி வரும் சூரியனது மகனான சுக்கிரீவனுடன் சகோதர் ஆறு பேர் ஆனோம். எங்களிடம் அன்பு கொண்டு வந்த உள்ளத்திலே நிறைந்த அன்புடையவனே. உன்னுடன் சேர்ந்து சகோதர்கள் ஏழு பேர் ஆனோம் என்பதை வீடணனைப் பார்த்து இராமன் கூறுவதாக கம்பர் வெளிப்படுத்துகிறார்.

வீடணனைத் தன்தம்பியாக ஏற்றுக் கொண்டதும் இருவரும் அதிகமாக நட்புக் கொள்கின்றனர். இருவரும் தோளோடு தோள் நின்று அரக்கரை அழிக்கும் முயிற்சியில் ஈடுப்படுகின்றனர். இராவணனை வதைத்துச் சீதையைச் சிறை மீட்பதற்குப் இராமனுக்கு வீடணன் கிடைத்த நட்பு மிகவும் பேருதவியாக இருந்தது. சீதைக்கும் வீடணனின் மகள் திரிசடையின் நட்புக் கிட்டியது. தந்தையின் மகள் இருவருடைய நட்பின் சிறப்பினை எடுத்துக்கூறுகிறார் கம்பர்.

இராமன் வீடணன் நட்பைக் பார்க்கும் பொழுது நம்பி வந்தவர்க்கு அடைக்கலம் கொடுக்கும் அறத்தையும். சிந்தையும் பெற்றவன் என்றும் கூறலாம். மற்றொரு வகையில் சீதையை மீட்பதற்கு கிடைத்த நட்பு. வீடணனும் அறநெறி நினைந்தே இராமனைச் சரண்புகுந்தான் எனலாம். ஆனால் இலங்கை அரசைப் பெறும் நோக்குடன் அவ்வாறு செய்தான் என்ற கருத்தக்களை முன் வைக்க முடிகிறது.

வாலி – இராவணன் நட்பு

வாலி இராவணன் நட்பு ஒரு புதுமையான நட்பு ஆகும். இராவணன் வாலியை வெல்ல வேண்டும் என்று எண்ணிய எண்ணம் நிறைவேறாமையால் நட்பை ஏற்படுத்திக் கொள்கிறான். இராம-இராவணன் போர் தொடங்குவதற்கு முன்பு அங்கதன் இராமனுக்காகத் தூது செல்கிறான். நீ யார் என்று இராவணன் கேட்க முன்பு ஒரு

காலத்தில் இராவணன் என்னும் ஒருவனைத் தனது வாலில் தொங்கும்படித் தோள்களோடும் சுற்றிக் கட்டிப் பல மலைகளிலே பாய்ந்து திரிந்த வாலியின் புதல்வனான அங்கதனே நான் என்றான். இதைக் கேட்ட இராவணன் கூறியவாறு,

உந்தையென் துணைவன் அன்றே ஓங்குநற் சான்று முண்டால்
நிந்தனை இதன்மேல் உண்டோ நீயவன் தூதன் ஆதல்
தந்தனன் நினக்கு யானே வானரத் தலைமை தாழா
வந்தனை நன்று செய்தாய் என்னுவீ டமைந்த என்றான் (கம்ப. 24)

தம் பாடலில் இப்பாத்திரத்தின் வாயிலாக கம்பர் வெளிப்படுத்துகிறார். உன் தந்தை என் நண்பன். நான் உன்னை வானரங்களுக்கு அரசனாக்குகிறேன் என்றுகூறி வயப்படுத்த முயல்கிறான். தன் மைந்தன் வேறு தன் நண்பன் மைந்தன் வேறு என்று வேற்றுமை பார்க்காமல் அங்கதனை தன் மகன் என்று கூறுவது வாலி இராவணன் நட்பைக் பார்க்க முடிகிறது.

முடிவுரை

கம்பன் காட்டும் நட்பில் பயன் கருதியே நட்பு ஏற்படுத்திக் கொள்கின்றனர் என்பது அறிய முடிகிறது. இராமனைச் சார்ந்த நட்பு துணை ஆற்றலை பெறச் செய்யவும் அமைந்தவை. இவர்களின் நட்பு அறத்தொடு நின்று நட்பு வளர்ந்தவையாகவும், இராவணன் வாலி நட்பு மறத்தின் வழியாக ஏற்பட்ட நட்பு என்பதால் நீடிக்காமல் போய் விடுவதாக அமைகின்றது. கம்பர் நட்பைப் பாத்திரங்களின் வாயிலாகக் கட்டமைக்கப்பட்டாலும் எல்லாம் தேவையின் கருதி தான் நட்பு என்னும் சூழலை ஏற்படுத்தியுள்ளார்

நட்பும் பகையும்

அ.குமார்
முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை, தூய நெஞ்சக்கல்லூரி, திருப்பத்தூர்.

இலக்கியங்கள் மண்ணுக்காகவும், பெண்ணுக்காகவும், கதைகளைப் படைத்துச் சமூகத்தில் பெரிய மாற்றத்தினை ஏற்படுத்தி அதை நடைமுறை சாத்தியமாக்கியதில் தமிழ் அறிவுலகில் கோலோச்சிய கம்பராயணம் இன்றும் தொடர்ந்து ஏதோ ஒரு நேர்மறையான எண்ணம் உருவாவதற்குக் காரணமாகி இருக்கிறது. அது பகையும் நட்பும் கதைகளில் ஒரு முரணாக உருவெடுக்கின்றது. அதன் விளைவாக, பல்வேறு இன்னல்களும், போராட்டங்களும், மனிதன் எதிர்கொள்ள வேண்டிய கட்டாயம் அமைந்துவிடுகின்றது. எக்காலத்திலும் பெண்களைக் கவர்வதும் அவர்களைத் திருப்பி மீட்பதும் தொடர் கதையாக இருந்து வந்திருக்கிறது.

இங்கு இராமன் மனைவி சீதையை இராவணன் கவர்ந்து சென்று விடுகின்றான். இதே மாதிரி சுக்கிரீவன் மனைவி சுரமையை வாலி தன் வலிமையினால் கவர்ந்து கொள்கின்றான். இருவரும் ஒத்த கருத்துடையவர்களாகச் சந்திக்கின்றார்கள். இதனால் நட்பு பகையும் உருவாகின்றன. இருவருடைய மனைவியும் கவர்ந்து கொண்டார்கள் அதுக்குப் பல்வேறு வரலாற்றுப் புரிதல்கள் இருக்கின்றது. இதைத் தொலை நோக்குப் பார்வையுடன் ஒப்பிடும்போது தர்மம் வெல்லும் என்பதை நிலைநாட்டுகிறது. சிலப்பதிகாரம் என்றாலும் ஆணுக்காக ஒரு மதுரையே அழித்து ஒழிப்பது என்ற நிலை இருக்கின்றது. இராமாயணம் என்பதும் ஒரு பெண்ணுக்காக ஒரு நாட்டையே அழிப்பது தர்மமாக்கப்பட்டிருக்கிறது. தர்மத்தை நிலைநாட்டுவதற்கு இது போன்ற கதைகள் அக்கால மக்கள் முதல் இக்காலவாழ்க்கையிலும் நட்பும் பகையும் மாறிமாறி அமைந்திருப்பதை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

இராமனின் மனத்தவிப்பு

உலகத்தில் அன்பும் அமைதியும் அறத்தை நிலைநாட்டுவதற்கு மூன்று குணம்படைத்த மனிதன் அவதரித்துவிட்டான். அது இவ்வுலகில் எல்லா உயிர்களையும் அதற்காக வாழ்க்கைக்கு தேவையானவைகளை உருவாக்கிக்கொள்ள வேண்டியுள்ளது. இராமன் சீதையின் நினைவில் புலம்புவது அதை நினைத்து நினைத்து உருகுவது என்று தம்

நிலை மாறியிருந்தான். அவன் தவிப்பு ஏக்கம் எல்லாம் தன்னுடைய தேடுதலின் வேகத்தைத் தீவிரப்படுத்தினான் அதனால் அவன் பகை வனை அடையாளம் காணவேண்டும். அதற்காக அந்த இடத்தை அடைவதற்கும் பணியாட்கள் மற்றும் நண்பர்கள் வேண்டும் என்ற நோக்கத்திற்காகத் தனது பயணத்தைத் தொடங்குகின்றான் இராமன்.

எப்பொழுது எல்லாம் இரவும் நிலவும் வருகின்றதோ அப்பொழு தெல்லாம் இராமன் சீதையின் நினைவுகளில் தான்; அன்பும் காதலும் மலர்ந்திருக்கின்றான். மனவேதனை அடையும் பொருட்டு அப்பொழு தெல்லாம் தூக்கம் கொள்வதில்லை. இதை அறிந்த தம்பி இதைக் காண சகிக்காது. அதனால் இலக்குவணன் தூங்குவதை மறந்து விடுகின்றான். தன் சகோதரனை நிழல்போல் காத்து அவனுக்குப் பணிவிடை செய்வதைத் தன் தொழிலாக மேற்கொள்கின்றான் தம்பி. ஆகையால், அவனுக்குப் பகையுணர்வு மேலோங்குகின்றது. தன் சகோதரனுக்கு எவன் பகைவனோ அவன் தனக்கும் பகைவுடையவன் என்று நினைத்து, தன் சகோதரனைக் காத்து வருகின்றான்.

அனுமன் இராமனைக் காண விழைதல்

சுக்கிரீவன் ருசிமுக மலையில் தன் பகைவனுக்குப் பயந்து ஒளிந்து கொண்டு இருக்கின்றான். தேடலின் உச்சமாக இராமனும் அவனது தம்பியும் அம்மலையை அடைகின்றார்கள். இதைக்கண்ட சுக்கிரீவன் வாலியின் சூழ்ச்சியாக இருக்குமே என்று பயந்து நமக்கு ஆபத்து வந்து விட்டதாக எண்ணினான். ஆகையினால், நம்மைத்தேடி வருகின்றார்கள் என்று சொல்லி, அனுமனை அனுப்பி வைக்கின்றான். இருவரும் வரும்வழியில் ஒளிந்து நின்று கூர்ந்து கவனித்து நிற்கின்றான். அவர்களைப் பார்த்தால் குற்றம் புரிகின்றவர்கள் போல் தெரியவில்லை ஏதோ இழந்ததைத் தேடி வருகின்றார்கள். இவர்கள் "தவக்கோலம் கொண்டிருக்கிறார்கள்; வில்லேந்தியிருக்கிறார்கள். மனித உருவத்தில் இருக்கிறார்கள் ஆதலால் தேவர்கள் இல்லை. எளிதில் துன்பம் அடையக் கூடியவர்கள் இல்லை. என்றாலும், ஏதோ ஒன்றைத்தேடி வருகின்றார்கள். அழகும், வீரமும், ஒழுக்கமும், கருணையும் உடையவர்கள் என்று தன் அறிவுத்திறத்தால் கண்ட அனுமன்' பார்த்த உடனே இராமன் மீது அன்பு பெருக்கெடுத்துக் கண்ணீர் மல்கி நின்றான் அனுமன். இராமன் வரும் வழிபார்த்து தங்களுடைய இன்னல்கள் எல்லாம் பூர்த்தியாகப் போகிறது என்பதைக் தெரிந்து கொண்ட

அனுமன் தன்னை அறிமுகம் செய்து கொள்கின்றான். இராமன் அனுமனைப் பார்த்த மாத்திரத்;தில் இவன் கற்காத கலைகளே இல்லை அனைத்து வேதங்களையும் அறிந்தவன் என்று இலக்குவனிடம் "தம்பி இவன் படிக்காத கலைகளோ, வேதங்களோ இந்த உலகத்தில் இல்லை என்பதை இவன் பேச்சினாலே தெரிகிறது. சொல்லின் செல்வனாகிய இவன் யார்? பிரம்மாவோ சிவபெருமானோ?" என்றான். இவர்களுடைய நட்பின் ஆழத்தையும் உதவும் மனப்பான்மையும் ஒருவொருக்கொருவர் அறிமுகத்தின் வாயிலாக அறியலாம். இதைத்தான் இராமன் கூற்றாக, 'இல்லாத உலகத்து எங்கும், இங்கு இவன் இசைக்கன்' இந்த அவதாரத்தில் கட்டப் பிரம்மச்சாரியாக உருவெடுத்திருக்கிறாய். இவரைப் பற்றிப் பின்னாட்களில் இன்னும் தெரிந்துக் கொள்வாய் தம்பி என்று முடிக்கிறார் இதில் இராமன், இலக்குவனைச் சுக்கிரீவன் அனுமன் நட்பு பேசப்படுகின்றது. இதன் விளைவு எதிரிக்கும் பயன் அதிகரிக்கும் பாதிக்கப்பட்டவர்கள் ஒருங்கே இணையும் போது அது உன்னதமான நட்பாக மாறுகின்றது. இதை விட உலகில் வேறு இல்லை என்பதை கம்பர் குறிப்பிட்டிருக்கிறார்.

இராமனின் பெருமை

சுகபோகங்களையும் அரசாட்சியும் இழந்து தந்தை கட்டளையின் காரணமாக வனவாசத்தைக் கொண்டு தன் மனைவியோடு காட்டுக்கு வந்து மனைவியை இழந்து அலையும் போது அனுமன் சுக்கிரீவன் நட்பும் வானரக்கூட்டங்களின் நட்பும் ஒருங்கே பெற்றான். இதில் சில சிக்கல் நிறைந்தப் பகுதிகளையும் இராமன் தொடவேண்டி இருந்தது. அப்போது இராமன் சிறப்புகள் சொல்லியும் திறமையைக் காண்பித்தும் சுக்கிரீவன் நட்புப்பெற வேண்டியுள்ள கட்டாயம் உருவாகிறது. இதைக் கேட்க தம்பி இலக்குவணன் முந்திக்கொண்டு இராமனின் பெருமைச்சிறப்புகளைச் சொல்ல விழைகின்றான். "சம்பரன் முதலிய அசுரர்களை அழித்த பேராற்றல் படைத்த விண்ணுலகையும், மண்ணுலகையும் ஒரு சேர ஆண்டவன் அயோத்தி அரசன் தசரதன். அந்தத் தசரதனின் மகனே இவர். தான் சிற்றன்னை கைகேயின் கட்டளையால் ஆட்சியை அவள் மகன் பரதனுக்குக் கொடுத்துவிட்டுக் காட்டுக்கு வந்துள்ளார்.

வில் தொழிலில் சிறந்தவர். இராமன் என்பது இவர் பெயர். இவருக்குப் பணிவிடை செய்யும் அடியேன் நான் என் பெயர் இலக்குவன்" என்று

தங்களை அறிமுகம் செய்து நட்பு கொள்ளலாயினர். அனுமன் பார்த்த மாத்திரத்திலேயே சொன்னான்.

'இராமபிரானால் நானும் என் இனமும் இந்த உலகில் பிழைத்தோம். அடுத்ததாக அவன் சுக்கிரவனிடம் சொன்ன வார்த்தைகளாவன,

"அரசே! வாலியின் உயிரைப் பறிக்கும் எமன் வந்து விட்டான். இனிமேல் நமக்குத் துன்பமில்லை" என்று வினவினான்.

மேலும் இராம இலக்குவனைப் பற்றிச் சொல்ல அவர்களுடைய சிறப்பு நட்புக்கு அடையாளமாக்கி இருக்கிறது.

"நீதியை உடையவர்கள், கருணை உள்ளம் கொண்டவர்கள். விசுவாமித்திரமுனிவர் கொடுத்த கொடிய அம்புகளை வைத்திருப்பவர் களை இராமன் அழித்தவன். அவன் மகன் சுபாகுவைக் கொன்றவன். தன் கால் தூசி பட்டதால் கல் வடிவமாக இருந்த அகலிகைக்கு முன்னே வடிவாகக் கொடுத்தவன். சிற்றன்னை கைகேயின் கட்டளையால் ஆட்சியைத் தம்பிக்குக் கொடுத்துவிட்டுக் காட்டுக்கு வந்திருப்பவன். பரசுராமரைத் தோற்கடித்தவன் அரக்கனாகிய வராதனை அழித்தவன். இரக்கம் இல்லாத கரனை அவன் படையோடு அழித்து ஒழித்தவன். சிவன் முதலியவர்களுக்கும் மேம்பட்ட வலிமையுடைவன். இந்த இராமன், திருபாற்கடலில் எழுந்தருளியிருக்கும் திருமாலோ அல்லது வேறு யாராக இருக்க முடியும்? அவனோடு நீ நட்பு கொள்க என்று இராமன் சிறப்புப் பெருமைகளை எடுத்துக்கூறி அவனோடு நட்பு கொண்டு குலத்தைக் காத்துக்கொள்க என்று கூறுகின்றான்.

இராமனோடு சுக்கிரீவன் நட்புக் கொள்ளுதல்

இராமனும் சுக்கிரீவனும் தன் மனைவியை இழந்தவர்கள். அதனால், இராமன் நெருப்பிலே மெழுகு உருகுவதுபோல உருகினான். இராமன், சீதையின் நினைவு பெருகப் பெருக தன் நினைவு இழந்து மயங்கினான். மயங்கி விழுவதைப் பார்த்த சுக்கிரீவன் தம் மார்பில் சாய்த்துக் கொண்டான். ஒற்றுமை இருவருக்குள்ளும் மேலோங்கி இருக்கிறது. ஆகையால், ஒருவருக்;கொருவர் உதவ வேண்டிய கட்டாயம் உருவாகிறது. உனக்கு நண்பர் என்றால் எனக்கும் நண்பர்களே, உன்னைப் பகைத்தவர் என்னையும் பகைத்தவர்களே, ஆதலால் நீ துன்பம் கொள்ள வேண்டாம் என்று வாக்குறுதி கொடுத்திருக்கிறார் இராமன்.

என்ற அக்குரக்கு வேந்தை, இராமனும் இரங்கி நோக்கி
உன் தனக்கு உரிய இன்ப துன்பங்கள் உள்ள. முன்நாள்
சென்றன போக, மேல் வந்து உறுவன தீர்ப்பல்: அன்ன
நின்றன, எனக்கும் நிற்கும் நேர்' என மொழியும் நேரா.

மற்று இனி உரைப்பது என்னே? வானிடை, மண்ணில் நின்னைச்
செற்றவர் என்னைச் செற்றார் தீயரே எனினும், உன்னோடு
உற்றவர் எனக்கும் உற்றார்: உன் கிளை எனது: என் காதல்
சுற்றம், உன் நீ என் இன் உயிர்த் துணைவன் என்றான்

அன்புகலந்த உறவினால் ஒன்று சேர்ந்து தன் பகைவனான வாலியைத் தேடிச் செல்கிறார்கள்.

வாலியின் சிறப்பும் அழிவும்

இராமன் சுக்கிரீவன் அனுமன், தாரன், நீலன், நளன் ஆகியோர் வாலியைத் தேடிச்சென்று போர் தொடுக்கத் தக்க ஏற்பாடுகளைச் செய்து வருகின்றார்கள் அப்போது அனுமன் இடைப்புகுந்து வாலியின் சிறப்புப் பெருமைகளை விளக்கிக்கூறுகின்றான். "வாலியென்னும் பெயரை உடையவன் ஒருவன் இருக்கிறான். அவன் நான்கு வேதங்களுக்கும் காவல் வேலியாய் இருப்பவன். சிவபெருமான் அருளைப் பெற்றவன். எல்லையில்லாத ஆற்றலை உடையவன். தேவர்களும் அசுரர்களும் பார்த்திருக்க வாலி ஒருவனே மந்திரமலையாகிய மத்து தேயவும், வாசுகியின் நடுவுடல் தேயவும் பாற்கடலைக் கடைந்தவன். மண்ணும் நீரும் தீயும் காற்றுமாகிய நான்கு பூதங்களும் ஒன்று சேர்ந்தது போன்ற வலிமையுடையவன். சக்கரவாள கிரியிலிருந்து இந்த மலைக்குத் தாவும் வலிமையுடையவன். போரில் தன்னை எதிர்ப்பவர் வந்தாள் அவர் பலத்தில் பாதியைத் தான் அடையும்படியான வரத்தைப் பெற்றவன். நாள்தோறும் எட்டுத்திசைகளிலும் சென்று அங்குள்ள அட்டமூர்த்தியாகிய சிவபெருமானின் திருவடிகளை வணங்கும் பக்தியுடையவன். அந்த வாலியின் வால் செல்லாத இடமே இல்லை. அந்த வால் செல்லும் இடத்தில் இ;ராவணனின் ஆட்சி செல்லாது. வராக அவதாரமும், கூர்ம அவதாரமும் எடுத்த திருமாலுக்குச் சமமானவன். இருபது தோள்களை உடைய இராவணனைத் தன் வாலில் கட்டி, தான் செல்லும் இடங்களிலெல்லாம் தூக்கிச் சென்றவன். இந்திரன் மகனாகிய வாலி எங்கள் சுக்கிரீவனுக்கு முன்னே பிறந்தவன். அவன் அரசனாக இருக்க, சுக்கிரீவன் இளவரசனாக இருந்து ஆட்சி

செய்தான். இவ்வாறு வாலியின் சிறப்புப் பெருமைகளை அனுமன் இராமனிடம் எடுத்து விளக்கி கூறுகிறான். அதனால் கோபம் கொண்ட இராமன் வாலி இருக்கும் இடத்தைக் காட்டு அவனைப் போருக்கு அழைத்து வா நான் அவனை வீழத்தி விடுகின்றேன் என்று சொல்ல சுக்கிரீவன் வாலியைப் போருக்கும் அழைத்ததும் பெரும் குரலெடுத்து கர்ஜனை கொண்டு போர் செய்யத் துடித்தான். இதை அறிந்த வாலியின் மனைவி தாரை அறிவுரை வழங்கும் போது சொன்னான், உன் தம்பி சுக்கிரீவன் இராமனை நண்பனாக்கி அவனைக் கொண்டு உன்னை அழிக்க வந்திருக்கின்றான் என்று சொன்னதைக் கேட்ட வாலி மறு மொழி கூறினான்.

"துன்பம் தரும் நல்வினை, தீவினை இரண்டையும் ஒழிக்கும் வழி அறியாது. கலங்கிய இந்த உலகம், வாழ வந்தவன் அல்லவா, இராமன்! நடைமுறையில் அறவழிகளையெல்லாம் செய்து காட்டுகின்றவன் அல்லவா அவன்? அவனது இயல்புக்குப் பொருந்தாததைக் கூறி நீ தவறு செய்து விட்டாய்! உன் பெண் தன்மைதான் இதற்குக் காரணம்' என்று இடித்துரைக்கின்றான் இராமன் நீதி தவறாது நடக்கமாட்டான் தன் மனைவியே தவறு செய்துவிட்டதாக பெண்மைதான் காரணம் என்பதாகக் கூறி முடிக்கின்றான்.

அதன்பிறகு வாலியும் சுக்கிரீவனும் தன் மலைபோன்ற உருவங்களால் ஒருவரையொருவர் தாக்கிக் கொள்கின்றார்கள். இறுதியில் சுக்கிரீவனால் தாக்குப் பிடிக்காமல் போக இராமனிடம் மன்றாடுகின்றான். இதைப் புரிந்த அவன் இருவருக்கும் அடையாளம் தெரியவில்லை. அதனால் கொடிமாலையை சூடிக்கொண்ட போர் செய்க, என்று ராமன் கட்டளையிட்டான். அதுப்பேலவே சுக்கிரீவன் மீண்டும் வாலியோடு மோதினான். சினம் கொண்ட வாலியோ இன்றே உன் கதையை முடித்து விடுகின்றேன் என்று சுக்கிரீவனைத் தூக்கித் தரையில் மோதப் பார்க்கும் சமயத்தில் இராமன் வாழைப்பழத்தில் ஊசி நுழைவது போல தன் வில்லை இறக்கினான். பெரிய மலை சாய்வது போல கிழே விழுந்தான் வாலி. இதனால் இராமன் சுக்கிரீவனிடம் நட்பு கொண்டு வாலிக்கு மரணத்தை உண்டாக்கியது.

முடிவாக

பாதிக்கப்பட்டவர்கள் ஒன்று சேர்ந்து கொண்டு எல்லோரையும் தும்சம் செய்வது, ஒடுக்கப்படுபவர்களிடம் இருந்து ஒடுக்கப்பட்டவர்கள்

போராடி வெற்றியை நிலை நாட்டுவதும் அதற்காக எந்தப் பொருளையும் உயிரையும் அழித்தொழிப்பதும் என்பது நீதியாக்கப்பட்டிருக்கிறது. மனிதவாழ்க்கையின் சாரம்சமாக அமைந்திருப்பதைப் பார்க்க முடிகின்றது. வலியவனிடம் எளியவன் தோற்பதும் அதற்காகப் பிறருடைய உதவியை நாடுவதும் இராமன் ஒருவருக்கு நண்பராகவும் மற்றொருவருக்கு எதிரியாகவும் நீதியைக் காக்க வேண்டி அதைச் செய்து முடிகின்றான். இதை கிட்கிந்தைக் காண்டத்தில்; செய்து முடிகின்றான் ஒருவருக்கு நல்லவனாகவும் இன்னொருவனுக்குக் கெட்டவனாகவும் இருப்பது கட்டாயமாகின்றது (நட்பும் பகைமையுணர்வும்) பிறகு, இராமன் கூறும் நீதி முறைகளுக்கு இசைந்து வாலி தன் மகனையும் இராமனிடம் அடைக்கலம் புகுவித்து மோட்சத்தை அடையும் படி கம்பர் காட்டியிருப்பது தர்மத்தை நிலை நாட்டுவதற்கு வழிவகைச் செய்திருக்கிறது.

இராவணன் இழைத்த தீமையும், உற்ற நோயும்

பேரா. மடஸ்ரீ. ஸ்ரீகாந்த்
ஸம்ஸ்க்ருதத்துறை, ஸ்ரீ அஹோபிலமடம் சம்ஸ்க்ருதக் கல்லூரி, மதுராந்தகம்.

கம்பன் கதை நடாத்தும் பொறுப்பினைத் தன் கதாபாத்திரங்களுள் முக்கியாமான இரண்டு பெண் கதாபாத்திரங்களிடம் ஒப்படைத்து விட்டான் என்றே சொல்லுமளவுக்கு இரண்டு பெண் கதாபாத்திரங்களை மிகச்சரியான அளவில் பயன்படுத்தி காப்பிய ஓட்டம் தடைபடாமல் கதைநீட்டிக்கும் வகையில் கையாண்டு வெற்றி கண்டுள்ளான் என்றால் அது மிகையில்லை.

பரம்பொருளாம் இராமனின் அவதாரநோக்கம் நிறைவேற அயோத்தியிலிருந்து அவனைக்காடேக வைத்தவள் கூனி என்னும் மந்தரை. வனத்திடை வசித்து, காய்கனிகள் புசித்து வந்த காகுத்தனை இலங்கைவரை இட்டுச்சென்றவள் சூர்பனகை. இறைவன் கட்டளைப்படி பழிகொண்டு துணைநின்ற கதாபாத்திரங்கள். இந்தக் கதாபாத்திரங்களைக் கம்பநாடன் பாத்திறம் கொண்டு ஆய்வதே நோக்கமாகப் புகுந்தனன் யான். "இன்னல் செய் இராவணன் இழைத்த தீமைபோல் துன்ன அருங் கொடுமனக் கூனி தோன்றினாள்" என்று கூனியை அறிமுகப்படுத்தும்போதே இராவணன் செய்த தீமையின் மொத்த உருவமாக அவளை உருவகப்படுத்தினான் கம்பன். "தான்விளை காலம் ஓர்ந்து உடன்உறை கடியநோய் அன்னாள்" என்று இராவணன் குலம் முடிவுபெற உடன்பிறந்தே கொல்லும் நோயாக சூர்பனகையைக் குறித்தான். இவர்கள் இருவரும் தாங்கள் கொண்ட கருமமே கண்ணாக இருந்து அழகாகத் திட்டம் தீட்டி அவதார நோக்கம் நிறைவேற உதவியுள்ளனர்.

கொடுமனக் கூனி

பண்டைநாள் இராகவன் பாணி வில்உமிழ்
உண்டை உண்டதனை தன் உள்ளத்து உள்ளுவாள் (1447)

இராமனுக்கு முடிசூட்டுவிழா என்றவுடன் மந்தரை முன்னொருநாளிலே அவன் பிள்ளைவிளையாட்டாய் மண்உருண்டையை வைத்துத் தன்முதுகில் எறிந்து விளையாடியதை நினைவுகூர்ந்தாள். ஊன முடையவர்களை விளையாட்டாக நாம் அவர்கள் ஊனத்தை நினைவூட்டிக் கேலிசெய்தாலும் அந்த நிகழ்ச்சி அவர்கள் மனத்தையும்

ஊனமாக்கிவிடும் என்கிறபடியால் இராமனின் பிள்ளை விளையாட்டு கூனியின் மனத்தில் ஆறாத வடுவாகி இராமன் மேல் பகை உண்டாகக் காரணமாயிற்று. கைகேயி அரண்மனைக்கண் வந்தடைந்த மந்தரை இராமனுக்கு மட்டும் துன்பம் விளைவிக்க வரவில்லை. அவள் "மூன்று உலகினுக்கும் ஓர் இடுக்கண் மூட்டுவாள்" என நின்றாள்.

கொடியவர்கள் கொதிப்படைந்து கொடுமையை விளைவிக்க ஒரு சிறிய காரணமே போதுமானது என்பதற்குக் கூனியே சான்றானாள். அவள் கைகேயியின் செந்தாமரை பாதத்தைத் தொட்டுத் தீண்டினாள். மந்தரை தீண்டியவுடன் கண்விழித்து நோக்கினாள் கைகேயி. இதனைக் குறிப்பிடும் கம்பர்,

தீண்டலும் உணரந்த அத்தெய்வக்கற்பினாள்
நீண்ட கண் அனந்தரும் நீங்குகிற்றிலள் (1450)

மந்தரை தீண்டியவுடன் தெய்வக்கற்புடைய கைகேயி எழுந்தாள் என்பான் கம்பன். கொடிய விஷமுடைய பாம்பு விழுங்கவரும்போதும் ஒளி-வீசிக்கொண்டிருக்கும் திங்களைப்போல் மிகப்பெரிய துன்பம் உன்னை நாடி வந்துகொண்டிருக்கும்பொழுதும் உன்னால் எவ்வாறு உறங்கிக் கொண்டிருக்க முடிகிறது எனக்கேட்டாள் மந்தரை. அதற்குக் கைகேயி "இந்தப் புவிக்கு வேதம் போன்றொரு பெருமை உடைய இராமன் என்னும் பிள்ளையைப் பெற்ற எனக்கு என்ன துன்பம் வந்துவிட முடியும்?" என்கிறாள்.

விராவ அரும் புவிக்கெலாம் வேதமே அன
இராமனைப் பயந்த எற்கு இடருண்டோ? (1453)

"வாழ்ந்தனள் கோசலை, அவள் மதியினால். நீயும் உன்மகன் பரதனும் அவர்களிடம் கைகட்டி ஊழியம் செய்யும் நிலை வரப்புகுவது அறியாயோ? உனக்கும் உன்மகன் பரதனுக்கும் நாடு போனது, பொருள் போனது, எல்லாம் போனது. தாடகை என்னும் பெயர் கொண்ட பெண்ணைக் கொன்றதால் வளைந்த வில்லையுடைய இராமன் நாளை முடிசூடுவான்" என்றாள் மந்தரை.

ஆடவர் நகைஉற ஆண்மை மாசுஉற
தாடகை எனும் பெயர்த் தையலாள் பட
கோடிய வரிசிலை இராமன் கோமுடி
சூடுவன்நாளை: வாழ்வு இதுஎனச் சொல்லினாள் (.1456)

இதைக்கேட்ட கைகேயி இயல்பினாள் நல்லவள் ஆனபடியால்

இராமனுக்கு மகுடம் என்ற செய்தி அறிந்து மகிழ்வுடன் ஒளிமிகுந்த மாலை ஒன்றை மந்தரைக்குப் பரிசளித்தாள். மாலையைத் தரையில்வீசி அந்தக் கனிவாய்ச் சீதையும் இராமனும் நாளை அரியாசனத்தில் வீற்றிருக்க நின்மகன் பரதன் தரைமேல் கிடப்பான் போ! என்றாள் மந்தரை. இவ்வார்த்தைகளால் சினமுற்ற கேகயன் மடந்தை 'எனக்கும் நீ நல்லவளில்லை: என்மகன் பரதனுக்கும் நல்லவளில்லை. என்கண்முன்னே நில்லாது பெயர்க" என்று சாடினாள்.

போதி என் எதிர்நின்று நின் புன் பெரி நாவைச்
சேதியாது இது பொறுத்தனன்ஞ்ஞ்ஞ்-அறிவு இலி! அடங்குதி (1473)

என்றாள். இருப்பினும், முதலில் இராமனே தன்மகன் எனநினைத்த தேவியின் தூய சிந்தையில் ஏற்பட்ட இந்தச் சிறிய மாற்றத்தை கவனித்த மந்தரை மேலும் தன் திட்டத்தைத் தொடர்கிறாள்.

உனக்கு மகனாகப் பிறந்த பாவம் பரதன் எப்படியோ போகட்டும். உன்னைப் பெண்ணாகப் பெற்ற பாவம் உன்தந்தை கேகயனையும் பீடிக்க இருக்கின்றது. இராமன் முடிசூடியபின் ஜனகன் உன் தந்தையின் நெடுநாள் பகைமுடிக்கப் போர்தொடுப்பான். அவ்வாறு அவன் படையெடுத்தால் இராமன், மாமன் ஜனகனுக்குத் துணை புரிவானா? அல்லது நின் தந்தை கேகயனுக்குத் துணைபுரிவானா? போ! கெடுத்தாய் போ! என்றாள். மகன்மீது கொண்ட பாசத்தைவிடவும் தந்தைமீது கொண்ட பாசம் கைகேயியின் சிந்தை மாறக் காரணமாயிற்று.

"எனை உவந்தனை இனியை என் மகனுக்கும் அனையான் புனையும் நீள் முடி பெறும்படி புகலுதி" என்றாள் கைகேயி. கூனியின் சரியான திட்டமிடலுக்குக் கிடைத்த வெற்றியாகும் இது.

வஞ்சமகள் காமவல்லி

'ஏழிரண்டாண்டு வனவாசம் என்னும் தந்தைசொல் மந்திரமாகக்' கொண்டு வனத்திடை வாழும் இராமனைப் பார்த்து, பார்த்த மாத்திரத்தில் மையல் பூத்துநின்றாள் சூர்ப்பணகை. இராமன் 'தவம் செயத் தவம் செய்ததவம் என்?' என்று நினைத்தாள். இவள் எப்படிப்பட்டவள் என்பதைக் கம்பன் தன்வாக்காக அதாவது கவிக்கூற்றாக,

உம்பரானவர்க்கும் ஒண் தவர்க்கும் ஓதநீர்
இம்பரானவர்க்கும் ஓர் இறுதி ஈட்டுவாள்!" என்பான் (.2740)

இராவணன் அவைக்களத்தே, இளவலால் மூக்கறியப்பட்டு கரதூடனர்களை இழந்தநிலையில் அண்ணன் எதிர்நின்றாள். வெகுண் டெழுந்த இலங்கையோர்கோன் யாவர்செயல்? என்றான். தன் அண்ண னின் சினத்தை முழுமையாகப் பயன்படுத்திக்கொள்ள நினைத்த காம வல்லியாம் சூர்ப்பணகை இஃது மானுடர் செயல் என்றாள். மானுடர் இவ்வாறு செய்ய நீ என்ன குற்றம் செய்தாய்? என்றான் மன்னன்.

ஆயிடை எழுந்த சீற்றத்து அழுந்திய துன்பம் மாறி
தீயிடை உகுத்த நெய்யின் சீற்றத்திற்கு ஊற்றம் செய்ய
நீயிடை இழைத்த குற்றம் என்னைகொல் நின்னை இன்னே
வாயிடை இதழும் மூக்கும் வலிந்து அவர் கொய்ய? (3132)

இராவணன் தெளிவான மனநிலையில் இருப்பதையும், அவ்வாறு அவன் மனநிலை உள்ளவரையில் தான் நினைத்த காரியம் நடைபெறாது என்பதையும் உணர்ந்து அழகாகத் திட்டமிட்டுச் சூர்ப்பனகை அவன் உள்ளத்தில் காமத்தை விதைக்கும் செயலைத் தொடங்கினாள்.

"வில்லொக்கும் நுதல் என்றாலும்வேல் ஒக்கும் விழி ஞஞஞஞஞஞசொல்லொக்கும் பொருள்?" என்று பலவாறு சீதையின் அழகை வருணித்து இராவணன் உள்ளத்தில் காதல்போதையை ஏற்றி வைத்தாள். காமன், சிவபெருமான் நெற்றிக் கண்ணால் அழிந்தான் என்பது மிகப் பெரும் தவறு அவன் இந்தச் சீதையை அடைய முடியாமல் அந்த நோயினாலே அழிந்து தேய்ந்தான் என்கிறாள்.

ஈசனார் கண்ணின் வெந்தான் என்னும் ஈது இழுதைச்சொல் இவ்
வாசம் நாறு ஓதியாளைக் கண்டவன் வவ்வல் ஆற்றான்
பேசல் ஆம் தகைமைத்து அல்லாப் பெரும் பிணி பிணிப்ப, நீண்ட
ஆசையால்அழிந்து தேய்ந்தான் அனங்கன் அவ்வுருவம் அம்மா

ஆவதும் அழிவதும் பெண்ணாலே என்பார்கள். அதுபோல், மந்தரை மற்றும் சூர்ப்பணகை என்னும் இரு பெண்பாத்திரங்கள் இராமாயணம் என்னும் பெருங்காப்பியம் ஆவதற்கும், இராவணன் என்னும் மன்னன் அழிவதற்கும் காரணமாய் அமைகின்றன. இவ்விருவரின் ஆற்றலும் அறிவும் அழகும் வேறுவகையில் செயல்பட்டிருந்தால், இவர்களே திட்டமிடும் கலையின் முன்னோடியாகக் கொண்டாடப்பட்டிருப்பர்.

கம்பன் தந்த மகா மந்திரம்

மகேஸ்வரி சற்குரு
கோவை

காலம் எல்லாம் வாழ்கின்ற தமிழ் உள்ளவரை கம்பனும் வாழ்கின்றான். கம்பன் தந்த காவியம் அறம்பாடியது; இல்லறம் இசைத்தது; நட்புநலம் நவின்றது; காதலில் கரைந்தது; பக்திப் பரவசம் தந்தது. இவற்றுடன் மகா மந்திரம் ஒன்றும் தந்தான் கம்பன்.

கம்பன் வாழ்வியல் தத்துவங்களை அள்ளி அள்ளி அட்சயப் பெட்டகமாய் தந்துள்ளான். அப்பெட்டகத்தில் உள்ள மோட்ச மந்திரம் 'முடிவெடுக்கும் மந்திர சக்தி' ஆகும். நவீன உலகில் ஆளுமை வளர்ப்புப் பயிலரங்குகளில் தனித்துவம் பெற்ற பயிற்சி Decision Making எந்த செயலையும் ஆரம்பிக்கும் முன் முடிடிவடுக்க வேண்டும். முடிவுகளே இலக்காகும்; இலக்குகளே வெற்றியாகும். ஏழு படிநிலைகளில் முடிவெடுப்பது சரியான அங்குமுறை என்கிறார்கள் உளவியில் வல்லுநர்கள் (சிக்மன்ட் பிராய்டு, பாசர்). அவையாவன.....

1. **ஆழமாக மூச்செடுத்தல்:** இது நம் மனதை அமைதியான நிலைக்குக் கொண்டு செல்லும். முடிவுகளைச் சுலபமாகத் தேர்வு செய்ய உதவும்.

2. **வாய்ப்புகளைப் பட்டியலிடுதல்:** சந்தர்ப்ப சூழ்நிலைகளை ஆராய்ந்து நமது வெற்றிக்கான வாய்ப்புகளை பட்டியலிட வேண்டும்.

3. **பட்டியலின் தர நிர்ணயம்:** நேர்மறை, எதிர்மறை வாய்ப்புகளை பட்டியலில் இருந்து தனித்தனியாக பிரித்துக் கொள்ளுதல். நேர்மறையான வாய்ப்புகளை மட்டும் தேர்வு செய்து கொள்ளுதல்.

4. **உள்மனதைக் கேட்டல்:** பட்டியலில், மனம் ஒத்துவந்த முடிவுகளை ஐம்புலன்கள் மூலம் உணருதல். முன்னோடிகளை முன்மாதிரிகளாக மனதில் நிறுத்திக்கொள்ளல்.

5. **தேர்ந்தெடுத்தல்:** நேர்மறை எண்ணங்களால் எடுக்கப்பட்ட முடிவை நோக்கிய பாதையைத் தேர்ந்தெடுப்பது.

6. **முடிவுகளை உற்சாகமாகச் செயல்படுத்துதல்:** தேர்ந்தெடுத்த பாதையில் முழுமனதுடன் ஆனந்தமாகப் பயணித்தல்.

7. **முடிவுகளை மதிப்பீடு செய்தல்:** உள்மனமும், அறிவும் சேருகின்ற பொழுது, ஒரு சந்தர்ப்பத்திற்கு ஒன்றிற்குமேலாக நேர்மறை முடிவுகள் கிடைக்கும். தேவையான அணுகுமுறைகளுடன் கிடைக்கின்ற கிளை முடிவுகளை தக்கபடி உபயோகித்தல்.

கம்பன் என்னும் பூஞ்சோலையில் முடிவெடுக்கும் மந்திரத்தை உள்ளங்கை மலராக நாம் நுகரலாம். சுந்தரகாண்டத்தில் அனுமன் சீதையின் தற்கொலை முடிவைத் தடுத்தாட்கொண்ட அற்புதத்தை சொல்லித்தருகிறது. இராவணன் வந்து சென்ற பின் பெருமாட்டி சீதை 18 பாடல்களில் தன் விதியை நொந்து புலம்புகிறாள். நடையில் நின்றுயர்ந்த காதலன் இராமன் தன்னைக் காணவாரான் என்னும் முடிவுடன் தற் கொலைக்கு எத்தனிக்கிறாள். கல்நெஞ்சும் உருகும் கட்டம் இது.

தடுக்கப்படாது அனுபவித்தே தீரவேண்டிய விதியை நொந்து, இயற்கைக் காட்சிகளையும் நொந்து 'எல்லோரும் என்னையே கோபித்து வருந்துகிறீர்கள், என்னை நினைக்காத வில் வீரன் இராமனை கேட்பார் யாரும் இல்லையோ' எனப் புலம்புகிறாள்.

கல்லா மதியே கதிர் வாள் நிலவே
செல்லா இரவே சிறுகா இருளே
எல்லாம் எனையே முனிவீர் நினையா
வில்லாளனை,யாதும் விளித்திலிரோ (491)

இவ்வாறு புலம்பி உயிர்விடத் துணிந்து குருக்கத்திப் புதரை அடைகிறாள். சிம்சுபா மரத்தின் கிளையை அடைந்து தனது வுந்தலினால் தற்கொலை செய்ய எத்தனிக்கிறாள். ஐயகோ காப்பாற்றுவார் யாருமிலையோ, தேவ தூதன் தோன்றமாட்டானோ, உளம் பதைக்கிறது. இராமதூதன் தோன்றினான்.

கண்டனன் அனுமனும் கருத்தும் எண்ணினான்
கொண்டனன் துணுக்கம் மெய்தீண்டக் கூசுவான்
அண்டர்நாயகன் அருள்தூதன் யான்எனா
தொண்டைவாய் மயிலினைத் தொழுது தோன்றினான் (509)

கோவைப்பழம் போல் சிவந்த அதரத்தை உடைய மயில்போல் சாயலை உடைய பிராட்டியைத் தொழுது கொண்டே, என்செய்வது

என்று பலவகையாக ஆலோசித்து பின்பு மறைந்திருந்தபடியே 'ராம' நாமத்தை சத்தமாக உச்சரித்தான். பகவானைவிட பகவானின் நாமம் பெரியதல்லவா! இராம நாமம் கெட்ட பிராட்டி மெய்மறந்தாள். அச்சமயம் ராமதூத அனுமன் முன்நின்றான். அனுமன் ராமனது திருமேனியழகை வர்ணிக்கத் தொடங்கி திருவடிச்சிறப்பு, திருவடிவிரல் சிறப்பு, புறவடி, கனைக்கால்கள், தொடைகள், திருமார்பு, திருக்கை (முழந்தாள் வரை நீண்டு, சிவந்த திருக்கை நகங்களைக் கொண்டு இருக்கும்) திருத்தோள், கழுத்து, திருமுகம், வாயின் சிறப்பு, பற்களின் சிறப்பு, புருவம், நெற்றி, திருக்குழல், இராமனது திருநடை வரை காதலாகி கசிந்து உயிர் உருகச் சொல்லுகின்றான். ராமனது வரலாற்றை ஆதி தொடங்கி கூறி தன்னையும் இன்னார் என உரைக்கின்றான். இராமன் வராமைக்கு காரணம் கூறி, தன்னை ஐயுற வேண்டாம், அடையாளம் உளது எனச் சொல்லுகின்றான். மலர்கின்றாள் பிராட்டி. 'யாண்டையது காண்' என வினவுகிறாள். அனுமனும் இராமனது கனையாழியை நீட்டுகின்றான். மலடித்தன்மை நீங்கப்பெற்ற பெண்ணை போன்றும், கண்பெற்ற குருடியைப் போன்று கணையாழியைப் பார்த்து உருகுகின்றாள். 'குழந்தையை உயிர்த்த மலடிக்குவமைக் கொண்டாள், உர்ந்து விழி பெற்ற தோருயிர்ப் பொறையுமொத்தாள்'. பிராட்டி உயிர் பெற்றுவிட்;டாள். இது அனுமன் இராமனுக்கும் நமக்கும்; செய்த மிகப்பெரிய பாக்கியம். விரைந்து முடிவெடுக்கும் திறன் அனுமனிடமிருந்ததால் இந்த காரியம் கைகூடிற்று. இதைத்தான் உளவியல் வல்லுநர்கள் Decision Making என்கிறார்கள்.

மீட்டுருவாக்கம் செய்த மாருதி

மருத்துவம் என்பது என்றுமே இன்றியமையாத ஒன்று. நோயின் வேர்களைக் கண்டறிந்து அதனை முழுக்கக் களைந்தெறிகின்ற மருத்துவம் இன்றைய தேதியில் உள்ளதா எனும் கேள்வி எழுமாயின், 'இல்லை' என்பது தீர்க்கமான பதிலாக இருக்கும். ஒருவேளை மருந்து மலையின் ஒரு துளியை அனுமன் நமக்கு மீண்டும் தந்தால் சிறந்த மருத்துவம் சாத்தியப்படலாம். மருந்துமலையை அனுமன் கொணர்ந்த சம்பவத்தில் முடிவெடுக்கும் மந்திரசக்தியை இனி சற்றுப் பேசுவோம்.

இந்திரசித்தின் பிரம்மாத்திரத்தால் உயிரற்று விழுந்த லட்சுமணன் மற்றும் வானரக்கூட்டத்தைப் பார்த்து ராமனும் மூர்ச்சித்து விழுந்தான். இவர்களை உயிர்ப்பிக்க சாம்பவான் சொன்ன வரி 'சஞ்சீவிமலை

கொணர்தல் ' என்பதாகும். வடக்கே 50ஆயிரம் யோசனை தூரத்தில் உள்ள அந்த மருந்து மலையில் இறந்தாரை உயிர்ஸப்பிக்கும் சஞ் சீவிகரணி, உடம்பை இரண்டாக வெட்டினாலும் ஒட்டுவிக்கக்கூடிய சந்தானகரணி, ஆயுதங்களால் காயப்பட்ட உடம்பின் புண்ணை மாற்றவல்ல விசல்யகரணி, முதியோனை இளையோனாக உருமாற்ற வல்ல சாவர்ணயகரணி மருந்தும் இருக்கின்றன. இம்மருந்துகளை கொணர்வாயாக என்று அடையாளத்துடன் கூறினார் அர்த்தப் பொழுதில் அரைநொடிக்குள் வந்தவன் அல்லவா அனுமன். நிமிர்ந் தெழுந்து புறப்படுகின்றான். மனோவேகத்தில் பறந்த அனுமன் மேரு மலையை நோக்கிச் செல்லுகின்றான். உத்தரகுரு எனும் போகபூமியைத் தாண்டிச் சஞ்சீவிமலையை அடைகின்றான். சஞ்சீவிமலையைக் கண்ட அனுமன் இங்கு நின்று சாம்பவான் குறிப்பிட்ட மூலிகைகளை அடையாளம் கண்டுதேடிக்கொண்டிருந்தால் காலம் வீணாகும். மலையுடன் செல்வது நலம் என முடிவெடுக்கின்றான். ஆழ்ந்த நெடுமூச்சுக்குப்பின் முடிவெடுக்கும் மந்திரசக்தி கொண்டு மருந்து மலையை கையில் கொண்டு வந்த செம்மல் இவன்.

இங்குநின்(று) இன்னன மருந்(து) என்(று) எண்ணினால்
சிங்கும்ஆல் காலம் என்(று) உணர்ந்த சிந்தையான்
அங்கது வேரொடும் அங்கை தாங்கினான்,
பொங்குநல் விசும்பிடைக் கடிது போகுவான்.

இங்கு 'உணர்ந்த' எனும் ஒரு சொல் இந்த கட்டுரையின் பொருள் அத்தனையும் சொல்கின்றது. சஞ்சீவி மலையைக் கொணர்ந்தவுடன் லட்சுமணன் முதலானோர் உயிர்த்தெழுந்த கதை நமக்குத் தெரியும். இராமன் அனுமனைப் பொற்றுகின்றான். பகைவர்களிடமிருந்து எங்களைக் காத்து வேதத்தையும் காத்திருக்கின்றாய். உனக்கு கைமாறு என்ன செய்வதென கண்களில் நீர்மல்க அனுமன் பணிவுடன் நின்றான். எடுத்த காரியத்தில் வெற்றிபெறத் தேவை எடுத்த முடிவில் தெளிவாக இருத்தலே. முடிவெடுக்கும் நேரமே நாம் வெற்றிபெறும் நேரமும் ஆகும்.

முடிவுரை

உளவியல் வல்லுநர்கள் சொன்ன மெய்ப்பொருள் அத்தனையும் கம்பன் தன் காவியத்தில் தந்துள்ளான். கனவு மெய்ப்பட கம்பனின் காவியம் துணை நிற்கும்.

கம்பனின் ஆளுமைப்பண்புகள்

ப.கணேஷ் வடிவேல்
உதவிப்பேராசிரியர்- தமிழ்த்துறை. ஸ்ரீமத் ஆண்டவன் கலை அறிவியல் கல்லூரி.
திருவானைக்கோவில். திருச்சி

ஒரு மனிதன் மற்றவர்களின் பார்வையிலிருந்து தனித்தன்மையுடன் தெரியவேண்டும். அவனுடைய எண்ணங்கள். சொல்,செயல். நடத்தை. பழகும்விதம் போன்றவற்றால் பிறரை கவர்ந்திழுத்து தன்னுடைய கட்டுப்பாட்டில் வைத்திருப்பவனே ஆளுமை பண்பு நிறைந்தவனாக காணப்படுகிறான்.

மேலும் "அவருடைய உடல்தோற்றம். உடைப்பாணி. நடை. அவரிடம் காணப்படும் அன்பு. பொறாமை. ஊக்கம். அச்சம். இரக்கம். நன்றியுணர்வு. தந்திரம் போன்ற பல விதமான பண்புகளும் ஆளுமையில் அடங்கும்" என்று வாழ்வியற் களஞ்சியம் சுட்டுகிறது. (தமிழ்ப் பல்கலைக்கழகம். பக்-678) இவ்வாளுமைப் பண்புகளை கம்பர் எவ்வாறு தனது காப்பியத்தில் இடம்பெறச் செய்துள்ளார் என்று ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

பெண் ஆளுமை

பெண் என்பவள் தனது சிறு வயது முதலே குடும்பத்தை நடத்தக்கூடிய ஆளுமை குணமானது அவளுக்கு வந்துவிடுகிறது. அவளுடைய எண்ணத்தை செயல்;படுத்துவதற்கும். தான் நினைத்தை சாதிப்பதற்கும். பிறரை தனது கட்டுப்பாட்டில் வைத்திருப்பதற்காக தனது ஆளுமை பண்புகளை வெளிப்படுத்துகிறாள் என்பதை "கைகேயி தனது கூந்தலில் சொருகியிருந்த மாலை வீசி எறிந்தாள். மேகலாபரணத்தையும். காலின் கிண்கிணியும். வளையல்களையும் வீசி எறிந்தாள். தனது நெற்றி-யிலிருந்த பொட்டை அழித்து. மையுண்ட கண்கள் கழங்கும் படி கூந்தலை தரையில் விரித்தப்படி அழுதாள்" (கம்ப.அயோ.பா-85,86,87) என்று கைகேயி தசரதனின் மனதை ஆளுமை செய்ததை கம்பர் எடுத்துரைக்கிறார்.

நட்புறவு ஆளுமை

இராமபிரான் தான் செல்லும் இடங்களிலெல்லாம் நட்புக்கொள்வதோடு. தனது அன்பாலும். கருணையாலும். இரக்கத்தாலும் பிறரை கவர்ந்

திழுத்து அவர்களை ஆளுமை செய்யும் ஆட்சியாளனாக திகழ்கின்றான் என்பதை

என்உயிர் அனையாய்நீ இளவல் உன் இளையவன் இந்
நன்னுதவள் நின்கேள் நளிர்கடல் நிலம்எல்லாம்
உன்னுடையது நான்உன் தொழில் உரிமையின் உள்ளேன் (1994)

என்ற பாடல் அடிகளில் குகனிடம் நீ என் உயிர்போன்றவன், என் தம்பி உனக்குத்தம்பி, இந்த சீதை உன் உறவு பெண், இந்த நாடு உனது, நானோ உன்னுடைய தொழில் உரிமையில் வாழ்கின்றேன் என்று குகனின் மனத்தை ஆளுமை செய்கிறான் இராமன்.

புணர்ச்சி பழகுதல் வேண்டா உணர்ச்சிதான்
நட்பாம் கிழமை தரும் (785)

என்கிறது குறள்.

சுக்கிரீவனோடு இராமன் கொண்ட நட்புறவில் "உன் பகைவர் இனி என் பகைவர், உனக்கு உறவு என்றால் எனக்கும் உறவு, உன் கிளை எனில் எனக்கும் கிளை, நான் விரும்பும் சுற்றம் அது உன் சுற்றமாகும், நீ என்னுடைய உயிர்த்துணைவன்" (கிட்கிந்தா-3812) என்று நட்பின் ஆளுமையை இராமன் வெளிப்படுத்துகின்றான்;.

வீடணனோடு நட்புக் கொண்ட இராமன், அவனை தனது உறவாக கொண்டு அழைக்கும் பொழுது

குகனோடும் ஐவர் ஆனோம் முன்பு பின் குன்று சூழ்வான்
மகனொடும் அறுவரானோம் எம் முழை அன்பின் வந்த
அகன் அமர் காதல் ஐயநின்னொடும் எழுவர் ஆனோம்
புகல் அருங்கானம் தந்து புதல்வரால் பொலிந்தான் நுந்தை (6507)

என்று நட்புறவு ஆளுமையைக் கம்பர் விளம்புகிறார்.

குகன், சுக்கிரீவன், வீடணன் ஆகிய மூவரிடத்தும் இராமன் நட்பு நிலையைக் கடந்து உறவு நிலையில் உயர்த்தி பார்ப்பதால், அவர்களின் மனதில் நீங்காத இடத்தை பிடித்து ஆளுமை செய்பவனாக இராமன் திகழ்வதைக் கம்பர் குறிப்பிடுகிறார்.

சமூக ஆளுமை

ஒழுக்கம்: மனித வாழ்க்கை சீரோடும், சிறப்போடும் முன்னேற்ற

பாதையில் செல்வதற்கு ஒழுக்கமென்னும் ஊன்றுகோல் அவசியம் என்பதை

இந்த இப்பிறவிக்கு இரு மாதரைச் சிந்தை யாலும் தொடேன்
(5378)

என்ற பாடல் அடியில் தசரத மன்னன் அறுபதினாயிரம் மனைவியோடு இருந்திருக்க, மகனோ சிந்தையில் கூட இரு பெண்களை தொட மாட்டேன் என்று சபதம் கொள்ளுவதன் மூலம் ஒழுக்கமே வாழ்வின் அடிப்படை என்னும் கருத்தை இராமன் வாயிலாக கம்பர் எடுத்துரைக்கிறார்.

கொடை: இராமனிடம் அடைக்கலமாக வந்த வீடணனுக்கு, இலங்கையை வெல்வதற்குமுன் அதை உனக்கு கொடையாக கொடுத்தேன் என்பதை

வாழும் நாள் அன்று காறும் எயிற்று அரக்கர் வைகும்
தாழ்கடல் இலங்கைச் செல்வம் நின்னேதே தந்தேன் என்றான் (6503)

என்ற பாடல் அடிகளில் இராமனின் கொடையால் வீடணனின் மனதை தனது ஆளுகைக்கீழ் கொண்டு வந்துள்ளதை காணமுடிகிறது.

விருந்தோம்பல் பண்பு: விருந்தோம்பல் என்பது தமிழர் வாழ்வியலில்; ஓர் அங்கமாகும். அவ்விருந்தோம்பல் பண்பை கம்பர்

இருத்தி ஈண்டு என்னலோடும் இருந்திலன் எல்லை நீத்த
அருத்தியன் தேனும் மீனும் அமுதினுக்கு அமைவதாக (1966)

என்ற பாடல் அடியில் குகன் இராமனுக்காக தேனும், மீனும் கொண்டு வந்து உண்ணுமாறு வேண்டினான். இதில் கம்பர் தனது சமுக ஆளுமைப்பண்பை குகன் மூலம் வெளிப்படுத்தியுள்ளதை காண முடிகிறது.

சொல்ஆளுமை

இதழிலிருந்து வரும் சொல்லானது ஒரு மனிதனை வாழ்விக்க முடியும். அதே நேரத்தில் அவனை அழிக்கவும் முடியும் என்பதை கம்பர் தனது காப்பியத்தில் பல்வேறு இடங்களில் மெய்பித்துள்ளார்.

கைகேயி தனது கணவனான தசரதனிடம் இரண்டு வரம் கேட்டாள். ஒன்று என் மகன் பரதன் நாட்டை ஆளவேண்டும். மற்றொன்று இராமன் பதினான்கு ஆண்டுகள் காட்டில் இருக்கவேண்டும் என்ற

வரத்தைக் கேட்டாள். இதைக் கேட்டவுடன் தசரதனின் நிலையை கம்பர் கூறும்பொழுது,

நாக மெனுங்கொடி யாட னாலின் வந்த
சோக விடந்தொட ரத்து ணுக்க மெய்தா
ஆக மடங்கலும் வெந்த ழிந்த ராலின்
வேக மடங்கிய வேழ மென்ன வீழ்ந்தான் (198)

என்ற பாடலில் நாகம் போன்று விளங்கும் கைகேயின் வாயிலிருந்து வந்த விஷம் நிறைந்த சொல்லால், தசரதன் என்னும் யானையின் உடல் முழுதும் வெந்து வெம்பி கீழே விழுந்ததாக கம்பர் கூறுகிறார். இங்கு சொல்லின் ஆற்றலால் ஒரு உயிருக்கு துன்பத்தை தருவதோடு, அவ்வுயிரைச் சிறிது சிறிதாக கவர்ந்து ஆளும் தன்மை அச்சொல்லிற்கு உண்டு என்பதை நிருபித்துள்ளார்.

இராமனைப் பழிவாங்குவதற்காக சூர்ப்பனகை சீதையின் அழகை தனது சொல்லின் ஆளுமையால் இராவணனுக்கு எடுத்துக்கூறும் பொழுது,

தோளையே சொல்லுகேனோ? சுடர் முகத்து உலவுகின்ற
வாளையே சொல்லுகேனோ? அல்லவை வழுத்துகேனோ?
மீளவும் திகைப்பதல்லால் தனித்தனி விளம்பல் ஆற்றேன்
நாளையே காண்டி அன்றே? நான் உனக்கு உரைப்பது என்னோ?
(3139)

என்ற பாடல்அடியின் மூலம் சொல்லின் ஒவியங்களாய் மனதில் நிழலடியவளை எண்ணி, தன்நிலை மறந்து பிதற்றியுள்ளான் இராவணன். இங்கு சொல்லானது உணர்வை தூண்டி இராவணனை ஆளுமை செய்துள்ளதை கம்பர் எடுத்துரைக்கிறார்.

சீதையை தேடி இலங்கைசென்ற அனுமன் நல்ல செய்தியோடு வருவான் என்று இராமன் அவனை எதிர்பார்த்து காத்திருந்து அனுமன் வந்ததும்,

கண்டனென் கற்பினுக்கு அணியைக் கண்களால்
தென்திரை அலை கடல் இலங்கைத் தென்நகர் (6031)

என்ற பாடல் அடியில் இராமனின் உயிர் துடிப்பை அறிந்த அனுமன் கண்டேன் என்ற சொல்லின் ஆளுமையால் அமைதிப்படுத்தினான். இங்கு சென்ற உயிரை சொல்லின் ஆளுமையால் மீட்டுக் கொண்டு

வந்துள்ளதை அனுமன் வாயிலாக உணர்த்துகிறார்.

விதி ஆளுமை

விதியானது வினையயன் வாயிலாக மனித உருவத்தில் புகுந்து, அவனுடைய எண்ணத்தில் தங்கி, கால நேரங்களுக்கு தக்கபடி அவனுடைய வாழ்க்கையை கொண்டு செல்வதே விதியாகும். இவ்விதியே தசரதனின் தலையில் ஒரு நரை முடியாய் தோன்றியது என்பதை

மன்னனே அவனியை மகனுக்கு ஈந்து நீ
பன்ன அருந்தவன் புரி பருவம் ஈதுஎன
கன்ன மூலத்தினில் கழற வந்தென
மின்எனக் கருமை போய் வெளுத்ததுஓர் மயிர் (17

என்ற பாடலின் மூலம் தசரதனுக்கு வயதாகி விட்டதால் மகனுக்கு அரசைக் கொடுத்து விட்டு, தவம் செய்ய போவாய் என்று கன்னத்தின் ஓரத்திலுள்ள வெள்ளை முடியானது விதியாக வந்து தசரதனுக்கு எடுத்துரைத்தாக கம்பர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலக்குவன் கோபம் கொள்ளும்பொழுது அவனிடம் இராமன், **நம் தந்தையோ, தாயோ, பரதனோ தவறு செய்யவில்லை எல்லாம் நம் விதியின் பிழை** (ஆரணிய-1734) என்று விதியின் ஆளுமையை எடுத்துக்கூறுகின்றான்.

சூர்ப்பணகையின் மூக்கும், முலையும், காதும் அறுத்ததும் விதியின் வலியால் நிகழ்ந்தது என்பதை,

முலை துமித்து உயர் மூக்கினை நீக்கிய மூத்தய
மலை துமித்து என இராவணன் மணியுடை மகுடத்
தலைதுமித்தற்கு நாள் கொண்டது ஒத்தது ஓர் தன்மை (2827)

என்ற பாடல்வழி விதியின் ஆளுமையை கம்பர் மொழிகிறார்.

வீரத்தின் ஆளுமை

அடைக்கலம் கேட்டு வந்த வீடணனை ஏற்றுக் கொண்ட இராமன், இலங்கையை இராவணனிடமிருந்து பெறுவதற்கு முன்பாக விபிஷணனுக்கு மணிமுடி சூட்டி அதன் உரிமையை கொடுத்தான் என்பதை,

தஞ்ச நல்துணைவன் ஆன தவறு இலாப் புகழான் தன்னை
துஞ்சல் இல் நயனத்து ஐய சூட்டுதி மகுடம் என்றான் (6505)

என்ற பாடல் அடியில் இராமன் தன்னுடைய வீரத்தின் மீது கொண்டுள்ள ஆளுமையின் ஆற்றலால் முன்கூட்டியே வீடணனுக்கு மணிமுடி சூட்டியுள்ளதை இப்பாடல் வழி அறியமுடிகிறது.

இராமன் இராவணிடம் போர் செய்யும்பொழுது, நிராயுதபாணியாக நிற்கும் இராவணனை பார்த்த இராமன் "இன்று போய் நாளை வா" என்று அமைதியுடன் கூறுவதிலிருந்து இராமனிடம் செறிந்திருக்கும் வீரத்தின் ஆளுமையை கம்பர் வெளிப்படுத்துவதை காணமுடிகிறது.

பண்பாட்டு ஆளுமை

கம்பர் தனது காவியத்தில் தமிழ் பண்பாட்டை பேணும் வகையில் பல கருத்துக்களை வால்மீகி ராமாயணத்திலிருந்து மாற்றி அமைத்துள்ளார்.

- இராமனும் சீதையும் காதல் கொண்டதாக அமைத்துள்ளார்.
- சீதையை இராவணன் துக்கிச் செல்லும்பொழுது பர்ணசாலையுடன் துக்கி சென்றதாக கூறியுள்ளார்.
- வாலியின் மனைவியை தனது தாயாக சுக்கிரீவன் மதித்தல், இராவணன் இறந்ததும் மண்டோதரி உடனே உயிர்விடுதல் போன்ற பல்வேறு இடங்களில் தமிழ்ப் பண்பாட்டை காக்கும் விதமாக, கம்பர் கையாண்டுள்ளதை காணமுடிகிறது.

தூயொக்கும் அன்புத் தசரதன்

ச. கருத்தான்
முனைவர் பட்ட ஆய்வாளர், தேசியக் கல்லூரி, திருச்சி

நாட்டை ஆளும் நாயகன் எவ்விதமான இலக்கணத்தோடு இருக்க வேண்டும் என்பதைக் கம்பர் விவரிப்பது வியக்கத்தக்கதாகும். கம்பர் தம் காப்பியத்தின் வாயிலாக அரசன் எப்படி இருக்க வேண்டும் என்பதையும், அவனுக்குத் தேவையான அரசியல் நுட்பம் எவ்வாறு இருக்க வேண்டும் என்பதையும் அழகுற எடுத்துரைக்கிறார்.

அளிப்பவன்

கம்பர்தாம் கூறும் அரசியல் நுட்பத்தைத் தயரதன் மேல் ஏற்றிக் கூறுகிறார் என்பதை வெளிப்படையாக உணரலாம். அரசன் என்பவன் 'அளிப்பவனே' அன்றி 'அழிப்பவன்' அல்லன். குடிமக்களைத் துன்புறுத்தி ஆளும் அரசன் அரசனாக மாட்டான். "ஆள்பவன் அரசனல்ல காப்பவனே அரசன்" என்பதே கம்பர் கொண்ட அரசியல் அறிவின் சாரமாகும். அன்பு வழிகாட்ட, அறம் துணை செல்லக் குடி மக்களுக்குத் தொண்டு செய்து வாழ்பவனே, உண்மையான அரசன் அவன் தன் கடமைகளை எப்பொழுதும் உணர்ந்து செயல்பட வேண்டும் என்பதைக் கம்பர் காட்சிப்படுத்தியுள்ளார்.

தாயொக்கும் அன்பில்; நவமொக்கும் நலம்ப யப்பில்
சேயொக்கும் முன்னின் றொருசெல்கதி உய்க்கு நீரால்
நோயொக்கும் என்னில் மருந்தொக்கும் நுணங்கு கேள்வி
ஆயப் புகுங்கால் அறிவொக்கும் எவர்க்கும் அன்னான் (பா:4)

குடிமக்கள் மகிழ்ச்சியோடு வாழ்வதற்கு, அரசன் தாய்போல அவர்களிடம் அன்பு செலுத்த வேண்டும். அவரவர் விரும்புவதை விரும்பியவாறே பெறுவதற்குத் தவம் உதவி செய்யும். அவ்வாறு குடிமக்கள் இன்பமாக வாழ்வதற்கு அரசன் தவம் போன்ற கருவியாகச் செயல்பட வேண்டும். ஒருவன் இம்மைப் பற்றை விட்டு, மறுமைக்குரிய நெறியில் பழக அவனது மகனே உதவுகிறான். ஆகவே, தந்தையின் செல்கதிக்கு வழிகாட்டியாக இருப்பவன் மகனே. அது போல் தயரதன் மக்கள் அறம், பொருள், இன்பத்தில் ஆழ்ந்துவிடாமல் மறுமைக்குரிய நிலைமையையும் ஆராய்ந்து வாழ்ந்துள்ளான் என்பதால் அவன்,

'குடிகளின் சேய்க்குச் சமமானவன்' என்று கம்பர் விளக்குகிறார்.

ஆதிம் மதியும் அருளும்அற னும்அ மைவும்
ஏதில் மிடல்வீ ரருமீகையும் எண்ணில் யாவும்
நீதிந் நிலையும் இவை நேமியி னோர்க்கு நின்ற
பாதிம் முழுதும் இவற்கேபணி கேட்ப மன்னோ (பா:2)

தயரதன் உலகத்து உயிர்களை, 'அறம், பொருள், இன்பம், வீடு - என்ற நான்கு பேறுகளையும் அடைவிக்கிறான். மேலும் தயரதன் நூல்களைக் கேள்வி மூலம் ஆராய்ந்து வாழ்ந்தான் என்பதை, 'நுணங்கு கேள்வி ஆயப்புகுங்கால் அறிவொக்கும்' என்று பாராட்டியுள்ளார். தாயாகவும், தவமாகவும், சேயாகவும், அவரவரது அறிவாகவும் தயரதன் தன் குடிகளுக்கு மட்டும் இல்லாமல் உலகமக்கள் அனைவருக்கும் விளங்கி னான் என்பதை 'எவர்க்கும் அன்னான்' என்று கம்பர் விளக்கு வதைப் பார்க்கும்பொழுது இத்தகைய அரசனை நாடு எப்போது பெறுமோ என்கிற ஏக்கம் தோன்றுகிறது.

குணத்தாலும் நலத்தாலும் உயர்ந்த தயரதன் வேந்தர்க்குரிய நாற் படையும், நல்லமைச்சையும் விரும்பவில்லை. அவன் கையிலுள்ள வேலே அவனுக்கு உற்ற துணை அவன் அறிவே நல்ல அமைச்சு அரசர்க்கு உளவு அறிய ஒற்றர் என்னும் கூட்டம் ஒன்று உண்டு. அதனையும் கம்பர் காட்டும் கருணைக் காவலன் பெறவில்லை. உலகம் முழுவதும் தயரதனைப் புகழ்பவர்கள் மட்டுமே உண்டு, இகழ்பவர்களே கிடையாது. அதனால் அவனுக்கு ஒற்றர் படை தேவைப்படவில்லை. கைவில்லே அவனுக்கு உற்ற துணை அறமே அவனைக் காக்கும் கவசம் மநுநீதிச்சோழனை விட நீதியுடையவன் - என்று கம்பர் தாம் காட்டிய தயரதனைக் கோசிகன் புகழ்வதாகக் கூறி மகிழ்கிறார்.

துனியின்றி உயிர் செல்லச் சுடராழிப் படை வெய்யோன்
பனிவென்ற படியென்னப் பகைவென்று படிகாப்போன்
தனுவன்றித் துணையில்லான் தருமத்தின் கவசத்தான்
மனுவென்ற நீதியான் மகவின்றி வருந்துவான் (14)

அரசனுக்குரிய இலக்கணம்

அரசியலின் முற்றிய தத்துவத்தைக் கம்பர் காட்டியுள்ள முறை, கற்பவர் மனதைக் கனியச் செய்யும். 'அரசனும் குடிமக்களும் தம்முள் கருத்து வேறுபாடின்றி இரண்டறக் கலந்தனர்' என்கிறார் கம்பர். உடலும்

உயிரும் சேர்ந்து மனிதனாவது போன்று, குடிமக்களும் அரசனும் ஒன்று சேர்ந்து 'அரசியல்' என்ற உருவத்தை அடைகின்றனர். அரசியலில் அரசனே உடல் குடிமக்கள் உடலில் தங்குகிற உயிர். உயிர் இல்லையாயின் உடலால் பயனில்லை. ஆதலால் அரசன் தன் உயிர் போன்ற குடிமக்களைக் காக்கக் கடமைப்பட்டவன்.

வயிரவான் பூணணி மடங்கல் மெய்ம்பினான்
உயிரெலாந் தன்னுயிர் ஒப்ப ஓம்பலால்,
செயிரிலா வுலகினிற் சென்று நின்றுவாழ்
உயிரெலா முறைவதோர் உடம்பு மாயினான் (10)

'உலகினில் நின்று வாழ் உயிரெலாம் உறையும் ஓர் உடம்பாயினான்' - என்பதே கம்பர் காட்டும் விழுமிய அரசியல் தத்துவமாகும். வேந்தன் உடலாகவும், குடிமக்கள் உயிராகவும் அமைகின்ற உண்மையை வசிட்டனும் இராமனுக்கு உரைக்கின்றான்.

வறிஞனும் அரசனும்

ஒரு ஏழை விவசாயி தன்னுடைய வயலில் ஒவ்வொரு பயிராகப் பார்த்துப் பார்த்து வளர்ப்பது போல், தயரதன் உலக மக்களை ஒன்று சேர்த்துப் பார்க்காமல், தனித்தனியே கண்காணித்து வருவதைக் கம்பர்,

வையக முழுவதும் வறிஞன் ஓம்புமோர்
செய்யெனக் காத்தினி தரசுசெய் கின்றான் (12)

என்று கூறுவது ஆழ்ந்து சிந்திக்க வைப்பதாகும். "ஏழை விவசாயி தன் வயலில் உள்ள ஒரு பயிர் அழிந்தாலும் தனக்கு இழப்பாக எண்ணுவான். அதுபோலவே தயரதன் மக்களுள் ஒவ்வொருவரையும், உயிர்களையும் துன்பம் அடையாத வண்ணம் காத்து வந்தான்", என்று விரிக்கிறார். குற்றம் செய்தவதைத் தக்கவாறு தண்டித்துப் பிறர் வருந்தாமல் காப்பாற்றும் மன்னன் மனிதனாக இருந்தாலும் மக்கள் அவனை இறைவனாக வைத்து மதிப்பர். இதனை வள்ளுவர்,

முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
இறைஎன்று வைக்கப் படும் (388)

என்கிறார். தன் குடிமக்களை அன்போடு ஆதரித்துச் செங்கோல் செலுத்தும் பெரிய நிலவேந்தனது அடியை உலக மக்கள் விருப்பத்தோடு பொருந்தி நிற்பர். மேற்கண்ட அரசமரபுகள் யாவும் பொருந்திய உத்தம சீலனாகத் தயரதனைக் கம்பர் வார்த்தெடுத்துள்ளார்.

தாயின் நல்லான் குகன்

கமலாசிவம்
பரமத்தி வேலூர்.

உலகில் தாய் என்பவள் தனிச்சிறப்பு மிக்கவள். ஊனினை உருக்கி, உள்உரு பெருக்கி, தனக்கென வாழாத் தன்மையளாகி, ஒவ்வொரு கணமும், உள்வளரும் மழலையின் வளர்விற்காக உயிர்வாழும் தன்மையள். இறைவனைத் தாயாக்கி இன்பம் கண்டிடும் அடியார்கள் ஏராளம். இராமபிரான் தன் தந்தையை "தனியறத்தின் தாய்" என்கிறான். தசரதனோ, தன் கண் அனைய புதல்வர்களை விசுவாமித்திர முனிவரிடம் 'ஒப்படைப்பு' செய்யும்போது "தந்தை நீ, தனித் தாயுநீ யிவர்க்கு" (பா. கா-334) என்கின்றான்.

மாறுபட்ட தாய்

இராமன் முடிசூடப்போகும் செய்தியினைக் கேட்டதும் கடுஞ் சினம் காழ்த்திட, மந்தரை கைகேயினுடைய மனதைப் பலவாறு பேசி கைகேயினுடைய மனதை முழுவதுமாக மாற்றிவிடுகிறாள். முடிசூடும் முன்பு வாழ்த்துக்களைப் பெற வாஞ்சையுடன் வருகிறான் இராமன். சேயினைக் காணும் தாயாக இல்லாமல் ஒரு சேய்மைப் பெண்ணாக மாறிய கைகேயி,

ஆழிசூழ் உலகமெலாம் பரதனே யாள நீபோய்த்
தாழிருஞ் சடைகள் தாங்கித் தாங்கருந் தவமேற்கொண்டு
பூமி வெங்கானம் நண்ணிப் புண்ணிய புனல்களாடி
ஏழி ரண்டாண்டின் வாவென் றேவினன் அரசன் (1601)

என்கின்றாள். அதனைக் கேட்டு, தளர்வடையாத் தகைமையாளனான இராமன் அன்றலர்ந்த செந்தாமரையன்ன திருமுகத்துடன் கானகம் ஏகினன்.

குகன் எனும் குணாளன்

கங்கைக் கரைப்போந்த காகுத்தன் சுற்றத்தினை காண்கிறான் குகன். எதிர்க்கரையில் சேர்ந்திருக்கும் எதிரிலாத் திறத்தானை, ஏற்றிடச் செல்கிறான்.

ஆயிரம் அம்பிக்கு நாயகன், புரைகிளை சுற்றத்தான், கங்கையின் ஆழம் இட்ட நெடுமையினன், இருள் புரை மேனியன், குமிறும்

குரலோன்-வில் துறந்து வாள் ஒழிந்து, சுற்றம் தவிர்த்து, அற்றம் தீர்த்த மனதோடு அண்ணல் இராமனின் அருந்தவப் பள்ளிவாயிலை அடைந்தான். அடி பணிந்தான். வரிசிலை இராமன் தம்பி, வந்திட்ட குகனைப் பார்த்தான். குற்றமற்றவன் எனத் தெளிவுற்றான். குகனின் வருகையைப் பற்றி இராமனிடம் தெரிவிக்கின்றான்.

நிற்றி யீண்டு யென்று புக்கு நெடியவன் தொழுது தம்பி
கொற்றவ! நின்னைக் குறுகினன் நிமிர்ந்த கூட்டச்
சுற்றமும் தானும் உள்ளந்தூயவன்; தாயின் நல்லான்
எற்றுநீர்க் கங்கை நாவாய்க்கு இறை குகன் ஒருவன் (664)

தாயின் நல்லான்

மாறுபட்ட மனதினளான, கைகேயி என்னும் தாயின், நாவினால் சுட்ட வடுவினால், நலிந்துபோன உள்ளங்களோடு உறைந்திடுவோர்தம், 'உளவியல்' தனை உணர்ந்து அதனை உலகிற்குத் தெளிவுபடுத்துகிறார், கம்பர். தெய்வத் திருமகனைக் காண வந்தவன் வேடுவன், ஆயினும் உள்ளம் தூயவன். அதனால்தான் 'தாயின் நல்லான்' ஆகத் தோற்ற மளிக்கின்றான். அதனை இலக்குவன், இராமனிடம் சொல்கிறான். 'உள்ளம் தூயவன்' உயர்வடைகின்றான். 'தாயின் நல்லானாக' தழைந்து சிறக்கின்றான். ஏழை வேடுவன், ஏந்தலின் தாயாக அமைவது, கம்பரின் கைவண்ணமும். உளமுணர் உத்தியும் செய்யும் திறனால்தான் எனில் மிகையாகாது. கைகேயின் பழிச்செயல், இலக்குவன் மனதில் "நீறு பூத்த நெருப்பே போல்" நிலைத்து வெம்மை புரிவதாக விளங்குகிறது. அதன் விளைவுதான் 'குற்றமற்ற கொள்கையுடன், குணநல சிறப்பினனாக' வந்திட்ட குகனைக் கண்டவிடத்து, 'தாயின் நல்லான்' என தயக்கமின்றி சொல்லச் செய்தது.

இராமன் குகனை ஏற்றல்

மண்ணுலகை மூவடியால் அளந்தவனும், மாவடு வாயினால் மண்ணை அள்ளித் தின்றவனும், மக்களை மழைமேகம்போல் காப்பவனுமான இராமன் இந்த 'தாயின் நல்லான்' என்கின்ற அறிமுகத்தினை ஏற்றிடும் மனப்பான்மையில் இருந்தமையால்தான்,

அண்ணலும் விரும்பி என்பால் அழைத்தி நீ என்றான்
பண்ணவன் வருக என்ன பரிவினன் விரைவில் புக்கான்
கண்ணனைக் கண்ணில் நோக்கிக் களித்தனன் இருண்ட குஞ்சி

மண்ணுறப் பணிந்து மேனி வளைத்து வாய் புதைத்து நின்றான்! (665)

ஊழிபெயரினும் தான்பெயரா உணர்வாளன், சுற்றம் தழுவும் சுந்தர ராமன் குகனை ஏற்றிடுகிறான்.

இருத்தி யீண்டு என்னலோடும் இருந்திலன், எல்லை நீத்த
அருத்தியன் தேனும் மீனும் அமுதினுக்கு அமைவதாகத்
திருத்தினன் கொணர்ந்தேன் என்கொல் திருவுளம் என்ன வீரன்
விருத்த மாதவரை நோக்கி முறுவலன் விளம்பலுற்றான் (666)

குகன் கொணர்ந்த கையுறைப் பொருளைக் கண்ணுற்ற இராமபிரானும்,

அரியதாம் உவப்ப உள்ளத்து அன்பினால் அமைந்த காதல்
தெரிதரக் கொணர்ந்த என்றால், அமிழ்தினும் சீர்த்த அன்றே
பரிவினால் தழீஇய என்னில் பவித்திரம் எம்மனோர்க்கும்
உரியன் இனிதின் நாமும் உண்டனம் அன்றோ? - (அ.கா.கு.ப.667)

என்று சொல்லிடுகிறான் இராமன்.

குகனும், "பால்நினைந்தூட்டும் தாயினும் சாலப்பரிந்து" அந்தத் தயாபரனுக்கு, 'அமிழ்தினும் சீர்த்த உணவை' அன்பினால் அளித்து மகிழ்கின்றான். இதம் தரும் பரிவினால் இன்புறச் செய்கின்றான். இத்தகைய நல்லவனாகிய குகனை, "தாயின் நல்லான்" என்பதைத் தவிர வேறு எப்படி அழைத்திடல் இயலும்

அரிசினத்தால் ஈன்றதாய் அகற்றிடினும்; மற்றவள்தன் அருள்நினைந்தே அழும் குழவி போன்ற நிலையில், அண்ணல் இராமன், அன்னை சொல்லின் வன்மையினால் வாடிப்போயிருக்கும் நிலையில், வாடிய பயிருக்கு மழைபோல் வந்திட்ட குகன் இங்கு தாயின் நல்லானாக இருந்து சிறக்கின்றான்.

பின்னவன், பிழைபடப் பேசமாட்டான் என்றே முன்னவன் 'முறுவலன்' ஆகின்றான். இப்படி ஒரு 'உளவியல்' காயத்திற்கு உற்ற மருந்தினை, பரிவுடன் பார்த்து, பார்த்து இடுவதற்கு பாநயம் மிக்க கம்பருக்கு இணையாக எந்த மருத்துவரும் இருந்திட முடியாது.

வாழ்ந்து காட்டிய இராமன்

ஸ்ரீ வித்யா ராமகிருஷ்ணன்
முழு நேர ஆய்வாளர். இசைத்துறை இராணி மேரிக் கல்லூரி, சென்னை.

ஒரு மனிதன் எப்படி வாழவேண்டும் என்பதற்கு உதாரணம் இராமாயணம். அதைக் கடவுளே அவதாரமாக வந்து காட்டியது மிகச் சிறப்பான ஒன்றாகும். அதைக் கம்பன் எவ்வாறு வர்ணிக்கிறார் என்பதை சில பாடல்கள் மூலம் நாம் காண்போம்.

பெற்றோரிடம் காட்டும் அன்புகலந்த பணிவு

எந்தை வருக, ரகு நாயகா வருக, மைந்தா வருக
மகனே இனிவருக, என்கண் வருக எனதாயிர்வருக அபிராமா வருக

என்று கோசலை இராமனைக் கொஞ்சி அழைப்பதாக அருணகிரிநாதர் திருசெந்தூர் திருப்புகழில் பாடியுள்ளார். அக்கோசலை சுமித்திரை இருவரிடமும் அதே பாசத்துடன் இருந்ததைக் கீழ்வரும் பாடல் கைகேயி, தன் மகனான பரதனுக்கு நாடு வேண்டும் என்ற ஆசையால் தயரதனிடம் இரண்டு வரம் கேட்டு வாங்கிக் கொள்கிறாள். அதை தய்ரதன் கூறியதாக தானே இராமனிடம் கூறுகிறாள். அதற்கு இராமன் கூறும் பதில்தான் இச்செய்யுள்.

மன்னவன் பணி அன்றாகின், நும் பணி மறுப்பெனோ? என்
பின்னவன் பெற்ற செல்வம் அடியனேன் பெற்றது அன்றோ?
என் இனி உறுதி அப்பால்? இப் பணி தலைமேல் கொண்டேன்
மின் ஒளிர் கானம் இன்றே போகின்றேன்; விடையும் கொண்டேன்.

ஆசிரிய பக்தி

ஒருமாணவன் தன்ஆசிரியரிடம் காட்டும் பக்தியை இராமன் செய்யும் சில செயல்கள் மூலம் நாம் அறியமுடியும். வனத்தில் தாம் செய்யும் தவம் வேள்வி போன்றவற்றைச் செய்ய விடாமல் தடுக்கும் அரக்கர்களின் துன்பத்திலிருந்து தம்மைக் காக்குமாறு வேண்டிய விசுவாமித்திரரின் முக்கிய சீடராக இராமனும், இலக்குவனும் அவரைப் பின்தொடர்ந்தனர்.

அகத்திய முனிவரின் சாபத்தால் அரக்கியாகிய மாறிய தாடகையின் இயல்பை விசுவாமித்திரர் கூறக் கேட்டு முதலில் தயங்கிய இராமன்

ஆசிரியரின் தூண்டுதலால் காரணகயை வதம் செய்து அவளுக்கு சுவர்க்கத்தைக் காட்டினான். அகலிகையின் சாபவிமோசனத்தைப் பார்த்து மகிழ்ந்த விசுவாமித்திரர், தனது தலைசிறந்த சீடனாக இராமனைப் புகழ்ந்து ஆயுதங்களைத் தனது பரிசாகக் கொடுத்தார்.

உடன்பிறந்தவர்களிடம் காட்டும் பாசம்

இலக்குவன் தன் அண்ணனின் வழியைப் பின்பற்றி அவருக்கு வேண்டிய பணிவிடைகளைச் செய்து தன் அன்பைக் காட்டினான். பரதன் அதற்கும் ஒருபடிமேலாக இராமன் இல்லாத அயோத்தியில் பாதுகையை வைத்து அரசாட்சி செய்தான். கும்பகர்ணன் தனது அண்ணன் இராவணனின் தீங்குகளைப் பொருட்படுத்தாது அவன் கூடவே இருந்து அவனுக்காகவே உயிரைவிட்டுத் தன் பாசத்தைக் காட்டினான்.

கணவன் மனைவியரின் வாழ்க்கை முறை

இற்றைக்கும் ஏதேழ் பிறவிக்கும் இன்னொரு
மாதரைச் சிந்தையாலும் தொடேன்

என்று கற்பின் நெறியில் வாழ்ந்த இராமனுக்கு ஏற்றாற்போல கணவனின் வழியிலேயே தானும் மரவுரி தரித்து அவரைப் பின்தொடர்ந்து அத்துயரமான நேரத்தில்கூட மகிழ்ச்சியாக இல்லறம் நடத்தி சீதை வாழ்ந்ததை ஆரண்ய காண்டத்தால் அறியலாம்.

நட்பின் பெருமை

படகு ஓட்டும் வேடுவர் குலத்தனான குகன், இராமன் நதியைக் கடக்க உதவினான். அங்கு இலக்குவன் இராமனுக்கு செய்யும் சேவையைக் கண்டு கண்ணீர் மல்கி நின்றான். தன்உயிர் உள்ளவரை இராமன் தன்னுடனேயே தங்கவேண்டும் என்று வேண்டிக்கொண்ட குகனை மனமுவந்து தன் சகோதரனாக ஏற்றுக் கொண்டான். சீதையைத் தவறவிட்ட இராமன், தேடிப் போகும் வழியில் அனுமனைப் பார்த்து அனுமன் மூலம் அவனுடைய அரசன் சுக்ரீவனை சந்தித்து அவனை வஞ்சித்த அவன் அண்ணன் வாலியை வதைத்து நாட்டை சுக்ரீவனுக்கே மீட்டுக் கொடுத்தான். அவனையும் தன் சகோதரனாக ஏற்றான். தன்னை வதைத்தது இராமன் என்று அறிந்தபின்னும் தன் மகனான அங்கதனை இராமனிடமே அடைக்கலமாக ஒப்படைத்த மனோபாவத்தை, வாலி மூலம் கம்பனில் காண்கிறோம். இலங்கை

அரசனான இராவணனின் தம்பி வீடணன் எவ்வளவோ எடுத்துச் சொல்லியும் அண்ணன் செவிசாய்க்காமல் கோபித்ததால் அவன் இராமனிடமே சரணாகதி அடைகிறான். அவனுடைய வார்த்தைகளைக் கேட்டு, அடைக்கலமாக வந்தவனை ஏற்றுக்கொள்வதே முறை என்று தங்களுடன் சேர்த்துக் கொள்கிறான்.

குகனொடும் ஐவர் ஆனேம் முன்பு பின் குன்று சூழ்வான்
மகனொடும் அறுவர் ஆனேம் எம்உழை அன்பின் வந்த
அகன் அமர் காதல் ஐய! நின்னொடும் எழுவர் ஆனேம்

இவ்வாறு இராமனின் நட்புக்குப் பாத்திரமான இவர்கள் யாவரும் நட்பின் பெருமையைக் காட்டியுள்ளனர்.

வீழ்ந்து காட்டிய இராவணன்

ஆ.இராபாரதராஜா

முனைவர் பட்ட ஆய்வாளர், முதுகலைத் தமிழாசிரியர்,
வேளாங்கண்ணி மேல்நிலைப்பள்ளி, அசோக் நகர், சென்னை

கம்பனின் காவியத்தில் கற்பனை வளமும் கருத்து நலமும் விரவிக் கிடப்பதோடு இலக்கியச்சுவைகள் அத்தனையும் நிரம்பி வழிகின்றன. கம்பனின் துறைதோறும் புகுந்து பேசும் வளமிகு பாடல்கள் காற்றுப் புக முடியாத இடங்களிலும் புகுந்து இலக்கிய மணத்தைப் பரப்புகின்றன; இலக்கியச் சுவையை நிரப்புகின்றன. அவற்றுள் வீரம் பல இடங்களில் பேசப்படுகிறது.

கதைமாந்தர்களின் வீரம்

இராமன், இலக்குவன், பரதன், குகன், வாலி, சுக்கிரீவன், ஜடாயு, இராவணன், வீடணன், கும்பகர்ணன், இந்திரசித்து போன்றோர் வாயிலாக ஒவ்வொருவரின் வீரத்தையும் இடத்திற்கேற்பப் பட்டியலிட்டுப் பாராட்டுகிறார் கம்பர். சான்றாக இராமனுக்கும் இராவணனுக்கும் போர் நிகழும்போது, பத்துத்தலை கொண்ட அரக்கர் குலக்கோமான் இராவணன் அஞ்சாது, தான் சிவபெருமானிடம் வேண்டிப் பெற்ற வரமும் வாளும், வானுலகத் தேவர்களெல்லாம் அஞ்சுகின்ற தோளும் உடையவனாகப் போற்றப்பெறுகிறான். அவனை எதிர்கொண்ட வல்லமை மிக்க இராமபிரான், தன்வலி வாய்ந்த வளியை எய்து பத்துத்தலைகளிலும் அணியப் பெற்ற முத்துகள் கொத்துக் கொத்தாய் தொங்கி அலங்கரிக்கும் மணி மகுடங்களைச் சிதறி விழச் செய்தது; இராவணனைப் பதறி விழச் செய்தது; கை கால்களை உதறி எழச் செய்தது; பின்பு, தான் செய்த தவற்றை எண்ணிக் கதறி அழச் செய்தது. அப்படிப்பட்ட நிலை இராவணனுக்கு ஏற்பட வைத்த இராமனின் வாக்கு என்ன தெரியுமா?

ஆள் ஐயா உனக்கு அமைந்தன மாருதம் அறைந்த
பூளை ஆயின கண்டனை இன்று போய்ப் போர்க்கு
நாளை வாஎன நல்கினன் நாகு இளங்கமுகின்
வாளை தாவுறு கோசல நாடுடை வள்ளல்- (7354)

என்ற பாடலின் கருத்துகளே ஆகும்.

அடே இராவணா, உன் பெரும் படைகள் புயலில் பறக்கும் பூளைப்பஞ்சுகள் போல் பறந்து ஒழிந்தன. இன்னும் உன் வீரத்தைக் காட்ட நினைத்தால், "இன்று போய்ப் போர்க்கு நாளைவா"- என்ற இராமனின் ஏளனச் சொற்களும், தமக்கு இச்சிறுவன் உயிர்ப் பிச்சை கொடுக்கிறானே! என்று எண்ணி நொந்து, நூலாகி போர்க்களத்திலிருந்து அரண்மனைக்குக் குனிந்த தலை நிமிராமல் நடந்து செல்கிறான் இராவணன். அப்பொழுது இராவணன் பெருமையும் வீரமும் பேசும் கம்பனின் பாடல்,

வாரணம் பொருத மார்பும் வரையினை எடுத்த தோளும்
நாரத முனிவர்க்கேற்ப நயம்பட உரைத்த நாவும்
தாரணி மவுலி பத்தும் சங்கரன் கொடுத்த வாளும்
வீரமும் களத்தே போட்டு வெறுங்கையோடு இலங்கை புக்கான். 7355

வாள் வலிமை- என யாவையும் இராமனின் வில்லால் அடிபட்டு வீழ்ந்தன. இராவணன் இராமனின் சொல்லால் அடிபட்டு வீழ்ந்தான். இதையே கம்பர், "வீரமும் களத்தே போட்டு வெறுங்கையோடு இலங்கை புக்கான்" என்று ஏளனம் செய்கிறார். வீரமும், வலிமையும், இறை அருளும், சிவவாளும் பெற்ற இராவணன் இராமனால் இழி நிலைக்கு ஆளாகக் காரணம் என்ன?

காமத்தால் விளைந்த நாசம்

இராம, இலக்குவர்கள்மீது கொண்ட காமத்தின்பால் இலக்குவனின் அம்பால் மூக்கறுபட்ட இராவணன் தங்கை சூர்ப்பநகை, இராவணனிடம் சென்று புலம்புகிறாள்; பொய் பல விளம்புகிறாள். "அண்ணா மூவுலகிலும் காண வொண்ணா முத்தழகி, இராமனின் மனையாளாய்க் காட்டிலே குடியிருக்கும் சித்தழகி. அவள் சீதை என்பாள். அவ்வழகியை வாரணம் பொருதமார்பும் வரையினை எடுத்த தோளும் உடைய உனக்கு மனையாளாக்கலாம் என்ற ஆசையோடு சீதையைக்கேட்ட என்னை, ஒரு பேதை வாதை செய்து விட்டான்" என அழுது அரற்றுகிறாள் வஞ்சமகள் சூர்ப்பநகை.

இந்த வஞ்சவுரைகளை நெஞ்சத்தில் பதித்த இராவணன் கொஞ்சமும் அஞ்சாது, காமம் தலைக்கேற 'கரன்' என்ற வலிமை வாய்ந்த அரக்கனை அழித்த இராமன் வலிமையையும், சூர்ப்பநகையின் மூக்கறுத்த உரம் வாய்ந்த இலக்குவனின் வலிமையையும், காமன் அம்பினால் முன்பு

பெற்ற வரத்தையும் மறந்தான், ஆனால் "அழகுமகள்' சீதையை மட்டும் மறக்கவில்லை, இதனைக் கம்பர்

கரனையும் மறந்தான்; தங்கை மூக்கினைக் கடிந்து நின்றார்
உரனையும் மறந்தான்; உற்ற பழியையும் மறந்தான்; வெற்றி
அரனையும் கொண்ட காமன் அம்பினால் முன்பு பெற்ற
வரனையும் மறந்தான்; கேட்ட மங்கையை மறந்திலாதான்- (3250)

என்ற பாடல் மூலம் இராவணனின் காமத்தைத் தோலுரித்துக் காட்டுகிறார். இது சூர்ப்பநகை சொன்ன பொய்யுரையால் இராவணனின் சிந்தை சிதறிக் காமத்தில் திளைத்தது. இதனைக், "கற்றறி ஞானம் இன்றேல் காமத்தைக் கடக்கலாமோ?" என்று கம்பர் உட்புகுந்து அறவுரை தருகிறார். மேலும், சீதை மீது கொண்ட காமத்தால் (விரகதாபத்தால்) துடித்த இராவணன், சீதையை இதயச்சிறையுள் அடைத்தான்.

அவன் உள்ளம், வெயில்பட்ட வெண்ணையாய் உருகுகிறது. அன்றியும், கொல்லன் உலைத்துருத்தி போல் பெருமூச்சு விடுகிறான்; தென்றல் சுடுவதாகச் சாடுகிறான். இவையாவும் காமத்தின் உச்சமே!

சீதை நகுவாளே!

இராமன் எய்த அம்பால் வலியிழந்த யானையாக வீரமும் களத்தே போட்டு வெறுங்கையோடு இலங்கை செல்லும் போது, இராவணன்,

மாதிரம் எவையும் நோக்கான் வளநகர் நோக்கான் வந்த
காதலர் தம்மை நோக்கான் கடற்பெரும் சேனை நோக்கான்
தாதவிழ் கூந்தல் மாதர் தனித்தனி நோக்கத் தான் அப்
பூதலம் என்னும் நங்கை தன்னையே நோக்கிப் புக்கான் (7357)

அஃதாவது 'எந்தப் பக்கமும் பார்க்காமல் குனிந்த தலை நிமிராமல் சென்றான்' என்பதைக் கம்பர் தம் கவித்திறம் காட்டி, 'மாதிரம் எவையும் நோக்கான்' எனும் பாடல்வழி விளக்குகிறார். அது மட்டுமா? இராவணன் குனிந்து கொண்டே செல்லும்போது 'பூமி என்ற நங்கையை' உற்று நோக்கிச் செல்வதாகக் கூறுவது, அந்நிலையிலும் இராவணனின் 'காம மோகம்' கடலினும் பெரிதாகக் கம்பரால் காட்டப் பெறுகிறது. 'பூமித்தாய்' என்று சொல்லாமல் 'பூதலம் என்னும் நங்கை' என்ற சொல்லாட்சியால் இராவணின் காம வெறி மேலோங்கி நிற்கிறது. இதனைக் கீழ்க் காண் பாடல் வழி அறியலாம். கவிழ்ந்த தலை நிமிராத காமுகனாகிய இராவணன்,

வான் நகும் மண்ணும் எல்லாம் நகும் நெடுவயிரத்தோளான்
நான் நகும் பகைஞர் எல்லாம் நகுவர் என்றதற்கு நாணான்
வேல் நகு நெடுங்கண் செவ்வாய் மெல்லியல் மிதிலை வந்த
சானகி நகுவாள் என்றே நாணத்தால் சாம்புகின்றான் (7365)

என்ற வைர வரிகள் நிறுவுகின்றன.

நிறைவுரை

இவ்வாறு இன்னும் பல இடங்களில் பல பாடல்கள் வழியாக இராவணனின் தோல்விக்குக் காரணம் சீதை மீது கொண்ட தீராக்காமம்; அது இராவணனின் வீரம், மானம், வலிமை, படை, பலம், அரசு, இறைசக்தி யாவற்றையும் அழித்து அறம் நிலைக்க கண்ணியமும், பெண்ணியமும் தழைக்க வழி செய்தது. "தீராக்காமம் போராய் முடியும்" என்பதும் "காமத்தைக் கொல்லவில்லையேல், காமம் கொன்றுவிடும்" என்பதும் 'இராவணனின் வீரத்தை வென்றது காமம்' என்பதும் கம்பர் காட்டும் வாழ்வியல் நெறியாகும்.

செய்து காட்டிய சீலன் அனுமன்

காஞ்சி **வெ.ஆ.சம்பந்தம்,** ரெட்டிவலம்.

அனுமன் எனும் எளிய தொண்டன், தொடர்ந்து இராம நாமம் உச்சரித்து உச்சரித்து சீதாப்பிராட்டியாரைத் தேடிக் கண்டு காத்தவன். இராம பிரான் காவியத்தலைவன் எனில் சுந்தர காண்டத்தின் தலைவனாக பாகவத உத்தமன் அனுமன் என்பதைக் கம்பர் போற்றுகிறார். பக்தி, தவம், வீரம், பணிவு, நன்னெறி யாவும் தன்னகத்தே கொண்ட அனுமன் சுந்தரனாகத் திகழ்கின்றான் என்பதைக் கம்பர் உலகுக்கு உணர்த்துகிறார்.

கானகத்தில் சீதாப்பிராட்டியாரைப் பிரிந்து வருந்திய இராமலக்குவனர், கிட்கிந்தை எனும் மலைப்பிரதேசத்தில் தம்மை எதிர்கொண்டு சந்திக்க வந்த அனுமனை நோக்கி, நீயாரப்பா, எனக் கேட்கின்றனர். அங்கே தம்மை அறிமுகம் செய்துகொள்ளும் அனுமன் கூறுவதாக அருமையான எளிய பாடலைக் கம்பர் தருகிறார்.

மஞ்செனத் திரண்ட கோலமேனிய, மகளிர்க்கெல்லாம்
நஞ்செனத் தகையவாகி நளிர் இரும்பனிக்குத் தேம்பாக்
கஞ்சம் ஒத்தலர்ந்த செய்ய கண்ண, யான் காற்றின் வேந்தர்க்கு
அஞ்சனை வயிற்றின் வந்தேன் நாமமும் அனுமன் என்றார்.

அடக்கத்துடன் கூடிய அறிமுகம். கிட்கிந்தை எனும் மலைப்பகுதியில் ரிஷியமுகம் எனும் வெளிப்பரப்பில் மதங்கவனம் ஏனும் பசுஞ் சோலைகள் மிகுந்த பகுதியில் வானர அரசன் சுக்கிரீவனுடன் நட்பு கொண்டு இராமலக்குவருக்கு நண்பர்களாக்கி உதவி புரியவைத்தவன் அனுமன்.

இராமபிரானின் கட்டளையை ஏற்று தெற்கு நோக்கிப் பயணம் செய்த அனுமன், கடலின் மேல் தாவிப் பறந்து சென்று இலங்கை மண்ணில் அழிந்து அசோக வனத்தில் பிராட்டியாரைக் கண்டு, பணிவுடன்,'அண்டர் நாயகன் அருள்தூதன் நான்' எனச் சொல்லி நிற்பதாகக் கம்பர் பாடியுள்ள பாடல், இடம் நிலையறிந்து பாடிய பாடல்.

அனுமனின் ஆறுதல் சொற்களைக் கேட்ட பிராட்டியார், தன் கவலையைப் போக்கி மனம் ஆறுதல் பெறுவதாகக் குறிப்பிடும் இடம் கம்பனின் கவித்திறம் காட்டும் பாடல். பிராட்டியாரைக் கண்டு வணங்கி ஆறுதல் சொல்லி விடைபெற்றுத் திரும்பிய அனுமன் இராமபிரானைக்

கண்டதும் இராமபிரானை வணங்கும் முன்னதாகப் பிராட்டியார் இருக்கும் தென்திசை நோக்கி வணங்கி எழுந்து பிறகு இராமபிரானை வணங்குவது சிறப்புக் குறிப்பறிந்து மனம் நிறைந்து அமைதி பெறும் நிலை.

கண்டனன் கற்பினுக்கு அணியைக் கண்களால்

'பிராட்டியாரைக் கண்டனன்' என்று கூறுவதை விடுத்து, 'கண்டனன் தாயாரை' என நல்ல செய்தியை விவேகத்துடன் பணிவாக அனுமன் தெரிவிப்பதாகக் கம்பர் உணர்த்தும் இடம். அனுமனின் நற்பணியைக் கம்பரின் கவித்திறன் உயர்த்திக் காட்டுகிறது.

இராமபிரானிடம் வந்து சேர்ந்த அனுமன் பிராட்டியாரைத் தசித்ததையும் அவர் தந்த அடையாளமான சூடாமணியினையும் தந்து அமைதிப்படுத்தினான். தொடர்ந்து படைகளைச் சேர்த்து இலங்கை சென்று போரிட்டு இராவணனை மாய்த்து பிராட்டியாருடன் ஊர்திரும்பி அயோத்தி மாநகரில் முடிசூட்டு விழாவில் யாவரும் கலந்து கொண்ட காட்சியில்கம்பநாட்டாழ்வார் தரும் நிறைவான பாடல்.

அரியணை அனுமன் தாங்க அங்கதன் உடைவாள் ஏந்த
பரதன் வெண்குடை கவிழ்க்க இருவரும் கவரிபற்ற
விரிகடல்சூழ் உலகம் ஏத்தும் வெண்ணைண தன் சடையன் வன்மை
மரபுளோன் கொடுக்க வாங்கி வசிட்டனே புனைந்தான் மவுலி.

கம்பன் - ஏகம்பன் - நன்றியுடன் நாம் வணங்கத்தக்க எளிய அற்புதத் தமிழ்த் தலைவன் கவிஞன்.

கம்பராமாயணத்தில் பல கதாபாத்திரங்கள் உலவுகின்றன. அவற்றுள் சொல்லில் மட்டுமன்றிச் செய்தும் காட்டிய சீலன், கம்பநாட்டாழ்வாரின் இராம அனுமன் என்று பெருமையுறச் சொல்லலாம்.

கம்பனின் பார்வையில் கும்பனின் பாத்திரம்

திருமதி. நா.தேவி
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, மாலோலன் கலை அறிவியல் கல்லூரி,
மதுராந்தகம்

உறங்குவதையே தொழிலெனக் கொண்டவன் என்ற நிலையில் இருந்தாலும் கும்பன் கம்பநாடன் பார்வையில் அறநெறிச் சிந்தனைகளில் எப்போதும் உறங்காநிலை கொண்டவனாக விளங்கினான் என்பது கண்கூடு. 'ஊழிநாளும் உறங்கியவன் என்றாலும், அவனுள்ளும் நிகழ்ந்த உளவியல் மாற்றங்களைக் கம்பன் தெளிவாகப் படம்பிடித்துக் காட்டுகிறான்.

குலமானம் காத்தவன்

போர்வினை தொடங்கும்முன்பு இராவணனிடம் பேசும் கும்பனை, மன்னனாயினும் அவன் செய்த தவறுகளை இடித்துரைக்கத் தவறாத நல்ல மனிதனைக் கம்பன் காட்டுகிறான். மன்னன் செய்த தவறைச் சுட்டுவதுடன், காலம் கடந்து சென்ற பின்னர் பேசிப்பயனில்லை. எனவே, போர் தொடுப்பதே சிறந்த உபாயம் என்கிறான். "நீ கொண்டுவந்து இலங்கையில் வைத்தது சீதை என்னும் பெண் என்று நினைக்கிறாய். ஆனால், அவள் பெண்ணல்லள்; கற்பென்னும் பெருநெருப்பு" என்கிறான்.

அண்ணன் என்றாலும் அவன் நிலையோடு ஒவ்வாத தன்மை கொண்டவனாய் விளங்கும் கும்பன் தன்னுடைய குலப்பெருமை குன்றி விடுமோ? என அச்சமுறுகிறான். குலமானம் காப்பதே நம்முடைய மிகமுக்கிய கடமை என்று பேசுகிறான். உன்னுடைய தகாத ஆசையினால் இலங்கை மாநகர் தீப்பற்றி எரிந்ததோடு அரசன் என்ற உன் பெருமைவீயும் சேர்ந்து அழிந்தது என்கிறான்.

ஓவியம் அமைந்த நகர் தீ உண உளைந்தாய்
கோ-இயல் அழிந்தது என வேறு ஒரு குலத்தோன்
தேவியை நயந்து சிறை வைத்த செயல் நன்றோ?
பாவியர் உறும் பழி இதின் பழியும் உண்டோ? (6119)

அண்ணன் செய்த செயலால் தன்குலப் பெருமையும், புகழும் போயினவே என்ற ஆதங்கம் கும்பன் பேச்சில் தெளிவாகின்றது.

தன்னுடைய கோபத்தின் தன்மையைக் கட்டுப்படுத்தி அதேநேரத்தில் அழுத்தமுற "கோ - இயல் அழிந்தது" என வெளிப்படுத்தியமை ஈண்டு இன்புறத்தக்கது. இராவணன் செய்த செயல் கும்பனின் உள்ளத்தில் ஏற்படுத்திய உளவியல் தாக்கத்தை இங்கே கம்பன் குறிப்பிடுகிறான். "நாம் எப்போதும் நம் மானஉணர்வினைப் பற்றிப் பெருமையாகப் பேசிக்கொள்கிறோம்! ஆனால், மானத்தைக் காப்பதற்கு இடையூறாய் காமத்தைப் போற்றுகின்றோம்! மானுடர் தானே என்று இழிவாகப் பேசிப்பேசி அவர் பகையைப் பெற்றோம்! என்னே? நல்ல அரசாட்சி நம்முடையது என்கிறான். மிகச்சிறந்த அறத்தின் தலைவனாகக் கும்பனைப் படைக்காவிடிலும், 'பிறன்மனை நயத்தல்' என்னும் மிகப் பெரிய குற்றம் தன்குலத்தையே அழித்துவிடும் என்ற உண்மை நிலையுணர்ந்தவனாகப் படைத்துவிட்டான். அவன் உள்ளத்தின் வெளிப்பாடுகளை கட்டவிழ்ந்த சொற்கள் தெளிவுபடுத்துகின்றன.

ஆசுஇல் பரதாரம் அவை அஞ்சிறை அடைப்போம்
மாசு இல் புகழ்க் காதலுறுவோம் வளமை கூரப்
பேசுவது மானம் இடை பேணுவது காமம்
கூசுவது மானுடரை நன்று நம கொற்றம் (6122)

தன்மானம்

போரில் பல்லாயிரக்கணக்கனோர் இறந்துபட்டபின், இராவணன் தன் தம்பியை எழுப்பிவர உத்தரவிடுகிறான். வந்த கும்பனின் முதற்கேள்வி, 'ஆனதோ வெஞ்சமம்? அலகில் கற்புடைச் சானகி துயர் இனம் தவிர்ந்தது இல்லையோ?' என்பதுதான்.

'இராவணா நீ இரண்டு செயல்களைச் செய்ய நினைத்துள்ளாய். அவை இரண்டும் நடவாத காரியம். அவை என்னவென்றால், ஒன்று இராமனை வெல்லலாம் என்பது ரிதொன்று சீதைமேனியைப் புல்லலாம் என்பது. இவற்றில் ஒன்று நடவாது. எவ்வாறெனின் ரிதொன்று எவ்வாறு நடவாதோ அவ்வாறே ஒன்றும் நடவாது என்கிறான்' என்பாதாக உரை நிகழ்த்துவார் புலவர் கீரன். (கம்பராமாயணச் சொற்பொழிவு ஒலிநாடா) இவ்வாறெல்லாம் அறம் கூறிய கும்பகர்ணன் உளத்தின் வெளிப்பாடு அனைவரும் அறிய முடிகிறது. "அறம் வெல்லும் பாவம் தோற்கும்" என்ற இராமாயணப் பாவிகத்தின் தாக்கத்தினை முற்றும் உணர்ந்தவனாகக் கும்பன் பேசும் வார்த்தைகளில் உளவியல் தன்மை அறியத்தக்கது.

இப்படி அறமுரைத்த கும்பனை இராவணன் பேசக்கூடா வார்த்தைகளால் பேசினான். குலமானம் காக்க விழைந்தவன் கும்பன். அவனுடைய தன்மானத்திற்கு இழுக்கு நேர அனலிடைப் புழுவாய்த் துடித்தான். வீரம் செறிந்த கும்பனைக் கோழை என்று இராவணன் ஏசியமை கண்டு உள்ளம் பொருமுகிறான். கேட்ககூடாத வார்தைகளை அண்ணனிடமிருந்து கேட்டவன் குலமானம் போகாமலும் தன்மானம் தரங்கெடாமலும் இருக்க ஒரே வழி போர் செய்வதுதான் எனத் தீர்மானிக்கிறான்.

மானிடர் இருவரை வணங்கி மற்றும் அக்
கூனுடைக் குரங்கையும் கும்பிட்டு உய் தொழில்
ஊனுடை உம்பிக்கும் உனக்குமே கடன்
யான் அது புரிகிலேன் எழுக போ என்றான் (7363)

சிறந்த வீரனான கும்பனிடம் 'கும்பிட்டு உய் தொழில் ஊனுடை உம்பிக்கும் உனக்குமே கடன்' என்ற சிறிய வார்த்தை சீற்றத்தை உண்டாக்கியது. அந்த வார்த்தைகள் அவனுடைய தன்மான உணர்வினில் தைத்து வடுவாகி நின்றது. சொன்னவன் அண்ணன் என்ற காரனத்தால் தன்மானத்திற்கும் நன்றியுணவிற்கும் இடையில் ஊசலாடுகின்ற கதாபாத்திரமாக கும்பனைப் படைத்துக் காட்டுகிறான் கம்பன்;. ஒரு நாணயத்தின் இரண்டு பக்கங்களைப் போன்று கும்பனின் மானத்திற்கும்; மற்றும் நன்றியுணர்வுக்கும் இடையே நிகழும் போராட்டத்தைக் காட்டி அங்கே மானத்தைக் காட்டிலும் 'நீர்க்கோல வாழ்வை நச்சி நெடிதுநாள் வளர்த்துவிட்டார்க்கு உயிர் கொடுக்கும்' கடமையுணர்வு விஞ்சி நிற்கும் நிலையைக் காணலாம்.

புலையறு மரணம் எனக்குப் புகழ்

நன்றியுணர்வினால் உந்தப்பட்ட கும்பகர்ணன் போர்த்தொழில் விந்தைகள் காண்பாய் ஏ பூதலமே! என்று சூளுரைத்துக் கிளம்பினான். ஆயினும், அண்ணனிடம் இறுதியாக ஒன்றினைக் கூறுகிறான். "நான் வெற்றி வாகை சூடிவருவேன் என்று எந்தவொரு போர்களத்திற்குச் செல்லும் முன்னும் சொல்வது இயற்கை. ஆனால், இன்று அவ்வாறு சொல்ல என்னால் இயலவில்லை. என்றால், விதி என்பிடர்பிடித்து உந்துகின்றது. நான் இப்போரிலே வீரமரணம் அடைவது நிச்சயம். அவ்வாறு அது நிகழ்ந்தால் அப்போதாவது சீதையை விடுத்து நீயாவது மக்களுடன் வாழ்வாய்" என்றான். அறத்திற்குப் புறம்பாக வெற்றி கிட்;டுதல் அரிது என்பதை அறிந்தவனாகக் கும்பனின் உள்ளம்

பேசுகிறது.

வென்று இவண் வருவென் என்று உரைக்கிலேன் விதி
நின்றது பிடர் பிடித்து உந்த நின்றது
பொன்றுவென் பொன்றினால் பொலன் கொள் தோளியை
'நன்று' என நாயக விடுதி நன்று அரோ (7366)

தன்னை வெல்வராயின் அவர்கள் இராவணனையும் வெல்வர் என்று கும்பன் அறிவுறுத்துகிறான். தான் அழிந்தாலும் அரக்ககுலம் வாழவேண்டும். தன் அண்ணனும் அவன் மக்களும் நலமுடன் வாழவேண்டும் என்ற ஆசை கொண்டவனாகக் கும்பன் விளங்கினான்.

போர்க்களத்தில் வீடணன் மூலம் கும்பனைப் பற்றி அறிந்த இராமன் அவனையும் அறத்தின்பால் சார்ந்தொழுக அழைக்கின்றான். அழைத்த வீடணனிடத்தினில் பேசும் கும்பன், தம்பி! நீ அறத்தின் பக்கம் சார்ந்துளாய். அது நன்று. ஆயினும், இரண்டு தம்பிகளுடன் பிறந்த நம் அண்ணன் தனியொருவனாய் இம்மண்ணின்மேல் மாண்டு கிடத்தல் நியாயமோ? "ஒருத்தரின் முன்னம் சாதல் உண்டவர்க்கு உரியது அம்மா" என்றான். அதுமட்டுமல்லாமல் நமக்குள் இருக்கும் சகோதர உறவு இன்றுடன் முடிந்தது எ;னறும் மொழிகிறான்.

என்று அவன்தன்னை மீட்டும் எடுத்து மாரபு இறுகப் புல்லி
நின்று நின்று இரங்கி ஏங்கி நிறை கணால் நெடிது நோக்கி
'இன்றொடும் தவிர்ந்தது அன்றே உடன் பிறப்பு' என்று விட்டான்
வென்றி வெந் திறலினானும் அவன் அடித்தலத்து வீழ்ந்தான் (7438)

இராமன்தன் அம்பினால் கைகளையும் கால்களையும் இழந்து நின்ற நிலையிலும் தன் அண்ணனுக்கு உதவ முடியவில்லையே என்ற துயரம் கும்பனை வாட்டுவதாகக் கம்பன் குறிப்பிடுகிறார். இராமன் வில்திறம் மன்னர் ஆயிரம் இராவணர்களும் ஈடாகமாட்டார்கள் என்பதை அறிகிறான். "குற்றம் நிற்க நற்றவம் பறைந்து" - ஒருவரின் மரணத்தறுவாயில் அவர் குற்றங்கள் மறக்கப்பட்டு குணங்களே கொள்ளப்படுதல் இயல்பு. எனவே, மரணம் அனைவருக்கும் புகழையே தரும். இதற்கு எடுத்துக்காட்டாய் இராவணனும் 'உயிர் கொடுத்துப் பழிகொண்ட பித்தன்' என்று அழைக்கப்பட்டாலும் மரணத்தருவாயில் மும்மடங்கு பொலிகின்ற முகத்தை உடையவனாய்ப் புகழ் கொண்டான். ஆனால், "புலையறு மரணமே எனக்குப் புகழ்" என்ற கொள்கையோடு வாழ்ந்தவன்.

அய்யன் வில்தொழிற்கு ஆயிரம் இராவணர்
அமைவிலர் அந்தோ! யான்
கய்யும் கால்களும் இழந்தனென் வேறு இனி
உதவல் ஆம்துணை காணேன் (7622)

தன்னுடன் போர் செய்த இராமனிடம் இறுதியாகத் தன்னுடைய மூக்கில்லா முகத்தினைப் பார்க்கும் யாவரும் எள்ளி நகையாடுவர். எனவே, 'இராமா அருள்கூர்ந்து என்னுடைய தலையைக் கடலுள் போக்குவாய்' என்று வேண்டுகிறான்:. சீதையை, இராமனிடம் விட்டுவிடு என அறிவுறுத்தும் கும்பன், ஒருநிலையில் சீதையை இப்போது விடுவது நம் குலமானத்திற்கு இழுக்கானதாகும் என்கிறான். இங்கே அவனுடைய தனமான உணர்வு வெளிப்படுகிறது. இதன்மூலம் தமிழர்களின் பண்பாடான வீரமும், தன்மானமும் அழகாகத் தன்பாடலில் இழைத்துள்ளான் கம்பன். உளவியல் கருத்துகளை தமிழர்களின் பண்பாட்டுடன் இணைத்துக் காட்டுவதில் கம்பனுக்கு இணை கம்பனே!

குறிப்பிற் குறிப்புணர் கொள்கையர்

கு. அரசு
தமிழாசிரியர் அரசினர் மகளிர் மேனிலைப்பள்ளி, செய்யாறு.

இலங்கைத் தீவில் தனியாகத் தவம் புரிந்த சீதையின் தோற்றத்தைக் கண்டவன் அனுமன். கண்டதை அப்படியே இராமனிடம் அவன் எடுத்துச் சொல்லிடவில்லை. தான் உணர்ந்தவண்ணம் எடுத்துரைத்துச் சொல்லின் செல்வனாக மிளிரும் இடம் கம்பனின் காப்பியப் பாங்கிற்கு நல்விளக்கம் ஆகிறது.

இலங்கை சென்று சீதையைக் கண்டு மீண்டான் அனுமன். என்ன நடந்ததென்று அறியாது விழித்திருக்கிறான் இராமன்.

எய்தினன் அனுமனும். எய்தி ஏந்தல்தன்
மொய்கழல் தொழுகிலன், முளரி நீங்கிய
தையலை நோக்கிய தலையன். கையினன்
வையகம் தழீஇ நெடிதிறைஞ்சி வாழ்த்தினான்.

இன்னும் அனுமன் ஏதும் சொல்லினன் அல்லன். வந்தான். கைகூப்பி வணங்கினான். ஆனால், இராமன் உணர்ந்துகொண்டான்.

முகம்நோக்கி நிற்க அமையும் அகம்நோக்கி
உற்ற துணர்வார்ப் பெறின் (708)

என்கிறார் வள்ளுவர்.

திண்டிறல் அவன் செயல் தெரிய நோக்கினான்
வண்டுறை ஓதியும் வலியள். மற்றிவன்
கண்டதும் உண்டு, அவள் கற்பும் நன்று
கொண்டனன். குறிப்பினால் உணரும் கொள்கையான்

என்கிறான் கம்பன். அனுமன் இராமனை வணங்காமல் சீதையிருக்கும் திசை நோக்கி தொழுததைக் கண்ட இராமன் பிறரின் முகம் முதலான உறுப்புகளைக் கொண்டு இலங்கையில் நடந்ததை அறியும் ஆற்றல் பெற்றவன். ஆதலால், சீதையின் நலம் குறித்துக் குறிப்பினால் உணர்ந்து கொண்டான்.

இதுவும் வள்ளுவர்நெறி நின்று கம்பன் காட்டும் காட்சிதான்.

குறிப்பிற் குறிப்புணரா வாயின் உறுப்பினுள்
என்ன பயத்தவோ கண்? (705)

என்பது வள்ளுவம். பின்னரே அனுமன் பேசிடக் கேட்கிறான் இராமன். இப்போது அனுமன் பேசுகிறான்.

கண்டனென் கற்பினுக்கு அணியைக் கண்களால்
தெண்டிரை அலைகடல் இலங்கைத் தென்னகர்
அண்டர்நாயக இனித்துறத்தி, ஐயமும்
பண்டுள துயருமென்று அனுமன் பன்னுவான்.

கற்பினுக்கு அணியான சீதையை, எம் கண்களால் கண்டேன் என்று இராமன் ஐயம் அகற்றி அன்புற மொழிந்தான் அனுமன். இவ்வாறு சீதையின் உளக்குறிப்பையும், இராமன் உளக்குறிப்பையும் உணர்ந்து இருவருக்கும் இடையில் உணர்த்திக் காட்டிய அனுமன் குறிப்பறிதலில் வல்லவன்.

குறிப்பிற் குறிப்புணர் வானர உறுப்பினுள்
யாது கொடுத்தும் கொளல். (703)

என்கிறார் வள்ளுவர். காப்பிய இறுதியில் அனுமனுக்குத் தன்னையே இராமன் கொடுத்தது இக்குறிப்பின் வாயிலாகத்தான் என்பதில் ஐயமில்லை.

விழுமியத்தின் வேர்: கம்பஇராமாயணம்

ம.வித்யா
முனைவர் பட்ட ஆய்வாளர். தூய நெஞ்சக் கல்லூரி. திருப்பத்தூர்.

தனிமனித விழுமியமானது அவரின் வாழ்விற்கு எவை அவசிய மானவை. அவரின் நடத்தைமுறைக்கு அவர் கூறும் அர்த்தங்கள் என்ன ஆகியவற்றைச் சார்;ந்தது. சமூக விழுமியங்கள் தனிமனிதரைச் சாராமல் அவர் சார்ந்த சமுதாயம் முழுமைக்கும் பொருந்தக் கூடிய தாகவும் இருக்கும். கம்பராமாயணத்தில் படைக்கப்பட்ட கதாப் பாத்திரங்கள் ஒவ்வொன்றும் தனக்கென தனித்த ஒரு விழுமியத்தைக் கொண்டுள்ளன. அதனை சமூக விழுமியத்தோடு இணைக்கும் சிறந்த முயற்சியைக் கம்பன் மேற்கொண்டிருக்கிறார்.

தாடகை

பெண்கொலை புரிதல் சங்ககாலம் முதல் ஏற்றுக்கொள்ள முடியாத மரபாகப் பின்பற்றப்பற்று வருகிறது. பெண்கொலைப் புரிந்த இராமா யணத்தில் தாடகை வதம் குறித்து ஒரு சர்ச்சை நிலவி வருகிறது.தாடகை அரக்கியானாலும் அவளும் ஒரு பெண்தானே அவளை இராமன் வதை செய்ததால் 'பெண்கொலை புரிந்தவன்' என்னும் குற்றச்சாட்டு இராமன்மீது எழுகிறது.

தீது என்றுள்ளவை யாவையும் செய்து எமைக்
கோது என்று உண்டிலள் இத்தனையே குறை
யாது என்று எண்ணுவது? இக் கொடியாளையும்
மாது என்று எண்ணுவதோ? மணிப் பூணினாய்! (38)

தன்னையே உருக்கி அனைவரின் நலனுக்காக பாடுபடும் குணம் இயல்பாகவே பெண்மையைச் சார்ந்தது. ஆனால் தாடகையோ இராமனை அழிக்க வேண்டும் என்னும் எண்ணத்தோடு வந்தாள். உருவத்தால் பெண்ணாக இருந்தாலும் குணத்தால் அவள் கொடியவளாகவே கருதப்பட்டாள். அதனால் வதை செய்யப்பட்டாள்.

சடாயு

சடாயு ஓர் அஃறிணை உயிராக இருப்பினும் அதனிடம் ஒரு பெண்ணைப் பலவந்தமாக கடத்திச் செல்வதை எதிர்க்கும் மனித குணம்

உள்ளது. சடாயு அஃறிணை உயிராக இருப்பினும்; தான் கொண்டிருந்த உயர்ந்த குணத்தால் மனித இனத்தின் கண் சேர்க்கப்பட்டது. இராமனின் தந்தை என்னும் சிறப்பினையும் பெற்றது.

வாலி

வாலியை மறைந்து இருந்து இராமன் தாக்கியது போர் மரபிற்குப் புறம்பானது என்று கூறுகின்றனர். வாலி மிகச் சிறந்த வீரன் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை. ஆனால் பிறன் மனைக் கவர்ந்த பாவத்தை அவன் செய்தது மாபெரும் தவறு. அத்தவறுக்கு உரிய தண்டனையையே அவனது மரணம். குரங்கு இனத்தைச் சார்ந்தவனுக்கு ஒழுக்கம் இல்லை என்பதை ஒரு கருத்தாக வைத்து வாதிடுவது ஒருபுறம் இருந்து வந்தாலும், உயர்திணையாக இருந்தாலும், அஃறிணையாக இருந்தாலும் செய்த தவற்றின் பலனும், செய்த நன்மையின் பலனும் அவ்வுயிர்களைச் சென்றடையும் என்பதே கம்பன் உரைக்க வந்த விழுமியம்.

அனுமன்

கம்பராமாயணத்தில் இராமன் - அனுமன் நட்பு குறிப்பிடத் தகுந்தது. இராமன்மீது கொண்ட அன்புக்காக அனுமன் இராமனுக்குச் செய்த உதவிகள் அளப்பரியன. அசோகவனத்தில் சீதாதேவியைக் கண்டு அவளுக்கு ஆறுதல்மொழிகள் உரைத்தது, இராம, இராவண யுத்தத்தில் இலக்குவனன் மூர்ச்சை ஆகிக் கிடந்தபோது சஞ்சீவி மலையினை அவனுக்காக பெயர்த்தெடுத்துக் கொணர்ந்தது, தனது இதயத்தைப் பிளந்து காட்டி அதில் இராமன், சீதை இருப்பை உலகறியச் செய்தது, என்னும் எண்ணற்ற செயல்களைப் புரிந்தவன் அனுமன். அவன் செய்த நன்மைகளுக்காக இராமன் அனுமனுக்கு அளித்தப் பரிசு அவனைக் கட்டித் தழுவியது. இது தன்னையே அளிப்பதன் குறியீடாகவே கருதப்படுகிறது. அனுமனின் உயர்ந்த குணத்தால் அவன் இராமனையே பரிசாகப் பெற்றான்.

சூர்ப்பணகை

சூர்ப்பணகை இராமனைக் கண்டு காமவெறி கொள்கிறாள். காம வல்லி எனத் தன்பெயரை மாற்றித் தன் ஆசையை நேரடியாகத் தானே இராமனிடம் உரைக்கிறாள். அதைக்கேட்ட இராமன் பாம்புக்கு பால் வார்ப்பது தவறு என்பதைப் புரிந்துகொண்டு மகுடி ஊதும் செயலைச் செய்கிறான். 'நீ அரக்கர் குலத்தைச் சார்ந்தவள். அரக்கர் மானிடரை

மணத்தல் பொருத்தம் அல்ல என்றும், நீ அந்தணர் மரபைச் சார்ந்தவள் யான் அரசர் மரபைச் சார்ந்தவன் என்றும் கூறி எப்படியாவது அவளை சமாதானம் செய்ய முயற்சி செய்கிறான். ஆனால் சூர்ப்பணகையோ தனது எண்ணத்தை மாற்றிக்கொள்ளவில்லை. இராமனை அடைவதற்குத் தடையாக சீதை இருந்ததால் அவளை தூக்கிச் செல்ல முயல்கிறாள். அதனால் கோபமுற்ற இலக்குவனால் மூக்கு அறுபடுகிறாள்.

பெண் என்றும் பாராமல் மூக்கை அரிந்தது தவறு என்கிறார்கள். அவளது தீய எண்ணம் எப்போதும் நிறைவேறாது என்பதை அவளுக்கு தெரிவிக்கவே இலக்குவனன் அவளது மூக்கை அரிந்தான். அப்போதும் அவள் இராமனை அடையும் எண்ணத்தை மாற்றிக் கொள்ள வில்லை. மூக்கு, காது,மார்பு இல்லாதவளோடு எப்படி வாழ்வது என்று நினைக்கிறாயா இராமா? இடை இருக்கிறதா என்று சந்தேகிக்கும் அளவுக்கு சிறிய இடையை உடைய சீதையோடு தானே நீ இவ்வளவு காலம் வாழ்ந்தாய். அதனால் என்னையும் ஏற்பாயாக என்று வற்புறுத்துகிறாள். இத்தகைய தீய எண்ணத்தை உடைய சூர்ப்பணகைக்கு இலக்குவனன் அளித்த தண்டனை மிகச் சரியானது என்றே தோன்றுகிறது. இங்கும் சூர்ப்பணகை தான் கொண்ட தீய குணத்துக்கான தண்டனையை அனுபவிக்கிறாள்.

அகலிகை

கௌதமமுனிவரின் மனைவியான அகலிகை தன் கணவனின் உருவில் வேறு ஒருவன் வந்திருப்பதை உணர்ந்தும் இந்திரனிடம் புணர்ச்சி கொள்கிறாள். அதனால் தன் கணவனால் கல்லாய் ஆகுமாறு சாபம் பெறுகிறாள். செய்த தவறுக்கு தண்டனை அனுபவித்த பின்பு இராமனால் பாவவிமோசனம் பெறும் அகலிகை இராமனால் அன்னை என அழைக்கப்படுகிறாள். பின் கௌதம முனிவரிடம் அவளைச் சேர்ப்பித்து மனத்தால் மாசு இல்லாத இவளை ஏற்றுக் கொள்ளுங்கள் எனக்கூறி அவருடன் சேர்ப்பிக்கிறான். தவறு செய்யின் தண்டனையும், அதனை உணர்ந்தபின் அத்தவறு மன்னிக்கப்படுவதோடு அவர்களைத் தன்உறவாகக்கருதும் அன்னைமனப்போக்கும் இராமாயணத்தில் படைக்கப்பட்டுள்ளது என்பதை இந்த அகலிகை கதாபாத்திரம் நமக்கு எடுத்துரைக்கிறது.

திரிசடை

சீதை இராவணனால் சிறை எடுக்கப்பட்ட பின்பு, அசோகவனத்தின் அரக்கியர் காவலர் குழுவுக்குள் இருந்தவள் திரிசடை அரக்கியாக

இருந்தாலும் சீதையின் துன்டம் கண்டு மனம் பொறாதவளாக இருந்தக் காரணத்தால் சீதையால் 'அன்னையிலும் இனியள்' என்று அழைக்கப் படுகிறாள். அன்னையானவள் தன் குழந்தைக்காக துடிப்பது இயல்பு எதிரியாக இருந்து சீதையின் துன்பத்தைக் கண்டு ஆனந்தம் கொள்ள வேண்டியவள், வருந்துவதால் அவள் அன்னையிலும் இனியள் என்னும் சொல்லாடலுக்கு முற்றிலும் தகுதியுடையவள் என்பது புலனாகிறது.

முடிவுரை

இராமாயணத்தில் ஒவ்வொரு உயிரும் செய்த செயலுக்கான பிரதிபலனை அனுபவித்தே ஆகவேண்டும் என்னும் நியதி தொடர்ந்து பின்பற்றப்பட்டு வந்துள்ளது. இந்த பிரதிபலன் நன்மையாக இருக்க வேண்டுமானால் அதற்கு அடிப்படையாக இருப்பது 'நற்குணம்' என்னும் விழுமியம். இந்த நற்குணத்தைப் பின்பற்றும் உயிர்கள் நன்மையைப் பெறுகின்றன. தீயகுணத்தை உடைய உயிர்கள் உயர் திணையாக இருந்தாலும், அஃறிணையாக இருந்தாலும் அதற்கான தண்டனையை அனுபவிக்கின்றன. ஆகவே நற்குணம் என்னும் விழுமியத்தின் வேர் காப்பியக்கதை முழுவதும் இழையோடுகின்றது என்பது இக்கட்டுரையில் விளக்கப்பட்டுள்ளது.

கம்பனில் சில பாத்திரங்கள்

முனைவர் க. கலாவதி,
உதவிப்பேராசிரியர் - தமிழ்த்துறை, அவினாசிலிங்கம் மனையியல் மற்றும் மகளிர் உயர்கல்வி நிறுவனம், கோயம்புத்தூர்.

ஒருசிறந்த சிற்பியாக மயன் என்னும் தேவதச்சனால் உருவக்கப்பட்ட மண்டபங்கள் போல் பாத்திரப்படைப்புகளை மிக அழகாக நேர்த்தியாக படைத்துள்ளான் கம்பன். இன்னார் இதற்காகப் படைக்கப்பட்டவர்கள் என்று கூறும் அளவிற்கு உளவியல் பார்வைகொண்டு ஆளுமைப் பண்புகளோடு இணைந்த பாத்திரப் படைத்து பிரம்மனாக விளங்குபவன் கம்பன். அவன்வழி பாத்திரப்படைப்பின் உளவியல் தன்மைகளை ஆராய்வோம்.

தசரதன்

அரசனின் அரசாட்சி குடிமக்களைப் பேணுதல், பகையின்றி நாட்டைக் காத்தல் இத்தகு பண்புகளை ஓர் அரசனால் மட்டுமே சிறந்த மன்னனாகத் திகழமுடியும். கம்பனின் பார்வையில் தசரதன் ஒரு சிறந்த அரசனாக அறுபதினாயிரம் ஆண்டுகள் ஆட்சிபுரிந்த ஒரு வல்லரசனாகக் காட்சி அளிக்கின்றான் கைகேயி சூழ்வினைப் படலத்தில் தசரதன் துன்பநிலையை எடுத்துரைக்கிறான் கம்பன். தசரதனின் நிலையைப் படிப்பவர்களின் கலங்காத கண்ணும் கலங்கும். கரையாத மனமும் கரையும் என்றுதான் கூற வேண்டும். மந்தரையின் சூழ்ச்சியால் தன் மகன் பரதன் நாட்டை ஆளவும், இராமன் பதினாங்கு ஆண்டுகள் காட்டிற்குச் செல்லவும் இரு வரம் கேட்கிறாள் கைகேயி. அப்போது தசரதன் அடைந்த துயரத்தை, துன்பத்தை எழுத்தில் வடிக்க இயலாது. மகன் காட்டிற்குச் செல்ல வேண்டும் என்று கேட்ட மாத்திரத்தில் குழந்தையில்லா குறையைத் தீர்க்க வந்த அவன் காட்டிற்குச் செல்ல வேண்டும் என்று பலவாறு எண்ணி மனதளவில் மிகவும் பாதிக்கப்பட்டான்.கைகேயி பெண் என்றும் பாராமல் தான் ஒரு நாட்டின் அரசன் என்பதையும் மறந்து

கோல்மேல் கொண்டும் குற்றம் அகற்றிக் குறிக்கொண்டார்
போல்மேல் உற்றது உண்டுஎனின் நன்றுஆம் பொறை என்னா
கால்மேல் வீழ்ந்தான் கந்து கொல்யானைக் கழல்மன்னர்
மேன்மேல் வந்து முந்தி வணங்கி மிடைதாளன் (29)

இராமன்

இறைவனாக இருந்தாலும் மனிதன் அவதாரம் எடுத்துவிட்டால் மனிதனுக்குரிய பண்புகள்தான் தன்னிடம் இருக்க வேண்டும் என்று சிறந்து ஆளுமைப்பண்பை உடையவன் இராமன் என்று கம்பன் சுட்டிக் காட்டுகின்றார்.

கைகேயி தான்கேட்ட வரங்களால் தசரதன் மூர்ச்சையற்று கிடப்பதையும் மறந்து இராமனை வரவழைத்தாள்.

வந்தவன் தன்னைச் சென்னி மண்ணுற வணங்கிவாசச்
சிந்துரப் பவளச் செவ்வாய் செங்கையில் புதைத்துமற்றைச்
சுந்திரத் தடக்கை தானை மடக்குறத் துவண்டு நின்றார்
அந்திவந்து அடைந்த தாயைக் கண்டஆன் கன்றின் அன்னான் (108)

என்னும் இப்பாடல் இராமனின் உயர்ந்த பண்புகளையும், அவன் கைகேயின் மீது கொண்ட பாசத்தையும் எடுத்துரைக்கின்றது. பெரியவர் முன்னிலையில் அவர்கள் கூறுவதைக் கேட்பவர்கள் கையால் வாயை மூடி தலை குனிந்து கேட்க வேண்டும் உயர்ந்த பண்பினை உடையவனாகவும், மாலை நேரத்தில் வீடு வந்த சேர்ந்த பசுவைப் பார்த்த கன்றின் மகிழ்ச்சியைப் போல கைகேயியைக் கண்டபோது ஏற்பட்ட மகிழ்ச்சியையும் எடுத்துரைக்கின்றது.

எந்தைய ஏவநீரே உரைசெய இயைவது உண்டேல்
உய்ந்தனன் அடியேன் என்னின் பிறந்தவர் உளரோ? வாழி!
வந்ததென் தவத்தின் ஆயவருபயன் மற்றொன்று உண்டோ?
தந்தையும் தாயும் நீரோதலைநின்றேன் பணிமின் என்றான் (ந.நீ.ப.5)

என்னும் பாடலும் இராமனின் சிறந்த ஆளுமைக்கு எடுத்துக்கட்டாக அமைகின்றது.

பாசப்பார்வையில் தம்பியர்

பரதன் அண்ணன்மீது கொண்ட பாசத்தால் அரியணயில் அண்ண னின் பாதுகைகளை வைத்து ஆட்சி புரிந்தான். இலக்குவன் அண்ணனோடு காட்டிற்குச் சென்று ஏவல் புரிந்து, காவல் காத்து வாழ்நாளைக் கழித்தான். கும்பகருணன் அண்ணன் இராவணனுக்காக தன்னுயிரையே துறந்தான். இம்மூவரின் ஆளுமைத் தன்மைகள் கதைக்கு மெருகூட்டுவதாக அமைகின்றன.

மந்தரை

இராவணவதம் நடப்பதற்கு இராமாயணத்தில் அமைந்த முதல் திருப்பமே கூனி தோன்றியதுதான். இராவணவதத்திற்காக கைகேயின் உள்ளத்தில் மனவேறுபாடு தோற்றுவிப்பதற்காக தேவர்களால் அனுப்பி வைக்கப்பட்ட தேவரகசியத்தை உட்கொண்டு கம்பர் கூனி தோன்றினாள்' என்றார். இராமாயணம் தோன்றுவதற்கு காரணமாக அமைந்த மந்தரையின் உளவியல் சிந்தனை சற்று வித்தியாசமானது. இராமன் சிறுவனாக இருந்தபொழுது வில்கொண்டு மண்ணுருண்டைய மந்தரையின் கூன்பொருந்திய அவள் முதுகில் விளையாட்டாக எய்து சிரித்து மகிழ்ந்தான். இதனால் கோபமடைந்த கூனி அவனை பழிக்குப்பழி வாங்கவேண்டும் என்ற எண்ணம் அவள்மனதில் நிலைத்துவிட்டது. தருணம் நோக்கி கொக்கென காத்திருந்த அவளுக்கு வாய்ப்புக் கிட்டியது. இராமனுக்கு முடிசூடப் போகும் செய்தியை அறிந்த அவள் அதனை எப்படியாவது தடுத்து நிறுத்த வேண்டும் என்ற தீய சிந்தையோடு கைகேயின் அரண்மனைக்குச் சென்று கைகேயிடம் பலவாறு கூறி அதில் வெற்றியும் காண்கிறாள். முள்மரத்தில் சுற்றிய முல்லைக்கொடி போன்ற கம்பனின் பாத்திரப்படைப்பு நினைக்குந்தோறும் வியப்பைத் தரும். முள்மரம் மந்தரை முல்லைக்கொடி பாத்திரம் கைகேயி அறியாமல் சிறுவயதில் தவறே முக்கொடி வாழ்நாளை முயன்று பெற்றவனும் எக்காலத்தில் எவராலும் வெல்லப்படாதவனுமாகிய இராவணனை வதம் செய்வதற்கு ஒரு காரணமாக அமைந்தது. மந்தரையை அறிமுகம் செய்யுமிடத்தில்

தோன்றிய கூனியும் துடிக்கும் நெஞ்சினாள்
ஊன்றிய வெகுளியாள் உளைக்கும் உள்ளத்தாள்
கான்றுஅரி நயனத்தாள் கலிக்கும் சொல்லினாள்
மூன்று உலகினுக்குமோர் இடுக்கண் மூட்டுவாள் (அ.கா. 51)

இவ்வாறு அவளைப் பற்றி குறிப்பிடுகின்றான் கம்பன் இத்தகு எதிர் மறை ஆளுமைத் தன்மை கொண்டவள் மந்தரை என்பதனை கம்பர் எடுத்துகாட்டுகின்றார்.

கைகேயி

இராமனின் சிற்றன்னையாக இராமாயணம் தோன்றுவதற்கு காரணமாக அமைந்தவளும் கைகேயியே. மந்தரை இராமன் முடிசூடப்போகின்றான்

என்று கூறியவுடன் அவளுக்கு முத்துமாலையை பரிசாக வழங்குகிறாள். கோசலையின் மகன் அரியணையில் அமரப் போகிறான் என்றறிந்தும் அமைதியாக இருக்கின்றாயோ என்று கூனி கேட்டபொழுது இராமனைப் பயந்த எதற்கு இடருண்டோ? என்று தன் ஆழ்மனத்தை இராமன் மீது கொண்டிருந்த பாசத்தை வெளிபடுத்துகின்றன. மகிழ்ச்சியின் உளவியல் வெளிப்பாடு உணர்த்தப்படுகின்றது. இவ்வாறு கூறிய அவளுடைய சிந்தை திரியுமாறு பலவற்றை எடுத்துக் கூறி கைகேயின் மனதை மாற்றுகிறாள் கூனி, பாலில் கலந்த விடம் என திரிந்த மனம் தசரதனை மாய்க்கிறது. நச்சுத் தீயே பெண் உருவாய் வந்த கைகேயி தன் கணவன் காலில் வீழ்ந்து கதறி அழுதுபொழுது அதனைக் கண்டு கொள்ளாது.

அஞ்சலள் ஐயனது அல்லல் கண்டும் உள்ளம்
நஞ்சிலள் நாண்இலள் என்ன நாணம் ஆமால்
வஞ்சனை பண்டு மடந்தை வேடம் (21)

என்னும் பாடல் கைகேயின் எதிர்மறை ஆளுமையை வெளிப் படுத்துகிறது. இராமன் முடிசூடப்போகிறான் என்று கூறியவளுக்கு மணிமாலையை பரிசளித்த கைகேயின் உடன்பாட்டு ஆளுமை இப்போது நச்சுத் தீ என்றும் வஞ்சனையே மடந்தை வேடம் என்றும் குறிப்பிடும் அளவிற்கு எதிர்மறை ஆளுமைத் தன்மையாக வெளிப்படுகிறது வேம்பில் முல்லைக்கொடி கைகேயி என்னும் பாத்திரப்படைப்பு.

சுமித்திரை

சுமித்திரை என்னும் பாத்திரப்படைப்பு உயர்வாகக் கூறப்படாவிடினும் அவளின் தன் மகன் இலக்குவனுக்கு இட்ட கட்டளையால் இமயம் என் உயர்ந்து நிற்கிறாள் இலக்குவன் அண்ணன் இராமனோடு காட்டிற்குச் செல்ல ஆயத்தமாகி அன்னையிடம் விடைபெற வந்த போது சுமித்திரை,

பின்னும் பகர்வாள், மகனே இவன்பின்செல் தம்பி
என்னும் படியன்று அடியாரினில் ஏவல் செய்தி
மன்னும் நகர்க்கே இவன் வந்திடின்வா அதுஅன்றேல்
முன்னம் முடியென்றனள் வார்விழி சோர நின்றாள் சுமித்திரை

இப்பாத்திரப் படைப்பு சந்தனமரத்தில் படர்ந்த கொடியென படைக்கப் படுள்ளது.

நிறைவாக

- இராமன் மனித அவதரமாக அவதரித்தவன்
- பரதன் பாசப் பண்பால் பண்பால் சிறந்தவன்
- அனுமன் சொல் வன்மையால் உயர்ந்தவன்
- சீதை கற்பின் கனலாய் விளங்கியவள்
- கைகேயி தீயசிந்தையால் அனைத்தும் இழந்தவள்
- மொத்தத்தில் காலத்தச்சன் கம்பன்

கம்பன் கண்ட இராமன்

மு.மாலா
முனைவர் பட்ட ஆய்வாளர், தூய நெஞ்சக் கல்லூரி, திருப்பத்தூர்.

கம்பனின் இராமாயண உருவாக்கத்திற்கு முன்வந்த இராமன் பற்றிய கதைகள் கம்பன் காட்டும் இராமபிம்பத்தை ஒத்திருக்கவில்லை. தசரதன் கதையில் (பௌத்த சாதகக் கதைகள்) இராமன் என்கின்ற பெயரைத் தவிர மற்ற பாத்திரப்படைப்பு, இராமனுக்கும் சீதைக்குமான உறவுநிலை என மாறுபடும் இடங்கள் அடிப்படையிலேயே அதிக வேறுபாடுகள் தோன்றக் காணலாம். அதில் தசரதன் கதை தசரத மன்னன் வாரணாசி என்று அழைக்கப்படும் காசியை ஆண்டு வந்தான். அவனுக்கு இராமன், இலட்சுமணன், சீதை என்ற மூன்று மக்கள் இருந்தனர் அவர்களுடைய தாய் இறந்துவிட்ட காரணத்தால் தசரதன் தன் இரண்டாம் மனைவிக்கு ஒரு வரம் கொடுத்திருந்தான். அவ்வரத்தினால் தசரதன் இராமனை காட்டிற்கு செல்லும் படியும் 12ஆண்டுகள் கழிந்தது போர் செய்து மீண்டும் ஆட்சி புரிய வேண்டும் எனக் கூறினான். இச்சாதக கதையில் வரும் இராமகதையில் அயோத்தி, இராவணன், குரங்குச் சேனை அனுமன், சுக்கிரீவன், அரக்கர் சேனை இந்திரசித்து, இலங்கை, தென்னாடு முதலிய எந்தக்குறிப்பும் இல்லை. சீதையை இராவணன் கவர்ந்த செய்தியும் இல்லை.

விமலசூரி என்பவரும், குணபத்திரர் என்பவரும்; இரண்டு இராமாயணங்கள் எழுதியுள்ளனர். விமலசூரி என்பவர் சுவேதரப் பிரிவைச் சேர்ந்த சமணர்; குணபத்திரர் திகம்பரப் பிரிவைச் சேர்ந்தவர். இவர் எழுதிய இராமாயணப்படி இராமன், இலக்குவணன், இராவணன் நல்லொழுக்கம் நிறைந்த சிறந்த மன்னனாக காட்டப்பட்டுள்ளான். குணபத்திர இராமாயணப்படி சாதாரண மனிதனாக இருந்த இராமன் இறுதியில் சமணத்துறவியாக மாறிவிடுகிறான். இந்த இரண்டு இராமாயண கதைகளும் வால்மீகி எழுதிய இராமாயண கதைகளுக்கு முரண்பட்டு நிற்கின்றது.

கி.பி 4ஆம் நூற்றாண்டில் ரகுவம்சம் என்ற பெயரில் காளிதாசன் இயற்றிய நூலும், வியாசர் எழுதிய பாரதம் இராமக்காதையை விரித்து பேசுகிறது. இந்நாட்டிற்கு அப்பால் கீழ்த்திசையில் உள்ள இலாவோசிய, கம்போடிய, மலேசிய, சிங்கள, சயாமிய இடங்களிலும் இராமாயணம்

பரவியிருந்தது அவைகள் சில புத்த இராமாயண கதையுடனும், சில வால்மீகி இராமாயண கதையுடனும் ஒத்துள்ளதாய் அமைந்துள்ளன.

கம்பனுக்கு முன் வந்த வான்மீகம், பௌத்த சரிதம், பத்ம சரிதம்,பத்ம புராணம் ஆகிய அனைத்திலும் இராமன் மனிதருள் மனிதனாகச் சித்தரிக்கப்படுகிறான். குறிப்பாக வியாச பாரதமும், ஸ்ரீமத் பாகவதம் ஆகிய இரண்டும் ஐயத்திற்கு இடமின்றி கிருஷ்ணன் மகாவிஷ்ணுவின் அவதாரம் என்று தெளிவாக கூறிவிடுகின்றன.

வால்மீகி இராமாயணத்தில் 18ஆம் சருக்கத்தில் திருமாலின் பாதி அம்சத்தில் கால் பகுதியாகப் பரதன் தோன்றினான் என்றும், எஞ்சியுள்ள பாதி அம்சத்தில் கால்பகுதியாக இலக்குவ, சத்துருக்;கனர் தோன்றினர் என்றும் கூறுகிறார். இவைகளையெல்லாம் அடிப்படையாகக் கொண்டு கம்பன் இராமாயணம் எழுதியுள்ளார். வடமொழியிலும், வட பண்பாட்டிலும், அமைந்திருந்த இராமகதைகளை கம்பநாடன் தமிழிற்குரிய பண்பாட்டுத்தளத்தில் எழுதியிருப்பினும் அது முழுக்க முழுக்க ஆரியக் கருத்துக்களை அப்படியே உள் வாங்கி தமிழகத்தில் ஆரியக்கருத்தியலை பரப்பும்பணியை செய்தது. அது இந்தியா முழுவதுக்குமான ஒரு பொது பண்பாடு, ஒரு பொது வரலாறு என்பதன் தளத்தை தொட்டு நின்றது.

கடவுளாகச் சித்தரிப்பு

கம்பன் தன் இராமாயணப் படைப்பில் இராமனை தன் கூற்றாக அமையும் இடங்களிலெல்லாம் இராமனை இறையாகயாகவே சித்தரித்துப் பாடுகிறான். அது இராமன் மண்ணில் பிறந்த கடவுள் என அழுத்தமாகப் பதிவு செய்யவே கம்பன் திட்டமிட்டு தன்னை வெளிப்படுத்தியிருக்கிறான்.'எமைஉடை இறைவன்' என்று இராமனை தன் சொந்தக்கூற்றாக அறிமுகம் செய்கின்றான். அதோடு திருஅவதார படலத்தில் 'முப்பரம் பொருளுக்கு முதல்வன்' எனவும், 9837ஆம் பாடலில் 'இவனேதான் அவ்வேத முதல்காரணன்" என்று கூறி முடிப்பதைக் காணலாம். 'முப்புரம் பொருளுக்கு முதல்வன்' எனும் வரிகள் இந்தியாவில் குறிப்பாக தமிழகத்தில் இருந்த சைவ வைணவ பூசல்களுக்கு முற்றுப்புள்ளி வைத்து, சமய ஒருமைப்பாட்டை வலியுறுத்தவே இத்தகைய வரிகளை பயன்படுத்தியுள்ளான். சிவ பெருமான் கயிலைமலையையும், திருமால் ஆல் இலையையும், நான்முகன் என மூவரும் ஒரு வடிவு கொண்டு இராமன் என்ற பெயர் கொண்டு அயோத்தி வந்தார்கள் என்று கூறும் கம்பன் மும்மூர்த்திகளின்

மொத்த உருவம் இராமன் என அழுத்தமாக மக்கள் மனதில் பதிய செய்வதன் மூலம் இந்து கடவுளின் ஒரே பிரதிநிதியாக இராமனை நிலைநிறுத்திடச் செய்தான். அது மதத்தை தாண்டி, மதத்தின் பெயரால் நடக்கும் இழிவுகளைக் கடவுளின் அவதார நோக்கம் என அப்பட்டமாக மூடிமறைத்தது. அத்தகைய சித்தரிப்பினை ஆராய்கையில்

மூலமும் நடுவும் ஈறும் இல்லது ஓர் மும்மைத்து ஆய
காலமும்,கணக்கும், நீத்த காரணன்-கை வில் ஏந்தி
சூலமும்திகிரி சங்கும் கரகமும் துறந்து, தொல்லை
ஆலமும் மலரும்வெள்ளிப் பொருப்பும் விட்டு அயோத்தி வந்தான்
(5884)

மூலமும், நடுவும், ஈறும் இல்லாததாகிய காரணன்' என்பதால் காரணனாக உள்ள பொருளுக்குத் தரப்பட்ட இலக்கணமாகும் இது. இக்காரணப்பொருள் இராமன் செய்த ஒவ்வொரு செயலுக்கும் கடவுளின் அவதார நோக்கம் கற்பிக்கிறது. இதனால் அவன் செய்யும் இன்னது, இன்னாதது அனைத்தும் காண்போர் கண்களில் 'எல்லாம் அவன் செயல்' எனும் மந்திரத்தை உச்சரிக்க வைத்தது. இராமன் மன்னன் என்ற கண்ணோட்டம் சற்றும் இல்லாது, அவன் இறைவன், சர்வமும் அவன் நாடகம். மண்ணில் மனிதன் எவ்வாறு வாழ வேண்டும் என்பதை கற்றுக் கொடுப்பதற்காகவே இறைவன் மனிதனாக பிறந்தான் என்பதான கருத்தியல் உருவாகக் கம்பனின் இராமாயணம் பெரும்பங்கு வகித்தது.

இராம அவதாரத்திற்கான நியாயம்

இராமன் மனிதஉருக்கொண்டு பிறந்தமைக்கு காரணங்களைக் கற்பிக்கிறான்.

அறம் தலைநிறுத்தி, வேதம் அருள் சுரந்து அறைந்த நீதித்
திறம் தெரிந்து, உலகம் புணரச் செந்நெறி செலுத்தித் தீயோர்
இறந்து உகநூறி, தக்கோர் இடர் துடைத்து ஏக, ஈண்டுப்
பிறந்தனன் தன் பொற்பாதம் ஏத்துவார் பிறப்பு அறுப்பான் (5885)

தருமத்தை நிலை நாட்ட வந்த கடவுள் எனும்படிலீன இராம அவதாரத் தோற்றம், வாலியை வதம் செய்தவிதம், சூர்பனகையினை அங்கஈனம் செய்த முறை என அனைத்தும் தெய்வத்தின் அவதார நோக்கத்தில் நியாயம் கற்பிக்க முடியாததாயிருந்தும் அதற்கும் நியாயம் கற்பிக்கிறார்.

கம்பன் தான் படைத்த கதாபாத்திரங்கள் இராமனை கடவுளாக பேசும் விதமாக அமைத்திருப்பார். அதில் சுக்கிரவன்

தேறினன் - அமரர்க்கு எல்லாம் தேவர் ஆம் தேவர் அன்றே
மாறிஇப்பிறப்பில் வந்தார் மானிடர் ஆகி மன்னோ
ஆறுகொள் சடிலத்தானும், அயனும் என்று இவர்கள் ஆதி
வேறுள குழுவை எல்லாம் மானுடம் வென்றது அன்றே (3804)

எனச் சுக்கிரீவன் இராமனை கடவுளின் அவதாரமாக பார்ப்பதாக வர்ணித்திருப்பார். அதே போல் இராமனால் கொல்லப்படும் வாலி முதலில் இராமனை ஏசுவதாக காட்டும் கம்பன் பிறகு

உண்டு எனும் தருமமே உருவமா உடையநிற்
கண்டு கொண்டேன் (4066)

என இராமனை சுக்ரீவனின் நண்பனாக அவனுடன் சேர்ந்து தன்னை மாய்க்கச் செய்தது சதியல்ல. தன்னை ஆட்கொள்ள வந்த தெய்வமாகவே வாலி இராமனை பார்க்கின்றான். வாலி கதாபாத்திரம் வாயிலாக கம்பன் தன் கருத்தை ஏற்றிக் கூறியிருப்பார். அதனின் தொடர்ச்சியாக மானிடச் சட்டையையும் கடந்து மூல இராமனைக் காணும் பேறு அரக்கர்க்கும் பூதங்கட்கும் கூட வாய்க்கும் என்ற சமயப் பேருண்மையைக் கவிஞன்

விண்ணில் நின்றவன் விரிஞ்சனே முதலினர் யார்க்கும்
கண்ணில் நின்றவன் இவன் எனக் கருத்துறு உணர்ந்தான் (3681)

இராமன் தீட்சையால் சாபம் நீங்கப்பெற்று உயர்ந்தபோது அவன் கண்டது தசரதராமனின் உள்ளே ஒளிர்ந்த மூலக்கடவுள் இராமனே என கவந்த பூதத்தின் பாத்திரம் கொண்டு இராமன் கடவுளின் அவதாரம் என உறுதிபட பாடியிருப்பார். மனிதனாக பிறந்த இராமன் தன் நிலை உணருமாறு மாதலி என்பவன் மூலம் கூறும் அறிவுரையாக

நோய்க்கும், நோய் தரு வினைக்கும், நின்பெரும் பெயர் நெடியோன்,
நீக்குவாய்! - நினை நினைக்குவார் பிறப்புஎன நீங்கும் (9824)

எனப் பிறவி நோய்க்கும் பிறவி போக்கும் வலிமையுடையது இராமனின் நாமம் எனக் கடவுளின் தன்மையேற்றி இறைவனின் தன்மையினை இராமன் தன்னையே உணரும்படி மாதலி கதாபாத்திரம் வாயிலாக வெளிப்படுத்தியிருப்பார்.

இராமன் பட்டாபிசேக வர்ணனையின்போதும் கம்பன் இராமனைத் திருமாலின் அவதாரமாகப் பாடியிருப்பார்.

நலம்கிளர் பூமி என்னும் நங்கையை நறுந்துழாயின்
அலங்கலான் புணரும் செல்வம் காண வந்து அடைந்திலாதார்
இலங்கையின் நிருதரே இவ்ஏழ் உலகத்து வாழும்
விலங்கலும், ஆசை நின்ற விடா மத விலங்கலேயால் (1565)

என்ற பாடல் முடிசூட்டிக்கொள்ளப்படும் இராமன் திருமாலே என்பதை குறிப்பிட்டு பாடியிருப்பார். கம்பனின் இந்நிலைப்பாடு மன்னனைக் கடவுளாக ஏற்றிப்பார்க்கும் தன்மையினையும் தாண்டி உள்ளூர மதத்தின் பெயரால் படைக்கப்பட்ட புராணாகவே மதிப்பிடத் தோன்றுகிறது.

கடவுளின் செயலுக்கு காரணம் கற்பிக்கப்படாத, கேள்வி கேட்கப் படாத இடத்தில் இராமனை வைத்துப்பாடிய கம்பன் கடவுள் எனத் தன் சொந்தக்கூற்றாகியும், கதாபாத்திரங்கள்மேல் ஏற்றி கூறுவதிலும் முக்கித்துவம் அளித்துள்ளார். இராமன் கேள்விக்கும், விமர்சனத்திற்கும் அப்பாற்பட்டவனாக பரம்பொருளே என உறுதிபடப் பாடியுள்ளார். இப்படைப்பில் வெளிப்படும் தெய்வீக இராமன், மகாபாரதத்தில் வரும் கண்ணன், தொல்காப்பியத்தில் குறிப்பிடப்படும் மாயோன் என எல்லோரும் ஒருவனே எனவும் அவர்களின் அவதாரமே இராமன் எனவும், இராமனை இந்தியா முழுவதுக்குமான பொதுவான தெய்வக் குறியீடாக உணர்த்தி நிற்கின்றது.இராமாயணத்தை காவியாக பார்க்கப்படாமல் இந்திய மரபின் வரலாறாக கைக்கொள்ளச் செய்தது. கம்பஇராமாயணம். சைவ, வைணவ பிரிவினைக்கு முற்றுப்புள்ளி வைத்து இறைவன் ஒருவனே எனும் கருத்தினை வலியுறுத்தும்படி இராமன் கதையினைத் தெய்வத்தன்மை ஏற்கும்படி படைக்கப்பட்டுள்ளது. இராமனைக் கடவுளாகச் சித்தரிக்கும்பாங்கு மதத்தின் வளத்தினை பெருக்கவே இத்தகைய படைப்பை உருவாக்கினான் என்பது வெளிப் படை. இது மரபாக இருந்துவந்த வட இந்திய, தென்னிந்திய வேறுபாடுகள் மறைக்கப்பட்டுவிடச் செய்தது. இதில் தேசிய மதம், தேசிய பண்பாடு, தேசியத்தனித்தன்மை என இந்தியப் பண்பாட்டு வேறுபாடுகளை மறைத்து ஒட்டுமொத்தமான இந்தியத்தேசியத்திற்கான பண்பாட்டை வளர்த்தெடுக்கும் பணியினை மேற்கொள்ளச் செய்திருக்கிறது.

கம்பராமனின் தலைமைப்பண்பு

முனைவர் **சு.ஏழுமலை**
முதுநிலை ஆய்வு வளமையர், செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம்

பரம்பொருளே மனிதனாக அவதரித்த கதையைக் கம்பர் காப்பிய மாகப் பாடுவதால் காப்பியத்தலைவன் மனித நிலையிலும், தெய்வ நிலையிலும் புனையப்பட வேண்டியவனாகின்றான். இராமன் பெற்றோர்க்கு மகன்; மனைவிக்கு அன்பான கணவன்; உடன் பிறந்தவர் களுக்குப் பாசமுள்ள அண்ணன்; மக்களுக்கு அருள் நிறைந்த இளவரசன்; நண்பர்களுக்குக் கருணையின் நிலையம்; வீரர்களுக்குள் அவன் மாபெரும் வீரன். இராமன் சமுதாயத்தில் ஒழுக்கத்தையும் கட்டுப்பாட்டையும் நிலைநாட்டப் பாடுபட்டவன், தன்னலத்தைத் துறந்து பிறர்நலத்திற்காக உழைத்த தியாகி, அறநெறி தவறி யாருக்கும் தீங்கிழைக்காதவன், தன்னை அடைந்தவரைக் காக்கும் கருணை வடிவானவன். பாவத்தை அடக்கி அறத்தை நிலைநாட்டுவதே அவன் கொள்கை. இப்படிப் பல தளங்களில் தலைமைப்பண்புகளைப் பெற்றுத் தன்னிகரில்லாத தலைவனாக இராமன் விளங்குகிறான்.

இராமன் – அருள் நிறைந்த இளவரசன்

தன்னுடைய குருவாகிய வசிட்டரிடம் பாடம் பயின்று, அன்று மாலை அரண்மனைக்குத் திரும்பி வருகிற இராமனைச் சந்திக்கிறோம்.

நான்கு சகோதரர்களோடு வரக்கூடிய தருணத்தில் தங்கள் நாட்டுக் குடிமக்களைச் சந்தித்து நலம் விசாரிக்கிற இராமன்.

எதிர்வரும் அவர்களை, எமையுடை இறைவன்,
முதிர்தரு கருணையின் முகமலர் ஒளிரா
எதுவினை? இடர் இலை? இனிது நும் மனையும்?
மதிதரு குமரரும் வலியர்கொல்? எனவே, (311)

'உங்கள் மனைவி மக்கள் நன்றாக இருக்கிறார்களா?' என்று சாதாரணக் குடிமக்களைப் பார்த்து கேட்கிறான் இராமன். அதற்கு அந்த மக்கள், நீங்கள் இளவரசராக இருக்கும்போது எங்களுக்கு என்ன குறை? அரச பாரம்பரியத்தைச் சேர்ந்தவராக நீங்கள் இருக்கும்போது, எங்களுக்கு என்ன துன்பம் வந்துவிடப் போகிறது? என்று சொல்கிறார்கள். மேலும்,

அஃது, ஐயா, நினை எமது அரசு என உடையேம்;
இஃது ஒரு பொருள் அல; எமது உயிருடன் ஏழ்
மகிழ்தலம் முழுவதையும் உறுக, இ மலரோன்
உகு பகல் அளவு என, உரை நனி புகல்வார், (312)

நாங்கள் செய்திருக்கக் கூடிய புண்ணியங்கள், எங்களுடைய உயிர், எங்களுடைய பெருமை மட்டுமல்ல, எல்லாவற்றையும் ஏழு உலகங்களையும் எடுத்துக்கொள்; அவற்றுக்கெல்லாம் சொந்தக்காரனாக இருந்து ஆட்சி நடத்து. அது எவ்வளவு நாட்களுக்குத் தெரியுமா? பிரமன் அழிகின்ற காலமான பிரளய காலம் வரை. அவ்வளவு காலம் வரை ஏழு உலகத்தையும், இந்த பெருநிலம் எல்லாவற்றையும் சேர்த்து நீ ஆட்சி நடத்த வேண்டுமென்று அந்த மக்கள் வாழ்த்துகிறார்கள்.

குரு பக்தி

விசுவாமித்திரரோடு இராமனும், இலட்சுமணனும் செல்லும்போது அவர்கள் செல்லக்கூடிய இடம் முழுவதும் பாலைவனமாக இருக்கிறது. அதைப் பார்த்துவிட்டு 'யாவது ஈது' என்று இராமன் கேட்கிறான்.

இந்த இடம்தான் ஒரு காலத்தில் 'காமனாச்ரமம்' என்று அழைக்கப் பட்டது. இந்த காமனாச்ரமம் ஏன் இப்படிப் பாலைவனமாக மாறியது, அதற்கு யார் காரணம் என்பதற்குரிய பதிலைக் கூறுகையில் யார் இப்படிச் செய்தார்; இதுபோன்று இந்த இடம் மாறியதற்கு யார் காரணம் என்று அடுத்தடுத்த கேள்விகளுக்குப் பதிலாகத் தாடகை வரலாற்றைச் சொல்லிக்கொண்டே வருகிறார் விசுவாமித்திரர்.

அதற்கு இராமன் 'எங்கு உறைவது இத்தொழில் இயற்றுபவள்' அவள் எங்கே இருக்கிறாள்? என்ற கேள்வியை முடிக்கும் முன்பாகவே, அவள் அங்கே தோன்றினாள்.

இவள்தான் தாடகை. இவளால்தான் இந்த இடம் இப்படி ஆனது. இவள் மீது அம்பு எய்த வேண்டும் இராமா என்றார் விசுவாமித்திரர்.

'பெண்' என மனத்திடைப் பெருந்தகை நினைந்தான் (374)

'இவள் பெண்ணாயிற்றே, இவள் மீது எப்படி அம்பு எய்துவது' என்று மனத்தினுள் நினைத்தான் இராமன்.

அவ்வாறு இராமன் மனத்தினுள் நினைந்ததை உணர்ந்த விசுவாமித் திரர், இவள் பெண் இல்லை, பெண் வடிவில் இருக்கக்கூடிய பேய்.

இவள் பெண் இல்லை என்பதற்கு என்ன எடுத்துக்காட்டு தெரியுமா? எப்போது அடுத்தவர்களுக்குத் தீமை செய்கிறாளோ அவளெல்லாம் பெண்ணாக இருக்க முடியாது. பெண் என்று பார்க்காதே' என்றெல்லாம் விளக்கம் கொடுத்தார். விசுவாமித்திரர் கூறியதைக் கேட்ட இராமன்,

நின் உரை வேதம் எனக்கொடு
செய்கை அன்றோ அறம் செயும் ஆறு' என்றான் (383)

தர்மத்தை வாழவைக்க வேண்டுமென்றால் என்னுடைய ஆசான் எதைச் செய்யச் சொல்கிறாரோ அது தவறாகவே இருந்தாலும் அது தான் வேதம் என்று எடுத்துக் கொண்டு செய்வதுதான் என்னுடைய தர்மம். அப்போதுதான் தர்மத்தை நிலைநாட்ட முடியும் என்று கூறும் இராமனின் குருபக்தி இங்கே வெளிப்படுவதைக் காண முடிகிறது.

இராமனின் வாழ்வியல் நெறி

ஒரு மனிதன் தெய்வமாக உயர்வதற்கு என்ன செய்ய வேண்டும். மனிதனாக வாழும்போது எப்படியெல்லாம் அந்த மனிதன் தன்னைப் பக்குவப்படுத்திக் கொள்கிறான் என்பதும் இன்பத்திற்கு இன்பப் படாமலும், துன்பத்திற்குத் துன்பப்படாமலும், தன்னை நோக்கி வரக் கூடிய சம்பவங்களையும், நிகழ்வுகளையும் எதிர்கொண்டு, தன்னைப் புடம் போட்ட தங்கமாக மாற்றிக் கொள்கின்ற வாழ்வியல் நெறியே இராமனைப் பரம்பொருள் ஆக்கியது.

முதல்நாள் மாலை மன்னன் தசரதன், அத்தாணி மண்டபத்தில் இராமனுக்கு முடிசூட்டுவதாக அறிவிக்கின்றான். மறுநாள் காலையில், சிற்றன்னை கைகேயி, இராமா, நீ காடு செல்ல வேண்டும். பரதன் இந்த நாட்டை ஆளும் மன்னனாக முடிசூட்டிக்கொள்ள வேண்டும். இதுஅரசன் கட்டளை என்று கூறுகிறாள்.

ஏழ் இரண்டின் ஆண்டின் வா' என்று, இயம்பினன் அரசன் என்றாள் (1601)

இந்த ஆணையைக் கேட்ட இராமனின் நிலை என்ன என்பதைக் கம்பன் கூறுகிறான். இராமனது திருமுகத்தின் அழகைப் பார்த்தால் கைகேயி சொன்னவற்றைக் கேட்பதற்கு முன்பும், அவற்றைக் கேட்டதற்குப் பின்பும் அப்பொழுது மலர்ந்த செந்தாமரை மலரினைப் போன்று இருந்தது. இதிலிருந்து இராமனுடைய மாபெரும் வாழ்வியல் நெறி புலப்படுகிறது.

இராமனின் மாண்பு

இராமன், கானகம் செல்லும் முன் தன்னுடைய மூன்று தாய்மார்களில் கைகேயி, கோசலை ஆகிய இருவரிடமும் பேசிய பின்பு இறுதியாகச் சுமத்திரையிடம் விடைபெறச் சென்றபோது, அந்த வீட்டு வாயிலில் இலக்குவன் மிகுந்த கோபத்துடன் கையில் வில்லை ஏந்தியவாறு நின்றிருந்தான்.

அப்பொழுது இலக்குவன், "என்னுடன் போருக்கு வருவோர் அனைவரையும் அழித்து, இன்றே என் தலைவனாகிய இராமனுக்கு முடிசூட்டுவேன். இதனைத் தடுத்து நிறுத்தும் வலிமையுடையவர்கள் தடுத்துக் கொள்ளட்டும்" என்று வெகுண்டெழுந்தான்.

இதுபோன்று உணர்ச்சியின் அடிப்படையில் எடுக்கப்படும் ஒரு தீர்வு, சிறந்த தீர்வாக இருக்காது. தீர்வுகள் எதையும் அறிவின் அடிப்படையில் மட்டுமே எடுக்க வேண்டும். தலைவனாக இருப்பவன் உணர்ச்சிக்கு வெளியே உள்ள அறிவின்பால் சிந்திக்க வேண்டும் அப்படி சிந்திக்கக் கூடிய இராமன் இலக்குவனிடம் கூறுகிறான்,

நதியின் பிழை அன்று நறும் புனல் இன்மை
பதியின் பிழை அன்று; பயந்து நமைப் புரந்தாள்
மதியின் பிழை அன்று; மகன் பிழை அன்று மைந்தர்
விதியின் பிழை; நீஇதற்கு என்னை வெகுண்டது? என்றான் (1734)

'ஆற்றிலே தண்ணீர் இல்லை என்றால் அது ஆறுசெய்த தவறுஅல்ல; மழை பெய்யவில்லை என்றால் ஆற்றிலே தண்ணீர் இல்லை. அது போன்று தந்தையின் தவறோ, அன்னையின் தவறோ, பரதன் தவறோ அல்ல; இது விதியின் பிழை. வருத்தப்படாதே' என்று தன் சகோதரனை அமைதிப்படுத்துவதின் மூலம் இராமனின் பண்புநலன் வெளிப்படுகிறது. மேலும் கம்பன் இராமனுடைய சிறந்த பண்பை மீட்சிப் படலத்தில் எடுத்துக் காட்டுகின்றான்.

சீதையின் தீக்குளிப்புக்காட்சி முடிந்தவுடன், அங்கே தசரதன் தோன்றுகின்றான். அவன் வானுலகிலிருந்து வருகின்றான். அவனை இராமன் வணங்குகின்றான். அவன் இராமனைத் தழுவி மகிழ்ச்சி அடைகின்றான். சீதை தசரதனை வணங்குகிறாள். அவளுக்குத் தசரதன் ஆறுதலுரை கூறுகின்றான். உனது கற்பை உலகுக்குக் காட்டவே இராமன் உன்னைத் தீயில் மூழ்கச் சொன்னான். ஆதலால்

நீ வருந்தாதே என்று கூறுகின்றான். பின்னர் தசரதன் இராமனைத் தழுவிக்கொண்டு, அவன் நற்பண்பைப் பாராட்டுகிறான். என்னிடம் எந்த வரம் வேண்டுமானாலும் கேட்கலாம். அதைத் தருகிறேன் என்றான் தசரதன்.

அதற்கு இராமன் நான் வானுலகத்தை அடைந்து உன்னைக் கண்டு துன்பந்தீர்வது என்று இருந்தேன். ஆனால் இன்று நான் உன்னை இங்கேயே காணும் பேறு பெற்றேன். இதுவே எனக்குப் போதுமானது. இதைவிட நான் பெறக்கூடிய வரம் வேறு என்ன இருக்கிறது என்றான்.

இராமன் இவ்வாறு சொல்லியும் தசரதன் விடவில்லை. ஆயினும் உனக்கு விரும்பிய வரம் ஒன்றைக் கேள் என்று வலியுறுத்தினான். இவ்வலியுறுத்தலுக்குப் பின் அவன் கேட்ட வரம்தான் இராமனுடைய உயர்ந்த பண்பை உணர்த்துகின்றது.

தசரதன் உயிர்விடும்போது "கைகேயி எனக்கு மனைவி இல்லை, பரதன் எனக்கு மகன் இல்லை" என்று சொல்லி இறந்துவிட்டான். இராமனைக் காட்டுக்குப் போகும்படி செய்துவிட்டாள் கைகேயி என்ற ஆத்திரத்தில்தான் தசரதன் இவ்வாறு வெறுத்துப் பேசினான்.

தீயள் என்றும் துறந்த என்தெய்வமும், மகனும்
தாயும், தம்பியும் ஆம்வரம் தரு'கெனத் தாழ்ந்தான்
வாய்திறந்து எழுந்து ஆர்த்தன உயிரெலாம் வாழ்த்தி (10079)

ஆயினும் உனக்கு விருப்பமான ஒரு வரத்தைச்சொல் என்று தசரதன் கேட்டான்; உடனே, இராமன் 'கெட்டவள் என்று நீ வெறுத்த என் தெய்வமாகிய கைகேயியும் அவள் மகன் பரதனும் எனக்குத் தாயும், தம்பியும் ஆக இருக்கும்படி வரந்தருக' என்று சொல்லி வணங்கினான். இதைக் கேட்டவுடன் உலகில் உள்ள எல்லாவுயிர்களும் எழுந்து இராமனை வாழ்த்தின; வாய் திறந்து ஆரவாரம் புரிந்தன" இறுதியில் இராமன் இவ்வரத்தைப் பெற்றான். இதன் மூலம் தசரதன் செய்த தவற்றையும் திருத்தினான் இராமன். இதன்மூலம் இராமனின் பண்புநலன் வெளிப்படுகிறது.

முடிவுரை

சமூகத்தில் இருக்கும் மனிதர்களுடைய துயரங்களையும் வாழ்க்கை பற்றிய கவலைகளையும் முக மலர்ச்சியோடு இன்முகம் காட்டி விசாரித்து அறிவதன் மூலமாகவும், தனக்குத் தீமை செய்தவர்களையும்

மன்னித்து ஏற்றுக் கொள்ளுவதும், அவர்களுக்கும் நன்மை செய்வதின் மூலமாகப் பல்வேறு இடங்களில் இராமனின் தலைமைப்பண்புகள் வெளிப்படுகின்றன என்று இவ்வாய்வின் மூலம் அறியப்படுகிறது.

பணியில் உயர்ந்த பாத்திரம்: குகன்

லெ.பொ.பிரியா
முனைவர்பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை, அழகப்பா பல்கலைக்கழகம், காரைக்குடி.

உலக இலக்கியங்கள் பலவற்றினும் மக்கள் சிந்தனையிலும், வாழ்விலும் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தும் கதைக்கருவைக் கொண்ட காப்பிய இலக்கியம் கம்பராமாயணமாகும். கம்பன் உலக மக்களிடம் காணப்படும் உயர்ந்தோர், தாழ்ந்தோர் என்ற பேதமையினை நீக்கவும், ஒரு மனிதன் எப்படி வாழ வேண்டும் என்னும் சிறப்பினை உணர்த்தவும் பல்வேறு மாந்தர்களைப் படைத்துள்ளான். இதில் குகன் என்னும் வேடர் தலைவன் வாழ்வியல் கொண்டு கம்பன் காட்டும் வாழ்வியலை எடுத்துரைப்பது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

ஒழுக்கமுடைமை

ஒருவன் உயர்குடியில் பிறப்பதாலோ, ஆடை, ஆபரணங்களால் எழில் கூட்டுவதாலோ புகழ் உண்டாகாது. ஒவ்வொரு தனிமனிதனும் தன் வாழ்வில் தவறாது பின்பற்ற வேண்டிய நெறி ஒழுக்கம் ஆகும். அதனால் தான் வள்ளுவப் பெருந்தகையும்,

ஒழுக்கம் உடைமை குடிமை இழுக்கம்
இழிந்த பிறப்பாய் விடும் (133)

என்பர். மேலும் தனிமனிதன் ஒருவன் தன்னலத்தை விடுத்து பொதுநலம் பேணுபவனாகவும், தனக்கென வாழாப் பிறர்க்கென வாழும் தகைமை உடையனாகவும், செய்நன்றி மறவாமலும், கைமாறு கருதாமலும், பிறருக்கு உதவி செய்யும் உள்ளம் உடையவனாகவும் இருத்தல் வேண்டும். அதனோடு தான் சார்ந்த சமுதாயத்தோடு ஒத்த எண்ணம், சொல், செயல் உடையவனாகவும் விளங்க வேண்டும். மேற்சுட்டிய நெறிமுறைகளைப் பின்பற்றுபவனே சிறந்த பண்பாளனாக விளங்குவன். குகன் தனக்கென வாழாது, பிறர்க்கு உதவி செய்யும் உள்ளம் உடையவனாகவும், சிறந்த பண்பாளனாகவும் விளங்குவதைப் பின்வரும் பகுதி விளக்கும்.

அன்புடையவன்

அயோத்தியாக் காண்டத்தில் கம்பன் குகன் பற்றிய செய்திகளை எடுத்துரைக்கின்றான். இராமன் கங்கைக்கரையில் தங்கியுள்ளதை

அறிந்த வேடர் குலத்தலைவனாகிய குகன் அவனைக் காண விரும்பிச் சென்றான். இராமனுடன் இருந்தவர்கட்கு குகனின் தோற்றமும், புலால் நாற்றம் வீசும் மேனியும் அருவருப்பை ஏற்படுத்தியது. எனினும் குகனை முன்பின் அறியாத இலக்குவன் குகனின் பணிவான பேச்சைக் கேட்டதும் இராமனிடம்,

நிற்றி ஈண்டு என்று, புக்கு நெடியவன் தொழுது, தம்பி
கொற்றவை! நின்னைக் காணக் குறுகினன்; நிமிர்ந்த கூட்டச்
சுற்றமும், தானும், உள்ளந் தூயவன்; தாயின் நல்லான்
எற்றுநீர்க் கங்கை நாவாய்க்கு இறை; குகன் ஒருவன் (664)

என்றனன். இதில் இலக்குவன் குகனைத் தூயவன், தாயின் நல்லான் என்று கூறுகின்றான். குகன் இலக்குவனுக்கும், இராமனுக்கும் வேறுபாடு தெரியாமல் "நின்கழல் சேவிக்க வந்தனென், நாவாய் வேட்டுவன்; நாயடியேன்" (1963) என்று இலக்குவனைப் பார்த்துக் கூறுகின்றான். இதனைக்கேட்ட இலக்குவன் உள்ளம் தூயவன் என்ற முடிவுக்கு வந்தான். மேலும் அரசகுமாரர்க்குப் பசி எடுத்தால் என்ன செய்வார்கள் என்ற கருத்தில் பால் நினைந்தூட்டும் தாயைப்போலக் கையில் உணவுக் கலயத்துடன் வந்தான். ஆதலின் தாயின் நல்லன் என்று இலக்குவனால் உரைக்கப்பட்டான். எனவே ஒருவரின் தோற்றத்தை மட்டும் வைத்து மனிதர்களை எடை போடக்கூடாது என்பதைக் கம்பன் குகனின் வா-யிலாக உணர்த்துகின்றார்.

அடக்கமுடையவன்

மனிதனைப் பண்படுத்துவது, பக்குவப்படுத்துவது பண்பாடாகும். அப்பண்பாடுகளில் ஒன்று அடக்கமுடைமை ஆகும். இதனை வள்ளுவர்,

அடக்கம் அமரருள் உய்க்கும் அடங்காமை
ஆரிருள் உய்த்து விடும் (121)

என்பர். மனித வாழ்க்கையில் அடக்கம் மிக இன்றியமையாத ஒரு பண்பாகும். இப்பண்பைக் கம்பன் குகன் வழி விளக்குகின்றார்.

கண்ணனைக் கண்ணில் நோக்கிக் களித்தனன்;
மண்ணுறப் பணிந்து, மேனி வளைத்துவாய் புதைத்து நின்றான் (665)

என்பதில் குகன் இராமனைக் கண்டவுடனே தான் ஒரு வேடர்குலத்

தலைவன் என்பதையும் மறந்து, உடனே காலில் விழுந்து வணங்கி, எழுந்து உடலை வளைத்து வாய் புதைத்து நின்ற நிலையைக் குறிப்பிடுவர். இராமன் "அமர்க" என்று கூறினும் குகன் தன்னடக்கத்துடன் உட்கார விரும்பாமல் அன்புடன் பணிவாக இராமபிரானை நோக்கி "தேனையும், மீனையும்" ஆராய்ந்து பக்குவப்படுத்திக் கொண்டு வந்துள்ளேன். இவற்றை ஏற்றுக் கொள்வது குறித்து தங்கள் மனக்கருத்து யாது? என்று பணிவோடு கேட்டன. இதனை,

இருத்தியீண்டு என்ன லோடும் இருந்திலன்; எல்லை நீத்த
அருந்தியன், தேனும் மீனும் அமுதினுக்கு அமைவதாகத்
திருத்தினன் கொணர்ந்தேன்; என்கொல் திருவுளம்?
விருத்தமா தவரை நோக்கி முறுவலன் விளம்ப லூற்றான் (666)

என்னும் பாடல் விளக்கும். ஆகவே ஒருவன் தன்னைவிட உயர்ந்தோர் களிடம் அடக்கமாகவும், பணிவுடனும் நடத்தல் வேண்டும் என்பதை இதன்வழி உணர்த்துகின்றார். மேலும் இராமன் குகனின் உணவினை மறுக்காமல் முழுமனதுடன் ஏற்றுக் கொள்ளுதலும் உயர்ந்தோரின் பண்பிற்குச் சிறந்த சான்றாகும்.

அன்பின் வழியது உயிர்நிலை

அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாழ் ஆர்வலர்
புன்கண்நீர் பூசல் தரும் (71)

என்ற வள்ளுவரின் கருத்திற்கு இலக்கணமாகத் திகழ்பவன் குகன். அன்பு தீய எண்ணங்களையும், தீமைகளையும் அகற்றும். இராமனை முன்பின் அறியாத குகன் அவனைக் கண்டதும் தன் மனதைப் பறிகொடுத்தான்.

வனவாசம் செய்யப் புறப்படும் இராமனின் நிலையை எண்ணி வருந்திய குகன், துக்கம் தாங்க முடியாமல் தன் கண்களைப் பிடுங்கி எறிந்துவிடக் கருதினான். அதனோடு அமையாது தம் வாழ்நாள் முழுவதையும் இராமனுக்கு ஏவல் செய்ய எண்ணினான். இது அவனின் அன்புள்ளத்தைக் காட்டுகின்றது. இதனை,

கார்குலாம் நிறத்தான் கூற, காதலன் உணர்த்துவான், இப்
பார்குலம் செல்வ! நின்னை, இங்ஙனம் பார்த்த கண்ணை
ஈர்கிலாக் கள்வ னேன்யான், இன்னலின் இருக்கை நோக்கித்
தீர்கிலேன்; ஆனது, ஐய! செய்குவென் அடிமை (669)

என்ற பாடல் விளக்கும். அதைப்போல் குகனிடம் இராமன் சித்திர கூட மலைக்குச் செல்லும் வழியாது? என வினவி இடத்தும் குகனின் அன்புள்ளம் வெளிப்படுகின்றது.

குகன் இராமனிடம் என்னையும் உடன் அழைத்துச் சென்றால் உங்களுக்கு வழியைக் கூறுவதோடு உங்கள் பசிக்குத் தேவையான கனி, கிழங்குகளைத் தேடித்தருவேன் என்பதும், தங்குவதற்குப் பர்ணசாலை முதலியவற்றை அமைத்துத் தருவேன் என்பதும் (693) இராமனை விட்டுப் பிரிய இயலா அன்பின் மேன்மையைப் புலப்படுத்தும். நம்மினும் மேலோர் துன்புறும் போது அவர்கட்கு எந்த வகையிலாவது உதவ வேண்டும் என்று நினைக்கும் பண்பாளனாகக் குகன் படைக்கப்பட்டுள்ளான்.

தீயன வயமாவும் திசைதிசை செலநூறித்
தூயன உறைகானந் துருவினென் வரவல்லேன்
மேயினபொருள் நாடித் தருகுவென்; வினை முற்றும்
ஏயின செயவல்லேன்; இருளினும் நெறி செல்லேன் (694)

என்ற பாடலும் கைமாறு கருதாத குகனின் அன்புள்ளத்தை நன்கு வெளிப்படுத்தும். மனிதன் தம் வாழ்க்கையில் முடிந்த வகையில் எல்லா நிலையிலும் உதவி செய்தல் வேண்டும் என்பது குகனின் வாயிலாக வெளிப்படுகின்றது.

அன்பினால் கிட்டும் பேறு

எந்தப் பிரதிபலனையும் எதிர்பாராமல் ஒருவன் செயலாற்றுகிற போது அவன் உயர்ந்த நிலையை அடைவான் என்பதை,

அன்னவன் உரை கேளா, அமலனும், உரை நேர்வான்
என்னுயிர் அனையாய் நீ; இளவல் உன் இளையான் இந்
நன்னுதல் அவன் நின் கேள் (697)

என்ற இராமனின் கூற்று புலப்படுத்தும். இதில் இராமன் குகனைத் தன் சகோதரனாகவும், சீதையைக் கொழுந்தி என்ற உறவுமுறைக்கு ஆளாக்கியும் கூறுகின்றான். வேடர் குலத்தைச் சார்ந்த ஒருவன் தனது பண்பால் மன்னனது (இறைவனது) சகோதரன் ஆகும் பேற்றைப் பெறுகின்றான். இராமனிடம் அன்பு செலுத்தியவர்கள் பலர். அதில் குகன் எந்தவித எதிர்பார்ப்பும் இல்லாமல் இராமனை நேசித்தவன். ஆகவே "அன்பு என்பது பள்ளத்தை நோக்கி எப்படித் தண்ணீர்

ஓடுகிறதோ அதுபோல ஓடக்கூடிய நிலை என்பதைக் கம்பன் குகன் மூலம் காட்டுகின்றார்" (கம்பன் திருவுள்ளம், ப.7) என்பர் அ.அருணகிரி.

முடிவுரை

அறம் வெல்லும் பாவம் தோற்கும் என்பதைப் பொருளாகக் கொண்டு படைக்கப்பெற்ற கம்பராமாயணத்தில் அறத்தலைவனாகிய இராமனின் நலம் நாடும் பாத்திரமாகப் படைக்கப் பெற்றவன் குகன் ஆவான். வேடர் குலத்தலைவனாகிய குகன் இராமனிடம் நடந்து கொண்ட முறையின் வழி மனிதர்கள் வாழ்க்கையில் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பதைக் கம்பன் புலப்படுத்தியுள்ளான். ஒருவனுடைய தோற்றத்தை வைத்து அவனை இழிவாக எடைபோடக் கூடாது என்பதையும், ஒருவர் உள்ளன்போடு பிறருக்கு உதவி செய்தால் உயர்ந்த நிலையை அடைவர் என்பதையும், ஒருவருக்குப் பிறப்பினால் தாழ்வு ஏற்படுவதில்லை; அவரவர் தம் செய்கையே உயர்வு, தாழ்விற்குக் காரணம் என்பதையும் குகனின் மூலம் புலப்படுத்துகின்றார். பணிவுடைமை, அன்புடைமை, அடக்கமுடைமை ஆகிய உடைமைகளை ஒருவன் தன் வாழ்வில் பின்பற்ற வேண்டும் என்பதே கம்பன் காட்டும் வாழ்வியல் நெறியாகும்.

பணியில் சிறந்த பாத்திரம்: அனுமன்

ப.ஆனந்தகுமார்
முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை, தூய நெஞ்சக்கல்லூரி, திருப்பத்தூர்.

தமிழர்களின் தனிப்பெருஞ்செல்வம் கம்பராமாயணம் ஆகும். அத்தகைய தெய்வீகக் கவிதையிலே கம்பர் அழகான உண்மைக்ளையும் அற்புதமான கருத்துக்களையும் பொதிந்து வைத்திருக்கிறார். அதில் அனுமன் பண்புநலன்களைத் தற்காலத்தோடு பொருந்துகின்ற ஒரு தொலைநோக்குப் பார்வையோடு படைத்திருக்கின்றார். அனுமனின் செயல்கள் இராமனுக்குப் பிடித்தவையாகவும் அது போற்றுதலுக் குரியதாகவும் மாறியிருக்கிறது. அற்புதமான குணநலன்களைக் கொண்ட சொல்லின் செல்வர் என்று இராமபிரானே போற்றும் அளவிற்கு நிறைந்த குணத்தை உடையவன் அனுமன். அனுமன் வானரத்தைச் சேர்ந்தவனாயினும் இராமாயணத்தில் முக்கியப் பங்கு வகித்திருப்பது, அவனுடைய குணநலன்களைப் பொறுத்ததேயாகும். இக்கதாபாத்திரத்தைக் கம்பன் எங்ஙனம் கட்டமைக்கிறார் என்பது குறித்து இக்கட்டுரை ஆராய்கிறது.

கம்பனின் படைப்பில் அனுமன்

அனுமனின் அபூதவடிவை மயேந்திர மலையில் முதன்முதலாகக் காட்டுகின்றார் கம்பன். வானளந்த வள்ளலின் அடிகள் போன்று வளர்கின்றான்; அவன் நிழல் கடல் கடந்து இலங்கையில் சென்று படிகின்றது; நின்ற மலை நெரிய பெரு உருவமாக அமைகின்றான்; மேகத்திற்கு மேல் வளர்ந்து விட்டதால் மின்னல் பொருந்திய மேகங்கள் அவன் காலின் கழல்களாகின்றன.

இத்தகைய உருவத்துடன் அவன் கடல் கடந்ததை அறியாத சீதை, அவன் தவத்தாலோ அன்றி புத்தியாலோ அதை நிறைவேற்றினான் என அறிய முற்படும்போது, அனுமன் அவளுக்குத் தன் பேருருவைக் காட்டுகின்றான். விசும்பு வரை வளர்ந்து, அது மட்டும் எனக் குனிந்து நிற்கின்றான் அனுமன். மரத்தின்கண் மின்மினிகள் படிந்து கிடப்பது போல், இவன் உடலெங்கும் வானத்து விண்மீன்கள் படியும் அளவிற்குப் பெருமேனியினன் ஆகின்றான். அமரரைக் காணும் அளவிற்கு உயர்கின்றான்.

ஒத்து உயர் கனக வான் கிரியின் ஓங்கிய
மெய்த் துறு மரம் தொறும் மின்மினிக் குலம்
மொய்த்து உளவாம் என முன்னும் பின்னரும்
தொத்தின தாரகை மயிரின் சுற்று எலாம் (5328)

போர்க்களத்தில் பஞ்சசேனாதிபதிகள் வதையின் போதும் வான் முட்டும் உருவமுடன் அனுமனைக் கவிஞன் காட்டுகின்றான். பெரு உருவினராகிய அரக்கரையே தன் கரங்களால் பிசைந்து கொல்கின்றான் மாருதி. யானைகளையும் தேர்களையும் பற்றிக் கடலில் வீசுகின்றான். அரக்கரைத் தேய்த்துப் படைகளை அழிக்கின்றான்.

இரண்டு தேர் இரண்டு கைத்தலத்து ஏந்தி வேறு
இரண்டு மால் யானை பட்டு உருள எற்றுமால்
இரண்டு மால் யானை கைஇரண்டின் ஏந்தி வேறு
இரண்டு பாலினும் வரும் பரியை எற்றுமால் (5635)

அனுமனின் ஒரு கரத்தின் பரப்பே ஒரு யானை நிற்கும் அளவைவிட மிகுதியாக அமைதல் வேண்டும். பல டன்கள் நிறையுடைய அவ்விலங்கை ஒரு கையில் தாங்கும் அளவிற்குப் பேராற்றல் பொருந்த வேண்டும். கடினப்பட்டு எடுக்காமல் அனாயசமாகத் தூக்கிப் போடும் நிலை நம்மனத்திற்கு எட்டாத அபூர்வமாகின்றது.

சீதையைத் தேடி இலங்கை நகரின் பல பகுதிகளிலும் அனுமன் செல்லும் போது அவனை நுண்ணிய உருவுடையவனாக ஆக்கின்றார் கம்பர். வீதி ஏகுதல் இழுக்கம் என்று தன் மேனி சுருக்கிச் செல்கின்றான். காண்டற்கு அரியன் ஆய் அவன் செல்லுதலைக் கம்பர் இறைமையுடன் சாலீத்திக் காட்டுகின்றார்.

இராமன் அனுமனைப் பாராட்டல்

அனுமன் இராமனிடம்; "நான் வாயுதேவனுக்கு அஞ்சனை வயிற்றில் பிறந்தவன். ருசியமுக மலையில் வாழும் சூரியனின் மகனான சுக்கிரீவனுக்கு ஏவல் செய்பவன் நான் என்று அறிமுகப்படுத்தும் போது, அனுமனை இராமன் உற்றுப் பார்த்து, ஆற்றல் நிறைகுணம், கல்வியால் வரும் அடக்கம், ஞானம் எல்லாம் ஒருங்கே உடையவன் இவன்' எண்ணினான். பிறகு இலக்குவனைப் பார்த்துத் தம்பி அனுமன் படிக்காத கலைகளோ வேதங்களோ இல்லை என்பது இவன் பேச்சிலேயே தெரிகிறது. இவன் சொல்லின் செல்வன் ஆவான்.

இல்லாத உலகத்துக்கு எங்கும், இங்கு இவன் இசைகள் கூறக்
கல்லாத கலையும் வேதக் கடலுமே" என்னும் காட்சி
சொல்லாலே தோன்றிற்று அன்றே! யார் கொள் இச்சொல்லின் செல்வன்?
வில் ஆர் தோல் இளைய வீர! விரிஞ்சனோ? விடை வலானோ?

உலகத்துக்கு அச்சாணியாக விளங்கிய அனுமனது பேச்சின் செய்கையும் இராமன் கண்ட மாத்திரத்திலே இவன் சொல்லின் செல்வன், அறிவு நிரம்பியவன் என்று எண்ணும் அளவிற்கு அனுமன் ஆற்றல் படைத்தவனாக இருந்திருக்கின்றான்.

இலக்குவனின் கோபத்தைத் தணித்த அனுமன்

சுக்கிரீவன் படையுடன் வந்து சீதையைத் தேடித் தருவேன் என்று சொன்ன வாக்கை மறந்ததால், இலக்குவன் மிகுந்த கோபத்துடன் வானரங்கள் பயந்து போன ஓடிச்சென்று தப்பின. அனுமன் அருகில் வந்து இலக்குவனின் பாதங்களை வணங்கினான். "முடிவில்லாத கேள்வியறிவுடைய அனும! முந்தி நடந்த செயலை நீயும் மறந்து விட்டாயா?" என்றான் இலக்குவன். அனுமன் இலக்குவனிடம் "கொலைக்குற்றம் செய்தாலும் அந்தப் பாவத்திலிருந்து தப்பிச்செல்ல வழி உண்டு. ஆனால், ஒருவர் செய்த உதவியை மறந்தால் தப்பிக்க வழி இல்லை. உங்களுக்கும் சுக்கிரீவனுக்கும் நட்பை உண்டாக்கியவன் நான். அத்தகைய நட்பு அழியுமானால் எனக்கு நல்ல கதி உண்டோ? இவ்வுலகிலே எங்களுக்கு எல்லோரும் நீங்கள் தான் என்று இருக்கிறோம். நீங்கள் கோபித்தால் எங்களுக்குப் பாதுகாப்பு இல்லை எல்லாத் திசையிலிருந்தும் வரவேண்டிய படைகளுக்காகக் காத்துக் கொண்டிருக்கிறோம். வாலியைக் கொன்று நீங்கள் கொடுத்த செல்வத்தையும் உனக்கு அண்ணனாக இராமனால் சொல்லப்பட்ட சுக்கிரீவனையும் உள்ளே வந்து பார்ப்பாயாக!" என்று மிகுந்த கோபத்தோடு வந்த இலக்குவனைத் தன் வார்த்தைகளால் தணிக்க செய்து நற்பண்புடையவனாக திகழ்கிறான் அனுமன்.

உயிரைக் காத்த உத்தமன்

அனுமன் சீதையைக் காண்பதற்குத் தடையாக இருந்த அரக்கர்களை ஒரு மந்திரத்தை உச்சரித்து மயங்கி உறங்க வைத்தான். ஒரு நாளும் தூங்காத அரக்கர்கள் ஆழ்ந்து தூங்குவதைக் கண்ட சீதை உள்ளத்தில் துயரம் பெருக்கெடுத்தது இராமன் தன்னை மீட்பானோ, மாட்டானோ என்று சந்தேகப்பட்டு

வருந்தல் இல் மானம் மா அனைய மாட்சியர்
பெருந்தவம் மடந்தையர் முன்பு பேதையேன்
கருந்தனி முகிலினைப் பிரிந்து கள்வர் ஊர்?
இருந்தவள் வன்என ஏச நிற்பேனோ

மானம் இழக்க நேரிட்டால், கவரிமானைப் போன்று உயிர் வாழும் கற்புத்தவமுடைய பெண்களின் முன்னே நான் அறிவும், வருத்தமும் இல்லாதிருக்கிறேன். 'இச்சீதை கருமேகம் போன்ற இராமனைப் பிரிந்து கள்ளத்தன்மை உடையோர் ஊரில் இருந்தாள்' எனப்பிறர் பழிக்க நான் உயிரை வைத்துக் கொண்டு இருப்பேனோ என்று தனக்குத்தானே பேசிக்கொண்ட சீதை இனித் தான் இறப்பதே தக்கது எனக் கருதினான். எனவே உயிர் விடும் நேரத்தில் விரைவாக அனுமன் அவள் முன் தோன்றி 'இராமபிரான் அனுப்பிய தூதன் நான் என்று சொன்னான். கோவைப்பழம் போன்ற சிவந்த வாயையும் மயில் போன்ற சாயலையும் உடைய அச்சீதையைத் தொழுதான்.

"இராமபிரான் கட்டளைப்படி வானரர்களின் ஒருவரான நான், நல்வினைப் பயனால் இங்கு வந்தேன். உன் திருவடிகளைச் சேவித்தேன். உன்னைப் பிரிந்து இராமபிரான் துன்புற்றுக் கொண்டிருக்கிறார். இராம பிரானின் தூதனே நான். அதற்குரிய அடையாளப் பொருளும், அடையாளச்செய்திகளும் உள்ளன. என்னை நம்பு தற்கொலை எண்ணத்தை விட்டுவிடு" என்று கூறினான் அனுமான்.

அனுமனைப் பார்த்த சீதை அவன் அரக்கனோ, தேவனோ என்று சந்தேகித்து நீ யார் என்று கேட்டாள். அதற்கு அனுமன் தன் கைகளைத் தலைமேல் குவித்து வணங்கி இராமன் சொல்லிய அடையாளங்களையும் இராமன் தவிக்கும் தவிப்புப் பற்றிச் சொல்லித் தான் கொடுத்த அனுப்பிய மோதிரத்தைக் காட்டினவுடன் சீதை வாங்கி அதை அணைத்துக் கொண்டாள். அனுமனைப் பார்த்து, "இராம தூதனாய் வந்து எனக்கு உயிர் தந்தவனே! உனக்கு நான் என்ன கைம்மாறு செய்ய முடியும்? துணையின்றித் துன்புற்ற என் துன்பம் துடைத்தவனே! நீ வாழ்க பல்லூழிக் காலம் வாழ்க!" என்று வாழ்த்தினாள். சீதையின் உயிரைக் காப்பாற்றிய அனுமனின் பண்பு நலன்கள் சிறப்புடையதாக விளங்குகிறது.

இராமனைத் துன்பத்திலிருந்த மீட்ட அனுமன்

தாய்ப்பறவையைக் கண்ட குஞ்சுகள் போல அங்கதன் மற்றும் வானர வீரர்கள் அனுமனைக் கண்டவுடன் மகிழ்ந்தனர். ஆனந்தக் கண்ணீர் வடித்தனர். தலைமேல் தூக்கிக் கொண்டனர்: குதித்தாடினர். காய், கனி முதலியவற்றை உண்ணக் கொடுத்தனர். அனுமன் உடல் முழுவதும் இருந்த புண்களைப் பார்த்து வானரர்கள் பெருமூச்சுவிட்டு அழுதனர்.

இராமன் கரிய மலையாகிய பிசிரவண மலையில் சீதையை நினைத்து சோர்ந்த நேரத்தில் சுக்கீரிவன் அவ்வப்போது ஆறுதல் கூறித் தேற்றினான். சீதையைத் தென்திசையில் தேடிச்சென்ற வானரர்கள் எல்லாம் திரும்பி வந்து 'சீதையைக் காணவில்லை' என்று சொன்னவுடன் இராமன் அதைக்கேட்டு உயிரே போவது போல வருந்தினான். தென்திசையில் சூரியன் தோன்றியது போல ஒளி தெரிந்தது. இராமன் உற்றுப்பார்த்தான். அனுமனும் இராமனிடம் விரைந்து வந்து அவனது திருவடியை வணங்காமல் சீதை இருந்த தென்திசை நோக்கித் தலைமேல் கைகுவித்துக் கீழே விழுந்து வணங்கினான். அந்தக் குறிப்பைக் கொண்டே இராமன், சீதை கற்போடும் உயிரோடும் இருக்கிறாள் என்பதைப் புரிந்து கொண்டான். மகிழ்ச்சியால் அவன் தோள்கள் பூரித்தன. கண்களில் ஆனந்தக்கண்ணீர் விழிந்தது. துயரம் முற்றிலும் நீங்கி, சீதை மீது காதல் பெருகியது. அனுமன் இராமனிடம்,

கண்டனென் கற்பினுக்கு அணியைக் கண்களால்
தெண்திரை அலைகடல் இலங்கைத் தென்நகர்
அண்டர்நாயக, இனி துறத்தி ஐயமும்,
பண்டு உள துயரும் என்று அனுமன் பன்னுவான்

தேவர்களுக்குத் தலைவனே! கடலால் சூழப்பட்ட இலங்கையில், கற்புக்கு அணிகலன் போன்று விளங்கும் சீதையை என் கண்ணால் கண்டேன். எனவே, இதுவரை நீ கொண்ட சந்தேகங்களையும் துயரங்களையும் விட்டு விடுக" எனறான் அனுமன்.

மேலும், "ஐயனே! உன் பெருமைக்குரிய மனைவி என்னும் உரிமைக்கும், உன்னைப் பெற்ற தசரத மன்னரின் மருமகள் என்னும் உண்மைக்கும், மிதிலை மன்னனான சனகனின் மகள் என்னும் தகைமைக்கும் முற்றிலும் தகுதி உடையவளாக விளங்குகிறாள் சீதை. அவள் நான் வணங்கும் தெய்வம் ஆவாள் என்று அனுமன்

சீதையைக் கண்ட செய்தியைக் கூறி, "இன்னும் ஒரு மாதம் தான் இலங்கையில் இருப்பேன். அதற்குள் வந்து மீட்டுச் செல்லவில்லை என்றால், உயிர் விடுவேன். இது உறுதி" என்று உன் திருவடிகளை வணங்கிச் சொன்னாள். பிறகு சூளாமணியை எடுத்துக் கொடுத்தாள் 'அது இதோ' என்று இராமனிடம் எடுத்துக் கொடுத்தான் அனுமன்.

இறுதியாக...

கம்பன் கலைஞருக்கெல்லாம் கலைஞன். கவிஞருக்கெல்லாம் தலைவன். கற்பனை ஆற்றலில் அவன் எதிர் இல்லாத மன்னன். அள்ள அள்ள குறையாது வளர்ந்து கொண்டே போகும் அமுத சுரபியாகக் கற்பனை நிறைந்து காணப்படும். காப்பிய மாந்தர்கள் பலர் இன்றைய அறிவியல் கண்ணோட்ட நோக்கில் இயல்புக்கு அப்பாற்பட்ட கற்பனை மாந்தராகவும் இருக்கின்றனர். சுருங்கிய வடிவுடனும், தேவைப்படும் போது பெருகிய வடிவுடனும் அனுமனைப் படைத்து அபூதத்தின் இருநிலைகளையும் காட்டுகின்றார் கம்பர்.

குன்றாப் புகழுடைப் பாத்திரம் கும்பகர்ணன்

இரா செல்லமுத்து

தமிழ்த்துறை, அரசு கலைக் கல்லூரி (தன்னாட்சி) கரூர் -639 005

முன்னுரை

இவ்வுலகில் பிறக்கும் மனிதர்கள் அனைவரும் தங்களது வாழ்க்கையை மற்றவர்களுக்கு உதாரணமாக காட்ட வேண்டும். ஆனால் பெரும்பாலனோர் பிறந்து, வாழ்ந்து எப்பொருளும் இன்றி மறைகின்றனர். சிலர் மட்டுமே அர்த்தமுள்ள வாழ்க்கையை வாழ்ந்து காட்டுகின்றனர். அப்படி மனிதருள் மாணிக்கமாய் முள்ளில் முளைத்த ரோஜாவாய் சில இடங்களில் மட்டும் வந்தாலும் தனது வாழ்க்கை-யினை மிகச் சிறப்பாக வாழ்ந்து காட்டியவனாய் கம்பனால் படைக்கப் பெற்ற கும்பகர்ணனையே இக்கட்டுரை ஆராய்கிறது. அரக்கர் குலத்தில் அவதரித்தாலும் அனைவருக்கும் முன் உதாரணமாய் வாழ்ந்து காட்டியவன் கும்பகர்ணன். மிகச் சிறந்த அறிவு திறமும் செய் நன்றி மறவாத பண்பினையும் எவருக்கும் அஞ்சாத தன்மையினையும் மிகச் சிறந்த வீரத்தினையும் உடையவனாக திகழ்ந்தவனே இம்மாமனிதன். எப்படி வேண்டுமானாலும் வாழலாம் என்பவர் மத்தியில் இப்படி தான் வாழ வேண்டும் என வாழ்ந்து காட்டியவன்தான் கும்பகர்ணன்.

கும்பகர்ணனின் பிறப்பு

முற்காலத்தில் மது, கைடவன் என்னும் இரு அரக்கர்கள் திருமாலுடன் பொருதி தோற்றவர்கள். முறையே மது, கும்பகர்ணனாகவும், கைடவன் அதிகாயனாகவும் பிறக்கின்றனர். இச்செய்தியினை பின்வரும் கம்பரின் பாடலின் மூலம் அறிய முடிகிறது.

மது ஆனவன் எம்முன் மடிந்தனனால்
கதிர்தான் நிகர் கைடவன் இக் கதிர் வேல்
அதிகாயன்; இது ஆக அறைந்தனெனங் (7801)

கும்பகர்ணன் பிரம்மன் குலத்தில் வந்த புலஸ்தியனின் மகனாயிய விஸ்ரவசுவிக்கும் கைசயி என்பவளுக்கும் இரண்டாவது மகனாக அவதரித்தான். இத்தம்பதியர்களுக்குப் பிறந்தவர்களே இராவணன், வீடணன், சூர்ப்பணகை.

கும்பகர்ணன் இயல்பு

இவன் உத்தம குணங்களும் சிறந்த தவவலிமையும் ஒருங்கே பெற்றவனாக இருந்தான் என்பதற்கு பின்வரும் வீடணின் கூற்று. -சான்று அளிக்கிறது இவன் யார் என்று போர்க்களத்தில் கேட்ட இராமனுக்கு சிறந்த தவ வலிமை கொண்டவனாகவும் உயர்ந்த வரத்தை உடையவனாகவும் உத்தம குணங்கள் பொருந்தியவனாகவும் வாழ்க்கின்ற எனது அண்ணன் என்று அறிமுகப்படுத்துகிறான் வீடணின் அப்பாடல் பின்வருமாறு.

ஊன் உயர்ந்த உரத்தினான் மேல் நிமிர்ந்த மிடுக்கினான்
தான் உயர்ந்த தவத்தினான் வான் உயர்ந்த வரத்தினான் (7391)

மேலும் இவன் மிக சிறந்த கொள்கை பிடிப்பினை உடையவன் என்பதற்கு

கோயில் எய்தினான், குன்று அன கொள்கையான் (7341)

என்னும் கம்பரின் வரிகள் சான்று அளிக்கிறது. கும்பம் என்பது குடத்தினையும் கர்ணம் என்பது காதினையும் குறிப்பதாகும். கும்பகர்ணன் என்பதற்கு குடத்தினை போன்ற காதினை உடையவன் என்பது பொருளாகும். இவன் மிகுதியான உணவு உண்ணும் பழக்கத்தை உடையவன் உறங்கி எழுந்ததும் இவனுக்கு பசி ஏற்படும் அப்பொழுது ஆயிரக்கணக்கான குடம் கல்லும் சோறும் உண்பான். அசைவ உணவுகளும் இவனுக்கு பழக்கம். இச்செய்தியினை பின்வரும் பாடல் மூலம் அறியலாம். போர்களத்திற்கு அனுப்ப கும்பகர்ணின் எழுப்பப்படுகிறான். அப்பொழுது அறநூறுகுடம் கல்லும், பத்தாயிரம் வண்டி சோறும், ஆயிரத்துயிரனூரு எருமை கெடாவும் உண்டு சிறிது பசியாறுகிறான்.

ஆறு நூறு சகடத்து அடிசிலும்
நூறு நூறு குடம்களும் நுங்கினான் (7331)

தோற்றம்

இவன் மாமலை போன்ற உருவம் படைத்தவன். கடலில் அலைகள் வளைந்து திரிவது போன்ற உருவத்தினையும், மாமிசம் உண்டதால் குருதி வழிக்கின்ற வாயினையும் ஓங்கிய உடம்பினை உடையவனாகவும் திகழ்ந்தான். இச்செய்தினை பின்வரும் பாடல் மூலம் அறியலாம்.

இருந்த போதும் இராவணன் நின்றெனத்
தெரிந்த மேனியன், திதன் கடலின் திரை
தெரிந்தது அன்ன புருவத்து நெற்றியான்
சொரிந்த சோரி தன் வாய் வர தூங்குவான் (7333)

ஒளிரும் வாளினை ஏந்திய வலிமையான கைகளையும் வீரக்கழல் அணிந்த காலினை உடையவன். இச்செய்தியினை.

கதிர வாள் வயிரப் பணைக் கையினான்
கதிர வாள் வயிரக் கழற்காலினான் (7334)

சந்திரனைப் போன்ற பற்களைக் கொண்டவன். நகையில்லாத முகத்தினை உடையவன்

நகைஇலா முழுமுகத்துஎயிறு நாறவே (4962)

மேல்நோக்கி வளர்ந்த சிவந்த மயிர்த்தொகுதியினையும் சூலாயுதத்தினை உடைய வளம் வாய்ந்த தோள்களையும் உடைய கரிய மேகம் போன்றவன்

சூலம் ஏகம் திருத்திய தேரினான்
சூல மேகம் எனப் பொலி தோற்றத்தான்
காலன்மேல் நிமிர் செம் மயிர்க் கற்றையான் (7336)

என்னும் பாடலில் இச்செய்தியினை அறிய முடிகிறது. மலையில் இருக்கும் குகை போன்ற மூக்கினையும் படம் எடுக்கும் பாம்பு போன்ற செவியினையும் உடையவன். இச்செய்தியினை கம்பராமாயணம் பாடல் மூலம் அறியலாம். பின்வருமாறு;

ஓம்புறும் முழை என்று உயிர் மூக்கினான்
பாம்பு உறங்கும் படர் செவிப் பாழியான் (7340)

மேலும் விரைந்து செல்லும் காய்களை உடையவனாகவும் விளங்கியவன் கும்பகர்ணன்.

அறிவுத்திறன்

மாமிசை மலையாக காட்டப்பட்ட கும்பகர்ணன் சிறந்த அறிவு திறன் உடையவனாவான். இராவணனால் சீதை கவர்ந்து வரப்பட்டது தவறு என்று முதலில் உணர்த்தியவன் இவனே பல கூற்றுகள் இவனது மதி நுட்பத்தை எடுத்துக்காட்டுகின்றன. நாம் மானத்தை பற்றி பேசுவோம் ஆனால் காமத்தையே நாடுவோம். ஏதும் அறியாத பத்தினியாகிய

சீதையை கவர்ந்து வருவோம். இவை அனைத்தையும் செய்து விட்டு பின்னர் மனிதர்களை கண்டு அஞ்சிகிறோம் என்று கூறும் போது நீ செய்த செயல்கள் நம் குலத்திற்கு இழிவவை தேடி தந்து உள்ளது என தன் அண்ணனை பழிக்கும் போதும் இவனது அறிவுத்திறத்தை உணர முடிகிறது. அப்பாடல் பின்வருமாறு.

ஆசுஇல் பர தாரம் அவை அம் சிறை அடைப்பேம்
மாசுஇல் புகழ் காதலுறுவேம் வளமைகூரப்
பேசுவது மானம்; இடை பேணுவது காமம்
கூசுவது மானுடரை நன்று நமகொற்றம் (6122)

நமது முழு படைபலத்தை திரட்டி கடலை தாண்டி சென்று அவர்களை அழிப்போம் என்று அறிவுரை பகரும் போதும் இறுதியில் தன் மீளப்போவது இல்லை பிறகாவது சீதையை விட்டு விடுக என்று கூறும் போதும், சிறிது சிறிதாக படை அணியை போர்க்கு அனுப்பாமல் என்று குறிப்பிடும் போதும், இராமனை வெல்லுதல் என்பது சீதையை தழுவுதலுக்கு சமமாகும் என்று அண்ணனுக்கு உரைக்கும் போதும் இதை விட மிக சிறந்த அறிவுத்திறம் உடையவன் இராவணனிடம் இருக்கமுடியாது என எண்ணத்தோன்றுகிறது. அந்த அளவிற்கு ஆழ்ந்த அறிவு படைத்தவனாக கும்பகர்ணன் திகழ்ந்தான்.

செய்நன்றி மறவா தன்மை

இவன் உருவத்திலும் அறிவிலும் மட்டும் இல்லாது நன்றி மறவாத பண்பிலும் உயர்ந்தவனாக திகழ்கிறான். வீடணன் தர்மத்தை கேடயமாக்கி அண்ணனை விட்டு பிரிந்து சென்று இராமனிடம் தஞ்சம் புகுகிறான். ஆனால் கும்பகர்ணனோ அண்ணன் செய்தது தவறாயினும் அவனிடமே இருந்து உயிர் துறப்பதன் மூலம் உயர்ந்த இடத்தினை பெறுகிறான். இராமனிடம் தஞ்சம் புகுந்தால் இலங்கை அரசை அழிப்பதாக வீடணன் கூறியதற்கு இவனது மறுமொழி மிகச் சிறப்பு வாய்ந்ததாகும். பிறந்த காலம் தொட்டு என்னை வளர்த்து ஆளாக்கி உணவு அளித்த என் அண்ணனுக்காக போரில் இறப்பதை காட்டிலும் மிகச் சிறந்தது வேறுயில்லை என்கிறான். இக்கூற்று புறநானூற்று பாடல் ஒன்றினையும் நமக்கு நினைவூட்டுகிறது.

புகழ் எனின் உயிருங் கொடுக்குவர் (புறநானூறு-182)

திருக்குறளிலும் இதேகருத்து காணப்படுகிறது. தர்மத்தைக் காட்டிலும் பாசமே சிறந்தது என்னும் கும்பகர்ணன் எண்ணத்திற்கு இது வலுச் சேர்க்கிறது.

வீரம்

அனைத்திலும் சிறந்தவனாக திகழ்ந்த கும்பகர்ணன் வீரத்திற்கு யாரும் இல்லை எனலாம். ஏனெனில் இவனது போர் முறைகள் போல வேறொருவரின் போர் முறை இருந்ததாக வேறு எந்த இலக்கியத்திலும் கூறப்படவில்லை. இவனை மிக உயர்ந்த இடத்திற்கு இட்டு சென்றது. போர்க்களத்தில் காட்டிய வீரமே இந்திரனை வென்ற கும்பகர்ணன் களத்தில் நீளன், அங்கதன், அனுமன் ஆகியோர் வியக்கும்படி போர் இடுகிறான். வானரகங்களை தனது இரண்டு கைகளால் பற்றி ஒன்றை ஒன்று தெய்த்தும் வாயால் கடித்தும் ஒரு வானகரத்தை கொண்டு மற்றவைகளை அடித்தும் போரிடுகிறான். தனது ஒரு கை அறுப்பட்ட போது அதை பயன்படுத்தி போரிடுகிறான். இரண்டு கைகளும் வெட்டப்பட்ட நிலையிலும் கால்களால் சண்டையிடுகிறான். ஒரு கால் அறுக்கப்பட்ட நிலையிலும் மனம் கலங்காது நொண்டியும் பின்னர் அதுவும் வெட்டப்பட்ட போது உருண்டும் பிரண்டும் வாயால் கடித்தும் எழுபது வெல்ல சேனையில் பாதியை இவன் அழிக்கிறான். இதனால் தன் இறுதி மூச்சு வரை அண்ணனுக்காக விடாது போர் செய்த ஒரு மாபெரும் வீரனாக திகழ்கிறான்.

முடிவுரை

சீதையை திட்டி விடம் போன்ற கற்புடையவள் என்று புகழ்வதன் மூலம் போர்க்களத்தில் இலக்குவனின் வீரத்தை கண்டு பாராட்டுவதன் மூலமும் மாற்றாரை மதிக்கும் பண்பு இவளிடம் பெரிதும் இருந்தது என்பதை அறியலாம். தனது வாழ்க்கையில் பல செய்திகளை நமக்கு விட்டு சென்றவன் கும்பகர்ணன் இன்று பொண்ணுக்கும் பொருளுக்கும் மயங்குவோர்க்கு இவனது வாழ்க்கை மிக சிறந்த பாடமாகும். உணவு இட்டவனுக்காக உயிர் துரப்பதே தர்மம் என்ற பண்பு சாலச்சிறந்தது. உடன் இருந்து துரோகம் செய்பவர்கள் இவனது வரலாற்றை படித்து தெளிதல் வேண்டும். ஏனெனில் தன் உயிரை காட்டிலும் மானத்திற்கு முக்கியம் தந்தவன் இம்மாமனிதன் கம்பனால் படைக்கப் பெற்ற பல பாத்திரங்களைவிட கும்பகர்ணன் தன் சொல்லாலும் செயலாலும் அனைவர் மனதிலும் இடம் பிடித்து உள்ளான் என்பது திண்ணம்.

கம்பனில் தோற்றப்பொலிவியல்

தெய்வசுமதி
முனைவர் பட்ட ஆய்வாளர், திருப்பத்தூர்

கம்பனின் படைப்புகள் அனைத்துமே தோற்றத்தில் அழகு மிக்கவை. இருப்பினும் பொலிவு என்ற சொல் மிகுதி, சிறப்பு, செறிவு, நிறைவு, முழுமை என்ற பல பொருள்களை உள்ளடக்கியது. ஒவ்வொரு பாத்திரமும் அதற்கென வகுக்கப்பட்ட பண்பில் நிறைவு பெறும் போது மிளிர்கின்றது. அதன் உண்மைத் தோற்றத்தில் கூடுதல் அழகு பெறுகிறது. இத்தகைய கூடுதல் அழகே 'பொலிவு' எனப்படுகிறது. கம்பனின் படைப்புகள் தோற்றத்தில் அத்தகைய மிகுதியான அழகை, முழுமையான அழகை, நிறைவான அழகை, செறிவான அழகை, சிறப்பான அழகை - எப்போது பெறுகின்றன? என்பதை ஆய்வு செய்வதே இக்கட்டுரை.

மும்மடங்கு பொலிந்த இராமன்

இராமன் தனது மாளிகையில் சீதையோடு இருக்கும் பொழுது, அமைச்சர் சுமந்திரன் வந்து தசரதன் அழைத்ததாகக் கூற, இராமனும் மந்திராலோசனை மண்டபத்தில் தசரதனைச் சந்திக்கிறான்."தனக்குப் பின் இத்தேசத்தை ஆள மிகப் பொருத்தமானவன் இராமனே" என்ற தன் கருத்தை, குலகுரு வசிட்டர், அமைச்சர் சுமந்திரன், பிற தேசத்து அரசர்கள் அனைவரும் ஏற்றுக் கொண்ட பின்னர், தன் கண்களாலும், தன் இரு தோள்களாலும் இராமனை அளந்து மேலும் உறுதி செய்து கொண்ட பின்னரே தசரதன்,

புனையும் மாமுடி புனைந்து இந்த நல் அறம்புரக்க
நினையில் வேண்டும் யான்நின் வயின் பெறுவது ஈது (1381)

என்று இராமனிடம் வேண்டிக் கூறுகிறான்.

தாதை அப்பரிசு உரைசெய தாமரைக் கண்ணன்
காதல் உற்றிலன்;இகழ்ந்திலன் கடன் இது என்று உணர்ந்தும்
யாது கொற்றவன் ஏவியது அதுசெயல் அன்றோ (1382)

என்ற இராமன் மறுமொழியை நோக்குகிறார் கம்பர்.

நல்கும் நானிலம் நாளை நினக்கு (1411)

'நாளை மகுடாபிஷேகம்' என குலகுரு வசிட்டர் கூறியதைக் கேட்ட

போதும் இராமன் முகத்தில் ஆர்வமோ, மகிழ்ச்சியோ எதுவும் இல்லை. இராமனுக்கான முடிபுனையும் சடங்குகளை வசிட்டர் செய்து வைத்து, அரசியல் அறங்களை உரைத்த போதும் இராமன் முகத்தில் எவ்வித உணர்ச்சியையும் காணமுடியவில்லை.

முரசு அறைந்து அனைத்து மக்களுக்கும் "இராமனுக்கு நாளை முடிசூட்டப்படுகிறது" என்று அறிவிக்கப்படுகிறது. நகரமே மகிழ்ச்சி வெள்ளத்தில் மூழ்கி விழாக்கோலம் பூண்டிருக்கிறது. இராமன் முடிசூடப் போவதைக் காண மக்கள் அரண்மனை வாயிலில் நெருக்கியடி கூடிவிட்டனர்பிற தேசத்து மன்னர்கள் குழுமிவிட்டனர். கோசலை இறைவனை வணங்கி கோதானங்கள் செய்கிறாள். அரண்மனையில் முடிசூட்டுவதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் செய்துவிட்டு வசிட்டர், மன்னனை அழைத்து வரும்படி அமைச்சர் சுமந்திரனிடம் கூறுகிறார். மன்னரை அழைத்துவர கைகேயி வாயிலை அடைந்த சுமந்திரனை, இராமனை அழைத்து வரும்படி கைகேயி கூறுகிறாள். இராமனும் புனித நீராடி மகுடாபிஷேகத்திற்கு தயாரான நிலையில் கைகேயி மனைசேர்கிறான். மணிமுடி தலையில் இல்லை. அவ்வளவு தான். மற்ற ஏற்பாடுகள் அனைத்தும் நடந்து முடிந்தாயிற்று. அந்த வேளையில்,

ஆழிசூழ் உலகம் எல்லாம் பரதனே ஆள, நீ போய்
தாழ் இருஞ் சடைகள் தாங்கி, தாங்க அருந் தவம் மேற்கொண்டு
பூழி வெங்கானம் நண்ணி, புண்ணியத் துறைகள் ஆடி,
ஏழ் - இரண்டு ஆண்டின் வா" என்று இயம்பினன் அரசன். (.1601)

என்று கைகேயி கூறுகிறாள்.

மன்னவன் பணி அன்றாகின் நும் பணி மறுப்பெனோ? என்
பின்னவன் பெற்ற செல்வம் அடியனேன் பெற்றது அன்றோ (1604)

என்று பணிந்து காடுசெல்ல அப்போதே விடைபெற்ற இராமனை கம்பர் பார்க்கிறார்.

நேற்று "மணிமுடி உனக்கு" என்று தசரதன் சொன்ன போதும,; இன்று "மணிமுடி உனக்கில்லை பரதனுக்கு" என்று கைகேயி சொல்லக் கேட்ட போதும் இராமன் முகத்தில் எவ்வித சலனமும் இல்லை. இராமன் முகத்தை கம்பர் பார்க்கிறார்,

செப்ப அருங் குணத்து இராமன் திருமுகச் செவ்வி நோக்கின்
ஒப்பதே முன்பு பின்பு: அவ் வாசகம் உணரக் கேட்ட

அப்பொழுது, அலர்ந்த செந்தா மரையினை வென்றதுஅம்மா! (1602)

என்ற வியப்பில் இராமனது பற்றற்ற நிலையை நினைந்து பெருமிதம் கொள்கிறார். இருப்பினும் கடைசி நொடியில் மணிமுடி மாறிக் காடு செல்லும் நிலை வந்த பின்பு கூட இராமன் முகத் தோற்றத்தில் மாற்றம் இல்லையே! என்ற வியப்பில் இருந்து கம்பரால் மீள முடியவில்லை.

இராமனது முகத் தோற்றத்தை தெளிவாக, இன்னும் அழுத்தமாக சீதையின் கூற்றாக சுந்தர காண்டத்தில், காட்சிப் படலத்தில், இராமன் குறித்த முன்னை நினைவுகளை, நினைவு கூறும் வண்ணமாக பதிவு செய்கிறார் கம்பர்.

தெவ் மடங்கிய சேண்நிலம், கேகயர்
தம் மடந்தை, உன் தம்பியது ஆம் என
மும்மடங்கு பொலிந்த முகத்தினன்
வெம் மடங்கலை உன்னி வெதும்புவாள் (5087)

இராமனது தோற்றம் பற்றற்ற நிலையில், ஒரு மடங்கு இல்லை, இரண்டு மடங்கு இல்லை, மும்மடங்கு பொலிந்ததை மூன்று காண்டத்திற்குப் பின்னும் நினைத்து வியக்கிறார் கம்பர். 'மணிமுடி தனது முடியை அலங்கரிக்கப் போகிறது' என்ற நிலையிலும் இராமன் முகத்தில் மகிழ்ச்சி இல்லை. மணிமுடி தனக்கு இல்லை என்ற நிலையிலும் இராமன் முகத்தில் வருத்தமும் இல்லை. அன்றலர்ந்த செந்தாமரை மலரின் சித்திரம் போல இரண்டு நிலையிலும் ஒரே மாதிரியாகப் பொலிந்த இராமன் தோற்றப் பொலிவில் தான் கம்பர் வியந்து நிற்கிறார். நடையின் நின்றுயர் நாயகனின் தோற்றம் மும்மடங்கு பொலிந்த இடம் மணிமுடி மீது பற்றற்ற நிலையில் அன்றோ!

மும்மடங்கு பொலிந்த இராவணன் தோற்றம்

மாவீரன் இராவணன் யுத்த களத்தில் மாண்டு கிடக்கிறான். சாதாரணமாக உயிர் நீங்கிய உடலைப் பார்ப்பதற்கு அருவருப்பாகத் தான் இருக்கும். அதுவும் யுத்தகளத்தில் மாண்டவன் உடலைப் பார்ப்பது என்றால் இன்னும் கூடுதல் தைரியமும், கூடுதல் சகிப்புத்தன்மையும் தேவை. உயிர் நீங்கிய பத்துத்தலைகள் கொண்ட இராவணன் உடம்பு வீழ்ந்து கிடக்கிறது என்றால் பார்க்க எப்படி இருந்திருக்கும்? கம்பர் பார்க்கிறார்.

வாரணம் பொருத மார்பும் வரையினை எடுத்த தோளும்
நாரத முனிவற்கு ஏற்ப நயம்பட உரைத்த நாவும்

தார் அணி மவுலி பத்தும் சங்கரன் கொடுத்த வாளும் வீரமும் (.7272)

இப்படி வீழ்ந்து கிடக்கிறதே என்று இராவணன் வீரத்தை நினைத்துப் பார்க்கிறார். ஒருமடங்கு இராவணன் முகம் பொலிவு பெற்றதாம்.

முக்கோடி வாழ்நாளும், முயன்றுடைய
பெருந்தவமும், முதல்வன் முன்நாள்
எக்கோடி யாராலும் வெலப்படாய்
எனக் கொடுத்த வரமும் (9899)

இப்படி பயனில்லாமல் வீழ்ந்து கிடக்கிறதே என்று இராவணன் தவவலிமையை நினைத்துப் பார்க்கிறார். இராவணன் முகம் இருமடங்கு பொலிவு பெற்றதாம். இராவணன் மார்பில் ஒருபுறம் உள்புகுந்து. அவன் உயிரைப் பருகி. மறுபுறம் வந்த இராமன் அம்பைப் பார்க்கிறார்.

கள்ளிருக்கும் மலர்க்கூந்தல் சானகியை மனச்சிறையில் கரந்த காதல்
உள்ளிருக்கும் எனக்கருதி உடல்புகுந்து தடவியதோ ஒருவன் வாளி (9940)

என்று அவன் நிலைக்கு இறங்கி, இராவணன் முகத்தைப் பார்க்கிறார். "சீதையின் மீது கொண்ட காதல்"என்ற கறை நீங்கிய பின், குறையில்லாத இராவணன் முகத்தை உற்று உற்றுப் பார்க்கிறார் கம்பர். ஐம்பெரிகளை அடக்கிய முனிவர்களையும் தலை தாழ்ந்து நிற்கும் படியும், அவர்களது தவநிலை அடங்கும் படியும் வருத்திய நாளை விடவும், இப்பொழுது இராவணன் முகம் மூன்று மடங்கு பொலிவதைப் பார்க்கிறார்.

இராவணன் உயிர் அடங்கிப் போயிற்று: வீரம் அடங்கிப் போயிற்று: தவம் அடங்கிப் போயிற்று: பெற்ற வரங்கள் அனைத்தும் பொய்யாய்ப் போயிற்று: யாவரையும் அச்சுறுத்திய சினம் அடங்கிப் போயிற்று: மனம் அடங்கிப் போயிற்று: நினைவுகள் அடங்கிப் போயிற்று: சீதையின் மேல் கொண்ட ஆசையும் அடங்கிப் போயிற்று: அனைத்தும் அடங்கிய நிலையில் சலனமற்று வீழ்ந்து கிடக்கும் உடலைப் பார்க்கிறார் கம்பர்.

வாரணங்கள் மோதித் துளைத்த மார்பு எங்கே? உமையொரு பாகனாய் சிவன் அமர்ந்த கையிலாய மலையினைத் தூக்கிய தோள்கள் எங்கே? சாமகானம் இசைத்த வாய்கள் எங்கே? சங்கரன் கொடுத்த வாளெங்கே? நிலமகளைக் கண்டிராது கம்பீரமாய் நிமிர்ந்த பத்துத்தலைகள் எங்கே? முக்கோடி வாழ்நாள் எங்கே? முயன்று செய்த பெருந்தவம் எங்கே? எக்காலத்திலும் யாராலும் வெலப்பட மாட்டாய் என்று கொடுத்த வரங்கள் எங்கே? எங்கே? எங்கே? ஐய்யோ! எத்தனை எத்தனை

சிறப்புகள்! அத்தனையும் இப்படிச் சிந்தையற்று சிலையாய் வீழ்ந்து கிடக்கிறதே! கம்பரால் தாங்க முடியவில்லை. "அம்மா" என்ற ஒற்றைச் சொல்லில் தன் சோகம் அனைத்தையும் கொட்டி மண்டியிட்டுக் கதறுகிறார். ஒரு சிறுமை எத்தனைப் பெருமைகளை இப்படி அடியோடு சாய்த்து விட்டது என்பதை எண்ணும் போது கம்பரால் மட்டுமல்ல, படிக்கின்ற எவராலும் கதறாமல் இருக்க முடியாது.

வெம் மடங்கல் வெகுண்டனைய சினம் அடங்க,
மனம் அடங்க, வினையம் வீய,
தெவ் மடங்க, பொரு தடக் கைச் செயல் அடங்க,
மயல் அடங்க, ஆற்றல் தேய,
தம் அடங்கு முனிவரையும் தலை அடங்கா,
நிலை அடங்கச் சாய்த்த நாளின்
மும் மடங்கு பொலிந்தன, அம் முறை துறந்தான்
உயிர் துறந்த முகங்கள் அம்மா!" (.9902)

இராவணன் மரணத்திற்கு அழுதது போல் கம்பர் யாருக்காகவும் அழவில்லை. ஆயிரம் ஆயிரம் நன்மைகள் இருந்தும் ஒரே ஒரு குறை ஒரு மாபெரும் வீரனை இப்படிச் சாய்த்து விட்டதே என்று என்னும் போது இராவணனின் அவல முடிவு கம்பரை மட்டுமல்ல படிக்கின்ற அனைவரின் நெஞ்சையும் பிழிகிறது. அத்தாணி மண்டபத்தில் மூவுலகும் தொழுது நிற்க, கொலு வீற்றிருந்த இராவணனின் தோற்றம் ஒருமடங்கு அல்ல, இருமடங்கு அல்ல, மும்மடங்கு பொலிந்த இடம் யுத்த களத்தில் அன்றோ!

'மும்மடங்கு பொலிந்த' என்ற வார்த்தைகளை கம்பர் நடையில் நின்றுயர் நாயகனாம் காப்பியத் தலைவன் இராமனுக்கு பயன்படுத்தியது சிறப்பு தான். என்றாலும் கூட எதிர்நிலை நாயகனான இராவணனையும் அதே அளவுக்கு உயர்த்தும் விதமாக அதே சொற்களைக் கையாண்டுள்ள விதம் கம்பருக்கு மட்டுமே கைவந்த கூடுதல் சிறப்பு. கம்பனில் மும்மடங்கு தோற்றம் பொலிந்தது இராமனுக்கும், இராவணனுக்கும் மட்டுமல்ல, கம்பனுக்கும் தான் என்றால் அது மிகையாகாது.

கம்பனில் மனிதர் அல்லாத பாத்திர மன உணர்வுகள்

மா. மீனாட்சி,
உதவிப்பேராசிரியை, வரலாற்றுத்துறை, தருமபுரம் ஞானாம்பிகை அரசு மகளிர் கலைக்கல்லூரி, மயிலாடுதுறை.

காவிய உலகில் தனிச் சாதனை புரியும் பெருங்காவியம் கம்ப ராமாயணம் ஆகும். கம்பர் தனது அறிவுத் திறத்தால் புத்தம்புதிய சிந்தனைகளை,தேர்ந்தெடுத்த பாத்திரங்கள் வழியாகக் கற்பவர் செவிக்கு தேனாக அளித்தவர். சாதி, மதவேற்றுமை இல்லாத ஒன்றுபட்ட உரிமை சமுதாயத்தையும் படைத்து காட்டுகிறார். மேலும் அஃறிணை உயிர்களையும் நிலைநிறுத்திக் காப்பியத்தை அமைதியாக அமைத்துக் காட்டுகிறார். மனிதர் அல்லாத அத்தகு பாத்திரங்களின் மன உணர்வுகள் பற்றி இக்கட்டுரை ஆய்கின்றது.

மனிதர் அல்லாத இனங்களின் பிரிவுகள்

வானர இனத்தவர், பறவை இனத்தவர், கரடி இனத்தவர், பாம்பு இனத்தவர், யானை இனத்தவர் என இவ்வைந்து வகையான மனிதர் அல்லாத இனங்களை இக்காப்பியத்தில் காண முடிகிறது.

வானர இனத்தவர்

வாலி, சுக்ரீவன், அனுமன், அங்கதன், இடபன், குமுதன், சதவலி, மயிந்தன், துமிந்தன் போன்றோர் வானர படை வீரர்களாகக் காணப்படு கின்றனர்.

வாலி

இருகதாச்சு என்ற வானர மன்னன் ஒருமுறை வடபுலம் சென்றான். பார்வதிதேவியார் வனம் சென்று அங்குள்ள குளத்தில் முழ்கி எழுந்தாள். பரமன் விட்ட கண்ணீரே பார்வதியாரின் வனத்தில் குளமா-யிற்று. அக்குளத்தில் மூழ்கும் ஆண்கள் பெண்களாவர் ;என்னும் சிறப்புச் சாபம் இருந்து வர, இருகதாச்சு என்பவனும் நீரில் முழ்கியதும் அழகான பெண் குரங்கு உருப்பெற்றான். இந்திரன் அப்பெண் குரங்கைக் கண்டு அதனுடைய வாலின் வனப்பில் ஈடுபட அவளுக்கு வாலி என்ற மகன் பிறந்தான்.

வாலி என்ற சொல்லுக்கு வாலில் வலிவுள்ளவன். என்றும், வாலினின்று பிறந்தவன் என்றும் கூறுவர். வாலி கிட்கிந்தையில் இருந்து

அரசு செலுத்தி வந்தான். வாலி சிவபிரானின் தவஅருள் பெற்றவன். வரம்பில்லாத ஆற்றல் உடையவன். தேவர்களும், அசுரர்களும் மந்திர மலையைக் கடைந்த காலத்தில் நடுவுடலும் தேயவும், தான் ஒருவனே தனித்து நின்று கடைந்த தோள் வலி கண்டவன், இராமனின் அம்பு தைக்கப்பட்ட வாலி, இந்த செயல் தன் தம்பி சுக்கிரீவனின் வேண்டுதல்படி நடந்தது என்பதை அறிந்து இராமனிடம் வாலி, மதுவி;ன் மீது விருப்புடைய என் தம்பி மது மயக்கத்தில் ஏதேனும் தவறு செய்தால், என் மீது எய்த அம்பை அவன் மீது எய்ய வேண்டாம் என்று கூறுகின்றான், இதனை,

ஓவிய உருவர் நாயேன் உனது ஒன்று பெறுவது உண்டால்
பூ இயல் நறவம் மாந்தி புந்தி வேறு உற்ற போழ்தில்
தீவினை இயற்றுமேனும் எம்பிமேல் சீறி என்மேல்
ஏவிய பகழி என்னும் கூற்றினை ஏவல் என்றான்

என்ற அடிகள் மூலம் வாலியன் சகோதர உணர்வினை அறிய முடிகின்றது.

சுக்ரீவன்

இருகதாச்சு என்ற பெண் குரங்கின் கிரீவம் கழுத்தழகில் மயங்கிக் கதிரவன் தொடர்பு பெற்றதால் அப்பெண் குரங்கு, சுக்ரீவன் என்னும் ஆண் மகனை ஈன்றது. சுக்கீரவன் என்றால் அழகான கழுத்தை உடையவன் என்று பொருள்.

சுக்ரீவன் இராமன்பால் காட்டியஅன்பு அளவிடற்கு அரியது. இதைச் சுக்ரீவன் எதிர்புறப் பகைவர் சேனையை யாவரும் பார்த்துக் கொண்டிருந்த போதே, சுவேல மலையிலிருந்தபடி இலங்கை மதில் தாவி ஆத்திரத்துடன் இராவணன் மீது குதித்தான். அவன் மார்பில் கைகளால் குத்தினான். அவனை அகழியில் வீசி அவன் உடலை பாலி மந்தர மலையைப் பாற்கடலில் சுழற்றியது போல் சுழற்றினான். இருவரும் பின்னர், கோபுரம் ஏறி வென்றிலர் தோற்றிலராய் புரியும்போது சுக்ரீவன் இராவணின் மகுடகளிலிருந்து பத்து மணிகளை எடுத்துக்கொண்டான் என்பதனை,

வாங்கிய மணிகள் அன்னான் தலைமிசை மௌலி மேலே
ஓங்கிய அல்லவோ மற்றினி அப்பால் உயர்ந்தது உண்டோ

என்ற அடிகளின்மூலம் சுக்ரீவனின் பாசஉணர்வினை அறிய முடிகிறது.

அனுமன்

அனுமன், அஞ்சனாதேவிக்கும் வாயுபகவானுக்கும் மகனாகத் தோன்றியவன். கேசரியவன் நந்தவர்த்தனன் வாயுவிற்கு பிறந்ததால் வாயுநந்தனன் என்றும் அழைக்கப்படுவான்.

மருத் என்னும் வடமொழிச் சொல்லுக்குக் காற்று என்பது பொருள். எனவே அனுமன் மாருதி என்று அழைக்கப்பட்டான். தாய் வழிப்பெயராக, அஞ்சனாபுத்திரன் என்றும் வாசமுடன் பிறந்ததால் கந்த வாஹாத்மஜ எனவும் அவனை அழைப்பர். வச்சிராயுதம் கன்னத்தில் பட்டுநீண்ட கன்னங்கள் பெற்றதால் அனுமன் என்னும் பெயர் பெற்றான்.

அசோக வனத்தில் சீதையைக் கண்ட அனுமன் தன் வரலாற்றையம் கிட்கிந்தை நட்டையும், சீதைக்குச் சொன்னான். அவள் கேட்க, ஐயன் அவளை மகிழ வைத்தான். பெரும் அடையாளமாகத் தந்த திருஆழி தந்தான். அவள் அக்கணை யாழி பெற்று உயிர் தந்தாய் உத்தம! என்று உரைத்து

யான் மறு இலா மனத்தேன் என்னின்
ஊர ஓர் பகலாய் ஓதும் யாண்டு எலாம் உலகம் ஏழும்
வீவுற்ற ஞான்றும் இன்று என இருத்தி

என சீரஞ்சீவித் தன்மை தந்தி வாழ்த்தினாள். இதன்மூலம் அனுமனின் அன்புணர்வு தெளிவாகப் புலப்படுகின்றது.

அங்கதன்

வாலி, தாரையின் மகன் அங்கதன். அவன் தன்னை ஈன்ற வாலி, தாரை இருவர் மீதும் பற்றும் பாசமும் கொண்டவன். இராமனைக் கண்டு, அவன் தந்த வீரவாள் பெற்ற பேறு பெற்றவன், சீதையைத் தேடத் தென்பால் சென்றவன் இராவணனிடம் தூது பேசியபோது அறிவார்ந்த கருத்தாழச் சொற்கள் பேசியவன். இக்குவாகு தந்ததோள் வளையம் பெற்ற பேறுடையவன். இராம பிரான் புகழ் போற்றிய பெருமையாளன். அனுமனுக்கு ஈடான சேவகன்.

சீதை இலங்கையில் உள்ளாள் என்பதனைச் சம்பாதி கூறக் கடல் தாண்டிச் செல்வது பற்றி அனைவரும் பேசினார். அங்கதன் கடல் தாண்டுவதில் தன் ஆற்றல் என்ன என்பதைத் தெளிவாகக் கூறுகிறான்.

அதாவது தன்னால் ஒருமுறை கடலைக் கடந்து இலங்கைக்குச் செல்ல முடியும் என்றும் - ஆனால் திரும்பி வரும் ஆற்றல் தனக்குக் கிடையாது என்றும் வெளிப்படையாகக் கூறினான் என்பதனை.

'வேலை கடப்பென் மீளமிடுக்கு இன்று என வாலி அளிக்கும் வீர வயப்போர் வசை இல்லான் என்ற அடிகளின் மூலம் தன் ஆற்றலின் தன்மையை வெளிப்படையாகக் கூறும் மன உணர்வினை அறிய முடிகிறது.

இடபன்

இடபன், சுக்ரீவன் சேனையில் பணிய ஒரு வானர வீரன், கார்காலம் முடிந்ததும், சுக்ரீவன் தான் உறுதி கூறியபடி வராதுகண்ட இலக்குவன் வெகுண்டான் தெளிந்த சுக்ரீவன் வானர சேனையை அணி வகுத்து இராம இலக்குவர்க்குக் காட்டினான். அவ்வணி, வகுப்பில் இடபன் தொள்ளாயிரம் கோடிப்பேருடன் பீடு நடைபோட்டான்.

குமுதன்

ஆம்பல் நிறமுடைய இவன் ஒன்பது கோடி வானர சேனைக்குத் தலைவனாவான். சுக்ரீவனின் ஆணைக்குக் கட்டுப்பட்டவன். காற்றாய்ச் சுழலும் ஆற்றல் உடையவன் எதன்கடல் பெயர்வது போல பெயரக்கூடியவன் வெஞ்சினப் படைக்கு அதிபதி.

சதவலி

சுக்ரீவனின் வானரப் படையில் இவன் ஒரு தலைவன். முகத்தில் நூறு மடிப்புகளை உடையவன் எனும் பொருள்படும் பெயரிலான சதவலி பத்தாயிரம் கோடி வானரச் சேனைத் தலைவன்.

மயிந்தன் துமிந்தன்

மயிந்தனும், துமிந்தனும் இரட்டையர்கள் தேவர்கள் இராவணனின் இன்னல் போக்க, ஒன்று கூடிய போது இரட்டையரான அசுவினித் தேவர்கள் தங்கள் கூறாக இரு வானர பிறப்பர் என்றனர். அவ்விரட்டையரே துமிந்தனும், மயிந்தனும் ஆவர்.

ஆனிறக் கண்ணன்

சுவாட்சன் கடல் வந்தனம் செய்தபோது உதவியவன். மலைகளைக் கொணர்ந்து கடலில் வீசி நளனுக்குத் துணையாக நின்று சேது பந்தனம் செய்தவன்.

கசகோமுகன்

வானரவீரர் தலைவருள் ஒருவன் கிட்கிந்தையில் இராமனுக்குச் சுக்கிரிவன் தான் உலகெங்கிலுமிருந்து கொணர்ந்த வானரச் சேனையை அணி வகுக்கச் செய்து காண்பித்தான். அதில் மயிந்தனுடன் கசகோமுகன் இணைந்து தன் படையினருடன் வந்தான்.

தரிமுகன், துன்மருடன், குமுதாக்கன், கனகன்

தரிமுகன், துன்மருடன் குமுதாக்கன், கனகன் ஆகியவர்கள் அனைவரும் வானர வீரர்களாக இருந்து இக்காப்பியத்திற்கு சிறப்புச் சேர்க்கும் கதாபாத்திரங்களாக சுட்டப்பட்டுள்ளன.

சடாயு, சம்பாதி, கருடன், சயந்தன் ஆகிய நால்வர் பறவை இனத்தவர் ஆவார்கள்.

சடாயு

சூரியனின் தேரோட்டியும் கருடனின் - உடன்பிறப்புமான அருணனுக்கும் சேதிக்கும் பிறந்தவர் சடாயு, என்னும் சொல்லுக்குப் பல மயிர்கள் சேர்த்து திரித்த சடை போன்ற வாழ்நாளைக் கொண்டவன் என்பது பொருள். இறகில் தன் உயிரை உடையவர் என்றும் சடையை உடையவர் என்றும் காரணமாகக் குறிப்பிடுவர்.

சடாயு தயரதனின் மூத்தவர் என்னும் உடன்பிறப்புச் சிறப்பைப் பெற்றவன் அதனால் வைணவ மரபில் சடாயுவிற்கு பெரிய உடையார் என்னும் பெயர் உண்டு தயரதன் கைகேயிக்குக் கொடுத்த வரங்களால் இராமன் தன் தம்பி இலக்குவனோடும், மனைவி சீதையோடும் கானகம் புக்கான் தயரதன் மகன் பிரிந்த சோகத்தால் மாண்டு போனான். கானகம் வந்த இராம, இலக்குவ, சீதை மூவரும் வழியில் எருவை வேந்தனான் சடாயுவை பொன் உருக்கிப் பொலியும் உதயகிரியில் இளஞ்சூரியன் ஒளிர்வதானது. எல்லாத் தீக்குச்சிகளையும் காணச் செய்வது போல் சடாயுதன் சிறகுகளை விரித்து ஒரு மலையில் இருந்தார்.

இராவணன் கற்பரசி சீதையைக் கவர்ந்து செல்வதைச் சடாயு வானில் கண்டார் அவர் உத்தமியைத் தேரில் கொண்டு ஏகுவது எங்கு என்று கேட்டபடி சிறகுகளை விரித்துப் பறந்து தேர் அருகே வந்தார். சீதையின் அழுகுரலைக் கேட்ட சடாயு வில்லுடன் இராமன் வரவில்லையே என்று வருந்தாதே நானே பனம் பழக் கொத்துப் போல்

உள்ள இவனது பத்து தலைகளையும் பிரித்து பத்து திசைகளுக்கு பலி-யிடுவேன். நீ முத்தான நீர் உகுத்து அழாதே என்றார் என்பதனை

முத்து உக்கன போல் முகத்து ஆலி முலைக்கண்
தத்துற்று அயரேல், தலை தால பலத்தின் ஏலும் வீழ
கொத்து ஒப்பன கொண்டு இவன் கொண்டன என்ற ஆசை
பத்திற்கும் இன்றே பலி ஈவது பார்த்தி

என்ற அடிகளினால் சீதையின் மீது கொண்ட பாச உணர்வை அறிய முடிகின்றது.

சம்பாதி

சூரியனின் தேரோட்டியான அருணனுக்குச் சேதியிடம் பிறந்தவன் சம்பாதி. சம்பாதி என்றால் நன்றாகப் பறப்பவன் என்பது பொருள். ஆனால் சூரியன் அவனது சிறகுகளைத் தீய்த்துப் பறவாதபடி செய்தான். இராமநாமம் அவரது சிறகுகளை வளர்த்து அவரை நன்கு பறக்கும்படிச் செய்தது.

கருடன்

காசிபருக்கு விநதையிடம் பிறந்தவன் கருடன். இந்திரன் ஓம வேள்வி செய்ய, அதைக் காண வால்மீகி முனிவர் வந்தார். வழியில்குளம் படியில் தேங்கிய நீரால் கால் வழுக்கி விழுந்தார். இந்திரனின் ஆணவத்தை அழிக்க ஒருவன் உண்டாகுக என்று சொல்லிச் சென்றார் கருடன் தோன்றினான்.

இந்திரசித்து விண்ணில் ஒளிந்து வேள்வி இயற்றி நாகரத்தினம் எய்தான் அனுமன், அங்கதன், இலக்குவன் எனப் பலரையும் பேச்சு மூச்சுற்று ஒடுங்கச் செய்து விட்டது. அப்போது கருடன் தானாகவே தோன்றிக் களம் வர நாகக்கட்டுகள் அவிழ்ந்தன என்பதனை அறிய முடிகிறது.

சயந்தன்

வானம் அளாவிய சித்திர கூட மலையில் சீதையின் மடியில் இராமன் கிடந்த வேளையில் இந்திரன் மகன் சயந்தன் காகமாகிச் சீதையின் மார்பைத் தன் அலகால் குத்தினான். இராமனின் மீது சீதையின் குருதிபட்டது. எழுந்த இராமன் அருகிருந்த புல்லை எடுத்து அதையே பிரம்மன் படையாக விடுத்தான். அக்காகம் பிரம்மன், சிவன் முதலானோரிடம் ஓடி அடைக்கலம் கேட்க, அஞ்சி மறுத்தனர்.

காக உருவில் வந்த சயந்தன் பறந்து மீண்டும் வந்து இராமனிடமே அபயம் கேட்டு அழ, இராமபிரான் ஓவிய புல் எனும் படை காகத்தின் ஒரு கண்ணை அழித்தது.

அசோகவனத்தில் சூடாமணியைச் சீதை அனுமனுக்கு அளித்து அவள் இவ்வரலாற்றை இராமனுக்கு நினைவுபடுத்திக் கூறினாள். என்பதனை,

நாகம் ஒன்றிய நல்வரையின் தலைமேல் நாள்
ஆகம் வந்து எனை அள்உகிர் வாளின் அளைந்த
காகம் ஒன்றை முனிந்து அயல்கல் எழுபுல்லால்
வேக வெம்படை விட்டது மெல்ல விரிப்பாய்

என்ற அடிகளின் மூலம் அறியலாம்.

சாம்பவன்

பிரம்மன் கொட்டாவி விட்டபோது அதனின்று சாம்பன் தோன்றினான் எனப் புராணக்குறிப்புகள் கூறுகின்றன. சிவன், பிரம்மன், மற்றும் இந்திரன் முதலான தேவர்கள் முன் திருமால் தோன்றி, இராவணனை அழிப்பதற்காக இராமவதாரம் எடுப்பதாகக் கூறி வானரர்கள், வானரர் உருபெற்று உதவ வேண்டும் என்றார். அப்போது பிரம்மதேவன் தனது கூறு நெடுங்காலம் முன்னரே சாம்பன் என்னும் கரடி இனத் தலைவனாகத் தோன்றியிருப்பதாகக் கூறினார்.

சாம்பவன் மிகமிகத் தொன்மையானவன் அவன் பழையோன் என்னும் குறிப்பினை ஒரு புலவர் புகழ்ந்து நகைச் சுவை நயத்துடன் முடிந்துள்ளதை தமிழ்த்தாத்தா டாக்டர். உ.வே. சாமிநாத அய்யர் அவர்கள் குறுந்தொகையில் கூறியுள்ளதனை,

அலைகடல் கடையக் கண்டேன் அயன் ஐந்து சிரமும் கண்டேன்
மலை இரு சிறகு கண்டேன்; வாரிதி நன்னீர் கண்டேன்;
சிலை மதன் வடிவு கண்டேன்; சிவன் அத்தக் கழுத்து கண்டேன்
புலவரி இருகண் கண்டேன் கொடுத்ததை வாங்க காணேன்

என்ற அடிகள் மூலம் அறியலாம்.

தூமிரன்

தூமிரன் சாம்பவானுக்கு உடன் பிறந்தவன். கரடி இனத் தலைவன்.

இவனது படையின் ஒவ்வொரு கரடியும் திருமாலின் வராகம் போன்று வலிமை உடையது. தூமிரன் தன் ஒவ்வொரு மயிர்க்காலிலும் பெரு மலையும் அடங்கக்கூடிய தோற்றத்தினை என்பதின் மூலம் அவனது வீரத்தின் தன்மையை அறிய முடிகிறது.

பாம்பு யானை இனத்தவர்

ஆதிசேடன், இந்திரத்துய்மன் ஆகிய இருவர் பாம்பு, யானை இனத்தவர் ஆவார்கள்.

ஆதிசேடன்

ஆதிசேடன்மீதுதான் திருமால் பாற்கடலில் அனந்தசயனம் கொள்வார். திருமாலுக்கு இவன் நின்றால் குடையாம்; இருந்தால் சிங்காதனமாம்; படுத்தால் பாயாம் என்ற சிறப்புத் தொண்டு செய்பவன், திருமால் தன் மீது அறிதுயில் புரியும் அரும்பேறு பெற்றவன்.

இந்திரத்துய்மன்

கஜேந்திரன் முற்பிறவியில் இந்திரத்துய்மன் எனும் திருமால் பக்தனாக விளங்கினான். அகத்திய முனிவர் தன் அரண்மனைக்கு வந்தபோது அவன் வரவேற்று உபசரிக்கவில்லை. சினம் கொண்ட அகத்தியர் இந்திரத்துய்மனை யானையாகச்; சபித்தார். கஜம் - யானை யானைகளின் அரசன் கஜேந்திரன் அவ்யானையை முதலை ஒன்று கவ்வும்போது திருமாலை சரணமாகக் கூவி அழைத்தால் அவன் சாப விடுதலை பெறுவான் என்றார் அகத்தியர்.

முடிவுரை

மனிதர் அல்லாத பாத்திர மன உணர்வுகளில் வானர இனத்தைச் சேர்ந்த அனுமன் மற்றும் சகோதர உணர்வுகள் வெளிப்படுகின்றன. பறவை இனத்தைச் சார்ந்த சடாயு, சம்பாதி போன்றோரின் பாச உணர்வுகளும் வீர உணர்வுகளும் வெளிப்படுகின்றன.

விலங்கு இனத்தைச் சார்ந்த பாம்பு, யானை இனத்தவரின் பாச உணர்வுகள் மனிதனை விட சற்று மேலோங்கியதாக கருதப்படுகிறது. இவ்வாறாக மனிதர் அல்லாத பாத்திரப் படைப்புகள் கம்ப இராமாயணத் தில் வழி உணர முடிகிறது.

கம்பனில் மானுட - விலங்கு தொடர்பியல்

மு. ஜெயலட்சுமி
கூட்டுறவுச் சார்பதிவாளர், தமிழக அரசுப்பணி, குறளகம், சென்னை.

பால காண்டத்துக் கடிமணப் படலத்தில் 104 பாடல்கள் உள்ளன. இது இராமன், இலக்குவன், பரதன், சத்துருக்கனன், ஆகியோர்களின் திருமணத்தைப் பற்றி விரிவாகக் கூறும் பிரிவு. இப்படலத்துள் சனக மன்னது இனிய உபசரிப்பு, சீதையின் கையறுநிலை, அன்றிலுடன் பேசுதல், தென்றலோடு பேசுதல், இராமன் மனத்துடன் பேசுதல், உயிரைக் கொல்லும் விடம், மணவினை நாளை முரசேற்றி சாற்றுதல், நகரமாந்தர்கள் மகிழ்ச்சியால் செய்தவை, தசரதன் வரும்போது நிகழ்ந்தவை, தானம் செய்தல், இராமனும் சீதையும் மண்டபத்திற்கு வருதல், தாயார் மூவரையும் வணங்குதல், வசிட்டன் திருமண வேள்வியை நிறைவேற்றுதல் போன்ற நிகழ்வுகளில் மானுட விலங்கு தொடர்பியல் துறை சார்ந்து கம்பன் எவ்வாறெல்லாம் குறிப்பிட்டுள்ளார் என்பதையும் அதற்கான விளக்கங்களையும் நல்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

மயில்

இராமன், சீதை திருமண நாளை முரசு மூலம் தெரிவிக்கும்போது நகர மாந்தர் மகிழ்ச்சியைப் பற்றி கம்பன் விரிவாக எடுத்துரைக்கிறார்.

தப்பின மணி காசும் சங்கமும் மயிலுமன்னார்...... (1277)

என்ற பாடல் வரிகளில் மதிலை நகரத்து மகளிர் மயிலைப் போன்ற சாயலையுடையவர்களாக இருந்தனர் என்று மதிலை நகரத்து மகளிரைக் குறிப்பிடும்போது மயிலுக்கு ஒப்புமைப்படுத்திக் கூறுகிறார்.

யானை

மிகப்பரந்து விரிந்த புகழை உடைய சனக மன்னன், தன்மகள் திருமணத்திற்கு வந்திருந்த அனைவரையும், நன்கு வரவேற்று உபசரித் தார், திருமணத்திற்கு மதம் கொண்ட யானைப்படைகளையுடைய அரசர்கள் முதலாக பெருமை பொருந்திய தோள்களையுடைய சிறிய இளவரசர்கள் வரையிலும் துறக்கத்தின் தலைநகராகிய அமராவதிப் பட்டணத்தை அறிந்தவர்கள் போல மகிழ்ந்திருந்தனர் என்று குறிப்பிடும் போது.

இடம்படு புகழ்ச்சனகர்கோன் இனிது பேணக்
கடம்படு களிற்று அரசர் ஆதிஇடை கண்டோர் (1248)

என்று குறிப்பிடுகிறார்.

குயில்

ஆடக வளைக்குயிலும் அந்நிலையள் ஆனாள் (1249)

இதில் பொன்னாலாகிய வளையல்களை அணிந்தவளான சீதாதேவி குயில் போன்ற இனிய குரலோசையுடையவள் என்று, சீதாதேவி திருமண நிகழ்சிகள் இன்னும் முடிவில்லையே என்று மனக்கலக்கம் அடைந்தாள் என்று குறிப்பிடும் போது கம்பன் சீதாதேவியின் குரலை குயிலுடன் ஒப்புமைப்படுத்திக் கூறுகிறார்.

அன்றில் பறவை

பனைமரத்தின் மேல் தங்கிவாழும் அன்றில் பறவைகள், இரவில் ஆணும் பெண்ணுமாக இணைபிரியாது வாழும் பறவையினம், ஒன்றையொன்று சிறிதூரியினும் வருந்தும் இயல்புடையன் "அன்றில் ஒரு கண்ணில்துயின்று, ஒரு கண் ஆர்வத்தால் இன்துணை மேல் வைத்து உறங்கும்" என்கிறது நளவெண்பா அதன் குரல் விரகதாபம் மிகுந்தவர்க்குத் துன்பம் தரும் என்பது வழக்கு. நிலவு, இரவு,கடல்,தென்றல்,அன்றில் முதலியவை காமத்தை மிகுவிப்பன வாதலால் அவற்றைக் "காமோத்தீபகம்" என்பர். இனைபிரியாக் காதலர்களுக்கு அன்றிலை உவமை கூறுவது உண்டு. இக்கருத்தை கம்பன் பின்வரும் பாடல் வரிகளின் மூலம் விவரிக்கிறார்.

வினையேன் வினையால் விடியாவிடின், நீ
தனியே பறவாய், தகவு ஏதும் இலாய்,
பனைமேல் உறைவாய்! பழி பூணுதியோ? (1252)

புலி

சிறந்த, பெரிய குகையில் எப்போதும் தங்கி வாழ்கின்ற தென்றல் என்னும் புலியே! நீ என் உயிரை உனக்கு உணவாகக் கொள்ளும் பொருட்டு இரை தேடி அலைகின்றாயோ? என்றும், கொடுமை பற்றித் தென்றல் புலியாக உருவாக்கப்பட்டது. அதற்கேற்ப அனல்வீசும் வாயும், நிலா ஒளிவீசும் பற்களும் குகையாக உருவகிக்கப்பட்டன. பிரிந்தோர்க்குத் துயர் தந்து விழுங்கும் எனவே தென்றல் புலியாயிற்று,

மெல்லிய தென்றலை வலிய புலியாக உருவகித்தது கவிஞன் கவித்திறம் தானே ! புலி மலைக்குகைகளில் வாழும், தென்றலும் பொதிகை என்னும் மலையில் பிறந்து வருவது, அதனால் அதற்குப் பொதியத் தென்றல் என்றும் வழங்கப்படுகிறது. இக்கருத்தை தென்றலோடு பேசுவதாக பின்வரும் பாடல்களின் மூலம் விளக்குகிறார் கம்பன்.

மன்றல் குளிர் வாசம் வயங்கு அனல் வாய்.
மின் தொத்து. நிலா நகை. வீழ் மலயக்
குன்றில். குல மா முழையில். குடிவாழ்
தென்றற் புலியே! இரை தேடுதியோ? (1254)

மான்

இராமன் தன் மனதுடன் பேசும்போது வனத்தில் வாழும் துள்ளித் திரியும் இயல்புடைய மான் போன்ற சீதா தேவியோடு தன்மனம் போய்விட்டது என்று,

புனமான் அனையாரோடு போயின என்
மனனே ! எனை நீயும் மறந்தனையோ? (1263)

என்ற பாடல்வரிகளில் துள்ளித்திரியும் மானுக்கு சீதாதேவியை ஒப்புமைப்படுத்தி குறிப்பிட்டு இருப்பது விளங்குகிறது.

பாம்பு

உயிரைக் கொல்லுகின்ற விஷம் பாம்பின் பல்லிலுள்ளது, தன்னுடைய பார்வையிலிருந்து மட்டும் நீங்காமல், நெஞ்சுக்குள்ளேயே எப்பொழுதும் உறைபவளுமான சீதாதேவியின் மெல்லிய கடைக்கண் பார்வை பாம்பு பல்லின் விடத்தைக் காட்டிலும் கொடியது என்று இராமன் கூறுகிறார். இங்கு கம்பன் சீதாதேவியின் கண்களில் விடம் உள்ளது என்று குறிப்பிடுவது கம்பனின் அறிவியல் அறிவை பறைசாற்றுகிறது. கம்பன் ஏன் அப்படிச் சொன்னான் என்றால், பாம்பிற்கு பல்லில் விடம் இருப்பது அனைவரும் அறிந்த ஒன்று. ஆனால் திருட்டிவிடம் என்று ஒருவகைப் பாம்பு இருக்கிறதே, அது பார்க்கும் பார்வையிலேயே விடம் கக்கும். எனவே அதற்கு திருட்டிவிடம் என்று பெயர் இங்கு "திட்டிவிட மன்ன கண்ணாள்" என்று சீதையை கம்பன் சொல்லுவான். சீதையின் கண்களுக்கு திருட்டிவிடம் என்னும் ஒருவகைப் பாம்பின் கண்ணிற்கு ஒப்புமைப்படுத்தி கீழ்வரும் பாடல் வரிகளில் விளக்கியுள்ளார்.

தன் நோக்கு எரி கால் தகை வாள் அரவின்
பல் நோக்கினது என்பது பண்டு கொல் ஆம்?
என் நோக்கினும் நெஞ்சினும் என்றும், உளார்
மெல் நோக்கினதே கடுவல் விடம்ஏ (1264).

வண்டினம் மற்றும் யானை

தேவர்களுக்கெல்லாம் தலைவனான திருமாலின் அவதாரமாகிய இராமனை மனதில் நினைத்துக் கொண்டிருக்கும் சீதாதேவிக்கு நாளை திருமணம் என்று பூக்களாலும், இரத்தின மணிகளாலும், திரைச்சீலைகளாலும் முன்பே அழகுபெற்றிருக்கின்ற மதிலை நகரத்தை இன்னும் நன்கு அழகு படுத்துங்கள் என்று தன்கட்டளையாக, வண்டுகள் மொய்த்து மகிழும் கூந்தலையுடைய சீதாதேவியின் தந்தையான சனக மன்னன் யானைமீதேறி முரசேற்றி ஆனையை அறிவிக்கச் செய்தான் என்று கீழ்வரும் பாடல்வரிகள் மூலம் அரசர் முரசேற்றி ஆனையை சாற்றுவது மரபு என்று குறிப்பிடுகிறார்.

வானவர் பெருமானும் மனம் நினைவினன் ஆகத்,
தேன் நகு குழலாள் தன் திருமண வினை நாளை
பூ நகு மணி வாசம் புனை நகர் அணிவீர் என்று,
ஆனையின் மிசை ஆணை அணி முரசு அறைவித்தான் (1266).

அன்னம் மற்றும் காளை

அன்னம் மென் நடையாரும், மழவிடை அனையாரும் (1270)

என்ற பாடல் வரிகளில், மதிலை நகர மகளிர், அன்னம் போன்ற மென்மையான நடையை உடையவர்களாகவும், ஆடவர் இளமையான காளை போன்ற கம்பீரமான மிடுக்கான நடையை உடையவர்களாகவும் இருந்தனர் என்று மேலே உள்ள பாடல் வரிகள் மூலம் மிதிலை நகரத்து மகளிர் மற்றும் ஆடவர் இயல்புகளை குறிப்பிடுகிறார்.

யானை

மிதிலை நகரத்து வீரர்கள், அவர்கள் இடக்கையில் ஒளிவீசும் கேடயத்தையும், நிலவு ஒளி விடுகின்ற கூர்மையான வேலாயுதத்தை வலக்கையிலும் பிடித்துக் கொண்டு உயர்ந்த தந்தங்கள் பொருந்திய போர்க்கலைப் பயிற்சி பெற்ற யானைகளைப் போல திரிந்தனர் என்று கீழ்வரும் பாடல் வரிகளிலிருந்து அறிய முடிகிறது.

கேடகம் வெயில் வீசக், கிளர் அயில் நிலவு ஈனக்,
கோடு உயர் நெடு விஞ்சைக் குஞ்சரம் அது போல
ஆடவர் திரிவாரும், அரிவையர் களி கூரும்
நாடகம் நவில்வாரும், நகை உயிர் கவர்வாரும் (1280)

குதிரை, ஒட்டகம் மற்றும் காளை

மிதிலை நகருக்குத் திருமணம் காணவந்த சிலர் குதிரை, ஒட்டகம் போன்ற வாகனங்களில் வந்தனர்;, சிலர் கார் மேகம் போன்ற கரிய ஆண்யானைகளின் மேல் வந்தனர், சில பெண்கள் பெண்யானைகளின் மேல் ஏறி வந்தனர் என்று கீழ்வரும் பாடல் வரிகளின் மூலம் அறியலாம்

ஊர்தியில் வருவாரும், ஒளி மணி நிரை ஓடைக்
கார் மிசை வருவாரும், கரிணியில் வருவாரும் (1282)

அன்னம் மற்றும் யானை

பெடை அன நடயாரும், பிடி என வருவாரும் (1284)

என்ற பாடல் வரிகளில், பெட்டை அன்னை போன்ற மென்மையான நடையை உடைய பெண்களும், பெண்யானை போல் அசைந்து நிமிரும் பெண்களும் மிதிலை மாநகரத்தில் ஒன்று திரண்டு வந்தனர் என்று கவிஞர் குறிப்பிடுகிறார்.

வண்டு மற்றும் குதிரை

இரத்தினங்கள் பதிக்கப்பெற்ற கைவளையல்களை அணிந்திருக்கும் சீதாதேவியின் திருமணம் நடக்க இருக்கும் அந்த திருக்கல்யாண மண்டபத்தை அடைவதற்கு அரசர்களுக்கெல்லாம் அரசனாகிய தசரதச் சக்ரவர்த்தி புறப்பட்டு வரும்போது, மலர்களைக் குடைந்து மது உண்ணும் வண்டினங்கள் இசைபாடியது வெற்றியை உடைய நாட்டிய குதிரைகள் தம் குளம்புகளால் மண்ணை குடைந்து கொண்டு விரைந்து செல்வதால் எழுகின்ற தூசி விண்ணுலகத்தை மறைத்தது அத்தருணத்தில் தான் தசரதன் மணிமண்டபத்திற்குச் சென்றான். என்றும், அரசர் வரும்போது நிகழ்ந்தவையாக கீழ்வரும் பாடல் வரிகள் விளக்குகின்றன.

பண்குடை வண்டினம் பாட, ஆடல்மா
மண்இடை தூளி விண் மறைப்ப ஏகினான் (1287)

யானை மற்றும் குதிரை

தசரத சக்ரவர்த்தி திருமணத்திற்காகப் புறப்பட்டு கம்பீரமாக அமர்ந்து வரும்பொழுது. யானைப்படை பாய்ந்து செல்லும் குதிரைப்படை இவற்றின் கூட்டங்கள் தமது தகுதிக்கேற்றவாறு இனம் இனமாக நடந்து சென்றன.

பரந்த தேர், களிறு பாய்புரவி பண்ணையில் -
தரம்தரம் நடந்தன, தானை வேந்தனை (1289)

இத்தகைய சேனைகளையுடையவர் தசரதச் சக்ரவர்த்தி என்பது தெளிவாகிறது.

அன்னம்

அன்னம் மென்நடை அணங்கனைய மாதரும் (1291)

இவ்வரிகளில் மிதிலை மாநகரைப் பற்றி குறிப்பிடும்போது அன்னம் போன்ற மென்மையான நடைபயிலும் திருமகள் போன்றவர்கள் என்று குறிப்பிடுகிறார்.

பாம்பு

அரா அணை துறந்து போந்து அயோத்தி எய்திய
இராகவன் செய்தியை இயம்புவாம் அரோ (1294)

இதில் ஆதிசேடனாகிய பாம்புப் படுக்கையை விடுத்து. இப்பூவுலகிற்கு இறங்கி வந்து அயோத்தியில் தோன்றிய இராகவனது செயல்களைச் சொல்லத் தொடங்கும் போது கவிஞர் இவ்வாறு குறிப்பிடுகிறார்.

கயல்மீன்

காது இயல் கயல் விழிக் கன்னிமார்களை
வேதியர்க்கு அரு மறை விதியின் நல்கியே (1297)

இப்பாடல்களில், வேதமுணர்ந்த இளைஞர்களுக்கு, வேதங்களில் கூறிய விதிமுறைப்படி காதளவோடிய கயல்மீன் போன்ற நீண்ட கண்களை உடைய கன்னிப் பெண்களை கன்னிகாதனம் செய்தாள் என்பது தெரிகிறது. மணமகன் தன் மணம் குறித்துப் புறப்படும்போது, பல தானங்கள் செய்ய வேண்டுமெண்பது விதி, கன்னிகாதனமும் அதில் ஒன்று. இங்கு கன்னிப்பெண்களின் கண்களை கயல் மீனுக்கு ஒப்புமைப் படுத்தியுள்ளார்.

பாம்பு

பந்தி செய் வயிரங்கள் பெரியின் பாடு உற
அந்தம் இல் சுடர் மணி அழலில் தோன்றல் ஆல்
சுந்தரத் தோள் அணி வலயம் தொல்லை நாள்
மந்தரம் சுற்றிய அரவை மானுமே (1303)

இராமபிரான் தன் அழகிய தோள்களில் அணிந்த அழகிய தோள் வளை பாற்கடல் கடையப்பெற்ற காலத்தில் மந்தரமலையைச் சுற்றிப் பிணிக்கப்பட்ட வாசுகி என்னும் பாம்பினை ஒத்து விளங்கியது, இராமபிரானின் தோள்களை மந்திரமலைக்கும் அதைச் சுற்றி அணிந்த தோள்வளை, வாசுகி என்னும் பாம்பிற்கும் ஒப்புமையாக கூறப்பட்டுள்ளது. பாம்பின் படத்திலுள்ள புள்ளிகள், தோள்வளையத்தில் பதிக்கப்பட்டுள்ள வைரமணிகளும் அதன் நெருப்புமிகும் கண்கள் தோள்வளையத்தில் பதிக்கப்பட்டுள்ள செந்நிற மாணிக்கங்களுக்கும் ஒப்புமைப்படுத்தி கூறப்பட்டுள்ளது.

சுறாமீன்

காசொடு கண் நிழல் கஞலக் கைவினை
ஏசு அறு கிம்புரி எயிறு வெண் நிலா
வீசலின் மகரவாய் விளங்கு வாள் முகம்
ஆசையை ஒளிகளால் அளந்து காட்ட (1313)

இதில் கிம்புரி என்பது சுறாமீனின் அங்காந்த வாயின் வடிவில் செய்யப்பட்ட ஆபரணம். இதற்கு மகரவாய் என்று வேறு பெயரும் உண்டு. இந்தமணி மகரம் என்ற பெயருடன் மகளிரின் தொடையணியாகவும், தலையணியாகவும், தோளணியாகவும் வழங்கப்படுகிறது. வெண்மை யான இரத்தினங்களுடன் அழகிய கைவேலைப்பாடு அமைந்த கிம்புரி என்னும் தொடையனியிலுள்ள சுறாமீனின் பற்கள் வெள்ளிய ஒளியைப் பரப்பும் தன்மை உடையது. இரத்தினத்திலிருந்து வரும் ஒளி திசைகள் எல்லாவற்றையும் கண்ணுக்கு எட்டிய தூரம் வரையிலும் ஒளிபாய்ச்சிக் காட்டின என்று அதன் ஒளிச்சிறப்பைக் கூறும் போது சுறாமீனின் பற்களுடன் ஒப்புமைப்படுத்திக் கூறப்படுவது கம்பனின் கவித்தன்மையைக் காட்டுகிறது.

பாம்பு

இன்னணம் ஒளிர்தர இமையவர்க்கு எலாம்
தன்னையே அனையது ஓர் கோலம் தாங்கினான் (1315)

இப்பாடல் வரிகளில் ஒப்பிலியப்பன் திருக்கோலம் பூண்டதை கம்பன் எடுத்துரைப்பார். தேவர்கள் இயற்றிய அரும்பெரும் தவத்தினை அவர்களைக் காக்கும் பொருட்டு. ஆயிரம் தலைகளையுடைய ஆதிசேடனாகிய பாம்பின் முடியிலுள்ள நாகரத்தினக் கற்கள் ஒளி வீசுகின்ற படுக்கையில் துயிலும் யோக நித்திரையை நீக்கி அயோத்தி நகரில் இராமபிரானாக அவதரித்து தனக்கு ஒப்பார் இல்லை என்றும் மும்மூர்த்திகளின் ஒருங்கிணைந்த வடிவமே இராமபிரான் என்றும் தனது கடவுள் கொள்கையைக் கம்பன் இங்கு தெளிவாக உணர்த்தும் போது விஷ்ணுவின் பாயலை குறிப்பிடும் போது ஆயிரம் தலைகளையுடைய ஆதிசேடனாகிய பாம்பை குறிப்பிட்டுள்ளனர் என்பது தெரிகிறது.

நிறைவுரை

கம்பனது காவியத்தின் வாயிலாக அயலாரும் மானுட - விலங்கு தொடர்பியல் என்ற இக்கட்டுரையின் வாயிலாக யானை. குதிரை. பசு. அன்னம். பாம்பு. வண்டு. சுறா மீன். கயல் மீன். அன்னம். குதிரை. ஒட்டகம். காளை. மான். புலி. அன்றில் பறவை. மயில். குயில் போன்ற விலங்குகளை அறியலாகும். கருத்தியல் வெளிப்பாடுகள் எல்லாம் இக்கட்டுரையின் வாயிலாக வெளிப்படுத்தப்பட்டுள்ளன. ஒவ்வொரு விலங்கும். கம்பன் எதனை வெளிப்படுத்த மேற்கோளாகக் கையாண்டுள்ளார் என்றும் அந்த விலங்குகளின் தன்மையும் ஆய்வின் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. மனிதர்கள். தான் வேறு விலங்குகள் வேறு என்றில்லாமல் விலங்குகளுடன் இணைந்தே வாழ்ந்துள்ளனர் என்பதை இக்கட்டுரை வாயிலாக அறியமுடிகிறது.

காலமறிந்து உதவிய கருணைப் பாத்திரம்- கருடன்

முனைவர் **எல்.மாலினி**
துணைப்பேராசிரியர், தமிழ்த்துறை, பாரதிதாசன் அரசினர் மகளிர் கல்லூரி, புதுச்சேரி

கருடாழ்வார் என்றும் சிறிய திருவடி என்றும் பேசப்பெறும் கருடன், திருமாலின் பத்து அவதாரங்களுள் ஏழாவது அவதாரமாகிய இராமாவ தாரத்தின்போது, ஒரு பறவையாய் வந்து உதவிய பாங்கைக் கம்பனைத் துணைக்கொண்டு இக்கட்டுரை விரிக்கிறது.

ஆடல் பாடல் கீதங்கள் என்று மங்கலமாக விளங்கும் இலங்கை இப்பொழுது களையிழந்து காட்சியளிக்கிறது. இராமனுக்கும் இராவண னுக்கும் நடந்த யுத்தத்தில் இராமன் தம்பி இலக்குவனாலும் இராமன்மீது பக்திகொண்ட அனுமனாலும், இராவணனின் மைந்தர்களில் அதிகாய னும் நிகும்பனும் இறந்துபோயினர். மேலும், களத்தில் அசுரர் சிலர் இறந்ததால் அரக்கியரின் ஒப்பாரி மிகுந்தொலிக்க, இராவணனின் மூத்த மைந்தனாகிய இந்திரசித்தன் செய்தி கேட்டு மிகுந்த சீற்றத்துடன் தேர் ஏறிச் செல்கிறான் தன் தந்தையைக் காண. இக்காட்சியை,

கேட்டான் இடையுற்றது என்று கிளத்தல் யாரும்
மாட்டாது நடுங்கினர் மாற்றம் மறந்துநின்றார்
ஓட்டா நெடுந்தேர் கடிது ஓட்டி இமைப்பின் உற்றார்
காட்டாதன காட்டிய தாதையைச் சென்று கண்டான் (யுத்த.1946)

என்ற பாடல் விளக்கும்.

தன் உடன்பிறந்தார் மாண்ட செய்தியைத் தந்தையின் வாயிலாகத் தெளிவுற அறிந்த இந்திரசித்தன், கண்களில் தீப்பொறி பறக்க இந்திரனின் தேரைவிடவும் சிறந்து விளங்கும் தன்தேரில் ஏறி இந்திரன் முதலாத் தேவர்களை வென்ற தன் பெருவில்லைக் கையில் ஏந்தி, நாற்பதினா- யிரம் வெள்ளம் சேனை புடைசூழப் போர்க்களத்திற்கு வந்தான்.

'தன் தம்பியர் இறக்கக் காரணமாகியவர்களைக் கொன்றே தீருவேன். இலக்குவன் உதிரத்தை நிலமகள் பருகத் தருவேன். இல்லையெனில் தேவர்களும் மற்றோரும் என்னை இகழட்டும்' என்று வஞ்சினம் கூறி இலக்குவன் மற்றும் அனுமனோடு போர்புரியத்தொடங்கினான் இந்திரசித்தன். பெரும்போர். இலக்குவனுக்குத் துணையாக, அங்கதன், வானரவீரர்கள், சிவன் ஒத்த நீலனும், காலனாகிய எமனும் தன்னுடைப்பரிவாரங்களோடு நின்றனர்.

இலக்குவன் இந்திரசித்தன் மார்பில் அணிந்திருந்த வச்சிரக்கவசத்தைத் துகள் செய்தான். அனுமன் இந்திரசித்தனின் தேரினைக் காலால் உதைத்தான். இலக்குவன் விட்ட பாணத்தால், இந்திரசித்தனின் மார்பு புண்ணாகி உதிரம் அருவி போல் ஓடியது. இந்திரசித்தனும் தன் மாயையாலும், மறத்தாலும் வெற்றி பெற முடியும் என்று நினைந்தும் இயலாத நிலையில், தனது கொடிய நாகாத்திரத்தை, (பாம்புக்கணையினைப்) பகைவர் மீது ஏவிவிடுகிறான். அக்கணையானது இலக்குவன் மற்றும் அனுமன், வானரப்படையினர் யாவரையும் வளைத்துக் கொண்டது.

விட்டனன் அரக்கன் வெய்ய படையினை விடுத்தலோடும்
எட்டினோடு இரண்டுதிக்கும் இருள் திரிந்து இரிய ஓடி
கட்டினது என்ப மன்னோ காகுத்தற்கு இளைய காளை
வட்ட வான் வயிரத் திண்தோள் மலைகளை உளைய வாங்கி (2132)

மற்றையோர் தமையும் எல்லாம் வாள்எயிற்று அரவம் வந்து
சுற்றிய வயிரத்தூணின் மலையின் பெரிய தோள்கள்
இற்றன இற்ற என்ன இறுக்கின இளகா உள்ளம்
தெற்றென உடைய வீரர் இருந்தனர் செய்வது ஏரார் (2134)

என்ற பாடல்கள், இக்காட்சியைச் சித்திரப்படுத்துகின்றன.

நாகக்கணை, தம் படைகளை வளைத்துக்கொண்டமையால் இன்னது செய்வது என்று தெரியாமல் இலக்குவன் வலிமை குன்றியவனானான். வாயுதேவனின் புதல்வனாகிய அனுமன் ஒரு கணப்பொழுதில், வானத்தை நாடிச்சென்று இந்திரசித்தனைப் பற்றிக் கொள்வேன் என்று சினந்தெழுந்த வேளையில் நாகபாசம் மேலும் அவனை இறுக்கியது.

இந்த அளவில் வென்ற களிப்பில் திளைத்த இந்திரசித்தன் இந்த வெற்றியைச் செய்தியைத் தன் தந்தை இராவணனுக்கு எடுத்துரைக்க அரண்மனைக்கு விரைந்தான். இந்த வேளையில் வேறொன்றும் செய்ய இயலாத வீடணன் இலக்குவனாதியர் நாகபாசத்தால் பிணைக்கப் பெற்றிருக்கும் செய்தியை, இராமனிடம் எடுத்துக்கூற, அனலன் என்னும் அமைச்சரோடு சென்று இராமனைச் சந்தித்தான்.

இராமன் களத்தை நோக்கி விரைந்து வந்து, இலக்குவனைப் பார்த்தான். அவனது மலையொத்த தோளை வளைத்த அரவின் கண்களை உற்றுப் பார்த்து, தன்னால் எதையும் செய்ய இயலவில்லையே என்றும், நாகபாசத்தால் இலக்குவன் இறந்தால் தானும் இறப்பது உறுதி என்றும்

இராமமன் உரைத்தான். இது கண்டு தேவர்களும் நொந்த வேளையில், இராமன் துயர் தீர்க்க வந்த கருடன் அவன் கழல் பணிந்து இன்மொழி புகலுகின்றான்.

வந்தாய் மறைந்து பிரிவால் வாடும் மலர்மேல் அயன்தன் முதலோர்
தம் தாதை இறைவா பிறந்து விளையாடுகின்ற தனியோய்
சிந்தாகுலங்கள் களைவாய் தளர்ந்துதுயர்கூரல் என்ன செயலோ
எந்தாய் வருந்தல் உடையாய் வருந்தல்என இன்னபன்னி மொழிவான் (2193)

என்று கம்பன் கருடமொழிகளைப் புகல்கின்றான். மேலும், "மும் மூர்த்தி களில் ஒருவன் நீ, காத்தல் தொழில் செய்பவன் நீ. உயிர்களின் வினைக்குத் தக்கவாறு வாழ்நாளை அளிக்கின்றாய். திருமாலின் அம்சமானவனே, உனது மாயத்தை அறிபவர் யாருமிலர்" என்றெல்லாம் இராமன் அருளை மனதில் எண்ணித் துதித்த கருடன் வானில் வட்டமிட்டு இலக்குவன் பிணிக்கப்பட்ட இடத்தை அடைந்து தன் சிறகுகளினால் காற்றை விசிறியதால், நாகக்கணை, உருத்தெரியாதழிந்தது. இலக்குவன் முதலானோரின் உடல்களில் உள்ள அழுத்தத் தழும்புகளும் மறைந்தன. இராமன் இலக்குவனைக் கட்டித் தழுவிய வண்ணம், கருடனைப் பின் வருமாறு புகழ்வதாகக் கம்பன் புகல்கிறான்.

ஆரியன் அவனை நோக்கி, ஆர் உயிர் உதவி யாதும்
காரியம் இல்லான் போனான் கருணையோர் கடமை ஈதால்
பேர்இயலாளர் செய்கை ஊதியம் பிடித்தும் என்னார்
மாரியை நோக்கிக் கைம்மாறு இயற்றுமோ வையம் என்றான் (2214)

கைம்மாறு வேண்டாக் கடப்பாடு மாரி மாட்டு
என் ஆற்றும் கொல்லோ உலகு.

என்ற வள்ளுவர் வாக்கைக் கம்பன் தன் கவிப்போக்கில் அழகுற எடுத்துக் கையாளும் இடம் இது.

காலம் அறிந்து கருணையொடு வந்து உதவிய கருடனின் உதவி செய்யாமல் செய்த உதவி இதற்கு மாற்றாய் வையகமும் வானகமும் ஆற்ற அரிது என்றால் அது மிகையில்லை. கதைப்போக்கில் இடம்பெறும் இக்கருடக் கதாபாத்திரம், பறவைகளின் துணையோடு பழந்தமிழ்மக்கள் பகையை வென்றிருக்கின்றனர் என்பதற்கும், நாகத்திற்கு முரண் கருடன் ஆதலின் இருவேறு கருத்தியல்களை முன்னிறுத்திப் பகை வெல்லப் பயின்றிருக்கின்றனர் என்பதற்கும் விளக்கமாக அமைந்திருக்கிறது என்றும் கருத இடமுண்டு.

கம்பன் வகுத்த கற்பியல்

சு. சுஜிதா
முனைவர் பட்ட ஆய்வாளர், அவினாசிலிங்கம் மனையியல், மற்றும் உயர்கல்வி நிறுவனம், கோயம்புத்தூர்.

கம்பனின் காப்பியம் தமிழுக்கு ஒப்பற்ற இனிய அமிர்தமாகும். அதனை நுகர, நுகர வேறு வேறு புதிய இனிமையும் உணர்வும் கிடைக்கின்றன. கம்பராமாயணத்தில் இடம்பெறுகின்ற கற்பு பற்றிய செய்திகள் கம்பரின் படைப்புத்திறனை வெளிப்படுத்தும் விதமாக அமைகின்றன. அவ்அகஒழுக்கக் கருத்துக்கள் இங்கு சிந்தனைக்கு எடுத்துக் கொள்ளப் படுகின்றது.

அகத்திணை

மனிதனின் வாழ்வில் நிகழும் அகநிகழ்ச்சிகளை சித்திரித்துக் காட்டுவது அக இலக்கியம்

கைக்கிளை முதலா பெருந்திணை இறுவாய்
முற்படக் கிளந்த எழுதிணை என்ப (தொல். நூ. 947)

எனும் நூற்பாவில், கைக்கிளை, குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை, பெருந்திணை என்ற முறையில் எழு திணைகளகத் தொல்காப்பியர் குறிப்பிட்டுள்ளார்.

களவு வாழ்வில் ஈடுபடும் தலைவனுக்கும், தலைவிக்கும் இருக்க வேண்டிய ஒப்புமையாகிய, குலம், ஒழுக்கம், ஆளுந்தன்மை, ஒத்த பருவம், அழகு, அன்பு, அடக்கம், கருணை, அறிவு, செல்வம் என்ற பத்து வகை நற்பண்புகளும் அமையப் பெறல் வேண்டும்.

இவற்றில் குலம், செல்வம், அழகு போன்றவை எல்லோருக்கும் இயற்கையாக அமைந்திடலாகாது இருந்தாலும் இவை பொருந்தாதவர்கள் ஐந்திணைப் பாலில் இடம் பெறலாகாது என்றும் கூறிவிட முடியாது. எதிர்கால கற்பு வாழ்க்கையில் இருவீட்டாரின் சம்மதத்திற்கும், பிரச்சனைகளைத் தவிப்பதற்கும் இப்பத்து பண்புகளைக் கூறியிருக்கக் கூடும் என எண்ணத் தோன்றுகிறது.

தொல்காப்பியர் கூறியுள்ள விதிக்கு உட்பட்டவர்களகவே இராமனும், சீதையும் காணப்படுகின்றனர். ஐந்திணையில் நிகழும் காமக் கூட்டத்தில்

தலைமகனும் தலைமகளும் எதிர்ப்படுதலுக்கும் காரணம் கூறும் தொல்காப்பியர்,

ஒன்றே வேறே என்றிரு பால் வயின்
ஒன்றி உயர்ந்த பால தாணையின்
ஒத்த கிழவனும் கிழத்தியும் காண்ப
மிக்கோ னாயினுங் கடி வரை இன்றே (தொ.நூ. 1039)

என்பர். இதற்கு ஒருவனும் ஒருத்தியுமாக இல்லறம் செய்துழி அவ்விருவரையும் மறுபிறப்பிலும் ஒன்றுவித்தல் வேறாக்குதலுமாகிய இருவகை ஊழினும் இருவருள்ளமும் பிறப்புத் தோறும் ஒன்றி நல்வினைக் கண்ணே நிகழ்ந்த ஊழினது ஆணையின் என்றவாறு வ.சு.ப.மாணிக்கம் கூறியுள்ளமை இராமனுக்கும், சீதைக்கும் பொருத்தமுற கம்பர் வெளிப்படுத்தியுள்ளார்.

கருங்கடற் பள்ளியில் கலவி நீங்கிப் போய்ப்
பிரிந்தவர் கூடினால் பேசல் வேண்டுமோ? (517: 3-4)

எனும் வரிகளில் கம்பர் திருமால் இலக்குமியின் அவதாரச் சிறப்பின்படி அறியலாம்.

கற்பு

கற்பியலின் முதல்நூற்பாவில் கற்புக்குரிய இலக்கணத்தைக் கூறுகின்றார்.

கற்பெனப் படுவது கரணமொடு புணரக்
கொளற்குரி மரபின் கிழவன் கிழத்தியைக்
கொடைக்குரி மரபினோர் கொடுப்பக்கொள் வதுவே (தொல்.நூ. 1088)

இதற்கு உரை கண்ட இளம்பூரனார். 'கற்பென்று சொல்லப்படுவது காரணத்தோடு பொருந்திக் கொடுத்தற்குரிய மரபினை உடையவர் கொடுப்பக் கொள்வது' என்கிறார். இராமன் சீதை இருவரின் திருமணத்தை விளக்க வந்த கம்பர், இந்நூற்பாவின் கருத்துக்கேற்ப கற்பிலக்கணத்தைக் கடைப்பிடித்திருக்கிறார். இதனைக் கடிமணப் படலத்தில்,

பூ மகளும் பொருளும் என, நீ என்
மாமகள் தன்னொடும் மன்னுதி என்னா
தாமரை அன்ன தடக்கையின் ஈந்தான் (1245: 2-4)

என்ற பாடலின் மூலம் விளக்குகிறார். இப்பாடலில் சீதையைப்

பெறுதற்குரிய இராமனுக்குக் கொடுத்தற்குரிய மரபினை உடைய சீதையின் தந்தையான சனகன் தாரை வார்த்துக் கொடுப்பதாக கூறுவது தொல்காப்பியர் கூறும் கற்பிலக்கணத்திற்கு ஏற்ப அமைந்துள்ளது.

இராமன், சீதை இருவரின் கற்புநிலை

மிதிலபுரியில் கன்னிமாடத்தில் சீதை இருக்கின்றாள் விசுவாமித்திரருடன் இராமனும் இலக்குவனும் வீதியிலே நடந்து செல்கின்றனர். சிவதனுசை வளைத்தவருக்குச் சீதை துணைவி. இராமனைக் கண்ட சீதை அவன் மீது காதலுற்று அவனே சிவதனுசை வளைக்க வேண்டும் என எண்ணுகிறாள். தன் ஆசை நிறைவேறாவிடில் உயிர் துறக்கவும் தயராக இருக்கிறாள் என்பதை.

வரை செய்தாள் வில்லுறுத்தவன் மாமுனியொடும்
விரசினான் அல்லனேல் விடுவேல்யான் உயிர் எனக்
கரைசெயா வேலையில் பெரிய கற்பினாள் தெரிந்து
உரைசெய்தாள் அஃதெலாம் உணர நீஉரை செய்வாய் (4514)

இப்பாடல் இலங்கை செல்லும் அனுமனுக்கு இராமன் கூறியது. இராமனை யார் என அறியாப் போதிலேயே அவனை அடைய வேண்டும், அல்லெனில் உயிர் துறப்பேன் எனத் தன் மனக்கற்பை வெளிப்படுத்துகிறாள். சீதையின் கற்பைப் போன்றே இராமனும் 'இந்த இப்பிறவிக்கு இன்னொரு மாதரை சிந்தையாலும் தொடேன்' என்ற வாக்கு. கற்பு என்பது இருபாலருக்கும் உரியது என்பதைப் புலப்பட வைக்கின்றது.

தற்கொண்டான் பேணல்

'தற்காத்து தற்கொண்டாள் பேணி தகைசான்ற சொற்காத்துச் சோவிலாள் பெண்' என்ற குறளுக்கு ஏற்ப பெண்மையின் அடுத்த நிலை கணவனின் சுக துக்கங்களில் பங்கெடுத்தலாகும். அந்நிலையிலும் சீதை பேசப்படுகிறாள் அரச கட்டளையை ஏற்று இராமன் காடேக உறுதி பூண்டு சீதையிடம் விடைபெற வந்தான்.

நீ வருந்தலை நீங்குவன் யான் என்ற
தீய வெஞ் சொல் செவி சுடத் தொம்பினாள் (1823:3-4)

இதற்கு ஆறுதல் கூறப்புகும் இராமன் சீதையிடம் காட்டில் வெப்பம் அதிகம் அங்கு உன் மலர் பாதங்கள் பரற்கற்களில் பட்டு வேதனை என்றான்.

அது கேட்ட சீதை உணர்ச்சி பொங்க 'நின் பிரிவினும் சுடுமே பொருங்காடு' கணவன் இருக்குமிடமே மனைவிக்குச் சொர்க்கம் எனச் சுட்டி இராமனோடு காடேக ஒப்புதல் பெறுகின்றாள்.

சீதை கற்பின் ஆற்றல்

கற்பின் வல்லமையாளான சீதையின் கற்பை,

கோநகர் ....
ஆன்வன் கற்பினால் வெந்தது அல்லது ஓர்
வானரம் சுட்டது என உணர்தல் மாட்சியோ (6145)

என வீடணன் இராவணனிடமும்,

திட்டியின் விடமன்ன கற்பின் செல்வியை
விட்டிலையோ இது விதியின் வண்ணமே (7351: 3-4)

என்று கும்பகர்ணன்கூறும் உரையாடலிலும் சீதையின் கற்பின் ஆற்றல் புலப்படுகின்றது. கற்பின் ஆற்றலுக்குத் தன்னம்பிக்கை தனித் திறனாகும்.

அல்லல் மாக்கள் இலங்கையது ஆகுமோ
எல்லை நீத்த உலகங்கள் யாவும் என்
சொல்லினால் சுடுவேன் அது தூயவன்
வில்லின் ஆற்றலுக்கு மாசு என்று வீசினேன் (5362)

என்ற பாடலின் தன் கற்பின் திண்மையைச் சீதை ஆஞ்சநேயனிடம் தெரிவிப்பதோடு, மனைவியின் கடமை கணவனின் பெருமையைக் காப்பற்றல் என்ற குறிக்கோளோடு கணவன் வருகைக்காகப் பொறுமை காக்கும் சீதையின் பண்பு கற்பின் வெளிப்பாடாக மிளிர்கின்றது. இதனை எல்லாம் தொனிக்கும் நிலையிலேயே அனுமன் கற்பினிக்கு அணியை என்கின்றான் .

சீதையின் கற்பு என்னும் பெண்மைத் திறத்தினைக் கம்பர் யுத்தகாண்ட மீட்சிப் படலத்தினுள்

கற்பினுக்கு அரசினைப் பெண்மைக் காப்பினை (1011:1)

பெண்மையும் பெருமையும் பிறப்பும் கற்பு (1017:1)

எத்தவம் எந்நலம் என்ன கற்பு நாண் (1025:1)

என்றெல்லாம் விதந்து பேசி களிக்கின்றார்.

சொல்லின் செல்வனும் கற்புக்கரசியும்

மரமடங்கலும் கற்பகம், மனையெலாம் கனகம், கறங்கு கால் புகா, கார் புகா, கதிர் புகா கனலி மறம் புகா இலங்கை மா நகரில் சீதை பல இடங்களிலும் தேடி வருகிறான் அனுமன். ஒப்பற்ற மயன் மகள் மண்டோதரி உறையும் மாடத்தைக் காண்கிறான். கற்புக்கரசி, மண்டோதரி உறையும் மாளிகையாதலால், 'தூய மாளிகை' என்று கம்பன் பாராட்டுகிறான்.

குடும்பத் தலைவியாக அமைபவள் தன்னையும், தன்னைக் துணையாக நம்பி மணம் செய்து கொண்ட தலைவனையும் தன்னுடைய பண்பாலும், அறிவாலும் காப்பற்றும் திறன் படைத்தவளாக விளங்க வேண்டும் என்பதோடு முன்னோர் பாதுகாத்து வந்த குடிச்சிறப்பைக் காத்து நிலை நிறுத்தும் சிறந்த ஒழுக்கமும் கற்பாகப் போற்றப்படும். சீதையைக் கண்ட அனுமன் இராமனிடம்

உன்பெருந்தேவி என்னும் உரிமைக்கும் உன்னைப்பெற்ற
மனப்பெருமருகி என்னும் வாய்மைக்கும் மிதிலை மன்னன்
தனிபெருந்தனயை என்னும் தகைமைக்கும் தலைமை சான்றாள்
(6032: 1-3)

என்கிறான். சீதையின் பண்பினையும் கற்பின் சிறப்பினையும் சொல்லின் செல்வனின் வாக்கு மூலத்தால் கம்பன் புலப்படுத்திக் காட்டுகின்றான். சீதையின் தோற்றத்தைக் கொண்டே அவளது கற்பு நிலையைக் காணும் அனுமன்,

மென்மருங்குல்போல் வேறுஉள அங்கமும் மெலிந்தாள் (5071:4)

என்றும்,

தேவுதெண் கடலமிழ்து கொண்டு அனங்கவேள் செய்த
ஓவியம் புகையுண்டதே ஒக்கின்ற உருவாள் (79:3-4)

என்று கூறுகின்றான். தலைவனின் அன்பையும் அருளையும் பெறாது கலங்கி நிற்கும் சீதையைக் கற்பின் உருவாகக் காட்டுகின்றான். அரக்கியர் கூட்டத்துக்கிடையே மாசுபடிந்த இரத்தினமாக, ஒளி இழந்த நிலவாகச் சீதையைக் காணும் அனுமன், சீதையின் கற்புக்குக் களங்மில்லை என்பதை உணர்ந்து கொள்கின்றான். இராமனை நேரில் கண்டபோது அனுமன்,

கண்டனென் கற்பினுக்கு அணியை கண்களால் (6032:1)

என எதிர்ப்பாப்புக்கு ஏற்ற விளக்கத்தைத் தந்து இராமனை உயிர்ப் பிக்கிறான். மேலும் சீதையின் கற்பொழுக்கத்தை உணர்ச்சியகாவும் உருக்கமாகவும் அனுமன் வாயிலாக எடுத்துக் கூறும் கம்பன்,

விற்பெருந்தடந்தோள் வீர! வீங்குநீர் இலங்கை வெற்பில்
நற்பெருந்தவத்தளாய நங்கையைக் கண்டேன் அல்லேன்
இற்பிறப்பு என்பதொன்றும் இரும்பொறை என்ப தொன்றும்
கற்பெனும் பெயரது ஒன்றும் களிநடம் புரியக் கண்டேன் (6035)

என்னும் பாடலில் சீதையின் கற்புச் சிறப்பைத் தெளிவாகச் சுட்டுகின்றான். இவ்வாறு கம்பன், கற்பெனும் உயரிய ஒழுக்கத்தை, மனிதப் பண்பைக் காவியத் தலைவியை அடிப்படையாகக் கொண்டு பேசும் இடங்களில் சில எடுத்துகாட்டப் பெற்றுள்ளன.

கம்பன் செய்த புதுமை

கே.ஏ.ஜெஹபர் உசேன்
கூத்தாநல்லூர். திருவாரூர் மாவட்டம்.

கற்பு என்பது பெண்களுக்கு மட்டுமே வேண்டும். ஆண்களுக்கு அஃது வேண்டற்பாற்றன்று என்னும் சூழல் நிலவிய காலகட்டத்தில்தான் கம்பன் ஆணும் ஒழுக்கத்தை உயிராக ஓம்பவேண்டும். கற்பு என்பது இருபாலருக்கும் பொது எனப் போற்றப்படவேண்டும் என்று கருதினான். ஒருவனுக்கு ஒருத்தி என்னும் மரபுணர்த்த இராமகாதையை எடுத்துக் கொண்டான்.

கதைத்தேர்வு

நடையில் நின்றுயர் நாயகனாகிய இராமன், 'இந்த இப்பிறவிக்கு இருமாதரைச் சிந்தையாலும் தொடேன்' என்று வாழும் பாத்திரம். இவ்வொழுக்கம் உயர்திணைகளுக்குமட்டுமின்றி, அஃறிணைகளுக்கும் பொருந்துமாறு கம்பன் இக்கதையைத்தேர்ந்து காவியம் படைத்துப் புதுமை செய்கிறான்.

ஒருவனுக்கு ஒருத்தி

தன் காப்பிய நாயகனாம் இராமன் மட்டுமன்றி, கோசலத்தில் உள்ள ஆண்கள் அனைவருமே ஐம்பொறிகளையும் அடக்கியவர்களாகத் திகழ்ந்தனர் என்பதை,

ஆசலம்புரி ஐம்பொறி வாளியும்
காசுஅலம்பு முலையவர் கண் எனும்
பூசல் அம்பும் நெறியின் புறம் செலாக் கோசலம்

என்று எடுத்துக் காட்டுகிறான்.

ஆடவர் தன்மை எப்படியோ அப்படியே நாட்டின் தரமும் அமையும். ஆடவர்கள் நல்லவர்களாக இருக்கும் நாடு சிறக்கும். ஆண்கள் நல்லவராகத் திகழப் பெண்கள் கற்புடன் திகழ வேண்டும். இதனை

பொற்பின் நின்றன, பொலிவு பொய் இலா
நிற்பின், நின்றன, நீதி மாதரார்
அற்பின் நின்றன, அறங்கள்; அன்னவர்
கற்பின் நின்றன, கால மாரியே.

என்று பெண்களின் கற்பைப் போற்றுகின்றான்.

அஃறிணையிடத்தும் ஒழுக்கம்

ஒழுக்கம் உயர்திணைக்கு மட்டுமே உயிர்நாடி போன்றது அன்று. அஃறிணைக்கும் உரியது.

ஓர் ஆண்புறா, ஓவியப்புறா ஒன்றைத் தன் பேடை என எண்ணி அதனருகில் அமர்ந்து அவ்வோவியப் பேடை ஆடாது அசையாது இருக்கவே தன்னோடு ஊடல் கொண்டுள்ளது போலும் என்று கருதி அதன் அருகிலேயே அமர்ந்திருந்தது. அந்நேரத்தில் பெண்புறா அங்கே வந்தது. அது தன் துணையான ஆண்புறா வேறொரு பெண் புறாவுடன் காதல் நாடகம் நடத்துவதாகக் கருதி மனம் வருந்தியது. இப்படி மனம் கசந்த பெண் புறா உலக வாழ்வை வெறுத்துத் துறவு பூண்டதாம். இக்காட்சியை

தா இல் பொன் - தலத்தின், நல் தவத்தினோர்கள் தங்கு தாள்
பூ உயர்த்த கற்பகப் பொதும்பர் புக்கு ஒதுங்குமால்-
ஆவி ஒத்த அன்பு சேவல் கூவ வந்து அணைந்திடா
ஓவியப் புறாவின் மாடு இருக்க ஊடு பேடையே.

இப்படிப் புறாக்களிடமும் கற்பொழுக்கத்தை நிலைநிறுத்தியவன் கம்பன்.

ஈரறிவு கொண்ட பெண் சங்கினருகே, நான்கறிவு பெற்ற ஆண் தவளை இயல்பாகச் செல்கிறது. இதைத் தொலைவில் இருந்து அதன் இணையான சூல் கொண்ட பெண் தவளை பார்க்கிறது. தன் கணவன் வேற்றினமான சங்குடன் உறவு கொள்ள இயலாது என்று அறிந்திருந்தும், இயற்கையை மறந்து, எங்கே தன் கணவன் ஒழுக்கம் தவறிவிடுவானோ என்னும் அச்சத்தால், பெண் தவளை சினந்து நீரைக் கலக்கித் தன் சினத்தை வெளிப்படுத்தியது எனக் காட்டுகிறான் கம்பன் அக்காட்சி தரும் பாடல் பின்வருமாறு.

ஏற்றவளைவரி சிலையோன் இயம்பாமுன்இகல் அரக்கி
சேற்றவளை தன் கணவன் அருகு இருப்ப, சினம் திருகி
சூல்தவளை நீருழக்கும் துறைகெழு நீர்வளநாட
மாற்றவளைக் கண்டக்கால் அழலாதோ மனம்

பரத்தையர் இல்லா மருதம்

சங்கஇலக்கியங்களில் மருதத்திணை சார்ந்த பாடல்கள் பல காணப்படுகின்றன. அவற்றுள் மருதத்தின் ஒழுக்கமாகக் கூறப்படும் ஊடலும் ஊடல் நிமித்தமும் எழக் காரணமாகிய பரத்தையர் வாழ்வு பேசப்படும். ஆனால், கம்பனோ, பரத்தையர் இல்லா ஒழுக்கம் நிரம்பிய கற்புநிறை சமுதாயம் தோன்றவேண்டும் என்ற கருத்துடன், ஒருவனுக்கு ஒருத்தி என்னும் கோட்பாட்டை விளக்கக் கம்பராமாயணத்தை எடுத்துக் கொண்டான். அக்காவியம் மூலமாகப் புதுமைப் புரட்சி செய்திருக்கிறான் என்பதே உண்மை.

கம்பனில் கற்புடை மகளிர்

தி. ஜெயசித்ரா

முனைவர் பட்ட ஆய்வாளர், தூயவளனார் கல்லூரி, திருச்சி.

ஒரு தேசத்தின் நலன் ஒரு தனிமனிதனைச் சார்ந்திருக்கிறது. தனி மனித ஒழுக்கத்தில் தலையாயது கற்பு. அக்கற்பு பெண் பாத்திரங்களின் மூலம் அழகு பெறுகிறது.

"மகளிரின் அன்பினால் அறங்கள் நிலைபெற்றது. மகளிரது கற்பினால் பருவமழைகள் நிலைமாறாமல் பொழிந்து நின்றன"(91) என்று பாலகாண்டத்தில் கற்பின் திறம் பற்றி பாடுகிறார் கம்பர். கற்புடைய மடந்தையரின் பண்புகளை எல்லாம் கோசலை, சுமத்திரை, அரசனின் தேவியர்கள், சீதை போன்ற பெண்களின் வாயிலாகவும் தாரை, மண்டோதாரி, அரக்க மகளிர் போன்ற குரங்கின அரக்கினர்களின் மூலமும் வெளிப்படுத்துகிறார்.

கற்புடைய மடந்தையர் மனம்

கற்புடைய மங்கையர் தன் கணவனையே கடவுளாக கருதுவர். சோலையின் அழகைக் கூற வந்த கம்பர் அதன் புனிதத்திற்கு உவமையாக நங்கையரின் மனத்தைக் கூறுகிறார்.

தங்கள் நாயகாரின் தெய்வம்தான் ரிதுஇலை என்றுஎண்ணும்
மங்கையர் சிந்தை போலத் தூயது (414)

என்கிறார். இக்கருத்து, "தெய்வம் தொழா அள் கொழுநன் தொழுது எழுவாள்" (55) என்றுரைத்த வள்ளுவனின் கற்பியல் அறத்திற்கேற்ப மங்கையரின் மனம் அமைந்திருக்கிறது.

கோசலை

"கற்பு உறுத்திய கற்பு உடையாள்தனை" என்று கோசலையை சுட்டுகிறார் கம்பர். அதாவது பெற்றோரும், பெரியோரும் கற்பித்த கற்பிற்கு இலக்கணமானவள் கோசலை. கோசலை கணவனின் வாக்கு பொய்க்காதபடி நடப்பவள். கணவன் வாக்கை தான் மட்டும் காப்பது மட்டுமின்றி, தன் பிள்ளைகளும் காப்பாற்ற வேண்டும் என்று கருதுபவள்.

ஆயுள் முழுவதும் வாய்மையைக் கடைபிடித்து வாழ்ந்தவன் தசரதன். கைகேயிக்கு அளித்த இரண்டு வரத்தினால், இராமனுக்கு கிடைக்க வேண்டிய அரச பதவி, பரதனுக்கு கிடைக்கிறது. இந்நிலையுணர்ந்த கோசலை, அரசன் உனக்கு முன்பு ஈந்த அரசினை, அடுத்த நாள் மறுத்தான் என்ற பழிசொல்லுக்கு இடமில்லாமல் நீ உன் தம்பிக்கு அரசினை அளித்து விடு என்கிறாள்.(அயோத்தியா காண்டம்- 297) கணவனின் வாக்கை சத்திய வாக்காக மாற்றியவள் கோசலை.

இராமனைப் பிரிந்து வருந்திய தசரதனுக்கு கோசலை ஆறுதல் கூறி தேற்றுகிறார்.

மெய்யின் மெய்யே ! உலகின் வேந்தர்க்கு எல்லாம் வேந்தே
. . . . . . அயரேல் அரசே என்கிறாள் (361)

தசர்தன் இராமன் மேல் கொண்ட அன்பு அவளுக்குத் தெரியும். தன் பாசத்தையும், வருத்தத்தையும் ஒதுக்கி விட்டுத் தன் கணவன் தசரதனின் மனத்துயரத்தை போக்க முற்படுகிறாள். பெரும்புகழுடன் வாழ்ந்த தன் கணவன் வாக்கை சத்திய வாக்காக காக்க தன் ஒரே புதல்வரைக் காட்டிற்கு அனுப்பி தியாகச் செயல் செய்கிறாள். கடமையை நிறைவேற்றும் பொருட்டுத் தன்கணவனையும் இழக்கின்றாள். புதல்வனையும் பிரிகின்றாள். தசரதனுக்கு தேறுதல் மொழி கூறும் பொழுதெல்லாம் கோசலையின் தாயன்பு வெளிப்படுகிறது.

சுமத்திரை

தசரதனின் மனைவியருள் ஒருவள். கணவனின் சத்திய வாக்கைக் காப்பாற்றியவள். "அறவழியில் நிற்றலும் கற்பே" என்று கூறாமல் வாழ்ந்து காட்டிய பெருந்தகையாள். இராமனை விட்டுப் பிரியாத இலக்குவனைப் பெற்றெடுத்த தாய்.

இராமன் மட்டுமே காடேற வேண்டிய நிலையில், தன் மகனையும் காட்டிற்கு அனுப்புகிறாள். தம்பி என்ற தகுதியில்லாது, ஒரு சேவகனாக பணிவிடை செய்யச் சொல்கிறாள். இராமன் நிலைபெற்று அயோத்திக்கு திரும்பி வந்தால் நீயும் அவனுடன் வா! இல்லையேல் அவனுக்கு முன்னர் நீ இறந்து போ என்று கூறுகிறார். (அயோத்தியா காண்டம் - 439).

சுமத்திரையைப் பரதன் குகனுக்கு அறிமுகம் செய்கின்றான். பரதன் கூற்று மூலம் சுமத்திரையின் அறநெறி வெளிப்படுகிறது.

"அறம் தானே என்கின்ற அயல் நின்றாள்" (அயோத்தியா காண்டம் - 1051). தருமமே தான்தான் என்று சொல்கிற அளவிற்கு கோசலையின் அருகில் சுமத்திரை நிற்பதாக கம்பர் காட்டுகிறார்.

அறுபதினாயிரர் [அரசன் தேவியர்]

இராமனின் பிரிவிற்கு வருந்தியும், உயிரை இழந்த தசரதனின் உடலை விட்டுப் பிரியாதவர்களாகவும் தசரதனின் அறுபதினாயிரம் மனைவியர் இருந்தனர். கம்பர் இவர்களை,

மறு அறு கற்பினர் .(465) என்றும், **களங்கம் நீத்த மதி முகத்தார்** (595) என்றும், **அளம்கொள் அளக்கர் இரும்பரப்பில் அண்டர் உலகில் அப்புறத்தில் விளங்கும் மாதர் கற்பினார் இவரின் யாரோ!** (595) என்றும் குறிப்பிடுகிறார். மூவுலகிலும் கற்பில் சிறந்த மகளிர் இவர்களுக்கு இணையாக ஒருவருமிலர் என்கிறார் கம்பர். இவ்வாறு அறுபதினாயிரம் மனைவியரின் பண்பு நலன்களை விளக்குமிடத்தில் கற்பின் திறம் மேம்படுகிறது.

சீதை

இராமனின் அன்பிற்குரிய ஒரே மனைவி. ஆணின் கற்பிற்கு இலக்கணமாக இராமன் சுட்டப்படுவதைப் போல, பெண்ணின் கற்பிற்கு இலக்கணமாக சீதையைப் படைத்துள்ளார். இராமன் அரசாட்சியை இழந்து, காட்டிற்கு செல்கிறான் என்பதற்காக வருந்தாத சீதை, "நீ வருந்தாமல் இங்கு இரு; நான் காட்டிற்குச் செல்கிறேன்". என்று இராமன் கூறிய சொல்லால் வருந்துகிறாள். இராமனின் பிரிவால் உயிர்விடுவதைப் போன்ற துயரத்தை அடைந்தாள். (அயோத்தியா காண்டம் - 510) இதையறிந்த இராமன் பரங்கற்கள் நிரம்பிய காட்டு வழி. உன் மென்மையான பாதங்கள் நடக்கவல்லன அல்ல என்று பிராட்டியிடம் கூறுகிறார். அதற்கு சீதை, **நின் பிரிவினும் சுடுமோ பெருங்காடு** என்றாள் (512). சீதாபிராட்டியின் இக்கூற்று இராமனை விட்டுப் பிரிந்து வாழ முடியாத பிரிவாற்றாமையை உணர்த்துகிறது.

இராவணனால் வஞ்சகமாய் கவர்ந்து செல்லப்பட்ட சீதை, அசோக வனத்தில் விடப்படுகிறாள். அங்கு இராமன் இருக்கும் திக்கு நோக்கி தொழுதும், அழுதும், விம்மியும் கண்ணீர் சொரிகிறாள். இவ்வாறு இராமனை எண்ணிச் சிந்திய கண்ணீரால் நனைந்த அவளின் மெல்லிய ஆடை, சரீரத்தின் சூட்டினால் உலர்ந்து போகிறது. அசோகவனத்தில்

சீதைபடும் துயரம். அவள் மேற்கொள்ளும் நோன்பு. அவளின் நற்பெரும் தவம் முதலியவை அனுமனின் கூற்று வாயிலாக வெளிப்படுகிறது.

சீதாபிராட்டியின் கற்புநிலை அனுமனால் கொண்டாடப்படுகிறது.

. . . . . கற்பின் காவலோ?
அருமையே. அருமையே ! யார் இது ஆற்றுவார்?
ஒருமையே எம்மனோர்க்கு உரைக்கற்பாலதோ? (403)

என்று அனுமனின் கூற்றிலிருந்து மாதவர் நோன்பினும் மடவார் நோன்பு மகிமையுடையது என்று அறியலாம்.

விற்பெரும் தடந்தோள் வீர . . . . .
இற் பிறப்பு என்பது ஒன்றும். இரும்பொறை என்பது ஒன்றும்
கற்பு எனும் பெயரது ஒன்றும் களிநடம் புரியக் கண்டேன் (1275)

சீதையிடம் உயர் குடிப்பிறப்பு. பொறுமை. கற்பு போன்ற பண்புகள் ஒன்று சேர்ந்து விளங்குவதாக அனுமன் இராமனிடம் கூறுகிறான். மேலும் அசோகவனத்தில் இலக்குவணன் வேய்ந்து தந்த பர்ணகசாலை-யிலே சீதை வீற்றிருக்கிறாள் என்கிறான். இதன் மூலம் இராமனின் நினைவாகவே சீதை இருக்கிறாள் என்ற கருத்து வெளிப்படுகிறது.

ஒரு வசவு மொழியினாலே உலகம் முழுவதையும். சாம்பலாக்கும் வல்லமை கற்புடைய நங்கையர்க்கு உண்டு.

சொல்லினால் சுடுவேன் அது தூயவன்
வில்லின் ஆற்றற்கு மாசு என்று வீசினேன் (622)

என்று சீதை குறிப்பிடுகிறாள். கணவனின் புகழைக் காக்கும் பண்பு வெளிப்படுகிறது.

சீதையின் கற்புப் பேராற்றல். அனுமனது வாலை சுடாதிருக்கும்படி வேண்டிச் செய்த வரலாற்றின் மூலமும். அக்கினிப் பிரவேசம் செய்ததின் வழியாகவும் வெளிப்படுகிறது.

தாரை

தாரை பெண் கற்புக்குச் சான்றானவள். வாலியின் மனைவி. குரங்கினத்தின் அடிப்படைக் குணங்களில் அவர்கள் கற்பு நெறியோடு வாழ வேண்டும் என்ற அவசியமில்லை. குரங்கு குலத்தில் கூட கற்பின் மேன்மையை விளக்கிக் காட்டுகிறார் கம்பர்.

வாலியிடம் தோல்வியடைந்த இளவல் சுக்ரீவன், இராமன் துணையை ஏற்று வாலியை போருக்கு அழைத்த போது, தாரை வாலியிடம் எச்சரிக்கிறாள். போரில் தோல்வியுற்ற அவன் மீண்டும் உன்னுடன் போர் செய்ய வந்துள்ள இச்செயல், வேறு துணையைப் பெற்றமையால் ஆகும் என்கிறாள். (கிட்கிந்தா - 250) இவ்வாறு போரின் சூட்சுமத்தை கணவனுக்கு விளக்கிக் காட்டுவதன் மூலமும்,

வாலி இறந்தபின் "உயிர் நீங்கி விட்டால் உடல் மட்டும் பிழைத்திருக்குமோ"(கிட்கிந்தா-391) என்று தாரை அழுவதன் மூலமும் கற்பின் திறம் வெளிப்படுகிறது. சுக்ரீவனுடைய அடைக்கலப் பொருளாக தாரையை காட்டுகிறார் வால்மீகி. ஆனால் கம்பரோ தாரையை ஒரு தெய்வீகப் பெண்ணாக, கற்பில் சிறந்தவளாக காட்டுகிறார்.

மண்டோதரி

இராவணனின் மனைவி. இராவணன் செய்த பிறன்மனை நயந்த குற்றத்தை பொறுத்துக் கொண்ட பெருந்தைகையாள். இந்திரசித்தன் இறப்பைக் கண்ணுற்ற மண்டோதரி,

அஞ்சினேன் அஞ்சினேன் அச்சீதை என்று அமுதால் செய்த
நஞ்சினால் இலங்கை வேந்தன் நாளை இத்தகையன் அன்றே (3177)

என்று மகனின் இறப்பின்பொழுதே, கணவனுக்கு நேரஇருக்கும் துயரத்தை நினைத்து வருந்துகிறாள்.

இராமனால் அழிந்த இராவணனின் ஒப்பில்லாத மார்பினை தன்னுடைய தளிர் போன்ற கைகளால் தழுவி, அழுது பெருமூச்சு விட்டு உயிர் நீங்கினாள். (யுத்த - 3885). இந்நிகழ்வு அரக்கர் குலத்திலும் அன்பு, கற்பு, இரக்கம் போன்ற நற்பண்புகள் உண்டு என்பதை உணர்த்துகிறது.

அரக்க மகளிர்

இலங்கையில் இராவணனுக்காக போர்புரிந்து மடிந்த அரக்கர்களின் மனைவியர் துயர் மூலம் அவர்களது கற்பின் தன்மை பெருமை அடைகிறது.

அரக்க மகளிர் சிலர் தம் கணவனின் இறந்த உடல் மீது விழுந்து மடிந்தனர். சிலர் கணவனின் இறந்த உடலைப் பார்த்த செயலால் உயிர் துறந்தனர். (சுந்தர - 976,977). இந்நிகழ்வு அரக்க நாட்டிலும் கற்புத்தன்மை உள்ளது என்பதை உணர்த்துகிறது.

கம்பன் படைத்த கற்புடை மகளிர்

சு.மகேஸ்வரி
உதவிப் பேராசிரியர், கணிதத்துறை, மாலோலன் கலை அறிவியல் கல்லூரி,
மதுராந்தகம்.

எந்தவொரு ஆணக்கும் சிறந்த செல்வமும் போற்றத்தக்க வெற்றியும் அமைவது அவனுக்கு அமையப்பெறும் சிறந்த கற்புநெறி வாய்த்த மனைவியாலே மட்டுமே அமையும் என்பது தின்னம். 'மனை விளங்க வருபவள்' என்ற பொருள்படவே மனைவி என்ற சொல் உருவானதை உலகு அறியும். இவற்றை அறிந்தே கம்பனும், தன்காப்பியத்துள் சிறந்த பேரழகுக்கும், கற்புநெறிப் பிறழாத பண்புநெறிக்கும் இரு சிறந்த பெண் பாத்திரங்களைப் படைத்து அவற்றின் மூலம் உலகுக்கு கற்பின் பெற்றியை உரைக்க முற்படுகிறான். இத்தகைய கம்பனின் பெருமுயற்சியைப் போற்றி அவன் கண்ட பெண்மையை நம்கண்ணின் வழி காணும் முயற்சியே இக்கட்டுரை.

பெய்யெனப் பெய்யும் மழை

கற்புநெறி தவறாத பெண் நினைத்தால் இவ்வுலகில் எதையும் செய்யமுடியும் என்பதனைக் கம்பர், சீதை அனுமனிடத்தில் பேசும் போது தெரிவிக்கும் கருத்துக்களைக் கொண்டு நிறுவுகிறார். சீதையிடம் அனுமன், 'தாயே நான் தங்களைச் சந்தித்தப் பின்னரும் நீங்கள் இக்கொடியவனின் சிறையில் இருத்தல் நலமன்று. நீஙகள் என்தோள்மீது அமர்ந்து கொள்ளுங்கள். உங்களை நம் தலைவனாம் இராமனிடம் சேர்ப்பித்து விடுகிறேன்' என்றான். ஆனால், சீதையோ, 'நான் அவ்வாறு உன்னோடு வருவது சாத்தியமில்லை.

ஏனெனில், இலங்கை மட்டும்மல்ல: எல்லையில்லா இந்த 'லகத்தையே நான் எனது ஒரு சொல்லினால் சுட்டு எரித்துவிடுவேன். ஆனால், அது என் தலைவன் இராமனுடைய வீரத்திற்கு இழுக்காக அமையும்' என்றாள்.

அல்லல் மாக்கள் இலங்கையர் ஆகுமோ?
எல்லைநீத்த உலகங்கள் யாவையும் என்
சொல்லினால் சுடுவேன் அது தூயவன்
வில்லுக்கு ஆற்றற்கு மாசு என்று வீசினேன்" (5362)

'பெய்எனப் பெய்யும் மழை' என்ற வள்ளுவன் வாக்கைப்போல், சீதை "சொல்லினால் சுடுவேன்" என்கிறாள். இதுவே கம்பன் காட்டும் கற்பின் திண்மை. பெய்என்றால் மழை பெய்யுமா? சொல்லினால் சுடவியலுமா? என்று நகையாடுவோர் இருப்பினும், இது அவர்கள் தங்கள் கற்புநெறி-யின்பால் கொண்ட உறுதித்தன்மையால் நிச்சயம் நடக்கும் என்றவாறு கவிஞர்கள் பேசினர்.

கற்பின் களிநடம்

கம்பன் வெறும் சொல்லோவியம் கூட்டும் கவிஞனில்லை. அவற்றைச் செயல்படுத்தி உயிரோவியமாய் நம்கண்முன் உலவவிடும் செங்சொல்கவிப் பிரமன். சீதையை முதன்முதலில் அனுமன் கண்ட போதே, அந்தச் செய்தியை இராமனிடம் கூறும்பொழுது ஒற்றைச் சொல்லால் இராமன் வினாவெழுப்ப இடந்தராமல் அற்புதமாய் சீதையின் நிலையை விளக்குவான். "கண்டனன் கற்பினுக் கணியை கண்களால்", என்றவாறு 'செவிக்குத் தேனென இராகவன் புகழினை திருத்தும் கவிக்கு நாயகனாம்' அனுமன் மூலம் மொழிந்தான்.

சீதையின் அழகினை, "வில்ஒக்கும் நெற்றி, வேல்ஒக்கும் விழிகள், பல்ஒக்கும் முத்து, பவளந்தான் இதழ்' என்று பலவாறு சொன்னாலும் சொல்தான் ஒக்கும்: பொருள் ஒவ்வாமையே நிகழும். அப்படிப்பட்ட பேரழகியவள். இவளை இராகவன் திருமகள் - துணைவி என்று தெரிந்தும், அவளைப் பார்க்கும் முன்னரே இலங்கை மன்னன் தன் இதயமாஞ் சிறையில் வைத்தான். இலங்கைக்கும் கவர்ந்து சென்றான். சிறையில் இருந்தாலும் கற்பின் நிறையில் மாசுபாடில்லாச் சீதை, 'இருந்த மாநிலம் செல்லரித்திடவும் ஆண்டு எழாதாள்' என்பான் கம்பன்.

சிறையிருந்த சீதையிடம் இராவணன் தன்னை மணந்துகொள்ளுமாறு மன்றாடினான். வணங்காமுடி என்னும் பெயர்மறந்து சீதையின்பால் இரவலன்போல் இரந்தான். உயிர் இறந்த நடைப்பிணமாய் உழன்றான். ஆனால் சீதையோ அவன் அரக்கன் என்றோ, இலங்கை மன்னன் என்றோ, தான் இருப்பது அசோக வனம் என்னும் அவன் இடம் என்றோ அஞ்சாமல் அவன் நேர் உரைத்தாள். தன் எதிரில் இருந்த துரும்பினை எடுத்து இராவணன் முன்னம் இட்டு என்னைப் பொறுத்தவரையில் நீயும் இத்துரும்பும் சமம் என்றாள். என்ன ஒரு தைரியம்.

'மல்அடு திரள்தோள் வஞ்சன் மனம்பிறிது ஆகும் வண்ணம்,
கல்லொடும் தொடர்ந்த நெஞ்சம், கற்பின்மேல் கண்டது உண்டோ?
இல்லொடும் தொடர்ந்த மாதர்க்கு ஏய்வன அல்ல, வெய்ய
சொல்இது தெரியக் கோட்டி, துரும்பு! எனக் கனன்று, சொன்னாள்(5184)

கற்பின் கனலி

சீதையை எப்படியாவது அடைய வேண்டும் என்ற ஆர்வத்தால் இராவணன் மகோதரன் துணைகொண்டு மருத்தனை மாயா சனகன் உருவெடுக்க வைத்தான். எந்தப் பெண்ணும் தந்தைக்கு ஆபத்து என்றால் தன்னிலை மாறுவாள் என்பதை உளக்கருத்தாகக் கொண்டு இப்படி ஒரு ஏற்பாட்டினை விழைந்தான் இராவணன். சீதைமுன் நிறுத்தப்பட்ட மாயா சனகன், "அடிப்பாவி, தந்தையின் மேல் மிகுந்த பாசம் கொண்ட பெண்போலப் புலம்புகின்றாயே!, உன்னைப் பெற்றதால் நான் எய்திய நிலையைப் பார். பாவியாம் நீ அரக்க வேந்தன் தேவியாக சம்மதித்தால் என் ஆவி பிழைக்கும்" என்றான்.

பூவின்மேல் இருந்த தெய்வத் தையலும் பொதுமை உற்றாள்
பாவி! யான் பயந்த நங்கை! நின் பொருட்டாகப் பட்டேன்
ஆவி போய் அழிதல் நன்றோ? அமரர்க்கும் அரசன் ஆவான்
தேவியாய் இருத்தல் தீதோ? சிறையிடைத் தேம்புகின்றாய் (7693)

இவ்வாறு மாயாசனகன் மொழிந்ததும் கோபமுற்ற சீதை, 'இவ்வுரை எந்தை கூறான்' என்று உறுதியாகக் கூறுகிறாள். அதுமட்டுமல்லாமல், இவன் எந்தையே ஆயினும், இவன் குலம் முற்றும் அழிந்தாலும் முறைமை குன்றும் செயலை நான் ஒருபோதும் செய்ய மாட்டேன் என்கிறாள். மேலும், உரமுடைய திண்தோள் ஆயிரம் நாமம் கொண்ட அரியினுக்கு அடிமை செய்யும் ஒருத்தி நாயினை எவ்வாறு நோக்க முடியும்? என்கிறாள்.

நீயும் நின்கிளையும், மற்று இந்நெடு நில வரைப்பும், நேரே
மாயினும், முறைமை குன்ற வாழ்வெனோ? - வயிரத் திண்தோள்
ஆயிர நாமத்து ஆழி அரியினுக்கு அடிமை செய்வேன் -
நாயினை நோக்குவேனோ, நாண் துறந்து, ஆவி நச்சி (7698)

நெறியிழந்து பேசிய தன்மையால், மருத்தனை தன்தந்தை அல்லன் என்று உணர்ந்தாள் சீதை. இது அவள் கற்பின் பெற்றி எ;னறால் மிகை-யில்லை. ஒருவரைப் போலவே பிறிதொருவர் வேடம் புனைந்தாலும்

மனத்தின் திண்மையைப் பெறல் அரிது என்பது கண்கூடு. 'போலச் செய்தல்' உண்மையாக இருத்தல் அரிது. தந்தைக்கே துன்பம் என்றாலும் சீதாபிராட்டி தந்நிலை மாறாமையை கம்பன் காட்டி பெண்ணின் பெருமையை நிலைநிறுத்துகின்றான்.

மாசில்லா மண்டோதரி

பொதுவாக அரக்கர் குலத்தில் பிறந்த பெண்கள், பெண்களே வெறுத்தக்க தோற்றமளிப்பது இயல்பு. ஆனால், சீதையைத் தேடிப்போன அனுமன் இராவணன் அருகில் துயின்ற பெண்ணைப் பார்த்ததும் இவள் சீதையாக இருப்பாளோ என்று சிந்திக்கும் அளவு சீதையை ஒத்த அழகியாக மயன்மகள் மண்டோதரி விளங்கியமை சிறப்பானதாகும். தேவமாதராம் அரம்பை, ஊர்வசி, மேனகை மற்றும் திலோத்தமை ஆகியோர் சாமரம் வீசவும், யாழ்மீட்டி இசைப் பாடவும், கற்பக மலர் மணம் பரப்பவும் தன்மனைவியுடன் இராவணன் உறங்கினான்.

போர்க்களத்தில், இளவலின் கணையால் இந்திரசித்து மரணம் அடைந்தான் என்ற செய்தி கேட்டுக் களம் புகுந்த மண்டோதரி 'மகனே! மாண்டு விட்டாயே! நீயோ அல்லது நம் கடல் போன்ற நம் படைகளோ அழிந்து பொனதற்காக நான் அழவில்லை. அழியாமல் வேறு என்னவாகும்? பஞ்சுக்குப் பக்கத்தில் நெருப்பினைக் கொண்டு வந்து வைத்துவிட்டு பஞ்சு பற்றி எரிகிறதே என்றால், எரியாமற் என்செய்யும். பஞ்சின் பக்கத்தில் நெருப்பினைக் கொண்டு வைத்தது யார் குற்றம்? பஞ்சுபோல், சீதை என்னும் நஞ்சினால் செய்த அமுதை கொண்டு வந்து வைத்த மன்னவன் குற்றமன்றோ?

இதற்கெல்லாம்கூட நான் அழவில்லை மகனே, ஆனால் ஒரு உண்மையை நினைத்துப்பார்க்க இயலவில்லை. அதுஎன்னவென்றால், இலங்கைவேந்தன் நாளை இத்தகையன் அன்றோ? என்று புலம்புகின்றாள்.

பஞ்சு எரி உற்றது என்ன அரக்கர் தம் பரவை எல்லாம்
வெஞ்சின மனிதர் கொல்ல விளிந்ததே மீண்டதில்லை
அஞ்சிலேன் அஞ்சினேன் அச்சீதை என்று அமுதால் செய்த
நஞ்சினால் இலக்கைவேநதன் நாளையித் தகையன் அம்மா" (9238)

எந்தவொரு பெண்ணும் பெற்ற பிள்ளையை விட வேறு எதுவும் பெரிதாக எண்ண மாட்டாள். ஆனால் இராவணன் மனைவி

மண்டோதரி தன் மகனை இழந்ததற்குக் கூட வருந்தாமல் தன் கணவன் மாற்றான் மனைவியின் மீது மையல் கொண்டான் என்று தெரிந்தும் கணவன் மீது உள்ள பக்தியால் பாசத்தால் கணவனை இழக்கப் போகிறோம் என்று தெரிந்தே வருத்தப்பட்டாள். இதிலிருந்து மண்டோதரியின் கற்பொழுக்கம் புலனாகிறது. தேவமாதரோ, மானிடப் பெண்ணோ அல்லது அரக்க இனத்தில் பிறந்த பெண்ணோ யாராயினும் கற்புநெறி தவறாப் பெண்டிரை காலமம் காவியமும் சேர்நது வாழ்த்தும். பெண்களுக்கு கற்பும் ஆண்களுக்கு வீரமும் பெருமையாக பேசப்பட்ட காலத்தில் ஆண்களுக்கும் கற்புநெறியை பொதுமையாக்கியவன் கம்பன். 'பிறன் மனை நயவாமைதான் ஆண்களுக்கம் உயர் பண்பாக அமைய வேண்டும் என்று அறைகூவல் விடுத்தவன் கம்பன். முந்தைய காப்பியங்களுள் தலைவனுக்கு மனைவியர் பலர் இருந்த காலத்து, இராமனுக்கு ஒரே மனைவியைப் படைத்து அவளை கற்பிற்கே அரசியாக அமைத்தவன் கம்பன்.

கம்பனின் பாத்திரப்படைப்பில் மகளிர்

ப.மெஹருன்னிஷா
உதவிப்பேராசிரியர், வரலாற்றுத்துறை, த.ஞா.அரசு மகளிர் கலைக்கல்லூரி,
மயிலாடுதுறை

கம்பரின் பாத்திரப்படைப்புகள் பலதரப்பட்ட மனிதர்களின் உளவியல் சார்ந்த குணநலன்களைப் பிரதிபலிக்கின்றன. கம்பரின் பாத்திரப் படைப்பின் மகளிர் தனிச்சிறப்புப் பெற்று விளங்குகின்றார். கம்பர் படைத்த பாத்திரங்களின் பெண்பாற் பாத்திரங்கள் பற்றி இப்பகுதி எடுத்து இயம்புகின்றனது.

கம்பராமாயணத்து மகளிர்

அரச குல மகளிர், அசுர குல மகளிர், குரு குல மகளிர், தெய்வ குல மகளிர் என நான்கு வகைப்பட்ட மக்கள் கம்பரால் அவரது காப்பியத்துள் படைக்கப்பட்டுள்ளனர்.

அசுர குல மகளிர்கள்

தாடகை, சூர்ப்பணகை, மண்டோதரி, திரிசடை, அயோமுகி, கேகசி, இலங்காதேவி, அங்கார தாரைஆகிய எண்மர் அசுர குல மகளிராகக் காணப்படுகின்றனர்.

குருகுல மகளிர்கள்

அகலிகை, அருந்ததி, இரோணுகாதேவி, சாந்தை, கிருதாசி, சவரி, திதி, இடும்பி ஆகிய எண்மர் குருகுல மகளிர் ஆவர்.

தெய்வக்குல மகளிர்

சுரசை, இந்திராணி, சுயம்பிரபை, பார்வதி, திருமகள், சரஸ்வதி, ஊர்வசி, ரம்பை, மேனகை, திலோத்தமை, ஆகிய பதின்மர் தெய்வக் குல மகளிர் ஆவர்.

இந்நான்கு வகையான மகளிர் பாத்திரங்களை இக்காப்பியத்தில் காண முடிகிறது. இவர்களின் அன்பு, பாசம், பரிவு, காதல், கற்பு, தியாகம் என்ற உயர் பண்புகளையும், வஞ்சனை, சூழ்ச்சி, காமம், போன்ற முரண்பட்ட உணர்வுகளையும் கொண்டு உயர்வுள்ள மாந்தர்களாக காணப்படுகின்றனர்.

அரச குல மகளிர்

கோசலை, கைகேயி, சுமித்திரை, சீதை, மாண்டவி, ஊர்மிளை, சுருதகீர்த்தி, தாரை ஆகிய எண்மர் அரச குல மகளிர் ஆவார். இவர்களோடு மந்தரை எனும் பணியாள் பாத்திரத்தையும் துணைமைப் பாத்திரமாகச் சேர்த்துக் கூறலாம்.

கோசலை

உலகே வியக்கும் ஒப்பற்ற மகனை ஈன்ற பெருமைக்கு உரியவள் கோசலை. அறக்கடல் பரம்பொருளே இராமனாக அவளுக்கு மகனானது பேறு; கோசலை அவனுக்குத் தாயானது அவனது பேறு; கடல் போன்ற பொறுமையினள் இத்தாய். இவள் இராமனின் தாயார் அனைவரும் போற்றும் பண்பினளாகத் திகழ்கிறாள் என்பதை, "சுற்றத்தார் தேவரோடும் தொழ நின்ற கோசலை" என்ற வரிகள் புலப்படுத்துகின்றன.

குடும்பப் பெண்ணிற்கு இருக்க வேண்டிய பண்புகளில் கற்பும் ஒன்று. அப்பண்பு, கோசலையிடம் நிறைந்த காணப்படுவதை, 'குலம் பொறை கற்பிவை சுமந்த கோசலை"என்ற பாடல் வரியால் அறிய முடிகிறது.

கோசலை தன் மகனைப் போலவே மாற்றாள் மகன்களையும் ஒப்ப மதித்துப் போற்றும் பண்பு உடையவர். தம் மகன் இராமனுக்கு நிகழ வேண்டிய முடிசூட்டு விழா பரதனுக்கு நிகழப் போவதை அறிகிறாள். அவள் மனதில் தன் மகனுக்கு முடிசூட்டப் பெறவில்லை என்ற செய்தி குறித்து எந்த வருத்தமோ, சினமோ ஏற்படவில்லை. பரதன் தன் மகனைக் காட்டிலும் மேன்மைக் குணம் கொண்டவன், அரசாட்சிக்குத் தகுதியானவன் என்கிறாள். இதனை,

முறைமை யன்றென்ப தொன்றுண்ட தல்லது
நிறைகு ணத்தவ கின்னினு நல்லனால்
குறைவி லன்னெனக் கூறின ணால்வர்க்கும்
மறுவி லன்பினில் வேற்றுமை மாற்றினாள்

என்ற பாடல் வரியின் மூலம் அறிய முடிகிறது.

உளவியல் ரீதியாக மனிதன் தனக்கு எல்லா வளமும வாழ்வும் இருக்கும் போது பிறர்மேல் அன்பைப் பொழிவான். தனக்கிருப்பது தன்னைவிட்டு கடந்த செல்லும்போது, அதற்குக் காரணமானோர் மீது

அன்பு செலுத்துவது முடியாத வொன்று. ஆனால் இவ்விடம் கோசலை பரதனை நேசிப்பதில் குணக்குன்றாகத் திகழ்கின்றாள். மேலும் அவளின் வேறுபாடு காட்டாத பேருள்ளம் பரதன் எரியிடைப் புகுதற்கு துணியும் போது அறிவுரை கூறி அம்முயற்சியிலிருந்து விலக்கி "என் மகனே"6 என்றழைக்கையில் அவளின் வெறுப்பற்ற தாயுள்ளம் வெளிப்படுகிறது.

கைகேயி

கைகேயி தசரதனின் பட்டத்தரசியரில் இரண்டாமவள் ஆவாள். கேகய மன்னனின் மகள் பரதனின் தாய், இராமனின வளர்ப்புத்தாய். அவன் மீது மாசற்ற அன்பு கொண்ட பேரன்பினள். இராமன் நாளை முடிசூடப் போகிறான் என்னும் செய்தியைக் கேட்டு கையேயியும், கோசலையும் அகமகிழ்ந்ததாகக் கம்பர் காட்டுகின்றார். இதனை,

பராவரும் புதல்வதைப் பயக்க யாவரும்
உராவருந் துயரைவிட் டுறுதி காண்பரால்
விராவரும் புவிக்கெலாம் வேத மேயன
இராமனைப் பயந்தவெற் கிடருண்டோ வென்றாள்

என்ற பாடல் வரிகளில் கோசலை மகன் இராமனை மனதாரப் புகழும் கைகேயியின் நல்ல உள்ளத்தை அறிய முடிகின்றது. இராமனிடம் கொண்ட அன்பிலும், தசரதனிடம் அமைந்த உறுதியிலும் கைகேயி கோசலைக்கு இணையானவளாக விளங்குவதைக் காண முடிகிறது.

தசரதன், சாம்பன் என்னும் அசுரனைக் கொல்லத் துணை நின்று தன் கணவனுக்கு வெற்றி கிடைக்கச் செய்தவள். அவ்வெற்றிக்காகத் தசரதனிடம் இரு வரங்களைப் பெற்றவள்.

அதன் பலனால் தசரதன் அரண்மனையில் மாற்றத்தைக் கொண்டு வந்தவளாகவும் அமைகிறாள். கைகேயின் உள்ளத்தைத் திசைத் திருப்ப முயன்ற கூனியை நோக்கி,

எனக்கு நல்லையு மல்லைநீ யென்மகன் பரதன்
தனக்கு நல்லையு மல்லை யத்தரும்மே நோக்கின்
உனக்கு நல்லையு மல்லை வந்தூழ்வினை தூண்ட
மனக்கு நல்லன சொல்லினை மதியிலா மனத்தோய்

என்று கடிந்து கொள்கிறாள். இதன்மூலம் கைகேயின் ஒப்பற்ற தாயுள்ள உணர்வு வெளிப்படுகிறது.

சுமித்திரை

இராமாயணத்தில் ஒப்பற்ற பாத்திரமாக கோசலைக்கு அடுத்த நிலையில் தியாக உணர்வு உடையவளாகத் திகழ்கின்றாள். கோசலையையும் மிஞ்சும் வண்ணம் தியாக உணர்வுடன் காணப்படுகின்றாள். இராமன், தாயாகிய சுமித்திரையின் அருங்குணங்களை வெளிப்படுத்து கின்றான் என்பதை,

இளையா னிதுகூற விராமனியைந்த நீதி
வளையா வருளநன்னெறி நின்னறி வாகு மனறே
உளையா வறம் வற்றிட வூழ்வழு வுற்ற சீற்றம்
விளையாத நிலத்துனக் கெங்ஙன் விளைந்த தென்றான்

என்ற பாடலின் மூலம் அன்பும், அடக்கமும், அமைதியும் உடையவள் சுமித்திரை என்பதை இராமன் இலக்குவனிடம் கூறும் சொற்களினால் அறிய முடிகிறது. தம்பி, உன் தாய் இனியவள். மாறான வழி செல்லாதவள். கோபம் சிறிதும் அடையாதவள். அவளின் வயிற்றில் பிறந்த நீ சினம் கொள்ளுதல் தகுதியற்ற செயல் என்று கூறுகையில் மகனே தாயின் பண்பினைப் போற்றி உரைக்கும் வகையில் பண்புள்ளம் நிறைந்தவளாகக் காணப்படுகிறாள்.

மேலும், இராமன் வனவாசம் மேற்கொள்ளும் போது ஓர் அரச குமாரர் என்றும் இராமனின் தம்பி என்றும் பெருமிதம் அடையாமல் இராமனுக்குக் குற்றேவல் செய்வதே அழகாகும். ஒருகால் இராமனின் உயிர்க்கு ஆபத்து வருமாயின் உன்னுயிரைத் தந்து அண்ணனான இராமபிரானைக் காப்பாயாக என்றும் சுமித்திரைக் கூறுகையில் அவளின் தியாக உணர்வு வெளிப்படுவதை,

பின்னும் பகர்வாள் மகனேயிவன் பின் செல்தம்பி
என்னும் படியன் றடியாரினி லேவல் செய்தி
மன்னுந் நகர்க்கே யிவன் வந்திடின் வாவதன்றேல்
முன்னம் முடியென்றனள் வார்விழி சோர நின்றாள்

சீதை

காவியத் தலைவி கற்பின் கனலி. தாயினுந் தொழத்தக்காள். தீயைச் சுட்டதோர் கற்பெனுந்தீயினாள், கற்பினுக்கனி என்று கம்பனின் சொல்லோவியத்தின்மேல் வீற்றிருப்பவள். 'இருமாதரைச் சிந்தையாலும் தொடேன்' என இராமன் உரைத்தற்கு சீதையின் குணமே காரணமாகும். சனகனின் வில்லொடிக்க வரும் இராமன் கொடியிடையாளை

நோக்கும்போது, பூர்வஜென்ம காதல் புகுந்து விடுகின்றது. சீதைக்கு வில்லொடித்தது இராமனா என்ற ஐயம் ஏற்படுகின்றது.

சொல்லிய குறியினத் தோன்ற லேயவன்
அல்லனே லிறப்பனென் றகத்து ளெண்ணினாள்

என்ற வரிகள் கண்ணோக்கி காதலுற்ற பின் வில்லை ஒடித்தவன் வேறொருவனாயின் இறப்பேன் என்ற அவளின் திண்மை உரைக்கின்றன. கற்புக்கரசியின் தூய காதல் உள்ளம் வெளிப்படுகின்றது. மேலும் அனுமன் தன் தோள் மீது அமர்ந்தால் இராமனிடம் கொண்டு செல்வதாகக் கூறும் போது அதை மறுத்து, 'கூறு மிவ்வுருத் தீண்டுதல் கூடுமோ' என்று வினவும் போது சீதையின் மனத்திட்ப உணர்வினை அறிய முடிகின்றது.

கற்பெனுந் தீயினாளை இராவணன் கவர்ந்து சென்றபோது நிலத்தொடும் அகழ்ந்து எடுத்துச் சென்றதை இவ்விடம் தீயவன் தீண்டாவண்ணம் காத்தது கற்புச் சிறையாகும். பட்டத்திற்குரிய இராமனுக்குக் கானகம் கிட்டினபோது, தட்டிப்பேசாது பெரியோரை மதித்தவளாகக் கணவன் பின் செல்கின்றாள். கணவனுக்கு எல்லாவிதங்களிலும் கீழ்படியும் சீதையின் பண்பு இங்கே சுட்டப்படுகின்றது. கணவன் தீயிடை புகச்சொல்லும் போது, மீண்டும் கானத்திடை நிறைமாத கர்ப்பிணியாய் அனுப்பியபோதும், கணவனுக்கு மதிப்பு அளிக்கும் ஒரு பெண்ணாகத் திகழ்வதைக் காண முடிகிறது.

தாரை

பெண்மைக்குப் பெருமை சேர்க்கும் வகையில் படைக்கப்பட்ட பாத்திரம் தாரை. பிற மகளிரை விட இவளிடத்தில் பெண்மை நோக்கில் கம்பன் மிகுந்த அக்கரை காட்டியுள்ளார். தாரை வாலியின் அன்பு மனைவி பாசத்திற்குரியவள். சுக்ரீவனை எதிர்த்துத் தன் கணவன் போரிடச் செல்வதால் ஏற்படும் ஆபத்தைத் தடுக்கிறாள். வாலி, மலைக்குல மயிலே என்னை விட்டுவிடு என்கின்றான். கணவனுக்கு உணவு முதலியவற்றை அளித்து உடலைப் பேணுவது போலவே உயிருக்கு ஆபத்து வருங்காலத்து அதைக் காப்பதும் கற்புடைய மனைவியின் தலையாயக் கடன். சுக்கிரீவனுடன் போர் செய்வதற்குச் சென்ற வாலியை அன்பினால் தடுக்கிறாள் என்பதை,

ஆயிடைத் தாரையென் றமிழ்திற் தோன்றிய
வேயிடைத் தோளினா ளிடைவி லக்கினாள்

வாயிடைத் புகைவர வாலி கண் வருந்
தீயிடைத் தன் நெடுங் கூந்தல் தீகின்றாள்

என்ற பாடல் வரிகள் மூலம் அன்புணர்வு வெளிப்படுகின்றது.

சுக்கிரீவனும் இராமனும் இணைந்து வாலியின் உயிரைப் போக்கி விடுவர் என்பதைச் செவிவழிச் செய்தியாக அறிந்த தாரை வாலியைத் தடுத்து நிறுத்துவதோடு மட்டுமல்லாமல் சுக்கிரீவன் வாலியின் சகோதரன் என்றும், அவன் அறியாமையால் தன் கணவனுடன் போர் புரிய வந்துள்ளான் எனவும் கூறி தன் கணவனின் சகோதரன் என்ற உறவு முறையில் தன் குடும்ப உறவை மேம்படுத்தக் கூடிய பெண்ணாக விளங்குகின்றாள்.

கணவன் மனைவியராகிய வாலியும் தாரையும் ஒருவரையொருவர் உயிர் எனக் கொண்டு வாழ்ந்த காதற்கேண்மையர். இருவரும் மாறிப் புக்கு இதயம் எய்தியவர்கள். அப்படிப்பட்ட வாலி இறந்து விட்டான் என்பதை அறிந்த வேல் விழித்தாரை அவன் மேனி மீது வீழ்ந்தாள். அவனுடைய பொன்னிறத்தோளிலும் மாலையணிந்த மார்பிலும் வீழ்ந்து புரண்டாள் என்பதை

வேய்ங் குழல் விளகொள் நல்யாழ் வீணையென்றிணைய நாண
ஏங்கின ளிரங்கி விம்மி யுருகின ளிருகை கூப்பித்
தாங்கினாள் தலையிற் சோர்ந்து சரிந்து தாழ் குழல்கள் தள்ளி
ஓங்கிய குரலாற் பன்னி யினையன யுரைக்க லுற்றாள்

என்ற பாடல் வரிகளின் மூலம் அவளின் துன்ப நிலைகளைக் காண முடிகிறது. தாரை தெய்வ பக்தி உணர்வும் கற்புத் திறனுமிக்க உணர்வுடையவளாகக் காணப்படுகின்றாள்.

மாண்டவி, ஊர்மிளை, சுருதகீர்த்தி

மாண்டவி, ஊர்மிளை, சுருதகீர்த்தி ஆகிய மூவர் குசத்துவசன் மன்ன்னின் மகள்கள். பரதனின் மனைவியாக மாண்டவி, இலக்குவனின் மனைவியாக ஊர்மிளை. சத்ருக்ணன் மனைவியாக சுருதகீர்த்தியும் இவர்கள் அனைவரும் மேன்மைக் குணமிக்க உணர்வினை உடையவர்களாக காணப்படுகின்றனர்.

மந்தரை

மந்தரா என்றால் மனத்தைக் கலக்குபவள் என்று பொருள். இவ் வடமொழிச்சொல் கைகேயியின் மனத்தை கலக்குபவளானவள் என்னும் காரணத்தால் 'மந்தரை' எனும் பெயரை அவளுக்குத் தந்தது.

கேகயச் சக்கரவர்த்திக்கு அவள் பணிப்பெண்ணாக இருந்தாள். பட்டணத்தில் எங்குத் திரும்பிப் பார்த்தாலும் ஆரவாரமே தென் படுகிறதே அதற்குக் காரணம் யாது என்று விசாரித்தாள். அடுத்த நாள் இராமன் யுவராஜப் பட்டாபிஷேகம் பெறப் போகிறான் என்னும் செய்தி அவள் காதுக்கு எட்டியது. அதைக் கேட்டதும் அக்கிழவி திகிலடைந்தாள். கூழ்ந்த முகத்துடன் தன்னுடைய எஜமானியின் மண்டபத்துக்கு விரைந்து சென்றாள். இந்த கோபத்திற்கு காரணம் இராமன் பண்டு இளையோனாய் இருந்தபோது தன் முதுகில் உண்டையை வில் கொண்டு அடித்து விளையாடிதன் வினையேயாகும். மந்தரை தன் அறிவையும், மனத்தையும் ஒன்று கூட்டி ஆராய்ந்தாள். அதன் விளைவாகக் கைகேயியின் மனத்தைக் கலைத்தாள். இடுக்கண் மூட்டினாள்.இராமனின் பட்டாபிஷேகத்தைப் பற்றி கைகேயிடம் மந்தரை கூறுகின்றாள். இதை என்னிடம் கொண்டு வர முந்தியதை முன்னிட்டு இந்த முத்து மாலையைச் சன்மானமாக ஏற்றுக்கொள் என்கிறாள். அதனை வெறுப்புடன் வீசி எறிகிறாள். பின்னர் தன்னுடைய சூழ்ச்சிகளை எடுத்துக் கூற கைகேயியும் மனத்தை மாற்றினாள் இதன் மூலம் மந்தரையின் தீய மன உணர்வினை அறிய முடிகின்றது.

முடிவுரை

கம்பராமாயணத்தில் அரச குல மகளிரான கோசலையின் தன்னலமற்ற தாய்மை உணர்வு நிலைகள் மற்றும் அன்புணர்வையும் அறிய முடிகிறது. கைகேயியின் தாய்மை உணர்வையும், இராமன் மேல் கொண்ட வஞ்சக உணர்வையும், சுட்டுகின்றது. சுமத்திரையின் தாய்மை உணர்வு நிலையை அறிய முடிகின்றது. இராமன் மேல் கொண்ட காதலுணர்வு மற்றும் அன்புணர்வு நிலைகள் மந்தரையின் வஞ்சக உணர்வு மற்றும் பாச உணர்வையும் அறிய அடிகின்றது. அசுர குல மகளிரான மண்டோதரி, தாடகை, திரிசடை போன்றோரின் காதல் உணர்வு சகோதர உணர்வு, பாச உணர்வு மற்றும் தாய்மை உணர்வினையும் பற்றி சுட்டுகின்றது. குருகுல மகளிரான அகலிகை, அருந்ததி, இரேணுகாதேவி, சாந்தை கிருதாசி போன்றோரின் கணவனைப் போற்றி மதிக்கும் உணர்வு மற்றும் தெய்வ பக்தி உணர்வைப்பற்றி இக்கட்டுரையில் ஆராயப்பட்டன.

கம்பன் கண்ட அன்னை உள்ளம்

ம.தமிழரசன்
முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை,
அழகப்பா பல்கலைக்கழகம், காரைக்குடி.

உலக உயிர்கள் அனைத்திற்கும் பொதுவானதும், தன்நிகர் இல்லாத் தன்மையினை உடையதாயும் விளங்குவது 'தாய்மை' ஆகும். தனக்காக அன்றித் தன்னுள் உருவாகிய சிசுவுக்காக, அச்சிசுவின் உயர்வுக்காக வாழும் சிறப்பு தாய்மைக்குரியது. இத்தகு சிறப்புக்குரிய தாய்மை அடைவதன் மூலமே ஒரு பெண்ணின் வாழ்வு முழுமை அடைகிறது. குழந்தையைப் பெற்று வளர்ப்பது ஒரு பெண்ணின் கடமையாகும். இதையே புறநானூறு "ஈன்று புறந்தருதல் என்தலைக் கடனே" (புறநா.312) என்கிறது. தாய்மையின் சிறப்பினைக் கூறும் வள்ளுவரும்,

ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றோன் எனக்கேட்ட தாய் (.69)

என்கிறார். அவ்வகையில் கம்பன் காட்டும் அன்னை உள்ளத்தைப் பின்வரும் பகுதிகள் விளக்கும்.

கோசலையின் உள்ளம்

இராமனை ஈன்ற தாயாகிய கோசலை தன் மகனை வளர்க்கும் பேறு கிடைக்கவில்லையாயினும் என்றாவது ஒரு நாள் அவன் அரசனாவான் என எண்ணிக் கற்பனை கொண்டிருந்தாள். அது நடக்க இருப்பதை அறிந்து சுமத்திரையுடன் கோயிலுக்குச் சென்று திருமாலை வழிபட்டமையும், அறவோர்க்குக் கன்றுடன் பசுவும், பொன், மணி, ஆடை, அன்னம் முதலியன தானமாக வழங்கினமையும், தாய்மார்க்கு உரியநோன்பிருந்தமையும் அவளது தாயன்பின் வெளிப்பாடாக அமை கின்றன.

விதியின் பயனாய்ப் பரதன் முடிசூடுகிறான் என்று இராமன் கூறக் கேட்ட கோசலை,

முறைமை யன்றென்ப தொன்றுண்டு மும்மையில்
நிறைகு ணத்தவ னின்னினு நல்லனால்
குறைவி லன்னெனக் கூறினா னால்வர்க்கும்
மறுவி லன்பினில் வேற்றுமை மாற்றினாள் (1698)

என்கிறாள். இதில் தான் பெற்ற மகனைவிட (இராமன்) தன் வளர்ப்பு மகன் (பரதன்) நல்லவன் என்றும், நிறை குணத்தவன் என்றும் கூறியது; அவன் தன் வளர்ப்பில் வளர்ந்த பிள்ளை என்பதனாலாகும். இங்கு 'நால்வர்க்கும் மறுஇல் அன்பினில் வேற்றுமை மாற்றினாள்' எனக் கம்பன் கூறியதன் வழிக் கோசலை தன் மகன், பிறள் மகன் என்ற வேறுபாடு இன்றி அன்பு செலுத்துபவன் என்பதை அறியமுடிகிறது.

மேலும், மன்னவன் ஆணையை ஏற்று நடப்பதே முறை என இராமனுக்கு அறிவுரை கூறிய கோசலை,

நன்று நும்பிக்கு நானிலம் நீகொடுத்து
ஒன்றி வாழுதி ஊழிபல என்றாள் (1699)

என்பதன் வழி பரதன் மீது மிகுந்த பாசமும், இராமனுக்கு சகோதர னுடன் விட்டுக் கொடுத்து வாழ வழிகாட்டும் உள்ளமும் கொண்டவள் என்பதும் புலனாகும்.

ஏழிரண்டு ஆண்டு வனவாசம் சென்று வர இராமன் பணிக்கப்பட்ட செய்தி கேட்ட கோசலை அடைந்த துயரத்தைக் கம்பர்,

ஆங்கவ் வாசக மொன்று மனல்குழை
தூங்கு தன்செவி யிற்றொட ராமுனம்
ஏங்கி னாளிளைத் தாடிகைத் தாண்மனம்
வீங்கி னாள்விம்மி னாள்விழுந் தளரோ (1702)

என்கிறார். மேலும் அவர் அவளது கலங்கிய துயர நிலையைக் "கன்று பிரிந்துழிக் கரவையொப்பக் கலங்கினாள்" (கம்ப.அயோத்.1707) என்கிறார். இங்கு கோசலையின் தாயன்புக்கு நிகராக வேறெதையும் உவமை கூற இயலாதென்பதன் வழி அவளது தாயன்பின் உன்னதத்தை அறியமுடிகிறது. இராமனிடம், "அரசன் ஆணைப்படிக் கானகம் புகின் இச்செய்தி கேட்டவுடன் உயிர் பிரியாத என்னையும் உடன் அழைத்துச் செல்க" (கம்ப.அயோத்.1712) என்று கூறுவதும், தசரத மன்னனிடம் சென்று "இராமனைக் காடுபுக ஏவினது முறையோ" (கம்ப.அயேத்.1724) எனப் புலம்புவதும் அவளது தாயுள்ளத் தவிப்பினைக் காட்டுவதாகும்.

கைகேயியின் உள்ளம்

பரதனைப் பெற்ற தாய் கைகேயி, இராமனின் வளர்ப்புத் தாயும் அவளே. தவத்தால் இராமனை வளர்க்கும் பேறு பெற்றாள் என்பதைக் கம்பர்,

தாய்கையில் வளர்ந்திலன் வளர்த்தது தவத்தால்
கேகயன் மடந்தைகிளர் ஞாலமிவ னாள (.1680)

என்பர். இங்கு இராமனை வளர்க்கும் பேறு அவளுக்குத் தவத்தால் கிடைத்தது எனக் கூறப்பட்டதாயினும் கடவுளாகிய இராமனை வளர்க்கும் தகுதியும் தாயன்பும் உடையவள் என்பது புலனாகிறது. மேலும் அவள் தன் மகன், பிறள் மகன் என்ற வேறுபாடு இன்றி நால்வர் மீதும் அன்பு செலுத்தினாள் என்பதை தனக்கு இடர் வரப் போவதாகக் கூனி (மந்தரை) கூறக்கேட்ட கைகேயி, "வில்லேந்திய என் புதல்வர்கள் செவ்வியராக (அறத்தொடு மாறுபடாத தன்மையராக) இருக்க எனக்கு எத்துன்பம் வந்து பொருந்தும்" (கம்ப.அயோத்.1541) என்பதன் வழி 'என் புதல்வன்' எனப் பரதனை மட்டும் கூறாது 'என் புதல்வர்கள்' என் பன்மையில் கூறினமையின் தன் சககிழத்தியரின் பிள்ளையரையும் தன் பிள்ளையாகக் கருதிய பாங்கு புலப்படும். மேலும் **"இராமனைப் பயந்த எற்கு இடருண்டோ"** (1542) எனக் கைகேயி கூறுவதும் **"இராமன் உன் மைந்தன்"** (1590) என்று தசரதன் கூறுவதும் இதனை மெய்ப்பிக்கின்றன.

'இராமன் முடிசூட்ட இருப்பதைக் கேள்வியுற்ற கைகேயி கோசலை-யினும் வேறுபடாத அளவு மகிழ்ந்தாள்' (1546), இச்செய்தியைக் கூறிய கூனிக்கு மணிமாலை பரிசாகத் தந்தாள்(1547) என்பன போன்ற பதிவுகள் அவளது தூய அன்னை உள்ளத்தைக் காட்டுகின்றன.

கூனியின் நயவுரையால் கைகேயி அரிதில் மனம் மாறியமைக்கு தேவர்கள் செய்த மாயையும், அவர்கள் திருமாலிடத்தே பெற்ற வரமுமே காரணம் என்கிறார் கம்பர். இதனை,

தீய மந்தரை யிவ்வுரை செப்பலுந் தேவி
தூய சிந்தையுந் திரிந்து சூழ்ச்சியி னிமையோர்
மாயை யும்மவர் பெற்றநல் வரமுண்மை யாலும்
ஆய வந்தன ரியற்றிய வருந்தவத் தாலும் (.1572)

என்னும் அடிகள் விளக்கும்.

முடிசூட்டு விழாவிற்குரிய ஏற்பாடுகள் நடந்து கொண்டிருக்கும் வேளையில் தன் இருப்பிடம் நோக்கி வந்த, தன்னைத் தாயாக எண்ணுகின்ற இராமனிடம் அவனைத் தன் மகனாக எண்ணி வளர்த்த கைகேயி, அவனை வரவேற்கும் ஒரு சொல் கூடக் கூறாது "நாயக நுரையான் வாயா னானிது பகர்வேன்" (கம்ப.அயோத்.1686) என்றாள்.

இது கூனியின் வஞ்சத்தால் இரும்பினால் இயன்றதாக மாறிய அவளது உள்ளத்தைக் காட்டுகிறது. ஆயினும் எங்கே அவனை வரவேற்றால் தன் மனம் மாறிப் பழைய நிலைக்குச் சென்று விடுமோ என்பதனாலாகும். கைகேயியின் அவ்வுரை கேட்ட இராமன் கூறியதாகக் கம்பர்,

எந்தையே யேவ நீரே யுரைசெய வியைவ துண்டேல்
உய்ந்தன னடியே னென்னிற் பிறந்தவ ருளரோ வாழி
வந்ததென் றவத்தி னாய வருபயன் மற்றொன் றுண்டோ
தந்தையுந் தாயு நீரே தலைநின்றேன் பணிமி னென்றான் (689)

என்கிறார். எனவே இராமன் தன் தந்தையும், தாயும் நீரே எனக் கூறுவதன்வழி கைகேயி இராமன்மீது கொண்ட பற்று புலனாகும்.

சுமித்திரையின் உள்ளம்

இலக்குவன், சத்ருகனின் தாயாகிய சுமித்திரை கோசலை மீது கொண்ட அன்பினைக் கம்பர் **"துன்னருங் காதற் சுமித்திரை"** (1490) என்கிறார். இராமன் கானகம் செல்வதை எண்ணிச் சோர்வுற்ற சுமித்திரை உடலாலும், உயிராலும், உணர்வாலும் வருந்தினமையைக் கண்ட இராமன், **'ஊன்புக் குயிர்புக் குணர்புக் குலையற்க"** (1836) எனக்கூறித் தேற்றினான் என்பதன் வழி அறியமுடிகிறது.

இராமனுடன் கானகம் செல்லும் இலக்குவனிடம் 'இராமன் இருக்கும் அவ்வனமே உனக்கு அயோத்தி என்றும், இராமனே உனக்கு மன்னன் என்றும், சீதையே உனக்கு அன்னை என்றும் கூறி உடன் அனுப்பத் துணிந்தாள்' (1841). மேலும் இராமனுடன் அவன் தம்பியாக அன்றி ஏவலனாகச் சென்று அயோத்திக்கு மீண்டு வா என்றும் இன்றேல் அவனுக்கு முன் இறந்துபடு என்கிறாள் இது அவளது பிள்ளைப் பாசத்தையும் தன் பிள்ளையை ஒழுக்க நெறியில் பிழையாது வாழ முறைப்படுத்தும் உணர்வையும் புலப்படுத்துகிறது.

மண்டோதரியின் உள்ளம்

இராவணன் மனைவியாகிய மண்டோதரி அரக்கர் குலத்தில் பிறந்தவ ளாகினும் ஒழுக்கநெறி பிறழாத தூய உள்ளம் கொண்ட அன்னையாகத் திகழ்கிறாள். தனது மகன் இந்திரசித்து இறந்த செய்தியறிந்து தலையின் மீது தாங்கிய கையினளாய் வரும் அவளது துன்பநிலையினைக் கம்பர்,

தலையின்மேற் சுமந்த கைய டழலின்மேன் மிதிக்கின் றாள்;போல்
நிலையின்மேற் பதைக்குந் தாள ளேக்கத்தா னிறைந்த நெஞ்சள்
கொலையின்மேற் குறித்த வேடன் கூர்ங்கணை யுயிரைக் கொள்ள
மலையின்மேன் மயில்வீழ்ந் தென்ன மைந்தன்மேன் மருகி வீழ்ந்தாள் (3189)

என்பர். இங்கு தன் மகன் இறந்த செய்தி அறிந்து வரும் மண்டோதரி தான் எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியும் நெருப்பின்மீது வைப்பது போலிருந்தது எனக் கூறுவதும் அவ்வாறு வந்தவள் வேடனின் கூறிய அம்பு தாக்கிய மயில் போல் வீழ்ந்தாள் எனக் கூறுவதும் அவளது நிலையைப் புலப்படுத்துகிறது.

மகன் இறந்தசோகத்தில் மூர்ச்சையற்றுக் (உணர்வற்று) கிடந்த மண்டோதரி, நெடிதுநேரம் சென்று வாய் திறந்து புலம்பத் தொடங்கினாள். அவளது புலம்பலைக் கம்பர் ஏழு பாடல்களில் கூறியுள்ளார். இதில் 'முன்பு இந்திரனை வெல்லும் உனது வில் தொழிலின் காட்சியைக் காணும் தவத்தினையும் இன்று உனது தலையற்ற உடலைக் காணும் பாவத்தினையும் செய்தேனே'(3191) என்றும், 'அமுது போன்ற ஐயனே, திருமாலும், சிவனும் பாராட்டும் வலிமை மிக்கவனே, போரில் மூவுலகுக்கும் ஒப்பற்ற வீரனே உனது வீரத்தைக் காணாது நான் எப்படி உயிர் வாழ்வேன்'(3192) என்றும், அவனது தாளப்பருவ, அம்புலிப்பருவ நிகழ்வுகளைக் கூறியும் புலம்புவதன்வழி (3193, 3194) மண்டோதரி தன் மகன்மீது கொண்ட நிகரற்ற அன்பும் அவனது இறப்பால் அடைந்த துயரத்தின் கொடுமையும் புலனாகிறது.

தன் மகன் இறந்த சோகத்திலும் பஞ்சிலேபட்ட நெருப்பு மீளாது எரிவது போலப் போருக்குச் சென்ற அரக்கர் கூட்டம் அழிந்தது என்றும், அமுது போன்ற சீதையால் (இராவணனுக்கு அமுது போலத் தோன்றிப் பின் அவனையும் அவனது குலத்தையும் அழிக்கும் நஞ்சானவள்) இன்று என் மகன் இறந்தான். நாளை இலங்கை வேந்தனும் அழிவான் எனக் கூறி அரற்றுவதைக் கம்பர்,

பஞ்செரி யுற்ற தென்ன வரக்கர்தம் பறவை யெல்லாம்
வெஞ்சின மனிசர் கொல்ல விளிந்ததே மீண்ட தில்லை
அஞ்சினே னஞ்சி னேனிச் சீதையென் றமிழ்தாற் செய்த
நஞ்சினா லிலங்கை வேந்த னாளையித் தகைய னன்றோ (3197)

என்பர். மகனைப் பிரிந்த சோகத்திலும் இராவணனின் நெறி தவறிய

செயலால் தான் இவ்வாறு நிகழ்ந்தது எனக்கூறி வருந்தும் அவளது வஞ்சகமற்ற தூய அன்னை உள்ளத்தைப் புலப்படுத்தும்.

முடிவுரை

கம்பர் தனது காப்பியத்தில் தமிழர் தம் பண்பாட்டு அடிப்படையில் தாய்மையின் உணர்வினைக் கோசலை, கைகேயி, சுமித்திரை, மண்டோதரி போன்ற அன்னையர் வழி வெளிப்படுத்தியுள்ளார். இதில் கோசலை, கையேயி, சுமித்திரை ஆகிய மூன்று தாயாரும் தன் மகன், பிறள் மகன் என்ற வேறுபாடு இன்றி நால்வர் மீதும் மாறாத அன்பு கொண்டிருந்தனர். மேலும் அவர்கள் தம் மக்கள் அனைத்துச் சிறப்புக்களையும் பெற்று, சகோதரத்துவமும், கடமை உணர்ச்சியும் கொண்டு அறத்தின் வழிப்பட்ட வாழ்க்கை வாழ்வதையே விரும்பினர் என்பதை மூன்று தாயர் தம் கூற்றுகளும் புலப்படுத்துகின்றன. மண்டோதரி அரக்கர் குலத்தில் பிறந்தவளாகினும் அவளது உள்ளத்தை, தன் மகன் இறந்த செய்தி அறிந்த அவளது நிலை, புலம்பல், நெறிபிறழாத அவளது எண்ணங்கள் போன்றவற்றின் வழி அறியமுடிகிறது. எனவே மக்களைப் பெற்றதோடு மட்டுமன்றி அவர்களை அறிவு, ஒழுக்கம், வீரம் ஆகியவற்றில் சிறந்தோராய் வளர்க்கும் அன்னை உள்ளம் குறித்து இதன்வழி அறியமுடிகிறது.

கைகேயியின் ஆளுமை

சொக்கன்
சிட்னி, ஆஸ்திரேலியா

பொதுவாகவே பெண்களிடத்தில் ஆளுமைக் குணத்திற்குப் பதிலாக இரக்க குணம் தான் அதிகமாக காணப்படும். தாங்கள் நினைப்பதுகூட மற்றவர்களுக்குச் சங்கடத்தை உருவாக்கும் என்று தெரிந்தால், உடனே அந்த நினைப்பை வெளிப்படுத்தாமல் அழித்து விடுவார்கள். ஆனால் கைகேயியோ இதில் முற்றிலும் மாறுப்பட்டு ஆளுமைக் குணத்தோடு விளங்கி, அனைவரையும் எதிர்த்துத் தான் நினைத்ததை சாதித்தது பற்றி, கம்பன் எவ்வாறு சொல்லியிருக்கிறான் என்று அலசி ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

மந்திராலோசனையில் எடுத்த முடிவு

தசரதச்சக்ரவர்த்தி தன் மகன் இராமனுக்கு முடிசூட்ட வேண்டும் என்று எண்ணி மந்திராலோசனை சபையைக் கூட்டுகிறான். அங்கு அவனது அனைத்து அமைச்சர்களும், குலகுருவான வசிட்டரும் இருக்கிறார்கள். மன்னன் தான் நினைத்ததை மந்திர சபையோரிடம் "இராமனிடம் ஆட்சியைக் கொடுத்துவிட்டு, நான் பிறவிநோய்க்கு மருந்தான தவவாழ்க்கையை மேற்கொள்ளலாம் என்று இருக்கிறேன். உங்கள் கருத்து என்ன?" என்று அமைச்சர்களிடம் கேட்கிறான். அதற்கு அமைச்சர்களும், குரு வசிட்டரும் ஒப்புதல் அளிக்க, அங்கு அந்த மந்திராலோசனைப்படி, இராமனுக்கு முடிசூட்டுதல் என்று முடிவு எடுக்கப்பட்டது. நாட்டின் மன்னன், மந்திரிகள் மற்றும் ராஜகுரு எல்லோரும் சேர்ந்து எடுத்த இந்த முடிவை மிகவும் மகிழ்ச்சியாக ஏற்றுக்கொண்ட கைகேயி, பின்னர் கூனியின் பேச்சுத்திறனால் மன மாற்றமடைந்து, தனியாளாக தான் நினைத்ததை அடைந்தே தீருவது என்ற ஆளுமைக் குணத்தால் மந்திரிசபையில் எடுத்த அந்த முடிவை எவ்வாறு மாற்றினாள் என்று பார்ப்போம்.

கைகேயியின் உறுதி வாய்ந்த மொழி

கைகேயி மந்தரையிடம், "நீ எனக்கு சொல்லியபடி, என் கணவனிடம் பரதனுக்கு முடிசூட்டுங்கள் என்றும், இராமனை காட்டுக்கு அனுப்புங்கள் என்றும் இருவரங்களைக் கேட்பேன். இந்த

வரங்களை எம்மன்னவன் எனக்கு கொடுக்கவில்லை யென்றால், அக்கணமே அவன் முன்னிலையில் என்னுயிரை விடுவேன். இதுவே என்னுடைய துணிவு என்கிறாள். இதிலிருந்தே தெரிகிறது, கைகேயி எந்த அளவிற்கு நெஞ்சுரம் வாய்ந்தவள் என்று. தன்னுடைய ஆசை நிராசையாகிவிட்டால், தன் உயிரையும் மாய்த்துக்கொள்ள நினைக்கும் அந்த துணிவை அவளிடம் காண முடிகிறது.

தான் நினைத்ததை சாதிக்க கைகேயி கையாண்ட முறை

கைகேயி மலர் மஞ்சத்திலிருந்து கீழே இறங்கி, தான் தலையில் சூடியிருந்த மலர்களை எல்லாம் பிய்த்து எறிந்தாள். தன்னுடைய இடையில் அணிந்திருந்த மேகலையை அறுத்து வீசினாள். பாதத்தில் அணிந்திருந்த கிண்கிணியையும், கை வளையல்களையும் கழற்றி எறிந்தாள். தான் அணிந்திருந்த இரத்தின ஆபரணங்களை எல்லாம் வீசி எறிந்தாள். தன் கூந்தலைப் பிரித்து தரையில் பரந்து விரிந்து கிடக்குமாறு செய்தாள். கண்களில் பூசியிருந்த அஞ்சனம் கரைய அழுதாள். இலைகளும், பூக்களும் நீங்கிய வெற்று மரம் போல் தரையில் வீழ்ந்தாள்.

கணவன் மகிழ்ச்சியாக இருக்கின்ற நேரத்தில் மனைவி தனக்கு வேண்டியதைக் கேட்டு தான் நினைத்ததை நிறைவேற்றிக்கொள்ளுவாள். ஆனால் இங்கு கைகேயியோ தன் கணவன் மகிழ்ச்சியாக இருக்கின்ற இந்த நேரத்தில் தான் நினைத்ததைச் சாதித்துக்கொள்ள முடியாது என்று உணர்ந்திருக்கிறாள். அதனால்தான் அவனுடைய அந்த மகிழ்ச்சியான தருணத்தை மாற்றுவதற்கான வழிகளில் இறங்கினாள். அவளுக்குத் தெரியும், தன் கணவன் தன்னிடம் வந்து இராமனுக்கு முடிசூட்டுதலைப் பற்றி சொல்லுவான் என்று. அதனால் அவன் வரும்போது அவனுடைய மனநிலையை மாற்றும் வகையில் அலங்கோலமாகத் தரையில் வீழ்ந்திருந்தாள். மற்ற மனைவியரைக் காட்டிலும்தான் அதிகமாக நேசிக்கும் கைகேயின் அரண்மணக்கு மிகவும் மகிழ்ச்சியாக வந்த தசரதன் அவள் இருந்த கோலத்தைப் பார்த்ததும் துடித்துப்போய் "உனக்கு என்ன நடந்தது?" என்று மனதில் பயம் ஆட்கொள்ளக் கேட்கிறான். (அயோ.சூழ்வினைப்- 9). அவள் நினைத்தபடியே தசரதனின் மனநிலையானது மகிழ்ச்சியிலிருந்து மாறி அஞ்சிய மனநிலைக்குத் தள்ளப்பட்டது. இதுதான் சமயம் என்று எண்ணிய கைகேயியும் அவனிடம் பரதனுக்கு முடிசூட்டவும்,

இராமனை காட்டிற்கு அனுப்பவும் என்று அந்த இரண்டு வரங்களைக் கேட்கிறாள். (அயோ.சூழ்வினைப் படலம் - 14).

அந்தவரங்களை கைகேயியின் வாயிலிருந்து கேட்டவுடன், தசரதன் சோர்ந்துபோய் மிகவும் துயரப்பட்டு அவளிடம் "உன் மனதை யாரேனும் கலைத்தார்களா, இல்லை உனக்கு புத்தி பேதலித்துவிட்டதா" என்று கேட்டான். இவன் தனக்கு அந்த வரங்களைக் கொடுக்க மாட்டான் என்று தெரிந்து கொண்ட கைகேயி அந்த வரங்களை எப்படியாவது பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதற்காக அவனிடம், "முன்பே எனக்கு அளித்த அந்த இரண்டு வரங்களைத் தான் நான் இப்போது கேட்கிறேன். கொடுப்பதானால் சரி, இல்லையேல், நான் என் உயிரை மாய்த்துக்கொள்கிறேன்" என்று பதிலுரைத்தாள்.

கைகேயி தன் மனதை உறுதியாக வைத்திருத்தல்

கைகேயியின் இந்த பதிலைக் கேட்ட தசரதன், இவள் அந்த வரங்களை நம்மிடமிருந்து பெறாமல் விடமாட்டாள் என்று நினைத்து, துக்கம் தாளாமல் கைகேயியின் காலில் விழுகிறான். இந்த இடத்தில் வேறு எந்த பெண்ணாக இருந்தாலும், தன் நிலையிலிருந்து சற்று மாறி கீழே இறங்கி வந்திருப்பாள். ஆனால் கைகேயியோ, தன் நிலையிலிருந்து சற்றும் கீழே இறங்காமல், மனதை கல்லாக்கிக்கொண்டு, தான் அந்த வரங்களை பெருவதிலேயே குறியாக இருந்தாள்.

தான் கைகேயியின் காலில் விழுந்தும் அவள் மனம் சிறிதும் இறங்காததை கண்ட தசரதன் அவளைப் பார்த்து, "........கொன்றா ரில்லைக் கொல்லுதி யோநீ கொடியாளே" (அயோ.சூழ்வினை- 41)என்று தூற்றுகிறான். அதாவது, கணவனோடு தானும் இறக்கும் பெண்களைப் பார்த்திருக்கிறேன். ஆனால் நீயோ, கணவனையே கொல்லத்துணிந்து விட்டாய் என்று அவன் தூற்றுவதைப் பற்றி சிறிதும் மனம் சஞ் சலப்படாத கைகேயி அவனிடம், "எனக்கு நீ செய்த சத்தியத்தை காத்து அந்த வரங்களை கொடுக்காவிடில், உன்முன்னிலையில் நான் பிராணனை விடுவேன்" என்று தான் முன்னர் சொன்னதையே மீண்டும் ஞாபகப்படுத்துகிறாள். (அயோ.சூழ்வினைப் படலம் - 47). இவள் கேட்ட வரத்தை கொடுக்காமல் போனால், இந்தக் கணமே இவள் உயிரைத் துறப்பாள். பிறகு நாம் வாக்கு தவறியவனாகி விடுவோம் என்று எண்ணிக்கொண்டு, "நீ கேட்கும் வரத்தைத் தந்தேன்" என்று கூறி அந்த வரங்களை அளித்தான் (அயோ.சூழ்வினைப் படலம் - 48).

வரங்களைப் பெற்றவுடன், தான் நினைத்ததை சாதித்து விட்டோம் என்ற வெற்றிக்களிப்பில் கைகேயி உறங்கச் சென்றாள்.

முடிவுரை

'கைகேயி ஒரு கொடியவள், கணவனை மதிக்காதவள், தான் கேட்ட வரங்களை அளிக்காவிடில் இறப்பேன் என்று கணவனை மிரட்டியவள், பாசம் காட்டி வளர்த்த மகனையே காட்டிற்கு அனுப்பியவள்' என்று எண்ணத்தோன்றும். ஆனால், அவள் தன் உரிமையை அதாவது கணவன் தனக்கு முன்பு அளித்த வரங்களை பெறத்தான் தன் ஆளுமைக்குணத்தை வெளிப்படுத்தினாள். மேலும் கைகேயியின் இந்த ஆளுமைக்குணம் நன்மையில் தான் முடிந்துள்ளது. அதாவது அரக்கர்களை அழிக்கவும், இராமனின் புகழை உலகறியச் செய்வதற்கும், ஸ்ரீராமாயணமென்ற காவியம் தோன்றுவதற்கும் கைகேயியின் ஆளுமைக்குணமே காரணமாயிற்று. இன்றைக்கு நாட்டில் நடக்கும் பெண்களுக்கு எதிரான அநீதிகளுக்கு எதிராக, பெண்கள் கைகே-யியை உதாரணமாக்கிக்கொண்டு, தங்களுக்குள் புதைந்திருக்கும் ஆளுமை குணத்தை வெளிப்படுத்தி போராட வேண்டும் என்பதையே இக்கட்டுரை எடுத்துக்காட்டுகிறது.

தாயருள் சிறந்த தாய் சுமித்திரை

முனைவர் அருணாதினகரன்
முதல்வர், தமிழ்த்துறைத் தலைவர், தனலட்சுமி சீனிவாசன் மகளிர் கலை அறிவியல் கல்லூரி, பெரம்பலூர்.

மனித இனவாழ்வு மிகவும் பொறுப்புடையது. சிறப்புமிக்கது. இங்ஙனம் பொறுப்புடையதாகவும், சிறப்புடையதாகவும், விளங்குவதற்கு அச்சாணியாகத் திகழ்கின்றவர்கள் பெண்கள் ஆவர். தெய்வத்தோடு ஒப்புநோக்கத்தக்கத் தாய்மார்களுள் கம்பர் காட்டும் தாயார் மூவராவார். அவர்கள் கோசலை, கைகேயி, சுமித்திரை ஆவர்.

கோசலை இராமனைப் பெற்றதால் தெய்வத்தாய் ஆனாள். கைகேயி சூழ்ச்சியால், தன் மகன் பரதனுக்கு நாட்டைப் பெற்றாள். சுமித்திரைக்கோ இத்தகைய சிறப்போ, சூழலோ வாய்க்கப்பெறவில்லை. ஆனால் இவள் கோசலையின் மகன் இராமனுக்குத் தன் மகன் இலக்குவனைத் துணையாக அளிக்கின்றாள். இதனைக் கம்பர்,

ஐயனும் இளவலும் அணிநில நாடன்
செய்தவ முடைமைக டெரிதர நதியும்
மைதவழ் பொழில்களும் வாவியும் மருகி
நெய்குழல் உறுமிழையென நிலை திரிவார்

என்று இளம்வயது முதலே இராமனும், இலக்குவனும் நெய்கின்ற குழலுடனே விடாது பொருந்திய நூலிழையைப் போன்று, ஒருவரை விட்டு ஒருவர் பிரியாது வளர்ந்தனர் என்று எடுத்துரைக்கின்றார்.

சுமித்திரை தன் இன்னொரு மகன் சத்ருக்கனனைப் பரதனுக்குத் துணையாக அளிக்கப் போகிறாள் என்பதை முன்கூட்டியே உணர்த்தும் வகையில் கம்பர்,

பரதனும் இளவலும் ஒரு நொடி பகிராது
இரதமும் இவுளியும் இவர்ந்து மறைநூல்
உரைதரு பொழுதினு மொழிதிலர் எனையாள்
வரதனும் இளவலும் என மருவினரே

என்ற கூற்றால் பரதனும் சத்ருக்னனும் இராமனும் இலக்குவனும் போலக் கூடியிருந்தார்கள் என்று உணர்த்துகின்றார்.

சுமித்திரை தான் பெற்ற இரண்டு பிள்ளைகளையும் மாற்றான் தாயாரின் மகன்களுக்காகவே ஒப்பு கொடுக்கிறாள். அவள் தன்னிரண்டு பிள்ளைகளும் இராமனுக்கும் பரதனுக்கும் இணையான இளவரசர்களாயினும், ஏவலனாக, துணை நிற்பவனாக இருக்கச் சொல்லி விதிக்கின்றாள்; ஏற்கிறாள். இந்த ஏற்புடைமையால் சுமித்திரை தாயாருள் சிறந்த தாயாகத் திகழ்வதை, கம்பன் பாடல்கள் வழி உணர்த்தும் வகையில் கட்டுரை அமைகின்றது.

சோகம் தீர்ப்பவள்

கைகேயி இராமனைக் காடேகச்சொல்கிறாள். இச்செய்தியை இராமன்மூலம் அறியவரும் கோசலை தாங்கவொணாத் துயரம் அடைகிறாள். இலக்குவனனோ எவராலும் கொளுத்தப்படாத பிரளயக் காலத்துப் பெருந்தீயைப் போலக் கோபம் கொண்டெழுகிறான். இராமன் அத்தீயைத் தன் வார்த்தைகளால் தணிவிக்கிறான்; பின்னர் கோபம் தணியப்பெற்ற இலக்குவனை அழைத்துக் கொண்டு, சுமித்திரையின் கோயிலை நாடிச் செல்கிறான்.

சுமித்திரை நிகழ்ந்ததைக் கேட்டுப் பெரிதும் வருந்துகின்றாள். இராமன் அவளைத் தேற்றுகின்றான். அப்போது, கைகேயி கொடுத்தனுப்பிய மரஉரியைப் பணிப்பெண்கள் கொண்டு வருகின்றனர். இலக்குவனன் அதைப் பெற்றுக்கொண்டு, தாயைப் பார்த்து விடைகேட்கிறான். அப்போது, சுமித்திரை பேசும் வார்த்தைகள், இந்த உலகத்தில் எந்தத் தாயும் தன் மகனுக்குக் கூறாத கூறமுடியாத அறிவுரைகளாக- அறவுரைகளாக அமைகின்றன.

இராமன் இருக்குமிடமே அயோத்தி

இராமன் இருக்குமிடம் சீதைக்கு அயோத்தி' என்பது வழக்காறு ஆகும். காரணம்,

தற்காத்துத் தற்கொண்டான் பேணி தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண்

என்று வள்ளுவரும்,

மனையுறை மகளிர்க்கு ஆடவர்தாம் உயிர்

என்று குறுந்தொகைப் புலவனும் முன்மொழிந்து சென்றதை, காலங் காலமாக இச்சமூகம் வழிமொழிந்துகொண்டிருக்கிறது. அதனால்,

சீதை, 'நின் பிரிவினும் சுடுமோ காடு' என்று புறப்பட்டது இயல்பான வழக்காகும், வழக்கமுமாகும். ஆனால் சுமித்திரை இலக்குவனிடம், **ஆகாதது அன்று உனக்கவ்வனம் இவ்வயோத்தி"** என்று எடுத்துரைப்பது நோக்கத்தக்கது. மாற்றாந்தாய்க்குப் பிறந்த இராமன் அரசைத் துறந்து, மர உரி தரித்துக் காடேகும்போது, இளையவனும் உடன் செல்ல வேண்டும் என்று அரசன் விதிக்கவில்லை. இலக்குவனன் கோசலை வயிற்றில் பிறந்தவனுமல்லன். இந்நிலையில் 'இராமன் இருக்கும் அவ்வனமே உனக்கு இனி அயோத்தி' என்று கூறும் சுமித்திரையின் உள்ளம் கடலினும் மாணப் பெரியதாகத் திகழ்வதை உணர முடிகின்றது.

இராமனே உன் தந்தை

இராமன், 'தந்தை சொல் மிக்க மந்திரமில்லை' என்பதைச் சிரமேற் கொண்டு காட்டிற்குப் புறப்படுகின்றான். இனிமேல் அந்த இராமன்தான் உன் தந்தை தயரதன்போன்றவன் என்று கூறுகின்றாள். இதனால், காட்டில் வாழும் பதினான்கு ஆண்டுகளும், அவனை உன் தந்தை நிலையில் வைத்துப்போற்ற வேண்டும், பாதுகாக்க வேண்டும். எந்தச் சூழலிலும் இராமனது வார்த்தைகளை மீறக் கூடாது. ஆணைகளாக ஏற்று நிறைவேற்றவேண்டும் என்பதை சுமித்திரை குறிப்பாக வலியுறுத்து கின்றாள்.

உயர்தாயர் நம் பூங்குழல் சீதை

சுமித்திரை இலக்குவனனிடம் சீதையைப் பற்றிக்கூறும்போது, 'தாயைப் போன்றவன்' என்று பொதுவாகக் கூறவில்லை. மாறாக, **'உயிர்த்தாயார் நம் பூங்குழல்சீதை'** என்று கூறுவது சிந்தனைக்குரியது.

இலக்குவன் இளைஞன். அவன் தன் இளம் மனைவியைப் பிரிந்து, காட்டில் இராமனுடன் பதினான்கு ஆண்டுகள் வசிக்க வேண்டிய நிலையில், கடுமையான பிரம்மசரிய விரதத்தைக் காத்தாக வேண்டிய கட்டாயம் அவனுக்கு இருக்கிறது. எந்தச் சூழலிலும் சீதை எள்ளளவும் தவறாக நினைத்துவிடாதபடி தன் நடத்தை, இருக்க வேண்டும் என்ற எச்சரிக்கை உணர்வு அவருடைய உள்ளத்தில் கனன்றுகொண்டே இருக்க வேண்டும் என்பதால்தான், சுமித்திரை, 'தாயைப் போன்றவன்' என்று பொது நிலையில் கூறாமல், 'தாயாராகிய நாங்கள் மூவரும் சீதை வடிவத்தில் இருப்போம், இனி நீ சீதையை அப்படித்தான் பார்க்க வேண்டும்' என்று குறிப்பாக எச்சரிக்கின்றாள்.

தாயாருள் சிறந்த தாயள்

சுமித்திரை இலக்குவன் எப்படிச் செயல்பட வேண்டும் என்பதைக் கூறுமிடத்து விசுவரூபமெடுத்து நிற்கின்றாள். சுமித்திரை தன் மகனிடம், 'இந்தக் கணம் முதல் நீ பேரரசன் தசரதனின் மகன் என்பதையும், இராமனின் தம்பி என்பதையும் மறந்துவிட வேண்டும். இவன் பின்னே நிழலாகச் செல்ல வேண்டும். தம்பியாக அல்ல, ஒரு ஏவலனாகப் பணிபுரிய வேண்டும் என்பதை,

மகனே இவன்பின் செல் தம்பி
என்றும் படியன்று அடியாரின் ஏவல் செய்தி

என்ற வரிகள் புலப்படுத்துகின்றன.

'பணிவிடை' என்பது உறவுபாற்படும். 'ஏவல்' என்பது எசமான் கட்டளையிட்டால் பணிமக்கள் செய்வதாகும். இங்கு இராமனுக்கு நீ தம்பியாக அல்லாமல், சேவகனாக, அவன் கட்டளைகளை ஏற்று, சேவை செய்ய வேண்டும் என்று பணிக்கிறாள். இறுதியாகச் சுமித்திரை தன் மகனுக்கு இடும் கட்டளையால், அவள் நின்றசீர் நெடுமாலாக மண்ணுக்கும் விண்ணுக்குமாக உயர்ந்து நிற்கின்றாள்.

சுமித்திரை இராமனை அவதாரமாகப் பார்க்கவில்லை. அதனால்தான், **"மன்னும் நகர்க்கு இவன் வந்திடின் வா அதன்றேல் முன்னம்முடி'** என்று கட்டளை இடுகின்றாள். இராமன் தெய்வச்சார்புடையவனாக இருந்தால், அவனுக்குத் தோல்விகள் நேர வாய்ப்பில்லை. சுமித்திரை இராமனை மானுட மகனாகவே பார்க்கிறாள். அதனால்தான், இந்தப் பதினான்கு ஆண்டுகள் கழித்து நீ இராமனுடந்தான் அயோத்திக்கு வரவேண்டும். மாறாக, அவனுக்கு ஏதேனும் நேர்ந்தால், அதைத் தடுக்கும் முயற்சியில், அவனுக்கு முன்னால் நீ மடிதல் வேண்டும், என்பதை 'மடிதி' என்று ஏவற்பொருளில் கூறுகின்றாள். கம்பர் படைத்த பாத்திரங்களைப் பற்றி வ.சுப.மாணிக்கம்.

கம்பர் தம் பாத்திரங்களை மிகப் பேசவிடும் போக்குடையவர். ஒரு பாத்திரம் எவ்வளவு கருத்துக்களைச் சொல்லலாமோ அவ்வளவையும் சொல்லிவிடச் சொல்பவர் என்று கருத்துரைக்கின்றார். காப்பியத்தில் சுமித்திரை ஒரே இடத்தில்தான் வாய்திறந்து பேசுகிறாள். அவ்வொரு பேச்சிலேயே அவளுடைய விதிவிலக்கான தாயுள்ளத்தைக் கம்பர் சிறப்பாகக் காட்டுகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

போற்றுதற்குரியவள்

இராமன் காட்டிற்குச் செல்லும்போது தாயார் மூவரும் உடன் வருகின்றனர். கோசலையைப் பார்த்த குகன் 'அவள் யார்' என்று சாதாரணமாகக் கேட்கிறான். கைகேயியைப் பற்றி, அவன் கேளாமலேயே, பரதன் வெறுப்புடன் பேசுகின்றான். ஆனால் சுமித்திரையைக் கண்ட குகன், 'அன்பின் நிறைந்தாளை உரை' என்று கேட்பது நோக்கத்தக்கது. அவளைப்பற்றிப் பரதன் குகனிடம், 'இராமன் பின்பு பிறந்தானும் உளன் என்னப் பிரியாதான் தன்னைப் பயந்த பெரியாள்' என்று அறிமுகப்படுத்துகின்றான். 'இலக்குவனனைப் பெற்றவள் மட்டுமல்ல, காட்டிலும் இராமனைப் பிரியாவண்ணம் தன் மகனை அளித்த பெரியவள்' என்று பரதன் சுமித்திரையின் உயர்வை எடுத்துரைக்கின்றான்.

நிறைவாக

மன்னுயிர் ஓம்பி அருள் ஆள்வார்க்கு இல்லென்ப
தன்னுயிர் அஞ்சும் வினை

என்ற குறள்வழி, மற்றவர்களிடத்து இரக்கம் கொண்டு அருள் செய்வோர்க்குத் தன்னைப் பற்றிய நினைவு / எண்ணங்கள் இருக்காது; அஞ்ச வேண்டிய அவசியமும் இல்லை என்கிறார். அதையொற்றி, சுமித்திரை இராமன்பால் கொண்ட அன்பால் / அருட்திறத்தால் தன் மகனின் நிலையைப் பற்றிச் சிறிதும் சிந்திக்காமல், அவனோடு அனுப்புவது எண்ணத்தக்கது. பாரதியார் 'கண்ணன் என்தாய்' என்ற கவிதையில்,

வேண்டிய கொடுத்திடுவாள் அவை
விரும்புமுன் கொடுத்திட விரைந்திடுவாள்
ஆண்டருள் புரிந்திடுவாள்

என்று போற்றுகின்றார். இவ்வரிகள், இராமனுக்கு அருள்செய்ய, தன் மகனை அளித்த சுமித்திரைக்குப் பொருந்தும் என்று வழிமொழிந்து, கட்டுரை நிறைவடைகின்றது.

இராவணன் இழைத்த தீமை – கூனி

முனைவர் பா.பட்டம்மாள்
உதவிப் பேராசிரியர்,பாரதிதாசன் அரசு மகளிர் கல்லூரி,புதுச்சேரி

மனித சமுதாயத்தை அறிவும் உணர்வும் பண்பட்டதாக மாற்றுகிறது. வாழ்க்கை சார்ந்த அறிவையும் உணர்வையும் மொழி வழியாக வெளிப்படுத்துவது இலக்கியம். இரண்டாயிரம் ஆண்டுகால பராம்பரியம் குறித்த பண்பாட்டுப் பதிவுகளை உள்ளடக்கிய தமிழ் இலக்கியப் பரப்பில் மக்களின் உள்ளத்தைக் கவர்ந்த பேரிலக்கியம் கம்பராமாயணம். உயரிய கவிதைத் திறனை எளிய சொற்களால் எடுத்தியம்பும் காப்பியம்; காப்பியத்தின் சிறப்புக் கூறுகளுள் தலைமை யானது பாத்திரப்படைப்புத்திறன் ஆகும்.

காப்பியத்தின் பாடுபொருளும், அதை ஒட்:டிய பல்வேறு நிகழ்ச்சிகளும் பாத்திரங்களின் வழியாக வெளிப்படுத்தப்படுகிறது. இப்பாத்திரங்களை காப்பியம் முழுவதும் பங்கேற்கும் விழுமிய எண்ணங்களைக் கொண்ட முதன்மைப் பாத்திரங்கள், காப்பிய நிகழ்ச்சியின் இடையில் தோன்றி ஒருசெயலைச் செய்து மறைந்துவிடும் எதார்த்த எண்ணங்கள் கொண்ட துணைமைப் பாத்திரங்கள் என இருவகைகளாகப் பகுப்பர். கம்பராமாயணத்தில் கதைப் போக்கிற்குப் பெரிதும் காரணமாக திருப்பு முனையாக அமைந்த கூனியின் பாத்திரப்படைப்பை இக்கட்டுரை ஆராய்கிறது.

'கம்பநாடகம்' எனப் போற்றப்படுவதற்கேற்ப காப்பியத்தின் பெரும் பகுதி நாடகப்போக்கில் இயற்றப்பட்டுள்ளது. பாத்திரங்கள் சந்தித்து உரையாடுகின்ற இடங்களில், நாடகத்திற்கு அடிப்படையான உணர்ச்சி மோதல்களும், பாத்திரங்களின் மெய்ப்பாடுகளும் எடுத்துரைக்கப்படுகின்றன.

மந்தரை சூழ்ச்சிப் படலத்தில் இராமனுக்கு முடிசூட இருப்பதை அறிந்து, மக்கள் நகரை அணி செய்கின்றனர். அதுகண்டு வெகுண்டெழுகிறாள் கூனி;. அவளின் தோற்றத்தைக் குறிப்பிடும்போது,

இன்னல்செய் இராவணன் இழைத்த தீமைபோல்
துன்ன அருங் கொடுமனக் கூனி தோன்றினாள் (132)

எனும் தொடரைப் பயன்படுத்துகிறார்.

'கம்பராமாயணத்தின் பாடுபொருள் இராவணன் வீழ்ச்சி; இராவணனை அழிப்பதற்காகப் பரம்பொருள் அயோத்தியில் தசரதன் மகனாகப் பிறக்கிறது; மனிதனாக நடக்கிறது. இதனைக் கம்பர் காப்பியம் முழுவதும் எல்லா நிகழ்ச்சிகளிலும் குறிப்பிடுகிறார்' (காப்பிய நோக்கில் கம்பராமாயணம் - அ. பாண்டுரங்கன்).

பாடுபொருளின் முதன்மையை வலியுறுத்தும் வகையில் இராவணன் இழைத்த தீமையாகக் கொடுமனக் கூனி தோன்றுகிறாள். கூனியின் தோற்றம் இராவணன் அழிவுக்கு ஓர் முன்னறிவிப்பு. கூனியின் சூழ்ச்சியே பின்னுள்ள இராமாயண நிகழ்ச்சி அனைத்திற்கும் வித்தாகின்றது.

கூனியை, இராவணன் இழைத்த தீமையாகக் கூறுவதன் காரணத்தை அறிய பின்வரும் கருத்து துணை செய்யும்.

"இலக்கியம் குறித்த மிக நுட்பமான சொல்லாடலைப் புரிந்து கொள்ள ஃபிராய்டின் உளவியல் அணுகுமுறை துணை செய்யும். மனிதனின் சிந்தனைகள் நனவிலி மனத்தால் கட்டப்பட்டவையாகும். அது உறைந்த பனித்தீவு போன்றது. அதன் பெரும்பகுதி கண்ணுக்குப் புலப்படாமல் மனிதனை இயக்கிக் கொண்டிருக்கிறது. பல்வேறு சமூகக் காரணங்களால் வெளியிடத் தயங்கி, ஒடுக்கப்பட்ட நசுக்கப்பட்ட ஆசைகள், தீர்க்க முடியாத முரண்கள், கலங்கடித்த இறந்த கால நினைவுகள் முதலியவை எல்லாம் சேர்ந்துதான் நனவிலி மனத்தில் தங்கிக் கொண்டு பின்பு இயங்குகின்றது" (இலக்கியமும் திறனாய்வுக் கோட்பாடுகளும்,க. பஞ்சாங்கம், ப. 129).

..வெகுளியின் மடித்த வாயினாள்
பண்டைநாள் இராகவன் பாணி வில்உமிழ்
உண்டை உண்டதனைத் தன் உள்ளத்து உள்ளுவாள் (134)

என்று கம்பர் எடுத்துக்கூறுவதன்மூலம் கடந்த காலத்தில் இராமனால் தனக்கு ஏற்பட்ட அவமானத்தை எண்ணி, பழிவாங்கும் உள்ளம் உடையவளாய், அதற்கான வாய்ப்பை எதிர்பார்த்துக் காத் திருக்கிறாள் கூனி. பழி வாங்குவதற்கான வாய்ப்பாக இராமனுக்கு முடிசூட இருப்பதை அறிகிறாள். கைகேயின் மூலமாகப் பழிவாங்க எண்ணுகிறாள்.

நனவிலி மனத்தில் தங்கிய உணர்வு, எதிர்பார்த்த சூழ்நிலையில் கூனியை வெகுளிக்கு உள்ளாக்குகிறது; பழி வாங்கத் துடிக்கிறது.

இவளின் பாத்திரப்படைப்பில், இவளைக் கம்பர் மிகத் தெளிவாக பின்வரும் தொடர்களால் படம் பிடித்துக் காட்டுகிறார்.

கொடுமனக் கூனி (132) - கொடிய மனத்தை உடையவள்

வெவ்விடம் அனையவள்(139) -உண்டாரைக்கொல்லும்விடத்தை ஒத்தவள்

சூழ்ந்த தீவினை நிகர் கூனி(141) - சூழ்ந்த தீவினைக்கு ஒப்பானவள்

கொடிய கூனி(145) - கொடிய தன்மை கொண்டவள்

வேதனைக் கூனி(146) - வேதனைத் தருபவள்

தீய மந்தரை(170) - -தீமை நிறைந்தவள்

வினை நிரம்பிய கூனி (172) -தீவினை நிரம்பியவள்

உள்ளத்தில் தோன்றும் உணர்ச்சி, உடம்பின்கண் வெளிப்பட்டு காண்போருக்கு புலனாகும் தன்மையை மெய்ப்பாடெனத் தொல்காப்பியம் சுட்டும். பொருள் புலப்பாட்டுக்கு உரியது மெய்ப்பாடு. நாடக வழக்கையும், உலக வழக்கையும் அடிப்படையாகக் கொண்டு செய்யுள் இயற்றுவதற்கு மெய்ப்பாட்டை அடிப்படையாகக் கொள்வர். 'நகை, அழுகை, இளிவரல், மருட்கை, அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை எனும் எண்வகை மெய்ப்பாட்டில் வெகுளிச் சுவையை மையப்படுத்தி கூனியின் பாத்திரத்தைப் படைத்துள்ளார் கம்பர்.

சுவை தோன்ற காரணமாக சுவைப்பொருள், சுவையுணர்வு, குறிப்பு, சத்துவம் ஆகியவற்றைக் குறிப்பிடுவர் அடியார்க்கு நல்லார்.

சுவைப்பொருளாக-இராமனும்; சுவையுணர்வாக-கூனியின் மனத்தில் இராமனை நினைத்த போது உண்டான வெகுளியும்; குறிப்பாக-வெகுளி மனத்தில் தோன்றிய வகையில் பழிவாங்க வேண்டும் என்ற உள்ளத்து உணர்வும்; சத்துவமாக- உடம்பில் தோன்றும் வேறுபாடும் இப்பாத்திரப் படைப்பில் வெளிப்படுத்தப்படுவதை அறிய முடிகிறது.

உள்ளத்தில் தங்கியிருந்த பகை, வெகுண்டெழுந்து சூழ்ச்சியாக வெளிப்பட, அவளின் புலன்களின்வழி வெளிப்பட்ட தன்மையை,

துடிக்கும் நெஞ்சினள் (133) --- துடிக்கும் மனம்

ஊன்றிய வெகுளியாள் --- நிலைபெற்ற கோபம்

உளைக்கும் உள்ளத்தாள் --- கோபம் உறுத்தும் உள்ளம்

கான்று எரி நயனத்தாள்-		சினத்தீயை வெளிப்படுத்தும் கண்கள்
கதிக்கும் சொல்லினாள்	---	கொடுஞ் சொற்களைப் பேசும் வாய்
வெகுளியின் மடித்த வாயினள்	-	கோபத்தினால் மடித்த வாய்
வாய் கயப்புற வழங்கிய	--	இன்னாத கொடுமையான
வெஞ்சொல்(156)		சொற்கள் பேசும் வாய்
வெகுண்ட நோக்கு	---	கோபம் கொண்ட பார்வை
உள்ளமும் கோடியகொடியாள்(176)	--	கொடிய கோணல் உள்ளம்

எனும் தொடர்களால் வெளிப்படுத்துகிறார்.

'சுவைகளை மனத்தில் நினைக்கும்போது, அவை உடம்பில் தோன்றும்; அவ்வாறு உடம்பில் தோன்றும்போது உடம்பின் வெளிப்பாடு முகத்திலும், முகத்தின் வெளிப்பாடு கண்ணிலும், கண்ணின் வெளிப்பாடு கடையகத்திலும் தோன்றும்' என சத்துவம் குறித்து அடியார்க்கு நல்லார் கூறுவது இங்கு எண்ணத்தக்கது (மனதில் தோன்றும் சுவை மெய்யின் வழி வெளிப்படுவது சத்துவம்). கூனியின் உள்ளத்தில் தோன்றிய வெகுளி உடலுறுப்பாலும், முகத்தாலும், வாக்கினாலும் வெளிப்படுகிறது.

கூனி செய்த சூழ்ச்சிக்கு, கைகேயி இணங்க மறுத்தபோது தன் கோபத்தை மேலும் வெளிப்படுத்துகிறாள்.

தெழித்தனள் (146)	---	கோபித்தாள்
உரப்பினாள்	---	கூச்சலிட்டாள்
தீஉக விழித்தனள்	---	சினத்தீ எரிய விழித்தாள்
வைதனள்	---	திட்டினாள்
வெய்து உயிர்த்தனள்	---	வெம்மையான பெருமூச்சு விட்டாள்
அழித்தனள்	---	தன்னை அலங்கோலமாக்கிக் கொள்கிறாள்
அழுதனள்	---	வாய்விட்டு அழுதாள்
குழித்தனள் நிலத்தை	---	மாலையை வீசிஎறிந்து நிலத்தைக் குழியாக்கினாள்

வெகுளிச்சுவை வெளிப்பாடுகளாக அடியார்க்கு நல்லார் எடுத்துக் காட்டும் வாய் மடிதல், கண் சிவத்தல், பெருமூச்செறிதல், வாய் விட்டு அரற்றுதல், மெய் குலைதல், வீசி எறிதல் (சிலப்பதிகார மூலமும் அரும்பதவுரையும் அடியார்க்கு நல்லார் உரையும் - உ.வே. சாமி நாதையர்) ஆகிய செயல்களோடு கம்பர்; காட்டும் கூனியின் செயல்கள் நோக்கத்தக்கன.

பழிவாங்கும் உணர்வு மேலோங்க, எப்படியாவது தான் எண்ணியதை நிறைவேற்ற வேண்டும் என்ற நோக்கோடு அருள் நிரம்பிய கைகேயின் மனத்தை மாற்ற,அடி தீண்டியவள் (136) --- 'அடி வீழ்கிறாள்'(161) கைகேயி தன் மனத்தை மாற்றிக் கொள்ளவில்லை என்றால், அவள் அடையப் போகும் இழப்புகளை('அதிகார இழப்பு, பொருளாதார இழப்பு' (165)) சுட்டிக் காட்டுகிறாள். மேலும் கோசலை பெறப்போகும் அதிகார வாழ்வைப் பெரிதுபடுத்துகிறாள்(164).கைகேயின் பிறந்த வீட்டு உறவினர்கள் அடையப்போகும் துன்பங்களைக் காட்டுகிறாள் (167). எல்லாவற்றிற்கும் மேலாக, கைகேயின் தாய்மையை முன்னிறுத்துகிறாள் (169).தான் நினைத்தபடி, கைகேயின் மனத்தை மாற்றி, அம்மாற்றத்தை அடைவதற்கான வழியையும் கூறுகிறாள் (175).

இவ்வாறு, வி;டாமுயற்சி நினைத்த செயலைச் சாதிக்கும் வன்மை, தீவினை ஆற்றும் வன்மை ஆகிய பண்புகளின் இருப்பிடமாக, பழிவாங்கும் உணர்வுள்ளவளாக கூனியைப் படைத்துக் காட்டுகிறார். கதைச் சூழலோடு கதாப்பாத்திரத்தின் பண்பினை, உள்ளத்து உணர்ச்சிகளைப் படிப்போர்க்குப் புரியும் வண்ணம் நாடகப்போக்கில் மொழிவழிக் கட்டமைத்துள்ளார். கூனியை, வாழ்க்கையில் காணக்கூடிய உயிர்த்துடிப்புடைய பாத்திரமாகப் படைத்த கம்பரின் படைப்புத் திறனும், மந்தரை சூழ்ச்சிப் படலத்தின் மூலம் கூனியின் வெகுளிச்சுவையை, காப்பியத்தின் மையக்கதையோடு ஒருங்கிணைத்துக் காட்டும் கட்டமைப்புத் திறனும் காப்பிய ஆக்கத்திற்கு வலுவூட்டி நிற்கின்றன எனலாம்.

காப்பியச் சூழலில் தாரையின் மனவெளிப்பாடு

சை.வஹிதாகௌசியா
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
ஸ்ரீமீனாட்சி அரசினர்மகளிர் கலைக்கல்லூரி (த)மதுரை-2

கம்பராமாயணக் காப்பியச் சூழலில் தாரையின் உள்ள உணர்வுகள் எப்படி இருக்கின்றன என்பதைப்பார்க்கும் முயற்சி இவ்வியலில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தாரையின் அடிமன உணர்வுகள்

தாரை பெண்ணாக இருந்தாலும் நாட்டில் நடக்கும் நிகழ்ச்சிகளை எல்லாம் அறிந்து வருகிறாள். வாலியின் தம்பியாகிய சுக்ரீவனுக்குத் துணையாக இராம, இலக்குமணர்கள் வந்திருக்கிறார்கள் என்பதைத் தன்னுடைய ஒற்றர்களின் மூலமாகத் தெரிந்து கொள்கிறாள். இதை அறிந்தவுடன் அவளுடைய மனதை சொல்லொண்ணாத துயரம் வாட்டுகிறது. சுக்ரீவன், வாலியைப் போருக்கு அழைத்தவுடன் வாலி போருக்குப் புறப்படுகின்றான். அப்பொழுது தாரை அவனிடம் வந்து,

அன்னது கேட்டவ ளரச வாயவற்
கின்னுயிர் நட்பமைந் திராம னென்பவன்
உன்னுயிர் கோடலுக் குடன்வந் தானெனத்
துன்னிய வன்பினர் சொல்லினா ரென்றாள் (.30.)

என்று வாலியிடம் கூறுகின்றாள். 'ஆனால் வாலியோ இராமன் என்ற பெயர் கேட்டதும்ஈ அயர் உலகினுக்கு அறத்தின் ஆறு எல்லாம் இழைத்தவனுக்கு இயல்பல இயம்பி என்செய்தாய்? பிழைத்தனை பாவி நின் பெண்மையால் (3965) எனச் சீறிப் போருக்குச் செல்கின்றான். உன் பெண்மையால் நீ பிழைத்தாய் என இழித்துரைத்தவன் பெண் கூறிய செய்தியின் உண்மையை ஆயவும் ஒருப்படாதவன் இறுதியில் மரணத்தைத் தழுவுகிறான். பெண்மையின் குரலுக்கு மதிப்பளித்து வாலி சற்று நிதானித்துச் செயல்பட்டிருந்தானேயாகில் இந்த அவலத்தை அணுகியிருக்க மாட்டான். பெண்மையை மதிக்காத ஆண்மை அவலமுறும் என்பதைக் கம்பன் இவன் வழி அறிவுறுத்துகின்றான் என்பதை அறியலாம்." (ச.சிவகாமி, பெண்ணியப் பார்வையில் கம்பன் தாரை. கம்பர் ஆய்வுக் கோவை.ப.131.)

போருக்குச் சென்ற வாலிக்கு முடிவு ஏற்பட்ட செய்தியைத் தாரை உணர்;ந்தாள். வாலியின் உடல் கிடந்த இடத்திற்கு விரைந்து வந்து, அவன் உடல் மேல் வீழ்ந்து பலவாறு அழுது புலம்புகிறாள். அதுவரை அவள் மனத்தின் ஆழத்தில் இருந்தவை எல்லாம் கதறலாக வெளிவருகின்றன.

சொற்றேன் முந்துற வன்ன சொற்கொளாய்
ஆற்றா னன்னது செய்க லானென
உற்றா யும்பியை யூழி காணுநீ
இற்றாய் நானனை யென்று காண்கெனோ (67)

நீர் புறப்படும்போதே நான் சொன்னேனே என்னுடைய சொல்லைக் கேட்காமல் வந்தீரே ஊழிக்காலம் வரையில் உயிர் வாழ்ந்திருக்கத்தக்க நீ, இராமன் நல்லவராகையால் இப்படியெல்லாம் செய்ய மாட்டார் என்று சொல்லி, இப்படி இறந்து போனாய். இனி நான் உன்னை எங்கு காண்பேன் என்று கூறி அழுகின்றாள். இவையெல்லாம் தாரையின் மனஆழத்திலிருந்து வெளிவந்த வார்த்தைகள். தன்னுடைய சொல்லை மீறி வாலி போருக்குப் போகும் போதே தாரையின் மனம் மிகவும் துன்பத்திற்குள்ளாகிறது. தாரை நினைத்து பயந்தவாறே வாலிக்குத் தீமை நடக்கின்றது.

இயல்பாகவே நமக்கு ஓர் இன்பமோ அல்லது துன்பமோ நடக்கும் போது அதற்கான ஓர் அறிகுறியை நமது மனம் சொல்லிவிடும். வாலி போருக்குச் செல்லும்போதும், தாரைக்கு அப்படியொரு உணர்வு ஏற்படுகின்றது. அவள் நினைத்துக் கலங்கியதைப் போலவே, வாலிக்குத் துன்பம் நேருகின்றது. அவளது அடிமன உணர்வுகள் எல்லாம் வாலியால் நசுக்கப்பட்டிருப்பதை அறியலாம்.

தாரையின் மனத்துயர்

வாலி இறந்த செய்தியைக் கேட்டவுடன் தாரை ஓடி வந்து வாலியின் உடல்மேல் விழுந்து அழுகின்றாள்.

குங்குமங் கொட்டியன்ன குவிமுலைக் குவட்டிற் கொத்த
பொங்குவெங் குருதி போர்ப்பப் புரிகுழல் சிவப்பப் பொற்றோள்
அங்கவ னலங்கன் மார்பிற் புரண்டன ளகன்ற செக்கர்
வெங்கதிர் விசும்பிற் றோன்றுமின்னெனத் துவளுமெய்யாள் (383.)

என்ற கம்பரின் வரிகளிலிருந்து அறியலாம். என்னுயிரே! என்னுடைய உள்ளம்! என்னுடைய அரசே! மலைக்கு ஒப்பான உம்முடைய தோள்களிலே எந்நாளும் வாழ்ந்திருந்த நான் இப்பொழுது துன்பக் கடலில் வீழ்;ந்து கரைகாணாமல் இருக்கிறேன். ஆ ஊழே! உயிர் போனால் உடல்மட்டும் பிழைத்திருக்கிருமோ! என்னையும் கொன்று விடு என்று கதறுகின்றாள்.

ஒரு பெண்ணிற்கு வாழ்நாள் முழுவதும் துணையாக வருபவன் அவளுடைய கணவன். தன்னுடைய இன்ப; துன்பங்கள் அனைத்தும் தன்னுடைய கணவனே என்று இருக்கின்ற ஒரு பெண்ணிற்கு, அவன் இறந்ததும் எல்லாமே வெறுமையாகத் தெரிகின்றது. அவன் இல்லாத இவ்வுலகில், தான் இருப்பது ஒரு பொய்யான வாழ்வாக இருக்கும் என்று நினைக்கத் தோன்றுகிறது. எனவே தான் தாரை, ஊழே! என்னையும் கொன்று விடு என்று சொல்லி அழுகின்றாள்.

நையா நின்றறென னானி ருந் திங்ஙன்
மெய்வா னோர்திரு நாடு மேவினாய்
ஐயா நீயென தாவி யென்றதும்
பொய்யோ பொய்யுரை யாத புண்ணியா" (390)

என்று புலம்புகிறாள். மலரணையின் மீது உறங்கும் நீர் இப்போது மண்மேலும் கிடக்கும்படியாக நேரிட்டதல்லவா? நான் இவ்வாறு துன்புற்று, வருந்த நீர் விண்ணுலகத்தை அடைந்து அரம்பையைச் சேர்ந்து இன்புற்றுக் களிக்கின்றீரோ? நீர் என்னுடைய உயிர் என்பது பொய்யோ? என்று சொல்லிக் கதறுகின்றாள். உம்முடைய உள்ளத்தில் அடியேன் இருந்தாலும் பகைவர்களின் கணையானது உம்மைக் கொன்றது போல என்னையுங் கொல்லுமே அல்லது என் மனத்தில், நீர் இருந்தாலும் அந்தக் கணைக்குத் தப்பி என்னைப் போலப் பிழைத் திருப்பீரே என்று சொல்லி அழுகின்றாள்.

துன்பத்திற்கு வடிகால், ஒன்று அதை யாரிடமாவது சொல்லி அழுவது, அல்லது தனக்குத் தானே சொல்லி அழுவது. தாரை இறந்து கிடக்கும் வாலியின் உடலிடம் சொல்லி அழுகின்றாள். அவ்வாறு அழுதவால் அவளது மனத்துயர் ஓரளவு குறைகிறது. இந்த இராமபிரான் வாயினால் ஒருசொல் சொல்லியிருப்பாராகில் தம்பியருக்கு உம்முடைய வாழ்வையெல்லாம் கொடுக்க மாட்டீரோ? என்று வாலியின் நல்ல குணங்களை எல்லாம் எடுத்துச் சொல்லிப்

புலம்புகின்றாள்.'புறத்தோற்றத்திலும் சரி, அகத்தோற்றத்திலும் சரி கம்பன் தாரையை ஒரு மானிடப் பெண்ணாகவே காட்டுகின்றார்?" (ந.சுப்புரெட்டியார், கம்பர் படைத்த சிறுபாத்திரங்கள்.ப.157.) எனவே 'அவளுடைய வானரப் பெண்வடிவம் நம் சிந்தையில் தோன்றுவதில்லை. கணவன் இறப்பதற்கு முன் அவளை ஒரு சுமங்கலியாகக் காணும் போதும், கணவன் இறந்த பிறகு கைம்பெண் கோலத்தில் அவளைப் பார்க்கும் போதும் அவள் ஒரு மானிடப் பெண் என்ற எண்ணமே நமது மனத்தில் தோன்றுகிறது" (மேலது.ப.158.)என்கிறார்.

எனவே அவள் புலம்புவதைப் பார்த்த யாருக்கும் அவள் மேல் இரக்கம் ஏற்படும் அனுமன் தான் தாரைக்கு ஆறுதல் மொழிகளைக் கூறி அவளைக் குரங்கு மாதருடன் அனுப்பி வைக்கின்றான். தாரையின் மனத்துயர் அவள், வாலி மேல் விழுந்து , புலம்பும் ஒவ்வொரு வார்த்தையிலிருந்தும் வெளிப்படுகிறது.

தாரையின் மேம்பாட்டுள்ளம் (Super Ego)

கார்காலம் கடந்த பின்னம் சொன்னபடி வானரப் படையுடன் சுக்ரீவன் வரவில்லை. அதனால் கோபமடைந்த இராமபிரான், இலக்குவனை சுக்ரீவனிடம் அனுப்பி வைக்கிறான். இலக்குவன் சினத்துடன் வருகிற செய்தியை அங்கதனும், அனுமனும் தாரையிடம் தெரிவிக்கின்றனர். அதற்குத் தாரை நீங்கள் தீச்செயல்களை எளிதிற் செய்வீர்கள். பிறகு அச்செயலால் உண்டாகும் கெடுதியைப் போக்கிக் கொள்வதற்கு வழி பார்ப்பீர்கள். செய்நன்றி கொன்றவர்களாகிய நீங்கள் எப்படித் தப்பிப் பிழைக்கப்போகிறீர்கள்? அந்த இராமபிரான் குரங்குப் படைகளைச் சேர்த்துக்கொண்டு வாருங்கள் என்று குறிப்பிட்ட நாளில் நீங்கள் அங்குச்செல்லவில்லை. செல்லுமாறு நான் கூறியதையும் நீங்கள் கேட்கவில்லை. குற்றத்திற் சிக்கிக் கொண்ட நீங்கள் இனிமேல் அதன் பயனை அடையுங்கள். வாலியின் அருமையான உயிரைக் கொன்று, அரசாட்சிச் செல்வத்தை உங்கட்குக் கொடுத்த அந்த இராமபிரானை நீங்கள் இழிவுபடுத்தலாமா? என்கிறாள்.இதிலிருந்து தாரை, அவர்களுக்கு அரசியல் விஷயங்களில், நல்லதொரு ஆலோசகராகவும், உண்மையை எடுத்துரைப்பவளாகவும் இருந்திருக்கின்றாள் என்பதை உணரலாம்.

அந்த இராமபிரான் தன் மனைவியைப் பிரிந்து துன்பக் கடலில் அழுந்தியிருக்கும் போது, நீங்களோ மனைவிமாரோடு இன்பக் கடலில் அழுந்தினீர்கள். உண்மை தவறினீர்கள். செய்ந்நன்றி கொன்றீர்கள்.

நீங்கள் செய்த தீவினை உங்களுக்குப் பயனிக்க வந்தபடியால் இவ்வாறு கெட்டுப் போனீர்கள் நீங்கள் அந்தப் பேராண்மையாளனை எதிர்த்துப் போர்புரியத் தொடங்கினால் இறந்து போவீர்கள்.

திரும்பி னீர்மெய் சிதைத்தீ ருதவியை
நிறம்பொ லீஇருங்க பீவினை நேர்ந்ததால்
மறங்செய் வானுநின் மாளுநிர் மற்றினி
புறஞ்செய் தாவதெ னென்கின்ற போதின் வாய் (32)

என்று தாரை கூறுகின்றாள். அடுத்தவர்கள் செய்யும் தீய செயலைச் சுட்டிக் காட்டுவதற்கு ஒரு மனவலிமை வேண்டும். தாரையிடம் அம்மனத்திடம் மிகுந்திருப்பதைக் காணலாம். அதனால் அவள், சுக்ரீவன், அனுமன் முதலானோர் செய்த தவறுகளை எல்லாம் சுட்டிக் காட்டுகின்றாள்.

சுட்டிக்காட்டுவதோடு மட்டுமல்லாமல், சொல்வதைக் கேட்காமல் மேலும், மேலும் தவறு செய்து கொண்டே போனால் இறந்து போவீர்கள் என்று எச்சரிக்கையும் செய்கின்றாள். இவையெல்லாம் ஒரு பண்பட்ட உள்ளமுடையவர்களால் தான் செய்ய முடியும்.

குரங்குகள் வாயிற்கதவை அடைத்தும், இலக்குமணர் கதவை உடைத்துக் கொண்டு உள்ளே வருகின்றார். இதை அனுமன் சொன்னவுடன், தாரை வானர மங்கையர் பலருடன் இலக்குமணருக்கு முன்னே வருகின்றாள். தாரை இலக்குமணரைப் பார்த்து, நீங்கள் எங்களுடைய இருப்பிடத்திற்கு எழுந்தருளினமையின் நாங்கள் மிகுந்த நல்வினையாளர்களானோம். எங்களுடைய தீவினைகளெல்லாம் ஒழிந்தன.என்று தாரை இலக்குவனிடம் சொல்கின்றாள். தாரையைப் பார்த்த இலக்குவனுக்குத் தாய்மாரின் எண்ணம் உண்டாகின்றது. அவர்களும் இவ்வாறு தானே கைம்மைக்கோலத்துடன் கலங்கியிருப்பர் என்று எண்ணுகின்றான். ஒருவருடைய தோற்றமே, பெரும்பாலும் அவரது மனநிலையைக் காட்டிவிடும். சூர்பணகையின் தோற்றத்தைக் கொண்டே, அவள் எவ்வளவு கொடியவள் என்பதைத் தெரிந்து கொள்ளலாம். அதுபோலத், தாரையின் தோற்றத்தை வைத்தே, அவள் எவ்வளவு உயர்ந்த குணம் உடையவள் என்பதை அறியலாம். மேலும் அவள் விதவைக் கோலத்துடன் இருக்கின்றாள். அதுவே காண்பவரது மனத்தில் இரக்கத்தைத் தோற்றுவிக்கும். இலக்குமணரின் தாய்மார்களும், தசரதனை இழந்து கைம்மைக் கோலத்துடன் இருக்கின்றார்கள்.

தாரையும் வாலியை இழந்து அதே நிலையில் இருக்கின்றாள். எனவே தான் இலக்குவனுக்குத் தாரையைப் பார்த்ததும் இரக்கம் ஏற்படுகிறது. அதனால் அவளிடம் கோபமில்லாமல் பேசுகின்றான்.

இலக்குமணர் தாரையைப்பார்த்து, சுக்ரீவன் சீதாபிராட்டியைத் தேடுவதற்கு, மழைநாள் கழிந்தவுடன் படையோடு வருவதாக உறுதி யளித்திருந்தான். மழைக்காலமோ முடிந்துவிட்டது. இப்பொழுது சுக்ரீவன் யாது செய்து கொண்டிருக்கின்றான் என்று கேட்கின்றான்.

தாரை இலக்குமனிடம் மிகவும் பணிவாகப்பேசுகின்றாள். சிறியோர் செய்த பிழைகளைப் பொறுத்துக்கொள்ள வேண்டியது பெரியவர் களுடைய கடமையன்றோ சுக்ரீவன் தங்கட்குச் செய்ய வேண்டிய கடமைகளை மறக்கவில்லை. உலகெங்கும் உள்ள எங்களுடைய வானரப்படையைக் கொண்டு வருமாறு தூதர்களை அனுப்பி-யிருக்கின்றான்.

சீறுவா யல்லை யைய சிறியவர் தீமை செய்தால்
ஆறுவாய் நீய லான்மற் றாருள ரயர்ந்தா னல்லன்
வேறுவே றுலகமெங்குந் தூதரை விடுத்த வெல்லை
ஊறுமா நோக்கித் தாழ்;த்தா னுதவிமா றுதவி யுண்டோ (54)

எனச் சொல்கின்றாள். அடைக்கலம் அடைந்தோர்க்கு இனிமையயைச் செய்கின்ற தாங்கள் சினந்தணிந்தருள வேண்டும். இவர்கள் தாம் செய்ய வேண்டிய கடமையினின்றும் தவறுவார்களாயின் வாலியை அழித்தொழித்த தங்கட்கு இவர்களை அழித்தொழிப்பது அருமையான செயலன்றே என்று பலவாறு கூறி இலக்குமணருடைய சினத்தை மாற்றினாள்.

வாலியின் மரணம் தாரையை எவ்வளவு ஆழமாகப் பாதித்திருக்கின்றது என்பதைக் காலங்கள் பல கடந்தும், அவள் இலக்குவனிடம் கூறும் சொற்கள் வழி உணரலாம். இலக்குமணரின் சினத்தை மாற்றியது. தாரையின் தூய்மையான சிந்தனையும், பிறர் உள்ளத்தை அறிந்து பேசும் நுண்ணறிவுமே ஆகும்.

தாரை நினைத்திருந்தால் 'தன் மகன் அங்கதன் ஆட்சி பெறும் வகையில் இலக்குவனின் சினத்தைத் தனக்குரிய நல்வாய்ப்பாக மாறி-யிருக்கக்கூடும். தன் தலைவனைக் கொன்ற கூற்றான சுக்ரீவனை எளிதாக ஒழித்திருக்க முடியும். ஆனால் இவற்றைப் பற்றிச் சற்றும் அவள்

சிந்தியாது அவளின் பெருந்தன்மையைப் பறைசாற்றுகிறது" (ச.சிவகாமி, பெண்ணியப்பார்வையில் கம்பன்தாரை. கம்பர் ஆய்வுக்கோவை.ப.133.) என்பர். சமுதாய நீதி நெறிகளுக்கும், உண்மைக்கும், அறநெறிக்கும் மதிப்புக் கொடுக்கும் மேம்பட்ட உள்ளம் படைத்தவர்களாலேயே தான், தன் கணவனைக் கொன்றவன் என்பதையும் பார்க்காமல் காக்கின்ற மனம் இருக்கும். எனவே தான் தாரை மேம்பட்ட உள்ளமுடையவர்களாகத் திகழ்கிறாள்.

தாரையின் இரு வடிவங்கள்

கம்பர் படைத்திருக்கும் தாரைக்கும், வான்மீகி படைத்திருக்கும் தாரைக்கும் நிறைய வேறுபாடுகள் உள்ளன. இலக்குமணன், கார்காலம் முடிந்து, சுக்ரீவனைத் தேடி வரும் பொழுது, தாரையும் சுக்ரீவனுடன் சேர்ந்து கள்ளுண்டு களித்திருப்பதாகவே வான்மீகி காட்டுகின்றார். சுக்ரீவனுடன் இரவெல்லாம் மதுபானத்திலும், மன்மதக் கிரிடையிலும் கழித்த தாரை, அந்த அடையாளங்களுடன் இலக்குவன் முன்பு வருகின்றாள். தளர்ந்த நடை, துவண்ட இடை, நெகிழ்ந்த உடை என இலக்குவன் முன்பு வருகின்றாள். அவள் அணிந்திருந்த பட்டுச்சீலை அவிழ்ந்து நெகிழ்ந்து கிடந்தது. அப்படி ஆடை நெகிழ்ந்ததால், அதை இழுத்துக் கட்டும் அரைநூல் மாலையும், சின்னச் சின்ன அழகிய சலங்கைகள் உள்ள பொற்சரடும் கலைந்து தொங்கின. மெல்லிய கொடி போன்ற அவள் நுண்ணிய மேனி வளைந்து கிடந்தது. இலக்குவன் செய்த நாணொலியைக் கேட்டு பயந்த சுக்ரீவனே தாரையை முன்னால் போகச் சொல்கிறான். இத்தனை காமவிகார நிலையில் சுக்ரீவன் ஆக்ஞைப்படி தாரை, இலக்குவன் முன்பு வந்தாள் என்று வான்மீகி காட்டுகின்றார். இலக்குவன் வருகையின்போது, சுக்ரீவனுடன் தாரையும் மதுவுண்டு மயங்கியிருப்பதாகவே வான்மீகி சொல்கிறார். ஆனால் கம்பரோ தாரைக்கு இது பெருமையளிப்பதாக இல்லை என்பதாலேயே மாற்றியமைத்துக் காட்டுகிறார். 'கம்பன் படைக்கும் தாரையோ விதவைக் கோலத்திலிருக்கிறாள்.

மங்கல அணியை நீக்கி மணியணி துறந்த வாசக்
கொங்கலர் கோதை மாற்றிக் குங்குமஞ் சாந்தங் கொட்டா
பொங்குவெம் முலைகள் பூதக் கழுத்தொடு மறையப் போர்த்த
நங்கையைக் கண்ட வள்ளல் நயனங்கள் பனிப்ப நின்றான் (51)

என்று தாரை, விதவையாகிவிட்டதால் மங்கல அணியை

நீக்கியிருந்தாள். மற்ற அணிகளான இரத்தினாபரணம் முதலியவற்றையும் துறந்திருந்தாள். அவள் உடலில் சௌபாக்கியத்துக்கான ஆபரணங்கள் இல்லை. குங்குமப் பூவின் குழம்பையும், சந்தனக் குழம்பையும் பூசாத வெம்மை முலைகளை, கழுத்தை நன்றாகச் சுற்றி வளைத்த சேலையால் நன்றாகப் போர்த்தி மறைத்திருந்தாள். இப்படி வந்த தாரையைக் கண்டதும், இலக்குணன் கண்களில் நீர் பனிக்க நிற்கின்றாள்.

இளையராம் என்னை ஈன்ற இருவரும் என்ன வந்த
நினைவினான் அயர்ப்புச் சென்ற நெஞ்சினன் நெடிது நின்றாள்
வினாவினாட்கு எதிர் ஓர்மாற்றம் விளம்பவும் வேண்டும் என்றப்
புனைகுழாட்கு வந்த காரியம் புகல்வது ஆனான் (52)

என்று தாரையைப் பார்த்த இலக்குணருக்கு, தன்னைப் பெற்ற தாய்மார்களும் இப்படித்தான் இருப்பார்கள் என்ற நினைவுவருகிறது. அதனால் அவனுக்குத் தாரையின் மேல் மிகுந்த இரக்கம் தோன்றுகிறது.

கம்பர் படைத்திருக்கும் தாரைக்கும், வால்மீகி படைத்திருக்கும் தாரைக்கும் அடிப்படையிலேயே வேறுபாடுகள் காணப்படுகின்றன. கம்பர் தாரையைப் பிறருக்குப் பயன்படும்படியான வாழ்வு வாழ்பவளாகக் காட்டுகின்றார்.

தாரையின் மனத்திட்பம்

வாலியின் மறைவிற்குப்பின்னால் தாரை சுக்ரீவனுடைய மனைவி யாக வாழ்வது வான்மீகியின் வடிவம். ஆனால் அதனைக் கம்பன் ஏற்கவில்லை. வான்மீகி, தாரையைக் குரங்கினமாகவே கொண்டு, அந்த விலங்குகளின் தன்மைக்கேற்ப அவளைப் படைத்துள்ளார். ஆனால் கம்பரின் வருணனையில் பார்த்தால் நாம் அவளை மானிடப் பெண்ணாகவே காணமுடியும். மேலும் 'தாரையின் பேச்சிலிருந்து ஒரு சிறந்த இல்லக் கிழத்தியின் அருங்குணங்களையும், அரசனுக்கு யோசனை கூறும் அனுபவம் நிறைந்த ஓர் அமைச்சனின் அறிவுத் திறனையும் காணமுடிகிறது." (ந.சுப்புரெட்டியார், கம்பர் படைத்த சிறுபாத்திரங்கள்.ப.157.). வாலி உயிரோடு இருந்தபொழுதும் சரி, அவன் இறந்த பிறகும் சரி, தாரை எல்லோருக்கும் பயன்படும் படியான ஓர் உயர்ந்த வாழ்க்கையையே வாழ்ந்திருக்கின்றாள் என்று அறியமுடிகிறது. 'ஆண் துணையின்றியும் செம்மையான, சிறந்த பிறருக்குப் பயன்படும்படியான பெருவாழ்வைப் பெண் வாழ்;;ந்து காட்ட

முடியும் என்பதை உறுதிப்படுத்தியுள்ளாள்" (ச.சிவகாமி, பெண்ணியப் பார்வையில் கம்பன் தாரை. கம்பர் ஆய்வுக்கோவை.ப.133.)இது தாரையினுடைய உளத்திண்மையைக் காட்டுகிறது.

முடிவுகள்

தன் கணவனைக் கொன்றவனாகிய சுக்ரீவனுக்கு இன்னல் நேரும் பொழுது தாரை அதைத் தீர்த்து வைக்கின்றாள். அவள் நினைத்திருந்தால் வாலியைக் கொன்றவனாகிய சுக்ரீவனைத் தன்னுடைய மதியால் அழிந்திருக்க முடியும். ஆனால் அவள் அவ்வாறு செய்யவில்லை. தனக்குத் துன்பம் விளைவித்தவனுக்கும் நல்லது நினைக்கும் எண்ணம். என்பது பண்பட்ட உள்ளமுடையவர்களால் தான் முடியும். அந்த மேம்பட்ட உள்ளம் தாரையிடம் காணப்படுகிறது. தனக்குத் துன்பம் நேருகின்ற வேளையில் கூட அவள் தருமத்தையும் அறத்தையும் விட்டுவிடவில்லை. சாதாரண மனம் படைத்தவர்களால் இவ்வாறு இருக்க முடியாது. வானர குலத்தில் பிறந்த தாரைக்கு இப்படிப்பட்ட உயர்ந்த குணங்கள் இருப்பதனாலேயே பஞ்ச கன்னியர்களில் ஒருத்தியாக இருந்து புகழ் பெறுகின்றாள். காப்பியச் சூழலுக்கேற்பக் கம்பர் தாரையை ஒரு திருப்புமையமாகப் பயன்படுத்தியுள்ளார். ஏனெனில் இக்கட்டான சூழ்நிலைகளில் எல்லாம் தாரை தான் வானர அரசைக் காப்பவளாகத் திகழ்கின்றாள்.

பெண்ணியத்திற்கு முதலிடம்

ப.முத்துக்குமாரசுவாமி
சென்னை.

கதிஉறு வெரியின் வெய்ய காமநோய் கலவி நோக்கா
மதியிலி மறையச் செய்த தீமைபோல் வளர்ந்தது அன்றே - கம்பன்.

சங்ககாலத்திற்குப் பிறகு சிலப்பதிகாரம், கம்பராமாயணம் போன்ற காப்பியக் காலத்து பெண்களது நிலைப்பாடு உண்மையிலேயே சீரழிவை நோக்கி நகரத் தொடங்கியதாய்த் தெரிகிறது. இத்தகைய சீரழிவை - ஒழுக்கக்கேட்டைக் கண்டு மனம் பொறுக்காத இளங்கோவும், கம்பனும் ஒருவனுக்கு ஒருத்தி என்னும் தத்துவத்தை ஆழமாய்த் தங்களது காப்பியத்தில் பதிய வைத்தனர்.

பெண் 'தாய்' என்னும் நிலையில் பெரிதும் மதிப்பிற்குரியவளாய்ப் போற்றப்பட்டுள்ளாள், கம்பன் காப்பியத்தில்.

தாயினும் உயிர்க்கு நல்கும்
தாய்சொல் கேட்டலும் ... ஈசற்கே கடன் - மீட்சிப்படலம்: 79-1

தாய் ஒக்கும் அன்பின் - அரசியற்படலம்: 4-1

எனப் பல இடங்களில் கம்பன் மகளிர்களது மாண்பினைப் பலவாறு புகழ்ந்து, பூச்சூடி மகிழ்ந்து உள்ளான். ஆனாலும், இக்காப்பியக்காலத்தில் பெண்நலம் இவ்வாறு பேணப்பட்டதா, நடைமுறைப் படுத்தப்பட்டதா என நமக்கு ஓர்ஐயப்பாடு வரத்தான் செய்கிறது. காப்பியத்தை இயற்றிய கம்பன் அன்றைய நாளின் சமுதாய ஒழுக்கக் கேட்டைக் கண்டு நெஞ்சு பொறுக்காது, தான் ஒரு புதிய சமுதாயத்தைத் தனது காப்பியத்தின் வழியாக உருவாக்கிட விழைந்ததாகத் தான் தெரிகிறது.

தன் வாழ்க்கைக்குத் துணையாய் வந்தபொழுதிலும், ஆண்மை அதற்குரிய சிறப்பினை - உரிமையினை - நம்பகத்தன்மையை வழங்கியதா என்பது வினாக்குறியாகத்தான் இருக்கிறது. இறப்பிலும் தன்னுயிருடன் ஒன்ற வேண்டும் என விழைந்த போதும், தன்னொத்த நிலையினை அவளுக்குச் சரிநிகர் சமமாய் வழங்கிட அப்போதைய ஆண்மை தயக்கம் காட்டியுள்ளது.

பெற்றோர், உடன்பிறந்தோர், நண்பர், சுற்றத்தார் என இவர்கள் அனைவருக்கும் பின்தான் அவனுக்குரியவளாகிறாள் "பெண்" என்பது சத்தியமான உண்மை.

தாதையை இழந்தபின் சடாயு, இற்ற பின்
காதலின் துணைவரும் மடிய, காத்து உழல்
கோது அறு தம்பியும் விளிய, கோள் இலன்,
சீதையை உவந்துளான்" என்பர் சீரியோர்" - மருந்துமலைப்படலம்: 79

எனக் கம்பன் மொழிவது சான்றாய்த் திகழ்கிறது. பெண் மட்டும் திருமணத்திற்குப்பின், "கொண்டானை அல்லால் வேறு இலாள்" ஆக இருத்தல் வேண்டும் என்னும் ஆணாதிக்கத்தின் அடக்குமுறை, அவளைத் தன் உடைமைகளுள் ஒன்றாகவே கருதிச் செயல்பட்டு வந்துள்ளது என்பது புலனாகிறது. பெண்ணொருத்தி தன் வாழ்க்கைத்துணையைத் தேர்ந்தெடுத்துக்கொள்ளும் உரிமைகூட இல்லாதிருந்ததனைக் கம்பன் பல இடங்களிலே சில நிகழ்வுகள் வாயிலாய்ச் சுட்டிக்காட்டுகின்றான்.

சீதாப்பிராட்டி, "வில்லையொடித்தவன் தன் மனங்கவர்ந்தவன் இன்றாகில் உயிர்விடுவேன்" எனக் கூறுவது பெண்ணின் உரிமையைக் கோடிட்டுக் காட்டுவதும்,

சொல்லிய குறியின், அத்தோன்றலே
அல்லனேல், இறப்பென் - கைக்கிளைப்படலம்: 63-3-4

வாயு, குசநாபன் மகளிரிடம் தன்னைத் திருமணம் செய்துகொள்ள வேண்டுகின்றபோது,

எந்தை அடித்தலத்து உரைத்து நீரோடு அளித்திடின் அணைதும்

என்று கூறிய அப்பெண்களின் முதுகை ஒடித்து அவன் கண்டிப்பதும், சூர்ப்பனகை தன் உண்மை உள்ளத்தைத் தன் தமையனிடமே மறைப்பதும், தான் விரும்பிய மயனுடன் மறைவு வாழ்க்கை மேற்கொண்ட ஏமையையும், அவளுக்குத் துணை நின்ற சுயம்பிரபையையும் இந்திரன் தண்டிப்பதும், ஆகியவை போன்ற பல நிகழ்வுகளிலிருந்து பெண்ணடிமைத்தனத்திற்கு வித்து விதைக்கப்பட்டுவிட்டது என்பது புரிகிறது. ஆனாலும், கம்பன் தனது காப்பியத்தில் அன்றைய நாளின் ஒழுக்கக்கேட்டினைச் சாடியே வந்துள்ளான் என்பதை அவனது நீதிநெறி விளக்கங்கள் தெளிவுறுத்துகின்றன. கம்பன்

காலத்தில் பெண்ணின் தனித்தன்மைக்குப் பங்கம் ஏற்பட்டு அவள் அடிமைப்படுத்தப்பட்டிருந்தது என்பது கசப்பான உண்மைதான். தந்தை - கணவன் - மகன் ஆகிய மூவரோடும் இணைந்து நின்றது. பெண்மை. புறஞ்சொலா நேர்மையுடைய பெருந்தகைப் பெண்களாய் வாழ்ந்திட வேண்டுமென்ற விழைவைத்தான் கம்பன்.

ஆகலம்புரி ஐம்பொறி வாளியும்
காச லம்பு முலையவர் கண்எனும்
பூச லம்பு நெறியின் புறஞ் செலாக்
கோசலம் புனை ஆற்று அணிகூறுவாய் - ஆற்றுப்படலம்: 1

எனக் கோசல நாட்டு மகளிரைப்பற்றிக் குறிப்பிடும்போது. பெருமைபடக் கூறுகிறான். குலத்தின் ஆழ்ந்தகன்ற பேரன்பிலே அறங்கள் நிலை பெற்றிருந்தன. பெண்கள், கல்வியும் செல்வமும் ஒருங்கே பெற்று விளங்கினர். பெண்களைப் பெருமை செய்யும் நாடு உறுதியாய் உயரும் என்பது கம்பனின் விழைவு.

பெருந் தடங்கண் பிறை நுதலார்க்கு எலாம்
பொருந்து செல்வமும் கல்வியும் பூத்தலால்
வருந்தி வந்தவர்க்கு ஈதலும், வைகலும்
விருந்தும் அன்றி, வினைவன யாவையே? -நாட்டுப்படலம்: 36

பொற்பின் நின்றன, பொலிவு; பொய்இலா
நிற்பின், நின்றன, நீதி; மாதரார்
அற்பின் நின்றன, அறங்கள்; அன்னவர்
கற்பின் நின்றன, காலமாரியே - நாட்டுப்படலம்: 59

வனம் போகும் ராமனுக்கு வழித்துணையாக வருவனவற்றுள் சீதையின் கற்பே முதலில் நின்றது.

தையல்தன் கற்பும், தன் தகவும், தம்பியும்
மைஅறு கருணையும், உணர்வும், வாய்மையும்
செய்ய தன் வில்லுமே, சேமமாகக் கொண்டு
ஐயனும் போயினான், அல்லின் நாப்பணே -தைலம் ஆட்டுப்படலம்: 47

என்று பாடுவான், கம்பன். எந்த வேறுபாட்டாலும் மாறுபடாத உள்ளத்தை உடையவளாய்ப் பெண் இருத்தல் வேண்டும் என்பது கம்பனின் பேரவா.

இராமனுக்கு முடிசூட்டு விழா நடைபெறும் என அறிவிக்கப்படுகிறது. அதிகாலையில் முடிசூட்டு விழா நடைபெறவிருக்கிறது. கோசலை, முடிசூடி வரவிருக்கும் தனது திருமகனைக் காண வழிமேல் விழி வைத்துக் காத்திருக்கிறாள். காகுத்தன் வருகின்றான்.

நின்காதல் திருமகன்
பங்கம்இல் குணத்து எம்பி பரதனே
துங்க மாமுடி சூடுகின்றான் என்றான் - நகர்நீங்கு படலம்: 3

என்று இராமன் கூறிய அடுத்த நொடியிலேயே தாய் கோசலை,

முறைமை அன்றுஎன்பது ஒன்று உண்டு; மும்மையின்
நிறை குணத்தவன்; நின்னினும் நல்லனால் குறைவு இலன்
- நகர்நீங்கு படலம்: 4

என்றே கூறுகிறாள். அத்தாய் - விராவரும் புவிக்கெல்லாம் வேதமே அனைய இராமபிரான், பொழுது விடிந்ததும், முடிசூடப்படவிருக்கும் நிலையில் அது சூழ்ச்சியால் மாற்றப்பட்டு, மாற்றாள் மகனுக்கு அது கிடைக்கப்போகிறது என்றறிந்தும், அவள் மகிழ்ந்து மனம் திறந்து பாராட்டி "நின்னினும் நல்லவன்" என்று பேசிய நயத்தக்க நாகரிகம் ஒவ்வொரு பெண்ணுக்கும் அணியாய் இருந்திட வேண்டுமென்பது கம்பனது ஆசை.

கம்பராமாயணத்திலே 'கோசலை' என்னும் பாத்திரப்படைப்பு வாயிலாகத்தான் கம்பன் தான் விரும்பிய பெண்ணியத்தை நிறுத்தி நியாயப்படுத்துகின்றான் என்பதைப் பார்க்க முடிகிறது. எனவேதான், பேராசிரியர் தெ.பொ.மீனாட்சிசுந்தரனார்கூட "பெண்மையே கம்பன் கண்ட கடவுள்" என்பார்.

கம்பன் தனது வாழ்நாளில் கண்ட பெண் அடிமைத்தனத்தைக் கண்டு வெகுண்டெழுந்தவன். கம்பன் காலத்தில் ஆண் - பெண் சமத்துவ நிலைமை இல்லை. அவர்களுக்கு அரசியலில் இடம் இல்லை. அவள், தன் கணவனுடன் சார்ந்து நின்று செய்யும் அறமே ஏற்றுக் கொள்ளப்பட்டது. இத்தகைய சூழல் கம்பனுக்கு வேதனையைக் கொடுத்திருக்கிறது. ஒரு புதிய சமுதாயத்தின் பெண் பிரதிநிதியாய்ச் சுமித்திரையைப் படைக்கின்றான்.

வால்மீகியின் வாக்குப்படி தயரதனுக்குச் சுமித்திரை இரண்டாம் மனைவி. ஆனால், இளையவளான கைகேயியின் பாலுள்ள மோகத்தால்

அன்று - தான் சொன்ன வாக்கைக் காப்பாற்றவே தயரதன் இராமனைக் காட்டிற்கு அனுப்பினானென்ற புகழ் கிடைக்கக் கம்பன் சுமித்திரையை இளையவளாய்ப் படைக்கின்றான். "சு" என்பதற்கு வடமொழியில் தூய்மையான, பரிசுத்தமான என்பது பொருள். "மித்திரை" என்பதற்கு வேற்றுமை இல்லாத, நட்பு உள்ளம் என்று பொருள்.

காப்பியத்தில் கம்பன் தனது விருப்பப்படி சுமித்திரையைத் தமிழ்ப்பண்பு மாறாதவளாய்ப் படைத்துக் காட்டி உள்ளான். காப்பியத்தில் சுமித்திரை ஒரு நல்ல தோழியாகவே செயல்பட்டிருக்கின்றாள். தோழமை என்பது சோர்விற்குச் சுகமளிப்பது - ஆற்றாமைக்கு ஆறுதல் தருவது - காயத்திற்கு மருந்திடுவது. சுமித்திரையின் நட்புணர்வு உயர்வானது. நட்பிற்கு நல்லதோர் உதாரணமாய், "தாயாண்மை" என்ற புதிய சொல்லிற்குப் பொருள் தந்தவளாய் - பெண் தெய்வமாய் - மனையின் விளக்காய்ச் சுமித்திரையைக் கம்பன் சித்திரித்துக் காட்டுவதில், தமிழ் மண்ணின் மணம் தெரிகிறது. இலக்குவன், சத்துருக்கனன் என்னும் இரு பிள்ளைகளுக்குத் தாய், சுமித்திரை.

மன்னன் என்னும் பதவியைத் துறந்துவிட்டு அப்போதுதான் இராமன் இலக்குவனோடு, சுமித்திரை கோவிலுக்குள் வருகின்றான். தவக்கோலத்தில் இருவரும் வந்து நிற்கின்றனர். அவர்களைக் கண்டு கலங்கி அழுகின்ற சுமித்திரையை இராமன் தேற்றுகின்றான். கண்ணீரால் கழுவப்பட்ட கண்களுக்குத்தான் புனித தரிசனங்கள் கிடைக்கும் என்பார்கள்.

ஆகாதது அன்றால் உனக்கு, அவ்வனம் இவ்வயோத்தி,
மாகாதல் இராமன் அம்மன்னவன், வையம் ஈந்தும்
போகா உயிர்த்தாயர் நம்பூங் குழற்சீதை - என்றே
ஏகாய்; இனி, இவ்வயின் நிற்றலும் ஏதம் என்றாள்

- நகர்நீங்கு படலம்-146

மன்னர் பதவியை அப்போதுதான் துறந்துவிட்டு வந்து நிற்கும் அவனை 'மன்னவன்' என்று குறிக்கும் சுமித்திரையின் மனத்திட்பம் புலனாகிறது. தயரதன், கைகேயி, ஏன் இந்த உலகமே இராமனது கிரீடத்தைப் பறித்தாலும், இராமன் நாடுவிட்டுக் காடு சென்றாலும் அவனே அவளுக்கு மன்னன்.

பின்னும் பகர்வாள்: மகனே! இவன்பின் செல்; தம்பி
என்னும் படியன்று, அடியாரின் ஏவல் செய்தி

- நகர்நீங்கு படலம்: 147-1,2

எத்தகைய உயர்ந்த உள்ளம்! 'தம்பி' என்றால் இலக்குவனனைக் காக்கும் பொறுப்புச்சுமை இராமனுக்கு வந்துவிடும். அந்தச் சுமைகூட கூடாது என்று கருதி, "அடியாரைப் போல் ஏவல் செய்திடுக" எனக்கூறி சுமித்திரை வழியனுப்புகிறாள், தன் மகன் இலக்குவனை.

மன்னும் நகர்க்கே இவன் வந்திடின் வா அது அன்றேல்
முன்னம் முடி, என்றனள், வார்விழி சோர நின்றாள்

- நகர்நீங்கு படலம்: 147-3.4

இவ்வாறு சொன்னதால் அன்றோ, "தாயாண்மை" என்னும் புதிய சொல் தமிழகராதியில் இடம் பிடித்துவிட்டது. தன் மகனைப் பார்த்து "முன்னம் முடி' என்கிறாள் சுமித்திரை.' இராமன் வாராவிடில் நீ திரும்பாதே எனச் சொல்லுகின்ற பெருமிதம் சுமித்திரைக்கே சொந்தமாயிருந்திருக்கிறது என்பதைப் பார்க்க முடிகிறது. பொறுமை, தியாகத்திற்கு அடிப்படை. பகிர்தல், வாழ்வின் உயிர்நாடி. அந்தத் தியாகத்திற்கு அவள் தந்த விலை மகனல்லவா..!

இராமனுக்கு ஊனுடம்பு தந்தவள், கோசலை; புகழுடம்பு தந்தவள், கைகேயி. இராமனுக்குத் தம் மகனையே தந்த தியாகப் பெருமாட்டி சுமித்திரை. இதைத்தான்,

"WOMEN IS THE EMBODIMENT OF SACRIFICE" என்பார், அண்ணல் காந்தியடிகள். இராமாயணம் பெண்களால் தொடங்கப்பெற்று, பெண்களால் முடிக்கப்படும் காவியம். கோசலை - சுமித்திரை - கைகேயி - தாரை - மண்டோதரி - அகலிகை - சபரி - தாடகை - திரிசடை - இலங்கிணி - சூர்ப்பனகை - காப்பியநாயகி சீதை ஆகிய பன்னிரு பெண் பாத்திரங்கள் இராமகாதையை ஆட்சி செய்கின்றன. நுண்ணிய நூல் பல கற்பினும் பெண்ணறிவு என்பது பாழ்பட்டுப்போய்விடக்கூடாது என்பதில் கம்பன் ஆழமான நம்பிக்கை வைத்திருந்ததன் விளைவுதான் இத்தகைய பெண் கதாபாத்திரப் படைப்புகள்.

கம்பன், காமத்தின் இழிவையும், அதனால் ஏற்படும் அழிவையும் வலியுறுத்த விரும்பியதால் இராவணனிடம் மட்டுமின்றி இராமனைக் கண்டு காமுறும் சூர்ப்பனகை, இலக்குவனைக் கண்டு காமுறும் அயோமுகி ஆகிய பாத்திரங்கள் வாயிலாகவும் எடுத்துக்காட்டி எச்சரிக்கின்றான்.

இக்காமம் அவர்களுக்கு ஏற்பட்ட உறுப்புச்சிதைவு பண்புச்சிதைவின் வெளிப்பாடே. இந்திரனின் காமம் ஒரு பெண்ணை மட்டுமன்றி, ஒரு

குடும்பவாழ்வையே சிதைத்தது என்னும் சோக நிகழ்வைக் காட்டி நம்மைச் சிந்திக்க வைத்தவன், கம்பன்.

காமம் கொள்ளும் ஒருவருக்கு அது இழிவு தருவதுடன், பிறருக்குத் தவறிழைக்கவும் தூண்டுகின்றது. குலப்பெருமைக் குறைவும், பொருளிழப்பால் வறுமை ஏற்பட்டு, இறப்புக்கு இட்டுச் செல்கின்ற சூழல் உருவாகிவிடுவதையும் பார்க்க முடிகிறது.

இராவணனின் காமம், அவனைச் சார்ந்த அரக்கர் குலம் முழுவதற்கும் துன்பம் தருகின்றது, உயிரிழக்கச் செய்கின்றது. காமநோய் கொடுமையானது, கொடூரமானது. செயல் இழக்க வல்ல உயிர்க்கொல்லி நோய், அது. ஆம்! இந்திரசித்து வதையுண்ட போது, எல்லாம் சீதையால் வந்தது என அவளை வெட்ட வாளெடுக்கின்றான் இராவணன். இது எதைக் காட்டுகிறது? தன் பிழை, தன் காமம் என உணர்ந்திலன், இராவணன். இராவண வதைக்குப் பின் மண்டோதரி அரற்றும்போது,

கள்இருக்கும் மலர்க்கூந்தல் சானகியை
மனச்சிறையில் கரந்த காதல் - மண்டோதரி புலம்புறு படலம்: 23-3

எனவும்,

ஏந்து புயத்து இராவணனார் காதலும்- மண்டோதரி புலம்புறு படலம் 25-3

எனக் கூறுவதிலிருந்து அழிவுதந்த காமத்தின் வெப்பச் சூடு தெரிகிறது.

கம்பராமாயண காலத்தில் பலதார மணம் - மாற்றான் மனைவியை அபகரித்தல்- கற்புநிலை பேணாமை போன்ற ஒழுக்கக்கேடுகள் மலிந்திருந்தன. . பெண்களைப் போகப்பொருளாய் - படுக்கையறைச் சுகங்களைக் கொடுக்கவல்ல பதுமைகளாய் ஆட்டிப்படைத்த ஆணாதிக்கத்தைக் கம்பன் தனது காப்பியத்தில் பல்வேறு கதாபாத் திரங்கள் வாயிலாய்ச் சாடியிருக்கின்றான்.

ஒருவனுக்கு ஒருத்தி, கற்பு களவாட முடியாத ஒன்று, கற்புடைப் பெண்டிர் தீயினுள் புக நேர்ந்தாலும் பீடுநடை போட்டு மீண்டு வருவர் என்னும் உயரிய ஒழுக்கங்களைக் கம்பன் வெளிப்படுத்துகிறான். அவ்வொழுக்கங்களைப் பெண்கள் பெற்றிட வேண்டும் என்று விரும்பியவன், கம்பன்.

இற்பிறப் பென்ப தொன்றும் இரும் பொறை யென்ப தொன்றும்
கற்பெனும் பெயர தொன்றும் களிநடம் புரியக் கண்டேன் (6035: 3-4)

என்று அனுமன் வாயிலாய்ப் பெண்ணின் பெருமையைப் பேச வைத்தவன் கம்பன்.

வடநாட்டில் நிகழ்ந்த இராமாயணக் கதையை மறையாக வால்மீகி வடமொழியில் தந்ததைத் தமிழில் தந்தவன், கம்பன். வடநூலில் உள்ள கதையைத் தமிழில் பெயர்த்துக்கொடுக்கின்ற போது, கம்பன், தமிழகத்து மண்வாசனைக் கமழ நமக்குத் தந்துள்ளான் என்பது துணிபு.

வடபுலத்து நாகரிகம் - குடும்பச் சூழல் - மகளிர் நிலை - சமுதாய அமைப்பு ஆகியன சில இடங்களில் தமிழரது பண்பாட்டுடன் ஒத்துப்போகாத இடங்களில், தமிழர் நாகரிகத்தினையே மையமாய் வைத்து மொழியாக்கம் செய்துள்ளது தெரிகிறது. குறிப்பாய்ப் பெண்ணின் பெருமைக்குக் கேடான சில கறுப்புப்புள்ளிகளை மூலநூலில் கண்டாலும் - அவற்றை விடுத்துத் தமிழ்க்குல மங்கையரது மாண்பினை மனத்தில் கொண்டு கம்பராமாயணத்தைப் படைத்தவன், கம்பன்.

ஒரு கையால் தலையையும், மற்றொரு கையால் இடுப்பையும் இராவணன் தாங்க, வான்வழி சென்ற வால்மீகியின் சீதைக்கும், கற்புடைப் பெண்டிரைத் தீண்டினும் தீச்சுடும் என்ற தமிழகத்துக் கற்புநெறிக் கொள்கையை மனத்தில் கொண்டு, மண்ணோடு பெயர்த்தெடுத்துக் குடிலோடு சீதையை கொண்டு சென்றான் எனக் காட்டிய கம்பனின் படைப்புக்கும் உள்ள வேறுபாட்டைக் காண்க.

சீதையைப்பற்றிக் கூற நேர்ந்த போதெல்லாம் அவளைக் 'கற்பினுக்கணி', 'இற்பிறப்பு', 'இரும்பொறை', 'கற்பெனும் பெயரது', 'தவம்செய்த தவமாம் தையல்' என்றெல்லாம் அனுமன் வாயால் வாழ்த்தச்சொல்லிக் காது குளிரக் கேட்டவன், கம்பன். தமிழகத்துப் பெண்ணியத்தில் கொண்ட வழிபாட்டுத் தன்மையாலேதான் இத்தகைய சொற்றொடர்களைப் பயன்படுத்தி, உயர்த்திப் பாடி பெண்ணின் பெருமைக்குப் புகழ் சேர்த்தவன், கம்பன். இத்தகைய கற்புச்செல்வியைப் பற்றி வங்கம் தந்த விவேகானந்தர், "There may have been several Ramas, perhaps, but never more than one Sita!" என்று அமெரிக்கப் பெருநாட்டிலே வீரமுழக்கம் செய்தார். மண்டோதரி, அரக்கர் குல மாதரசி. அரக்கர் குல மகளிர்களுள்ளே அமுதமனையவள். இன்னொருத்தி, திரிசடை. இலங்கேஸ்வரனின் இல்லக்கிழத்தி, மண்டோதரி. தன் கணவன், மாற்றான் மனைவியை அபகரித்து வந்தது அவளுக்கு உடன்பாடில்லை.

போர்க்களத்திலே இராவணன் மாண்டு கிடக்கின்றான். உடலெல்லாம் அம்புகளால் தைக்கப்பட்டு, நைந்து நூலாக மண்மீது கிடக்கின்றான். அக்காட்சியைக் கண்ட மண்டோதரி புலம்புகிறாள், கதறுகிறாள்.

கற்பு, உடலால் மட்டும் காக்கப்படுவதன்று; உள்ளத்தாலும், அவ்வுள்ளத்து உணர்வாலும் காக்கப்படுகின்ற ஒன்று என்பதைக் கம்பன் மண்டோதரி வாய்மொழியாகப் பேச வைக்கின்றான். கற்புடைப்பெண்டிர் பிறர் நெஞ்சு புகார் என்பது பழந்தமிழர் வாழ்வியல் நெறிவழி. இருபாலாரும் மற்றவர் உள்ளங்களில் புகாதபடி, கொண்டாரோடு கூடிக் குலவி வாழ்வதுதான் தமிழர் பண்பாடு என்பதை உணர்த்துகின்றான், கம்பன்.

கள்ளிருக்கும் மலர்க் கூந்தல் சானகியை மனச்சிறையில் கரந்த காதல்
உள்ளிருக்கும்" எனக்கருதி உட்புகுந்து தடவியதோ ஒருவன் வாளி
- மண்டோதரி புலம்புறு படலம்: 23-3.4

என்று மண்டோதரி புலம்புவது அவளின் உள்ளார்ந்த கற்பு நிலையை யுமல்லவா கூறாது கூறுகிறது.

ஒன்பதாம் நூற்றாண்டின் தமிழினத்து வளங்களையும், சமூக அமைப்புகளையும், நாகரிகங்களையும் கம்பன் தனது காப்பியத்தில் ஆங்காங்கே பதிவு செய்துள்ளான். ஒருவனுக்கு ஒருத்தி என்னும் தமிழர் பண்பாட்டு நெறியை மையக்கருவாய் வைத்துத்தான் காப்பியத்தின் பெண்பாத்திரங்கள் அனைத்தும் படைக்கப்பட்டிருப்பதையும் பார்க்க முடிகிறது. பொதுவாகவே, சங்க காலத்திற்குப் பிறகு பெண்நலன் பாராட்டப்படுதல் கம்பனின் காப்பியத்திலிருந்துதான் தொடங்கப்பட்டதாகத் தெரிகிறது. அதற்கு முன் உடற்கூறினை முதன்மையாய்க் கொண்டு பெண், இரசனைப்பொருளாய், அழகின் உருவாய், அனுபவிக்கும் உடைமையாய்க் கருதப்பட்டதாகத்தான் தெரிகிறது. காரணம், அப்போதே பெண்கள் ஆண்களைச்சார்ந்து வாழ வேண்டிய ஒரு சூழல் இருந்தது.

இச்சூழலைக் கண்ட கம்பன் ஒரு புதிய சமுதாயத்தை உருவாக்கிட, தான் படைத்த காப்பியத்தில் பெண்ணியத்திற்கு முதலிடம் தந்து பாடியுள்ளான்.

கம்பனில் பெண்ணியப் புரட்சி

ஜெ.அபூர்வஜென்னி
முனைவர் பட்ட ஆய்வாளர், இலக்கியத்துறை, தமிழ்ப்பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

இலக்கியம் வாழ்க்கையின் பிரதிபலிப்பு. அந்தந்த நாட்டின் கலாச்சார வளர்ச்சிக்கு ஏற்பச் சமயம் பிடிப்புகளுக்கேற்ப மிகத் தொன்மையானது, பழமையானது. தமிழரின் சமயக் கொள்கைகள், சமய நெறிகள், வாழ்க்கை முறைகள், கருத்தோட்டங்கள் முதலியன தமிழிலக்கியங்களைப் பெரிதும் பாதித்துள்ளன. அந்த வகையில் கம்பராமாயணத்தில் கம்பர் எவ்வாறு பெண்ணியத்தை அணுகியுள்ளான் என்பதை காணலாம்

கம்பன் தந்த அறிவும் உரிமையும்

காவியம் புனைந்த கம்பன் மனதில் பெண் கல்வியும் உரிமையும் தேவை என்பதனை,

பெருந் தடங் கண் பிறைநுதலார்க் கெலாம்
பொருந்து செல்வமும் கல்வியும் பூத்தலால்
வருந்தி வந்தவர்க் கீதலும் வைகலும்
விருந்து மன்றி விளைவன யாவையே (பாலகாண்டம்-68)

என்று கோசல நாட்டு மகளிர் கல்வியிலும் செல்வத்திலும் சிறந்து விளங்கினர். அதனால்தான் வருந்தி வந்தவர்களுக்கு ஈதலும், விருந்தினர்க்கு உபசரிப்பும் செய்ய முடிந்தது என்கிறான். பெண்ணிற்கு கல்வி அறிவும், சொத்துரிமையும் இருந்தால்தான் தம்மை நாடி வருபவர்களுக்கு ஈபவர்களாக அவர்கள் இருக்க முடியும் என்பது கம்பனின் கொள்கையாக காணப்படுகிறது.

அறிவு நிறைந்த பெண்மை

ஆயிரம் துன்பங்களுக்கிடையே மாற்றான் சிறையிலிருந்து விடுபட்டு, தன் கணவனைச் சென்று சேர்தல் வேண்டும் என்று துடித்து நிற்பவள் சீதை. அக்கணத்தில் அனுமன் வேண்டிய நிலை, சிறை மீளும் அரிய வாய்ப்பு மற்றும் எளிதில் அதை நிறைவேற்றும் ஆற்றலுடைய அனுமன் என்ற நிலை இருப்பினும், பெண்ணின் பேதைமையிலிருந்து அறிவு புறப்பட்டு மேல் எழுதலை கம்பன் இனம் காட்டுகிறான்.

உரியது அன்று என ஓர்கின்றது உண்டு அது என்
பெரிய பேதைமையைச் சில்மதிப் பெண்மையால் (க.5356)

என்ற கம்பனின் வரிகள் அழகும், ஆழமும், நுட்பமும் செறிந்தவனவாக அமைகின்றன. பேரறிவு படைத்த ஆண்மகன் அனுமனுக்கு பெரிய பேதைமையும், சிறிய அறிவும் படைத்த பெண்மை அறிவுரை கூறும் அழகைக் காணமுடிகிறது.

காதல் திருமணம்

சீதையின் மணம் காதல் மணமே என நிலைநாட்ட,

எண்ணரும் நலத்தினாள்....
அண்ணலும் நோக்கினான் அவளும் நோக்கினாள் (க.514)

என்ற வரிகளில் ஆடவனின் காதல் பார்வைக்கு 'அவளும் நோக்கினாள்' என்ற வரிகளால் பெண்ணுக்கு தான் கருத்துக் கூற உரிமைப்பட்டவள் என்ற புரட்சிக் கருத்தினை கம்பன் நிலை நிறுத்தியதும், தன் கணவனைத் தானே தேர்ந்தெடுக்கும் உரிமை பெண்ணுக்கு உண்டு எனக் கூற விழைவதும் கம்பன் பேசும் பெண்ணியச் சிறப்பாகும்.

கற்பு நிலை

கற்பு என்னும் கோட்பாடு பெண்ணை நோக்கி மட்டுமே பேசப்பட்டு வந்த காலத்தில் இருவருக்கும் உரியது என்ற சிந்தனையை விதைத்தவன் கம்பன். ஏகப்பத்தினி விரதனாகிய இராமனை, **இந்த இப்பிறவிக்கு இருமாதரைச் சிந்தையாலும் தொடேன்** என்று சபதம் செய்து வைத்தவன் கம்பன். தலைவனுக்கு மட்டுமின்றி அந்நாட்டு மக்களுக்கும் அதுவே சட்டமாக அமைய வேண்டும் என்று விரும்பியமையால்தான்,

ஆசலம் புரி ஐம்பொறி வாளியும்
காசு அலம்பு முலையவர் கண்ணெனும்
பூசலம்பும் நெறியின் புறம் செலாக்
கோசலம் (பாலகாண்டம்-13)

என்று அந்நாட்டு மக்களைப் பற்றி பேசுகிறான். ஆடவர்க்கு ஐம்பொறி அடக்கமும், மகளிர்க்குக் கட்பொறி அடக்கமும் வற்புறுத்தப்படுகின்றன.

பெண்மையின் பெருமிதம்

தோள் மேல் ஏறுக என்று அனுமன் வேண்டிய உடன் சீதை நெஞ்

சில் தோன்றிய பெண்மை உணர்வை உடனே வெளிக்காட்டாது பக்குவமாக, பல கூற்றுகளை கூறிய பிறகு என் கணவனை மட்டுமே தீண்டிய யான், உலகத்தார் பார்வையில் ஐம்பெரிக்கும் வளர்ச்சி பெற்ற ஓர் ஆண்மகனாகத் திகழும் உன் மேனியைத் தீண்டக் கூசுகிறேன் என்கிறாள்.

ஏறு சேகவன் மேனி அல்லால் இடை...
இவ்வுருகத் தீண்டுதல் கூடுமோ (க.5663)

என்ற கவி வரிகளில் உளவியல் சார்ந்த சீதையின் மறுப்புரை பெண்மையின் பெருமிதத்தைச் சித்தரிப்பதாகக் காண முடிகிறது.

கம்பன் படைப்பில் அகலிகை

இந்திரனால் வஞ்சிக்கப்பட்டு கணவனாகிய கௌதம முனிவரால் சபிக்கப்பட்டு, பல ஊழிக் காலமாகக் கல்லாய்க் கிடந்த அகலிகை, இராமனின் பாத தூளிப்பட்டுக் கல்லாய்க் கிடந்தவள் பெண்ணாய் உருக் கொண்டாள். அவளைக் கண்டு வியந்த இராமன், முதன்முதலில் அவளைப் பார்த்த இராமன் "அன்னையே அனையாள்" என்கிறான். பின்னர் அவளின் வரலாற்றினை அறிந்தப் பின் அவளது நிலைக்காக இரங்கிய இராமன்,

மாதவள் அருளுண்டாக வழிபடு, படர்உறதே
போது நீ அன்னை! என்று பொன்னடி
வணங்கிப் போனாள்

இவ்வாறு இராமன் அன்னையாகவே நோக்கினான் என்பதும், அவளது பொன்னடிகளை வணங்கினான் என்பதும் நோக்கத்தக்கவை. பத்துத் திங்கள் தன் மணி வயிற்றில் தாங்கிப் பெற்றவள் அன்னை கோசலை, பல ஊழிக் காலங்கலாக இராமனைத் தன் மனதில் தாங்கி அவன் வரவிற்காக ஏங்கி கிடந்தவள் அகலிகை, அதனால் தான் அவனுடைய திருவாயால் "அன்னையே" என்று அழைக்கப்பட்டாள். அகலிகை தன் நெஞ்சறிய எந்த தவறும் செய்தவள் என்ற உயர்வினை தர வேண்டும் என்பது தான் கம்பனின் நோக்கம் ஆகும்.

கம்பனும் தாரையும்

வாலியின் மனைவியான தாரை அறிவுத் திறன் உடையவள். யாருமே தடுக்க அஞ்சும் வாலியின் முன் சென்று அவனைத்

தடுத்து அறிவுரைக் கூறியவள். வாலிவதத்திற்குப் பின் சுக்ரீவன் கூறிய உறுதிமொழிப் படி கார்காலம் கடந்த பின்னும் இராமனுக்குப் படைத்துணை அனுப்பவில்லை. சினம் கொண்ட இராமன், சுக்ரீவனைச் சந்தித்து எச்சரிக்கை செய்ய இலக்குவனை அனுப்புகிறான். அவன் வருகையை உணர்ந்த சுக்ரீவன், அனுமன் அங்கதன் ஆகிய வானரப் பெருவீரர்கள் அவனை நேரில் சந்திக்க அஞ்சி, தாரையை அணுகி ஆலோசனை கேட்கின்றனர். அவர்களின் தவறினைக் கண்டிக்கிறாள் தாரை. அனைவரும் அவளையே அனுப்ப முடிவு செய்கின்றனர். தன் எதிரே குனிந்த தலையோடு நிற்கும் இலக்குவனைப் பார்த்து,

ஐய நீ ஆழிவேந்தன் அடியினை பிரிகலாதாய்
எய்திய என்னை என்றால் இசையினும் இனிய சொல்லாள் (623)

அவளின் வார்த்தைகளைக் கேட்டு இலக்குவன் நிமிர்ந்து பார்த்தான்

ஆர்கொலோ உரைசெய்தார் என்று அருள்வரச் சீற்றம் அஃக
பார்குலாம் முழுவெண் திங்கள் பகல் வந்த படிவம் போலும்
ஏர் குலாம் முகத்தினை இறைமுகம் எடுத்து நோக்கித்
தார் குலாம் அலங்கல் மார்பன் தாயாரை நினைத்து நைந்தான் (624)

என்கிறான் கம்பன். வாலி இறந்தபின் கைம்மைக் கோலம் பூண்டிருந் தாள் தாரை. மங்கல அணி இன்றி அழகிய அணிகலன் துறந்து, தலையில் பூச்சூடாது, தன் மார்பகத்தில் சந்தனம், குங்குமம் பூசாமல் கழுத்து வரை ஆடையால் போர்த்தி காணப்படுகிறாள். இலக்குவனின் இக்கோலத்திற்குக் காரணம் தாரையின் கைம்மைக் கோலம் அயோத்தியிலுள்ள தாயரை நினைவுப்படுத்துகிறது.

அக்காலத்தில் கணவனை இழந்த பெண்கள் பட்டத்து அரசியானாலும் கைம்மைக் கோலம் கட்டாயமாக்கப்பட்டது. அதனோடு நில்லாமல் இப்பெண்கள் பிறர் பார்ப்பதற்கு சமூகத்தில் நடமாடக்கூட உரிமை இல்லாமல் இருந்தனர். மங்கல காரியங்களில் முன் வந்தால் அபசகுணம் என்று கருதப்பட்ட அவலநிலை காணப்பட்டது. இந்த சமூகக் கட்டையை உடைத்துத் தாரையை வெளிக் கொணர்ந்தமை கம்பனின் பெண்ணியப் புரட்சியாகும்.

பெரியபுராண நிகழ்வு

மதங்காஸ்ரமத்தில் இராமனின் வரவு காணத் தவமிருந்தாள் ஒரு மூதாட்டி. இராமனின் தரிசனத்தால் வீடுபேறு அடைய வேண்டும் என்ற நோக்கத்தோடு அவனுக்கு தருவதற்காகப் பல்வேறு கனிகளைச்

சேர்த்து வைத்திருந்தாள். அவனைக் கண்டு வணங்கி, இராம லக்குவர் அவளது உபசரிப்பினை ஏற்றுக் கொண்டனர். சுக்ரீவன் இருக்கும் இடத்திற்குச் செல்ல அவர்களுக்கு வழி கூறிய முறையினை கம்பன்

வீட்டினுக்கு அமைவதான மெய்ந்நெறி
காட்டுறும் அறிஞரென்ன அன்னவள் கழறிற்றெல்லாம்
கேட்டனன் (ஆரண்ய காண்டம் -1202)

என்று குறிப்பிடுகின்றார்.

வீடு பேற்றுக்குரிய நெறிமுறையினைக் கூறும் ஞானம் மிக்க ஆச்சாரிய நிலையிலிருந்து அவர் கூற, இராமன் கேட்டனன் எனக்கூறி, "சபரி" என்ற வேட்டுவப்பெண்ணிற்கு குருஸ்தானத்தையே கம்பன் வழங்கி விடுகிறான்.

திருவாளன் திருந்து திலகவதியார் அளிப்பப்
பெருவாழ்வு வாழ்ந்து

என்று தன் தமக்கை திலகவதியாரையே தன் குருவாக ஏற்றுக் கொண்ட திருநாவுக்கரசர் இங்கு நினைவுக்கூற தக்கவர்.

தான்யமாலியின் உணர்வு நிலை

ஒருபெண் பேசவேண்டிய இடத்தில் கட்டாயம் பேசத்தான் வேண்டும். தவறு செய்பவன் கணவனாக இருந்தாலும் அதனைச் சுட்டிக் காட்டும் கடமை மனைவிக்கு உண்டு.

இராவணனுக்கும் தான்யமாலிக்கும் பிறந்த அதிகாயன் போர்களத்தில் உயிர்துறந்தான். இச்செய்தியைக் கேட்ட தான்யமாலி துடித்துடித்து போர்க்களம் செல்கிறாள். வீராதி வீரனாகிய அதிகாயன் இறந்தான் என்பதனை அவளின் தாய் மனம் ஏற்றுக்கொள்ள மறுக்கிறது.

மந்திரத் தோள் என்மகனை மட்டா மனிதன் தன்
உந்து சிலைப் பகழிக்கு உண்ண கொடுத்தேனே (1946)

என்று புலம்புகிறாள். அவள் மனதில் ஏற்பட்ட அவலம் கோபமாக மாறுகிறது. இராவணனைக் கண்டவுடன் இவன்தானே இவ்வளவு இழப்பிற்கும் காரணம் என்ற எண்ணம் அவளின் கோபத்தை அதிகப் படுத்தியது. இத்தனை நாளும் அவனை எதிர்த்து பேசாதிருந்தவள் தான் தான்யமாலி ஆனால் அவளின் ஆழ்மனதில் கணவனின்

தவறான காமம் அரக்க இனத்தையே அழித்து விடும் என்ற எச்சரிக்கை உணர்வு இல்லாத இராவணனின் மீது ஏற்பட்ட கோபத்தை வார்த்தைகளில் வெடித்து சிதறினாள்.

எதையோ சிந்தித்து இருக்கின்றாய்! எண்ணிறந்த
கோதையார் வேல் அரக்கர் பட்டாரைக் கூவாயோ
பேதையாய்! காமம் பிடிப்பாய்! பிழைப்பாயோ?
சீதையாய் இன்னம் வருவ சிலவேயோ? (1948)

என்ற வார்த்தை வெப்பத்தில் இராவணன் அதிர்ந்து போனான். சீதையால் வரப்போகின்ற துன்பம் மற்றும் இவளின் வினாவிற்கு இராவணன் எங்கு சென்று விடை தேடுவான்? கணவனின் காமம் அரக்கர் இனத்திற்கே எமனாகி விட்டதே என்ற தான்யமாலியின் கோபம் தர்ம நியாயமானதாக இராவணனுக்கு எதிராக பேசவைத்து கம்பர் பெண்ணிய உணர்வினை மேலோங்கச் செய்துள்ளார்.

முடிவுரை

இராமாயணப் பாத்திரப்படைப்பில் சீதை மட்டுமல்லாமல் பல பெண் பாத்திரங்களின்வழி பெண்ணிய அறிவையும், ஆற்றலின் தன்மையையும், உரிமையையும் வழங்கும் தடங்களைப் பதித்துள்ளார். பெண்மையை உயர்த்தியதோடு புகழ் மகுடம் சூட்டியதோடு சில முரண்பாடுகளிலும் பெண்ணியத்தை நிலைநிறுத்தியுள்ள பெருமை கம்பனையே சாரும்.

கம்பனில் பெண்ணியம்

ஆர் முல்லை
முனைவர்பட்ட ஆய்வாளர். இந்திய மொழிகள் மற்றும் ஒப்பிலக்கியப்பள்ளி
தமிழ்ப்பல்கலைக்கழகம். தஞ்சாவூர்.

பெண்ணியம் என்னும் சொல் ஏறத்தாழ இரண்டு நூற்றாண்டுகளாக மேலை நாடுகளிலும். ஒரு நூற்றாண்டாக நம்மிடத்திலும் பேசப்படுகின்ற ஒரு கருத்தோட்டம். பெண்ணுக்கு என வகுக்கப்பட்ட வரையறைகளைக் கடந்து. அவளை ஒரு மனிதப் பிறவியாகப் பார்க்கத் தொடங்கியதன் விளைவே பெண்ணியம் என்ற சித்தாந்தம். கம்பன் பெண்களைப் பற்றி நினைத்த செய்தியை அறிந்து கொள்வதாக இக்கட்டுரை அமைகிறது.

அறிவும், உரிமையும்

கம்பன் பெண்ணுக்குச் சொத்துரிமையும். கல்வியும் மிகப்பெருந் தேவை என்பதை உணர்த்துகிறார்.

பெருந் தடங் கண் பிறைநுதலார்க் கெலாம்
பொருந்து செல்வமும் கல்வியும் பூத்தலால்
வருந்தி வந்தவர்க் கீதனும் வைகலும்
விருந்து மன்றி விளைவன யாவையே (68)

என்று பேசியவர் கம்பர்.

கோசல நாட்டு மகளிர் கல்வியிலும். செல்வத்திலும் சிறந்து விளங்கினர். அதனால்தான் வருந்தி வந்தவர்களுக்கு ஈதலும். விருந்தினர்க்கு உபசரிப்பும் செய்ய முடிந்தது என்கிறான். பெண்ணுக்குக் கல்வி அறிவும். சொத்துரிமையும் இருந்தால்தான் தம்மை நாடி வருபவர்கட்கு ஈபவர்களாக அவர்கள் இருக்க முடியும் என்பது கம்பனின் எண்ணமாக இருந்தது.

கற்பு

கற்பு என்பது பெண்களுக்கு மட்டும் என்று பேசப்பட்டு வந்த காலத்தில் இருவருக்கும் உரியது என்ற சிந்தனையை விதைத்தவர் கம்பர். ஏக பத்தினி விரதனாகிய இராமனை "இந்த இப்பிறவிக்கு இரு மாதரைச் சிந்தையாலும் தொடேன்" (சுந்தரகாண்டம் - 639) என்று சபதம்

செய்ய வைத்தவர் கம்பர். தலைவனுக்கு மட்டுமன்றி மக்களுக்கும் அதுவே சட்டமாக அமைய வேண்டும் என்று விரும்பியவர்.

ஆசலம் புரி ஐம்பொறி வாளியும்
காசு அலம்பு முலையவர் கண்ணெனும்
பூசலம்பும் நெறியின் புறம் செலாக் கோசலம் (68)

என்று அந்நாட்டு மக்களைப் பற்றிப் பேசுகிறார். மலையிலுள்ள வளங்களை எல்லாம் அள்ளிக் கொண்டு ஓடிவரும் சரயு நதியின் வெள்ளத்தினைப் பரத்தையர் உள்ளதுக்கு உவமையாக்குகிறான்.

தலையும் ஆகமும் தாளும் தழீஇ, அதன்
நிலை நிலாது, இறைநின்றது போலவே
மலையின் உள்ள எலாம் கொண்டு மண்டலால்
விலையின் மாதரை ஒத்தது அவ்வெள்ளமே! (18)

என்கிறார் கம்பர். இப்பெண்டிரைப் பொன்விலை மகளிர் எனவும், பொன்னோக்கியர் எனவும் குறிப்பிடுகின்றார். மன்னா அறம் தவறாமல் ஆட்சி செய்தால் இந்தச் சமூகத்தில் அவலம் நிகழாது. இந்நிலை தசரதன் ஆட்சியில் நிகழ்ந்தது.

வெள்ளமும், பறவையும் விலங்கும் வேசையர்
உள்ளமும் ஒரு வழி ஓட நின்றவன் (174)

என்கிறார் கம்பர்.

அகலிகை

விசுவாமித்திரர் அழைத்துச் சென்றபோது இராமனின் பாதம் பட்டுக் கல்லாய்க் கிடந்த அகலிகை பெண்ணாய் உருக் கொண்டாள். இந்திரனால் வஞ்சிக்கப்பட்டுக் கணவனாகிய கௌதம முனிவனால் சபிக்கப்பட்டு, பல காலமாகக் கல்லாய்க் கிடந்த அகலிகையின் வரலாற்றை விசுவாமித்திரர் கூறக் கேட்ட இராமன், அவளுக்குச் சாப விமோசனம் அளித்து மீண்டும் அவளை கௌதமனோடு சேர்த்து வைத்தார். முதலில் அவளைப் பார்த்த இராமன் அன்னையே அனையாள்' என்கின்றான். அடுத்து அவள் வரலாறு கேட்டபின் அவளது நிலைக்காக இரங்கிய இராமன்,

மாதவன் அருளுண்டாக வழிபடு, படர் உறாதே
போது நீ அன்னை! என்று பொன்னடி வணங்கிப் போனான் (562)

இங்கு அகலிகையை இராமன் அன்னையாகவே நோக்கினான் என்பதும், அவளது பொன்னடிகளை இவன் வணங்கினான் என்பதும் நோக்கத்தக்கவை. கௌதமன் சபித்தபோது, சாப விமோசனத்திற்காகத் தவித்தாள் அகலிகை. அப்போது முனிவர்,

தழைத்து வண்டிமிருந்தண்தார்த் தசரத ராமன் என்பான்
கழற்றுகள் கதுவ இந்தக் கல்லுரு தவிர்தி என்றான் (559)

என்பதைப் பார்க்கிறோம். பலகாலம் கழித்து, தசரதப் ராமனாக அவதரித்து இறைவன் வருவான் என்பதை முன்கூட்டியே அறிந்த ஞானி கௌதமர் அவளது தூய்மைத் தன்மையை உணர்த்தவே, விசுவாமித்திரனை "நெஞ்சினால் பிழைப்பிலாளை நீ அழைத்திடுக" என்று கௌதமனிடம் பேச வைக்கிறான். அன்னையாகவே கருதி ஸ்ரீராமனை வணங்க வைக்கிறார்.

தாரை

கம்பனின் தாரை ஓர் வித்தியாசமான படைப்பு. அறிவுத்திறன் உடையவள். சுக்ரீவனுக்குத் துணையாக வந்த இராமன் பற்றித் தன் தோழியர் மூலம் அறியும் நுட்பமுடையவள். யாருமே தடுக்க அஞ்சும் வாலியின் முன் சென்று அவனைத் தடுத்து அறிவுரை கூறியவள். வாலி வதத்திற்குப் பின், சுக்ரீவன் தான் கூறிய உறுதிமொழிப்படி கார்காலம் கடந்த பின்னும் இராமனுக்குப் படைகளை அனுப்பவில்லை. சினம் கொண்ட இராமன், சுக்ரீவனைச் சந்தித்து எச்சரிக்கை செய்ய இலக்குவனை அனுப்புகிறான். அவன் வருகை உணர்ந்த சுக்ரீவன், அனுமன், அங்கதன் ஆகிய வானரப் பெருவீரர்கள் அவனை நேரில் சந்திக்க அஞ்சி, தாரையை அணுகி ஆலோசனை கேட்கின்றனர். அவர்களின் தவற்றினைக் கண்டிக்கிறாள் தாரை. அனைவரும் அவளையே அனுப்ப முடிவு செய்கின்றனர். தன் எதிரே குனிந்த தலையோடு நிற்கும் இலக்குவனைப் பார்த்து,

ஐய நீ ஆழி வேந்தன் அடியினை பிரிகலாதாய்
எய்தியது என்னை என்றாள் இசையினும் இனிய சொல்லாள் (4424)

அவள் வார்த்தைகளைக் கேட்ட இலக்குவன் நிமிர்ந்து பார்த்தான்.

ஆர்கொலோ உரைசெய்தார் என்று அருள்வரச் சீற்றம் அஃக
பார்குலாம் முழுவெண் திங்கள் பகல் வந்த படிவம் போலும்
ஏர் குலாம் முகத்தினாளை இறைமுகம் எடுத்து நோக்கித்
தார் குலாம் அலங்கல் மார்பன் தாயரை நினைந்து நைந்தான் (4425)

என்கிறார் கம்பர். வாலி இறந்தபின் கைம்மைக் கோலம் பூண்டிருந்தாள் தாரை. மங்கலஅணி இன்றி, அணிகலன் துறந்து, தலையில் பூச்சூடாது, கழுத்து வரை ஆடையால் போர்த்தி நின்ற கோலத்தைக் கண்ட இலக்குவனின் இந்தக் கலக்கத்திற்குக் காரணம் தாரையின் கைம்மைக் கோலம் ஆகும்.

கம்பர் இக்காட்சிமூலம் தெரிவிக்கும் கருத்து என்னவென்றால், அக்காலத்தில் கணவனை இழந்த பெண்கள் பட்டத்து ராணியாக இருந்தாலும், வானரப் பெண்ணாக இருந்தாலும் கைம்மைக் கோலம் கட்டாயமாக்கப்பட்டது. கைம்பெண்கள் பிறர் பார்க்க அனுமதி இல்லை; சமூகத்தில் நடமாடக் கூட உரிமை இல்லை. மங்கலக் காரியங்களில் முன்வந்தால் அபசகுனம் என்று கருதப்பட்ட நிலையிலும், தாரையை வெளிக்கொண்டு வந்தவர் கம்பர்.

மண்டோதரி, தான்யமாலி

இராவணனின் பட்டத்து ராணிகள்; இவ்விருவருமே. மயன் மகள் மண்டோதரி சீதைக்கு நிகரான கற்பும், பேரழகும் வாய்ந்தவள். கணவனின் தகாத செயலால் தன்பிள்ளையை இழந்த போது கூட, இராவணனின் செயல் தவறானது என்று கூறாதவள். இராவணனின் வாழ்வு ஒன்றே தன் வாழ்வு என இருந்தவள். ஒரு பெண் பேச வேண்டிய இடத்தில் கட்டாயம் பேசத்தான் வேண்டும். தவறு செய்பவன் கணவனே என்றாலும், அதனைச் சுட்டிக் காட்டும் கடமை ஒரு மனைவிக்கு உண்டு. அது தவறன்று என்ற தெளிவான சிந்தனை கம்பனுக்கு உண்டு.

ஏதையா சிந்தித்து இருக்கின்றாய்! எண்ணிறந்த
கோதையார் வேல் அரக்கர் பட்டாரைக் கூவாயோ!
பேதையாய்! காமம் பிடிப்பாய்! பிழைப்பாயோ?
சீதையால் இன்னம் வருவ சிலவேயோ? (8080)

என்ற வார்த்தைகளின் வெப்பத்தில், அசையாத இராவணன் கூட அதிர்ந்து போகிறான்! சீதையால் வரப்போகிற துன்பங்கள் இவை மட்டுமா? என்ற அவளது வினாவிற்கு, இராவணன் பதில் கூற இயலவில்லை. கணவனின் காமம் அரக்கர் இனத்திற்கே எமனாகி விட்டதே என்பது தான்ய மாலியின் கோபமாகும்.

பெண்ணியப் பார்வையில் அக்கினிப் பிரவேசம்

பேரா. முனைவர் **க.சந்திரசேகரன்**
சென்னை

சமூகத்தின் ஆதிக்கத்தளைகளிலிருந்து தம்மை விடுவித்துக் கொண்டு, பெண்கள், தங்களுடைய உரிமைகளுக்காகப் போராடும் தன்மையே பெண்ணியம் ஆகும். இதைத் தான் கம்பன் நமக்குப் பல இடங்களில் காட்டுகிறான் அவற்றில் ஒரு சில.....

பெண்மை தெய்வ நிலை எய்தல்

பெண்மைக்குப் பெருமை சேர்க்கும் கம்பன் அவள் தெய்வ நிலை எய்தவும், வழி காட்டுகின்றான். எந்த ஒரு பெண்ணும் கணவனுக்கு இசைந்த மனைவியாகவும், கணவனைப் பெற்ற மாமனுக்குப் பெருமை சேர்க்கும் நிலைகளிலும் பெருமை பெற்றிலங்கு வாளனால், அவள் உலகத்தார் பார்வையில் தெய்வமாக மதிக்கப்படுவாள் என்று புத்திலக்கணம் படைத்துரைக்கிறான். ஏதேனும் ஒரு நிலையில் மட்டும் சிறப்பு எய்தி, பிற நிலைகளில் சிறப்பு உறாதிருத்தலைச் கம்பன் ஏற்கவில்லை.

அக்கினிப் பிரவேசம்

கம்பனின் இராமகாதையில் பெண்மைக்கு எதிரான சித்தரிப்பு என்று பலராலும் பேசப்படுவது, சீதையின் அக்கினிப் பிரவேசம் ஆகும். இராம கதையில் பின் வந்தவர்களால் பெரிதும் விமர்சனத்திற்கு உட்படுத்தப்பட்ட பகுதியும், இதுவாகவே இருக்க முடியும். (கம்பனில் பெண்ணியம், முனைவர் இரா. செல்வகணபதி, பக்:91-92) கௌசிகனின் மனைவி அகலிகை கல் உரு நீங்கி உயிர் பெற்று எழுந்தபோது, அவளைத் தூயவள் என்று பரிந்துரை செய்து கணவனோடு கூட்டி வைத்த இராமன், சீதையின் மீட்சியில் சினம் கொள்வதும், அவளை ஏற்க மறுப்பதும் புரியாத புதிராகவே அமைகின்றன.

இராவண வதம் முடிகிறது. தன்னை வந்து வணங்கிய வீடணனை எடுத்துத் தழுவி அவனுக்கும், அருகிருந்தோர்க்கும் நீதிகளைக் கூறுகிறான் இராமன். சீதை நினைவு வரவே அனுமனை அழைத்து வெற்றிச் செய்தியை போய் அவளிடம் தெரிவித்து வருக எனப் பணிக்கின்றான்.

இப் புறத்து இன எய்துறு காலையில்
அப்புறத்ததை யுன்னி அனுமனை
துப்புறச் செய்ய வாய் மணித் தோகைபால்
செப்புறு இப்படிப் போய் எனச் செப்பினான் (9866.)

'சீதை பால் சென்று, தெரிந்துவா" என்றோ, 'என் துணைவிபால் சென்று தெரிவித்து வா" என்றோ கூறாது. இராமன் 'பவழம் போன்ற சிவந்த வாயையுடைய தோகை விரித்தாடும் அழகிய மயில் ஒத்த சீதை-யிடத்தில் நீ சென்று இங்கு "நடந்த வற்றையெல்லாம் சொல்வாயாக!" என்று மொழிந்து அனுப்பினான். இச்செய்தி சொல்லி விடும் வரை கூட இராமன் நெஞ்சில் சீதையின் பால் அன்பு மிக்கிருந்ததே அன்றி சினம் ஏதும் இருந்ததற்கு அடையாளம் இல்லை.

இராமன், அனுமன் மீண்டும், திரும்பி விரைந்து வாராமை கண்டு, வீடணனை அருகழைத்து, **வீடண சென்று தா நம் தேவியை சீரோடும்** (9889.) என்று பணிக்கின்றான். இலங்கை வேந்தன் ஒருவனால் சிறை வைக்கப்பட்ட சீதையை, இன்னொரு இலங்கை வேந்தனே மீட்டுத் தன்பால் கொண்டு வருதலே அரசப் பெருமிதம் என்று இராமன் கருதியிருக்க வேண்டும். விரைந்து அசோகவனம் சேர்ந்து சீதையை வணங்கிய வீடணன், அழைக்க வந்த செய்தியைச் சீதையிடம் தெரிவிக்கிறான். கோலம் புனையப்பட்ட சீதை வான மடந்தையர், வானரர் மற்றும் அரக்கர் சூழ இராமன் இருப்பிடம் நோக்கி அழைத்து வரப்படுகிறாள்.

ஒரேகூட்டம். அத்துணை பேர்க்கும் இராமன் நடத்த உள்ள சோதனை வேள்வி தெரியாது. சீதையை ஆர்வமுடன் காணவந்தி ருந்தனர். பேரொலி கேட்டது. வீடணன் கடுஞ்சொல்லால் கட்டுப் படுத்தினான். இராமன் 'அதுமுறையன்று" என்று தடுத்தான். வந்திருந்தவருள் ஒவ்வொருவரும் சீதை புகும் அக்கினி வேள்வியைக் காணவேண்டும் என்று இராமன் விரும்பினான் போலும்!

சீதை கண் எதிரே, இராமன் நிற்கிறான். சீதை இராமனைத் தொழுது ஏக்கம் நீங்குகின்றாள். காவியம் கற்பார் நெஞ்சில் சீதை மாசு மறுவற்றவள் என்பதைக் கம்பன் நிறுவிய போதும், அன்புப் பார்வை பார்த்த இராமன் ஒரு நொடியில் அதனை மாற்றிக் கொண்டு சீதையை இழி மொழிகள் பேசி. அவள் நெஞ்சத்தை தீயால் சுடுகிறான்.

மாற்றான் பாதுகாவலில், இது நாள் இருந்த நீ, அச்சமின்றி என்பால் மீண்டு வந்துள்ளாய். உன்னை நான் விரும்பி ஏற்பேன் என்று கருதுகின்றாயோ? உன்னை மீட்டுக்கொண்டுபோக நான் கடலில் அணை கட்டி, இங்கே வரவில்லை. பழியிலிருந்து என்னை மீட்டுக் கொள்ளவே வந்துள்ளேன்" இராமன் ஆற்றாது பேசினான். மனச்சான்றுடன் இவ்வாறு பேசினானா? இல்லை உண்மையில் சீதையை மனமார ஏசினானா?

பெண்மையும் பெருமையும் பிறப்பும் கற்பு எனும்
திண்மையும் ஒழுக்கமும் தெளிவும் சீர்மையும்
உண்மையும் நீ எனும் ஒருத்தி தோன்றலால்
வண்மை இல் மன்னவன் புகழின் மாய்ந்தவால் (9918)

என்றெல்லாம் பல படச் சீதையை இராமன் தூற்றி உரைக்கிறான். மேலும் சினந்து,

— உன் ஒழுக்கச் செய்தியால்
சாதியால் அன்று எனின் தக்கது ஓர் நெறி
போதியால் என்றனன் புலவர் புந்தியான் (9920)

'உன் ஒழுக்கக் கேட்டுக்கு ஒன்று நீ செத்தொழிதல் வேண்டும். அல்லது என் கண்முன் நில்லாது நீ விரும்பும் எங்காவது சென்று விடு" என்று கொதிக்கிறான். அனுமன் 'கண்டனென் கற்பினுக்கு அணியைக்கண்களால்" என்று அன்று சொன்னதைக் கேட்ட இராமன் எவ்வாறு மறந்தான்? மனமறியாது குற்றம் புரிந்த அகலிகையை, அன்னை என்ற இராமனா இவ்வாறு சீதை மனம் புண்படப் பேசினான்? சிறிதும் எதிர் பாராத நேரத்தில் கணவன் வாயிலிருந்து புறப்பட்ட இழிமொழிகளால் பெரிதும் இடிந்து போகிறாள்.

சீதை தீயில் இறங்குதல்

'யாருக்காக நான் இத்தனை நாள் உயிர் வாழ்ந்திருந்தேனோ, அவனே என்னை ஐயுற்று, பலர் முன் இழி சொற் கூறித் தூற்றியபின், இனி நான் உயிர் வாழ்வதில் பொருள் ஒன்றும் இல்லை. இலக்குவனை நோக்கி, 'இடு தீ " என்று கூறி அவன் தீ மூட்டிய பின் தீயின் அருகே சென்று சேர்கிறாள்.

மனத்தினால் வாக்கினால் மறு உற்றேன் எனின்
சினத்தினால் சுடுதியால் தீச் செல்வி என்றாள்... (9936)

தீயை நோக்கி, 'நான் மனத்தாலோ, சொல்லாலோ, செயலாலோ, களங்கம் உடையேன் என்றால் என்னை நீ கடுமையாக எரித்திடுக' எனத்தீயினுள் புகுந்தால் சீதை.

கம்பனில் பெண்ணியம் பற்றிய இவ்வாய்வில் சீதைக்கு அமைந்த இந்த நெருப்புச் சோதனை, காலம் காலமாகப் பெண்வீமைப் பற்றி நிலவி வரும் ஆடவர் மனோபாவங்கள், இத் தீய சோதனையின் உண்மையான பின்புலத்தைக் காண இயலும். இராமன் சீதையைத் தீப்புக முயன்றபோது ஏன் தடுத்து நிறுத்தவில்;லை என்ற வினாக்கள் நம்முன் நிற்கிறது.

தெய்வமாயினும், மானுடல் சட்டை தாங்கி நிலவுலகில் பிறந்துவிட்டால் எல்லாருமே விதியின் கட்டுப்பாட்டில் தான் நின்றாக வேண்டியுள்ளது. (கம்பனில் பெண்ணியம், முனைவர் இரா.செல்வக்கணபதி)

சீதை இளைய வீரன் இலக்குவனை அழைத்து தீ முட்டுமாறு வாயினால் கூறினாள். இலக்குவனோ, அண்ணனது கருத்தை அறிய இராமனை நோக்கினான், இராமனோ, இளையவனைப் பார்த்து கண்சாடை மூலம் 'தீ' அமைக்கும்படி தலை அசைத்து ஆணையிட்டான். இலக்குவன் அழுத கண்களோடு தீ முட்ட, சீதை இராமனை நினைந்த சிந்தனையோடு செந்தீயில் பாய்ந்தாள். அக்கினி தேவன் வலிமை குன்றி அலறினான். அக்கினியின் அலறல் கேட்ட இராமன் இவளைச் சுடாது போற்றும் நீ யார் என வினவினான். அதற்கு ' என் பெயர் அக்கினி ஜானகி என்னும் உலக மாதாவின் கற்புத் தீ என்னைச் சுட்டது. சீதை தன் கற்பின் திறத்தை கையுறு நெல்லியங்கனிபோன்று காட்டி விட்டாள். இவளுடைய கற்பின் தன்மையைக் கண்ணெதிரே கண்டபின்பும் சங்தேகித்து நிற்றல் தகுதியோ? என்றனன் அக்கினித்தேவன். அக்கினியின் சொல் கேட்டு சீதையைப் பழிப்பிலள் என்று உணர்ந்து கொண்டான். உணர்ந்த பின்னும் கழிப்பிலள், என்றானேயன்றி "ஏற்றுக்கொள்கிறேன்" என்று சொல்லவில்லை. 'அறத்தின் மூர்த்தியா இப்படி அறம் கடந்து நடப்பது' என்று எண்ணத் தோன்றுகிறது.

தவம் செய்த தவம்

கம்பனைப் படிப்போகும், கேட்போரும் அறிந்த ஓர் இடம்தான் திருவடிதொழுதபடலத்தில் இராமனிடம் சீதையைக் கண்டு வந்து பற்றி அனுமன் கூறுகின்ற இடம்.

வேலையுள் இலங்கை என்னும் விரிநகர் ஓர் சார்வின்தோய்
காலையும் மாலையும் இல்லது ஓர் கனகக்கற்பச்
சோலை அங்கு அதனில் உம்பிபுல்லினால் தொடுத்த தூய
சாலையில் இருந்தாள் ஐய! தவம் செய்த தவமாம் தையல் (6037)

தவம் என்றஒன்று தானே தவம் செய்து பெற்றவள் சீதை. எல்லோரும் தவம் இயற்றுபவர். வேண்டியதைப் பெறத்தவம் இயற்றுபவர். ஆனால் தவமே இங்கே எதைப்பெற தவம் இயற்றியது? தவமே தவம் செய்து சீதையைப் பெறுவதற்காக இங்கே எங்கே இணைத்து அனுமன் காட்டுகிறான்? இராவணன் சீதையைக் தொடவில்லை. தொட்டுத்தூக்கிச் செல்லவில்லை. சீதை தன் நிலையிற் திரியாது இலக்குவன் அமைத்த பார்ணசாலையில் தான் இருந்தாள் இராவணன் பார்ணசாலையோடேதான். சீதையைத் தொடாது தூக்கி வந்தான் என்ற இரண்டும் புலப்படுமாறு முதல் மூன்று அடிகளில் சொல்லியவன் முத்தாய்ப்பாக 'தவம் செய்த தவமாம் தையல்" என்றான்.

எய்தினன் அனுமனும் எய்தி ஏந்தல் தன்
மொய்கழல் தொழுகிலன் முளரி நீங்கிய
தையலை நோக்கிய தலையன் கையினன்
வையகம் தழிஇநெடிது இறைஞ்சி வாழ்த்தினான் (6028)

'இலங்கை என்னும் தென்திசை நகரில் கற்புக்கு ஓர் அணிகலன் போல் இருக்கும் சீதையை என் கண்களால் கண்டேன். இனிமேல் உனது சந்தேகத்தையும் இதுவரை பெற்றிருந்த துயரத்தையும் நீக்குக" என்று கூறினான் அனுமன்.

முடிவுரை

தேசிய காவியம் எனப் போற்றப்படுவது இராமாயணம் ஒருவனுக்கு ஒருத்தி என்ற கோட்பாட்டை வலியுறுத்தி எழுந்த காவியம். இராமன் அவதார புருஷனாக இருந்தாலும்கூட சந்தேகம் என்கிற நோய் அவனை சராசரி ஆண்மகனாக்கிவிட்டது. இராவணின் காவலில் இருந்த சீதையினுடைய கற்பின்மேல் சந்தேகித்து அவளை தீக்குளிக்கச் சொல்கிறான். கம்பர் அவதார புருஷன்மீது கறைபடக் கூடாது என்பதற்காக ஊருக்காக சீதையைத் தீக்குளிக்கச் சொன்னதாகக் கூறுகின்றார்.

பெண்ணியம் - காலமும் கம்பன் கனவுகளும்

ப. அனுராதா
ஆசிரியர், அரசுமேனிலைப்பள்ளி, அரசூர், கோவை மாவட்டம்

கம்பனின் காவியம் காலங்களைக் கடந்தும் கனி போல் இனித்துக் கொண்டிருப்பதற்குக் காரணம் அவரது படைப்பிலே பெண்ணியம் ஓர் உயர்ந்த இடம் பெறுவதுதான். அரசகுலப்பெண்களும், மானுடப்பெண்களும், அரக்கர்குலப் பெண்களும், விலங்கினப் பெண்களும், வேட்டுவகுலப் பெண்களும் கம்பனின் கைவண்ணத்தில் பெருமைமிக்கவர்களாகவும், உரிமை பெற்றவர்களாகவும், வணங்கத் தக்கவர்களாகவும், வாய்மை கொண்டவர்களாகவும் மிளிர்கின்றனர். பெண்ணிய அடிப்படையில் சீதை, சுமித்திரை, கைகேயி, மண்டோதரி ஆகிய நால்வரை, கம்பன் எங்கே, எப்படிப் பெருமைப்படுத்துகிறார் என்பதே ஆய்வுக் கட்டுரையின் நோக்கமாகும்.

சீதை

காப்பியத்தலைவியான சீதையைக் கம்பர் சுந்தரகாண்டத்தில் அனுமன் வாயிலாகப் பெருமைப்படுத்துகிறார். இராமனின் கட்டளை-யின்படி சீதையைத் தேடுகிற அனுமன் கடலைத் தாண்டி இலங்கையை வந்தடைகிறான். இராவணனின் அசோகவனத்திலே சீதை சிறை வைக்கப்பட்டிருப்பதைக் கண்டு, அவளிடம் இராமன் கொடுத்தனுப்பிய கணையாழி காட்டி, தன் பக்கச்செய்திகளைக் கூறி, மீண்டும் இராமனிடம் வந்து சீதையின் நிலை பற்றிக் கூறும் அனுமனின் கூற்றுகள் யாவும் கம்பருக்குப் பெண்மையில் பெருமைகாணும் பண்பு உள்ளதை நோக்கச் செய்கின்றன.

உனக்கு மனைவி என்ற உரிமைக்கும், உனது தந்தையாகிய தசரதனுக்கு மருமகள் என்ற உண்மைக்கும், மிதிலை மன்னனாகிய சனகனின் மகள் என்னும் தகுதிக்கும் ஏற்றவளாய் இருக்கின்ற சீதை எனக்குத் தெய்வம் போன்றவள் என்கிறான். மானுட அவதாரங்களுக்கு மானுட உறவைக்கூறும் கம்பர் ஒரு விலங்கின் பார்வையில் தெய்வத்தோடு பெண்மையை ஒப்ப வைக்கிறார். மீண்டும் சொல்லிச் செல்லும் அனுமன் இன்னும் ஒருபடி மேலே போகிறான்.

விற்பெருந் தடந்தோள் வீர என்ற பாடலின்மூலம், 'வலிமையான பொறுமையை உடைய 'கற்பு" என்பது மகிழ்வுடன் நடம் புரியக்

கண்டேன்' என்கிறான். இராமனின் அவதார நோக்கம் நிறைவேற வேண்டுமானால் சீதை இராவணன் இடத்திலே இருந்தே ஆகவேண்டும். பிற ஆடவனின் இடத்தில் இருக்கும் பெண் எப்படி இருப்பாள் என்பதையும், எப்படி இருக்க வேண்டும் என்பதையும் இப்பாடலில் கம்பன் காட்டி விடுகிறார். மானுடச் சிந்தனை மாறிவிடலாம். அப்படி மாறிவிடும் சிந்தனைக்கு மருந்தாக இப்பாடலை அனுமன் வாயிலாகத் தருகிறார். இராவணன் இருப்பிடத்தில் இருக்கும் சீதை எந்த நிலையில் இருந்தாள் என்பதைக் கூற வரும் அனுமன்.

வேலையுள் இலங்கை யென்னும் விரிநகர் ஒருசார் விண்தோய்
காலையும் மாலைதானும் இல்லதோர் ககைக் கற்பச்
சோலையங் கதனில் உம்பி புல்லினால் தொடுத்த தூய
சாலையில் இருந்தாளைய தவம் செய்த தவமாம் தையல்" (மேலது)

என்கிறான். 'சீதை இருப்பதோ கனகக்கற்பகச்சோலை ஆனால் இருந்ததோ இலக்குவன் அமைத்த தூய பர்ணசாலையில் இருந்தது போல்' என்கிறான். அவளது இடம்தாம் மாறியுள்ளதே தவிர மனத்திடம் இன்னும் மாறவில்லை என்பதை அழுத்தமாகப் பதிவு செய்கிறார். 'தவம் செய்த தவமாம் தையல்' என்பது சீதைக்குக் கம்பர் சூட்டும் மகுடம். அது பெண்மைக்கான விருது. தூய உள்ளம் கொண்ட, அன்பு மட்டுமே சொந்தம் என்று நினைக்கும் முற்றும் துறந்த ஒரு சிந்தனையாளன் வாயிலாக அந்த விருதானது பெண்மைக்குத் தரப்பட்டுள்ளதைப் பார்க்கும் பொழுது கம்பனின் காப்பிய நோக்கம் பெண்மையை உயர்வு செய்வதே என்பதை உறுதி செய்கிறது.

சுமித்திரை

பட்டத்து அரசிகளில் ஒருத்தி இலக்குவனின் தாய். கைகேயிகேட்ட வரத்தால் இராமனுடன்காடு செல்லப்புறப்படுகிறான். புறப்படும் முன் தன் நாயிடம் அனுமதி பெற வருகின்றான். அனுமதி பெற்றுச்செல்ல வரும் தன் மகனுக்கு ஒருதாய் என்ன சொல்லி அனுப்புவாளோ அதிலிருந்து முற்றிலும் வேறுபட்டவளாகக் கம்பன் சுமத்திரையைப் படைக்கிறார். தசரதனிடம் சுமத்திரை பேசியதாக எந்த இடத்திலுமே காட்டாத கம்பர் இலக்குவனிடத்தில் அவள் கூறும் மொழிகள் அமைந்த இருபாடல்கள் வழியே அவளை மிக உன்னதநிலையில் வைக்கின்றார். உலகியலில் எந்தத் தாயும் தன் மகனுக்கு இவ்வாறு விடைகொடுத்து அனுப்புவாளா? என்பது ஐயப்பாட்டிற்குரியது.

'மகனே! உனக்கு அந்தக் காடே அயோத்தி. அன்பிற்குரிய நம்இராமன் உனக்குத் தந்தை. பூங்குழலியாகிய சீதை உன்தாய் புறப்படு. இங்கே இன்னும் நீ நின்று கொண்டிருப்பது குற்றம்' என்கிறாள்.

பின்னும் பகர்வாள் மகனே இவன்பின் செல் தம்பி
என்னும்படி அன்று அடியாரின் ஏவல் செய்தி
மன்னும் நகர்க்கே இவன் வந்திடில் வா, அது அன்றேல்
முன்னம்முடி, என்றனள் வாள்விழி சோர நின்றாள் (1752)

இராமனுக்குத் தம்பி என்கிற உறவில் அவனுக்குப் பணிவிடை செய்யாதே, அடியவர்களுக்குத் தொண்டன் செய்வது போல் உன் பணியைச் செய், நிலை பெற்ற இந்த அயோத்திக்கு இராமன் திரும்பி வந்தால் நீ வா இல்லையெனில் உன் உயிரைத் துறந்து விடு என்;று சொல்லி அவனை அனுப்பி விட்டுக் கண்களில் கண்ணீர் வழிய அங்கேயே நின்று விடுகிறாள் சுமத்திரை.

பத்தாயிரம் பாடல்களில் இரண்டே பாடல்களில் ஒரு தாயின், ஓர் அரசியின், ஒரு பெண்ணின் உள்ளத்தை எந்த அளவு உயர்த்த முடியுமோ அந்த அளவிற்கு உயர்த்திக் காட்டியிருக்கிறார் கம்பர்.

இராமாயணத்தில் இலக்குவனைப் பார்க்கின்ற நாம் அவனுக்கான இந்தக் குணங்கள் எங்கிருந்து வந்திருக்கும் என நினைக்கும்போது நிச்சயம் இது சுமத்திரையிடமிருந்து வந்தவையே எனச் சொல்ல வைக்கிறார் கம்பர். அமைதியும், தூய்மையும், தெய்வீகத் தன்மையும் கொண்டதாக விளங்கும் 'மானசரோவர்" போன்றவள் சுமத்திரை. நான் எனது என்ற பற்றற்ற நிலையினை அவளிடத்தில் காட்டுகிறார் கம்பர். 'இராமன் உயிருடன் வந்தால் நீயும் வா இல்லையெனில் அவனுக்கு முன் உன் உயிரைத் துறந்துவிடு" என்று கூறும் சுமத்திரையிடம் அகப்பற்று, புறப்பற்று இரண்டும் கடந்த நிலையை நாம் காண முடிகிறது. 'தம்பி என்ற உறவுமுறையில் அவனுக்குப் பணிவிடை செய்யாதே, அடியாருக்குச் செய்வது போல் செய்" என்று கூறும் உள்ளம் தான் எத்தகைய உள்ளம். 'உள்ளத்தில் உண்மைஒளி உண்டாயின் வாக்கினிலேஒளி உண்டாம்" எனப் பாரதி இதைக் கொண்டுதான் பாடியிருப்பார் போலும். பதினான்கு ஆண்டுகள் தவ வாழ்வு மேற்கொண்டு இந்திரசித்தனை வென்ற இலக்குவணனின் வீரத்திற்கு வேராக இருந்தது சுமத்திரையின் 'ஆன்மவீரம்" அவள் கூறும் ஆறு செய்திகள் இலக்குவணனைப் பட்டை தீட்டிய வைரமாகக்

காட்டுகின்றன. இங்கே தாயால் மகன் புகழை அடைகிறான். அவள் ஒரு தாய் மட்டும் அல்ல 'அவள் ஒரு ஞானி"

கைகேயி

காப்பியத்தின் உயிர்நாடி. இராமனின் நம்பிக்கைக்கு உரியவள். கைகேயி கேட்ட வரமே அவதார நோக்கத்தை நிறைவேற்றுகிறது. எனவேதான் இராமன் கைகேயியைத் தெய்வமாக நினைக்கிறான்.

'ஆழிசூழ் உலகம் எல்லாம் பரதனே ஆள, நீபோய்த்
தாழிரும் சடைகள் தாங்கித் தாங்கரும் தவம்மேற்கொண்டு
பூமிவெம் கானம் நண்ணி புண்ணியத் துறைகள் ஆடி
ஏழிரண்டாண்டின் வா என்று இயம்பினன் அரசன்" என்று அவளா சொன்னாள். சொல்ல வைக்கப்பட்டாள்.(கம்பராமாயண ஆழ்கடலில் சில முத்துக்கள் மு.பஷீராஜன்) தாயென நினைவான் முன்னே கூற்றென தமியள் வந்தாள்" (மேலது) என்று கைகேயியை எமனாகக் காட்டுகிறார் கம்பர் ஆனால் இராமனோ அந்த எமனை 'என்தெய்வம்' என்கிறான். கம்பர் முதலில் ஊருடன் ஒத்துச் செல்கிறார். பின்னர் பரம்பொருளுடன் கை கோர்க்கிறார். கம்பனின் பார்வையில் கைகேயி தன் உரிமையை நிலை நாட்டுபவளாக நிற்கிறாள்.

மண்டோதரி

ஏர்தரும் ஏழுலகேத்த எவ்வுருவும் தன்னுருவாய் ஆர்கலி சூழ் தென்னிலங்கை அழகமர் மண்டோதரியைக் கம்பர் பண்பாட்டுடன் படைத்தளிக்கிறார். போர்க்களத்திலே இராமனின் அம்பு பட்டுக் கிடக்கும் இராவணனைப் பார்க்கிறாள்.

வெள்ளெருக்கஞ் சடைமுடியான் வெற்பெடுத்த திருமேனி மேலும் கீழும்
எள்ளிருக்கும் இடம்இன்றி உயிர்இருக்கும் இடம்நாடி இழைத்த வாறோ
கள்ளிருக்கும் மலர்க்கூந்தல் சானகியை மனச்சிறையில் கரந்த காதல்
உள்ளிருக்கும் எனக்கருதி உடல்புகுந்து தடவியதோ ஒருவன் வாளி
(9940)

எனக்கூறி அழுகிறாள். இராமனின் வில் தாடகையின் வதத்தின் போது உள்ளே தங்காமல் கழன்று புறந்தே போனது. வாலியை வீழ்த்தும் போது அம்பானது வாலியின் வாலினால் இறுகச் சுற்றப்பட்டு கையால் பற்றி அதில் இராமனின் பெயரைக் காண்கிறான் வாலி. இங்கே இராவணனின் மார்பில் பட்ட அம்பு உடல் புகுந்து தடவிச் சென்றதாகக் கூறுகிறாரே

ஏன்? சூர்ப்பணகையின் சொல் கேட்டு.

மயிலுடைச் சாயலாளை வஞ்சியர் முன்னம் நீண்ட
எயிலுடை இலங்கை வேந்தன் இதயமாம் சிறையில் வைத்தான்
அயிலுடை அரக்கன் உள்ளம், அவ்வழிமெள்ள மெள்ள
வெயிலுடை நாளில் உற்ற வெண்ணெய் போல் உருகிற்றம்மா (3151)

என்கிறார் கம்பர். மெள்ள மெள்ள சிறையில் புகுந்த காமத்தை உடல்புகுந்து தடவித்தடவிச் சென்று அழிக்கிறது இராமனின் வில். புற இடங்களில் இராமனின் வில் ஆற்றல் பெருமையாகப் பேசப்பட்டாலும் மண்டோதரியின் வாக்கினில் வரும் வில்லாற்றலே மாண்புடையதாய்த் திகழ்கிறது. தன் கணவனின் உயிரைப் பறித்தது இராமனின் வில் என்ற காரணத்தால் சீதையை அவள் பழிக்கவில்லை. மாறாக மனத்தால் சீதையை வாழ்த்தவே செய்கிறாள். சீதையினிடத்து கொண்ட காமத்தால் உயிர் நீத்த தன் கணவனைத் தழுவி ஒரு பெருமூச்சுடன் தன் மூச்சையும் நிறுத்திக்கொண்டு அழியாப்புகழைப் பெறுகிறாள் மண்டோதரி. அரக்ககுலப்பெண்ணேயாயினும் அவளுக்கும் ஆன்ம பலம் உண்டு எனக்காட்டுகிறார் கம்பர்.

முடிவுரை

'கப்பனில் பெண்ணியம்" - காப்பியத்திற்காக தரவு. இராமாவ தாரத்தின் ஆதாரம் கைகேயி; வழி நடத்திச் செல்பவள்;; சீதை திருப்புமுனையை உண்டாக்குபவள் சூர்ப்பணகை; இராமணனைப் பெருமைப்பட வைப்பவள் மண்டோதரி. காப்பியத்தின் உயிர்நாடியாக வருபவர்களாக இருந்தாலும் சரி, ஒரிரு நிகழ்வுகளில் வருபவர்களாக இருந்தாலும் சரி கம்பனின் பெண்மைப் பாத்திரங்கள் அனைத்துமே காப்பியத்தைத் தாங்கியே நிற்கின்றன. இராமாயணக் காலத்தோடு ஒட்டிய பெண்மையும், கனவுகளோடு தீட்டிய பெண்மையும் கைகோத்துக் கம்பனைப் பெண்மையை மதிப்பவராக உலகிற்கு அடையாளம் காட்டுகின்றன.

கம்பன் காட்டும் சீதை – ஒரு பெண்ணிய நோக்கு

பேரா. முனைவர் **சே.செந்தமிழ்ப்பாவை**
இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை, அழகப்பா பல்கலைக்கழகம் ,காரைக்குடி

கல்வியிற் பெரிய கம்பனால் படைக்கப்பெற்ற பெண் மாந்தர்களுள் தலைமையும், சிறப்பும் பெறுபவள் காப்பியத்தின் நாயகியாகிய சீதை. பெண்ணினத்தின் பிரதிநிதியாகக் காட்டப்பெறும் சீதையின் படைப்பாக்கத்தை பெண்ணிய நோக்கில் ஆராய்வது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

பெண்ணியம் என்பது

மரபுசார்ந்த பெண்ணின்மீதான அடக்குமுறை, வன்முறை, புறக் கணிப்புகளுக்கு மாற்றாகப் பெண் நீதி தேடும் நிலையில் எழுந்தது பெண்ணியச் சிந்தனையாகும். பிறப்பு முதல் இறப்பு வரை பெண்கள் எதிர்கொள்ளும் சிக்கல்கள் பெண்ணியத்தில் பேசப்படும் பொருளாக உள்ளன. இப்பெண்ணியம் குறித்து இராஜம்கிருஷ்ணன் அவர்கள், "பெண்ணை ஓர் 'உயிரி' எனச் சமூகம் அங்கீகரித்து அவளுக்கு ஆணுக்குச் சமமான உரிமையும், சுதந்திரமும் கொடுக்கத் தூண்டும் கொள்கையாகும்" என்பர். (காலந்தோறும் பெண், ப.140) இப்பெண்ணியச் சிந்தனைகளை அடிப்படையாகக் கொண்டு இலக்கியங்களில் மகளிர் எவ்வாறு பிரதிநிதித்துவப்படுத்தப்பட்டுள்ளனர் என்று ஆராய்வது பெண்ணியச் சிந்தனையின் ஒரு கூறாகும்.

கம்பன் காட்டும் சீதை

கம்பன் சீதையை மாதர்தொழுதேத்தும் மாண்புடையாளாக, பேதமைத் தன்மையுடையவளாக, இல்லறம் போற்றும் இல்லாளாக, தன் கணவன் மற்றும் குடும்பத்தினர் மீது அன்புடையவளாக, தன் கணவனது நற்பெயருக்குக் களங்கம் வராமல் காப்பவளாக, இன்னா செய்தார்க்கும் இனியவே செய்யும் மாண்பினளாக, கொண்ட கொழுநனின் கட்டளையை மீறாதவளாக, அதற்காக உயிரையும் கொடுப்பவளாகப் படைத்து மொழிந்துள்ளார். இதனைப் பின்வரும் பகுதிகள் விளக்கும்.

உமையாளும் விரும்பும் கமையாள்

கம்பன் மிதிலைக் காட்சிப்படலத்தில் சீதையை, அறிமுகப்படுத்தும்

பொழுது இலக்குமியே இங்கு சீதையாக அவதரித்துள்ளதால் இவளுக்கு அவ்விலக்குமியே உவமையாவாள் என்று சீதையின் அழகிய தோற்றத்தையும், (கம்ப.மி.கா.பட.24) உமையாள் ஒக்கும் மங்கையர் உச்சிக்கரம் வைக்கும் கமையாள் (கம்ப.மி.கா.பட.25) என்பதில் நிலவுலக மகளிர் மட்டுமின்றித் தெய்வமகளிரும் தொழும் சிறப்புடையவளாகச் சீதை உள்ளதையும் குறிப்பிடுவர்.

மேலும் தந்தையின் ஆணைகேட்ட இராமன் காட்டுக்குப் புறப்பட்ட போது அவனுடனே கிளம்பிய சீதை அயோத்தியாபுரியின் மதிலோடு கூடிய கோட்டை வாயிலைக் கடந்து வருவதற்கு முன்னமே எல்லை தீர்வரிய வெங்கானம் யாதோவெனக் கேட்கும் பேதமைத்தனம் உடையவளாகவும் (கம்ப.உரு.பட.61) நீர்க்குமிழியைவிட மெல்லிய பாதங்களை உடையவளாகவும் (கம்ப.கோ.கா.பட.24; தை.மா.பட.53) கம்பன் சீதையைப் படைத்துக் காட்டுகின்றான்.

இல்லறம் போற்றும் இல்லாள்

வள்ளுவரின் வாய்மொழிக்கு இலக்கணமாக விருந்தோம்பலில் சிறந்து விளங்கியவள் சீதை. இராவணனது சிறையில் இருந்த போது சீதை தன் மனத்திற்குள் விருந்தினர்கள் வந்தால் தன் கணவரால் அவர்களை உபசரிக்க இயலாதே; என் செய்வன் என்று வருந்தும் பகுதி விளக்கும் (கம்ப.காட்.பட.15).

இன்னா செய்தார்க்கும் இனிய செய்மாண்பினள்

சீதை தன் கணவனுடன் கானகம் ஏகிய நிலையில், சுமத்திரனிடம் பரத, இலக்குவ, சத்ருக்கனர் மனைவியராகிய என் தங்கையரிடத்து நான் வளர்த்து வரும் கிளியைப் பாதுகாத்து வரும்படிக் கூறுவாயாக என்கிறாள். இதில் குறிப்பாகக் கிளியைப் பாதுகாக்கும்படி கூறுவதில் தமக்கு இன்னா செய்தார்க்கும் இனிய செய்யும் மாண்பு புலனாகும். ஏனெனில் சீதை வளர்த்த கிளியின் பெயர் கைகேயி. இராமன் காடேகக் காரணமாகிய கைகேயின் பெயர் சூட்டிய கிளியைக்கூடத் தன் தங்கைமார் வெறுத்துவிடக்கூடாது என்பதையும், கிளியைப் போலக் கைகேயியையும் சிறப்பாகப் போற்றுங்கள் வெறுக்காதீர்கள் என்பதையும் குறிப்பால் உணர்த்துவது சீதையின் இனிய செய் மாண்பினைப் புலப்படுத்தும்.

மீட்சிப் படலத்தில் அனுமன், சீதையிடம், அசோகவனத்தில் சீதைக்குக் காவலிருந்து துன்பம் இழைத்த கொடிய அரக்கியரை எரித்தழிக்க அனுமதி தருமாறு வேண்டுகிறான். அதற்குச் சீதை, இவ்வரக்கியர்கள் தங்கள் தலைவனான இராவணன் இட்ட கட்டளைப்படியே கடுஞ் சொற்களைக் கூறினார்கள். தாமாக அவர்கள்செய்த தீங்கு எதுவுமில்லை; எனவே அவர்கட்குத் துன்பம் இழைக்க வேண்டாம் என்று கேட்டுக் கொள்வதும் (கம்ப.மீட்.பட.3) மேற்செய்தியோடு ஒப்பு நோக்கத்தக்கது.

தற்கொண்டான் பேணிய தகைமையள்

தற்காத்து, தற்கொண்டான் பேணித் தகைசான்ற சொற்காத்த சோர்விலாளாகச் சீதை விளங்குவதை, அனுமனிடம் என் சொல்லினால் இவ்விலங்கை மாநகரத்தை அழித்துவிடுவேன்; நான் அப்படிச் செய்தால் எனது கணவனது வில்லின் ஆற்றலுக்கு மாசுவரும் என்று கருதியே செய்யவில்லை என்கிறாள். இதனை,

எல் நீத்த உலகங்கள் யாவுமென்
சொல்லி னாற்சுடு வேனது தூயவன்
வில்லி னாற்றற்கு மாசென்று வீசினேன் (623)

என்னும் அடிகள் விளக்கும். இது கொண்ட கொழுநன் புகழுக்குக் களங்கம் வந்துவிடக்கூடாது என்ற சீதையின் உள்ளத்தை, தற்கொண்டானைப் பேணும் தகைமையினைப் புலப்படுத்தும்.

சுயமரியாதையைப் போற்றுபவள்

தன் கணவர்க்கு நாட்டில் இடமில்லை என்றவுடன் தன் கணவருக்குக் கூறியது தானே தனக்கும் என்று கருதிய சீதையின் சுயமரியாதை எண்ணமே பிரிவினும் சுடுமோ பெருங்காடு? என்னும் கூற்றாய் வெளிப்பட்டது. மேலும் அசோகவனத்தில் சீதையைக் கண்ட அனுமன் அவளைத் தன் தோள்களில் ஏற்றி அழைத்துச் செல்கிறேன் என்றபோது அதை மறுக்கும் சீதையின் கூற்று அவள் தன் சுயமரியாதைத் திறத்தை நன்கு புலப்படுத்தும். (கம்ப.சுந்த.சூளா.பட.615)

தன்னலம் பேணாத் தகைமையாள்

அசோகவனத்துச் சிறையில் இருந்த சீதை தன்னலம் கருதாது தன் கொழுநன் நலத்தையே நாடுபவளாக விளங்கினள். இதனை, பிரமாத்திரத்தால் உயிரற்றுக் கிடந்த இலக்குவனையும், இலக்குவனின்

நிலை கருதி மயங்கிக்கிடந்த இராமனையும் கண்ட சீதை பெருந்துயர் கொண்டு புலம்பித் தன்னுயிரையும்விட முற்படுவது விளக்கும். (கம்ப.யுத்த.சீ.பட.2624-2644) இது இராம, இலக்குவனர்கள் மீது அவள் கொண்ட அன்பினையும், தன்னலமற்ற பண்பினையும் புலப்படுத்தும். மேலும் சீதையை அழைக்கச்சென்ற விபீடணன், "தலைவியே விரும்பப்பட்டதாகிய சத்துரு சயம் நிறைவேறி-விட்டது. வேதமுணர்ந்தவர்களான முனிவர்களால் தியானித்து உணரப்படுபவனாகிய இராமன் உம்மைப் பார்க்க விரும்புகிறான். ஆதலால் மனத்துயரை விடுத்து ஆபரணங்களால் தகுதியாக அலங்காரம் செய்து கொண்டு வருவாயாக" என்ற பொழுது, அதனை மறுத்த சீதை "யான் இவ்விலங்கை நகரினுட் சிறையிருந்த போது எப்படி-யிருந்தேன் என்பதை எனது கணவரும், மற்றவர்களும் காணுமாறு இப்பொழுது உள்ள தோற்றத்துடன் வருவதே தகுதி; அலங்கரித்துக் கொண்டு வருதல் சிறப்புடைத்தன்று என்றுரைப்பது (கம்ப.யுத்த.மீட். பட.3960) இராமனது உள்ளக்கிடக்கையை அறிந்த பிராட்டியின் உளவெளிப்பாட்டுக் கூற்றாகும்.

கணவனின் கட்டளையைச் சிரமேற் கொண்டவள்

சீதை தனக்கென்று சில நெறிகளை வகுத்துக் கொண்டு வாழ்ந்த போதும் கணவன் இட்ட கட்டளையை மீறாதவளாக விளங்குவதைக் கம்பன் ஈரிடங்களில் காட்டுகின்றான். ஒன்று விபீடணன் அழகுபடுத்திக் கொண்டு வாருங்கள் என்றவுடன் மறுத்தவள், நான் கூறியது இராமபிரான் கட்டளை என்றவுடன் உடனே கணவன் சொல்லைத் தட்டாத காரிகையாக, கணவனுக்காகத் தன்னை அலங்கரித்துக் கொள்கிறாள் (கம்ப.யுத்த.மீட்.பட.3691).

இரண்டாவதாக சீதையைக் கண்ட இராமன் படம் எடுத்துச் சீறும் பாம்பு போல் வெகுண்டு "அரக்கன் நகரில் ஒழுக்கம் கெட்டும் மாயாது; ஊனைநச்சி ஓராண்டு இருந்தாய் நல்லொழுக்கம் அழிந்திடவும் நீ இறந்தாயில்லை; இத்தன்மையுடைய நீ அச்சமின்றி இவ்விடத்திற்கு மீண்டு வந்தது யாது கருதி? தான் உன்னை விரும்புவேன் என்பது உன் கருத்தோ? (கம்ப.யுத்த.மீட்.பட.3980-82) "நான் கடல் கடந்து இலங்கை சேர்ந்து பெரும்போர் செய்து இராவணனைக் கொன்றது உன்னைச் சிறைமீட்டு அழைத்துக்கொள்ள விரும்பியன்று; மனையாளை மாற்றான் கொள மீட்கவில்லை என்ற பழி எனக்கு வாராமல் தடுக்கும் பொருட்டே" (கம்ப.யுத்த.மீட்..3983).

இனியும் யான் கூற வேண்டியது ஒன்றுமில்லை; உன் தீயொழுக்கம் என் அறிவை, மனத்தை அறுக்கின்றது. ஆதலால் நீ இப்பொழுது செய்ய வேண்டியது இறந்துபடுதல் என்று உரைத்தபோது உடனே சீதையும், இந்நிலையில் எனக்கு இறத்தல் போலச் சிறந்தது வேறொன்றுமில்லை என்று கூறி இலக்குவனை அழைத்து நெருப்பு வளர்க்கக்கூறி அதில் புகுந்தாள் (கம்ப.யுத்த.மீட்.பட.3997) என்பதாகும்.

மேலைச்செய்திகள் ஒரு பெண் என்றால் எப்படி இருக்க வேண்டும் என்று சமூகம் கட்டமைத்துள்ள பிம்பத்திற்குப் பொருந்தும் ஒரு பாத்திரமாகச் சீதை விளங்குவது புலனாகும். இங்ஙனம் கணவனுக்காக உடல், பொருள், ஆவி என அனைத்தையும் ஒப்படைக்க விரும்பும் பெண்ணாக இருந்தபோதிலும் சுயமரியாதையை விரும்புபவளாக, தன் ஒழுக்கம் கேள்விக்குறியாக மாறும்போது அதைக் கூறுபவன் கணவனாக மட்டுமன்றிக் கடவுளாகவே இருந்தாலும் எதிர்த்து தன்நிலையை எடுத்துரைப்பவளாகவும் சீதை அமைந்துள்ளமை சுட்டத்தக்கது.

கடவுளாகிய மடவை

இராமன் வில்லேற்றிச் சீதையை மணந்தபோதிலும் அவனுடைய ஆழ்மனத்தில் சீதை அரசமகளல்ல, தாய், தந்தை யாரென்று அறியாத ஒரு அனாதை என்ற எண்ணம் பதிந்து போயுள்ளது. நெடுநாள் உள்ளத்தில் இருந்த இந்த எண்ணம் இலங்கையில் சீதையைக் கண்டவுடன் தன்னுடைய நிலையை மறந்து ஒரு சராசரி ஆண்மகனைப் போல, மேன்மையான உயர்ந்த குலத்தில் பிறவாமல் புழுப்போல நிலத்தினின்று நீ தோன்றியதற்கு ஏற்பவே உன்னுடைய செயல் அமைந்துள்ளது என்கிறான். மேலும் இன்னும் நீ உயிரோடு இருப்பதற்கு உன்னுடைய பிறப்பே காரணம் என்றும், நல்ல குல மகளிர்க்கு உரிய நற்செயல்கள் உன்னிடத்தில் இல்லை என்று கடவுளாக இருந்தும் மடப்பத்தனத்துடன் குற்றம் சுமத்துகின்றான். (கம்ப.யுத்த.மீட். பட.3985-86)

கற்பின் கனலியின் பெண்ணிய வெளிப்பாடு

அரக்கனின் அசோகவனத்தில் அத்தனை இன்னல்களைத் தாங்கி தான் உயிர் வாழ்ந்தது இவ்அற்ப மானிடனுக்காகவா என்று நினைத்த மாத்திரத்தில் உயிர்விடத் துணிந்த சீதை தன்னைப்

பார்த்து தன் ஒழுக்கத்தைக் கேள்விக்குரியாக்கியவனுக்குத் தன் பக்க நியாயங்களைக் கூறாமல் இறந்து போக விரும்பவில்லை. எனவே, உன் தூதுவனாகிய மாருதி என்னை மீட்டற்கு இவ்விடத்து நீ வருவாய் என்றனன். ஆதனால் தான் நான் உயிரோடு இருந்தேன். அதோடு ஓராண்டாக ஓராடையுடன் அமர்ந்த இடமே செல்லரித்துப் போக நான் இருந்த நிலையை உன் தூதுவன் உனக்கு உரைத்திருப்பான் என்று நினைத்தேன். இவ்வுலகம் முழுவதும் நான் உத்தம பத்தினியென்றும், பிரமனாலும் மாற்ற முடியாத மனநிறையுடையேன் என்றும் அறியும் உன் ஒருவனுக்குத்தான் என்னைப் பற்றித் தெரியவில்லை என்று கூறியவள் இறுதியாக,

பங்கயத் தொருவனும் விடையின் பாகனும்
சங்குகைத் தாங்கிய தரும மூர்த்தியும்
அங்கையி னெல்லிபோ லனைத்து நோக்கினும்
மங்கையர் மனநிலை யுரை வல்லரோ (கம்ப.யுத்த.மீட்.பட.3996)

என்று சராசரி ஆண்மகனாக இருந்தாலும், அல்லது தெய்வமாகவே இருந்தாலும் உங்களால் பெண்களின் மனநிலையையும், அவளின் கற்புத் தன்மையையும் அறியமுடியாது என்று ஆவேசமாக உரைப்பதன் வழி தன் பெண்மையின் மேன்மையை உணரச் செய்கின்றாள்.

முடிவுரை

கம்பன் பண்டைப் பெண்ணினத்தின் பிரதிநிதியாகச் சீதையைப் படைத்துள்ளான். பெண்ணொருத்தி தன் கற்பை நிரூபிக்கத் தீப்புகுதல் என்பது பெண்குலத்திற்கு இழைக்கப்பட்ட அநீதியாகும் கம்பனது காவியம் எழுதப்பட்ட காலம் தற்காலத்திலிருந்து வேறுபட்டது எனினும் பொதுவான மானுடநீதி என்றடிப்படையில் பார்க்கும் போது காலத்தால் நியாயப்படுத்தப்படக்கூடியதல்ல சீதைக்கு இழைத்த அநீதி என்பது புலனாகும். இங்ஙனம் அநீதி இழைக்கப்பட்ட போதும் அதற்காக அஞ் சாதவளாக, கணவனாகிய கடவுளையே கேள்வி கேட்பவளாக, தன்பக்க நியாயத்தை நிலைநிறுத்துபவளாகச் சீதை படைக்கப்பட்டுள்ளமை இன்றைய பெண்ணினத்திற்குச் சற்று மகிழ்வூட்டும் செய்தியாகும்.

கம்பன் காட்டும் கவின்கலைகள்

முனைவர் **வீ.கே. கஸ்தூரி நாதன்**
குழிபிறை, புதுக்கோட்டை

பண்டைக்காலத்தில் கலைகளை ஆயகலைகள் அறுபத்து நான்கு என்று வகைப்படுத்தி அவற்றை வாழ்வியல் கலைகளாகக் கொண்டாடி வந்தனர். சிலப்பதிகாரம் என்னும் செம்மொழி காப்பியம் "எண்ணெண் கலையும் இசைத்துடன் போக" என்றும், "எண்ணான் கிரட்டி இருங்கலை பயின்ற பண்ணின் மடந்தையர்" என்றும் குறிப்பிடுவதைக் கொண்டு நுண்கலைகள் அறுபத்து நான்காக இருந்தமையை அறியலாம். "மனிதனுடைய உள்ளத்தில் ஊறும் உணர்ச்சிகளை ஓங்குர எழுப்பி அழகையும் இன்பத்தையும் அளிக்கின்ற பண்பு அழகுக் கலைகளுக்கு உண்டு. அவற்றின் மூலமாக மனிதன் உணர்ச்சியையும், அழகையும், இன்பத்தையும், காண்கிறான்" என்று கூறுகிறார் மயிலை சீனி வெங்கடாசலம். தனி நாயக அடிகள் "தமிழரும் அவர்தம் கவின் கலைகளும்" என்னும் கட்டுரையில் 'கவிதைக்கலை, இசைக்கலை, சிற்பக்கலை, நாட்டியக்கலை, ஓவியக்கலை ஆகியன கவின்கலைகளே' என்று பகருகின்றார். இத்தகைய கவின் கலைகளை கம்பன் தாம் படைத்த காப்பியத்தில் விரவலாகப் பரவ விட்டுள்ளான். அவற்றைப் பற்றிய ஒரு பறவைப் பார்வையே இக்கட்டுரையின் முயற்சியாகும்.

சிறப்பு மிக்க சிற்பக்கலை

ஆதி மனிதன் காலத்திலேயே சிற்பக்கலை சிறகை விரிக்கத் துவங்கி விட்டதை தொல்லியல் ஆய்வுகள் சொல்கின்றன. அருள் முருகன் என்பவர் திருமயம் கோட்டையில் கண்டறிந்து வெளியிட்டுள்ள கோட்டோவியங்கள் கி.மு.5000-க்கு முற்பட்டவை என்று தெரிய வருகின்றன. கம்பன் காட்டும் கவின்கலைகளில் சிற்பக்கலையும் ஓவியக் கலையும் சிறப்பாக இடம் பெற்றுள்ளன. மிதிலை நகரக் காட்சி படிப்போர் இதயத்தைக் கவரும் வண்ணம் காட்டப்படுகின்றன. மருத நிலத்தின் மாட்சியைக் கம்பன் ஓவியமாகவே உலவவிடுகிறான்.

தண்டலை மயில்கள் ஆடத் தாமரை விளக்கம் தாங்க
கொண்டல்கள் முழவின் ஏங்க தவளை கண்விழித்து நோக்க
தெண்திரை எழினிகாட்டி தேம்பிழி மகர யாழின்
வண்டுகள் இனிது பாட மருதம் வீற்றிருக்கும் மாதோ (4)

என்ற கவிதை வரிகள் அழகியதோர் ஓவியக் காட்சியை அற்புதமாக உள்ளத்தில் பதிய வைக்கின்றன. அயோத்தி நகரின் மாட மாளிகைகளும் கூட கோபுரங்களும் தேவலோக மாளிகைகளின் அழகை ஒத்திருக்கின்றன என்று கட்டடக்கலையையும் சிற்பக்கலையையும் சேர்த்தே படம் பிடித்துக் காட்டுகிறார்.

மின் என விளக்கு என வெயிற்பிழம்பு என
துன்னிய தமனியத் தொழில் தழைத்த அக்
கன்னிறல் நகர் கழல் கதுவலால் அரோ
பொன்னுலகு ஆயது அப்புலவர் வானமே (40)

என்ற வரிகள் ஈண்டு நோக்கத்தக்கன.

மாளிகைகளின் மாண்புகள்

மன்னர்களின் உறைவிடம் அரண்மனை என்றும் மாளிகை என்றும் கூறப்பட்டன. கம்பன் மிதிலை நகர் காட்சியைக் காட்ட முற்படும்போது கட்டிடக் கலையின் கவின்கலையைக் கண்முன் கொண்டுவந்து நிறுத்துகிறான்.

வானரகம் பொருதவேலும் மன்மதன் சிலையும் வண்டின்
கேளொடு கிடந்த நீலச் சுருளும் செங்கிடையும் கொண்டு
நீள் இருங்களங்கம் நீக்கி நிரை மணி மாட நெற்றிச்
சாளரம் தோறும் தோன்றும் சந்திர உதயம் கண்டார் (14)

என்ற வரிகள் உள்ளுந்தோறும் உவகை தருவனவாகும்.

இலங்கையின் எழில் மாடக்கூடம் எப்படி இருந்தது என்பதைக் கம்பன் கண்ஆடியைக் கொண்டு காட்டுவதுபோல் கண்முன் காட்டுகிறான். பொன்கொண்டும், மின்கொண்டும் அமைத்தது போல் மாட மாளிகைகள் தேவலோகத் தச்சன் மயனைக் கொண்டு அமைக்கப்பட்டதாகக் காட்டுகிறான்.

பொன்கொண்டு இழைத்த? மணியைக் கொண்டு பொதிந்த
மின்கொண்டு அமைத்த? வெயிலைக் கொடு சமைத்த
என்கொண்டு இயற்றிய எனத் தெரிவு இலாத
வன்கொண்டல் விட்டு மதி முட்டுவன மாடம் (ஊர் தேடுபடலம்- 1)

என்ற வரிகள்இதயத்தில் இமாலய வியப்பை ஏற்படுத்துகின்றன.

ஆடல் கலையும் பாடல் கலையும்

"ஆடலும், பாடலும் ஆனந்தத்தின் வெளிப்பாடு" என்பர் ஆன்றோர். கம்பன் காட்டும் கவின் கலைகளில் ஆடலும் பாடலும் அணிவகுத்து நிற்பதை காப்பியம் முழுவதும் காணக் கிடைக்கின்றன. பால கண்டத்தின் வரைக் காட்சிப் படலம் இதற்கு எடுத்துக்காட்டாகும்.

மண்ணும் முடிவின் ஒலி, மங்கையர் பாடல் ஓதை
பண்ணும் நரம்பின் பகையா இயல் பாணி ஓதை
கண்ணும் முடைவேய் இசை கண்ணுளர் ஆடல்தோறும்
விண்ணும் மருளும்படி விம்மி எழுந்த அன்றே (44)

என்ற வரிகள் ஈண்டு நோக்கத்தக்கது. அதுபோலவே உண்டாட்டுப் படலத்திலும் ஆடவர் மகளிர் ஆடல் காட்சிகளை அழகுறப் பேசுகிறான் கம்பன்.

பயிர் உறு கிண்கிணி, பரந்த மேகலை
வயிர வான் பூண் அணி வாங்கி நீக்கினாள்.
உயிர் உறு தலைவன் பால் போக உன்னினாள்
செயிர் உறு திங்களைத் தீய நோக்கினாள் (உண்டாட்டுப் படலம் - 40)

ஏற்றம் பெற்று விளங்கிய இசை

கம்பன் இசையைப் பற்றி பலவிடங்களில் பாங்குறப் பேசுகின்றான். இராமன் திருமணம் காணப் புறப்பட்ட எழுச்சிப் படலத்தில் பாணரும் விறலியரும் பாங்குற இசைத்து மகிழ்ந்த காட்சியைக் கம்பன் காட்டும் திறம் போற்றுதலுக்குரியது.

அறல் இயல் கூந்தல், கண்வாள் அமுதுஉரு குமுதச் செவ்வாய்
விறலியரோடு நல்யாழ்ச் செயிரியர், புரவிமேலார்,
நறைசெவிப் பெய்வது என்ன நைவன அமுதப்பாடல்
முறைமுறை பகர்ந்து போனார் கின்னர மிதுனம் ஒப்பார் (60)

என்ற வரிகள் எண்ணிப் பார்த்து இன்புறத் தக்கது. அது போலவே நிலவை வருணிக்கும் போது அதன் ஒளி எங்ஙனம் பரவியது என்பதை "இசை உருவம் கொண்டு இடங்கள் தோறும் பரவியது போல பரவியது அருணனி அமுத ஒளி" என்று பாடுகிறார். இராவணன் ஓர் இசைப்புலவன்! சிவபெருமானின் சிந்தை மகிழ சீகாமரம் பாடியவன்! வீணை மீட்டுவதில் வல்லவன்! அவனை இசையில் ஈடும் எடுப்பும் இல்லா பாடும் புலவனாகவே கம்பன் காட்டுகிறான். மேலும், தாம்படைத்த இராமாயணக் காப்பியத்தில் வாய்ப்பு நேரும் இடத்தில் எல்லாம்

இசையையும் அதனால் ஏற்படும் மகிழ்வையும் வெளிப்படுத்துகிறான். ஊர் தேடு படலத்தில் அரக்கர் பெருமிதிவாழ்வு பற்றி பாடும் கம்பன்

பாடுவார் பலர்என்னின் மற்று அவரினும் பலரால்
ஆடுவார்கள், மற்று அவரினும் பலர் ஊளர் அமைதி
கூடுவாரிடை இன்னியம் கொட்டுவார் முட்டுஇல்
வீடுகாண்குறும் தேவரால் விழுநடம் காண்பார்

என்று நாடகக் காட்சியை நம் கண்முன் நிறுத்துகிறான்.

ஏழு சுரங்களால் ஆகிய இசையைப் பண் என்று பகருவர் கம்பன் பதினொரு இசைவாணர்களைப் பட்டியல் இடுகிறான் அவர்கள். 1. கண்ணுளர், 2. கோடியர், 3. சீறியாழ்ப்பாணர், 4. சூதர், 5. செயிரியர், 6. சென்னியர், 7. பாணர், 8. பொருணர், 9. மதங்கியர், 10. மாகதர், 11. வயிரியர் எனப்படுவர். கம்பன் தம் காப்பியத்தில் பல்வேறு பட்ட ஆடை வகைகளை அறிமுகப்படுத்துகிறான். வெண்ணிறப்பட்டு, செந்நிறப்பட்டு நீலப்பட்டு, பொன்னிறப் பட்டு, பன்னிறப்பட்டு என்பன அவற்றுள் சிலவாகும். இவையாவும் நுண்கலையால் அழகுபடுத்தப்படுகின்றன.

கம்பனின் கவின் கலைகள்

க. அறிவுக்கனி

முனைவர் பட்ட ஆய்வாளர் அ. வீ.வா.நி.திரு புட்பம் கல்லூரி (தன்னாட்சி) பூண்டி.

முன்னுரை

இயற்கையைக் கண்டு அதனை அநுபவிக்கின்ற அவனுடைய மனம், அறிவு, செயல் முதலியவற்றிற்கு ஏற்பவே அவனது அநுபவம் அமைகிறது. அவ்வநுபவம் கலையாக ஆக்கப்படும். பொழுது இயற்கை அங்கில்லை. அதற்கு ஈடாகத் தனிப்பட்ட அவன் மனத்தில் அது எக்காட்சியைத் தோற்றுவிக்கிறதோ அக்காட்சியே கலையாக உருவாகிறது. கட்டடம், சிற்பம் ஓவியம், இசை ஆகியவை தொகுப்பினுள் அடங்கும். கம்பர் தம் புலமைக்கு ஏற்பத் தமிழின் புகழையெல்லாந் தன்புகழ் ஆக்கிக்கொண்டார். இப்புலவர்பெருமான். அமிழ்தினைச் சுவை செய்தார் போல் கலைகளை வான்மீகி முனிவர் தந்த இராமகதையிலிருந்து இனிமையுறச் செய்தார்.

ஓவியக்கலை

தேவர், மக்கள், விலங்கு, பறவை, இயற்கைப்பொருள்கள் முதலிய காட்சிகளின் உருவங்களைத் துணி, பலகை, காகிதம், சுவர் ஆகியன வற்றின்மீது நிறைவுசெய்து வரைந்து வண்ணம் தீட்டி அமைப்பது ஓவியம் எனப்படும். அங்ஙனமே சொற்களாகக் கோத்துப் பொருள் விளங்கத் தொடுக்கப்படும் பாமாலைகளைச் சொல்லோவியம், பாட்டோவியம், காவியோவியம் என்று கூறுவது வழக்கம் ஆகும்.

ஓவியம் எழுதுங்கள் அவ்வோவியத்திற்கான எடுப்புத் தோற்றத்தையும் வண்ணங்கலவாத மெல்லிய கோடுகளால் முதலில் வரைந்து. பின்னர் முழு ஓவியம் வரையத் தொடங்கினார். அம்மாதிரி வரையும் முற்றும் பெறா ஓவியத்தைப் "புனையா ஓவியம்" என்றனர்.

இச்செய்தியைப் பின்வரும் மணிமேகலை அடிகளில் காணலாகிறது. "புனையா ஓவியம்" எனும் தொடர் நம்மைத் தெளிவாக்குகிறது.

நாடக அரங்குகளில் காணும் எழினி எனப்படும் திரைகளில் பல்லுருவங்கள் மரம், செடி, கொடி, இயற்கைக் காட்சி, சிங்கம், புலி போன்ற உருவங்களையும் எழுதினார். கோயில் சுவர்களிலும், நடன மண்டபங்களின் கூரைகளிலும், ஆடைகளிலும், பானைகளிலும்

ஓவியம் வரைந்தனர்.

உச்சி முதல் பாதம்வரையிலும் ஒவ்வோர் அணிகலனும் அவர் உடம்பில் இருந்தன. அக்கால வழக்கப்படி உடம்பில் சட்டை இல்லாது கஸ்தூரியும் சந்தனமும் கலந்து பூசி ஓவியம் எழுதிய "தொய்யில்" என்னும் கலவைப் பூச்சோடு சீதைக்கு அலங்காரம் செய்தனார். அச்செய்தியை

சில்இயல் ஓதிகொங்கைத் திரள்மணிக் கனகச் செப்பில்
வல்லியும் அனங்கன் வில்லும் மான்மதச் சாந்தின் தீட்டி
பல்லியல் நெறியின் பார்க்கும் பரம்பொருள் என்ன யார்க்கும்
இல்லை உண்டு என்ன நின்ற இடையினுக்கு இடுக்கண் செய்தார்
(1128)

என்றான் கம்பன்.

ஓவியத்தில் தெளிவாகத் தோற்றுவிக்க முடியாத நுண்ணிய உணர்ச்சி வேறுபாடுகளையும் இயக்கங்களையும் அவர்தம் பாட்டோவியத்தில் விளக்கமுறை கூறப்பட்டுள்ளது. உருவில்லாத குணங்களையும் உருகி கொண்டு பொலியச் செய்துள்ளார். இது கம்பன் சொல்லோவியத்தில் காணப்படும் தனிச்சிறப்பாகும்.

கட்டடக் கலை

சங்ககாலத் தமிழகத்தில் சிறுதெய்வங்களுக்கு கோயில்கள் இருந்தன. இச்செய்திகள் சங்கப்பாடல்கள்வழி தெரிகிறது. கோபுரங்கள், மண்டபங் கள், மாளிகைகள், வாயில்கள் ஆகியன அச்செய்யுளின் வழியாக அறிய முடிகின்றன. அக்கட்டிடங்கள் அழியக்கூடிய மண், செங்கல், மரம், சுண்ணாம்பு, ஆகியவற்றால் கட்டப்பட்டவை என்று கூறப்படுகின்றது. அக்கலைக் கோயில் போன்ற கட்டங்களைக் கட்டக் கட்டடக்கலை அறிஞர்கள் அறிந்து இருந்தனர். அச்செய்தி,

வேயா மாடமும் வியன்கல இருக்கையும்
மான்கட் காலதர் மாளிகை யிடங்களும்
கயவாய் மருங்கிற் காண்போர்த் தடுக்கும்
பயனற வறியா யவன இருக்கையும்
கலந்திருந் துறையும் இலங்குநீர் வரைப்பும்

என வரும் சிலப்பதிகார அடிகள்வழி அறிய முடிகிறது.

அயோத்தியா நகரில் கோடிக்கணக்கான மாளிகைகள் நிறைந்துள்ளன. அவை சிற்பநூல் விதிப்படி சிறப்புற அமைந்தவை வெண் சுதை தீட்டிய பொன்தகடு வேயப்பட்டவை அதோடு மட்டும் இன்றி எங்கும் பொன் மண்டபங்களும், மலர்க்கொடி மணித்தலங்களும் முன்றில்களும் மலிந்துள்ளன.

பளிங்கினால் செய்யப்பட்ட பவளத்தால் அமையப் பெற்ற கூடம், கற்பகத்தால் செய்யப்பட்ட பந்தார், துருநிறம் உடைய அரக்கர்கள் நடுவில் வெள்ளை நிறமுடைய அறம் வாழ்ந்தால் வெளிப்பட்டு விடும் என்று கருதி ஒளிந்து வாழ்ந்திடும் தருமம் போன்ற வீடணனை அடைந்தான். அச்செய்தியை

பளிக்குவேதிகைப் பவளத்தின் கூடத்துப் பகந்தேன்
துளிக்கும் கற்பகப் பந்தரில் கருநிறத் தோர்பால்
வெளித்து வைகுதல் அரிது என அவர்உரு மேவி
ஒளித்து வாழ்கின்ற தருமம் அன்னான் தனை உற்றான் (4970)

என்ற பாடல் அடிகளால் பார்க்க முடிக்கிறது.

அந்நகரில் நாற்புரங்களினும் நான்கு கோபுர வாயில்கள் அமைந்திருந்தன. அவை திருமால் உலகளந்தவனாக கட்டிடத்தில் இடம்பெறலாயிற்று. அக்கட்டிடங்கள் அளந்து அடக்க உயார்த்திய தாளினும் ஓங்கி உயர்ந்திருந்தன. அவற்றுள் ஒவ்வொன்றும் ஏழ்நிலைகளைக் கொண்டு எழிலுற அமைந்திருந்தன. அவற்றின் ஒவ்வொரு நிலையையும் கம்பன் தம் கற்பனை நலம் செறிந்த காவிகளில் அமைத்து நம் கண்முன் நிறுத்திக் காட்டியிருக்கின்றார்.

முடிவுரை

கம்பனது கவிதைகளிலே இலக்கியச் செறிவும் சீரிய பார்வைகளில் ஓவியக் கலை, கட்டடக் கலை ஆகியன பற்றியும் இக்கட்டுரையில் ஆய்வு செய்யப்பட்டுள்ளன. இயற்கையோடு இயைந்த வாழ்க்கையை கவிதையால் வருணித்து அக்கருத்தின் பொருந்துமாற்றான் கம்பன் எடுத்து உரைக்கும் விதம் நோக்கத்தக்கதாக உள்ளது.

கம்பராமாயணத்தில் இசையியல்

முனைவர் பொ. சம்பூரணம்
குரலிசை விரிவுரையாளர், தமிழ்நாடு அரசு இசைக்கல்லூரி, மதுரை

கம்பநாடனுடைய பாலகாண்டத்தில் நாட்டுப்படலம், நகரப்படலம், மிதிலைக் காட்சிப்படலம் ஆகிய மூன்றுபடலங்களில் பயின்றுவரும் இசையியல் செய்திகளைக் காண்போம்.

கம்பன் காட்டும் கலையரங்கு

நாட்டுப்படலத்தில் கோசலநாட்டின் இயற்கையழகைப் பலவாறு விவரிக்கும் கம்பர் எழுத்தோவியங்கள் பலவற்றையும் தீட்டுகிறார்;. அவர் காட்டும் கலை அரங்குஅரங்கவியல் இலக்கணம் அனைத்தும் பொருந்த அமைந்து தமிழ் உள்ளங்களைக் கொள்ளை கொள்கிறது.

கோசலநாட்டின் சோலைகளில் மயில்கள் ஆடிக்கொண்டிருக்கின்றனது குளங்களில் தாமரை மலர்கள் நிற்கின்றனது மேகங்கள் இடிமுழக்க மிடுகின்றனது குவளைக் கொடிகளில் மலர்கள் மலர்ந்துள்ளன. நீர் நிலைகளில் அலைகள் ததும்புகின்றன. வண்டுகள் ரீங்காரமிடுகின்றன. கோசலநாட்டின் இவ்வியற்கை வளம் கலையரங்காய் கற்போருக்குக் காட்சியளிக்கிறது எனலாம். இவ்வாறு கோசலத்தின் இயற்;கை வளம் இசையும் கூத்தும் இணைந்த கலையரங்காய்க் கம்பனால் காட்சிப் படுத்தப்படுகின்றது. இவற்றுக்கெல்லாம் சிகரமாக மருதநாயகியே கலையரங்கின் அரசியாய் கொலு வீற்றிருக்கிறாள் என்பது கம்பன் காட்டும் கலையரங்காகும். இதனை ஷஷ எதிரே கொலுவீற்றிருக்கும் அரசி மருதாயி நாச்சி இக்காட்சியைக் களிக்கிறாள்" என்பார் பேரா. அ.ச. ஞானசம்பந்தம். (ஞானசம்பந்தம் அ.ச. கம்பன் கலைநிலை,ப. 4)

கோசலநாட்டில் பாடலும் ஆடலும்

நாட்டுவளத்தைச் சொல்லுகிறபோது நீர் சூழ் வயலும், செந்நெல் விளைவும் படைப்பாளிகளால் எடுத்தாளப்படுவது இயல்பே. வள்ளுவப் பெருந்தகையும் "தள்ளாவிளையுளை" உடைய நாட்டினைச் சுட்டுவார். விளைச்சல் பெருகி செல்வ வளமிக்க மருதநிலம் கூத்தும் பாட்டுமாய்க் கொண்டாட்டங்களோடு செழிப்புற்று விளங்குகிறது. இந்த செல்வ வளத்தைக் கலைவளமாய்க் கவினுறக்காட்டுவார் கம்பர்.

கொன்றை வேய்ங்குழல் கோவலர் முன்றிலில்
கன்று உறக்கும் - குரவை, கடைசியர்,
புன்தலைப் புனம் காப்புடைப் பொங்கலில்
சென்று இசைக்கும் - நுளைச்சியர் செவ்வழி. (நாட்டுப்படலம்:3)

பெண்கள் குரவைக்கூத்தாட, கோவலர்கள் குழலிசைக்க, முற்றங்களில் கன்றுகள் உறங்குகின்றன. நெய்தல் நிலப் புனங்களில் மகளிர் பாடும் செவ்வழிப்பண் புனங்களிலும் சோலைகளில் ஊடுருவி ஒலிக்கின்றது. நாட்டு வளம் கூறும் இப்பாடலில் மருதம், முல்லை, நெய்தல் என மூன்று திணைகளின் பாடலையும், ஆடலையும் பதிவு செய்கிறது.

இயலும், இசையும் இயைபுப் படல்

சுரத்தோடு சாகித்தியமும் இணைந்து வரும் போது இனிமை அதிகரிக்கும். இந்த இயைபு இசை இலக்கணத்தில் இன்றியமையாத கூற்றாகும். இசையின்; இந்த நுணுக்கத்தை, **பருந்தொடு நிழல் சென்றன்ன இயல் இசை பயன் துய்ப்பாரும்'** (நாட்டுப்படலம்- 15:3-4) எனக் கம்பர் குறிப்பிடுகிறார். பருந்தோடு அதன் நிழல் தொடருவது போல இயலோடு இயையும் இசை உள்ளதென்பார். கோசல நாட்டு மக்கள் நுகரும் இசையைச் சுட்டும் இத்தொடர்கள் இசைஇலக்கண நுணுக்கம் அமைந்த ஒரு செய்தி எனலாம்.

அயோத்தி நகரச் சிறப்பைச் சுட்டுகிற போது ஆடலும் பாடலும் இசைப் பின்னணியில் இயைபு பட அமைவதனையும் கம்பர் காட்டுகிறார். நாட்டிய நுல் முறைப்படி சதங்கைகளைக் காலில் அணிந்து ஆடும் மகளிரின் (மதங்கியர்) நடனம், தண்ணுமை எனும் மத்தள ஒலிக்கும், பாணி எனும் கைத் தாளத்திற்கும், சதி என்னும் தாள ஒத்துக்கும் இயைய அமைந்துள்ளது என கம்பர் சுட்டுவது (நகரப்படலம்-52) ஆடலும் பாடலும் இசைக்கு இயைய அமைய வேண்டும் என்கிற கலைக் கோட்பாட்டின் வழிப்பட்டது. இதே பாடலில் இசைக்கு ஆடும் குதிரையையும் "அல்லன புரவித்தார்களே" என்ற தொடர்வழி கம்பர் சுட்டுகிறார்.

மகளிர் சொல்லும் இசையும்

அயோத்திநகர இளம்பெண்களைச் சுட்டுகிறபோது அவர்தம் குதலை மொழிக்கும், மழலை மொழிக்கும் சொல்லுக்கும் இசைக் கருவிகளின் இனிய ஓசையை உவமைப்படுத்தி பேசுகிறார் கம்பர். பெண்களின்

குதலை மொழி குழலிசையாகவும், மகர யாழிசையாகவும் மான்புர ஒலிக்கின்றது. மேலும் அவர்களது இன்சொல் பொருநர்கள் பாடும் இசையாய் இனிமை பயக்கிறது என்பார். (நகரபடலம் 43)

மேலும் "அரங்கிடை மடந்தையர் ஆடுவார்" (நாட்டுப்படலம் 46:1) எனக் குறிப்பிடுவதன் வழி பாடல் அரங்குகளும், ஆடல் அரங்குகளும் அயோத்தி நகரில் இருந்தன என்பதை உணரமுடிகிறது.

இசைக் கருவிகள்

கோசல நாட்டுவளத்தைக் குறிப்பிடும் கம்பர் அங்கு இசைக்கப்படும் கருவிகளை நமக்குக் காட்டுகிறார். சங்கு, பறை, மத்தளம் முதலிய கருவிகளின் ஓசை உழவர்களின் ஆரவாரத்தில் அடங்கி விடும் என்பார்.

மூக்கில் தாக்குறும் மூரி நந்தும், நேர்
தாக்கின் தாக்குறும் பறையும், தண்ணுமை
வீக்கின் தாக்குறும் விளியும், - மள்ளர்தம்
வாக்கின் தாக்குறும் ஒலியில் மாயுமே (நாட்டுப்படலம் - 57)

பிறிதோரிடத்தில் குழல் என்னும் இசைக்கருவி மூங்கிலாலும் கொன்றையாலும் ஆனது என்பதனை 'கொன்றை வேய்ங்குழல்' (நாட்டுப்படலம் - 34:1) என்ற தொடரால் குறிப்பிடுகின்றார்.

யாழும் முழவும் இயைந்து ஒலிக்கும் இசைச் சூழல் கம்பரால் இவ்விரு படலங்களிலும் பரவலாகச்சுட்டப்படுவது எண்ணத்தக்கதாகும். அயோத்தி நகரமானது இசைக்கருவிகளின் ஒலியால் நிரம்பி வழிகிறது என்றும் கம்பர் சுட்டுகிறார். நகரம் முழுவதும் சங்கொலி, கொம்பொலி, யாழொலி, மத்தளஒலி, வீணையொலி, குழலொலி எனப் பல்லியங்களும் ஒலிப்பது கடல் முழக்கத்தை விடப் பெருகி ஒலிக்கிறது என்பார் (நகரப் படலம்-61). பாணர்கள் வீட்டில் ஒலிக்கின்ற யாழ் உள்ளது என்றும் குறிப்பிடுகிறார். (நாட்டுப்படலம் 50:4)

அவரோகணமும், ஆரோகணமும்

அயோத்திநகரின் மகளிர் கிளிகளை வளர்ப்புப்பிராணிகளாக வளர்க்கின்றனர். இசைகேட்டு இருவரும் ஒருசேர உறங்குகிற காட்சியைச் சுட்டுகிற பாடல் இசைநுணுக்கம் பெற்று இலங்குகிறது எனலாம்.

இறங்குவ மகர யாழ் எடுத்து இன் இசை
நிறங்கிளர் பாடலான் நிமிர்வ, அவ்வழி
கறங்குவ வள் விசி கருவி, கண் முகிழ்த்து
உறங்குவ, மகளிரோடு ஓதும் கிள்ளையே (நகரப்படலம்-48)

யாழ் என்பது பழந்தமிழரின் நரம்புக்கருவிகளில் ஒன்று. யாழின் நரம்புகளை விரல்களால் அழுத்தியும் மீட்டியும் இசையை எழுப்புவர். அந்தவகையில் 19 நரம்புகளைக் கொண்ட மகர யாழை இறங்கவும் நிமிரவுமாக இசைத்தனர் என்பதை இப்பாடலில் கம்பர் சுட்டுகிறார். இசையில் சுரங்கள் ஒன்றுக்கொன்று சுருதியில் அல்லது இசையொலியில் அதிகரித்துக்கொண்டே போகுமானால் அவற்றை ஆரோகணம் என்றும், இசையொலியில் சுரங்கள் சுருதியளவில் குறைந்துகொண்டே செல்லுமானால் அவற்றை அவரோகணம் என்றும் சொல்லுவர். (பி.டி. செல்லத்துரை, தென்னக இசையியல் பக்.5) இராமாயணப் பாத்திரங்களில் வடமொழிப்பெயர்களைத் தமிழ்ப்படுத்தும் கம்பர்; இசைத்தொடர்பான கலைச்சொற்களையும் "இறங்குவ, நிமிர்வ" எனத் தமிழாக்கம் செய்வது தமிழிசைக்கு ஒரு கொடை.

(#% $"! &')

ஆயகலைகள் அறுபத்தி நான்கில் இன்றியமையாத கலை இசைக்கலை. மனித வாழ்வில் இனிமை சேர்க்கும் இந்த இசை நிகழ்த்தப்படுவதற்கும் குறிப்பிட்ட சூழல்கள் உண்டு. அந்த வகையில் அதிகாலைப் பொழுதில் இசைக் கலைஞர்கள் இசை ஒலியைக் கேட்டு மகளிர் எழுந்தனர் என்பதனை, **தெள்விளிச் சிறியாழ்ப் பாணர்... வள்விசிக் கருவியம்ப வயின் வயின் வழங்கு பாடல்'** கேட்டு அருங்கருங்கண் தோகையர்கள் இன்துயில் எழும்புகிறார்கள். (நாட்டுப்படலம் - 9)

விழா நடக்கும் வீதிகளில் கூறுபாடலும் குழலின் இசையும் ஒருங்கு கேட்கின்றது. வேள்வியிலும் இன்னோசை எழுகின்றது என்பதனை **"சாரும் வேள்வியும் தலை மயங்குமே"** (நாட்டுப்படலம்-56) என்பார் கம்பர்.

ஊடலின்போதும் பிற சூழலிலும் வீடுகளில் ஆடலும் பாடலும் விறலியர்களால் நிகழ்த்தப்பட்டன என்பது நகரத்தில் பொழுதுபோக்கு நிகழ்வாக இசை நிகழ்வு இருந்தமையை உணர்த்துகிறது. (நகரப் - 66)

காலைப்பண்ணும், மாலைப்பண்ணும்

கோசலநாட்டின் இன்ப வாழ்வைச் சுட்டுகிற கம்பர், அதிகாலைப் பொழுதில் "செவ்வழி முரல்வதாக" (நாட்டுப்படலம்-14:8) எனக் கம்பர் சுட்டுகிறார். காலை நேரத்தில் துபாளப் பண் பாடவேண்டும். பண்டைத்தமிழ்ப்பண்ணிசையில் பூபாள ராகத்திற்குப் புறநீர்மை என்று பெயர். விடியற்காலையில் பாடுவதற்கு ஏற்ற இராகம். (பிடி. செல்லத்துரை, தென்னக இசையியல் பக்.336) ஆனால் வண்டுகளோ மாலைநேரத்திற்குரிய செவ்வழிப் பண்ணை இசைக்கின்றன. தேன் உண்ட மயக்கத்தால் மாலைப் பண்ணினைக் காலை வேளையில் பாடுகின்றன. ஷஷ வள்ளல் நள்ளி வழங்கிய கொடையின் வளத்தால் திளைத்த பாணர்கள் மாலையில் மருதப்பண்ணும் காலையில் செவ்வழிப்பண்ணும் பாடி, இசை மரபை மறந்துவிட்டனர் என்று வன்பரணர் (புறநா.149) பாடிய பாடற்செய்தி இங்கே கம்பருக்குக் கை கொடுத்திருக்கக் கூடும் என்பர் உரைகாரர்கள் (கம்பராமாயணம்-பால காண்டம் பக்.37)

நாட்டார் பாடல்கள்

இதுவரை கம்பர் குறிப்பிட்ட செவ்விசைச் செய்திகளைக் கண்டோம். தமிழ் மண்ணின் மணத்தோடு இராமகதையைப் பாடிய கம்பர், தம் நாட்டார் பாடல்களையும் தொட்டுக்காட்டுகிறார். வயல்களில் வேலை செய்யும் பெண்களும், வண்டியோட்டும் ஆண்களும், சுமை ஞுக்கும் தொழிலாளியும் பாட்டாலே தம் களைப்பை மறப்பர். அந்த வகையில் வயலில் பணியாற்றும் பெண்களின் வாய் பண்ணோசையால் நிரம்பி வழிகின்றது என்பதனை, **பண்கள் வாய் மிழற்றும் இன்சொல் கடைசியர்** (நாட்டுப்படலம் - 10:1-2) எனக் குறிப்பிடுகிறார். மேலும் தினைப்புனங்களில் அரும்புகளில் மொய்க்கும் வண்டின் பாட்டும்; நீர் நிலைகளில் ஒலிக்கும் பறவையின் பாட்டும் மட்டுமல்லாமல் தினைப்புனங்களில் கிளியின் பாட்டும், சுண்ணம் இடிப்பார் உலக்கைப் பாட்டும் (நாட்டுப்படலம்-29) என்பார் கம்பர். உலக்கைப் பாட்டு என்பது வள்ளைப்பாட்டு எனச் சுட்டப்படும்.

செவ்விசை பற்றிய செய்திகள் மட்டுமின்றி மண்சார்ந்த நாட்டார் பாடல்களையும் கம்பர் காட்டுகிறார். அவ்வகையில், வயலில் பாடும் கடைசியர், தினைப்புனத்தில் கிளிப்பாட்டு பெண்கள் பாடும் வள்ளைப்பாட்டு (உலக்கைப்பாட்டு) முதலியன கம்பரால் சுட்டப்படுகின்றன.

பண் கலிந்து எழு பாடல்

முனைவர் **சண்முக. செல்வகணபதி**
முன்னாள் முதல்வர், அரசர் கல்லூரி, திருவையாறு.

மொய் அராகம் நிரம்ப ஆசை மருங்கு தீயின் மூழ்க மேல்
வை அராவிய மாரன் வாளியும் வான்நில நெடுவாடையும்
மெய் அராவிட, ஆவிசோர வெதும்பு மாதர்தம் மென்செவி
பை அரா நுழைகின்ற போன்ற பண்கலிந்து எழுபாடலே (1548)

மாரன் வாளியால் வெதும்பும் மாதர் தம் மென்செவியில் பாம்பு நுழைவது போல் பண் கலிந்து எழுபாடல் நுழைந்து, இரவு அகன்று விடியல் தொடங்கிடும். வேளையில் பண் கலிந்து எழுபாடல் மாதர்தம் செவியகம் நுழைந்தது என்று கம்பர் கைகேயி சூழ்வினைப் படலத்தில் குறிப்பிடுகிறார்.

பண் கலிந்து எழுபாடல் என்ற தொடர் பண்ணின் இலக்கணங்களைப் பெற்ற பாடல் என்பது பொருள். பண் வினையால் பெற்ற பெயர். பெருந்தானம் எட்டாலும், செயல்கள் எட்டாலும் பண்ணிப் படுத்தமையால் பெற்ற பெயராகும். நெஞ்சு, மிடறு, நா, மூக்கு, அண்ணம், உதடு, பல், தலை என்ற உறுப்புகள் எட்டும் பெருந்தானங்களாகும். எடுத்தல், படுத்தல், நலிதல், கம்பிதம், குடிலம், ஒலி, உருட்டு, தாக்கு என்கிற எட்டும் செயல்களாகும். இவை பாடலோடு இணைந்து ஒலிக்கும் பொழுது பண் என்றும் இசை என்றும் பெயர் பெறும்.

இயற்பாவோடு நிறத்தை இசைத்தலால் இசை என்று பெயர் பெற்றது (சிலம்பு 3 : 26 அடியார் உரை) நிறம் என்றது ஓசைகளின் அளவுத் தன்மைகளை மலரில் நிறம் உணர்ச்சியூட்டுவது போன்று பண்களின் எழும் இனிய ஓசை உணர்ச்சியூட்டும். எனவே உணர்ச்சியூட்டும் ஓசைகளை நிறம் என்பர். வுழயெட ஊழடழரச இதனை இசை, இராகம், பண் என்று அழைப்பர்.

பண் கலிந்து எழுபாடல்

பண் கலிந்து எழுபாடல் பண்ணீர்மைகள் செழித்து எழு பாடல் என்று பொருள்படும். கலித்தல் - செழித்தல், ஒலித்தல், எழுதல், பெருகுதல், மகிழ்தல், நெருங்கியிருத்தல், செலுத்துதல் என்ற பொருள்படும். பண் நீர்மைகள் ஒலிக்கும். பண்ணீர்மை எழும். பண்ணீர்மை பெருகும்.

பண்ணீர்மை நெருங்கி இருக்கும். பண்ணீர்மையைச் செலுத்தும் பாடல் என்று பொருள்படும்.

பண்ணீர்மை என்றால் என்ன என்பதனைக் காண வேண்டும். நீர்மை என்ற சொல் தன்மை, இனிமை, குணம் றிசழிநசவலஇ ஙரயடவைல என்கிற பொருள்களில் வரும். திருஞான சம்பந்தர் திருக்கானூர் பதிக எட்டாம் பாடலில் "தமிழின் நீர்மை பேசி" என்கிறார். பண்ணின் தன்மையைப் பண்ணிற்கு இனிமை தரும் நிலையைப் பண்ணீர்மை எனலாம்.

பண்ணின் நீர்மைகள் பதினொன்று. முதல், முறை, முடிவு, நிறை, குறை, கிழமை, வலிவு, மெலிவு, சமன், வரையறை, நீர்மை என்பர். இப் பதினொன்றையும் வகுத்துக் கொள்ளும் நிலையை வக்கிரித் திட்டங்கள் என்பர். (சிலம்பு 3:41-2 உரைகள்)

இவற்றின் ஒன்றான நீர்மை என்பது சுவையைக் குறிக்கும். பண்ணிற்குள் அமையும் உள்ளோசைகளைக் கமகம் என்பர். நுண்ம ஒலிமங்கள் எனலாம். ஓர் இசை அலகின் துடிப்பைக் கூட்டி அல்லது குறைத்து எழும் இசை இனிமையை உள்ளோசை அல்லது உள்ளாளம் அல்லது கமகம் என்பர். இசை அலகுகளைப் பல்வேறு நிலைகளில் அசைப்பதாலும், வழக்குதலாலும், இரட்டுதலாலும், நலிதலாலும் உருவாகும். இவ்வகை உள்ளாளங்கள் பதினொன்றை நச்சினார்க்கினியர் சீவக சிந்தாமணி உரையில் மேற்கோள் பாடல் ஒன்றில் குறிப்பிடுகிறார்.

இவ்வகையில் பண்ணீர்மைகள் செழித்த பாடல் பண் கலிந்து எழு பாடல் என்கிற அற்புதமான தொடர் வாயிலாகக் கம்பர் உணர வைத்துள்ளார். இந்நிலையை விரிப்பின் பெருகும்.

விடியல் பாணி

பண் கலிந்து எழுபாடல் விடியல் பொழுதில் எழுகிறது. இது மருத நிலத்திற்குரிய சிறுபொழுதின் பண். கம்பரும் மருதப் பண்ணை நால் பெரும்பண் என்பதன் மூலம் குறிப்பிடுகிறார். விடியற் பொழுதிற்குரிய பண் புறநீர்மையாகும். இதனை வைகறைப் பாணி என்பர். வைகறைப் பொழுதிற்குரிய பண். இதனை நேர்திறம் என்று சிலப்பதிகாரம் குறிப்பிடுகின்றது.

பண்வாய் வண்டு நேர்திறம் பாட
காண்வரு குவளைக் கண்மலர் விழிப்ப (சிலம்பு 4 : 75-76)

குவளை மலரும் பொழுதான வைகறையில் நேர்திறம் பாடினர். அடியார்க்கு நல்லார் உரை கூறுகையில் இதனைப் 'புறநீர்மை என்னும் திறத்தால் பள்ளி எழுச்சி பாட' என்கிறார். எனவே இப்பண் பள்ளி எழுச்சிப் பாடலோடு இயைபுடையது என்று அறிகிறோம்.

மாணிக்கவாசகர், தொண்டரடிப் பொடியாழ்வார், பாரதியார் பள்ளி எழுச்சிப் பாடியுள்ளனர். திருஆலவாய் இது என்று அடியார் காட்ட சம்பந்தர் கண்டு, துணக்கை மலர்கை குவித்துப் பேரன்;பால் 'மங்கையர்க்கரசி' எனத் தொடங்கும் புறநீர்மைப் பண் அமைந்த பாடல் பாடினார். இது விடியற் பாணியில் அமைந்த பாடலாகும்.

இவ்வகையில் பொழுதுக்குரியப் பண்களைத் தொல்காப்பியர் கருப்பொருள் பட்டியல் வாயிலாக உணரவைத்துள்ளமையை ஈண்டு நினைவிற் கொள்ளலாம். ஐந்நிலங்களுக்கும் உரிய அறுவகைப் பெரும்பொழுது, சிறு பொழுதுகள் வரையறுக்கப் பெற்றுள. வைகறை விடியல் மருதம் என்பர். இவ் வைகறைப் பாணி மருதப் பாணிகளுள் ஒன்றாகும். இன்று இப் பண்ணுக்குரிய இராகம் பூபாளம். புள் + ஆளம் , பூபாளம், புள் ஸ்ரீ பறவைகள் ஆரவாரித்து விடியலில் எழும்போது இசைக்கப் பெறும் காரணத்தால் பெற்ற பெயராகும்.

பண் கலிந்து எழுந்த புறநீர்மையோடு கூடிய பாடல் விடியலில் இள மங்கையர் செவியில் மெல்ல, மெல்ல மெல்ல அரவு நுழைந்தது போல் நுழைந்தது என்று கம்பர் குறிப்பிடுகிறார். உறக்கத்திலிருந்து மெல்ல மெல்ல உயிர்;ப்புற்று எழும்பொழுது அவர்தம் செவியில் இப்பாடல் நுழைகிறது. மார்கழித் திங்களில் திருக்கோயில்களில் திருவெம்பாவை, திருப்பாவை, திருப்பள்ளியெழுச்சி பாடல்களை ஒலித்திடும்பொழுது இவ்வனுபவத்தைப் பலமுறை கேட்டு மகிழ்ந்திருப்போம்.

மதுரகீதம்

கம்பர் குறிப்பிடும் பண்கலிந்து எழுபாடல் வகைகளுள் கீதம் என்பதும் ஒன்றாகும். இதனை அடையொடு மதுரகீதம் (705), மந்திரகீதம் (309), சமைந்த கீதம் (8819), மங்கல கீதம் (4949), சாம கீதம் (1554), கின்னரம் பயில் கீதங்கள் (871), கீதங்கள் இசைத்தனர் கின்னரர்கள் (4813), மங்கையர் அமுதகீதம் (705), கீதம் நின்ற பேதங்கள் (4813) என்கிற நிலைகளில் குறிப்பிட்டுள்ளார்.

கீதம் என்பது ஒருவகை இசைப்பாடல். இசைப்பாடல்களைப் பொதுவாகக் கீதம் என்று சொல்லலாம். ஆயினும் எளிய இசை உருவமும், சொல்வடிவமும் உடைய இசைப்பாடல் என்பர். பண்ணின் தன்மைகளைக் கொண்ட இசை உரு. கண்ணிகளாக அமையும், பண்டைய தாழிசைப் பாடல்களைப்போல் அமையும். பல்லவி, அனு பல்லவி என்ற உறுப்புக்களைப் பெறா. தாளச் சொற்கட்டுக்கு ஏற்ப எழுத் தெண்ணி அமைக்கப் பெறும். இதனைக் கட்டளைய கீதம் என்பர். பெரும்பாலும் நான்கடிப்பாடல்களாக அமையும். தொடக்கத்தில் இசை பயில்வதற்குரியதாக அமைந்திருந்தது. மாதவி ஆடல் பயிற்சியோடு இசைப் பயிற்சியும் மேற்கொண்டார். இசைப் பயிற்சியின் போது கட்டளைய கீதமும், அலங்காரமும் கற்றதனை அடியார்;க்கு நல்லார் (சிலம்பு-3:10) குறிப்பிடுகிறார். கீதம் என்னும் இசை உரு நான்கு உறுப்புகளைப் பெற்றிருக்கும் என்று அடியார்க்கு நல்லார் குறிப்பிடுகிறார். 1.உக்கிரம் -முதலடி, 2. துருவை-இரண்டாம் அடி, 3.ஆபோகம்-ஈற்றுக்கு அயலடி, 4. பிரகலை - நான்காம் அடி, கீதம் மூன்றடியாலும் வரும். மூன்று உறுப்பானே வருவன உளவாதலின், அவை இரண்டாம் அடியே ஈற்றயலடியாகப் பாடி முடியும். மூன்றடிக் கீதம் மங்கலத்திற்குப் பொருந்தா என்று அடியார்க்கு நல்லார் குறிப்பிடுகிறார். (சிலம்பு 3:150) கீதங்களை முதலில் இயற்றிக் கொண்டு பின்னர் இசைத்தலையும், முதலில் இசைவடிவம் அமைத்துக் கொண்டு அதற்குப் பாடல் இயற்றும் நிலையையும் அடியார்க்கு நல்லார் குறிப்பிடுகிறார். உருவுக்கு இசைப்படுத்துதல் என்றும் இசைக்கு உருப்படுத்துதல் என்றும் குறிப்பிட்டுள்ளார். சொல்லுருவிற்கு இசைப்படுத்துதல் என்பதனைச் சுரதாளம் அமைத்தல் என்றும், இசை வடிவிற்குச் சொற்படுத்துதல் என்பதனை மெட்டிற்குப் பாட்டு இயற்றுதல் என்றும் கூறுவர்;. சைவத் திருமுறைகளுள் ஐந்தாம் திருமுறையாக உள்ள திருக்குறுந்தொகைப் பாடல்கள் கீத வடிவிற்குரியனவாக உள்ளன. சிலப்பதிகார வேட்டுவ வரியில் உள்ள பாடல்கள் சில கீதத்தின் முன்னோடியாக உள.

கம்பன் பாடிய கலிவிருத்தப் பாக்கள் இவ்விசைக்குரிய பாடல்களாக அமைந்துள. நான்குசீர்;களைக் கொண்டு ஓர் எதுகை பெற்று இப்பாக்கள் அமைந்துள.

உலகம் யாவையும் தாமுள வாக்கலும்
நிலைபெ றுத்தலும் நீக்கலும் நீங்கலா

அலகி லாவிளை யாட்டுடை யாரவர்
தலைவ ரன்னவர்;க் கேசரண்; நாங்களே (பாயிரம் -1.)

இப்பாடல் கீதத்திற்குரிய இலக்கணம் பெற்ற இனிய பாடலாக அமைந்துள்ளது. மா கூவிளம் கூவிளம் கூவிளம் என்கிற யாப்பமைப்பில் அமைந்துள்ளது. நிரையசையில் தொடங்குவதால் அடிதோறும் ஒற்று நீங்கலாக 12 எழுத்துக்கள் பெற்று வந்துள. இவ்வகையில் 56 இடங்களில் 1350 பாக்கள் உள என்று இரா. திருமுருகன் குறிப்பிடுகிறார். (கம்பன் பாடிய வண்ணங்கள் ப.79)

கம்பர் பாடிய கலிவிருத்தப் பாக்கள் 5277 உள. இவை 24 வகைகளில் உள. இவற்றுள் சந்தக் கலி விருத்தங்கள் 18 வகைகள் உள. கம்பனின் சந்த நயத்திற்குரியனவாகவும் இசையோடு பாடுவதற்குரியனவாகவும்; உள.

மலையே மரனே மயிலே குயிலே
கலையே பிணையே களிறே பிடியே
நிலையே உயிரே நிலைநே டினிர்போய்
உலையா வலியா ருழைநீ ருரையீர் - 3393

இவ்வகைப் பாடல்கள் இசையோடு பாடுதற்குரியன.

கம்பர் கீதம் என்ற சொல்லை இனிய இசை என்கிற பொருளிலும். இசைப்பாடல் என்ற பொருளிலும் பல இடங்களில் பயன்படுத்தியுள்ளார். கார்முகப் பாடலத்தில் இராமன் சிவ தனுசை முறித்த மகிழ்ச்சியில் இசைத்த கீதப் பாடலில் விண்ணவர்கள் எழுது சித்திரங்கள் போல நின்றனர் என்கிறார்.

வயிரியர் மதுரகீதம் மங்கைய ரமுத கீதம்
செயிரியர் மகர யாழின் தேம்பிழி தெய்வகீதம்
பயிர்கிளை வேயின் கீத மென்றிவை பருகி விண்ணோர்
உயிருடை யுடம்பு மெல்லா மேவிய மொப்ப நின்றார் (705)

வயிரியராகிய கூத்தருடைய இனிய பாடல்களும், மடந்தையரின் இனிய பாடல்களும், நரம்புக் கருவி இசைப்போரின் மகர யாழிலிருந்து தோன்றுகின்ற இனிமை சொட்டும் தெய்வத் தன்மையுள்ள பாடல்களும் குழலிலிருந்து ஒலிக்கின்ற பல்திறப் பாடல்களும் என்ற இவற்றைச் செவியாரக் கேட்டு, தேவர்கள் எழுது சித்திரங்கள் போல் நின்றனர். சீதையின் மணம் விரைவில் நிகழும் என்ற பெரு மகிழ்ச்சியால் பாணர்

முதலியோரின் கீதம் நிகழ்த்தியமையைக் கம்பர் குறிப்பிடுகிறார். வாய்ப்பாடல், யாழ் வழிப்பாடல், குழல் வழிப் பாடல்கள் இசைத்தனர். இவைகள் தெய்வப் பாடல்களாக அமைந்திருந்தமையைக் கம்பர் குறிப்பிட்டுள்ளார். தேவார, திவ்வியப்பிரபந்தப் பாக்களையெல்லாம் பயின்றும், இசைத்தும் வளம் கண்ட கம்பர் தெய்வ விருத்திப் பாடல் களைப் பாணர்களும், மங்கையர்களும் பாடியமையைக் கேட்ட தேவர்கள் அதில் தம்மை மறந்தனர் என்கிறார். ஓவியம் போல் அசை வற்ற உணர்வினர் ஆயினர் என்கிறார்.

இத்தெய்வ விருத்திப் பாடல் பற்றி பூக்கொய்ப் படலத்தில் கம்பர் குறிப்பிடுகிறார். கட்டழகு வாய்ந்த ஆடவர் தமது மனைவியார் கூறும் மழலைச் சொல் போன்ற இனிமையுடைய தெய்வப் பாடல்களைச் சொற் சொருபமான கலைகளை ஆராய்பவர் போல் கேட்டனர் என்கிறார்.

மையற் பேதை மாதர் மிழற்று மழலைச்சொல்
தெய்வப் பாடல் சொற்கலை யென்னத் தெரிவாரும் (922 : 3-4)

இவ்வகை இசைப் பாடல்கள் அமிழ்தின் ஆன்ற பாடல் 8836 என்று கம்பர் களியாட்டுப் படலத்தில் குறிப்பிடுகிறார். இந்திரசித்து ஏவிய பிரமாத்திரத்தால் எல்லோரும் உணர்வற்று வீழ்ந்தனர். பகை ஒழிந்தது என்று எண்ணிய இராவணன் மகளிரின் களியாட்டத்தைக் காண்கிறான். அமிழ்தின் ஆன்ற பாடலை முழவின் தெய்வ பாணியோடு கேட்டான்.

ஆடலும், களியின் வந்த அமலையும், அமிழ்தின் ஆன்ற
பாடலும் முழவின் தெய்வப் பாணியும் ஆர்ப்ப (8836)

அமிழ்தின் ஆன்ற பாடல் என்பது என்றும் இனிமை பயப்பது என்று பொருள் தரும். அமிழ்து போன்று இனிமையும் நிரந்தரமும் உடைய பாடலாகும். இசைக்கு நாதமும் இலயமும் தந்தையும் தாயும் போல் அமையும். இரண்டும் இணைந்த நிலையைப் பாணி என்பர். பண்ணோடும் தாளத்தோடும் இயைந்தது.

பாணி என்ற சொல் பலபொருள் ஒரு சொல்லாகும். கை, கைத்தாளம், ஆடல், திருவிழா, செவ்வழி யாழ்த்திறம், ஓர் இசைக்கருவி, பாணிச்சி, நெடிய தாளம், சொற்கட்டு, ஓசை, இசைப்பாட்டு, இன்னிசை, காலம், பல்லியம், திறப்பாணி, முறை, கை அவிநயம், சொல் என்ற பொருள்களில் வரும். இவையனைத்தும் இசையோடு தொடர்புடையன. கம்பர் 'முழவின் தெய்வப் பாணி' என்கிறார். தெய்வ இசைப் பாடல்

மூலம்; கண்டேன். இங்கு முழவின் தெய்வப் பாணியைக் குறிப்பிடுகிறார். அமிழ்தப் பாடலுக்கேற்ப முழங்கும் முழக்கத்தைக் குறிப்பிடுகிறார்.

நைவள அமுதப்பாடல்

இவ்வகையில் அமையும் வேறு ஓர் அமுதப் பாடலைக் கம்பர் குறிப்பிடுகிறார். நைவள அமுதப்பாடல் (791) என்கிறார்;. நைவளம் என்று பண்ணில் அமைந்த அமுதப் பாடலாகும். நைவளம் என்பது ஒரு பண் பெயர். சங்க இலக்கியங்கள் இப்பண் பற்றி; குறிப்பிடுகிறது. நைவளம் பழுநிய பாலை வல்லோன் (குறிஞ்சிப் பாட்டு 146) நைவளம் பழுநிய நயம் தெரிபாலை (சிறுபாண்.30)

நைவளம் பூத்த நரம்பிவை சீர்ப் பொய்வளம்
பூத்தன பாண நின்பாட்டு - பரிபாடல் 18 : 20-21

இப்பண்ணை நட்டபாடைப் பண் என்று இவ் அடிகளுக்கு உரை கூறுகையில் பரிமேலழகர் குறிப்பிடுகிறார். நட்டபாடை என்னும் பண்ணைத் தருகின்ற 'யாழ் நரம்பிற்கு இயைந்த நின் பண்டைப்பாட்டு' என்கிறார். இவர் கூற்றின் படி நைவளம் என்ற பண் நட்டபாடை என்றழைக்கப்பெற்றது என்று அறிகிறோம். நைவளப் பண் பற்றிய குறிப்பு சிலப்பதிகாரத்தில் காணப்படவில்லை. நச்சினார்க்கினியர் பத்துப்பாட்டு உரையில் நைவளம் நட்ட இராகமாகக் குறிப்பிடப்படுகிறது (குறிஞ்சி 140 நச்சர் உரை) நட்ட பாடை என்பதும், நட்ட இராகம் என்பதும் பண்ணுப் பெயர்களே. நட்டபாடைப் பண்ணைத் தற்காலத்தார் நாட்டை, கம்பீரநாட்டை, இராகத்திலும் நட்டராகப்பதிகங்களைப் பந்துவராளி இராகத்திலும் பாடி வருகின்றனர். காரைக்காலம்மையார், மூவர் தேவாரப் பாடல்களில் நட்டபாடைப் பண் குறிப்பிடப்படுகிறது. நைவளம் என்னும் வழக்காறு இடம் பெறவில்லை.

நாலாயிரத் திவ்விய பிரபந்த பாசுரங்களில் நைவளம் குறிப்பிடப் படுகிறது. "நைவளம் நவிற்று பொழில"; (5:10:2:1439) "நைவளம் ஒன்று ஆராயா" (பாசுரம் 2073) சீவக சிந்தாமணியில் " நைவள மிகுசாய நங்கையைப்புனை நின்றார்" (2435). இவ்விடத்தில் நச்சினார்க்கினியர் நட்டபாடை என்கிறார். கம்பர் நைவளம் பண்ணுடன் கூடிய அமுதப் பாடலைக் குறிப்பிடுவதொடு சீதை நைவளப் பண் போல் இனியசொல் பேசுபவள் என்கிறார். "நைவளம் நவிற்று நண்ணுவாலோடும்"; (1150) என்கிறார்.

கம்பர் சோழ நாட்டில் வாழ்ந்தவர். சோழமண்ணின் இசை வளங்களைச் சுவைத்தவர். தமது இராமகாதையில் இசையில் அமைந்த இலய அடிப்படையில் பல்வகைச் சந்தப் பாக்களைக் கண்டுள்ளார். கம்பர் தந்த பண் கலிந்து எழுபாடல்களையும். பாணியின் அமைப்பில் அமைந்த பாடலையும்;. நைவள அமுதப் பாடலையும் இக்கட்டுரை எடுத்துரைத்துள்ளது. மேலும் இசைவளம் மிக்கப் பாடல்கள் பல உள. இசைத்தமிழை வளப்படுத்தும் பாக்களாக இவை உள. கம்பரின் கவி வளத்தால் இசைத்தமிழும் செழிப்புற்றுளது.

பாணி தள்ளா நடம்புரி மாதர்

முனைவர் **செ. கற்பகம்**
உதவிப் பேராசிரியர், இசைத்துறை, தமிழ்ப்பல்கலைக்கழகம், தஞ்சை

வள்ளி நுண் மருங்குல் என்ன, வானவர் மகளிர், உள்ளம்
தள்ளுற, பாணி தள்ளா நடம்புரி தடங்கண் மாதர் (4872)

கம்பர் இராமகாதையில் முத்தமிழில் ஒன்றான நாடகத்தமிழின் ஒரு கூறான நாட்டியக் கலையைப் பற்றியும் குறிப்பிட்டுள்ளார். காப்பியத் தொடக்கத்திலேயே ஓர் ஆடல் அரங்கு நிகழ்சியைக் காட்டுகிறார். முழவம் கொட்டவும், யாழ் இசை செய்யவும், எழினி-யினின்று வெளிப்பட்டு நாட்டியப் பெண்கள் ஆடுகின்றனர். மகளிர் விளக்குகளை ஏந்தி நிற்கின்றனர். அந்நாட்டியத்தை ஓர் அரசன் காண்கி;ன்றான். கொண்டல்கள் ஒலிக்க, வண்டுகள் ரிங்காரம் செய்ய, மயில்களாடத் தாமரைக் கொடிகள் செந்தாமரை மலரை ஏந்தி நிற்க, குவளை கண் போல் விளங்க, மருத நிலம் சிறந்திருக்கிறது என்கிறார்.

தண்டலை மயில்க ளாடத் தாமரை விளக்கந் தாங்கக்
கொண்டல் கண்முழவின் ஏங்கக், குவளைகண் விழித்து நோக்கத்
தெண்டிரை யெழினி காட்டத் தேம்பிழி மகர யாழின்
வண்டுக ளினிது பாட மருதம் வீற்றிருக்கும் மாதோ (35)

என்கிறார் இயற்கையில் அமைந்த ஓர் ஆடரங்கைக் கம்பர் காட்டுகிறார். கம்பனின் இராமகாதையில் ஆடல், பாடல், ஆடுமகள், பாடுவார், கருவி இசையாளர்கள், ஆடுந்திறம், பாடுந்திறம், பல்லிய முழக்கியலுக்கேற்ப ஆடும் முறை, ஆடலின்பொழுது இசை, ஆடல் மரபு வழுவாது ஆடும் முறை, குரவைக் கூத்து, துணங்கைக்கூத்து, பரதநூல் முறை, கவந்த நாடகம், அலகை நாடகம், பல்வித நாடகம், நடக்கால் காட்டும் கண்ணினர், படிமக் கூத்து போன்ற பல் செய்திகள் உள. இவற்றிலே பாணி தள்ளா நடம்புரி தடங்கண்; மாதர் என்கிற நிலையில் சங்ககாலம் முதல் தொடர்ந்து விறல்பட ஆடி வந்த ஆடல் மகளிர் குறிப்பிடப்படுகின்றனர்.

கம்பர் பயில் நடம் பாவகத்து ஆடுவார்கள் 9621, நிருத்தம் ஆடினர் 2653, நாரியர் 3088, நிருதமாக்கள் 4940, விசும்பின் ஆடல் ஆடும் அரம்பையர் 481, நடம் திறம் நவில்வுறு நங்கைமார் 4256, ஆய்

அவிநயம் தெரிக்கின்றார் 982, பாவனைத் தகைமை சான்றோர் 8830, கண்ணுளர் 886, மதங்கியர் 4226, பொருநர் 135 என ஆடற்கலைஞர்கள் குறிப்பிடப் பெறுகின்றனர்.

பாணி தள்ளா நடம்புரி மாதர்

பாணி தள்ளா நடம்புரி மாதர் என்பவர் ஆடலின் தகைமை நன்கறிந்து ஆடுபவரைக் குறி;க்கும். பண்ணும் தாளமும் நன்குணர்ந்து ஆடுபவரைக் குறிக்கும். இசை மரபும் ஆடல் நெறியும் நன்கு அறிந்தவரைக் குறிக்கும். இம்மரபுகள் தொன்று தொட்டுத் தமிழகத்தில் இருந்து வந்துள என்பதனைத் தொல்காப்பியம் முதல் அறிகிறோம்.

தொல்காப்பியப் புறத்திணை இயல் முப்பதாவது நூற்பாவில் கூத்தர். பொருநர். விறலியர் குறிப்பிடப்படுகின்றனர். செய்யுளியலிலும் கூத்தர், விறலி (196) குறிப்பிடப்படுகின்றனர். இவர்கள் ஆடல் கலைஞர்கள் ஆவர். சங்க இலக்கியங்களில் பொருநர் ஆற்றுப் படை, கூத்தராற்றுப்படை, நூற்களும் விறலியாற்றுப்படை பாடலும் உள. இவர்கள் தொழில்முறைக் கலைஞர்களாக விளங்கியுள்ளனர். இவர்களோடு கொடுகொட்டி, பாண்டரங்கம், காபாலக் கூத்தாடிய சிவபெருமானும் ஆடல் கலைஞனாகக் கலித்தொகை கடவுள் வாழ்த்துப் பாடலில் காணப்பெறுகிறார்.

ஆடல், பாடல், அழகு இ;ம்மூன்றிலும் குறைவு படாத மாதவி சோழன் அவையில் தலையரங்கேறியமையைச் சிலப்பதிகாரம் மூலம் அறிகிறோம். மாதவியாடிய வேத்தியல், பொதுவியல் மற்றும் பல்வகைக் கூத்துகளையும், முல்லை நிலத்தார் ஆடிய ஆய்ச்சியர் குரவையும், குறிஞ்சி நிலத்தார் ஆடிய குன்றக் குரவைக் கூத்தையும் காண்கிறோம். ஆடல் தொழி;ல்முறைக் கலைஞர்களிடமும், பயில்முறைக் கலைஞர்களிடமும் விளங்கியதைக் காண்கிறோம். சிறப்பாக ஆடிய மாதவி தலைக்கோல் பட்டம் பெற்றமையை அறிகிறோம். பக்தி இலக்கியக் காலத்தில் இறைவன் ஆடல் தெய்வமாகவும், ஆடுமகனாகவும், ஆடும் இடம் அம்பலமாகவும் கருதப்பட்டமையைக் காண்கின்றோம். தஞ்சைப் பெருவுடையார் கோயிலில் 400 தளிச்சேரிப் பெண்டுகள் நாட்டிய வழிபாடு செய்தமையைக் கல்வெட்டு மூலம் அறிகிறோம். இத்தகு நீண்ட நெடிய மரபுடைய ஆடல் கலையை நன்குணர்ந்த கம்பர் ஆடல் அரங்க நிகழ்வையும் பாணி தள்ளாத ஆடும் மரபில் வந்த ஆடல் மகளிரையும் குறிப்பிடுகிறார்.

நடம்திறம் நவில் உறு நங்கைமார்

நடம் திறம் நவில் உறு நங்கைமார் முகம் பொலிவுற்று விளங்குவதனைக் கார்காலப் படலத்தில் 109-வது பாடலில் குறிப்பிடுகிறார். நடம் திறன் நவில் உறு நங்கைமார் முகம், படம் திறந்து உருவலின், பொலியும் பான்மை போல் (4256) நடனத்தில் முகப் பொலிவு சிறப்பான இடம் பெறும். ஆங்கிக அவிநயத்தில் முகமும் முகத்தோடு இணைந்த கண்ணிமை, புருவம், விழி, கன்னம், மூக்கு, வாய், உதடு, பற்கள், நாக்கு, முகவாய், சுவாசம், இதழ்கள் முக்கியப் பங்கு பெறும். இவற்றின் வாயிலாகப் பற்பல அவிநயங்கள் செய்து காட்டப் பெறும். கண்களைச் சமமாக வைத்தல், சுழற்றல் (ஆலோகிதம்), கடைக் கண்ணால் பார்த்தல் (சூசனை) அகன்ற பார்;வை (பிராலோகிதம்) பாதி மூடிய நிலையில் பார்த்தல், மீளதக மேல்நோக்கு (உல்லோகிதம்) மேலும் கீழும் பார்த்தல் (அனுவிருத்தம்) கீழ்நோக்கும் பார்வை (அவலோகியம்) என்கிற முறைகள் உள. இவை ஒன்பான் சுவைகளுக்குரிய பார்;வைகள் போன்றன. இதர நிலைகளுக்குரிய அவிநயங்களும் நாட்டிய மரபில் இன்றும் பயிலப் பெறுகின்றன. பரதரின் நாட்டிய சாத்திரமும், மகாபரத சூடாமணி என்கிற நாட்டிய நூலும் குறிப்பிடுகின்றன. இவை போல் பல்வகை ஒப்பனை முறைகள் உள. இவற்றில் முக ஒப்பனை முறை சிறப்புடன் இடம் பெறும். இவற்றையெல்லாம் கம்பர் "நடம்திறம் நவில் உறு நங்கைமார் முகம்" என்று குறிப்பிடுகிறார்.

அவிநயம் காட்டும் மாதர்

ஆடலில் அமையும் மெய்ப்பாட்டுச் செய்கையை அவிநயம் என்பர். இதனை அபிநயம், சைகை, நளிநயம், கைகாட்டு முறை, கை முத்திரை, பாவகம் mine, Gesture என்பர். கண், கை, முகம் போன்ற உறுப்புகளால் உள்ளக் கருத்தை வெளிப்படுத்தும் ஆடல் முறையாகும். இது நான்கு வகைப்படும். உடலுறுப்புகளால் செய்தல் ஆங்கிகம், அலங்காரத்தால் செய்தல் ஆகாரிகம், வாக்கினால் செய்தல் வாசிகம், நடன பாவம் மற்றும் இலயத்தால் செய்தல் சாத்விகம் என்பர். இவ் அவிநயங்கள் 24 என்று சிலப்பதிகார அடியார்க்கு நல்லார் உரை மேற்கோள் நூற்பாவோடு விளக்கியுள்ளது. (3:13 அடியார்) இவற்றுள் வெகுண்டோன் அவிநயமும் ஒன்றாகும்.

வெகுண்டோன் அவிநயம் விளம்புங் காலை
மடித்த வாயும் மலர்ந்த மார்பும்

துடித்த புருவமுஞ் சுட்டிய விரலும்
கன்றின வுள்ளமொடு கைப்புடைத் திடுதலு
மனனநோக்கமொ டாய்ந்தனர் கொளலே

என்கிற நூற்பாவைக் காட்டுகிறார். கம்பர் பாலகாண்டம் உண்டாட்டுப் படலத்தில் ஒருத்தி வெகுளிக்குரிய அவிநயம் காட்டுவார் போல் ஒரு பாடலைக் காட்டியுள்ளார். கூற்று உறழ் நயனங்கள் சிவப்ப, வளைவு நெற்றியில் புருவங்களை நெரித்து மேலேற்றி, ஒளிபொருந்திய பற்களைக் கடித்து, தமக்கு முன்னே தலையெடுக்க ஒட்டாதபடி போக்குகின்ற கைகளை முன்னதாகத் தட்டினாள் என்கிறார்.

கூற்றுறழ் நயனங்கள் சிவப்பக் கூனுதல்
ஏற்றிவா ளெயிறுக ளதுக்கி யின்றளிர்
மாற்றருங் காதல் மறிக்கு மாதொரு
சீற்றமாம் அபிநயந் தெரிக்கின் றாரினே - 982

பாவனை தகைமையாளர்

நாட்டியத்தின் உயிர்;ப்பு நிலை பாவனையாகும். நாட்டியத்திற்கும் நாடகத்திற்கும் இடையில் அமையும் முக்கியப் பண்பு பாவனையாகும். சிலர் இதனை அறியாமலும் உளர். அழுகைச் சுவையை நாடகத்தில் காட்டுவதற்கும் நாட்டியத்தில் காட்டுவதற்கும் இடையில் வேறுபாடுளது. நாட்டியத்தில் அழுகைச் சுவையைக் காட்டுகையில் கண்களில் நீர் விழும் நிலையில் உணர்ச்சியைக் காட்டுவர். ஆனால் நாட்டியத்தில் அழுகிற பாவனை காட்டவேண்டுமே தவிர அழக் கூடாது. மயில், குயில், யானை போன்றவற்றிற்குரிய பாவனையான முத்திரைகள் காட்டப் பெறும். இவற்றிற்கான கைமுத்திரைகள் பல உள. ஒற்றைக்கை முத்திரை, இரட்டைக் கை முத்திரை என இருவகை உள. இவற்றைப் பிண்டி, பிணையல் என்பர்.

பாவனையைப் பாவம் என்றும் கூறுவர். இவை மூன்று வகைப்படும். 1.ஸ்தாயிபாவம், 2.சஞ்சாரி பாவம், 3. சாத்துவிக பாவம் ஆகும். ஸ்தாயிபாவம் எட்டு வகைப்படும். இவற்றைச் சுவை என்றும் மெய்ப்பாடு என்றும் கூறுவர், நகை, அழுகை, இளிவரல், மருட்கை, அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை என்று தொல்காப்பியர் குறிப்பிடுவார். இவற்றை இரதிம் (காமம்) ஹாசம் (நகை), சோகம் (இளிவரல்), குரோதம் (வெகுளி), உற்சாகம் (ஊக்கம்), அச்சம், அருவெறுப்பு,

வியப்பு (மருட்கை) என்பர். வியாபிசாரி பாவங்கள் 33 என்பர். சோர்வு, ஐயப்பாடு, வெளி, சோம்பல், கவலை, மயக்கம், நினைவு, வெட்கம், சபலம், மகிழ்ச்சி போல்வனவான சாத்விக பாவம் எண் வகைப்படும். 1. வியர்த்தல், 2. அசைவற்றுக் கம்பம்போல் நிற்றல், 3. நடுக்கம், 4. கண்ணீர் அரும்பல் 5. நிறமாறுபாடு, 6.மயிர்கூச்சு, 7. குரல் மாறுபாடு, 8. பிரளயம் (நினைவிழத்தல்) என்பனவாகும். அந்தந்த சுவைகளில் பயன்படுத்தப்பெறும் பாவங்களை நாட்டிய நூற்கள் குறிப்பிடுகின்றன. எடுத்துக்காட்டாக வெகுளிக்குச் செருக்கு, பொறாமை, வெறி, ஊக்கம், ஆவேசம், மிக்க சினம், சபலத் தன்மை, கொடுமை என்பன வெகுளி என்கிற ரௌத்திர பாவத்தில் பயன்படுத்தப் பெறும்.

ஆடலின் உயிர்ப்பு நிலையான பாவனைப் பற்றி யுத்த காண்ட களியாட்டுப் படலத்தில் கம்பர் காட்டுகிறார். கள்ளுண்டார் நிலையில் மூலம் காட்டியுள்ளார். கள்ளின் வேகத்தால் பலபட முறுவல் பரந்தன் இலவு புரையும் இதழ்கள் துடித்தன் சிலைநிகர் புருவம் நெற்றிக் குவிந்தன் கூத்தல்கற்றை இறங்கின் பாணியின் தள்ளி பாடல்கள் பாடப் பெற்றன் வெங்குரலில் பாடல் விளித்தன. அவ்வவ் பொருளைத் தம் உருவில் தோற்றுவிக்கும் பாவனையைச் சான்றோர் பெற்றனர் என்று கம்பர் குறிப்பிடுகிறார்.

ஏனைய பிறவும் கண்டார்க்கு இந்திரஜாலம் என்ன
தானவை உருவில் தோன்றும் பாவனைத் தகைமை சான்றோர் 8830

இராவணன் களம் காண் படலத்திலும் பாவகத்து ஆடும் திறனைக் குறிப்பிட்டுள்ளார்.

பாடுவார்கள் பயில் நடம் பாவகத்து ஆடுவார்கள் - 9621

நிருத்தம் ஆடியோர்

ஆடல்கலையில் நிருத்தம், நிருத்தியம், நாட்டியம் என்கிற சொல் வழக்காறுகள் உள. இவற்றிடைய பொருள் வேறுபாடுகள் உள. நிருத்தம் என்பது உடலியக்கங்களால் செய்யப்படும். இதனைச் சொக்கம் என்றும் கரணம் என்றும் கூறுவர். நிருத்தத்திற்குப் பயன்படும் உடலுறுப்புக்களை அங்கம், பிரத்யாங்கம், உபாங்கம் என்று வகைப்படுத்துவர். உறுப்புக்களைத் தனித்தனியாகவும் மற்ற உறுப்புகளுடன் சேர்த்தும் அசைப்பர். நிருத்தியம் என்பது அவிநயக் கலையோடு கூடியது. நாட்டியம் என்பது நிருத்தமாகிய சொக்க நடனமும் நிருத்தியமாகிய

அவிநயமும் இணைந்தது. ஆடலாசான்களை நிருத்தமாராயர், நிருத்தப் பேரரையன் என்று கல்வெட்டுக்கள் குறிப்பிடுகின்றன.

கம்பர் அகத்தியப் படலத்தில் இராமன் தண்டக வனத்தில் உள்ளார்க்கு அபயம் அளித்தார். வேந்தன் வீயவும், யாய்துயர் மேவவும், ஏந்தல் எம்பி வருந்தவும், என் நகர் மாந்தர் வன்துயர் கூறவும் யான் வனம் போந்தது என்னுடைப் புண்ணியத்தால் என்றார். அறந்தவா நெறி அந்தணர் தன்மையை மறந்த புல்லர்வன தொலையேன் எனின் இறந்து போகினும் நன்று. இது அல்லது, பிறந்து யான் பெறும் பேறு என்று யாவதோ என்று இராமன் உரைத்த வாசகம் கேட்டு உவந்து தேமறை பாடினர். மகிழ்ச்சியால் நிருத்தம் ஆடினர்.

உரைத்த வாசகம் கேட்டு உவந்து ஓங்கிட
இரைத்த காதலர், ஏசினர் இன்னலர்
திரிந்த கோலினர், தே மறை பாடினர்
நிருத்தம் ஆடினர், நின்று விளம்புவார் - 2653

இந்நிருத்தம் உணர்ச்சியின், உள்ளத்தின் மகிழ்ச்சியால் வெளிப்பட்ட கூடலாக அமைந்துள்ளது. நிருத்த நடனம் இரசத்தின் அடிப்படையில் அமைந்துள்ளது. சிலர் நிருத்தத்திற்குப் பாவம் இல்லை, இரசம் இல்லை என்று கூறுவர். உணர்வும், அதனால் உண்டாகும் சுவையும் நிருத்தத்திற்கும் உண்டு என்பதனைக் கம்பர் இப்பாடல்மூலம் தெளிவு படுத்தியுள்ளார். பரத சாஸ்திரம் கூறும் "யதோ ஹஸ்தஸ் ததோ சிருஷ்டி யதோ திருஷ்டிஸ் த, ததோ மனஹ, யதோ மனஸ்ததோ பாவாஹ, யதோ பாவாஹஸ்ததோ ரஸஹ" என்பதற்கேற்ப 'கைவழி நயனம் செல்ல, கண்வழி மனமும் செல்ல, மனம் வழி உணர்ச்சி செல்ல, அதினின்று சுவை பிறக்கும்' என்கிற இலக்கண முறையை 'நிருத்த ஆடினார்' என்ற தொடரும் அதற்கு முன்னுள்ள சூழல்களும் விளங்குகின்றன. இவ்வகை நடனம் ஆடியவர்களைக் கம்பர் நிருத மாக்கள் 4940 என்கிறார்.

சீதையை அனுமன் இலங்கையில் தேடி வருகிறார். பற்பல நிலையில் உள்ள அரக்கர்களைக் காண்கிறார். பூரியர் அமர மாதர் ஆட்டிட அரக்கமாதர் ஆடுகின்றனர். கன்னி சேடிமார்கள் இலக்கண மரபிற்கேற்ற எழுவகை நரம்பில் நல்யாழ் அலத்தகத் தளிர்;க்கை நோவ அரங்கினில் கந்தர்ப்ப மகளிர் நிருதமாக்கள் விளம்பிய நெறி வழுவாமல் ஆடுகின்ற காட்சியைக் காட்டுகின்றார்.

சந்தப் பூம் பந்தர் வேய்ந்த தமனிய அரங்கில், தம்தம்
சிந்தித்து உதவும் தெய்வ மணி விளக்கு ஒளிரும் சேக்கை
வந்து ஒத்தும் நிருத மாக்கள் விளம்பின நெறி வழாமை
கந்தர்ப்ப மகளிர் ஆடும் நாடகம் காண்கின்றாரை 4940

அழகிய பூப்பந்தல் கொண்டு அமைக்கப் பெற்ற பொன்னாலாகிய நாடக சாலையில், நினைத்ததைக் கொடுக்கும் தெய்வத்தன்மை பெற்ற சிந்தாமணி என்னும் இரத்தினம் விளங்கும்படி ஆசனத்தில் அமர்ந்து கொண்டு கந்தர்வமகளிர் ஆடும் ஆடலைப் பலர் காண்கின்றனர். இக் கந்தர்வ மகளிர் நெறிமுறை மாறாமல் ஆடலாசான் கற்பித்த வழி ஆடினர் என்கிறார்.

கண்ணுளர், மதங்கியர்

ஆடல்கலைஞர்களைக் கம்பர் வேறுசில பெயர்களாலும் அழைக்கிறார். அவருள் 'கண்ணுளர்' என்பதும் ஒன்றாகும். கண்ணுளர் என்பவர் கோலத்தாலும், கூத்தாலும் அழகு பெற ஆடும் சாந்திக் கூத்தர் என்று சிலப்பதிகார நாட்டார் உரை குறிப்பிடுகின்றது (5.49 உரை) கண்ணுள் என்பதனைக் கூத்து, நடம், நாடகம் என்று திவாகர நிகண்டு (9:191) குறிப்பிடுகிறது. 'கலம் பெறும் கண்ணுளர் ஒக்கல் தலைவ' என்று மலைபடுகடாம் (50) குறிப்பிடுகின்றது. இக்கண்ணுளரைக் கம்பர் வரைக் காட்சிப் படலத்தில் 'கண்ணுளர் ஆடல் தோறும்' (44) என்று குறிப்பிடுகிறார்.

ஆடல்கலைஞருள் மதங்கியர் என்பாரும் ஒருவராவார். இவர் சடங்காடல் மகள் என்றும் தேவரடியார் என்றும் பாணி மகள் என்றும் அழைக்கப்படுகின்றனர். ஆந்திரத்தில் தேவரடியார் சானி, மதங்கி, விலாசினி என்று அழைக்கப்படுகிறார். மதங்கியரை ஒத்த மயில் 4226 என்று கம்பர் குறிப்பிடுகிறார். யாழ் இசைப்பவரை நாரியர் என்பர். இவர் இசைத்த இசைக்கேற்ப நடனம் ஆடியமையைக் கம்பர் பா.எண். 3588 இல் குறிப்பிடுகிறார்.

கம்பர் ஆடல்கலை பற்றிய பல்வேறு கலை நுட்பங்களை இராம காதையில் குறிப்பிட்டுள்ளார். பாணி தள்ள நடம், நடம்திறம் நவில்உறு நங்கைமார், அவிநயம் காட்டும் மாதர், பாவனை தகைமையாளர், நிருத்த ஆடியோர், கண்ணுளர், மதங்கியர் என ஆடல்கலைஞர்கள் பற்றியும் சிறப்புறக் கூறியுள்ளார். தொழில் நுட்பம் அறிந்த இக்கலைஞர்கள் கம்பரின் கவித்திறத்தால் மேலும் பெருமை பெற்றுள்ளனர்.

கம்ப நாடகம்

பேராசிரியர் **அய்க்கண்**

காரைக்குடி

'நடையில் நின்றுயர் நாயகன்' இராமனைத் 'தன்னேரில்லாத் தலைவ'னாகக் கொண்டு இராமகாதை படைத்த கம்பன், அதை நாடகக் கூறுகள் இயைந்த காப்பியமாக ஆக்கியுள்ளான் என்பதைக் காணலாம். இதனைக் 'கம்ப நாடகம்' என்றும் பழங்காலம் தொட்டு அறிஞர்கள் வழங்கி வருகின்றனர். வால்மீகி கூறிய சரிதத்தைப் பல இடங்களில் ஒட்டியும், சில இடங்களில் மாற்றியும் திருத்தியும், நாடகக் கூறுகள் இடம்பெறும் வண்ணம் சுவையாக நிகழ்வுகளைச் சொல்லிச் செல்கிறான் கம்பன்.

நாடக மேடை

கம்பன், இயல்பிலேயே நாடகக் கலையின் சுவைஞன் என்பதை, பால காண்டத்தில் மருத நில வர்ணனையாக அமைத்துள்ள ஒரு பாடல் வெளிப்படுத்துகிறது.

'தண்டலை மயில்கள் ஆட' என்ற பாடலில் ஓர் அழகான இயற்கை நாடகமேடையைப் படைத்துக் காட்டுகிறான். மருத நிலத்து உயிர்களெல்லாம் அமைந்த நாடக அரங்கின் முன், மருதநிலத்து அரசன் வீற்றிருந்து காண்பது பொருத்தம்தானே?

இவற்றில், மேகங்கள் மத்தளம்போல் 'ஒலிக்க' என்று சொல்லாமல், 'ஏங்க' என்று கூறியதன் நயம் ண் மற்ற உயிர்களெல்லாம், மேடையின் அண்மையிலிருந்து நாடகத்தைக் கண்டு களிக்க, தாம் மட்டும் சேய்மையில் வானிலிருந்து காண வேண்டியுள்ளதே என்னும் ஏக்கம் என்க. மேடையின் எழினிகள் காற்றில் அசையும்போது, அலைகள் போல் தோற்றமளிக்கும் காட்சியைக் கம்பன் நீரலைகளோடு ஒப்பிடும் திறமும் நோக்கற்குரியது.

அகலிகை தோற்றம்

வால்மீகி இராமாயணத்தில், தாடகை வதம் முடிந்த பிறகு, மிதிலையை நோக்கி வரும்போது, விசுவாமித்திரர், ஒரு பழைய ஆசிரமம் பற்றிய வரலாற்றை இராமஇலக்குவரிடம் கூறுகிறார். கௌதமரின் பத்தினியாகிய அகலிகையின் வரலாற்றைக் கூறி, 'கணவரால் சபிக்கப்பட்ட அவள்,

உன் காலடி பட்டதும் மீண்டும் பெண்ணாக மாறுவாள்' என்று தெரிவிக்கிறார். அவ்வாறே, இராமனது கால் துகள் கதுவ, முன்னால் அவள் பெண்ணுருவில் நிற்பதைப் படிக்கும்போது, அந்நிகழ்ச்சி, ஓர் இயல்பான காட்சியாக அமைகிறது.

ஆனால், இதேநிகழ்ச்சியைக் கம்பன் மாற்றியமைக்கிறான். இராமனுடைய காலடிபட்டதும், கல்லிலிருந்து ஒரு பெண் எழுந்து நிற்பதைக் காணும்போது, இராமன் மட்டுமல்லண் நாமும் வியப்போடும் திகைப்போடும், அந்தப் பெண்ணைப் பார்க்கிறோம். 'யார் இந்தப் பெண்?' என்ற ஆர்வம் நம் உள்ளத்தில் பொங்குகிறது. அப்போது, விசுவாமித்திரர், அகலிகையின் அவல வரலாற்றைக் கூறுவது, ஒரு சுவையான நாடகக் காட்சியாக, நம் கண்முன்னே நிகழ்கிறது.

கணவனின் உருவில் வந்தவன் இந்திரன் என்று தெரிந்தே அகலிகை மகிழ்ச்சியோடும் பெருமையோடும் அவனுடன் கூடுகிறாள் என்கிறார் வால்மீகி. ஆனால்,

புக்கவளோடும் காமப்புதுமண மதுவின் தேறல்
ஒக்க உண்டிருத்தலோடும் உணர்ந்தனள் உணர்ந்த பின்னும்
தக்கதுஅன்று ஓராள் தாழ்ந்தனள் இருப்ப (பால.அகலிகை76)

உடன்பட்டிருந்தாள் அகலிகை என்று சற்றே மாற்றிய கம்பன், அவளையே இராமன் 'அன்னை!' என விளித்து "நெஞ்சினால் பிழைப்பிலாளை நீ ஏற்றிடுக" என்று, ஒரு தந்தையின் நிலையிலிருந்து 'மாசறு கற்பின் மிக்க அணங்கினை' முனிவர் கையில் ஈந்து மறுவாழ்வு அளிக்கச் செய்கிறான்.

இதே இராமன், இலங்கைப் போருக்குப் பின்னர், களங்கமற்ற சீதையைத் தீச்சோதனைக்குள்ளாக்கும் காட்சியின்போது, பின்நோக்கு உத்தியாக, அகலிகைக் காட்சி, நம் நினைவுக்கு வருவது, நாடக முரண் என்னும் சுவை பயப்பதாயுள்ளது.

தமிழ்க்காதல்

தமிழில் ஒரு காப்பியத்திற்கோ, நாடகத்திற்கோ, காதல் என்பது இன்றியமையாத ஒரு கூறாகக் கருதப்படுவது. தமிழில் இல்வாழ்வு, அகப்பொருள் எனப்படும் ஏழு திணைகளால் அமைந்தது ; குறிஞ்சி முதலாகிய அன்பின் ஐந்திணையும், கைக்கிளையாகிய ஒருதலைக் காமமும், பெருந்திணையாகிய பொருந்தாக் காமமும் ஆகிய ஏழும் உடையது.

இராமகாதையில், ஒரு தலைக் காமத்திற்கு, இராமனை விரும்பிய சூர்ப்பணகையும், இலக்குவனைக் காமுற்ற அயோமுகியும் வருகிறார்கள். ஆனால் 'செம்புலப் பெயல்நீர் போல, அன்புடை நெஞ்சம் தாம் கலந்த' (குறுந்தொகைண்40) காதலர்கள் இல்லை. எனவே இக் காப்பியத்தில் தமிழ்க் காதலைப் புகுத்த நினைத்த கவிச்சக்கரவர்ததி, இராமனும் சீதையும்,

கண்ணொடு கண்இணை கவ்வி ஒன்றை யயான்று
உண்ணவும் நிலைபெறாது உணர்வும் ஒன்றிட
அண்ணலும் நோக்கினான் அவளும் நோக்கினாள் (பால. மிதி.35)

என்ற ஒரு காட்சியைப் படைக்கிறார். இக்காதல் காட்சி, வான்மீகத்தில் இல்லை: திருமணத்திற்கு முன்பு, இராமனும் சீதையும் ஒருவரையொருவர் பார்த்ததே இல்லை என்பதே முந்தைய இதிகாசக் கதை.

ஆனால், தமிழ் அகப்பொருள் வாழ்விற்கேற்ப, காதலைப் புகுத்திய கம்பனுக்கு ஒரு சிக்கல் ஏற்பட வாய்ப்பு உள்ளது. தமிழகக் காதல் நடைமுறைப்படி, களவியலுக்குப் பிறகு காதலுக்குத் தடை ஏற்பட்டால், காதலர்கள் உடன்போக்கு மேற்கொண்டு, கற்பியல் வாழ்வைத் தொடர்வார்கள். ஆனால், இங்கே இராமன் வில்லை முறிக்காவிட்டால் சீதையின் காதல் என்னாவது?... அவள் உடன்போக்கு மேற்கொள்ள முடியாதே? இச்சிக்கலை நுட்பமாகக் கையாள்கிறார் கவிச் சக்கரவர்த்தி

தனக்குக் 'கன்யா சுல்க'மாக வைக்கப்பட்டுள்ள சிவ தனுசை ஒருவன் முறித்துவிட்டான் என்ற செய்தியைத் தோழி மூலம் கேட்டதும் 'அந்த ஒருவன், தான் கண்டு காதலித்தவன் இல்லாவிட்டால் என்ன செய்வது' என்று துடிக்கிறாள் சீதை.

சொல்லிய குறியின் அத்தோன்றலே அவன்
அல்லனேல் இறப்பன் என்று அகத்துள் உள்ளினாள் (63)

'வில்லை வளைத்தவன் என் காதலன் இல்லாவிட்டால், நான் உயிர் துறப்பேன்' என்று ஒரு புதிய தீர்வு காண்கிறாள் சீதை. எனவே, புதிதாய்த் தான் புகுத்திய காதல் நாடகத்தை அறிவுத் திறனோடு கையாண்டு வெற்றியடைகிறான் கம்பன்.

கூனியின் சூழ்ச்சி

நாடாள வேண்டிய இராமனைக் காடாளச் செய்யுமாறு கைகே-

யியைத் தூண்டியவள் மந்தரை. இராமன் முடிசூடுவதைக் காண நாடே ஆர்வமாக மகிழ்ந்திருந்தபோது, கூனி மட்டும் ஏன் அதைத் தடுக்க நினைத்தாள் என்பதற்கு வால்மீகி எந்தக் காரணமும் கூறவில்லை. வால்மீகி எழுதியது 'இதிகாசம்' : இதிகாசம் என்றால் 'இப்படி நடந்தது' என்று பொருள். ஆகவே வால்மீகி, கதை நடந்தபடியே கூறியுள்ளார்.

ஆனால் காப்பியம் அல்லது நாடகத்தில், ஒரு நிகழ்வுக்குக் காரணமாக அமைந்தது, எது என்று கூறுவது இன்றியமையாதது. எனவே கூனியின் காரியத்துக்கு ஒரு காரணத்தைப் படைத்துக் காட்டுகிறான் கம்பன்.

சிறு வயது விளையாட்டுப் பருவத்தில், இராமன் வில்லில் மண்ணுண்டையை வைத்துக் கூனியின் முதுகில் அடித்ததையெல்லாம் வேதனையோடு பொறுத்திருந்தவள், சமயம் வாய்த்தபோது பழிவாங்கிவிட்டாள் என்று காரணம் படைத்துக் காப்பியத்திற்கு வலு சேர்க்கிறார் கவிச் சக்கரவர்த்தி.

பண்டை நாள் இராகவன் பாணிவில் உமிழ்
உண்டை யுண்டதனைத்தன் உள்ளத்து உள்ளுவாள் (41)

(இவ்வாறு, இராமன் வில் உண்டை எய்த விளையாட்டையே, 'கூனியின் கூன்போக உண்டை தெறித்தது' என்று, கூனியின் கூன் நிமிர்ந்து நேராக வேண்டும் என்ற நன்னோக்கத்தோடு ஆடிய அருள்விளையாட்டாக, நயத்தோடு கூறுவது, கம்பனுக்கே உரிய கவித்திறன்!)

மந்தரை சூழ்ச்சியால் மனம் வேறுபட்ட கைகேயி, சாதாரண நிலையிலேயே இருந்து, தசரதனிடம், தனக்குரிய இரு வரங்களைக் கேட்டிருக்கலாம். ஆனால் அவள், தன் அணிகலன்களையெல்லாம் கழற்றியெறிந்து, தலை விரிகோலமாக, தரையில் படுத்துச் சோகமாய்க் காட்சியளித்து, ஊடியவளாய் நடித்துக் கணவனைத் திகைக்க வைக்கிறாள். இந்நிலையில் கைகேயியை 'நாடக மயில்' என்றே குறிக்கிறான் கம்பன்.

கங்கை வேடன்

வான்மீகத்தின்படி, கங்கைக்கரையில் இராமனைச் சந்திக்கிற குகன், ஒரு குறுநில மன்னன்: இராமனின் நெடுநாளைய நண்பன். அவன் இராமனை வரவேற்கக் கொண்டுவரும் அறுசுவை உணவுப் பண்டங்களையும் பழச்சாறுகளையும், தான் தாபத நிலையில் விரதம் பூண்டிருப்பதாகக் கூறித் திருப்பியனுப்பிவிடுகிறான் இராமன்.

ஆனால் கம்பன், அந்த மன்னனை, வேட்டுவர் தலைவனாக மாற்றியமைத்து, அவன் கொணரும் தேனையும் மீனையும் இராமன், அன்பின் படையலாக ஏற்றுக்கொள்ளச் செய்கிறான்.

அரியதாம் உவப்ப உள்ளத்து அன்பினால் அமைந்த காதல்
தெரிதரக் கொணர்ந்த என்றால் அமிழ்தினும் சீர்த்த அன்றே?
பரிவினில் தழீஇய என்னில் பவித்திரம்: எம்மனோர்க்கும்
உரியன. இனிதின் நாம் உண்டனெம் அன்றோ? (43)

(பெரியபுராணத்தில், சிவபெருமான், காளத்திவேடன் திண்ணப்பன் படைத்த இறைச்சியை அவியுணவாக ஏற்றுக்கொண்ட நிகழ்வின் தாக்கம், கம்பனின் இப்பாத்திர மாற்றத்திற்குக் காரணமாய் இருக்கும் என்று யூகிக்க இடமுள்ளது.)

'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்னும் பண்பாட்டுக்கு இலக்கியமாய் வாழ்ந்து காட்டிய இராமன், தன் ஐந்தாவது தம்பியாக ஒரு மன்னனைக் கொள்வதைவிட, ஒரு வேட்டுவத் தலைவனைச் சகோதரனாகக் கொண்டு, தொடர்ந்து வானரத் தலைவன், அரக்க இனத்தவன் என்று, உலகளாவிய சகோதர நேயத்துக்கு அடிகோலுவது பொருத்தமாயிருக்கும் என்று கம்பன் நினைத்திருக்கிறான். எனவேதான், சிருங்கிபேர மன்னனைக் கங்கைக்கரை வேடனாக மாற்றினான் எனக் கொள்ளலாம்.

அயோமுகியின் கைக்கிளை

ஆரணியக் காண்டத்தில் அயோமுகிப்படலத்திலும் கம்பனது நாடக உத்தியைக் காண்கிறோம். சடாயுவின் ஈமக்கிரியை முடிந்த பிறகு, சீதையைத் தேடி இராம இலக்குவர், கானகத்தில் நடக்கும்போது, இராமனுக்கு நீர்வேட்கை ஏற்படுகிறது. குடிநீரைத் தேடி இலக்குவன் தனியே வெகுதூரம் செல்கிறான். அவனைக் கண்ட அயோமுகி என்ற அரக்கி, அவன்மேல் காமுற்று, தன்னைக் கூடுமாறு அவனைக் கெஞ்சுகிறாள். ஆனால் இலக்குவன் மறுத்து அவளைக் கண்டிக்கிறான். காமத்தால் தூண்டப்பட்ட அரக்கி அவனைத் தழுவித் தூக்கிக் கொண்டு தன் குகையை நோக்கி நடக்கிறாள்.

அடுத்த பாட்டிலே, இலக்குவன் அவளைத் தண்டித்து விடுதலையானதைக் கூறாமல், கம்பன் இலக்குவனை அதே நிலையில் விட்டுவிட்டு, அடுத்த பாடலில், இராமன், தம்பி இன்னும் திரும்பாததை எண்ணிக் கவலைப்படுவதையும் புலம்புவதையும் தொடங்கி, 16 பாடல்களில்

இராமனது கவலையைச் சொல்லி, இராமனை மட்டுமல்ல ண் நம்மையும் பதற்றத்துக்குள்ளாக்கிவிடுகிறான்!

கடைசியில், இலக்குவனைக் காணாமையால், தற்கொலை செய்துகொள்ள இராமன் துணியும் நேரத்தில், இலக்குவனால் மூக்கு முதலிய உறுப்புகள் அறுப்புண்ட அரக்கி ஓலமிடும் குரல் கேட்கிறது என்று கூறி, இராமனையும் நம்மையும் நிம்மதிப்பெருமூச்சுவிடச் செய்கிறார் கவிச்சக்கரவர்த்தி.

இவ்வாறு பல இடங்களில் நிகழ்வுகளை ஆர்வம் கொள்ளும் வகையில் நாடக உத்தியோடு கம்பன் படைத்திருப்பதைக் காணலாம்.

இரணியன் கதை

யுத்தகாண்டத்தில் இராவணனைத் தெருட்டுவதற்காக வீடணன் கூறும் இரணியன் வதை பற்றிய செய்தியும் வால்மீகியில் இல்லை.

பின்னையும் வீடணன் ஐயநின் தரமிலாப் பெரியோர்
முன்னை நாள் இவன் முனிந்திடக் கிளையயாடு முடிந்தார்
இன்னம் உண்டு யான் இயம்புவது இரணியன் என்பான்
தன்னை உள்ளவா கேட்டி என்று உரைசெயச் சமைந்தான் (118)

என்று கம்பனே இரணியன் வதைப்படலத்தைப் புதிதாகச் சேர்த்துள்ளான். காவியப் போக்குக்கும் நாடகப் பண்புக்கும் இக்கதையும் சுவையூட்டும் நிகழ்வாக அமைந்துள்ளதைக் காண்கிறோம்.

சகோதரர் சந்திப்பு

யுத்தகாண்டத்தில் போர்க்களத்தில் வீடணனும் கும்பகர்ணனும் சந்தித்துப்பேசும் காட்சி நாடகத்தின் அவலச் சுவையை மிகுவித்துள்ளதைக் காணலாம்

வால்மீகியில் இந்தக் காட்சி இல்லை. இராவணனுக்கு அறிவுரை சொல்லியும் கேளாத நிலையில், செஞ்சோற்றுக் கடன் தீர்க்க, அண்ணனுக்காகப் போரிடக் கும்பகர்ணன் வரும்போது, வீடணன் அவனைக் களத்தில் சந்தித்துப் பேசுவதாக ஒரு காட்சியை அமைத் துள்ளான் கம்பன்.

தீயன செய்த ஒருவன், போரிலே அழியும் சாவை விட, எந்தத் தீங்கும் செய்யாத ஒரு நல்லவன். தீயவனுக்காகப் போரிட்டு மாளும் காட்சி, நம் உள்ளத்தில் அவலச்சுவையை மிகுவிப்பது இயல்பு.

வால்மீகியின் கும்பகர்ணனைவிட, கம்பனின் கும்பகர்ணன் நற்பண்புகள் நிறைந்தவனாகக் காட்டும்போது, நமக்கு அவன்மேல் மிகுந்த பரிவும் இரக்கமும் ஏற்படுகிறது. போர்க்களத்தில் தன்பால் வந்த வீடணனைப் பார்த்து,

அவையம் நீ பெற்றவாறும் அமரரும் பெறுதலாற்றா
உவைய லோகத்தின் உள்ள சிறப்பும் கேட்டு உவந்தேன் உள்ளம்
கவிஞரின் அறிவுமிக்காய்! காலன்வாய்க் களிக்கின்றேம்பால்
நவையிலை வந்தது என் நீ? அமுதுண்பாய் நஞ்சுண்பாயோ? (131)

என்று கவலையோடு கேட்கிறான் கும்பகர்ணன். சகோதரனின் அன்புள்ளம் கண்டு மனம் நெகிழ்ந்த வீடணன்,

தீவினை ஒருவன் செய்ய அவனொடும் தீங்கிலாதோர்
வீவினை உறுதல், ஐய! மேன்மையோ? கீழ்மை தானோ?
ஆய்வினை உடையை அன்றோ? அறத்தினை நோக்கி ஈன்ற
தாய் வினை செய்யவன்றோ கொன்றனன் தவத்தின் மிக்கோன்?(144)

என்று பரசுராமனின் செயலை எடுத்துக் கூறித் தெருட்டி, அவனை இராமனிடம் வருமாறு வேண்டுகிறான்.

அவனுடைய அறிவுரைகளையெல்லாம் ஏற்காமல் 'அண்ணனுடைய நன்றிக்காக, போரிட்டு மாள்வதே அறம்' என்று கூறி, அதே சமயம் வீடணன் செய்ததும் சரியே என்று உடன்பட்டு, அவனைத் திரும்பவும் இராமனிடம் அனுப்பும் கும்பகர்ணனின் பாச உணர்வு, நம் உள்ளத்தை நெகிழச் செய்கிறது.

மலரின்மேல் இருந்த வள்ளல் வழுவிலா வரத்தினால் நீ
உலைவிலாத் தருமம் பூண்டாய் உலகு உளதனையும் உள்ளாய்
தலைவன் நீ உலகுக்கெல்லாம் உனக்கு அது தக்கதேயால்,
புலையுறு மரணம்எய்தல் எனக்கு இது புகழதேயா (156)

எந்த வாழ்வியல் சிக்கலுக்கும் ஒரு தீர்வுதான் உலக இயல்பு. ஆனால், 'அறமா? நன்றியா?' என்று சகோதரர்களுக்கு ஏற்பட்ட சிக்கலுக்கு, வீடணன் எடுத்த தீர்வும், தான் எடுத்த தீர்வும் சரியானதே என்று தெளிவுறுத்தும் கம்பனின் கும்பகர்ணன், ஓர் அருமையான குணச்சித்திரப் பாத்திரமாக ஒளிர்கிறான். அதனால்தான், குற்றமற்ற அந்த நல்லவனைக் கொல்வதற்கு அம்பு எய்ய, இராமனும் தயங்குகிறான்

: 'வள்ளலும் மலர்க்கரம் விதிர்ப்புற்றான்' என்பான் கம்பன். தான் சாகும்போதும், கும்பகர்ணன்

'நீதியால் வந்ததொரு நெடும் தரும நெறி அல்லால்
சாதியால் வந்தசிறு நெறி அறியான் என் தம்பி
ஆதியாய் உனையடைந்தான் அரசர்உருக் கொண்டு அமைந்த
வேதியாய்! இன்னமும் உனக்கு அடைக்கலம் யான் வேண்டினேன்(357)

என்று வீடணனை இராமனிடம் அடைக்கலப்படுத்திவிட்டு மாளும் பாச உணர்வு வெளிப்படும் இந்தச் சந்திப்பு, கம்பனின் கைவண்ணத்தில் ஓர் உருக்கமான நாடகக் காட்சியாகப் பரிணமித்துள்ளது.

தீச்சோதனை

இராமகாதையின் நிறைவுக்காட்சி, நாடகத்தின் உச்சக்கட்டக் காட்சி போல், ஓர் அருமையான நாடகமாக அமைந்துள்ளதைக் காணலாம்.

இலங்கைப் போரிலே வென்ற பிறகு, சிறையிருந்த சீதையை அணிசெய்வித்து அழைத்து வருமாறு வீடணனிடம் ஆணையிடுகிறான் இராமன். அவ்வாறே, அணிமணிகளோடு வந்த சீதையிடம், திடீரென்று இராமன் சுடுசொற்கள் பேசும்போது, நாம் திடுக்கிட்டுப் போகிறோம்...அற்பினத் தலைவனும் அமைய நோக்கினான் . உடனே அவன் முகம் திரிந்தது. அவன் வாயிலிருந்து கொடுஞ்சொற்கள் தீயாக வெளியாகின்றன. எல்லோரும் திடுக்கிடுகிறார்கள்.

யாது யான் இயம்புவது? உணர்வை யீடறச்
சேதியா நின்றது உன் ஒழுக்கம், செய்வது
சாதியால், அன்றெனில் தக்கதோர் நெறி
போதியால் என்றனன் புலவர் புந்தியான் (யுத்தண்மீட்சிண்68)

சீதையின் ஒழுக்கத்தின்மேல் இராமனுக்கு ஐயம் எப்படி ஏற்பட்டது? **கண்டனென் கற்பினுக்கு அணியைக் கண்களால்** என்றும்,

இற்பிறப்பு என்பது ஒன்றும், இரும்பொறை என்பது ஒன்றும்
கற்பெனும் பெயரது ஒன்றும் களி நடம்புரியக் கண்டேன்

என்றும் அறிவித்தவன், 'சொல்லின் செல்வன்' அனுமன் அல்லவா? இராமனது முழு நம்பிக்கைக்குரியவன் அல்லவா அனுமன்?

வீடணன் இராமனிடம் அடைக்கலம் தேடி வந்தபோது, மற்றவர் களெல்லாம் 'அவனைச் சேர்த்துக் கொள்ளக் கூடாது' என்று கருத்துரைக்க, அதை மறுத்து, மாருதி சொல்லையே ஏற்று, **மற்றினி உரைப்பது என்னை? மாருதி வடித்துச் சொன்ன பெற்றியே பெற்றி** என்று, தேர்ந்த மதியாளனாக மதிக்கப்பட்டவனுடைய சொல்லை இராமன் நம்பவில்லையா? அல்லது இலங்கையிலே யாராவது சீதையின் கற்பை (உத்தரகாண்டத்தில் அயோத்தியில் குடிமகன் ஒருவன் இழித்துப் பேசியது போல்) சந்தேகித்தார்களா?... இல்லையே!

இராமன் சீதையை இவ்வாறு சுடுசொற்களைக் கூறிச் சினப்பதற்கு, வேறு காரணம் இருக்கவேண்டும். அந்தக் காரணம், இராமனைத் தவிர வேறு யாருக்கும் தெரியவில்லை.. இங்கேதான் இராமனின் நாடகக் காட்சி அரங்கேறுகிறது.

இப்போது கணவனுடைய சுடுசொற்களால் சீதை, மனம் புண்பட்டுத் துடிக்கிறாளே இதேபோல், அன்று மாயமானுடைய பொய்க்குரல் கேட்டு, சீதையை விட்டுவிட்டுச் செல்லாமல் நின்ற இலக்குவனைச் சீதை, சுடுசொற்களால் பேசியபோது, ஒழுக்கத்தில் சிறந்த அந்த இளவலின் மனம் எப்படிப் புண்பட்டுத் துடித்திருக்கும்? கற்பிற் சிறந்த ஓர் ஆண்மகனின் உள்ளத்தைப் புண்படுத்திய சீதைக்கு ஒரு தண்டனை வேண்டாமா? .தான், இளவலைக் கடிந்து பேசியது பெருங்குற்றம் என்று, சீதையும் உணர்ந்திருந்தாள். அசோக வனத்தில் சிறையிருந்தபோது,

என்னை, நாயகன் இளவலை எண்ணலா வினையேன்
சொன்ன வார்த்தை கேட்டு, அறிவிலள் எனத் துறந்தானோ? (14)

என்று நினைந்து புலம்பியிருக்கிறாள் சீதை. எனவேதான், அப்போது தான் இழைத்த குற்றத்திற்குத் தண்டனை தகும் என்பதை உணர்ந்து, தீச்சோதனைக்கு நெருப்பூட்டுமாறு ண் அங்கே எத்தனையோ பேர் இருக்க- இலக்குவனையே தேர்ந்து 'இடுதி தீ' என்கிறாள்.

இன்னணம், இராம காதை முழுவதையுமே, மூல நூலின்வழி நின்றும், மாற்றியும், புதுக்கியும், சுவை நிறைந்த நாடகக் காட்சிகளாகக் கவிச்சக்கரவர்த்தி அமைத்துள்ளதை நுண்ணுதின் உணரலாம். இக் காலத்திலும் ஊர்ப்புறங்களில், 'ஒருவர் நுண்ணிதாக ஓர் அரிய செயலைச் செய்திருக்கிறார்' என்றால் 'அது கம்ப சித்திரமோ?' என்று

வியந்து சொல்லும் வழக்கம் உள்ளதை அறிவோம்.நம் நெஞ்சில் நிலைத்து நிற்கும் காட்சிகளாக, ஒவ்வொரு காட்சியும் அமைந்திருக்கும் இராம காதையைக் 'கம்ப நாடகம்' என்று முன்னோர் பாராட்டியது முற்றிலும் பொருத்தமே எனலாம்.

கம்பனில் நாடகவியல்

பா. பத்மபிரியா
முனைவர் பட்ட ஆய்வாளர் தமிழ்த்துறை விரிவுரையாளர்,
ஸ்ரீமதி இந்திராகாந்தி கல்லூரி திருச்சி-2.

தொல்காப்பியருக்கு முற்பட்ட அகத்தியர் காலத்திலேயே மூவகைத் தமிழும் வழக்கில் இருந்த போதிலும், அச்சொல் இலக்கியங்களில் இடம் பெற்ற காலம் மிகவும் பிற்பட்டதேயாகும். மனக்கருத்தின் அமைதியே இயற்றமிழ் வாய் ஒலியின் அமைதியே இசைத்தமிழ். மெய்யின் விளக்கமே கூத்துத்தமிழ் எனக் கூறுவர். அத்தகு சிறப்பு வாய்ந்த கூத்து தமிழே நாடகமாகப் பரிணாம வளர்ச்சி பெற்றது. இராமகாதையில் கம்பனால் கையாளப்பட்டிருக்கும் நாடகக் கூறுகள் பற்றிக் காண்போம்!

நாடகம்

நாட்டியத்தால் பெறும் இன்பத்தினை நீடிக்க விழைந்த மக்களின் வேட்கையே நாடகமாக மலர்ந்தது எனலாம். மேலும் நுட்பமான கலை நயங்களைக் காண ஆவல் கொண்டு நாட்டியக் கலையோடு நெருங்கிய தொடர்புடைய ஒன்றினை மக்கள் கண்டுபிடித்த வரலாறே நாடகத்தோற்றமாகும்.

நடிப்பில் இரண்டு வகை உண்டு. ஒன்று கருத்துகளை நடித்து காட்டுதல் மற்றொன்று கதைகளை நடித்துக் காட்டுதல். கருத்துகளை நடித்துகாட்டுதல் 'நாட்டியம்' என்றும் கதைகளை நடித்துக் காட்டுதல் நாடகம் என்றும் அழைக்கப்பெற்றன. இவ்விரண்டினையும் பொதுவாகக் 'கூத்து' என்று அழைத்தனர் என்பர் தமிழறிஞர் இளவழகனார்.

கம்ப இராமயணத்தில் நாடகம்

கி.பி 12ஆம் நூற்றாண்டில் தமிழகத்தில் நிலவிய நாடகக் கலைக் கூறுகள் கம்ப இராமாயணத்தில் பல இடங்களில் பதிவு பெறுகின்றன. ஏனெனில், கம்பர் காலத்துத் தமிழகம் சோழ மன்னர்களின் ஆட்சியில் சிறந்திருந்தது. கலைகள் தழைத்திருந்தன. முத்தமிழும் செழித்திருந்தன. முத்தமிழ் துறைபோகிய வித்தகர் பலர் தமிழகத்தில் வாழ்ந்தனர்.

முத்தமிழ் துறையின் முறை போகிய
உத்தமக் கவிகள் (கம்ப தற்சிறப்பு - 08)

என இவர்களைக் கம்பர் சுட்டிக் காட்டுவதால் அறியலாம். மேலும்இ ஆடல் மகளிர், கூத்தர், ஆடரங்குகள், பரதநாட்டியம், நாடகத்தில் மக்களுக்கு இருந்த ஈடுபாடு போன்ற செய்திகளை கம்பர் ஆங்காங்கு தம் இராமாயணத்தில் சுட்டிச் செல்கிறார்

கம்பரின் நாடக மேடை

கம்பர், மருதநிலச் சோலை ஒன்றை வருணிக்கும்பொழுது அங்கே நடந்த இயற்கை நாடகம் ஒன்றைத் தமது **'தண்டலை மயில்கள் ஆட'** எனும் பாடலில் அமைத்துக் காட்டுகின்றார். இயற்கை நலம் மிகுந்து தோன்றும் கம்பர் காட்டும் நாடகக் காட்சியொன்று காவியத்திற்குச் சுவை கூட்டுகின்றது.

மயில்	-	விறலி
நீர் அலைகள்	-	நாடகத்திரை (எழினி;)
தாமரை மலர்	-	விளக்குகள்
மேகங்களின் ஒலி	-	முழவோசை
வண்டுகளின் இன்னொலி	-	யாழிசை
குவளை மலர்கள்	-	நாடகத்தைக்காணும் மக்கள்

ஓவியத்தில் நாடகம்

அக்காலத்தில் நகரங்களில் மாடமாளிகைகளின் உட்சுவர்களில் பலவகை ஓவியங்கள் தீட்டப்பட்டிருந்தன. அவ்வோவியங்களில் நாடக நிகழ்ச்சிகள் இடம்பெற்றிருந்தனஇ எனக் கம்பர் குறிப்பிடுவார்.

நாடகத் தொழிலன நடுவுதுய்யன
ஆடகத் தோற்றத்த மகளிர் போன்றன (கம்ப.நகர -123)

இவ்வடிகளால் ஓவியங்களில் சிறப்பாகத் தீட்டப்படும் அளவுக்கு நாடகக்கலை வளர்ச்சிப்பெற்றிருந்ததென அறியலாம்.

நாடக அரங்குகள்

கலை வாணர்களாகிய ஆடல் வல்லுனர்களும், பாவாணர்களும் இன்னிசை வாணரும் மக்கள் ஆதரவைப் பெற்றிருந்தனர். மன்னர்களாலும் பரிசுகள் நல்கிப் பாராட்டப்பெற்றனர். கலையார்வம் மக்களிடையே நிறைந்திருந்தது. விறலிக்குப் பரிசு தரப்பட்ட செய்தியை

'மறலிக்கூணாம்' (பால. பூக்கொய் - 27) எனும் அடிகளால் அறிந்து கொள்ளலாம்.

கூத்தர்கள் நாடகம் ஆடுவதற்கான அரங்குகள் நாடெங்கும் இருந்தன. கம்பர் பல இடங்களில் இவ்வரங்குகள் பற்றிக் குறிப்பிடுகிறார்.

அறையும் ஆடரங்கும் (கம்ப. தற்சிறப்பு - 09)

அன்ன மென் னடையாவர் ஆடும் மண்டபம் (கம்ப. நகர - 154)

நரம்பியல் இமிழிசை நவில நாடகம் (கம்ப. நகர - 62)

கைவழி நயனஞ் செல்லக் கண்வழி மனமுஞ் செல்ல
ஐயநுண் ணிடையா ராடு மாடக வரங்கு கண்டார் (மிதிலை - 570)

அரம்பையர் ஆடிய அரங்கின் (சுந்தர - சூளாமணி - 45)

எனவரும் அடிகளால் இதனை அறியலாம். மேலுமஇ; மக்களின் சிறப்பானதொரு பொழுதுபோக்காகவும் நாடகம் அமைந்து விடுகிறது. என்பதனை, **சுந்தர்ப்ப மகளிர் ஆடும் நாடகம் காண்கின்றாரை** (சுந்தர. ஊர்தேடு - 106) எனக் கம்பர் குறிப்பிடுவதால் உணரலாம்.

நாடகக் கலைஞர்கள்

கம்பர் கூத்தர்களைக் "கண்ணுளர்" எனவும், ஆடல் மகளிரை "மதங்கியர்", "சுந்தர்ப்ப மகளிர்", "விறலியர்" எனவும் சுட்டியிருக்கிறார். பரதநாட்டியம் மகளிரால் ஆடப்பட்டு வந்த செய்தியை, **பரத நூன்முறை நாடகம் பயனுறப் பகுப்பான்** (கம்ப. கிட்கிந்தா -கார்கால -38)னவரும் அடிகள் உணர்த்தும்.

மதங்கியர், மக்கள் ஒலி, தாள ஓசை, பாட்டு ஒலிக்கு ஏற்ப நாட்டிய நூல் முறைப்படி பாதங்களில் பலவிதங்களில் சதிபெற வைத்து நடனம் ஆடுவர் என்பதனை,

பதங்களிற் நண்ணுமை பாணி பண்ணுற
விதங்களின் விதிமுறை சதிமிதப்பவர்
மதங்கியர் சதி வகுத்துக் காட்டுவ
சதங்கைக எல்லன புரவித் தாள்களே (கம்ப. பால. நகர - 144)

எனும் அடிகள் சுட்டுகின்றன. இதனிலும் சிறப்பாக காட்டுக்குள் பெண்களைப் போல ஆட விரும்பிய மயில்கள் நாடகம் பயின்றனவாம் என்றும் குறிப்பிட்டுள்ளது சிறப்பானதொரு நிகழ்வாகும்.

கம்ப இராமாயணத்தில் நாடகக் கூறுகள்

நாடகத்தில் உணர்ச்சியைத் தூண்டிக் கருத்தக்களை மனதில் ஆழமாக பதிய வைத்து இன்பம் தருவதன் பொருட்டு கையாளப்படும் உக்திகள் பலவாகும். சிறந்தமைகின்ற நாடகத்தில் இடம்பெறும் நாடகக் கூறுகளாகஇ அரிஸ்டாட்டில்

1. கதையின் கரு 2. சிறந்த நயமிகுநடை 3. கதையின் கருத்து

4. நாடக மாந்தர் 5. இசைப்பாடல் 6. இனியகண்கவர் காட்சி

ஆகியவற்றைக் குறிப்பிடுகிறார்.

இவை அனைத்தும் இராமாயணத்தில் பல இடங்களில் பொருந்தி வருகிறது. மேலும் கடந்த கால நிகழ்ச்சி ஒன்றைத்திடுமெனக் கூறி முன்னிகழ்ச்சிகளின் இடைப்பதிவாக (கடயளாடியஉம) நாடகத் திறனை வெளிப்படுத்துதலும் உண்டு.

சான்றாக, காப்பியத்துள் அமைந்துள்ள கைகேயி சூழ்வினை, சீதையைப் பிரிந்த இராமன் புலம்பல், அசோகவனத்தில் இருக்கும் சீதை இராமனை நினைத்து ஏங்குதல் போன்ற நிகழ்வுகளைக் குறிப்பிடலாம்.

தமிழ்இலக்கியப் பேழையுள் காத்துப் போற்றப்படுகின்ற கம்ப இராமாயணத்தில் நாடகத்தின் அமைப்புக் கூறுகளும்இ நாடகப்போக்கும்இ இசைவாணர்கள் பற்றியக்குறிப்பும் ஆங்காங்கு விரவிக் காணப்படுகின்றன. நாடக உணர்ச்சிப் புலப்பாடுகள் வெளிப்படுத்தப்படுகின்றன. இராமகாதையின் ஒவ்வொரு படலமும் தனித்தனியாக நாடகம் நடத்தும் அளவிற்கு சிறப்புடையதாகத் திகழ்கிறது.

கம்பராமாயணமும் நாடகவியல் காட்சி அமைப்பும்

முனைவர் கி.பார்த்திபராஜா

உதவிப் பேராசிரியர், தமிழ் முதுகலை மற்றும் ஆய்வுத்துறை,
தூய நெஞ்சக் கல்லூரி, திருப்பத்தூர்-வேலூர் மாவட்டம்.

'கம்பராமாயணத்தைக் கம்ப நாடகம் என்று கூறுகின்றார்கள். கம்பராமாயணத்தை நாடகமாக அமைத்துவிடுவது எளிது' (1966:177) என்று கருத்துரைக்கிறார் பன்மொழிப் புலவர் தெ.பொ.மீனாட்சிசுந்தரனார்('நாடகக் காப்பியங்கள்', சேகர் பதிப்பகம், சென்னை:1966.) காப்பியத்தின் பண்புகள் வேறு; நாடகத்தின் பண்புகள் வேறு. காப்பியம் உள்ளிட்ட பல்வேறு இலக்கியப்படைப்புகளில் நாடகத்தின் கூறுகள் கலந்திருப்பதைக் காணமுடிகிறது. காப்பியக் கவிஞன் பிற இலக்கியப்படைப்பாளிகளைப் போலன்றித் தன் படைப்பில் பல்வேறு வடிவெடுக்கின்றான். 'பாத்திரங்களை உருவாக்கும்போது சிற்பியாகவும், இயற்கையை விவரிக்கும்போது ஓவியனாகவும், சந்தக் கவிதைகளைத் தரும்போது இசைஞனாகவும், பாத்திரங்களின் உரையாடலை அமைக்கும்போது நாடகாசிரியனாகவும், பாத்திரங்களின் மெய்ப்பாடுகளை விவரிக்கும்போது இயக்குநராகவும், இடச்சூழலை விளக்கும்போது அரங்க நிர்மாணியாகவும் - இப்படிப் பல்வேறு கலைஞர்களின் மொத்த வடிவாக்க் காப்பியக் கவிஞன் விளங்குகின்றான்' என்பர்.

கம்பர் தனது காப்பியத்தில் பல்வேறு நாடகக் கூறுகளைத் திரட்டி அளித்திருப்பதன் மூலம் தனது காப்பியத்திற்குக் 'கம்பநாடகம்' என்ற பெயரைப் பெறுகிறார். நாடகப் படைப்பு முற்றிலுமாகக் காட்சி சார்ந்தது. கம்பரும் தனது காப்பியத்தில் நுட்பமான காட்சிச் சித்தரிப்புகளைச் செய்திருக்கிறார். வழமையான காப்பியக் காட்சிச் சித்தரிப்பிலிருந்து மாறுபட்டு, நாடகக் காட்சி விவரணைகளாகப் பல்வேறு காட்சிகளை அமைத்திருக்கிறார். அவற்றின் நுட்பங்களையும் சிறப்பையும் பொருண்மைப் பொருத்தப்பாட்டினையும் இக்கட்டுரை ஆய்கிறது.

இயற்கை வருணனைச் சிறப்புகள்

கம்பராமாயணம் இராமனின் கதையை மிகவும் விரிந்த தளத்தில் சித்திரிப்பதாகும். எனவே காப்பியப் பாத்திரங்களுக்கு இணையான பாத்திரங்களாக இயற்கையின் வடிவங்கள் காப்பியத்துள்

இடம்பெறுவதைக் காணமுடிகிறது. இயற்கைச் சித்தரிப்புகள் காப்பியத்தின் பின்னணியை விளக்குவதோடு, காப்பியப் பண்புகளை மிகுவிக்கவும் அழுத்தம் தரவும் பயன்படுகின்றன. இதனைப் பல்வேறு இடங்களில் கம்பர் மிகச் சரியாகவும் பொருத்தமாகவும் கையாண்டிருக்கிறார் என்பது அறிஞர்களின் மதிப்பீடு ஆகும்.

கம்பராமாயணத்தில் இயற்கை வருணனைகள் பல இடங்களில் விரிவாகவும் நுட்பமாகவும் இடம்பெற்றுள்ளன. பாலகாண்டத்தில், ஆற்றுப்படலம், நாட்டுப்படலம், சந்திர சயிலப்படலம், வரைக் காட்சிப் படலம், பூக்கொய் படலம், நீர் விளையாட்டுப் படலம், உண்டாட்டுப் படலம் ஆகிய இடங்களில் பல நிலைகளில் இயற்கை வருணனைகள் வந்து காட்சியாக விரிகின்றன. அயோத்தியா காண்டத்தில், வனம்புகு படலம், சித்திரக்கூடப் படலம் ஆகியன காட்சியாக விரிகின்றன. ஆரண்யகாண்டத்தில் பஞ்சவடிப் படலம் இயற்கை வருணனைச் சிறப்பெய்தி நிற்கிறது. கிட்கிந்தா காண்டத்தில், பம்பைவாவிப் படலம், மராமரப் படலம், வாலிவதைப் படலம், கார்காலப் படலம், ஆறுசெல் படலம் முதலானவை இயற்கை வருணனை நுட்பங்களைக் கொண்டு, காப்பியத்துக்குப் புதுப்பொலிவு சேர்க்கின்றன. யுத்தகாண்டத்தில், கடல்காண் படலம், சேதுபந்தனப்படலம், மீட்சிப் படலம் ஆகியன காட்சியமைப்பின் உச்சங்களைத் தொடுகின்றன எனலாம்.

வருணனைப் பின்புலம்

காப்பியத்தில் இடம்பெறும் வருணனைகள் காட்சியாக விரியும் அதே நேரத்தில், காப்பியப் பொருளினையொட்டி வாசகனைப் பயணப்பட வைப்பதாகவும் இருக்கின்றன. விவரிக்கும் முறையில் காட்சி விரிவாகவும் நுட்பமாகவும் சொல்லப்படினும் அவை வெற்றுக் காட்சியாக மட்டுமின்றிக் காப்பியப் பண்பை நிலை நிறுத்தவும், காப்பியப் பொருண்மைக்கு வலு சேர்க்கவுமாக அமைகின்றன. இயற்கை வருணனைகள் மூன்று நிலைகளில் அமைகின்றன என்று கருத்துரைக்கிறார் கா.அரங்கசாமி ('கம்பராமாயணத்தில் நாடகக் கூறுகள்', என்னெஸ் பப்ளிகேஷன்ஸ், உடுமலைப்பேட்டை: 1993)

1. பாத்திர மனநிலைக்கு ஏற்ற வண்ணமாகவோ,

2. அரசாட்சியின் பின்னணியைக் காட்டுவதாகவோ,

3. மகிழ்ச்சி அல்லது துன்பகரமான சூழலின் பின்புலமாகவோ கவிஞனால் உருவாக்கப்பெறுகின்றன (1993:125) என்கிறார் அவர்.

இத்தகைய பின்புலமாகவே காட்சிகள் கம்பராமாயணத்தில் அமைக்கப்பட்டுள்ளன.

பாத்திர மனநிலை–காட்சி

கவிஞனின் காப்பியக் காட்சிச் சித்தரிப்பானது வெற்று விவரணைகளாக அன்றிப் பாத்திரங்களின் மனநிலையைச் சித்தரிப்பதாகவும் அமைவது உண்டு. நாடகங்களில் காட்சிகள் அமையும்போது, திரை, பின்னணி, அரங்கப் பொருட்கள், ஒளி உள்ளிட்ட காட்சி விளக்கப் பொருண்மைகள் பாத்திரங்களின் மனநிலையைச் சித்தரித்துவிடுவது உண்டு. அந்த நுட்பத்தினைத் தனது காப்பியத்துள் பல்வேறு இடங்களில் பயன்படுத்தியுள்ளார் கம்பர். எடுத்துக்காட்டாக, ஆரண்ய காண்டத்தில் இடம்பெறும் பஞ்சவடிப் படலக் காட்சி, சீதி மற்றும் இராமனின் மனநிலையைச் சித்தரிப்பதாக அமைகின்றது. இவ்வாறாகப் பாத்திரங்களின் மனநிலையை விளக்கும் அல்லது விரிவாகப் புரிந்துகொள்ளும் வகையில் காட்சி விவரணைகள் கம்பராமாயணத்தில் பல இடங்களில் அமைந்துள்ளன.

அரசாட்சியின் பின்னணி–காட்சி

நாடகத்தில் இடம்பெறும் காட்சிகள் பொருள் பொதிந்தவை. அவை மறைபொருளாக நாடகத்தின் உட்பொருளை உணர்த்த முயலுபவை. அதைப்போன்றே கம்பராமாயணத்தில் இடம்பெறும் பல காட்சிச் சித்தரிப்புகள், அக்காட்சி இடம்பெறும் நாடு அல்லது அரசு எதுவோ, அதன் பண்பினை வெளிப்படுத்தி நிற்கிறது. பாலகாண்டத்துள் இடம்பெறும் ஆற்றுப்படலம், நாட்டுப்படலம் முதலானவை அயோத்தி அரசு நல்லரசாக அமைவதனைச் சித்தரிக்கிறது. எனவே ஆற்றுப்படலம், நாட்டுப்படலம் முதலானவை விவரணைகளாக மட்டுமின்றி உட்பொருள் பொதிந்தவையாகவும் உள்ளன.

மகிழ்ச்சி, துன்பம்–காட்சி

பாத்திரங்களுக்கு நிகழும் இன்பம் மற்றும் துன்பம் ஆகியவற்றின் அடிப்படையிலும் காட்சி அமைவது உண்டு. சீதை, இராமர் திருமண மகிழ்ச்சிச் சூழலின் பின்னணியில் வரைக்காட்சிப் படலமும் பூக்கொய் படலமும் அமைகின்றன. காட்சி வருணனையில் திருமண மகிழ்ச்சி சுவறியிருப்பதைக் காணமுடிகின்றது. அதேபோல, சீதையை இராமன் பறிகொடுத்த சூழலின் பின்புலமாக, கார்காலப் படலம் சோகத்தின்

அடர்த்தியை வாசகனிடம் கொண்டுபோய்ச் சேர்க்கிறது. இவ்வாறு காட்சியின் பின்புலமாக வருணனை பல இடங்களில் கம்பராமாயணத்தில் அமைவதைக் காணமுடிகிறது.

கம்பன் எனும் காட்சியாளன்

'கம்பர் காவியத்தில் ஒவ்வொரு பாட்டும் ஒரு சுவையுள்ள நாடகக் காட்சியாகத் திகழ்கின்றது. இத்தகைய நாடகக் காட்சிகளை ஒன்பது சுவைகளும் ஊற்றெடுத்துப் பாயும்படி என்றும் அழியாத உயிரோவியங்களாகச் சித்திரிக்கிறார் கம்பர்' (1968:16) என்று பாராட்டுகிறார் கோ.சுப்பிரமணிய பிள்ளை ('கம்பர் விருந்து', மணிவாசகர் நூலகம், சென்னை:1968.)

. கம்பனின் கவித்திறம் காப்பியப்பாடல்களைக் காட்சி விவரணையாக விரித்துச் சுவைதருகிறது. கம்பனின் காட்சி அமைப்புச் சிறப்பைப் பின்வருமாறு பாராட்டுகிறார் கா.அரங்கசாமி. 'கம்பராமாயண நாடகச் சூழலில் இடம்பெறும் காட்சி அமைப்புகள் அருமையானவை. அவை (1) அரசவைகள், (2) முனிவர் ஆசிரமங்கள், (3) மலைச்சாரல்கள், (4) ஆற்றுப்படுகைகள், (5) கானகங்கள், (6) போர்க்களங்கள் எனப் பல வகையின. சிறந்த பல வண்ண ஓவியங்களைப் போல் காட்சிகளை அழகுறப் பொருத்தமாக அமைத்துத் தன் பாத்திரங்களை அவற்றில் இயங்க விடுகின்றான் கம்பன். இக்காட்சி அமைப்புக்களும் காப்பியச் சூழலிலிருந்து நாடகச் சூழலைப் பிரித்தெடுக்கப் பயன்படுகின்றன' (1993:158) என்கிறார் அவர்.

இயற்கையை நாடகமாக்கல்

இயற்கைப் பொருட்களைத் தேர்ந்து இணைத்துக் காட்சியாக்குவதில் கம்பர் கை தேர்ந்தவர் என்பதற்கு அவர்தம் காப்பியத்தின் பல பாடல்கள் சாட்சியாகின்றன. அதில்தான் கம்பனின் கற்பனைச் சிறப்பும் அழகுற வெளிப்படுகிறது. 'மனித அறிவாற்றலின் வெளிப்பாடே இயைபுக் கற்பனையை உருவாக்குகிறது. வேறுபட்ட கூறுகளை இசைவு படுத்துவதாலும் ஒழுங்குபடுத்துவதாலும் இது ஏற்படுகிறது. மருதம் கொலுவிருக்கும் காட்சியைக் கம்பன் காட்டும்போது இவ்வியைபுக் கற்பனை வெளிப்படுகிறது. வேறுபட்டுக் கிடக்கும் இயற்கைப் பொருட்களைச் சேர்த்து, சில கூறுகளைத் தேர்ந்து இணைத்து இயைபுக் கற்பனைக் காட்சியைப் படைக்கின்றான் கவிஞன்' (1978:51) என்று

குறிப்பிடுகிறார் டாக்டர் ச.வே.சுப்பிரமணியன். ('கம்பன் கற்பனை', தமிழ்ப் பதிப்பகம், சென்னை:1978.)

தண்டலை மயில்கள் ஆடத் தாமரை விளக்கந் தாங்க
கொண்டல்கள் முழவின் ஏங்க குவளைகண் விளித்து நோக்க
தெண்திரை எழினி காட்ட தேம்பிழி மகர யாழின்
வண்டுகள் இனிது பாட மருதம் வீற்றிருக்கும் மாதோ (35)

என்ற பாடலினை அவர் கம்பரின் இயைபுக் கற்பனைக் காட்சிச் சிறப்பிற்கு எடுத்துக்காட்டாக எடுத்துரைக்கின்றார். இயற்கைப் பொருட்களை ஒருங் கிணைத்துப் புதுக்காட்சியினைக் கம்பர் உருவாக்குவதும் அக்கற்பனைக் காட்சியும் கூட நாடகத் தன்மை கொண்டு காப்பியச் சுவை பயப்பதும் கருத்தில் கொள்ளத்தக்கது ஆகும்.

முடிவுரை

கம்பர் தனது காப்பியத்தில் காப்பியச்சுவையினை மிகுவிக்க, நாடக பாணியிலான காட்சி விவரணைகளை அமைத்திருக்கிறார். அவை வெற்று விவரணைகளாக அன்றிக் காப்பியத்துக்குப் புதுப்பொருள் தருவதாகவும் வாசகனை ஈடுபாட்டுடன் சேர்ந்து பயணப்பட வைக்கும் தன்மையதாகவும் அமைவதைக் காணமுடிகின்றது.

கம்பநாடகம் பல்வேறு நாடக நுட்பங்களையும் கூறுகளைம் பெற்றுத் திகழ்கின்றது எனினும் காட்சி அமைப்பில் நாடகீயக் கூறுகளை முற்றிலும் பெற்று விளங்குகிறது எனல் மிகைக் கூற்றன்று. அக்காட்சிச் சித்திரிப்பே வாசகன் கண்முன் நிகழ்வது போன்று ஓர் அனுபவத்தைத் தருகின்றது. நாடகவியல் காட்சி அமைப்பில் கம்பன் தனித்துவம் பெற்று விளங்குகிறார் எனலாம்.

கம்பராமாயணத்தில் மெய்ப்பாடு

வே.சித்ரா
கௌரவ விரிவுரையாளர், தமிழ்த்துறை, அரசு மகளிர் கலைக்கல்லூரி, சிவகங்கை.

உணர்வுகளின் வெளிப்பாடே மெய்ப்பாடு. மெய்ப்பாடுகளை தகுந்த சொல்லாட்சி திறனோடு வெளிப்படுத்துவதில் கம்பர் தலைசிறந்தவர். அவ்வகையில் தொல்காப்பியர் சுட்டியுள்ள எண்வகை மெய்ப்பாடுகளும் பொருந்தியுள்ளவற்றை இக்கட்டுரை ஆயமுற்படுகிறது.

மெய்ப்பாடு

நகையே அழுகை இளிவரல் மருட்கை
அச்சம் பெருமிதம் வெகுளி உவகையென்று
அப்பால் எட்டே மெய்ப்பாடென்ப (மெய்ப்பாட்டியல்-3)

உணர்வின் வெளிப்பாடு உடல் (மெய்) மூலம் வெளிப்படுவது (படுவதுபாடு) 'மெய்ப்பாடு' எனப்படும். நகை, அழுகை முதலாக மெய்ப்பாடுகள் எட்டு வகைப்படும் எனத் தொல்காப்பியர் வரையறை செய்துள்ளார்.

நகை

எள்ளல் இளமை பேதைமை மடமெனன்று
உள்ளப்பட்ட நகைநான் கென்ப (மெய்ப்-4)

கும்பகர்ணன் ஆறுமாதம் விழித்திருந்தால் ஆறு மாதம் உறங்குவான். உறங்குகின்ற கும்பகர்ணனின் காதில் அரக்கர்கள் பலர் ஒன்று சேர்ந்து உலக்கையைக் கொண்டு இடித்து எழுப்புவதைக் கூறும் பாடல் நகைச்சுவையைத் தருவது.

உறங்குகின்ற கும்பகர்ண உங்கள் மாயவாழ்வு எல்லாம்
இறங்கு கின்றது இன்று காண எழுந்திராய் எழுந்திராய்
கறங்கு போல் விற்பிடித்த கால தூதர் கையிலே
உறங்கு வாயுறங்கு வாய் இனிக் கிடந்து உறங்குவாய்

என்பது அப்பாடல்

இராவணன் வானரத்தானை கண்ட படலத்தில் கோபுரத்தின் மேல் ஏறிநின்று குரங்குப் படையைக் காண்கிறான். அப்போது சாரன் குரங்குப்

படைத்தலைவர்களைக் காட்டி அவர்களது ஆற்றலை விவரித்து கூறுகின்றான். அதனைக்கேட்ட இராவணன் வானரப்படை தன்னை என்ன செய்யும் என்று கூறுகின்றான். இவ்விடத்தில் எள்ளல் சுவை வெளிப்படுகின்றன. இதனை,

சினம் கொல் திண்திறல் அரக்கனும் சிறுநகை
புனம்கொள் புன்தலைக் குரங்கினைப் புகழுதி போலும்
வனங்களும் படர் வரை தொறும் திரிதரு மானின்
இனங்களும் பல என்செயும் அரியனை (யுத்தகாண்டம்-6894)

என்ற பாடல் வரிகளில் காண முடிகிறது.

அழுகை

இழிவே இழவே அசைவே வறுமையென
விளிவில் கொள்கை அழுகை நான்கே

அழுகை என்பது மெய்ப்பாடு தோன்ற அடிப்படையான உணர்ச்சியாகும். இவற்றுள் இழவாவது உயிரானும் பொருளானும் இழத்தல். இந்திரசித்து பிரமன் படைக்கலத்தை எய்ய, அனைவரும் வீழ்ந்தனர். இராமனும் வருந்தி சோர்ந்தான். அவ்வளவில் சீதை இக்காட்சியைக் கண்டபின் தன்னைச் சீதை விரும்பக்கூடும் என்று களம் காண இராவணன் பல்லக்கில் அனுப்பி வைக்கிறான். கணவன் வீழ்ந்து கிடப்பதைக் கண்ட சீதையின் துயரத்திற்கோ அளவில்லை. இப்பெருந்துயரைப் பெண் தானுற்ற பெரும்பிழை உலகுக்கெல்லாம் பெரிது என்பர் கம்பர்.

சீதை நினைப்பும் நீத்தாள், அரக்கியர் நீரால் தெளித்துச் சீதையை எழுப்பினர். உயிர் வந்தது. ஏங்கினாள். கண்கள் சிதையுமாறு கைகளால் மோதினாள். அவள் படும் துன்பத்தை வெளிப்படுத்தும் அவல பாடலான,

விழுந்தாள், புரண்டாள், உடல் முழுவதும்
வியர்த்தாள், அயர்ந்தாள், வெதும்பினாள்
எழுந்தாள், இருந்தாள், மலர்க்கரத்தை
நெரித்தாள், சிரித்தாள், ஏங்கினாள்

கொழுந்தா என்றாள், அயோத்தியர்தங்
கோவே என்றாள், எவ்வுலகும்
தொழுந்தாள் அரசே யோவென்றாள்

சோர்ந்தாள் அரற்றத் தொடங்கினாள் (களங்காண் படலம் - 8, 9)

சீதை பெற்ற துயரை நாம் நேரே காணுமாறு கம்பர் சொல்வண்மையால் மெய்ப்பட முடித்துக் காட்டுகிறார். என்னே அவர்தம் சொல்வன்மை எத்தனை எத்தனை மெய்பாடுகளை காணமுடிகிறது.

இளிவரல்

மூப்பே பிணியே வருத்தம் மென்மையோடு
யாப்புற வந்த இளிவரல் நான்கே (மெய்ப்-6)

கும்பகர்ணன் வருவதைப் படலத்தில் இராவணன் இலங்கைக்கு மீண்ட நிலையைக் கம்பர்.

தாதுஅவில் கூந்தல் மாதர் தனித்தனி நோக்க தான்விப்
பூதலம் என்னும் நங்கை தன்னையே நோக்கி புக்கான் (7274)

என்கிறார். இராவணனை இராமன் இன்று போய் நாளை வா என கூறுகின்றார். அவன் இலங்கைக்கு மீளும் நிலையைக் காட்டும் கம்பர் மலையொத்த தோள், வாள், வீரம் முதலியவற்றைக் களத்தில் விட்டுவிட்டு வெறுங்கையோடு சென்றான் என்கிறார். உலகையும், நகரையும், மக்களையும், சேனையையும் பார்க்காமல் பெண்கள் எல்லாம் அவனைப் பார்க்க அவன் தலைக்கவிழ்ந்து நிலத்தையே பார்த்துச் சென்றான் எனக் கூறுமிடத்தில் இளிவரல் தன்மை சிறப்பாக சுட்டப்பட்டுள்ளது.

மருட்கை

புதுமை, பெருமை, சிறுமை, ஆக்கமொடு
மதிமை சாலா மருட்கை நான்கே (மெய்ப்-7)

இராவணன் சீதையைக் கவர்ந்து சென்றான். இராமன் கலங்கி நின்றான். அவன் கண்ணுக்கு மண், மலை, விண் என அனைத்தும் சுழன்றது. உள்ளம் கலங்கினவர்க்கு உலகம் கலங்கலாய்த் தெரியும் மருட்கை மெய்ப்பாட்டை,

'மண் சுழன்றது மால்வரை சுழன்றது முதியோர்
எண் சுழன்றது சுழன்றஅவ் எறிகடல் ஏழும்
விண் சுழன்றது வேதமும் சுழன்றது விரிஞ்சன்
கண் சுழன்றது சுழன்றது கதிரொடு மதியம்

என்னும் பாடல் பாங்குற வெளிப்படுத்துகின்றது.

அச்சம்

இது அணங்கு (பேய், பூதம், பாம்பு முதலியன) விலங்கு, கள்வர், தம் அரசன் என்ற நான்கு அடிப்படையில் பிறக்கும் தேவர்கள் தம் இறைவனான இராவணனுக்கு அஞ்சினர் மேலும் அரக்கியர் (அணங்கு) இராவணன் கட்டளைப்படி

கொன்மின் கொன்மின் கொன்று குறைத்துக் குடரார‌த்
தின்மின் தின்மின் என்று தெழித்தார் சிலரெல்லாம்.

என்றவிடத்துச் சீதையை அச்சுறுத்தும் செயலைக் காண்கிறோம்.

மேலும், போர்க்களத்தில் பகைவர் ஆற்றலுக்கு ஆற்றாது ஓடும் குரங்குகளின் அச்சத்தைக் கம்பர்,

பூண்டன நடுக்கம் வாய்கள் புலர்ந்தன, மயிரும் பொங்க
மாண்டனம் அன்றோ? என்ற வானரம்...

என்று கூறுகின்றார். அனுமன் ஆற்றலுக்கு அஞ்சாது ஓடும் அரக்கரது அச்சமும் இலங்கையில் எழுந்த தீயினுக்கு அஞ்சிய பெண்களின் அச்சமும் காப்பியத்தில் அழுகுற அமைந்துள்ளது.

பெருமிதம்

பெருமிதச் சுவைக்குரிய மெய்ப்பாடு, கல்வி, தறுகண் இசைமை, கொடை என்ற நான்கு நிலைக் களன்களை அடிப்படையாகக் கொண்டு பிறக்கும்.

இராமன், இலக்குவன், இராவணன், இந்திரசித்து கும்பகர்ணன் போன்றவர்களின் வீரத்தால் விளைந்த மெய்ப்பாட்டினைக் காப்பியத்தில் மிகுதியாகக் காணமுடிகிறது.

ஈந்தே கடந்தான், இரப்பேர் கடல், எண் இல் நுண் நூல்
ஆய்ந்தே கடந்தான்.....

என்னும் பாடலில் கொடை, கல்வி, வீரம், செல்வம் முதலியவற்றால் அடைந்த பெருமித வாழ்வினை அறிய முடிகிறது.

வெகுளி

உறுப்பறை குடிகோள் அலை கொலை என்றா
வெறுப்ப வந்த வெகுளி நான்கே

பிற உறுப்புகள் சிதைக்கப்படும் பொழுது கோபம் வெளிப்படும்.

சூர்ப்பணகையின் உறுப்புகளை இலக்குவன் சிதைத்ததால் இராமனுக்கும், இராவணுக்கும் போர் நடந்தேறியது. அவர்களைக் காப்பாற்றுவதற்காக இராமன் கோப உணர்வினை வெளிப்படுத்துகிறான். மந்தரை சூழ்ச்சிப் படலத்தில் கூனியின் சினத்தைக் கம்பர்.

தெழித்தனள்உரப்பினள் சிறுகன் தீஉற
விழித்தனள், வைதள், பெய்து உயிர்த்தாள்

என்று கூறியுள்ளார்.

உவகை

செல்வம், புலன், புணர்வு விளையாட்டு என்னும் நிலைக்களன்களைக் கொண்டு உவகை தோன்றும் புணர்வு, விளையாட்டு பற்றிப் பிறக்கும். மெய்ப்பாடுகளை உண்டாட்;டுப் படலம் பூக்கொய்;படலம் ஆகியவற்றில் பல பாடல்களில் பாடியிருப்பதைக் காணலாம்.

பொன்னே தேனே பூமகளே காண் என்னை என்னாத்
தன்னே ரில்லாள் அங்கொரு கொய்பூந்தழை மூழ்கி
இன்னே என்னைக் காணுதி நீயென்று இகலித்தன்
நன்னீலக் கண் கையின் மறைத்து நகுவாளும் (31)

ஒருத்தி மறைந்து பிடிக்கும் விளையாட்டை ஆடுபவளாய்த் தன் தோழியை விளித்து நான் மறைந்து கொள்கிறேன். நீ கண்டுபிடி பார்ப்போம் என்று பூங்கொம்பின் தழையில் மறைந்து நிற்க அத்தோழியும் இவளுள்ள இடத்தைத் தேடிப் பிடிக்க மாட்டாதவளாக பிறகு மெல்ல அவள் பின்புறமாக வந்து அவள் கண்களைத் தன் கைகளால் மூடி இப்பொழுது கண்டுபிடிப்பாய் என்று அவளை கேலியாகச் சொல்லினாள். இவ்விளையாட்;டில் தோழியர் இருவரிடைத் தோன்றிய உவகையைக் காண்கிறோம்.

கம்பனில் போர்க்கலையியல்

முனைவர் **ந.சிங்காரவேலன்**

உதவிப் பேராசிரியர், தமிழ் முதுகலை மற்றும் ஆய்வுத்துறை,
தூய நெஞ்சக் கல்லூரி, திருப்பத்தூர்-வேலூர் மாவட்டம்.

கம்பனின் இராம காதையில் "கம்பனில் போர்க் கலையியல்" என்பது பற்றி ஆய்வு செய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

சங்க காலத் தமிழர்கள் போர்க்கலையியலைத் திறம்பட அறிந்திருந்தனர் என்பதை சங்க இலக்கியத்தால் அறிய முடிகிறது. போர் மூளும் போது அறம் வழுவாமல், பிறழாமல் போர் செய்தனர் என்பதைப் பின்வரும் புறநானூற்றுப் பாடலால் அறிய முடிகிறது.

ஆவு மானியற் பார்ப்பன மாக்களும்
பெண்டிரும் பிணியுடையீரும் பேணித்
தென்புல வாழ்நர்க் கருங்கடனிறுக்கும்
பொன் போற் புதல்வர் பெறாஅதீரும்
எம்மம்பு கடிவிடுதும் நும்மரண் சேர்மின் (புறநானூறு)

மாற்றான் நாட்டின்மீது படையெடுக்கும் மன்னன், ஆவையும், பார்ப்பண மாக்களையும் பிணியுடையோரையும், தென்புலம் சென்றார்க்கு நீர்க்கடன் ஆற்ற புதல்வர் பெறாதவரையும் சீறிப்பாயும் என் அம்பு தாக்கும் முன் பாதுகாப்பான அரணைத் தேடிச் சேருங்கள் என்று எச்சரிக்கை செய்த பின்னே படை நடத்தினர்.

போர்க்கலையியலை நன்கறிந்த கம்பனும் தன் காப்பியத்தில் போரால் ஏற்படும் நாசத்தை, மக்கள் மடிவதைத் தவிர்க்க, மாற்றான் தர்ம நியாயங்களை அறிந்து மனம் திருந்த "தூது செல்லல்" எனும் போர்க்கலையியல் உத்தியைப் பயன்படுத்தினார். அனுமன் தூது, வீடணன் தூது, அங்கதன் தூது மூலம் மாற்றான் மனம் மாறிப் போரைத் தவிர்க்க முயன்று இருக்கிறான்.

கம்பனும் சங்க இலக்கியம், திருக்குறள் வடமொழி நூல்கள், வான்மீகி இராமாயணம் இவைகளை மாசறக்கற்று, தன் மனத்தில் இருத்தி, பின்னரே தன் காவியத்தைச் சமைக்கத் தொடங்கினான் என்பது வெள்ளிடை மலை.

போர் என்றால் புயம் பூரிக்க வேண்டும் தோள்கள் துள்ள வேண்டும். கோபக்கனல் வார்த்தைகளில் கனல் மாரி பொழிய வேண்டும். குகன் மூலம் இக்காட்சிகளைக் காண வைத்தான் கம்பன். பரதன் தன் தமையனை மீண்டும் அழைத்துப்போய் அரியணையில் அமர வைக்க சேனைகளோடு கானகம் வருகின்றான். பெரும்படை கண்ட குகன் கண்கள் கனல் வீச, தோள்கள் ஆர்த்தெழ, புஜங்கள் புடைத் தெழப் பார்க்கின்றான். "ஆழி சூழ் உலகெமெலாம் பரதனே ஆள" என்று கைகேயிவரம் பெற்றமையால் இராமனைக் காட்டிலிருந்து ஓட்ட வருகிறான் பரதன் என்று தவறாக நினைத்து கோபம் கொள்கின்றான். கம்பன் கவிகளில் கோபக் கனல் குகன் வாயிலாகக் கொப்பளித்து வெளிப்படுகிறது.

ஆழ நெடுந்திரை ஆறு கடந்திவர் போவாரோ.
வேழ நெடும்படை கண்டு விலங்கிடும் வில்லாளோ
தோழமையென்றவர் சொல்லிய சொல்லொரு சொல்லன் றோ
ஏழமை வேடன் இறந்திலன் என்றெனை ஏசாரோ? (2317)

நீண்ட அலைகள் வீசும் கங்கையாற்றைக் கடந்து அல்லவா இவர்கள் அக்கரையை அடைய வேண்டும். யானைப்படையைக் கண்டு அஞ்சி நடுங்கிடும் வில்லியாளியா நாங்கள்! அடியேனை வேடன் என்று கருதாமல் தோழன் என்று இராமன் சொன்ன சொல் ஒப்பற்ற சொல் அல்லவா? என் தோள் வலியையும் வில்லாற்றலையும் மீறி இவர்கள் கங்கையைக் கடந்தார்களானால், வீரன் வேடன் குகன் இக்கரையில் இருக்கிறான் என்ற பாதுகாப்பால் அல்லவா கங்கையை இராமன் கடந்தான். தன் ஆற்றலைக்காட்டி பரதன் படையைத் தடுத்து நிறுத்தாமல் போகவிட்டானே குகன். அவன் இறந்திருக்கக்கூடாதா? என்றல்லவா மக்கள் தூற்றுவார்கள் என்று வீறுகொண்டு தன் சினத்தைக் குகன் வெளிப்படுத்துவது, வெகுளியின் மெய்ப்பாடுகளைத் தன் பாட்டின் மூலம் கம்பன் கண்ட போர்க்கலையியலின் ஒரு உத்தியாகும்.

கம்பன் போர்க்கலையியல் யுத்தகாண்டத்தில் தான் விஞ்சிய நிலையில் வெளிப்படுகிறது என்பது நாம் அறிந்த ஒன்று. தூது பயனற்றுப் போனபின் போரில் பகைவரை நேருக்கு நேர் சந்திக்கும் முன், தலைவன் தன்னம்பிக்கை உணர ஆற்றித்தன் வீரர்களை வீறு கொள்ளச் செய்வான். "தறுகண் உறையே வஞ்சினம்" என்பது தொல்காப்பியம், இதனைப் புறநானூறு வஞ்சினக்காஞ்சி என்றே வகைப்படுத்துகிறது.

இராவணன் தன் தம்பி கும்பகர்ணனைப் போர்க்களம் புக அழைத்து வர ஏவலர்களை அனுப்புகிறான். குன்றனைய தோளுடைய கும்பகர்ணனை உலக்கையால் தலையிலும், தோளிலும் அடித்து எழுப்புகின்றனர்.

மாற்று அணி வீரர்களே, இராமன் தோள் ஆற்றலையும், வில்லாற்றலையும் விதந்து போற்றிப் புகழ்வது "அறம் வெல்லும் பாவம் தோற்கும்" என்ற பாவிகத்திற்கு அரண் செய்கிறது.

தன் சேனாதிபதிகள் போரில் மாண்டபின் இராவணன் இராமனோடு போரிடச் செல்கின்றான். இரு தரப்பிலும் கடும்போர் நடந்தது. முடிவில் இராவணன் தன் மகுடம் இழந்து, ஆயுதம் இழந்து, வெறுங்கையனாய் தனித்து நிற்கின்றான். இராமன் போரறம் அற்றானாகில் அக்கணமே கோதண்டத்தால் கொன்றுவிட முடிந்திருக்கும். அறத்தின் மூர்த்தி, தர்மத்தின் தலைவன், குணக்கடலாகிய இராமன், பகைவன் மீது இரக்கம்

ஆளையா! உனக்கு அமைந்தன மாருதம் அறைந்த
பூளை ஆயினகண்டனை! இன்று போய்ப் போருக்கு
நாளை வா! என்று நல்கினன் நாகு இளங்கமுகின்
வாளை தாவுறு, கோசல நாடுடை வள்ளல் (முதற் போர்ப்படலம் 255)

மனம் திருந்தி, செய்ததற்கு வருந்தி, எனது திருவடியில் பொருந்தி, சீதையை விட்டு விடுவாயென்றால், என வளம் பொருந்திய கோசல நாட்டைச் சென்று ஆளையா! என்று இப்பாடலின் கடைசி அடியில் கோசல நாடுடை மன்னன் என்று கூறாமல் வள்ளல் எனக் கம்பன் கூறுவது, இராமன் பட்டம், பதவி, சீர், சிறப்பு, பேர், புகழ் இவற்றுள் பற்று அற்ற அறக்கடவுள் என்றே குறிப்பிட்டுக் காட்டுவது எண்ணி மகிழத்தக்கது.

ஆயுதமிழந்து தன்னந்தனியாளாய் நிற்போர் மீதும், புறங்காட்டி ஓடுவார் மீதும், புண்பட்டு வீழ்ந்து கிடப்பார் மீதும், ஓர் வீரன் ஆயுதம் கொண்டு தாக்கக்கூடாது என்னும் போர்க்கலையியல் உத்தியை கம்பன் காட்டும் திறம் அவரது பன்னூல் புலமையைப் புலப்படுத்துகிறது.

வாலி வதைப்படலத்தில் இராமன் போர்க்கலைத் திறத்திற்கு ஒரு வழு நேர்ந்து விட்டதாக கற்றோரும், மற்றோரும் இன்று வரை வாதித்தும் அதனைச் சாதித்தும் வருகின்றனர். வாலி வானர வம்சம் ஆனாலும், நாலு வேதங்களை நவையறக்கற்றவன், சிவபக்தன், தவத்தால் சிவத்தைத் தன் வசமாக்கியவன், வரம்பில் ஆற்றலான், தேவர்களுக்காக தான்

ஒருவனாகவே பாற்கடலைக் கடைந்தவன், போரில் மாற்றான் வலிமையில் பாதியைப் பெறும் வரத்தைப் பெற்றவன், சூறைக்காற்றுக்கூட அவனைத் தொட்டுச் செல்லுமே அன்றித் தூக்கிச் செல்லாது. அத்தகைய ஓர் மாவீரனைத் தருமத்தின் வேலியாக விளங்கிய இராமன், மரத்தின் பின் மறைந்து நின்று கொன்றது குற்றமல்லவா? என்று வினா எழும்புகின்றனர். அதற்குத் தக்க விடையை இலக்குவனே கூறி இராமன் செயலை அதுவே அறம் என்று வழுவமைதி கூறிவிடுகின்றான்.

இராமன் ஒரு சொல், ஒருவில், ஒரு இல் என்ற குறிக்கோளைத் தாரக மந்திரமாகக் கொண்டவன். வாலியின் இளவல் சுக்கீரிவன் இராமனைச் சரணடைந்து விட்டான். இராமன் தன்னிடம் சரணடைந்தவரைக் காக்கும் வள்ளல். சுக்ரீவனிடம் உன் தாரத்தைக் கவர்ந்த வாலியைக் கொன்று உனக்கு கிட்கிந்தை அரசைத் தருவேன் என்று சூளுரைத்து விட்' -ான். இந்த நெருக்கடியானசூழலில் இராமன் வாலியை நேருக்கு நேர் சந்தித்துப் போர்த் தொடுக்க வருவானாயின் "மும்மை சால் உலகுக்கெல்லாம் மூல மந்திரம், தம்மையே தமர்க்கு நல்கும் தனிப் பெரும் பதம், இம்மையே எழு பிறவி நோய்க்கும் மருந்தாகிய இராமனை நேரே கண்டபின் வாலி ஓடி வந்து அவன் தாளில் விழுந்து சரண் அடைவான். ஒரு சொல் என்னும் மந்திரத்தை உயிர் மூச்சாகக் கொண்ட இராமன் வாலியையும் தன் உடன்பிறப்பாக ஏற்க வேண்டிய நிலையைத் தவிர்க்கவும், சுக்ரீவனுக்கு அவன் தந்த வாக்கைக் காக்கவும் இராமன் தன் சுயரூபத்தைக் காட்டாது வாலியைக் கொன்றான் என்ற முடிவுக்கு வருவதே இராமனின் போர்க்கலைத் திறத்திற்கு அரண் செய்யும் என்பது தெளிவாகிறது. வாலி இராமன்மீது எந்த அளவுக்கு மதிப்பும், பற்றும், பாசமும் கொண்டவன் என்பது அவன் தன் மனைவி தாரையிடம் பேசும் பேச்சிலிருந்து தெரிய வருகிறது.

இராமன் அறத்தின் ஆறு, தருமத்தின் தலைவன், சிற்றன்னையின் வாக்கைக் காக்க அரசையே தகவுடன் தம்பிக்கு ஈந்த தருமத்தின் தேவு, தம்பியர் அல்லது தமக்கு வேறுயிர் இம்பரில் இல்லை என வாழ்பவன். இராமனைக் குறைத்துப் பேசினை, பெண்மையால் பிழைத்தனை பாவி என்று ஏசுகிறான். தன்னைக் கைக்கணையால் வீழ்த்திய இராமனை தன் கேள்விக்கணைகளால் துளைக்கின்றான் வாலி. உன் தாரத்தைத் தூக்கிச் சென்றவனை, தேவர்களைத் துரத்திக் கொன்றவனை, அழிக்க யானை பலம் கொண்ட என் துணை பற்றாமல் சுக்ரீவன் எனும் முயலைப்பற்றி

இருக்கிறாயே? என் துணை கேட்டிருந்தால் இராவணனை என் வாலினால் அடித்துக் கொன்று உன் மனைவியையும் உன்னிடம் சேர்ந்திருப்பேன் எனப் பேசும் வாலி. நிச்சயமாக இராமனிடம் போருக்கு வரமாட்டான். இத்தனையும் தன் தீர்க்க தரிசனத்தால் உணர்ந்த இராமன், எப்போதும் மறைக்குப் பின்னால் மறைந்திருருப்பவன், இப்போது மரத்தின் பின்னால் மறைந்து நின்று வாலியைக் கொன்றான். இதிலும் இராமன் தன் போரக்க்கலைத்திறம் வழுவாமல் தன் சொல்லைக் காத்தவன் என்பது தெளிவாகிறது.

இராவணனின் மறமாட்சி

ந.சரவணன்
முனைவர் பட்ட ஆய்வாளர்.அ.வீ.வா.நினைவு திரு.புட்பம் கல்லூரி,
பூண்டி

'பிறர் மனை நாடலாகாது' என்ற கோட்பாட்டின் அடிப்படையில் இயற்றப்பட்ட, இக்காப்பியம் காலம் நடந்து நிற்பதற்குக் கம்பனின் கவித்துவம் ஒரு காரணம். வால்மீகியிலிருந்து சில இடங்களில் மாறு பட்டக் கம்பன் தன் மண்ணிற்கேற்பப் படைத்துள்ளது அனைவரும் அறிந்த ஒன்றே. அதே போல் இராமனும் - இராவணனும் இரண்டு குறியீட்டடிப்படையில் படைத்துக் காட்டப்பட்டிருப்பதும் இக்காவியம் நிலைபெற்று நிற்பதற்கு மற்றொரு காரணமாகும்.

எதற்கும் அடிபணியாதவன்

இராமனாகிய வீரன் சக்கரத்துடன் கூடிய அழகிய அகன்ற தேரில் ஏறுகிறான். இந்நிகழ்வு நடந்தவுடன் தேவர்கள் அனைவரும் உலகமுடிவில் வீசுகின்ற வெப்பாக்காற்றை விடக் கொடிய கருடனின் ஆற்றலைப் புகழாமல், அனுமனின் ஆற்றல் மிகுந்த தோள்களைப் போன்ற இத்தேர் என மலர் தூவிப் பாராட்டுகின்றனர்.

இவ்வாறு இராமன் தேரேறுகிறான். தேவர்களெல்லாம் மகிழ்வுடன் இருக்க, இராவணன் தேரேறுதல் நிகழ்வு தேவர்களுக்குச் சோகத்தைத் தருகிறது.

ஏறினான் தொழுது இந்திரன் முதலிய இமையோர்
தேறினார்களும் தியங்கினார் மயங்கினார் திகைத்தார்
வேறு நாம் செயும் வினை இலை மெய்யின் ஐம்புலனும்
ஆறினார்களும் அஞ்சினார் உலகு எலாம் அனுங்க (3606)

என்னும் பாடலில், இராவணன் தேரை வணங்கி அதன்மீது ஏறுகிறான். அந்நிலையில் இந்திரன் போன்றவர்கள் கூட அறிவு சேர்ந்து உணர்வை இழந்து திகைப்புற்று நிற்கின்றனர். வேற எச்செயலும் அவர்களிட மில்லை. ஆனால், இனி உலகம் துன்பப்படும் என எண்ணி முனிவர்கள் வருந்தினர் என்னும் பொருள் தான் இருக்கிறது.

அதாவது, இராமனுக்குத் தேவர்களும் ஆதரவு அளிக்கின்றனர். ஆனால், இராவணனுக்கு தேவர் உலகத்தின் ஆதரவு இல்லை. இராவணனின் ஆரம்பமே அனாதை என்ற நிலை தான்.

போர்க்களம்

இராமனின் தேரைப் பார்த்து வியந்த மறுகணம் தன்னிலைக்குத் திரும்புகிறான். தேரின் எத்தன்மை உருவமும் இராவணனின் துணிவைக் குறைக்கவில்லை.

போர் தொடங்குகிறது. இராமன் -இராவணன், மகோதரன்-இலக்குவன் என்ற நிலை தோன்றுகிறது. ஆனால், இராமன் தந்திரமாக இராவணனை நோக்கிச் செல்லாமல் மகோதரனை நோக்கி வருகிறான். இராமனால் மகோதரன் படை அழிக்கப்பட மகோதரன் தனியாக நிற்கின்றான். முடிவில் மகோதரன் இராமனால் கொல்லப்படுகிறான். இதையறிந்த இராவணன் இராமனை நோக்கிச் சென்றான். அப்போது இராமன்,**'தனிப்பட்டான் ஆகின் இன்னம் தாழ்கிலன்'**(பா-3660 : 2) என எண்ணி முதலில் இராவணின் படைகளை அழிக்கலானான். அவ்வாறே அழிக்கவும் பட்டன. தன்னுடைய படைகள் அழிக்கப்பட்டன என்ற செய்தியறிந்த இராவணன் எள்ளளவும் தன்னுடைய உள்ளவலிமையை சிறிதும் இழக்கவில்லை. கம்பன் இராவணின் உள்ள வலிமையை,

அன்னது என்றும் நினைந்நிலன் ஆற்றுமோ
என்னை வெல்ல மனித்தன் என்று எண்ணுவான்..." (3665)

என்றவாறு எடுத்துரைக்கின்றான். நடந்த எவற்றையும் பொருட்படுத் தாமல், என்னை வெல்வதற்கு மனிதன் ஆற்றல்பெற்றவன் ஆவானோ?" என்றெண்ணி துணிவுடன் இராமனை எதிர்கொள்ளத் தயாரானான். எதிர்கொண்டான். இந்நிலையைக் கம்பர்,

ஆவது என்னை கொலாம் என்று அறிகிலார்
ஏவர் வெல்வர் என்று எண்ணலர் ஏங்குவார்
போவர் மீள்வர் பதைப்பர் பொருமலால்
தேவரும் தங்கள் செய்கை மறந்தனர் (3679)

என்றவாறு, தேவர்களெல்லாம் பதைத்து நின்றதாக்க் கம்பர் படைத்துக் காட்டுகிறார்.

பின், அசுரவேகம் கொண்ட இராமன் தன்னுடைய தேரை

வானத்திலே செலுத்த மாதலிக்குக் கட்டளையிட்டான். மாதலியும் அவ்வாறே செய்தான்.

வீரம்

இராவணன் வரத்தால் பெற்றனவெல்லாம் அழிந்தன. எனவே, எவன் யாரோ? (பா - 3776) என இராமனைப் பார்த்து இராவணன் வியந்தான். ஆனாலும், மறுநொடி தன்னிலைக்கு வந்தான்.

யாரேனும் தான் ஆகுக யான் தனி ஆண்மை
பேரேன் நின்றே வென்றி முடிப்பேன் புகழ் பெற்றேன்
நேரே செல்லும் கொல்லும் எனில் தான் நிமிர் வென்றி
வேறே நிற்கும் மீள்கிலென் என்னா விடலுற்றான் (3777)

என, இத்தனை இழப்பிலும் இராவணன் உள்ளவலிமையை அதிக மாகவே பெற்றவனாகிறான்.

"இவன் யாராயிருந்தாலும் சரி நான் என் ஒப்புயர்வுற்ற ஆண்மைத் தன்மையிலிருந்து நீங்காமலிருப்பேன்" என்கிறான் இராவணன்.

தோல்வி என்பது வீரனுக்கழகு. ஆனால், அந்த தோல்வியிலும் தன்னம்பிக்கை இழக்காமல் இருக்கிறவன் எவனோ அவன் தான் மாவீரன். இராவணன் வீரனாக அல்ல. ஒரு மாவீரனாக இவ்விடத்தில் உயர்ந்து நிற்கிறான்.

அடுத்து நிகழ்ந்த நிகழ்வில் இராவணன் தலை இராமனால் வீழ்த்தப்பட்டது. தலை வீழ்த்தப்பட்டபோதும் இராவணனின் தலை அஞ்சவில்லை. மீண்டும் வந்தமர்ந்தது. இராவணன் தலை வீழ்த்தப் பட்டபிறகும் இரவாணன் துணிவிற்குக் குறைவில்லை.

இராமன் இராவணனின் தலையை விடுத்து கையைக் கொய்து எடுக்கிறான். ஆனால், அஞ்சா நெஞ்சனான இராவணன் கை அம்பை எய்தபடியிருக்கிறது. அதே இடத்தில் மற்றொரு கையும் முளைக்கிறது. அவ்வாறு முளைத்த கை அம்புடன் வீழ்ந்த கையை எடுத்துக் கொண்டது.எவ்வாறு எடுத்தது? கம்பர் அழுத்தம் கொடுக்கின்றார். "அற்ற கை பிறந்த கை ஆர் அது ஓர்குவார்" (3797:4) அதாவது... நொடிப்பொழுதில் நடந்த இந்நிகழ்ச்சியை அறிந்தவர் யார்? யாருமிலர் என்கிறார் கம்பர். பட்ட காயங்களின் வலியைப் பொருட்படுத்தவில்லை இராவணன் என்பதையே இந்நிகழ்வு எடுத்துக்காட்டுகிறது.

மனவலிமை

இராவணனின் ஒவ்வொரு தலையும் அவனின் உடலை விட்டு வெகுதூரத்தில் வீழ்ந்தன.ஆனால், போரில் இவ்வளவு துன்பங்கள் பட்டபிறகும் இராவணனின் உள்ள வலிமை குறையவில்லை.

வாளும் வேலும் உலக்கையும் வச்சிரக்
கோளும் தண்டும் மழு எனும் கூற்றமும்
தோளின் பத்திகள்தோறும் சுமந்தன
மீளி மொய்ம்பன் உரும் என வீசினான் (3806)

இராவணன் அப்பொழுது பெருவன்மை கொண்டவனாகவே இருந்தான். தன் தோளில் சுமந்து கொண்டிருந்த வாள், வேல், உலக்கை, வலிமை மிக்க வச்சிரப்படை, தண்டு, மழு என்ற எமன் ஆகிய படைகளை இராமன் மேல் இடி போலப்படுமாறு வீசினான் எனகிறார் கம்பர்.

எல்லாம் முடிந்த்து. இராவணன் மூர்ச்சையற்றுத் தேரில் கிடந்தான். சிறிது நேரம்தான். அடுத்து, "தேவர் அஞ்ச இராவணன் தேறினான்" (3816:4) என்கிறார் கம்பர் கம்பீரமாக எழுந்தவன் பயந்து ஓடவில்லை. அஞ்சி உயிர்பிச்சைக் கேட்கவில்லை இராவணன். தன் சாரதியிடம்,

"அம் தடந் தேரினை மீட்க
என சென்று எதிர்ந்த்து தேரும் அத்தேர்மிசை
நின்ற வஞ்சன் இராமனை நேர்வுறா...." (3823 2-4)

தேரைத் திருப்பச் சொன்ன வீரன் இராவணன் நேராக இராமன் முன் நின்றான். மீண்டும் போர் செய்வதற்கு. இராமனை நேருக்கு நேராக நோக்குகிறான். இறுதியில் இராவணன் கம்பீரமாக அவனுடைய தேரில் மரணமுற்றுச் சாய்ந்தான்.

பெருமை

இராமன் வெற்றிக்குப் பின்னர் இராவணனைப் பெருமையாகவே எண்ணுவதாக கம்பர் படைத்துக் காட்டுகிறார்.

போரிடை மீண்டு ஒருவருக்கும் புறங்கொடாப்
போர்வீரன் பொருது வீழ்ந்த
சீரினையே மனம் உட்ப்ப உரு முற்றும்
திருவாளன் தெரியக் கண்டான் (3843 : 5-8)

என்கிறார். இராமனைப் பற்றி

போரில் புறங்கொடாப் போர் வீரனான இராவணன் போரிட்டு வீழ்ச்சியுற்ற சிறப்பினை எண்ணித் தன் மனம் மகிழ அவன் உடல் முழுவதையும் நன்கு உற்று நோக்கினான் இராமன் என்கிறார்.

புறமுதுகு காட்டாமல் போரிட்ட வீரனைப் பெருமைபடப் பார்த்ததன் வழி இராமன் தன்னை உயர்த்திக் கொள்கிறான்.

ஆனால், தன் முடிவு சரியா? தவறா? என்ற குழப்பமின்றி, தான் எடுத்த முடிவு சரி என்று, உறுதியுடன் போராடி மறைந்தான்.

யுத்த காண்டத்தில் வில்வித்தை

இரா. மூக்காயி
உதவிப் பேராசிரியை, தமிழ்த்துறை அரசு மகளிர் கலைக் கல்லூரி, சிவகங்கை.

வில் வித்தைகளை முறையோடு கற்ற இராமன் அரக்கர்களை அழிப்பதற்கு பயன்படுத்தியுள்ளான். வில்லை வலைத்து சீதையை மணந்த இராமன் அதே வில்லால் இராவணனை அழித்து சீதையை மீட்டான். "வில்" என்ற பொருள் காப்பியம் முழுவதும் சிறப்பு பெற்று காணப்படுகிறது. "யுத்தகாண்டத்தில் வரும் வில் வித்தை பற்றிய செய்திகளை இக்கட்டுரைமூலம் ஆராயலாம்.

வில்லின் சிறப்பு

வில் இங்கு இது நெடுமால் சிவன் எனும் மேலவர் தனுவேகொல்?"
என்று கொண்டு அயிர்த்தான்; நெடுங் கவசத்தையும் குலையச்...(9060)

இங்கு இலக்குவன் பிடித்துள்ள வில்லாகிய இது நெடிய திருமால், சிவன் எனப் போற்றப் பெறும் மேலோராகிய பெருந் தெய்வங்களின் வில்தானோ? என்று எண்ணி (இந்திரசித்து) ஐயுற்றான். நீண்ட கவசத்தையும் குலைத்து (ஊடுருவி)ச் செல்லும் இலக்குவனுடைய அம்புகள் எல்லாமும் சிதைவுறாத நன்மையையும் அறிந்தான். வெற்றி கொள்ளுந்திறம் தனக்கு இல்லாமையையும் அறிந்தவனாகி உளம் தளர்ந்தான்.

வில் மூலமாக அதிகாயனை வதம் செய்தல்

வில் இடை அறுத்து வேல் துணித்து வீரர்தம்
எல்லிடு கவசமும் மார்பும் ஈர்ந்து, எறி.......... ..(7831)

இதற்குமேல் இலக்குவனுடைய அம்புகள், வீரர்களின் கைகளில் உள்ள விற்களை இடையே அறுத்து வேல்களைத் துண்டு படச் செய்தும், அந்த வீரர்கள் அணிந்திருந்த ஒளி விடுகிற கவசங்களையும் அவர்களது மார்புகளையும், பிளந்தும் எறியப்பட்ட மலைகளை இடையில் அழித்துக் குதிரைகளைக் கொன்றும், தேவர்களை அழித்தும் கொல்லும் தன்மை உள்ள யானைகளைக் கூற்றுவனைப் போலக் கொல்லுவன ஆயின.

வில் எடுக்க உரிமையுடையவர்கள்

வில் எடுக்க உரியார்கள், வெய்ய சில
வீரர் இங்கும் உளர், மெல்லியோய்! "(8075)

சில வீரர் இராமலக்குவரைக் குறித்தது மெல்லியோய் இழந்தவனை இகழந்த குறிப்பு. கல் எடுக்க உரியார் அரக்கர் குலத்துக்கு வீரன் கல்லெடுப்புச் சடங்கு நடத்த உரிமை உள்ள அனுமன் எனவும் கூறலாம். சவச்சடங்கைக் கல்லெடுப்புச் சடங்கு என்று கூறலும் எனலாம். சுந்தர காண்டத்தில் மிகப் பல அரக்கர்களையும், அரக்கனையும் கொன்றமை கொண்டு இவ்வாறு கூறினான் எனலாம்.

வில் ஏந்துதல் மூலம் நடுக்கம் உறல்

வில் எடுத்து உருத்து நின்ற வீரருள் வீரன் நேரே,
கல் எடுத்து எறிய வந்த அனுமனைக் கண்ணின் நோக்கி (9024)

வில்லினை ஏந்தி வெகுண்டு நின்ற வீரர்க்கெல்லாம் வீரனாகிய இந்திரசித்தனுக்கு எதிரே, மலையினைப் பெயர்த்தெடுத்து எறிய வந்த அனுமனைக் கண்களால் உற்று நோக்கி மல் தொழில் திறத்தால் மேம்பட்டு உயர்ச்சி உற்ற தோள்களை உடைய இவ்வனுமனுக்கு அமைந்தவண்ணம் எத்தகைதோ? என்று புகழைத் தேவர்கள் உயர்த்திக்கூறிப் புகழ்ந்தார்கள். அனுமனுக்குத் தந்தையாகிய வாயு தேவனும் இவனுக்கு என்ன நேருமோ என மன நடுக்கமுற்றான்.

வில்லின் ஒலி நடைபெறும் விதம்

வில்ஒலி வயவர் ஆர்க்கும் விளி ஒலி, தெழிப்பின் ஓங்கும்
ஒல்லொலி வீரர் பேசும் உரை ஒலி, உரப்பில் தோன்றும் (8449)

வில் நாணின் ஒலியும், வீரர் ஆரவாரிக்கும் அறைகூவல் ஒலியும், அதட்டுதலால் உயர்;ந்து தோன்றம் ஒல்லென்னும் ஓசையும், வீரர் பேசுகின்ற பேச்சின் ஒலியும், கனைத்தால் உண்டாகிய இடி போன்ற ஒலியும், திரண்ட தோள்களைக் கொட்டுதலால் நெடுந்தூரத்தே சென்றிசைக்கும் ஆர்ப்பொலியும் அவ்வீரர்கள் நிலத்தில் செல்லுதலால் உண்டாகும் கல்லென்னும் ஓசையுடன் ஒருங்கு கூடி ஒலிக்க கடலின் ஒலியானது இப்பேரொலிக்குள் மறைந்தது.

வில் இலக்குவனிடத்தில் வெளிப்பட்டவிதம்

வில் கொத்திய வெங் கணை எண்கின் வியின்
பல் தொத்திய போல் படியப் பலவும்............ (8967)

இலக்குவனது வில்லினின்று வெளிப்பட்டுத் தொடர்ந்த அம்புகள் பலவும், கரடியின் பெரிய பற்கள் கௌவிப் பற்றினாற் போன்று தைத்து ஊன்ற புழுதியிற் கிடப்பனவாகிய முடியணிந்த தலைகள் ஒளியினை உடைய மின்மினிப் பூச்சிகள் முழுவதும் மொய்த்துள்ள வலிய புற்றுக்களை ஒத்தன.

வில்லாளர் என வழங்கப்படுபவர்

வில்லாளர் ஆனார்க்கு எல்லாம் மேலவன் விளிதலோடும்
செல்லாது அவ்இலங்கை வேந்தற்குஅரசு" எனக் களித்ததேவர் (9171)

இராவணன் ஆட்சியில் அல்லலுற்ற தேவர்கள் இந்திரசித்தின் வீழ்ச்சி கண்டதும் இனி அவ்இராவணன் ஆட்சி நடவாது என்ற மகிழ்ச்சியினால் உடுத்த ஆடையையும் விண்ணில் ஏறிடுமாறு வீசி ஆரவாரம் செய்தனர் என்பதாம். மகிழ்ச்சி மிகுதியினால் இவ்வாறு ஆடைகளை வீசி ஆரவாரித்தல் உண்டு என்பதனை "மறையோ ரெல்லாம் உத்தரியம் விண்ணிலேற விட்டு ஆர்த்தார்" "மறையோர் குழாத்துடனும் மல்குதிருத் தொண்டர் குழாம் மருங்கு ஆர்க்கும் தன்மையாலே' என்பதாலும் அறியலாம்.

வில்லினால் அறிதல்

வில்லினால் இவனை வெல்லல் அரிது எனா நிருதன் - வெய்ய
மல்லினால் இயன்ற தோளின் வளியினால் வானத் தச்சன்... (8573)

இருளைக்கொண்டு இயற்றியது போலும் உடம்பினை உடையவனும் கடல்போலப் பெருமுழக்கம் செய்பவனுமாகிய அரக்கன். இவ்வனுமனை வில் தொழிலினால் வெற்றிகொள்வது அருமையான செயல் என எண்ணியவனாய் கொடிய மற்றொழிலுக்கென்றே இயன்றது போன்ற தோளின் வன்மையால் தெய்வத்தச்சன் தனது சொல்லுத் தொழிலினால் செய்தமைத்தான். கொடிய முனையினை உடைய ஓர் தண்டாயுதத்தை அப்போது எடுத்துக்கொண்டான்.

வில்லினால் வலி உண்டாதல்

வில்லினின் வலிதரல் அரிது எனலால்
வெயிலினும் அனல் உமிழ் அயில் விரைவில்..... '(9140.)

வில்லினால் இலக்குவனை வெல்லுதல் அரிது என எண்ணியதலால் சூரியனைக் காட்டிலும் வெப்பமான கனலை உமிழ்கின்ற வேலினை

எடுத்து விரைவில் செல்வாயாக என வலிமை கொண்டு செலுத்தினான். அவ்வேல் பிரமன் மகன் கொடுத்ததாம். பகற்பொழுதினும் விளக்கம் உண்டாகத் தன்னை எதிர்த்து வருவதைக்கண்டு இலக்குவன் ஏழு முனிவர்களின் சாபச்சொல்லினும் வலியதாகிய ஒரு சுடும் இயல்புடைய அம்பினால் நடுவே அது இரண்டு துண்டாக எய்துவிட்டு மகிழ்ச்சி-யினால் ஆரவாரித்தான்.

வில்லினை நோக்கும் விதம்

வில்லினை நோக்கும் பாச வீக்கினை நோக்கும் வீயா
அல்லினை நோக்கும் வானத்து அமரரை நோக்கும் பாரை (8225)

தனக்குத் தானே ஒத்துப் புகழை விரும்பும் தோள்களை உடையவன் ஆகிய கோதண்டம் என்ற பெயருடைய வில்லினைப் பார்ப்பான். நாகக்கணையின் கட்டுகளைக் கண்டான். விடியாத இரவினைப் பார்ப்பான். ஆகாயத்தில் உள்ள தேவர்களைப் பார்பான். நிலவுலகத்தை வேருடன் பெயர்த்து விடுவேன் அன்று கொல்லுவான் பவளம் போன்ற வாய் உதடுகளைக் கடிப்பான். கற்றுஅறிந்த பெரியோர்கள் கூறியுள்ள சொற்களை எண்ணிப்பார்ப்பான்.

வில்லும், மழுவம், எழுவும் பயன்படுத்தல்

வில்லும் மழுவும், எழுவும், மிடலோர்,
பல்லும், தலையும், உடலும், படியில்...... (8958)

கல்லும், மரமும் கையும் பற்றித் தாக்கியதனால், வலிமை வாய்ந்தவரான அரக்கருடைய வில்லும், மழுவும், எழுவும், பல்லும், தலையும், உடலும் பூமியிற் செல்லும்படி சிதைந்து சென்றன.

தொகுப்புரை

இவ்வாறு கம்பர் எழுதிய கம்பராமாயணத்தில் வில்வித்தை என்ன என்பது பற்றி அதன் மூலம் வில்லினை பயன்படுத்தும் முறைகளையும், அது பயன்படுத்திய விதமும், வில்லின் தன்மையையும் யுத்தக்காண்டத்தில் வில்வித்தை கூறும் செய்திகள் மூலம் அறியலாம்.

யுத்தக்காண்டத்தில் நிகும்பலையாகப் படலம் முதலாக நாகபாசப்படலம் ஈறாக வில்லின் செய்திகளினை வரையறுத்துக் கூறப்பட்டுள்ளது. எனவே, இதன்மூலம் வில்வித்தையின் சிறப்பினை அறியலாம்.

அஸ்திரங்களில் அறிவியல்

ப.சபிதா
முனைவர் பட்ட ஆய்வாளர்,அ. வீரையா வாண்டையார் நினைவு
திரு புட்பம் கல்லூரி (தன்னாட்சி) பூண்டி

கம்பன் காலத்தை வென்று நின்ற பெருங்கவிஞன். கம்பனிடத்து உள்ள திறமைகள் எண்ணிடலங்கா. திருவதாரப் படலத்தில் சோதிடக் கலையும், சேது பந்தனப் படலத்தில் கட்டுமானக்கலையும் மருத்துவப் படலத்தில் மருத்துவக்கலையும் யுத்தக் காண்டத்தில் பயன்படுத்திய அஸ்திரங்களில் அறிவியல் கலையைக் கண்டு உணர்வதோடு அறிவியலின் அறமாண்பினைக் காணலாம்.

லேசர் சிகிச்சைமுறை

உயிரைக் கொல்லும் கொடியநோய் புற்றுநோய். இந்நோய் பரவாமல் தடுக்கவும் மீண்டும் வராமல் பாதுகாப்பு அளிக்கக்கூடிய முறை கதிரியக்கச் சிகிச்சை என்று சொல்லப்படுகின்ற லேசர் சிகிச்சை முறையாகும்.

இம்முறையை கம்பர் இராவணன் வதைப்படலத்தில் குறிப்பிடுகிறார். உலகைக் காக்கவல்ல இராமன் இராவணன் மீது அர்த்த சந்திரபாணத்தை செலுத்துகிறான். செலுத்திய அவ்வேளையில் இராவணன் தலை துண்டிக்கப்படுகிறது. துண்டிக்கப்பட்ட மறு வினாடி மீண்டும் அறுபட்ட தலையானது முளைத்துவிடுகிறது.

அப்பொழுது பிரமாஸ்திரம் இராவணன் மார்பில் பாய்ந்தது முப்பது கோடி ஆயுள் நாளைக் கொண்ட இராவணனை உயிரிழக்கச் செய்தது.

பிரமாத்திரத்திற்கு உயிரிழக்கச் செய்யும் பண்பு மட்டுமில்லை. மயக்கத்தை ஊட்டுகின்ற (குளோரோஃபார்ம்) தன்மையும் உண்டு. போர்க்காலத்தில் இந்திரசித்து விடுத்த பிரமாத்திரத்தால் இலக்குவன் முதலியோர் மயங்கி கீழ் விழுந்தனர். பின்பு அனுமன் கொண்டு வந்த மருந்து மலையால் அம்மயக்கம் நீங்கி உயிர்பெற்றனார்.

சிரிப்பு மூட்டும் வாயு

செயற்கையாகச் சிரிப்பை வரவழைப்பதற்குப் பயன்படும் வாயு நைட்ரஸ் ஆக்சைடு ஆகும். இவ்வாயு இந்திரசித்தினால் இலக்குவணன்

மீது செலுத்தப்பட்ட சில அம்பின் வழி செலுத்தப்படுகிறது.

தேரொத்தன விடைமேலவன் சிரிப்பொத்தன வுலகின்
வேரொத்தன சொருவொத்திகல் அரக்கன் விடு விசிகம் (115)

செலுத்தப்பட்ட அம்புகள் ஒவ்வொன்றும் ஒவ்வொன்று தன்மையன வாகும். சில அம்புகள் இடபத்தை வாகனமாகக் கொண்ட ஊர்பவ னாகிய சிவபெருமானின் சிரிப்பை யொத்தன, சில அச்சத்துத் தோன்றிய உலகத்தின் வேர்வை நீரையொத்தன. சில அம்புகள் இடி ஒத்தன. இவ் அம்பு மிகச் சத்தத்தை உண்டாக்கக்கூடிய நைட்ரைட் குரூப் வகையைச் சார்ந்தது ஆகும்.

கார்பன்-டை-ஆக்சைடு [கரியமில வாயு]

தீ எரிவதற்குத் தேவையானது பிராணவாயு, அத்தீயை அணைப் பதற்குத் தேவைப்படுவது கரியமில வாயுவாகும். மாயவித்தையில் வல்லவனான மகரக்கண்ணன் பேரிடி, காற்று, நெருப்பு இவற்றை ஊழிக்காலத்தான் வந்திட்டதோ என்றுமாறு மிகுதியாக உண்டாக்கினான். அதை இராமபிரான் வாருணாஸ்திரம் வாயுவாஸ்திரத்தினால் நீக்கினான். இயற்கை உருவாக்கவல்ல காற்று, நெருப்பு போன்றவற்றை மனிதன் உருவாக்கினான் என்ற வழி அறிவியல் அறிவு மிக்கிருந்த நிலையைக் காணலாம்.

இருளை நீக்கும் பாஸ்பரஸ்

பாஸ்பரஸ், வெண்பாஸ்பரஸ், சிவப்பு பாஸ்பரஸ் என இருவகைப்படும். வெண் பாஸ்பரஸ் இருட்டில் ஒளிரும் தன்மையுடையது. தாமதாத் திரத்தினால் உண்டான இருளை நீக்க இராமன் சிவனின் அஸ்திரமான பாசுபதாஸ்திரத்தை (பாஸ்பரஸை) செலுத்தினான். அவ் அஸ்திரம் கனவோடு நனவுபோல இமைப்பொழுதில் வெகு விரைவில் அரக்கன் எறிந்த தாமதாத்திரத்தை (இருளை) தொலைத்தது.

எண்ணுறு கனவினொடு உணர்வு என இமையில்
துண்ணெனும் நிலையினின் எறிபடை தொலைய (94)

என்பான் கம்பன்.

ஆக்கினேயாஸ்திரம்

இவ் அஸ்திரமும் இருட்டில் ஒளிரக்கூடிய தன்மை வாய்ந்தது ஆகும்.

இராமன் நீர் கேட்க அதைக் கொண்டு வருவதற்காகச் செல்கிறான், இலக்குவன். அங்கு அயோமுகியிடம் வசப்படுகிறான். அவ்வாறு வசப்பட்ட இலக்குவன் அயோமுகியை அங்கப்படுத்துகிறான். அப்போது அலறல் ஓசை கேட்ட இராமன் இருளை விலக்க ஆக்கினேயாஸ்திரம் தொடுத்து விடுகிறான். **கங்குலும் பகலென பொலிந்து காட்டிற்றே"** (அயோமுகிப்படலம் - 80) என்பது கம்பன் வாக்கு.

கருடாஸ்திரம்

'பாம்பென்றால் படையும் நடுங்கும்' என்பர். இராவணன் விடுத்த நாகாஸ்திரத்தை அகற்றுவதற்கு இராமனால் ஏவப்பட்ட கருடாஸ்திரம் அக்கினியையொத்து விண்ணுலகத்தில் இருப்பவரெல்லாம் விளக்குக ளினத்தை எடுத்தவற்றை ஒத்திருந்தன என்று கருடாஸ்திரம் ஒளிரும் தன்மை கூறப்படுகிறது. எலிநச்சாக செயல்படக் கூடிய வெண் பாஸ்பரஸ் எலியின்எதிரியான பாம்பினை அழிப்பதற்கும் பயன்பட்டதைக் கம்பன்வழி காணலாம்.

சிவப்பு பாஸ்பரஸ்

இராவண வீரார்கள் போருக்குச் செல்கையில் அவர்கள், நெருப்புப் பெரியைக் கக்கவல்ல வாளிப்புட்டிலை முதுகிற் கட்டிக் கொண்டு வில்லைப் பிடித்து போருக்குச் சென்றனர்.

"தழற்பெரி வாளிப்புட்டில் கட்டிவில் தாங்கிச்சார்வான்" (படைத் தலைவன் வதைப்படலம்-30) என்கிறது கம்பராமாயணம். அதாவது, பாஸ்பரஸ் என்ற எரியுந்தன்மையுள்ள பொருளை அம்பறாத் துணியில் எடுத்துச் சென்றுள்ளனர் அவ்வீரர்கள். துரோணர் தம் பள்ளித்தோழன் துருபன் தன்னை அலட்சியம் செய்ததை பொறுக்க மாட்டாது. மூடனே இந்தத் துரும்பை அக்கினியாஸ்திரமாகச் செய்து உன்னையும் உன் நகரையும் எரிப்பேன் என்று மகாபாரதத்தில் அக்கினியோஸ்திரம் (பாஸ்பரஸ்) தன்மை கூறப்பட்டுள்ளது.

இராமபிரான் இலங்கைக்குச் செல்ல வழி விடுமாறு வருணபகவானை வேண்டுகிறான்.

அதிரும் வெங்கணை யொன்றயொன் றடர்ந்தெரி யுய்ப்ப
வெதிரின் வின்னமுங் கானென வெந்தன மீனம்

(வருணனை வழி வேண்டு படலம் - 30)

தீப்பெட்டி தீக்குச்சி இரண்டுமுனையும் சேர்ந்தால் எரிவதுபோல இரண்டு அம்புகள் ஒன்றையொன்று உராய்ந்து சத்தத்தோடு எரிந்துள்ளன. தீக்குச்சி செய்யப்பயன்படக்கூடியது. சிவப்பு பாஸ்பரஸ் இது நச்சுத்தன்மை அற்றது. இருளில் ஒளிராது காற்றில் எரியாது என்று கூறப்படுகிறது.

பயன்

நெருப்பை உமிழ்கின்ற நுனியிலே மிக்க கூர்மையையுடைய இராமபாணங்களால் வீரசுவர்க்கம் பலர் அடைந்தனர்.

வாயேறின வடிவாளியின் வானேறினார் வந்தார்
தீயேறிக லரியேறெனா முகிலேறெனச் செறிந்தார்

(கரன் வதைப்படலம் - 101)

செயற்கை மழை

இயற்கை மழை வழங்காதபோது ஒரு குறிப்பிட்ட இடத்தில் சில்வர் புரோமைட், சில்வர் குளோரைடு என்ற இரு வாயுவையும் செலுத்தினால் மழையானது கிடைக்கும் என்று கூறுகின்றனர்.

இரும்பினாலாகியது போன்ற முகமுடைய அயோமுகி என்ற அரக்கியினால் ஏற்பட்ட துன்பம் நீங்கிய பின் இராம இலக்குவணர்கள் வருணாஸ்திரத்தைத் தொடுத்து விடுத்து வானத்திலிருந்து கிடைத்த நீரைப் பருகினர்.

வாருணம் விடுத்தந்த வான நீருண்டு
தாரணி தாங்கிய கிரியிற் றங்கினார் (அயோமுகிப்படலம் - 93)

அஸ்திரங்களின் அறமாண்பு

ஆறறிவு படைத்த மனிதனுக்கு இருக்க வேண்டிய கருணை மாண்பு, அவனால் ஏவப்பட்ட அஸ்திரங்களுக்கும் இருந்துள்ளன. நாராயணஸ்திரம் தன்னை எதிர்த்து வருகையில் கையெடுத்து வணங்கினால் வணங்கியவனை விட்டுச் செல்லும் தன்மையுடையதாகும். இராமனிடத்து இருந்த அறிவியல் உலகை வாழ்வித்தது. இராவண அஸ்திரம் அவனை அழித்தது.

ஆண்டவனின்றி அணுவும் அசையாது என்பது ஆன்மீகவாதிகளின் கொள்கை. அறிவியலின்றி அகிலம் இயங்காது என்பது தற்காலத்தில்

நாம் கண்டு கொண்டிருக்கின்ற ஒன்று அறிவியல் அற இயலாக இருந்தால் அது தன்னையும் பிறரையும் வாழ்விக்கும் என்பதைக் கம்பன் பயன்படுத்திய அஸ்திரங்கள் அதாவது அறங்கள் வழி உணரமுடிகிறது.

கம்பனில் யாப்பியல்

முனைவர் ஏ. இராமநாதன்
தமிழ்த்துறைத்தலைவர், ஸ்ரீவித்யா மந்திர் மேனிலைப்பள்ளி, சேலம்

ஒரு படைப்பாளனுக்குப் பக்கபலமாகத் திகழ்வதும் ஒரு கவிஞனை இனங்கண்டு கொள்ளவும் உதவுவது அவன் யாப்பின்வழி பாடல்களை புனைந்துள்ள பாங்கேயாகும். ஒரு பொருளை உணர்த்தப் பல சொற்களும், சொற்றொடர்களும் உள்ளன. கவிஞன் அவற்றை யாப்பின் வழி அமைப்பதில் மற்றவர்களிடமிருந்து அவனை வேறுபடுத்தி இனங் காணச் செய்கின்றது.

யாப்பியல்

யாப்பு+இயல்=யாப்பியல். யாப்பு-யாக்கப்படுவது-கட்டப்படுவது. யாப்பு என்பது செய்யுள். செய்யுளின் உறுப்புகளைக் கொண்டு கவிஞன் எதுகை, மோனை, இயைபு, முரண், அடுக்குத் தொடர் போன்றவற்றை பயன்படுத்தி யாப்பின் வழி பாடல் புனைவதாகும்.

தொடைநயம்

தொடை என்பது எழுத்துகளை எதிரெதிர் நிறுத்தித் தொடுக்கப்படுவது. பல அடிகளிலாயினும் பல சீர்களிலாயினும் எழுத்துகள் ஒன்றிவரத் தொடுப்பது தொடையாகும்."பாக்களின் அடிகளும் அடிகளிலுள்ள சீர்களும் ஒன்றையொன்று தொடுத்துச்செல்லும் அமைப்பினைத் தொடை" என்பர்.

பொருந்திய மலரொடு மலரினை இணைத்துக் கட்டும் மாலையே தொடை ஆகும். "அதுபோலப் பொருந்திய ஒலியொடு ஒலியைச் சீர்தொறும் அடிதோறும் அமைத்துத் தொடுப்பது தொடையாகும்.""5 "செய்யுளின் அடிகளும் அடிகளிலுள்ள சீர்களும் ஒன்றையொன்று தொடுத்துச் செல்லும் அமைப்பினைத் தொடை" என்பர். தொடைகள் அடிகளுக்குள்ளே ஐந்து வகைப்பட அமையும் மோனை, எதுகை, முரண், இயைபு, அளபெடை என வரும். இவ்வகை தொடை நயங்கள் அமைந்த பாடல்களை ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

எதுகைத் தொடை

இரண்டாவது எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது எதுகைத்

தொடையாகும். இதனை "இரண்டாம் வழுவா னெழுத்தொன்றின் மாதே எதுகை" அஃதொழித் தொன்றி எதுகையாகும்" என்பர். இவ்வகை தொடை நயங்கள் அமைந்த பாடல்கள் சில பின்வருமாறு.

எண்ணஅரு நலத்தினாள் இனையள் நின்றுழி
கண்ணொடு கண்இணை கவ்வி ஒன்றை ஒன்று
உண்ணவும் நிலைபெறாது உணர்வும் ஒன்றிட
அண்ணலும் நோக்கினான் அவளும் நோக்கினாள்

இப்பாடலில் 'என்ன- கண்ணொடு', 'உண்ணவும்- அண்ணலும்', 'பொன்வழி- எண்வழி', 'மண்வழி - கண்வழி' என்ற சொற்கள் எதுகையாக அமைந்துள்ள. இப்பாடல்கள் கம்பனின் புகழுக்கு கட்டியங் கூறும்.

முரண்தொடை

'மறுதலைத்த மொழியான் வரினு முரண்" சொல்லாலும் பொருளாலும் முரண்படத் தொடுப்பது முரண்தொடையாகும். "மொழியினும் பொருளினும் முரணுதல் முரணே' கவிஞர் ஆயிரத்திற்கும் மேற்பட்ட பாடல்களை முரண் தொடை நயத்தில் அமைத்துள்ளார். இதை சொல்லில் முரணுதல், பொருளால் முரணுதல், சொல்லும் பொருளும் தம்முள் முரணுதல் என்ற மூவகையின்பாற் பகுக்கலாம். 'விழுந்தனர், எழுந்தனர், அழுந்தினர்' என்ற சொற்களை கொண்டு அமைந்த பாடல் பின்வருமாறு.

விழுந்தனர் சிலர்சிலர் விம்மிவிம்மி மேல்
எழுந்தனர் சிலர் முகத்து இழி கண்ணீரிடை
அழுந்தினர் சிலர் பதைத்து அளகவல்லியின்
கொழுந்து எரி உற்றெனத் துயரம் கூர்கின்றார்

இயைபுத் தொடை

இறுதிக்கண் நின்ற எழுத்தாலும் சொல்லாலும் ஒன்றிவரத் தொடுப்பது இயைபுத் தொடையாகும். இதனை 'இறுதி இயைபு" "இறுவா யொன்ற லியைபின் யாப்பே" என்ற நூற்பாவால் அறியலாம்.

இயைபுத் தொடை அடிகளிலும் சீர்களிலுமுள்ள இறுதி எழுத்தோ சொல்லோ ஒன்றி அமைவது. இவ்வகைத் தொடை அமைந்த பாடல்கள் கணக்கில் அடங்கா பாடல்கள் காணப்படுகின்றன.

'ஆள், ஆர், ஆல்'-விகுதிகள் இறுதியில் ஒன்றிவர தொடுக்கப்பட்ட

பாடல்கள் மிகுதியாக உள்ளன. அவற்றுள் சில பின்வருமாறு.

தோன்றிய கூனியும் துடிக்கும் நெஞ்சினாள்
ஊன்றிய வெகுளியால் உளைக்கும் உள்ளத்தாள்,...

உய்ந்தது இவ்வுலகம் என்பார் ஊழி காண்கிற்பாய் என்பார்
மைந்த நீ கோடி எங்கள் வாழ்க்கை நாள் யாவும் என்பார்.............

வண்மை இல்லை ஓர் வறுமை இன்மையால்
திண்மை இல்லை நேர் செறுநர் இன்மையால்....

அந்தாதித் தொடை

"அந்த முதலாத் தொடுப்பதந் தாதி" அடிதோறும் இறுதிக்கண் நின்ற எழுத்தோ, அசையோ, சீரோ அல்லது அவ்வடி முழுவதுமோ அடுத்த அடியின் தொடக்கமாக அமையுமாறு தொடுப்பது அந்தாதித் தொடையாகும். இவ்வகை தொடை நயங்கள் அமைந்த பாடல்கள் எண்ணற்றன உள்ளன. சில பின்வருமாறு.

"கணையும் மேட்டு உயர் கருங்கல் ஓர் வெள்ளிடைக் கண்டார்"

"கண்ட கல்மிசைக் காகுத்தன் கழல் துகள் கதுவ"

"திக்குஆர் அவள் வாய்சிறிது ஆம்வகைசேணில் நீண்டான்"

"நீண்டான் உடனே கருங்கா நிமிர்வாள் எயிற்றின்"

"இடி ஏறு உண்ட மால் வரைபோல் மண்ணிடை வீழ்ந்தாள்"

"விழுந்தாள் நொந்தாள் வெங்குருதிச் செம்புனல் வெள்ளத்து"

இப்பாடலடிகளில் கண்டார், நீண்டாள், விழுந்தாள் என்ற சொற்கள் அந்தாதித் தொடையாய் அமைந்துள்ளன.

இரட்டைத் தொடை

செய்யுளில் ஓரடி முழுவதும் வந்த சொற்களே ஒரே பொருளிலேனும் அல்லதுவெவ்வேறு பொருளிலேனும் சீர்களில் அமைவது இரட்டைத் தொடை என்பதைப் பின்வரும் நூற்பா விளக்கும்.

"-----அடி முழுவதும் வந்த மொழியே வருவ திரட்டை வரன் முறையான்" விட்ட, பட்ட, மரி, ஆறும், தவம் செய, அண்ணாவோ, இராவணனோ, மருகாவோ போன்ற சொற்கள் இரட்டைத் தொடையாக

அமைந்த பாடல்கள் சில பின்வருமாறு.

"விட்ட விட்ட மலை மீன் அவன் மெய்யில் விசையால்
பட்ட பட்ட இடம் எங்கும் உடன் ஊறு படலும்'

""வேறு வேறு துணி செய்து அது விழுத்தி விசையால்
மாறி மாறி நிமிர் தோளிடையும் மார்பினிடையும்
ஆறும் ஆறும் அயில் வெங் கணை அழுத்த"

"தவம் செய தவம் செய்த தவம் என் என்கின்றான்"

"அரன் இருந்த மலை எடுத்த அண்ணாவோ அண்ணாவோ"

"இசையாலே நிறைந்த புயத்து இராவணவோ இராவணவோ"

"வானவரைப் பணிகொண்ட மருகாவோ மருகாவோ"

செந்தொடை

எந்த வகையான தொடைகளும் தொடை விகற்பங்களும் அமையால் செம்மையான ஓசை பெற்று வருவது செந்தொடை ஆகும். இதனை

"முந்திய மோனை முதலா முழுவதும் ஒவ்வாது
விட்டாற் செந்தொடை நாமம் பெறும்"

என்ற காரிகை நூற்பா விளக்கும். இவ்வகை தொடை அமைந்த பாடல்கள் ஒவ்வொரு காண்டத்திலும் ஆயிரக்கணக்கில் உள்ளன. சில பாடலடிகள் கீழ் வருமாறு.

"போய் வனம் ஆள்வது எனப் புகன்று நின்றாள்"

"நின்மகன் ஆள்வான் நீயினிது ஆள்வாய் நிலமெல்லாம்"

சொல் திறன்

கவிஞர்கள் உணர்ச்சிக்கேற்ப யாப்பின் மரபு வழி ஏற்ற இடமறிந்து சொற்களை எடுத்தாள வல்லவர்கள். ஒரு கவிஞரின் சிறப்பை மதிப்பிட சொல்லாளுமை முதலிடம் பெறுகின்றன. அவ்வகையில் கவிஞர் எச்சம், முற்றெச்சம், எதிர்மறையெச்சம், வியங்கோள், அடுக்குத்தொடர், எண்ணும்மை, உம் இடைச்சொல் போன்றவற்றை கையாண்டு பாடல் புனைவதில் வல்லமை பெற்றதை சில பாடலும், பாடலடிகளிலும் மெய்ப்பித்து நிற்கின்றன. அவற்றில் சிலவற்றை பின்வருமாறு காணலாம்.

எச்சம்

"நோக்கிய நோக்கு எனும் நுதி கொள் வேல் இணை
ஆக்கிய மதுகையான் தோளின் ஆழ்ந்தன
வீக்கிய கனை கழல் வீரன் செங்கணும்
தாக்கு அணங்கு அனையவள் தனத்தில் தைத்தவே"

இப்பாடலில் நோக்கிய, ஆக்கிய, வீக்கிய, தாக்கு என்ற எச்ச சொற்களை முதலாவதாகக்கொண்டு கவிஞர் பாடியுள்ளது சொல்லாட்சிக்கு சிறப்பாகும்.

முற்றெச்சம்

இரு வினைமுற்றுச் சொற்களைக் கொண்டு பாடுவது கவிஞரின் கவி ஆற்றலுக்கு சவால் விடும் பாடலாக அமைந்துள்ளன. அது பின்வருமாறு.

"எழுந்தனன் ஏங்கினன் இரங்கிப் பின்னரும்
விழுந்தனன் விம்மினன் வெய்து உயிர்த்தனன்
அழிந்தனன் அரற்றினான் அரற்றி இன்னன
மொழிந்தனன் பின்னரும் முருகன் செவ்வியான்"

"தெழித்தனள் உரப்பினள் சிறுகண் தீ உக
விழித்தனள் வைதனள் வெய்து உயிர்த்தனள்
அழித்தனள் அழுதனள் அம்பொன் மாலையாள்"

வியங்கோள்

க, இய, இயர் என்ற விகுதிகளில் ஏதேனும் ஒன்றைப் பெற்று அமைவது வியங்கோளாகும். கவிஞரது பாடல்களில் காணப்படும் வியங்கோள் வினை அமைந்த பாடல் வருமாறு.

"வாழி சானகி வாழி இராகவன்
வாழி நான் மறை வாழியர் அந்தணர்
வாழி நல் அறம் என்றும் உற வாழ்த்தினான்"

அடுக்குத் தொடர்

ஒருசொல் பலமுறை அடுக்கிவருவது அடுக்குத்தொடராகும். இவ்வகையில் எண்ணில் அடங்காப் பாடல்கள் காணப்படுகின்றன.

ஈந்தேன் ஈந்தேன் இவ்வரம் என்சேய் வனம் ஆள

நீந்தாய் நீந்தாய்நின் மகனோடும் நெடிது என்றான்.

இதில் 'ஈந்தேன்', 'நீத்தாய்' என்னும் சொற்கள் அடுக்குத் தொடராய் நின்றுள்ளன.

எண்ணும்மை

'உம்'- என்னும் இடைச்சொற்கள் அமைந்த பாடல் பல காணப் படுகின்றன. இச்சொற்கள் எண்ணும்மை சொற்களாகவும் பாடல்களில் இடம் பெற்றுள்ளன. சான்றாக, பின்வரும் பாடலைக் கூறலாம்.

ஆவும் அழுதன அதன் கன்று அழுத அன்றலர்ந்த
பூவும் அழுதன புனல்புள் அழுத கள்ளொழுகும்
காவும் அழுத களிறு அழுத கால்வாயப் போர்
மாவும் அழுத அம் மன்னவனை மானவே

வானும் நிலனும் பெறுமாறு இனி மற்றுண்டோ
கானம் பொழிலும் இவை செங்கனகத்தினாலும்
ஏனை மணியாலும் இயற்றியவேனும் யாவும்
தேனும் மலரும் கனியும் தரச்செய்த செய்கை?

இதில் 'ஆவும், பூவும், காவும், மாவும்' - என்ற சொற்களில் உம் இடைச்சொல்லாகக் கையாளப்பட்டுள்ளது. அடுத்த பாடலில், 'வானும் நிலனும்', 'கானும் பொழிலும்', 'தேனும் மலரும் கனியும்'- என்ற சொற்களில் 'உம்' விகுதி எண்ணும்மையாக பயன்படுத்தப்பட்டுள்ளதை அறிய முடிகிறது.

கம்பனின் காப்பியம் முழுவதும் சொல்தோறும், தொடர்தோறும், பெயர்தோறும் யாப்புநலம் நம்உள்ளத்தை உருகச்செய்யும். இக் காப்பியமும் முழுவதும் யாப்பியல் நிறை ஓர் அமுதக்குடம். மேற்கண்ட குறிப்புகளிலிருந்து கம்பருடைய யாப்பியல் புலமைக்கு எடுத்துக்காட்டாக சிற்சில பாடல்களை மட்டும் எடுத்துக் கொண்டு இவ்வாய்வு நிகழ்த்தப் பெற்றுள்ளது. விரிவாக ஆராயின் கம்பராமாயணம் அதற்கே இடம் தந்து யாப்பின் சுவை பல நல்கும் என்பதில் ஐயமில்லை.

கம்பனில் விருத்தக் கவியியல்

காப்பியக் கவிஞர் **நா.மீனவன்**
காரைக்குடி

"கல்வியிற் சிறந்த தமிழ்நாடு புகழ்க் கம்பன் பிறந்த தமிழநாடு" என்பது பாரதி வாக்கு.செய்யுள்கள் பலஇயற்றிய புலவர்கள் தமக்கேற்ற வகையில் பலவற்றைக் கையாண்;டுள்ளனர். அதனால்தான் பின் வந்த புலவர்கள் "வெண்பாவிற் புகழேந்தி விருத்தமெனும ஒண்பாவிற்கு உயர் கம்பன்;" எனறு பாடினர்.

யாப்பிலககணம்

தமிழ்மொழிக்கு வரையறுக்கப் பெற்ற இலக்கணமாக இன்றுவிளங்குவது தொல்காப்பியம். அகத்தியம் இதற்குமுன் தோன்றிய நூலாயினும் அஃது இன்று கிடைக்கப்பெறவில்லை. தொல்காப்பியர் காலத்தில் எழுத்து சொல்பொருள் என மூவகையாக இலக்கணம் கூறியது. பொருளதிகாரத்தில ஓர் இயலாகச் செய்யுளியலைப் பாடிஅதற்குள் அடி சீர் தளை தொடை பாவினம் முதலியவற்றை அடக்கிக் காட்டியது. அதற்குப் பின்னர்ப் பலயாப்பிலக்கணங்கள் தோன்றி அதனோடு அணியிலக்கணமும் சேர்ந்து ஐந்திலக்கணம் என்ற விரிந்த அமைப்பாக உருவாயிற்று. யாப்பருங்கலம் யாப்பருங்கலக் காரிகை முதலிய இலக்கணங்;கள் தோன்றின. அவிநயம் சங்கயாப்பு காக்கை பாடினியம் சிறுகாக்கை பாடினியம் நத்தத்தம் பல்காயம் மயேச்சுரம் அமித சாகரம் முதலியன யாப்பிலக்கணங்களை விரிவாகப் பேசின. பின்னர்த் தோன்றிய வீரசோழியம் இலக்கண விளக்கம் தொன்னுலீல விளக்கம் ஆகியன ஐந்திலக்கணங்களுள் ஒன்றான யாப்பினைப் பற்றிப் பாடுகின்றன.

சீர் வகைகள்

நேரசைச்சீர் நிரையசைச் சீர் என இருவகைச் சீர்கள் அவை இயற்சீர்; காய்ச்சீர்கனிச்சீர் விளச்சீர் எனவரும். சீரான் வருவது அடி. அடிகளால் இயன்றது தொடை தொடைகளால் இயன்றது

பா

இதிலிருந்து அகவற்பா, வெண்பா, கலிப்பா, வஞ்சிபபா, என

நால்வகைப்பாக்கள் தோன்றின. இவை ஒவ்வொன்றிலும் பல வகைகள் உள்ளன. தொல்காப்பியச்செய்யுள்கள் யாவும் அகவற்பாக்களால் இயன்றன. புகழேந்தி காலத்தில் நளவெண்பா என்ற இலக்கியம் முழுமையும் வெண்பாக்களால் அவரால் இயற்றப்பெற்றன. தூது உலா முதலானவை கலிவெண்பாக்களால் ஆயின. யாப்பருங்கலக்காரிகை வீரசோழியம் முதலானவை கட்டளைக்கலித்துறைகளால் ஆனவை. இவற்றை ஒட்டித்தோன்றியவை அதன் பின்னரும தற்காலத்தில் புலவர் குழந்தை முதலானோரும் யாப்பு நூல்களை எழுதினர்.

விருத்தம் என்பதன் பொருள்

விருத்தம் என்றசொல் வடமொழியில்இருந்து தோன்றிய சொல் என்பர் இது வடமொழித்திரிபு. பாக்களுக்கும் அவற்றின் இலக்கணங்களுக்கும் ஓர் எல்லையைவகுத்த மூவிலக்கணம் ஐந்திலக்கண யாப்பு மரபுகளி லிருந்து சற்றே விலகிப் பாவினங்களுள் எளிமையானதும் பிற்காலப் புலவோர் அதிகம் கையாண்டதுமான "விருத்தம்" என்;ற பாவினம் பற்றியே பெரும்பான்மை எடுத்துச் சொல்லியதால் விருத்தப் பாவியல் தோன்றிற்று. 1938இல் விருத்த யாப்பியல் என்ற நூலினை வீரப்ப முதலியார்என்பவர் எழுதி வெளியிட்டார்.

விரிந்த பாவினமே விருத்தம்

உரையாசிரியர் சிலர் எழுதிய விரிவான உரையை விருத்தியுரை என்பர். விருத்தி என்பதன் பொருள்வளர்ச்சி என்பதாகும். பாவின வளர்ச்சியை விருத்தம் என்ற சொல்லால் குறிப்பிட்டனர். வ்ருத்தி என்று வளர்ச்சியைக் குறிக்கின்ற சொல் வடமொழியில் இருந்து தோன்றியது என்பர்அது போல விரிவாக வளர்ந்த பாவினத்தைக் குறிக்கின்றது.

தொல்காப்பியம் சுட்டும் யாப்பு அமைப்பு

தொல்காப்பியப் பொருளதிகாரத்திலுள்ள செய்யுளியல் யாப்பிலக் கணம் பற்றித் தெரிவிக்கும் தொல்காப்பியம் எழுத்து சொல் பொருள் என்றமூன்றில் செய்யுள் உறுப்புக்களாக முப்பத்து நான்கினை வரையறுக்கும். பொருளதிகாரத்தின் செய்யுளியலுள் சுட்டிச் சொன்ன முப்பத்து நான்கு உறுப்புக்களுள் மாத்திரை எழுத்து அசை சீர் அடி யாப்பு மரபு தூக்கு தொடை அளவு பா என்பன செய்யுளின் புற அமைப்பினைத் தீர்மானிக்கும்; காலப்போக்கில் யாப்பியல் என்னும் தனி இலக்கணமாக வளர்ந்து அவ்வகையில் எழுத்து அசை சீர் தளை

அடி தொடை பா பாவினம் என்று யாப்பிலக்கணத்தில் முதன்மை பெற்றன.

முழுமையும் இல்லாத யாப்பிலக்கண நூல்கள்

தொல்காப்பியத்திற்குப் பினனர்த் தோன்றிய நூல்களுள் யாப்பருங்கலம், யாப்பருங்கலக்காரிகை, பாப்பாவினம், சிதம்பரச் செய்யுட்கோவை முதலியன யாப்பிலக்கணம் பற்றிய முழுமையான நூல்கள். அவிநயம் காக்கைபாடினியம் நத்தத்தம் பல்காயம் மயேச்சுரம் அமுதசாகரம் என்பன முழுமையாகக் கிடைக்காத யாப்பிலக்கண நூல்கள்.வீர சோழியம் இலக்கண விளக்கம் தொன்னுலீல் விளக்கம்போன்றன முழுமையாக யாப்பிலக்கணம் கூறும் நூல்கள்.முன்னச்க் கூறப்பட்ட நால் வகைப் பாக்களுக்கு உரிய விருத்தப் பாவினங்களின் வளர்ச்சியைக் காணலாம்

விருத்தப் பாவினங்கள்

பெருங்காப்பியங்கள் ஆகிய வளையாபதி குண்டல கேசி முதலியன விருத்தப்பாக்களில் தோன்றின. பின்னர்த் தோன்றிய சிறு காப்பிங்கள் ஐந்தும் விருத்தங்களாலேயே அமைந்தன.

கம்பஇராமாயணம் வில்லிபாரதம பெரியபுராணம் போன்ற புராண நூல்களும் விருத்தப்பாக்களாலேயே தோன்றின. ஒலிநயமும் பொருள் நயமும்உடைய விருத்தங்களை அதிகமாக வெளிப்படுத்தியது கம்பராமாயணமே. நாற்சீரால் அமைந்த கலிவிருத்தம் இரு சீர்களால் அமைந்த வஞ்சி விருத்தங்கள் எண்சீர் முதலான கழிநெடிலடி விருத்தங்கள் எனப் பல்வகை விருத்தவகைகளைக் கையாண்டவன் கவிச் சக்கரவர்த்தி கம்பன். நாளடைவில் கம்பனுக்குப் பின் தோன்றிய வில்லிபாரதம் முதலானவை விருத்தவகையில் தோன்றின. பாரதியார் பாரதிதாசன் உவமைக்கவிஞர் சுரதா வாணிதாசன் முதலானோர் எழுதிய கவிகள் விருத்தயாப்பிலேயே தோன்றின. இன்றையக் கால கட்டம் வரையில் கவிதைகள் அனைத்தும் விருத்த யாப்பிலேயே தோன்றியுள்ளன.

விருத்தம் பற்றிக் காக்கைபாடினியம்

ஆசிரியவிருத்தம் பற்றிய பாவினத்தின் இலக்கணம் காக்கை பாடினியத்தில் காணப்படுகினறது.

அறுசீர் முதலா நெடியவை எல்லாம்
நேறிவயின் திரியா நிலத்தவை நான்காய்
விளைகுவ(து) அப்பா இனத்துள விருத்தம்

இதன்படி கழிநெடிலடி நான்கு தம்முள் அளவொத்து ஒரு பாடலாய் வருவது ஆசிரிய விருத்தம் எனத் தெரிகிறது.விருத்தப் பாவியல் என்ற நூல் ஒரு சில விருத்தப்பாக்களை மட்டும் எடுத்துக்கொண்டு அவற்றின் சீர்பற்றி, ஆய்வு செய்கின்றது.

சீர்வளர் கமலச் செல்விதிகழ்தரு வதனக் கொண்மூக்
கார்வளர் மலிந்த கூந்தல் கன்னலும் கசக்கும் இன்சொல்

ஓரடியில் விளச்சீர் வந்து மாச்சீச் பெற்றுப் பின் தேமாவுடனாய் மூன்று சீர்கள் இரட்டித்து யமையும். ஓரடியில் விளச்சீர் வந்து மாச்சீர் பெற்றுப் பின் தேமாவுடனாய் மூன்று சீர்கள் அமைவதானது இரட்டித்து வந்துள்ளது.

சீர்வளர் - கூவிளம் : கமல - புளிமா : செல்வி - தேமா
திகழ்தரு -கருவிளம் : வதன - புளிமா : கொண்மூ - தேமா

பொதுவாகப் பாக்களுக்கு அழகுதருவன மோனைச் சொற்கள். "மோனை இல்லா முத்தமிழ்ப்பாட்டு நாணம் இல்லா நங்கை ஒப்பாம்" என்பது தண்டபாணி சுவாமிகளின் திருவாக்கு. இந்த வகையில் ஏராளமாக விருத்தங்கள் பலவற்றைப் பாடியுள்ளான் கம்பன் அதனால் தான் **"விருத்தமெனும் ஒண்பாவிற்கு உயர்கம்பன்"** என்று பாராட்டப் பெறுகின்றான்.

கம்பனின் கலி விருத்தங்கள்

அளவடியால் ஒவ்வோர் அடியிலும் நான்கு சீரகளுடன் துள்ளல் ஓசையுடன்வரும் விருத்தம் கலிவிருத்தம்.இந்த அமைப்பில் கம்பன் பாடிய விருத்தங்கள் ஏராளம். கம்ப இராமாயணம்ஆற்றுப் படலத்தில ஒரு விருத்தம்

பம்பி மேகம் பரந்தது பானுவால்
நம்பன் மாதுலன் வெம்மையை நண்ணினான்
அம்பின் ஆற்றுது மென்றகன் குன்றின்மேல்
இம்பர் வாரி எழுந்தது போன்றதே

"பம்பி - தேமா : மேகம் - தேமா : பரந்தது -கருவிளம் : பானுவால்

- கூவிளம். நம்பன் - தேமா : மாதுலன் -கூவிளம் : வெம்மையை -கூவிளம் நண்ணினான் -கூவிளம் இத்தகைய கலிவிருத்தங்களைக்; கம்பன் நிறைய எழுதியுள்ளான்.

கம்பன் யாத்த ஆசிரிய விருத்தங்கள்

முன்னர்க் காக்கை பாடினியம் சான்றாகக் காட்டிய அறுசீரக் கழி நெடிலடி ஆசிரிய விருத்தம் போன்றவை கம்பன் பாடிய கவிதைகளிலும நிறையக் காணலாம்;

கல்லிடைப் பிறந்து போந்து கடலிடைக் கலந்த நீத்தம்
எல்லையில் மறைக ளாலும்இயம்பரும் பொருளீ தென்னத்
தொல்லையில் ஒன்றே யாகித்துறைதொறும் பரந்த சூழ்ச்சிப்
பல்பெறுஞ் சமயஞ் சொல்லும் பொருளும்போற் பரந்த தன்றே

இதன் யாப்பமைப்பு

"கூவிளம் புளிமா தேமா
கருவிளம் புளிமா தேமா
கூவிளம் புளிமா தேமா
கருவிளம் புளிமா தேமா"

இவ்வாறு யாப்பு முழுதும் ஒரே சீரமைப்பில் வரக்காணலாம்

நாற்சீர் ஆசிரிய விருத்தம்

நெல்மலை அல்லன நிரைவரு தரளம்
சொல்மலை அல்லன தொடுகட லமிர்தம்
நல்மடை அல்லன நதிதரு நிதியம்
பொன்மலை அல்லன மணிபடு புளினம்

இதன் சீர்வகை

கூவிளம் தேமா கருவிளம் புளிமா
கூவிளம் தேமா கருவிளம் புளிமா. என்ற வகையில அமையும்.

எழுசீர்க் கழிநெடில் ஆசிரிய விருத்தம்

நிலமகள் முகமோ திலதமோ கண்ணோ
நிறைநெடு மங்கல நாணோ
இலகுபூண் முலைமேல் ஆரமோ உயிரின்
இருக்கையோ திருமகட் கினிய

இதன் சீர்வகை

கருவிளம் புளிமா கருவிளம் தேமா
கருவிளம் கூவிளம் தேமா -

முழுமையும் விளச்சீரும் மாச்சீரும் கலந்து வந்த ஆசிரிய விருத்தம்.

அறுசீர் வகை

சிந்தொடு குறளும்; கூனும் சிலதியர் குழாமும் தெற்றி
வந்தடி வணங்கிச் சுற்ற மணியணி விதான நீழல்

முழுமையாக விளச்சீரும் மாச்சீரும் கலந்து வந்தது.

எழுசீர வேறு வகை

கொழுந்தோடிப் படர்கீர்த்திக் கோவேந்தன்
அடைந்தமைசென் றொற்றர் கூறக்
சுழந்தோடும் வரிசிலைக்கைக் கடற்றானை
புடைசூழக் கழற்கால் வேந்தன்

இதன் சீர்வகை

புளிமாங்காய் புளிமாங்காய் தேமாங்காய்
புளிமாங்காய் தேமா தேமா

ஒரு வரியில் காய்ச்சீர்கள் நான்கு மாச்சீர்கள் இரண்டு நான்கு காய்ச்சீரும இரண்டு மாச்சீராலும் எந்த அறுசீர் ஆசிரிய விருத்தம்

வண்டிலங்கு நுதற்றிசைய வயக்களிற்றின்
மருப்பொடிய அடர்த்த பொற்றோள்
விண்டலங்க ளுறவீங்கி யோங்குதய
மால்வரையின் விளங்க மீதில்

மேலும் பல்வகைச் சந்தங்களோடு கூடிய பல்வகை விருத்தங்கள் கம்பனால் பாடப் பெற்றுள்ளன. பெரிய இராமாயணக்கடலிலிருந்து ஒரு சில துளிகளே சான்று காட்டப் பெற்றுள்ளன.

சொலல் வல்ல கம்பன்

மு.செண்பகவள்ளி

முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை, அழகப்பா பல்கலைக்கழகம்,காரைக்குடி

விருத்தம் என்னும் ஒண்பாவினை இயற்றுவதில் வல்லவனான கம்பனின் சொல்லாட்சித்திறனை விளக்குவது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

எண்களைக் கையாளுவதில் சொல்லாட்சித்திறன்

எண்களை உள்ளவாறே கையாளாமல் பெருக்கல் வாய்பாடாகச் சொல்லுதல் தமிழில் உள்ள ஒரு மரபு ஆகும். தொல்காப்பியர்கூட,

பண்ணைத் தோன்றிய எண்ணான்கு பொருளும்
கண்ணிய புறனே நானான்கு என்ப (தொல்.1200)

நாலிரண்டாகும் பாலுமார் உண்டே (தொல்.1201)

என்பதில் முப்பத்திரண்டு என்பதை எண்ணான்கு (8X4) என்றும், பதினாறு என்பதை நானான்கு (4X4) என்றும், எட்டு என்பதை நாலிரண்டு (4X2) என்றும் உரைப்பர்.

கம்பனும் எண்களைக் கையாளுவதில் தன் சொல்லாட்சித் திறனை அதிகம் பயன்படுத்துகிறார். இராமனை நாடு துறந்து காடேகச் சொல்ல வந்த கைகேயி,

பூழிவெங் கானம் நண்ணிப் புண்ணியத் துறைகள்ஆடி
ஏழிரண் டான்டின் வாவென் றேவினன் அரசன் (1601)

என்கிறாள். இதில் பதினான்கு என்று கூறாது ஏழிரண்டு எனக் கம்பர் கூறியதற்குப் பலரும் பல காரணங்கள் கூறுவர். வனத்திற்குப் பதினான்கு ஆண்டுகள் போகவேண்டும் என்று மொழிந்தால் பதினான்கு என்ற பெருந்தொகையைக் கேட்டவுடன் இராமன் மறந்துவிடுவானாம்; குறுந்தொகையாகத் தோன்றுவதற்காக ஏழிரண்டு என்று கைகேயி மொழிந்ததாக வ.சுப.மாணிக்கனார் (கம்பர்,ப.44) கூறுகிறார். மேலும் அனுமன், அசோகவனத்தில் சீதையைக் காணச் சென்றபோது, இலங்கையில் தீ மூட்டிவிட்டு வந்தான். இதனைக் கம்பர் ஐந்து (அஞ்சு) என்ற எண்ணை வைத்து

அஞ்சிலே ஒன்று பெற்றான் அஞ்சிலே ஒன்றைத் தாவி
அஞ்சிலே ஒன்று பெற்ற ஆரியற்காக ஏகி
அஞ்சிலே ஒன்று பெற்றஅணங்கைக் கண்டு அயலாரூரில்
அஞ்சிலே ஒன்றை வைத்தான்

என்று பாடுவர். இதில் ஐம்பூதங்களில் ஒன்றானது வாயு. அவ்வாயுவின் புதல்வன் அனுமன். அவன் ஐம்பூதங்களில் மற்றொன்றான நீரால் ஆன ஆற்றைத் தாவி ஐம்பூதங்களில் ஒன்றான நிலமாகிய பூமாதேவியின் மகளான சீதையைக் கண்டு, பின் திரும்பி வரும்போது ஐம்பூதங்களில் மற்றொன்றான தீயை இலங்கையில் வைத்துவிட்டு வந்தான் என ஐந்து என்ற எண்ணில் கம்பனின் சொல்லாட்சித் திறம் புலனாகும்.

அரக்கியை அழகியாக மாற்றல்

இலக்கியத்திறம் மிகுந்த கம்பர் காப்பிய நாயகியைத் தான் அழகாகக் காட்ட வேண்டும் என்ற மற்ற ஆசிரியர்களில் இருந்து மாறுபட்டு காப்பியத்தில் எதிர்நிலை மாந்தராக வரும் அரக்கியாகிய சூர்ப்பணகையைக்கூட அழகியாகக் காட்டுகிறார்.

காட்டில் பர்ணசாலையில் இராமனைக் கண்ட சூர்ப்பனகை அவன் மீது காதல் கொள்கிறாள். அவனிடம் தன் காதலை வெளிப்படுத்த அழகி உருவம் எடுத்து வருவதைக் கம்பர்,

பஞ்சியொளிர் விஞ்சுகுளிர் பல்லவம் அனுங்கச்
செஞ்சொலிள மஞ்ஞையென அன்னமென மின்னும்
அஞ்சொலிள மஞ்ஞையென அன்னமென மின்னும்
வஞ்சியென நஞ்சமென வஞ்சமகள் வந்தாள் (2762)

என மொழிகிறார்.

அரக்கியை அழகியாகக் காட்டினாலும், இறுதியில் உள்ளுறை போன்று வஞ்சத்தை மனதில் கொண்ட நஞ்சமகள் வந்தாள் எனத் தன் சொல்லாட்சியை அமைத்துள்ளார்.

அனைவரையும் தம்பியாக ஏற்றல்

இராமன், பரதன், இலக்குவன், சத்ருக்கனன் என்ற மூவரை மட்டுமன்றி வேடர்குலத் தலைவனாகிய குகனையும், குரங்கினத் தலைவனான சுக்ரீவனையும், அரக்கர் குல விபீடணனையும் தன் தம்பிகளாக ஏற்றுக் கொண்டதாக கம்பர் இராமனைப் படைத்துள்ளார்.

இவ்விடத்து கம்பனின் சொற்கள் மிகச் சிறப்பாக உள்ளன.

குகனொடும் ஐவர் ஆனேம்முன்பு, பின்குன்று சூழ்வான்
மகனொடும் அறுவரானேம், எம்முழை அன்பின் வந்த
அகனமர் காதல்ஐய! நின்னொடும் எழுவர் ஆனேம்
புகல் அருங்கானம் தந்து புதல்வரால் பொலிந்தான் நுந்தை (.6507)

என்பதில் தனது தந்தையாகிய தசரதனை உனது தந்தை என இராமன் வீடணனிடம் கூறுவது சுட்டத்தக்கது.

சீதையைக் கண்டதாகக் கூறல்

பர்ணசாலையில் இருந்த சீதையை தன் ஆருயிர் மனைவியைத் தொலைத்துவிட்ட சோகத்தில் உடம்பு மட்டுமிருக்க உயிரற்ற நிலையில் காடு, மேடு என அழைந்து தேடிக் கொண்டிருந்த நிலையில் அனுமன் சீதையைத் தேடிச்சென்று, பல இன்னல்களுக்கிடையில் இருந்த சீதையைக் கண்டுவிட்டு, அந்த மகிழ்வான செய்தியை அஞ்சனையின் மைந்தன் இராமனிடம்,

கண்டனென் கற்பினுக்கு அணியைக் கண்களால்,
தெண்டிரை அலைகடல், இலங்கைத் தென்னகர்
அண்டர்நாயக இனித்துரத்தி, ஐயமும்
பண்டுள துயரும் என்று அனுமன் பன்னுவான் (6031)

என்று மொழிவதாகக் கம்பர் கூறுகின்றார்.

'கண்டேன் சீதையை' என அனுமன் இராமனிடம் கூறியிருந்தால், இராமனுக்குச் சீதை உயிரோடுதான் இருக்கின்றாள் என்ற அளவில் மகிழ்ந்தாலும், அடுத்து அவள் கற்புடன் தான் இருக்கின்றாளா என்ற ஐயம் இராமன் மனதில் தோன்றும் என்பதை உணர்ந்த கம்பர் அங்கு தன் சொல்லாட்சியைப் பயன்படுத்தி, "கண்டனென் கற்பினுக்கு அணியைக் கண்களால்" என்கிறார்.

கற்பில் சொல்லாட்சித் திறன்

பிறர்மனை நோக்காப்பேராண்மை கொண்டவனாகக் கம்பர் இராமனைத் தன் காவியத்தில் படைத்துள்ளார். அயோத்தி நகரில் இருந்தபோது இராமன், "இந்த இப்பிறவிக்கு இருமாதரைச் சிந்தையாலும் தொடேன்" என்று சீதையிடம் கூறுகின்றான்.

தான் மனத்தால் கூட பிற பெண்களை எண்ணமாட்டேன் என்று கூறிய இராமன் தன் மனைவியும் மாற்றான் மனத்தில் இருக்கக்கூடாது என எண்ணுவதாகக் கம்பர் படைத்துள்ளார். அதனால் தான் இராவணனைக் கொல்ல இராமன் விட்ட அம்பினை,

கள்ளிருக்கும் மலர்க் கூந்தற் சானகியை
மனச்சிறையிற் கரந்த காதல்
உள்ளிருக்கும் எனக் கருதி உடல்புகுந்து
தடவியதோ ஒருவான் வாளி (9940)

என்பர். இராவணன் மனத்தில் சீதையைப் பற்றிய காதல் அவன் உயிர் போகும் இத்தருணத்திலும், அவன் உடலில் ஒட்டிக் கொண்டிருக்கிறதா எனத் தடவுவதாக கம்பன் தன் சொல்லாட்சியை அமைத்துள்ளான்.

கம்பன் சொல்லாட்சிகளில் சில...

முனைவர் **வீ.சிவபாதசுந்தரம்**
இணைப்பேராசிரியர். அ.வீ. வா. நி. திரு புட்பம் கல்லூரி (தன்னாட்சி) பூண்டி

சொல்லாட்சி என்பது முருகியல் சுவை கலந்த கற்பனை தோன்ற பொருளமைந்த சொற்களைத் தெரிவுசெய்து முறைப்படுத்தி அமைப் பதால் ஏற்படும் விளைவு எனலாம். இடத்திற்கேற்பச் சொல்லாட்சிகளைப் பயன்படுத்திப் பொருளாற்றலை வெளிப்படுத்திப் புத்துயிர் ஊட்டுவதில் கம்பன் பல இடங்களில் வெற்றி கண்டுள்ளார். அவற்றுள் சிலவற்றைக் காணலாம்.

பாலகாண்டத்தில் கோசல நாட்டு வளத்தைக் குறித்துக் கூறு மிடத்து. வயல் வரப்புக்களிளெல்லாம் முத்துக்கள் உள்ளன. நீர் மதகுகளி லெல்லாம் சங்குகள் உள்ளன. கரைகளிளெல்லாம் செம் பொன்கள் உள்ளன. நீர் நிலைகளிளெல்லாம் செங்கழுநீர் மலர்க் குவியல்கள் உள்ளன. நெல்வயல்களிலெல்லாம் அன்னப் பறவைகள் உள்ளன. பரம்பு அடித்த இடங்களிலெல்லாம் பவளங்கள் உள்ளன. கரும்புகளில் தேன் மிகுந்துள்ளது. சோலைகளில் தேன் பருகித் திளைத்த வண்டுகளின் கூட்டம் உள்ளன என்பார்.

வரம்பெலாம் முத்தம் தத்தும் மடையெலாம் பணிலம் மாநீர்க்
குரம்பெலாம் செம்பென் பேதிக் குழியெலாம் கழுநீர்க் கொள்ளை
பரம்பெலாம் பவளம் சாலிப் பரப்பெலாம் அன்னம் பாங்கர்க்
கரும்பெலாம் செந்தேன்சந்தக் காவெலாம் களிவண்டீட்டம் (734)

எனத் தம்முடைய கற்பனை வளத்திற்கேற்ற சொல்லாட்சிகளைப் படைத்துள்ளார். மேலும்.

நீரிடை உறங்கும் சங்கம் நிழலிடை உறங்கும் மேதி
தாரிடை உறங்கும் வண்டு தாமரை உறங்கும் செய்யாள்
தூரிடை உறங்கும் ஆமை துறையிடம் உறங்கும் இப்பி
போரிடை உறங்கும் அன்னம் பொழிலிடை உறங்கும் தோகை (38)

என உயிரினங்கள் மகிழ்ச்சியோடு உறங்கும் அழகை வெளிப்படுத்துகின்றார்.

மக்கள் ஒழுகலாறு

கோசல நாட்டு மக்களிடம் தீய செயலாகிய குற்றம் இல்லை என்றும்

அதனால் மரண பயமில்லை என்றும் அவர்களின் உள்ளங்களில் நேர்மைக் குணமே நிரம்பி இருப்பதால் சினம் தோன்றுவதில்லை என்றும் அவர்களின் செயல்கள் அறமல்லாது வேறில்லை என்றும் தாம் காண விரும்பிய மக்களின் பண்பாட்டு நிலையை மிக அழகிய சொற்களால் இயம்புகின்றார்.

கூற்றம் இல்லை ஓர் குற்றம் இலாமையால்
சீற்றம் இல்லை தம் சிந்தையின் செம்மையால்
ஆற்றம் நல்லறம் அல்லது இலாமையால்
ஏற்றம் அல்லது கிழிதகவு இல்லையே (71)

மக்களின் மகிழ்ச்சி

கோசல நாட்டு நாடக மகளிரின் முகத்தில் எப்பொழுதும் முறுவல் தோன்றும். அம்முறுவலைக் காணும் காமுகர்களுக்குக் கொடிய துன்பத்தைக் கொடுக்கும். அம்மகளிரின் சிறிய இடைகள் நாள்தோறும் முலைபாரத்தைத் தாங்க முடியாது வருந்தி மெலியும். அம்முலைகளோ முத்து மாலைகளையும் சிறந்த பொன்மாலைகளையும் பெற்று நாள்தோறும் பருத்துப் பூரிக்கும் என்கின்றார்.

முளைப்பன முறுவல் அம்முறுவல் வெந்துயர்
விளைப்பன அன்றியும் மெலிந்து நாள்தோறும்
இளைப்பன நுண்ணிடை இளைப்ப மென்முலை
திளைப்பன முத்தொடு செம்பொன் னாரமே (146)

புதல்வர்கள் பிறந்த மகிழ்ச்சி

பணிப்பெண்கள் அரசனிடம் ஓடிச்சென்று புதல்வர்கள் பிறந்த மகிழ்ச்சிச் செய்தியைக் கூறிக் கூத்தாடினார். அந்தணர்கள் கூடி நாள், மீன், கோள் மீன் நிலைகளை ஆய்ந்த இனி உலகத்துக்குத் துன்பம் இல்லை என்று கூறினார்.

ஓடினர் அரசன்மாட்டு உவகைமாறி நின்று
ஆடினர் சிலதியார் அந்தணாளர்கள்
கூடினர் நாளொடு கோளும் நின்றமை
நாடினர் உலகினி நவையின்று என்றனார் (288)

பரசுராமனின் வருகை

கடுஞ்சினத்துடன் வந்த பரசுராமனின் தோற்றக் கூறும்போது,

விண் கீழுற என்றோ படிமேல்பாலுற என்றோ
எண் கீறிய உயிர் யாவையும் யமன்வாய் இடவென்றோ
புண் கீறிய குருதிப்புனல் பொழிகின்றன புரைய
கண் கீறிய கனலான் முனிவியாது என்றயல் கருதா (1217)

என்று கூறுகின்றார்.

மக்கள் மனநிலை

இராமன் நாளை முடிசூடுவான் என்று முரசனைந்து உரைத்ததைக் கேட்ட மக்கள்,

ஆர்த்தனர் களித்தனர் ஆடிப் பாடினர்
வேர்த்தனர் தடித்தனார் சிலிர்ந்து மெய்ம்மயிர்
போர்த்தனர் மன்னனைப் புகழ்ந்து வாழ்த்தினார்
தூர்த்தனர் நீள்நிதி சொல்லி னார்க்கெலாம் (120)

என்பார்.

பரதனின் வருகையை அறிந்த குகன், பரதன் நம் நாயகனின் நாட்டையும் பிடுங்கிக்கொண்டு இங்கு வந்த இக்காட்டையும் பிடுங்க நினைக்கின்றானோ என்று அவனைப் பார்த்துச் சினந்து கூறுகின்றான்.

ஆடு கொடிப் படைசாடி அறத்தவரே ஆள
வேடு கொடுத்தது பார் எனும் இப்புகழ் மேவீரோ
நாடு கொடுத்த என் நாயகனுக் கிவர் நாமாளும்
காடு கொருக்கிலர் ஆகி எடுத்தது காணீரோ (1006)

அகத்தியார் இராமனை அழைத்துச் செல்லல்

தன்னை அடிபணிந்த இராமனை அகத்தியார் தழுவிக் கொண்டு நல்வரவு ஆகுக என்று வாழ்த்துகின்றார். முனிவர்கள் அன்பு மிகுவதால் பல வேத மொழிகளைக் கூறி வாழ்த்துகின்றனர்.

வேதியர்கள் வேதமொழி வேறுபல கூற
காதல்மிகு நின்றுவொளிர் கமண்டலுவின் நல்நீர்
மாதவர்கள் வீசிநெடு மாமலர்கள் தூவ
போது மணம் நாறுகுளிர் சோலைகொடு புக்கான் (163)

இராமன் விடுத்த அம்பின் ஆற்றல்

இராமன் விடுத்த அம்பு ஏழு மாமரங்களைத் துளைத்தோடு

அல்லாம் ஏழு என்ற எண்ணிக்கையில் உள்ள அனைத்தையும் ஊடுவிச் சென்றது. இதனைக் கம்பன்,

ஏழு மாமரம் உருவிக் கீழேலுலகம் என்றிசைக்கும்
ஏழும் ஊடுபுக்கு உருவிப்பின் உடன் அடுத்து இயன்ற
ஏழ் இலாமையின் மீண்டது அவ்விராகவன் பகழி
ஏழு கண்டபின் உருவுமால் ஒழிவது அன்று இன்னும் (173)

ஏழுவேலையும் உலகம் மேல் உயர்ந்தன ஏழும்
ஏழு குன்றமும் இருடிகள் எழுவரும் புரவி
ஏழும் மங்கையர் எழுவரும் நடுங்கினார் என்ப
ஏழு பெற்றதோ இக்கணைக்கு இலக்கம் என்றெண்ணி (173)

சம்பாதி தன்வரலாறு கூறல்

சம்பாதி, உயரம் பரந்த என்னை சூரியன் சினங்கொண்டு எரிக்க என் இறகுகள் எரிந்து தரையில் விழுந்தேன். அப்போது சூரியன்,

மண்ணிடை விழுந்த என்னை வானிடை வயங்கு வள்ளல்
கண்ணிடை நோக்கி உற்ற கருணையான் சனகன் காதல்
பெண்ணிடை ஈட்டின் வந்த வானரர் இராமன் பேரை
எண்ணிடை உற்ற காலத்து இறகு வெற் றெழுதி என்றான் (994)

என்று கூறுகின்றான்.

சூளாமணியைக் கண்ட இராமனின் நிலை

அனுமன் சீதையிடமிருந்த பெற்று வந்த சூளாமணியைப் பெற்றதும் இராமன் தன் திருமணத்தின் போது சீதையின் திருக்கையைப் பற்றியது போன்ற உணர்வைப் பெற்றான் அந்நிலைமைக் கம்பன்,

பொடித்தன உரோமம் போந்து பொழிந்தன கண்ணீர் பொங்கி
துடித்தன மார்பும் தோளும் தோன்றின வியர்வின் துள்ளி
மடித்தது மணிவாய் ஆவி வருவது போவ தாகித்
தடித்தது மேனி என்னே யார்உளர் தன்மை தேர்வார் (1294)

போருக்குப் புறப்பட்ட கும்பகர்ணன்

கும்பகர்ணன் இராவணனிடம், என்னை அவர்கள் வென்றுவிட்டால் உன்னையும் வென்றுவிடுவார். அதன் பின்னரும் சீதையை விடுவிக்காமலிருப்பது தவத்தின் பயனாகாது என்கின்றான்.

இராவணன் இந்திரசித்தைக் கடிந்துரைத்தல்

இந்திரசித்து இராவணனிடம் சீதையை விட்டு விட்டால் இராம இலக்குவர் நம்மிடம் பகை பாராட்ட மாட்டார்கள். நாமும் மகிழ்ச்சியாக இருக்கலாம் என்றான் அது கேட்ட இராவணன்,

முன்னையோர் இறந்தார் எல்லாம் இப்பகை முடிப்பர் என்றும்
பின்னையோர் நின்றோர் எல்லாம் வென்றனார் பெயர்வர் என்றும்
உன்னைநீ அவரை வென்று தகுதியென் றுணர்ந்தும் அன்றதால்
என்னையே நோக்கி யான்இந் நெடும்பகை தேடிக்கொண்டேன்(3064)

என்றான்.

இந்திரசித்தன் உடல்கண்டு இராவணன் புலம்புதல்

அம்பு மழை தங்கிய மகனின் மார்பைத் தன் கண்ணீர் மழை வழியும் மார்புடன் அணைத்துக் கொண்டு புலம்பும் போது அவன் அடைந்த துன்பத்தைப் போன்று உலகில் யாரும் அடையவில்லை. இதனைக் கம்பன்,

அப்புமாரி அழுந்திய மார்வைத்தன்
அப்புமாரி அழுதுஇழி யாக்கையின்
அப்பும் மார்பில் அணைக்கும் அரற்றுமால்
அப்புமான் உற்றது யாவர் உற்றார் அரோ (3156)

இராமனின் வில்லாற்றல்

இராமனின் வில்லில் கட்டிய மணி அசைவதால் ஒலி எழும்பி மத யானை, குதிரை, தோர் முதலியன அழிந்து திக்குகளும் கடல் பரப்பும் வேறுபட்டுக் காணப்பட்டன. அரக்கர்களின் மனைவியரின் கண்களில் நீர் சோர்ந்தன. இக்காட்சியைக் கம்பன்,

படுமதகரி பனிசிந்தின பனிவரை இரதம் அவிந்தன
விடுபடை திசைகள் பிளந்தன விரிகடல் அலறது எழுந்தன
அடுபுலி அவுணர்தம் மங்கையார் அலர்விழி அருவிகள் சிந்தின
கடுமணி நெடியவன் வெஞ்சிலை கணகண கண எனும் தொறும்

(யு.கா. 3452)

இராமனின் அம்பு

இராமனின் தூய்மையான அம்பு, இராவணனின் வாழ்நாள், தவம்,

வரம், தோள்வலி ஆகியவற்றை அழித்து உயிர் முடித்தது என்ற செய்தியைக் கம்பன்

முக்கோடி வாழ்நாளும் முயன்றுடைய
பெருந்தவமும் முதல்வன் முன்னாள்
எக்கோடி யாராலும் வெலப்படாய்
எனக்கொடுத்த வரமும் ஏனைத்
திக்கொடும் உலகனைத்தும் செருக்கடந்த
புயவலியும் தின்று மார்பில்
புக்கோடி உயிர்பருகிப் புறம்போயிற்று
இராகவன்தன் புனித வாளி" (யு.கா. 3838)

இவ்வாறு கம்பன் தம் ஆற்றல் சான்ற சொல்லாட்சியாலும் சொல் விளையாட்டாலும் கற்போர் மனதைக் களிப்புறச் செய்து தம் இராம காதையை இனிதே நடத்தி நிறைவு செய்யும் பாங்கு வியக்க வைக்கிறது.

கம்பரின் சொல்லாக்கக் கோட்பாடுகள்

முனைவர். **எம்.எஸ்.ஸ்ரீலட்சுமி**
சிங்கப்பூர்

காலந்தோறும் கம்பன் கையாண்ட சொற்களைப் பற்றிய ஆய்வுப் பணி தொடர்ந்து நடைபெற்ற வண்ணம் இருந்திருக்கிறது. 1971இல் வெளியிடப்பட்ட கம்பராமாயண அருஞ்சொல்லகராதி 5290 அருஞ் சொற்களைக் கொண்டது. ஆ.சே.சுந்தரராசன் என்பவர் இவ்வகராதியைத் தொகுத்து வெளியிட்டார். கம்பநாடன் கவிதையில் வந்து விழும் சொற்கள் அவனின் சொல்லாக்கத்திறனையும் வெளிக்காட்டுவனவாக அமைந்துள்ளன.

சொற்பெருக்கம் ஒரு மொழியின் வளத்தைக் காட்டுவது. அதே வேளையில் சொல்லாக்கம் என்பது அந்த மொழி தோன்றிய காலம் முதற்கொண்டே நிகழ்ந்து வருவது.மக்கள் வழக்கில் உள்ள சொற்களின் பொருள் வரையறுக்கப்பட்டும், சொற்களஞ்சியத்தில் இல்லாத பிறமொழிச்சொற்கள் புதிதாக மொழிபெயர்க்கப்பட்டும், ஒலிபெயர்க்கப் பட்டும் சொல்லாக்கம் செய்யப்படும். அவை புதிய மொழியின் இலக்கண அமைதிக்கு ஏற்பவும் அமையவேண்டும்."ஒருதுறை சார்ந்த கருத்து வெளிப்பாட்டில் ,புதிய கருத்துக்கள் அல்லது பொருள்களை வெளிப்படுத்தும் சொற்களை உருவாக்குதலைக் கலைச்சொல்லாக்கம் " என விளக்குவர் ந.முருகேசபாண்டியன்.

தொல்காப்பியர் "மொழிபெயர்த்து அதர்ப்பட யாத்தல்" என்னும் தொடர்வழி மொழிபெயர்ப்புப் பற்றிக் குறிப்பிடுகிறார். மேலும் அவர் வடசொற்களை எவ்வாறு கையாளவேண்டும் என்பது குறித்தும் தம் சிந்தனைகளைக் கூறியுள்ளார்.

வடசொற் கிளவி வடவெழுத்து ஒரீஇ,
எழுத்தொடு புணர்ந்த சொல்லாகும்மே

என்று குறிப்பிடுகிறார். எனவே மொழிபெயர்ப்பும் ,சொல்லாக்கமும் தமிழுக்குப் புதியவை அல்ல. காலந்தோறும் சொல்லாக்கங்கள் நிகழ்ந்த வண்ணம் இருந்தன என்பதும் ,அதனால் தமிழ் வளம் மிக்க மொழியாய் விளங்கி வருகிறது என்பதும் போதரும்.

"கடிசொல் இல்லை காலத்துப்படினே" என்பது தொல்காப்பியம்.

கருத்துப் பரிமாற்றத்திற்கு உதவும்மொழி காலந்தோறும் வளரும் போதும், மனிதசிந்தனை விரிவடையும்போதும் புதிய சொற்கள் தேவைப்படுகின்றன. இத்தேவையை நிறைவு செய்யும் பொருட்டுப் பல புதிய சொல்லாக்கங்கள் உருவாக்கப்படுகின்றன. இதற்குரிய வழி முறைகளைப் பேராசிரியர் சுந்தரம்பிள்ளை, பா.வே. மாணிக்க நாயக்கர், தேவநேயப்பாவாணர் போன்ற மொழிஅறிஞர்கள் கூறியுள் ளனர். பேராசிரியர் வையாபுரிப்பிள்ளை "இரண்டு சொற்களின் சேர்க்கை, இரண்டு வினையடிகளின் சேர்க்கை, வினையடிகள் பெயர்ப் பொருளை உணர்த்தல், வினையடிகள் நீட்டல் விகாரங்கள் பெற்றுப் புதிய சொற்களாதல், புதிய விகுதிகளின் சேர்க்கையால் புதிய சொற்கள் உருவாதல் போன்ற வழிமுறைகளால் புதிய சொற்கள் உருவாக்கப்பட்டுத் தமிழ்ச்சொற்கோவை விரிவடைந்து வருகிறது" என்று கூறியுள்ளார் .

தமிழில் "சொல்லாக்கம் விகுதிவழி ஆக்கம் (affixation), கூட்டுச் சொல்லாக்கம் (compounding), ஒலி வழி ஒப்பாக்கம் முதலிய பல்வேறு பிரிவுகளைக் கொண்டது" என எழுதும் பேராசிரியர் இ.மறைமலை அவர்கள் கூட்டுப்பெயர்ச்சொற்கள் (Noun Compounds), புதிய வினைச்சொற்கள் (derived verbs) ஆகியவை எவ்வாறு உருவாயின எனத் தம் கட்டுரையில் விளக்குகிறார்.

கம்பரின் சொல்லாக்கக் கோட்பாடுகள் என்பது விரிவாக ஆய்தற்குரிய களம். பத்தாயிரம் பாடல்கள் பாடிய தெய்வ மாக்கவியின் சொற்புலமை சில பக்கங்களுக்குள் அடங்கும் தன்மைத்தன்று.இருப்பினும் கம்பனை முழுதும் கற்கக்கிடைத்த வாய்ப்பினால் இக்கட்டுரை உருவானது.

கம்பன் பன்மொழி அறிஞன். பல்துறைப் புலமையன்

வட்டார வழக்கு, புவியியல் வழக்கு, சமூக வழக்கு போன்ற பல்வகை வழக்குகளை அறிந்தவன். கைதேர்ந்த மொழிபெயர்ப்பாளனுக்குரிய தகுதிகள் அனைத்தும் நிரம்பப் பெற்றவன். கம்பன் தம் காலத்தே பன்மொழி பேசும் மக்கட்கூட்டத்தைக் கண்டிருக்கவேண்டும்.ஆகவே பதினெண்பாடை (பாஷை) வழக்கில் இருந்த நிலையை வருணிக்கிறான்.

பலமொழிகள் பேசுவோர் ஒரே இடத்தில் கூடிநின்று உரத்த குரலில் பேசும்போது அவர்கள் பேசுவது எப்படிப் புரியாதோ அந்தக்காட்சியைச் சோலையில் பல்வகைப் புள்ளினங்கள் எழுப்பும் ஒலிகளும், கூச்சல்களும் அவனுக்கு நினைவுபடுத்தவே கம்பன்

அதனைப் பாடுகிறான்.

ஆரியம் முதலிய பதினெண் பாடையில்
பூரிய ரொருவழிப் புகுந்த தாமென
ஓர்கிலக் கிளவிக ளொன்றோ டொப்பில்
சோர்வில விளம்புள் துவன்று கின்றது

கம்பன் காலத்தில் பல மொழிகள் பேசுவோர் வணிகத்தின்பொருட்டு தமிழகத்தில் வாழ்ந்திருக்க வேண்டும். அவனது கால மொழிச் சூழலையும் நம்மால் அவதானிக்க முடிகிறது.

கம்பன் பல்வேறுவகைக் கோட்பாடுகளைக் கைக்கொண்டு சொல்லாக்கங்களைச் செய்கிறான். பேச்சு வழக்காறுகளும் கம்பரின் சொல்லாக்கங்களுக்கு அடிப்படை ஆகின்றன. நீத்தம், ஈரநீர் போன்ற வழ்க்குச்சொரறகளை எடுத்துக்காட்டாகக் கூறலாம்.

சீதம் என்பது சீதளம் என்ற வழக்குச் சொல்லிலிருந்து பிறந்தது.கம்பன் இதனைச் "சீதம் வீங்கு உவரியைச் செருக்கு மாறொரு" என்னும் பாடலில் கையாண்டுள்ளார்.

பொருள்பெயர்ப்பு முறை

"கம்பன் தமிழைப் பொருளாலும் வளர்த்தார்; சொல்லாலும் வளர்த்தார். கம்பன் காலம் வடமொழிக்கலப்பு மிகுந்த காலம்.எனினும் தமிழ் ஒலி வரம்பும், மயக்க வரம்பும் கம்பரால் பெரிதும் போற்றப்பட்டன" எனப் பாராட்டுகிறார் மூதறிஞர். கம்பரின் பாத்திரப் பெயர்கள் அனைத்தும் தமிழ் மொழிமை குன்றாது கம்பரால் கையாளப்பட்டன. சான்றாக மகாபார்சுவன் என்னும் பாத்திரம் " மாபெரும்பக்கன் " எனத் தமிழாக்கம் கண்டது.கம்பரின் பாத்திரப்பெயர்கள் அனைத்தும் தூய தமிழாக்கம் பெற்றவை.. இவ்வாறு பல சான்றுகளை நாம் கூறலாம். பாத்திரப்பெயர்கள் மட்டுமின்றிப் படலப்பெயர்கள்,இடப்பெயர்கள் போன்றவை பொருள்பெயர்ப்பின் அடிப்படையில் அமைந்தவை.

வடசொற்களைத்தமிழாக்குதல்

கம்பன் வடசொற்களைத் தமிழ்ப்படுத்தும்போது தமிழ் எழுத்திலக்கண முறைப்படித் தமிழ்ப்பெயராக்கிவிட்டான்.சான்றாகச் சில சொற்களைக் காணலாம்.

லட்சுமணன் - இலக்குவன்
அஹல்யா - அகலிகை
இத்ரஜித் - இந்திரசித்தன்
கௌசல்யா - கோசலை

பொருள் அடிப்படையிலும்,ஒலி அடிப்படையிலும் வடசொற்களைத் தமிழ்ப்படுத்திய கம்பன் சில நீண்ட வடமொழிப்பெயர்களைச் சுருக்கமாகவே ஆக்கிக்கொள்கிறார்.

அரிய சொல்லாட்சிகள்

அருஞ்சொற்களைக் கையாள்வதும் கம்பருக்குக் கைவந்த கலையாகும். பேராரவாரத்தைக் குறிக்கும் "திமிலம்" என்னும் சொல்; குதிரையைக் குறிக்கும் "கலின மான் " என்னும் சொல்; ஓடுபவன் என்னும் பொருள் தரும் "ஒட்டன்" சட்டையைக் குறிக்கும் "செச்சை" என்னும் சொல் போன்றவை நாம் அறிந்திராத புதிய சொற்களாகும்.இவ்வாறு பல அருஞ்சொற்களைக் கம்பன் கையாண்டும் தமிழின் சொல்வளத்தைச் செழுமை ஆக்குகிறார். சங்க இலக்கியங்களில் பயின்ற அருஞ் சொற்களும் கம்பன் காவியத்தில் மிகப்பலவாகக் காணக்கிடக்கின்றன.

பல சொல் ஒரு பொருள்

கம்பரின் தனிச்சிறப்பு ஏறத்தாழ ஒரே பொருள் கொண்ட அல்லது மிகச் சிறிய பொருள் வேறுபாடு கொண்ட சொற்களைக் கையாள்வது எனலாம். சொரிவன,தோறும், ஓசை,நிகர்வன எனப் பல சொற்களை ஆண்டு சந்தநயம் சிறக்கும்படிக் கவைபுனைந்தவர் கம்பன்.

எதிர்ப்பொருள் தரும் சொற்களையும் தம் பாடல்களில் பயன்படுத்தியவர் கம்பன். சான்றாக வண்மையும் வறுமையும் எதிரான பொருள் கொண்டவை.உண்மையும் பொய்யும் ஒன்றுக்கொன்று எதிரானவை.

திசைச்சொற்களான தமிழ்ச்சொற்கள்

பரிபவம், உறக்கம் ,சேரை முதலான நற்றமிழ்ச் சொற்கள் இன்று தமிழர்கள் மறந்த சொற்களாகிவிட்டன. இவை தமிழ்ச்சொற்களா-யினும் கூடத் தமிழில் திசைச்சொல் போல ஆகிவிட்டன. கம்பரின் சுரங்கத்தில் ஏராளமான சொற்கள் உள்ளன. கம்பரின் காவியம் கற்பார்க்கே அச்சுரங்கம் திறக்கும்.

சொல் ஒக்கும் சுடுசரம்

பேரா. க.ம.சுந்தரவரதன்
தமிழ்த்துறை. ஸ்ரீ அஹோபிலமடம் சம்ஸ்க்ருதக் கல்லூரி. மதுராந்தகம்

கம்ப காவியத்தில் இராமன் வில்லாற்றலைக் கம்பன் சொல்லாற்றல் விஞ்சியதா? அல்லது கம்பன் சொல்லாற்றலை இராகவன் வில்லாற்றல் விஞ்சியதா? என்பதை அறிவதே நோக்கமாக, ஒருவில், ஒருஇல், ஒரு சொல் எனத்திகழ்ந்த இராமபிரானது கைவண்ணத்தைக் காட்டிய கம்பநாடனின் சொல்வண்ணம் துணையாகக் கொண்டு இவ்வண்ணம் வில்வண்ணம் திகழுமாற்றைக் காண்போம்.

சொல் ஒக்கும் சுடுசரம்

"கம்பன் சொல்லோடு போட்டியிடும் இராமபிரான் வில்" என்பதைக் கம்பனே காட்டிய இடம் முதல்போராகிய, கன்னிப்போராகிய 'தாடகை எனும்பெயர் தையல் ஆள்பட' இராமன் வரிசிலை கோடிய இடம். கோடானுகோடி தமிழ்நெஞ்சங்களைக் களவாடிய இடம், கௌசிக முனிவனும் காகுத்தனும் தாடக வனத்திடை வரும்பொழுது அவ்வனத்திற்கு உடையவளாக விளங்கும் தாடகை வரலாற்றை முனிவன் எடுத்துக்கூற இவ்வமயம் தாடகை அவர் எதிரிடை வந்து தோன்றினாள்.

அவளைக் கொல்லுமாறு முனிவனும் இராமனைப் பணிக்க, பெண்ணைக் கொல்லுதல் அறமன்று என்று பெருந்தகை நினைத்தான். "அண்ணல் முனிவற்கு அது கருத்து எனினும்... .பெண் என மனத்திடை பெருந்தகை நினைத்தான்" என்பான் கம்பன். முனிவனோ இந்தத் தாடகை இவ்வுலகில் எவ்வெவற்றையெல்லாம் சான்றோர் தீயவை என்று சுட்டி விலக்குகின்றனரோ, அவற்றையெல்லாம் செய்வதில் சமர்த்தள்.

"இவள் எதிர்ப்படும் உயிர் எவையாயினும் அவற்றை உண்பதே இவள் முதற்பணி என முனிவன் மொழிய, எல்லாரை உண்பாள் தாடகை எனின் உம்மையேன் இதுவரை உண்ணவில்லை என்றபாவனையில் கரியசெம்மல் நோக்க, என்னை ஏன் உண்ணவில்லை என்று கேட்கிறாயா? இராமா, உண்பதற்கு என்உடம்பில் என்ன இருக்கிறது? சாறு நீங்கிய சக்கை, கோது என்று உண்டிலள். இவளைப் பெண் என்று

எண்ணவும் வேண்டா என்கிறான்" என்பார் நடிப்பிசைப் புலவர் கீரன் தன்னுடைய கம்பராமாயணச் சொற்பொழிவில்.

தீது என்றுள யாவையும் செய்து எமைக்
கோது என்று உண்டிலள் இத்தனையே குறை
யாது என்று எண்ணுவது? இக்கொடியாளையும்
மாது என்று எண்ணுவதோ மணிப்பூணினாய் (.376)

பெண் உருவில் வந்த பேய் எனக்கருதி, குருமொழி தலைமேற்கொண்டு "வந்தெதிர்ந்த தாடகைதன் உரத்தைக் கீறுமாற்றான்" இராகவன் சிலைகுணிக்கக் கணை புறப்பட்டது அக்கணைச் செல்லும் வேகம் சொல்லும் கம்பன் பாடல், கவிச்சக்ரவர்த்தி கம்பன் என்று பறைசாற்றும் பாடல். முதற் போரிலேயே இராமபிரானது ஆற்றலை எடுத்தியம்பிய பாடல்.

சொல்ஒக்கும் கடியவேகச் சுடுசரம் கரிய செம்மல்
அல்லொக்கும் நிறத்தினாள் மேல்விடுதலும் வயிரக் குன்றக்
கல்லொக்கும் நெஞ்சில் தங்காது அப்புறம் கழன்று கல்லாப்
புல்லர்க்கு நல்லோர் சொன்ன பொருளெனப் போயிற்றன்றே (388)

காகுத்தன் கணையின் வேகம் சொல்ல விழையும் கம்பன் "சொல் ஒக்கும் கடிய வேகச் சுடுசரம்" என்கிறான். சொல் ஒக்கும்;; பொருள் ஒக்குமா? என்னில், மன்றிடை பலர் மத்தியில் உணர்ச்சிப் பெருக்கால் உளமறியாமற்புறப்படும் வார்த்தைபோல என்று விளக்குவர் பெரியோர்.

சரம்: சுடுசரம் என்று வினைத்தொகையான் சுட்டி, அதனினும் வேகச்சுடுசரம் என்று அடைதந்து அதனிலும் நிறைவடையாமல் "கடிய" என்று சுட்டியமை கம்பனின் சொல் வேகம் என்பதறிக. கணை புறப்படும்போது சொல் ஒக்கும் வேகம் எனப்புறப்பட்டு தாடகையை வீழ்த்தி 'தீயாரைக் காண்பதும் தீதேஞ்ஞ்அவருடன் இணங்கி இருப்பதும் தீதே" என்று புறம் போயிற்று. எவ்வாறெனின், 'கல்லாப் புல்லர்க்கு நல்லோர் சொன்னப் பொருள் எனப் போயிற்று' என்பான் கம்பன். புறப்படும்போது சொல்லாக இருந்தது வெளியேறும்போது பொருளாகிப் போயிற்று என்பது இன்புறத்தக்கது.

எள்ளிருக்கும் இடமின்றித் தடவியதோ?

முதற்போரின் சுடுசரம், இராவணனுடன் நடந்த இறுதிப்போரில் மீண்டும் நடத்திய லீலை என்ன? கம்பன் சொல்லாற்றல் மீண்டும்

இராமனின் வில்லாற்றலுடன் போட்டியிடும் இடம். "முக்கோடி வாழ் நாளும், முயன்றுடைய பெருந்தவமும், எக்கோடி யாராலும் வெலப்படா எனக்கொடுத்த வரமும், திக்கோடி செருக்கடைந்த புயவலியும் புசித்துப் பசியரி தாகம் தீர இலங்கையர்கோன் உயிர்பருகி புறம் போயிற்று இராகவன்தன் புனிதவாளி. அம்பு மட்டுமா புறம்போயிற்று? இராவணன் மாட்சிமை யாவும் புறம்போயிற்று.

எண்திசைகளையும் வென்றவன் என்ற புகழ் புறம் போயிற்று. கயிலைமலை அசைத்த திண்டோள் என்னும் இசை புறம் போயிற்று. வீணைக்கொடியேந்திய கானக் குயிலின் குரல் புறம்போயிற்று. இராமன் வில்லாற்றலைப்பாடிய கம்பன் அவ்வாற்றலின்முன் தன் சொல்லாற்றல் புறம் காண விரும்பானாகி மண்டோதரி புலம்பலாய் ஒருபாடல் பகர்ந்தான்.

வெள்ளெருக்கம் சடைமுடியான்
வெற்பெடுத்த திருமேனி மேலும் கீழும்
எள்ளிருக்கும் இடமின்றி உயிரிருக்கும் இடம்நாடி
இழைத்த வாறோ
கள்ளிருக்கும் மலர்க்கூந்தல் சானகியை மனச்சிறையில்
கரந்த காதல்
உள்ளிருக்கும் எனக்கருதி உடல்புகுந்து தடவியதோ
ஒருவன் வாளி (237)

இராகவன் சரம்எனும் கூற்றம் தைத்து தைத்து சல்லடைக் கண்களாக துளைபட்ட இராவணன் மேனியைப் பார்த்து மண்டோதரி புலம்பினாள். "ஓ! காகுத்தன் கணையே, என் கணவனின் வரங்களைத் தின்றாய். வாழ்நாளைத் தின்றாய். தவத்தினைத் தின்றாய். தாகம் தீர அவன் உயிரினைப் பருகிச் சென்றாய். இதுபோதாதா? அவன் உடலின்மீது ஈமக்கிரியை செய்ய இடப்படும் எள்கூட நிற்காதவாறு துளையிட்டாயே ஏன்? ஏன் இவ்வாறு செய்தாய்? அறத்தின் நாயகன் தனிப்பெரும் நாயகி சானகியைக் காதல் சிறைவைத்தானே என் கணவன். அச்சிறை அவன் மெய்யில் எங்குளதோ எனப்புகுந்து தடவினயோ" என்றாள்

நாடு உளதனையும் ஓடி நண்ணலார்க் காண்கிலாமல்
பீடுஉள குன்றம் போலும் பெருந்திசை எல்லையானைக்
கோடு உளதனையும் புக்குக் கொடும் புறத்து எழுந்த புண் கோள்
பாடு உளது அன்றித் தெவ்வர் படைக்கலம் பட்டு என் செய்யும் (9913)

எண்திசை வென்றவன். எதிர்த்துப் போரிட யாரும் இன்மையால் எண்திசையானைகளோடு பொருது அவற்றின் தந்தங்கள் மார்பில் தைத்து முதுகில் வடுவாக நிலைபெற செருக்கடைந்த மேனியன். திண்தோளன். யானை கோடுகளாலேயே வீழ்த்த இயலாத வீரன். அப்படிப்பட்டவனை வீழ்த்தியது மட்டுமன்றி அவன் மேனியை சல்லடைக் கண்களாய்த் துளைத்தது இராகவன் சரம் என்னும் கூற்றம் என்பார் கம்பர்.

நிறைவாக

தாயினும் தொழத் தக்காள் மேல் தங்கிய காதல் தன்மை
நோயும் நின் முனிவும் அல்லால் வெல்வரோ (9912)

'இளந்தோள் சேயரிக்கண் வென்றிமாதர் வலிய நெடும் புலவியினும் வணங்காதமகுடம்' புனைந்தவனாய் வீற்றிருந்த இலங்கையர்கோன் வீழ்ந்துபடக் காரணம் தாயினும் உயர்ந்தவளான சீதையின்பால் அவன் கொண்ட காதல் என்னும் நோய். அதனால் அவன் தேடிக்கொண்ட 'கூசுவது மானுடரை' என்னும் நின்பகை. அக்காதல் இன்றேல் அவனை வெல்வது தேவர்க்கும், மூவர்க்கும் அரிதாம் என்றான் வீடணன்.

இராவணனை வில்லாற்றலால் இராமன் வென்றான். தன் சொல்லாற்றலால் காகுத்தனையே வென்றான் கம்பன்.

கம்பர் கவிநயம்

சகோ. ம.அமலோற்பவம்
செயலர் மற்றும் தமிழ் உதவிப் பேராசிரியர், தூய ஜஸ்டின் கல்வியியல் கல்லூரி, மதுரை

மக்களுடைய நல்வாழ்வுக்கு இன்றியமையாத அறிவுரைகளை இலக்கியச்சுவைச் சொட்டச் சொட்ட இராமகதை மூலம் கம்பரால் கம்பராமாயணம் இயற்றப்பட்டது. சொல்நயம், ஓசைநயம், கற்பனைநயம் என பல நயங்கள் எல்லாம் தன்னகத்தே கொண்ட கம்பராமாயணம் ஒரு கடல். அதில் மூழ்கி எடுப்பவை எல்லாம் முத்துக்கள். பாக்களின் சுவைகள் பலாக்கனியின் தேன்சுவைகள். அதில் ஒன்றான அற்புத சொல்லாக்க நயத்தை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

சொல்நயம்

அஞ்சு வணத்தின் ஆடையுடுத்தாள், அரவெல்லாம்
அஞ்சு வணத்தின் வேகமிகுத்தாள், அருளில்லாள்
அஞ்சு வணத்தின் உத்தரியத்தாள், அலையாரும்
அஞ்சு வணத்தின் முத்தொளிர்ஆரத் தணிகொண்டாள்.

இப்பாடலில் அஞ்சுவணம் என்னும் ஒரு சொல் வேறு வேறு பொருள் கொடுத்து நயம் காட்டுவதை அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது. முதலாவதில் ஐந்து நிறங்கள் என்றும், அடுத்து அஞ்சும் உவணம் அதாவது அஞ்சுகின்ற கருடன் என்றும் பொருள் தந்தது. அடுத்து அம்சுவர்ணம் என அழகிய பொன் எனப் பொருள் கொண்டது. அடுத்து அம்சுவள் நத்தின் எனப் பிரிந்து அழகிய பெரிய சங்கு எனப் பொருள் கொள்ளப்பட்டது. இதன் பொருளை எடுத்து நோக்கினால் ஐந்து நிறங்களில் ஆடையுடுத்தாள், பாம்புகள் எல்லாம் கண்டு நடுங்கும் கருடனின் வேகத்தைக்கொண்டவள், அழகிய பொன் கொண்டு செய்யப்பட்ட மேலாடையை அணிந்தவள், கடல் நீரில் தோன்றிய அழகிய பெரிய சங்கிலுண்டான முத்துகளினால் செய்யப்பட்ட ஒளி பொருந்திய மாலையை ஆபரணமாக அணிந்தவள் என இலங்காதேவியைக் கம்பன் சொல்நயம் மிக்க பாடல் மூலம் வர்ணித்திருப்பதை அறிய முடிகிறது.

சொல்லாட்சி

கவிபுனையும் கம்பரிடம் தமிழ்ச் சொற்கள் ஓடி வந்து எம்மையும்

கவிதையில் சேர்த்து விடு, சேர்த்து விடு என்று கெஞ்சுமாம். இவ்வாறு ஒரு நாட்டுப்புற வழக்கு உண்டு. கம்பரின் கவிதையில் சொற்சேர்க்கை உயர்ந்த இடத்தைப்பிடித்துள்ளது. இடத்திற்கும், சூழலுக்கும், காலத்திற்கும் தக்கவாறு சொற்கள் கவிதையில் அமைந்த விதம் படித்து இன்பம் அடைவதற்கு உரியது.

'கைவண்ணம்' என்னும் சொல்

கம்பர் வண்ணம் என்ற சொல்லை வேறு வேறு பொருள்களில் கையாண்டு ஒரு கவிதையைப் புனைந்துள்ளார். இச்சொல்லை வைத்தே பாதி இராமாயணக் கதையைக் கூறி முடித்து விடுவதாக அறிஞர்கள் கூறுவர். அப்பாடல் வருமாறு:

இவ்வண்ணம் நிகழ்ந்த வண்ணம் இனிஇந்த உலகுக் கெல்லாம்
உய்வண்ணம் அன்றி மற்றோர் துயர்வண்ணம் உறுவது உண்டோ
மைவண்ணத்து அரக்கி போரில் மழைவண்ணத்து அண்ண லேஉன்
கைவண்ணம் அங்குக் கண்டேன் கால்வண்ணம் இங்குக் கண்டேன்.

(பால, மிதிலை24.)

இராமனுடைய திருவடிபட்ட அளவில் கல்லாகக் கிடந்த அகலிகை உயிர்பெற்ற பெண்ணாக மாறுகிறாள். சாப விமோசனம் பெறுகிறாள். அதனைக்கண்ட விசுவாமித்திரமுனிவர் இராமனைப் புகழ்வதாக இந்தப்பாடல் அமைந்துள்ளது. "கரிய நிறத்தை உடைய இராமனே! இனி இந்த உலகிற்கு துன்பம் உண்டோ? நின் வில் ஆற்றலால் தாடகை என்ற அரக்கி மாண்டாள். உன் கைத்திறமையை அங்கு பார்த்தோம். உன் பாதம் பட்டவுடன் அகலிகை உயிர்பெற்று எழுந்தாள். உன் காலின் திறமையை இங்குப் பார்த்தோம்." என்று விசுவாமித்திரர் இராமனைப் புகழும் பாடலில் வண்ணம் என்ற ஒரு சொல் நிறம், திறம் (திறமை) என்னும் இரு பொருளில் திரும் திரும்ப வந்து கவிதையைச் சிறப்படையச் செய்துள்ளதைப் படித்து மகிழலாம்.

மையோ? மரகதமோ?

கம்பரே சொற்கள் கிடைக்காமல் தடுமாறிய இடம் உண்டு. இவ்வாறு சொன்னால் நம்ப முடிகிறதா? இராமன் அழகை கம்பர் வர்ணிக்கிறார். கவிதையால் வடிக்க இயலாத அழகு இராமனின் அழகு. இராமனின் அழகுக்குப் பல உவமைகளை வரிசையாகக் கூறுகிறார். ஏன்றாலும் அந்த அழகை வார்த்தைக்குள் கொண்டுவர முடியவில்லை. இறுதியில்

'ஐயோ' என்று கம்பர் மனம் தளருகிறார். பாடல்:

வெய்யோன்ஒளி தன்மேனியின்விரிசோதியின் மறையப்
பொய்யோஎனும் இடையாளொடும் இளையானொடும் போனான்
மையோமர கதமோமறிகடலோமழை முகிலோ
ஐயோஇவன் வடிவுஎன்பதோர்அழியாஅழகு உடையான். (1.)

கைகேயி சூழ்ச்சியாலும் வரத்தாலும் இராமன் வனவாசம் (காட்டு வாழ்க்கை) மேற்கொள்கிறான். அயோத்தியைவிட்டு நீங்கிக் கானகத் தினிடையே செல்லும் இராமனின் பேரழகைக் கம்பர் இப்பாடலில் வருணிக்கிறார். சூரியன் ஒளி இராமனின் உடல் ஒளியினால் மறைகிறது. அப்படிப்பட்ட சோதியை உடைய உடம்பினைக் கொண்டவன் இராமன். இவன் சீதையோடும் இலக்குவனோடும் காட்டின் இடையே நடந்து செல்கிறான். அவன் உடம்பின் அழகு புலவுரைக் கவர்கிறது. இராமனின் அழகினை 'மை' என்று கூறலாமா என்று நினைக்கிறார் புலவர். இல்லை, இல்லை அது மரகதக் கல்லுக்குத்தான் உவமை ஆகும் என்று எண்ணுகிறார். மீண்டும் ஐயம் ஏற்படுகிறது. மையும் இல்லை மரகதக்கல்லும் இல்லை, கடல் போன்ற நீலநிறத்தினை உடையவன் என்கிறார். அதிலும் நிறைவடையாது மழை முகில் போன்ற நிறத்தைஉடைய அழகன் என நினைக்கிறார். எந்த உவமையிலும் இவன் அழகைக் கூற முடியவில்லை . மனம் சோர்ந்து ஐயோ இவன் உருவம்தான் அழியாத அழகுடையதாக இருக்கிறது என்று கூறுகிறார். கம்பர் இராமன் அழகை வருணிக்கும் சொல்லாட்சி படித்து இன்புறத்தக்கது.

ஓசை நயம்

குறிப்பிட்ட சில எழுத்துகளைப் பயன்படுத்தும்போது, ஓசை நயம் தோன்றுகிறது. சான்றாக, மெல்லின எழுததுக்கள் மிகுந்து வரும் கவிதை மெல்லிய ஓசையைத் தரும்; மென்மையான சூழலை விளக்க இத்தகு எழுத்துகள் அமைந்த சொற்களை மிகுதியும் பயன்படுத்துவர். அதே போல் போர் முதலிய நிகழ்ச்சிகளை வருணிக்க வல்லெழுத்து வல்லோசை மிகுந்து, போரின் கடுமையை வெளிப்படுத்தும். இவ்வாறு சூழலுக்குத் தக்கவாறு ஓசை நயம் தோன்றக் கவி பாடுவதில் கம்பர் வல்லவர்.

வஞ்சியென நஞ்சமென வந்த வஞ்சமகள்

அழகிய உருவம் அமைந்த தோற்றத்துடன் சூர்ப்பணகை வருகிறாள்.

அரக்கி உருவத்தை மறைத்து வஞ்சனை உள்ளத்தோடு வருகிறாள். மிக அழகிய உருவம் அதே நேரத்தில் வஞ்சக உள்ளம்;. இதனைக் கம்பர் தமக்கே உரிய கவித்திறத்துடன் புனைந்துள்ளார்.

பஞ்சிஒளிர் விஞ்சுகுளிர் பல்லவம் அனுங்கச்
செஞ்செவிய கஞ்சம்நிகர் சீறடியள் ஆகி
அஞ்சொலிள மஞ்ஞைஎன அன்னம்என மின்னும்
வஞ்சிஎன நஞ்சம்என வஞ்சமகள் வந்தாள் (31.)

சூர்ப்பணகை நடந்து வருகிறாள். மின்னல்கொடி போல வருகிறாள். அன்னம்போல நடந்து வருகிறாள். இனிமையான சொல்லைப் பேசும் மயில்போல அசைந்து அசைந்து ஒயிலாக நடந்து வருகிறாள். சிவந்த தாமரை போன்ற பாதங்களை உடைய அவள் நடந்து வருவது போன்ற ஒரு கற்பனையை நம் கண்முன் இப்பாடல் அடிகளே உணர்த்தி விடுகின்றன. மீண்டும் ஒருமுறை இப்பாடலைப் படித்துப் பார்த்தால் கற்பனையில் நம் முன்னால் ஓர் அழகியப் பெண் ஒயிலாக அசைந்து நடந்து வருவது போன்ற ஒரு பாவனைத் தோன்றுவதை நாம் உணரலாம். இவ்வாறு கற்பனை நயத்துடன் ஓசை நயமிக்க சொற்களைக் கையாளுகின்றார்.

கற்பனை

கம்பராமாயண வருணனைகளுக்கு அடிப்படை கற்பனையே. கம்பர் கவிதையில் சுவை மெருகை ஊட்;டுவதில் கற்பனை முதன்மையான இடத்தைப் பெற்றுள்ளது. காவிய இன்பமே நின்று நிலவுவதற்குக் கம்பர், கற்பனையைச் சொன்ன விதமும் ஒரு சிலவற்றை இப்பகுதியில் ஆராயலாம்.

அனுமன் கண்ட காட்சி

இலங்கைக்குச் சென்ற அனுமன் சீதையைக் காண்கிறான். இரமனின் கணையாழியைச் சீதையிடம் (மோதிரம்) கொடுக்கிறான். சீதையிடம் இருந்து சூளாமணியைப் (ஓர் அணி) பெற்றுத் திரும்புகிறான். மீண்ட அனுமன் பிரிவுத்துயரால் வாடும் இராமனை அடைந்து "கண்டேன் சீதையை" என்று கூறுகிறான். இதனைக் கம்பர் கண்டனென் கற்பினுக்கு அணியைக் கண்களால் என்று பாடுவார்.

களிநடம் புரியக் கண்டேன்

அடுத்த பாட்டில் 'நங்கையைக் காணவில்லை' என்று கூறுவான். பின் எதனைத் தான் கண்டான் அனுமன்? கம்பரின் கற்பனை இதற்கு மறுமொழி தருகிறது.

விற்பெருந் தடந்தோள் வீரவீங்குநீர் இலங்கை வெற்பின்
நற்பெருந் தவத்த ளாய நங்கையைக் கண்டேன் அல்லேன்
இற்பிறப் பென்ப தொன்றும் இரும்பொறை என்ப தொன்றும்
கற்பெனும் பெயர தொன்றும்களிநடம் புரியக் கண்டேன் (29)

"வில்லினையும் பெரிய தோளினையும் உடைய வீரனே! நீர் மிக்க. கடல் சூழ்ந்த இலங்கை மலையில் காணவில்லை. மாறாக உயர்ந்த குடிப்பிறப்பு என்னும் பண்பும், சிறந்த பொறுமை என்னும் பண்பும், மகிழ்ச்சியால் கூத்தாடிக் கொண்டிருந்ததைத்தான் கண்டேன்" என்று அனுமன் கூறுவதாக இப்பாடல் புனையப்பட்டுள்ளது. சீதையைக் காணவில்லை. ஆனால் மானுட குலத்தின் உயர்ந்த பண்புகளை அவ்விடத்தில் கண்டேன் என்று கூறுவது கம்பரின் உயர்ந்த கற்பனையைக் காட்டுகின்றது.

அம்பின் செயல்

இராமனுக்கும் இராவணனுக்கும் போர் நடைபெறுகிறது. இறுதியில் இராம பாணம் (இராமனது அம்பு) இராவணன் மார்பைத் துளைத்துச் செல்கின்றது. இராவணன் மரணத்தைத் தழுவுகிறான். கணவன் மாண்டதைக் கண்டு மண்டோதரி புலம்புகிறாள். அம்பு இராவணனின் உடலைச் சல்லடைக் கண்களாக ஓர் இடம் விடாமல் துளைத்துச் சென்றுள்ளது. இதனைக் கம்பர் பாடும் அழகே தனி.

வெள்ளெருக்கம் சடைமுடியான் வெற்பெடுத்த திருமேனி மேலும் கீழும்
எள்ளிருக்கும் இடமின்றி உயிரிருக்கும் இடம்நாடி இழைத்த வாறோ
கள்ளிருக்கும் மலர்க்கூந்தல் சானகியை மனச்சிறையில் கரந்த காதல்
உள்ளிருக்கும் எனக்கருதி உடல்புகுந்து தடவியதோ ஒருவன் வாளி
(237.)

என அமையும் அப்பாடல்.

இராவணன் அம்புபட்டு வீழ்ந்து கிடக்கிறான். இராவனின் அம்பு இராவணன் உடல் முழுவதும் துளைத்துள்ளதை மண்டோதரி பார்க்கிறாள். சிவபெருமான் உறையும் மலையைப் கைகளால் எடுத்த வலிமை உடையது அவனது திருமேனி. அத்திருமேனியில் எள்

இருக்கக் கூட இடம் இல்லாமல் அம்பு துளைத்து உள்ளது. அம்பு இராவணன் உடலில் புகுந்து அவன் உயிர் இருக்கும் இடத்தை மட்டுமே தேடவில்லை. இராவணன் சீதையை மனச் சிறையில் வைத்து மறைத்த காதலைத் தேடித் தேடி அம்பு துளைத்து உள்ளதாம். சானகியைப் பற்றிய நினைவைக் கூட அம்பு விட்டு வைக்கவில்லையாம். கம்பர் கற்பனை, கவிதைச் சுவையின் இராவணன் உடல் முழுவதும் துளைத்ததைக் கம்பர் சீதையின் நினைவு எங்குள்ளது? எங்குள்ளது? என்று தேடித் தேடிச் சென்றதாகப் புனைந்துள்ளார்.

இவ்வாறு கற்பனை வளம் நிறைந்த எண்ணற்ற பாடல்கள் கம்பராமா யணத்தில் அமைந்துள்ளன. அவற்றைப் படித்துப் படித்து மகிழலாம்.

கம்பனில் காப்பிய வருணனை

முனைவர். **நா.மாலதி**
முனைவர் பட்ட ஆய்வாளர்.அவீ. வா. நி. திரு புட்பம் கல்லூரி (தன்னாட்சி) பூண்டி

காப்பியக் களங்களை வருணிக்கும்போது கம்பன் அடுக்கடுக்காகப் பாடல்களைப் பொழிகின்றார். உவமை, உருவகம், தற்குறிப்பேற்றம் முதலிய பொருளணிகளைப் பயன்படுத்தி காப்பியங்களை அவர் வருணித்துச் செல்லுகின்றார். இவற்றிற்கெல்லாம் முடிமணியாகக் கம்பன் உணர்ச்சிகளையும் மெய்ப்பாடுகளையும் அடுக்கடுக்காகக் கூறிக் காப்பியக்களத்தின் ஆழ்ந்த உணர்ச்சியைக் கேட்போர் மற்றும் கற்போர் நெஞ்சம் எளிதில் உணருமாறு புனைகின்றார். இத்தகைய இடங்களில் கம்பன் கற்பனையின் உச்ச நிலைக்கு நம்மை இட்டுச் செல்லுகின்றார் எனலாம்.

உவமை

கம்பன் உவமையை பயன்படுத்தும் போது அவருடைய தனித்திறமை நன்றாக விளங்குகின்றது. மரபு வழிப்பட்ட உவமைகளைத்தான் பல இடங்களிலும் அவர் பயன்படுத்துகின்றார். எனினும் அவற்றில் கம்பரின் தனித்தன்மை சிறந்து விளங்குகின்றது. இராமன் மிதிலை நகரில் உலா வருகின்றான். "சிவதனுசை முறித்துச் சீதையின் கரம் பற்றவிருக்கும் அச்சந்தரத் தோளினைக் காண வேண்டும்? என்று பெண்கள் தெருக்களில் மொய்க்கின்றனர். இக்காட்சியைக் கமபர்

மானினம் வருவ போன்றும், மயிலினம் திரிவ போன்றும்,
மீனினம் மிளிர வானில் மின்னினம் மிடைவ போன்றும்,
தேனினம் சிலம்பி யார்ப்பச் சிலம்பினம் புலம்பி ஏங்க,
பூநனை கூந்தல் மாந்தர் - பொம்மெனப் புகழ்ந்து மொய்த்தார்.

(பால, உலாவியற் படலம்-1)

என அழகுறப் புனைகின்றார். மானும், மயிலும், மீனும் மின்னும் பெண்களின் மருட்சிக்கும், சாயலுக்கும், விழிக்கும் இடைக்கும், புலவர்கள் முன்பே பயன்படுத்தியுள்ள உவமைகள் ஆகும். ஆனால் கம்பன் இவற்றை ஓரிடத்தில் அடுக்கி ஒருமையாக்கித் தருகின்றார். இராமனைக்காண மொய்க்கும் பெண்களின் செயலை முழுமையாகஉணர்ந்த கம்பன் இன்னும் பல உவமைகளை அடுக்கிக்

காண்பிக்கின்றார்.

உருவகம்

உவமைகளைப் போன்று உருவகங்களையும் கலைப்பண்பு வெளிப்பட கையாளுவதில் கம்பன் சிறந்து விளங்குகின்றார். மருத நிலக் காட்சியைக் கம்பன் மருதநில அரசி கொலு வீற்றிருப்பதாகப் புனையும் உருவகக் காட்சி கம்பரின் கற்பனை திறனுக்கு ஓர் எடுத்துகாட்டாகும்.

அருவப் பொருள்களைக் கலைப்பாங்குடன் உருவகப்படுத்திக் காட்டுவதில் கம்பருடைய ஆற்றலை ஆங்காங்குக் காண்கின்றோம். எடுத்துக்காட்டாகச் சீதையைக் கண்டு திரும்பிய அனுமன் இராமனிடம் அதனைக் கூறும்பொழுது,

விற்பெருந் தடந்தோள் வீரவீங்குநீர் இலங்கை வெற்பின்
நற்பெருந் தவத்த ளாய நங்கையைக் கண்டேன் அல்லேன்
இற்பிறப் பென்ப தொன்றும் இரும்பொறை என்ப தொன்றும்
கற்பெனும் பெயர தொன்றும்களிநடம் புரியக் கண்டேன்

(சுந்தர. திருவடி தொழுத ,29.)

என்று பேசுகின்றார்.

சீதையின் கற்பின் திறத்தையும் மாசு இன்றி அரக்கர் பதியிலே அல்லும் பகலும் தன் கணவனையே நினைத்து காத்திருக்கும் பிராட்டியின் பொறுமையையும் உயிருடைப் பொருள்களாக - உருவகித்து இராமன் முன் அவற்றைக் களிநடம் ஆடச் செய்கின்றார் கம்பன்.

தற்குறிப்பேற்றம்

காப்பிய நிகழ்ச்சிகளில் இயற்கையும் பங்கேற்பதைத் தற்குறிப்பேற்ற அணிகள் வாயிலாகக் கம்பன் படைக்கின்றார். ஒருணர்ச்சியின் ஆழத்தை நன்கு வலியுறுத்துவதற்காக, இதனை அடுக்கடுக்காகக் கம்பன் பயன்படுத்தியிருக்கின்றார். கைகேயின் சூழ்ச்சியால் தயரதன் சோர்ந்து உணர்விழந்து தரையில் கிடக்கின்றான். செயல் முற்றி மகிழ்ந்த கைகேயியோ உறங்குகின்றாள். ஆனால் தயரதனுக்கு அந்தப்புரத்திலே நிகழ்ந்த இக்கொடுமையை வெளியில் இருந்த யாரும் அறியவில்லை. இயற்கை இக்கொடுமையைக் கண்டு உள்ளம் நைந்து உருகுகின்றது. வீழ்ந்து கிடக்கும் மன்னனுக்காகப் பரிந்து உருகுகின்றது. இதனை தற்குறிப்பேற்ற அணிகளால் கம்பன் விளக்குகின்றார்.

"கைகேயின் செயல், கண்டு மைந்தர் முன் நிற்கவும் நாணி ஏங்குகின்றாள் கங்குல் நங்கை தயரதன் உற்ற துயர்கண்டு நெஞ்சம் கலங்கிக் காமர் துணைக் கரங்களால் தம் வயிற்றில் அடித்துக் கொண்டு புலம்புகின்றன கோழிகள் கயங்களிலும் மரங்களிலும் துள்ளி எழும் புட்கள் கேகயன் மகளை வைகின்றன. "இராமன் காடு புகுமுன் நாம் நாட்டினைக் கடப்போம் என எழுகின்றன யானைகள்".

துன்ப உணர்ச்சி அடுக்கடுக்காகப் பதினான்கு பாடல்களில் பொங்கி வழிகின்றது. கேட்போருடைய உள்ளம் இவ்வியற்கையின் வழியே சென்று, தயரதனைப் பரிவுடன் கண்டு, அவனுக்காக இரங்கத் தொடங்குகின்றது. இத்தகைய அரிய சித்திரங்களைத் தீட்டுவது கம்பருக்குக் கைவந்த கலையாகத் திகழ்கின்றது.

உணர்ச்சி

கதைமாந்தர்கள் அடையும் உணர்ச்சிகளின் வேறுபாட்டை சிறுசிறு சொற்களால் வருமாறு அமைக்கும் போக்குக் கம்பரிடம் காணப்படுகின்றது. அசோகவனத்தில் அரக்கியர் மத்தியில் சிறையிருக்கும் சீதையின் துயர நிலையை வருணிக்கத் தொடங்குகின்றார் கம்பன். உவமைகளின் மூலம் முதலில் விளக்கத் தொடங்குகிறார். அவை முழுமையாகச் சானகியின் துயரைக் காட்டவில்லையோ என்ற ஐயம் அவருக்குள் எழுகின்றது. சீதையுற்ற துன்ப உணர்ச்சிகளையே நம்முள் அடுக்கத் தொடங்குகின்றார்.

விழுதல், விம்முதல் மெய்யுற வெதும்புதல், வெருவல்,
எழுதல், ஏங்குதல், இரங்குதல், இராமனை எண்ணித்
தொழுதல், சோருதல், துளங்குதல், துயருழந்து உயிர்த்தல்,
அழுதல் அன்றி, மற்றவை ஒன்றும் செய்குவது அறியாள்

சுந்தரகாண்டம், காட்சிப்படலம் - 5

ஒன்றுக்கொன்று மேல் நோக்கி எழுகின்ற இவ்வுணர்ச்சி கோலங்கள் ஒன்று திரண்டு சீதையின் திக்கற்ற கதியைச் செவ்விதின் காட்டும் அடுக்குகளாக அமைந்து விடுகின்றன.

கம்பன் வினைமுற்றுகளை அடுக்கி ஆழ்ந்த சோகத்தையும் விரைவையும் புலப்படுத்துகின்றார்.

வீழ்ந்தார்;அயர்ந்தார்; புரண்டார்; 'விழி போயிற்று இன்று' என்றார்;
ஆழ்ந்தார் துன்பக் கடலுள்; 'ஐயா! ஐயா!' என்றார்;

'போழ்ந்தார் நெஞ்சை' என்றார்; 'பொன்னாடு அதனில் போய், நீ
வாழ்ந்தே இருப்பத் தரியேம்; வந்தேம்! வந்தேம்! இனியே'

(அயோத்தியா காண்டம் நகர் நீங்கு படலம் - 83)

கம்பன் ஒரே சொல்லைத் திரும்பத் திரும்ப மடக்கி வரும்படி அமைத்துக் காப்பியக் கதையைக் கேட்போர்! பயில்வோரை துன்பத்தில் மூழ்கச் செய்கின்றார்.

ஆடினர் அழுதனர்; அமுத ஏழ் இசை
பாடினர் அழுதனர்; பரிந்த கோதையர்
ஊடினர் அழுதனர்; உயிரின் அன்பரைக்
கூடினர் அழுதனர்; குழாம் குழாம் கொடே

(அயோத்தியா. நகர் நீங்கு - 207)

மெய்ப்பாட்டு உணர்ச்சி

சூடின மலர்க்கரம், சொல்லின் முன், செவி
கூடின; புருவங்கள் குனித்துக் கூத்து நின்று
ஆடின; உயிர்ப்பினோடு அழல் கொழுந்துகள்
ஓடின; உமிழ்ந்தன, உதிரம் கண்களே!

(அயோத்தியா, பள்ளிபடை- 66)

முடிவுரை

காப்பியக் கள வருணைனைகளை அமைக்கும் பொழுது கம்பன் உவமை, உருவகம், தற்குறிப்பேற்றம், உணர்வுடைச் சொற்கள் போன்றனவற்றை அடுக்கடுக்காகப் பொருத்தி வைத்துத் தாம் விரும்பும் உணர்ச்சியைத் தட்டி எழுப்புகின்றார். இவ்வாறு உவமை, உருவகம் முதலியவற்றை அடுக்கிக் கூறும் அரிய கலைத்திறம் தமிழ்ப் புலவர் பெருமக்களில் கம்பன் ஒருவரிடத்தில் மட்டுமே வீறுபெற்று விளங்குகின்றது எனில் அது வெறும்புகழுரை அன்று! என்பது அனைவராலும் ஒத்துக்கொள்ளக்கூடிய உண்மையாகும்.

கம்பனில் உத்தியியல்

முனைவர். தநாகம்மாள்

உதவிப்பேராசிரியர், அவினாசிலிங்கம் மனையியல் மற்றும் மகளிர் உயர்கல்வி நிறுவனம், கோவை.

உத்தி விளக்கம்

உத்தி எனும் சொல் பல்பொருள் நிலையினது. தமிழ்ப் பேரகராதி பல்வகை அடிச்சொல் நிலையில் அதற்குப் பல்வேறு வகைப்பொருள் நிலைகளைக் காட்டுகின்றது. 'உந்து' எனும் அடிப்படைச் சொல் தொடர்பில், ஆபரணத் தொங்கல், சீதேவி உருவம் பெரித்த தலையணி எனும் பொருண்மைகளில் அமைகின்றன. துத்தி என்னும் சொல்லடி நிலையில் பாம்பின் படப்பொறி, தேமல் ஆகியவை பொருளா கின்றன. உக்தி என்ற அடிப்படையில் பேச்சு எனும் பொருள் உணர்த்தப் படுகின்றது. வடமொழிச் சொல் மரபுத் தொடர்பில், சேர்க்கை, யுக்தி, (தந்திரம்) என்னும் முப்பத்திரண்டு வகை உத்திகள் போன்றவை சுட்டப்படுகின்றன. இதனைத் தமிழ்ச் சொல்லாகக் காட்டும் பொருள்நிலை அடிப்படை ஆய்வும் காணப்படுகின்றது. உ.மேன்மையானது, உயர்ந்தது, சிறந்தது எனப் பொருள்படுகின்றது. உகப்பு, உச்சி, உம்பர், உயரம், உன்னு, உன்னதம், உயர்வு எனப் பொருள்படப் பொருத்தமாக உகரம் உயரச் சுட்டுக்கு ஆகிவருதல் நினைக்கப்படுகி;னறது. பல பொருளும், வேறுபட்ட தோற்றமும் உடைய உத்தி எனும் இச்சொல், இலக்கியத்தோடும், இலக்கியத் திறனாய்வோடும் இணைந்து வரும் போது தனிப்பொருள் கொள்ளுகின்றது. அத்தகைய கம்பனில் உத்தியியல் பற்றி கம்பராமாயணம் கூறும் உத்திகளைப் பார்ப்போம்.

கம்பனில் யாப்பு உத்திகள்

செய்யுள் இலக்கியங்கள், யாப்பு வடிவினை இன்றியமையாக் கூறாகக் கொண்டு இலங்குகின்றன.

கவிஞனின் தனித்தன்மைக்கும், ஆற்றலுக்கும் ஏற்பவும், அவன் எடுத்துக் கொண்ட பாடுபொருளுக்கேற்பவும், தேர்ந்து கொண்டு வெளியீட்டுருவம், வடிவமைப்பு இவற்றிற்கேற்பவும் யாப்பு வடிவம் மாறியும் அமையலாம். கவிஞனின் சில தனிப்பட்ட எண்ண நிலைக்கு

ஏற்பவும், கோட்பாடுகளுக்கு ஏற்பவும் கூடப் புதுமையான உத்திப் பயன்பாடுகள் அமைதல் கூடும். பலவகையான சந்த அமைப்புகளைப் புதியன படைத்தலாகக் கம்பன் கையாளுதலும், உணர்வு, பொருள், காட்சி போன்ற நுவல் பொருளுக்கேற்ப அவன் சந்தமாற்றம் காட்டுவதும் இங்கு சுட்டத்தக்கன. ஒரே வகை யாப்பிலும் சீரமைப்பை மாற்றுவதாலும், குறிப்பிட்ட சொல்லை மீண்டும் மீண்டும் கையாளுவதாலும், ஒரு பண்பினவான ஒலிகளைப் பயிலச் செய்வதாலும் வகைமை ஏற்படுத்திப் படிக்க படிக்க இன்பந்தரும் ஓசை நயம் பொருந்தச் செய்கின்றான்.

இராவணன் தேர் ஏறு படலம் தரும் இராவணன் போர்க்கோலம் பூணும் காட்சி, இந்நிலையி;ல், இங்க சுட்டத்தக்கது. தனித்தனிப் பாடலில் தொடர்கள் முற்றுப்பெறும் வண்ணம் அவன் போர்கமோலம் கொள்வதைக்க காட்டாது. ஒரே தொடராகப் பல எச்சங்களை அடுக்கிப் பல பாடல்களில் விரியும் வண்ணம் (9646-9659) தருவதில் உத்திநிலை அமைவதாகக் கொள்ளலாம்.

உறங்கி எழுந்த கும்பகருணனது தோற்றத்தைக் கவிஞன் தருவதும் (7333-41) வீடணன் கும்பகருணனது தன்மையை இராமனுக்கு உணர்த்துவது (7387-7397) இத்தகு நெடுந்தொடர்களாக அமைவது, ஒத்த எண்ணத்தில் அணுகத்தக்கதாக உள்ளது. பல கருத்ததுகளின் தொகுதியை ஒரு கூற்றில் அமைக்கும்போது பல பாடலில் தொடர்ந்து கொண்டு போகும் நிலையைக் கவிஞன் கேட்பாடாகக் கொள்கின்றான் எனலாம், கவிஞனின் கூற்றிலும், பாத்திரப் பேச்சிலும் இக்குளகச் செய்யுள் அமையும் வாய்ப்பு இவற்றில் புலப்படுகின்றது. ஒவ்வொரு இடத்திலும் திருப்பம் உருவாகும் போதும், கவிஞன் இவ் அந்தாதியைப் பயன்படுத்திக்கொண்டு, யாப்பு மாற்றத்தில் வரும் விளைவை ஒத்த ஒரு மாற்றத்தை - ஆற்றொழுக்குப் போன்ற அதுவரை வந்த நிலை சிறிது வேறுவிதமாகத் திருப்பிச் செல்லுதலைக் காட்டுகின்றானோ எனவும் கருதலாம், மாயமானைப் பற்றிய கருத்து வேறுபாட்டில் சீதையின் சீற்றமும், இராமனின் செயல்பாடும் வருமிடம் இவ் எண்ணத்தைத் தோற்றுவிக்கின்றது.

'நாயக! நீயே பற்றி நல்கலைபோலும்' என்னா,
சேயரிக் குவளை முத்தம் சிந்துபு சீறிப் போனாள். (3303)

போனவள் புலவி நோக்கி புரவலன் பொலன்கொள் தாராய்
மான் இதுநானே பற்றி வல்லையின் வருவென் நன்றே (3304)

இதுபோன்ற ஆழ்நோக்கில், அந்தாதிக்குப் பல்வேறு பயன்பாடு கருதத்தக்கது ஆகலாம்.

கம்பனில் மடக்கு உத்திகள்

கம்பனில் மடக்கு உத்திகள் என்பது தனிப்பாடலில் அன்றித் தொடர் நிலை இலக்கியத்திலேயே காணப்படும் இவ்வுத்தி நிலைக்கு அப்பாற்பட்டு, எவ் இலக்கியவகையின் செய்யுட்களில் அமையும். கவிதை உத்திகள் பலவும் கம்பன் காப்பியத்திலும் அதிகம் இடம்பெறுகின்றன. அதாவது வாய்மொழிப் பாடலிலும், ஏட்டிலக்கியங்களிலும் காணப்பெறும் 'மடக்கு' இத்தகு உத்தி முறைகளும் ஒன்றாக அமைகின்றன. இவை ஓர் அடி அல்லது அடிப்பகுதி, தொடர்ந்து வரும் அடி அல்லது அடிகளில் மீண்டும் வரலாகவும், ஒரே அடியில் ஒரு சொல் அருகருகே மீண்டும் வரும் அடிக்கு இரட்டையாப்பாகவும் அமைய வாய்ப்பு காணப் படுகின்றது. மடக்கில் பலவகைகள் காணப்படுகின்றன. முழு அடி மடக்குதல் இல்லெனினும் அடிப்பகுதியோ, முதற்சீரோ மடக்குதல் என்னும் அமைப்பு உள்ளது. இவற்றில் நான்கடியும் ஒரே வகையாகத் தொடக்கம் கொள்ளுதல், பெரும்பாலும் ஒரு சீர் மடக்காகவே காணப் படுகின்றது. நான்கடியிலும் பொருள் தரலாகவும், பிரிப்புண்டு பொருள் தருதலாகவும் அமைவன இவை.

பல்லார் படை நின்றது பல் அணியால்
பல் ஆர் படை நின்றது பல் பிறைவெண்
பல்லார் படை நின்றது பல்லியம் உம்
பல் ஆர் படை நின்றது பல் படையே (8962)

பிற மடக்குகளிலும் இந்நான்கடி மடக்கின் பல்வகைகளே மிகுதியாக அமைவது தெரிகின்றது. இவைகள் செயல் தொடர்ச்சி, விரைவு, கருத்தழுத்தம், காட்சிச்செறிவு, ஓசையின்மை போன்றன கருதி இவ்வகை மடக்குப் பல கையாளப்படுமிடத்து, அவை உத்திச்சார்புடன் அணுகத் தக்கது.

மொழிநடை உத்திகள்

மொழிநடை உத்திகள் என்பது நமது வாழ்வுக்கு இன்றியமையாது அமையும் மொழி. எல்லாவகைக் கருத்துப் பரிமாற்றத்திற்கும் ஊடு பொருளாக அமைவது பெரும்பான்மையாகக் கருதப்படுகின்றது. மொழி ஒன்றாக அமையினும் பயன்பாட்டு நிலையில் அது பல்வேறு

வகையாகி ஒலிக்கு ஏற்பவும், சொல்லுக்கு ஏற்பவும், பொருளுக்கு ஏற்பவும், சூழலுக்கு ஏற்பவும், பயன்கொள்பவனுக், நோக்கத்திற்கு நடை வேறுபாடு காட்டுகின்றது. பொதுவான மொழிநடை ஒன்றாகவும், இது இலக்கியத்தில் வேறு விதமாகவும் அமைகின்றது. இலக்கியம் மொழிநடையிலும் மேற்சுட்டிய விதமாகப் பல்வகை நடை வேறுபாடுகள் அமையலாம். ஊரைநடை இலக்கியமும், செய்யுள் இலக்கியமும் அடிப்படையில் மிகுதியாக நடைவேறுபாடுகளாக அமைந்துள்ளது.

ஒலிநிலை உத்திகள்

ஒலிநிலை உத்திகள் என்பது ஒலிக்குறிப்புச் சொறகளும், இரட்டைக் கிளவிகளுமாகும். ஒலியடிப்படையில், உணர்வும், பொருளும் புலப்பட இவை ஆளப்படல் பற்றி, உத்தியாக அணுகத்தக்கன. ஒன்று உணர்வு வெளிப்பாடாக வரும் ஒலி, பொருளும் குறித்து நிற்பது. வாழ்வியலின் பேச்சு மொழி நடையினவாகவும் இது அமைகிறது.

‘சீசி’ என்று யாரும் எள்ள திகைப்பொழுது பழுவம் சேர்ந்தான்

590)

‘சீசி உற்றது’ எனத்தீயும் நெஞ்சினான் (7569)

வெறுப்பு, இழிவு, எள்ளல் போன்ற பல உணர்வு வெளிப்பாடுகள் தொனிக்கும் வண்ணம் இவ்வொலிக்குறிப்பு கையாளப்படுகிறது.

கம்பனின் சொல்நிலை உத்திகள்

கம்பன் காவியத்திலும் சொல்லுக்கு அடைகள் ஆளும் பாங்கில் இவ்விரு நிலைகளும் பொருந்துகின்றன. ஒரே அடைப்பயிற்சியின் உலகளாவிய காவியத்தன்மை, மாமலர், நெடுங்கண் மாதவி - இளங்கோ, கம்பனிடமும் பண்பும் அடைகளாக அமைகின்றன எனலாம். இயற்கையின் கூறான திங்களை, பெரும்பான்மைச் சூழலிலும், அதன் வெண்மைப்பண்பு சுட்டும் அடையோடே தருதலை இங்கு சான்றாகக் காட்டப்படுகின்றது.

“அழிவெண் திங்கள் (549, 550)

தனிவெண் திங்கள் (1888)

குளிர்வெண் திங்கள் (4888)

வெண்கதிர்த் திங்கள் (5963)

வெண் நிலவினால் (965)

வெண் நிற நிலவு (6521)

செவ்வி வெண்மதி (3346)

பால் உகுத்தாலென நிலவு (6523)

பால் ஒத்தது நிலவின் தோற்றம் (4890)

கதிரவனின் பல்வகைக் காட்சியைத் தரும் கவிஞன் கூற்றினை இங்கு இயைபு பற்றிச் சான்றாக எடுத்துக்காட்டப்படுகின்றது.

அண்ணல் வெங்கதிரவன் (2274)

வெஞ்சுடர்க் கதிரவன் (8357)

எறி கதிரோன் (1917)

நிறை கதிர்க் கடவுள் (455)

வெங்கதிர்க் கடவுள் (3749)

காய் கதிர்க் கடவுள் (மிகை.482)

செஞ்சுடர்க் கடவுள் (1236)

வயங்கு வெய்யோன் (890)

கதிர் வெய்யோன் (3570)

செய்ய வெய்யோன் (629)

செங்கதிர்ச் செல்வன் (1973, 3641)

தேரில் தோன்றும் வெஞ்சுடர்ச் செல்வன் (1977)

எல் ஆழித் தேர் இரவி (633)

ஒற்றை ஆழிக் கதிர் (1229)

இவை எல்லாம் கவிஞனின் தனித்தன்மைகளைப் புலப்படுத்தும் உத்தியணுகு முறையினவாகக் கருதப்படுகின்றது.

கம்பனின் அணி உத்திகள்

சமுதாயத்தின் இத்தகு பல்வகைக் காட்சிகளை உவமையிலீக்கும் கவிஞன், இயற்கை உவமைகளையும் வாழ்வில் காணப்பெறும்

இயல்பான செயலைக் காட்டும் உவமைகளையும் அழகுணர்வுடனும், கருத்துவிளக்கப் பாங்குடனும் கையாளுகின்றார். இலங்கையின் அழகிய கட்டடங்களை இளவலுக்குக் காட்டும் இராமன், பசுமைநிறப் பின்புலத்தில் அமைந்த செய்யத மாடத்தின் வெள்ளி மனையினை பொய்கைக் காட்சிக்கு ஒப்பாக்கி காட்டுகிறான். பசிய இலைகள் படர்ந்த பொய்கையில் மலர்ந்த பல செந்தாமரைகளில் அன்னப்பறவை வீற்றிருந்த காட்சியாக இது அமைகின்றது.

மாசு அடை பரந்த மான மரகதத்தலத்து வைத்த
காசு அடை சமைந்த மாடம் கதிர் நிறக் கற்றை சுற்ற
ஆசு அறக் குயின்ற வெள்ளி அகல் மனை அன்னம் ஆக
பாசடைப் பொய்கை பூத்த பங்கயம் நிகர்ப்ப பாராய் (6845)

பச்சைப் பசும்புல் வளர்ந்து பரந்த தளம் பச்சை இலைகள் மறைந்த பொய்கைப் பரப்பாகின்றது. செம்மணிகள் பதித்து இயற்றப்பட்ட மாடங்கள் செவ்வொளி வீசி செந்தாமரை மலர்க்கூட்டமாகப் பொலிகின்றன. குற்றமற்றதாகச் செய்யப்பட்ட வெள்ளியிலான பரப்புடைய வீடுகள். அச்செம்மையிடையே ஒளிர்ந்து அன்னமாக தோற்றம் அளிக்கிறது.

மூங்கில்கள் உரசுவதால் எழும் தீ மூங்கிற்காடு முழுவதனையே அழிக்கக் கூடிய இயற்கை பற்றிய மரபு உண்மையை அரக்கர் குலத்தை அழிக்கும்" தன்மையினளான சூர்ப்பணகையில் உவமிக்கின்றான் கவிஞன்.

வான்தொடர் மூங்கில்தந்த வயங்கு வெந்தீ இது என்ன
தான்தொடர் குலத்தைஎல்லாம் தொலைக்குமா சமைத்துநின்றாள்
(2940)

கரன்வதைப் படலத்தில், கரனுக்கு இராமனைச் சுட்டிக் காட்டும் சூழலில் அவளை இவ்வாறு தரும் கவிஞன் வரும் பேரழிவைக் குறிப்பாக முன் சுட்டப்படுகிறான். உடனடி நிகழ்வும், இராவணதியரின் அழிவான இறுதி நிகழ்வும் இங்கு இவ்வுவமைப் பொருத்தத்தக்கதாலேயே உணர்த்தப்பட்டு அமைந்துள்ளது.

முடிவுரை

காப்பியத்திற்கு அழகு சேர்க்கும் உத்திகளாக அமையும் உத்தி விளக்கம், கம்பனின் யாப்பு உத்திகள், மடக்கு உத்திகள், கம்பனின்

மொழிநடை உத்தி, ஒலிநிலை உத்திகள், சொல்நிலை உத்திகள், அணி உத்திகள் ஆகியவை உத்திகளாக அமைகின்றது. வெறும் அலங்காரமாக மட்டுமே ஆளப்படாது. சில நோக்கத்தை நிறைவேற்றத்தக்கதாகவும் விளைவு கருதியும் பயன் தந்தும் உத்தியாகக் கையாளப்படுகின்றது.

காப்பிய நிகழ்ச்சிகளில் இயற்கைப் பொருட்கள் ஈடுபடுவதால் பாடுவது சம்பந்தம் கொள்கையாகும். இயற்கை ஓர் உத்தியாகக் கம்பன் காவியத்தில் கையாளப்பட்டுள்ளது. இயற்கைப் புனைவு வழி அறங்களைக் கூறும் வகையிலும் இயற்கைப் புனைவோடு, உத்திகளின் வருணனையை எனப் பலநிலைகளில் புனைந்துள்ளார். முழுமையாகக் கம்பனது காவியத்தைப் பார்த்தாலும் கட்டுரையின் மூலமாக கம்பனின் உத்தியியல் செய்திகளாக இங்கு தரப்பட்டு பதம் காணும் பாங்கில் அமைந்துள்ளன.

கம்பனில் உத்தியாகும் கடல்

முனைவர். **என். முத்துவிஜயன்**
போடிநாயக்கனூர்

சொல்லும் கருத்தைச் சுவைபடச்சொல்லுதலும், சுருங்கச் சொல்லுதலும் மனங்கொள்ளுமாறுச் சொல்லுதலும் உத்தி எனப்படும். இவ்வுத்தியைப் புலப்பாட்டுநெறியின் ஒரு கூறாய்க் கொள்ளலாம்.

கடலை நினைத்தால் திருப்பாற்கடல் நினைவிற்கு வருகின்றது. திருப்பாற்கடல் திருமாலுடன் தொடர்புஉடையது. திருமாலின் அவதாரமாய்ப் போற்றப்படுகின்றவர் இராமபிரான் ஆவார். இராம பிரானோடு கடலைப் பொருத்திக் காணும் உத்தியைப்பயன்படுத்தி கருத்துகளைப் புலப்படுத்தும் நிலையினைக் கம்பராமாயண யுத்த காண்டத்தின் கடல் காண்படலம்மூலம் இக்கட்டுரை விளக்குகின்றது.

இந்து வன்ன நுதற்பேதையிருந்தாள் நீங்கர் விடகொடியேன்
தந்த பாவை தவப்பாவை தனிமை தகவோ வெனத்தளர்ந்து
சிந்து கின்ற நறுந்தரளக் கண்ணீர் ததும்பித் திரைத் தெழுந்து
வந்து வள்ளல் மலர்த்தாளின் வீழ்வ தேய்க்கு மணியாழி!

யுத்தகாண்டம், கடல்காண்படலம், பா.8

இராமபிரான் கால்களில் கடல்நீர் அலைவீசி விழுகின்றது. இது எப்படி இருக்கிறதாம்? கடல் பெற்ற முத்து கடலில் தனித்;துள்ளது. அது போலச் சீதையும்; இராமபிரானைப்பிரிந்து தனித்து நீங்காத்துயரில் உள்ளாள். இத்தனிமைத் தகுமோ என வருந்தி பிரானின் தாமரைத் தாள்களில் வீழ்ந்து தனிமையை நீக்க வேண்டும் எனக் கேட்பது போலிருந்தது.

இப்பாடல் சீதையின் தனிமைக்காகக் கடல் நீரும் முத்தும் வருந்துவது போன்ற உத்தி தோன்றப் பாடப்பட்டுள்ளது. கடல்நீர் சீதையின் தாய் எனவும், அதில் தோன்றிய முத்து சீதை எனவும் கருதும் உத்தியும் புலப்படுவதாயுங் கொள்ளலாம்.

திருமாலின் மனைவி இலக்குமி திருப்பாற் கடலில் தோன்றியவள் ஆவாள். இவள் சீதையின் அமிசமாகப் போற்றப்படுகின்றாள். உப்புநீர்க் கடல், கடல் என்ற ஒப்புமையால் பாற்கடலோடு ஒப்பிடும் உத்தியும் புலப்படுகின்றது.

சீதை மாற்றான் (இராவணன்) கையில் சிக்கித் துன்புறுவது போல, உயர்ந்த முத்து, பொருந்தாத் தன்மையுடன் விளங்கும் கடலில் துன்புறுகின்றது என்ற உத்தியும் புலப்படும். இதனால் சீதையும் முத்தும் இருக்க வேண்டிய இடத்தில் இல்லை என்பதும் அப்படி இருந்தால் தான் போற்றப்படும் என்னும் கருத்தும் புலப்படும்.

பள்ளி யரவிற் பேருலகம் பசுங்கல் லாகப்பனிக் கற்றை
துள்ளி நறுமென் புனல்தெளிப்பத் தூநீர்க் குழவிமுறை சுழற்றி
வெள்ளி வண்ண நுரைக்கலவை வெதும்பு மண்ணல் திருமேனி
யள்ளி யப்பத் திரைக்கரத்தா லரைப்ப தேய்க்கு மணியாழி!

யுத்தகாண்டம், கடல்காண்படலம், பா.9.

அழகிய கடலானது திருமாலின் படுக்கையாகிய ஆதிசேஷன் தலைமீது தங்கிய உலகு போன்றது. இது கருங்கல்லாய் (அம்மி) உளது. பனித்தொகுதித் துளியாகிய நறுமண மெல்லியநீரைக் (காற்று) தெளிக்கின்றது. தூய நீராகியக்குழவியை (அரைக்கும் முறையில்) மடக்கி மடக்கி, வெண்நிறங்கொண்ட நுரையாகிய கலவைச் சாந்தினைச் (சீதையின் பிரிவால்) வெப்பம் அடைந்த இராமனின் திருமேனியில் (வெப்பந்தணிய) அள்ளி அப்பும் விதத்தில் திரையாகிய கையால் அரைப்பது போலிருக்கும்.

கடலைச் சந்தனம் அரைப்பவனாகவும், கடல் இருக்கின்ற தரையை அம்மிக்கல்லாகவும் பனிக்கற்றைத் துளியைத் தெளிந்த நீராகவும் மடங்கிய கடல் நீரை அரைக்கும் குழவியாகவும், நுரையைச் சந்தனமாகவும் அலையைக் கையாகவும் கற்பிக்கும் உத்தி தோன்ற பாடப்பட்டுள்ளது.

மாந்தர் மேனியின் வெப்பந்தணிக்க சந்தனத்தை அப்பும் வழக்கம் இதனாற் புலப்படும்.

கொங்கைக் குயிலைத் துயர்நீக்க விமையோர்க் குற்ற குறைமுற்ற
வெங்கைச் சிலையன் தூணியினன் விடாத முனிவின் மேற்செல்லுங்
கங்கைத் திருநா டுடையானைக் கண்டு நெஞ்சங் களிகூர!
அங்கைத் திரள்க ளெடுத்தோடியார்ப்ப தேய்க்கு மணியாழி!

யுத்தகாண்டம், கடல்காண்படலம், பா.10.

அலை எழும் கடலானது, கொங்கைகளை உடைய குயில் போன்ற சீதையின் துயரத்தைப் போக்கவும் தேவர்கட்கு (அரக்கரால்) நேர்ந்துள்ள

குறையை ஒழிக்கவும், விருப்பமான கையிலே வில்லை ஏந்தி நிற்பவனும் (முதுகில்) அம்பறாத் துணியைக் கட்டிக் கொண்டுப்பவனுமாகிய நீங்காத சீற்றத்துடன் எதிரிகளின் மீது படையெடுத்துச் செல்லுகின்ற கங்கைத் திருநாட்டை உடையவனான இராமபிரானைப் பார்த்து மனத்தில் மகிழ்வு தோன்ற (தனது) அழகிய கைகளைத் தூக்கி ஓடியவாறு ஆரவாரம் செய்வது போலிருக்கும். இராமனைக் கண்ட கடலின் மகிழ்ச்சி புலப்படும் உத்தி தோன்ற இப்பாடல் புனையப்பட்டுள்ளது.

பெரியோர் விருந்தினராக தம்வீட்டிற்கு வருவதைத் தொலைவில் கண்டோர் தமது கைகளைத் தூக்கி மகிழ்ந்து ஆரவாரஞ் செய்து கொண்டு அன்னாரை எதிர்கொள்வர். இத்தன்மையினைப் புலப்படுத்த கடல் இங்கு உத்திப்பொருளாய்க் கையாளப்பட்டுள்ளது.

குயில் போன்ற சீதை எனக் காரணம், குயிலின் குரல் இனிமையானது; மென்மையானது. அது போலச் சீதையும் இனிய குணங்களைப் பெற்ற மென்மையானவள் என்பதாகக் கொள்ளலாம்.

கம்பனின் உத்தி, கடலைச் சிறப்பிப்பதன் மூலம் திருப்பாற்கடலைச் சிறப்பிக்கின்றது. இராமபிரானையும் சீதாப்பிராட்டியையும் சிறப்பிப்பது போலத் திருமாலையும் இலக்குமியையும் சிறப்பிக்கின்றது. இதன் மூலம் கம்பராமாயண காப்பியக் கோட்பாட்டு உத்தியான வைணவத்தையும் சிறப்பிக்கின்றது எனலாம்.

கம்பனது உவமைகளில் சில துளிகள்

முனைவர். அன்பு ஜெயா
சிட்னி, ஆஸ்திரேலியா

தமிழ் மொழியின் பல சிறப்புகளில் ஒன்று அச்சுரங்கத்தில் புதைந்து கிடக்கும் வளம். அவை ஓர் எழுத்தாளனின் சிந்தனைக்கு அள்ள அள்ளக் குறையாமல் கிடைக்கும் செல்வங்கள். அச்செல்வங்களைப் பெரு மளவில் தான்பருகி நாம் வாழ்நாள் முழுவதும் பருகுவற்கு நமக்கும் தந்தவன் கம்பன் என்றால் அது மிகையாகாது. அச்சுரங்கத்திலிருந்து அவன் வெளிக்கொணர்ந்த செல்வங்கள் கணக்கிலடங்கா. அவற்றின் சில துளிகளாக அவன் கையாண்ட ஒரு சில உவமைகளையும் ஒப்பீடு களையும் ஆராய்வது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

அயோத்திமாநகரின் மதில்

மேவஅரும் உணர்வு முடிவுஇலாமையினால் வேதமும்ஒக்கும் (101)

அயோத்திமாநகரின் மதில் எங்கு முடிகின்றது என்பதே தெரியாதா தலால் அது வேதத்தைப் போன்றது; வானுயர்ந்து மேலுல கத்தை எட்டுவதால் தேவர்களைப் போன்றது; வலிமைமிக்க பல எந்திரங் களைத் தன்னுள் மறைத்து வைத்திருந்து எதிரியின் வலிமையை அடக்குவதால் பஞ்சேந்திரியங்களையும் அடக்குகின்ற முனிவரைப் போன்றது; காத்தல் தொழில் புரிதலால் துர்க்காதேவியைப் போன்றது; சூலாயுதத்தை உடையதாதலால் காளி தேவியைப்போன்றது. எவராலும் அடையக்கூடாத தன்மை உடையதாதலால் கடவுளைப்போன்றது என்று அயோத்தியின்மதிலுக்குப் பல உவமைகளைப்படைக்கின்றான் கம்பன்.

வேள்வி காத்த இராமலக்குமணர்

எண்ணுதற்கு,ஆக்க, அரிது......
கண்ணினைக் காக்கின்ற இமையின் காத்தனர் (433)

கண்களைக் காக்கின்ற இமைகள்போல இராமலக்குமணர் கௌசிக முனிவரின் ஆசிரமத்தை நான்கு திக்குகளிலும் இராட்சதர்களின் தொல்லைகளிலிருந்து காத்தனர். அதில் இராமன் பெரிய மேல் இமை போலவும், இலக்குமணன் சிறிய கீழ் இமை போலவும் கண்ணை

இமைகாப்பதுபோலக் காத்தனர். மேல் இமை எப்போபோதும் அசைந்துகொண்டிருப்பது, அதுபோல இராமன் ஆசிரமத்தைச் சுற்றிவந்து காவல் புரிந்தான். கீழ் இமை அசையாமல் இருப்பது, அதுபோல இலக்குமணன் வாயிலில் அசையாமல் நின்றபடி காவல் புரிந்தான். அதுமட்டுமின்றி, அவ்வப்போது மேல் இமை கீழ் இமையைத் தொட்டுவிட்டுப்போவதைப் போல, இராமன் ஆசிரமத்தைச் சுற்றி வருகையில்வாயிலில் நிற்கும் தம்பியைத் தொட்டு விழிப்புடன் இருக்கும்படி கூறிக்கொண்டிருந்தான் என்று மூத்தவனானஇராமனுக்குப் பெரிய மேல் இமையையும், இளையவனான இலக்குமணனுக்கு சிறிய கீழ் இமையையும் கம்பன் உவமைகளாகக்காட்டுவது அவன் கவித் திறத்துக்குச் சான்று பகர்கின்றது.

வாளுடை உழவன்

தாளுடை வரிசிலை...... வாளுடை உழவன் ஓர்
மன்னன்பால் வைத்தான் (679)

உழுகின்ற கொழுமுகத்தின், ...திரு வெளிப்பட்டென .
......பெண் அரசி தோன்றினாள். (682)

பார்வதிதேவியை அவமதித்து யாகத்தைநடத்தியதால்தட்சன் மீது சினம் கொண்டார் சிவபெருமான். யாகாக்கினியை அழித்து யாகம் நடத்த உதவியாக இருந்த தேவர்களையும் விரட்டிய பின்னரே சினம் தணிந்தார் சிவபெருமான். சினம் தணிந்த பின்னும் சிவன் வில்லைக் கையில் வைத்திருந்ததைக் கண்ட தேவர்கள் எங்கே அவர்தங்களை அழித்துவிடுவாரோ என்று அஞ்சினர். அதைக் கண்ணுற்ற சிவன் அந்த சிவதனுசுவை தன்னிடம் வைத்திராமல் சனகனது முன்னோர் ஒருவனிடம் கொடுத்தார். அவ்வரசன் வாளாயுதத்தைக் கொண்டு போர்க்களத்தில் உழுபவனாதலால் அவனை ஏர் உழுபவனுடன் ஒப்பிட்டு “வாளுடை உழவன்” என்றான் கம்பன். வேள்வி செய்வதன் பொருட்டு நிலத்தை ஏர் கொண்டு உழுகையில் அதன் கொழுமுகத்தில் சீதை தோன்றினாள். இவ்வாறு உழுகின்றபோது சீதை பிறக்கப் போகின்றாள் என்பதை மனத்தில் கொண்டுதான்சனகனின்குலத்தில் வந்த அம்மன்னனையும் “உழவன்” என்று கம்பன் குறித்திருப்பானோ?!

சீதையின் தோற்றம்

“குணங்களை என் கூறுவது?.. கணங்குழையாள்

எழுந்ததற்பின்......பொலிவு இழந்த ஆறு ஒத்தார்,......' (683)

வானத்திலிருந்து கங்கை பூமிக்கு இறங்கி வந்ததனால் பூமியில் இருந்த மற்ற நதிகளெல்லாம் பொலிவிழந்து போயின. அதுபோல, சீதை பூமியிலிருந்து வெளிப்பட்ட பிறகு இங்குள்ள மங்கையர் யாவரும் பொலிவிழந்து காணப்பட்டனர் என்று சீதையை கங்கைக்கும் மற்ற மங்கையரை பூமியில் ஓடுகின்ற மற்ற நதிகளுக்கும் ஒப்பிடுகின்றான் கம்பன்.

இராமன் சீதையைக் கண்டு களித்தல்

அன்னவளை,'அல்லள்' என,'ஆம்' என,அயிர்பான்,
---ஆண்டு இன் அமிழ்துஎழ, களி கொள் இந்திரனைஒத்தான் .(1146)

திருமண மண்டபத்திற்குள் நுழைந்த அமிர்தமயமானசீதையைக் கண்ட கருநிறத்தையுடைய இராமன், இவள் கன்னிமாடத்தின் மேலே முன்பு தான் கண்ட அம்மங்கையாய் இருக்கமாட்டாளோ என்று சற்றுச் சந்தேகம் கொள்கிறான். பிறகு அவளேதான் என்று சந்தேகம் நீங்கிய பின், அதனாலுண்டான மகிழ்ச்சி, பாற்கடலைக்கடையும்போது உண்டான அமிழ்தினைக் கண்டு தேவேந்திரன் கொண்ட மகிழ்ச்சியை ஒத்திருந்தது. இங்கே, இராமனுக்கு இந்திரன் கருமை நிறத்தாலும், அரக்கரை அழிக்க முயலுதலாலும் உவமையாகக்கூறப்பட்டது; சீதைக்கு அமிர்தம் யாவராலும் விரும்பப்படுவதாலும், முன் பாற்கடலில் தோன்றியதாலும் உவமையாகக்கூறப்பட்டது.

திருமண மண்டபம்

"புயல் உள, மின் உள,...மயன் முதல் திருத்திய...மண்டபம்...... அயன்... திருத்திய அண்டம் ஒத்ததே." (1204) சீதாவிற்கும் இராமனுக்கும் நடக்க இருக்கும் திருமணத்திற்காக மயன் என்னும் தச்சனால் மண்டபம் அமைக்கப்பட்டிருந்தது. அம்மண்டபம் மேகங்களையும் மின்னல்களையும் நட்சத்திரங்களையும், விண்மீன்களையும், சூரிய சந்திரர்களையும் உடையதாய் பிரமதேவனால் அழகாகப் படைக்கப்பட்ட அண்டகோளத்தை ஒத்திருந்தது என்று கூறுகிறான் கம்பன். இங்கே, மண்டபத்தில் கைம்மாறு கருதாமல் கொடுக்கின்ற ஆடவர் பலர் உள்ளனர் அவர்களை மேகங்களுக்கும்; மெல்லிய உடலைக் கொண்ட மகளிர் பலர் உள்ளனர் அவர்களை மின்னல்களுக்கும்; முக்கியமான அரசர்களெல்லாம் வந்திருந்தனர் அவர்களை நட்சத்திரங்களுக்கும்,

அவ்வரசர்களுக்கு ஏவல் செய்ய அவர்களுடன் வந்துள்ளவர்களை விண்மீன்களுக்கும், அங்கு வந்துள்ள தசரதனையும் சனகனையும் முறையே சூரிய சந்திர மண்டலங்களுக்கும் ஒப்பிடுகின்றான் கம்பன்.

நிலவின் தோற்றம்

வந்தனன் இராகவன்தூதன், வாழ்ந்தனன் எந்தையே இந்திரன் 4887)

கற்றைவெண்கவரிபோல்கடலின்வெண் திரை (4888)

தெரிந்து ஒளிர் திங்கள்வெண்குடத்தினால் (4889)

எண்ணுடை அனுமன்மேல் இழிந்த பூமழை......
விண்ணிடைத் தொத்தின...... (4891)

சீதை இருக்குமிடமான இலங்கைக்கு வந்து சேர்ந்து விட்டான் அனுமன் என்பதை அறிந்த இந்திரன், இனி அரக்கர்கள் விரைவில் அழிந்துவிடுவார்கள் என்று நம்பிக்கை கொள்கிறான். அந்த உற்சாகத்தினால் முன்பு அடங்கி இருந்தது போல் இல்லாமல், தனக்குரிய கிழக்குத் திசையிலிருந்து வெளியே புறப்பட்டான். தன் தலைவனான இந்திரன் இனிமேல் காப்பாற்றப்படுவான் என்று எண்ணி சந்திரனும் கீழ்வானில் தோன்றுகின்றான்.

இக்காட்சி இந்திரனின் மகிழ்ச்சியை வெளிப்படுத்துவதுபோலச் சந்திரன் அவனது வெண்கொற்றக்குடைபோலவும்,நிலவின்ஒளியில் கடலின் வெண்ணிறமான அலைகளின் அசைவு வெண்சாமரங்கள் வீசுவதுபோல உள்ளது என்றும், சந்திரமண்டலமான வெள்ளிக்குடத்தால் வானம் பாற்கடலின் பாலை அள்ளி மேலேயிருந்து சொரிய அது வழிந்தோடி எங்கும் பரவுவதுபோல வெண்ணிறமான நிலவு எங்கும் பரந்தது என்றும் வானவர்கள் அனுமனை வாழ்த்தி வானிலிருந்து தூவுகின்ற பூக்களெல்லாம் இராவணனுக்குப் பயந்து பூமியின் மீது விழாமலும், திரும்ப மேலே செல்ல முடியாமலும் நடுவானத்திலேயே நிற்பன போல நட்சத்திரக்கூட்டங்கள் நடுவானில் ஒளிவிட்டுக்கொண்டிருக்கின்றன என்றும் இப்பாடல்களில் பல உவமைகளைக் கையாள்கின்றான் கம்பன்.

கம்பனில் உருவப்படுத்தும்

முனைவர். **ஔவை இரா. நிர்மலா**
தமிழ் இணைப்பேராசிரியர் மற்றும் துறைத்தலைவர்.
அவ்வையார் அரசு மகளிர் கல்லூரி, காரைக்கால்

கவிஞர்கள் அஃறிணைப் பொருட்களுக்கு உயர்திணை உருவம் கொடுத்துத் தொடர் அமைப்பில் உயர்திணைக்குரிய விகுதிகளையும் சேர்த்துப் பயன்படுத்துவதை ஓர் உத்தியாகக் கையாளுகின்றனர். இதனை உருவப்படுத்தம் (Personification) என்று கூறுவர். இவ் உத்தியைக் கம்பர் தம் காப்பியத்தில் பயன்படுத்தியிருக்கும் தன்மையை ஆய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

ஆண் உரு

வலிமையுடைய இயற்கைப் பொருட்கள் பலவற்றை ஆண் உருவாகக் கருதுதல் தொன்றுதொட்டு நிலவிவரும் ஒரு செயலாகும்.

ஞாயிறு

ஞாயிறைக் கதிரவன், பகலவன், சூரியன் என்று ஆண்பாற் விகுதியுடைய பெயர்ச்சொற்களால் வழங்குவதுடன் ஆணாக உருவப் படுத்துதல் தமிழ் மரபாகும். இதனைக் கம்பரும் பல இடங்களில் பின்பற்றுகிறார்.

அப்புநீர் ஆடுவான்போல் அருக்கனும் அத்தம் சேர்ந்தான்
(யுத்த. ஒற்றுக்கேள்வி 18)

உருளுறு தேரவன் உதயம் எய்தினான்
(யுத்த. வீடணன் அடைக்கலப் படலம் 23)

முதலான தொடர்கள் ஞாயிறை ஆணாகச் சித்திரிக்கின்றன.

ஞாயிற்றின் தோற்றத்தைக் கவிஞர்கள் சித்திரிக்கும்போது அதில் தமது கற்பனையையும் கலந்து தற்குறிப்பேற்றம் என்னும் அணியழகுடன் விவரித்தல் இயல்பு. அவ்வாறே கம்பரும்,

இன்னதுஓர் தன்மைத்து ஆம்என்று எட்டியும் பார்க்க அஞ்சி
பொன்மதில் புறத்து நாளும் போகின்றான் போர் மேற்கொண்டு
மன்னவர்க்கு அரசன் வந்தான் வலியமால் என்று தானும்
தொல்நகர் காண்பான் போல் கதிரவன் தோற்றம் செய்தான்

(யுத்த. ஒற்றுக்கேள்விப் படலம் 90)

என்னும் பாடலில் ஞாயிற்றின் தோற்றத்தைத் தற்குறிப்பேற்றமாகக் கூறுகையில் ஒரு நிகழ்வைக் காணவந்த ஆடவனாக வருணிக்கிறார்.

நீலவல் லிருள் நீங்கலும் நீங்குறும்
மூல மில்கன வின்திரு முற்றுற
ஏலும் நல்வினை துய்ப்பவர்க்கு ஈறுசெல்
காலம் என்ன கதிரவன் தோன்றினான் (அயோ. திருவடி சூட்டு 18)

என்னும் பகுதியிலும் ஞாயிறு ஆடவனாக உருவப்படுத்தப்படுகிறது.

மாலைக்காலத்தில் ஞாயிறு கடலில் மறையும் காட்சி அனைவரையும் இன்புறுத்தும் நிகழ்வாகும். இக்காட்சியைக் கண்ணுறும் கவிஞர்கள் ஞாயிறு கடலில் குளிப்பதாகக் கற்பனை செய்தல் உண்டு. கம்பரும் விசுவாமித்திரன், இராமன், இலக்குவன் மூவரும் சரஸ்வதி நதியை அடைந்தபோது ஞாயிறு மறைந்த காட்சியை,

நதிக்கு வந்தவர் எய்தலும் அருணன்தன் நயனக்
கதிக்கு முந்துறு கலினமான் தேரொடும் கதிரோன்
உதிக்கும் காலையில் தண்மை செய்வான் தனதுருவில்
கொதிக்கும் வெம்மையை ஆற்றுவான்போல் கடல்குளித்தான்

(பால. அகலிகைப் படலம் 2)

என்று வருணிக்கிறார்.

பாலகாண்டத்தில் இராமனைக் கண்டு காதலிக்கும் சீதை அவனை நினைத்துத் தனிமையில் உருகுகிறாள். அவளைக் காமத்தீ வாட்டு கிறது. அப்பொழுது மாலைக்காலம் தோன்ற ஞாயிறு மறைகிறது. இக் காட்சியை விளக்கவந்த கம்பர் சீதைக்கு ஏற்பட்ட காமத்தீயின் வெப்பம் தாங்க இயலாத காரணத்தால் கடலில் ஞாயிறு மறைந்ததாகக் கற்பனை செய்கிறார்.

அன்னமென் நடையவட்கு அமைந்த காமத் தீ
தன்னையும் சுடுவது தரிக்கிலான் என
நல்நெடுங் கரங்களை நடுக்கி ஓடிப்போய்
முன்னை வெங் கதிரவன் கடலில் மூழ்கினான்

(பால. மிதிலைக் காட்சிப் படலம் 61)

இங்கு ஞாயிற்றுக்கு ஆணின் உருவத்தைக் கற்பித்து, வெப்பம்

தாங்காமல் சூரியனின் கரங்கள் நடுங்கியதாகவும் அவன் ஓடிப்போய்க் கடலில் மூழ்கியதாகவும் உருவப்படுத்தி உரைக்கிறார் கம்பர்.

தன்தனிப் புதல்வன் வென்றித் தசமுகன் முடியில் தைத்த
மின்தளிர்த் தனைய பல்மா மணியினை வெளியில் கண்டான்
ஒன்றொழித் தொன்றா மென்றவ் வரக்கனுக் கொளிப்பான்போல
வன்தனிக் குன்றுக் கட்பால் இரவியும் மறையப் போனான்

(யுத்த. மகுடபங்கப் படலம் 49)

என்னும் பகுதியும் மறையும் ஞாயிற்றைக் குன்றுக்கப்பால் ஒளிந்து கொள்ளும் ஆடவனாகச் சித்திரிக்கிறது.

பெண் உரு

நிலம் முதலான இயற்கைப் பொருட்கள் பலவற்றைப் பெண்ணாகக் காணுதல்; மக்களிடையே காணப்படுகின்ற உலகளாவிய பொதுமைப் பண்பாகும்.

நிலமகள்

நிலத்தைத் தாயாகக் காணுதல் பரந்துபட்ட உலக வழக்காகும். அதனால்தான் மக்கள் தமது நாட்டைத் தாய்நாடு என்று வழங்கு கின்றனர். அவ்வகையில் நிலத்தைப் பெண்ணாக வருணிப்பதைக் கம்ப ராமாயணத்தில் பல இடங்களில் காணமுடிகிறது.

பூதலம் என்னும் நங்கை (யுத்த. கும்பகருணன் வதைப்படலம் 3), **நிலமாமகள்** (யுத்த. அதிகாயன் வதைப் படலம் 22) என்று குறிப்பிடுகிறார் கம்பர். **மாநிலக் கிழத்தி** (யுத்த. திருமுடி சூட்டு படலம் 35) என்று இராமனும், **பெருநிலமகள்** (அயோ. வனம்புகு படலம் 25) என்று பரத்துவாச முனிவனும், **பார்மகள்** (யுத்த. இராவணன்வதைப் படலம் 224) என்று வீடணனும் உரைப்பதாகக் கம்பர் காட்டுகிறார்.

பன்னெடுங் காலம் நோற்றுத் தன்னுடைப் பண்பிற் கேற்ற
பின்னெடுங் கணவன் தன்னைப் பெற்றிடைப் பிரிந்து முற்றும்
தன்னெடும் பீழை நீங்கத் தழுவினான் தளிர்க்கை நீட்டி
நன்னெடும் பூமி என்னும் நங்கைதன் கொங்கை ஆர

(யுத்த. திருமுடி சூட்டு படலம் 41)

என்று இராமனுக்குத் திருமுடி சூட்டிய நிகழ்வினை எடுத்தியம்புகிறார்

கம்பர்.

கடலைக் கடந்து இலங்கைக்குச் செல்ல நினைத்த இராமபிரான் வருணனை வேண்டித் தவம் இயற்றியும் வருணன் தோன்றவில்லை. அதனால் கோபம்கொண்டு வில்வளைத்து அம்புகளை எய்யக் கடலானது தீப்பற்றி எரிந்தது. இந்நிகழ்வைக் கூறவந்த கம்பர்,

காலவான் கடுங்கணை சுற்றும் கவ்வலால்
நீலவான் துகிலினை நீக்கிப் பூநிறக்
கோலவான் களிநெடுங் கூறை சுற்றினாள்
போலமா நிலமகள் பொலிந்து தோன்றினாள்

(யுத்த. வருணனை வழிவேண்டு படலம் 35)

என்று வருணிக்கிறார். கடலின் நீலநிறம் சிவப்பாக மாறிவிட்டதால் நிலமகள் நீலநிற ஆடையைக் களைந்துவிட்டுச் செந்நிற ஆடையை உடுத்தியதாகக் கம்பர் காட்டுகிறார்.

நெய்கொள் சோரி நிறைந்த நெடுங் கடல்
செய்ய ஆடையள் அன்னசெஞ் சாந்தினள்
வைய மங்கை பொலிந்தனள் மங்கலச்
செய்ய கோலம் புனைந்தன்ன செய்கையாள்

(யுத்த. மூலபல வதைப் படலம் 134)

என்னும் பாடலும் கோலம் புனையும் மங்கையாக நிலத்தை உருவப் படுத்துகிறது.

முதுகு உளுக்குவாள் நிலமகள் பிணத்தின் ஓங்கலால்

(யுத்த. அதிகாயன் வதைப் படலம் 119)

மெய்யின் ஈட்டத்து இலங்கையாம் மென்மகள்
பொய்யன் ஈட்டிய தீமை பொறுக்கலா(து)
ஐயன் ஈட்டிய சேனைகண் டன்பினால்
கையை நீட்டிய தன்மையும் காட்டுமால்

(யுத்த. சேதுபந்தனப் படலம் 68)

ஆகிய பகுதிகளும் நிலத்தைப் பெண்ணாக உருவப்படுத்தும் தன்மையைப் புலப்படுத்துகின்றன.

செல்லிய செலவினால் சிறிய திக்கெனச்

சொல்லிய சேனையைச் சுமந்த தேவெனில்
ஒல்லொலி வேலைநீர் உடுத்த பாரையோர்
மெல்லியல் என்றவர் மெலியரே கொலாம்

(அயோ. ஆறுசெல் படலம் 36)

என்னும் பாடலில் நிலத்தைப் பெண்ணாகக் காணும் கம்பர் அது எண்ணிறந்த சேனையைத் தாங்குவதால் நிலமகளாகிய பெண்ணை மெல்லியல் என்று கூறப்படும் பண்பு பொருந்தாமையைச் சுட்டித் தம் கற்பனைக்கு அழகு சேர்க்கிறார்.

ஆறு

ஆறுகளைப் பெண்ணாக உருவப்படுத்தல் இந்திய மரபாகும். சோணை எனப்படும் சரஸ்வதி நதியை வருணிக்கும் கம்பர் அதனைப் பெண்ணாகக் காண்கிறார். நதியைப் பெண்ணாக உருவப்படுத்துவதற்கு ஏற்பப் பெண்ணோடு தொடர்புடைய அணிகலன்களையும் தோற்றத் தையும் பொருத்தமாகப் புனைந்துரைக்கிறார் கம்பர்.

அலம்பும் மாமணி ஆரத்தோ டகிலளை புளின
நலம்பெய் பூண்முலை நாகிள வஞ்சியாம் மருங்குல்
புலம்பும் மேகலைப் புதுமலர் புனையறல் கூந்தல்
சிலம்பு சூழும்கால் சோணையாம் தெரிவையைச் சேர்ந்தார்

(அகலிகைப் படலம் 1)

ஆற்றில் அடித்துவரப்படும் மணிகளை ஆரமாகவும் அதன் கரையில் ஒதுங்கும் வண்டல் மண் அறலைப் பெண்ணின் கூந்தலாகவும் பொருத்தமுற இணைத்துக் காண்கிறார் கம்பர்.

பாங்கின் உத்தரியம் மானப் படர்திரை தவழ பாரின்
வீங்குநீர் அமுவம் தன்னுள் விழுமதக் கலுழி வெள்ளத்(து)
ஓங்கல்கள் தலைகள் தோன்ற ஒளித்து அவண் உயர்ந்த கும்பம்
பூங்குழற் கங்கை நங்கை முலைஎனப் பொலிந்த மாதோ

(அயோ. கங்கைகாண் படலம் 51)

என்னும் பகுதி கங்கைக்கு நங்கைஉரு அளிக்கிறது.

வெற்றி

விசயம் என இயம்பும் பெண் ஆர்த்தனள் (யுத்த. நிகும்பலை யாகப் படலம் 159) என்று கூறும் கம்பர் வெற்றி என்னும் நிகழ்வைப்

பெண்ணாகக் காண்கிறார். வெற்றித் திருமகள் என்று கூறுதல் தமிழ் மரபு என்பதை அறிஞர் அறிவர்.

கங்குல்

இராமனைக் காட்டிற்கு அனுப்பிவிட்டுப் பரதன் பதினான்காண்டுகள் அயோத்தியை ஆளவேண்டும் என்று வரம்பெற்றாள் கைகேயி. மறுநாளின் விடியலை விளக்கவரும் கம்பர் நீங்குகின்ற கங்குல் பொழுதினை ஒரு நங்கையாகக் காண்கிறார்.

சேணுலாவிய நாளெலாம் உயிரொன்று போல்வன செய்தூன்
ஏணுலாவிய தோளினான் இடரெய்த ஒன்றும் இரங்கிலா
வாணிலாநகை மாதராள் செயல்கண்டு மைந்தர்முன் நிற்கவும்
நாணினானென ஏகினாள் நளிர்கங்குல் ஆகிய நங்கையே

(கைகேயி சூழ்வினைப் படலம் 50)

என்னும் பாடலில் இரக்கமற்ற கைகேயியின் செயலைக் கண்டு நாணமுற்ற நங்கையாகிய கங்குல் பொழுது மைந்தர்முன் நிற்கவும் நாணப்பட்டு ஏகியதாகக் கூறுகிறார். கங்குலுக்கு நங்கையாகிய உருவத்தைக் கொடுத்ததுடன் பெண்ணிற்குரிய நாணத்தையும் உடன் கூறுதல் உருவப்படுத்தலை முழுமையுடையதாக்குகிறது எனலாம்.

தெய்வ உரு

தெய்வம் அல்லாத பொருட்களுக்குக் கவிஞர்கள் தெய்வஉரு அளித்துத் தம் படைப்பிற்கு அழகூட்டக் காணலாம். மாலைக்காலத்திற்குக் காலனின் உருவத்தை அளிக்கிறார் கம்பர்.

விரிமலர்த் தென்றலாம் வீசு பாசமும்
எரிநிறச் செக்கரும் இருளும் காட்டலால்
அரியவட்கு அனல்தரும் அந்தி மாலையாம்
கருநிறச் செம்மயிர்க் காலன் தோன்றினான்

(மிதிலைக் காட்சிப் படலம் 62)

என்னும் பாடலில் அந்திமாலைக்குக் காலனாகிய உருவத்தைக் கொடுத்ததுடன் வீசுகின்ற தென்றலைக் காலன் வீசுகின்ற பாசக்கயிறாகக் கற்பனை செய்கிறார் கம்பர். மேலும் காலன் கரிய நிறத்தினன் என்றும் செம்பட்டையான மயிரை உடையவன் என்றும் கருதும் கம்பர் அந்திமாலைப் பொழுதில் செக்கர்வானமும் பரவத்தொடங்கும் இருளும்

இணைந்திருப்பதால் காலனின் தோற்றத்துடன் ஒத்துப்போவதாகப் பொருத்துகிறார். இச்செய்யுளை வாசிப்போரின் கண்முன் அந்தி மாலையானது கையில் பாசக்கயிற்றுடன் செம்மயிர் விரவிய கரிய தோற்றமுடைய ஓர் உருவத்தோடு தோன்றக் கூடும்.

தொழிலாளர் உரு – திங்கள்

உயர்திணை அல்லாத பொருட்களை ஆணாகவோ பெண்ணாகவோ பொதுநிலையில் உருவப்படுத்தாமல் குறிப்பிடத்தக்கதொரு உருவத்தில் அறிமுகப்படுத்துவதையும் படைப்புகளில் காணலாம். இவ்வகையில் கம்பர், திங்களுக்குத் தொழில்துறை சார்ந்த தச்சன் என்னும் உருவை அளிப்பதைக் காணலாம்.

இரவில் திங்கள் தோன்றுவதை வருணிக்கும் கம்பர் நான்கு பாடல்களில் அது எழுவதையும் அதன் ஒளிக்கற்றையையும் விளக்கிவிட்டு ஐந்தாம் பாடலில் அதற்குத் தச்சன் என்னும் உருவத்தைக் கொடுக்கிறார்:

நீத்தம்அதனில் முளைத்து எழுந்த நெடுவெண் திங்கள் எனும் தச்சன்
மீத்தன் கரங்கள் அவை பரப்பி மிகுவெண் நிலவாம் வெண்சுதையால்
காத்த கண்ணன் மணிஉந்திக் கமல நாளத்திடைப் பண்டு
பூத்த அண்டம் பழையது என்று புதுக்குவானும் போன்றுளதால்

(மிதிலைக் காட்சிப் படலம் 74)

பிறிதொரு இடத்தில் திங்கள் உதித்தமையை வருணிக்கும் கம்பர் சீதையைக் கண்டுபிடிப்பதற்காக தனது ஒளிக்கற்றையாகிய வலையைக் கடலில் வீசியதாகக் கூறுகிறார் :

கண்ணினை அப்புறம் கரந்து போகினும்
பெண்ணிறம் உண்டெனின் பிடிப்பல் ஈண்டுஎனா
உண்ணிறை நெடுங்கடல் உலகம் எங்கணும்
வெண்ணிற நிலவெனும் வலையை வீசினான்

(யுத்த. இலங்கை கேள்விப் படலம் 6)

இப்பாடலில் திங்களை மீனவனாகக் கம்பர் சுட்டவில்லை என்றாலும் நெடுங்கடலில் வலைவிரித்தலாகிய செயல் மீன் பிடிப்பவரைக் கண்முன் நிறுத்தத் தவறவில்லை.

அஃறிணை உயிர் உரு

நந்துஅம் நந்தவனங்களில் நாள் மலர்க்

கந்தம் உந்திய கற்பகக் காவினின்று
அந்தர் வந்தென அந்திதன் கைதர
மந்த மந்த நடந்தது வாடையே

(அயோ. திருவடி சூட்டு படலம் 14)

என்னும் பகுதியில் உயிர்த் தன்மையற்ற வாடைக்குக் கம்பர் உயிர் கொடுக்கிறார்.

ஏழு குன்றமும் எடுக்குறும் மிடுக்கனை இந்நாள்
பாழி மார்பகம் பிளந்துயிர் குடித்ததோர் பகழி

(யுத்த. படைக்காட்சிப் படலம் 41)

என்னும் பகுதியில் உயிரல்லாத பொருளாகிய பகழிக்கு உயிர் தன்மை ஊட்டுகிறார் கம்பர். இராமன் வாலியின் மார்பைத் தனது அம்பினால் பிளந்தான் என்று உரைக்காமல் இராமனின் அம்பே வாலியின் உயிரைப் பிளந்து உயிரைக் குடித்ததாகக் கூறி உயிரற்ற பொருளுக்கு உயிராகிய உருவத்தை அளிக்கிறார் கம்பர்.

இராமன் அம்பினால் உயிர்துறந்த இராவணின் நிலையைக் கூறுமிடத்தும்,

வெள்ளெருக்கஞ் சடைமுடியான் வெற்பெடுத்த
திருமேனி மேலும் கீழும்
எள்ளிருக்கும் இடனின்றி உயிரிருக்கும்
இடன்நாடி இழைத்தவாறோ
கள்ளிருக்கும் மலர்க்கூந்தல் சானகியை
மனச்சிறையில் கரந்த காதல்
உள்ளிருக்கும் எனக்கருதி உடல் புகுந்து
தடவியதோ ஒருவன் வாலி

(யுத்த. இராவணன் வதைப்படலம் 237)

என்று இராமனின் அம்பிற்கு உயிர்த்தன்மை ஏற்றுகிறார் கம்பர்.

மேற்கூறியவற்றால் கம்பர் தம் காப்பியத்தில் பல இடங்களில் 'உருவப்படுத்தம் என்னும் உத்தியைக் கையாண்டிருப்பதை அறிய முடிகிறது. இந்தியத் தொன்மத்தில் சூரியன், சந்திரன் ஆகியன ஆண்பால் தேவர்களாகவும் நிலம், ஆறு (கங்காதேவி), வெற்றி (விசயலட்சுமி) ஆகியவை பெண்பால் தேவதைகளாகவும் புனைந்துரைக்கப்படுவதால் அம் மரபிற்கேற்பவே கம்பரும் உருவப்படுத்தத்தைக் கையாண்டுள்ளார்

எனலாம். எனினும் கங்குலை நங்கையாகக் காண்பதும் திங்களைத் தச்சனாகவும் பரதவனாகவும் தொழிலாளர் உருவில் காண்பதும் அம்பிற்கு உயிர்உரு அளிப்பதும் கம்பனின் தனித்தன்மையைக் காட்டுவதாகக் கருதலாம்.

கம்பனில் கற்பனையியல்

முனைவர். **ந.கிருட்டிணமூர்த்தி**
,தலைவர் உலகத்தமிழ்ப்பேரவை, காரைக்கால்

'தன் அனுபவத்தில் கண்ட பண்புகளைக் கவிஞன் எத்தகைய கட்டுப்பாடும் இல்லாமல் தானே தேர்ந்தெடுத்து அவற்றை ஒன்றாக இணைத்துப் புதியதொரு முழுநிறைவான வடிவத்தைப் படைத்துக் காட்டுந் திறனே படைப்புக் கற்பனையாகும். தான் கண்ட காட்சியை அல்லது உணர்ந்த உண்மையை யாதொரு மாற்றமும் இல்லாமல் முழு நிறைவுடைய அழகுப் பொருளாகக் கவிஞன் படைக்கும்பொழுது அவனுக்கு உற்ற துணையாக நிற்கும் கற்பனையே படைப்புக் கற்பனை யாகும்' என்று கருத்துரைக்கிறார் க.த. திருநாவுக்கரசு (திருக்குறளில் கற்பனைத்திறனும் நாடக நலனும் 50). பட்டறிவால் பெற்ற அனுபவத்திலிருந்து தன்வயமான எழுச்சியால் சில கூறுகளைத் தேர்ந்தெடுத்து இணைத்துப் புதுமை படைக்கிறது இக்கற்பனை. இவ்இணைவு மனம் போன போக்கிலுள்ளதாகவோ பகுத்தறிவுக்கு ஒவ்வாததாகவோ போய் விடுமாயின் வெறுங் கற்பனை ஆகிவிடும் என்கிறார் வின்செஸ்டர். வெவ்வேறிடத்தில் வெவ்வேறுபட்ட காட்சிகளைக் காணுகிறார் புலவர். கற்பனையாற்றல் பொருந்திய மனத்துடன் கவிதை படைக்கும்போது தான் முன்பு கண்டனவற்றுள், அனுபவித்தனவற்றுள் சில கூறுகளில் புதுமையைப் புகுத்துகிறார். அச்செயல்பாட்டில் தாம் கண்ட அனைத்தையும் பயன்படுத்தாமல் தேவைப்படும் கூறுகளை மட்டும் பயன்படுத்துகிறார். அவ்வாறே, தனித்தனியே தாம் கண்ட பல்வேறு கூறுகளை ஒருங்கிணைக்கும் பணியையும் மேற்கொள்கிறார்.

கவிச்சக்கரவர்த்தி கம்பர் இத்தகைய படைப்புக் கற்பனையில் ஆழங்கால்பட்டமை வியப்பன்று. மந்திரப் படலத்தில் இராமன் வீதிவழியே தேரில் செல்லும் அழகைக் கண்டுகளிக்கும் பெண்களை,

சரிந்த பூவுள மழையொடு கலையுறத் தாழப்
பரிந்த பூவுள பனிக்கடை முத்தினம் படைப்ப
எரிந்த பூவுள விளமுலை யிழையிடை நுழைய
விரிந்த பூவுள் மீனுடை வானின்றும் வீழ்வ (58)

என்று வருணிக்கிறார். பெண்களின் கூந்தலை மழை மேகமாகவும் நெற்றியைச்

சந்திரனாகவும் கண்களைக் குவளை மலர்களாகவும் வருணிக்கும் கம்பர் இராமனைக் கண்டு பெண்களின் கண்களில் துளிர்த்த கண்ணீரை முத்துகளாக வருணிக்கிறார். இவ்வாறு பெண்ணின் உறுப்புகளுக்குப் பல்வேறுபட்ட பொருட்களை ஒப்புமைப்படுத்துவதால் இது படைப்புக் கற்பனையாகிறது.

இராமன் முடிசூட்டு விழாவிற்காக நகரை அலங்கரிக்கின்றனர். எங்கும் வாழை மரங்களும் பாக்கு மரங்களும் கட்டப்பெற்றன. முத்து மாலைகள் தொங்கவிடப்பட்டன. பொன்னாலான பூரணகும்பங்கள் அமைக்கப்பட்டன. அவற்றைக் கண்ணுறும் கம்பருக்கு வாழை மரங்கள் பெண்களின் தொடை போலவும் கமுக மரங்கள் பெண்களின் கழுத்து போலவும் முத்துமாலைகள் அவர்தம் பல் வரிசை போலவும் பூரண கும்பங்கள் கொங்கைகள் போலவும் காட்சியளிக்கின்றன:

மங்கையர் குறங்கென வகுத்த வாழைகள்
அங்கவர் கழுத்தெனக் கமுக மார்ந்தன
தங்கொளி முறுவலிற் றாம நான்றன
கொங்கையின் னிரைத்தன கனக கும்பமே (129).

சீதையின் வெண்பல்லின் நகைக்கு உவமை தேடும் கம்பர்,

முல்லையுங் கடன் முத்து மெதிர்ப்பினும்
வெல்லும் வெண்ணகை யாய் (530)

என்று கூறி கடல் முத்தும் முல்லையும் அவள் பற்களிடம் தோற்றுப் போவதாகக் கற்பனை செய்கிறார்.

சீதையின் கண்களை வருணிக்கும் நம்பர் அவள் கண்கிளன் கொடுமைக்குக் கொடுமை தருகின்ற வேலை ஒக்கும். அதுவும் சாதாரண வேலன்று. நெருப்பில் நன்கு காய்ச்சி நெய் பூசப்பெற்ற வேலினது கூர்மையைப் போன்றன சீதையின் கண்கள் என்று நினைக்கிறார்.

நெய்கொ ணீருண்டு நெருப்புண்டு நீண்டமைந்து நிறைந்த
வைகொள் வேலெனக் காலனு மறுகுறுங் கண்ணாய் (785)

என்று சீதையின் கண்களைக் கற்பனைச்செறிவுடன் வருணிக்கிறார் கம்பர்.

இயைபுக் கற்பனை

உணர்ச்சி ஒற்றுமையின் காரணமாக இயைந்து அமைக்கப்பெறும் கற்பனை இயைபுக் கற்பனை எனப்பெறுகிறது. உள்ளத்தில் உறைந்து

கிடக்கும் உணர்ச்சி அதற்குப் பொருத்தமான மற்றொரு நிகழ்வினை நினைவுக்குக் கொண்டுவருகிறது. அப்பொழுது முன்பு மனத்தில் பதிந்திருக்கின்ற உணர்ச்சி வடிவம் கொள்கிறது. அதனால் ஒத்த கருத்தியல் வடிவங்களை உடைய பொருள், கருத்து அல்லது உணர்ச்சி ஆகியவை இயைபுடன் புனைந்துரைக்கப்பெறுகின்றன. இதனை இயைபுக் கற்பனை என்று சுட்டுகின்றனர் திறனாய்வாளர்.

புறத்தே காணப்பெறும் ஒரு பொருளோ நிகழ்வோ உள்ளத்தில் கருத்தியல் வடிவமாகப் பதிந்துவிடுகிறது. பின்னர் அதே வகையான உணர்ச்சி தூண்டப்பெறும்பொழுது உள்ளத்து அனுபவம் அத்தகைய உணர்ச்சியைக் கிளர்ந்தெழச் செய்கிறது எனலாம். அந்நிலையில் உணர்ச்சி ஒற்றுமையால் தொடர்புள்ள கருத்தியல் வடிவங்களை இயைபுபடுத்தி நிற்கும் சொற்சித்திரங்கள் அமைகின்றன என இக் கற்பனை நிலை விளக்கப்படுகிறது.

இராமன் கானகம் செல்கின்றான் என்ற செய்திகேட்டு நகரமக்கள் யாவரும் அவனுடனேயே நாட்டைவிட்டு நீங்குகின்றனர். அக் காட்சியைக் கம்பர்,

மழைக்குலம் புரைகுழல் விரிந்து மண்ணுறக்
குழைக்குல முகத்தின் குழாங்கொண் டேகினர்
இழைக்குலஞ் சிதறிட வேவுண் டோய்வுறும்
உழைக்குல முழைப்பன வொத்தோர் பாலெலாம் (501)

என்று கூறுகிறார். மகளிரின் கூந்தல் அவிழ்ந்து தரையிற் புரள காதுகளில் பொலியும் குழைகள் சிந்த நடந்துசெல்வது பெண்மான் கூட்டம் அம்பு பட்டுத் துடித்து நடந்துசெல்வதை ஒத்துக் காணப்பட்டதாகக் கற்பனை செய்கிறார் கம்பர். காட்டில் முன்பு கண்ட மான்கள் அம்பு பட்டுத் துடித்த காட்சி இங்கு இயைந்துவரக் காணலாம்.

இராமனின் வதனத்தைப் பார்த்து சீதையின் முகம் மலர்கிறது. இக்காட்சியை வருணிக்கும் கம்பர் சூரிய உதயத்தை ஒப்புநோக்குகின்றார்.

செஞ்செவே சேற்றிற் றோன்றுந் தாமரை தேரிற் றோன்றும்
வெஞ்சுடர்ச் செல்வன் மேனி நோக்கிய விரிந்த வேறோர்
அஞ்சன நாயிறன்ன வையனை நோக்கிச் செய்ய
வஞ்சிவாழ் வதனமென்னுந் தாமரை மலர்ந்த தன்றே (அயோ. 680)

என்று சூரியனின் உதயத்தைக்கண்டு தாமரை அரும்புகள் மலர்கின்ற காட்சியை இராமனைக் கண்டு சீதை மகிழ்வதோடு ஒப்புநோக்குகிறார்.

கூனியின் சூழ்ச்சியால் கைகேயி மனம் திரிந்தாள். தன் அலங்காரத்தை யெல்லாம் களைத்துவிட்டுக் கீழே வீழ்ந்துகிடக்கிறாள். அக்காட்சியை,

நவ்வி வீழ்ந்தென நாடக மயில்துயின் றென்னக்
கவ்வை கூர்தரச் சனகியாங் கடிகமழ் கமலத்து
அவ்வை நீங்குமென் றயோத்திவந் தடைந்தவம் மடந்தை
தவ்வை யாமெனக் கிடந்தனள் கேகயன் றனயை (187)

என்று கற்பனை செய்கிறார் கம்பர். துன்பம் மிகுவதால் மான் விழுந்தாற் போலவும் குலாவுந் தன்மையுடைய மயில் ஒடுங்கிக்கிடந்தாற் போலவும் மொத்தத்தில் இலக்குமி நீங்குவதால் அவள் தமக்கை மூதேவி நாட்டை வந்தடைதல் போலவும் தோன்றியதாக இயைபுக் கற்பனையைப் புனைகிறார் கம்பர்.

இராமன் கானகம் சென்றான் என்பதறிந்த பரதன் அவனைத் திரும்பி அழைத்துவரச் சேனைகளோடு புறப்படுகிறான். குகனின் உதவியால் கங்கையாற்றைக் கடக்கின்றனர். அப்போது யானைகள் கங்கையில் நீந்திச்சென்று அக்கரை அடைந்த காட்சியைக் காட்டுகிறார் கம்பர்:

இடிபடு முழக்கம் பொங்க வினமழை மகரநீரை
முடிவுற முகப்ப வூழியிறுதியின் மொய்ப்ப போலக்
கொடியொடு வங்கம் வேலை கூம்பொடு படர்வபோல
நெடியகை யெடுத்து நீட்டி நீந்தின நெடுங்கை வேழம் (1059)

அப்போது எழுந்த முழக்கம் யுகமுடிவில் மேகக் கூட்டங்கள் ஒன்றோ டொன்று தாக்குவதால் ஏற்படும் முழக்கம் போன்று ஒலிக்கிறது. பெரிய கொடியுடன் கூடிய மரக்கலங்கள் நீரில் செல்வதுபோன்று யானைகள் நீந்திச் செல்கின்றன.

வனம்புகு படலம். சித்திரகூடப் படலம் போன்றவற்றில் இயற்கைக் காட்சிகள் மிக அழகாகப் புனையப்பட்டுள்ளன. நதியினில் தாழ்ந்து நுரையுடன் அகில் மரத்துக் கிளைகள் ஊடாடிக்கொண்டிருக்கின்றன. அதைக்காணும் கம்பர் பெண்கள் நீரில் படிந்து விளையாடுவதை நினைவுகூர்கிறார் (712).

கோங்குமரமும் வேங்கை மரமும் தன் சிறு பூக்களைச் சீதையின் மேல் சிந்துகின்றன. அது கற்றுக்கலைவல்ல மகளிர் சீதையின் நெற்றியிலே சிறுமலர்களை அப்புவதுபோல் இருந்ததாகக் கற்பனை செய்கிறார் கம்பர் (715).

இவ்வாறு ஒத்த உணர்வுடைய இருவேறு நிகழ்வுகள் பலவற்றை இழைத்துக் காட்டுவதன் மூலம் கம்பர் காவியம் கவித்துவம் மிக்கதாய்ச் சிறக்கிறது.

கருத்து விளக்கக் கற்பனை

இயற்கைக் காட்சிகளைக் கண்ணுறும் கவிஞன் தான் காண்பவற்றை அப்படியே எடுத்துமொழியாமல் அக்காட்சிகளால் தன் உள்ளத்தில் கிளர்ந்தெழும் உணர்வுகளையும் சேர்த்துக் குழைத்தல் கருத்து விளக்கக் கற்பனையாகும். உயர்வுநவிற்சி, தற்குறிப்பேற்றம் முதலான அணி அழகுகள் இக்கற்பனையின் அடிப்படையில் பிறப்பவையாகும்.

துறக்கமே முதல ஆய தூயன யாவை யேனும்
மறக்குமா நினையல் அம்மா வரம்புஇல தோற்றும் மாக்கள்
இறக்குமாறு இதுஎன் பான்போல் முன்னைநாள் இறந்தநாள் பின்நாள்
பிறக்குமாறு இதுஎன் பான்போல் பிறந்தனன் பிறவா வெய்யோன்
(679)

என்னும் பாடல் கருத்துவிளக்கக் கற்பனையோடு கதிரவன் தோற்றத்தை வருணிக்கிறது. நாள்தோறும் மாலையில் மறைந்து, மீண்டும் சலிப் புறாது மறுநாள் காலையில் தோன்றும் கதிரவன் இறப்புண்டேல் பிறப் புண்டு, பிறப்புண்டேல் இறப்புண்டு என்னும் பெருந் தத்துவத்தை விளக்கு வதாகக் கற்பனை செய்கிறார் கம்பர்.

தயரதனுக்குக் கன்னமூலத்தினிற் நரைத்த ஒரு மயிரானது ஏற்படுத்திய தாக்கத்தைக் கம்பர்,

மன்னனே யவனியை மகனுக் கீந்துநீ
பன்னருந் தவம்புரி பருவ மீதெனக்
கன்ன மூலத்தினிற் கழற வந்தென
மின்னெனக் கருமைபோய் வெளுத்த தோர்மயிர் (2)

என்று புனைந்துரைக்கிறார். மயிரானது தயரதனைப் பார்த்து, மன்னனே, உன் அரசாட்சியை உன் மகனுக்கு அளித்துவிட்டுத்

தவம் மேற்கொள்வதற்கான காலம் வந்துவிட்டது என்று காதில் உரைப்பதுபோல் கன்னமூலத்தில் நரைத்தது என்று கூறும் கம்பர் கருத்துவிளக்கக் கற்பனையைப் பயன்படுத்திக் கொள்கிறார். மேலும்,

தீங்கிழை யிராவணன் செய்த தீமைதான்
ஆங்கொரு நரையதா வணுகிற் றாம்

என்று பின்னால் நிகழவிருப்பதை முன்னரே உணர்த்தியதாகவும் நரையைக் காண்கிறார் கம்பர்.

இராக்காலத்தில் தீபங்கள் ஒளி மங்குகின்றன. அந் நிகழ்வை,

வையமேழு மொரேழு மாருயிரோடு கூட வழங்குமம்
மெய்யன் வீரருள் வீரன்மாமகன் மேல் விளைந்ததோர் காதலால்
நையநைய நலைம்புலன்க ளவிந்த டங்கி நடுங்குவான்
தெய்வமேனி படைத்த சேயொளி போன் மழுங்கின தீபமே (246)

என்று வருணிக்கிறார் கம்பர். தயரதன் விண்ணுலகை அடையப் போவதையும் அவனது உடலின்கண் இருக்கும் உயிர் நிலைபெறாது சென்றுதேயப் போகிறது என்பதையும் ஒளி மங்கும் தீபங்கள் அறிவிப்பதாகத் தம் கருத்தைக் கற்பனை கலந்து உரைக்கிறார் கம்பர்.

இவ்வாறு இயற்கை நிகழ்வுகளில் தம் குறிப்பைக் கவிஞர் ஏற்றிக் கூறுவதால் கருத்துவிளக்கக் கற்பனை சிறக்கிறது.

செவிப்புலக் கற்பனை

டி.எஸ். எலியட் கேள்விக் கற்பனை என்றொரு வகையினை வகுத்துரைக்கிறார். இதனையே தமிழ்த் திறனாய்வாளர் செவிப்புலக் கற்பனை என்று வழங்குகின்றனர். ஒலிநயத்திற்கு அதாவது ஓசை நயத்திற்குக் கவிதையில் முதன்மை அளிக்கப்படும்போது, ஓசை இனிமை மிக்க கவிதை வடிவங்கள் கருக்கொள்கின்றன. செவிப்புலம் இக் கற்பனையை உணர்ந்து கொள்வதிலும் ஆக்குவதிலும் முதன்மை பெறுகிறது. செவிப்புலன் தரும் கற்பனையின் துணையைக் கொண்டு, சொல்லின் ஓசை நயத்தை உணர்ந்து தக்க சொற்களைக் கவிதையில் அமைப்பதன் மூலம் சொற்களுக்குப் புத்துயிர் அளிக்கப்படுகிறது. இத்தகைய ஓசை நயத்தால் படிப்பவர் உள்ளத்தில் கற்பனை உணர்வு கிளர்ந்தெழுகிறது.

தழையொலித்தன வண்டொலித்தன தாரொலித்தன பேரியாம்
முழவொலித்தன தேரொலித்தன முத்தொலித்தன மல்குபேர்
இழையொலித்தன புள்ளொலித்தன யாழொலித்தன வெங்கணும்
மழையொலித்தன போல்கலித்த மனத்தின் முந்துறுவாசியே (245)

என்னும் பாடலில் ஒலித்தன என்னும் சொல் மீண்டும் மீண்டும் பயின்றுவந்து அந்தந்த பொருட்களெல்லாம் ஒலிப்பன போன்ற உணர்வை ஏற்படுத்துகிறது.

அட்டிலு மிழந்தன புகையிற் புகை
நெட்டிலு மிழந்தன நிறைந்த பால்கிளி
வட்டிலு மிழந்தன மகளிர் வான்மணித்
தொட்டிலு மிழந்தன மகவுஞ் சோரவே (503)

என்னும் அடிகள் இழந்தவை அனைத்தையும் அடுக்கிக் கூறுவதால் ஒருவித அவலச் சுவையைத் தோற்றுவிக்கின்றன.

ஆடின ரழுதன ரழுத வேழிசை
பாடின ரழுதனர் பரிந்த கோதையர்
வீடின ரழுதன ருயிரி னன்பரைக்
கூடின ரழுதனர் குழாங் குழாங்கொடே (570)

என்னும் வரிகள் அவலச் சுவையை மேலும் மிகுவிக்கின்றன.

சித்திரகூடப் படலத்தில் இரவுக் காலத்தில் மந்தியும் கடுவனும் மரங்களில் தூங்குவதற்காகச் செல்லுதலையும் யானைகள் தடங்களுக்குச் செல்லுதலையும் பறவைகள் கூடுகளை நோக்கிச் செல்லுதலையும்,

மந்தியும் கடுவனு மரங்க ணோக்கின
தந்தியும் பிடிகளுந் தடங்க ணோக்கின
நிந்தையில் சகுந்தங்க ணீள நோக்கின
அந்தியை நோக்கினா னறிவை நோக்கினான் (791)

என்று ஓசைநயத்தின் மூலம் காட்சிப்படுத்துகிறார் கம்பர்.

இவ்வாறு பலதரப்பட்ட கற்பனை உத்திகளைக் கையாளுவதன்மூலம் தம் காப்பியத்தை நிலைபேறுடையதாக்கி உலகக் காவியங்களில் ஒப்பற்ற காவியமாக நிலைநிறுத்துகிறார் கம்பர்.

கம்பனின் கற்பனைத் திறன்

முனைவர். வெ.உஷா
தமிழ் உதவிப்பேராசிரியர் தமிழ் உயராய்வுத் துறை.
மதுரை கல்லூரி,(தன்னாட்சி), மதுரை

கவிஞனின் உள்ளக்குறிப்பும் அவனின் கற்பனைத்திறனும் வெளிப்படும்போதுதான் ஒரு சிறந்த படைப்பு உருவாகும். கற்பனை இல்லையேல் கவிதை இல்லை எனலாம். கற்பனையின் மேலீட்டால் தான் உவமை உருவகம், தற்குறிப்பேற்றம் இல்பொருளுவமை போன்ற அணிகள் உருவாகின்றன. அந்த வகையில் கம்பராமாயணத்தில் இடம் பெறும் கற்பனைத்திறத்தை இங்குக் காணலாம்.

காவிரி பாயும் மருதநிலத்துக் கவிஞரான கம்பர், கோசல நாட்டு வளத்தைப் பேசுங்கால், மருதநிலத்தின் சிறப்பினை உருவகித்துப் பாடுகிறார். அதில் அந்நிலத்தை அரசியாகவே அமைத்து இனிது வீற்றிருக்கும் அழகைப் பாடுகிறார்.

தண்டலை மயில்களாட, தாமரை விளக்கம் தாங்க,
கொண்டல்கள் முழவின் ஏங்க, குவளை கண்விழித்து நோக்க,
தெண்திரை எழினி காட்ட, தேம்பிழி மகர யாழின்,
வண்டுகள் இனிதுபாட, மருதம் வீற்றிருக்கும் மாதோ!

என்ற பாடலில் அக்கற்பனையின் அழகை அறியலாம்.

கற்பனையில் ஒரு நாடு

கம்பர் தன்னுடைய கற்பனையில் ஒரு கோசலநாட்டைப் படைக்கிறார். இந்நாட்டில் வறுமை என்னும் நிலையுடன் ஒருவரும் இல்லாமையால், ஆங்குப் பரிசு பெறுவதற்கு என எவரும் இல்லை. பொய் பேசும் தன்மை அந்நாட்டு மக்களிடம் இல்லையென்பதால் பேசப்படும் மொழிகளில் இதுவே சத்தியமொழி எனப் பிரித்துக் கூறும் நிலை எதுவும் இல்லாமையாயிற்று. பலவகையான கேள்வி எனினும் அந்நாட்டு மக்களிடம் பெருகி விளங்கினார்கள். இதனால் இவரே அறிஞர் எனக்கூறும் தன்மையில் ஒருவரையும் காணவில்லை.

வண்மையில்லை ஓர் வறுமை இன்மையால்
திண்மையில்லை நேர் செறுநர் இன்மையால்

உண்மையில்லை பொய்உரை இலாமையால்
ஒண்மை இல்லை பல் கேள்வி மேவலால்'

என்று கற்பனையில் கோசல நாட்டைப் படைத்துள்ளார்.

கம்பர் கோசல நாட்டின் தலைநகரமான அயோத்தியின் சிறப்பினை நகரப்படலத்தில் எடுத்துரைக்கிறார். இந்நகரம் இராமபிரான் திரு வவதாரம் செய்த பதி என்னும் சிறப்பினை உடையது என்கிறார்.

இவ்வயோத்தி என்னும் பெருமையுடைய நகரம் பூமி தேவியின் திருமுகமோ? நெற்றித் திலகமோ? ஒளி திகழும் கண்ணோ? திருமாலின் திருமார்பில் அணியப்பெறும் கௌஸ்துபி ரத்தினம் போன்ற மணிகள் விளங்கும் அழகு மேவும் பொன் பெட்டியோ? தேவலோகத்திற்கும் மேலதாகிய வைகுண்டமோ? இதன் பெருமையை யாதென உரைத்தல் இயலும என்று அயோத்தியின் அழகைக் கற்பனை செய்கின்றார்.

நிலமகள் முகமோ திலதமோ கண்ணோ
நிறை நெடும் மங்கல நாணோ? (95)

என்ற பாடல் வழி அயோத்தியின் பெருமையை அறியலாம். மேலும் அயோத்தியினைப் போல் நிகரான வேறு ஒரு நகரைத் தேடி சூரிய சந்திரன்கள் யாண்டும் திரிந்து உலாவுவதாக நயம்படக் கூறுகிறார். இதனை,

உமைக்கொரு பாகத் தொருவனும்
இருவர்க்கு ஒரு தனிக் கொழுநனும்
மலர்மேல்...
அந்தரம் சந்திராதித்தர் இமைப்பலர் திரிவர்
அதுவலால் இதனுக்கு இயம்பலாம் ஏது மற்றியாதோ? (56)

என்ற பாடலின் கற்பனை நயத்தைக் காணலாம்.

அயோத்தியின் மாளிகைகள்

கம்பரின் அயோத்தியின் மாளிகைகளை வருணிக்கும்போது, அது கட்டப்பட்டுள்ள விதம், ஒளிவீசும் தன்மை அது கட்டப்பட்டுள்ள விதம் மற்றும் ஒப்புமைப்படுத்தும் தன்மையில் கம்பரின் கற்பனைத் திறன் பொங்குவதைக் காணலாம்.

திங்களும் கரிதென வெண்மை தீற்றிய
சுங்க வெண் சுதையுடைத் தவள மாளிகை

வெங்கால் பொர, மேக்கு நோக்கிய
பொங்கிரும் பாற்கடல் தரங்கம் போலுமே (120)

என்ற பாடலில் சந்திரனின் வெண்மையும் கரியது என உரைக்கத்தக்க வகையில் சங்குகளை எரித்துச் சுண்ணம் ஆக்கி, அச்சாந்தினைக் கொண்டு பூசப்பெற்ற வெண்மையான மாளிகைகளை நோக்கும்போது, அவ்வண்ணமானது, பெருங்காற்று வீசுதலால் பாற்கடலில் பொங்கி யெழுந்த வெண் நுரையுடன் உடைய அலைகளை ஒத்து விளங்கியது என்று கற்பனை செய்கிறார்.

கண்ணால் கண்ட நாட்டையும் அரசையும் மனத்துள் வைத்துக் கற்பனையில் உன்னதமான நாட்டையும் அரசையும் கம்பர் தன் கற்பனைத்திறனால் படைத்துக்காட்டிய காவிய மாளிகை கம்பராமாயணம் என்றால் அது மிகையாகாது.

கம்பனின் சில கற்பனைகள்

சா.சையத் முகமது
கிருஷ்ணகிரி

கவிஞன் என்றாலே கற்பனை வளத்தையுடையவனும், மிகைப்படுத்திக் கூறலும், உள்ளதை உள்ளவாறு உரைப்பதுவும், குறைகாணின் எதிர்த்தலும் ஆகும். தான் ஏற்கும் பாத்திரத்தின் தன்மையை முழுமையாக உள்வாங்கி வெளிப்படுத்துதலும், எக்காலத்திற்கும் ஏற்ற தான செய்திகளைக் கூறுதலும், சமுதாயத்தின் கண்ணாடியாகவும் நிலைத்திருக்கச் செய்வதுவே கவிஞனின் முதன்மையானப் பணியும், கடமையுமாகும்.

கற்பனைத்திறன்

பெண்களின் நடை அன்னப்பறவையின் நடைக்கு ஒப்புவமை செய்வது கவிஞரின் கற்பனை. இங்கோ கம்பன் சீதையின் நடை கண்டு அன்னப்பறவை வெட்கப்பட்டு ஒதுங்கி சென்றது என்று உவமை, உவமேயம் பொருள் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. மேலும் ஆண்களின் நடைக்கு யானையை ஒப்பாகக் கூறுவது இயல்பு. ஆனால் யானையோ இராமனின் நடைக்கண்டு ஒதுங்கி சென்றதாக கற்பனையை மேலோங்கச் செய்கிறார் கம்பன்.

ஓதிமம் ஒதுங்கக் கண்ட உத்தமன் உழையளாகுஞ்
சீதைதன் நடையை நோக்கிச் சிறியதோர்முறுவல் செய்தான்
மாதுஅவள் தானும் ஆண்டுவந்து நீருண்டு மீளும்
போதகம் நடப்ப நோக்கிப் புதியதோர் முறுவல் பூத்தாள்'

(ஆரண்ய சூர்ப்ப. 222)

ஒரு மரத்தின் கிளையில் குயில்கள் திருமணம் செய்துக் கொள்கின்றன. அந்நிகழ்வை மகிழ்வூட்ட மற்றொரு கிளையில் மயில் அழகாக நாட்டியமாடுகிறது. இவையாவும் மனதிற்கு இன்பம் தருவன. நாட்டில் அரசனை எழுப்ப இன்னிசைகள் பெண்களால் இசைக்கப்படும். அதைவிட தாமரை மலர்களில் தூங்கிக்கொண்டிருக்கும் இராஜ அன்னங்களை, புதிய மலர்களில் தேன் பருக வரும் வண்டுகள் தம் இயல்பான 'கொட்டுதல்' செயலைச் செய்யாமல் 'செவ்வழி ராகமாக' இன்னிசைப்பாடி எழுப்புகின்றன என்று கற்பனை வளத்துடன் கம்பன்

தனது நான்கடிகளிலேயே தன் எண்ணமதை அரங்கேற்றுகின்றார். அப்பாடல் பின்வருமாறு.

குயிலினம் வதுவை செய்யக் கொம்பிடைக்குனிக்கும் மஞ்ஞை
அயில்விழி மாதராடும் அரங்கினுக்கழகு செய்யப்
பயில்சிறை அரச அன்னம் பன்மலர்ப் பள்ளி நின்றும்
துயிலெழத் தும்பிகாலைச் செவ்வழி முரல்வ சோலை

(பாலகாண்டம் 46)

மேலும் அரசவாழ்வின் இன்பமதில் இருந்தவர்கள், காட்டில் துன்புறும் போதும், ஒருவரையொருவர் புரிந்துகொண்டு, ஒருமித்த மனத்துடன் இருத்தல் என்பது மனித வாழ்வின் அடிப்படைத் தத்துவத்தை சுட்டிக் காட்டுகிறது.

எந்நிலையிலும், அச்சூழலுக்கேற்ப, தன்னை ஈடுபடுத்திக் கொள்ளும் மனப்பாங்கையும் காட்டுகின்றார் கம்பன். கணவன் - மனைவி புரிதலுடன் கூடிய வாழ்வே மிகமிக இனிமையானதாகும் என்பதையும் உணர்த்துகின்றார்.

இருவேறு அகழிகளும் கம்பரின் விளக்கங்களும்

அயோத்தியின் அகழி உலக இயல்பிற்கு ஏற்றதாக பாதுகாப்பு அரணாக உள்ளது. இலங்கையிலோ பாதுகாப்பற்ற தன்மையை விளக்குகிறது. அயோத்தியில் பாதுகாப்பு கவசமாக முதலைகள் உள்ளன என்றும், சரணாலயமாகவும் பறவைகளின் உல்லாச இருப்பிடமாகவும் இலங்கை அகழி உள்ளது. அயோத்தி நகரின் வனப்பு, மேகத்தையும் மழையாகப் பொழிய வைக்கிறது. இலங்கையிலோ வறட்சியான மேகமாகக் காட்டப் பட்டுள்ளது. அயோத்தியின் அகழியில் போர்க்காலத்தில் அரக்கர்கள் மோதுவதுபோல் முதலைகள் உள்ளன. இலங்கையிலோ வனப்புமிக்க பசுஞ்சோலையாகவும், வாசனைத்திரவியங்கள் நிரம்பப்பெற்ற நந்த வனமாகவும், யானை, குதிரை, பெண்கள் தத்தம் இருப்பிடம் மாதிரி அகழியில் இருப்பதாக முரண்படுத்தப்பட்டுள்ளன.

செல்வவளம் பயன்படாத, உபயோகமில்லா, அவசியமில்லாத, பாது காப்பற்ற இடத்தில் கொட்டிக்கிடத்தல் இயற்கைக்கு முரணானது.

இத்தகைய முரண்பாடுகள் இலங்கை நகரின் அழிவிற்கு முன்னோட் டமாகவும் எதிரிகளை வரவேற்கும் முகமாகவும் இலங்கை அகழி சித்தரிக்கப்பட்டுள்ளது. ஒரு நாடு எப்படி இருக்க வேண்டும்,

எப்படியெல்லாம் இருக்கக்கூடாது என்பதை அரண்கள் வாயிலாக தன் உள்ளக்கருத்தை ஏற்றிப் பாடியுள்ளார்.

முடிவுரை

1. கற்பனை வளமும், கவிதை நயமும், சொற்சித்திரமும் மிக்கதாக கம்பராமாயணம் படைக்கப்பட்டுள்ளது.
2. எக்காலத்தவர்க்கும், எக்காலத்திற்கும் ஆய்விற்கு ஏற்ற தலைப்புகளில், பொருண்மை, அறக்கருத்துக்கள் கொட்டிக் கிடக்கின்றன.

கம்பன் காட்டும் கற்பனை அழகு

மெ.சிவரஞ்சனி

உதவிப்பேராசிரியர் தமிழ்த்துறை, பாரத் கல்லூரி, தஞ்சாவூர்.

பால காண்டம் பாயிரம் என்ற பொதுத் தன்மையுடைய பகுதிபோக ஆற்றுப்படலத்தில் தொடங்கி பரசுராமப் படலம் ஈறாக இருபத்துமூன்று படலங்களாக வகுக்கப்பெற்றுள்ளது. பாலகாண்டத்தில் இடம்பெறும் கற்பனை நயம், கம்பரின் இலக்கிய ஆளுமையைக் காட்டும் மகத்தான தொரு சான்றாகும்.

பாலகாண்டத்தில் நாட்டின் சிறப்பைக் கூறும்பொழுது மண்வளத்தை விட மக்கள் மனவளத்தைப் பெரிதாகப் பாடியுள்ளார்.

கம்பனின் அடிமனதில் தோன்றிய கற்பனை வளம் கோசல நாட்டைப் பாடுகையில் வெளிப்படுகிறது. உடையவர்கள் இல்லாதவர்கள் என்ற இரு பிரிவாகச் சமுதாயத்தை பிரிக்காமல் 'எல்லாரும் ஓர் நிறை என்ற சமுதாயத்தை அமைக்கிறார். வேறுபாடு இல்லாத சமுதாயம் இருந்தால் எப்படி இருக்கும் என்பதாக நாட்டுப்படலத்தில்

வண்மை இல்லை ஓர் வறுமை இன்மையால்
திண்மை இல்லை ஓர் செறுநர் இன்மையால்
உண்மை இல்லை பொய்உரை இன்மையால்
வெண்மை இல்லை பல்கேள்வி மேவலால் (84)

என்று அமைத்துள்ளார். நாட்டுவருணனை , மக்கள் வருணனை என்ற இரண்டையும் சொல்லும்போது நாட்டினுடைய வளத்தை விட மக்களுடைய வளம் சிறப்பாக இருக்க வேண்டும் என்று நினைத்த கம்பர்.

ஆசலம் புரி ஐம்பொறி வாளியும்
காசு அலம்பு முலையவர் கண் எனும்
பூசல் அம்பும் நெறியின் புறஞ் செலாக்
கோசலம் புனை ஆற்று அணி கூறுவாம். (12)

என் நயம்படப் பாடியுள்ளார். மேலும் பல வளங்களைக் கோசலத்திற்காக அமைக்கும் கவிஞன் 'அம்பு புறஞ் செலாக் கோசலம்' என்று சிறப்பிக்கிறார். பல பாடல்களில் இயற்கை வருணனையை ஈடு இணை-யின்றிப் பேசுகிறார்.

மேய வந்த எருமைகள் நன்கு மேய்ந்த பிறகு ஊரில் உள்ள தம் கன்றுகளை நினைக்கின்றன. அந்நினைவு தோன்றியவுடன் அவற்றின் மடியிலிருந்து பால் சுரக்கின்றது. இவ்வாறு ஒழுகிய பால் அன்னத்தின் மழலைப்பிள்ளை உண்பதற்கும் சாலிநெல் நன்கு தழைத்து வளர் வதற்கும் காரணமாக அமைகின்றது.

ஆனால் சாலியும் அன்னப்பறவைகளும் உண்பதற்காக அவ் வெருமைகள் இப்படிப் பாலைத் தரவில்லை எங்கேயோ இருக்கின்ற கன்றை நினைத்ததால் சுரந்த பால் எருமையோடு எவ்வித் தொடர்பு மில்லாத நெல்லுக்கும் அன்னப்பறவைக்கும் பயன்படுகிறது. என்று கவிஞன் பாடுவது வெறும் கற்பனையாக மட்டும் தோன்றவில்லை. இதனை,

சேல் உண்ட ஒண் கணாரின் திரிகின்ற செங்கால் அன்னம்
மால் உண்ட நளினப் பள்ளி வளர்த்திய மழலைப் பிள்ளை
கால் உண்ட சேற்று மேதி கன்று உள்ளிக் கணைப்பச் சோர்ந்த
பால் உண்டு துயில பச்சைத் தேரை தாலாட்டும் - பண்ணை (44)

என்று வியக்கிறார் கம்பர்.

மற்றுமொரு பாடலில் இயற்கையாக அமைந்த பொருட்களின் இருப்பிடத்தை தம் கற்பனைக்கேற்ப வடித்துள்ளார். அப்பாடல்

நீரிடை உறங்கும் சங்கம் நிழலிடை உறங்கும் மேதி
தாரிடை உறங்கும் வண்டு தாமரை உறங்கும் செய்யாள்
தூரிடை உறங்கும் ஆமை துறையிடை உறங்கும் இப்பி
போரிடை உறங்கும் அன்னம் பொழிலிடை உறங்கும் தோகை (37)

என்பதாக அமைகிறது.

கோசல நாட்டு மாட மாளிகைகள் பொன்னாலும் பூவாலும் அமைந்து குன்றுகள் மணிகள் சூட்டப்பட்டு காட்சி தருவதாகப் புனைந்துள்ளார்.

'பொன்திணி மண்டபம் அல்ல பூத்தொடர்
மன்றுகள் அல்லன மாட மாளிகை
குன்றுகள் அல்லன மணிசெய் சூட்டிமம்
முன்றில்கள் அல்லன முத்தின பந்தரே (131)

நகர அமைப்பில் சிறார்கள் குழந்தைகள் மகளிர் இளைஞர்கள் சிறந்த முறையில் பொழுது போக்க விளையாட்டரங்கங்கள் அமைந்திருந்தன

என்பதை,

பந்தினை இளையவர் பயில் இடம்- மயில் ஊர்
கந்தனை அனையவர் கலை தெரி கழகம்
சந்தன வனம் அல, சண்பகவனம் ஆம்;
நந்தன வனம் அல, நறை விரி புறவம் (79)

என்று அமைக்கிறார்.

கலம் சுரக்கும், நிதியம், கணக்கு இலா,
நிலம் சுரக்கும், நிறைவளம், நல்மணி
பலம் சுரக்கும் பெறுதற்கு அரியதம்
குலம் சுரக்கும் ஒழுக்கம் - குடிக்கு எலாம் (69)

கூற்றம் இல்லை, ஓர் குற்றம் இலாமையால்
சீற்றம் இல்லை தம் சிந்தையின் செம்மையால்,
ஆற்றல் நல் அறம் அல்லது இலாமையால்
ஏற்றம் அல்லது, இழித்தகவு இல்லையே (70)

என்ற இரண்டு பாடல்களில் பொருட்செல்வம் நிலவளம் ஒழுக்கத் துடன் கூடிய குடிச்சிறப்பு கனிம வளம் போன்றவையும் எவருமே குற்றம் செய்யாத காரணத்தால் கூற்றுவனுக்கு அந்நாட்டில் இடமில்லை என்றும், சிந்தையில் நலமுடையவர்களாக இருப்பதால் வன்மத்துக்கு இடமில்லை என்றும் அறச் செயல்கள் செய்வதால் ஆற்றல் பெருகு கின்றது. என்றும் நாட்டு வளத்தைச் சிறப்பித்துள்ளார்.

கம்பனது தமிழ்க் கற்பனைக் காட்டாற்றில், கரைபுரண்டோடும் பல்வேறு துறைகளுள் கற்பனையியல் என்ற துறை குறிப்பிடத்தக்க ஒன்றாக அமைகிறது.

கம்பனில் இயற்கைப் புனைவியல்

பேரா. பெ.கி. பிரபாகரன்
தமிழ்த்துறை, ஸ்ரீ அஹோபிலமடம் சம்ஸ்க்ருதக் கல்லூரி, மதுராந்தகம்

புனைவியல் வித்தகர் கம்பர்

சங்க இலக்கியங்களில் வரும் இயற்கைக் காட்சிகள் அகப்பொருளையே பெரிதும் தழுவி நிற்றல்போல, இராமகாதையில் வரும் இயற்கைக் காட்சிகள் கதைகளோடு இயைந்து நிற்கக் காண்கிறோம். இயற்கைப் புனைவுகளின் வாயிலாகவே காப்பிய மாந்தர்களின் இன்ப துன்ப பெருமை சிறுமைகளை ஆசிரியர் உணர்த்திவிடுகிறார். "ஞாயிறு, திங்கள் முதலியவற்றைப் பாடும்போது, அவை தோன்றுங்கால் நிகழும் உலக நிகழ்ச்சிகளை முன்னைய புலவர்கள் தொகுத்துப்பாடுவர். கம்பர் காப்பியத்தில் அப்போக்கு பெரிதும் காணப்படவில்லை. கதைப்போக்கோடு தொடர்புபடுத்தி, இயற்கையைப் பாடுவதே அவர்தம் பெருநோக்காக அமைகின்றது. அவர்தம் புனைவுகளும் தன்மை நவிற்சியாக அமையாமல் உயர்வு நவிற்சியாகவே பெரிதும் அமைகின்றன. இவ்வகைப் புனைவியலில் கம்பரைத் தமக்குவமை-யில்லாதவர்" (இரா.சாரங்கபாணி, இயற்கைவிருந்து, பக்.105) எனக் குறிப்பிடுவது மனங்கொள்ளத்தக்கது.

நயம்படும் நலப்புனைவியல்

"நல்லது செய்தல் ஆற்றீராயினும் அல்லது செய்தல் ஓம்புமின்"(புறம்.) என்ற புலவன் கருத்துப்படி நம்மால் நன்மை செய்ய இயலாவிடினும் தீமை செய்யாமலாவது இருக்கக் கற்றுக்கொள்ளவேண்டும்.

இது மக்களுக்குக் கூறப்படும் அறிவுரை. இதனை மக்கள் பின்பற்று கிறார்களா? விவாதம் வேண்டாம். ஆனால் பம்பைப் பொய்கையில் இருந்த மீன்கள் பின்பற்றினவாம். எப்படித்தெரியுமா? இராமன் சீதையைக் காணாது, உள்ளம் வருந்தித் தேடி அலைந்து உடலும் வாடியிருக்கிறான். அப்போது பொய்கையில் இருந்த மீன்கள், "நாம் இப்போது நீருக்கு மேலே வந்து நீந்தினால், நம்மைக் கண்டதும் இராமனுக்கு சீதையின் கண்கள் நினைவுக்கு வரும். அன்று சீதையின் கண்ணழகில் மயங்கி மனம் பறிகொடுத்த இராமன் இன்று அதனை நினைத்து நினைத்து வருந்தித் துயரக் கடலுள் வீழ்வான். ஆதலால்

சீதையைத் தேடித்தந்து இராமனின் துயர்தீர உதவாவிடினும். அவளது கண்களை நினைவூட்டி இன்னல் இழைக்காமலாவது இருப்போமே" என எண்ணிப் பொய்கையில் மறைந்து கொண்டனவாம். நயம்படவும் அறம்படவும் அவலச்சுவையை இயற்கையோடு இணைத்து இயைத்துப் புனையும் கற்பனை மிக உயரியதே! இதனைக் கம்பன் வரிகளில் காண்போம்.

களிப் படா மனத்தவன் காணின் 'கற்பு'எனும்
கிளிப்படா மொழியவள் விழியள் கேள் எனத்
துளிப்படா நயனங்கள் துளிப்பச் சோரும் என்(று)
ஒளிப்படா தாயிடை ஒளிக்கும் மீனது (கம்ப. இராமா. பாடல்.3717)

விடியற்காலைப் புனைவியல்

"இராமன் காடேக வேண்டும் பரதன் நாடாள வேண்டும்" என்ற கைகேயியின் சொல்கேட்டு, தயரதன் அறிவு கலங்கித் துன்புற்றான். இக்காட்சியினைக் கண்ட சேவல்கள் மனம் துடித்து. அழகான தம் சிறகுகளாகிய இருகைகளாலும் வயிற்றில் பலமுறை அடித்துக்கொண்டு கூவின. இக்காட்சி இராமனது பிரிவினைத் தாளாமல் அவை துடிப் பதைப் போலத் தோன்றின என்று கம்பர் கவினுறப் பாடுகிறார். இயற்கை யில் சேவல்கள் தம்சிறகுகளை விரித்து வயிற்றில் ஒற்றிஒற்றிக் குரல் எழுப்பிக்கூவுவது வழக்கம்.

இந்தக் காட்சியின்மீது தன்குறிப்பினை ஏற்றிப் பிறர் துன்பம் கண்டு அவை தாமும் வருந்தித் துயருற்றன எனக் கவிஞன் படைத்திருப்பது படைப்பியலின் நுட்பம். இந்நுட்பப்புனைவியல் தயரதன்பால் கழி பேரிரக்கம் உருவாகத் துணைசெய்கிறது. கம்பரின் புலமைக்கு வளம் சேர்க்கும் அக்கவிதை:

'எண்தரும் கடைசென்ற யாமம் இயம்புகின்றன ஏழையால்
வண்டுதங்கிய தொங்கல் மார்பன் மயங்கி விம்மியவாறு எலாம்
கண்டு, நெஞ்சு கலங்கி, அம்சிறை ஆனகாமர் துணைக் கரம்
கொண்டு, தம் வயிறு எற்றி எற்றி விளிப்பப் போன்றன - கோழியே'
(கம்ப. இராமா. பாடல்.1541)

ஒலி ஒப்புமைப் புனைவியல்

கோசல நாட்டின் வளத்தையும் அந்நாட்டு உயிரினங்களின் கவலை யற்ற வாழ்க்கையையும் இயற்கைச் சொல்லோவியமாகப் புனைகிறார்

கம்பர். அந்நாட்டில் அன்னப்பறவை ஒன்று தம் குஞ்சுகளை வயலிடை மலர்ந்த தாமரைப்பூவில் தூங்கவைத்து, அங்குள்ள உழத்தியர்போல் கவலையற்றுத் திரிந்து கொண்டிருந்ததாம். திடீரென கண்விழித்த அன்னக்குஞ்சுகள் தாயினைக் காணாது தவித்து, பசியால் வாடின. பாலூட்ட, இரைதர தாய் அன்னம் பக்கத்தில் இல்லை. ஆனால் அங்கே நின்றிருந்த எருமைகள் மழலையின் ஒலியைக் கேட்டதும் தம் கன்றை நினைத்து தம்மடியில் பாலைப்பெருக்கி வழியவிட்டனவாம். அப்பாலைப் பருகி அன்னக்குஞ்சுகள் துயிலத்தொடங்கின. பக்கத்திலிருந்த பச்சைத்தவளைகள் தாலாட்டின. தாலாட்டிற்குத் தவளையின் இன்னொலியைக் கம்பர் கையாளுகின்றார்.

சேல்உண்ட ஒண்கணாரின் திரிகின்ற செங்கால் அன்னம்
மால்உண்ட நளினப்பள்ளி வளர்த்திய மழலைப்பிள்ளை
கால்உண்ட சேற்றுமேதி கன்று உள்ளிக் கனைப்பச் சோர்ந்த
பால்உண்டு துயில பச்சைத் தேரை தாலாட்டும் பண்ணை

(கம்.இராமா.பாடல்.44)

கார்காலத்தில் தவளைகள் கத்திக்கொண்டிருத்தல் இயல்பு. அவற்றின் ஒலியினைக்கேட்டுப் பழகிய கம்பருக்கு, திண்ணைப்பள்ளிக்கூடத்தில் எழும்ஒலி ஒப்புமையாகத் தோன்றுகிறது. மாணவர்களின் நெஞ்சத்தில் பாடம் ஆழப்பதிய வேண்டுமென்பதற்காக ஆசிரியர்கள் சொல்லச் சொல்ல சிறார்கள் திரும்பச் சொல்லும்போது ஒலி - ஒப்புமை - ஒற்றுமை குலைகின்றது. இதனால் அது பேரொலியாக - இரைச்சலாகின்றது. இதனைக் கம்பர் உவமைப்படுத்துகிறார்.

கல்வியில் திகழ்கணக் காயர் கம்பலைக்
பல்விதச் சிறாரெனப் பகர்வன பல்லரி
செல்இடத்து அல்லது ஒன்று உரைத்தல் செய்கலா
நல் அறிவாளரின் அவிந்த நாஎலாம் (4262)

இயற்கையின் நுட்பத்தைக் கூர்ந்தறிந்து ஒலிஒப்புமைப் புனைவியலாகக் கம்பர் காட்டும் திறன் பாராட்டத்தக்கது.

முற்குறிப்புப் புனைவியல்

மாமுனி விசுவாமித்திரருடன், இராமனும் இலக்குவனும் மிதிலை மாநகரின் கோட்டை வாயிற்புரத்தை அடைந்தனர். அப்போது, அங்கிருந்த அழகிய கொடிகள் இவர்களைக் கண்டவுடன் மகிழ்ந்து

வா! வா! என்று அழைத்தனவாம். இதனைக் கம்பர்,

மையறு மலரின் நீங்கி, யான்செய்மா தவத்தின் வந்து
செய்யவள் இருந்தாள் என்று செழுமணிக் கொடிகள் தோறும்
கைகளை நீட்டி அந்தக் கடிநகர் கமலச் செங்கண்
ஐயனை ஒல்லை வாவென்(று)அழைப்பது போன்ற(து) அம்மா (.480)

எனப்பாடுவது. மிதிலை மாநகரில் ஜனகனின் பொற்கொடி சீதை இருக்கிறாள். அவளை மணந்துகொள்ள ஏற்ற மணவாளன் இராமனே எனவே, இராமா வா! வா! விரைவில் வா! என்று அந்தக் கொடிகள் அழை;த்தனவாம் முற்குறிப்புப் புனைவியலாக இக்கவிதை அமைந்து எழில் சேர்க்கின்றது.

மருதநில மாட்சிப் புனைவியல்

கம்பர் மருதநிலத்தை அரசியாக உருவகம் செய்து அவ்வரசி வீற்றிருக்கும் கோலத்தை அழகுறப் புனைந்துள்ளார். அப்பாடல்.

தண்டலை மயிகளாடத் தாமரை விளக்கம் தாங்கக்
கொண்டல்கள் முழவின் ஏங்கக் குவளைகண் விழித்து நோக்கத்
தெண்டிரை எழினி காட்டத் தேம்பிழி மகரயாழின்
வண்டுகள் இனிதுபாட மருதம் வீற்றிருக்கும் மாதோ (35)

சோலையில் மயில்கள் ஆட, மலர்கள் வண்ண வண்ண விளக்குகளாக மாற, மேகங்கள் முழங்க, நீரலைகள் திரைகளாக, வண்டுகள் இனிதுபாட, குவளைமலர்க்கண் கெண்டு மருதநில அரசி இக்காட்சியினை கண்டு மகிழ்கிறாளாம். என்னே கம்பனின் கற்பனைப் புனைவியல் வளம்.

நெஞ்சையள்ளும் புனைவியல்

மகாகவி பாரதியார் சிலப்பதிகாரத்தைப் போற்றிப் பாடும்பொழுது "நெஞ் யள்ளும் சிலப்பதிகாரம்" எனப்பாடுவார். கம்பன் வரைந்த இயற்கைப் புனைவியல் சித்திரங்களை எண்ணிப்பார்க்கும்பொழுது ஒவ்வொன்றும் ஒவ்வொரு கோணத்தில் நுண்ணிய படைப்பாக அமைந்துள்ளது. கூர்ந்த மதியால் இந்நுட்பங்களை ஆழ்ந்து அனுபவித்து மகிழ்வோர் உண்டு. சான்றாக, கோதாவரியின் வருணனையை 'நெஞ்சையள்ளும்' விதத்தில் புனைந்துள்ளான் நம் செஞ்சொற்கவிவள்ளல்.

புவியினுக்கணியாய் ஆன்றபொருள் தந்து புலத்திற்றாகி

அவியகத்துறைகள் தாங்கி ஐந்திணை நெறியளாவி
சவியுறத்தெளிந்து தண்ணென் ஒழுக்கமும் தழுவிச் சான்றோர்க்
கவியெனக் கிடந்த கோதாவரியினை வீரர் கண்டார் (.2732)

சான்றோர் கவியின் மாண்பை உரைக்கப்புகுந்தவர் தன்னையறியாது கவிதையின் இலக்கணம் சொல்கிறார்.

மயங்க வைக்கும் புனைவியல்

வேதியர் வேள்வி இயற்றும்போது வேள்விக் குண்டத்தில் தீ படர்ந்தெழ, அதனைத் தணிவிக்க அங்குள்ள மயில்கள் தம் தோகையால் விசிறுகின்றனவாம். மறையவர்களின் முப்புரிநூலுக்கும், உடுக்கைக்கும் வேண்டிய நூலினை சிக்கற நீக்கி மந்திகள் வழங்குகின்றனவாம். கடுவனே முக்கனிகளை தந்து மகிழ்கின்றதாம். பன்றிகள் கிழங்குகளை அகழ்ந்தெடுத்து வழுங்க, பச்சைக் கிளிகள் தினைக்கதிர்களைப் படைத்து உதவுகின்றனவாம். பெரிய மலைப்பாம்புகள் தீமையைத் தவிர்த்து படியாய்க் கிடந்து உதவுகின்றனவாம். இப்படிக் கொடிய விலங்குகள், பறவைகள் போன்றவற்றை முனிவர்கள் செயலாற்ற வைத்தவிதம் நம்மை மயங்கவைக்கின்றன. இந்தப் புனைவியலை,

இடிகொள் வேழத்தை எயிற்றொடும் எடுத்து உடன் விழுங்கும்
கடிய மாசுணம் கற்று அறிந்தவர் என அடங்கி
சடைகொள் சென்னியர் தாழ்வுஇலர் தாம் மிதித்து ஏற
படிகளாம் எனத் தாழ்வரை கிடப்பன - பாராய் (.2080)

எனக்கம்பர் பாடுவார்.

"கம்பராமாயணமானது, ஹோமர் எழுதிய இலியத்தையும், விர்ச்-சிலின் எழுதிய ஏனயிதையும், மில்டனின் சுவர்க்க நஷ்டம் என்ற காவியத்தையும், வியாச பாரதத்தையும்தனக்கே முதல் நூலாக விளங்கும் வால்மீகி இராமாயணத்தையும் கூடப் பொருங்காப்பிய இலட்சணத்தின் அம்சங்களுள் அனேகமாய் எல்லாவற்றிலும் வென்றுவிட்டது என்று சொல்லலாம்" என்ற வ.வே.சு. அய்யரின் ஒப்புநோக்குத் திறனாய்வு கம்பனின் இயற்கைப் புனைத்திறனுக்கு மகுடம் சூட்டுகிறது எனக் கொள்வதில் தவறில்லை எனலாம்.

கம்பராமாயணம் ஓர் அழகுக் களஞ்சியம்

ஆர்.சீதாலெட்சுமி

முனைவர் பட்ட ஆய்வாளர், இசைத்துறை, இராணி மேரிக் கல்லூரி, சென்னை.

கம்பராமாயணக் காப்பியத்தில் தமிழின் மொழியமைப்பு, சந்தம், யாப்பு, அணி, உவமை, சுவைகள், வர்ணனை என அனைத்து அம்சங்களும் நிரம்பத்திகழ்கின்றன. அவற்றுள் சில அழகுக்காட்சிகளை இக்கட்டுரையில் சுட்டலாம்.

கம்ப வண்ணம்

இந்திரனின் அடாத செய்கையினால், கௌதமனிடம் சாபம் பெற்றுக் கல்லாகிப் போனாள் அகலிகை. தாடகை வதத்திற்காக இராமனைக் கானகம் கொணர்ந்த விசுவாமித்திரர் யாகத்தை முடித்துக் கொண்டு மிதிலையை நோக்கி இராமனை அழைத்துச் செல்கிறார். அவ்வாறு காட்டின் வழியே செல்லுமிடத்து இராமபிரானின் பாததூளிபட்டு ஒரு கல் பெண்ணாக மாறுகிறது. அப்பெண் யார் என்பதை இராமனுக்கு எடுத்துக் கூறி, இராமன் அகலிகைக்கு சாபவிமோசனம் கொடுத்த அழகைப் பின்வருமாறு எடுதுரைக்கிறார் கம்பர்

இவ்வண்ணம் நிகழ்ந்த வண்ணம் இனிஇந்த உலகுக் கெல்லாம்
உய்வண்ணம் அன்றி மற்றோர் துயர்வண்ணம் உறுவது உண்டோ
மைவண்ணத்து அரக்கி போரில் மழைவண்ணத்து அண்ண லேஉன்
கைவண்ணம் அங்குக் கண்டேன் கால்வண்ணம் இங்குக் கண்டேன்!

'கால்வண்ணம் இங்குக் கண்டேன் என்று சாபவிமோசனத்தை ஒரு வரியில் விவரித்த அழகு மிகச்சிறப்பு,

இது இவ்வாறிருக்க, மிதிலை வந்தடைந்த இராமனையும் மிதிலையில் வாழ் சானகியையும், நினைந்த மக்கள், இவ்விருவரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொள்ள ஆயிரம் கண்கள் வேண்டும் என்று அழகுறப் பாடுகிறார்கள்.

நம்பியைக் காண நங்கைக்கு ஆயிரம் நயனம் வேண்டும்
கொம்பியைக் காணுந் தோறும் குரிசிற்கும் அன்னதே ஆல்

என்பது கம்பன் கவிவாக்கு. இவ்வளவு சர்ச்சையிலும் இராமனின் மொத்த அழகையும் ஒருவரும் கண்டாரில்லை. இராமனின்

தோள்களையும், பாதங்களையும், கைகளையும் பிற அவயங்களையும் தாம் கண்ட அந்த ஒரு அவயத்தின் அழகைத் தவிர, மற்ற அவயத்தின் அழகைக் காண மறந்தனர் என்பதை,

தோள் கண்டார். தோளே கண்டார்.
தொடு கழல் கமலம் அன்ன
தாள் கண்டார். தாளே கண்டார்;
தடக் கை கண்டாரும். அஃதே;
வாள் கொண்ட கண்ணார் யாரே.
வடிவினை முடியக்கண்டார்?-
ஊழ் கொண்ட சமயத்து அன்னான்
உருவு கண்டாரை ஒத்தார்.

என்று காணமுடியாமையைக் காட்டுகிறார் கம்பர்.

இவ்வாறு கம்பராமாயணச் செய்யுள் முழுதும் தமிழ் மொழியழகும், நடையழகும், கொட்டிக்கிடக்கின்றன. ஆம், கம்பராமாயணம்- ஓர் அழகுக் களஞ்சியம்தான்.

கிட்கிந்தா காண்டத்தில் அழகியல்

முனைவர் **கூ.இராஜலெட்சுமி**
உதவிப் பேராசிரியை, தமிழ்த்துறை, அரசு மகளிர் கலைக்கல்லூரி, சிவகங்கை.

முன்னுரை

வால்மீகி இராமாயணத்தைத் தழுவி, கம்பர் இராமாயணம் படைத்திருந்தாலும் கலாச்சார மரபிற்கேற்ப காப்பியத்தை வடிவமைத்துள்ளார். விருத்தப்பாவில் அமைந்த இக்காப்பியத்திற்கு இவர் இட்ட பெயர் இராமாவதாரமாகும். கதையினூடே பல வருணனைக் காட்சிகளையும் உத்திகளையும் கையாண்டுள்ளார். எதுகை உத்தியைக் காப்பியம் முழுவதும் காணமுடிகிறது. உவமை, உருவகச் சிறப்புகள் மேலோங்கியுள்ளன. பல உத்திகள் இடம் பெற்றுள்ள இக்காப்பியத்தில் கிட்கிந்தா காண்டத்திலுள்ள அழகியலை இக்கட்டுரை ஆராய்கிறது.

முருகியல் உத்தி

இயல்பாகத் தான்காணும் ஒன்றினை தனது கண்ணோட்டத்தில் கண்டு அதை எழில்படுத்தி அனைவரும் ஏற்றுக்கொள்ளும் வகையில் கூறுவது முருகியலாகும். அதாவது முருகியல் என்பதற்கு அழகியல் எனப் பொருள். படைப்புகளில் அழகான வருணனைகள் இடம்பெறுவது என்பது கதையை வெற்றியடையச் செய்யும் சிறந்த உத்திகளுள் ஒன்று.

அழகியல் அல்லது முருகியல் கொள்கை

'அழகைக் கண்டு உணர்வதாலும் அனுபவிப்பதாலும் படைப்பாளன் உள்ளத்திலே அது அகத்;து எழுச்சியைத் தோற்றுவிக்கிறது. நான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என விழுமிய உணர்வோடு பிறருக்கு எடுத்துரைப்பதே பிறரையும் அனுபவித்து இன்புறுமாறு செய்வதே படைப்பாளனின் நோக்கமாக அமைகிறது. இத்தகைய அகத்து எழுச்சியால் தோன்றுவதே இலக்கியம் என்னும் கருத்தினை மையமாகக் கொண்டு விளக்கப்படுவதே அழகியல் அல்லது முருகியல் கொள்கையாகும்" (அ.ச.ஞானசம்பந்தன், இலக்கியக் கலை, ப.125)

வெறும் உணர்ச்சிப் பெருக்கால் உருவெடுப்பது அழகு அன்று. இசையிலும் ஓவியத்திலும் பிற கலைகளிலும் ஒழுங்குணர்வு இழையோடிச் செல்வதைப் போல இலக்கியத்திலும் அது அமைதல் வேண்டும். 'கற்பனை நயமும் எடுத்துரைக்கும் முறையில் கலையழகும்

இணைந்து இயங்குகின்ற பொழுது படைப்பிலக்கியம் கவர்ச்சிமிகு கலையழகைப் பெறுகிறது. இதனோடு அழகான பொருள் வற்றாத 'இன்ப ஆற்று" எனும் கருத்திற்கேற்ப, படிப்பவரை மகிழ்விக்கவும் செய்கிறது. இந்த இருவகை இயல்புகள் படைப்பு இலக்;கியத்தில் முதன்மை இடம் பெற்று இருப்பதாகச் சுட்டிக் காட்டுவதே முருகியல் நோக்கமாகும்" (அ.ச.ஞானசம்பந்தன், இலக்கியக்கலை, ப.17)

இயற்கையோடு இயைந்த வாழ்க்கை அமைப்பு முறையை கவிச்சக்கரவர்த்தி அழுத்தமாகத் தன் காப்பியத்தில் படைத்துள்ளார். இயற்கை எழிலோடு கதையைத் தொடர்புப்படுத்தி கற்பவர்களின் அகத்தைக் குளிர வைத்துள்ளார். படிக்குந்தோறும் இன்பமயமாகத் தோன்ற வைத்துள்ளார் கம்பர். கம்பராமாயணம் முழுவதும் இவ்வுத்தி பரவிக் கிடந்தாலும் கிட்கிந்தா காண்டத்திலுள்ள பொய்கையின் எழில், மராமரத்தின் திண்மை, கார்காலத்தின் நிகழ்வுகள், மலைச்சாரலின் தன்மை போன்ற கவின்மிகு காட்சிகளில் அழகியல் உத்தியைக் கையாண்டுள்ளார்.

பம்பைப் பொய்கையின் அழகு

நறுமண மலர்களால் சூழப்பட்டுள்ளது பம்பைப்பொய்கை. அப்பொய் கையில் யானைகள் வந்து நீராடும் அளவிற்கு ஆழத்தையும் தெளிவையும் பெற்று பெரிய கடல் போன்று விளங்கிறது. அதன்; நீர் பளிங்கு போன்ற தெளிவுடையது. அங்கு பலவிதமான பறவைகள் ஒன்றாய்க்கூடிப் பலவகையாக ஒலித்து ஆராவாரம் செய்தன. பொய்கையில் பரந்து கிடக்கும் மணல்களில் அன்னச்சேவலும் பெடையும் கூடி மகிழ்கின்றன. இது முழு மதியுடன் விண்மீன்கள் இணைந்திருக்கும் ஆகாயமாகக் காட்சியளித்தது. பொய்கை நகர்வாழ் பாதாளம் ஒத்தது. விசுவாமித்திர முனிவர் வசிட்டருடன் முரண்பட்டுப் புதிய உலகு படைக்க முற்பட்டுப் புதிதாகப் படைத்த கடல் ஒத்தது. கவிவாணர் சொற்பொருள் போன்று சிறப்புற்றது பொய்கை. 'கவிஞர் காட்டிய சொற்பொருள் ஆம் எனத் தோன்றுகிறது" என்பார் கம்பன்.

பம்பைப் பொய்கையில், அன்னம் முதலிய பறவைகளின் ஒலிகள், வளம் நிறைந்த நகரின் கடைத்தெருவில் எழும் ஒலி ஆரவாரத்தைக் காட்டிலும் மிக்கனவாய் இருந்தன. பொய்கையிலுள்ள மீன்கள் இராமன் தன்னைக் கண்டால்,சீதையின் கண்ணென மயங்கிக் கண்ணீர் சிந்துவான்

என எண்ணி நீருக்குள் மறைந்தன. மூங்கில் முத்தும், யானை மருப்பும் மற்றும் பல நவமணிகளையும் திரட்டிக் கொண்டு பம்பைப் பொய்கை அடைந்த மலையருவி குழைபடு மகளிர் கோலம் ஒத்தது.

மலை வீழ் அருவி ஆறாக ஓடி, அருகில் சந்தனக் கட்டைகளை இழுத்துக் கொண்டு நகர மக்கள் அரைத்த பஞ்ச கற்பூர வாசனையும் பெற்று பொய்கையை அடைவதால், அது பல்வேறு நறுமணம் மிக்கதாகத் திகழ்ந்தது. இங்கு வாழும் முதலைகள், பொய்கையில் கலந்த மலர்த்தேன் உண்டு, கள் அருந்தியவர் அடையும் மயக்க நிலையுற்றுத் தடுமாறின. நீர்க்காகங்கள் பிறப்பு, இறப்பு அறிவிப்பன போல நீரில் மூழ்கிப் பின் மீனைக் கவ்வி மேலே எழுந்தன.

இராமபிரானுக்குத் திருமகள் போன்ற சீதையைத் தேடித்தர இயலாத அன்னம், அவள் நடை பயின்றும், குவளை அவள் கண் போன்று மிளிர்ந்தும், குமுதம் அவள் இதழ் போன்று விரிந்தும் இராமபிரானுக்கு மகிழ்வூட்ட நினைத்தன. பொய்கையில் நீராடும் வானர மகளிர் கழற்றி வைத்த அணிகலன்கள் பல்வேறு ஒளி வீசின. மேலும் இரவில் பொய்கையில்,

பூ ஒடுங்கின விரவு புள் ஒடுங்கின பொழில்கள்
மா ஒடுங்கின மரனும் இலை ஒடுங்கின, கிளிகள்
நா ஒடுங்கின மயில்கள் நடம் ஒடுங்கின, குயில்கள்
கூ ஒடுங்கின பிளிறு குரல் ஒடுங்கின களிறு (3747)

என்று இயற்கையே உறங்கிக் கொண்டிருக்கும்போது, இராம, இலக்குவனர் சீதையின் பிரிவுத் துயரால் உறக்கம் கொள்ளாமல் இருந்தனர். இவ்வாறாக பம்பைப் பொய்கையில் பலவித காட்சிகளைக் கம்பர் படைத்துள்ளார்.

மராமர வருணனை

மராமரப் படலத்தில் இராமனின் ஆற்றலை உணர்வதற்காகச் சுக்கிரீவன் மராமரத்தை எய்யுமாறு வேண்டுகின்றான். அதற்கு இராமனும் உடன்படுகின்றான். அம்மராமரங்களோ ஊழிக்காலம் பெயர்ந்தாலும் பெயராதவை. உலகம் கடல் சூழ்ந்த இந்நிலத்தைத் தாங்கி நிற்கும் ஏழு மலைகள் போல நின்றன என்பதை,

ஊழி பேரினும் பேர்வில உலகங்கள் உலைந்து
தாழும் காலத்து தாழ்வில தயங்குபேர் இருள்சூழ்

ஆழி மாநிலம் தாங்கிய அருங்குலக் கிரிகள்
ஏழும் ஆண்டுச் சென்று ஒருவழி நின்றென, இயைந்த (3867)

என்ற பாடல் மூலம் அறிய முடிகிறது.

இங்குள்ள மரங்களின் உச்சி கண்டு, அவற்றைக் கடந்து செல்லக் கதிரவனும் மதியும் தவம் புரிந்தன. வானில் தோன்றும் கிரகங்களும், நட்சத்திரங்களும் இம்மரத்தில் பூத்த மலர்களாகக் காட்சியளித்தன. வானில் திரியும் நிலாவில் ஏற்பட்டுள்ள களங்கம் இம்மரங்களின் கிளைகள் உராய்த்ததால் ஏற்பட்ட வடுவாக அமைந்தது.

மணமிக்க இம்மரத்தின் இலை, பூ, கனி முதலான காற்று அலைக்கச் சிதறி வீழ்வன நிலத்தில் விழாமல் வான கங்கையில் வீழ்ந்து அலைகடல் அடையும். பிரம்மா படைத்த அண்டத்தின் அடிமுடிவரையிலும் இம்மரம் உயர்ந்து நிற்றலால் அது திருமாலை ஒத்தது. மேருமலையிலும் பருமன் உடையது. வாலி - சுக்கிரீவர்க்;கிடை- யிலான பகையின் திண்மை போல வயிரம் பாய்ந்திருந்தன. இதன் வேர்கள் பூமியைத் தாங்கிய ஆதிசேடன் எனும் அரவன் படத்திற்குக் கீழும் புகுந்து சென்றன. கிளைகள் திசை எட்டும் பரந்து கிடந்தன. மராமரத்தின் தன்மையையும், திண்மையும் கம்பர் வர்ணித்துள்ளார்.

கார்கால வருணனை

கார்காலப்படலம் முழுவதும் இயற்கை வருணனை மிளிர்ந்து காணப்படுகிறது. மேகங்களின் வருணனை, கார்கால நிகழ்ச்சிகள், பின்மழையின் தொடக்கம், கார்காலம் முடிவு என இப்படலம் வருணனைப் படலமாகவே அமைந்துள்ளது.

மழை மேகங்கள் கூடிவரும் காட்சி ஆதிசேடன் தாங்கிய உலகமாகிய தகழியில், கடல் நீராகிய நெய் சொரிந்து, மேக மலையாகிய திரியில், சூரிய ஒளி விளக்கு ஏற்றி உண்டான கரியை வானமாகிய கலயத்தில் படியச் செய்து மகளிர் கண்ணிற்கு இடும் கண் 'மை" போன்றிருந்தது.

நன்றாகக் கருத்த மழைமேகம் இடியுடன் மின்னுவது,இந்திரன் ஆபரணப் பேழை போன்றும், மலைமீது தீ எரிப்பன போன்றும், திசைகள் சிரிப்பன போன்றும் ஓசையும் ஒளியும் மிக்கவனாய்த் திகழ்ந்தது.

வாடைக் காற்றானது எல்லா இடங்களிலும் வீசத் தொடங்கியது. அக்காற்றின் கொடுமை கடுமையாக இருந்தது. அக்காற்றில் தூசிகள் எழும்பியதாலும், மின்னல்கள் வாள்களைப் போல் விளங்கிய படியாலும், முகில்கள் பேரிகைகளைப் போல முழங்கியபடியாலும், வானகம் போர்க்களம் போல விளங்கியது. இவற்றைக் கம்பர்,

ஆர்த்தெழு துகள்விசும்பு அடைத்தலானும் மின்
கூர்த்தெழு வாள் எனப் பிறளும் கொட்பினும்
தார்ப்பெரும் பணையின் விண் தழங்கலானும்அப்
போர்ப்பெருங் களம்எனப் பொலிந்தது உம்பரே (4161)

என்ற பாடல் மூலம் விளக்கியுள்ளார்.

சானகியைப் பிரிந்து வாடும் இராமன் மீது மன்மதன் மலர்க்கணைத் தொடுக்க, அப்பொன் நெடுங்குன்றின் மேல் மேகம் மின்னலென மழைத்துளிகளைச் சொரிந்தன. அவை இந்திர வில்லிலிருந்து பாயும் அம்பென வீழ்ந்தன. மழையொடு ஒளிரும் இடியின் நெருப்புக் குழம்புகள் அம்மலையிலுள்ள இரத்தினக் கற்கள் போன்று ஒளிவீசின. வீரர்கள் யானையின் மேல் அமர்ந்து பகைப்படை மீது வேல் எறிவது போன்று மேகம் மழைத்துளிகளைப் பெய்தன.

பாடலம் வறுமைகூர, பகலவன் பசுமைகூர,
கோடல்கள் பெருமைகூர, குவலயம் சிறுமைகூர,
ஆடின மயில்கள் ; பேசாது அடங்கின குயில்கள் - அன்பர்
கேடுறத் தளர்ந்தார் போன்றும், திரு உறக் கிளர்ந்தார் போன்றும்(4173)

மரங்கள் தளிர்த்தன. பாதிரி மரங்கள் மலர்களை இழந்ததால் வறுமையுற்றன. கதிரவனுக்குக் குளிர்ச்சி உண்டாகியது. மயில்களுக்கு இன்பம் உண்டாகக் குயில்களுக்குத் துன்பம் உண்டாகியது. பெண்களின் இடையைப் போன்ற மலர்க் கொடிகள் துவண்டன. அவர்களுடைய கைகளைப் போலக் காந்தள் மலர்கள் மலர்ந்தன. செம்பஞ்சு ஊட்டிய அடிகளைப் போலத் தாமரைகள் மலர்ந்தன. இந்திர கோபப் பூச்சிகள் எங்கும் பரவின. உறங்குகின்ற பெண்களுடைய கண்களைப் போலக் குவளைகள் குவிந்தன. கணவன் வரவைக் கண்டு களிக்கின்ற தலைவியின் பற்களைப்போல முல்லைகள் அரும்புவிட்டன. கூத்தாடிகள் போன்று மயில்கள் கூத்தாடின. வள்ளல்களைப் போன்று மலையருவிகள் பொன்னைக் கொழிந்தன. விருந்தினர் வரவைக்கண்டு

உள்ளம் மகிழும் நற்குலமாதர் முகம்போல் மரங்கள் தழைத்தன. ஒளி விடுகின்ற முகில்களின் அருகில் கொக்குகள் வரிசையாகப் பறந்து செல்கின்ற தோற்றம் திருமாலின் மார்பிலணிந்த வெள்ளிய மேலாடையைப் போன்றிருந்தது.

இவ்வாறு மழைக்காலத்தில் மேகம் எழுதல், மின்னல் வீச்சு, மழை பொழிதல், வாடைக்காற்று பற்றி செய்திகளை அழகுற வர்ணித்த கம்பர் அக்கார்கால நிகழ்ச்சிகளையும் குறிப்பிட்டுள்ளார்.

வம்பார் குன்றின் அழகு

திண்ணிய வரம்பெற்ற வாலியை வீழ்த்த வேண்டும் என்று எண்ணிய இராமன், அனுமான் முதலானோருடன் சேர்ந்து வம்பார் குன்றை நோக்கி நடந்தனர். அம்மலையின் இயற்கை எழிலை கம்பர் அழகுற வர்ணித்துள்ளார். மழை உலாவிய மலைச்சாரலில், மந்தமாருதம் தவழ்ந்து மெல்லிய மணம் கமழ்ந்தது. பூங்காற்றின் இனிமையை நுகர்ந்த பொழில்கள், புன்முறுவல் பூத்தன. தண்ணறுஞ் சோலையில் விண்ணளாவி நின்ற மரங்களிடையே பின்னிப்படர்ந்த வாசமலர்க் கொடிகளில், வானர மங்கையர் ஊசலாடி மகிழ்ந்தனர். கொழுங்கொடியில் விழுந்த கிழங்கை அகழ்ந்தெடுத்தும், குறிஞ்சி மலரெடுத்துக் கொடியில் வைத்துத் தொடுத்தும் இளமங்கையர் இன்புற்றனர். இத்தகைய மலைச்சாரலின் வழியே செல்லும் போது குன்றிடை வாழ்ந்த விலங்குகளும் ஓடத்தொடங்கின.

நீடு நாகமூடு மேகம் ஓட, நீரும் ஓட, நேர்
ஆடு நாகம் ஓட, மான யானை ஓட, ஆளி போம்
மாடு நாகம் நீடு சாரல், வாளை ஓடும் வாவியூடு
ஓடு நாகம் ஓட, வேங்கை ஓடும், யூகம் ஓடவே (3937)

என்று கவிஞரின் கவியில் விலங்குகளும் அஞ்சியோடிய தன்மையைக் காணமுடிகிறது. வலிமையுடைய வீரரைக் கண்ட நிலையில், கண்ணீருகுந் தோடும் மெல்லியர்போல் கார்மேகம் மழை சொரிந்து, விண்ணிலே விரைந்து மறைந்தது. மும்மதவேழம் முடுகி ஓடிற்று. வேங்கை வெருவி ஓடிற்று. சுனைகளில் வாழ்ந்த வாளையும் பாறைகளிடையே பதுங்கியது.

இவ்வாறாக மலைச்சாரலில் நிகழ்ந்த நிகழ்ச்சிகளைக் கம்பர் கவிநயத்துடன் களித்து இன்புறத் தக்க அளவில் படைத்துள்ளார்.

தொகுப்புரை

இயற்கையோடு இயைந்த வாழ்க்கை வாழ்ந்தனர் என்பதைக் காப்பியம் மூலம் அறிய முடிகிறது. பம்பைப் பொய்கையின் அழகை உவமையாக வர்ணித்துள்ளார். இது படிப்பவர்களின் உள்ளத்தைக் கவர்வதாக அமைந்துள்ளது. மராமரத்தின் திண்மையையும், அதீத வளர்ச்சியையும் மராமரப் படலத்தில் காணமுடிகிறது. கார்காலத்தின் வருணனையை அழகுற எடுத்தாண்டுள்ளார். கார்கால நிகழ்வுகளான கார்மேகம், மின்னல், இடி, மழைத்துளி, வாடைக்காற்று போன்றவற்றை உவமையோடு ஒப்பிட்டுக் கூறியுள்ளதை அறிய முடிகிறது. மலைச்சாரலில் நெடிய மரங்களையும், அழகிய செடி, கொடிகளையும் பலவிதமான விலங்குகளையும் காணமுடிகிறது.

இவ்வாறு கிட்கிந்தா காண்டத்தில் அழகியலையும், அழகியலோடு உவமையையும் பொருத்தி கம்பர் வருணித்துள்ளார்.

கம்பனின் சில கவித்துவக் காட்சிகள்

முனைவர் **கி.ஈஸ்வரி**
தமிழ்த்துறை, இந்துக்கல்லூரி, பட்டாபிராம், சென்னை

பாட்டுவளம் படைத்த கம்பனில், சில காட்சி வளங்களைச் சொல்லும் நோக்கில் அமைகிறது இக்கட்டுரை.

நகம்பன் காட்டும் காட்சிகள் யாவும் படிமக்காட்சிகளாகும். அக்கம்பன் சொல்லாட்சியில் காட்டும் கற்பனைகள் யாவும் கண்டும் உணர்ந்தும் சுவைக்கக் கூடியன. அவற்றுள் இயற்கைக் காட்சிகள் மிக அழகானவை. இயற்கையைக் கண்டு மகிழாதவர்களே இல்லை எனலாம்.

நாட்டுவளம்

நீரிடை உறங்கும் சங்கம்;
நிழலிடை உறங்கும் மேதி;
தாரிடை உறங்கும் வண்டு;
தாமரை உறங்கும் செய்யாள்;
தூரிடை உறங்கும் ஆமை;
துறையிடை உறங்கும் இப்பி;
போரிடை உறங்கும் அன்னம்;
பொழிலிடை உறங்கும் தோகை.

இப்பாடல், இறைச்சிப் பொருள் மிகுந்ததாக அமைகிறது. நீரிடை உறங்கும் சங்கம் என்ற வரிகளில் உறங்கும் என்ற சொல்லுக்குத் தாமதச் செயலாகிய உறங்குவது என்று கம்பன் குறிப்பிடுகின்றார்.

உண்ட களைப்பு தொண்டருக்கும் உண்டு என்பதற்கிணங்க, நிழலிடை உறங்கும் மேதி என்றார். இப்பாடலில் வண்டு முரலும் என்று சொல்லாமல் உறங்கும் என்று சொல்வது, சிந்தித்து உணரத்தக்கது.

செல்வநாயகியாகிய திருமகளே உறங்குகின்றான் என்று சொல்வது கோசலநாட்டில் செல்வம் நிறைந்து இருப்பதால் திருமகளுக்கு அங்கு அழைப்பில்லை. அதனால் தாமரையிலேயே உறங்குகின்றாள் என்று கம்பர் கூறுகின்றார்.

ஆற்றுவளம்

புவியினுக்கு அணிஆய், ஆன்ற பொருள் தந்து, புலத்திற்று ஆகி

அவி அகத் துறைகள் தாங்கி, ஐந்திணை நெறி அளாவி,
சவி உறத் தெளிந்து, தண்ணென் ஒழுக்கமும் தழுவி, சான்றோர்
கவி எனக் கிடந்த கோதாவரியினை வீரர் கண்டார்.

கம்பர் கவிகளில் மிகவும் சிறந்த இப்பாடலில், ஏழு நதிகளில் ஒன்றாகிய கோதாவரியை இராம இலக்குவர்கள் காணுகின்றனர். மன்னர் கண்டார் என்று கூறாமல், வீரர் கண்டார் என்று கம்பர் பாடுகிறார். காரணம் இவர்கள் புலன்களை வென்றவர்கள். புலனைந்தும் வென்றான்தன் வீரமே வீரம் என்ற ஔவையார் வாக்கு இங்கு நினைக்கத்தக்கது.

பாட்டுவளம்

விற்பெருந் தடந்தோள் வீர
வீங்குநீர் இலங்கை வெற்பின்
நற்பெருந் தவத்த ளாய
நங்கையைக் கண்டேன் அல்லேன்
இற்பிறப் பென்ப தொன்றும்
இரும்பொறை என்ப தொன்றும்
கற்பெனும் பெயர தொன்றும்
களிநடம் புரியக் கண்டேன்.

இலங்கை சென்று மீண்ட அனுமன், இராமனிடம் தாம் கண்டதுரைக்கும் கவிதை இது.. கண்டதைச் சொல்லாமல் காணாது உள்ளுறையும் கம்பனின் பாட்டுவளத்தைக் காட்டும் வண்ணம் சொல்லின் செல்வன் சொல்லும் பாடல் இது. உண்மையில் அனுமன் கண்டது சீதையை. ஆனால், அவன் சொல்கிறான்- நங்கையைக் கண்டேன் அல்லேன். அவ்வாறாயின் கண்டது யாரை? குடிப்பிறப்பு என்னும் குணமும், சிறந்த பொறுமை என்னும் ஒரு குணமும், கற்பு எனும் ஒரு குணமும் ஆகி முக்குணங்களும் கைகோத்து நடனம் புரியும் அழகைக் கண்டேன் என்று கம்பர் காட்டுகிறார்.

இது கம்பனின் தனிச்சிறப்புக்குரிய பாட்டு. இதுபோல் எத்தனையோ பாடல்களின் களஞ்சியம், கம்பராமாயணம்.

கம்பனின் காட்சிப் படிமங்கள்

கோ. இராஜேஸ்வரி
உதவி பேராசிரியர், அ.வீ.வா.நினைவு திரு.புட்பம் கல்லூரி, பூண்டி

கம்பன் காட்டும் காட்சிகள் யாவும் படிமக்காட்சிகளாகும். அக்கம்பன் சொல்லாட்சியில் காட்டும் கற்பனைகள் யாவும் கண்டும் உணர்ந்தும் சுவைக்கக் கூடியன. அவற்றுள் இயற்கைக் காட்சிகள் மிக அழகானவை. இயற்கையைக் கண்டு மகிழாதவர்களே இல்லை எனலாம்.

மருதநிலக்காட்சி

கம்பரும் மருதநிலத்தின் வளத்தினைப் பாடும்போது,

தண்டலை மயில்கள் ஆடத் தாமரை விளக்கம் தாங்க
கொண்டல்கள் முழவின் ஓங்கக் குவளைகண் விழித்து நோக்க
தெண்திரை எழினி காட்ட தேம்பிழி மகரயாழின்
வண்டுகள் இனிது பாட மருதம் வீற்றிருக்கும் மாதோ (4)

என மருதநிலத் தாயானவள் கொலுவீற்றிருக்கும் காட்சியைக் காட்டுகிறார்.

நாட்டுக்காட்சி

கோசல நாட்டின் வளம் பற்றிக் குறிப்பிடுகையில்,

வரம்பு எலாம் முத்தம் தத்தும் மடைஎலாம் பணிலம் மாநீர்க்
குரம்பு எலாம் செம்பொன் மேதிக்குழி எலாம் கழுநீர்க்கொள்ளை
பரம்பு எலாம் பவளம் காலிப்பரப்பு எலாம் அன்னம் பாங்கர்க்
கரும்பு எலாம் செந்தேன் சந்தக் காஎலாம் களி வண்டு கூட்டம் 2

என முத்து, சங்குகள், பவழங்கள், செம்பொன்கட்டிகள் எனப் பொருட்களையும் மலர்க்குவியல், அன்னப்பறவைகள், வண்டு கூட்டங்கள், கரும்புகள், தேன் எனப்பலவகை இயற்கைகளையும் காட்சியாக்கி இன்பம் தருகிறார்.

நாட்டுவளம்

உறங்கும் என்ற சொல்லைக் கொண்டே பாடலைப் படைத்திருப்பினும் அந்நாடு வளம் மிக்கது என்கிறார். எல்லாம் இன்பமாக நிகழ்ந்தால்தான் உறக்கம் வரும். எனவே அவ்வின்பத்தைக் காட்சியாக்குகிறார். இதனை

நீரிடை உறங்கும் சங்கம் நிழலிடை உறங்கும் மேதி
தாரிடை உறங்கும் வண்டு தாமரை உறங்கும் செய்யாள்
தூரிடை உறங்கும் ஆமை துறையிடை உறங்கும் இப்பி
போரிடை உறங்கும் அன்னம் பொழிலிடை உறங்கும் தோகை 6

என்னும் பாடலில் குறிப்பிடுகிறார்.

பொய்கைக்காட்சி

தேன் என்றாலே இனிப்புப் பொருளாகும். ஆனால் 'தேன்' என்னும் சொல்லே இனிமைதரும். என்பதனை இப்பாடலில் காட்சிப் பொருளாக் குகிறார்.

ஆலைவாய்க் கரும்பின் தேனும் அரிதலைப் பாளைத்தேனும்
சோலைவாய்க் கனியின் தேனும் தொடைஇழி இறாலின் தேனும்
மாலைவாய் உகுந்த தேனும் வரம்பு இகந்து படி வங்க
வேலைவாய் மடுப்ப உண்டு மீன் எலாம் களிக்கும் மாதோ 9

கருப்பஞ்சாறு, கள், பழச்சாறு, தேன், மலர்த்தேன் இவையாயும் அளவு கடந்த அளவில்படி கடலில் கலந்தது பலவகைத் தேன்களையும் உண்டு மீன்கள் களிப்படைந்தன எனக் காட்சியாக்குகிறார். இப்பாடல் காட்சி மட்டுமின்றி வாயில் நீரையும் ஊறவைக்கிறது. கண், வாய், மெய், போன்ற புலன்களுக்கு இன்பம் பயப்பனவாக்க் காட்டுப்பட்டுள்ளது.

அன்னக் குஞ்சுகள் எருமைப்பாலை உண்டு தாமரை மலர்களில் இன்பமாக உறங்குகின்றன. தவளைகள் தாலாட்டுகின்றன. ஒலியும் உணவும் பற்றியும் இயற்கை அழகுபற்றியும் காட்சிப்படுத்துகிறார்.

உயிர்க்காட்சி

மேலும் உயிர்கள் அன்பினால் நிகழ்த்தும் நிகழ்வுகளைக் காட்சியாக்கும்போது,

சேல் உண்ட ஒண்கணாரின் திரிகின்ற செங்கால் அன்னம்
மால் உண்ட நளினப் பள்ளி வளர்த்தி மழலைப் பிள்ளை
கால் உண்ட சேற்று மேதி கன்று உள்ளிக் கனைப்பச் சோர்நத
பால் உண்டு துயிலும் பச்சைத் தேரை தாலாட்டும் பண்ன்னி 13

தூய வெண்ணிறமான சேவற்கோழிகள், தம் இரண்டு கால்களினாலும் குப்பைகளைக் கிளறியதால் குப்பைமேடுகளில் தகு-

திமிக்க இரத்தினங்கள் வெளிப்பட்டன. குருவிக் கூட்டங்கள், அந்த இரத்தினங்களை மின்மினிப் பூச்சிகள் எனக் கருதி தத்தம் கூட்டில் சேர்க்கும்.

மகளிர்காட்சி

தன் குழந்தைகட்குப் பால் ஊட்டும் தாயரைக் காட்சிப்படுத்தும்போது

தாலி ஐம்படை தழுவு மார்பிடை
மாலை வாய் அமுது ஒழுகு மக்களைப்
பாலின் ஊட்டுவார் செங்கை பங்கயம்
வால் நிலா உறக்குவிய மானுமே (58)

ஐம்படைத்தாலி அணிந்துள்ள மார்பிலே, குழந்தைகளின் எச்சில் நீர் ஒழுகும். அக்குழந்தைக்குப் பால் சோற்றை ஊட்டும் மகளிரின் செந்நிறமான கைகள், வெண்ணிறமான நிலா வந்ததால் தாமரை மலர்கள் குவிவதை ஒத்திருக்கின்றன என மகளிரின் கைகளுக்கு காட்டப்படும் காட்சி மனக்கண்முன் தோன்றுகிறது.

தொகுப்புரை

கம்பன் நாட்டுப்படலத்தின் வழி மருதநிலம், கோசலநாடு, பொய்கை, உயிர்கள், பறவைகள், மகளிர் போன்றோரின் நிகழ்வுகள் யாவும் கண்முன் காட்சிபோல மிகத் தெளிவாக உணர்ந்து சுவைக்க கூடியதாக்க் காட்டியுள்ளார்.

கம்பனின் இயற்கை வளம்

முனைவர். சு.பாஸ்கர்,
உதவிப்பேராசிரியர்- தமிழ்த்துறை, ஸ்ரீமத் ஆண்டவன் கலை மற்றும் அறிவியல் கல்லூரி,
திருவானைக்கோவில், திருச்சி

மருத நில அழகு

ஐவகை நிலங்களில் வயலும் வயல் சார்ந்த நிலப்பகுதிகளைக் கொண்ட மருத நிலத்தின் தோற்றப் பொலிவினைக் கண்ட கம்பர்

தண்டலை மயில்கள் ஆடத் தாமரை விளக்கம் தாங்கக்
கொண்டல்கள் முழவின் ஏங்கக் குவளை கண் விழித்து நோக்கத்
தென்திசை எழினி காட்டத் தேம்பிழி மகர யாழின்
வண்டுகள் இனிதுபாட மருதம் வீற்றிருக்கும் மாதோ (35)

என்று வருணிக்கிறார். குளிர்ந்த சோலைகளிலே மயில்கள் நடன மங்கையர் போல ஆடிக் கொண்டிருப்பதாகவும் தாமரை மலர்களைக் காணும் போது விளக்குகளை ஏந்தி நிற்பதாகவும் மேகங்கள் மத்தளம் போல முழங்கிக் கொண்டிருப்பதாகவும், குவளைக் கொடிகளில் மலர்கள் கண்போல் விழித்துப் பார்த்துக் கொண்டிருப்பதாகவும், நீர்நிலைகளின் அலைகள் திரைச்சீலை போல காணப்படுவதாகவும் தேனை ஒத்;த மகரயாழ் இசை போல வண்டுகள் இனிமையாகப் பாடிக்கொண்டிருப்பதாகவும் இந்த இசையும் கூத்தும் மருத நில நாயகி அமர்ந்து இரசித்துக் கொண்டிருப்பதாகவும் கம்பர் வருணனை செய்கிறார். இதில் மருத நில நாயகி என்பது இயற்கை அன்னை என்ற பொருளிலே மருத நிலத்தின் அழகை எடுத்துக்காட்டுகிறார். இயற்கையின் மீது கம்பர் கொண்ட ஈடுபாட்டைத் தெளிவாக அறிந்து கொள்ள முடிகிறது.

ஆற்றின் அழகு

மலையில் தோன்றிய நீரானது அருவியாக மாறி, ஆறாக ஓடி, வளம் செய்து இறுதியில் கடலிலே கலக்கும் என்பது இயற்கையின் நியதி இதை,

கல்லிடை பிறந்து போந்து, கடலிடைக் கலந்த நீத்தம்
எல்லையில் மறைகளாலும் இயம்பரும் பொருள் ஈது என்னத்

தொல்லையில் ஒன்றே ஆகி, துறைதொறும் பரந்த சூழ்ச்சிப்
பல்பெரு சமயம் சொல்லும் பொருளும்போல், பரந்தது அன்றே (30)

என்ற கம்பரின் பாடல் அழகுடன் எடுத்துக்காட்டுகிறது. இமயமலையில் தோன்றி கடலிலே கலக்கும் வெள்ளம் வேதத்தாலும் சொல்லமுடியாத பரம்பொருள் போன்றது என்கிறார். ஆதிமுதல் ஒன்றாகவே இருந்த நீர் பிறகு ஏரி,குளம்,கால்வாய் என்று வெவ்வேறு இ;டங்களிலெல்லம் பரந்து விரியும் இதைப்போலவே ஒரே பரம்பொருளை பல்வேறு சமயவாதிகள், பல்வேறு பெயர்களில் ஆராய்வதற்கு ஒப்பிடுகிறார்.

பல்வேறு பெயர்களில் இருந்தாலும் வெள்ளநீர் ஒன்றே. பல்வேறு சமயமாக கூறினாலும் பரம்பொருள் ஒன்றே என்ற தத்துவத்தை கம்பர் அழகாக எடுத்துக்காட்டுகிறார். பரம்பொருளை நீரோடு ஒப்பிடும் போது நீருக்குப் பெருமை சேர்ப்பதை உய்த்துணர முடிகிறது.

உயிரினங்களின் அழகு

நிலங்களில் உயிரினங்கள் தன் வாழ்க்கையை இயற்கையோடு வாழ்ந்து கொண்டிருக்க அக்காட்சியைக் கண்ட கம்பர் தன் பாடல்களில் உயிரினங்களின் வாழ்க்கையை அழகோவியமாக காட்டுகிறார். இதனை

சேல் உண்ட ஒண் கணாரின் திரிகின்ற செங்கால் அன்னம்
மால் உண்ட நளினப் பள்ளி, வளர்த்திய மழலைப் பிள்ளை
கால் உண்ட சேற்று மேதி, கன்று உள்ளிக் கனைப்பச் சோர்ந்த
பால் உண்டு, துயில, பச்சைத் தேரை தாலாட்டும்- பண்ணை (44)

என்ற பாடலில் காணமுடிகிறது. மீன் போன்ற கண்களை உடைய பெண்களைப்போல வயல்களில் சிவந்த கால்களை உடைய அன்னங்கள் அலைகிறது. பெருமையுடைய தாமரை மலர்களாகிய படுக்கையில் அன்னம் தன் இளங்குஞ்சுகளை படுக்க வைத்திருக்கிறது. காலில் ஒட்டிய சேறுடைய எருமைகள் தன் கன்றுகளை நினைக்கும் போது தானே பால் சொரிகிறது. அந்த வயலில் இருக்கும் எருமைகளின் பால் தாமரை படுக்கையில் இருக்கும் அன்னத்தின் குஞ்சுகளுக்குக் கிடைக்கிறது. அப்பாலை உண்டு பசியை போக்கிக் கொள்கிறது. பச்சைநிற தேரைகள் தம் ஒலியால் தாலாட்டு பாட, அன்னத்தின் குஞ் கள் நல்ல உறக்கம் கொள்கிறது என்கிறார் கம்பர். இதில் உயிரினங்களின் அழகை எடுத்துக்காட்டி இயற்கை வளத்தை வளமோடு காட்டுகிறார்.

கோசல நாட்டில் எருமைகூடக்கனிந்து, கசிந்து வாழ்கிறது என்றும் எருமை பாலுட்ட, தேரை தாலாட்ட அன்னத்தின் குஞ்சுகள் உறக்கம் கொள்கின்றன என்றும் கம்பர் கூறுவதிலிருந்து பறவைகளும் விலங்குகளும் பிற உயிரினங்களும் ஒன்றுக்கொன்று உதவி செய்து ஒற்றுமையாக வாழும் நாடு என்பதை உணரவைக்கிறார்.

விளைச்சலின் அழகு

இயற்கையாக விளைகின்ற பொருள்களைத் தங்களுக்கான உரிய பொருள்களாக உழவர்கள் எடுத்துக்கொள்வார். ஆங்காங்கே இயற்கை யாக விளையும் பொருள்களின் அழகை கம்பர் தம் காப்பியத்தில் எடுத்துக்காட்டுகிறார். இக்கருத்தை,

கதிர்படு வயலின்உள்ள கடிகமழ் புனலின் உள்ள
முதிர்பயன் மரத்தின் உள்ள முதிரையின் புறவின் உள்ள
பதிபடு கொடியின் உள்ள படி வளர்குழியின் உள்ள
மதுவளம் மலரில் கொள்ளும் வண்டு என மள்ளர் கொள்ளவார்(52)

என்ற பாடலில் கம்பர் காட்டுகிறார். பல்வேறு மலர்களிடம் சென்று வண்டுகள் தேனை எடுத்துக்கொள்வதைப் போல உழவர்கள் வயல்களில் நெல் மணிகளையும் நீரிலுள்ள தாமரை மலர்களையும் காய், கனிகளையும் முல்லை நிலத்தில் விளையும் பருப்பு முதலியவைகளையும் மலர், கனி மற்றும் கிழங்கு என பல்வகை விளைச்சலின் வளத்தைக் எடுத்துக்கொள்ளுவதாக கம்பர் அழகுடன் காட்டுகிறார். இதில் வண்டுகள் மலர்களின் தேனைக் கொள்வதைப் போல உழவர்கள் இயற்கையாக விளையும் பொருட்டுகளை எடுத்துக்கொள்வார்கள் என்று அழகான உவமையோடு கம்பர் இங்கே சுட்டுவது சிறப்பாக அமைகிறது.

இன்பத்தின் அழகு

கோசலை நாட்டில் எந்த தொந்தரவும் இல்லாமல் உயிரினங்கள் நிம்மதியாக உறங்கிக் கொண்டிருக்கின்றன என்று கம்பர் கூறுகிறார். இதிலிருந்து உயிரினங்கள் மகிழ்ச்சியாக இருக்கும் நிலையை எடுத்துக்காட்டுகிறார். அந்த உயிரினங்கள் இன்பமாக உறங்குவதை,

நீரிடை உறங்கும் சங்கம் நிழலிடை உறங்கும் மேதி
தாரிடை உறங்கும் வண்டு தாமரை உறங்கும் செய்யாள்

தூரிடை உறங்கும் ஆமை துறையிடம் உறங்கும் இப்பி
போரிடை உறங்கும் அன்னம் பொழிலிடை உறங்கும் தோகை (37)

என்ற பாடலில் கம்பர் காட்டுகிறார். அதாவது சங்குகள் தண்ணீரிலும் எருமைகள் மரநிழலிலும் வண்டுகள் மலர்மாலைகளிலும் திருமகள் தாமரை மலரிலும் ஆமைகள் சேற்றிலும் முத்துச்சிப்பிகள் நீர்த் துறைகளிலும் அன்னங்கள் நெற்போரிலும் மயில்கள் சோலையிலும் உறங்கிக்கொண்டிருக்கின்றன என்று கம்பர் கூறுகின்றார். துன்பமில்லா நாட்டில் உயிரினங்கள் இன்பம் அடையும் என்பதை இப்பாடல் காட்டுகிறது.

நிறைவுரை

மருதநிலத்தின் அழகையும் நீர் வளத்தின் சிறப்பையும் உயிரினங்களின் ஒற்றுமையையும் விளைபொருள்களின் வளத்தையும் உயிரினங்கள் நிம்மதியாக வாழும் வாழ்க்கையும் எடுத்துக்காட்டுவதிலிருந்து இயற்கை மீது கம்பருக்கு இருக்கும் ஈடுபாட்டையும் இயற்கையோடு இயைந்த வாழ்ந்த வாழ்க்கையும் இப்பாடல்கள்; மூலம் அறிந்து கொள்ளமுடிகிறது. 'கம்பர் இயற்கையின் நண்பர்' என்று கூறுவதே இங்கு மிகவும் பொருத்தமாக அமையும்.

உயரியவற்றை விலங்குருவிற் காட்டும் கலை

முனைவர். சரோஜினி செல்லக்கிருஷ்ணன்,

சிங்கப்பூர்

1.0 கம்பனும் காவியமும்

இலக்கு உடையதுதான் இலக்கியம். இலக்கியம் என்பது வெறும் பொறி புலன்களுக்கு இன்பம் அளிப்பதோடு நின்றுவிடாமல் அவற்றைக் கற்கும் மாந்தர்களை இலக்கு உடைய மனிதர்களாக மாற்றி அவர்களை வாழ்வாங்கு வாழச் செய்வதாகும். அதுவே உண்மை இலக்கியம். கம்பன் புதியதோர் உலகைப் படைக்க விரும்பிய மாகவிஞன். எல்லாரும் எல்லாச் செல்வமும் பெற்று இல்லாரும் உடையாரும் இல்லாத ஒப்பற்ற ஒரு நாடு உருவாக வேண்டும் என்று கனவு கண்டவன். எனவேதான், நடையின் நின்று உயர் நாயகன் ஒழுக்கம் மிகுந்த உயர் வாழ்க்கையைப் பாடப் புகுந்த, கம்பன் நல்லறங்கள் பலவற்றைத் தனது சொல்லறமாக்கி இராமனை அவற்றுக்கு இருப்பிடமாக்கி உலகிற்கு ஓர் உதாரண புருஷனாகத் தனது காவியத்தில் காட்டுகின்றான். ஆனால், அவன் அத்தோடு அமைந்து விடாமல் தனது காவியத்தில் வரும் விலங்குகளைக்கூட உயரிய உன்னத பாத்திரங்களாக்கி மனித குலத்திற்கு முன் உதாரணங்களாக நம் முன்னே உலவ விடுகின்றான். அந்த வகையில், கம்பன் எவ்வாறு உயரியனவற்றை விலங்குருவிற் காட்டும் உன்னத கலைஞனாக உள்ளான் என்பதை இக்கட்டுரை ஆராய முயலுகின்றது.

1.1 தன்னுயிரைப் புகழிற்கு விற்ற சடாயு

இராம இலக்குவர் சடாயுவினை முதன்முதலில் காணும் பகுதி வான்மீகத்தில் மிகக் குறைவாகவே காணப்படுகின்றது. சடாயுவைப் பருத்த சரீரம் மிக்க பார்க்கப் பயங்கரமாகத் தோன்றும் ஒரு கழுகாகச் சித்திரிக்கும் வான்மீகி, 'இராம இலக்குவர் வேட்டையாடச் சென்றால் சீதைக்குத் துணையாக இருப்பேன்' என்று அது உறுதி கூறியதாக மட்டுமே கூறுகின்றார். ஆனால், கம்பன் தனது காவியத்தில் சடாயுவின் பாத்திரப் படைப்பை முற்றிலும் மாற்றி அமைத்துள்ளான்.

தூயவன், இருங்கலை துணிந்த கேள்வியன்
வாய்மையன், மறுஇலன், மதியின் கூர்மையன் (2694)

எனக் கம்பன் சடாயுவின் குணநலன்களைக் கூறி அவனை நமக்கு அறிமுகப்படுத்துகின்றான்.

புறந்தூய்மை நீரான் அமையும் அகந்தூய்மை
வாய்மையால் காணப் படும்

என்னும் குறளுக்குச் சடாயுவைக் கம்பன் உவமையாக்கிப் புறந்தூய் மைக்குத் 'தூய்மையன்' என்றும் அகந்தூய்மைக்கு 'வாய்மையன்' என்றும் கூறுகின்றான். காமம், வெகுளி, கடும்பற்றுள்ளம், மானம், உவகை, மதம் எனப்பட்ட ஆறு குற்றங்கள் இல்லாத 'மறுவிலன்' என்றும் கல்வி கேள்விகளில் வல்லவன் என்பதை 'இருங்கலை துணிந்த கேள்வியன்' என்றும் மதிகூர்மையன் என்றும் எதனையும் ஆராய்ந்து அறிகின்ற 'அறிஞன்' என்றும் சடாயுவைக் கம்பன் புகழுகின்றான்.

வான்மீகத்தில் தயரதனின் நண்பன் எனக்கூறும் சடாயு, 'இப்போது அவன் எப்படி இருக்கின்றான்' என்று கேட்டதாகவோ அல்லது அவன் மரணத்தை அறிந்து பிரிவாற்றாது அழுது அரற்றியதாகவோ செய்தி ஏதும் இல்லை. ஆனால் கம்பனோ, இராமஇலக்குவர் தன் நண்பன் தயரதன் மைந்தர்கள் என்று அறிந்தவுடன், 'சடாயு பொங்கிய உவகையுடன் அவர்களைத் தழுவிக் கொள்ளும் பேரன்புடன் மலையுச்சியிலிருந்து இறங்கினான்; வேந்தர் வேந்தன் தயரதன் தடந்தோள் இரண்டும் வலியவோ என இராமனை வினவினான்' (2707) என்றும் பாடுகின்றான்'

மேலும், 'மறக்க இயலாத தனது வாய்மையைக் காத்துத் தயரதன் துறக்கம் உற்றான் என்று இராமன் சொல்ல, சடாயு நிலை தவறியவன் போல ஏக்கம் கொண்டான்; உறங்கினவன் போல உணர்வு நீங்கி மூச்சற்று வீழ்ந்தான்' (2708) என்று கம்பன் சடாயுவின் ஆற்றொணாத் துயரத்தை விவரிக்கின்றான்.

'இரவலரும், நல் அறமும், யானும் இனி என்பட நீத்து ஏகினாயே?' (2710); 'தீவினையேன், நண்பினின்றும் விலங்கு ஆனேன், ஆதலினால் விலங்கினேன் இன்னும் உயிர் விட்டிலேன்' (2711); 'குற்றமில்லாத் திருமனத்தாய்! நீ உடல் நான் உனது ஆவி என்று செப்பினாய். ஆனால், இங்கே உயிர் கிடக்க உடலை உணர்வு இறந்த கூற்றுவன் விசும்பு ஏற்றினானோ?' (2712) என்றெல்லாம் கூறிச் சடாயு புலம்புவதாகக் கம்பன் புனைந்துரைப்பது நோக்கத்தக்கது.

'உடல் இரண்டுக்கு உயிர் ஒன்று ஆனான்
பிரியவும், தான் பிரியாதே இனிது இருக்கும்
உடல் பொறை ஆம்; பீழை பாராது,
எரி அதனில் இன்றே புக்கு இறவனேல்
இத்துயரம் மறவேன்' (2716)

எனச் சடாயு கூறியதாகக் கம்பன் கூறுவது மிகவும் குறிப்பிடத்தக்கது.

அழிவி னவைநீக்கி ஆறுய்த்து அழிவின்கண்
அல்லல் உழப்பதாம் நட்பு'

என்னும் குறளையும் மிஞ்சி, 'ஒரு பகல் பழகினார் அவர் உலைவு உற்றால் உயிரையும் ஈவர்' என்னும் நட்பின் உயரிய நிலையைச் சடாயுவின் மேல் ஏற்றிக் காட்டுவது கம்பரின் இலட்சிய தாகத்தைக் காட்டுகிறது.

மேலும், இராம இலக்குவர் வனம் புகுந்தமைக்குக் காரணம் அறிந்து, 'தேவர் முதல் நாகர் வரை எவர் அவருக்கு இடையூறு செய்திருந்தாலும் அவர்களைச் செத்தவர்களாக்கி அரசை அவர்கட்கு மீட்டுத் தருவேன்' (2721) என்று சடாயு சூளுரைக்கின்றான்.

'உந்தையை உண்மையன் ஆக்கி, உன் சிற்றவை தந்த சொல்லைத் தலைமேல் கொண்டு தாரணியைத் தம்பிக்கு ஈந்த வள்ளலே! எந்தையே! நீ செய்தது யார் செய்ய வல்லார்'? (2723) என்று இராமனைப் புகழுகின்றான்.

இராமனைத் தழுவி மோந்து, பொழிந்த கண் நீரின் நனைந்து, 'என்னையும் அத்தயரதனையும் எல்லை இல் புகழ் எய்துவித்தாய்' (2724) என்று புகழ்கின்றான். 'இக் காட்டிலே வைகுதீர்; காக்குவேன் யான்' (2727) என்று காப்பு உரைக்கின்றான்; இராமன் முதலியோர் தரையில் நடக்கச் சடாயு விண் சென்று தனது திண்சிறகால் அவர்கள் நடக்கும் வழியில் நிழல் விரிக்கின்றான் (2729); பஞ்சவடியில் அவர்கள் உறைந்தபோது கூட்டிலுள்ள குஞ்சுகளைப் பாதுகாக்கும் பறவையைப் போலக் குறி கொண்டு காத்து நிற்கின்றான் (2731). ஆனால், முதனூலாகிய வான்மீகத்தில் இச்செய்திகள் சிறிதும் சொல்லப்படாதிருக்கக் கம்பன் இதனை விரித்துரைப்பது மிகவும் ஆராயத்தக்கது. உடைந்தவர்க்கு உதவுதல், உண்மை நட்புக்கு உதாரணமாக இருத்தல், அடைந்தவர்க்கு ஆதரவு தருதல் என மனித குலத்திற்கு அமையவேண்டிய மாண்பமைக்

குணங்களைச் சடாயு மீது ஏற்றி உரைப்பது கம்பன் மனித குலத்திற்கு விடுக்கும் செய்தியாக அமைகின்றது.

சடாயுவின் இறுதிக் காட்சியையும் கம்பன் வான்மீகத்திலிருந்து முற்றிலும் மாற்றி அமைத்துள்ளான். சீதையை இராவணன் கவர்ந்து சென்ற செய்தியையும் தடுத்த சடாயு அவனால் தாக்கப்பட்டுக் குற்றுயிரும் குலையுயிருமாகக் கிடக்கும் அவலமும் இராமனுக்குக் கடுங்கோபத்தை வரவழைக்கின்றது. உலகையும் தேவர்களையும் அழிக்கக் கணை பற்றுகின்றான். ஆனால், சடாயு அச்செயலைத் தடுத்து இராமனுக்கு அறிவுரை புகலுகின்றான்.

'வம்பு இழை கொங்கை வஞ்சி வனத்திடைத் தமியள்வைக
கொம்பு இழை மானின் பின்போய், குலப்பழி கூட்டிக் கொண்டீர்;
அம்புஇழை வரிவில் செங்கை ஐயன்மீர்! ஆயும்காலை
உம்பிழை என்பதுஅல்லால் உலகம்செய் பிழையும் உண்டோ? (3526)

ஆதலால் முனிவாய் அல்லை; அருந்ததி அனைய கற்பின்
காதலாள் துயரம் நீக்கி, தேவர்தம் கருத்தும் முற்றி . . . . . .
தீதுஉள துடைத்தி' (3527)

என்று சடாயு கூறும் அறிவுரைகள் மிகவும் நோக்கத்தக்கன.

இராமனைத் தனது ஆவியாக நினைத்து எல்லையற்ற அன்பை அவன்மீது பொழிந்தாலும் இராமன் கோபத்தினால் நிதானம் இழந்து முறையற்ற செயலைச் செய்ய முனைந்தபோது அவனைத் தடுத்து அவனது பிழையை உணர்த்திய நடுநிலை அறிஞனாகச் சடாயு நம்முன்னே நிறுத்தப்படுகின்றான். தமக்கென்றால் ஒரு நீதி; பிறர்க்கென்றால் ஒரு நீதி என்று வாழும் மனிதகுலத்திற்குச் சடாயு மூலம் கம்பன் விடுக்கும் செய்தியாக இது அமைகின்றது. மேலும், சீதைக்காக இறுதி வரையில் போராடித் தனது இன்னுயிரையும் ஈந்த அவனது மரணத்தைத் 'தெய்வ மரணம்' என்று கம்பன் குறிக்கின்றான். 'பாதங்கள் கண்ணின் பார்த்தான்; படிவம் கொள் நெடிய பஞ்சபூதங்கள் விளியும் நாளும் போக்கு இலா உலகம் புக்கான்' (3530) என்று சடாயு இராமன் பாதங்களைத் தரிசித்துக் கொண்டே பரமபதம் புகுந்தான் என்று கூறி வானுறையும் தெய்வத்துள் சடாயுவைக் கம்பன் வைக்கின்றான்.

'இராவணன் சீதையைத் தீண்டிலன் என்று உணர்ந்தபின் கோபம் முற்றாதவனாய்ச் சடாயு நிதானம் காட்டுகின்றான்' (3409); 'மருகி' என்று

சீதையை அழைத்து வெந்துயர் கொள்கின்றான்'; (3455) சீதையை மீட்க முடியாத தனது கையறு நிலையை இகழ்கின்றான்; (3460); 'சீதையை ஏன் தனியே விட்டுச் சென்றீர்?' எனத் தந்தையின் உரிமையுடன் கண்டிக்கின்றான்' (3505); 'துதி அறு பிறவியின் இன்ப துன்பம்தான் விதிவயம் என்பதை மேற்கொளாவிடின் மதி வலியால் விதி வெல்ல வல்லமோ?' (3508) என்று அனைத்தும் அறிந்த இராமனுக்கே அறிவுரை பகருகின்றான். 'உம் பிழை என்பது அல்லால் உலகம் செய் பிழையும் உண்டோ?' (3526) என்று இராமனை இடித்துக் கூறி அவனது மிகு சினத்தை அடக்கி அவனது இலக்கு எது என்று உணர்த்தி அவனை ஆற்றுப்படுத்துகின்றான். எல்லாவற்றிற்கும் மேலாக, 'அறம்வெல்லும் பாவம் தோற்கும்' (3458) என்னும் நம்பிக்கையோடு உயிர் துறக்கின்றான். கள்ள மனிதர்கள் கரந்து வாழும் உலகில் அவர்களுக்குப் பாடமாக வெள்ளைமனங் கொண்ட ஒரு பறவையை மிக உயரிய பண்புகளோடு காவியத்தில் உலவ விட்டு அதற்குக் கைம்மாறாகச் சென்று மீளாத வீட்டுலகப் பதவியையும் அளித்த கம்பன் ஒரு மாபெரும் கலைஞனே!

1.2. சொல்லின் செல்வன்

கம்பன் காட்டும் அனுமன் காவிய நாயகன் இராமன் அளவிற்கு உயர்ந்து நிற்பவன். 'இல்லாத உலகத்து எங்கும் இங்கு இவன் இசைகள் கூரக் கல்லாத கலையும் வேதக் கடலுமே என்னும் காட்சி சொல்லாலே தோன்றிற்று அன்றே' (3768) 'ஆற்றலும் நிறைவும், கல்வி அமைதியும், அறிவும் என்னும் வேற்றுமை இவனோடு இல்லை' (3767); மாணி ஆம் படிவம் அன்று, மற்று இவன் வடிவம் ஆணி இவ்வுலகுக்கு எல்லாம்' (3769) என்று இராமன் வாயால் புகழப்படுபவன் அனுமன். இவ்வளவு ஆற்றலும் கல்வியும் பெருமையும் நிறைந்திருந்தும் அனுமன் தற்பெருமை இல்லாதவனாக ஆன்று அவிந்து அடங்கிய சான்றோனாகக் கம்பனால் படைக்கப்பட்டுள்ளான்.

சுக்ரீவனுக்கு ஆலோசனை கூறும் அறிஞனாக இருந்தும் தன்னை, 'எரிகதிர் பரிதிச் செல்வன் செம்மலுக்கு ஏவல் செய்பவன்'(3766) என்றும், 'ஆழியாய் அடியனேனும் அரிக்குலத்து ஒருவன்'(3780) என்றும் தன்னை இராமனிடம் அனுமன் அறிமுகப்படுத்திக் கொள் கின்றான். 'வண்ணக் கடலினிடைக் கிடந்த மணலின் பலரால் வானத்தின் எண்ணற்கு அரிய படைத்தலைவர் இராமற்கு அடியார்; யான் அவர்தம் பண்ணைக்கு ஒருவன் எனப் போந்தேன்; ஏவல்

கூவல் பணி செய்வேன்' (5341) 'அண்டர் நாயகன் அருள் தூதன் யான்' (5249); 'இராமன் ஆணையால் அடியேன் நின் சேவடி வந்து நோக்கினேன்' (5250) என்று, சீதையிடம் பணிந்து பேசுகின்றான். 'இராமனுக்கு அடிமை செய்வேன் நாமமும் அனுமன் என்பேன்' (5286) என்று, இராவணன் சபையில் பெருமிதம் பொங்கக் கூறுகின்றான். 'இராமனுக்கு ஏற்றிலா அடித்தொழில் ஏவலாளனேன்; ஒரு குரங்கு, (1025) யான் இராமன் அடித்தொழில் நாயினேன்' (10206) என்று பரதன் முன் தன்னை அறிமுகம் செய்து கொள்கின்றான்.

பணியுமாம் என்றும் பெருமை சிறுமை
அணியுமாம் தன்னை வியந்து

என்னும் குறளுக்கு இலக்கணமாகக் கம்பன் தன் அனுமனை நம் கண் முன் நிறுத்துகின்றான்.

நீதியில் நின்றீர்; வாய்மை அமைந்தீர்; நினைவாலும்
மாதர் நலம் பேணாது வளர்ந்தீர்; மறைஎல்லாம்
ஓதி உணர்ந்தீர்; ஊழி கடந்தீர்; உலகு ஈனும்
ஆதி அயன்தானே என யாரும் அறைகின்றீர் (4725)

எனக் கூறும் சாம்பனது புகழுரை மூலம் 'தூமகேது எனப் புவிக்குத் தோன்றிய வாமமேகலை மங்கையரால் வரும் காமம்'(1427) இல்லாத தூமனத்தன் எனக் கம்பன் அனுமனை நம் முன்னே நிறுவுகின்றான்.

இராமதூதனாய் இலங்கை சென்று தனது உயிரைப் பணயம் வைத்துச் செயற்கரிய செயல்களைச் செய்து அக்ககுமாரனைக் கொன்று இலங்கையை எரிமூட்டிச் சீதையிடம் சூடாமணி பெற்று வந்த அனுமன் இராமனிடம் தான் இலங்கையில் செய்த வீரதீரச் செயல்களைக் கூறாது அப்படியே மறைத்து விடுகின்றான். சரணம் புகவந்த வீடணன் அனுமனது எல்லையற்ற ஆற்றலைப் புகழ்கின்றான். அதைக் கேட்டுப் பெரிதும் மகிழ்ந்த இராமன், 'என்னது ஆக்கிய வலியொடு அவ் இராவணன் வலியும் உன்னது ஆக்கினை; பாக்கியம் உருக்கொண்டது ஒப்பாய்! முன்னது ஆக்கிய மூவுலகு ஆக்கிய முதலோன் பின்னது ஆக்கிய பதம் நினக்கு ஆக்கினென்; பெற்றாய்', (6587) என்றான். ஆனால் அனுமனோ, ஒன்றும் கூறாமல், 'எழுந்து இருநிலன் உற இறைஞ்சி ஒன்றும் பேசலன் நாணினன், வணங்கினான்' என்று கம்பன் அனுமனது பணிவின் எல்லை நிலத்தை நமக்குப் படம் பிடித்துக்

காட்டுகின்றான்.

மருத்து மலையைக் கொண்டு வந்து, இலக்குவன் முதல் யாவர் உயிரையும் மீட்ட அனுமனைப் பார்த்து, 'அழியுங்கால் தரும் உதவி ஐயனே! மொழியுங்கால், தரும் உயிரும் முற்றுமே? பழியும் காத்து, அரும் பகையும் காத்து எமை வழியும் காத்தனை'(8813); மன்னனின் தோன்றினோம் முன்னம்; மாண்டுளோம்; நின்னின் தோன்றினோம், நெறியின் தோன்றினாய்' (8812) என்று 'பகவான்' இராமன் 'பாகவதன்' அனுமனிடம் நெகிழ்கின்றான். எல்லாவற்றிற்கும் மேலாக 'விடை கொடுத்த படலத்தில்', 'ஆர் உதவிடுதற்கு ஒத்தார், நீ அலால்? அன்று செய்த பேர் உதவிக்கு யான் செய் செயல் ரிது இல்லை; பைம்பூண் போர் உதவிய திண்தோளாய்! பொருந்துறப் புல்லுக!' (10352) என்று தன்னையே அனுமனிடம் இராமன் வழங்குகின்றான். ஆனால் அனுமனோ, 'வணங்கி நாணி, வாய் புதைத்து இலங்கு தானை முன் தலை ஒதுக்கி நின்ற மொய்ம்பனாக (10351) பணிவின் உச்சியில் நிற்கின்றான்.

அனுமன் செய்த உதவி காலத்தினால் செய்த உதவி, பயன் கருதாது செய்த உதவி.

'செய்யாமற் செய்த உதவிக்கு வையகமும்
வானகமும் ஆற்றல் அரிது'

என்னும் குறளுக்குக் கம்பன் அனுமனை வடிவமாக்கி நம் முன்னே நிறுத்துகின்றான்.

1.3. பிற விலங்குகள்

சீதையைத் தேடும் முயற்சியில் தோற்றுப் போன அங்கதனும் வானரர்களும் 'இனி, மாண்டுறுவதே நலம்' (4658) என்று முடிவு செய்கின்றனர். தம்பி சடாயுவின் மரணச் செய்தி அறிந்து ஆற்றாது அழுது புலம்பும் புள்ளரசு சம்பாதி அந்த மரணம் சீதையைக் காக்கவே என்று அறிந்த பின்னை 'அம்மரணம் நன்று நன்று என்று களிக்கின்றான்' (4690); 'பைந்தார் எங்கள் இராமன் பத்தினி செந்தாள் வஞ்சி திறத்து இறந்தவன் வரம்பு இல் சீர்த்தியோடு உய்ந்தான் அல்லது உலந்தது உண்மையோ'(4691) என்று வியக்கின்றான். தன் தம்பி சடாயுவைச் சூரிய வெம்மையிலிருந்து காப்பாற்றத் தனது சிறகால் அவனை மூட அதனால் சம்பாதியின் சிறகுகள் எரிந்து கரிந்தன' (4702) என்கின்றான் கம்பன்.

நாக பாசத்தால் கட்டுண்டு கிடந்த அனைவரையும் மீட்டெடுத்த கருடனைப் பார்த்து, 'கண்டிலை முன்பு; சொல்லக் கேட்டிலை; கடன் ஒன்று எம்பால் கொண்டிலை; கொடுப்பது அல்லால், குறை இல்லை; இது நின் கொள்கை; உண்டு, இலை என்ன நின்ற உயிர் தந்த உதவியானே! பண்டு இலை நண்பு; நாங்கள் செய்வது என்? பகர்தி!' (8270) என்று இராமன் அப்பறவை வலிய, தானே வந்து செய்த பேருதவியை இராமன் வியந்து வியந்து பேசுகின்றான்.

'ஆவி போம் வேலைவாய், அறிவு தந்து அருளினாய்' என வாலி இராமனிடம் மன்னிப்புக் கேட்ட சிறியன சிந்தியாதவனாக விளங்குகின்றான். ஆனால், கம்பனில் வரும் மனிதப் பாத்திரங்கள் சில சமயங்களில் தடம் புரளும் இடங்களும் உண்டு.

தம்பி மீது கொண்ட அளவற்ற பாசத்தினால் அடைக்கலப் பொருளான வீடணனை நோக்கி, 'கெடுத்தனை வீடணா நீ' என இராமன் கடுஞ் சொல் வீசுகின்றான். (8227)

'நின்ற நின் நிலை இது நெறியிற்று அன்று' (3330) என்று இலக்குவனைச் சுடுசொல்லால் சுடுகின்றாள் சீதை.

'கைகயர் கோமகள் இழைத்த கைதவம், ஐய நீ அறிந்திலை போலுமால்?' (2197) என்று பரதன் மனத்தினைச் சொல்லம்பால் புண்ணாக்குகின்றாள் கோசலை.

'மெய்யே வினை எண்ணி விடுத்த கொடுங் கய்கேசி கருத்து இதுவோ?' (8685) என்று சீதை கைகேயியை நிந்தனை செய்கின்றாள்.

ஆனால், கம்பன் காட்டும் விலங்குகள் (வாலியைத் தவிர) மிக உன்னத பாத்திரங்களாக அமைந்துள்ளன. பிறருக்காக வாழ்கின்றன; அவர்களுக்காகத் தம்முயிரையும் தியாகம் செய்கின்றன; அடக்கமும் அமைதியும் அன்பும் பண்பும் ஒழுக்கமும் உயர் குணமும் வாய்க்கப் பெற்ற உத்தம திலகங்களாக வாழ்கின்றன.

1.4 முடிவுரை

'பேடையைப் பிடித்து, தன்னைப் பிடிக்க வந்து அடைந்த பேதை
வேடனுக்கு உதவி செய்து விறகிடை வெந்தீ மூட்டி
பாடுறு பசியை நோக்கி, தன் உடல் கொடுத்த பைம்புள்
வீடு பெற்று உயர்ந்த வார்த்தை வேதத்தின் விழுமிது அன்றோ' (6473)

என்றும்,

சரண் எனக்கு யார் கொல் என்று சானகி அழுது சாம்ப,
அரண் உனக்கு ஆவென்; வஞ்சி! அஞ்சல்! என்று அருளின் எய்தி,
முரணுடைக் கொடியோன் கொல்ல, மொய் அமர் முடித்து, தெய்வ
மரணம் என் தாதை பெற்றது என்வயின் வழக்கு அன்று ஆமோ?
(6477)

என்று, வீடணனின் சரணாகதியை ஏற்பது என்னும் தனது முக்கிய முடிவிற்கு இவை போன்ற விலங்குகளின் வாழ்க்கைப் பாடங்கள்தாம் அன்று முன்னுதாரணமாகத் தனக்கு அமைந்தன என்று இராமன் கூறுவது மிகவும் கவனிக்கத்தக்கது.

இவ்வாறு, கம்பன் தனது காவியத்தில் உயரியன பலவற்றையும் விலங்குகளின் மீதேற்றி அவற்றின் மூலம் மனிதகுலத்தை வாழ்விக்க எண்ணுகின்றான். 'ஆறறிவுக்கும் கீழான விலங்குகளே இவ்வாறு உயர்ந்த வாழ்க்கை வாழ்ந்தால் ஆறறிவு உடைய மனிதர்களே நீங்கள் எவ்வாறு வாழ வேண்டும் என்பதைத் தீர்மானியுங்கள்' என்பதே கம்பனின் காவிய உத்தி.

பிரதிக் குறியியல் பார்வையில் கம்பராமாயணம்

முனைவர். ஆ.பாண்டி
சிவகங்கை

வாசகனால் புதிய பொருண்மைகளை வெளிப்படுத்திக்காட்டும் இலக்கியம், படைப்பாளனை ஓரம் கட்டிவிட்டு, வாசகனை நோக்கி இன்று திரும்பியுள்ளது. இலக்கியம் தனக்குள் பொதிந்து கிடக்கும் அர்த்தம், அர்த்த மாறுபாடுகள் குறித்து வாசகன் வழியாகப் புலப்படுத்திக் கொள்வதால், வாசகனை முதன்மையாக்கியுள்ளது. எனவே வாசகன் - பிரதி இரண்டிற்குமான உறவுநிலை புதிய மாறுபட்ட பொருளுரைப்புத் தளத்திற்கு இட்டுச் செல்கிறது. இத்தகைய, கருத்தமைவுமுறை தொன்மை சான்ற இலக்கியங்களைப் புதிய கண்ணோட்டத்தில் அணுகி, அவற்றில் பொதிந்துள்ள கருத்தமைவுகளை வெளிப்படுத்த துணை செய்வதாக உள்ளது. இவ்வகையில் கம்பராமாயணம் ஒரு தொன்மை சார்ந்த இலக்கியமாக விளங்குகிறது. அதனைப் பிரதிக்குறியியல் வாசிப்பிற்கு உட்படுத்தி அதன் பிரதித் தன்மைகளையும், பல்பிரதித்துவத்தையும், குறியீடுகளையும் எடுத்துரைப்பது இக்கட்டுரையின் நோக்கமாக அமைகிறது.

பிரதிக்குறியியல்

"குறியியலும், அமைப்பியலும் ஒன்றிணைந்திருப்பதால் உருவான சிந்தனையே பிரதிக்குறியியல் ஆகும்". அதாவது இலக்கியத்தை ஒரு பிரதியாகப் பார்த்து, அதன் பன்முக அர்த்தப் புலப்பாட்டை இலக்கியப் பொருளுரைப்பு, இலக்கிய வாசிப்பு மற்றும் இலக்கியச் செயல்பாடு என்ற நிலைகளில் அணுகுகின்ற ஒரு கருத்தாக்கம் எனலாம். "வாசகனால் பொருளுரைப்புச் செய்யப்படும் பொழுதுதான் பிரதி உருவாகிறது"2 என்று கூறிய உம்பர்டோ ஈகோ, பிரதியின் வாசிப்பையும் அர்த்த உற்பத்தியையும் அடிப்டையாகக் கொண்ட மாறுபட்ட பொருளுரைப்பு எனும் கருத்தை முன்வைத்தார்.

கம்பராமாயணத்தில் பிரதித்தன்மை

மொழிசார் கலைவடிவம் மற்றும் மொழிசாரா கலைவடிவம் ஆகிய இரண்டினுள் மொழிசார் கலைவடிவம் பன்முகப் பொருள், பல்பிரதித்துவம் போன்ற கருத்து விரிவுகளுக்கு ஏற்றதாக உள்ளது. இவ்வகையில் கம்பராமாயணம் மொழிசார் கலைவடிவமாக உள்ளது.

கம்பராமாயணம் பிரதித்தன்மை பெற்றுள்ளதை பின்வரும் கருத்துக்கள் வழியாக நிறுவலாம்.

1. ஒருங்கிணைவு (Cohesion)
2. ஒருமைப்பாடு (Cohernce)
3. உள்நோக்குடைமை (Intentionality)
4. ஏற்புடைமை (Acceptability)
5. தகவலுடைமை (Informativity)
6. சூழல் இயைபுடைமை (Situationality)
7. பிற பிரதித் தொடர்புடைமை (Inter-textuality)

கம்பராமாயணத்தில் இடம்பெற்றுள்ள பாடல்கள் இவ்வெழுவகைப் பண்புகளையும் பெற்று பிரதித் தன்மையுடையனவாக விளங்குகின்றன. உதாரணமாக அயோத்தியக் காண்டம் வனம்புகு படலத்தில் இடம்பெற்றுள்ள பாடல்வழி விளக்கப்படுத்தலாம்.

பூநனை சினைதுன்றிப் புள்ளிடை யிடை பம்பி
நானிற் நளிர் வல்லிக் கொடி நவையில் பல்கி
மானின் மயின்மாலை குயிலினம் வடுகானம்
தீ நிகர் தொழிலாடைத் திரை பொருவது பாராய்"

இப்பிரதியின் பொருளானது, "மானின் கூட்டங்களும் மயிலின் கூட்டங்களும் குயிற் கூட்டங்களும் சஞ்சரிக்கப்பெற்ற இந்தக் காடானது, பூவரும்புகளுடைய கிளைகளோடு நெருங்கி பலவகை நிறமுள்ள குளிர்ந்த வல்லியெனப்படும் கொடிகள் குற்றமில்லாதன மிகுந்து இருப்பது, ஓவியக்காரன் தனது எண்ணத்திற்கு ஏற்ப, பூத்தொழில்கள ளமைந்த பல்வண்ணத்திரையாடையைப் போல ஒத்திருப்பதை பார்" என்பதாகும். இவ்வகையில் இப்பாடலானது சொல்லாடல் முறையில் நேர்பொருளையும், குறைந்தபட்ச மறைமுகப் பொருளையும் புலப்படுத்து வதாக அமைக்கப்பட்டுள்ளது. மறைபொருளாக 'குற்றமில்லாத சீதை, நகர் நீங்கி வனத்திற்குள் வந்திருப்பதைக் கொள்ள முடியும். மேலும் அயோத்தியக் காண்டத்தில் இருந்து, பாலகாண்டத்தை இணைத்துப் பார்க்கச் செய்வதால் பிரதித் தன்மையைப் பெற்ற ஒன்றாகவும் இப்பிரதி அமைந்துள்ளது.

ஒருங்கிணைவு (Cohesion) மற்றும் ஒருமைப்பாடு (Cohernce)

'பிரதி காட்டும் உலகின் ((Textual World) பகுதிகள் (Componets),

அதாவது பிரதியின் புறவடிவத்துள் மறைந்திருக்கும் கருத்தாக்கங்களும் உறவுகளும் (Concepts and Relations) பரஸ்பரம் பொருந்துவதாகவும் பொருத்தப்பாடானதாகவும் இருத்தல் ஒருமைப்பாடு எனலாம்."

சான்றாக தசரதனின் முதிர்பருவ நரைமுடியின் காரணத்தால், இராமபிரான் நாட்டை ஆளவேண்டுதற்பொருட்டு முடிசூட்டு விழா தொடங்கியது. ஆனால் பாலபருவத்தில் இராமன் கூனியின் மீது தொடுத்த விளையாட்டு கூனியின் சூழ்ச்சியால் வனவாசத்திற்குக் காரணமாகிவிட்டது. சீதை கோடு கடந்ததால் போருக்குக் காரணமாகிய தோடு. இராவணனின் அழிவுக்கும் காரணமாகியது. வனவாசத்திற்குள் இருக்கும் குற்றமில்லா சீதையை நினைத்துப் பார்க்கின்ற பொழுதே காரணகாரியத் தொடர்பு பிரதியின் புறவடிவத்துள் மறைந்திருக்கும் கருத்தாக்கங்களும், உறவுகளும் இப்பிரதியோடு பொருந்தி விடுகின்றன. இவ்வகையில் இப்பிரதி ஒருமைப்பாடு கொண்டு பிரதித் தன்மையைப் பெற்றுள்ளதைக் கூறலாம்.

உள்நோக்குடைமை (Intentionality)

"வடிவம், பொருள் ஆகியவற்றில் புதுவிதமான சிந்தனைகளைப் புகுத்தச் செய்வது உள்நோக்குடைமை எனப்படும்"5.

கம்பராமாயணத்தைப் பொறுத்த வரையில் முதன்மைப் பிரதியில் இருந்து, இது தழுவல் செய்யப்பட்ட பிரதியாகும். மேற்குறிப்பிட்ட பிரதியின் சொல்லாடல் தன்மையில் ஆசிரியனின் குரல் மறைக்கப்பட்டு, இராமனின் குரல் ஓங்கி ஒலிக்கிறது. அதாவது நாட்டை விட்டு காட்டிற்குத் தன்னுடன் வந்துள்ள சீதையின் பெருந்துயரை நீக்கும் பொருட்டு ஒலிப்பதை உள்நோக்கமாகக் கொண்டுள்ளது. கம்பராமாயணத்தில் இடம்பெற்றுள்ள ஒவ்வொரு பிரதியும், ஏதாவதொரு உள்நோக்கத்தைப் பெற்றே அமைந்திருப்பதால், பிரதியின் மையப்பொருள் நகர்விற்கும், தொடர்ச்சியான வாசிப்பிற்கும் இது துணை செய்கிறது.

ஏற்புடைமை (Acceptability)

"இது பிரதியை நுகர்வோரின் மனப்பாங்கு தொடர்பானது"6, அதாவது ஒரு பிரதி நுகர்வோருக்கு ஏதோ ஒரு வகையில் பயனுடையதாக அல்லது ஏற்றதாக இருத்தல். காலம் கடந்தும் இக்கம்பராமாயணப் பிரதியானது, இன்னும், பயன்பாட்டுக்குரிய ஒன்றாக அமைந்துள்ளது. நுகர்வோன், இப்பிரதியின் வழியாக அன்றைய மாந்தர்களின்

வாழ்வியலை அறிந்து கொள்கிறான்;. சான்றாக திருமாலின் பத்து அவதாரங்களை அறிந்து கொள்ளுதல், அவை வழியாக உலக நியதிகளைப் புரிந்து கொண்டு வாழ்க்கையை மேற்கொள்ளல், நம்பிக்கை, சமயம் போன்றவற்றோடு தொடர்பு கொள்ளுதல் போன்ற வகையில் நுகர்வோனுக்குப் பயனுடையதாக அமைந்துள்ளது.

தகவலுடைமை (Informativity)

எந்த ஒரு பிரதியும் குறைந்தபட்சம் ஏதோ ஒரு தகவலைக் கொண்டிருக்கும். பிரதிக்குள் பொதிந்துள்ள தகவலை அறிந்து கொள்வது வாசகனின் வேலையாக உள்ளது. சான்றாக இப்பிரதியில் பயின்று வரும் பாத்திரங்களின் பண்புகள், செயல்பாடுகள் வழியாக உணரப்படும் அறக்கருத்துக்களைக் குறிப்பிட முடியும்.

சூழல் இயைபுடைமை (Situationality)

சூழல் இயைபுடைமை என்பது ஒரு பிரதியை அதன் சூழலோடு பொருத்தப்பாடுடையதாக்கும் காரணிகள் தொடர்பானதாகும். எந்த ஒரு கருத்தையும், உருவ அமைதிக்கு ஏற்பவும், பொருள் புரிதல் தன்மைக்கு ஏற்பவும் உருவாக்க வேண்டும். சான்றாக தசரதனின் முதிர் பருவச் சூழல் காரணமாக, இராமனுக்கு முடிசூட்டத் தீர்மானித்தல் காரியமாகிறது. கூனியின் வஞ்சினம், கைகேயின் மனநிலையை மாற்றுவதற்கான சூழல் ஆகியவற்றிற்கு இராமனின் சிறுபிள்ளை விளையாட்டு காரணமாகிறது. தசரதன் கைகேயிக்கு அளித்த வாக்குறுதி, நாடு ஆளவேண்டிய இராமன் பதினான்கு வருடம் காடு ஆளவேண்டிய சூழலைத் தருகிறது. சீதையின் மயக்கச் சூழல் கோட்டினைத் தாண்டச் செய்துவிடுகிறது. இராவணனின் தந்திரம், காமம் அவனது அழிவுக்குக் காரணமாகிவிடுகின்றது. இவ்வகையில் பல்வேறு அகப்புறச் சூழல்களினால் 'இராமவதாரம்' என்ற கருத்தாக்கம் காரண காரியத் தொடர்போடு, உருவத்திலும், பொருள் புரிதல் தன்மையிலும் சிறப்பான இடத்தைப் பெற்றுள்ளது.

பிற பிரதித் தொடர்புடைமை (Inter-textuality)

பிற பிரதித் தொடர்புடைமையானது, ஒரு பிரதியை உருவாக்குவதில் அல்லது பயன்படுத்துவதில் அதற்கு முன் உள்ள ஒன்று அல்லது பல பிரதிகள் பற்றிய அறிவின் தொடர்பினை இது குறிப்பதாகும். இக் கம்பராமாயணப் பிரதி, இராமனின் அவதாரத்தைக் குறித்து, உயர்தனிச்

செம்மொழியாகிய சமஸ்கிருத மொழியில் வேதகாலகட்டத்தில், வான்மீகி முனிவரால் யாக்கப்பட்ட 'இராமாவதாரத்தை' தமிழில் ஆக்கப்பூர்வமான அமைப்பாக கம்பன் மாற்றினான். இவ்வகையில் கம்பராமாயணம், வான்மீகி இராமாயணத்தை முன்பிரதியாகக் (Pêïõïåõ) கொண்டமைந்து, அதன் இணைப் பிரதியாகியுள்ளது. கம்பராமாயணத்தை முன்பிரதியாகக் கொண்டு, இராமாயண நாடகம், இராமாயண ஒயில், இராமாயணக் கும்மி, இராமாயணக் கதைப்பாடல், நாட்டுப்புறப் பாடல், நவீன இலக்கிய வடிவங்களான கவிதை, நாவல், சிறுகதை போன்றன இணைநிலைப் பிரதிகளும்,(ஜீயசநடயட வநஒவ) இடையீட்டுப் பிரதிகளும்(வீவெநச வநஒவ) உருவாகியுள்ளன.

கம்பராமாயணத்தில் குறியீட்டுக்குறி

குறியீட்டுக்குறியை ஒரு குறிப்பீடு வேறொரு குறிப்பீட்டுக்குப் பதிலாக நிற்பர் என்று ஹாக்ஸ் குறிப்பிடுகிறார். மேலும்குறியீடு என்பது சொல்லின் அர்த்தத்தைத் தாண்டி ஓரர்த்தம் என்கிறார் நுஃமான். அதாவது சொல்லின் அர்த்தமானது, மேல்நிலையில் புலப்படுவது, சொல்லைத் தாண்டிய அர்த்தம் ஆழ்நிலையில் புலப்படுவது. இந்த ஆழ்நிலையில் கிடைக்கின்ற அர்த்தமே குறியீடு ஆகும்.

இங்கு அயோத்தியக் காண்டத்தில் இடம்பெற்றுள்ள சொற்கள் வழியாக சில குறியீட்டுக் குறிகள் பெறப்பட்டுள்ளன. அவற்றுள் ஒன் றிரண்டைப் பின்வரும பட்த்தின் வழியாக விளக்கப்படுத்தலாம்.

படம் ஒன்றில், ஈரம் என்ற சொல், மேல்நிலைப் பொருளாக குளிர்ச்சி என்ற ஒரு பொருளை மட்டும் தந்து நிற்கிறது. அதே சொல் ஆழ்ந்து வாசிக்கப்படுகின்ற பொழுது,'அன்பு' என்ற குறிப்பீட்டையும் 'விலைமகளிர்' என்ற குறியையும் தருகின்றது. (அயோத்தியா காண்டம், வனம்புகு படலம் (பாடல் எண்.1) ப.507).

இதுபோன்று ஏராளமானக் குறியீட்டுக் குறிகளைப் பெறுவதற்கு கம்பராமாயணம் இடம் தருகிறது. கொன்றை மலர், காந்தள் மலர், மான், மயில், கிளி, வல்லிக் கொடி ஆகியவை சீதைக்குக் குறியீட்டுக் குறிகளாகியுள்ளன..

முடிவுகள்

வாசகனால் ஒரு பிரதி பொருண்மை பெறுகிறது. அப்பொருண்மை மாறுபட்ட தன்மையிலும் அமையலாம். மொழிக்குறி (ஏநசடியட),

மொழிசாரா குறி (ழேஸீ ஏநசடியட) அமைந்த யாதொன்றையும் பிரதியாகக் கருதுவதற்கு இடமுள்ளது. கம்பராமாயணம் செறிவுள்ள பிரதியாகக் குறிப்பிடலாம்.

பிரதிக்குறியியல் வாசிப்புக் கோட்பாடு வழி, இலக்கியத்தை அணுகுகின்ற போது, அவ்விலக்கியத்தில் பல்பிரதித் தன்மை, பன்முக அடையாளங்கள், அர்த்த மாறுபாடுகள் ஆகியனவற்றைக் கண்டடையலாம்.

கம்பராமாயணப் பிரதி ஏழுவகையான பிரதிப் பண்புகளைப் பெற்று, முழுமையான பிரதியாகத் திகழ்கிறது. இராமன், சீதை போன்ற பாத்திரங் களுக்கான குறிகளாக, இயற்கைப் பொருட்கள் பயின்று வந்துள்ளன. கம்பராமாயணப் பிரதியின் அறுவகைக் காண்டங்களையும் இணைப் பிரதிகளாகக் கொள்ளமுடியும். கம்பராமாயணத்தை முன்பிரதியாகக் கொண்டு, பல்வகைப்பிரதிகள், தமிழ் இலக்கிய உலகில் உற்பத்தி ஆகியுள்ளன.

செவ்வியல் நோக்கில் கம்பன்

முனைவர். யாழ்..சு.சந்திரா
இணைப்பேராசிரியர்-தமிழ்த்துறை
ஸ்ரீமீனாட்சி அரசினர் மகளிர் கலைக்கல்லூரி (தன்னாட்சி),மதுரை

12-10-2004 அன்று உயர்தனிச் செம்மொழியாகத் தமிழ்மொழியை இந்திய அரசு அறிவத்தது அன்று தொடங்கி இந்தியாவில் அரசியல், சமூகத்தளங்களில் செவ்வியல் கலை வீசிக்கொண்டிருக்கிறது. அலையில் கரை சேர்ந்தவைகளாக மிகச் சமீபத்திய மொழிகள் சில செவ்வியல் தகுதிகளைப்பெற்றுள்ளன. மேலும் தகுதி பெற்ற தமிழ் மொழியின் இலக்கியங்களில் செவ்வியல் கூறுகளைப் பொருத்திப் பார்ப்பதுமான ஆய்வுகள் பெருகிவருகின்றன. அந்த வகையில் , தமிழ்க்காப்பியமான கம்பராமாயணத்தைச் செவ்வியல் நோக்கில் காணமுற்படுகிறது இவ்வரைவு .

செவ்வியல் மொழிகள்

செவ்வியல் பண்பு என்பது காலப்பழமையுடனும் செம்மையுடனும் தொடர்புபடுத்தியே சுட்டுகின்றன.

வடமொழியைச் செவ்வியல் மொழி என கிரேக்க , இலத்தீன் மொழிகளோடு இணைத்துப் பேசியவர் ஐரோப்பியரான சர். வில்லியம் ஜோன்ஸ் என்பவரைச் சாரும். அவர் கல்கத்தாவில் 1784 ஆம் ஆண்டு, ஆசியக் கல்விச்சங்கம் என்ற அமைப்பினை உருவாக்கினார். அந்நிறுவனத்தில் வடமொழி நூல்கள் ஆங்கிலம், ஜெர்மன் மொழிகளில் வெளியிடப்பட்டன (குழந்தைசாமி .வா. செ. உலகச்செவ்வியல் மொழி களின் வரிசையில் தமிழ், ப. 62)

இந்தியப் பண்பாட்டு மொழியாக வடமொழியும் இஸ்லாமியர்களின் பண்பாட்டு மொழிகளாக பாரசீகம், அரேபியம் ஆகிய இரண்டும் ஏற்கப்பட்டு, இந்த மூன்று மொழிகளும் இந்தப் பின்னணியில் செவ்வியல் மொழிகள்(Classical Languages) எனக் குறிப்பிடப்பட்டன. (மேலது, ப. 59) இப்பட்டியலில் பாலியும் பிராகிருதமும் இணைக்கப்பட்டுள்ளன. சீனம், ஹிப்ரு ஆகியவையும் உலகச் செம்மொழிகளாக உள்ளன.

செவ்வியல்

செவ்வியல் என்பதற்கு ஆங்கிலத்தில் ' ' என்ற சொல் சுட்டப்படுகிறது. இந்தச் செவ்வியல் தன்மைக்கு, குரோலியல் கலைக் களஞ்சியம், இலக்கியத்தில் செவ்வியல் தன்மை என்பது கிரேக்கர்களின் தொன்மையானவையான றோமர் முதல் பிளேட்டோ, அரிஸ்டாட்டில் போன்றவர்களின் இலக்கியங்களில் பிரதிபலிக்கும் மொழி அமைப்பு அல்லது உள்ளடக்கத்தின் குணாதிசயங்களான பகுத்தறிவு, தெளிவு, ஒழுங்கு , தன்னடக்கம், மனித நேயம் போன்றவற்றைக் கொண்டதாகும்' எனக் குறிப்பிடுகிறது.

பிரிட்டானியா கலைக்களஞ்சியம், 'அழகுணர்ச்சி சார்ந்த அம்சங்களில் பயன்படுத்தப்படும்பொழுது செவ்வியல் தன்மை என்பது பழமை வாய்ந்த கலைப்படைப்பகளிலுள்ள ஒத்திசைவு, தெளிவு, தன்னடக்கம், பொதுமை, இலட்சியம் ஆகிய கூறுபாடுகளைக் கொண்டதாகக் கருதப்படுகிறது.

இவற்றின் அடிப்படையில் தமிழ் மொழியின் பண்டைய கால இலக்கியங்களில் நாற்பத்தோரு நூல்களைப் பட்டியலிட்டுச் செவ்வியல் தமிழ் நூல்கள் சுட்டப்படுகிறன்றன. அதாவது ஒரு மொழியின் எல்லாக்காலகட்ட இலக்கியங்களிலும் பொருத்திப் பார்ப்பது அந்த இலக்கியத்தின் தகுதியை உயர்த்திப் பிடிக்க உதவுவதாக அமைகிறது.

செவ்வியல் பண்புகள்

'செவ்வியல் ' என்ற சொல் நுண் பொருளை உணர்த்துவதாக இருப்பதுடன் எண்ணங்களைக் குழப்பும் சொல்லாகவும் அமைகிறது என்பர். (சாரதாம்பாள்.செ, சங்கச்செவ்வியல், ப. 46) எனினும், செவ்வியல் இலக்கியங்களின் சில கூறுகளை ஆய்ந்து செவ்வியல் பண்புகளை அறிஞர்கள் சுட்டுகின்றன. அவை தலைமையுடைமை , மரபுடைமை , தொன்மையுடைமை, பல கூறுகளின் இணைவுடைமை, தற்சார்பின்றியிருத்தல், காரண -காரியத் தொடர்புடைமை, உருவமும் உள்ளடக்கமும் பொருந்தியமைத்தல், உத்திகள், கற்பனைகள், போலச் செய்தல், பாத்திர அமைப்பு முன்னோடியாக இருத்தல் என்பன ஆகும் (மேலது . ப. 47) இப்பண்புகள் ஒரு சிலவற்றைக் கம்பனின் படைப்பில் பொருத்திக் காண்பது ஆய்வின் செல்நெறியாகிறது.

இராமாயணம் இந்திய இலக்கியம்

இந்தியாவின் இருபெரும் இதிகாசங்களாக இலங்குவன

இராமாயணமும் மகாபாரதமும் ஆகும். இவ்வரண்டனுள் இராமாயணம் மட்டும் ஆய்வுப்பொருளாவதால், அதனைப்பற்றிக் காண்பது ஆய்வின் செல்நெறியாகிறது.

இராமாயணம் இந்திய இலக்கியம்

இந்தியாவின் இருபெரும் இதிகாசங்களாக இலங்குவன இராமாயணமும் மகாபாரதமும் ஆகும். இவ்விரண்டனுள் இராமாயணம் மட்டும் ஆய்வுப்பொருளாவதால், அதனைப் பற்றிக் காண்போம்.

மக்களிடையே வழங்கி வந்த இராமனின் கதைக்குக் காப்பிய நெறியைப் பின்பற்றிப்பெரும் இதிகாசமாக உருவாக்கித் தந்த முதல் கவி வான்மீகியாவார் (வையாபுரிப்பிள்ளை. எஸ், இலக்கிய உதயம் -இரண்டாம் பகுதி , ப. 121) ஆகவேதான், அவரை 'ஆதிகவி, என்றும் ,இராமாயணக் காப்பியத்தை ஆதிகாவியம் என்றும் சுட்டுகிறோம். இக்கதை இந்தியாவில் மட்டுமல்ல ஆசியாக் கண்டம் முழுவதிலும் பரவியுள்ளது. இதனை, 'இந்தியத் துணைக்கண்டத்தின் தேசியப் பாரம்பரியம் மிகுந்த கதையாகக் காலத்தை வென்று வாழ்வது இராமன் கதை' என்ற கூற்று அரண் செய்கிறது. (பிரேமா. இரா, இராமாயணக் கிளைக்கதைகள் ஒப்பீடு, ப. 11) இவ்வாறு இந்திய இலக்கியமாகவும் வடமொழிச்செவ்வியல் இலக்கியமாகவும் உள்ளது இராமாயணம். வடமொழிச் செவ்வியல் நூல்ப் பட்டியலில் இடம்பெறும் நூல், தமிழ்ப் பிரதியில் , அப்பட்டியல் வரையறைக்கு அப்பாற்பட்டு இருப்பினும் கதைப்பொருண்மையிலும் கட்டமைப்பிலும் இன்ன பிற கூறுகளிலும் செவ்வியல் தன்மையுடையது என்பது ஆய்வுரையின் கருதுகோளாகும்.

பாடுபொருளும் வடிவமும்

பாடுபொருளைப் பொறுத்தவரை உலகியல் உண்மைகளாகவும் மேன்மை பொருந்தியனவாகவும் தேர்ந்தெடுத்து அமைந்தனவாகவும் நிலைத்து நிற்கும் வண்ணம் அமைந்திருக்கும் என்பர். மேலும், பாடுபொருளுக்குச் செவ்வியல் இலக்கியங்கள் முதன்மைத்துவம் கொடுக்கும். அதே நேரம் பொருளிற்கேற்ப வடிவத்திற்கும் இன்றியமையாத இடம் நல்கும். பொருள் முழுவதும் வடிவத்திற்குள் அடங்கியிருக்கும். அதாவது பொருளினால் வடிவமும் வடிவத்தினாலும் பொருளும் இணைந்து நிற்கும். அதாவது வடிவச்செம்மை செவ்வியலின் அடிப்படைக் கூறாகும். (சாரதாம்பாள். செ, மு. நூ, ப. 62)

கம்பன் படைப்பின் பாடுபொருள் காசில் கொற்றத்துக் குரிசிலாகிய இராமகாதையே ஆகும்.

நடையின்நின்று உயர் நாயகன் தோற்றத்தின்
இடைநிகழ்ந்த இராமாவதாரப் பேர்த்
தொடை நிரம்பிய தோமறு மாக்கதை
சடையன் வெண்ணெய் நல்லூர் வயின் தந்ததே

(பாலகாண்டம். பாயிரம். 11)

என்பது கம்பனின் வாக்கு. இக்கதையைக் கூறுதற்குக் கம்பனாகிய படைப்பாளி எடுத்தாண்ட இலக்கிய வடிவம் காப்பியம் ஆகும்.

கிரேக்க இலக்கியவகைகளில் முதன்மையானவை காப்பியங்கள் வடமொழியிலும் காப்பியங்களே முதன்மை பெறுகின்றன. ஆகவேதான் காப்பியங்கள் மட்டுமே செவ்விலக்கியங்கள் என்ற மரபு தோன்றியது போலும். ஆனால் தன்னுணர்ச்சிப்பாக்களும் நாடகங்களும் கூட செவ்வியல் பட்டியலில் உண்டு என்பதனை நினைவில் கொள்ள வேண்டும்.

கம்பன் தான் எடுத்துக் கொண்ட இராமகாதைப்படைப்பதற்கு விரிவும் நெகிழ்வுத்தன்மையும் கொண்ட காப்பியத்தைப் படைப்புக்குரிய வடிவமாக தேர்ந்தெடுத்தமை எண்ணத்தக்கது. பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட பாடல்களுடன் விரிந்து பரந்து இலங்கும் கம்பனின் படைப்பு, பாடுபொருளும் வடிவமும் இயைந்ததாகும்.

தொன்மைத்தன்மையும் தலைமைத் தன்மையும்

செவ்வியல் தன்மையின் மிக முக்கியமான கூறாக இலங்குவன தொன்மைத்தன்மையும் தலைமைத்தன்மையும் ஆகும். காலத்தால் மிகவும் பழமையும் அதனால் முதிர்ச்சியுடையஇலக்கியங்கள் தொன்மை வாய்ந்த இலக்கியங்கள் என்று கருதப்படுகின்றன(சாரதாம்பாள். செ.மு.நூ.ப.107) அந்தவகையில் தமிழில் சங்க இலக்கியங்கள் தொன்மைத் தன்மையுடன் கூடியனவாகத் தலைமைத் தன்மையுடன் இலங்குகின்றன. ஆகவே தான், செவ்விலக்கியப் பட்டியலில் பத்துப் பாட்டும் எட்டுத்தொகையும் ஆகிய பதினெட்டு இலக்கியங்கள் இடம் பெற்றுள்ளன.

இராமாயணம் என்னும் பெயருடைய கதைத் தொகுதி, தொன்மம், புராணம் , வாய்மொழி இலக்கியம் எனப்பல்வேறு வடிவங்களில் இந்தியா முழுவதும் வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் இருந்தே வழங்கி வந்துள்ளது என்பர். (மணவாளன். அ. அ. இராமகாதையும் இராமாயணங்களும் , 'ஆய்வுத்திட்ட முன்னுரை' ப.1) அந்த வகையில் உடையது என்பது பெறப்படுகிறது. அப்பாடுபொருளைக் கம்பன் தன்படைப்புப்பொருளாகத் தேர்வு செய்துள்ளமையை,

தேவபாடையின் இக்கதை செய்தவர்
மூவர் ஆனவர் தம்முளும், முந்திய
நாவினான் உரையின்படி, நான் தமிழ்ப்
பாவினால் இது உணர்த்தய பண்பு அரோ. (பாயிரம், 10)

எனப் பாயிரத்தில் குறிப்பிடுவது, கதைத்தேர்வின்-பாடுபொருளின் தொன்மைக்குப் படைப்பாளி தரும் உறுதியாகும்.

வால்மீகியின் காப்பியம் எழுந்தபின்னர், வடமொழி முதலான இந்திய மொழிகளில் இராமாயணம் இலக்கியங்களில் இடம்பெறத்தொடங்கியது. இவ்வாறான படைப்புபொருளாகும் பாங்கு உள்ளமை அந்த இலக்கியத்தின் தலைமைத்தன்மையை உறுதி செய்கிறது. கம்பனின் யாப்பு சேக்கிழாருக்குக் கை கொடுத்தமையும், இலக்கிய வடிவம் தமிழ்ப்படைப்புலகின் சுரங்கமாகும் தன்மையையும் நினைவில் கொள்ளலாம்.

மரபுடைமை

செவ்வியல் இலக்கியங்கள் மரபைப் பின்பற்றி அமைய வேண்டும் என்பது குறிப்பிடத்தக்க பண்பாகும். மரபென்பது முன்னுள்ளோரைப் பின்னுள்ளோர் பின்பற்றும் முறை என்பர். அதாவது ஒழுங்கு படுத்தப்பட்ட சமுதாயத்தின் மரபுகளை, மரபுத்தன்மைகளை ஏற்றுக் கொள்ளக்கூடியதாகவும் நிகழ்காலத் தன்மைகளை அடையாளங் காட்டக் கூடியதாகவும் விளங்கும் என்பர். ( ) அவ்வாறான நோக்கில் ஆய்ந்தால், கம்பன் தனது படைப்பின் போக்கில் , இராமனின் மரபினைச் சுட்டுதல் இணைத்து எண்ணத்தக்கதாகும்.

எம்குலத் தலைவர்கள், இரவி தன்னினும்
தம்குலம் விளங்குறத் தரணி தாங்கினார்
மங்குதர் இல் என, வரம்பு இல் வையகம்
இங்கு நின் அருளினால் , இனிகின் ஓம்பினேன் (திருவ181)

எனத் தயரதன் வசிட்ட மாமுனியிடம் தனது குலமுறையை உரைக் கின்றான். தன்மை அடுத்துத் தரணியை ஆள , வாரிசு இல்லை என்பதனை,

அறுபதினாயிரம் ஆண்டும் மாண்டு உற
உறுபகை ஒடுக்கி, இவ்உலகை ஓம்பினேன்
ரிது ஒரு குறை இலை, என்பின் வையகம்
மறுகுவது என்பது ஓர் மறுக்கம் உண்டு அரோ (திருவ 182)

என உரைக்கின்றான். இவ்வாறு மரபினை உரைத்தல் என்பது செவ்வியல் பொருண்மை உடையது ஆகும்.

காலச் சார்பும் சமுதாய வளர்ச்சியும்

செவ்வியல் கூறுகளுள் ஒன்று, படைப்பு உருவான காலமும், படைப்பின் பொருளான கருபின் காலமும் ஆகும். குறிப்பிட்ட கால வரையறையைச் சுட்டும் தன்மையுடையதாகவும், தன் காலச் சமுதாய விளக்கமாகவும், அமைந்து அக்காலச் சமுதாயச் சித்தரிப்பைச் சுட்டும் வகையில் அமைதல் ஆகும்.

கம்பனின்படைப்பும் அவ்வழிப்பட்டது எனலாம் சீதை கனகனின் சொந்தமகள் அல்லள். வான்மீகத்தின்படி 'முன்னொரு கால் யாக பூமியைய நான் கலப்பையால் உழும்போது கலப்பைக் கோட்டி னின்று ஒரு பெண்தோன்றினாள் . சுத்தி செய்யும் என்னால் எடுத்துக் கொள்ளப் பட்டுச் சீதை என்ற பெயருடன் விளங்குகிறாள். கருப்பையினின்று தோன்றாமல் பூமியில் தோன்றிய இந்தப் பெண்ணும் என்னுடைய பெண்ணாய் வளர்ந்து வருகிறாள்' என்று சனகன் கூறுகிறான் (மணவாளன் க.அ, 'வால்மீகி 1,66 -14,15) ', ப.168)

அதாவது வேளாண்மைச் சமுதாயக்காலகட்டத்தில் எழுந்தது இக்கதை! மேய்ச்சல் தொழிலைக்கடந்த , வேளாண்மையை மேற்கொண்ட கால கட்டத்திலான கதையைப் படைப்பாளிகள் தேர்ந்தெடுத்தனர் எனலாம்.

வான்மீகத்தை வழிமொழிய வந்த கம்பன் தானும் இதனை,
உழுகின்ற கொழு முகத்தின் உதிக்கின்ற கதிரின் ஒளி
பொழிகின்ற புவி மடந்தை திருவெளிப்பட்டெடன, புணரி
எழுகின்ற தென் அமுதோடு எழுந்தவள்.. . . . . (கார்முகப்படலம்.682)

என உரைப்பதும் எண்ணத்தக்கது. வேளாண்மைக்காலச் சமூகச்

சார்புடையது இப்பாடுபொருள் என்பதனைத் திறனாய்வாளர் பலரும் உறுதி செய்துள்ளனர்.

காலப்பழமை உடைய கதைப்பொருளைத் தேர்ந்தெடுத்த படைப்பாளி, தனது காலச் சமுதாயத்தை அப்படைப்பில் இனம் காட்டுகிறான். மேலும், தான் காண விரும்புகிற சமுதாயத்தின் சாயலையும் தனது படைப்பில் சுட்டிவிடுகின்றான், எனலாம்.

கம்பன் கண்ட அயோத்தியும் கோசலமும் அவன் சமுதாயம் பற்றிக் கண்ட கனவின் வெளிப்பாடு எனலாம். ஆகவேதான்

கூற்றம் இல்லை, ஓர் குற்றம் இலாமையால்
சீற்றம் இல்லை, நம் சிந்தையின் செம்மையால்
ஆற்றல் நல்அறம் அல்லது இலாமையால்
ஏற்றம் அல்லது இழித்தகவு இல்லையே (நாட்டுப்படலம். 70)

எனவும்

வண்மை இல்லை, ஓர் வறுமை இன்மையால்
திண்மை இல்லை, ஓர்செறுநர் இன்மையால்
உண்மை இல்லை, பொய் உரை இலாமையால்
வெண்மை இல்லை, பல கேள்வி மேவால் (நாட்டுப்படலம் -84)

எனவும் பேசுகிறார் கம்பர். இதனைப்பற்றி, 'ஒரு கற்பனை நாட்டைப் பாடுவதன் மூலம் பின்னே வளர்ந்து வருகின்ற சோழப் பேரரசு சமுதாயத்தை அமைக்கும்போது உடையார் - இல்லார் வேறுபாட்டை மிகுதிப்படுத்தாதாய் இருக்கவேண்டும் என்று அவன் கருதியிருத்தல் வேண்டும்' எனப் பேராசிரியர் அ. ச.ஞானசம்பந்தன் தமது முன்னுரையில் குறிப்பிடுகிறார். இவ்வாறு செவ்வியல் தன்மை அமையக் கம்பன் தனது படைப்பைச் செய்கிறான்.

உலகியல் உண்மைகளை உரைத்தல்

செவ்வியல் பண்புகளின் கூறுகளுள் ஒன்று உலகியல் உண்மைகளை உரைப்பது ஆகும். மேலும், போதிப்பதும் மகிழ்விப்பதும் இதன் நோக்கமாகும். இந்தப் பாங்கு கம்பனின் படைப்பில் அடிநாதமாகவும் விழுமியமாகவும் இலங்குகிறது எனலாம்.

இராமனுக்கு முடிசூட்டுவதற்கு முன்பு வசிட்டன் கூறும் அறவுரை உலகியல் உண்மைகளை முன்வைத்து உரைக்கும் போதனைகள் ஆகும். (மந்தரை சூழ்ச்சிப்படலம் 1412-1427)

அரசியல் படலத்தில், சுக்ரீவனுக்கு இராமன் கூறிய அறிவுரையும் (4120-1431) இணைத்து எண்ணத்தக்கதாகும். விழுமியங்களை -மனித அறங்களைக் கைக்கொண்ட இராமன் வெற்றியைக் கம்பன், 'மானுடன் வெற்றியாக' உயர்த்துவதும் அதனால்தான்!

தொகுப்புரை

செம்மொழித் தகுதிபெற்ற தமிழ்மொழியின் உயர்செவ்வி உடையது கம்பனின் படைப்பு! காலவரையறை உடைய செவ்வியல் தகுதிகள்-கூறுகள் ஒரு சிலவற்றைக் காலவரம் பற்று நிலை பேறு உடைய கம்ப காவியத்தில்பொருத்திப்பார்ப்பது ஆய்வின் செல்நெறி!

பாடுபொருள் பழமையும் நுட்பமும் வாய்ந்த இராம காதை கம்பன் என்ற படைப்பாளி, காப்பியம் எனும் செவ்வியல் வடிவத்தில் தருகிறான்.

தொன்மைத்தன்மை உடைய பாடுபொருள்-கதை கம்பன் என்ற படைப்பாளியின் படைப்புத்திறத்தால்-நுட்பத்தால், தலைமைத்தன்மை பெற்றுத் தமிழ் இலக்கிய உலகில் உயர்ந்தோங்கி நிற்கிறது.

இந்தியமரபு சார்ந்த கதைப்பொருளில் கதாபாத்திரங்களின் மரபுகளைப் படைப்பாளி தொட்டுக்காட்டுவது எண்ணத்தக்கது.

காலச்சார்பு, இந்தியச் சமூகத்தின் வேளாண்மைச் சூழலை மையப்படுத்திய காப்பியக் கதைப் பொருளை விளக்கும் படைப்பாளி (கம்பன்) வரஇருக்கும் சமுதாயத்தையும் படைப்பில் விவரிக்கும் பாங்கு செவ்வியல் கூறுகளுள் ஒன்றாகிறது.

மானுட வெற்றியைச் சமுதாய விழுமியம் சார்ந்து கம்பன் படைப்பது. காலங்கடந்து நிற்கும் படைப்பின் (கம்பராமாயணம்) செவ்வியல் தன்மையை நிலைநாட்டுகிறது.

கம்பனில் மேலாண்மை

ப. நந்தினி
முனைவர் பட்ட ஆய்வாளர், அவினாசிலிங்கம் பல்கலைக்கழகம், கோவை.

மேலாண்மை

மேலாண்மை (Management) என்பது திட்டம், நிர்வாகம், அமைப்பு, செயல்பாடு, கட்டுப்பாடு ஆகிய அம்சங்களை உள்ளடக்கியதாகும். எதை, எவ்வாறு, எப்படி, எப்போது என்ற அடிப்படையில், சூழலில் கிடைக்கும் வளங்களையும், மனித ஆற்றலையும் ஒருங்கிணைத்து நோக்கங்கள் நிறைவேறும் வண்ணம் மேற்கொள்ளும் இயக்கமே மேலாண்மையாகும்.

மேலாண்மையின் கீழ்வருபவை,

- கால மேலாண்மை
- பொருளாதார மேலாண்மை
- நீர் மேலாண்மை
- வேளாண் மேலாண்மை
- மனிதவள மேலாண்மை

என்பவை ஆகும். கம்பராமாயணத்தில் இடம்பெறுவது மனிதவள மேலாண்மையாகும். மனிதவள மேலாண்மை (Human Resource Management) என்பது மனிதவளத்தை ஒருங்கிணைந்த முறையில் மேலாண்மை செய்யும் ஒரு அணுகுமுறையாகும்.

மேலாண்மைத் திறன்கள்

மேலாண்மைத் திறன்கள் மூன்று வகைப்படும். அவை,

- கருத்துருவாக்கும் திறன் (Conceptual skill)
- மனிதத் திறன் (Human skill)
- தொழில்நுட்பத் திறன் (Technical skill)
- கருத்துருவாக்கும் திறன் (Conceptual skill)

கருத்துருவாக்கும் திறன் என்பது ஒரு அமைப்பின் நலன்களையும், செயல்களையும் ஒருங்கிணைக்கும் திறனாகும். ஒரு அமைப்பின் பகுதிகளை எவ்வாறு வழிநடத்துவது, ஒரு பெரிய அமைப்பின்

சிறு பகுதியில் ஏற்படுத்தும் மாற்றம் எவ்வகையான பாதிப்புகளை உண்டாக்கும் என்பவற்றை எதிர்பார்த்தல் ஆகியவை ஆகும்.

மனிதத் திறன் (HUMAN SKILL)

மனிதத் திறன் என்பது ஒரு இலக்கினை வெற்றிகொள்ள மக்களிடையே, மக்களோடு சேர்ந்து பணியாற்றும் பண்பு, மக்களை கையாளும் பண்பு ஆகிய திறன்கள் ஆகும். மனித தன்மையின் மீதான மற்றும் பண்பு நடத்தைகள் பற்றிய ஓர் உள்பார்வை இத்திறனுக்குத் தேவையானவையாகும்.

தொழில்நுட்ப திறன் (TECHNICAL SKILL)

தொழில்நுட்ப திறன் என்பது ஒரு குறிப்பிட்ட துறையைப் பற்றிய அறிவு மற்றும் நுட்பத்தைச் செயல்படுத்தும் திறன் ஆகும். ஒருவர் மற்றவரைப் புரிந்து கொள்வது மற்றும் மற்றவரை ஊக்கப்படுத்துவதாகும். ஒரு தனி நபராக, குழுவாக மற்றவருடன் சேர்ந்து பணியாற்றும் திறனைக் குறிப்பதாகும்.

கம்பராமாயணம் கூறும் வாழ்வு

அறமின்மை தோற்று அறம் வெல்லும் என்ற உண்மை இராம காவியத்தின் சாரமாகும். அறத்தினை நிலைநிறுத்த பூமிக்கு வந்த இராமன், தீமையை அழித்து நன்மையை வாழ வைத்த வகையினைக் காப்பிய போக்கிலும், கம்பன் நோக்கிலும் காண முடிகிறது.

மனித நேயம்

பெறுதற்கரிய பிறவி மானிட பிறவி ஆகும். ""அரிதரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது" என்பார் ஔவையார். எனவே மானிடப் பிறவியின் பயனை நன்றாக உணர்ந்து வாழ வேண்டும். பிறரையும் வாழ வைக்க வேண்டும். மானிடப் பண்புகளிலேயே தலை சிறந்தது மனிதநேயம் ஆகும்.

பண்புடையார்ப் பட்டுண் டுலகம் அதுவின்றேல்
மண்புக்கு மாய்வது மன் (996)

என்று மனிதநேயத்தின் சிறப்பினை வள்ளுவர் வலியுறுத்துகின்றார்.

"குகனொடும் ஐவர் ஆனோம் முன்பு பின்பு குன்று சூழ்வான் மகனொடும் அறுவர் ஆனோம் எம்முழை அன்பின் வந்த அகநமர்

காதல் ஐய நின்னொடு எழுவர் ஆனோம்" என்று இராமன் வாயிலாகக் கம்பர் காட்டுவது அவரது சமத்துவச் சிந்தனையைக் காட்டுகிறது. மேலும் இந்நிகழ்ச்சி மனிதநேயம் சகோதரத்துவமாக மலர்ந்ததை சுட்டிக் காட்டுகிறது.

அனுமன்

பழங்காலத்தில் போர் நடைபெறுவதற்கு முன் தூது அனுப்புவது வழக்கம். இராமகாதையில் சீதையைத் தேடிப்போன அனுமன் எதிர்பாராதவிதமாகத் தூதுவனாகவும் மாறினான். சீதையைக் கண்ட அனுமன்,

கண்டேன் கற்பினுக்கு அணியை கண்களால்
தென்திரை அலைகடல் இலங்கை தென்நகர்
அண்டர் நாயக இனி துறத்தி ஐயமும்
பண்டுள துயரும்; என்று அனுமன் பன்னுவான் (1271)

என்று இராமனிடம் இலங்கையில் தான்கண்ட நிகழ்வைத் தெரிவிக்கும் இப்பாடலில் சீதையை கண்டமையையும், அவளின் பத்தினித் தன்மையையும், ஆஞ்சநேயனின் பணிவு மற்றும் காப்பியக் கண்டமையையும், அவளின் பத்தினித் தன்மையையும், ஆஞ்சநேயனின் பணிவு மற்றும் காப்பியக் கதையின் முக்கியத்துவம், கம்பனின் சொல்லாட்சி மற்றும் கம்பனின் மேலாண்மைத் திறனும் புலப்படுகிறது.

கம்பராமாயணம் காட்டும் சமூகம்

சமூகம் என்பது குழுவாகவும், கூட்டமாகவும் வாழும் மக்கள் தொகுதியாகும். மக்கள் தம் நலத்திற்காகவும், தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளவும், குறைகளை போக்கிக் கொள்ளவும் மற்றும் தம் இன வளர்ச்சி மற்றும் பெருக்கத்திற்காகவும் கூடி மகிழ்கின்றனர்.

கோசலை, கிட்கிந்தை, இலங்கை என மூன்று பகுதியைச் சேர்ந்த மக்களின் வாழ்வினை சுட்டிக்காட்டியுள்ளார் கம்பர்.

கலம் சுரக்கும் நிதியம் கணக்கு இலா
நிலம் சுரக்கும் நிறைவளம் நால்மணி
பிலம் சுரக்கும் பெறுதற்கு அரிய தம்
குலம் சுரக்கும் ஒழுக்கம் - குடிக்கு எலாம் (69)

எனவரும் பாடலில் கோசலையின் நாட்டுவளத்தைப் பாடியுள்ளார். மேலும் கிட்கிந்தையில் செல்வச் சிறப்பு மிகுந்து காணப்படுவதை,

தூயதின் பளிங்கின் செய்தசுவர்களின் தலத்தில் சுற்றில்
நாயக மணியின் செய்தநனி நெடுந் தூணின் (4368)

என்ற பாடல் வரிகளின் மூலம் எடுத்தியம்புகிறார்.

இலங்கை மக்கள் இராவணனின் ஆட்சியின்கீழ் கவலையற்று பொழுதுபோக்குகளில் ஈடுபட்டு மகிழ்ச்சியாக இருந்ததை,

பளிங்கு மாளிகைத் தலம்தொறும் இடம்தொறும் பசுந்தேன்
துளிக்கும் கற்பகத் தண்நறுஞ் சோலைகள் தொறும்
அளிக்கும் தேறலுண்டு ஆடுநர் பாடுநர் ஆகிக்
களிக்கின்றார் அல்லால் கவல்கின்றார் ஒருவரைக் காணேன் (4864)

என்று கம்பராமாயணப் பாடலடிகள் எடுத்தியம்புகின்றனர்.

அரசியல்

உயிர் இல்லாமல் உடல் இயங்காது என்பதை அறிந்த மக்கள்,

வையம் மன்னுயிராக அம்மன்னுயிர்
உய்த்தாங்கும் உடலன்ன மன்னனுக்கு
அய்யம் இன்றி அறம் கடவாது அருள்
மெய்யில் நின்றபின் வேள்வியும் வேண்டுமோ

தாங்கள் வாழும் சமுதாயத்தை உயிராகக் கொண்டு, அவ்வு-யிர்களைத் தாங்கும் உடலாகத் தன்னை கருதி அதற்கேற்ப அரசாட்சி நடத்துபவனே சிறந்த மன்னனாவான். இதில் அரசனின் நிர்வாக மேலாண்மையானது புலப்படுகிறது.

போர்

பொருளியல் மற்றும் உளவியல் காரணங்களால் போர் ஏற்படுகிறது. கம்பராமாயணத்தில் இடம்பெறும் போர் நிகழ்வுகள் இரண்டாவது வகையைச் சார்ந்ததாகும். பிறன்மனை நயத்தல் என்ற அரசனின் தீய ஒழுக்கத்தால், அவன் மட்டுமின்றி அவன் நாடும் அழிந்த வரலாற்றைக் கம்பராமாயணம் குறிப்பிடுகிறது.

போர், பொதுமக்களின் இயல்புவாழ்வை பாதிக்கக்கூடியதாகும். பொதுமக்களின் உயிர் மற்றும் உடமைகளை அழிக்கக்கூடியது.

அசோகவனத்தில் அனுமன் நடத்திய போர் மற்றும் இராமன் இராவணனிடையே நடந்த போர் ஆகிய நிகழ்வுகளை கூறும் கம்பர் அந்த போர்களினால் பொதுமக்கள் அடைந்த இன்னல்களையும் குறிப்பிட்டுள்ளார்.

குண்டலக் குழை முகக்குங்குமக் கொங்கையார்
வண்டு அலைத்து எழுகுழல் கற்றைகால் வருடவே
விண்டு அலத்தக விரைக் குழுதவாய் விரிதலால்
அண்டம் உற்றளது அவ்வூர் அமுதபேர் அமலையே (5709)

என்று அசோகவனத்தில் நிகழ்ந்த போரில் காட்டப்பட்டுள்ள அழுகைக் காட்சியும்,

குழுமி கொலைவாட் கண்அரக்கியர் கூந்தல் தாழ
தழுவித் தலைபெய்து தம்கைகொடு மார்பின் ஏற்றி அழும் (8002)

என்ற இராமன்-இராவணப்போர் விளைவாக இலங்கை மகளிர் தம் அவலநிலை குறித்த காட்சியும் இதற்கு எடுத்துக்காட்டுகளாக அமைகின்றன.

உளவியல் பாங்கு

கம்பராமாயணத்தில் உளவியல் பற்றி குறிப்பிடும் பொழுது அவரவர் உளநிலைக்கு ஏற்ப, அவ்வுண்மை உணரப்படுகிறது. இதனை கம்பர்,

ஒன்றே யென்னில் ஒன்றேயாம் பலவென்று உரைக்கிற் பலவேயாம்
அன்றே யென்னில் அன்றேயாம் ஆமென்று உரைக்கில் ஆமேயாம்
இன்றே யென்னில் இன்றேயாம்; உளதென்று உரைக்கில் உளதேயாம்
நன்றே நம்பி குடிவாழ்க்கை; நமக்கில் கென்றே பிழைப்பம்மா

என்று குறிப்பிடுகிறார். மந்தரையின் சூழ்ச்சியால் கைகேயியின் மனம் திரிந்ததனை,

இன்னல்செய் இராவணன் இழைத்த தீமைபோல்
துன்னரும் கொடுமன கூனி தோன்றினாள்

என்ற செய்தியினை கம்பர் தம் பாடலின் மூலம் விளக்குகிறார். கைகேயியிடம் ஒவ்வாத நுண்பொருள் வார்த்தையை கையாண்டு தோல்வியடைகிறாள் கூனி. இருப்பினும் இளமை முதல் தோழியாகவும், பணிப் பெண்ணாகவும் இருந்த உரிமையால் சாதுர்ய மொழிகளால்

கைகேயியின் மனதைப் படிப்படியாக மாற்றிய உளவியல் பாங்கானது வெளிப்படுகிறது.

வேளாண்மை

உழவன் தன் நிலத்தை நன்கு உழவு செய்தூன் நடவு செய்வான். அந்த நிலத்தை எவ்வாறு உழுது பயன்படுத்த வேண்டும் என்பதை இலக்கியங்களில் விளக்குகின்றன. அகல உழுவதைக் காட்டிலும், ஆழமாக உழுவதே மேல் என்பது பழமொழி. ஆழமாக உழும்போது கீழ்மண் மேல்மண்ணாகவும், மேல்மண் கீழ்மண்ணாகவும் கலக்கப்பட்டு மண்ணில் இயற்கையாகக் கிடைக்கப் பெறும் உரங்கள் அனைத்தும் பயிர்களுக்குப் பயன்படுகின்றன.

முள்அரை முரளி வெள்ளி முளைஅற முத்தும்பொன்னும்
தள்ளுற மணிகள்சிந்த சஞ்சிலம் புலம்ப, சாலில்
துள்ளிமீன் துடிப்ப, ஆமை தலை புடைசுரிப்ப தூம்பின்
உள்வரால் ஒளிப்ப, மள்ளர் உழுபகடு உரப்புவாரும் (49)

எனவரும் பாடலில் உழவு முறைப் பற்றிய செய்தியானது குறிப்பிடப் பட்டுள்ளது.

பல்பயிர் சாகுபடி

ஒரேநேரத்தில், ஒரேபகுதியில் பல்வேறு பயிர்களைச் சாகுபடி செய்யும் வகையைப் பல்பயிர் சாகுபடி முறை என்கிறோம். தனிமனித தேவைகளையும் நிறைவு செய்வதற்கு இது போன்ற அறிவியல் நுட்பங்கள் பெரிதும் உதவுகின்றன. இதனை,

கதிர்படு வயனின் கடிகமழ் புனலின் உள்ள
முதிர்பயன் மரத்தின்உள்ள முதிரைகள் புறவின்உள்ள
பதிபடு கொடியின் உள்ள படிவளர் குழியின் உள்ள
மதுவளம் மலரில் கொள்ளும் வண்டுஎன மள்ளர்கொள்வர் (52)

என்ற பாடலடிகள் எடுத்தியம்புகின்றன.

கம்பனும் கட்டுமானத்துறையும்

வரதராசன். அகி
சிங்கப்பூர்

கம்பனின் இராமாயணக் காப்பியத்தில் நானறிந்த வரையில் மாபெரும் கட்டுமானப் பணிகள் மூன்று நடைபெறுகின்னை. இம்மூன்றுடனும் ஒப்பு நோக்கின் அளவில் மிகவும் சிறியதான ஒரு கட்டுமான வேலையும் காப்பியத்தில் இடம் பெற்றுள்ளது. மாபெரும் கட்டுமானப் பணிகள் என நான் குறிப்பிடுபவை:

1. அனுமனால் தீக்கிரையாக்கப்பட்ட இலங்கை மறுநிர்மாணம் காண்பது
2. இலங்கைக்குச் செல்ல வானரர்கள் பாலம் கட்டுவது.
3. இலங்கையை முற்றுகை இட்ட வானர சேனைக்குப் பாடிவ வீடுகள் அமைப்பு.

முற்றாக அழிக்கப்பட்ட இலங்கை மாநகர் மீண்டும்உருவாக்கப் படுகிறது. ஆனால் இதுபற்றிக் கம்பன் தரும் பாடல் ஒன்றே ஒன்று தான். அங்கு கூட முழுப்பாடலும் கட்டுமானப் பணிகள் பற்றிக் கூறுவதாக அமையவில்லை. மேலும் இலங்கையில் மாபெரும் கட்டுமானம் ஒன்று நடந்தேறியதாகக் கூடக் கம்பன் அப்பாடலில் குறிப்பிடவில்லை. இராவணன் ஏவிய காரியத்தை மயன் செய்து முடித்தான் என்ற ஒரு வரிச்செய்தியாகஇதைக் கூறிச் செல்கிறான் கம்பன். இதோ இக்கட்டத்தில் அவன் தரும் பாடல் .

பூ வரும் அயனொடும் புகுந்து, 'பொன் நகர்,
மூவகை உலகினும் அழகு முற்றுற,
ஏவு' என இயற்றினன் கணத்தின் என்பரால்-
தேவரும் மருள்கொள, தெய்வத் தச்சனே.

'இயற்றினன் கணத்தில்' என்பதோடு இது முடிந்துவிடுகிறது. அரக்கர்கள் செய்யும் பணி என்பதால் இது முக்கியத்துவம் இழந்து விட்டதோ என எண்ணத் தோன்றுகிறது. பல நிகழ்வுகளைத் தன் காப்பியத்தில் மிக விரிவாகக் கூறும் கம்பன் இந்த ஒரு அரிய வாய்ப்பபை ஏன் மேற்கொள்ளவில்லை என்பது என்னளவில் சற்றுப் புதிராகவே உள்ளது.

இலங்கைக்குப் பாலம் கட்டுவது சேதுபந்தனப்படலம் என்பதாக ஒரு முழுப்படலமாகச் சொல்லப்படுகிறது. இதில் மொத்தம் 72 பாடல்கள் உள்ளன. கட்டுமானப் பணி எவ்விதம் நடைபெற்றது என்பதை விட அப்பணி நடைபெறுவதால் ஏற்படும் பின்விளைவுகள் தான் இங்கே மிக விரிவாகக் கூறப்பட்டுள்ளன. கட்டுமானம் நடைபெற்ற விதம், பயன்பட்ட விதம் பயன்படுத்தப்பட்ட பொருட்கள் ஆகியவை குறித்து அறிந்துகொள்ளக் கூடிய விவரங்கள் இப்பாடல்களில் சொல்லப்படவில்லை. பொதுவாக, இப்படலத்தில் உள்ள பாடல்கள் தரும் செய்திகள் பின்வருமாறு அமைகின்றன. நளன் மலைகளை வாங்கிச் சேது கட்டுதல் பற்றி இருபாடல்கள் கம்பன் தருகின்றான். இவைகூட, நளன் சிறப்புக் கூறும் பாடல்களாகவே அமைகின்றன. பின்னர் 28 பாடல்கள் சேது கட்டும்போது நிகழ்ந்த விளைவுகளின் வருணனையாகவே அமைந்துள்ளன. மேலும் 8 பாடல்கள் அனுமன், அங்கதன், நீலன், ஜாம்பவான், குமுதன், மயிந்தன், அனந்தன், பனசன் என்று பல்வேறு வானரர்கள் பெயர் சொல்லப்பட்டு அவர்கள் ஒவ்வொருவரும் மலைகளைக் கடலில் எறிந்த வகை கூறுகின்றன. மேலும் 13 பாடல்கள் மலைகளும் மரங்களும் கடலில் ஆழ்த்தப்படுவதால் நேர்ந்த நிகழ்வுகளின் வருணனையாக அமைந்துவிடுகின்றன. இவ்விதம் எண்ணிக்கையில 72 பாடல்கள் சேது கட்டுவது பற்றி இருந்தாலும், நளன் சேதுவை அழைக்கும் தன்மைபற்றிப் பின்வரும் ஒரே ஒரு பாடல்மட்டுமே இவ்விடத்தில் கம்பன் தந்துள்ளான்.

குலை கொளக் குறி நோக்கிய கொள்கையான்,
சிலைகள் ஒக்க முறித்துச் செறித்து, நேர்
மலைகள் ஒக்க அடுக்கி, மணற் படத்
தலைகள் ஒக்கத் தடவும், தடக் கையால்.

அணை அமைக்கும் செய்கை பற்றி நன்கு சிந்தித்து அது ஒன்றே குறியாக் கொண்டவன் நளன் என்பது முதலடியில் சொல்லப்படுகிறது. பாலம் அமைக்கும் கட்டுமானச் செய்முறை என்பதாக அடுத்த மூன்று வரிகளும் உள்ளன. அந்த நளன் கற்களை மேடு பள்ளம் இல்லாமல், நேராக அமைத்துக் கொள்கிறான். பின்னர் கற்களை முறித்து, அவற்றை நெருக்கமாகச் சேர்த்து அணைத்து, நேரொக்க அடுக்குகிறான். அவற்றின்மேல் மணலை இட்டுநிரப்புகிறான். கற்களின் உச்சி (தலை) வெளியே தெரியாதவண்ணம் அவற்றைத் தன்னுடைய நீண்ட பெரிய

கைகளால் அமுக்கி வைக்கிறான். மணல் கொண்டு கைகளால் தடவி, மேடு பள்ளங்கள் இல்லாமல் சமன் செய்துகொள்கிறான்.

பல இதர செய்திகளை உள்ளடக்கியதாகவே சேது பந்தனப்படலம் அமைகிறது. கட்டுமான வேலை எவ்வாறு நடைபெற்றது,. பாலம் கட்டும் முறைகள், பாலம் கட்டுவதற்கு என்னென்ன செய்ய வேண்டும். படிப்படியாக ஒன்றன்பின் ஒன்றாகச் செய்யப்படவேண்டிய சிறு சிறு செயல்கள் யாவை என்னவெல்லாம் நுணுக்கமாக, விரிவாகச் சுட்டிக் காட்டப்படவில்லை. கம்பனின் கட்டுமானத் துறை வித்தகம் இப்படலத்தின் பாடல்களில் வெளிப்படுவதில்லை என்பது என் அபிப்ராயம்.

வானர சேனை இலங்கையை அடைந்து அங்கே அவை தங்கு வதற்கு ஏற்ற பாடி வீடுகள் அமைப்பதும், அளவில் மிகப்பெரிய ஒரு கட்டுமான வேலையாகும். நாம் ஒன்றை இங்கே நினைவில் கொள்ள வேண்டும். அச்சேனையின் எண்ணிக்கை 70 வெள்ளம். ஒரு வெள்ளம் என்பது பலப்பல கோடிகள் (ஒன்று (1) என்று எழுதி அதன் பின்னர் பதினாறு பூஜ்ஜியங்கள் எழுதினால் வரும் எண்ணிக்கை என்று சொல்கிறார்கள்- அதாவது, 10000000000000000 என வரும்). ஆக, 70 வெள்ளம் என்பது நம் கற்பனைக்கு அடங்காத ஓர் எண்ணிக்கை. இத்தனை பலகோடி வானரவீரர்களுக்கும் ஏற்ற வகையில் உறங்கும் இடம், தங்குவதற்கான இடம், இவர்களுக்கான உணவு தயாரிக்கப்படும் இடங்கள் இவர்களுடைய ஆயுதக்கிடங்குகள், என்று ஒவ்வொன்றாகச் சிந்தித்துக் கொண்டே போவோமாயின் இக்கட்டுமானப் பணியின் முழுப் பரிமாணமும் நன்கு புலப்படும். இதைச்சொல்லும் கம்பன் பாடல்களிலும் கம்பனின் கட்டுமானத்துறை வித்தகம் முற்றிலுமாக வெளிக்கொணரப்படவில்லை என்பதுதான் இதுகுறித்த என் அபிப்ராயமும்.

ஒரு அம்சத்தை மட்டும் இந்த இடத்தில் குறிப்பிட விரும்புகிறேன். பாடி வீடுகள் அமைக்கும் இரண்டு பாடல்களைத்தான் கம்பன் தருகிறான். ஒன்று வானரர்களுக்கென்று அமைக்கப்பட்டவை பற்றியது. மற்ற பாடல், இராமனுக்கும் இலக்குவனுக்கும் என்று அமைக்கப்பட்ட பாடி வீட்டின் தன்மை கூறும் பாடல் இரண்டிற்கும் உள்ள கட்டமைப்பு முறை, பயன்படுத்தப்படும் பொருட்கள், வடிவமைப்பு ஆகிய வேறுபாடுகளைக் கம்பன் மிகத்தெளிவாகக் கூறுகிறான்.

இக்கட்டடத்தில் கம்பன் தரும் இரு பாடல்களும் இதோ- நளன் தான் இரு பாடி வீடுகளையும் அமைக்கிறான்.

பொன்னினும் மணியினானும் நான்முகன் புனைந்த பொற்பின்
நல் நலம் ஆக வாங்கி, நால் வகைச் சதுரம் நாட்டி,
இன்னர் என்னாத வண்ணம், இறைவர்க்கும் பிறர்க்கும்எல்லாம்
நல் நகர் நொய்தின் செய்தான்; தாதையும் நாண் உட்கொண்டான்.

படை வீடு அமைக்கத் தேர்ந்தெடுத்த நல்ல இடத்தை, முதலில் நளன் நான்கு வகைச் சதுரமாக வகுத்துக் கொள்கிறான். இன்னார்க்கு இந்தப் படைவீடு என்று வரையறுத்துக்கூற இயலாத வகையில் அனைத்துவீடுகளையும் அமைத்துக் கொள்கிறான். இத்தகைய வீடுகளை அரசனான (இறை) சுக்கிரீவனுக்கும், மற்றவர்களுக்கும் (இவர்களில் வீடணனும் அடக்கம்) நளன் அமைக்கிறான். இவனுடைய செயல்திறம் கண்டு, தந்தையான தேவதச்சனும் இவன் திறமைக்கு முன்னம் தன் திறமை எம்மாத்திரம் என்றெண்ணி வெட்கமடைந்தான் என்கிறான் கம்பன்.

கட்டிட அமைப்பைக் கொண்டே இவை இவை இன்னார்க்கு உரியன என்று ஊகிக்க இயலாதவாறு அனைத்துப் பாடி வீடுகளும் அனைத்து வசதிகளும் பொருந்த அமைக்கப்பட்டன. இதனால்தான், 'இன்னர் என்னாத வண்ணம்' என்றான். இவற்றை நளன் நான்முகன் புனைந்த பொற்பின் சமைத்தான் என்று வர்ணிக்கிறான் கம்பன். இப்பாடலிலும் நளன் கட்டிய அந்தப் பாடி வீட்டின் தன்மை தான் கூறப்படுகின்றதே ஒழிய கம்பனின் கட்டுமானத்துறைவித்தகம் எதுவும் இதில் காணப்படவில்லை.

வில்லினாற்கு இருக்கை செய்யும் விருப்பினால்,பொருப்பின் வீங்கும்
கல்லினால் கல்லை ஒக்கக் கடாவினான்; கழைகள்ஆன
நெல்லினால் அலக்கும் காலும் நிரப்பினான்; தருப்பைஎன்னும்
புல்லினால் தொடுத்து, வாசப் பூவினால்வேய்ந்துபோனான்.

'வில்லினாற்கு' என்ற சொல்லால் இராமன், இலக்குவன் இருவரையும் குறிக்கின்றான் கம்பன் என்பதுதான் என் கருத்து. இப்பாடலில் கட்டுமானச் செய்கை குறித்த விவரங்கள் ஓரளவு கிடைக்கப்பெறுகின்றன. கற்களை நொறுக்கிப் பொடி செய்து கொள்கிறான். அந்தக் கற்களையும் அங்குள்ள மலைகளிலிருந்தே அவன் எடுத்துக்கொள்கிறான். 'பொருப்பின்

வீங்கும் கல்லினால்' என்பது கம்பனின் சொற்கள். அவற்றை ஒன்றாக அடுக்கிப் பரப்பி மேடு பள்ளம் இல்லாமல் சமதளம் ஆக்குகின்றான். (ஒக்கக்கடாவினான்) பின்னர், (கழைகள் ஆன நெல்லினால்) கழைகள் எனும் பெயர் கொண்டுவிட்ட நெல்லினத்தைச் சார்ந்த மூங்கில்களைக் கொண்டு காலும் வரிச்சலும் நிரப்பிக் கொள்கிறான். தர்ப்பைப் புல்லைக் கொண்டு அவற்றை இணைத்துக் கட்டுகிறான். கூரை வேய்வதற்கு வாசனையுள்ள மலர்களைப் பரப்புகிறான்.

இவைதாம் கம்பன் இந்த மூன்று பெரிய கட்டுமானப் பணிகள் குறித்துக் கூறுபவை. இவற்றில் அவனுடைய கட்டுமானக் கலை பற்றிய அறிவோ, அவற்றின் நுணுக்கம் பற்றிய அவனுடைய கலைவண்ணமோ வெளிப்படவேயில்லை என்ற முடிவுக்கே நாம் வரநேரிடுகிறது.

கம்பனின் கட்டுமானப் பணி வித்தகம், கலை நுணுக்கம் முற்றிலுமாக வெளிப்படும் பாடல்கள் அயோத்தியா காண்டத்தில் சித்திரகூடப்படலத்தில் காணப்படுகின்றன. பாடல்கள் இடம்பெறும் கட்டம் இதுதான். இராமனும் சீதையும் வசிப்பதற்காக இலக்குவன் பர்ணசாலை அமைக்கிறான். அவன் பர்ணசாலை அமைக்கும் நயம் பற்றிக் கூற வந்த கம்பன், காட்டில் ஒரு பர்ணசாலை எவ்விதம் அமைக்கப்படவேண்டும். என்னென்ன பொருட்கள் பயன்படுத்தப் படவேண்டும். அக்குடிலின் ஒவ்வொரு அங்கத்திற்குமான செய்முறை என்ன, ஆற்றப்படவேண்டிய சிறு சிறு செயல்கள் எவை என்பனவற்றை எல்லாம் மிக விரிவாகச் சொல்லும் இடம் இது. கம்பனின் கட்டுமான அறிவு முழுமையாக வெளிப்படும் நான்கு பாடல்கள் இதில் உள்ளன.

இந்த நான்கு பாடல்களைக் கற்று அவற்றின் பொருளை உள் வாங்கிக்கொண்ட எவரும் நிச்சயமாக கட்டுமான வேலையில் தன்னம்பிக்கையோடு இறங்கலாம் என்ற அளவிற்குப் படிப்படியாக ஒவ்வொன்றையும் கம்பன் விளக்கிச் சொல்லி தன்னுடைய இத்துறை பற்றிய அறிவைத் தெளிவாக வெளிக்காட்டுகிறான். தூண்கள் நிறுவுவது, கூரைக்கான சட்டங்கள் நிறுவுவது, கூரை வேய்வது, சுற்றுச் சுவர்கள் எழுப்புவது, தரை அமைப்பது, யார் யாருக்குத் தனிப்பட்ட இடங்கள் தேவை என்பதை நிர்ணயித்துக் கொள்வது என அனைத்துத் துறைகள் பற்றிய தன்னுடைய ஞானத்தைக் கம்பன் இந்த நான்கு பாடல்களில் நிலை நிறுத்துகிறான். மற்ற கட்டடங்களில் ஒரு வரி அல்லது ஒரு பாடல் மூலமே சொன்ன 'மாபெரும்' கட்டுமானப் பணிகளைப்போலச்

சொல்லாமல், நான்கு முழுப்பாடல்கள் தந்து இந்தச் 'சிறு' பணியை மிக விரிவாகச் சொல்கிறான் கம்பன்.

முதற்பாடலில், கூரைக்கான கட்டுமானச் 'செய்முறை' பற்றிக் கூறுகிறான். முதலில் நீண்ட மூங்கில்களைத் தேர்ந்தெடுத்துக் கொள்ள வேண்டும். அவற்றைச் சிறு சிறு துண்டுகளாக வெட்டிக் கொள்ள வேண்டும். பின்னர் அவற்றை அடுக்கி ஒரு சட்டம் தயாரித்துக் கொள்ள வேண்டும். அதன் பின்னர், வளைவு இல்லாத நீண்ட மூங்கில்களைத் தூண்களாக நிறுவிக்கொள்ள வேண்டும். அடுத்தபடியாக, பக்கவாட்டுக்கழிகளை மேலே ஏற்றி நன்கு இறுகக் கட்டவேண்டும். வளைவு இல்லாமல் அவ்விதம் கட்டியவற்றின் மேலே எல்லா இடத்திலும் கூரைக்கான சட்டம் ஏற்றப்பட வேண்டும். இவை பர்ணசாலை கட்டுவதற்கான முதற்படி.

கம்பனின் முதற்பாடல் இதோ

நெடுங்கழைக் குறுந் துணி நிறுவி, மேல் நிரைத்து,
ஒடுங்கல் இல் நெடு முகடு ஒழுக்கி, ஊழ் உற
இடுங்கல் இல் கை விசித்து ஏற்றி, எங்கணும்
முடங்கலின் வரிச்சு மேல் விரிச்சு மூட்டியே.

இப்பாடல் முழுவதும், 'செய்முறை' பற்றியே கூறுகிறது. எவன் இவ்விதம் செய்கிறான் என்பது பற்றிய குறிப்பு அணு அளவும் இல்லை. கம்பன் தரும் ஒவ்வொரு சொல்லும் கட்டுமானம் பற்றி மட்டுமே அமைகிறது.

மேலும் ஒரு நுணுக்கம் சொல்லலாம். பாடல் விவரிப்பது முற்றிலும் ஒரு குறிப்பிட்ட கட்டுமானத் துறை பற்றியதே. அதாவது, Structural Construction.

அடுத்த கட்டமாகக் கூரை தயாரிப்புப் பற்றிக் கம்பன் விவரிக்கின்றான். இவ்விதம் சட்டமாகத் தயாரிக்கப்பட்ட கட்டுமானத்தின்மீது கூரை பரப்பக் கம்பன் தேர்ந்தெடுப்பது காட்டில் கிடைக்கும் தேக்கு மரத்தின் இலைகள் ஏனைய மரத்தின் இலைகளுடன் ஒப்புநோக்கின், தேக்கு மர இலைகள் பரப்பளவில் மிகவும் பெரியவை. நீளத்தில், 18 அங்குலம் வரையிலும் அகலத்தில் 9 அங்குலம் வரையிலும் கூடத் தேக்கு மர இலைகள் காணக்கிடைக்கின்றன. எனவே, குறிப்பாகக் கம்பன் இந்த இலையினைக் கொண்டு கூரை அமைக்கும் செய்முறையைக்

கூறுகின்றான். இவ்வண்ணம் தேக்கு மர இலைகளைக் கொண்டு மேற்பரப்பை மூடிய பின்னர், பூத்து விளங்கும் நாணற்புல்லை அதற்கும் மேலே பரப்பி வைக்க வேண்டும் பிறகு பூமியில் மூங்கில் கழிகளை ஊன்ற வேண்டும். இடைவெளி இல்லாமல் இவ்விதம் ஊன்றப்பட்ட மூங்கிற் கழிகள்தாம் இறுதியில் சுவர்களாக உருமாறுகின்றன. இவ்விதம் நான்கு புறமும் சுற்றுச் சுவர் எழுப்பப்படவேண்டும். அப்படி எழுப்பப்பட்ட மூங்கிற்சுவர்ப் பகுதியின்மீது, உட்புறம், வெளிப்புறம், இரண்டிலும் - மண்ணை அப்ப வேண்டும். அப்பிய மண்ணின் மேலே தண்ணீரை ஊற்றிப் பூசி மெழுக வேண்டும். இப்படி மணல் பூச்சுக்கு இடையே மூங்கில் கழிகளை வைத்து அது சுவர் என்று அமையும்படி செய்ய வேண்டும் என்பது கம்பன் காட்டும் கட்டுமானக் கலை.

தேக்கு அடைப்படலையின் தெறிவு செய்துபின்
பூக்கிளர் நாணலின் புல்லு வேய்ந்து, கீழ்த்
தூக்கிய வேய்களின் சுவரும் சுற்றுறப்
போக்கி மண் எறிந்து அவை புனலின் தீற்றியே

இப்பாடலும் முழுக்க முழுக்க 'செய்முறை' என்ற வகையில் இன்னின்ன செய்ய வேண்டும் என்று ஒவ்வொன்றாக எடுத்து கூறுகின்றது. போன பாடலைப் போலவே, கட்டுமானப் பணியன்றி வேறு எதைப் பற்றியும் ஒரு சொல்கூட இல்லாமல், இந்தப் பாடலும் அமைந்துள்ளது.

கம்பனின் கட்டுமானத்துறை பற்றிய அறிவு இன்னின்ன விதத்தில் இந்த இந்த இடங்களைக் கட்ட வேண்டும் என்று கூறுவதோடு அமைந்துவிடவில்லை. அங்கே குடியிருக்கப் போகிறவர்களின் தனிப்பட்ட தேவைகளையும் மனதில் கொண்டு அவற்றை அமைக்க வேண்டும் என்பதும் அவன் கற்பிக்கும் கட்டுமானக் கலையின் ஓரம்சம் ஆகும்.

திதிலைப் பெண்ணாகிய மைதிலிக்கு என்று தனியாக இடம் ஒதுக்குகின்றான், கம்பன். அங்கு யார் குடியிருக்கப் போகிறார்கள் என்பதை உள்வாங்கிக் கொண்டு, அந்த இடத்தை, மிகச் சிறப்பாக அலங்கரிக்கும் செய்முறை கூறுகின்றான். அந்த இடத்தின் சுவர்களுக்கு இவன் செய்யும் நேர்த்தியைக் காணுங்கள். சுவர்கள் எழுப்பப்பட்ட பின், குங்குமச் சேறு கொண்டு உட்பக்கச் சுவரின்மீது பூச வேண்டும் என்பது அவன் வகுத்த முறை அவ்விதம் அழகுற, அச்சுவர்களை

ஒரே அளவில் திருத்த வேண்டும். அவ்வாறு திருத்திய பின்னர், அச்சுவர்கள்மீது ஆற்றிலிருந்து கொண்டுவரப் பட்ட மணிக்கற்களையும் முத்துக்களையும் அழகுறப் பதிக்கவேண்டும் என்பது அவன் கூறும் உள் அலங்காரக் கட்டமைப்பு முறை.

சீதைக்கென்று தனியான இடம் அமைக்க வேண்டும் என்கிறான் கம்பன். ஏன்? இக்கேள்வி நியாயமானதுதான். இராமனைப் பார்கக முனிவர்கள் பலரும் வரக்கூடும். அவர்கள் இராமனுடன் கூடிப் பல விஷயங்களைப் பேசக் கூடும்.. எனவே, அவர்கள் கூடிப் பேசுவதற்கான இடத்திலிருந்து வேறுபட்டு, அவளுடைய இதர தேவைகளையும் மனதிற்கொண்டு அவளுக்குத் தனி இடம் அமைய வேண்டும் என்பது கம்பனின் கணிப்பு. கம்பனின் குடித்தனப்பாங்கு நம்மை அயரவைக்கிறது. கம்பன் தரும் பாடல் இதோ.

வேறு இடம், இயற்றினன் மிதிலை நாடிக்கும்,
கூறின நெறி முறை குயிற்றி, குங்குமச்
சேறு கொண்டு அழகுறத் திருத்தி, திண் சுவர்
ஆறு இடு மணியொடு தரளம் அப்பியே.

இதன்பின்னர் வீட்டின் உள்அலங்காரச் செய்முறை பற்றியும் கம்பன் விரிவாகக் கூறுகிறான். ஏற்கெனவே எழுப்பிய சுவர்களின்மீது குங்குமச் சேற்றை அப்ப வேண்டும். பின்னர், மயில் பீலியால் வீட்டின் உள்ளே விதானம் தொங்கும்படி அமைக்க வேண்டும். தொங்கல்களைக் கூர்மை மிகுந்த கத்தியினால் அறுத்து நெறிப்படுத்த வேண்டும். ஆங்காங்கே, புது மலர்களையும் பரப்பிக் குடிலுக்கு மேலும் அழகு சேர்க்க வேண்டும். இவை அனைத்தும் முடிந்த பின்னர் இளம்மூங்கில்களைக் கொண்டு அந்தப் பர்ணசாலைக்கு வேலியும் அமைத்தல் வேண்டும்.

மயிலுடைப் பீலியின் விதானம் மேல் வகுத்து,
அயிலுடைச் சுரிகையால் அருகு தூக்கு அறுத்து,
எயில் இளங் கழைகளால் இயற்றி, ஆறு இடு
செயலுடைப் புது மலர் பொற்பச் சிந்தியே.

இந்த நான்கு பாடல்களிலும், கட்டுமானக் கலையின் பல செய்முறைகளையும் கம்பன் பள்ளிப்பாடம் போதிப்பது போல, போதிக்கிறான். இந்தப் பர்ணசாலை கட்டப்படும் இடம் காடு. அயோத்தியில் இது போன்ற வீடு கட்டப்பட்டிருக்குமாயின் கம்பன்

கூறும் செய்முறைகளும் பயன்படுத்தும் பொருட்களும் முற்றிலும் வேறு பட்டவையாக அமைந்திருக்கும் காட்டில் என்னென்ன பொருட்கள் உடனடியாக கிடைக்குமோ அவற்றை மட்டுமே பயன்படுத்த வேண்டும் என்பது இப்பாடல்களின் அடிப்படை. பயன்படுத்த வேண்டிய பொருட்களின் பட்டியலைப் பார்ப்போமா?

1. நீண்ட மூங்கில் கழிகள், 2. தேக்கு மர இலைகள், 3. நாணல் புற்கள், 4. மூங்கில் குச்சிகள்/ தண்டுகள், 5. மண், 6. ஆற்று நீர், 7. குங்குமச் சேறு, 8. ஆறு தருகின்ற மணி, 9. ஆறு தருகின்ற முத்து, 10. மயிற்பீலி, 11. புதுமலர்கள்

இப்பட்டியலே காட்டில் நிகழ்த்தும் கட்டுமானக் கலையில் கம்பனின் கைவண்ணத்தை மிகத் தெளிவாகக் காட்டிவிடுகிறது அல்லவா?

இவ்விதம் காட்டில் எளிதாகக் கிடைக்கும் பொருட்களை மட்டுமே பயன்படுத்திக் கட்டப்பட்ட அந்தக் கட்டுமானம் மிக உறுதியானது. வலிமை மிக்கது. காலத்தால் அழியாதது. இராவணனால் அகழ்ந்து எடுக்கப்பட்டு, சித்திரகூட மலைப் பகுதியிலிருந்து இலங்கைக்குப் புட்பக விமானத்தில் வானமார்க்கமாக எடுத்துச் செல்லப்பட்டு அங்கே தரையிறக்கி மீண்டும் நிறுவப்பட்டு, கதை நிகழும் 14 ஆண்டு காலமும் கட்டப்பட்ட அன்று இருந்த பொலிவுடன் விளங்கியது இந்தப் பர்ணசாலை. இதற்குச் சான்று கம்பன் பாடல்களிலேயே கிடைக்கின்றது.

இலங்கை சென்று சீதாப்பிராட்டியைச் சந்தித்து மீண்ட அனுமன் இராமனிடம் வந்து சீதை இருந்த நிலை குறித்து, விவரிக்கின்றான். அக்கட்டத்தில் அனுமன் கூறும் ஒரு செய்தி. 'உன் தம்பி அன்று வடிவமைத்துக் கட்டினானே. அதே பர்ணசாலையில்தான் சீதை இன்னும் குடியிருக்கிறாள்' என்பதாக அமைகிறது.

"..............உம்பி புல்லினால் தொடுத்த சலையில் இருந்தனள்"

என்ற அனுமன் இராமனிடம் கூறுகிறான். முழுப்பாடலும் இதோ.

வேலையுள் இலங்கை என்னும் விரிநகர் ஒருசார், விண்தோய்
காலையும் மாலையும் இல்லதோர் கனகக் கற்பகச்
சோலை அங்கு அதனில் உம்பி புல்லினால் தொடுத்த
சாலையில் இருந்தனள் ஐய, தவம் செய்த தவம் ஆம் தையல்.

ஆக, கம்பன் எழுப்பிய குடில் எளிமை உடையது. அழகு மிகுந்தது. வலிமை மிக்கது. அவன் பெற்றிருந்த கட்டுமானத்துறை அறிவைப் பறைசாற்றி நிற்பது.

கம்பனில் நீர்மேலாண்மை

பப.சுஜாதா
வரலாற்றுத் துறை உதவிப்பேராசிரியர். அரசினர் மகளிர் கலைக்கல்லூரி.
கும்பகோணம்

எகிப்திய நாகரீகம், மெசபடோபியா நாகரீகம், சிந்து சமவெளி நாகரீகம் ஆகிய அனைத்துமே ஆற்றங்கரை நாகரீகங்களே. பழங்காலத்தில் அரசர்கள் அரண்மைனைகள், கோயில்கள் யாவும் ஆற்றங்கரையில் அமைக்கப்பெற்றிருப்பதைக் காணமுடிகின்றது. பஞ்ச பூதங்களில் நீர் தன்னிடம் வந்து சேர்ந்த உயிர்களையும் தாவரங்களையும் பேணி வளர்க்கும் குணமுடையதால் நதிகள் தாயாக மதிக்கப்பட்டு பெண்ணின் அடையாளமாகவே கருதப்படுகிறது. குளியிலிலேயே சிறந்தது கங்கை நீராடல்தான். நதிகளில் நான் கங்கை என்கிறார் கிருஷ்ணர். ஒரு சொட்டுக் கங்கை நீரையேனும் பருகியவரைக் குறித்து எமன் அமைதி காக்கிறான் என்கிறது பஜகோவிந்தம். இத்தகைய வளமை பொருந்திய நீர் பற்றியும், நீரின் மேலாண்மை பற்றியும் கம்பராமாயணத்தில் காண்பதாக இக்கட்டுரை அமைகின்றது.

தியாக நதி

கங்கை ஆறு தன்னைத் தடுப்பவரையும் அசுத்தம் செய்பவரையும் மன்னித்தவாறே அவர்களையும் தன்னையும் தூய்மைப்படுத்தியவாறு அது பாய்ந்து கொண்டே இருக்கிறது. கம்பரின் வருணனைப்படி எருமைகள், நீர் மலர்களில் உள்ள வண்டுகள், நீரில் உள்ள சேல்மீன்கள், கயல்மீன்கள், அன்னப்பறவைகள், மகளிர் போன்ற அனைவரும் கங்கையாற்றில் துள்ளி விளையாடுவது காட்டப்பெறுகின்றது. கங்கை அத்தனை உயிரினங்களின் வாழ்விடமாக விளங்குகின்றது.

கால்பாய் வன முதுமேதிகள் அதில் மேய்வன கடைவாய்
பால்பாய்வன நறைபாய்வன மலர் வாயளி படரச்
சேல்பாய்வன கயல்பாய்வன் செங்கால் மடஅன்னம்
போல்பாய் புனன் மடவார்படி நெடுநாடவை போனார் (632)

தெய்வநதி

மனிதர்கள் நீர்நிலைகளில் நீராடும்போது கங்கை, யமுனை, கோதாவரி, சரஸ்வதி, சிந்து, நர்மதை, காவிரி ஆகிய அனைத்தும்

தான் நீராடும் தீரத்தத்தில் கலக்கவேண்டும் என்று வேண்டுவார்கள். அவ்வேண்டுதலைக் கம்பராமாயணத்தில்

கன்னி நீக்கருங் கங்கையுங் கைதொழாப்
பன்னி நீங்கரும் பாதகம் பாருளோர்
என்னி னீக்குவர் யானுமின் றெற்றந்த
உன்னி னீங்கினெ னுய்ந்தனெ னாலென்றாள் (641)

என்று கங்கை இராமபிரானிடம் "சுவாமியே, உலகத்தாரெல்லாம் என்னிடத்தில்மூழ்கி பெருந்திரளான பாவத்தைத் தீர்த்துக் கொள்ளும்போது தாங்களே என்னிடத்தில் மூழ்கியதால் என்னிடம் உள்ள பாவங்கள் எல்லாம் நீங்கப்பெற்று புனிதமானேன் " என்று கூறுவதுபோலக் கம்பர் பாடல் புனைந்துள்ளார்.

கங்கையின் மணநலன்

தேவதேவன் செறிசடைக் கற்றையுட்
கோவை மாலை யெருக்கொடு கொன்றையின்
பூவுநாறலள் பூங்குழற் கூந்தலின்
நாளி நாண்மலர் கங்கையும் நாளினாள்

இது சீதை கங்கை நீராடியபோது கம்பர் பாடியபாடல். சீதை தன்னுள் மூழ்கியதால் சிவபெருமான் முடியிற்சூடிய எருக்கு, கொன்றை, போன்ற மலர்மாலைகளின் மணத்தைக் கொண்டிருந்த கங்கை, பிராட்டி தடவிய கஸ்தூரி, புனுகு ஆகியனவற்றின் மணம் கொண்டது என்று கம்பர் பாடுகின்றார்.

செவிலித்தாய்

நுரைக்கொ ழுந்தெழுந்தோங்கி நுடங்கலான்
நுரைத்த கூந்தலின் கங்கை மந்தாகினி
ஊரைத்த சீதை தனிமையை யுன்னுவாள்
திரைக்கை நீட்டிச் செவிலியி னாட்டினாள் (646)

சீதாப்பிராட்டி தோழியர்கூட்டத்துடன் நீராடாமல் தனித்து நீராடுகிறாளே என்று எண்ணம் கொண்டு கங்கை செவிலித் தாயாக அமைந்து நீராட்டுகிறது என்கிறார் கம்பர்.

பிரியாவிடை கொடுத்த கங்கை

விடுநதி கடிதென்றான் மெய்புலி ரனையானும்
முடுகின நெடுநாவாய் முரிதிரை நெடுநீர் வாய்க்
கடிதினின் மடவன்னக் கதியது செலநின்றார்
இடருற மறையோரு மெரியுறு மெழுகானார்

இராமன் குகனிடம் நாவாய்களை வேகமாக ஓட்டச் சொல்ல இதன் காரணமாக மறையோர் இராமன் தம்மை விட்டுப்பிரிகிறானே என்று கலங்கினராம். இதனைக் கண்டுக் கங்கையும் பிரியாவிடை தருகின்றது.

முடிவுகள்

கம்பராமாயணத்தில் கம்பரால் கங்கைநதி தன்னுள் வாழும் அனைத்து உயிர்களையும் காக்கும் தாய்த்தன்மை உடையதாகக் காட்டப்பெற்றுள்ளது.

மேலும் பாவங்களைப் போக்கும் கங்கையின் பாவச்செறிவை இராமபிரான் அதனுள் மூழ்கியாதால் தீர்த்துவைக்கப்பட்டது என்கிறார் கம்பர்.

சீதைக்குக் கங்கை தோழியாகவும் தாயகவும் அமைந்து அவளைக் குளிர்வித்தது.

கங்கை இராமனையும் சீதையையும் பிரியாவிடை தந்து அனுப்பி வைத்தது.

இவ்வகையில் கங்கை உயிருள்ள ஒரு பாத்திரமாகவே கம்பரால் படைக்கப்பெற்றுள்ளது.

கம்பனில் காணலாகும் அறிவியல் அருமைகள்

எறும்பூர் **கை. செல்வகுமார்.**
வரலாற்று ஆசிரியர். அரசு உயர்நிலைப் பள்ளி, பூதேரி

கம்பராமாயணம் 10,480 பாடல்களை கொண்டதாகவும், எட்டு வகையான யாப்புக்களைக் கையாண்டுள்ளார். கலிவிருத்தம் மிகுதியாகக் காணப்படுகிறது. ஆறு காண்டங்களாக பிரித்து 'வடமொழி', 'தென்மொழி' காப்பிய நயங்களாகிய பொன்மையில் தம் சித்திரக்கோலைத் தோய்த்து தம் காப்பிய ஓவியத்தைக் கம்பநாடார் வரைந்தார் என மு. இராகவயங்கார் குறிப்பிடுகின்றார்.

உலகம் யாவையும்

நாம் வாழும் இப்பூமிக்கு அப்பால் எத்தனையோ உலகங்கள் இருக்கக்கூடும். விண்வெளிப் பயணத்தை மேற்கொண்டு மனிதன் சந்திர மண்டத்தில் இறங்கிவிட்டு பூமிக்கே திரும்பி வந்திருக்கின்ற இக்காலத்தில், தான் வாழ்கிற உலகைப் போல பல உலகங்கள் இருக்கின்றன என்பதை மனிதனுடைய அறிவு எளிதில் ஏற்றுக் கொள்ளும் இன்னும் பல கிரகங்களைப் பற்றி ஆராய்ச்சியும் மனிதன் இப்போது இறங்கியுள்ளான்.

உலகம் யாவையும் தாம் உளவாக்கலும்
நிலை பெறுத்தலும், நீக்கலும், நீங்கலா
அலகு இலா விளையாட்டு உடையார் - அவர்
தலைவர்; அன்னவர்க்கே சரண் நாங்களே 1

என்பது கம்பனின் கடவுள் வாழ்த்துப் பாடல். நமக்கு இப்போது தெரிந்திருக்கின்ற, இப்போது தெரியாமல் இருந்து வருங்கால மனிதன் தெரிந்துகொள்ளப்போகின்ற, உலகங்கள் அனைத்தும் அந்த ஒரே இறைவன் தான் படைத்துக் காத்து அழிக்கிறான் என்பதை உணர்த்துவதற்காக 'உலகம் யாவையும்' எனக் கவிராசன் குறிப்பிடுகிறான். அதாவது அனைத்து உலகங்களையும் என்பது கவிஞன் வாக்கு. இந்த பிரபஞ்சம் முழுவதும் எனச் சொல்லுவது பொருந்தும். பரிணாம அடிப்படையில் நிலை பெறுத்தலும், நீக்கல் என்பதனால் விளையும் புதுப்பொருளும் அன்னவருக்கே என்பதில் வரும் ஏகார நயமும் நுணுகி ஆராயத்தக்கதாகும்.

சாணிலும், கோணிலும் உளன்

இரணியனை கடவுளாகத் துதிக்குமாறு அவன் மகன் பிரகலாதனிடம் ஆசிரியர் சொல்லித் தருகிறார். பிரகலாதனோ மறுத்து, 'அரியே இறைவன்' என கூறுகிறான். பின்னர் அந்த கடவுளின் தன்மையை இரணியனுக்கு பிரகலாதன் எடுத்துக் கூறுகிறான். இறுதியாக எங்கும் இருப்பதாக நீ கூறுகிற அவ்விறைவன் இந்த தூணில் இருக்கிறானா? என்று அங்கு நின்ற தூணைச் சுட்டிக்காட்டி இரணியன் கேட்கிறான். அக்கேள்விக்குப் பிரகலாதன் விடுத்த விடையினைக் கம்பன் ஓர் அற்புதமான பாடல் மூலம் எடுத்துக் காட்டுகின்றான்.

சாணிலும் உளன்; ஓர் தன்மை, அணுவினைச் சத கூறு இட்ட
கோணிலும் உளன் மா மேருக் குன்றிலும் உளன்; இந்நின்ற
தூணிலும் உளன்; நீ சொன்ன சொல்லினும் உளன்; இத்தன்மை
காணுதி விரைவின் என்றான் (124)

பரம்பொருள் இருக்குமிடமும் பெரியதாகத் தான் இருக்க வேண்டும் அல்லது இருக்க முடியும் என அவன் தந்தை எண்ணிவிடக்கூடாது என்பதற்காகச் 'சாணிலும் உளன்' என்று தொடங்குகிறான். ஆனால் சாணைவிடவும் சிறிய இடத்தில் அப்பரம்பொருள் இருக்கமுடியாது எனத் தன்னுடைய தந்தை எண்ணிவிட்டால் என்ன செய்வது என்ற ஐயம் உடனே தோன்றிவிடுகிறது. ஆகையால் ஓர் தன்மை, அணுவினைச் சதக்கூறு இட்ட 'கோணிலும் உளன்' என்று உடனே சொல்லி விடுகிறான் என்ற கருத்து அறிவியல் மனப்பான்மையுடன் கூறுவது வியக்க வைக்கிறது.

அணுவைக் கூறுபடுத்தும் கண்டுபிடிப்பு

இரண்டாவது உலக யுத்தத்தில் 1945 இல் ஹிரோஷிமா, நாகசாகி என்ற ஜப்பான் நகரங்களின் மீது அமெரிக்கா அணுகுண்டுகளை வீசுவதற்கு முன்னாள் அணுவைப் பிளக்க முடியாது என்றே விஞ் ஞானம் முடிவு கட்டியிருந்தது. அன்று வழக்கில் இருந்த ஆங்கில அகராதிகள் 'Atom' என்னும் சொல் Body too small to be devised Physical Atom : Supposed ultimate partial of mater; Chemical Atoms - Smallest Partials in which elements combine with themselves (or) each other என்று பொருள்படுவதாக சொல்லின. இருபதாம் நூற்றாண்டின் இரண்டாவது உலகப்போரின்போதும் 'Atom' என்ற அணுவினை மேலும் கூறுபடுத்த

முடியும் என்பதும் அப்படி கூறுபடும்போது அதனின்று பெரும் சக்தி பிறக்கின்றது என்பதும் கண்டுபிடிக்கப்பட்டன.

9 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த கம்பனுக்கு அது தெரிந்து இருக்கின்றது. அவர் அதனைத் தெரிந்திருந்தது மட்டுமின்றி அணுவினை நூறு கூறுகளாக்கிய பகுதிக்கு 'கோண்' என்றும் பெயர் கொடுத்துள்ளார். அதற்கு மேல் சிறியதாக ஒன்றும் இருக்கமுடியாது என்று 1945 ஆம் வரையில் பௌதீக உலகம் எண்ணிக் கொண்டிருந்த அணுவை நூறு கூறுகளாக்கினால், அப்படி ஆக்கப்பட்ட அணுவின் நூறில் ஒரு பங்கு எவ்வளவு நுண்ணியதாக இருக்க வேண்டும் என்பதை யூகித்துக் கொள்ளலாம். அத்துணை நுண்ணிய கோணிலும் இறைவன் இருக்கிறான் என்று பிரகலாதன் கூறுவதாகக் கம்பன் கூறியுள்ளார். இதன்மூலம் கம்பனுடைய அறிவியல் அருமை, கடவுள் கொள்கை மட்டுமின்றி வேதாந்தங்கள், சித்தாந்தாங்களும் சொல்கின்ற முடிவை ஒரே பாடலில் அடங்கி விடுகிறது.

அனுமனின் மருத்துவ அருஞ்செயல்

இந்திரஜித் விடுத்த பிரம்மாத்திரத்தினால் இலக்குவன் விழுந்து கிடக்கின்றான். போர்களத்திற்கு வந்து இதனைக் கண்ட இராமன் இலக்குவன் இறந்தான் என்று புலப்பட புலம்பி அறிவு சோர்ந்து துயருறுகிறான். அப்போது சாம்பவான் 'கடிது போய் மருந்து கொண்டுவா' என்று அனுமனைப் பணிக்கின்றான். இலக்குவன் இறந்தானேயானால் இராமன் இறப்பது திண்ணம். ஆகையால் மாண்டு கிடக்கும் சேனையோடு இராம, இலக்குவன் இருவரையும் வாழ வைப்பதற்கு நீ மருந்து கொண்டு வரவேண்டும். உன்னுடைய அச்செயலால் அவர்கள் மாத்திரமல்லாமல் மூவுலகும், மறைகளும் தரும தேவதையும் வாழ்ந்ததாக வரும் என்று சாம்பவான் கூறுகிறான். இதனைக் கம்பன் மிக அழகாக,

எழுபது வெள்ளத்தோடும், இராமனும் இளைய கோவும்
முழுதும் இவ்வுலகம் மூன்றும். நல் அற மூர்த்திதானும்
வழுஇலா மறையும், உன்னால் வாழ்ந்தன ஆகும் மைந்த
பொழுது இறை தாழாது, என் சொல் நெறி தரக் கடிது போதி (23)

என்று குறிப்பிடுகின்றார் கம்பர், இதற்குப் பிறகுதான் அனுமன் சூரிய உதயத்திற்கு முன்னாள் மருந்து மலையைக் கொண்டு வந்து

எல்லோரையும் பிழைக்கச் செய்கின்றான். அனுமனின் முக்கியமான மூன்று அருஞ்செயல்களில் இதுவும் ஒன்றாக கம்பர் காட்டுவது மருத்துவ துறையின் அற்புதத்தை அன்றே சுட்டிக் காட்டியிருப்பது வியக்க வைக்கிறது.

பரிணாம தத்துவம்

ஒவ்வொன்றையும் அதனதன் இயற்கைக்கு ஏற்ப வளரச் செய்வதும், முதிர்ச்சியடையச் செய்வதும் இறைவனது காத்தல் தொழிலின்பால் படுவதாகும் 'Evolution' என்று ஆங்கிலத்தில் சொல்லுகிறோமே அந்த பரிணாமத் தத்துவம் இந்த காத்தல் தொழிலுடைய அடிப்படை அம்சமாகும். தேங்காய் நெற்றியிலிருந்து தென்னங்கன்று தோன்றி தென்னை மரமாகிறது. பெண்ணின் கருப்பையிலிருந்து குழந்தை தோன்றி மகளாகவோ, மகனாகவோ வளர்கின்றது. ஆகவே தான் கம்பர் உளவாக்கலுக்கு அடுத்தப்படியாக 'காத்தல்' எனச் சொல்லாமல் 'நிலைபெறுத்தல்' என்று சொல்லுகின்றார். அதனதன் இயல்புக்கேற்ப வளர்வதும் முதிர்வதும்தான் பரிணாமத் தத்துவத்தின் அடிப்படை.

நீக்கல் என்பதின் புதுப்பொருள்

படைத்தல், காத்தல் என்னும் இரண்டிற்கும் இப்படிப் புதுப்பொருள் கொடுத்த கம்பர் அழித்தல் என்னும் தொழிலுக்கும் 'நீக்கல்' என்னும் சொல்லை ஆள்வதின்மூலம் புதுப்பொருளைக் கொடுக்கின்றார். தோற்ற மளிக்கும் அனைத்தும் பஞ்ச பூதங்களினால் ஆனவையே. இவை முழுமையாக அழிந்து விடுவதில்லை.

உதாரணமாக நீர் கொதிக்க வைக்கப்படுமாயின், அது சுண்டி ஆவியாகிப் போய்விடுகிறது. இனிமேல் அது நீராக இல்லை என்ற நோக்கில் அது அழிந்துதான் போகிறது என்றாலும், அதே நீர் ஆவியாக மாறியிருக்கிறது அது மீண்டும் நீராக மாற முடியும். இவற்றை ஒருங்கே உணர்த்துமாறு கவிஞர் 'அழித்தல்' என்னும் சொல்லுக்கு பதிலாக 'நீக்கல்' என்ற அறிவியல் பூர்வமான சொல்லை ஆள்கிறார் என்றே சொல்ல வேண்டும்.

இயற்கை சமநிலை

வீடு சேர நீர்வேலை கால் மடுத்து
ஊரு பேரினும் உணவல இலா நலம்

கூடு கோசலம் என்று கொது இலா
நாடு கூறினோம்; நகரம் கூறுவோம்

பூமியானது நீர், காற்று, கடல் பொங்கிய நிலப்பரப்பு பரவும் வகையில் அழியாது நிற்க கூடாது இந்த நிலப்பரப்பு. அழியா வகையில் நீர், காற்று, அதனை தாங்கும் பூமி, இதை சமநிலைக்கு கொண்டு வரவே கடல் பொங்கி வழிகின்றது என்றும் உலகம் நிலைத்து அழியா பொருளாக இருக்குமென கோசல நாட்டை வர்ணிப்பதன் மூலம் அறிவியல் புலமையை புலப்படுத்துகின்றார் கம்பர்.

கம்பனும், ஐன்ஸ்டீனும்

ஐன்ஸ்டீனின் சார்பியல் கொள்கையானது Theory of Relativity ஏறக்குறைய ஒளியின் வேகத்தில் இயக்கிச் செல்லும் ஒரு சிறிய நூல் அது பெற்றிருக்கும் உயரளவு உந்தத்தால் (Movementllm) ஒரு தடித்த மரத்தைக் கூட ஒரு கத்தி வெண்ணையை வெட்டுவது போல வெட்டிச் சாய்த்துவிடும் என்பது உந்த மாறாக் கோட்பாட்டு விதியாகும்.

தாடகை வதைப் படலத்தில் தாடகை அங்கிருக்கும் மரங்களை பிடிங்கி எடுத்தும், பாறாங்கற்களை புரட்டி எடுத்தும், இராமன் மீது ஏவியதும், மிகவும் விரைந்த வேகத்தில் செல்லும் அம்புகளை இராமன் எய்து அவற்றையெல்லாம் தவிடு பொடியாக்கினான் என்பதை,

கல்லன் மாரியைக் கைவகுத்தாள் அது
வில்லன் மாரியன் மிரன் விலக்கினன்

என்று வர்ணித்த கம்பர் அம்பின் வேகத்தை தவறாமல் குறிப்பிடுகின்றார். 'சொல்லொக்கும் கூடிய வேகச் சுடு சரம்' என்று ஏவுகனை விஞ்ஞானி போன்று தெரிவிக்கின்றார்.

எந்திரம் பற்றிய சிந்தனை

இராவணனும், சுக்ரீவனும் மல்யுத்தம் செய்யும்பொழுது எந்திரம் பற்றி ஒரு உவமையைக் கம்பர் கையாண்டுள்ளார். மல்யுத்தத்தின்போது சுக்ரீவன் இராவணனை நிலத்திடைக் கிடத்தித் தேய்த்தான் என்றும், உடனே இராவணன் சுக்ரீவனை 'எந்திரம் போல' எடுத்தெறிந்தான் என்று ஒரு பாடலில் கம்பர் குறிப்பிட்டுள்ளார். எந்திரம் மிக விரைவில் செயல்படும் ஆற்றல் உடையது என்றும், அக்காலத்தில் எந்திரம் சில இருந்திருக்கின்றன என்றும் அறிய முடிகிறது.

வந்தவனை நின்றவன் வலிந்தெதிர் மலைந்தான்
அந்தகலும் அஞ்சிட நிலத்திடை அரைந்தான்
எந்திரமெனக்கடி தெடுத்தவ னெறிந்தான்
கந்துக மெனக்கடி தெழுந்தெதிர் கலந்தான்

ஆகவே கம்பர் எந்திரங்கள் பற்றிய சிந்தனையை அன்றே தூண்ட செய்துள்ளார் என்பது இப்பாடல் மூலம் தெளிவாகிறது.

முடிவுரை

பல்துறையறிவு, அறநெறி வாழ்வு, சமரச உணர்வு, பரம்பொருள் ஞானம் உடையவர் கம்பர். சொல்லாற்றல், பொருளமைதி, இழுமை-யின்பம், களத்திற்கு ஏற்பச் சந்தவேறுபாடுகள், பாத்திரப் படைப்பு, மனத்துவநெறிகளுக்கு ஏற்பப் பாத்திரங்களை இயங்க வைத்த பெருமை கம்பனுக்கு நிகர் கம்பனேதான்.

கம்பனில் அறிவியல் நீரியலும் அறவியல் நீர்மையியலும்

முனைவர். நயம்பு அறிவுடைநம்பி,
சென்னை

தொடக்கவுரை

உலகப் பெருங்காப்பியங்களுள் இராமாயணம் பழமையும், பெருமையும் மிக்கது. பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழ் மொழியில் மொழிபெயர்த்திடல் வேண்டுமென்ற பாரதியின் கனவை, ஓராயிரம் ஆண்டுகளுக்கு முன்பே நனவாக்கியவர் கம்பர். "கல்வி சிறந்த தமிழ்நாடு" என்றார் பாரதியார். அதற்கு எடுத்துக்காட்டுக் காட்ட "புகழ்க் கம்பன் பிறந்த தமிழ்நாடு" என்று கம்பரையே சான்று காட்டினார். கல்வியில் பெரிய கடலாகக் கம்பர் விளங்குகிறார்.

இல்லாத உலகத்து எங்கும் இங்கு இவன் இசைகள் கூரக்
கல்லாத கலையும் வேதக் கடலுமே என்னும் காட்சி
சொல்லாலே தோன்றிற்று அன்றே

என்று அனுமனை வியந்து இலக்குவனிடம் இராமன் பாராட்டிக் கூறுவது கம்பருக்கு முழுவதும் பொருந்துவதாகும். "மோதாவிகட்கு எல்லாம் மேலான மேன்மையான்" (6364) "அறிவினுக்கு அறிவு போல்வான்" (10225) என்பன போன்ற காவியத்தொடர்கள் அனைத்தும் கம்பருக்கும் மிகவும் பொருத்தமாகும். கம்பரின் பல்துறை அறிவாற்றல்களுக்குக் கம்பனில் தொட்ட இடமெல்லாம் சான்றுகள் பல உள்ளன. ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பதற்கிணங்க அவரது நுண்மாண் நுழைபுலத்திற்கு "கம்பனில் அறிவியல் நீரியலும், அறவியல் நீர்மையிலும்" என்ற இக்கட்டுரை ஒரு சிறு சான்றாகும்.

நீரின் அருமை, பெருமை, பயன்

இராமகாதையில் நீரின் அருமை, பெருமை, பயன் ஆகியவற்றை கம்பர் பாடியுள்ளார். கவிச்சக்கரவர்த்தியான கம்பர் நிலவியல், நீரியல், வளிஇயல், தீ இயல், வானியல் ஆகிய ஐந்தையும் நன்கு உணர்ந்தவர். "ஐந்தின் வகைதெரிவான் கட்டே உலகு" என்பதற்கு இலக்கியமானவர். ஐந்தையும் ஐயம்திரிபற நன்குணர்ந்த கம்பர் இவற்றுள் நீரியல் பற்றியே அதிகம் பாடியுள்ளார். நீரியல் என்னும் அறிவியல் வாயிலாக அறநெறி என்னும் விழுமியங்களை உணர்த்திய உத்தி எண்ணி வியக்கத்தக்கது.

சுருங்கக்கூறின் கம்பன் என்னும் நாணயத்தின் ஒருபக்கம் அறிவியலும், மற்றொரு பக்கம் அறவியலும் அமைந்து கற்போரைக் களிப்படையச் செய்கின்றன.

நீரின் பல்வேறு பெயர்கள்

நீர், தண்ணீர், தீர்த்தம், ஆற்றுநீர், ஊற்றுநீர், மழைநீர், கடல்நீர் என நீருக்குப் பல பெயர்களுண்டு. "பதின்மூன்று வகையான நீர் நிலைகளைக் கம்பர் தருகிறார். ஏறக்குறைய பதினைந்து ஆறுகள் பற்றிய குறிப்புக்கள் கிடைக்கின்றன. (கம்பன் களஞ்சியம். ப.386) என்று ச.சிவகாமி குறிப்பிட்டுள்ளார். மாசில்நீர் (860) ஓதம் (3712) தண்ணீர் (1246) நளிர்புனல் (461) பெருவெள்ளம் (7201) எனப் பட்டியலிட்டால் மிக நீளும்.

பல்வேறு நீர்நிலைகள்

நல்நீர்ச்சிறை (784) தெள்ளுபூந்தடம் (4606) அன்னம் ஆடுதுறை (4513) சார்ந்து வீழ் அருவி (857) கான்ஆறு (2064) பெரும்திரை நதி (2289) ஊருணி (1394) ஓடை (462) நெடுங்கடல் (2306) ஆழி (4591) அளக்கர் (4188) உவரி (4849) பரவை (4744) புணரி (3844) வேலை (6388) குட்டம் (6607) கயங்கள் (543) குளம் (66) கேணி (1309) சுனை (866) பொய்கை (3730) எனப் பல நீர்நிலைகள்.

ஆறுகள் பல

வெண்நிறக்கங்கை (1943) காவேரி (10120) கோதாவரி (2732) கோமதி (398) கௌசிகநதி (407) சம்பூநதி (4177) சரசுவதி (2029) சரயு (335) சோணை (452) சுவணைநதி (4469) நருமதை (4459) பெண்ணை (4604) பொருநை (4477) யமுனை (2029) இங்ஙனம் கல்வியல் பெரியவராகிய கம்பர் நீரின் பல்வேறு பெயர்கள், நீர்நிலைகள், ஆறுகள் ஆகியவற்றைக் குறிப்பிட்டுள்ளார். தற்காலத்தில் நீரியல் அறிஞர்களும், அறிவியல் ஆசிரியர்களும், அறியாத, கேள்விப்படாத பல செய்திகள், நீரியல் நுட்பங்கள் ஆகியன பலரும் வியக்கும்படியாகக் கம்பனில் கற்றுணரலாம்.

புண்ணிய தீர்த்தம்

வடநாட்டினர் சேதுவில் நீராடுவதும், தென்னாட்டினர்; கங்கையில் நீராடுவதும் புண்ணியம் என எண்ணினர். இதனை இன்றும் கண்கூடாகக்

காணலாம். "பூமிவெங்கானம் நண்ணி, புண்ணியத்துறைகள் ஆடி, ஏழிரண்டு ஆண்டின் வா!" (1601) என்று கைகேயி இராமனிடம் மன்னன் ஆணை இது எனக் கூறுகிறாள். இதனால் தீர்த்தங்களில் நீராடுவது புண்ணியம் என்பதை அறிகிறோம். "புண்ணியம் உருக்கின்றன்ன பம்பை ஆம் பொய்கை புக்கார்" (3707) கங்கையாளொடு, கரியவள், நாமகள் கலந்த சங்கம் ஆதலின்" (2029). "யார்க்கும் புத்து ஈர்த்திட்டு அலையாமல், புலவர் நாடு உதவுவது, புனிதம் ஆன அத்தீர்த்தம் அகன் கோதாவரி என்பர்" (4467) "தேடுவார் தேட நின்ற சேவடி, தானும் தேடி நாடுவான்,அன்று கண்ட நான்முகன் கழீஇய நல்நீர் ஆடுவோர் பாவம் ஐந்தும் நீங்கி, மேல் அமரர் ஆவார்". (6514) என்பதால் பஞ்சமா பாவங்கள் நீங்கும் எனப் புலப்படுத்தினார். மேலும் பிறபுண்ணியத்தீர்த்தங்களைவிட, சேதுவே உயர்ந்த புண்ணியதீர்த்தம் என்பதைச் சுட்டிக்காட்டியுள்ளார். "கங்கையோடு, யமுனை, கோதாவரி, நருமதை, காவேரி, பொங்கு நீர் நதிகள் யாவும், படிந்து அலால் புன்மைபோக; சங்கு எறி தரங்க வேலை தட்ட இச்சேது என்னும் இங்கு இதன் எதிர்ந்தோர் புன்மை யாவையும் நீங்கும் அன்றே" (10120) என்பதால் அறியலாம். ஆறு, கடல்களில் உள்ளதைப் பொதுவாக நீரியல் நிபுணர்கள் தண்ணீர் என்றே ஆராய்வர். கடல், ஆற்றுநீரில் குளித்தால் உடல்நோய்களும், உள்ளநோய்களும் நீங்கும் என்ற நுட்பத்தைக் கம்பர் சுட்டிக்காட்டியுள்ளார். இது உண்மை என்பதை இன்றும் கண்கூடாகக் காணலாம்.

சரயுஆறும், மக்கள் பண்பு நலன்களும்

தன்னிடத்தில் வாழும் மக்களின் தன்மை பொறுத்தே ஒரு நாட்டின் பெருமை விளங்கும். இதனை

எவ்வழி நல்லவர் ஆடவர் அவ்வழி
நல்லை வாழிய நிலனே (புறம் :187)

என்றார் ஔவையார். கோசலநாட்டு ஆடவரும், பெண்டிரும் ஐம்பெரி வழுவாமல் வாழ்பவர். அந்நாட்டின் ஆற்றைப் பற்றிக் கூறுவாம் எனக் காப்பியத்தைத் தொடங்குகிறார். திருவள்ளுவரின் வான்சிறப்பு, இளங்கோவடிகளின் மாமழை போற்றுதும் என்பவற்றை நன்குணர்ந்த கம்பர் நூலின் தொடக்கத்தை (பால:ஆற்றுப் :1) நீரி-லிருந்தே தொடங்கினார். நீர்ச்சிறப்பைப் பாடுவது மங்கல மரபாகும். உடலுக்கு முகம்போல காப்பியத்திற்கு ஆற்றுப்படலம் அமைந்தது.

மழை பெய்து சரயு ஆற்றில் வெள்ளம் பெருகியது. மேகங்கள் மழை பொழிந்தன என வெறுமனே கூறாமல் கைம்மாறு கருதாமல், உள்ளதை ஒளியாமல் எல்லாவற்றையும் கொடுக்கும் வள்ளல்கள் போல மேகம் மழை பொழிந்ததாம். "வள்ளியோரின் வழங்கின மேகமே" (ஆற்றுப்:4) என்றார். ஈதல் இசைபட வாழும் கோசல மக்களின் பண்பையும் உணர்த்தினார். "மாரியும் உண்டு ஈண்டு உலகு புரப்பதுவே" (புறம் 107) என்ற கபிலரின் பாட்டு இங்கே ஒருங்கு வைத்து எண்ணத்தக்கது. மழைதான் உலக உயிர்களைக் காப்பாற்றுகிறது என்பது தெளிவாகிறது. ஈகையால் இருவர்க்கும் இன்பம் என்பதை உணர்த்த "உவந்து ஈயும்" என்றார். 4360 பாடல்களுக்குப் பின்னர் அமைந்த ஒரு பாடலை இங்கே ஒருங்கு வைத்து மகிழலாம். கார்காலப் படலத்தில் "இரவலர்க்கு ஈவது இன்மையால் வெள்கிய மாந்தரின் வெளுத்த மேகமே" என்றார். உள்ளதையெல்லாம் கொடுத்துவிட்ட நிலையில், தம்பால் வந்தவர்க்கு கொடுக்க இயலாமையால் உள்ளம் நாணும் வள்ளல்கள் முகம்போல மேகங்கள் மழைபொழிந்துவிட்டு வெளித்திருந்தன. நாணமும், கவலையும் மனத்தில் புகுந்தால் மானமுள்ளவன் உடல் நிறம் மாறும் என்பதை "வெள்கிய மாந்தரின் வெளுத்த" என்றார். மழைபெய்து வெள்ளம் பெருக்கெடுத்தது. நெறிமுறையே அரசு செய்யும் மன்னவன் புகழ்போலவும்; ஞானநலம்மிக்க நல்லோர் கையில் ஈந்த தானம் போலவும் வெள்ளம் பெருகியதாம். மானம் நேர்ந்து, அறம் நோக்கி, மனுநெறி ஒழுகினால் மட்டுமே அரசனுக்குப் புகழ் உண்டாகும் என்பது குறிப்பு. உதவிய பொருள் சிறிதே ஆயினும், ஏற்றவர் சிறப்பால் பயன் பெரிதாகும். "தான் சிறிதாயினும் தக்கார் கைப்பட்டக்கால் வான் சிறிதால் போர்த்து விடும்" என்ற நாலடியார் பாடல் எண்ணத்தக்கது. மழைவெள்ளம் பெருகி வந்ததை இரு உவமைகள் வாயிலாக மன்னனின், மக்களின் மாண்புடன் இணைந்து உணர்த்திய திறம் உணரத்தக்கது.

மானம் நேர்ந்தறம் நோக்கி மனுநெறி
போன தண்குடை வேந்தன் புகழென
ஞான முன்னிய நான்மறை யாளர்கைத்
தானம் என்னத் தழைத்தது நீத்தமே! (ஆற்றுப்:5)

என்பதைப் படித்துணர வேண்டும்.

வியந்தவர் வெருக்கொள விசும்பின் ஓங்கினான்
உயர்ந்தவர்க்கு உதவிய உதவி ஒப்பவே (35)

என்பதை இங்கே ஒருங்கே எண்ணவேண்டும். நீர்நிலையைச் சொல்ல வந்தவர் நல்ல நீர்மைகள் பல உணரவைத்தார்.

சரயு என்பது தாய்முலை அன்னதிவ்
உரவு நீர்நிலத் தோங்கும் உயிர்கெலாம் (12)

என்ற பாடல் நீரின் இன்றியமையாமையை உணர்த்துகிறது.

ஒரு தாய் தம் குழந்தைக்குப் பாலூட்டி வளர்ப்பாள். அதைப்போல சரயுநதி நீரூட்டி உயிர்களைக் காக்கிறாள். "மணற்கிளைக்க நீர் ஊறும்; மைந்தர்கள் வாய்வைத்து உணச்சுரக்கும் தாய்முலை ஒண்பால்" (பா31) என்ற திருவள்ளுவமாலை பாடலை இணைத்துக் கற்று மகிழலாம். தாய்முலை தான்பெற்ற பிள்ளையை மட்டும் பேணும். சரயுநதிநீர் உயிர்களை எல்லாம் பேணும் என்பதால் நீரின் சிறப்பு புலப்படும். ஒவ்வோர் உயிர்க்கும் தனித்தனியே தாய்முலைபோல சரயுநதி விளங்கியது என்ற நுட்பம் உணரத்தக்கது. கடல் சூழ்ந்த உலகில் உடல் சூழ்ந்த உயிர்க்கெல்லாம் சரயுநதி உயிராய் விளங்கியது.

நீர் பரவிய பான்மை

சோலை, காடு, பொய்கை, தடங்கள், பூவனம், வயல்கள் தோறும் பரந்து புகுந்து சென்றது. இது "ஓதிய உடம்புதோறும் உயிர் என உலாயது அன்றே" (ஆற்றுப்:20) என்றார். நீர்நிலையைக் கடவுளோடும், தாயோடும் ஒப்பிட்டுப்பாடிய கம்பர் அதனை உயிரோடும் ஒப்பிட்டுப் பாடினார். உயிர் சேர்ந்தபோதுதான் உடல் வலிவுற்று இயங்கும். உயிரின்றேல் சடமாய் ஒழியும். அதுபோல நீர் புகுந்தபோதுதான் வயல், சோலை, குளம் ஆகியன வளம்பெற்று விளங்கும். அது புகாத நிலையில் அவை பயனின்றிப் பாழ்பட்டுப் போகும். ஆகவேதான் நீர்க்கு உயிர் உவமையாய் அமைந்தது. "நீரின்றி அமையாது உலகு" என்றார் வள்ளுவர்.

வெள்ளப்பெருக்கு

பொருட்பெண்டிர், தம்மிடம் வந்தோரின் பொருளையெல்லாம் சுருட்டிக் கொள்வதுபோல் வெள்ளம் பொருள்களையெல்லாம் கவர்ந்து வந்தது. வணிகர்கள் பொன், மணி முதலிய பொருட்கள் அனைத்தும் கொள்முதல் செய்து வருவதுபோல வெள்ளம் வழியில் வந்த எல்லாப் பொருள்களையும் அள்ளி வந்தது. பூக்கள், தாதுக்கள், செம்பொன் இவற்றையெல்லாம் அடித்து வந்த வெள்ளம் வானவில்லைப்போல

பல நிறத்துடன் காணப்பட்டது. வெள்ளப்பெருக்கு கடலுடன் கலப்பது, இரு படைகள் ஒன்றோடொன்று போரிடுவது போல இருந்ததாம். வெள்ளப்பெருக்கை உலகியலோடும், மக்களின் பழக்கவழக்கங்களோடும் ஒப்புமைகாட்டி பாடியதிறம் வியக்கத்தக்கது.

வெள்ளம் கடலில் கலந்த காட்சி

கல்லிடைப் பிறந்த போந்து கடலிடை கலந்த நீத்தம்
எல்லையில் மறைக ளாலும் இயம்பரும் பொருளீதென்னத்
தொல்லையின் ஒன்றே யாகித் துறைதொறும் பரந்த சூழ்ச்சி
பல்பெரும் சமயம் சொல்லும் பொருளும் போல் பரந்த தன்றே! (19)

என்ற பாடல் நீரியலில் அமைந்த நுட்பமான, முத்தாய்ப்பான பாடலாகும். இப்போது இருப்பது போலவே கம்பர் காலத்திலும் சாதி, மத, கடவுள் வேறுபாடுகள் இருந்தன. "ஒருவனே தேவன்" என்பதை உணர்த்த இப்பாடல் எழுந்தது. ஆற்றுநீர், குளத்துநீர், மழைநீர் என இடத்தால் வேறுபாட்டாலும் எல்லாம் ஒன்றே. மழைபெய்து வாவி, ஓடை, கூவம், குளம், ஆறு என வந்த வெள்ளம் இறுதியில் ஒரே கடலில் கலந்தது.

அதைப்போல சமயங்களால் வேறுபட்டிருப்பினும் கடவுள் ஒருவரே என்பதே உண்மை. அறியவேண்டிய உறுதி நலனை உணர்த்தினார். சமயங்கள் ஆறுகள் போன்றவை. அவை ஒரு கடவுள் என்ற கடலில் தான் கலக்கின்றன. நீர்ப்பரப்புடன் கடவுள் பரப்பை ஒப்பவைத்து கம்பர் கவித்திறன் உணரத்தக்கது. அரிய கருத்தை எளிய உவமை வாயிலாகக் கம்பர் விளக்கியுள்ளார். ஆற்றுப்படல இயல்புகளை வைத்து ஈகை, இரக்கம், ஒழுக்கம், மானம், ஞானம், ஈகை, தவம், நீதி, வீரம் முதலிய உயர்பண்புகளும், ஒருதெய்வத் தெளிவும் உணர்த்தியுள்ளார். ஓடிவரும் நீரின் இயல்புகளைப் பாடிவரும் பாடல்களால் மக்களின் பண்புநலன்களை விளக்கியுள்ளார். கம்பர் கவின்மிகு கவிகளால் நீரியல்பும்; மக்களின் நீர்மை இயல்பும் விளங்கவைத்தார். ஒரு கல்லில் இரண்டு மாங்காய் என்பதை உணரவைத்தார்.

ஆற்றுநீரும், மக்கள் இயல்பும்

பம்பைப் பொய்கையின் நீர் தெளிவானது. கரையிலுள்ள மணிகளின் நிறத்தைக் காட்டுகிறதாம். தனக்கென ஒரு நிறமின்றி, அந்தந்த மணிகளின் நிறத்தைக் காட்டுவது, தமக்கென ஒரு குறிக்கோளின்றித்

தாம் சார்ந்தவர்க்கேற்ப மாறும் கீழ்மக்களைப் போன்று நீர் உள்ளதாம்.

சேர்ந்துழிச் சேர்ந்துழி நிறத்தைச் சேர்தலால்
ஓர்ந்துணர்வு இல்லவர் உள்ளம் ஒப்பது (2) என்றார்.

நிலத்தியல்பால் நீர்திரிந் தற்றாகும் (452) என்ற குறளின் கருத்து இங்கு எண்ணத்தக்கதாகும்.

பாடுபட்டுத் தேடிய செல்வத்தைத் தீ நெறியில் செலவிட்டால் அவனை விட்டு அறவே நீங்கிவிடுவது போல, மலையில் நீரைப்பொழிந்த மேகம் நீங்கியதால், மலையிலிருந்து தோன்றும் ஆறுகள் நீர் வற்றியதாம் இதனை,

மாகயாறு யாவையும் வாரி அற்றன தகவிழந்து அழிவில் நன்பொருள்
போக ஆறு ஒழுகலான் செல்வம் போலவே (108)

என்றார். உள்ளம் தெளிவாகில் வாக்குத் தெளிவாகும். செயலும் தெளி வாகும். மனமாசுகளற்ற ஞானியரின் உள்ளம்போல நீர்நிலைகளில் தண்ணீர் தெளிவாக இருந்ததை

வஞ்சனைத் தீவினை மறந்த மாதவர்
நெஞ்செனத் தெளிந்தன நீர் (113)

என்பதில் அறியலாம். இ;ங்ஙனம் நீர்நிலைகளைப் பாடவந்த கம்பர் உலகமக்களின் இயல்புகளை உவமையாகக்காட்டி தம் உலகியலறிவை நம் உள்ளத்தில் நிறுத்துகிறார்.

கவிஞர்க்கும் கவிக்கும் இலக்கணம்

கம்பர் ஆறுகளைக் காப்பியத்தில் பாட வந்தவர், அவற்றின் வாயிலாகக் கவிஞர்க்கும், கவிகளுக்கும் இலக்கணம் கூறியுள்ளார். மனத்தெளிவும், நல்லொழுக்கமும் உடைய சான்றோரின் கவியைப் போன்று விளங்கும் கோதாவரியை இராம இலக்குவர், சீதை ஆகிய மூவரும் கண்டனர். ஒரு கவியானது சொல் பொருள் தெளிவும், பொருளாழமும், பொருள் அகலமும் கொண்டு, மக்களை நல்வழிப்படுத்தவேண்டும். அதைப்போல தெளிந்த நீரும், ஆழமும், அகலும் விளங்க ஓர் ஒழுங்குடன் கோதாவரி ஓடியதாம். இதனை

சவிஉறத் தெளிந்து தண்ணென் ஒழுக்கமும் தழுவிச்
சான்றோர் கவி எனக்கிடந்த கோதாவரி (1)

என்றார். இதனால் கவிக்கு இலக்கணம் கூறினார்.

இராம இலக்குவர்கள் சீதையைத் தேடிச் செல்கையில் பம்பை நதியைக் காண்கின்றனர். ஆழமான அந்நதியின் நீர், கற்பகம் போன்ற கவிஞர்களின் பொருள் ஆழம் மிக்கக் கவிதைகள் தெளிவாகப் பொருளை அறிவிப்பது போலத் தெளிவாகக் காணப்பட்டதாம்.

கற்பகம் அனையஅக் கவிஞர் நாட்டிய
சொற்பொருளாம் எனத் தோன்றல் சான்றது (5)

எனக் குறிப்பிட்டுள்ளார். கற்பகம் எல்லாம் கொடுக்கும். அதைப்போலக் கவிஞர் எப்பொருளைப் பற்றியும் பாடவல்லவர்கள். கற்பகப் பயன்போல கவிஞர்களின் கவிதைகள் இன்பம், சுவை, பயன் மிக்கவையாகும். கற்பகம் போல உயரியவற்றை அளிப்பவரே கவிஞராவர். இங்ஙனம் கவிஞனுக்கும், கவிதைக்கும் ஆறுகளைப் பாடுவதின் வாயிலாகக் கம்பர் இலக்கணம் கூறியுள்ளார்.

கம்பனின் நீர் அறிவியல்

இருபதாம் நூற்றாண்டில்தான் அணுவைப் பிளந்த அதிசயம் நடந்தது. ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே "அணுவைச் சதகூறிட்ட கூறிலும் உளன்" என்றார் கம்பர். அவரது அறிவியல் ஆற்றல் அளவிடற்கரியது. கம்பரின் நீர் அறிவியல் கருத்துக்கள் சான்றிற்கு ஒன்றிரண்டு காணலாம். உலகம் தட்டையானது என்று நம்பப்பட்டது. உலகம் மூன்று பங்கு கடலால் சூழப்பட்டது எனப் புவியியல் பாடத்தில் படித்துள்ளோம். "ஆழிசூழ் உலகமெல்லாம்" (கைகேயி :111) என்ற தொடர் மெய்ப்பிக்கின்றது. உலகம் தட்டையாயின் கடல் சூழ்ந்திருக்க இயலாது. இத்தொடரால் உலகம் உருண்டையானது. கடலால் சூழப்பெற்றது என்ற நீர் அறிவியல் உண்மை தெளிவாகிறது. நீர்முகக்காத மேகம் நீறுபூசிய சிவபெருமானைப் போல வெண்மையாக விளங்கியது. நீர்நிலைகளில் நீரைமுகந்த மேகங்கள் வானத்தில் திருமாலைப் போல கருமையுடன் விளங்கின (ஆற்றுப்:2,) இதனை அறிவியல் ஆசிரியர் பாடம் நடத்தும்போது மேகங்களின் நிறத்தைக் கூறுவார். நாமும் நேரில் பார்த்திருப்போம். "விரிந்தன திசைதொறும் மிசையின் மின்னெலாம்" (கார்கால :10) "மழையும் வேம், மின்னினோடு இடியும் வேம்" (தாடகை வகைப் :6) என்பவற்றால் மழைமேகம், மின்னல், இடி முதலிய அறிவியல் செய்திகளும், நுட்பங்களும் காணப்படுகின்றன.

அலைகடல் தலை அன்று அணை வேண்டிய
நிலையுடைக் கவி நீத்தம் அந் நீத்தமே (2)

என்பதில் அணையைப் பற்றி அறியலாம்.

நீரும், நீர்தரு நெருப்பும், வன்காற்றும், கீழ்நிவந்த
பாரும் சார்வலி படைத்தவன் (4000)

என்பதில் கம்பரின் அறிவியல் நுட்பம் விளங்கும்.

தொகுப்புரை

குறிப்பாகக் கம்பராமாயணத்தில் ஆற்றுப்படலம், நீர்விளையாட்டுப் படலம், கங்கைப்படலம், கங்கை காண்படலம், பம்பை வாவிப்படலம், கார்காலப் படலம், கடல்தாவுபடலம், கடல் காண்படலம், வருணனை வழிவேண்டுபடலம், சேதுபந்தனப்படலம் ஆகியவற்றின் வாயிலாகவும், இராமகாதையின் பல்வேறு பாடல்கள், படலங்கள் வாயிலாகவும் நீரியல் அறிவியல் நுட்பங்களும், அவற்றின் வாயிலாக அறவியல் நெறிகளும் கற்றுணரலாம். நிலத்திற்கு எழிலும், வளமும், நலமும் விளைவிப்பது நீரேயாகும். அந்நீரானது கடலாகப் பரந்து, மேகமாக எழுந்து, மழையாய் பொழிந்து, அருவியாக வீழ்ந்து, ஆறாக ஓடி, ஏரிகுளங்களை நிரப்பி, கிணறுகளில் ஊற்றெடுத்து, சுனையில் பெருகி மீண்டும் கடலிலேயே கலக்கிறது. வெண்மேகம், கருமேகம், மழை, மின்னல், இடி, நீரின் பலபெயர்கள், பல நீர்நிலைகள், ஆறுகள் என்னும் பல்வேறு செய்திகள் காணப்படுகின்றன. கம்பனில் நீரியல் அறிவியல் நுட்பங்கள் ஏராளம். ஏராளம். அவற்றால் உணர்த்தப் பெறும் அறவியல் நீர்மைகள் பலப்பல. நாணயத்தின் இருபக்கங்கள் போல அமைந்த அறவியல், அறிவியல் செய்திகளைக் கம்பனில் கற்றுக் களிப்பும் உயர்வும் அடைதல் வேண்டும்.

கம்பன் வகுத்து விரிக்கும் வினைமுறைத்திறம்

தி. க. இராமானுஜம் [புதுயுகன்],
இலண்டன்

கம்பனில் திட்டமிடும் கலையியல் என்ற ஆய்வுத் தலைப்பைச் சார்ந்து திட்டமிடும் கலையியலின் கூறுகளான வினைமுறைத்திறம் (Strategy), உத்திகள் (Tactics) இவற்றை உள்ளடக்கிய ஆய்வாக அமைகிறது 'கம்பன் வகுத்து விரிக்கும் வினைமுறைத்திறம்' என்ற தலைப்பிலான இந்த ஆய்வு

திட்டமிடும் கலையியலின் கூறுகள்

Strategy என்ற வார்த்தையின் மூலம் கிரேக்க வார்த்தை Strategia. படைத்தலைமை என்ற அர்த்தத்தில் வரும் இந்த வார்த்தை முதன்முதலாய் பண்டைய இராணுவ திட்டமிடல், வகைப்படுத்தல், வழிநடத்தல் போன்றவற்றில் பயன்படுத்தப்பட்டு, வளர்த்தெடுக்கப்பட்டிருக்க வேண்டும். விளையாட்டுக் கோட்பாடு என்பது இதைப் பற்றிய கற்றல், ஆய்வு மற்றும் முடிவெடுக்கும் கலை இவற்றை உள்ளடக்கியதே.

சீனாவின் சன் சூவின் சிந்தனைகள், கிரேக்க, எகிப்திய நூல்கள், இந்தியாவின் திருக்குறள், அர்த்தசாஸ்திரம் என்று அனைத்து கலாசாரங்களின் வளர்ச்சியிலும் இந்தத் திறனே முக்கிய பங்கு வகித்திருக்கிறது.

ஒரு இயக்கத்தை, நிறுவனத்தை, அரசை வெற்றிகரமாக வழிநடத்த, முடிவுகள் எடுக்க, திட்டமிடல் கலையின் மூன்று கூறுகள் தேவையாக இருக்கின்றன. அவை உயர்மட்ட நிலையான வினைமுறைத்திறம் (Strategic), இடைநிலையின் உத்திகள் (Tactics) மற்றும் அடிமட்டத் தொண்டர் நிலையில் தேவையாய் இருக்கும் செயல்முறைகள் (Operational).

முடிவெடுத்தல் கலையின் பலநிலை படிகள்



மேற்சொன்ன வகையில், இந்தப் படத்தில் கொடுக்கப்பட்டிருக்கும் இந்த மூன்று நிலைகளை பின்வருமாறு விளக்கலாம்.

Strategic - வினைமுறைத்திறம் தலைமை நிலையில் இருப்பவர் எடுக்கும் முடிவுகள்.

இவை நீண்ட நாள் தீர்வுகள்; வருங்காலத்திற்கான குறிக்கோள்களை வடிவமைத்தல், திட்டமிடல்; போட்டிகளை வெல்லும் வழிமுறைகள்.

[உதா: கடல் மீது பாலம் அமைத்து சேனையை அதன் மீது கொண்டு செலுத்தி இலங்கையை சென்றடைய வேண்டும் என்று இராமன் எடுத்த முடிவு]

Tactical - இடைநிலைத் தலைவர்கள் தலைமையின் தீர்வுகளை செயல்படுத்த முன்னெடுக்கும் இடைக்கால உத்திகள். குறிக்கோள்களை பிரித்து இரண்டாம் கட்ட தலைவர்கள் தொண்டர்களிடம் எடுத்து செல்லும் முறைகள்.

[உதா: பாலம் அமைப்பதற்கான வழிமுறைகளை கண்டு அதை நிறைவேற்றும் உத்திகளை சுக்ரீவன், அனுமன் போன்றோர் கண்டறிந்தது]

Operational - செயல்முறை. குறிக்கோள்களை அந்தந்த நாளில் செயல்படுத்தும் நிலை. கீழ்நிலை ஊழியர்கள், உழைப்பாளிகள் செயல்படுத்துவது.

[உதா: கடல் மீது பாலம் அமைக்கும் திட்டத்தை குரங்கு சேனை நிறைவேற்றியது].

கம்பனில் வினைமுறைத்திறம்

ஒரு காவியத்தை படைக்க பல துறைகளின் நிபுணத்துவம் தேவை. கம்பனின் காவியத்தில் சிறப்பாக இந்தப் பல்துறை ஞானத்தைப் பார்க்கலாம்.

எந்தத்திறத்தைப் போன்றும் வினைமுறைத்திறத்தையும் நன்மை, தீமை இரண்டிற்காகவும் பயன்படுத்தலாம். இக்காவியத்தில் கம்பன் இத்திறத்தை, இராமன், அனுமன் மூலமாக நேர்வழியிலும், இராவணன், இந்திரசித்து, கூனியின் மூலமாக எதிர்மறையாகவும், திறம்பட காட்டி இருக்கின்றான். கட்டுரையின் நீளம் கருதி ஒரு சில பாடல்களின் வழியாக கம்பனின் இத்திறத்தை நிறுவலாம்.

வருந்தேன் அது என் துணை வானவன் வைத்த காதல்
அருந்தேன் இனி யாதும் என் ஆசை நிரப்பி அல்லால் (59)

கடல் தாவு படலத்தில் மைந்நாகத்தின் விருந்தோம்பலை அன்பாக மறுக்கிறான் அனுமன். காரணம், தலைவன் இராமன் மீது வைத்த அன்பால் எவ்விருந்தையும் ஏற்று சீதையை கண்டறியும் தன் பணியை, முனைப்பை ஒத்தி வைக்க மாட்டேன் என்ற தனது திட்டத்தையும் முடிவையும் தீர்க்கமாகச் சொல்கிறான் அவன்.

அதைப்போல அசோகவனத்துச் சீதை தனது நெற்றி, கண், புருவம் இவை இடப்பக்கம் துடித்த நல் நிமித்தத்தை திரிசடையிடம் சொல்லி பலன் கேட்கவும், இராம தூதுவன் அனுமன் அங்கே வருகிறான். பின் இராவணன் அங்கு வந்து சீதையை வருந்தச் செய்து சென்ற பிறகு, 'ஆதலான் இறத்தலே அறத்தின் ஆறு...' (கம்பன், சுந்தர: 508) என்று சீதை இறக்கத் துணியும் போது அனுமன் அவள் முன் தோன்றி இனிமை, சாதுர்யம், தர்க்க ஞானம், வேகம் இவை எல்லாம் கலந்து பேசி அவளது முடிவை மாற்றி, தான் வந்த நோக்கத்தைத் தெரிவித்து காவியத்தின் திருப்புமுனையை ஏற்படுத்துகிறான். அனுமன் இங்கே சரியான திறத்தோடு செயல்பட்டிருக்கா விட்டால் சீதையும் மாண்டு காவியமும் இங்கேயே முற்று பெற்றிருக்கும். அதனால் தான் 'அறிவும் ஈதே உரு ஈதே ஆற்றல் ஈதே ஐம் புலத்தின் செறிவும் ஈதே..' (கம்பன், சுந்தர: 598) என்று சீதை அனுமனின் அறிவையும், திறனையும், ஆற்றலையும் போற்றுவதாகச் சொல்கிறான் கம்பன். இவை எல்லாம் அனுமனின் வாயிலாக கம்பன் காட்டும் வினைமுறைத்திறம்.

இந்தக் காவியத்தின் முக்கியமான ரிதொரு கட்டம் வீடணன் அடைக்கலப் படலம். அவனுக்கு அடைக்கலம் கொடுக்கலாமா என இராமன் அனைவரின் எண்ணங்களையும் கேட்கிறான். சுக்ரீவனும், மற்றவர்களும் தீய எண்ணத்துடனே வீடணன் வந்திருக்கிறான் ஆதலால் அவனை ஏற்கலாகாது என பல கோணங்களில் வாதிடுகிறார்கள். அனுமன் மாத்திரம் தர்க்கரீதியாக, இலங்கையில் வீடணனுடன் தனக்கு ஏற்பட்ட அனுபவங்களை மையமாகக் கொண்டு அவனை ஏற்றுக் கொள்ளலாம் என்கிறான்.

இருமாற்றுக் கோணங்களையும் கேட்டு அலசும் இராமன் ஒரு முடிவை எடுக்கிறான். இங்கே இராமனின் வாயிலாக ஒரு தலைவனுக்கான வினைமுறை யுக்தியை கம்பன் எடுத்துக் காட்டுகிறான்.

பதவியில் இருப்பவர் எல்லாம் தலைவர் அல்ல; பதவியில் இருப்பவரை மனதளவில் மக்கள் எப்போது தலைவர் என்று ஒப்புக் கொள்கின்றனரோ, அன்று தான் அவர் உண்மையில் தலைவர் ஆகிறார் எனச் சொல்லலாம்.

இராமன் இயற்கையாகவே தலைமைக்குணம் நிரம்பப் பெற்றவன். இங்கும் ஒரு நல்ல தலைவனுக்கான யுக்தியோடு அனைவரின் அபிப்பிராயத்தையும் கேட்டு, சீர்தூக்கி வீடணனை சேர்த்துக் கொள்ளும் முடிவை எடுக்கிறான். பின் தன் முடிவை சுக்ரீவன் முதலான தொண்டர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி பலவாறாக அறமும், அறிவும் கலந்த தனது பேச்சின் மூலமாக இனிமையாகத் தெரிவிக்கிறான்.

பிறந்த நாள் தொடங்கி யாரும் துலை புக்க பெரியோன் பெற்றி
மறந்த நாள் உண்டோ என்னைச் சரண் என வாழ்கின்றானைத்
துறந்த நாட்கின்று வந்து துன்னினான் சூழ்ச்சியாலே
இறந்த நாள் அன்றோ என்றும் இருந்த நாள் ஆவது என்றான் (412)

தனது குல பெரியோனான சிபி அடைக்கலமாக வந்த புறாவுக்காக தன்னையே கொடுக்கத் துணிந்ததைச் சொல்லி, வீடணன் சூழ்ச்சிக் காரனே ஆனாலும், அவனுக்கு அடைக்கலம் தந்ததால் தான் இறக்கவே நேர்ந்தாலும், அந்நாளே தான் நிலைத்து நின்ற நாளாகும் என்றும் முழங்குகிறான்.

சுக்ரீவனும் இராமனிடம் அடைக்கலம் பெற்றவன் என்பதையும் இங்கே கருத்தில் கொள்ள வேண்டும்.

ஆக அனுபவத்தின் அடிப்படையில் மாருதி வைக்கிற வாதங்களை ஏற்றும், தன் குண இயல்பின்படியும், குல வழக்கத்தின்படியும் அடைக்கலமாக வந்தவனை ஏற்றுக் கொள்வதே அறம் என்கிறான். அதை பிறர் ஏற்றுக் கொள்ளும் விதத்திலும் எடுத்துச் சொல்கிறான். இது இராமன் வழியாக கம்பன் காட்டும் தலைமையின் வினைமுறைத்திறம்.

கம்பனில் உத்திகள்

வினைமுறைத்திறத்தை, செயல்பாட்டை நோக்கி எடுத்துச் செல்ல உத்திகள் அவசியம். இதை அறிந்திருக்கிற கம்பன் பல பாத்திரங்களின் வாயிலாக பல இடங்களில் அதை வெளிக்கொணர்கிறான்.

அனுமன் சீதையைத் தேடி இலங்கைக்குத் தாவும் படலத்தில், சுரசை, அரக்கி உருவெடுத்து அனுமனின் ஆற்றலை தேவர்களுக்கு எடுத்துக் காட்ட முடிவு செய்கிறாள். 'என் வாயினுள் புகுந்து செல்' என்று பெரிய உருவெடுத்த சுரசை சொல்லவும் 'உன் வாயினுள் புகுந்து செல்வேன், உன்னால் முடிந்தால் தின்னலாம்' என்கிறான் அவன்.

இதைக் கேட்ட சுரசை '...பெருவாய் திறந்து விக்காது விழுங்க நிற்கும் போது..' (70)' அனுமன் இந்த உத்தியை பயன்படுத்துகிறான்;

நீண்டான் உடனே கருங்கா நிமிர்வாள் எயிற்றின்
ஊண்தான் என உற்று ஓர்உயிர்ப்பு உயிராத முன்னா
மீண்டான் அதுகண்டனர் விண்உறைவோர்கள் எம்மை
ஆண்டான்வலன் என்று அலர் தூஉய்நெடிது ஆசிசொன்னார் (71)

ஒரு சுவாச நேரத்திற்குள் மிகச் சிறியதாய் உடலை சுருக்கி அவள் வாயினுள் சென்று மீள்கிறான். அது கண்ட வானோர்கள் தம்மைக் காக்க வல்லவன் இவன்தான் என்று மகிழ்ந்து ஆசி சொல்கின்றனர். அதைப் போலவே சீதையை தேடிச் செல்லும் அனுமன் பவளக் குன்றில் தங்கும் போதும் தன் உடலை சுருக்கி தன்னை மறைத்துக் கொள்ளும் உத்தியை பயன்படுத்துகிறான் (கம்பன், சுந்தர: 136). இது ஒரு உத்தி.

யுத்த காண்டத்தில் திட்டமிடல் கலை, போர்த் தந்திரங்களாக பல விதங்களில் வெளிப்படுவதைப் பார்க்கிறோம். இங்கே கம்பன் பல கவிதை உத்திகளைப் பயன்படுத்துகிறான்.

'நிகும்பலை வேள்வியை' இடையூறு இல்லாமல் முடிக்க விளையும் இந்திரசித்து இராவணனிடம் ஒரு உபாயம் சொல்கிறான். அதாவது மாயா சீதையை உருவாக்கி அனுமன் முன் அவளைக் கொல்வதாகக் போக்கு காட்டி, எதிரிகள் கலங்கி, குழம்பி நிற்கும் வேளையில் மறைவாக வேள்வியை நடத்தி முடித்து விட வேண்டும் என்கிறான். 'அப்படிச் செய்வதே நல்லது' என்று இராவணனும் ஆமோதிக்க 'மாயா சானகியை' உருவாக்கச் செல்கிறான் இந்திரசித்து. இந்தக் காட்சியை இப்படிச் சொல்கிறான் கம்பன்;

அன்னது புரிதல் நன்று என்று அரக்கனும் அமைய அம் சொல்
பொன் உரு அமைக்கும் மாயம் இயற்றுவான் மைந்தன் போனான்
இன்னது இத் தலையது ஆக இராமனுக்கு இரவி செம்மல்

தொல்நகர் அதனை வல்லைக் கடிகெடச் சுடுதும் என்றான் (2799)

முதல் இருவரிகளில் மேற்சொன்ன இந்திரசித்து - இராவணன் காட்சியைச் சொல்லும் கம்பன் 'இங்கே இது நிகழ' அங்கே சுக்ரீவன் இராமனிடம் 'இலங்கையை விரைவாக அழிப்போம்' எனச் சொல்வதாக பின் இருவரிகளில் காட்டி பாடலை முடிக்கிறான்.

நவீன திரைக்கதை சொல்லும் பாணியைப் போல, ஒரு இடத்தில் ஒன்றைச் சொல்லி அக்காட்சியை அப்படியே முடித்து, அதே வேளை-யிலே எதிரணியில் என்ன நடக்கிறது என்பதையும் விரைவாக காட்சிப் படுத்திக்காட்டும் உத்தியை எழிலாக அன்றே உபயோகித்திருக்கிறான் கம்பநாடன்.

தன் திட்டத்தின்படியே மாயா சீதையை அனுமனின் முன் வாளால் கொல்லுகிற இந்திரசித்து அயோத்தியையும் அழிக்க இலங்கை-யிலிருந்து புட்பக விமானத்தில் வடதிசையை நோக்கி பறப்பதாக போக்கு காட்டி அனுமனை ஏமாற்றுகிறான். அதன் பின்னர் வழி மாற்றி வேள்வி நடத்த நிகும்பலை என்னும் இடத்தை அடைகிறான்.

இராமன் முதலானோர் மீளாத் துயர் அடைகின்றனர். இந்திரசித்து அயோத்தி செல்வதாக எண்ணி அவனைத் தடுக்க அனுமனின் தோளில் ஏறி இராம இலக்குவர் புறப்பட எழுகின்றனர்.

இங்கே தான் வீடணன் இவையெல்லாமே மாயமோ என ஐயம் கொள்கிறான். அரக்கர் உத்தியை அதே வழியில் சென்று வீழ்த்த அவனும் ஒரு உத்தியை கையாளுகிறான்.

'மாயா வண்டாக' தன்னை உருமாற்றி அந்த உருவிலேயே அசோகவனம் சென்று உண்மையான சீதை உயிரோடு இருப்பதை கண்டு வருகிறான்.

இருந்தனள் தேவி யானே எதிர்ந்தனென் என்கண் ஆர
அருந்ததிக் கற்பினாளுக்கு அழிவு உண்டோ... (2873)

'அருந்ததியைப் போன்ற கற்புடைய சீதைக்கு அழிவு ஏது' என்று இராமனிடம் சொல்ல, அதைக் கேட்ட வானரர்சேனை பெருமகிழ்ச்சியில் துள்ளுகிறது.

வீடணனின் இந்த உத்தியை பாராட்டும் இராமன் இந்திரசித்தை வெல்ல இலக்குமணனுக்கும் பல போர் உத்திகளைச் சொல்கிறான்.

அசோகவனத்துச் சீதையின் மனதை மாற்ற இராவணன் பயன்படுத்தும் உத்தியும் மாயா உருவங்களை புனைதல்தான். இதைப் பல இடங்களில், அவனும் அவனது அரக்கர்களும் செய்கின்றனர். சீதையை கவர்ந்து செல்ல மாயத் துறவியின் உருவம் தரித்தே அதற்கு முன்னும் இராவணன் வந்தான் என்பதை நினைவில் கொள்ளவும். அதைப் போலவே மகோதரன் என்னும் அரக்கன் மருத்தன் என்னும் அரக்கனை 'மாயா சனகன்' ஆக்கி அசோகவனத்தில் நிற்கும் இராவணனின் முன் இழுத்து வருகிறான். அதைக் கண்ட சீதை அந்தத் தந்திரத்தை நம்பி 'எந்தையே எந்தையே என் பொருட்டினால் உனக்கும் இக்கோள் வந்ததே' (கம்பன், யுத்த: 1607) என்று முதலில் அவனது எண்ணப்படியே புலம்புகிறாள். பின் மாயா சனகனின் பிதற்றலைக் கேட்டே ஐயம் தெளிவுருகிறாள் (கம்பன், யுத்த: 1642).

இது தவிர யுத்த களத்தில் பல மாயா தந்திரங்களை செயல்படுத்துகிறான் இராவணன். இவை இந்திரசித்து, இராவணன் வழி கம்பன் காட்டும் எதிர்மறை உத்திகள்.

நிறைவுரை

பல துறைகளில் அறிவும் திறனும் கொண்டிருக்கிற கம்பன் இந்தக் காவியத்தில், ஒரு அரசனின், மந்திரியின், தளபதியின், மாயக்காரனின் கோணங்களில் நின்று சிந்தித்து பலவாறாக வினைமுறைத்திறத்தையும், உத்திகளையும், தந்திரங்களையும் பொருத்தமாகவும், நம்பகத் தன்மையோடும் பல இடங்களில் வெளி கொணர்ந்திருக்கிறான் என்பதை உதாரணங்களோடு மேலே கண்டோம்.

இது தவிர, தனித்த மேன்மைகளோடு சீதை, அனுமன், கும்பகர்ணன் என்ற வலிமையான பாத்திரங்களை காவியத்தில் படைத்திருக்கிற கம்பன், அவர்கள் யாவரிலும் உயர்ந்தவனாக கதையின் நாயகனான இராமனையே படைத்து அளித்திருக்கிறான். இதுவே கம்பன் இந்தக் காவியத்தில் ஒரு கவிஞனாகக் கைகொண்டிருக்கிற வினைமுறைத்திறம் என்றும் நிறைவாகக் கூறலாம்.

கம்பனில் தகவல் தொடர்பியல்

முனைவர். கா. வாசுதேவன்
இணைப்பேராசிரியர் மற்றும் தமிழாய்வுத் துறைத்தலைவர்.
பெரியார் ஈ.வெ.ரா. கல்லூரி (த) திருச்சிராப்பள்ளி.

தொடர்பியல் என்பது புதியதல்ல. மனிதச் சமுதாயம் தோன்றிய நாளிலிருந்து தொடர்பியல் ஏதேனும் ஒரு நிலையில் நடைபெற்றுக் கொண்டு இருக்கிறது. மனிதன் முதலில் தன்னைப் பற்றியும், தன்னைச் சுற்றியுள்ளோர்களைப் பற்றியும் பின்பு நாடு, உலகம் போன்றவற்றையும் தெரிந்துகொள்ள முற்பட்டிருக்க வேண்டும். தனிமனிதன் கூடிவாழத் தொடங்கியபொழுது தொடர்பியல் அடிப்படைத் தேவைகளுள் ஒன்றாக மாறியது.

தொடர்பியலின் தேவை

சமூகமாகவும் குழுவாகவும் கூடி வாழும் மனிதனுக்குத் தொடர்பியல் தேவை. மனிதனின் அறிவு ஆளுமை வளர்ச்சிக்குத் தொடர்பியல் வேண்டும். சமுதாயத்தில் வணிகம், போக்குவரத்து, வங்கி, அலுவலகங்கள் முதலியவை செயல்படத்தொடர்பியல் தேவைப்படுகிறது. இன்றைய அறிவியல் உலகில் தனிமனிதனால் தொடர்பியலின்றி உயிர் வாழ முடியாது. மனித வாழ்க்கையில் தொடர்பியல் பல நிலைகளில் தேவை யானதாக விளங்குகின்றது.

"மனித வாழ்வுக்கு இரத்த ஓட்டம் எவ்வளவு தேவையோ அவ்வளவு சமூகக்குடிமைக்கும் தொடர்பியல் ஓட்டம் தேவைப்படுகின்றது" என்பதற்கேற்ப தொடர்பியலின் தேவை நாளுக்குநாள் அதிகரித்துக் கொண்டு வருகின்றது.

இலக்கியங்களில் தொடர்பியல்

இலக்கியங்களிலும் கதைமாந்தர்களின் உரையாடல் (தொடர்பியல்) இன்றிக் கதை நகர்வு நடக்கச் சாத்தியமில்லை. சங்க இலக்கியங்களில் தலைவன், தலைவி, தோழி, பாங்கன், நற்றாய், செவிலி போன்ற பெயர் சூட்டப்பெறாத கதைமாந்தர்கள் உரையாடுவதை நம்மால் காண இயலும். கம்பன் படைத்த இராமவதாரத்தில் கதைமாந்தர்களின் பெருக்கத்திற்கு ஏற்ப இத்தொடர்பியல் செயல்பாடு வலுப்பெறுகிறது.

கம்பன் தன் காப்பியத்தை கட்டமைப்புச் செய்து வெற்றி பெற்றதற்கும் அவனுடைய காப்பியம் ஒப்பற்ற காப்பியமாகத் திகழ்வதற்கும் தொடர்பியல் நிலைப்பாடு முதன்மையான காரணம் எனலாம்.

கம்பன் காவியத்தில் தொடக்கம் முதல் இறுதிவரை தொடர்பியல் நிலைப்பாடுகள் மிகச் செறிவாக அமைந்திருப்பதைக் காணலாம். முதன்மை மாந்தர்களால் துணைமை மாந்தர்களாலும் அவர்களுக்குள் நிகழும் தொடர்பு அம்மாந்தர்களின் எண்ண வெளிப்பாட்டையும் பண்புநலன்களையும் புலப்படுத்தும் தன்மையில் கம்பனால் ஆக்கப்பட்டிருப்பது தனிச்சிறப்பு. கம்பனில் காணலாகும் தகவல் தொடர்பியல் நிலைப்பாடுகளை சுருக்கமாக இக்கட்டுரை எடுத்துக்காட்ட முனைகிறது.

தொடர்பியல் வகைகள்

கம்பன் காவியத்துள் இடம்பெற்றுள்ள தொடர்பியல் வகையினை,

1. அகமனத் தொடர்பியல் (Intra Communication)
2. தனிமனிதத் தொடர்பியல் (Inter Personal Communication)
3. குழுத் தொடர்பியல் (Group Communication)
4. மக்கள் தகவல் தொடர்பியல் (Mass Communication)

என வகைப்படுத்திக் காணலாம்.

அகமனத் தொடர்பியல் (Intra Communication)

தனிமனிதன் தன்மனதோடு பேசுவதும் புலம்புவதும் ஆன முறையினை அகமனத் தொடர்பியல் எனலாம். சங்க இலக்கியங்கள் இதனை 'தன் நெஞ்சொடு கிளத்தல்' என்கிறது. இத்தகைய தொடர்பியல் நிலைப்பாடுகள் கம்பனில் பல இடங்களில் பதிவாகியிருக்கின்றன. மிதிலைக் காட்சிப் படலத்தில் இராமனைக் கண்டு காதல் கொண்ட சீதை,

"பெண்வழி நலனொடும் பிறந்த நாளொடும்
எண்வழி உணர்வும் நான் எங்குக் காண்கிலேன்
மண்வழி நடந்துஅடி வருந்தல் போனவன்
கண்வழி நுழையும் கள்வனே கொலாம்" (1:10:56)

எனத் தனக்குத்தானே பேசிக் கொள்கிறாள். அதைப்போலவே சீதையை நினைத்து இராமன்,

அருள் இல்லாள் எனினும் மணத்து ஆசையால்
பெருளும் நோய்விடக் கண்ணின் விழுங்கலால்
தெருள் இலாஉலகில் சென்று நின்றுவாழ்
பொருள் எலாம் அவள் பொன்உரு போலவே (1:10:142)

என நினைத்து தன் மனதோடு புலம்புவதும் அகமனத் தொடர்புக்குச் சிறந்த எடுத்துக்காட்டுகளாக அமைகின்றன. இத்தகைய அகமனத் தொடர்பியல் நிலைப்பாடுகள் கம்பன் காவியத்தில் கதைச் சூழலுக்கேற்ப பல இடங்களில் இடம்பெற்று கதைமாந்தர்களின் உணர்வுகளை வெளிப் படுத்துவதற்குரிய களங்களாக அமைந்து சிறக்கின்றன.

தனிமனிதத் தொடர்பியல் (Inter Personal Communication)

இருவருக்கிடையே நிகழும் செய்தித் தொடர்பு, கருத்துப் பரிமாற்றம், கருத்து மோதல் தனிமனிதத் தொடர்பியலாகும். தனிமனிதத் தொடர் பியல் நிலைப்பாடுகள் கம்பன் காவியம் முழுவதும் விரவிக் கிடக்கிறது. திருஅவதாரப் படலத்தில் தொடங்கும் தனிமனிதத் தொடர்பியல் நிலைப் பாடு மக்கள் பேறின்மையால் வருந்தும் தசரதன் குலகுரு வசிட்டரிடம் தன்நிலையைக் கூறி வருந்துவதில் தொடங்குகிறது. பின்னர் காப்பியம் முழுமையும் இத்தகையை தனிமனிதத் தொடர்பியல் அழுத்தமாகப் பதிவு செய்து காட்டப்படுகிறது. தனிமனிதத் தொடர்புக்கு மிகச் சிறந்த உதாரணத்தைக் கம்பனில் காட்டவேண்டுமானால் இராமன் - வாலி உரையாடலைச் சுட்டலாம்.

இராமன் அம்பினால் தரையில் வீழ்ந்த வாலியின் எதிரில் இராமன் தோன்ற பலவாறு இராமனைப் பார்த்து இகழ்ந்து பேசும் வாலி,

நூல் இயற்கையும் நும்குலத்து உந்தையர்
போல் இயற்கையும் சீலமும் போற்றலை
வாலியைப் படுத்தாய் அலைமன் அற
வேலியைப் படுத்தாய் - விறல் வீரனே (4:7:97)

என்கிறான். பின் வாலிக்குப் பதில் கூறும் விதமாக தன் செயல் சரியே என வாலியைப் பார்த்துப் பேசும் இராமன்,

"ஈரம் ஆவதும் இற்பிறப்பு ஆவதும்
வீரம் ஆவதும் கல்வியின் மெய்ந்நெறி
வாரம் ஆவதும் மற்று ஒருவன் புணர்
தாரம் ஆவதைத் தாங்கும் தருக்கம்அதோ" (47107)

என்கிறான். இவ்வாறு நிகழும் தொடர்பினை தனிமனிதத் தொடர்பு அல்லது இருவருக்குமிடையே நடைபெறும் தொடர்பு எனலாம். காப்பியத்தில் வீடணன் - கும்பகர்ணன், இலக்குவன் - இந்திரஜித், இராமன் - இராவணன், சீதை - திரிசடை ஆகியோரின் கருத்துப் பரிமாற்றம் தனிமனிதத் தொடர்பியலுக்கு வலுவான சான்றுகளாக அமைகின்றன. இத்தகைய தனிமனிதத் தொடர்பியலை கம்பனில் இருந்து இன்னும் மிகுதியாக எடுத்துக்காட்ட இயலும்.

3. குழுத்தொடர்பியல் (Group Communication)

ஒரு குறிக்கோளையோ, ஓர் இலட்சியத்தையோ கொண்டிருக்கும் மக்கள் தங்களுக்குள் மேற்கொள்ளும் தொடர்பியல் குழுத் தொடர்பியல் எனப்படுகிறது.

"குழுத்தொடர்பியல் ஒரு குடும்பத்தினர், நிறுவனத்தார் அல்லது சமுதாயக் குழுக்கள் முறையே ஓய்வுநேரத்தைக் கழிக்க, ஒரு சிக்கலைத் தீர்க்க அல்லது முடிவெடுக்க வேண்டுமென்ற சூழலில் கூடுகின்றனர்" என்று மைக்கேல் டபிள்யூ கேம்பளும் (Michael W. Gamble) தேரிக்வல் கேம்பளும் (Terikwal Gamble) விளக்கம் தருகின்றனர்.

மேற்சுட்டிய கருத்தின்படி சமுதாயக்குழு ஒரு முடிவெடுக்கவென ஒன்றுகூடும் குழுத்தொடர்பினை அயோத்தியா காண்டத்தில் மந்திரப் படலத்தில் காணமுடிகின்றது. இராமனுக்குத் திருமணம் முடிந்தபின்பு தசரதன் துறவு மேற்கொள்ள விரும்புகின்றான். அது குறித்த முடிவெடுக்கும் பொருட்டு ஆலோசனை செய்வதற்காகச் சமுதாயத்தின் அங்கங்களான - பிரதிநிதிகளான அமைச்சர்களை மண்டபதற்கு அழைக்கின்றான். தலைமை அமைச்சராக விளங்கும் வசிட்டர் முதலானவர்கள் வந்து அமர்ந்தபின்,

ஆதலால் இராமனுக்கு அரசைநல்கிஇப்
பேதைமைத்தாய் வரும்பிறப்பை நீக்குறு
மாதவம் தொடங்குவான் வனத்தை நண்ணுவேன்
யாதுறும் கருத்து? என இனைய கூறினான் (2:1:30)

என்று கூறுகின்றான். மன்னனின் விருப்பத்திற்கும் கருத்திற்கும் அமைச்சர்களும் உடன்படுகின்றார்கள். மன்னர், அமைச்சர் முதலான அக்குழுவினர் ஒருவருக்கொருவர் தொடர்பு கொண்டு தசரதன் அரசு துறந்து தவம் மேற்கொள்ளவும் இராமன் முடி சூடுவதுமான செய்தி

பற்றிக் கலந்துபேசி எடுத்த முடிவின்படித் தசரதன் இராமனுக்கு முடிசூட்ட உறுதி செய்கின்றான். தகவல் தெரிவிப்பது ஒருவராக இருக்க அத்தகவலைப் பெறுபவர்கள் ஒரு குழுவாக இருக்கின்றனர். குறிப்பாகச் சுட்ட வேண்டுமானால் அமைச்சரவைக்கூட்டம் குழுத் தொடர்பியலாக வெளிப்படுகின்றது.

தொடர்பியலில் பின்னூட்டம் (Feed Back) அல்லது எதிர்ஊட்டு அவசியம். அதுதான் பொதுமக்கள் கருத்தினை ஏற்படுத்தும். தன் கருத்தினை தசரதன் வெளிப்படுத்திய பின் அமைச்சர்களின் கருத்தினை எதிர்நோக்கி நின்ற மன்னனுக்கு உடனடியாக பின்னூட்டு கிடைக்கின்றது. கூட்டத்தில் இடம்பெற்றிருந்த வசிட்டர்.

நிருப! நின்குல மன்னவர் நேமிகண்டு உருட்டிப்
பெருமை எய்தினர் யாவரேஇராமனைப் பெற்றார்?
கருமமும் இது கற்று உணர்ந்தோய்க்கு இனிக்கடவ
தருமமும் இதுதக்கதே உரைத்தனை - தகவாய்! (2:1:34)

என்கிறார். தனிமனிதத் தொடர்பிலும் குழுத் தொடர்பிலும் தான் இத்தகைய உடனடியான பின்னூட்டத்தைப் பெறமுடியும். இதைப் போலவே வீடணனை தங்கள் பக்கம் சேர்க்கும் இடத்தில் இராமன், இலக்குவன், அனுமன், வாலி ஆகியோரின் கருத்தை இராமன் கேட்பதும், இராவணன் தன் அமைச்சர்களுடன் ஆலோசனை நிகழ்த்துவதுமான பதிவுகள் கம்பன் குழுத் தொடர்பியலை காப்பியச் சூழலுக்கேற்ப மிக நுட்பமாக எடுத்துக்காட்டுவதை மெய்ப்பிக்கின்றன.

மக்கள் தகவல் தொடர்பியல் (Mass Communication)

தகவல் தொடர்புக்கென உருவாக்கப்பட்ட சாதனங்கள் மூலம் மிகுதியான, பலதரப்பட்ட மக்களுக்குத் தகவல்களையோ, கருத்துக் களையோ அறிவிக்கும்முறை மக்கள் தகவல் தொடர்பு எனப்படும்.

பி.என். மால்ஹன் என்பர் இந்தியாவில் தகவல் தொடர்பு பற்றிக் கூறும் பொழுது, பொதுமக்களுக்குச் செய்திகள் முரசறைந்தோ, பொதுக்கூட்டங்களில் வாய்மொழியாகவோ பரப்பப்பட்டன. பயிற்சி யளிக்கப்பட்ட புறாக்களோடு, குதிரைவீரர்கள், குகைப் பாதையில் செல்வோர் முரசறைவோர் கோட்டையிலிருந்து மற்றோர் இடத்திற்குத் தகவல்களைக் கொண்டு செல்லவும், துன்பநிலை, அவசரநிலைத் தகவல்களை அனுப்பிவைக்கவும் பயன்படுத்தப்பட்டனர் என்று குறிப்

பிடுகின்றார். மன்னராட்சிக் காலத்தில் பெருவாரியான குடிமக்களுக்குத் தகவல்களைத் தெரிவிக்க முரசுதான் சிறந்த தகவல் தொடர்புச் சாதனமாகப் பயன்பட்டிருக்கிறது. இவ்வகையான மிகுமக்கள் அல்லது வெகுசனத் தொடர்புக்குச் சான்றாக, பாலகாண்டத்தில் எழுச்சிப் படலத்து நிகழ்வொன்றைக் கூறலாம்.

வானவர் குலத்து எமர் வரத்தினால் வரும்
வேனில் வேள்இருந்த அம்மிதிலை நோக்கி நம்
சேனையும் அரசரும் செல்க முந்து! எனா
ஆனைமேல் மணமுரசு அறைக! என்று ஏவினான் (1:13:7)

என்ற பாடல் முரசறிந்து தகவலை நகர மக்கள் அனைவருக்கும் தெரிவிக்கும் மக்கள் தகவல் தொடர்பினை அடையாளப்படுத்திக் காட்டுகின்றது.

பிற நிலைகளில் தொடர்பியல்

மேற்சுட்டிய தகவல் தொடர்பியல் நிலைப்பாடுகள் மட்டுமன்றி முகக் குறிப்பினால் மற்றவர்களின் கருத்தினை உணரும் சைகை வழித் தொடர்பும், ஒருவரின் மனக் குறிப்பறிந்து தன் கருத்தினை விரைவாகவும் நுட்பமாகவும் தெரிவிக்கும் தனிமனிதத் தொடர்பும்கூட கம்பன் காவியத்தில் இடம்பெற்றிருக்கும் பாங்கையும் சிறப்பையும் எடுத்துக்காட்ட இயலும். பால காண்டத்தில் விசுவமித்திரன் முகக் குறிப்பை அறிந்து இராமன் வில் நோக்கி எழும்,

............அறிவனும் தன்
புனைந்த கடைமுடி துளக்கி போர் ஏற்றின் முகம்பார்த்தான்
வனைந்தனைய திருமேனி வள்ளலும் அம்மாதவத்தோன்
நினைந்த எலாம் நினைந்து அந்த நெடுஞ்சிலையை நோக்கினான் (1:12:25)

என்ற பகுதியும், சீதையை அசோகவனத்தில் கண்டு திரும்பும் அனுமன் இராமனின் மனநிலையையும் பரிதவிப்பையும் அறிந்து அவனிடம் எதை முதலில் சொல்ல வேண்டும் என்ற தகவல் தொடர்பு நுட்பத்தினை அறிந்தவனாய் கூறும்,

கண்டேன் கற்பினுக்கு அணியை கண்களால் (5:14:25)

என்று கூறும் செறிவான பதிலும் தனித்துச் சுட்டத்தக்கன. தன்னை இராமன் கண்டதும் என்ன கேட்பான் என்பதை தெளிவாக உணர்ந்த

சொல்லின் செல்வன் இராமனைப் பார்த்துக் கூறும் மேற்சுட்டிய பாடல்வரி பொருள் நயமித்தது. தகவல் தொடர்பில் செய்தி புலப்பாடு முக்கியம். இதனை அனுமன் மிகச்சிறப்பாகச் செய்ததாகக் கம்பன் படைத்துக் காட்டியிருப்பது நினைத்து நினைத்து வியக்கத்தக்கது. இத்தகைய தொடர்பியல் நிலைப்பாடுகள் கம்பன் காவியத்தில் மிகுதியாகக் காணக்கிடக்கின்றன.

தொகுப்புரை

கட்டுரையின் பொருண்மைக்கேற்ப கம்பன் காவியத்தில் மிக அழகாகவும், செறிவாகவும், நுட்பமாகவும் தொடர்பியல் நிலைப்பாடுகள் பதிவாகியிருப்பதை அறியலாம். நவீனத் தகவல் தொடர்புச் சாதனங்கள் கம்பன் காலத்தில் இல்லாவிட்டாலும் அகமனத்தொடர்பு, தனிமனிதத் தொடர்பு, குழுத் தொடர்பு, மக்கள் தொடர்பு, முகக்குறித் தொடர்பு, உள்ளக் குறிப்புத் தொடர்பு என்ற தொடர்பியல் வகைப்பாடுகளை காவியப் புலவன் என்ற முறையில் உரிய இடங்களில் மிகச் சிறப்பாக அமைத்துக் காட்டி தகவல் தொடர்பியலின் வழி காப்பிய நகர்வையும், கதைமாந்தர்களின் பண்பு நலன்களையும் புலப்படுத்தும் கம்பனின் தொடர்பியல் ஆளுமையை இன்னும் விரிவாகக் காணமுடியும். இலக்கியம் என்ற தளத்தில் தனக்கேஉரிய தனித்துவமான தொடர்பியல் உத்திகளை திறம்படக் கம்பன் கையாண்டிருக்கிறான் என்று உறுதியாகக் கூறலாம்.

கம்பன் காட்டும் தகவல் திறன்

ரா. சிவராமன்

முனைவர் பட்ட ஆய்வாளர், SCSVMV நிகர்நிலைப் பல்கலைக்கழகம் ஏனாத்தூர்

கம்பன் படைத்த காப்பியத்தில் காப்பிய நாயகனுக்கும், நாயகிக்கும் குறையைச் சுட்டிக்காட்டாத தகவலை காப்பிய உயர்வுக்கு பெருமைச் சேர்க்கப்பட்டுள்ளது. அதனில் இக்கட்டுரையில் அனுமன் கொண்டு சென்ற தகவலும், கொண்டு வந்த தகவலும் பதிவு செய்யப்படுகிறது.

தகவல் கூற்று

தகவல் என்பதை உயர்திணை, அஃறிணை இரு பொருட்களின் மூலமாக செய்திகளை பரிமாற்றம் செய்து கொள்வதே இலக்கணப்படி தூதுவிடுதல் என்ற அமைப்பில் பகரப்படுகிறது. இதனை,

இயம்புகின்ற காலத்து எகினம் மயில் கிள்ளை
பயம்பெறு மேகம் பூவை பாங்கி - நயந்த குயில்
பேதை நெஞ்சம் தென்றல் பிரமரம் ஈரைந்துமே
தூதுரைத்து வாங்கும் தொடை (10)

எனும் பாடலால் அறியலாம்,

இதன்மூலம் பத்து வகையில் செய்திகளை அறிந்து கொள்ளும் தன்மையை இன்றையக் காலச்சூழ்லில் பல்வேறு அமைப்பில் செய்தி தொடர் அமைகின்றன. ராமனும், இலக்குவனும் ருசியமுக மலை நோக்கி சுக்ரீவனைக் காணச் சென்றனர். இவர்களின் வருகையைக் கண்டு சுக்ரீவனும் வானரர்களும் அஞ்சிமறைகின்றனர். இருப்பினும் சுக்ரீவனின் ஆணையினால் தம்மிடம் வந்துள்ளவர்கள் எவர் என்பதை அறிந்து கொள்ளும் பொருட்டு அனுமனை அனுப்புகிறான்.

சொற் திறம்

அனுமன் அவ்விருவரையும் கண்டு "தேவ!" என்று கூறிக்கொண்டு தன் பணிவினை தெரிவித்துக் கொள்கிறான். இவ்விடத்தில் தேவ என்பது உயர்ந்த சொல்லாட்சியாகும், "அல்லது" தலைவனே! என்ற உயர்ந்த சொல்லாட்சியாகும், அனுமன் பிறரின் இன்முகம் பொலிவாகும் வகையிலும் உள்ளம் புண் படாதவகையிலும் அனுமனின் சொல்லாட்சியின் பரிமாற்றம் காப்பியத்திற்கு பெருமைச் சேர்கிறது.

இச்சொல் மனத்துயரமுடன் வந்திருக்கும் இருவரின் உளமும் துன்பம் நீங்கி இன்பம் கொண்டனர் என்பதை

இம்மலை இருந்து வாழும் எரிகதிர்ப் பரிதிச் செல்வன்
செம்மலுக்கு ஏவல் செய்வேன், தேவனும் வரம் நோக்கி
விம்மல் உற்று அணையன் ஏவ வினவிய வந்தான் என்றேன்
எம்மலைக்குளமும் தாழ இசை சுமந்து எழுந்த தோளான் (3870)

என்பதனால் அறியமுடிகிறது.

இராமன் அனுமனின் சொற்கள் மூலம் சுக்ரீவனை நேரில் காணாது சக்ரிவனின் உயர்வைப் பற்றி நன்கு அறிந்து கொண்டதனால், "கவிகுலத்து அரசன்". என்றுப் போற்றுகிறான். இச்சமயத்தில் இலக்குவன் அனுமனிடத்தில் தன்னை அறிமுகம் செய்து கொள்ளும் விதம் "வில்லை சுமக்கும் அண்ணவற்கு குற்றேவல் செய்யும் பணியாளன்" என்று தன்னினும் இராமனை உயர்வுபடக் கூறி இருப்பது இலக்குவன் எளியச் சொற்களைக் கையாண்டுள்ள திறம் வெளிப்படலாயிற்று. என்பதை

எவ்வழி இருந்தான் சொன்ன கவிக்குலத்து அரசன்? யாங்கள்
அவ்வழி அவனைக் காணும் இருத்தியால் அணுக வந்தேன்;
இவ்வழி நின்னை உற்ற எமக்கு, நீ இன்று சொன்ன
செவ்வழி உள்ளத்தோனைக் காட்டுதி தெரிய என்றான் (.3874)

என்பதை இப்பாடலால் அறியலாம்.

உற்றது உரைத்தல்

இராமனின் உற்ற செய்திகயை மனதிற் கொண்டு தன் தலைவனாகிய சுக்ரீவனிடத்தில் இராமனைப் பற்றி அனைத்துச் செய்திகளையும் எடுத்துரைத்து இருவருக்கும் நட்பு கொள்ளும் பாலமாகப் பேசுகிறான். அனுமன், அச்சமயத்தில் சுக்ரீவன் இன்முகத்தோடு விருந்துபசரிக்கின்றான். சுக்ரீவன் மட்டும் விருந்துபசரிப்பதைக் கண்டு தனக்குண்டான பிரிவின் துயரைப் போல் சுக்ரீவனுக்கும் எற்பட்டுள்ளது என்பதை உணர்ந்து வாலியினால் ஏற்பட்டுள்ள கொடும் துயரநிலையை நீக்கி சுக்ரீவனுக்கு நன்மையைத் தேடித்தருவதாகவும் சுக்ரீவனும் ராமனின் துயரை நீக்கி சீதையை மீட்டு தருவதாகவும் வாக்குறுதியை பரமாற்றம் செய்து கொள்கின்றனர் எனபதை,

என்ற அக்குரங்கு வேந்தை இராமனும் இரங்கி நோக்கி
உன்தனக்கு உரிய இன்ப துன்பங்கள் உள்ள, முன்நாள்
சென்றன போக மேல் வந்த உறுவன தீர்ப்பல், அன்ன
நின்றன எனக்கும் நிற்கும் நிற்கும் நேர் (3915)

என மொழியும் நேரா 4

சீதையைக் காணுதல்

அனுமன் சீதையைக் காணும் பொருட்டு இலங்கையை நோக்கிச் செல்ல கடலைத் தாவுகிறான். இலங்கையில் நாற்புறமும் தன்னுடைய கூரிய பார்வையால் அசோகவனத்தில் சீதை இருப்பதைக் கண்டு மனம் மகிழ்ந்து தன் குறிப்பையும் தான் கொண்டு சென்ற அடையாளப் பொருளையும் சீதையிடம் காண்பிக்கிறான். சீதையானவள் என் நிலையிலும் துன்பம் இன்றி இன்முகமாய் இருக்கின்றாள் என்பதை உணர்ந்தான். சீதையின் முழு தகவலையும் அனுமன் தெரிந்து கொண்டான். உடன் தன் தலைவனாகிய இராமனை கண்டு அறிந்ததை இராமனின் மனம் புண்படாமல் இறந்தகாலச் சொற்களை பயன்படுத்தி தகவலை பதிக்கிறான் என்பதை.

கண்டனென், கற்பினுக் கணியைக் கண்களால்
தெண்திரை அலைகடல் இலங்கைத் தென்நகர்;
அண்டர் நாயக! இனி துறத்தி, ஐயமும்
பண்டுஉள துயரும் என்று அனுமன் பன்னுவான் (6114)

என்பது அப்பாடல்.

அனுமன் விடுத்த தகவல்

அனுமன் சீதையை கண்டு, கொண்டு வந்த செய்தியை இராமனிடத்தில் கூறும் விதம் ஒரு பெண்ணின் மனத் துயரத்தையும் அவளையே எதிர் நோக்கியிருக்கும் காப்பியநாயகனின் மனத்துயரத்தையும் முன்னிருத்தி குறைக்காட்டாது, தொய்வுற்றிருக்கும் இராமனின் மனதை ஒளிச்சடராக்க, "கண்டனன்" என்ற சொல்லைத் தொலைவில் இருந்தவாறே இராமனின் செவியில் புகுமளவில் உரைக்கின்றான். பின்னர் எதை? கண்டனன் என்ற ஒரு வினா எழும் என்பதால், சீதையை என்ற முழு பொருளை அனுமன் இராமன் மனதில் பதியவைத்திறான். இவ்விடத்தில் சீதையின் பெருமையை விளக்கும் பொருட்டு கற்பினுக்கு அணி என்கிறான். ஆனால்,மற்ற பெண்களுக்குக் கற்பு அணிகலமாகும். கற்பு என்ற

பெண்மணிக்கு சீதாதேவி அணிகலமாகும் என்று பெருநயத்துடன் பேசுகிறார் வாரியார்.

அறிந்த நிலை

சீதையைப் பார்த்தவுடன் அவளை கற்புக்கு அணிகலம் என்று எவ்வாறு உறுதி செய்தான் என்பதை ஆராய்கையில், "கண்களால்" என்று கம்பன் கூறுவன். ஒரு பெண்ணின் உள் மனம் துயர நிலையில் இருக்குமானால் அவளின் கண்கள் வெளிக்காட்டும். சீதையின் உள்ளும், புறமும் மாசற்று இருந்ததால் அனுமனின் பார்வையில் சீதை மாசின்று ஒளிச்சுடராய் இருக்கின்றாள் என்பதை சீதையின் கண்களைக் கண்டு இராமனிடத்தில் கற்பினும் உயர்வால் கண்டேன் என்றான்.

சீதையின் கண்களில் இராமன் இருப்பதினால் அவளை கற்புக்கு அணிகலன் என தெரிந்த கொண்டேன் என்று சொல்லின் செல்வராகிய அனுமன் மிக அழகாக கொண்டு வந்த செய்தியை இராமனிடத்தில் எடுத்துரைக்கின்றான்.

இராமனிடம், 'இலங்கையில் சீதையாகிய பெண்மணியைப் பார்த்தேன் இல்லை குடிபிறப்பு என்ற ஒரு குணமும் சிறந்த பெருமை என்ற ஒரு குணமும் கற்பு என்ற ஒரு குணமும் ஆக இந்த மூன்று குணங்களும் கைகோத்து ஆனந்த மேலீட்டினால் நர்தனம் புரியக் கண்டேன்' என்றான்.

கண்ணினும் உளைநீ; தையல் கருத்தினும் உளைநீ; வாயின் (6119)

எனும் அடிகள் சீதையின் கண்ணிலும் உள்ளத்திலும் இராமன் இருக்கின் றான் என்பதை உணர்த்தவே சீதையின் உளமும், இராமனின் வரவை எதிர் நோக்கியிருக்கிறாள் என்பதை இராமனுக்குத் தெரிவிக்கவே சாதுர்யமாக தகவலை பதிவு செய்கிறான்.

முடிவுரை

அனுமன், சுக்ரீவனையும், இராமனையும் ஒன்று சேர வைத்த இனிய சொற்பாங்கு சுக்ரீவனுக்கு கிடைத்த பெரும் வெற்றியாகும். இராமனின் ஆணையால் சீதைக்கு கொண்டு சென்ற செய்தியும், சீதையால் கிடைக்கப் பெற்ற செய்தியும், இராமனின் ஆளுமைக்கு வெற்றிச் சிறப்பாகும்.

தினமணி தமிழ்மணியில் கம்பர்

இடைமருதூர் கி.மஞ்சுளா
முனைவர் பட்ட ஆய்வாளர், தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

தமிழ்இலக்கிய வளர்ச்சியில் இதழ்களுக்குக் குறிப்பிடத்தக்க பங்கு உண்டு. தமிழில் வெளிவரும் நாளிதழ்களுள் ஒன்றான தினமணி 1934, செப்.11ஆம் நாள் தொடங்கப்பட்டது. 2007 இல் தினமணி ஆசிரியராக. கே.வைத்தியநாதன் பொறுப்பேற்றபிறகு, இலக்கியப்பகுதியாக வெளிவந்து சிறு காலம் நிறுத்தப்பட்டிருந்த 'தமிழ்மணி' பகுதி 15 ஆண்டுகளுக்குப் பிறகு மே 5, 2008லிருந்து மீண்டும் வெளிவரத் தொடங்கியது.

கம்பர் புகழ் பரப்பும் பணியைத் தினமணி அன்றாடச் செய்திகளோடு அவ்வப்போது வெளியிட்டு வந்தாலும், தமிழ்மணி என்ற இலக்கியப்பகுதி, கடந்த ஆறு ஆண்டுகளாக சுமார் 50க்கும் மேற்பட்ட கட்டுரைகளை மூலம் வெளியிட்டும், கம்பர் காலம் குறித்த விவாதத்தை எழுப்பி அதற்கு விடை கண்டும் வந்துள்ளது. கலாரசிகன் கம்பர் பற்றி, தான் படித்த, அறிந்த செய்திகளை பகிர்ந்து கொண்டதுடன், கம்பர் நூல்களை விமர்சனம் செய்து பலரும் அறியச் செய்தார். மேலும், 'தமிழ்ச்செம்மொழி மாநாட்டில் கம்பனுக்குத் தனி அரங்கம் இல்லையே என கலாரசிகன் ஆதங்கப்பட்டு, வலியுறுத்தி எழுதி, அம்மாநாட்டில் கம்பருக்குத் தனி ஆய்வரங்கம் அமைய வழிவகைசெய்தார். கம்பன் கழகங்கள் பலவற்றைத் தினமணி தமிழ்மணியும் கலாரசிகனின் பதிவும் அடையாளம் கண்டு உலகறியச் செய்தன.

தினமணியின் கம்பர் புகழ் பரப்பும் பணிகள்

"கம்பன் புகழ் பாரதியார் காலத்தில் ஓரளவு தெரியும். அதற்கு முன்பு இராமரைப் பற்றி, சீதையைப் பற்றி தெரிந்திருக்கலாம். கிராமங்களில் இராமாயண நாடகம் நடக்கும். இராவணனைப் பற்றித் தெரியும். பிற பாத்திரங்களைப் பற்றித் தெரியும். ஆனால் கம்பரைப்பற்றித் தெரியாது. பாத்திரங்களைப் படைத்தவர் யார்? அப்படி ஒழுக்க நீதிகளைப் புகுத்தியவர் யார்? அப்படி கம்பன் புகுத்திய கவிதைநயத்தை உணரச் செய்தவர் கம்பன் அடிப்பொடி என்றால் மிகையில்லை. கம்பனில் இல்லாதது இல்லை. கம்பனைப் பற்றி அடிக்கடி சொல்லிக்கொண்டிருந்தால்தான் ஒழுக்கநெறி பரவும்.

கம்பனைப் போல் சிறந்த ஒழுக்க நெறியைச் சொல்பவர் உண்டா?" என்றூர் நீதிபதி பி.ஆர்.கோகுலகிருஷ்ணன் "இளைய சமுதாயத்திடம் கம்பன் காவியத்தை எடுத்துச்செல்லுங்கள் என்ற தலைப்பில் பேசினார் (தினமணி செய்தி, 16.8.2008). இதுபோல் எண்ணற்ற செய்திகளை வெளியிட்டதோடு, கம்பர் புகழ்பரப்பும் பணிகளையும் இவ்விதழ் சிறப்புற ஆற்றிவருகின்றது.

தமிழ்மணியில் கம்பர் தொடர்பான கட்டுரைகள்

4.5.2008இல் வெளியான முதல் தமிழ்மணியை அடுத்து வந்த தமிழ்மணியில் "கம்பர் பெயர் விளக்கம்' - சு.தி.சங்கரநாராயணன் என்ற பெயரில் இருவாரத் தொடராக (18.5.2008-25.5.2008) வெளிவந்த கட்டுரையில் கம்பர் என்ற பெயர் உருவான விதத்தை கமலை, கமம், கமழ், காமர், காமம், கம்பம், கம்பர் என்னும் சொற்களைக் கொண்டு விரிவான விளக்கம் தரப்பட்டது. 15.2.2009இல் வெளியான "கம்பன் கண்ட மருத்துவம்' என்ற கட்டுரை (நெல்லை ஆ.கணபதி) கம்பரின் மருத்துவப் புலமையை விளக்கியது. "வாலி வதம்- ஒரு புதிய பார்வை' (ஜி.கோபாலன், 22.2.2009) என்ற பெயரில் வெளியான கட்டுரையில் வாலிவதத்தில் ராமன் நடந்துகொண்டது சரியா அல்லது தவறா? என்பதற்கு விடைகண்டது. 15.3.2009இல் வெளியான "வாலிவதை-மேலும் ஒரு பார்வை' (கவிஞர் பெருமாள்ராசு) கட்டுரை, வாலி வதம் குறித்த மேலும் பல அரிய தகவல்களை வாரி வழங்கியது. மேலும் கம்பன் குறித்து தமிழ்மணியில் வெளியான கட்டுரைகளின் பட்டியலை கீழ்க்கண்டவாறு காண்போம்.

1. இறைவண்ணம் எவ்வண்ணம் (இடைமருதூர் கி.மஞ்சுளா, 24.10.2010)
2. கம்பரின் காட்சி இன்பம் (ஆ.முல்லை நிலவழகன், 19.12.2010)
3. செஞ்சொற்கவி - செஞ்சொற்கவியின்பம் (செ.வைத்தியலிங்கன், 26.6.2010)
4. ஓவியம் புகையுண்டது; காவியம் எழில் கொண்டது (முனைவர் கு.சடகோபன், 3.7.2011)
5. கம்ப சித்திரத்தில் "யுகசந்தி' செ.வைத்தியலிங்கன், (18.9.2011)
6. இராமாயணக் கணக்கு, புத்தகக் குறிப்பு, (8.1.2012)

7. கண்கொடு பிறத்தலும் கடை, காசிவில்லவன். (4.3.2012)
8. கம்பரின் அகத்திணைப் புலமை முனைவர் வ.குருநாதன்.(18.3.2012)
9. யார் அந்த குகன்? இடைமருதூர் கி.மஞ்சுளா. (8.4.2012)
10. வெள்ளாட்டி சொன்ன வெண்பா. முருகசரணன். (27.5.2012)
11. கம்பர் காலம் தெளிவு வேண்டும். இரா.வ.கமலக்கண்ணன். (3.6.2012)
12. கம்பர் காலம் விவாதம் தொடக்கம். ஆசிரியர் அறிவிப்பு
13. கம்பர் காலம் - 1 , குச்சனூர் கிழார். (10.6.2012)
14. கம்பர் காலம் - 2. எ.முத்துக்கிருஷ்ணன். (17.6.2012)
15. கல்விக்கடல் கம்பராமன். மா.சின்னு (கட்டுரை). (24.6.2012)
16. கம்பர் காலம் - 3. சபா அருணாசலம். (24.6.2012)
17. கம்பர் காலம் - 4. கா.காளிதாஸ். (1.7.2012)
18. இராமன் யாருக்குச் சொந்தம். அ.சிவபெருமான். (25.11.2012)
19. ஒன்றில் நான்கு. என்.எஸ்.முத்துகிருஷ்ணராஜா. (25.11.2012)
20. படைப்பாளிகளுக்கு... நூல்: 21ஆம் நூற்றாண்டில் கம்பர்(30.12.2012)
21. விபீஷணனின் மாட்சியும் வீழ்ச்சியும். பெ.சிதம்பரநாதன்.(10.2.2013)
22. வெண்மைக்கு ஒரு வெண்பா. புலவர் கி.கிருஷ்ணசாமி (3.3.2013)
23. கம்பர் வழிபட்ட கலைமகள் சிலை. டாக்டர் எஸ்.பத்மநாபன் (21.4.2013)
24. கம்பர். பாரதி பாடல்களில் ஞானசம்பந்தர். இராம.சோமன் (4.8.2013)
25. கபிலரும் கம்பரும். தமிழண்ணல் (11.8.2013)
26. கல்லங்குடியில் கம்பர். சூறாவளி பெ.லட்சுமணன் (18.8.2013)
27. இரும்புண்ட நீர். புலவர் தா.குருசாமிதேசிகர் (22.12.2013)

மேற்குறித்தபடி மே 2008}இல் இருந்து டிசம்பர் 2013 வரை வெளியான தமிழ்மணியில் ஏறக்குறைய 48 வாரங்களுக்கு மேல் கம்பர்

பற்றிய கட்டுரைகளும், விவாதங்களும், கம்பர் காலம் பற்றிய தெளிவும் பதிவாகியுள்ளன.

கம்பர் குறித்த விவாதங்கள்

25.4.2010-இல் வெளியான கம்பர் குறித்த 'மாதம் ஒரு (இலக்கிய) விவாதம்' பகுதியில் "தமிழச் செவ்வியல் நூல்கள் பலவற்றில் ராமன் பற்றிய குறிப்புகள் காணப்படுவதால், கம்பனுக்கு முன்பே வேறு யாராலாவது ராமகாதை எழுதப்பட்டிருக்கிறதா இல்லையா? என்று புலவர் முத்து வேங்கடேசன் எழுப்பிய விவாதத்திற்கு அடுத்தடுத்த நான்கு வாரங்களில் அறிஞர் பெருமக்களால் விடை தரப்பட்டுள்ளது. அவை, "கம்பருக்கு முன்பே தமிழில் ராமாயண நூல்கள் இருந்திருக்கின்றன என்பதை சங்கம் மற்றும் சங்கம் மருவிய நூல்கள் வழி அறிய முடிகிறது." என்று முத்து வேங்கடேசனும், (2.5.2010), ""சங்கம் சங்கம் மருவிய காப்பிய காலங்களின் நூல்கள் செவ்வியல் நூல்களாகக் கருதப்பட்டதற்குப் பின்னும், கம்பருக்கு முன்பும் எழுந்த தேவார, திருவாசக திவ்வியப் பிரபந்தங்களிலும் ஏராளமான செய்திகள் ராமகாதையை நினைவுகூர்வனவாக உள்ளனவேயன்றி கம்பர் இயற்றியதைப்போல தனித்த நூலாக இருந்ததில்லை எனலாம்" என்று தமிழாகரர் தெ.முருகசாமியும், (9.5.2010), "கம்பனுக்கு முன்பு தமிழில் ராமாயணம் பற்றிய விரிவான நூல்கள் இல்லை என்பது ஏற்றுக்கொள்ளத் தக்கது அன்று. ஏனெனில், பாரதமும், ராமாயணமும் பாரதத்தில் பேசப்பட்ட தொல்பழங்கதைகள் ஆகும். கம்பனுக்கு முன்பே அகவற்பாவில் ராமாயணம் இருந்தது" என்று அ..அ.ஞானசுந்தரதத்தரசும், (16.5.2010), "கம்பனுக்கு முன்பே ராமாயணக் கருத்துகள் தொன்மம், நாடோடிப்பாடல்கள் வடிவிலும் தமிழ்நாட்டில் வழங்கி வந்திருக்கின்றன" என்று கா.மு.சிதம்பரமும் கம்பராமாயணம் குறித்த வினாவுக்கு விளக்கம் அளித்துள்ளனர்.

27.6.2010இல் 'ஐம்பெருங்காப்பியங்களுள் கம்பராமாயணம் ஏன் இடம்பெறவில்லை?' என்ற விவாத வினாவுக்கு, ""சமயப் பூசல் காரணமாகவே கம்பராமாயணம் ஐம்பெருங்காப்பியங்களுள் இடம்பெறவில்லை" என்று ப.இரமேஷும் (4.7.2010), "ஐம்பெருங் காப்பியங்களின் நோக்கம் வேறு. கம்பராமாயணத்தின் நோக்கம் வேறு. காலவேறுபாடு, நோக்க வேறுபாடுள்ள ஐம்பெருங்காப்பியத்துள் இதிகாசமாகிய கம்பராமாயணத்தை ஒப்பிட்டவே கூடாது. அதனால்தான்

ஐம்பெருங்காப்பியத்துள் கம்பராமாயணம் இடம்பெறவில்லை" என்று முத்துவேங்கடேசனும், (18.7.2010), "தமிழில் உள்ள ஐம்பெருங்காப்பியத் தொகுப்பை சிந்தித்தால், கம்பராமாயணம் இதிகாசம் என்ற இலக்கிய வகைநிலை என்பதன் காரணமாகவே சேர்க்கப்படவில்லை. இதிகாசம் வேறு, காப்பியம் வேறு" என்று, முனைவர் ந.முருகேசனும், (27.7.2010) விடை அளித்துள்ளன.

3.10.2010இல் வெளியான ""கம்பகாதையில் ஒற்றனாக இலங்கை செல்லும் அனுமன், ராவணனிடம் தன்னை ராமதூதன் என்று அறிமுகப்படுத்திக்கொள்வது சரியா?" என்ற இலக்கிய விவாத வினாவுக்கு அனுமனின், சுயநியமனம் என்ற தலைப்பில் பழ.பழனியப்பன், அனுமன் தன்னைத் தூதன் என்றது சரியே என்று பள்ளத்தூர் பழ.பழனியப்பன், இராமதூதன் என்றது சரியே என்று ப.இரமேஷ், ஒற்றனாக வந்து தூதனானான் என்று கா.மு.சிதம்பரம், இராமன் அளித்த அங்கீகாரம் என்று பொன்.வேலுமயில் ஆகியோர் விளக்கமளித்திருந்தனர். இவ்வாறு கட்டுரைகள், விவாதத்தின் மூலம் கம்பராமாயணம் குறித்த பல அரிய தகவல்களைத் தந்தது தமிழ்மணி. இவை மிகப்பெரிய ஆய்வுத்தளங்களாகும்..

கலாரசிகன் பார்வையில் கம்பர்

தமிழ்மணியில் இடம்பெறும் இந்தவாரம் பகுதியில் கம்ப காவியத்தில் மனதைப் பறிகொடுத்த கலாரசிகன் கிட்டத்தட்ட 32 வாரங்களுக்கும்மேல் கம்பன் கழகம், கம்பன் புகழ் பரப்பியவர், கம்பன் குறித்த நூல் விமர்சனம் என பல்வேறு வகையில் பதிவுசெய்துள்ளார். அவற்றில் ஓரிரு பதிவுகளைக் காணலாம்.

'கம்பனை அணு அணுவாக ரசித்தவர்கள் என்று ரா.பி.சேதுப்பிள்ளை, ரசிகமணி டி.கே.சி., பி.ஸ்ரீ.ஆச்சார்யா, ஆ.சீ.ரா., கம்பனடிப்பொடி சா.கணேசன் ஆகியோரைக் கூறுவார்கள். அந்தப் பட்டியலில் பழ.கருப்பையாவையும் சேர்த்துக் கொள்ளலாம். அவரது எல்லைகள் நீத்த இராம காதை புத்தகத்தைப் படித்தால், நமக்கு பழ.கருப்பையாவைப் பற்றி மட்டுமல்ல, கம்பனைப் பற்றியும் அல்லவா பிரமிப்பு அதிகரிக்கிறது" (8.3.2009) என்று நூல் விமர்சனம் செய்திருப்பார்.

"ஆங்கில இலக்கிய ரசிகர்களுக்கு எப்படி ஷேக்ஸ்பியரோ அதேபோலத் தமிழ் இலக்கிய ஆர்வலர்களுக்குக் கம்பன். கம்பனின்

காவியத்தை ஒவ்வொரு முறை படிக்கும்போதும் ஒரு புதிய நயம், வித்தியாசமான பொருள் சுவை, அசர அடிக்கிற கவி நயம், மயக்கும் கதாபாத்திர உருவகம் நமக்கு ஏற்படுகிறது என்பதுத்தான் உண்மை. கம்ப காவியத்தின் நாயகன் வேண்டுமானால் இராமனாக இருக்கலாம். ஆனால் கம்பனின் படைப்பின் மிகச்சிறந்த கதாபாத்திரம் எது என விவாதிக்கும்போது அங்கே முன்வரிசையில் இருப்பது என்னவோ அனுமனின் கதாபாத்திரமாகத்தான் இருக்கும்" (3.5.2009) என்று ஐ.கே. எஸ்.சின் நாமமும் அனுமன் என்பேன் என்ற புத்தக விமர்சனத்தில் குறிப்பிட்டிருப்பார்.

"கம்பநாட்டாழ்வானின் கவிதைநயத்தைத் துய்த்தவர்கள் மட்டும்தான் அறிவாளிகள். அவரின் மொழி ஆளுமையையும், உவமை நயத்தையும், பொருள்செறிவையும், கவித்துவத்தையும் அறிவார்கள். கம்பனின் ஒவ்வொரு கதாபாத்திரமும் ஒரு காவியம். அவனது கதாபாத்திரங்கள் என்றுமே தனத்துவம் வாய்ந்தவை" (14.2.2010) என்று அ.சீ.ரா.வின் காவிய அரங்கில் நூல் விமர்சனத்தில் குறிப்பிடுவார்.

"கம்பன் பற்றிய எத்தனை ஆய்வுகள் வந்தாலும், எத்தனை முறை கம்ப காவியம் பற்றிப் படித்தாலும், கேட்டாலும் சலிப்புத் தட்டுவதில்லை. கம்பனுடைய கவிநயமும், நடையும், ஆழமும் அப்படிப்பட்டது. கம்பன் விழா எங்கே நடந்தாலும் நான் கலந்துகொள்ள விழைவதன் காரணம் அதுதான்" (25.5.2011) என்று கம்பன் காட்டும் உறவும் நட்பும் என்ற நூல் விமர்சனத்தில் குறிப்பிடுவார்.

கம்பரும் தமிழ்ச்செம்மொழி மாநாடும்

"செம்மொழி மாநாட்டில் கம்பகாவியம் மட்டும் புறந்தள்ளப்படுவது என்ன நியாயம்? சங்கத் தமிழை அல்லவா கம்பன் உவமையாக்குகிறான் அந்தக் கம்பனையா செம்மொழி மாநாட்டில் இருட்டடிப்பு செய்வது? 'கம்பரசம்' எழுதி கம்பனைக் கடுமையாக விமர்சித்த அறிஞர் அண்ணா தலைமையில் நடந்த இரண்டாம் உலகத் தமிழ் மாநாடு கம்பனுக்குத் தரவேண்டிய உரிய இடத்தை அளித்ததுடன், சென்னை கடற்கரையில் சிலையும் வைத்து அந்தக் கவிச்சக்கரவர்த்தியின் புகழ்பாடத் தவறவில்லை. செம்மொழி என்கிற சாக்கில் கம்பனுக்குக் கதவு சாத்தப்பட்டால் தமிழ்மொழி அதை ஏற்றுக்கொள்ளுமா? முதல்வரின் பார்வையில் இருந்து எதுவுமே தப்பாதே... இது எப்படி தப்பியது? தெரிந்துதான் கம்பனை அவர் தவிர்த்தாரா? எல்லோரையும்

அரவணைத்துக்கொண்டு செம்மொழிக் கொடியேற்றி குதூகலிக்க வேண்டும் என்று கனவு காணும் செம்மொழி மாநாட்டுத் தலைவர் கம்பனை மட்டும் அகற்றி நிறுத்த முற்பட்டால், நஷ்டம் கம்பனுக்கல்ல... செம்மொழி மாநாட்டுக்குத்தான். காலம் கடந்துவிடவில்லை. கம்பனுக்கும் பட்டுக் கம்பளம் விரிக்கப்படும் என்கிற நம்பிக்கை இன்னும் பொய்த்துவிடவில்லை. அதையும் மீறி கம்பன் புறக்கணிக்கப்பட்டால் கம்ப காவியம் சொல்லுமே அதுபோல், "விதியின் பிழை' வேறென்ன?" (21.3.2010) என்று செம்மொழி மாநாட்டில் கம்பனுக்கு ஆய்வரங்கம் இல்லை என்றதும் ஆவேசமாகவும் ஆதங்கமாகவும் கலாரசிகன் எழுதிய கருத்துகளுக்கு அடுத்த வாரமே (4.4.2010) விடை கிடைத்தது.

"கோவையில் நடைபெற இருக்கும் உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டில் ஆய்வரங்கம் ஒன்றுக்குக் கவிச்சக்கரவர்த்தி கம்பரின் பெயர் சூட்டப்பட்டிருக்கிறது என்று செம்மொழி மாநாட்டின் தலைவர் அறிவித்த பிறகும் பலருக்கும் சந்தேகம் தீரவில்லை. கம்பன் பெயரால் ஆய்வரங்கம் ஒன்று அமைந்துவிட்டால் ஆயிற்றா? சமய இலக்கியங்கள் முற்றிலுமாகப் புறக்கணிக்கப்படுகிறதே, இது என்ன நியாயம்? இப்படியெல்லாம் பல கேள்விகள், கடிதங்கள் மூலம் எழுப்பப்படுகின்றன. காரைக்குடியிலிருந்து பேசிய கம்பன் கழகச்செயலாளர் பழ.பழனியப்பன், இளம்பிறைமணிமாறன் தன்னிடம் சமய இலக்கியங்கள் பற்றிய ஆய்வுக்கட்டுரைகள் தேர்வு செய்யப் பட்டிருப்பதாகத் தெரிவித்தார் என்று கூறினார். தொடர்ந்து தினமணி உதவி ஆசிரியர் கி.மஞ்சுளா, சேரமான் பெருமாள் நாயனார் எழுதிய திருக்கயிலாய ஞான உலா பற்றிய தமது கட்டுரை சமயமும் தமிழும் (காதல் மகளிர் எழுவர்) பகுதிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பதற்கான கடிதத்தைக் காட்டியவுடன் செம்மொழி மாநாட்டில் கம்பன் மட்டுமல்ல, சமயத்தமிழும் இடம்பெறுகிறது என்பது உறுதியானது" (4.4.2010) என்று பதிவு செய்துள்ளார். கம்பனுக்கு செம்மொழி மாநாட்டில் ஆய்வரங்கம் அமைத்தது கலாரசிகனின் முயற்சி.

கம்பன் கழகங்கள் ஒருங்கிணைந்து...

"72 ஆண்டுகளுக்குமுன்னால் காரைக்குடியில் கம்பன் அடிப்பொடி சா.கணேசனார் கம்பன் கழகத்தை உருவாக்கியபோது, அதனால் ஏற்பட்ட எழுச்சியும் தாக்கமும் தமிழகமெங்கும் பரவி இப்போது 40க்கும் மேற்பட்ட கம்பன் கழகங்கள் ஆங்காங்கே செயல்பட்டு

வருகின்றன. இந்தக் கம்பன் கழகங்கள் தனித்தனியாகச் செயல்பட்டு வருகின்றனவே. இவை இணைந்து செயல்பட்டால் நன்றாக இருக்குமே என்கிற வருத்தம் எனக்கு நீண்ட நாள்களாகவே உண்டு.... இந்தக் கம்பன் கழகங்கள் அனைத்தையும் ஒருங்கிணைத்துக் கம்பன் புகழ்பாடித் தமிழ் வளர்க்கும் பணியை எப்படித் தொடர்வது என்பதற்கு யாராவது வழி சொல்லுங்களேன். எனக்கு ஒரு யோசனை. ஒவ்வொரு கம்பன் கழகமும் ஆண்டுதோறும் அவரவர் இடங்களில் கம்பராமாயணப் பேச்சுப் போட்டி நடத்தி, பரிசளித்து, அதில் முதல் பரிசு பெற்றவர்களை சுழற்சி முறையில் ஒரு கம்பன் கழகத்துக்கு அழைத்து, அவர்களுக்குக்குள்ளே பேச்சுப்பேட்டி நடத்துவது, அப்படி நடத்தப்பட்டும் போட்டியில் முதல் மூன்று பரிசுகளைப் பெறுபவர்களுக்கு "கம்பன் அடிப்பொடி', "ரசிகமணி, "சொல்லின் செல்வர்' ஆகிய மூவரின் பெயரிலும் விருதுகள் வழங்குவது என்று முறைப்படுத்தினால் என்ன? அப்படி ஒரு முயற்சிக்கு தினமணி துணை நிற்கக்கூடுமே... " (3.7.2011) என்று கம்பன் கழகங்களின் ஒருங்கிணைப்பிற்குக் குரல் கொடுத்தார்.

"தமிழகஅரசு கம்பன் விருது அறிவித்தபோது திருப்பத்தூர் மாரிமுத்துச் செட்டியார், கோவை நஞ்சுண்டன், ராஜப்பாளையம் முத்துக் கிருஷ்ணராசா, மதுரை சங்கர சீதாராமன், காரைக்குடி பழ.பழனியப்பன் முதலிய மூத்த கம்பன் கழக நிர்வாகிகளுக்கெல்லாம் அந்த விருது வழங்கப்பட வேண்டும் என்று நான் ஆசைப்பட்டேன். கம்பன் புகழ் பரப்பும் பேச்சாளர்களைக் கௌரவிப்பது எத்தனை முக்கியமோ அதைவிட அந்தப் பேச்சாளர்களுக்கு மேடை அமைத்துக் கொடுத்து, சாமானியத்தமிழனும் கம்பன் கவியமுதைப் பருக வழிகோலும் கம்பன் கழகத்தவர்களை விருது கொடுத்து கௌரவிப்பது அதைவிட அவசியம்" (9.6.2013) என்று கம்பன் கழகத்தாரை கௌரவிக்க ஆசைப்பட்டார்.

முடிவுரை

இன்றைக்கு இதழியல் துறையில் நாளேடு, வார இதழ், பருவ இதழ், சிற்றிதழ்கள், ஆண்டு மலர் போன்ற பலவற்றில் கம்பன் புகழ் பெருமளவில் பரப்பப்பட்டு வருகிறது. அந்தவகையில், பத்திரிகைத் துறையில் முத்திரை பதித்த பாரம்பரிய நாளிதழான தினமணி} தமிழ்மணி, இதழியல் துறையின் பணியும் நோக்கமுமான அறிவித்தல், அறிவுறுத்தல், மகிழ்வித்தல் என்னும் மூவகையிலும் கம்பனின் புகழைப் பரப்பியுள்ளது

கம்பனில் வேளாண்மையியல்

முனைவர் **ச.குருஞானம்பிகா**
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை, அவினாசிலிங்கம், பல்கலைக்கழகம், கோவை.

காலம்காலமாக வேளாண்மைத் தொழிலைச்செய்து வந்த கிராமங்கள் நிறைந்த நாடு நம் இந்தியத் திருநாடு. உயர்ந்த மலைச்சிகரங்களும், வற்றாத ஜீவநதிகளும், அடர்ந்த வனங்களும், வளப்பமான நிலப்பகுதிகளையும் கொண்ட நாடு. தொழிற்புரட்சியும், இயந்திர மயதாலும், உலகமயமாதலும் இன்றைக்கு இயற்கையை சூறையாடிக் கொண்டிருக்கின்றன. துருவங்கள் உருகி, பருவங்கள் மாறுகின்றன. மாசு நிறைந்த காற்றும், கழிவு கலக்கும் நீருமாக இவை அனைத்தும் பாதிப்பது வேளாண்மையைத் தான். இச்சூழலில் கம்பன் கூறும் நிலவளமும், நீர்வளமும் வேளாண்மையை செழிக்கச் செய்த தன்மையை ஆய்வதே கட்டுரைப் பொருளாக அமைகிறது.

இயற்கையின் செல்வம்

இயற்கை என்பதே செல்வம் இயற்கைவளம் நிறைந்த இடங்கள் கண்களுக்கு மட்டும் கவினாக இருப்பதல்ல. மனதிற்கு அமைதியும், உடலுக்கு நலனும் தரக்கூடிய இடங்கள். அவ்வியற்கையிலே விளைகிற செல்வம் நாட்டின் தரத்தினை நமக்கு உணர்த்துவது. நாட்டு வளத்தில் கம்பர், வயற்புறங்களின் வரம்புகளில் முத்துக்களும், மதகுகளில் சங்குகளும், வாய்க்கால்களின் கரைகளில் செவ்விய பொற்கட்டிகளும், நீர்க்குழிகளில் செங்கழுநீர் மலர்க்குவியலும், பரம்படித்து சமப்படுத்திய இடங்களில் பவழங்களும், செந்நெற் பயிருள்ள இடங்களில் அன்னப்பறவைகளும், பக்கங்களிலுள்ள கரும்புகளில் செந்நிறத்தேன் பெருக்கும். அழகிய சோலைகளில் வண்டுகளின் கூட்டங்களும் நிறைந்திருப்பதாகக் கூறுகிறார். அதனை,

வரம்பெலா முத்தந் தந்து மடையெலாம் பணில மாநீர்க்
குரம்பெலாஞ் செம்பொன் மேதிக் குழியெலாங் கழுநீர்க கொள்ளை
பரம்பெலாம் பவளஞ் சாலப்பரப்பெலா மன்னம் பாங்கர்க்
கரும்பெலாஞ் செந்தேன் சந்தக் காவெலாங் கள்வண் பீட்டம் (34)

என்ற பாடல் அடிகள் எடுத்துரைக்கின்றன.

நிலமும், நீரும் செழிப்போடு இருந்தால், வேளாண் தொழிலும் சிறக்கும். நீரும், நிலமும் வளம் நிரம்பி இருந்தால், மருத நிலமும் வளத்தோடு செழித்திருந்ததாய்', கூறுகிறார். இதனை,

தேம்பிழி மகரயாழின் வண்டுகளினிது பாட மருதம் வீற்றிருக்கும் மாதோ
(36:3-4)

என்ற அடிகள் வழி அறியலாம்.

விளைப் பொருட்களின் ஏற்றுமதி

வேளாண்மையில் ஈடுபட்டு, தன்னிறைவு பெற்ற நாடு என்பதை ஏற்றுமதிப் பொருட்களின் உயர்வை வைத்து கணக்கிடலாம். இறக்குமதியைக் காட்டிலும், ஏற்றுமதியே நாட்டுப் பொருளாதாரத்தின் வளர்ச்சியைத் தீர்மானிக்கும். அவ்வகையில் கம்பன் கூறும்கோசலநாடு பொருள் விளைவித்ததையும், ஏற்றுமதி செய்ததையும் கூறுமிடத்து,

முறையறிந்து அவாவை நீக்கி முனிவுழி முனிந்து வெஃகும்
இறையறிந்து உயிர்க்கு நல்குமிசை கெழு வேந்தன் காக்கிப்
போறை தவிர்ஞ் துயிர்க்குந் தெய்வப் பூதலந் தன்னிற் பொன்னின்
நிறை பரஞ் சொரிந்து வங்க நெடுமுது காற்று நெய்தல் (51)

என்ற பாடல் அடிகளில் கூறுகிறார்.

நாட்டில் விளைந்த மிகுதியான பொருட்களில், வேண்டியன போக எஞ்சியவற்றை வேற்று நாட்டிற்கு மரக்கலங்கள் ஏற்றிச் சென்று இறக்குதலைக் கூறுகின்றார். பலபொருட்களை ஏற்றிக் கொண்டு சென்று இறக்கியபிறகு அந்த மரக்கலம் முதுகாற்றி நிற்பதற்கு, செங்கோல் மன்னன் அரசு செய்வதால் பாரமற்று இளைப்பரி நிற்கும் பூமியை உவமை கூறுகிறார்.

கோசல நாட்டு வேளாண்பணிகள்

நெல்மணி விதைத்து, களை எடுத்து, கதிரறுத்து, நெற்களத்தில் நெற்குவியல்களை குவிப்பது அடுத்தடுத்து நடக்கும் வேளாண் பணிகள்.

இன்றைக்கும் நடக்கும் இவ்வேளாண் பணிகளை அன்றை நாட்டுச் சூழலில் கம்பன் பாடலின் வழி அறியலாம்.

உழவர்கள் நெற்கதிர்களை அறுத்துக் கடாக்கள் கொண்டு துவைப்பித்து நெற்களைக் குவித்துக் களத்தில் இட்டு, தமக்கு உரிய பகுதியை வண்டிகளில் நிறையவேற்றித் தமது மனையில் சேர்ப்பார்கள். வண்டுகள் பல மலர்களிடத்தும் சென்று தேனைக் கொணர்ந்து ஓரிடத்தில் சேர்ப்பது போல, மள்ளர் எல்லாஇடத்தும் சென்று அவ்வவ்விடத்துப் பொருட்களை அந்நாட்டில் கொண்டுவந்து சேர்ப்பார்கள். இதை,

கதிர்படு வயலினுள்ள கழகமழ் பொழிலி னுள்ள
முதிர்பல மரத்தி னுள்ள முதிரைகள் புறவி னுள்ள
பதிபடு கொடியி னுள்ள படிவளர் குழியி னுள்ள
மதுவள மலரிற் கொள்ளும் வண்டென மள்ளர் கொள்வார் (53)

என்ற பாடல் அடிகள் எடுத்துரைக்கின்றன.

செந்நெல் சிறப்பு

வேளாண் தொழிலில், செந்நெல் பயிர்களின் விளைவை வருணிக்கும் கம்பன் எருமைகள் ஊரில் நின்ற கன்றை நினைத்து தாம் பாலைச் சுரந்து பெருக்க, அந்தப் பால் ஒரு வெள்ளம் போல் பாய்வதனால் செந்நெற் பயிர் தழைக்கும் என்றும், குறைபாடில்லாத சமையல் வீட்டிலே, ஒலிக்குமாறு கீழே வார்க்கப்பட்ட, பெரிய உலையில் சேர்ப்பதற்காக அரிசி கழுவிய கழுநீரினுடைய, அதிக நீரானது, நீர்க்கரைகளில் முளைத்துள்ள மெல்லிய கமுகினுடைய ஓங்கி வளர்ந்துள்ள சோலைகளின் மூலமாகச் சென்று நடப்பட்ட செந்நெல் நாற்றுக்களை வளர்க்கும் என்பதை,

முட்டில் லட்டின் முழங்குற வாக்கிய
நெடட்டு லைக் கழுநீர்நெடு நீத்ததந்தான்
பட்ட மென்கமுகோங்கு படப்பைபோய்
நட்ட செந்நெல் னாறு வளர்க்குமே (58)

என்ற பாடலும்,

ஈர நீர்படிந் திந்நிலத் தேசிய
கார்க ளென்ன வருங்குரு மேதிகள்
ஊரி னின்றகன் றுள்ளிட மென்முலை
தூரை கொள்ளதீ தழைப்பன சாலியே (57)

என்ற பாடலும் விளக்குகின்றன.

மேலும் நெற்குவியல் நிறைந்த இடங்களும், நெற்குவியல் இல்லாத இடங்களில் முத்துக் குவியல்களும், அவையில்லாத இடங்களில் உப்புக்குவியல்களும், அவீவுயம் இல்லாத இடங்களில் பொன்முதலிய நிதிகளும், அந்நிதிக்குவையும் இல்லாத இடங்களில் இரத்தினங்கள் பொருந்திய மணல் மேடுகளுமா, அந்நாட்டில் எங்கும் பல்வகை வளம் நிரம்பியுள்ளதாக கூறுகிறார்.

இயற்கைக் கொடுத்த சிறப்பினால் அந்நாடு வறுமையற்ற பூமியோடு இருந்த 'வண்மை யில்லை யோர் வறுமை இன்மையால்' என்;ற அடியில் கூறுகிறார்.

உழும் ஓசையின்மை

உழவர்கள் தமது மாடுகளை அதட்டுகின்ற ஒலியைக் கூறுமிடத்து, பறை ஓசையானது, மத்தள ஓசையைக் காட்டிலும் ஓங்கி ஒலித்ததாகக் கூறுகிறார். உழும் நாட்டில் இசைக் கருவிகளின் இனிமையைக் காட்டிலும், உழவுக்குக் காரணமாக இருக்கிற உழவர் உழும்மாட்டை அதட்டும் ஒலியும், வயற்களத்தில் எழும்பும் ஒலியுமே இனிதாக இருக்கும். இதனை,

மூக்கிற் றாக்குறு மூரிநந்துநேர்
தாக்கிற் றாக்குறும் பறையுந் தண்ணுமை
வீக்கிற் றாக்குறும் விளியு மள்ளர் தம்
வாக்கிற் றாக்குறு மொலியின் மாயுமே (89)

என்ற அடிகள் விளக்குகின்றன.

நிறைவுரை

இன்றைய உலகில் விவசாயம் என்பது அருகி வருகிற தொழிலாக இருக்கிறது. காரணம் சுற்றுச்சூழலில் நிலவும் தட்வெட்பமாறுபடும், மக்களின் ஈடுபாடியின்னை யுமேயாகும். கம்பனின் இராம காவியத்தில் பாத்திரப் படைப்புகளின் முக்கியத்தைத் தாண்டி, கற்பனை, அழகியல், உளவியல், சமூகவியல் என எல்லாத் துறைகளையும் எழுத்திலேத் தொட்டவர். அவ்வகையில் பாலகாண்டத்தின் நாட்டுப்படலம் வழி 'வேளண்மை' குறித்துக் கருத்துக்களை அறிவது கட்டுரைப் பொருளாக அமைகிறது.

கம்பர் போற்றிய வேளாண்மை

தமிழ். திருமால்,

முனைவர் பட்ட ஆய்வாளர், இணைச் செயலர், கம்பன் கழகம், குடியேற்றம், வே. மா.

வேளாண்மைத் தொழில் தொன்மையான தொழில் இது அனைத்துத் தொழில்களுக்கும் தாய்த் தொழிலாய் விளங்குகிறது. 'வேள்' என்னும் வேர்ச்சொல்லோடு கூடிய வேளாண்மை என்னும் சொல் உதவி, கொடை, உண்மை, உழவு என்னும் பொருள்களில் அமைவது.

வேளாண் மாந்தர்க்கு உழுதூண் அல்லது
இல்லென மொழிப பிறவகை நிகழ்ச்சி (தொல்..பொருள். 84)

என்கிற தொல்காப்பிய நூற்பாவிலும் 'வேளாண்' என்னும் சொல் கையாளப்பட்டுள்ளது. வேளாண் என்னும் சொல்லுக்கு 'வேளாண்மாந்தர்' என்றே பேராசிரியரும், இளம்பூரணரும் உரை கூறுகின்றனர். அத்தகைய வேளாண்மையை கம்பர் தம் காப்பியத்தில் எவ்வாறு ஏற்றிப் போற்றியுள்ளார் என ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

உழவர்களின் பெருமை

கம்பர், உழவர்கள் தேனீக்களைப் போன்று கடுமையாக உழைப்பவர்கள் என்றும், தேனீக்கள் மலர்தோறும் சென்று மதுவுண்டு வந்து தன் கூட்டில் தேன் சேர்த்து வைப்பது போல, கதிர்முற்றி வயலில் உள்ள நெல்மணிகளையும் பயிர்வகைகளையும், கொடியில் விளைந்த பொருட்களையும், பூமிக்குள் வளர்ந்து ஆழத்தில் உள்ள கிழங்குகளையும் கொண்டு வந்து தன்னுடைய வீடுகளில் கொணர்ந்து சேர்ப்பர் என்பதை,

கதிர்படு வயலின் உள்ள கடிகமழ் பொழிலின் உள்ள
முதிர்பல மரத்தின் உள்ள முதிரைகள் புறவின் உள்ள
பதிடுபடு கொடியின் உள்ளபடிவளர் குழியின் உள்ள
மதுவனம் மலரில் கொள்ளும் வண்டென மள்ளர் கொள்வர் (53)

தன் பாடலில் புலப்படுத்துகிறார் கம்பர்பெருமான்.

மன்னர்களை உழவர்களாகக் காட்டும் முறைமை

கம்பர், காப்பியத் தலைவனான இராமனை 'வில்லேர் உழவன்' என்றும், வேதம் வல்ல சரபங்கனை 'மறை உழவன்' என்றும் உருவகப் படுத்துகிறார்.

வரிசிழலயுழவனும், மறையுழவனை (420)

பொய்யாமொழிப் புலவர் திருவள்ளுவர் வில்லேர் உழவர், சொல்லேர் உழவர் எனக் குறிப்பிடுவதும் இங்கு கருதத்தக்கது.

தயரதனின் ஆட்சி சிறப்பினைக் குறிப்பிடும்போது பொருளில்லாத ஒருவன் (உழவன்) தனக்குள்ள சிறுகழனியை எங்ஙனம் மிக்க கருத்தோடு காத்திடுவானோ, அங்ஙனம் தயரதன் தன் நாட்டைக் காத்தான்.

எய்யெனவெழுபகை யெங்கு மின்மையான்

செய்யெனக் காத்தினிது அரசு செய்கின்றான் (98)

இந்திரசித்து மாண்டபோது தன் உடம்பையே ஏராக்கொண்டு போர்க் களத்தில் இராவணன் உழுதான் (புரண்டான்) என உழவனாக குறிப்பிட்டு அரசர்களையும் உழவர்களாக போற்றும்விதம் கம்பனில் குறிப்பிடத் தக்கது.

நீர் இன்றி அமையாது உலகு

ஏரின் உழாஅர் உழவர் புயலென்னும்
வாரி வளங்குன்றி கால் (14)

மழை பொய்த்து விடுமானால் வேளாண் தொழில் நடைபெறாது. காரணம் உழவுத் தொழிலுக்கு உயிர்நாடியாக இருப்பது மழை. திருவள்ளுவரைப் போலவே கம்பரும் கடவுள் வாழ்த்திற்கு அடுத்து மழையின் சிறப்பை போற்றியுள்ளார்.

வானமானது வெள்ளிக் கம்பிகளை விழச் செய்வதைப் போல மேகங்கள் மழைத்தாரைகளை வழங்கின எனக் கூறுவதன் மூலம் மழையினை வள்ளல்களோடு ஒப்புமை கூறி வேளாண் தொழிலுக்கு மழைநீர் வள்ளல்கள் போல உதவியது எனக் கூறுவதை,

வள்ளியோரின் வழங்கின மேகமே (16)

எனப்பதிவு செய்கிறார்.

மழைநீர் சேகரிப்பு

மழை பெய்ததால் ஏற்பட்ட வெள்ளம் பெருக்கெடுத்து ஓடும் போது பல்வேறு பொருட்களை வாரிக்கொண்டு போவதால் வணிகர்களைப் போலவும், சரயு நதி கோசல நாட்டைக் காப்பாற்றுவதால் தாய் முலை-யிலிருந்து வரும் தாய்ப்பால் போல இருந்தது எனக் கூறுகின்றார்.

சரயு என்பது தாய்முலை அன்னது இவ்
உரவு நீள் நிலத்து ஓங்கும் உயிர்க்கு எலாம் (28)

மருதநிலத்தை அடைந்த வெள்ளத்தினை வேளாண் பெருமக்கள் மதகுகளில் தேக்கி, பின் கால்வாய்களின் மூலமாக குளம், ஏரி முதலிய நீர்நிலைகளில் தேக்கி உழவுத் தொழிலுக்கு பயன்படுத்தினர். இதனால் பண்டைய உழவர்கள் மழை நீரின் அவசியத்தையும், மழைநீர் சேகரிப்பின் முக்கியத்துவத்தையும் உணர்ந்து செயல்பட்டனர் என்பதை அறிய முடிகின்றது.

நீர்வளக்கொள்கை

'ஒரு நாடு நீர்வளம் நிறைந்த நாடாக அந்நாட்டின் செல்வப் பெருக்கு, கிடைக்கும் நீர்வளத்தை எவ்வெவ்வகையில் பாதுகாக்கின்றது என்பதைப் பொறுத்தே அமைகிறது' என இன்றைய நீர்வளக்கொள்கையினர் குறிப்பிடுகின்றனர். இக்கொள்கையை கம்பர் வெள்ளப் பெருக்கால் வந்த நீரை வீணாக்காமல் குளங்கள் , ஏரிகளில் சேர்த்து வைத்து உழவுத் தொழிலுக்கு பயன்படுத்தினர் என்பதை

காத்தகால் மள்ளர் வெள்ளக்கலி பறை கறங்க..........
கோந்தகால் ஒன்றின் ஒன்று குலம் எனப் பிரித்தது அன்றே

என்ற பாடலால் புலப்படுத்துகிறார்.

நிலம் உருவாக்கம் (´ò^aù PêGòêòõ¬ön)

நன்செய் சாகுபடியில் நடவுக்கு ஒரு மாதத்திற்கு முன்னமே நான்கு முதல் எட்டு அங்குலம் வரை நிலம் நன்கு உழுது பக்குவப் படுத்தப்பட்டது என்பதை,

'படை உழு எழுந்த பொன்னும் பணிலங்கள் உயிர்த்த முத்தும்
இடறிட்டரப்பில் சாந்தும்'

எனும் பாடல் வரிகளில் இதனை அறியமுடிகின்றது. கோசல நாட்டு உழவர்கள் கலப்பையைக் கொண்டு ஆழ உழுது நிலத்தை உருவாக்கி பரம்படித்து நிலத்தை சமப்படுத்திய பாங்கு இன்றும் நடைமுறையில் இருப்பது குறிப்பிடத்தக்கது.

நன்செய் வேளாண்மையில் களைகளை அழுகச் செய்து நடவு வயலைத் தயாரித்தினர் என்பதை, 'முள்ளரை முளரி வெள்ளி முளை-

யிற்' என்ற பாடலில் விளம்பி, அக்களைகளே மண்ணுக்கு நல்ல உரமாக அமைகிறது என்பதை கம்பர் சுட்டுகிறார்.

உழவு முறைகள்

சிறப்பாக உழுகின்ற கடாக்களை நுகத்தில் பூட்டி, ஆழ உழுதனர். அவ்வாறு உழுத காரணத்தால் 'கலப்பைகள் மேல் தங்கம், சங்குகள், முத்துகள் எழுந்தன எனக் கம்பர் கூறுவதன் மூலமாக ' அகல உழுவதை விட ஆழ உழுவதே மேல்' என்ற பழமொழியின் படி கோசல நாட்டு உழவர்கள் உழவுத் தொழிலை மேற்கொண்டிருந்தனர் எனவும் அறியமுடிகிறது.

களைகளைப் போக்கவும், ஈரம் தாங்கவும், பயிர்கள் வேர்விட்டுப் படரவும், ஆழ உழும் முறையே உழவர்களால் இன்றும் போற்றப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

நாற்று நடுதல்

நீர் நிறைந்த வயல்கள் கோசல நாட்டில் இருந்ததால் எப்பொழுதும் நாற்று நடும் பணிகள் நடைபெற்றுக்கொண்டே இருந்தன என அறியமுடிகிறது.

இசைபோல இனிக்கப்பேசும் சொற்களை உடைய உழத்தியரின் விரிந்து நீண்ட கண்களையும் கைகளையும், கால்களையும், முகங்களையும், வாய்களையும் முறையே ஒத்திருக்கின்ற இருங்குவளை, தாமரை, செவ்வாம்பல் மலர்கள் ஆகிய களைகளைத் தம் காதலியரின் உறுப்புகள் எனக் கருதி அக்களைகளைப் பறிக்காமல் உழவர்கள் உலவிக் கொண்டிருந்தனர் என்பதை,

பண்கள் வாய்மிழற்றும் இன்சொல் கடைசியர் பரந்து நீண்ட
கண்கை கால்முகம் வாய் ஒக்கும் களை அல்லாமல் களை இலாமை
வண் கள்வார் கடைவாய் மள்ளர் களை இலாது உலாவி நிற்பார்

கம்பர் சுட்டுகிறார்.

பயிர்ப் பாதுகாப்பு

பயிர்களை விலங்கினம், பறவையினம், ஊர்வன ஆகியவற்றிடமிருந்து காத்திட இசையை பயன்படுத்தினர் கோசல நாட்டு உழவர்கள் என்பதை

கொன்றை வேய்ங்குழல் கோவல் முன்றில் கன்று உறங்கும்

என்றும்,

தினைச் சிலம்புதீம் சொல் இளங்கிளி
நளைச் சிலம்புவ நாகு இள வண்டு

என்றும் பயிர்காத்தல் முறையினை பதிவு செய்கின்றார் கம்பர்.

அறுவடை

பிறைச் சந்திரனின் வளைந்த வடிவம் போல் செய்யப்பட்ட அரிவாளைக் கையில் ஏந்தி செந்நெல் அரிந்தனர் என்றும், அவற்றை எடுத்து வானளாவிய போர்களாக இட்டதை 'நெல்மலை' என கம்பர் குறிப்பிடுகிறார்.

களத்துக்கு வரும் ஏழைகளைக்குக் கொடுத்து போக, எஞ்சிய நெல்லை விருந்தினர் உண்ணுவதற்காக, வீட்டுக்கு வண்டிகளில் ஏற்றினர் என கூறுகிறார்.

விளைப் பொருட்கள்

சாலி நெல், கரும்பு, எள், தினை, சோளம், சாமை, கொள் முதலியவற்றை கோசல நாட்டு உழவர்கள் விளைவித்தனர்.

குலீய், கனி, கிழங்கு மற்றும் மஞ்சள், இஞ்சி, பூமிக்குள் வளர்ந்துள்ள கிழங்குகள், கொடியிலே தோன்றிய பொருட்கள், பயிறுவகைகள் ஆகியன கோசல நாட்டில் விளைந்தன என்பதும் குறிப்பிடத்தக்கது.

நிறைவுரை

கவிச்சக்கரவர்த்தி கம்பன் தமிழர்களின் தாய்த்தொழிலாக விளங்கிடும் உழவின் சிறப்பை தாம் இயற்றிய காப்பியத்தில் ஏற்றிப் போற்றியுள்ளார் என அறிய முடிகிறது.

'மேழி போற்று' எனப் பாடிய பாரதியார்,

உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்- வீணில்
உண்டுகளித் திருப்போரை நிந்தனை செய்வோம்

என்பதையும் பாடி உழவர்களின் பெருமையை புலப்படுத்தியுள்ளார். கம்பர் மொழிந்த நீர்வளக் கொள்கை, உழவு முறைகளை கையாண்டு வேளாண்தொழிலை உயர்த்திட நாம் எண்ணுவது கம்பர் பெருமானுக்கு நாம் செலுத்திடும் நன்றி கடனாகும்.

கம்பனில் சூழலியல்

ச.விஜயலெட்சுமி
தமிழாசிரியர், சேதுபதி மேனிலைப் பள்ளி, மதுரை

கம்பனில் சூழலியல்

ஆதிகாலத்து மனிதன் இயற்கையோடு ஒன்றிணைந்து வாழ்ந்துள்ளான். இயற்கையுடன் இணைந்து வாழ்ந்த மனிதன் இயற்கையை வணங்கினான். பயம், பக்தி, மரியாதை போன்றவை மனிதன் இயற்கையை வழிபடக் காரணமாக அமைந்தன எனலாம். இயற்கை தரும் பொருட்கள் கொண்டே மனிதன் தனது வாழ்க்கையை நடத்திவந்தான். இயற்கையில் ஏற்படும் மாற்றங்கள் உயிர்களின் வாழ்வியலைப் பாதிப்பதாக அமைகின்றன. கம்பராமாயணம் அயோத்தியா காண்டத்தில் நகர் நீங்கு படலத்தைச் சூழலியல் நோக்கில் காண முற்படுவது ஆய்வின் நெறியாகும்.

சுற்றுப்புறச் சூழலியல்

சுற்றுச்சூழல் என்பது மனிதனைச் சுற்றியுள்ள நிலம், நீர், காற்று முதலியவற்றை உள்ளடக்கிய அண்டம் எனப்படும் உயிர்கள் வாழ்வதற்கு உதவுகின்ற இந்த ஒருங்கமைவு சுற்றுச்சூழல் எனப்படும். உயிரிகள் தத்தமக்குள்ளும் புறச்சூழலோடும் கொண்டிருக்கும் உறவுகள் பற்றிய அறிவியலே சுற்றுப்புறச் சூழலியல் எனப்படுகிறது. மேலும், "உயிரி" என்பது ஒவ்வொரு இனத்தையும் குறிப்பதோடு அவற்றின் செயல் மற்றும் வாழ்க்கையைச் சுட்டுகிறது எனவும், 'சூழல்' என்பது அவற்றைச் சூழ்ந்திருக்கும் இயற்பியல் மற்றும் உயிரியல் கூறுகளை உள்ளடக்கியது எனவும் வரையறை செய்யப்படுகிறது. (சந்திரா.சு. திருஞானசம்பந்தர் தேவாரத்தில் சூழலியல் ஆய்வுக் கட்டுரை ப-2) அதாவது சுற்றுப்புறச்சூழல் என்பது காற்றடுக்கு,நீரடுக்கு, புவியடுக்குஆகியவற்றையும், திரள்களையும் உள்ளடக்கியது ஆகும். இக்கூறுகள் ஒன்றையொன்று சார்ந்து ஊட்ட உறவாக அமைவதனைச் சூழல்மண்டலம் என்பர். (மேலது, ப-2)

கம்பராமாயணத்தில் சூழலியல்

கம்பர் தமது கம்பராமாயணத்தில் ஐம்பூதங்கள் பற்றியும், கடல், மலை, குன்று போன்றவை பற்றியும் குறிப்பிடுகின்றார்.

ஐம்பூதங்கள்

ஆகாயம், நிலம், நீர், காற்று, நெருப்பு என்னும் ஐம்பூதங்களும் கடவுளுடைய ஆணைக்குட்பட்டுச் சிறிதும் விலகாமல் ஒரே நியதியில் ஒழுகுகின்றன. இவை தம் நியதியை விட்டுச் சற்றே விலகினால் உலகம் அழிவது உறுதி. இந்த உண்மையை இராமன் தன் தாயான கோசலையிடம் உரைத்து, அவை பிறழ்ந்து செயல்பட்டாலும் நான் தந்தை சொல்லை மீறமாட்டேன் என்ற உறுதிபட உரைக்கின்றான்.

விண்ணும் மண்ணும் அவ்வேலையும், மற்றும் வே(று)
எண்ணும் பூதம் எலாம் இறந்(து) ஏகினும்- (177)

இந்தப் பாடலில், இயற்கைக்கு ஊறுவிளைவிக்க எண்ணினால் நாம் அழிவது உறுதி என்னும் இப்பிரபஞ்ச இயக்கம் பற்றிய இக்கருத்து அமைவது சூழலியல் சிந்தனையாகின்றது.

நிலம்

இராமனைக் கைகேயி காட்டுக்கு அனுப்ப இருக்கின்றாள் என்பதைக் கேட்ட இலட்சுமணனுக்கு ஒரே கோபவெறி பிறந்துவிட்டது. கோபாவேசத்தோடு எழுந்து யுத்தத்திற்குத் தயாராகிப் பூமித்தாயின் பாரம் அதிகமாகி விட்டது. அதைத்தீர்க்கவேண்டாமா என்று குமுறுகிறான்.

புவிப்பாவை பரங்கெடப் போர்உவந் தோரை யெல்லாம்
அவிப்பானும், அவித்(து) அவர்ஆக்கையை அண்டம் முற்றக்..(204)

மக்கள்தொகைப் பெருக்கத்தினால், புவியானது பாரமடைகின்றது. அதாவது பெருகிவரும் மக்கள்தொகைக்கு ஏற்பக் கட்டடங்கள் அமைக்கவும், வாழ்வாதார வசதிகள் செய்துத் தருவதற்கும் நிலமானது பயன்படுத்தப்படுகின்றது. அதிகமான பாரத்தினால் நிலத்தில் அதிர்வுகள் ஏற்பட வாய்ப்புள்ளது. பூமியில் மக்கள்தொகைப் பெருக்கத்தினால் உருவாகியிருக்கின்ற தற்போதைய நிலையினோடு பொருந்தி வருவதாக உள்ளது.

நீர்

நல்ல தண்ணீர் இல்லாதிருத்தல் நதியின் பிழை இல்லை. மனிதனும், தொழிற்சாலைக் கழிவுகளும் நீரை மாசுப்படுத்துகின்றனர். காடுகளைத் தன் தேவைகளுக்காக மனிதன் அழிக்கின்றான்.

"நீரைச் சேமிக்கும் இடங்களாக அமைவன குளம், குட்டை, அணை, ஆறுகள் இவற்றின் சூழ்நிலைக்காரணிகளையும் (வயல், தோட்டம், கா, சோலை) இவற்றில் வாழும் உயிரினங்களையும் கருத்தில் கொண்டு தூய்மைக்கேடு இன்றிப் பாதுகாத்தல் நன்னீர்சூழலியல் எனலாம். (பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் சூழலியல் விழிப்புணர்வு, நிர்மலா மகளிர் கல்லூரி வெளியீடு, பக்-124)

இராமன் வனம் போகும் செய்தியறிந்த இலட்சுமணன் தந்தையாகிய தசரதனைப் பற்றி மிகவும் இழிவாகப் பேசிவிட்டதனால், இராமனின் மனது மிகவும் புண்பட்டுவிட்டது. இலட்சுமணனது கோபத்தைத் தணிப்பதற்காக மிக்க உணர்ச்சியோடு இராமன் பேசுவதாகப் பின்வரும் பாடல்வரிகள் அமைகின்றன.

நதியின்பி ழையன்று நறும்புனல் இன்மை, அற்றே
பதியின்பிழை அன்று பயந்துந மைப்புரத்தாள்.... (213)

நதிகளில் தற்சமயம் நீரானது வற்றிவிடுகின்றது. இதற்குக் காரணம் அவற்றை ஆக்கிரமித்துக் குடியிருப்பு வசதிகள் செய்து தருதல் போன்ற காரணங்களினாலும், மரங்களை வெட்டுவதனால், மழை பொழிவானது குறைவதும் ஆகும். இன்றைய காலச்சூழலைப் பிரதிபலிப்பதாக இவ்வரிகள் அமைகின்றன.

காற்று

மனித வாழ்க்கைக்குக் காற்று அவசியம். அதுவும் சுத்தமான காற்று. காற்று உலாவுகின்ற பெரிய உலகம் வளமான உலகம். காற்று ஓரிடத்தில் நிற்கும் தன்மையுள்ளது அல்ல. காற்று மாசு அடைந்தால் உயிரின வாழ்க்கை பாதிக்கப்பட்டுப் பலவிதமான நோய்களால் துன்பப்பட நேரிடும் என்பது உலகியல் அறிவியல் வல்லுநர்களின் கருத்தாகும். காற்றின் தன்மைக்கு ஏற்ப நன்மையும் தீமையும் அமைய வாய்ப்புண்டு. உதாரணம், தென்றல் காற்று, சூறாவளிக் காற்று. (வரலட்சுமி. இரா. திருவள்ளுவரும் சுற்றுச்சூழல் விழிப்புணர்வும், ப-38). கைகேயிக்கு இந்தப் பாழாய்ப்போன நாட்டைத்தான் இராமன் கொடுத்தான். அதை அவள் வைத்துக்கொள்ளட்டும். இராமனைக் காட்டிற்குப் போகச் சொல்கிறாளே என்று அயோத்திப் பெண்கள் கலங்குகிறார்கள். இதனைக் கூறும் விதமாகப் பின்வரும் பாடல் வரிகள் அமைகின்றன.

உந்தாது நெய்வார்த் (து) உதவாது, கால் எறிய.... (201)

அயோத்திப் பெண்களின் கலக்கத்தைப் பற்றிக் குறிப்பிடும் இந்த வரிகள் சூழலியலில் காற்றினது பங்களிப்பைப் பற்றிக் கூறுவதாக அமைகின்றது.

வானம்

சூழல்மண்டலத்தில் இன்றியமையாத கூறுகளுள் வானமும் ஒன்று. மழையைப் பொழிவிக்கின்ற வானம்பற்றிக் கம்பர் குறிப்பிடத் தவறவில்லை. கோபாவேசத்தோடு தந்தையைப் பழிக்கும் இலட்சுமண னின் சினத்தீயைத் தணிக்கும்விதமாக இராமன் தண்மையாகப் பேசுகின்றான். இதனை,

———ஆறாக்கனல் ஆற்றும் ஓர்
அஞ்சன மேகம் என்ன——— (207)

என்று குறிப்பிடுகின்றார். நீர் நெருப்பை அணைத்துவிடக் கூடிய தன்மையுடையது. நீரை வழங்குகின்ற கருமேகம் போன்று இராமன் விளங்குகின்றான். ஒட்டுமொத்தமாகக் காப்பியம் முழுவதிலும் இராமன் அருள் நிறைந்தவனாகப் பேசப்படுகின்றான். அவனுடைய பண்பாகிய வள்ளண்மைத் தன்மை புலப்படுமாறு மழைமேகம் உவமிக்கப்படுகிறது.

நெருப்பு

நெருப்புப் பற்றிக் குறிப்பிடும்போது தீ, அழல், எரி, கனல் போன்ற சொற்களைக்; கம்பர் தம் காப்பியத்தில் பயன்படுத்துகின்றார். தீயானது பயன்படுத்தும் நோக்கத்தைப் பொறுத்து நன்மை, தீமை போன்றவை அமைகின்றது. இலட்சுமணனின் கோபம் தணிந்த போதிலும் அவனுக்குள் இருக்கும் கோப உணர்ச்சிக் குறையவில்லை.

உதிக்கும்உ லையுள் உறு தீ என ஊதை பொங்க.. (214)

தீயின் தன்மையைக் குறிப்பதாக இவ்வரிகள் அமைகின்றன.

வழக்கறிஞர் உயிர்ப்பொருள்திரள் என்பது தாவரங்கள், மரங்கள், விலங்குகள், பறவைகள் சார்ந்த ஒருங்கமைவு ஆகும்.

பூக்கும் தாவரங்கள் முதலியன முதன்மை உற்பத்தியாளர்களாவர். (PêiÜòêô Pêöùóàïê÷) என்பது சூழலியல் கோட்பாடு. அந்த அடிப்படையில் உயிர்ப்பொருள்திரளில் தாவரங்களான மரம், செடி, கொடிகள் முதலியன அமைவது சூழலியலின் கூறுகள் இடம்

பெறுவதனைக் காட்டுகின்றது. (பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் சூழலியல் விழிப்புணர்வு; பக்-43) கம்பராமாயணம் அயோத்தியா காண்டம் நகர் நீங்குப் படலத்தில் தாவரங்கள், விலங்குகள், பறவைகள் ஆகியவற்றின் ஒருங்கமைவு இடம் பெறுகின்றது.

தாவரங்கள்

தாவரங்கள் பற்றிக் குறிப்பிடும்போது இலை, மரம் என்று ஒவ்வொன் றைப் பற்றியும் விளக்குகின்றார்.

—வைகும், ஆலிலை அன்னவ யிற்றினை.... (171)

மலர்கள்

மலர்களில் தாமரை, ஆம்பல்கள் பற்றிக் குறிப்பிடுகின்றார்.

........செந்தா மரைத் தடங்கண்
செவ்வி அருள் நோக்கம்... (201)

இராமனின் கண்கள் தாமரைமலரின் அழகும் அருளும் உடையது என்று கூறுகின்றார்.

ஆம்பல் மலர் பற்றி மற்றொரு இடத்தில்
—— அகல்மதில் நெடுமனை அரத்த ஆம்பல்கள்... (236)

என்றும் குறிப்பிடுகின்றார்.

பறவைகள்

பறவைகளில் மயில், குயில், அன்னம் போன்றவை பற்றிக் குறிப்;பிடப்படுகின்றது.

கன்னிநல் மயில்களும் குயில்க் கணங்களும்
அன்னமும் சிறையிழந்(து) அவனி சேர்ந்தன... (235)

விலங்குகள்

புலி, மான்குட்டி, களிறு போன்றவை பற்றியும் கம்பர் தம் காப்பியத்தில் குறிப்பிடுகின்றார்.

—புரசை மதகளிற்றான் பொற்கோயில் முன்னர்... (186)

——உழுவை சேர் கானகத்(து) உறைவென் யான் என... (240)

————உழைக்குலம் உழைப்பன ஒத்(து) ஓர் பால்எலாம்... (242)

தொகுப்புரை

சூழலியல் என்பது இந்த நூற்றாண்டின் கோட்பாடு ஆகும். பலநூறு ஆண்டுகளுக்கு முன்னால் எழுந்த படைப்புக் கம்பராமாயணம். இந்தப் படைப்பில் இருபத்தோராம் நூற்றாண்டுக் கோட்பாடாகிய சூழலியலைப் பொருத்திப் பார்ப்பது புதியதோர் ஆய்வு நெறியாகும். அவ்வகையில் நகர் நீங்குப் படலம் களமாகக் கொள்ளப்பட்டது. இலக்கியப் படைப்புகளில் இடம் பெறும் இயற்கை சூழலியல் கூறுகளாக புதுநெறி காட்டுவது கம்பன் படைப்பில் மற்றுமொரு மகுடமாகும்.

கம்பனில் 'மெய்யியல்' சிந்தனைகள்

முனைவர் நா. பழனிவேலு
தமிழ்த்துறைத்தலைவர், அரசு கலைக்கல்லூரி (ஆடவர்), கிருட்டினகிரி.

உலகம் போற்றும் ஒப்பற்ற காப்பியம் கம்பரின் இராமாவதாரம். நடையின் நின்றுயர் நாயகனாகிய காசில் கொற்றத்து இராமனின் கதையைக் கூறுவதற்காகக் காப்பியத்தை இயற்றியிருப்பினும், மக்கள் பின்பற்றி ஒழுகவேண்டிய வாழ்வியல் முறைகளை, உலகியல் மெய்ம்மைகளை வாய்ப்பு நேரும் இடங்களிலெல்லாம் வலியுறுத்திக் கூறுகின்றார். கம்பர் இக்கருத்துகளை இயற்கை நிகழ்ச்சி வருணனைகள் மூலமாகவும்; பாத்திரங்களின் செயல்பாடுகள் குறித்துத் தன் கருத்தைக் கூறும்போதும் வெளிப்படுத்துகிறார். கம்பர் கூறும் தனிமனித வாழ்வியல், அரசியல், மெய்யியல் - கருத்துகளின் மூலம் கம்பரின் பல்துறைப் புலமைத்திறத்தை, அறிவுநுட்பத்தை அறிய இயல்கிறது. கம்பராமாயணத்தில் பாலகாண்டத்திலும் அயோத்தியா காண்டத்திலும் இடம்பெறும் 'மெய்யியல்' கருத்துகளை வெளிக்கொணரும் நோக்கில் இக்கட்டுரை அமைகிறது.

உயிர்- உடல்

சரயு நதியின் நீர்ப்பெருக்கு, சோலை, சண்பகவனம், பொய்கை, தடாகம், கமுகவனம், வயல்கள் ஆகிய இடங்களில் பரவி விளங்கியதை, ஓதிய உடல்கள்தோறும் உயிர் புகுந்து பரவி நிற்பதைப்போல விளங்கியது என்பதை,

தாதுகு சோலைதோறும் சண்பகக் காடுதோறும்
போத விழ் பொய்கைதோறும் புதுமணத்தடங்கள்தோறும்
மாதவி வேலிப் பூக வனந்தொறும் வயல்கள் தோறும்
ஓதிய உடம்புதோறும் உயிர்என உலாய தன்றே. (31)

எனும் பாடலில் உயிர்கள் நான்கு கதிகளிலும் உள்ள உடல்களில் புகுந்து செல்வதுபோல, சரயு வெள்ளமும் உடல்கள்தோறும் உயிர் புகுந்து பரவி விளங்குவதுபோல, பரவி விளங்கியது எனக் கூறுகிறார்.

தயரதன் மூர்ச்சையுற்றுத் தரையில் வீழ்ந்து கிடந்து, உயிர் நீங்கியபோது உடல் கெட்டு வீழ்ந்தது போலக் கோசலை வீழ்ந்ததாக,

கிடந்த பார்மிசை வீழ்ந்தனள் - கெட்டு உயிர்

உடைந்த போழ்தின் உடல் விழுந்தென்னவே (1634)

எனக் கூறுகின்றார். தயரதன் உயிரும் கோசலை உடம்புமாக அன்புற்றிருந்தமையைக் கம்பர் குறிப்பாகக் கூறுகின்றார்.

தயரதன் தேவிமார் 60000 பேரும் தாமும் உடன் உயிர் துறக்கத் துணிந்து, அவன் நற்கதி அடையக் காரணமாயிருந்த அவன் உடலைப் பற்றுவாராயினர். இதனைக் கம்பர், பிறவியைப் பெருங்கடலாகவும் பித்தமயக்கத்தைச் சுறாமீனாகவும் தயரதன் உடலைச் சுறாவின்வாய் அகப்படாது கடலைக் கடக்கும் புணையாகவும் தயரதன் தேவியரைக் கடல் கடப்பவராகவும் உருவகிக்கிறார்.

தயரதன் உடலை விட்டுப் பிரியாது பற்றியிருந்த தேவியர் பித்துக் கொள்வதற்குக் காரணமாகிய அவிச்சை எனும் சுறாமீன்களால் தாக்கப்படுகிற பிறவி எனும் பெரிய கடலைக் கடக்குமாறு கரையடைவித்து, மீண்ட புணையில் தாமும் செல்வோரை ஒத்திருந்தனர். இதனை,

பித்தமயக்கு ஆம் சுறவு எறியும் பிறவிப் பெரிய கடல் கடக்க
உய்த்து மீண்ட நாவாயில், தாமும் போவார் ஒக்கின்றார் (1911)

எனக் கூறுகின்றார்.

இராமஇலக்குவர் அயோத்தியை விட்டு நீங்கி காட்டிற்குச் சென்ற பின்னர், பரதன், சத்ருக்கனனுடன் கோசலநாட்டை அடைந்தபோது, அந்நாட்டின் அலங்கோலத் தோற்றத்தைக் கம்பர் கூறும்போது, 'சீதை கடத்தற்கரிய காட்டுவழியில் சென்று விட்டதால், வளம் நிரம்பிய கோசலநாடு திருமகள் நீங்கிய தன்மைபோலப் பொலிவிழந்து, உயிர் நீங்கிய உடல் எனக் கூறும்படிச் செயலற்றுக் கிடந்தமையை,

தேவி நீத்து அருஞ் சேண் நெறி சென்றிட,
ஆவி நீத்த உடல் எனல் ஆயதே (2128)

என்று கூறுகின்றார்.

தயரதன் இறந்தமையைக் கேட்டு, இராமன் சோர்ந்து, உளம் கலங்கி வருந்திப் புலம்புகிறான்(2434). வசிட்டன் இராமனைத் தேற்றும்போது, இவ்வுலகை அடைந்துள்ள நிலைபேறுடைய உயிர்களுக்கு இறப்பும், பிறப்பும் இயல்பானது; இயற்கையானது என்றும்; உயிர்கள் அளவில்லாத கோடிக்கணக்கான நிலைத்தல் இல்லாத பிறப்புகளை இன்பத்திலும் துன்பத்திலும் தழுவுகின்றன(2444) எனவும் கூறுகின்றான்.

தயரதன் இறந்தமையை அறிந்து இராமன் கலங்கிப் புலம்பும்போது, வசிட்டர் அவனைத் தேற்றுகிறார். அப்போது, இவ்வளவு என்று எண்ணி முதலிலேயே வரையறுக்கப்பட்ட வாழ்நாளையுடையது உயிர் என்பதை, 'எண்முதல் உயிர்'(2448) எனும் அடியில் குறிப்பிடுகிறார்.

தயரதனுக்கு நீர்க்கடன் செய்யுமாறு வசிட்டர் இராமனிடம் கூறும்போது, 'மழைநீரில் தோன்றும் நீர்க்குமிழி போன்று அழிந்துபோகும் இயல்புடையது மனித உடல்; இதனால் அது குறித்துச் சிந்தித்து வருந்துதல் அறியாமையாகும் என்பதைக் கூறும்போது,

விண்ணு நீர் மொக்குளின் விளியும் யாக்கையை
எண்ணி, நீ அழுங்குதல் இழுதைப்பாலதால் (2453)

எனக் கூறுகிறார்.

உயிர் துறவு, தெளிவு(மெய்யுணர்தல்) ஆகியவற்றைக் கொண்டு உடம்பை விட்டுப் பிரிந்து சென்று உய்ய வேண்டும். இக்கருத்தைத் தயரதன், அமைச்சர்கள் கூட்டத்தில் தன் உள்ளக்கருத்தை வெளிப் படுத்தும்போது, உயிராகிய பறவை உடம்பாகிய சிறையினைப் பற்றிச் சென்று உய்யவேண்டுமாயின் துறவும் தெளிவும் ஆகிய சிறகுகள் வேண்டும். அச்சிறகுகள் உள்ளபோது அவற்றைக் கொண்டு பற்றிச் சிறை கடந்து செல்வதைக் காட்டிலும் உயிருக்கு இனிய செயல் பிரி-தில்லை. இதனை, 'அருஞ்சிறப்பு அமைவரும் துறவும் அவ்வழி'(1334) எனும் பாடலில் கம்பர் கூறுகிறார்.

வினை

சரயு நீர்ப்பெருக்கு முல்லை நிலத்தைக் குறிஞ்சி நிலத்திற்கும், மருத நிலத்திலுள்ள பொருளை முல்லை நிலத்திற்கும், நெய்தல் நிலத்திலுள்ள அளவிலாத பொருள்களை ஒரு நிலத்திலிருந்து வேறோர் நிலத்திற்குக் கொண்டு சென்று சேர்க்கிறது. சரயு வெள்ளத்தின் இச்செயலுக்கு உயிர்களை ஒரு கதியினின்று வேறோர் கதிக்குக் கொண்டு சென்று உய்க்கும் வினையை,

செல்லுறு கதியின் செல்லும் வினை என, சென்றது அன்றே (28)

என்று உவமையாக்கிக் கூறகிறார்.

இராமன் தாடகையை வதம் செய்த பிறகு, விசுவாமித்திரன் இராமனுக்குச் சடையப்பவள்ளலின் சொல் ஒத்த படைக்கலங்களை அருளுகிறான்.

அப்படைக்கலங்கள் எல்லாம் இராமனிடம் மிக்க மகிழ்ச்சியோடும் வந்து சேர்ந்தன. இந்நிகழ்ச்சியை, தெளிந்த மனமுடைய ஒருவனுக்கு ஒரு பிறப்பில் செய்த நல்வினைப்பயன்கள் யாவும் அவன் மறுபிறப்புற்றபோது, அவனைத்தேடி வந்தடைவதுபோல வந்து சேர்ந்தது என்பதை,

தேறிய மனத்தான் செய்த நல்வினைப் பயன்கள் எல்லாம்
மாறிய பிறப்பில் தேடி வருவபோல், வந்த அன்றே (395)

எனும் அடிகளில் நல்வினைப்பயன் செய்தவனை நாடி வந்தடையும் என உணர்த்துகிறார்.

இராமன் காட்டிற்குச் செல்வதற்கு முன், வசிட்டன் இராமனது நிலையை எண்ணி, அவனுடைய ஊழ்வினைக்காக வருந்தி, நான்கு முகங்களையுடைய பிரமனுக்கும்; ஊழ்வினையினை ஒழிக்க இயலாது; இராமனுக்கு எங்ஙனம் ஒழிக்க இயலும் எனும் கருத்தினை,

சூழ் வினை நான்முகத்து ஒருவன் சூழினும்,
ஊழ் வினை ஒருவராலும் ஒழிக்கற் பாலதோ! (1764)

எனும் அடிகளில் கூறுகிறான்.

இராமன் காட்டிற்குச் செல்வதை எண்ணி வருந்திப் பூமியில் புரண்ட சுமந்திரனை இராமன் எடுத்து அணைத்துத் தேற்றிட, அவன், 'உயிர்கட்கு ஏற்படும் துன்பங்கள் ஊழ்வினையால் வருகின்றன'. 'ஊழ்வினை வரும் துயர்நிலை' (1877) - என மனத்தில் எண்ணுவதாகக் கம்பர் கூறுகின்றார்.

பரதன் படைகள் கங்கையைக் கடக்கும்போது, தேர்களின் உறுப்புகளாகிய கொடி, கொடிஞ்சு, தட்டு, அச்சு, ஆழி முதலிய உறுப்புகள் பிரிக்கப்பட்டு, வெவ்வேறு நாவாய்களில் ஏற்றப்பட்டு, அக்கரை சென்றடைந்தன. இந்நிகழ்வை, உடல் அழிந்தபின் உயிர்களை வெவ்வேறு உடம்பில் சேர்விக்கின்ற வினைபோல வெவ்வேறு நாவாய்கள் ஏற்றிச் சென்றன என்பதை,

விடும் சுவல் புரவியோடும் வேறு வேறு ஏற்றிச் சென்ற
மடிஞ்ச பின் உடம்பு கூட்டும் வினை என - வயிரத்தேர்கள் (2354)

எனும் அடிகளில் வினையின் செயல்பாட்டைக் கம்பர் குறிப்பிடுகின்றார்.

பரதன் தன் சேனையுடன் பரத்துவாசர் வசிக்கும் இடத்திற்கு

அந்திப் போதில் சென்றடைந்தான். பரத்துவாச முனிவர் பரதன் சேனையர்க்கு விருந்தளித்திட, சேனையிலுள்ளோர் வேறோர் உலகைப் பெற்றவர்களைப்போல, மண்ணுலகில் முன் உள்ள வாழ்க்கையை மறந்து, இந்திரனுக்குப் பொருந்திய இன்பங்களை எல்லாம் துய்த்துப் புதுவாழ்வு வாழ்வாராயினர். இரவுப் பொழுது கழிந்து கதிரவன் தோன்றுகிறது. இந்நிகழ்வை,

ஏலும் நல் வினை துய்ப்பவர்க்கு ஈறு செல்
காலம் என்னக் கதிரவன் தோன்றினான் (2392)

என்று நல்வினைப்பயனைத் துய்ப்பவர்களுக்கும் அந்நுகர்ச்சி முடிய வருகிற காலம் உண்டு; தொடர்ந்து துய்த்துக் கொண்டிருக்கக் முடியாது எனும் கருத்தைக் கம்பர் உணர்த்துகின்றார்.

தயரதன் இறந்தமையைக் கேட்டு, இராமன் உள்ளம் சோர்ந்து புலம்புகிறான். அப்போது வசிட்டர் அவனைத் தேற்றும்போது, உயிர்க்ள இம்மையில் கிடந்து சுழன்று, மறுமையில் நரகத்தில் அழுந்தியிருந்து தம் தீவினைப் பயனைத் துய்க்கின்றன என்று உயிர்கள் தீவினைப்பயனை நுகரும் இயல்பினை,

இவ் உலகத்தினும் இடருளே கிடந்து
அவ் உலகத்தினும் நரகின் ஆழ்ந்து, பின்
வெவ் வினை துய்ப்பன விரிந்த யோனிகள் (2450)

என்று கூறுகின்றார்.

புண்ணியம் - துறக்கம்

நகரப்படலத்தில் அயோத்தியின் சிறப்புகளைக் கூறும்போது, அயோத்தி புண்ணியத்தைச் செய்யும் கருமபூமியாகவும் அதன் பயனை நுகரும் போகபூமியாகவும் திகழ்கிறது என்பதை,

புண்ணியம் புரிந்தோர் புகுவது துறக்கம் (97) - எனும் அடிகளில் புண்ணியம் செய்தவர்கள் சென்று சேர்கிற இடம் சொர்க்கம் எனும் இக்கருத்து அருமறைப்பொருள் எனக் கூறுகிறார்.

வரைக்காட்சிப் படலத்தில், ஆடவர், மகளிரும் மலை வளத்தில் ஈடுபட்டிருக்கும் காட்சியை வருணிக்கும்போது, அவர்கள் விண்ணுலக இன்பத்தை நுகர்கிற சான்றோர் போல, அம்மலையின் மாட்சிகளையெல்லாம் மறக்க இயலாதவர் ஆயினர் என்பதை,

துறக்கம் எய்திய தூயவரே என
மறக்ககிற்றிலர் அன்னதன் மாண்பு எலாம் (877)

எனும் அடிகளில் தூயவர்கள் துறக்கம் புகுவர் எனும் கருத்தைக் குறிப்பிடுகிறார்.

மேலும், இக்கருத்தையே மதங்க முனிவரது தவப்பள்ளியின் சிறப்பினைக் கூறும்போது,

புண்ணியம் புரிந்தோர் வைகும் துறக்கமே போன்றது (3699)

என்று கூறுகிறார்.

ஊழ்

சுமந்திரன் இராமனை வனத்தில் விட்டுவிட்டுத் திரும்பி வந்து வசிட்டரிடம் செய்தியைக் கூற, வசிட்டர் சுமந்திரனோடு தயரதனிடம் செல்கிறார். அப்போது, வசிட்டர் தொன்றுதொட்டு வருகிற விதியினை வென்றவர் இல்லை.

வென்றவர் உளரோ மேலை விதியினை? (1894)

என்று விம்மியதாகக் கூறுகிறான்.

இராமனுக்குத் தீங்கு நேராது என்று இலக்குவனுக்கு அறிவுறுத்தியும் (3333), சீதை அதனைக் கேளாது, "நின்றநின் நிலையிது நெறியிற்று அன்று" (3330) என்று கடுஞ்சொல் கூறி எரியிடைக் கடிது வீழ்து இறந்துபடப் போவதாகக் கூறி, 'தூமவெங்காட்டு எரியைத் தொடரச் செல்லும்போது இலக்குவன் மிகவும் மனம் வருந்தி, 'வெஞ்சின விதியினை வெல்ல வல்லமோ? (3333) என்று மனிதர்களால் விதியினை வெல்ல முடியாது எனும் கருத்தை வலியுறுத்துகிறார்.

தயரதன் இறந்தமையை எண்ணி இராமன் உள்ளம் கலங்கிப் புலம்பிட, அவனை வசிட்டர் தேற்றுகிறார். அப்போது,

மூலம் வந்து உதவிய மூவர்க்காயினும்
காலம் என்று ஒரு வலை கடக்கலாகுமோ? (2447)

என்று மூலமாகிய பரம்பொருள் பொருந்தி அருள் செய்கிற உருத்திரன், திருமால், சிவன் ஆகிய மும்மூலீத்திகளுக்காயினும் காலம் எனும் வலையிலிருந்து தப்ப முடியாது என்று கூறுகிறார்.

வசிட்டர் இராமனைத் தேற்றும்போது, கண் முதலிய பொருள்களுக்கு அறியப்படுகிற எல்லையில் நீளத்தையுடையன. உலகில் காணப்படும் தலையாய எல்லாப் பொருளுக்கும் பற்றுக்கோடுமான மண் முதலிய ஐம்பூதங்களும் அழிந்துபோகும் இயல்புடையன (2448).

துறவு

துறவு என்பது இவ்வுலகை நினையாது துறந்து, இறைவன் அடியையே நினைக்கும் இயல்பு ஆகும்.

தயரதன் அமைச்சர்களிடம், இராமனுக்கு அரசை நல்கிட விரும்பும் தன் உள்ளக் கருத்தை வெளியிடும்போது, இப்பிறப்பில் தோன்றிய எல்லோருக்கும் மரணம் உண்டு எனும் மெய்ம்மையை மறந்து விடுவதைக் காட்டிலும் கேடு மற்றில்லை என்பதையும் உயிர்கள் துறவு எனும் தெப்பத்தின் மூலம்தான் பிறவியாகிய பெருங்கடலைக் கடக்க முடியும் எனும் கருத்தை,

"இறப்பு எனும் மெய்ம்மையை, இம்மை யாவர்க்கும்,
மறப்பு எனும் அதனின்மேல் கேடு மற்று உண்டோ?
துறப்பு எனும் தெப்பமே துணை செய்யாவிடின்,
பிறப்பு எனும் பெருங்கடல் பிழைக்கலாகுமோ? (1333)

எனும் அடிகளின் மூலம், யாக்கை எப்போதும் மனதில் கொண்டால் அது பிறவியை ஒழிப்பதற்கு இன்றியமையாத துறவினை மேற்கொள்ளச் செய்யும் எனும் கருத்தை உணர்த்துகிறார்.

மேலும், உயிராகிய பறவைக்குத் துறவு, மெய்யுணர்வு எனும் இரண்டு சிறகுகள் முளைத்துவிட்டால் அது பிறவியாகிய பெரிய சிறைச்சாலையை விட்டுச் சென்றுவிடும்(1340) என்று பிறவியை அறுப்பதற்குத் துறவும் மெய்யுணர்வும் இன்றியமையாது வேண்டுவன எனக் கூறுகிறார்.

தயரதன் இறந்தமையை அறிந்து இராமன் வருந்திப் புலம்பும்போது(2434-2440), வசிட்டர் அவனைத் தேற்றுகிறார்(2441-2451). அப்போது, இவ்வுலகிலுள்ள நிலைபேறுடைய உயிர்களுக்கு இறத்தலும் பிறத்தலும் இயற்கை. உலக இன்பங்களை, உலகத்திலுள்ள பொருள்களைத் துறத்தல், நல்ல அறநெறியில் நிற்றல் தவிர அவற்றிற்கு வேறு ஒரு பற்றுக்கோடு கிடையாது. இக்கருத்தை,

துறத்தலும் நல்அறத் துறையும் அல்லது
புறத்து ஒருதுணையிலை, பொருந்தும் மன்னுயிர்க்கு

'இறத்தலும் பிறத்தலும் இயற்கை' என்பதை
மறத்தியோ மறைகளின் வரம்பு கண்ட நீ? (2444)

எனும் பாடலில் உணர்த்துகிறார்.

பிறவியைப் போக்குவதற்கும் வீடு பேற்றிற்கும் துறவும் மெய்யுணர்தலும் சிறந்த வழி எனக் கூறுகிறார்.

முடிவுரை

உயிர் நான்கு கதிகளிலுமுள்ள உடல்களில் சென்று புகும். உயிர்கள் செய்கிற நல்வினைகளும் தீவினைகளும் அவ்வுயிர்கள் செல்கின்ற அனைத்துக் கதிகளிலும் விடாது பின்பற்றிச் செல்லும். தெளிந்த மனத்தையுடைய ஒருவன் ஒரு பிறப்பில் செய்த நல்வினைப் பயன்கள் எல்லாம் மறுபிறப்பில் அவனைத் தேடிச் சென்று சேரும். மழைநீரில் தோன்றும் நீர்க்குமிழி போல் உடல் அழியும் இயல்பையுடையது. ஊழ்வினையை ஒருவராலும் ஒழிக்க முடியாது. புண்ணியம் செய்தோர் துறக்கம் புகுவர். மண் முதலிய பூதங்கள் யாவும் ஒரு காலத்தில் அழியும் இயல்புடையது. துறவு நெறியின் மூலம்தான் பிறப்பை அறுக்க முடியும்.

இவ்வாறு உயிர், உடல், வினை, ஊழ், துறவு, துறக்கம் முதலியவற்றைப் பற்றிய மெய்ம்மைகளைக் கம்பர் தமது காப்பியத்தில் வாய்ப்பு நேரும் இடங்களிலெல்லாம் கவிக்கூற்றின் வாயிலாகவும் பாத்திரங்களின் மூலமாகவும் கூறுகின்றார். மனிதர்கள் உயிர், உடல், வினை, ஊழ் முதலியவற்றைப் பற்றிய மெய்ம்மைகளை உணர்ந்து தங்களை நெறிப்படுத்திக் கொள்ள வேண்டும். பக்குவப்படுத்திக் கொள்ள வேண்டும் என எண்ணியிருக்கிறார். கம்பரின் மெய்யியல் புலமையின் ஆழமும் தெளிவும் அவர் கூறும் 'மெய்யியல்' கருத்துகளிலிருந்து புலனாகிறது.

கம்பனில் மெய்யியல்

முனைவர் **கோ.பழநல்லசிவம்,**
உதவிப்பேராசிரியர், மெய்யியல் துறை,தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்-10.

கம்பராமாயணம் தமிழின் தொன்மையையும் புதுமையையும் கொண்டிலங்கும் காப்பியம். காதல், வீரம் எனும் தமிழினத்தின் இரண்டு அடிப்படைகளையும், அன்பு, கொடை, பொறை, விருந்தோம்பல், குடியோம்பல், சகோதரத்துவம், சமத்துவம், மனிதநேயம், ஆன்மநேய ஒருமைப்பாடு, மறத்தல், மன்னித்தல், அருளல் என நீளும் தமிழரின் பண்புநலன்களையும், நகை, அழுகை, இளிவரல், மருட்கை, அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை எனும் எண்வகை மெய்ப்பாடுகளோடு, சமநிலை எனும் ஒன்பதாவது மெய்ப்பாட்டையும் ஒருசேரக் காட்டும் ஒப்பற்ற படைப்பாகவும் விளங்குகிறது. இலக்கிய நோக்கில் மட்டுமல்லாமல், தமிழின் எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி எனும் ஐவகை இலக்கணக்கூறுகளையும் முழுமையாகக் கம்பனில் காணமுடியும். இவை மட்டுமல்லாமல் இசைக்கு அடிப்படையாக விளங்கும் சந்தங்களையும் கம்பராமாயணப் பாடல்கள் கொண்டிருப்பது மேலும் சிறப்பிற்குரியதாகக் கருதலாம். இம்மேன்மை கருதியே பாரதி, உயர் கம்பன் பிறந்த தமிழ்நாடு என்று பெருமைப்படுகிறான். நாமக்கல் கவிஞர்,

தமிழ்மொழி தனக்கொரு தனிச்சிறப்பைத்
தந்தது கம்பனின் கவிச்சிறப்பே,
அமிழ்தம் தமிழ்மொழி என்பதுவும்
அழியாதிருப்பதும் கம்பனதாம்,

கம்பனை மறந்தால் தமிழ் ஏது
கவிதை என்பதும் கமழாது
அம்புவிக்கவிஞருள் அரசாகும்
அவனே தமிழ்மொழிப் பரிசாகும்

என்று வாயார வாழ்த்துகிறார். கம்பனில் மெய்யியலைக்காணும் முன் மெய்யியல் குறித்த விளக்கத்தை முதற்கண் காணலாம்.

மெய்யியல்

மெய்யியல், மெய்ப்பொருளியல் என்றெல்லாம் அழைக்கப்படும் துறை

ஒரு தனித்துறையன்று. எல்லாவற்றுக்குள்ளும் ஊடுருவியிருக்கும் உண்மை மெய்யியலாகும். ஒன்றின் கருப்பொருளை, உண்மைத் தன்மையை ஆராய்வது மெய்யியல் எனக்கொள்ளலாம். திருவள்ளுவர்,

எப்பொருள் யார்யார் வாய்க்கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு (423)

எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு (355)

என்ற இரண்டு குறட்பாக்களின் மூலமாக மெய்யியலுக்கு விளக்கம் தருகிறார். முதற்குறள் புறநிலையிலும் அடுத்த குறள் அக நிலையிலும்/ ஆய்வு நிலையிலும் மெய்ப்பொருளை விளக்குகிறது. இதன் மூலம் ஒன்றின் உண்மைத்தன்மையை ஆராய்கின்ற இயலை / துறையை/ விழைவை மெய்யியல் என்று துணியலாம்.

வடமொழியில் மெய்யியல் என்பதைத் தத்துவம் என்ற சொல்லால் குறிக்கின்றனர். தத்+துவம் என்று இதற்குப் பொருள் கொள்ளும் போதும் உண்மை குறித்ததான முயற்சி/ அறிவு என்பது பெறப்படுகிறது. ஆங்கிலத்தில் இதனை Philosophy என்ற சொல்லால் குறிக்கின்றனர். அறிவு, கலை, அறம், கடவுள், இயற்கை என எல்லாவற்றுள்ளம் மெய்யியல் பொதிந்துள்ளது. மெய்யியல் பல்வேறு ஆராய்ச்சிகளின் அடிப்படையில் கோட்பாடுகளை உருவாக்குகிறது. தொடர்ந்த அறிவுத்தேடலின் முடிவுகளே இறுதியில் கோட்பாடுகளாகின்றன.

மெய்யியலை, சமயம் சார்ந்த மெய்யியல் சமயம் சாராத மெய்யியல் என்று பிரிப்பர். சமய மெய்யியலை கடவுளை ஏற்கும் சமயங்கள், கடவுளை மறுக்கும் சமயங்கள் என்றும் வைதிக/அவைதிக சமயங்கள் என்றும் வேறுபடுத்தி விளக்குவர். பொதுவாக இன்றைய நிலையில் கிழக்கத்திய மெய்யியல், மேற்கத்திய மெய்யியல் என்று பார்க்கும் அறிவுத்துறையே பெரும்பான்மையாக உள்ளது. இவ்வடிப்படையில் கம்பனில் காணலாகம் மெய்யியலைக் காண இக்கட்டுரை விழைகிறது.

இயற்கை சார்ந்த மெய்யியல்

மனிதன் இயற்கையின் அற்புதமாக ஒரு படைப்பு. மனிதனின் அனைத்துச் செயன்மைகளும் இயற்கையை அடியொற்றியே அமைகின்றன. ஆதி மனிதன் இயற்கையோடு இயைந்த வாழ்க்கையை நடத்தினான், சங்ககால மனிதன் இயற்கையைத் தம் குடும்பத்தில்

ஒன்றாகப் பார்த்தான். பக்தியும் தெய்வ வழிபாடும் தோன்றிய நிலையில் இயற்கையைக் கடவுளாகப் போற்றினான். எனவே இயற்கை சார்ந்த மெய்யியலே அனைத்து மெய்யியலுக்கும் அடித்தளமாக அமைகிறது எனலாம். கம்பராமாயணத்தில்,மருத நில மாட்சி, உழவு, நாட்டு வளம், நீர் வளம், நில வளம் ஆகியன இயற்கையைப் போற்றும் விதமாக அமைகின்றன. சான்றுகளாக,

தண்டலை மயில்கள் ஆட தாமரை விளக்கம் தாங்க
கொண்டல்கள் முழவின் ஏங்க குவளை கண் விழித்து நோக்க
தெண்திரை எழினி காட்ட தேம் பிழி மகர யாழின்
வண்டுகள் இனிது பாட மருதம் வீற்றிருக்கும் மாதோ. (4)

விதியினை நகுவன அயில் விழி பிடியின்
கதியினை நகுவன அவர் நடை கமலப்
பொதியினை நகுவன புணர்முலை கலைவாழ்
மதியினை நகுவன வனிதையர் வதனம். (44)

என வருவனவற்றைக் காட்டலாம். மேற்சொன்ன பாடல்கள் வழி மாந்தர் இயற்கையோடு இயைந்த வாழ்க்கை வாழ வேண்டும் என்ற மெய்யியல் கம்பரால் வலியுறுத்தப்படுவதை உணரலாம். மேலும் கம்பர் பல்வேறு இடங்களில் திங்கள் வான், ஞாயிறு, மழை என இயற்கையின் பல்வேறு பரிமாணங்களைப் புகழ்ந்துரைக்கிறார்.

மெய்யியலும் கம்பனின் கதை மாந்தரும்

வாழ்வியல் குறித்த மெய்யியல் கருத்துருக்களாக கம்பன் ஒவ்வொரு பாத்திரத்தையும் படைத்துக்காட்டுகிறான். சான்றுகளாக,

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும் (50) - இராமன்

பெண்ணின் பெருந்தக்க யாவுள கற்பென்னும்
திண்மை உண்டாகப் பெறின் (54) - சீதை

கொன்றன்ன இன்னா செயினும் அவர்செய்த
ஒன்றுநன் றுள்ளக் கெடும் (109) - கும்பகர்ணன்

எளிதென இல்லிறப்பான் எய்துமெஞ் ஞான்றும்
விளியாது நிற்கும் பழி (145) - இராவணன்

எண்ணிய எண்ணியாங் கெய்துப எண்ணியார்
திண்ணிய ராகப் பெறின் (666) - மந்தரை

சொலல்வல்லன் சோர்விலன் அஞ்சான் அவனை
இகல்வெல்லல் யார்க்கும் அரிது (647) - அனுமன்

என வருவனவற்றைக்காட்டலாம். இப்படி ஒவ்வொரு கதைமாந்தரையும் வாழ்வியலின் மெய்யியல் கோட்பாடுகள் ஒவ்வொன்றின்படி சிறப்பாக/ குறிக்கோள் மனிதராக/குறியீடாகவே கம்பன் படைத்துள்ளான் என்பது நுண்ணிதின் ஆய்ந்தால் உணரலாம்.

இருள்சேர் இரு வினை

மெய்யியலில் பொதுவாக வினையை நல்வினை, தீவினை என்று பிரிப்பர். கடவுள்/கடவுள் மறுப்புச் சமயங்களும் வினைக்கொள்கையை ஏற்றுக் கொள்கின்றன. தொல்வினை- இறந்தகால வினைகள் (சஞ்சிதம்), நிகழ்வினை-நிகழ்கால வினைகள்(பிராரப்தம்), வருவினை-எதிர்கால வினைகள்(ஆகாமியம்) என்று கால அடிப்படையில் வினையை மூன்றாகப் பகுத்துக்கூறுவர். இவ்விரு வினைகளுமே பிறப்பிற்கு அடிப்படையாக விளங்குவன.

இவையிரண்டுமே ஆணவம் என்னும் இருள்மலத்தால் உண்டாகும். எனவே நல்வினை மற்றும் தீவினை இரண்டையும் சம்மாகப் பார்க்கும் பக்குவநிலையே இருவினையொப்பு என்று மெய்யியலில் அழைக்கப்படுகிறது. இதனைத் திருவள்ளுவர்,

இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு 5

என்கிறார். எனவே ஞானத்தை உணர்ந்தவர்கள் கேடும் ஆக்கமும் சமம் எனக்கருதுவர். இம்மெய்ப்பொருள் கோட்பாடு கம்பராமாயணத்தில் இராமன் வாயிலாகத் தெரிவிக்கப்படுகிறது. முதல்நாள் இரவு இராமனுக்கு அரசாட்சி என்று தயரதனால் தெரிவிக்கப்பட்டபோதும், மறுநாள் வைகறையில் அரசாட்சி பரதனுக்கும் காடுறை வாழ்க்கை உமக்கும் எனத் தெரிவிக்கப்பட்டபோதும் இராமன் இரண்டையும் சமமாகவே ஏற்றுக்கொண்டான் என்பதன் வாயிலாக இருவினையொப்பை, கம்பர் காட்டுகிறார். சான்றாக,

மெய்த் திருப்பதம் மேவு என்ற போதினும்
இத்திருத் துறந்து ஏகு என்ற போதினும்

சித்திரத்தின் அலர்ந்த செந்தாமரை
ஒத்திருக்கும் முகத்தினை உன்னுவாள் (.20)

எனவரும் பாடலைக்காட்டலாம்.

ஆன்மாவிற்குள் வேறுபாடுகள் இல்லை

மெய்யியலில் ஆன்மா எனப்படும் உயிர் குறித்துப் பேசும்போது, உயிர் ஒரு நுண்பொருள், ஆண், பெண் என்ற வேறுபாடுகளற்றது, விலங்கினம், பறவையினம், மனிதன் என்ற தன்மைகளற்றது என்று குறிப்பிடுவர். இதை உணர்ந்தவர்கள் ஆன்மநேய ஒருமைப்பாட்டை விரும்புவர். வள்ளுவர் இதனை ரிதின் நோய் தந்நோய் போல் என்று குறிப்பிடுவார். கம்பன் இம்மெய்ப்பொருட்கருத்தியலை,

குகனொடும் ஐவர் ஆனோம் முன்பு பின் குன்று சூழ்வான்
மகனொடும் அறுவர் ஆனோம் எம்முழை அன்பின் வந்த
அகனமர் காதல் ஐய நின்னொடும் எழுவர் ஆனோம்
புகலருங் கானம் தந்து புதல்வரால் பொலிந்தான் நுந்தை (144)

என்ற பாடல் வழி, மனிதனாகப் பிறந்த இராமன் காடுறை குகனையும், விலங்கினச் சுக்ரீவனையும், அரக்கர் குல வீடணனையும் தம்பிகளாக ஏற்கும் தன்மைச் சுட்டுமிடத்தில் விளக்குகிறார். மேலும் சடாயு எனும் பறவை இறந்தபோது ஒரு தந்தைக்கு மகன் செய்யும் ஈமக்கிரியைகளை அப்பறவைக்கு இராமன் செய்தான் என்று குறிப்பிடும் இடமும், சாம்பவான் எனும் கரடி இனத்தைச்சார்ந்த விலங்கை மதிமிகு அமைச்சராகக் கொண்ட தன்மையும் மேற்சொன்ன மெய்யியலை விளக்கும்.

நிலையாமை

மெய்யியலின் மையமாக விளங்கும் கொள்கை நிலையாமையாகும். இதை, அன்றறிவாம் என்னாது அறம் செய்க என்பார் வள்ளுவர். எனவே நாளை என்பது உறுதியல்ல என்பதும், யாக்கை, அழகு, செல்வம் அனைத்தும் நிலையில்லை என்பதும் உணரப்படும். நிலையாமையை உணர்த்தும் காஞ்சித்திணை என்ற தனித்துறையே புறத்திணையில் உண்டு. கம்பராமாயணத்தில்,

நிலையிலா உலகினிடை நிற்பனவும்... (2)

இன்றுளர் நாளை மாள்வர்...
நிலையிலா வாழ்வை இன்னும் நினைவெனோ ... (இரா.சோ.ப.47)

எனவருமிடங்கள் நிலையாமையை உணர்த்துவனவாகக் கருதலாம்.

அறம் வெல்லும்

தருமத்தின் வாழ்வுதனை சூது கவ்வும் தருமம் மறுபடியும் வெல்லும் என்பார் பாரதியார். அது போல படைவலியும், துணைவலியும், மாபெரும் ஆற்றலும், ஆய கலைகள் அறுபத்து நான்கும், சிவபெருமானிடத்து பெற்ற வரமும், வாளும், கும்பகர்ணன், இந்திரசித்து, அக்ககுமாரன் முதலிய பெரு வீரர்களும் கொண்டிருந்த இராவணனிடத்தில் அறம் இல்லாத காரணத்தினால் தோற்றொழிந்தான் என்ற கருத்தை கம்பர் முன்வைக்கிறார். இக்கருத்து அறமே வெல்லும் பாவம் தோற்கும் என்ற மெய்யியலை அடியொற்றியதே எனலாம். இராவணனின் சிறப்பைக் குறிக்கும் போது,

வாரணம் பொருத மார்பும் வரையினை எடுத்த தோளும்
நாரத முனிவற்கு ஏற்ப நயம்பட உரைத்த நாவும்
தார்அணி மவுலி பத்தும் சங்கரன் கொடுத்த வாளும்
வீரமும் களத்தே போட்டு வெறுங் கையே மீண்டு போனான்.(கு.வ.ப.1)

என்பார். இவ்வளவு உயர்வு பெற்ற இராவணனிடத்தில் பிறன் மனை நோக்காத பேராண்மையில்லையாதலால் அழிந்தான். இதையே வாலி வதைப் படலத்திலும் காணமுடிகிறது.

ஊழ்

மெய்யியலின் நுட்பமான கருத்தியல் ஊழ் என்பதாகும். தமிழில் ஆகூழ்(அதிட்டம்), போகூழ்(துரதிட்டம்) எனப் பகுத்துக்கூறுவர். இவ்வுலகில் மனிதர்கள் ஊழ் காரணமாகவே பிறக்கின்றனர்/ அவர்களது வாழ்க்கை நிலை அமைகிறது என்பது தொன்றுதொட்டு நம்பப்படும் ஒரு மரபு. இக்கருத்தியலை வள்ளுவரும் தனி அதிகாரத்தின் வா-யிலாகத் தெரிவிக்கின்றார். ஒருவருக்கு எவ்வளவுதான் செல்வ வளம், இன்னபிற கிடைப்பினும் அனுபவிக்கும் ஊழ் இருந்தால்தான் துய்க்கமுடியும். இக்கருத்தை,

வகுத்தான் வகுத்த வகையல்லால் கோடி
தொகுத்தார்க்கும் துய்த்தல் அரிது (377)

என்ற குறள் குறிப்பிடும். இக்கருத்தியலின் அடிப்படையை கம்பராமாயணத்தில், கைகேயி இராமனுக்குக் கிடைக்கவிருந்த அரசாட்சியைத் தம்மகனாகிய பரதனுக்குப் பெற்றுத்தந்தும் பரதனால் அரசாட்சியை ஏற்க இயலவில்லை. இதனைக் கம்பர்,

மறையின் கேள்வற்கு மன் இளந்த தோன்றல் பின்
முறையின் நீங்கி முதுநிலம் கொள்கிலேன் (தி.சூ.ப.4)

என்று பதிகிறார்.

நிறைவாக...

கம்பராமாயணம் தமிழரின் பல்வேறு மெய்யியல் கோட்பாடுகளை உள்வாங்கி எளிமையாக, கதையின் வாயிலாகவும், பாத்திரங்களின் குணநலன்களின் வாயிலாகவும், எடுத்துரைப்பு முறையின் வாயிலாகவும் வெளிப்படுத்தும் மெய்யியல் இலக்கியமாக உள்ளது என்றால் அது மிகையில்லை. தமிழரின் உயரிய அறக்கோட்பாடுகள், வாழ்வியல் உண்மைகள், அறிவியல் சார்ந்த சிந்தனைகள், வீரம், புகழ், பொறையுடைமை, அன்பு, காதல், பக்தி, நடுவு நிலைமை, அரசியல், பொருளாதாரம், ஆன்ம நேய ஒருமைப்பாட்டுணர்வு ஆகிய அனைத்து விழுமியங்களும் மெய்யியல் என்றே கொள்ளப்படும். இவையனைத்தையும் ஒருங்கே கம்பராமாயணத்துள் நாம் பரக்கக்காண முடிகிறது. பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்னுமாப்போலே ஈண்டு சில சான்றுகளே எடுத்தாளப்பெற்றன. இவை தவிர கம்பனில் சமய மெய்யியல், பொதுவுடைமை மெய்யியல், மகளிர் சார்ந்த மெய்யியல், சமூக மெய்யியல், வேளாண் மெய்யியல், சூழலியல் மெய்யியல், வானியல் மெய்யியல் என்று தனித்தனியாகப் பார்க்க முடியும். விரிக்கின் பெருகும் என அஞ்சி இக்கட்டுரை நிறைவடைகிறது.

கம்பனில் இறையுணர்வு

முனைவர் **கூ. முத்தையன்**
தமிழ்த்துறை, தேசியக்கல்லூரி, திருச்சி.

மனிதனுக்கு மட்டுமே உள்ள சிறப்பியல்புகளில் இறையுணர்வு குறிப்பிடத்தக்கது. விலங்குகளுக்கு இரையுணர்வு உண்டு. ஆனால் இறையுணர்வு கிடையாது. மனிதன் அடுத்த பிறவியில் தெய்வமாக வேண்டும் மனிதன் கீழான பிறவிகளை அடைதல் கூடாது. எல்லாம் பிறப்பும் பிறந்து இளைத்த மனிதன் சிவமாதல் வேண்டும். இதற்காக நமது சான்றோர்கள் அரும்பாடுபட்டுள்ளனர். அந்த அரிய முயற்சிகளில் இலக்கியம் என்பது குறிப்பிடத்தக்கது. தமிழகத்தின் மிகப் பெரிய இலக்கியங்களில் கம்பராமாயணம் தனித்தன்மை வாய்ந்ததாக மிளிர்கின்றது. அது மனிதனைத் தெய்வமாக மாற்ற வல்லது. வையத்துள் வாழ்வாங்கு வாழ்விக்க வல்லது. அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நான்கு உறுதிப் பொருள்களையும் தெளிவாக எடுத்தியம்புகின்றது. எந்தக் காலத்திற்கும் தேவையான செய்திகள் அதில் இடம்பெற்றுள்ளது. எந்தச் சமயத்து மக்களும் ஏற்றுக் கொள்ளக் கூடிய பாங்கான கருத்துக்களைத் தன்னகத்தே கொண்டுள்ளது. மக்களுக்கு இறைவனைப் பற்றிய உண்மைகளைப் போதிப்பதால் மனிதன் தீய எண்ணங்களை மாற்றிக் கொள்கிறான். நல்ல நெறியில் வாழ முயற்சிக்கின்றான். கம்பர் வாய்ப்புக் கிடைக்கும் போதெல்லாம் இறைவனைப் பற்றி எடுத்துரைக்கின்றார். இறை தொடர்பான உதாரணங்களைக் கையாளுகின்றார். கம்பர் வைணவத்தைப் பாடினாலும் சிவபெருமானையே அவர் முதலில் வைத்துப் பாடுகின்றார். மும்மூர்த்திகளைப் பற்றிக் கூறும் போது சிவபெருமானையே முதலில் குறிப்பிடுகின்றார். இது அவருடைய பரந்த உள்ளத்தையும் உண்மைக் கவித்துவத்தையும் எடுத்துக்காட்டுகின்றது. உண்மைக் கவிஞர் அல்லது எதார்த்தக் கவிஞர்களே உலகில் நிலைத்த புகழைப் பெறுவர் என்பதற்குக் கம்பர் எடுத்துக்காட்டாகத் திகழ்கின்றார்.

சிவபெருமான் யாராலும் எய்துதற்கு அரியவராக உள்ளார். சென்று அடைய முடியாத திருவை உடையவர். பிரமன் விஷ்ணுவாலும் அடைதற்கு அரிதானவர். ஆனால் அன்பு செய்பவர்களுக்கு மிகவும் எளிமையானவர் இக்கருத்தை ஓர் உதாரணத்தில் கம்பர் இனிது விளக்குகின்றார். சித்தாந்த உதாரணம் கூறுகின்ற புலவர்களில் கம்பர் தனி இடம் பெறுகின்றார்.

அயோத்தி மாநகரத்தில் மிக உணர்ந்த மதில்கள் இருக்கின்றன. அந்த மதிலைப் பற்றி வருணிக்கும் போது. மிக அகன்று பிடப்பதால் வேதத்தையும். விண்ணாள விளங்குவதால் தேவர்களையும். வலிய பெரிகள் (எந்திரங்கள்) அடங்கியுள்ளமையால் முனிவர்களையும் காவலில் துர்க்கை அம்மையையும். சூலம் விளங்குவதால் காளியையும். நிகர்த்துள்ளது. இப்படி ஐந்து உதாரணங்களை அடுக்கிய கம்பர் ஆறாவதாக யாராலும் எய்துவதற்கு அரிதாக இருப்பதால் சிவபெருமானையும் ஒத்து விளங்குகின்றது என்று உவமை செய்திருக்கின்றார்.

மேவரும் உணர்வு முடிவிலா மையினால்
வேதமும் ஒக்கும்விண் புகலால்
தேவரும் ஒக்கும் முனிவரும் ஒக்கும்
திண்பெரி அடக்கிய செயலால்
காவலிற் கலையூர் கன்னியை ஒக்கும்
சூலத்தாற் காளியை ஒக்கும்
யாவரும் தன்னை எய்துதற் கரிய
தன்மையால் ஈசனை ஒக்கும் (9)

மிதிலாபுரியில் இராம லக்குமணரோடு விசுவாமித்திரர் சென்று தங்கியிருக்கின்றார். மறுநாள் பொழுது விடிகின்றது ஆதித்தன் உதயமாகின்றான். அப்போது அந்தக் காட்சியை வருணிக்கின்ற கம்பர் சூரியனைச் சிவனாக வருணிக்கின்றார்.

அதிகாலையில் பூவுலகில் வேதம் முழங்குகின்றன. விண்ண வர்களும் வேதியர்களும் கரம் குவித்து வணங்குகின்றனர். கடலானது முழவு போல முழங்குகின்றது. வானமாகிய பெரிய அரங்கிலே சிவபெருமான் சடை விரித்து ஆடுவது போல ஆதித்தன் விரித்து ஆடுவது போல ஆதித்தன் தனது சிவந்த கிரணங்களை விரித்துப் புறப்படுகின்றான். சூரியன் சிவபெருமானுடைய அம்சம் என்பதும் நமது தமிழர்கள் சூரிய வழிபாடு நீண்டகாலம் செய்து வந்த காரணத்தையும் இப்பாடலில் கம்பர் இனிது விளக்குகின்றார்.

சூரிய மண்டலத்தின் மத்தியில் சிவபெருமான் வீற்றிருக்கின்றார் என்ற வேத புராண உண்மையைத் தொடர்புபடுத்திய கம்பரின் ஆழ்ந்த புலமை வணங்கற்குரியது. சூரிய மண்டலத்தின் மத்தியில் சிவபெருமான் வீற்றிருத்தலைக் கந்தபுராணமும் விளம்புகின்றது.

எண்ணரிய மறையினோடு கின்னரர்கள் இசைபாட உலகம் ஏத்த
விண்ணவரும் முனிவரரும் வேதியரும்கரம்குவிப்ப வேலை என்னும்
மண்ணுமணி முழவதிர வானரங்கில் நடம்புரிவான் இரவி யான
கண்ணுதல்வா னவன்கனகச் சடைவிரிந்தால் எனவிரிந்த கதிர்கள் எல்லாம் (153)

மேலும் இராவணன் படைகளை எல்லாம் இழந்து நிற்கும் போது தனியனாக நின்றான். அப்போது ஊழிக்காலத்தில் சூரியன் முதலாக அனைத்தும் அழிந்து. எல்லா உயிர்களையும் தனக்குள்ளே ஒடுக்கிக் கொண்டு தான் ஒருவனாகவே நிற்கும் சிவபெருமானைப் போல நிற்கின்றான். தனியனாக நின்றான் என்ற உதாரணம் பாராட்டற்குரியது.

இறுதியாம் காலந்தன்னில் ஒருவனே சிவஞானசித்தியார்

மேற்கண்டவாறு கம்பர் சைவ சம்பந்தமாகவும் வைணவ சம்பந்த மாகவும் உதாரணங்களை அமைத்து மக்களுக்கு இறையுணர்வை ஊட்டுகின்றார். இதனால் மக்கள் சித்தாந்த உண்மைகளை எளிதாகப் புரிந்து கொள்கின்றனர். இத்தகைய அரிய குறிப்புக்களை எல்லாம் நாம் அறிந்து இன்புறுதல் கடமையாகும்.

கம்பனும் இறையியலும்

டாக்டர் **ந.செல்லக்கிருஷ்ணன்,**
சிங்கப்பூர்

1.0 கம்பனும் இறையியலும்

கம்பராமாயணம் மிகச்சிறந்த இலக்கிய நூலாக அமைந்திருப்பினும் அது அடிப்படையில் ஒரு சமயநூல் என்பது மறுக்க முடியாத உண்மையாகும். கம்பன் தனது காவியத்திற்கு 'இராமாவதாரம்' என்றே பெயரிட்டுள்ளான். சமயநூலாக அமைந்திருப்பினும் மலிவான சமயப் பிரச்சாரங்களோ, சமயக் கருத்துத் திணிப்புகளோ அந்நூலில் பெரும்பாலும் காணக் கிடைப்பதில்லை. ஆனால், கம்பன் தான் கூற வருகின்ற இறையியல் கருத்துகளை அழுத்தமாகத் தனது நூலில் பதித்துள்ளான் என்பதைப் பல இடங்களில் உணர முடிகின்றது. அம்முறையில், கம்பனின் இறையியல் கொள்கையை ஆராயும் நோக்கில் இவ்வாய்வுக் கட்டுரை அமைகின்றது.

1.1 அலகிலா விளையாட்டுடையான்

இறைவன், உலகின் பொருள் மற்றும் அறிவுக் காரணனாக இருந்து உலகைப் படைப்பதுடன் அதனைக் காப்பவனும் ஊழிக்காலத்தில் அனைத்தையும் உள்வாங்குபவனும் ஆவான் என்பது 'இறைவன்' குறித்து 'விசிஷ்டாத்வைதம்' கூறும் கொள்கையாகும்.

'இறைவன் ஒருவனே எல்லாம் அறிந்த எல்லாம் வல்ல, எண்ணியவை நடத்தும் ஆற்றல் பெற்றவன். லீலை செய்யத் தீர்மானித்து நான் பலவாகுவேன் என்று பிரபஞ்சமாக வடிவெடுத்து அதில் அறிவுள்ள அறிவற்ற ஆத்ம அநாத்மப் பொருள்கள் அநேக சித்திர விசித்திரங்களைச் செய்தும் ஆகாயம் முதலான பூதங்களைப் படைத்தும் இந்தப் பிரக்ருதியில் உண்டான உயிருள்ள உயிரற்ற அனைத்துப் பொருள்களிலும் உள்ளே நுழைந்திருக்கின்றான்' (ஸ்வாமி (உ.ஆ), வேதார்த்த ஸங்க்ரஹம், ப. 26.). என்பது, 'வேதார்த்த ஸங்க்ரஹத்தில்' சாந்தோக்ய உபநிடதத்திற்கு இராமானுசர் கூறும் உரையாகும்.

வேதார்த்த ஸங்க்ரஹம் கூறும் இந்த இறைத்தத்துவத்தைக் கம்பன் தனது 'இந்திரன் துதியில்' முழுமையாகக் கையாண்டுள்ளான்.

ஒன்று ஆகி மூலத்து உருவம் பல ஆகி, உணர்வும் உயிரும் ரிது ஆகி, ஊழி
சென்று ஆசுறும் காலத்து அந்நிலையது ஆகி, திறத்து உலகம்தான் ஆகி,
செஞ்செவே நின்ற நன்று ஆய ஞானத் தனிக்கொழுந்தே (2616)

என்பது அப்பாடல்.

'அகில புவந ஜந்ம ஸ்தேம பங்காதி லீலே' (க. ஸ்ரீதரன் (உ.ஆ). ஸ்ரீபாஷ்யம் (மின் புத்தகம்),ப.26.)

என்பது இராமானுசரின் ஸ்ரீபாஷ்ய மங்கள சுலோகத்தின் முதல் அடி.

உலகம் யாவையும் தாம் உளவாக்கலும்
நிலைபெறுத்தலும் நீக்கலும், நீங்கலா
அலகுஇலா விளையாட்டு உடையார் - அவர்
தலைவர், அன்னவர்க்கே சரண் நாங்களே

(நடையில் நின்று உயர் நாயகன் தோற்றத்தின், இடை நிகழ்ந்த இராமாவதாரம் பேர்த்தொடை நிரம்பிய தோம் அறு மாக்கதை'.பாடல்11) என்னும் கம்பராமாயணப் பாயிரத்தின் இம்முதல் பாடல். மேற்கண்ட ஸ்ரீபாஷ்ய மங்கள சுலோகத்தின் முதல் அடியின் மறு வடிவமாகவே இருப்பது மிகவும் குறிப்பிடத்தக்கது.

'அகில புவந' - உலகம் யாவையும், 'ஜந்ம ஸ்தேம பங்காதி' - உள ஆக்கலும், நிலை பெறுத்தலும், நீக்கலும் நீங்கலா', 'லீலே' - விளையாட்டு உடையாய் என்று அமைந்த கம்பனின் நான்கு அடிகள் இராமானுசரின் ஓர் அடிக்குப் பொருளாகி நிற்கின்றன. மேலும்,

'யதோவா இமாநி பூதாநி ஜாயந்தே, யேந ஜாதாநி ஜீவந்தி, யத்ப்ரயந்தி அபிஸம் விசந்தி

தத் விஜிஜ் ஞாஸ்வ தத் ப்ரஹ்மேதி'

(தைத்திரீயோபநிஷத்து, 'பிருகுவல்லி', 1.'எது எல்லாவற்றையும் படைக்கின்றதோ - எது எல்லாவற்றையும் காக்கின்றதோ - எது எல்லாவற்றையும் தன்னுள்ளே ஒடுக்குகின்றதோ - அதுவே பிரம்மம் - அதுவே முழுமுதல்')

என்னும் தைத்ரீய உபநிடதமும், கம்பனின் இக்கடவுள் வாழ்த்துச் செய்யுளோடு ஒப்பிடத்தக்கது.

'திருமாலே பரம்பொருள். அவனே அண்டங்கள் யாவற்றிற்கும்

ஆதி. அவனே அனைத்தையும் உண்டாக்குகின்றான்; காக்கின்றான்; துடைக்கின்றான். அவனே தனித்தலைவன்' .

(மஹாநாராயணோபநிஷதம், 13 -14.

'நாராயண: பரம்ப்ரம்ஹ தத்வம் நாராயண பர:

'நாராயண: ப்ரோ ஜ்யோதிராத்மா: நாராயண பர:')

என்பது வைணவ சமயத்தின் அடிப்படையான மிக முக்கியமான இறையியல் கொள்கை. கம்பன் இந்த இறையியல் கொள்கையின் அடிப்படையிலேயே தனது காவியத்தைச் சமைத்துள்ளான்.

அளப்ப அரும் உலகம் யாவும் அமைத்துக் காத்து அழிக்கின்றான் தன்
உளப்பெரும் தகைமை தன்னால் ஒருவன் என்று உண்மை வேதம்
கிளப்பது கேட்டும் அன்றோ அரவின்மேல் கிடந்து மேல்நாள்
முளைத்த பேர் இராமன் . . . . . .' (9630)

என்னும் இப்பாடலில், 'முத்தொழில் இயற்றுபவன் அரவின்மேல் கண் வளரும் திருமாலே! அவனே பரம்பொருள்! இதுவே வேதம் கூறும் வாய்மை! முத்தொழிலுக்குக் காரணமான அத்திருமாலே இராமன்!' எனக் கம்பன் மிகத் தெளிவாகத் தனது இறையியல் கொள்கையை விரித்துரைக்கின்றான். 'நிகில ஜகதுதய விபவ லய லீலே' (.இராமானுசர், கத்யத்ரயம், சரணாகதி கத்யம்,' சூர்ணை 5.)

என்னும் சரணாகதி கத்யமும், 'லோகாவத் து லீலா கைவல்யம்' (இராமானுசர், ஸ்ரீபாஷ்யம், 2.3.31.) என்னும் பிரம்ம சூத்திர சுலோகமும் 'இறைவனுக்கு உலகப் படைப்பும், காப்பும், அழிப்பும் ஒரு விளையாட்டு' என்று கூறுகின்றன. இக்கருத்தைக் கம்பனும் பின்பற்றி, 'அலகு இலா விளையாட்டு உடையார்' (1), 'இறப்பதே பிறப்பதே எனும் விளையாட்டு இனிது உகந்தாய் (2566), 'வீயாத பெருமாய விளையாட்டு' (2569) என்று, இறைவனின் முத்தொழில்கள் அவனுக்கு ஒரு விளையாட்டு என்று அழுத்தமாகப் பேசுகின்றான்.

1.2 உலகு எலாம் ஈன்று மீளக் கரக்கும் நாயகன்

உலகு ஒடுக்கம் (லயம்), உலகு படைப்பு (சிருஷ்டி) ஆகிய தத்துவங்களை விசிஷ்டாத்வைதம் எடுத்துரைக்கும் போக்கிலேயே கம்பனும் புனைந்துள்ளான்.

'சிருஷ்டிக் காலத்தில் எந்தப் பொருள் எந்தப் பொருளினின்று தோன்றியதோ, அந்தக் காரியப் பொருள் அந்தக் காரணப் பொருளிலே மகா பிரளய காலத்தில் ஒடுங்கும். பிரளயத்தில் நிலம் நீரிலும், நீர் தீயிலும், தீ காற்றிலும், காற்று ஒலியுடனும் ஒடுங்கும். ஞானேந்திரியங்களும், கர்மேந்திரியங்களும், மனமும் தம்தம் உற்பத்தித் தானமான அகங்காரத்தில் லயிக்கும். அகங்காரம் மஹத்தில் (மான்) லயிக்க, அதுவும் புருஷனும் (சித்) பரமாத்மாவில் லயிக்க, பரமாத்மா ஒருவனே லயம் இன்றி (ஒடுங்குதல் இன்றி), அழிவு இன்றி நிற்கின்றான்.' (வை.மு. கோபாலகிருஷ்ணமாச்சாரியார், (உ.ஆ), கம்பராமாயணம் யுத்த காண்டம் இரண்டாம்பகுதி, ப.95.)என்று வைணவ தத்துவம் உலக ஒடுக்கம் பற்றியும், உலகப் படைப்புப் பற்றியும் கூறுகின்றது. 'உலகு, இறைவனால் ஒடுங்கும் இந்நிலையை, உயிர்களும் உலகமும் எழுதிய திரைச்சீலையைச் சுருட்டி வைப்பது போன்றது 'லயம்' என்றும் அதனை விரித்து வைப்பது போன்றது 'சிருஷ்டி' என்றும்' (அமுதன், கம்பர் காட்டும் வைணவப் பேருலகம், ப.53.) இத் தத்துவம் விளக்கப்படுகின்றது.

ஆதிய அமைதியின் இறுதி, ஐம்பெரும் பூதமும்
வெளி ஒழித்து எவையும் புக்கபின்,
நாதன் அவ் அகன் புனல் நல்கி நண்ண அருஞ் சோதி ஆம்
தன்மையின் துயிறல் மேயினான் (2494) என்றும்,

தோற்றம் என்பது ஒன்று உனக்கு இல்லை நின் கணே தோற்றும்
ஆற்றல் சால் முதல் பகுதி மற்று அதனுள் ஆம் பண்பால்
காற்றை முன்னுடைப் பூதங்கள் அவை சென்று கடைக்கால்
வீற்று வீற்று வீவுறும் நீ என்றும் விளியாய் (10057)

என்றும் கம்பன் கூறும் இப்பாடல்கள் விசிஷ்டாத்வைதம் கூறும் லய தத்துவத்தை (உலகு ஒடுக்கம்) அப்படியே முழுவதுமாய்ப் பேசுகின்றன. இவ்வாறு ஒடுக்கப்பட்ட இவ்வுலகம் திருமாலால் மீண்டும் படைக்கப்படுகின்ற தன்மையைக் கூற வரும் கம்பன், 'இரக்கம் வந்து எதிர்ந்த காலத்து உலகு எலாம் ஈன்று மீளக் கரக்கும் நாயகன்' (6650) எனச் சிருஷ்டி தத்துவத்தை (உலகு தோற்றம்) எடுத்துரைப்பான். 'பிரளய காலத்தில் கைகால் முதலிய உறுப்பு அற்று உரை மெழுக்கில் பொன்போல மூலப் பிரகிருதியில் அழுந்தியிருக்கின்ற ஆன்மாக்களைக் கண்டு திருமாலான சர்வேசுவரன் மிக இரக்கம் கொண்டு இவைகள்

சிறகொடிந்த பட்சி போல இங்ஙனம் கிடக்கவொண்ணாது கர சரணாதி அவயவங்களைப் படைத்தருளுவான் என்பது வைணவத் தத்துவம்' (வை.மு. கோபாலகிருஷ்ணமாச்சாரியார், (உ.ஆ), மு.கா.நூ, ப.322.) இதனைக் கருத்தில் கொண்டே கம்பன், 'இரக்கம் வந்து எதிர்ந்த காலத்து உலகு எலாம் ஈன்று' என்று கூறுகின்றான். மேலும் படைப்புத் தொழில், தொகுதி படைப்பு (ஸமஷ்டி ஸ்ருஷ்டி) என்றும், பகுதி படைப்பு (வியஷ்டி ஸ்ருஷ்டி) என்றும் இரு வகைப்படுவதாக வைணவ சமயம் கூறுகின்றது. 'பூதங்களில் கூடியிருக்கும் தன்மை, தொகுதி படைப்பு என்றும் நான்முகனை உந்தியில் படைத்து அவன் மூலமாகச் செய்யும் படைப்பு, பகுதி படைப்பு என்றும் இறைவனின் 'சிருஷ்டி' விளக்கப்படுகின்றது'.(தெ.ஞானசுந்தரம், வைணவ உரை வளம், ப.284)

'நிற்கும் நெடு நீத்த நீரில் முளைத்தெழுந்த
மொக்குளே போல, முரண் இற்ற அண்டங்கள்,
ஒக்க உயர்ந்து, உன்னுள்ளே தோன்றி ஒளிக்கின்ற
பக்கம் அறிதற்கு எளிதோ? பரம்பரனே! (3688)

என்றும், 'பல் ஆயிர கோடி அண்டம், பனிக்கடலுள் நில்லாத மொக்குகள் என, தோன்றுமால் நின்னுழையே' (6346) என்றும், திருமால் பூதங்களில் கூடியிருந்து செய்யும் தொகுதிப் படைப்பைக் (சமஷ்டி ஸ்ருஷ்டி) கம்பன் கூறுகின்றான்.

ஏற்ற இத்தன்மையின், அமரர்க்கு இன் அமுது
ஊற்றுடைக் கடல் வண்ணன் உந்தி உந்திய
நூற்று இதழ்க் கமலத்தில், நொய்தின் யாவையும்
தோற்றுவித்து உதவிட, முதல்வன் தோன்றினான் (2495)

என்று, திருமால் நான்முகனை உந்தியில் படைத்து அவன் மூலமாகச் செய்யும் பகுதி படைப்பைக் (வியஷ்டி படைப்பு) கம்பன் கூறுகின்றான்.

1.3 தோய்ந்தும் தோயாதவன்

இறைவன் எல்லாப் பொருள்களிலும் நிறைந்திருந்தாலும் அப்பொருள் களின் கர்மவினைகள் வசப்படாதவன் என்பது வைணவ சமயத்தின் உயிர் நாடிக் கொள்கைகளில் ஒன்றாகும். 'அகங்காரம், கோபம், பேராசை போன்ற கிலேசங்கள், புண்ணியம் பாவம் ஆகிய கர்ம வினைகள் முதலிய தோஷங்களால் இறைவன் தொடப்படாதவன். (இராமானுசர், ஸ்ரீபாஷ்யம்-ஸமந்நவ அத்தியாயம் 1-2-1) உயிரற்ற அசேதனப்

பொருள்களில் காணப்படும் பரிமாணங்கள் மற்றும் உயிர்களின் அறியாமை போன்ற தோஷங்களாலும் தொடப்படாதவன்' என்று இராமானுசர் தமது ஸ்ரீபாஷ்யத்தில் இதனை விளக்குகின்றார். மீன், உப்புக் கடலில் வாழ்ந்தாலும், மீனைச் சமைத்துண்பவர்கள் மீனுக்கு உப்பிட்டே உண்பர் என்று இக்கருத்து மேலும் விளக்கப்படுகின்றது.

இறைவன் எல்லாப் பொருள்களிலும் அந்தர்யாமியாய்க் கலந்திருந்தாலும் அவற்றின் கர்ம வினைகளில் வசப்படாது தனியே நிற்கும் இத்தன்மையைக் கம்பனும் பல பாடல்களில் கூறுகின்றான். 'தோய்ந்தும் பொருள் அனைத்தும் தோயாது நின்ற சுடரே!' (2613) என்றும், 'உள் உளன்; புறத்து உளன்; ஒன்றும் நண்ணலான்' (6264) என்றும், 'அண்டா! ஐயா! எங்கள் பொருட்டால் அயர்கின்றாய் உண்டோ, உன் பால் துன்பு?' (8661) என்றும், 'துன்ப விளையாட்டு இதுவேயும், உனைத் தொடர்பு இன்மை, இன்ப விளையாட்டு ஆம்; எனினும், அறியாதே(ம்)' (8666) என்றும், வைணவம் கூறும் இந்த அந்தர்யாமி தத்துவத்தை இராமன் மீது ஏற்றி அவன் கர்ம வினைகளுக்கு வசப்படாது நிற்கும் தன்மையைக் கம்பன் வியக்கின்றான். இரணியன் வதைப்படலத்தைக் கம்பன் வலியப் புகுத்தியது இத்தத்துவத்தை விளக்கவேயாகும் என்பது குறிப்பிடத் தக்கது.

'சிலந்தியானது தனக்கு யாதொரு விகாரமும் (பாதிப்பும்) இன்றி நூலை உண்டாக்குகின்றது. பிறகு தான் உண்டாக்கிய நூலைத் தானே உட்கொள்கிறது. அது போலவே, சர்வேஸ்வரன் தனது சுயரூபத்துக்கு விகாரமின்றி அண்டங்களைப் படைத்து மீண்டும் அவற்றை விழுங்குகின்றான்' (இராமானுசர், ஸ்ரீபாஷ்யம், ஸமந்நவ அத்தியாயம் 1-4-28) என்று, இராமானுசர் தமது ஸ்ரீபாஷ்ய உரையில் முண்டக உபநிஷத்தை மேற்கோளாகக் காட்டி, இறைவனின் தோய்ந்தும் தோயாத தன்மையை விளக்குகின்றார்.

இராமானுசர் சிலந்தியை வைத்து இறைவனின் விகாரமற்ற தன்மையை விளக்குவது போலக் கம்பனும் தனது பாடல் ஒன்றில் இக்கருத்தினைச் சிலந்தியின் வாயிலாகவே விளக்குகின்றான்.

அண்டம் பலவும், அனைத்து உயிரும், அகத்தும் புறத்தும் உள ஆக்கி,
உண்டும் உமிழ்ந்தும், அளந்தும் இடந்தும், உள்ளும் புறத்தும் உளை ஆகிக்
கொண்டு, சிலம்பி தன் வாயின் கூர்நூல் இயையக் கூடு இயற்றி,
பண்டும் இன்றும் அமைக்கின்ற படியை ஒருவாய் - பரமேட்டி! (8665)

என்னும் கம்பனின் இப்பாடல், ஸ்ரீபாஷ்யத்தில் இராமானுசர் விளக்கும் வழி நின்று சிலந்திப் பூச்சியை உவமையாக்கிக் கர்ம வினைகள் பற்றாத இறைவனைப் பேசுவது மிகவும் குறிப்பிடத்தக்கது.

1.4. மூவரில் முதல்வன்

பரத்துவ நிலையில் 'பரவாசுதேவன்' என்று கூறப்படும் திருமால் வியூக நிலையில் பிரத்யும்நன் (பிரம்மா), அநிருத்தன் (விஷ்ணு) சிவன் (ஸங்கர்ஷணன்) ஆகிய மூவருக்கும் ஆத்மாவாக விளங்கி அவர்களின் படைத்தல், காத்தல், அழித்தல் தொழில்களை வழி நடத்துகின்றான் என்பது வைணவத் தத்துவம். இதனை, 'மூவர் காரியம் திருத்தும் முதல்வனை' (பெரியாழ்வார், பெரியாழ்வார் திருமொழி 4.4.1) என்பார் பெரியாழ்வார்.

'என் உருக்கொடு இவ் உலகினை ஈனுதி; இடையே, உன் உருக்கொடு புகுந்து நின்று ஓம்புதி; உமைகோன், தன் உருக்கொடு துடைத்தி' (10060)

'எனக்கும், எண்வகை ஒருவற்கும், இமையவர்க்கு இறைவன் தனக்கும், பல்பெரு முனிவர்க்கும் உயிருடன் தழீஇய அனைத்தினுக்கும் நீயே பரம்' (10053) என்று பிரமனும்,

'உன்னை நீ ஒன்றும் உணர்ந்திலை போலுமால், உரவோய்! முன்னை ஆதி ஆம் மூர்த்தி நீ' (10063) என்று சிவனும் இராமன் முன் பேசுவதாகக் கம்பன் பாடல்கள் அமைத்துள்ளான். பிரமனுக்கும் சிவனுக்கும் திருமாலே ஆத்மா - அவர்களுக்கு ஆத்மாவாக நின்று வியூக நிலையில் அவர்களை இயக்குபவன் திருமால். அத்தகைய திருமாலே விபவ நிலையில் இராமனாக அவதரித்தான் என்று மும்மூர்த்தித் தத்துவத்தை மிகத் தெளிவாகக் கூறித் தனது இறையியல் கொள்கையைக் கம்பன் நிலை நாட்டுகின்றான்.

1.5 ஐ அஞ்சு ஆகிய தத்துவன்

இந்த உலகம் 24 தத்துவங்களால் ஆனது என்பது வைணவ சமயக் கொள்கை. ஐந்து பூதங்கள் (நிலம், நீர், தீ, காற்று, வான்) ஐந்து ஞானேந்திரியங்கள் (மெய், வாய், கண், மூக்கு, செவி), ஐந்து கன்மேந்திரியங்கள் (வாக்கு, கை, கால், எருவாய், கருவாய்), ஐந்து தன் மாத்திரைகள் (சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம்) மற்றும் மனம், அகங்காரம், மான் (முக்குணங்கள் சமமாக இல்லாமல் ஏற்றத்தாழ்வுகள் ஏற்பட்டுச் செயல் புரியத் தயாராகும் நிலை) அவ்யக்தம் (அவ்வாறு

முக்குணங்களில் ஏற்படும் ஏற்றத் தாழ்வுகளைக் கொண்டு காரியம் படைக்கும் நிலை), ஆகிய 24 தத்துவங்களால் ஆனது இந்த உலகம். இந்த 24 தத்துவங்களும் அவற்றால் ஆகிய மூலப்பகுதியும் 'அசித்' எனப்படும் 'பிரகிருதியாகும்' 'சித்' எனப்படும் உயிர் 25ஆவது தத்துவமாகும். 'ஈசுவரன்' எனப்படும் இறைவன் 26ஆவது தத்துவமாகி இவற்றை வேறு வேறு உடல்களில் படைத்தும் காத்தும் கரந்தும் விளையாடுகின்றான் என்பதை விசிஷ்டாத்வைத தத்துவம் மேலும் விளக்கும்.

'சித்து என அருமறைச் சிரத்தின் தேறிய தத்துவம் அவன்' (6249) என்றும் 'பகுதி என்று உளது, யாதினும் பழையது, பயந்த விகுதியில் வந்த விளைவு, மற்று அதற்கு மேல் நின்ற புகுதி, யாவர்க்கும் அரிய அப்புருடனும், நீ; இம் மிகுதி உன் பெரு மாயையினால் வந்த வீக்கம்' (10051) என்றும்,

'ஐ-அஞ்சு ஆகிய தத்துவம் தெரிந்து அறிந்து அவற்றின் மெய் எஞ் சா வகை மேல்நின்ற நினக்கு மேல் யாதும் பொய் எஞ்சா இலது' (10055) என்றும், கம்பன் வைணவ சமயம் கூறும் 25 தத்துவங்களைத் தமது இறையியல் கொள்கைகளாகப் பேசுவது குறிப்பிடத் தக்கது.

1.6 பிறந்தும் பிறவாதவன்

திருமால் உயிர்களின் மீது வைத்த பெருங்கருணையால் யோனிதோறும் பிறந்துழலும் எளிவந்த தன்மையை, 'எந்நின்ற யோனியுமாய் பிறந்தாய்' (நம்மாழ்வார், திருவிருத்தம் 1.) என்று நம்மாழ்வார் வியக்கின்றார். 'விபவம்' என்னும் இந்த அவதாரக் கொள்கை வைணவத்தின் உயிர்நாடிக் கொள்கைகளில் தலையாயது. ஒரு காரணமும் இன்றி உயிர்களின் மீது கொண்ட பெருங்கருணையினால் (நிர்ஹேதுக கிருபை) இறைவன் தனது சிறப்புக்கும் பெருமைக்கும் ஒவ்வாத சிறு சிறு பிறவிகளைக்கூட எடுத்து மகிழ்கின்றான் என்பது வைணவத் தத்துவம். கம்பன் இந்த 'விபவம்' என்னும் அவதார தத்துவத்தினைக் காப்பியத்தில் பலபடியாக எடுத்துரைக்கின்றான். தனது காப்பியத்திற்கு 'இராமாவதாரம்' என்று அவன் பெயரிட்டிருப்பதே கம்பன் அவதாரக் கொள்கையின் மீது கொண்டிருந்த ஆழ்ந்த பற்றைப் புலப்படுத்தும்.

'அறம்தலை நிறுத்தி, வேதம் அருள் சுரந்து அறைந்த நீதித்
திறம் தெரிந்து, உலகம் பூணச் செந்நெறி செலுத்தி, தீயோர்

**இறந்து உக நூறி, தக்கோர் இடர்துடைத்து ஏக ஈண்டுப்
பிறந்தனன் தன்பொன்பாதம் ஏத்துவார் பிறப்பு அறுப்பான்'** (5885)

என இராமாவதாரத் தத்துவத்தினை இந்த ஒரே பாடலில் கம்பன் அடக்கி விடுகின்றான். அதுமட்டுமல்லாமல் இராமாவதாரத்துக்குப் பிந்தைய அவதாரமான கண்ணன் அவதாரம் உட்பட பிற எல்லா அவதாரங்களையும் இராமன் மீது ஏற்றி ஆங்காங்கே பாடிப் பரவசம் அடைகின்றான்.

1.7 ஐவகை வடிவோன்

பாஞ்சராத்திர ஆகமம் திருமால் பரம், வியூகம், விபவம், அந்தர்யாமி, அர்ச்சை என ஐந்து நிலைகளில் உள்ளதாகக் கூறும். கம்பனும் இந்த ஐந்து நிலைகளை இராமன் மீது ஏற்றிக் காவியம் முழுதும் பல பாடல்களைப் புனைந்துள்ளான். 'பூத்த ஐ வடிவை ஒப்பான்'(1595) என்றும், 'எழுவாய் எவர்க்கும் முதலாகி (பரத்துவம்), ஈறோடு இடையாகி வழுவாது எவர்க்கும் வரம் ஈய வல்ல (வியூகம்), எங்கும் உளையாய் (அந்தர்யாமி), அவரால் வரங்கள் பெறுவாய் அழுவாய் (விபவம்), உணர்ச்சி தொடாத தன்மை உருவாய் (அர்ச்சை) என்றும் இந்த ஐந்து நிலைகளை ஒரே பாட்டில் (8253) கம்பன் அமைத்திருப்பது இங்கு நோக்கத் தக்கது.

1.8 பரமபதத்தில் உறைவோன்

திருமால் பரமபதத்தில் திருமடந்தை மண்மடந்தை இருபாலும் திகழ நலம் அந்தம் இல்லாத பரமபதத்தில் என்றும் நித்திய இருப்பாக உள்ளான் என்பது வைணவ சமயக் கொள்கையாகும். 'மரு விரி துளவ மோலி மாநிலக் கிழத்தியோடும் திருவொடும் இருந்த மூலத்தேவு' (8752) என்று பரமபத நாதனையும், 'சிறு காலை இலா நிலையோ திரியா, குறுகா, நெடுகா, குணம் வேறுபடா, உறுகால்கிளர் பூதம் எல்லாம் உகினும் மறுகா நெறி'(2606) என்று பரமபதத்தினையும் கூறும் கம்பன், 'அம்பரத்து அனந்தர் நீங்கி அயோத்தி வந்த வள்ளல்'(10368) என்று அந்தப் பரமபத நாதனே தனது காவிய நாயகன் இராமன் என்று பல இடங்களில் விரிவாகப் பேசுகின்றான்.

1.9 ஆயிர நாமப் பெயரினோன்

வேத வியாசரின் 'விஷ்ணு சகஸ்ரநாமம்' வைணவ சமய வழிபாட்டில் மிக முக்கியமானது. 'ஆயிர நாமத்து அண்ணல்'(8729), 'ஆயிர

நாமத்து ஆழி ஐயன்'(7828), ஆயிரம் பெயரவன்'(7702), 'பேராயிரங்கள் உடையான்'(8393) என்று காவியம் முழுதும் இராமனை விளிக்கும் கம்பன் வைணவ சமயத்தின் முழுமுதற் பொருளாகிய திருமாலே தன் இராமன் என்பதை உணர்த்துகின்றான்

1.10 முடிவுரை

கம்பன் காட்டும் பரம்பொருள் வைணவ சமயம் கூறும் திருமாலே - அவன் முத்தொழில்களை விளையாட்டாகச் செய்கின்றான் - உலக ஒடுக்கமும் உலகத் தோற்றமும் அவனிடமிருந்தே நடக்கின்றன - அவன் அந்தர்யாமியாய் உயிருள்ள உயிரற்ற பொருள்களில் நீக்கமற நிறைந்து நின்றாலும் அவற்றின் கர்ம வினைகள் அவனைத் தொடுவதில்லை - பிரமனுக்கும் சிவனுக்கும் அவனே ஆத்மா - அசித், சித் என்னும் 25 தத்துவங்களோடு தான் 26 ஆவது தத்துவமாகி அவற்றை வேறு வேறு உடல்களில் படைத்தும், காத்தும், கரந்தும் விளையாடுகின்றான் - பிறவியேயில்லாத இறைவன் உயிர்களின் மீது கொண்ட பெருங்கருணையால் பலபடியாகப் பிறக்கின்றான் - அவன் ஐ வகை வடிவினன் - திருமகளோடும் மண்மகளோடும் பரம பதத்தில் உறைபவன் - ஆயிர நாமப் பெயரினோன் - என, வைணவ சமயம் கூறும் 'திருமாலையே' கம்பன் இறைவனாகக் கொண்டிருக்கிறான் என்பதும், அவனே இராமனாக அவதாரம் செய்த முழுமுதல் என்பதும், வைணவ சமயக் கொள்கைகளையே தனது காவியத்தில் இறையியல் கொள்கைகளாகக் கொண்டிருக்கிறான் என்பதும் இவ்வாய்வின் முடிபுகளாக அமைகின்றன.

கம்பனில் சைவசித்தாந்தம்

முனைவர் **இராமாணிக்கவாசகன்**
தமிழ்த்துறை, தேசியக்கல்லூரி, திருச்சிராப்பள்ளி

சிவபெருமானுக்கு அருவம், அருவுருவம், உருவம் என்று மூன்று நிலைகள் உண்டு. அருவம் என்பது கண்ணுக்கும் கருத்துக்கும் எட்டாத நிலை. அது ஞானிகளுக்கு மட்டுமே தெரியக்கூடியது. சிவபெருமான் எல்லாரும் உய்யவேண்டும் என்ற கருணையினால் அருவுருவம் என்ற சிவலிங்கத் திருமேனியைத் தரித்துக் கொண்டார். இன்னும் கருணை அதிகமான போது உருவத் திருமேனிகளை எடுத்துக் கொண்டார். உருவத் திருமேனி எடுத்துக் கொண்ட சிவபெருமான் வேதம் ஆகமம் என்ற இரண்டு நூல்களை அருளிச் செய்தார். இந்த இரண்டு நூல்களே நூல்கள். மற்ற நூல்கள் அனைத்தும் இவற்றினின்று விரிந்த நூல்கள். இதில் வேதத்தின் அந்தம் வேதாந்தம் என்றும் ஆகமத்தின் அந்தம் சித்தாந்தம் என்றும் கூறப்படுகின்றன. ஆனால் இரண்டு அந்தங்களும் ஒரே முடிவைத் தான் இயம்புகின்றன.

வேதமொ டாகமம் மெய்யாம் இறைவன் நூல்
ஓதும் பொதுவும் சிறப்புமென் றுள்ளன
நாதன் உரையவை நாடில் இரண்டந்தம்
பேதம தென்பார் பெரியோர்க் கபேதமே - திருமந்திரம்

சைவ சித்தாந்தம் முடிந்ததன் முடிவாகும் சைவ சித்தாந்தத்தில் ஆராய்ச்சியோ, திறனாய்வோ மாற்றுக் கருத்தோ கிடையாது. ஊழி பெயரினும் சித்தாந்த உண்மைகள் மாறுவதில்லை. அந்த நெறியில் நிற்பவர்கள் முத்தி சிந்தித்தவர்கள் ஆவர். அத்தகைய சித்தாந்த நுட்பங்கள் இராமாயணத்திலும் விரவி இருக்கின்றன. அவற்றில் ஒரு சிலவற்றை இங்குக் காண்போம்.

ஒருவன் முத்தியை அடைவதற்குத் தடையாக இருப்பது மலம். மலம் அகன்றால் சீவன் சிவனாகும். மலமானது மூன்று வகைப்படும். ஆணவம், கன்மம், மாயை என்ற மும்மலங்களும் அற்ற இடமே சிவ சாயுச்சியம் ஆகும்.

செம்மலர் நோன்றாள் சேர லொட்டா
அம்மலங் கழீஇ அன்பரொடு மரீஇ

மாலற நேயம் மலிந்தவர் வேடமும்
ஆலயந் தானும் அரனெனத் தொழுமே" - சிவஞானபோதம்

மும்மலம் வேறுபட் டொழிய மொய்த்துயிர்
அம்மலர் அழநிழல் அடங்கும் உண்மையைக்
கைம்மலரக் காட்சியிற் கதுவ நல்கிய
செம்மலை அலதுளம் சிந்தி யாதரோ" - திருவானைக்கா புராணம்

தன்பரிசும் வினைஇரண்டும் சாருமலம் மூன்றுமற
அன்புபிழம் பாய்த்திரிவார் அவர்கருத்தின் அளவினரோ"
-பெரியபுராணம்

இருவினைமும் மலமுமற இறவியொடு பிறவியற
ஏகபோகமாய் நீயும் நானுமாய்
இறுகும்வகை பரமசுகம் அதனையருள் - திருப்புகழ்

செம்மை நலம் அறியாத சீதடரொடும் திரிவேனை
மும்மைமலம் அறுவித்து முதலாய முதல்வன்தான்
நம்மையுமோர் பொருளாக்கி நாய்சிவிகை ஏற்றுவித்த
அம்மையெனக் கருளியவா(று) ஆர்பெறுவார் அச்சோவே
-திருவாசகம்

மேற்கண்ட பிரமாணங்களால் பிளையும் மலமும் ஒழிந்த தானால் நாம் சிவமாகி விடுவோம். இக்கருத்தைக் கம்பர்,

தாவரும் இருவினை செற்றுத் தள்ளரும்
மூவகைப் பகையரண் கடந்து முத்தியில்
போவது புரிபவர் மனமும் பொன்விலைப்
பாவையர் மனமும்போல் பசையும் அற்றதே (பா.தா.வ.படலம், :15)

என்ற கவிதையில் அழகுற அமைக்கின்றார். விசுவாமித்திரர் இராம லக்குமணர்களை அழைத்துச் செல்கின்றார். வழயில், பாலைவனம் கடந்து செல்லுகின்றனர். அந்தப் பாலை வனத்தை வருணிக்கும் போது இரண்டு உவமைகளைக் கம்பர் கையாளுகின்றார். ஒன்று உயர்ந்த உவமை மற்றொன்று தாழ்ந்த உவமை.

அதாவது பிறவிக்குக் காரணமான நல்வினை தீவனையென்னும் இருவினைகளும் ஆணவாதி மலங்களும் கடந்து முத்தி நெறியிற் செல்கின்ற சிவஞானிகளுடைய மனம் பசையற்ற பாலைவனத்திற்கு

முதல் உதாரணமாகும். மூவகைப் பகை என்பது காமம், வெகுளி, மயக்கம் - என்பதும் பொருந்தும்.

பொன்விலை மாதர்களின் மனம் பாலைவனத்திற்கு இரண்டாவது உதாரணமாகும். மேலும் பிறவிக்குக் காரணம் ஆசை, பற்று என்பனவாம். ஆசை என்பது பறிர் பொருளின் மேல் உண்டாவது பற்று என்பது தன் பொருளில் உண்டாவது

அவா என்ப எல்லா உயிர்க்கும் எஞ்ஞான்றும்
தவாப் பிறப்பீனம் வித்து -திருக்குறள்

இந்த இரண்டும், அதாவது அகப்பற்று, புறப்பற்று இரண்டும் நீங்கினால் பிறவி நீங்கும். இக்கருத்தைக் கம்பர்,

பற்றவா வேரொடும் பசையறப் பிறவிபோய்
முற்றவா லுணர்வுமேல் முடுகினார் அறியுசென்
றுற்றவா னவனிருந்து யோகுசெல் தனனெனில்
சொற்றவாம் அளவதோ மற்றிதன் தூய்மையே (தா.வ.படலம்.பா:3)

என்ற பாடலில் விளக்குகின்றார். பற்று நீங்கினால் பிறப்பு நீங்கும் என்ற சித்தாந்தம் குறிப்பிடத்தக்கது.

மேற்கண்டவாறு, இராமாயணத்தில் பல இடங்களில் சைவ சித்தாந்தக் கருத்துக்கள் அமைந்துள்ளன. இதன் மூலம் கவிச்சக்ரவர்த்தி எல்லா விதமான அனுபவங்களையும், புலமையையம் பெற்றுள்ளமை புலனாகின்றது.

கம்பர் காட்டும் சாங்கிய மதமும் யோகமும்

முனைவர் **வேல் கார்த்திகேயன்,**
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, பாரதிதாசன் அரசினர் மகளிர் கல்லூரி, புதுச்சேரி

கம்பர் தன் காப்பியத்தில் பல்வேறு சமயங்களின் இயல்புகளையும் எடுத்துரைத்துள்ளார். இதன்மூலம் கம்பர் காலத்தில் நிலவிய சமயங்களின் தன்மையை அறிந்து கொள்ளமுடிகின்றது. கம்பராமாயணத்தில் இரணியன் வதைப்படலம் குறிக்கத் தகுந்த ஒரு பகுதியாகும். இப்பகுதி கம்பரின் இறைநம்பிக்கையையும், கம்பரின் மூலபாட விலகலையும், கம்பரின் விவாதத்தன்மையையும், கிளைக்கதை அமைதியையும் எடுத்துரைக்கும் பகுதியாகும்.. கம்பராமாயணக் காப்பியக் கதையில் திருமாலின் பத்து அவதாரங்களை இணைத்துச் செல்லும் கம்பரின் தனித்த ஆற்றலுக்கு நரசிம்ம அவதாரத்தை அமைத்துக்கொள்வதற்கு ஏற்ற இடமாகவும் இவ்விடம் அமைந்துவிட்டது. இவ்வகையில் பல்வேறு தனித்தன்மைகளுக்கு இடமளிக்கும் இப்படலம் பல்வேறு சமயங்கள் பற்றிய செய்திகளையும் தாங்கியுள்ளது.இவற்றில் இக்கட்டுரை சாங்கிய மதம் குறித்தும், யோகமதம் குறித்தும் விவாதிக்கின்றது.

இரணியன் வதைப்படலத்தில் இரணியன், பிரகலாதன் என்ற இரு பாத்திரங்கள் இரு துருவ முனைகளை எட்டுகின்றன. எல்லாக் குழந்தைகளும் இரணியனின் மந்திரத்தைச் சொல்ல இரணியனின் குழந்தை மட்டும் எட்டெழுத்து மந்திரமாகிய நாராயண மந்திரத்தைச் சொல்லுகின்றான். இந்நிலையில் தோன்றிய இம்முரண்பாடு இக்கிளைக் கதையின் போக்கினை போட்டித்தன்மை உடையதாக மாற்றுகின்றது. இரணியன் கூறும் கடவுள் பற்றிய கருத்துகள் அனைத்தும் ஒரு புறமும், அவற்றிற்கு பிரகலாதன் அளிக்கும் பதிலும் சமய விவாதம் நடைபெறுவதைப் போன்று அமைக்கப்பெற்றுள்ளது.

இரணியன் சொல்லும் கருத்துகள் அனைத்தும் கடவுள் இல்லை என்ற நிலையை எட்டுவதாக இல்லை. முக்கடவுளும் தனக்கு தன் எல்லைக்குள் அடங்கியவர்கள் என்ற நிலையில் இரணியன் முன்னுரிமை பெற்றவனாக இங்கு காட்டப்பெறுகின்றான்.

செய்த மாதவம் உடைமையின் அரிஅயன் சிவன் என்று
எய்தினார் பதம்இழந்தனர் யான்தவம் இயற்றி

பொய்யில் நாயகம் பூண்டபின் இனி அது புரிதல்
நொய்யது ஆகும் என்று ஆரும் என் காவலின் நுழைவர் (183)

என்ற இந்தப்பாடலில் கடவுள் இல்லை என்ற எல்லைக்கு இரணியன் செல்லவில்லை என்பது குறிக்கத்தக்கது. பிரம்மன், திருமால், சிவன் போன்றோர் தம் பதங்களைத் தவத்தால்தான் அடைந்துவிட்டதாகச் செருக்கு கொள்கிறான் இரணியன். இச்செருக்கையே பிரகலாதன் தீர்க்க வேண்டியவனாகப் படைக்கப்பெற்றுள்ளான்.

இதன் காரணமாகக் கம்பர் காலத்தில் உலகாயுதம் என்ற கடவுள் மறுப்புக் கொள்கையுடைய சமயங்கள் இல்லை என்பது உறுதியாகின்றது. கம்பர் காலத்தில் உலகாயுதம் விளங்கியிருக்குமானால் கம்பர் இரணியனின் வாயிலாக உலகாயுதம் சார்ந்த கருத்துக்களை வெளியிட்டு இருக்க வேண்டும். எனவே கம்பர் காலத்தில் அல்லது கம்பரிடம் உலகாயுதக் கொள்கைகள் இருக்கவில்லை என்பது இதன்வழி உறுதியாகின்றது.

பிரகலாதன் இரணியனின் முக்கடவுளர்க்கும் மேலான பதவியை இரணியன் பெற்றுள்ளான் என்பதை மறுக்கத் துணிந்தவனாக இப் படலத்தில் படைக்கப்பெற்றுள்ளான். அதற்கான சான்றுகளை மட்டுமே இரணியன் அடுக்கிச் செல்கிறான். அவ்வாறு அடுக்கிச் செல்லும் போது சாங்கியம் யோகம் என்ற இருமதங்களைப் பிரகலாதன் வாயிலாகக் கம்பர் படிப்பவர்க்கு அறிமுகப்படுத்துகின்றார்.

சாங்கியம் யோகம் என்றிரண்டு தன்மைய
வீங்கிய பொருள் எலாம் வேறு காண்பன
ஆங்குஅவை உணர்ந்தவர்க்கு அன்றி அன்னவன்
ஓங்கிய மேல்நிலை உணரற் பாலதோ (189)

என்ற பாடலில் பிரகலாதன் வழியாக சாங்கியம், யோகம் ஆகிய சமயங்கள் அறிமுகம் ஆகின்றன. இம்மதங்கள் பற்றிய சில அடிப்படைத் தகவல்கள் பின்வருமாறு.

சாங்கியம்

தமிழ்க் காப்பியமரபில் பெருங்கதையில் சாங்கியத் தாய் இடம் பெறுகிறாள். இது தவிர சைவ சித்தாந்த நூல்களில் சாங்கியம் மதம் பற்றிய கருத்துகளும் எடுத்துரைக்கப்பெற்றுள்ளன. இவ்வகையில் அங்கொன்றும் இங்கொன்றுமாக சாங்கியத் தத்துவக்கருத்துகள் தமிழ் இலக்கியப் பரப்பில் அமைக்கப்பெற்றுள்ளன. கம்பரும் இப்பட்டியலில் இணைகின்றார்.

சாங்கியக் கொள்கைகளை நிறுவியவர் கபிலமுனிவர்.கம்பர் காலத்தில் சாங்கிய மதக் கொள்கைகள் விளங்கியுள்ளன என்பதை இரணியன் வதைப்படலத்தின் வழியாக அறிந்து கொள்ள முடிகின்றது.

சாங்கிய மதம் கபில முனிவரால் தோற்றுவிக்கப்பெற்று அவரின் சீடர்களான அசூரி, பஞ்சசீசர் ஆகியோர்தம் நூல்களின் வாயிலாக வளர்ச்சி பெற்றிருந்திருக்கிறது. சாங்கிய காரிகை என்னும் நூல் ஈஸ்வர கிருஷ்ணர் என்பவரால் இயற்றப் பெற்றுள்ளது. சாங்கிய பிரவசன சூத்திரம், யுக்தி தீபிகை ஆகியனவும் சாங்கிய மதத்தின் பரவலைத் தெரிவிக்கும் தத்துவ நூல்களாகும்.

யோகம்

யோகவழிக்கு அடிகோலியவர் பதஞ்சலிமுனிவர் ஆவார். இவரின் கருத்தும் பொருளும் கபிலமுனிவரின் சாங்கிய மதத்துடன் ஒன்று பட்டுச் செல்கின்றது. இவை இரண்டும் ஒரு சேர அமைந்த சமய நூல்கள் ஆகும். சாங்கியம் கொள்கைகளை விவரிக்க யோகம் அதனை நடைமுறைப் படுத்தும் சமயமாக விளங்குகின்றது. இதன் காரணமாக சாங்கியத்தை நிரீச்சுர சாங்கியம் என்பர்.யோகத்தை சேச்சுர சாங்கியம் என்பர்.

இவ்விரு மதங்களின் இணைவு கருதியே இவற்றைப் பிரகலாதன் கூறுவதாக ஒரு பாடலில் இணைத்துக் கம்பர் காட்டுகின்றார்.இதன் காரணமாக அவரின் பல் சமய அறிவு வெளிப்பட்டு நிற்கின்றது.மேலும் சாங்கியத்தின் கொள்கையையும் இப்பாடலில் சுட்டியிருப்பது கருதத் தக்கது.

"ஓங்கிய மேல்நிலை" என்று சுட்டப்படுவது சாங்கியத்தின் தத்துவ சாயல் உடைய கம்பரின் அடியாகும்.

மூலம் புரியட்டகம் விகிர்தி ஆகி மூன்றாய்ப் பிரகிருதி
தூலம் சூக்குமம் பரமாய் அச் சுத்த புருடன் சன்னிதியில்
பாலன் சேட்டை புரிந்து உலகம் யோனி பலவாய்ப் பரந்து ஒடுங்கும்
சால என்று நிரீச்சுவரசாங்கியன் தான் சாற்றிடுமே

(சிவஞானசித்தியார், பரபக்கம், 260)

என்ற பாடல் சாங்கியக் கருத்தினை அறிவிக்கும் பாடல் ஆகும். அதாவது சாங்கியக்கொள்கை அடிப்படையில் இரண்டு தத்துவங்களை

உடையது. அதாவது. ஒன்று பிரகிருதி. மற்றொன்று புருடன். பிரகிருதி என்பது உலகப்பொருள்கள். புருடன் என்பது ஆன்மா.

பிரகிருதி மூன்றுதன்மைகளை உடையதாகும். மூலம், புரியட்டகம், விகிர்தி என்பன அவையாகும்.

மூலம் என்றால் சித்தம் என்று பொருள்படும். புரியட்டகம் என்றால் ஓசை, ஊறு, வடிவம், கலை, நாற்றம் என்ற ஐந்தும் மனம் புத்தி அகங்காரம் ஆகிய எட்டும் கூடிய நுண்ணுடம்பு ஆகும் . விகிர்தி என்பது தூல உடம்பு ஆகும். இம்மூன்றுவகையால் அமைந்த பொருள் பிரகிருதியாகின்றது.

புருடன் என்ற ஆன்மா இப்பிரகிருதியின் அரவணைப்பில் ஒரு குழந்தை போல் இருப்பதாக சாங்கிய மதம் கருதுகின்றது. இக்குழந்தை உலகில் உள்ள அத்தனை பொருள்களையும் அதவாது பிரகிருதியாக உள்ள அத்தனை பொருள்களையும் தனது என்றே எண்ணக் கூடியதாக இருக்கும். அத்தனைக்கும் தான் மேம்பட்டவன் என்றே அறியும்.

இந்நிலையைப் பெற்றவனாக இரணியன் பிரகலாதனின் கண்களுக்குத் தெரிகின்றான். இரணியன் என்ற ஆன்மா உலகில் உள்ள பொருட்கள் எல்லாம் தான் என்று உணருகின்றது.

சாங்கிய நெறிப்படி தான் வேறு, பிரகிருதி (உலகம்) வேறு என்று அறியப்படுகிறபோது ஞானத்தின் வாயிலில் ஆன்மா நிற்கமுயலுகின்றது என்ற கருத்து வலியுறுத்தப்படுகின்றது. இங்கு இரணியனின் எல்லாமாகிய தன்மையை விலக்கி அவன் வேறு, உலகம் வேறு என்று உணர்த்தப் பிரகலாதன் முனைகின்றான்.

வீங்கிய பொருள் எலாம் வேறு காண்பன
ஆங்குஅவை உணர்ந்தவர்க்கு அன்றி அன்னவன்
ஓங்கிய மேல்நிலை உணரற் பாலதோ

என்ற இந்தப்பாடலை மீண்டும் நினைவு கூர்ந்தால் சாங்கிய மதக் கொள்கை பற்றிய தெளிவு பிறக்கும்.

வீங்கிய பொருள் என்பது உலகப் பொருள்களைக் குறிக்கும். இதனை வேறு உயிர் வேறு என்று கண்டுவிட்டால் ஆங்கு அவை உணர்ந்தவர்க்கு அன்றி - உயிர் வேறு உலகம் வேறு என்று அறியத் தெளிந்தவர்க்கு மட்டுமே ஞானம் கிட்டும் மற்றவர்களுக்குக் கிட்டாது.

அவ்வகையில் தான் என்ற மேல்நிலையில் நிற்கும் புருடனான சாங்கிய மதம் சார்ந்துஇருக்கிற இரணியன் கொண்டுள்ள மேல்நிலை சரியானது அல்ல என்று முடிகின்றான் பிரகலாதன்.

இப்போது இரணியன் என்ற அரக்கன் சார்ந்துள்ள மதம் சாங்கியம் என்று கொள்ளத்தகுந்தது என்று கம்பர் உணர்த்துவதை அறிந்து கொள்ள முடிகின்றது. மேலும் கம்பர் காலத்தில் இருந்த சாங்கிய மதத்தின் தாக்கமும் இதில் உணரப்படுவதாக உள்ளது.

கம்பனில் கடவுட்கொள்கை

தீ.சண்முகப்பிரியா,
முனைவர் பட்ட ஆய்வாளர், அரசு ஆடவர் கலைக்கல்லூரி, கிருட்டிணகிரி

கம்பர் இராமபிரான்மீது கொண்டிருந்த ஆழ்ந்த பக்தியினால் 'கம்ப நாட்டாழ்வார்' என அழைக்கப்பெறுகின்றார். 'கம்பராமாயணத்தில் வைணவ பக்தி இயக்கம் பூரணத்துவம் பெற்றது' (ஆ.வேலுப்பிள்ளை, தமிழ்இலக்கியத்தில் காலமும் கருத்தும்,ப.105) என்றும், 'ஆழ்வார்கள் செல்வாக்கு அவன் காப்பியம் முழுவதும் விரவி நிற்கின்றது' (மு.வரதராசன், தமிழ் இலக்கிய வரலாறு, ப.161) என்றும், 'கம்பராமா யணத்தைத் திவ்விய பிரபந்தமாக்கியிருக்கின்றான்' (வ.சுப.மாணிக்கம், ஒப்பியல்நோக்கு, ப.159) என்றும் கம்பராமாயணம் பற்றி அறிஞர்கள் குறிப் பிடுகின்றனர். இதனால், கம்பராமாயணம் பக்தி இலக்கியங்களோடு ஒப்பவைத்து எண்ணத்தக்கப் பெருமையை உடையது என்பது தெளிவாகின்றது.

கம்பர், 'நடையினின்றுயர் நாயகனா'கிய 'காசில் கொற்றத்து இராமன்' மீது பக்தியனுபவத்தில் திளைத்து இராமாயணம் பாடியருளியதால் கம்பராமாயணம் எல்லோராலும் ஏற்றுக்கொள்ளத்தக்க பொதுமைத் தன்மைகள் பலவற்றைக் கொண்டுள்ளது.

கம்பன் காலச் சமயநிலை

கம்பர் வாழ்ந்தகாலம் பிற்காலச்சோழர்கள் காலம். பிற்காலச் சோழ மன்னர்களுள் பெரும்பாலானோர் தீவிர சிவபக்தர்களாக இருந்தனர். கம்பர் காலத்தில் சைவ-வைணவப் போராட்டங்களும் பூசல்களும் தமிழகம் முழுவதும் நிகழ்ந்து கொண்டிருந்தன.

ஆழ்வார்களும் நாயன்மார்களும் வைணவம், சைவம் என்கிற ஒரு குறிப்பிட்ட சமய எல்லைக்குள் நின்றுகொண்டு திருமால் பக்தியையும் சிவபக்தியையும் வளர்த்துக் கொண்டிருந்தனர். அது, புறச்சமயங்களாகிய சமணம், பவுத்தம் முதலிய சமயங்களின் ஆதிக்கத்தைத் தமிழகத்திலிருந்து ஒழித்துக்கட்ட அக்காலத்தில் இன்றியமையாது வேண்டியிருந்தது. சமய ஒருமைப்பாட்டையும் நல்லிணக்கத்தையும் வலியுறுத்த வேண்டிய - உருவாக்க வேண்டிய இன்றியமையாத் தேவை கம்பர் காலத்தில் உருவாகிவிட்டது.

கம்பர், திருமாலின் அவதாரங்களுள் ஒன்றாகிய இராமாவதாரத்தைப் பாடுபொருளாகத் தேர்ந்துகொண்டாலும் பிறசமயக் கடவுளர்களைத் தாழ்த்தாது அவர்களுக்கும் உரிய மதிப்பளித்தே இராமாயணத்தைப் பாடியுள்ளார்.

சமயம் உணர்த்தும் பொருள்

நாட்டில் பல சமயங்கள் இருந்தாலும் அவை கூறுகின்ற உறுதிப் பொருள் - தத்துவப்பொருள் வெவ்வேறல்ல. அவை அனைத்தும் ஒன்று தான் என்பதை,

"கல்லிடைப் பிறந்து போந்து கடலிடைக் கலந்த நீத்தம்
எல்லைஇல் மறைகளாலும் இயம்பஅரும் பொருள்ஈது என்னத்
தொல்லையில் ஒன்றேஆகி, துறைதொறும், பரந்த சூழ்ச்சிப்
பல்பெருஞ் சமயம் சொல்லும் பொருளும்போல் சென்றதன்றே (30)

-என்று மலையிற் பிறந்த நதியானது பல கிளை நதிகளாகப் பிரிந்து சென்று நாட்டை வளப்படுத்திப் பிறகு அவை அனைத்தும் கடலிற் சென்று கலந்து விடுகின்ற காட்சியை, எல்லாச் சமயங்களும் கூறுகின்ற தத்துவப் பொருள் கடவுள் ஒன்றுதான், என்பதற்கு உவமையாகக் கூறுகின்றார்.

மேலும், 'நாடவிட்ட படலத்தில்' சுக்கிரீவன் கூற்றாகச் சிவன்தான் உயர்ந்தவன்; திருமால்தான் உயர்ந்தவன் என்று கூறிக்கொண்டு கடவுளர்களுக்குள் உயர்வு தாழ்வு கற்பிப்பவர்களை 'அறிவிலிகள்' என்று சாடி, 'அவர்களால் இறைவனால் திருவடிப்பேற்றை அடைய முடியாது' (கம்பராமாயணம், 4470) என்றும் கூறுகின்றார்.

கம்பனில் கடவுள் வாழ்த்துப்பாடல்

கடவுள் கொள்கை தொடர்பாகத் தன்னுடைய கருத்தை வெளியிட, கம்பர் ஒரு புதிய முறையைத் தமது காப்பியத்தில் கையாள்கின்றார். ஒவ்வொரு செய்யுளை காண்டத்தின் தொடக்கத்திலும் 'கடவுள் வாழ்த்து' எனும் பெயரில் ஒவ்வொரு செய்யுளை அமைக்கின்றார். பாலகாண்டத்தில் மட்டும் மூன்று செய்யுட்கள் 'கடவுள் வணக்கம்' எனும் பெயரில் இடம் பெற்றுள்ளன. இந்த கடவுள் வாழ்த்துச் செய்யுட்கள் எட்டும் திருமாலையோ இராமபிரானையோ வெளிப்படையாகப் பெயர் குறிப்பிட்டுப் போற்றித் துதிப்பன அல்ல; கடவுளின் பொது இயல்புகளைக் கூறி வாழ்த்தி வணங்கும் போக்கில் அமைந்துள்ளது.

திருமாலின் அவதாரமான நாயகனாகக் கொண்ட காப்பியத்தில் திருமாலையோ இராமபிரானையோ போற்றித் துதிக்கும் போக்கில் அப்பாடல்கள் இல்லாமல் இருப்பது இங்குக் குறிக்கத்தக்கது. இதனால், எந்தச் சமயத்தைச் சேர்ந்தவர்களும் கம்பரது கடவுள் வாழ்த்துப் பாடல்களைத் தங்களது சமயக் கடவுளர்களுக்குரிய வாழ்த்துப் பாடல்களாகக் கருதி ஏற்றுக் கொண்டு, அவற்றைப் பாடிப் பரவசமடைய முடிகின்றது. இத்தகைய பொதுமைத் தன்மை கம்பரது கடவுள் வாழ்த்துப் பாடல்களில் அமைந்துள்ளது. கடவுட்பொதுமையையும் சமயப்பொதுமையையும் - சமரசத்தையும் விரும்பியே கம்பர் இவ்வாறு செய்திருப்பார் எனக் கருதலாம்.

வான்நின்று இழிந்து, வரம்பு இகந்த மா பூதத்தின் வைப்பு எங்கும்,
ஊனும் உயிரும் உணர்வும்போல் உள்ளும் புறமும் உளன் என்ப

என்று 'வாக்கு, மனம் கடந்து நிற்கும் தன் இயல்பான நிலையிலிருந்து கீழே இறங்கி, ஐம்பெரும்பூதங்களின் பல்வேறு பரிணாமமாக இருக்கின்ற அனைத்துப் பொருட்களிலும் ஊனாகவும் உயிராகவும் உணர்வாகவும் அனைத்திலும் உள்ளும் புறமுமாகவும் இருப்பவன் என்று தன் கருத்தைப் பதிவு செய்கின்றார் கம்பர்.

மேலும் மேலும் வளர்கின்றதும், ஒன்றுக்கொன்று மாறுபட்டதுமான உடம்புகள்தோறும் தான் மட்டும் வேறுபடாமல் இருந்து கொண்டே ஊடுருவி வேறுபடாமல் நிற்பவரே மூலப்பரமடபொருள்; அவரே நம் அறிவினால் ஆராய்ந்து காண வேண்டிய அறிவு வடிவமானவர்.

பேதியாது நிமிர் பேத உருவம் பிறழ்கிலா
ஓதிஓதி உணரும்தொறும் உணர்ச்சி உதவும்
ஆதி தேவர்; அவர்எம் அறிவினுக்கு அறிவுஅரோ

(ஆரணிய காண்ட கடவுள் வாழ்த்துப்பாடல்)

என்று கடவுளின் இயல்பையும் வடிவையும் குறிப்பிடுகின்றார். இவ்வாறே அனைத்துக் காண்ட கடவுள் வாழ்த்துப்பாடல்களும் அமைந்துள்ளன. இறுதி காண்டமாகிய யுத்தகாண்டத்தின் கடவுள் வாழ்த்துப்பாடலாகிய,

'ஒன்றே' என்னின், ஒன்றே ஆம்;
'பல' என்று உரைக்கின், பலவே ஆம்;
'அன்றே' என்னின், அன்றே ஆம்;
'ஆமே' என்னின், ஆமே ஆம்;

'இன்றே' என்னின், இன்றே ஆம்;
'உளது' என்று உரைக்கின், உளதே ஆம்;
'நன்றே' நம்பிகுடிவாழ்க்கை
நமக்குஇங்கு என்னோபிழைப்பு?அம்மா' (யுத்த. க.வா)

என்னும் பாடல் கடவுள் பற்றிய கம்பரது தெளிந்த -ஆழ்ந்த -தீர்க்கதரிசனமான கருத்தை வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளது.

கம்பனில் சிவன்

கம்பர் தன்னுடைய காப்பியத்தில் 395 இடங்களில் சிவபெருமானைப் பற்றிக் குறிப்பிடுகின்றார். கவிக்கூற்றாக மட்டும் 168 இடங்களில் குறிப் பிடுகின்றார். இராமன் கூற்றாக 19 இடங்களில் குறிப்பிடுகின்றார். அவ் விடங்களிலெல்லாம் சிவபெருமானைத் தாழ்த்தாது காப்பியக் கதையை நடத்திச் சென்றிருக்கின்றார்.

சிவனுக்கும் திருமாலுக்கும் இடையே நிகழப்பெற்றப் போராட்டத்தின் போது, திருமால் பேரொலி எழுப்ப அவ்வொலியால் சிவனுடைய வில் ஒடிந்துபோகின்றது. மேலும், சிவனும் செயலற்று விடுகின்றார். அப்போது, முனிவர்களும் தேவர்களும் திருமாலே உயர்ந்தவர் என்று கருதுகின்றனர் என வான்மீகி குறிப்பிடுகின்றார்(ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம், பாலகாண்டம், சர்க்கம் 75, வரி.84-100). ஆனால், கம்பரோ சிறுமையை வில்லின் மீதேற்றி வில் தானாகவே ஒடிந்துவிட்டதாகக் கூறி(கம்பராமாயணம், பாடல் எண்:2191), சிவபெருமானையும் திருமாலையும் சமமாகவே கருதியிருக்கின்றார்.

“சிவனையும் திருமாலையும் ஒப்ப நோக்கி மதிக்கும் கம்பன் பாடிய இராமகாதை சிலர் எண்ணுவதுபோல சைவத்திற்குப் புறம்பானது அன்று. சைவத்தையும் வைணவத்தையும் சிறிதும் வேறுபாடு இன்றிப் பேசும் சமரசஞானி கம்பன்” - என்று ராய.சொ. அவர்கள் (கம்பனும் சிவனும், ப.5) கம்பரைப் பற்றியும், இராமாயணத்தைப் பற்றியும் கூறுவது இங்கு நினைவு கூரத்தக்கது.

திருமால் மும்மூர்த்திகளில் ஒருவர் அல்லர்

இராமன் திருமாலின் அவதாரமே என்ற நம்பிக்கை மக்களிடம் ஆழமாக வேரூன்றிவிட்ட காரணத்தால், கம்பர் இராமனது பிறப்பைப் பற்றிக் கூறும்போது, 'திருமால் தான் இராமனாக அவதாரம் செய்தார்' என்று கூறுகின்றார். தமிழிலக்கியங்களை ஆழ்ந்து கற்றுணர்ந்த

கல்வியிற் பெரியவராகிய கம்பர், 'திருவுடை மன்னரைக் காணின் திருமாலைக் கண்டேன்' என்னும் இலக்கிய நெறியை- மரபைத் தமது காப்பியத்திலும் அமைத்து, தமது காப்பிய நாயகனாகிய இராமனையும் திருமாலாகவே காண்கின்றார். கம்பர், தான் திருமால் என்று குறிப்பது மும்மூர்த்திகளுள் ஒருவராகிய திருமால் அல்லர் என்பதைப் பல இடங்களில் விளக்கிச் சொல்கின்றார்.

திருஅவதாரப்படலத்தில் இராமன் கோசலை வயிற்றில் பிறந்ததைக் குறிப்பிடும்போது,

"ஒருபகல் உலகுஎலாம் உதரத்துள் பொதிந்து
அருமறைக்கு உணர்வு அரும் அவனை அஞ்சனக்
கருமுகில் கொழுந்து எழில், காட்டும் சோதியை (282)

என்று பாடிய கம்பர், மீண்டும் அதே படலத்தில், "**முப்பரம் பொருளுக்கு முதல்வன்**"(313) என்று இராமனைக் குறிப்பிடுகிறார்.

கவந்தன் தன் சுயஉருவைப் பெற்றவுடன்,"**மூன்று கவடாய் முளைத்து எழுந்த மூலமோ?**(3682) என்று கூறி இராமனைப் போற்றித் துதித்ததாகக் கூறுகின்றார்.

இராவணனிடம் தன் கணவன் யார் என்பதைக் கூற வந்த சீதை,

"செங்கண்மால் நான்முகன் சிவன் என்றே
கொலாம் எங்கள் நாயகனையும் நினைந்தது" (5194)

என்று கூறுகின்றாள்.

முதல் நாள்போரில் இராமனிடம் தோற்று இலங்கை மீண்ட இராவணன், மாலியவானிடம் இராமனைப் பற்றிக் கூறும்போது,

மாயிரு ஞாலம் முற்றும் வயிற்றிடை வைத்த மாயன்
ஆயிரம்தோளும், அன்னான் விரல் ஒன்றின் ஆற்றல் ஆற்றா (7295)

என்று திருமாலைவிட வேறானவனாக, ஆற்றலில் திருமாலையும் விஞ்சியவனாகவே இராமனைக் குறிப்பிடுகின்றார்.

வாசவன் மாயன் மற்றை மலருளோன் மழுவாள் அங்கை
ஈசன் என்று இனைய தன்மை இளிவரும் இவரால் அன்றி
நாசம்வந்து உற்றபோது நல்லது ஓர் பகையைப் பெற்றேன் (7302)

என்று ஆயிரம் மறைப்பொருள் உணர்ந்து அறிவு அமைந்தவனாகிய

இராவணனைக் கொண்டே இராமன் மும்மூர்த்திகளும் அல்லாத ஒருவன் என்னும் கருத்தைக் கம்பர் குறிப்பிடுகின்றார்.

இராவணன் இராமனோடு இறுதிநாள் போர் நிகழ்த்தும்போது, இராவணன் விட்ட சூலப்படையை இராமன் தன்னுடைய உங்கார ஒலியால் பொடியாக்கியதைக் கண்ட இராவணன்,

சிவனோ? அல்லன்; நான்முகள் அல்லன்; திருமாலாம்
அவனோ? அல்லன்; மெய்வரம் எல்லாம் அடுகின்றான்
தவனோ என்னின், செய்து முடிக்கும் தரன் அல்லன்
இவனோ தான் வேத முதற் காரணன் (9837)

என்று கூறுகின்றான். முதன்முறையாக இராமனைச் சந்தித்தபோது இராவணன் மனத்திலும் தோன்றிய எண்ணம் 'இராமன் மும்மூர்த்திகளிலும் மேம்பட்ட பரம்பொருள்' என்பது. இதே கருத்தையே இராவணன் இராமனைக் கடைசி முறையாகச் சந்தித்தபோதும் கொண்டிருந்தான் என்பது இங்கு கருதத்தக்கது. காப்பியத்தின் தொடக்கத்தில் 'முப்பரம் பொருளுக்கு முதல்வன்' என்று இராமனைக் குறிப்பிட்ட கம்பர், காப்பியத்தின் இறுதியில் இராவணன் இறக்கப்போவதற்கு முன் அவன் கூற்றாகவே இராமனை 'வேதமுதற் காரணன்' என்று கூறுகின்றார்.

சீதையைத் தேடிச்சென்ற அனுமன், இந்திரசித்தனால் பிடிபட்டு இராவணனுக்கு எதிரே அழைத்து வரப்பட்டபோது, இராவணன் அவனை,

நேமியோ? குலிசியோ? கணிச்சியோ?
தாமரைக் கிழவனோ? தறுகன் பல்தலைப்
பூமிதாங்கும் ஒருவனோ? (5874)

என்று கேட்க, அதற்கு அனுமன்,

சொல்லிய அனைவரும் அல்லேன்; சொன்ன அப்
புல்லிய வலியினோர் ஏவல் பூண்டிலேன் (5878)

என்று கூறத்தொடங்கி, 'செங்கண் ஓர் வில்லி தன் தூதன்' என்று கூறி, அச்செங்கண் வில்லி யார் என்பதை,

தேவரும் பிறரும் அல்லன்; திசைக்களிறு அல்லன்; திக்கின்.......... .
மூவரும் அல்லன்; மற்றை முனிவரும் அல்லன் (5881)

என்று கூறுகின்றான்.

இவற்றிலிருந்து மும்மூர்த்திகளுள் ஒருவனான திருமால் இராமனாக வந்தவன் அல்லன் என்பதை அறியமுடிகின்றது. பிரமன், விஷ்ணு, உருத்திரன் ஆகிய மூவரும் தேவர்களுள் முதல்தேவர் ஆவரேயன்றி மூலப்பொருள் அல்லர் என்பதைக் கம்பர் குறிப்பிடுகின்றார் எனலாம்.

முடிவுரை

உலகம் போற்றும் ஒப்பற்ற காவியத்தைப் படைக்க விரும்பிய கம்பர், சமய, இன வேறுபாடுகள் கடந்து, அனைத்து மக்களுக்கும் தன் காப்பியம் பயன்படவேண்டும் வழிகாட்ட வேண்டும் என்று கருதியே மக்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளக் கூடிய சமரச நிலையில் சமயத்தைப் பற்றியும், கடவுளைப் பற்றியும் பொதுமை நிலையில் பாடியிருக்கின்றார் எனக் கொள்ளலாம்.

கம்பன் காட்டும் எட்டெழுத்து மந்திரம்

இரா. குறிஞ்சிசெல்வன்
தலைவர், கம்பன் இலக்கிய மன்றம், மீசநல்லூர்

திருமாலின் பெருமைகளையும் அவதார சிறப்புகளையும் பல நிகழ்வுகளில் கம்பன் விளக்குகின்றான். பிரகலாதன் வாயிலாக எட்டெழுத்து மந்திரத்தின் உயர்வை வெளிப்படுத்துகின்றான்.

வேதத்தின் உச்சி

பிரகலாதன் ஆசிரியர் கூறியதை மறுத்து வேதத்தின் முடிவான உப நிடதங்கள் கூறும் உண்மைப் பொருளான ஓம் நமோ நாராயணாய என்ற திருமந்திரத்தை உச்சரித்தான் எட்டெழுத்து மந்திரத்தை பெரியாழ்வார் “வேதாந்த விழுப் பொருளின் மேலிருந்த விளக்கை” (4.3.11) என்று உணர்த்துகிறார்.

எட்டெழுத்து மந்திரத்தை உச்சரித்த பிரகலாதன் மனம் நெகிழ்ந்து உருகினான். அடக்கமாக தலைமேல் கைகுவித்து கண்களில் நீர்பெருக, உடல் சிலிர்க்க அமர்ந்திருந்தான். (கம்ப - 6211).

கருவில் திருவுடையவனாகிய பிரகலாதன் இளமையிலேயே ஞானம் மிக்கவனாக, ஏனைய ஞானிகளுக்கெல்லாம் தலைவனாக விளங்கியதால் “ஞான நாயகன்” என கம்பன் காட்டுகின்றான்.

வேதங்கள் புகழ்ந்து கூறுவதும் உலகத்தை உய்விக்கும் திருப்பெயருமான (கம்ப-6213) வேதமுதற்பெயர் பிரணவம் என்ற ஓம் நமோ நாராயணா என்ற எட்டெழுத்தை பிரகலாதன் உச்சரித்தான்.

தொல்லை நான்மறை:-

நான்கு வேதங்கள் கூறும் பொருள்களுக்கு எல்லை கண்டவன் ஸ்ரீமந்நாராயணன். நீதி நெறி பிறழாத தன்மை உடையது எட்டெழுத்து மந்திரம் (கம்ப - 6216) என கம்பன் எடுத்துக்காட்டுகின்றான்.

ஓர தீர சொல்வது அவன் நாமம்

வேதங்களால் சிறப்பிக்கப்படுவதும் கற்றுணர்ந்தோர் ஆராய்ந்து கூறுவதும் எல்லா உபநிடதங்களும் முடிந்த முடிவாகக் கூறும் பொருளும் தேவர்களும் முனிவர்களும் கூறும் பொருள் எட்டெழுத்து மந்திரம் (கம்ப-6217) ஓர என்பது ஆராய்ந்தறிதும் தீர என்பது

முடிந்த முடிவும் என அவன் திருப்பெயரை பிரகலாதன் வழி கம்பன் உணர்த்துகின்றான்.

ஓம் என்பது ஓரெழுத்தாகவும் நம என்பது இரண்டெழுத்தாகவும் நாராயணாய என்பது ஐந்தெழுத்தாகவும் ஆக மொத்தம் எட்டெழுத்தும் சேர்ந்து நாராயண அஷ்டாகூரம் எனப்படும். இதைத் தொடர்ந்து கூறிவர நிறைந்த ஆயுள் கிடைக்கும். எல்லாவித ஆபத்துக்களும் நீங்கும். தீமைகள், துன்பங்கள் தொடராது. முக வசீகரம் கிடைக்கும். எல்லாச் செல்வங்களும் கிட்டும். காலையில் இதைக்கூறுபவன் இரவில் செய்த பாவத்தை நாசம் செய்கிறான். மாலையில் கூறுபவன் பகலில் செய்த பாவத்தை நாசம் செய்கிறான் உச்சிப்பொழுதில் கூறுபவன் ஐந்துவித மகா பாதகங்கள் உப பாதகங்களிலிருந்து விடுபடுகிறான். எல்லா வேதங்களையும் ஓதிய புண்ணியத்தை அடைகிறான் என்று விளக்கம் தருகிறது நாராயண உபநிடதம்.

ஓதியும் ஓதக்கேட்பதும்

வேதங்களைக்கற்றும், வேள்ளி செய்தும், மெய்ஞானத்தாலும் கர்மம் பக்தி யோகம் முதலியவற்றாலும் அடையும் பெருமையை ஓம் நமோ நாராயணாய என்னும் மந்திரத்தால் பெற்றேன். ஓதியும் ஓத கேட்டும் அடைவதற்குரிய மேலான பொருள் எட்டெழுத்து மந்திரம். (கம்ப - 6218) என கம்பன் குறிப்பிடுகிறான்.

விஷ்ணு சகஸ்கரநாமத்தில் 245-வது பெயரும் விஷ்ணுவின் முக்கியமான பன்னிரு பெயர்களில் இரண்டாவது பெயருமான ஓம் நமோ நாராயணாய என்ற மந்திரமாகும். நாராயணன் என்பது ஆன்மாவின் இருப்பிடம் என்று பொருள்.

பிரகலாதனுக்கும் பிரமனுக்கும் தன்னிலையை தானே அறிவதற்கு அரிய பரம்பொருளுக்கும் சிறந்த மந்திரம் எட்டெழுத்து மந்திரம் (கம்ப - 6221). உன்னை நீ தானும் உணராதாய் (வில்லி-தூது.36) என்று வில்லிபுத்தூராரும் தனக்கும் தன் தன்மை அறிவரியான் (திவ்ய 2892) என்று நம்மாழ்வாரும் பரமனின் நிலையை உணர்த்துகின்றனர்.

உணர்வு உற மதித்துச் சொன்னது

இப்பிறப்பில் நாம் விரும்பியவற்றை தருவதும் மறுபிறவியில் வீடு என்ற இன்பத்தைத் தருவதும் துறவு என்னும் நிலையை அடையச் செய்வதும் ஓம் நமோ நாராயணாய (கம்ப-6230) என்னும் ஒப்பற்ற பரமானது திருநாமமாகும்.

எல்லா உலகங்களிலும் வாழும் உயிருள்ள உயிரற்ற எல்லாப் பொருள்களும் உயிர் உணர்வும் மெய் உணர்வும் நினைந்து போற்றுவது எட்டெழுத்து மந்திரமாகும் (கம்ப - 6231).

ஞானியர் யோகியர் அறியும் மந்திரம்

சிவனும் பிரம்மனும் மக்களும் எட்டெழுத்து மந்திரத்தால் உறுதிப்பொருளை அடைவர். அறிவு கொண்டு ஆராயும் வெற்றறிவின் மூலம் மந்திரப்பெருமை சிக்காது ஞானியர், யோகியர் அனுபவித்தறிவது அதன் சிறப்பாகும்.

பிறவிப் பெருங்கடலை நீந்தி உயிர்களை முக்தி என்ற கரையில் சேர்க்கும் மரக்கலம் எட்டெழுத்து மந்திரம்.

அனைவருக்கும் அணிகலனாகவும் இனிய மங்கல மொழியாகவும் வேதங்களுக்கு வரம்பதாகவும் தெளிந்துரைக்கப்படும் மெய்ப் பொருளாகவும் திருந்திய வாழ்வு வாழ ஓம் நமோ நாராயணாய என்ற எட்டெழுத்து மந்திரம் துணைநிற்கும். எட்டெழுத்து மந்திரத்தை போற்றுவோம்! எங்கும் கம்பன் புகழ்பாடுவோம்!.

'செம்மை சேர் நாமம்'

முனைவர் **மீரா.ஏழுமலை,**
தலைவர், வேலூர்க் கம்பன் ஆய்வு மையம், வேலூர்.

கம்பன் தம் காவியத்திற்கு திருமாலின் பத்து அவதாரங்களில் ஏழாவது அவதாரமான இராமாவதாரம் என்று பெயர் அமைத்தான். வாலியின் மூலம் ராம என்னும் செம்மைசேர் நாமம் (கம்ப - 4013) என எடுத்துக்காட்டி அந்நிகழ்வுக்கு முன்னும் பின்னும் இராமநாமத்தின் சிறப்பை கம்பன் உணர்த்துகின்றான்.

விராதன் சாபம் தீர்த்த ராம நாமம்

இராமனின் பாதம்பட்டு விராதன் என்ற அரக்கன் தும்புரு என்ற தன் முன்நிலையை அடைந்தான். இராமனுடன் போர்செய்த விராதன் இராமன் பாததீட்சை பட்டவுடன் அவதாரத்தன்மையை உணர்த்து கின்றான்.

முதன்மையான மேலான கடவுள் நீ! எல்லா உலகங்களும் உனக்குக் கீழ்பட்டவை. ஆராய்ந்து அறிவதற்கு அரிய எல்லா மதங்களும் உன்னைக் காரணமாக கொண்டவை (கம்ப - 2569) என்று பரம்பொருளின் உயர்ந்த நிலையைக் காட்டுகின்றான். இராமனைத் தாயாகவும் உயிர்களைக் கன்றுகளாகவும் உணர்த்தி உயிர்களின் தன்மைகளை நீ அறிகின்றாய், உயிர்கள் தாயாகிய உன்னை அறியவில்லை என்பதை, உலகின் தாய் ஆகின் ஐய! நீ அறிதி எப்பொருளும்". (கம்ப 2570)என விளக்கிக்காட்டுகின்றான்.

திருமால் அரவானது புராணமரபு ஆதிசேடனாகவும் வராகனாகவும் பூமியைத் தாங்குபவன், ஊழிக்காலத்தில் பூமியை விழுங்கியவன், மாபலி சக்கரவர்த்தியால் இவ்வுலகைத் திருவடியால் அளந்தவன். தேவங்களை பிரமனுக்கு அருளியவன் என கம்பன் போற்றுகின்றான். திருப்பாற்கடலில் இருந்த திருமாலே என் பிறவித் துயர்திர்க்க இராமனாய் வந்து அருள்புரிந்தான். இராமனின் திருவடிப்பட்டதால் இனிப்பிறவேன் என உணர்த்துகின்றான் (கம்ப - 2576) விராதன்.

ஞானத்தை அருளும் இராமன் திருவடி

விராதனின் பிறவி திருட்டும் வஞ்சகமும் உடையது. இப்பிறவி-யிலிருந்து விடுதலைப்பெற ஞானத்தை அருளும் தன் திருவடியால்

நீக்கிய வள்ளல் இராமன் என்பதை, **"கள்ள மாய வாழ்வு எலாம்விள்ள, ஞானம் வீசுதாள் வள்ளல்"** (கம்ப 2578) என விராதன் விளக்கிக்காட்டுகின்றான்.

கோசலநாடுடை வள்ளல்

இராமாவதாரம் வள்ளல் தன்மைப் பெற்றது என்பதை கம்பன் பல இடங்களில் சுட்டிக்காட்டுகின்றான். முதல்போர்புரி படலத்தில் அனைத்தையும் இழந்து நிராயுதபாணியாக நின்ற இராவணனைப் பார்த்து, **"இன்று போய், போர்க்கு நாளை வா என நல்கினன்"** (கம்ப. 7271)என அபயகரம் காட்டி அனுப்புகின்றான்.

இந்நிகழ்வை திருமங்கையாழ்வார் "கூற்றிடைச் செல்லக் கொடுங்கணை துரந்த கோலவில் இராமன் தன் கோவில்" (பெரிய திரு. 4:10:6) என உணர்த்துகின்றார்.

தன் மனைவியை வஞ்சித்து இன்னும் சிறை வைத்துள்ள மாபாதகன் நிராயுதனாகக் கண்முன் நிற்பது அறிந்தும், அவனைக் கொல்லாது கருணை காட்டிய ராம நாமம் உலக உயிர்கள் உய்யவே அவதாரம் எடுத்தநிலை வெளிப்படுகிறது.

அடைக்கலம் காட்டிய ராம நாமம்

வீடணன் ராமனிடம் அடைக்கலமாக வந்தபோது ஏற்றுக்கொள்வதே சிறந்தது என உணர்த்துகின்றான். புதியவன், என் தாய் தந்தையைக் கொல்லும் கொடுமை குணம் உடையவன், தற்போது நல்லவனாக இருந்து பிற்காலத்தில் பகைகொள்பவன் முதலிய குணங்களை உடையவனாக இருந்தாலும் அடைக்கலம் தருவதே சிறந்தது என கம்பன் விளக்குகின்றான.

தன்னிடம் அடைக்கலம் அடைந்த புறாவுக்காக தன்னையே கொடுத்தான் சிபிசக்கரவர்த்தி பாற்கடலில் நஞ்சு தோன்றியபோது சிவன் தானுண்டு தேவர்களைக் காத்தான்.

தோல்வியுற்றவர்க்கு உதவுவதும் இல்லை என்று இரப்போர்க்கு ஈதலும் அடைக்கலம் வந்தவர்க்கு கருணைகாட்டி அருள்செய்வதும் அறம் எனப்படும்.

பெண்புறாவை பிடித்த வேடனுக்காக தீயில் விழுந்து அவனுக்கு உணவாகி பரமபதம் அடைந்த ஆண்புறா வேதத்தைவிட மேலானது.

ஆதிமூலமே! என்று அழைத்த கஜேந்திரன் என்ற யானையை முதலையிடமிருந்து மீட்ட ஸ்ரீமந்நாராயணனின் அடைக்கலத்தின் தன்மையை உலகுக்கு உணர்த்திக்காட்டினான்.

உலகத்தைப் படைத்து காத்து வீடுபேற்றைத் தரவல்ல பரம்பொருளே சரணடைந்தவர்களை காக்கவேண்டும் என்பதற்கு சான்றாக விளங்குகிறது.

உயிர்களைப் படைக்கும் பிரமனுக்கும் அந்தர்யாமியாயிருந்து படைத்தலும் காத்தலும் செய்பவன் திருமால். "சரணமாகும் தன் தாள் அடைந்தோர்க்கெலாம் மரணமானால் வைகுந்தம் கொடுக்கும் பிரான் (திவ்ய-3067) என்று நம்மாழ்வார் எம்பெருமானின் அடைக்கலத்தின் சிறப்பை உணர்த்துகிறார்.

சீதாபிராட்டிக்கு அடைக்கலம் தர தன்னுயிர் நீத்த சடாயு போற்றுதற்குரியவன். கருணையாளருக்குரிய சிறந்த பண்பு அடைக்கலம் தருதலாகும்.

அபயம் என்று வந்தவரை அபயதானம் தருவதே நமது கடமை. அதற்கே இப்பிறவி எடுத்தோம் என்று பல சான்றாதாரங்களை எடுத்துக்காட்டி வீடணனுக்கு அடைக்கலம் தருகிறது ராம நாமம்.

தம்மையே தரும் ராமநாமம்

கம்பன் தன் காப்பியம் முழுவதும் நேரடியாகவும் உள்ளுறையாகவும் ராமநாமத்தின் சிறப்பை உணர்த்துகின்றான். தேவர்கள் குறைதீர்த்தது ராமநாமம். தசரதனுக்கு புத்திரபாக்கியம் என்ற செல்வத்தை தந்தது ராமநாமம். விசுவாமித்திரரின் வேள்விகாத்தது ராமநாமம். அகலிகைக்கு சாபவிமோசனம் தந்தது ராமநாமம். சிவதனுசை முறித்தது ராமநாமம். விராதன், சரபங்கன், சபரி, கவந்தன், சடாயு, வாலி, வீடணன் முதலியோருக்கு நன்னெறி காட்டியது ராம நாமம். வேடுவன், குரங்கினம், அரக்கர்குலம் என்ற மூவகைத் தன்மைகளையும் நட்பாக்கியது ராமநாமம். இராமநாமத்தின் பெருமையால் இன்றும் சிரஞ்சிவியாக வாழ்கின்றான் அனுமன்.

கம்பனில் இறையியல்

முனைவர் **அறவாழி,**
ஆங்கிலப் பேராசிரியர், மேனாள் துறைத்தலைவர், அண்ணா பல்கலைக்கழகம், சென்னை

சூரியன் வருவது யாராலே?
சந்திரன் திரிவது எவராலே?
காரிருள் வரவை மின்மினி போல்
கண்ணில் படுவன அவை என்ன?
யாரிதற்கெல்லாம் அதிகாரி? அதை
நாம் எண்ணிட வேண்டாமா? -நாமக்கல் கவிஞர்

நாமக்கல் கவிஞரின் கேள்வி சாட்டையாகச் சுளீரென்று உறைக்கிறது. சூரியன், சந்திரன், விண்மீன்கள் அனைத்துமே சிறிதும் காலம் தவறாது, ஒரு நேரியநியதிக்கு உட்பட்டு இயங்குகின்றன. சந்திரன் மிகச்சரியாக 27 நாட்களுக்குஒருமுறை பூமியைச் சுற்றி வருகிறது. இரவும் பகலும் மாறிமாறி வருகின்றன.

பிரபஞ்சம் முழுவதிலுமே ஒரு நியதி, ஒரு நேரம் தவறாமை உள்ளது. ஆனாலும்அத்தகையப் பிரபஞ்சப் படைப்புகளுக்குப் பின்னேயுள்ள படைத்தவனைப் பற்றிமனிதன் எண்ணுவதில்லை, அவைகளைக்கண்டு வியப்பதில்லை. அவைகளின்அழகை ஆராதிப்பதில்லை. சில நேரங்களில் அவைகள் அனைத்திற்கும் தானேஅதிகாரி என்பது போல் கூட எண்ணுகிறான், செயல்படுகிறான்.

மேலை நாட்டுக் கவிஞன் டி.எஸ். எலியட்டும் மேற்கண்ட எண்ணப் போக்கினைச் சாடுதலைக் காண முடிகிறது. இராட்டினத்தில் சுழன்றுகொண்டிருக்கும் ஒருவன் அதனைத் தானே சுழற்றிக் கொள்ள முடியும் என்றுஎண்ணுவதிலுள்ள மடமையை எண்ணி நகைக்கிறான்:

Only the fool fixed in his folly may think
He can turn the wheel on which he turns.

-T.S. Eliot's 'Four Quartets'

அறத்தையும், அது தந்திடும் ஆக்கத்தையும் ஏற்றுக்கொள்வோரில் பலரும் கூடஇறைவனின் பேரருளினால்தான் இந்தப்பிரபஞ்சம் இடையறாது இயங்குகிறது என்பதை முழுமையாக உணர்ந்தார்கள் இல்லை. 'தேடிச் சோறு நிதம் தின்று', ஏதோ ஒரு அசுரகதியில் அவர்கள்

நாட்களைக் கடத்துகிறார்களேயொழிய,வாழ்க்கையின் விழுமங்களை (எயடரநள) மனத்தில் கொண்டு, இலக்குகளைத் தம்முன் நிறுத்தி, வாழ்வதாகத் தெரியவில்லை. அத்தகையோர்க்கு நல்ல இலக்கியங்கள் பெரிதும் துணைபுரியக் கூடியவையாக அமையும்.

இலக்கியம் என்பதன் தலையாய இரு கூறுகள் களிப்புறச் செய்தலும், கற்பித்தலுமாம். கவிச்சக்கரவர்த்தியாகிய கம்பனது இராமாவதாரம் இலக்கிய உலகே போற்றும் அளவிற்கு இரண்டையுமே மிகச் சிறப்பாகச் செய்திருத்தலைக் காணமுடிகிறது. அவனது ஈடு இணையற்ற கவித்துவமும் கற்பனை வளமும்கற்போரைக் கவர்ந்திழுக்கின்றன. புதை பொருளாக இறையியலையும் ஆங்கே வைத்து படிப்போர்தம் வாழ்க்கையில் அதனை மனத்திற் கொண்டு வாழ்ந்து மேன்மையுறும் வகையில் தனது காவியத்தைப் படைக்கிறான் கம்பன்.

இறைவன் நீக்கமற எங்கும் நிறைந்திருப்பதான தனது கருத்தைத் தெள்ளத் தெளிவாகக் கவிஞன் நிலைநிறுத்திடுகின்றான். ஆங்கிலேய நாட்டுக்கவிஞன் வில்லியம் வேர்ட்ஸ்வொர்த்தும் அங்கெங்கெனாதபடி பரம்பொருள் எங்கும் நிறைந்துள்ளமையை 'Tintern Abbey' எனும் தனது கவிதையில் குறிப்பிடுவது இவ்விடத்தே நோக்கத்தக்கது:

And I have felt
A presence, that disturbs me with the joy
Of elevated thoughts; a sense sublime
Of something far more deeply interfused
Whose dwelling is the light of the setting suns,
And the round ocean, and the living air,
And the blue sky and in the mind of man
A motion and a spirit that impels
All thinking things, all objects of all thought
And rolls through all things. -William Wordsworth's 'Tintern Abbey'

வேங்கடவனையும், சிவபெருமானையும் ஒன்றுபோலக் கருதிப் போற்றுவார் பேயாழ்வார். 'இரண்டுருவும் ஒன்றாய் இயைந்து' பார்த்திடும் அவரைப் போலவே,கம்பனும் சமயம் சார்ந்த சைவ, வைணவ வட்டங்களிலிருந்துத் தன்னைவிடுவித்துக் கொண்டு நாமரூப பேதமற்ற பரம்பொருள் பற்றியே தனது காப்புச்செய்யுளில் பாடத் தொடங்குகிறான்:

உலகம் யாவையும் தாம் உளவாக்கலும்,
நிலைபெறுத்தலும், நீக்கலும் நீங்கலா

அலகு இலா விளையாட்டு உடையார் அவர்
தலைவர் அன்னவர்க்கே சரண் நாங்களே.

என்பதான காப்பியத்தின் கடவுள் வணக்கப்பாடல் என்றென்றும், எந்நாட்டவராலும் எச்சமயத்தாராலும் ஏற்றுக் கொள்ளப்படத்தக்க வகையில் அமைந்தமை கம்பநாடனின் பெருமையை உலகோர்க்கு உணர்த்திக் கொண்டேயிருக்கும் தன்மையது.

படைக்கும் பிரம்மன், காக்கும் திருமால், அழிக்கும் சிவன் ஆகிய மூவருக்கும் முதலாக, மேலாக, இறைவனை வைத்து அவனையே பரம்பொருள் என்று சொல்லி அவனால் படைக்கப் பெற்ற நம் அனைவரையும் தன்னுடன்இணைத்துக் கொண்டு 'அன்னவர்க்கே சரண் நாங்களே' என்று சொல்வது ஆழ்ந்தும், வியந்தும் சிந்திக்கற்பாலது, போற்றுதற்குரியது.அவ்வாறு ஒரு சேர சரணடைந்ததற்குப் பின்னர் பரம்பொருளை நோக்கித் தொடர்ந்து பயணிக்க முடியுமே ஒழிய பின்வாங்குதலுக்கோ, தங்களுக்குள் சச்சரவு செய்து கொள்ளுதலுக்கோ, வழி இருக்காது, தேவையும் இருக்காது. அதுதான் உண்மையான சரணாகதியாகும். கம்பனுக்கு ஆயிரம் ஆண்டுகளுக்குப் பின்னர் வந்த மேலை நாட்டுக் கவிஞன் டி. எஸ். எலியட் ஏறக்குறைய இதே கருத்தைச் சொல்லியுள்ளமை இவ்விடத்து நினைவு கூறத்தக்கது:

The awful daring of a moment's surrender
Which an age of prudence can never retract
By this and this only we have existed. -T.S. Eliot's 'The Waste Land'

கம்பராமாயணத்தையே சரணாகதிக் காவியம் எனப் பலர் அழைப்பர். சரணாகதியை இறை இயலின் ஒரு இன்றியமையாத நிலையாகவே பக்திஇலக்கியங்கள் போற்றுகின்றன.

இராமபிரானின் இறைமையை தனது வாழ்வின் முடிவில் முழுவதுமாக உணர்ந்து தெளிந்த வாலி 'மால் தரும் பிறவிநோய்க்கு மருந்தென வணங்கு மைந்தா' என அறிவுறுத்தி அங்கதனை இராம பிரானிடம் சரணடையச் செய்கிறான். சரணாகதியின் மற்றொருச் சிலிர்ப்பூட்டும் பரிணாமத்தை வீடணன்அடைக்கலப் படலத்தில் காண்கிறோம். ஒரு வேடனின் பசியைப்போக்குவதற்காகத் தன்னையே அர்ப்பணித்திடும் ஒரு புறாவினைப் பற்றிச்சொல்லி அடைக்கலமாக வந்த வீடணனை ஏற்றுக் கொள்கிறான் காகுத்தன்:

பேடையைப் பிடித்துத் தன்னை பிடிக்க வந்தடைந்த பேதை
வேடனுக்குதவி செய்து விறகிடை வெந்தீமூட்டி
பாடுறு பசியை நோக்கி தன் உடல் கொடுத்த பைம்புள்
வீடுபெற்று உயர்ந்த வார்த்தை வேதத்தின் விழுமிது அன்றோ! (6473)

பக்தன் பரம்பொருளிடம் முழுமையாகச் சரணடைந்து உதவி வேண்டிக்கதறும் போது ஆதிமூலத்தால் தவறாது காப்பாற்றப்படுகிறான் என்பதாக இராவணனிடம், இராமபிரானின் காத்தருள் புரியும் பெருமை பற்றி அனுமன்வாயிலாக, கம்பன் சொல்வான்:

போர் அணங்கு இடங்கர் கவ்வ, பொதுநின்று 'முதலே' என்ற
வாரணம் காக்க வந்தான், அமரரைக் காக்க வந்தான். (5883)

கதறும் பக்தனைக் காத்திடும் இறையருள்பற்றி பாரதியின் பாஞ்சாலி சபதமும் பரக்கப் பேசுவதை இங்குக் குறிப்பிடுதல் பொருத்தம் உடையது.

துச்சாதனன் பாஞ்சாலியைத் துரியோதனன் சபைக்கு அவளது கூந்தலைப் பற்றி இழுத்துச் செல்கிறான். பாஞ்சாலி கோவெனக் கதறுகிறாள். இருமருங்கிலும்இருப்போர்கள் எல்லாம் அக்காட்சியின் கொடுமையை உணர்கிறார்களே அன்றி குறுக்கிடுகிறார்கள் இல்லை, பாஞ்சாலியின் இடுக்கண் களைய முனையவில்லை. துகிலுரிக்கப்படும் பாஞ்சாலி அலறுகிறாள், அரற்றுகிறாள். மானத்தைக்; காத்துக்கொள்ள வேண்டி இயன்ற வரை போராடுகிறாள். சோர்ந்து போன நிலையில் 'ஈசனே, சரணடைகிறேன் காப்பாற்று' என்று சொல்லி மூர்ச்சை யாகிறாள். பரம்பொருள் அவளைக் காத்தருள்புரிகிறது. இராம பிரானது திருவடிகளின் 'ஸ்பரிசம்' பட்டவுடனேயே அரக்கன்விராதன் கந்தர்வனாக மாறி இராமபிரானைத் தொழுவதும், துதிப்பதும் நெஞ் சைஉருக்குவதாக அமைகின்றன:

வேதங்கள் அறைகின்ற உலகு எங்கும் விரிந்தன உன்
பாதங்கள் இவையென்னின், படிவங்கள் எப்படியோ? (2563)

என்று அவன் வியந்து பரவசப்பட்டதை விவரிக்கும்போதும்

தாய் தன்னை அறியாத கன்றில்லை; தன் கன்றை
ஆயும் அறியும்; உலகின் தாய்ஆகின, ஐய்
நீ அறிதி எப்பொருளும்; அவை உன்நிலையறியர்
மாயை இது என்கொலோ? வாராதே வரவல்லாய்? (2570)

என்று அவன் வியந்ததை விரித்து வடிக்கும்போதும் கம்பனது இறையியல் மாணிக்கவாசகப் பெருமானின், **'பால்நினைந்தூட்டும் தாயினும் சாலப்பரிந்து'** அருள் பாலிக்கும் சிவனை நினைவூட்டுகிறது. படைத்தவனில் பிரவாகம் எடுக்கும் தாயன்பையும், படைக்கப்பட்டவனின் அறியாமையையும் இதைவிட எளிமையாகவும், இலக்கிய நயத்துடனும் கம்பனாலேகூட புலப்படுத்த முடியாது எனலாம்!!

இராமவதாரத்தில் அறம் ஓங்கி, அதனை எதிர்த்து நின்ற அறமின்மைதோற்றிடத் தொடங்கும் நிலையில் இராமபிரானின் பெருமை உணர்ந்து, மெய்சிலிர்த்து இராவணனே சொல்கிறான்:

சிவனோ? அல்லன் நான் முகனல்லன்; திருமாலாம்
அவனோ அல்லன் எம் வரம் எல்லாம் அடுகின்றான்
தவனோ என்னின், செய்து முடிக்கும் தரன் அல்லன்
இவனோதான் அவ்வேத முதற் காரணன் என்றான். (9837)

ஆணவமும் 'தான்'; எனும் அகந்தையும் ஒருங்கே பெற்றவன் இராவணன். அவ்வகையில் இரணியனும் அத்தகையவனே. வான்மீகத்தில் இல்லாத இரணியவதைப்படலத்தைத் தன் காவியத்திற்குள் கொண்டுவந்து உலகத்தில் எந்த இலக்கியத்திலும் காணப்பெறாத ஒரு ஒப்பிலாக ; கவித்துவத்துடன் தனது இறையியல் கொள்கையைப் புலப்படுத்துகிறான் கம்பன். 'கடவுள் இல்லை,

தானே எல்லாம்' என்பதாக இறுமாந்திருந்தத் தனது தந்தையைப் பார்த்துப் பிரகலாதன் நீக்கமற நிறைகின்ற பரிபூரணானந்தமான பரம்பொருளாகிய திருமால் தனது அனைத்துப் படைப்புகளுள்ளும் இருக்கிறான் எனச் சொல்கிறான்:

உலகு தந்தானும், பல்வேறு உயிர்கள் தந்தானும், உள்உற்று
உலைவிலா உயிர்கள் தோறும் அங்கங்கே உறைகின்றானும்
மலரினில் மணமும் எள்ளின் எண்ணெயும் போல் எங்கும்
அலகில் பல்பொருளும் பற்றி முற்றிய அரிகான்! அத்தா! (6308)

இறுமாந்திருந்த இரணியனுக்கு உய்வுபெற வழிகாட்டுகிறான் அவனது மைந்தன் பிரகலாதன். ஆனால் அசுரர்க்கு அரசனாகிய, இரணியன் அது கேட்டு எள்ளி நகைத்து அவனருகே இருந்தத் தூணிலும் அந்த 'வஞ்சகன்' இருப்பதை உறுதிசெய்து கொள்ளத் தலைப்படும் நிலையில் பிரகலாதன் தன் தந்தையைநோக்கிச் சொல்வதாயினான்:

சாணிலும் உளன் ஓர் தன்மை, அணுவினைச் சதகூறிட்ட
கோணிலும் உளன், மாமேரு குன்றிலும் உளன்; இன்நின்ற
தூணிலும் உளன், நீ சொன்ன சொல்லிலும் உளன்; இத்தன்மை
காணுதி விரைவில் என்றான்; 'நன்று' எனக் கனகன் நக்கான். (6312)

ஆணவத்தின் அதிபதியான இரணியனைக் கொன்ற பின்னரும் நரசிங்கப்பெருமானின் சினம் குறைந்தபாடில்லை. அதைக் கண்ணுற்ற தேவர்களெல்லாம் நடுங்கி, ஒடுங்கி நிற்க, நரசிங்கத்தின் சீற்றம் தணிய வேண்டி அனைத்தையும் படைத்திடும் ஆதிப்பிரம்மனே இறைஞ்சுகிறான்:

நின்னுளே என்னை நிருமித்தாய், நின் அருளால்,
என்னுளே, எப்பொருளும், யாவரையும் யான் ஈன்றேன,;
பின் இலேன், முன் இலேன், எந்தை பெருமானே!
பொன்னுளே தோன்றியது ஓர் பொற்கலனே போல்கின்றேன். (6348)

முழுமையாகச் சரணடைந்து, பரம்பொருளோடு ஐக்கியமான பின்னர் 'தான்வேறு, தன்னைப் படைத்தவன் வேறு' என்பதான எண்ணமே பொருளற்றதாக ஆகிவிடுகிறது. அந்நிலையில் பொன்னும் பொற்கலனும் ஒன்றாகி சினம் நீங்கி அமைதியும் ஆனந்தமும் கோலோச்சத் தொடங்குகின்றன.

கவியோகி சுத்தானந்த பாரதியாரின் இரணிய வதைப்படலத்தைப் பற்றிய கருத்துக்கள் இங்கே கருதத்தக்கவை:

"இரணியன் கதை வால்மீகியில் இல்லாத புதுமை; அழகிய சிங்கர் சிலையே அதற்கு நெகிழ்ந்தது; சொற்சிங்கத்தைக் கற்சிங்கம் கைதூக்கி ஆசீர்வதித்தது. கலையுருவான கம்பச் சித்திரத்தைக் கல்லுருவான நரசிங்கம் வியந்து போற்றி இன்பக் கூத்தாடியது. மில்தனும் தாந்தேயும் கேட்டால் கம்பனை உச்சிமேல் வைத்துக் கொண்டாடுவார்கள்" (கவியோகி சுத்தானந்த பாரதியார், 'அன்பனைக்காத்த அருட்சிங்கம்" உங்கள் கம்பன், (சென்னை : பி.ஸ்ரீ நூலகம், 1959), 104.)

இலக்கிய உலகில் ஒரு சில இலக்கியப் படைப்புகள் படிப்பவர்களைக் களிப்புறச் செய்கின்றன. வேறு சில படிப்போரின் வாழ்க்கையை நெறிப்படுத்த முனைகின்றன. மிகச் சிலவே தமது இலக்கிய நயத்தால் கவர்ந்திழுத்து படிப்போரை மகிழ்வுறச் செய்யும் போதே அவர் தம் வாழ்க்கையில் செம்மையுற்றுஉயர்ந்திடவும் உறுதுணையாக அமை

கின்றன. மேற்காணும் மூன்று வகைகளுள் கம்பனது இராமாவ தாரம் மூன்றாம் வகையைச் சேர்ந்தது என்பது வெள்ளிடை மலை. இக் காப்பியம் உலகோர்க்கு ஒரு பெரும் இலக்கிய விருந்தாக இருப்பது மட்டுமின்றி, வாழ்க்கைப் பயணத்தில் திக்குத் தெரியாதுத ; திகைத்து நிற்போர்க்கு கலங்கரை விளக்கம் போன்ற ஒளி உமிழும் ஒரு வழி காட்டியாகவும், மனம்போன போக்கில் கால்போகச் செய்யும் நெறி-யிலார்க்கு, பின்வரவிருக்கும் கேட்டினை முன்கூட்டியே அறிவுறுத்தி அவர்களை மடைமாற்றம்செய்யத்தூண்டும் ஒரு வாழ்வியல் நூலாகவும் அமைந்து சிறக்கிறது. அதனிலும் மேலாக, வேண்டுதல் வேண்டாமை-யிலானின் தாள்சேர்வதற்கு இராமாவதாரத்தினூடே ஒளிவீசும் இறை-யியல் துணைநிற்கும் என்பதும் அதன்விளைவாக நெறியின் புறம்செலா, யாண்டும் இடும்பையிலா, ஒரு மானிட சமுதாயம் என்றோ ஒருநாள் மலரும் என்பதும் உறுதி.

முன்பு பின்பு இன்றி...

முனைவர் **மு.பழனியப்பன்**
தமிழாய்வுத் துறைத்தலைவர், மன்னர் துரைசிங்கம் அரசுகலைக்கல்லூரி,சிவகங்கை

முக்காலங்களில் சிறப்படையது எதிர்காலம். இன்றைய காலத்தில் நின்றுகொண்டு, நேற்றைய காலங்களில் நடந்த தவறுகளைத் திருத்திக்கொண்டு நாளைய காலத்தை வளமாக அமைத்துக்கொள்ள வாய்ப்பிருப்பதால் எதிர்காலம் நம்பிக்கைக்குரிய காலமாக விளங்குகின்றது. எதிர்காலத்தில் நிகழ உள்ள, நிகழவேண்டிய நடப்புகளை இன்றைக்கு அல்லது நேற்றைக்குச் சொல்லுவது என்பது எதிர்காலவியல் ஆகின்றது. வரலாறு, தற்கால மாற்றங்களின் போக்குகள், விஞ்ஞானத் தொழில்நுட்ப வளர்ச்சி நிலைகள் போன்ற பல அம்சங்களின் துணையுடன் எதிர்காலத்தை நோக்கி பகுப்பாய்வது, வருவதுரைப்பது எதிர்காலவியல் (Future Studies) ஆகும் என்று எதிர்காலவியலுக்கான வரையறையைத் தருகின்றது விக்கிப்பீடியா. அறிவியல், சமுதாம் போன்றவற்றில் தகுதி மிக்க வளர்ச்சிகளை எடுத்துரைப்பது எதிர்காலவியல் ஆகின்றது.

கம்பராமாயணம் தொன்மை வாய்ந்த கதையாகும். இக்கதையை மீட்டு எடுத்துத் தமிழில் தன்னிகரற்ற காப்பியமாகக் கம்பர் வரைகின்றார். கம்பர் காலத்தில் இருந்து இதனைக் கண்ணுறும்போது கம்பரின் காலம் நிகழ்காலம் ஆகும். இராமாயணக்காலம் கடந்த காலம் ஆகும். கம்பராமாயணம் தற்போது ஆராயப்படும் காலத்தில், படிக்கப்படும் காலத்தில் அது எதிர்காலத்திற்கும் பொருந்துவதாகப் படைக்கப்பெற்றிருப்பது தெரியவருகின்றது. பற்பல புதிய துறைகளில் கம்பர் தன் கருத்துகளைப் பதிவு செய்திருப்பது கருதி எதிர்கால எல்லைக்கும் ஏற்ற வகையில் கம்பர் தன் காப்பியத்தைப் படைத்துள்ளார் என்பது தெரியவருகின்றது.

கம்பராமாயணத்தில் இராமனுக்கு முடிசூட்டுவிழா நடைபெறப் போகிற சூழலில் எதிர்காலத்தில் அமையவிருக்கும் ஆட்சியைப் பற்றியும் அது நடைபெறவேண்டிய நெறிகள் பற்றியும் வசிட்டர் எடுத்துரைக்கிறார். இதனைத் தொடர்ந்து இராமன் கிட்கிந்தை அரசைப் பெற்று அதனை சுக்கிரீவனிடத்தில் ஒப்படைக்கின்றபோதும் எதிர்காலச் சிந்தனைகள் பொருந்திய அரசினைச் சமுதாயத்தைப் படைக்க எடுத்துக்கொண்ட

முயற்சி தெரியவருகின்றது. அதுபோன்று வீடணனுக்கு அரசை அளிக்கின்றபோதும் எதிர்காலத்தில் இலங்கையில் நல்லாட்சி நடைபெற வேண்டும் என்ற எண்ணத்துடன் இராமன் செயல்படுவதாகக் கம்பர் காட்டுகின்றார். இந்த மூன்று அரசியல் சூழல்கள் மிக முக்கியமானவை.. இவற்றை ஒருங்கிணைத்துப் பார்த்தால் கம்பரின் எதிர்காலக் கணிப்புகள் இவை என்பதை உணர்ந்து கொள்ள இயலும்.

இந்த மூன்று சூழல்களிலும் அரசிற்கு அனுபவம் இல்லாத புதியவர்கள் அரசுரிமை ஏற்க வருகிறார்கள் என்பது கவனிக்கத்தக்க ஒன்று. அதாவது இராமன், சுக்கிரீவன், வீடணன் ஆகிய மூவரும் முதன் முறையாக அரச பதவி ஏற்கப் போகிறார்கள். புதியவர்களாக உள்ள இவர்களிடம் அரசியல்,ஆட்சியியல் ஆகியவற்றை ஒப்படைக்கும்போது பழைய குறைகள் களையப்படும் என்று கம்பர் எண்ணியுள்ளார். புதியதோர் உலகைப் படைக்கப் புதியவர்கள் மிகத் தகுதியானவர்கள் என்பது இங்குக் கருதத்தக்கது. மேலும் இம்மூன்று சூழல்களிலும் மூவகை வேறுபாடுகள் இருப்பதை உணரவேண்டியுள்ளது.

இராமன் என்ற புதியவருக்கு அரசு நாளை என்று அமைந்தபோது அது அடையப்படாமல் கதை நகர்கிறது. வீடணனுக்கு உரிமை என்பது இலங்கை அரசாக இராவணன் இருக்கும்போதே ஏற்படுத்தப் பட்டு விடுகின்றது. சுக்ரீவனின் அரசு மட்டுமே முன் உள்ள அரசியலாளரான வாலி இறந்தபின் அந்த இடத்தை நிரப்புவதற்காக ஏற்படுத்தப்படுகிறது. இம்மூன்று அரசுகளை அமைக்கின்றபோது சுக்கிரீவனின் கிட்கிந்தை அரசு மட்டுமே உறுதி என்ற நோக்கத்தில் அமைந்தது என்பதை அறியவேண்டியுள்ளது. இராமனின் ஆட்சிக் கனவு கலைகின்றது. வீடணனின் ஆட்சி என்பது இராவணன் அரசனாக இருக்கும்போது மாற்று அரசாக உருவாக்கப்பெற்றது. இந்தச் சிற்சில வேறுபாடுகள் காரணமாக சுக்கிரீவனின் அரசினைச் செம்மைப்படுத்த இராமன் பற்பல கருத்துகளை மொழிய வேண்டியவராகப் படைக்கப்பெற்றுள்ளான்.

வசிட்டர் வழியில் எதிர்காலச் சமுதாயமும், அரசும்

இராமனுக்கு நாளை முடிசூட்டுவிழா என்ற நிலையில் வசிட்டர் நாளைக்கு அரசமைக்க உள்ள இராமனுக்குச் சில அறிவுரைகளைப் பகர்கின்றார். இவ்வறிவுரைகள் கம்பரின் எதிர்காலச் சிந்தனைகளை எடுத்தியம்புவனவாக இருக்கின்றன.

என்புதோல் உடையார்க்கும் இலார்க்கும் தாம்
வன் பகைப்புலன்மாசு அற மாய்ப்பது என்?
முன்பு பின்பு இன்றி மூவுலகத்தினும்
அன்பின் நல்லது ஓர் ஆக்கம் உண்டாகுமோ (24)

என்ற பாடல் எதிர்காலவியல் சிந்தனை கொண்ட பாடலாகும். முக்காலம் .பிற்காலமாகிய எதிர்காலம் ஆகிய எல்லா காலத்திலும் அன்பின் அடிப்படையில் சமுதாயம் அமையவேண்டும் என்ற விழைவினை இப்பாடல் தெரிவிக்கின்றது.

எதிர்காலத்தில் ஆட்சியாளர்கள் கைக்கொள்ளவேண்டிய பண்புகளை மற்றொரு பாடல்வழி வசிட்டர் இராமனுக்கு உணர்த்துகிறார்.

வையம் மன்னுயிர் ஆக அம் மன்உயிர்
உய்யத் தாங்கும் உடல் அன்ன மன்னனுக்கு
ஐயம் இன்றி, அறம் கடவாது, அருள்
மெய்யில் நின்றபின் வேள்வியும் வேண்டுமோ (25)

இப்பாடலில் எதிர்கால ஆட்சி ஐயத்தின்மை இல்லாமல் தெளிவு பட இருக்க வேண்டும் என்கிறது. அவ்வாறாயின் ஆட்சிக்கு வருபவர்கள் அவர்களின் வழி ஆகியன எந்தக் குடிமகனுக்கும் ஐயத்தைத் தராத வகையிலும், ஆட்சியாளரின் வாழ்முறையில் எவ்வித சந்தேகத் தன்மையும் இல்லாமல் இருத்தலாகும். அறத்தைக் கடக்காமல், உண்மையில் நின்று செய்யும் ஆட்சியே எதிர்காலத்தில் வேண்டப்படுவது என்பது இங்குக் குறிக்கத்தக்கது.

அடுத்தடுத்த பாடல்களில் அரசனுக்கு வேண்டிய குணங்களைப் பட்டியலிடும் வசிட்டர் இன்னும் பல செய்திகளைத் தொடர்ந்து அடுக்குகிறார். பொன்னை நிறுக்கும் தாராசின் இயல்பினைப் போல நடுவுநிலைமையோடு ஆட்சியாளன் அமையவேண்டும். அமைச்சரும், சான்றோரும் சொல்லிய முறையில் அவன் ஆட்சி நடத்தவேண்டும்.

மங்கையரால் வரும் காமத்தை அரசியலாளர்கள் துறக்கவேண்டும் என்பதும் இங்கு வசிட்டரால் வைக்கப்படும் வேண்டுகோள். இவற்றை யெல்லாம் தாண்டி போர் அற்ற எதிர்கால உலகைக் கம்பர் இங்கு கனவு காண்கிறார்.

யாரொடும் பகை கொள்ளலன் என்ற பின்,
போர் ஒடுங்கும்; புகழ் ஒடுங்காது; தன்

தார் ஒடுங்கல் செல்லாது; அது தந்தபின்,
வேரொடும் கெடல் வேண்டல் உண்டாகுமோ? (21)

என்ற இப்பாடல் இன்றுவரை எதிர்காலவியல் பாதையாகவே அமைந்துள்ளது. வசிட்டர் இராமனுக்குச் சொன்ன இவ்வுரைகள் எதிர்காலத்தில் யார் ஆட்சியாளர்களாக வந்தாலும் ஏற்று நடக்கவேண்டிய நல்லுரைகள் ஆகும்.

இராமனின் வழியில் எதிர்காலச் சமுதாயமும் ஆட்சியும்

இராமன் சுக்கிரீவனுக்கும், வீடணனுக்கும் அவர்களின் ஆட்சிக் காலத்தில் மக்களும். சமுதாயமும் நடக்க வேண்டிய முறைகளை அவர்களின் முடி புனையும் காலத்தில் எடுத்துரைக்கின்றான். இவற்றைத் தொகுத்துக் காணுகையில் இவை கம்பரின் எதிர்காலச் சிந்தனைகளை எடுத்துரைப்பதாக உள்ளன.

அரசன் தன் சுற்றத்தோடு இயைந்து நடக்கவேண்டியமுறையை இராமன் "சேய்மையோடு அணிமை" என்ற கொள்கையைப் பின்பற்ற வேண்டும் என்கிறான். அதாவது அரசியல் சுற்றத்தை மிக நெருங்காமலும், மிக அணுகாமலும் இருக்க வேண்டும் என்ற அரசியல் நடைமுறை இங்குக் கற்றுத்தரப்படுகின்றது.

மேலும் அரசியல் வல்ல அமைச்சர்கள் சொல்லும் சொற்களை ஏற்று அவர்கள் காட்டும் வினையத்தையும் ஏற்று ஆட்சி நடத்தவேண்டும் என்பது இராமனின் கூற்று.

மேலும் சமுதாயம் என்பது மூவகையினரை உடையது என்கிறான் இராமன். நண்பர், அயலார், விரவார் என்போர் அம்மூவர் ஆவர். எதிர்கால சமுதாயத்தினைப் பற்றியது இக்கருத்து.இதில் எதிரிகள் இல்லாமல் இருப்பது கருதத்தக்கது.

எதிர்கால சமுதாயம் எளியோர்களைத் துன்பப்படுத்தும் சமுதாயமாக இருந்துவிடக்கூடாது என்பது கம்பரின் எண்ணம்.

சிறியர் என்று இகழ்ந்து நோவுசெய்வன செய்யல்; மற்று, இந்
நெறி இகழ்ந்து, யான் ஓர் தீமைஇழைத்தலால், உணர்ச்சி நீண்டு,
குறியது ஆம் மேனி ஆய கூனியால், குவவுத் தோளாய்!
வெறியன எய்தி, நொய்தின் வெந் துயர்க் கடலின் வீழ்ந்தேன் (417)

என்ற இந்தப் பாடலில் நலிந்தோர்க்கும் நல்லரசாக எதிர்கால அரசு அமைய வேண்டும் என்ற எண்ணத்தைக் கம்பர் பதிவுசெய்கிறார்.

குறிப்பாக இங்கும் மங்கையர் பொருட்டால் மரணம் எய்தும் என்று மகளிர்க்குத் துன்பம் தராத அரசாக எதிர்கால அரசுஅமைய வேண்டும் என்று கம்பர் விரும்புகின்றார்.

எதிர்கால சமுதாயத்தில் பாதுகாக்கத்தக்கவர்கள் பாதுகாக்கப்பட வேண்டும். தீயவரை அறத்தின் வழியில் தண்டனைக்கு உள்ளாக்க வேண்டும் என்ற நெறிகளையும் பின்பற்ற இராமன் வாயிலாக கம்பர் வேண்டுகின்றார். அறத்தின் வழி அரசு நிலவ வேண்டும் என்பதும் கம்பரின் எதிர்கால அரசியல் நெறிகளுள் ஒன்று.

இவற்றைத் தொகுத்துக் காணுகையில் தற்காலத்தில் நடக்கும் சமுதாயக் கேடுகள் அவற்றைத் தீர்க்கும் முறைகள் ஆகியனவற்றைக் கம்பர் எதிர்கால நோக்கில் தன் இலக்கியத்தில் சிந்தித்திருப்பது தெரியவருகின்றது.

வீடணனுக்கு முடி சூட்டப்படும்காலத்தில் அவனிடத்தில் ஓரிரு செய்திகளைப் பகிர்ந்து கொள்வதற்கு மட்டுமே இராமனுக்கு நேரம்வாய்க்கின்றது.

"இனிது இருத்தி, இலங்கைச்செல்வம் நின்னதே" என்று சிற்சில சொற்கள் பேசி இராமன் வீடணனுக்கு எதிர்காலத்தில் அமையப்போகிற அரசை வழங்குகின்றான். இந்த நிகழ்வால் **"தனித்தனி வாழ்ந்தேம் என்ன ஆர்த்தன உலகில் உள்ள சராசரம் அனைத்தும் அம்மா"** (வீடணன் அடைக்கலப்படலம். 140) என்று குறிப்பிடுகின்றார் கம்பர். இதன்வழி எதிர்கால சமுதாயத்தில் தனித்தனியாக உள்ள அத்தனை உயிர்க்குடும்பங்களும் மகிழும்படியான ஆட்சி மலரவேண்டும் என்று கண்டுள்ளார் என முடிய முடிகின்றது.

கம்பர் காலத்தில் எதிர்காலமாக விளங்கிய இந்நிகழ்காலம் சிறப்பாக அமைய, இந்நிகழ்காலக் கொடுமைகள் நீங்கக் கம்பர் பலவாறு சிந்தித்துள்ளார். இந்நிகழ்காலத்திலிருந்தும் இன்னும் பயணிக்க உள்ள எதிர்காலம் வரையிலும் கம்பரின் கருத்துகள் வேண்டற்பாலன.

கவிப்போக்கும் காலப்போக்கும்

மருத்துவர் **என். ராம்**
இலண்டன்.

காலத்தை நாம் கடக்கின்றோமா அல்லது காலம் நம்மைக் கடக்கின்றதா?

இதில் ஏதேனும் தோற்றப்பிழையும் உண்டா?

நம்முடைய இரயில் நின்றுகொண்டிருக்கிறது. பக்கத்து பிளாட்பாரத்தில் வேறொரு இரயில் எதிர்த்திசையில் போய்க்கொண்டிருக்கிறது. நமது இரயில்தான் போய்க்கொண்டிருக்கிறதுஎன்று ஏமாந்து விடுகிறோம்.

தத்துவ இயலாரும், அறிவியலாரும் ஆர்வத்தோடு கருத்துப் பரிமாற்றம் நிகழ்த்தும் விஷயம் இது. பல விடைகள்உண்டு என்றாலும் மகாகவி பாரதியார் சொல்வதையும் கேட்போம்.

'காலமென்றே ஒருநினைவும் காட்சிஎன்றே பல நினைவும்
கோலமும் பொய்களோ? - அங்குக் குணங்களும் பொய்களோ?
காண்பதுவே உறுதிகண்டோம் காண்பதல்லால் உறுதி இல்லை
காண்பது சத்தியாம்- இந்தக் காட்சி நித்தியமாம்'

இன்னும் தெளிவாகச் சொன்னால், 'தேளின் உருவம் மாத்திரம் பொய்யோ? அது கொட்டுவதும் பொய்தானோ?' என்று விளக்கம் கொடுக்கிறார் பாரதியார்.

காலமும் காட்சியும்

காலமும் மனிதனும் சந்திக்கும் அந்த நுண்ணிய பொழுதில் கிடைத்தற்கரிய மானிட வாழ்வை அவன் சரியாக அணுகிச் சரியாக வாழ்ந்தானா அல்லது நிலையற்ற பொருள்களை நிலையென்று கருதி வாழ்வை வீணடித்தானா? முக்கியமான இந்த விஷயத்தில் வழிகாட்டவே மகான்கள்தோன்றினர்; மாபெரும் இலக்கியங்களும் தோன்றின.

இயற்கையையும் மனிதனையும் பொருத்திப் பார்த்த கம்பரின் அற்புதமான அயோத்தியா காண்டப் பாடலை இங்கே நினைவு கூர்வோம். தம்முடைய வாழ்வை நிலையானது என்று எண்ணிக் கொண்டிருக்கும் மனிதர்கள்ஒவ்வொருவராய்இறப்பதையும், புதிய

புதிய உயிர்கள்பிறப்பதையும் பார்க்கிறார்கள். தினந்தோறும் காலையில் கதிரவன் உதிப்பதும், மாலையில் மறைவதும் இதே உண்மையைத்தான் உணர்த்துகின்றது என்கிறார் கம்பர்.

'இறக்குமாறு இதுஎன் பான்போல்
முன்னைநாள்இறந்தான் பின்னாள்
பிறக்குமாறு இதுஎன் பான்போல்
பிறந்தனன் பிறவா வெய்யோன்'

என்பது அந்தப் பாடல் வரிகள்.

கதிரவனுக்குப் 'பிறவா வெய்யோன்' என்று கம்பர் அடைமொழி கொடுத்தது சிந்திக்கற்பாலது. இயற்கை என்றும் உள்ளது. அது தோன்றுவதும் மறைவதும் ஒரு தோற்றமே. ஆனால் இயற்கைக்கு அழிவில்லை.

கம்பன் பெருமையும் தமிழின் பெருமையும் குறிப்பிட்டு பாரதியார் சொல்கிறார்:

'எல்லையொன்றின்மை' யெனும் பொருள தனைக்
கம்பன் குறிகளாற் காட்டிட முயலும்
முயற்சியைக் கருதியும், முன்பு நான் தமிழச்
சாதியை அமரத்தன்மை வாய்ந்தது என்று
உறுதிகொண் டிருந்தேன் ... ...

'எல்லை ஒன்று இன்மை' (infinity) என்று பாரதியார் குறிப்பிடும் தத்துவத்தை கம்பர் எங்ஙனம் குறிகளாற் காட்டுகிறார் என்பது கம்ப ராமாயணத்தை விரிவாகவும் ஆழமாகவும் கற்போர் அறிந்து வியக்கும் விஷயமாகும். இடம், காலம், தத்துவார்த்தம் என்று மூன்றுதுறைகளிலும் எல்லையோ முடிவோ இல்லாமல் விரிந்து கிடப்பதை இன்றைய அறிவியலும்,

தத்துவஇயலும் ஏற்றுக்கொள்கின்றன. பிரபஞ்சத்தை Universe என்று கருதியது மாறி Multiverse என்று இன்றைய அறிவியல் சிந்திக்க ஆரம்பித்து இருக்கிறது. இதை எல்லாம் எண்ணும் போது பாரதியார் எவ்வளவு நுட்பமாக கம்பர் பெருமையை உணர்ந்திருக்கிறார் என்பது மட்டுமல்ல, இனிவரும் எதிர்காலத்தில் கம்பர் கவியின் நுட்பத்தை மேன்மேலும் உலகம் உணரும் என்பதும் உறுதி.

அறம் - பொருள்- இன்பம்

காலம், நாடு என்ற கட்டுப்பாடுகளை யெல்லாம் கடந்து எதிர்காலத்திலும் கம்பன் காவியம் எப்படி வழிகாட்டப் போகிறது என்பதை அறிய இலக்கியத்தின் பொதுவான நோக்கை உணர வேண்டும். 'அறம் வெல்லும், பாவம் தோற்கும்' என்ற தத்துவத்தை வலியுறுத்தத்தான் எல்லா இலக்கியங்களும் தோன்றின என்றாலும் கம்பன் காவியத்தின் சிறப்பு என்னவென்றால் இந்தப் பொதுவான தத்துவத்தைப் பத்தா-யிரத்துக்கும் மேற்பட்ட கவிதைகளில் ஒரு காவியத்தைப் படைத்து அதில் தன்னுடைய ஒப்பற்ற கல்வி அறிவையும் கற்பனைவளத்தையும் ஒன்று சேர்த்து உலக மகா காவியங்களில் ஒன்றாக உயர்த்தித் தமிழுக்கும் பெருமை சேர்த்ததுதான்.

கவிச்சக்ரவர்த்தி கம்பன் படைத்த காவியத்தில் வரும் தேவர்களோ, அரக்கர்களோ, மனிதர்களோ, விலங்குகளோ அந்தப் பாத்திரங்களின் வாயிலாக கம்பன் மானிட இனத்தோடுதான் பேசுகிறார் என்பதை எண்ணிப் பார்க்கும் போது இது காலத்தை வென்ற காவியம் என்பது தெளிவாகிறது.

பணத்தையும், அதிகாரத்தையும், படாடோபங்களையுமே பெரிதெனக் கொண்டு அவற்றை நோக்கியே தன்னுடைய நேரம், முயற்சி அனைத்தையும் செலவழித்துக் கொண்டிருக்கும் நாட்களில் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். எல்லா நாடுகளிலும் எல்லா மக்களிடையேயும் இதுவே இன்றைய நிலை இதன்மூலம் அழியாத இன்பத்தை அடைய இயலுமா?

கம்பர் வழி காட்டுகிறார் - கேளுங்கள்.

'முக்கோடி வாழ்நாளும் முயன்றுடைய
பெருந்தவமும் முதல்வன் முன்னாள்
எக்கோடி யாராலும் வெலப்படாய்
எனக்கொடுத்த வரமும் ஏனைத்
திக்கோடும் உலகனைத்தும் செருக்கடந்த
புயவலியும்...'

உடையவன் இராவணன். ஆனால் அவனுடைய கல்வியும், தவமும், ஆற்றலும், அனுபவமும், வீரமும், ஆண்மையும் அவனுக்குக் கடைசியில் கைகொடுக்கவில்லையே ஏன்?

காரணம் உள்ளத்தில் புகுந்த முறையற்ற காமமும், திருந்தும் வாய்ப்புகளையும் தூக்கி எறிந்த ஆணவமுமே ஆகும். சீதையை 'இதயமாம் சிறையில் வைத்தான்.' ஆனால் இறுதியிலோ

'கள்ளிருக்கும் மலர்க்கூந்தல் சானகியை மனச்சிறையில்
கரந்த காதல்
உள்ளிருக்கும் எனக்கருதி உடல் புகுந்து தடவியதோ
ஒருவன் வாளி?'

என்று அறத்தின் முன்னே ஆணவமும் காமமும் அழிந்து பட்டன. அதில் 'ஒருவன் வாளி' என்பதற்கு இரண்டு வகைகளில் பொருள்கூறுகிறார் அறிஞர் அரசஞ் சண்முகனார். 'ஒப்பற்ற இராமபிரான் அம்பு' என்பது ஒரு பொருள். 'வன்மையுடைய அம்பு' என்பது மற்றொரு பொருள். 'வன்வாளி' என்பது பாவத்தை அழிப்பதில் அந்த அம்பு காட்டும் வலிமையைக் காட்டுகிறது.அறம், பொருள், இன்பம் என்ற மூன்றில், ஒருவன் எவ்வளவுதான் பொருட்பாலில் வெற்றி பெற்றாலும் அது அறத்தின் அடிப்படையில் இல்லை என்றால், இன்பம் கிடைக்காது" என்ற உண்மையைப் பத்தாயிரம் பாடல்களில் கற்பனைக் கெட்டாத அழகை யெல்லாம் குழைத்துத் தந்தாரே, இந்தக் கம்பன் காவியம் இந்தக் காலத்துக்கு மட்டுமல்ல, இனி எல்லாக் காலத்துக்கும் வழி காட்டும் என்பதில் ஐயமென்ன?

கம்பரின் இயற்கை நேசம்

தமிழ்த் தாத்தா உ. வே. சா. அவர்கள்தம்முடைய ஊராகிய உத்தமதானபுரத்தைப் பற்றி 'என் சரித்திரத்தில்' எழுதுகிறார்:

'இவ்வளவு ரூபாயென்று கணக்கிட்டுச் சொல்லும் ஆஸ்தி அந்தக் காலத்து உத்தமதானபுரவாசிகளிடம் இல்லை; ஆயினும் நீரும் நிழலும் தானியங்களும் இருந்தன. அவர்களுடைய வாழ்க்கையில் வேகம் காணவில்லை; அதனால் ஒரு குறைவும் வந்துவிடவில்லை. அவர்களுடைய உள்ளத்தில் சாந்தி இருந்தது. இப்போதோ அந்தச் சாந்தியை எங்கேயோ போக்கிவிட்டு வெகுவேகமாக ஓடிக்கொண்டே இருக்கிறோம், நம்முடைய வேகம் அதிகரிக்க அதிகரிக்க அந்தச் சாந்திக்கும் நமக்கும் இடையிலுள்ள தூரம் அதிகமாகின்றதேயொழியக் குறையவில்லை!'

உ. வே. சா. காலத்திலேயே இப்படி என்றால் இன்றைக்குக் கேட்கவா வேண்டும்?

கம்பரும் பாரதியாரும் உலகமும் வாழ்க்கையும் பொய்அல்ல. நித்தியமே என்று கூறியதை முன்பு பார்த்தோம். இவ்வளவு நிதர்சனமான. இவ்வளவு சத்தியமான இந்த மண்ணுலகத்தை மனிதன் தன்னுடைய சுயநலத்தால், பொறுப்பற்ற தன்மையால். பொருளாதார வெறியால் பாழாக்கலாமா என்பது இன்று சுற்றுப்புறச் சூழல் பற்றி எண்ணுவோர் உள்ளத்திலும் உள்ள கேள்வி.

இந்த மண்ணுலகத்தை. அதிலுள்ள மரம் செடி கொடி மனிதர்கள்உட்பட அத்தனை உயிரினங்களையும் அணு அணுவாக நேசித்த கம்பர் தன்னுடைய காவியம் முழுவதும் இயற்கையைப் போற்றியுள்ளார். இதுபற்றிய ஆழமான ஆராய்ச்சி செய்து கம்பன் பாடல்களின் நோக்கத்தை வெளிப்படுத்தியுள்ள பேராசிரியர் சேதுபதியின் 'கம்பன் காக்கும் உலகு' என்ற நூல் கம்பனைப் புதிய வெளிச்சத்தில் காட்டுகிறது. இந்நூலுக்கு அணிந்துரை எழுதியுள்ள இயற்கை விஞ்ஞானி கோ. நம்மாழ்வார் 'துளசி மாடம் இருந்த இடத்தில் பிளாஸ்டிக் செடிகளை நட்டு வைக்கும்' இன்றைய அறிவீனத்தையும். கம்பரின் இயற்கைப் பாதுகாப்புச்சிந்தனையும் ஒப்பிட்டுக் காட்டும்போது. எவ்வாறு கம்பன் காவியம் எதிர்காலத்தில் நமக்கு வழிகாட்டும் ஒளிவிளக்கு என்பது புலனாகிறது.

'மானுடம் வென்றதம்மா' என்று கம்பர் கூவுவது உண்மைதான். ஆனால் கட்டுக் கடங்காத சுயநலத்தால் இயற்கையை வெற்றி கொண்டு சீரழிக்கும் மானுடம் அல்ல அது. மாறாக,தன்னுடைய தீய உணர்வுகளை முதலில் வெற்றி கொண்டு. இயற்கையோடும் மற்ற உயிரினங்களோடும் அன்பு நெறி கொண்டு மகிழ்ந்து குலாவும் மானுட வெற்றியைத்தான் குறிப்பிடுகின்றார்.

கம்பராமாயணம் ஏதோ ஒரு நூற்றாண்டில் பாடப்பட்டிருக்கலாம். ஆனால் இனி வரும் எல்லா நூற்றாண்டுகளிலும் மானிட இனத்திற்கு வழிகாட்டும் துணை!

கம்பன் புகட்டும் அரசியல் பாடம்

பா. கார்த்திகைச்செல்வி

உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, மதுரை சிவகாசி நாடார்கள் பயோனியர் மீனாட்சி பெண்கள் கல்லூரி, பூவந்தி

வான்மீகி இயற்றிய 'இராமசரிதத்தை'த் தமிழில் சிறிதும் சுவைகுன்றாத அளவு கொண்டுவந்து சேர்த்த கம்பர். அவர் தன் இராமாயணத்தில் தமிழ்மொழி மரபுக்கேற்ப பல மாற்றங்களைச் செய்து படைத்துள்ளார். 'முடியாட்சி' முறை இருந்த அக்காலத்தில் சொல்லப்பட்ட இன்றைய குடியாட்சி முறைக்கும் ஒத்துவரக்கூடிய முறைகளை எடுத்துக் காட்டுவதே இவ்வாய்வுக் கட்டுரையின் நோக்கமாகும்.

தயரத மன்னனின் சிறப்புகள்

'மன்னன் எவ்வழியோ மக்களும் அவ்வழியே'. ஒரு நாடு சிறந்து விளங்க அந்நாட்டின் தலைமைப்பொறுப்பிலிருப்பவர் சிறந்த குண முடையவராக இருப்பது அவசியம். கம்பர் பாலகாண்டத்தின் 'அரசியல் படலத்தில்' தயரத மன்னனுடைய மாண்புகளைக் கூறுகிறார். இது அறவழியில் செல்லும் அனைத்து அரசர்களுக்கும் பொருந்துவதாக உள்ளது. இன்றைய தலைவர்களும் இப்பண்புகளைக் கொண்டவர்களாக இருந்தால் நாட்டில் முன்னேற்றம் ஏற்படும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

ஆதிம் மதியும் அருளும் அறனும் அமையும்
ஏதில் மிடல் வீரமும் ஈகையும் எண்இல் யாவும்
நீதிந் நிலையும் இவை நேமியினோர்க்கு நின்ற
பாதி முழுதும் இவற்கே பணி கேட்ப மன்னோ".

மக்கள் அனைவரிடத்தும் அன்பு கொண்டதால் அன்னையை ஒத்தவன். நன்மைகள் தருவதால் தவத்தை ஒத்தவன். முதன்மையாக நின்று நல்வழி காட்டுவதால் புதல்வரை ஒத்தவன். நோய் போன்று தீமை உடையவருக்கு அந்நோயை நீக்கும் மருத்துவன் போன்றவன்.

பகைவர்களை வென்றவன்

பிறஅரசர்களிடமிருந்து தன் மக்களுக்குத் தீங்கு நேராமல் காப்பவனே சிறந்த அரசன் ஆவான். தயரதன் தன்னை எதிர்க்கும் அரசர்களின் வலிமையை வேலால் தாக்கி அழிப்பவன். அவனைப் பணிகின்ற

அரசர்களின் மணிமகுடங்கள் படுவதால் தேய்ந்த பொற்கழலைக் காலில் உடையவன்.

தனித்திருந்து சிந்தித்தல், தயரதன் தன் எண்ணத்தை அமைச்சர்களிடம் தெரிவித்தல்,அமைச்சர்களின் துணை கோருதல், மந்திரிமார்களின் ஒப்புதல் ஆகிய ஒழுகலாறுகளைக் கொண்டிருந்தான். இன்றைய வாக்கெடுப்புப் போலவே, மன்னனின் முடிவுபற்றிய தங்கள் கருத்தை மந்திரிகள் எழுதிக்கொடுக்கும் வழக்கம் அன்றே இருந்துள்ளது.

மந்திரிகளுக்குரிய தகுதிகள்

அரசன் மட்டும் சிறந்தவனாக இருந்தால் போதாது. அவனுக்கு ஆலோசனை வழங்கக்கூடிய மந்திரிகளும் தகுதியானவர்களாய் இருப்பது அவசியம். தயரதனின் அமைச்சரவையில் இருந்த மந்திரிகள் குடிப்பிறப்பு, கலைஞானம், பயன்பெறும்வரை தான் மேற்கொண்ட செயலில் முயற்சி செய்தல், நடுவுநிலை, கோபமின்மை, அறத்தை மேற்கொள்ளுதல் எனும் பல நற்குணங்கள் உடையவராக தயரத மன்னனின் அமைச்சர்கள் இருந்தனர். "நலமுதல் நலியினும் நடுவு நோக்குவார்" எனும் கருத்து இங்கு குறிக்கத்தக்கது ஆகும். இன்றுள்ள தலைவர்கள் தனக்குரிய நலனை மையமிட்டே பிற திட்டங்களைச் செயல்படுத்துகின்றனர். தனக்குக் கேடு நேருமெனின் அச்செயலைப் பற்றிச் சிந்திப்பதேயில்லை. ஆனால் தனக்கு வரும் நன்மைகள் அடியோடு அழிவதாயிருப்பினும் நடுவுநிலைமையையே நோக்குபவர்களாக இருந்தனர் தயரத மன்னனின் அமைச்சர்கள். மானத்தில் கவரிமானை ஒத்தவர்களாகவும். நடந்த விஷயங்களைக் கொண்டு நடக்கவிருக்கும் காரியங்களை யூகித்தறியும் வல்லமை மிக்கவர்களாகவும் இருந்தனர். அரசன் கோபப்பட்ட நேரத்திலும் தன்உயிருக்கு நன்மை நினையாமல், அக்கோபத்தைத் தாங்கிக்கொண்டு நீதியின் வழி செல்பவர்களா-யிருந்தனர்.கட்சித்தலைவர்கள் தன்மேல் கோபப்படாமல் இருப்பதற்காக எத்தகைய செயலையும் செய்யத்தயங்காத இன்றைய அமைச்சர்கள் தெரிந்து, தெளிய வேண்டிய கருத்து இதுவாகும்.ஒரே கட்சியில் இருக்கும் பலதுறை அமைச்சர்களிடம் ஒற்றுமை இல்லாததும் நாட்டின் முன்னேற்றம் தடைப்படுவதற்கு ஒரு காரணம் ஆகும். தயரத மன்னனின் அமைச்சரவையில் மந்திரிகளின் எண்ணிக்கை அறுபதினாயிரமாக இருந்தாலும் மன்னனுக்கு நன்மை தரக்கூடிய

விஷயத்தில் இவர்களின் உணர்வு ஒன்றே என்று நினைக்கும் படியாக ஒத்து முடிவெடுப்பவராய் அமைச்சர்கள் இருந்தனர்.

முடிவுரை

தயரத மன்னன் அரசர்க்குரிய அனைத்துத் தகுதிகளும் பெற்றவனாக உள்ளான். தனக்குத் தீங்கு நேர்ந்தாலும் நடுவுநிலை தவறாதவர்களாகவும், அரசன் கோபப்பட்டாலும் நீதியின் வழி மட்டும் செல்பவர்களாகவும் அமைச்சர்கள் இருந்துள்ளனர்.• முடியாட்சியாக இருந்தாலும் அரசாங்க முடிவுகள் பலரையும் கலந்தாலோசித்தே எடுக்கப்பட்டுள்ளன. இன்றைய அரசியல் முடிவுகளும், செயல்களும் கம்பனின் நல்லரசைப் பின்பற்றி நடந்தால் நாடும், மக்களும் நன்மை பெறுவர் என்பதே இக்கட்டுரை முன்மொழியும் கருத்தாகும்.

தன்னேரிலாத தலைமைப்பண்பு

முனைவர்.**எஸ்.ஆனந்தன்**
ஸம்ஸ்க்ருதத்துறை,அஹோபிலமடம் ஓரியண்டல் உயர்நிலைப்பள்ளி, மதுராந்தகம்

அன்பாலும், அறத்தாலும், கருணையாலும் இராமன் மற்றவர்களி-னின்றும் வேறுபட்டுத் தனித்தன்மை பெற்று உயர்ந்து நிற்பதால் சிறந்த தலைவனாகிறான்.இந்திரனும் அஞ்சத்தக்க உருவம் படைத்தவன் இராமன். காமனும் விரும்பும் அழகுடையவன் அவன். ஆண்களே பெண்மை அவாவும் தோளன் இராமன். இயமனும் அஞ்சத்தக்க வெற்றித்தன்மை உடையவன். இதனைக் கம்பர்,

கதம் எனும் பொருண்மை இலர் கருணையின் கடல் அனையர்
இதம் எனும் பொருள் அலது ஓர் இயல்பு உணர்ந்திலர் இவர்கள்
சதமன் அஞ்சுறு நிலையர் தருமன் அஞ்சுறு சரிதர்
மதனன் அஞ்சுறு வடிவர் மறலி அஞ்சுறு விறலர்

என்றவாறு விளக்குகிறார். தலைமையைக் கற்றுக்கொள்வது பற்றி ஆய்வுசெய்த ஆபிரகாம் சேல்அறிக் என்பார் - அறத்தொடு கூடிய தலைமைப் பண்புகளே சிறந்தது என்ற கூற்றுக்கிணங்க "அறத்தினுக்கு ஆர் உயிர்த் துணைவன்" என்றும், "தருமம் நோக்கிய தோன்றல்" என்றும், "அறத்தின் ஆழி" என்றவாறு பல இடங்களில் காப்பியத்தலைமகனை அறச்சிந்தனையாளனாகக் கம்பன் காட்டுவான்.

மனஎழுச்சியும் முதிர்ச்சியும்

தலைமைத்தன்மை எண்ணும் பொருளை எடுத்துக்கொள்ளும்பொழுது ஹெலன் ஜென்னிங்ஸ் எனும் உளவியல் அறிஞர்,சூழல் கூறுகளைப் பற்றிக் கூறும்பொழுது, "தலைவனின் ஆளுமை (personality) மற்றும் ஆளுமையின் தொடர்பான பிற குணங்களிலும் (related traits to personality) மட்டும் அமைந்துவிடுவதில்லை. அது ஒரு குறிப்பிட்டச் சமூகச்சூழ்நிலையில் ஒருவன் தன் ஆளுமையை எங்கனம் வெளிப்படுத்துகிறான் என்பதிலேயே அமைந்துள்ளது" என்கிறார்.

பஞ்சவடியில் வசிக்கும் இராமனை,சூர்ப்பணகை அழகிய வடிவுடையவளாகத் தோன்றித் தன்னை மணம்செய்து கொள்ளுமாறு வேண்டினாள். அதற்கு இராமன் உனது சகோதரர்களாகிய இராவணன் அல்லது குபேரன் ஆகிய இருவரில் யாரேனும் ஒருவர் உன்னை

எனக்குக் கொடுப்பார்களேயானால் யான் உன்னை மணப்பேன் என நகையாடினான். சூர்ப்பணகையின் பேச்சும் செயலும் எந்தவொரு ஆடவனிடத்திலும் சலனத்தையே ஏற்படுத்தும். இவ்விடத்தில் இராமன் சலனமற்று, உரையாடித்திருத்தப்பார்க்கிறான். பின்னர், அவளைக் கடிந்துரைக்கிறான். காவியத்தலைவனின் தலைமைப்பண்பு இங்கே மிளிர்கிறது. தன்பால் வந்தவர்கள் மனம்புண்படாதவாறு முதற்கண் காரணகாரிய விளக்கங்களோடு பொறுமையாக பேசிய இராமன் தன்நிலையுணர்ந்து செயல்பட்டது மனஎழுச்சியின் முதிர்ச்சி (நுஅழவழைெட ஆயவரசவைல) எனலாம். மேலும்,சூர்ப்பனகையால் அழைத்து வரப்பட்ட கரன் முதலானவர்களைக் கண்டு அஞ்சாமல் அவர்களை வென்றதை எடுத்துக்காட்டிய கம்பன் எந்தவொரு செயலைச் செய்யும்பொழுதும் அதனால் வரும் எவ்விதமான விளைவுகளையும் சந்திக்கத் தயாராக இருப்பவன் மட்டுமே திடமாக, சுயமாக முடிவெடுத்து செயல்படுத்த வல்லவன் என்பதைக் கதாநாயகன் மூலம் நமக்கத் தெளிவுபடுத்துகிறான் கம்பன்.

ஒரு அரசியல் தலைவனுக்கு வேண்டிய பண்புகள் என்பவற்றை பட்டியலிட்டால் அவை அனைத்தும் இராமனிடம் குடியிருப்பதைக் காணலாம். உயர்ந்த எண்ணம், பொதுநலம் பேணுதல், அரவணைப்பு, கருணை, அவாஇல்லாமை, ஒழுக்கம், கட்டுப்பாடு, தியாகம் இன்னபிற ஆயிரம் பண்புகள் இருந்தாலும் 'ஒழுக்கம் என்னும் பண்பே யாவற்றிலும் முதன்மையாகத் திகழ்வது. அவ்வொழுக்கத்தை தலைமேற்கொண்டு வாழ்ந்த இராமபிரானே தன்னேரில்லாத் தலைவன். இத்தகு இராமனைக் காப்பிய நாயகராக அமைத்த கம்பர்,

"**உலகம் யாவையும்** "எனத் தொடங்கும் கடவுள் வாழ்த்துப்பாடலின் வாயிலாக, இந்த உலகின் அனைத்து நிகழ்வுகளுக்கும் யார் காரணமாக இருக்கின்றாரோ? அவரே எம் தலைவர். அவரது சரணங்களை நாம் தொழுவோம் என்கிறார் கம்பர். இந்தப் பாடலின் மூலம் இராமன் என்னும் கருந்தெய்வம் எங்கள் தலைவனாக வந்துள்ளது என்பதை அறிவிக்கும் கம்பன் தன்னைப் பற்றியும் ஒரு குறிப்பினை வைத்து, தான் ஒரு தலைவன் என்பதை நிரூபிக்கிறான். எவ்வாறெனின், எண்ணிறந்த மதங்களும் மதநம்பிக்கைக் கொண்ட மக்களும் வாழும் நாட்டில் சமயப்பொதுமை உள்ள நல்ல தலைவராகக் கடவுளைப் பகுத்துப்பார்க்காத நல்ல சிந்தனையாளராக!

நடந்ததும் நடக்க வேண்டியதும்

முனைவர். **சொ.சேதுபதி**
துணைப்பேராசிரியர், பாரதிதாசன் அரசினர் மகளிர் கல்லூரி, புதுச்சேரி.

"வாழ்க வாழ்க" என்ற பின்னணி முழக்கத்தோடு,

"கம்பன் வாழ்க / கம்பன் புகழ் வாழ்க / கன்னித்தமிழ் வாழ்க" என்னும் முப்பெரும் முழக்கங்களைத் தமிழகத்தில் முன்னெழுப்பிய பெருமைக்குரியது காரைக்குடி கம்பன் கழகம்.

இராமனை முன்னிறுத்தி, தீபம் ஏற்றி வழிபடும் கூட்டம் ஒருபுறமும், தீயிட்டுக்கொளுத்தவேண்டும் என்ற கூட்டம் மறுபுறமுமாக, இருந்த தமிழகத்தில் கம்பனின் விசுவரூப தரிசனத்தை, உலகறிய உணர்த்திக் காட்டி, அவனை ஏற்போரும் மறுப்போரும் இணைந்து கொண்டாடும் வண்ணம் ஆக்கிய வரலாற்றுப்பெருமை இக்கழகத்திற்கு உண்டு. வடபுலத்தின் கதையெனக் கருதிப் புறந்தள்ளிய இக்காவியத்தைத் தென்புலத்தின், ஒட்டுமொத்தத்தமிழினத்தின். எழுச்சிக் காவியம் -மட்டுமல்ல- மானுடகுலத்தின் மகத்தான வெற்றியைப் பாடும் காவியம் என்றும் காட்டிய பெருமை இக்கழகத்திற்கே உண்டு.

கருப்பும் சிவப்பும் காவியும் வெள்ளையும் இன்னபிற வண்ணக் கொடிகளுக்கும் சின்னங்களுக்கும் உட்பட்டிருந்த சகல சமய, சமுதாய அரசியல் மற்றும் ஆட்சியியல் சான்றோர்களையெல்லாம் ஒருங்கழைத்துக் கொண்டுவந்து கம்பன் புகழ் பாடிக் கன்னித்தமிழ் வளர்க்கக் காரணமான கம்பன் கழகம், இன்றைக்குத் தமிழகத்தில் மட்டுமன்றி, உலகஅளவிலும் பல்வேறு கம்பன் கழகங்கள், கம்பன் புகழ் வளர்க்கும் இலக்கியக்கழகங்கள் கிளைக்கக் காரணமாகிய தாய்க்கழகம், காரைக்குடி கம்பன் கழகம்.

இதனை, அண்ணல் காந்தியடிகளின் அருமைச்சீடராய் விளங்கிய தேசத்தொண்டர், சா.கணேசன் அவர்கள், காரைக்குடியில் 1939 ஏப்ரல் 2, 3 ஆகிய நாட்களில் சொ. முருகப்பாவைத் தலைவராகக் கொண்டு, சிறப்புறத் தொடங்கினார். அவ்விழாவின் தலைமையேற்று உரையாற்றிய ரசிகமணி டி.கே.சி. "காரைக்குடியில் கம்பன் பணி தொடங்கிவிட்டது. இனி அது உலகெங்கும் பரவிவிடும்" என்று ஆசி கூறிய வாக்கு அப்படியே பலித்துவிட்டது எனலாம்.

அநேகமாய் ஈன்று புறந்தந்தபின் தலைவாழையின் வாழ்வும், தாய்நண்டின் இருப்பும், ஏன், எல்லா உயிர்கட்கும் தோற்றுவாயெனத் திகழும் அன்னையுயிர்களின் நிலைப்பாடும் மூப்பு, பிணி வந்து முற்றுகையிட்டுக் காவு கொண்டழித்துவிடுவது காலத்தின் செயல்பாடு. ஆனால், காலத்தை வென்ற கம்பனின் காவியத்தைக் கொண்டாடிப் பேணும் காரைக்குடிக் கம்பன் கழகம் மாத்திரம் முன்னிலும் முனைப்போடு மூப்புறா இளமையோடு, தன் பணியை இடைவிடாது செய்து செய்து, இன்று பவளவிழா நிறைவின், படி தாண்டி வளர்கிறது. இதற்குச் சில காரணங்கள் இருக்கின்றன.

1. இது கூட்டத்தைக் கூட்டிக் கொண்டாடி மகிழ்ந்துவிட்டு, வேற்றிடம் தேடி விரைகிற நோக்கில் எழுந்த அமைப்பு அன்று, கம்பன் பெயரில் வளர்ந்து வரும் இயக்கம்.

2. உலகத்தார் காப்பிய நாயகனையே கும்பிட்டு வாழ்ந்த காலத்தில் இக்கழகம், காப்பிய ஆசிரியனையே நாயகனாக்கிக் கொண்டு வளர்கிறது.

3. தன்னைப் பெற்றபின், பெண்ணாயினும் ஆணாயினும் தாயை விட்டுவிலகிவிடுகிற உலகத்தில் அன்னையையும் பிள்ளையையும் அரவணைத்துக் கொண்டாடிக் கொண்டாடி அதன் கன்னிமையினையும், காலத்தின் இருப்பையும் புதுப்பித்துக்கொண்டே இன்னும் இன்னும் இன்றும் வளர்க்கிற தன்மையை இக்கழகம் தன்னுள் வைத்திருக்கிறது.

இதில் இடையீடாக ஒரு விளக்கம்- 'கம்பன் வாழ்க, கம்பன் புகழ் வாழ்க, கன்னித்தமிழ் வாழ்க' என்பன மோனை கருதி எழுந்த முழக்கம் அல்ல.அதன் மேன்மையை உள்வாங்கிக் கொண்டெழுந்த சங்கநாதம்.

கம்பன் வாழ்க- எதற்கு? பிறந்து இருந்து புகழ்மிகு காவியம் எழுதி மறைந்து போன அக்காவிய நாயகன் யார்? பெற்றோர் யார்? பிறந்த இடம், மறைந்த இடம் எது எது என்றெல்லாம் தேடி, ஓடித் தொகுத்துக் கொடுத்துக் காவியம் எழுதிய படைப்பாளியின் புற இருப்பின் மிச்ச சொச்சங்களை அடையாளப்படுத்திக் கொள்ளுதல் ஒன்று - இது வரலாற்றைப் பேணி வரும், வளரும் தலைமுறைக்குக் கொடுத்தல். இது புறம்.

ஆனால், கம்பன் வாழ்வது இத்தகு வரலாற்றுத் தொகுப்பில் அன்று. அவன் எழுதிய காவிய ஏட்டில். காலத்தின் பசி கரையானாகவும், நெருப்பாகவும், நீர்ப்பெருக்காகவும் எழுந்து விழுங்க வர, அவற்றுக்குத் தன் அறியாமைப் பக்தியினால் அக்காவிய ஏட்டின் மிச்ச சொச்சங்களை ஆகுதியாக்கி மகிழ்ந்த தமிழ்மக்களிடம் இருந்தும், இன்னதென அறியாது இருக்கட்டும் என்று வைத்திருந்த அன்பர்களின் வீடுகளில் இருந்தும், ஆலயங்கள், திருமடங்கள் முதலான அனைத்துப் பக்கங்களில் இருந்தும் தேடித்தொகுத்தளித்த திருப்பணிகளால் கம்பனை வாழ்விப்பது.

- சங்க இலக்கியத்திற்குப் பின்னர், திருக்குறளை அடுத்து முழுமையாய் உலகிற்குக் கிடைத்த உன்னத இலக்கியம் கம்பராமாயணம். பழந்தமிழ் இலக்கியங்களைத் தேடி, பழுது பார்த்துப் பயனுறப் பதிப்பித்தருளிய ஏடுதேடு காதலர் உ.வே.சா.போல் கம்பனுக்கென்றே பிறப்பெடுத்து இயங்கிக் கம்பன் அடிப்பொடியாகவே தன்னை ஆக்கிக் கொண்டு தன் வாழ்வும் வளமும் கம்பன் தமிழ் என்றே கடைசிவரை இருந்து இயங்கிய, தமிழகத்தை, தமிழினத்தை இயக்கிய சா.கணேசன் இல்லையேல் கம்பன் இன்று இல்லை. கம்பன் கழகங்கள் இல்லை. பன்னூற்றாண்டு காலம் பாதுகாத்து வைத்திருந்த கம்பன், பக்தியின் பெயராலும் பகுத்தறிவின் பெயராலும் அழிக்கப்படாமல் காக்க எழுந்த அறச்சீற்றத்தின் திருவுரு அவர். அதே வேளை, பக்தி உணர்வோடும் பகுத்தறிவுத் தெளிவோடும், சாதி, சமய, சமுதாய, இன, மொழி, தேச எல்லைகளோடும் அவை கடந்தும் மானிடம் வாழ இக்காவியம் மகத்தான துணையாகும் என்பதை, பாரதி, வ.வே.சு. ஐயர், சுப்பிரமணிய சிவா உள்ளிட்ட இந்திய இலக்கிய அரசியல் ஆவேச இயக்கங்களால் ஆட்கொள்ளப்பெற்றுக் களம் இறங்கிய காரியதரிசி. பின்னர் செயலாளன் என்று கம்பன் மரபில் தன்னைக் கண்டுகொண்ட கம்பகாவலன். தன் காலத்திலும் தனக்குப் பின்னும் கம்பனைக் கன்னித்தமிழ்ப்பாங்கோடு கைதொழுது வணங்க வேண்டும் என்பதற்காகக் காரைக்குடியைத் தமிழ்க்குடியாக மாற்றிக் கன்னித் தமிழுக்குக் கோயில் எழுப்பிய காவலன். தன்னை நாடிவந்து மறைந்த கண்ணகிக்குச் சேரன் செங்குட்டுவன் சிலையெழுப்பிக் கோட்டம் அமைத்துக் கும்பிட்டதுபோல் கம்பன் நிறைவாய் வந்து தஞ்சம் அடைந்த செட்டிநாட்டில், நாட்டரசன் கோட்டையில் பள்ளிப் படைக்கோயிலை உலகுக்கு நினைவூட்டி, அவன் கொண்டாடி மகிழ்ந்த கன்னித்தமிழ்த்தாய்க்குக் காரைக்குடியில் கோட்டம் அமைத்துக்

கோயில் எழுப்பி, நாளும் வழிபடவும் வாழ்வியல் பேணவும் திட்டமிட்டு உழைத்த அவர்தம் திருப்பணிகள் இன்னும் இந்தக் கம்பன் மணிமண்டபம்போல் முற்றுப் பெறாமல் இருப்பதுகூட ஒரு குறியீடுதான்.

சொல்லியும் செய்தும், முடியாக் கனவுகளை எழுதியும் தன் இருப்பைக் காலத்தின் கையில் ஒப்படைத்துக் கொண்டு அவசரமாய் விடைபெற்றுக்கொண்ட அப்பெருமகன், கம்பன் குறித்ததொரு திருக்கனவு வைத்திருந்தார். கம்பன்கற்பகம் என்று பாலர் முதலானார்க்குக் கல்வி நிலையம் எழுப்பிக் கற்றுக் கொடுக்க முனைந்த அவர், கம்பன் பெயரில் ஒரு கல்லூரி உருவாக்கக் கனவு கண்டார். அதில் சொல்லிக் கொடுக்க வைத்திருந்த பாடத்திட்டம் பலப்பல.

"உலகின் தலைசிறந்த தத்துவங்கள் எனப் போற்றப்படுவன கீழை நாட்டுத் தத்துவங்கள், கீழைநாட்டுத் தத்துவங்களை ஆராய்ந்த பிரெஞ்சுப் பேராசிரியர் ஒருவர் அந்தத் தத்துவங்களின் மூலம் அனைத்தும் இந்தியாவைச் சார்ந்தது என்று குறிப்பிட்டு எழுதினார். அதை 'இந்தியத்துவம்' (Indology) என அழைத்தார். பிரெஞ்சுப் பேராசிரியர் குறிப்பிட்டுள்ள 'இந்தியத்துவத்தை' ஆராய்ந்து பார்த்ததில் நூற்றுக்குத் தொண்ணூறு விழுக்காடு தமிழ்த் தத்துவங்களாக இருக்கின்றன. தமிழ்த் தத்துவங்களை வெளிநாட்டினர் உணரத்தவறி, அதை, 'இந்தியத்துவம்' என்றழைக்கின்றனர். ஆகவே, கம்பன் கழகம் தொடங்க இருக்கும் 'கம்பன் கல்லூரி'யில் 'தமிழ்த் தத்துவங்கள்' (Tamillology) என்ற பிரிவு தொடங்கப்பட இருக்கிறது. அக்கல்லூரியில் தமிழ், சமஸ்கிருதமும், ஆங்கிலமும் ஆகிய மொழி இலக்கியங்களும், இந்தியக்கலையும் கட்டடக்கலையும் இந்தியத் தத்துவ முறைகள், புதைபொருளாராய்ச்சி, கல்வெட்டாராய்ச்சி, நாணயங்களைப் பற்றிய ஆராய்ச்சி, சிற்பக்கலை, விக்கிரகங்களைப் பற்றிய அடிப்படையை விவரிக்கும் கலை, பழங்காலச் சின்னங்களைப் பாதுகாக்கும் முறை, பழங்காலக் கணிதமுறை, கோள்நிலைகளை ஆராய்ந்து கையாளும் முறை, சமூக நாகரிக வரலாறு, இசை, நடனம், வண்ணக்கலை, மொழிகளின் வரலாறு, மதங்கள், நிர்வாக முறைகள் ஆகியவைகளும் பாடப் பிரிவுகளாக அமைய இருக்கின்றன" (தீபம், தொ-1, ப.434, நவம்பர் 1971) என்று தீபம் இதழின் நேர்காணலில், கவிஞர் சேவற் கொடியோனிடம் தன் கனவை விரித்தவர் கம்பன் அடிப்பொடி.

அது நடந்து, 43 ஆண்டுகள் ஆகிவிட்டன. அதற்குப் பின்னர், சற்றேறக்குறைய ஒரு மூன்றாண்டுகள் கழித்துத் தன் மனக்கனவை எழுதியவர் பின்னர்ப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் ஆனவர்.

பேரன்புடையீர்,

நலம். பல்லாண்டு தமிழ்ப்பணி ஆற்றிவரும் கம்பன் கழகத்தின் எதிர்கால வளர்ச்சியும் ஆக்கமும் பற்றி நான் நெடுங்காலம் எண்ணியதை உங்கள் மதிப்புடைச் சிந்தனைக்கு எழுதுகின்றேன்.

1. கல்வி ஆராய்ச்சி நிலையம் (kamban Research Institute) ஒன்று ஏற்படுத்த வேண்டும். பொருள்நிலை பற்றித் தயங்காது இவ்வாற ஒன்று தொடங்கிவிடுவது நல்லது.

2. டாக்டர் தெ.பொ.மீ. பேராசிரியர் அ.ச.ஞானசம்பந்தன், பேராசிரியர் அ.சீனிவாசராகவன் என்ற பெருமக்கள் கம்பன் கழகத்தோடு பல்லாண்டு தொடர்புடைய அன்பர்கள். இப்போது ஓய்வு பெற்றிருப்பவர்கள். இந்த ஆராய்ச்சி நிலையத்தில் இவர்களை ஆராய்ச்சி அறிஞர்களாக அமர்த்திக் கொள்ளலாம். தெ.பொ.மீ. இயக்குநர் ஆக இருக்கலாம்.

3. ஆராய்ச்சி நிலையம் ஏற்படுத்தி இயக்குநர் முதலியோரை அமர்த்தி ஆராய்ச்சித் திட்டங்களையும், திட்டத்தின் ஆண்டு களையும் அறிஞர்களின் ஊதியங்களையும் பிற செலவினங்களையும் கணித்து மத்திய அரசுக்கும் பல்கலைக் கழக மானியக் குழுவுக்கும் தமிழக அரசிற்கும் அனுப்பிவைத்து மானியம் கேட்கலாம். ஆராய்ச்சி மாணவர்களைச் சேர்த்துக் கொள்ளவும் நூல் நிலையம் அமைக்கவும் உதவி கேட்கலாம்.

இவ்வகையில் தாங்களும் கம்பன் கழக அன்பர்களும் சிந்திக்க வேண்டும் எனவும் என் கருத்து. இசையுமாயின், விரைவில் ஆராய்ச்சி நிலையம் அமைத்து வழிவகுக்க வேண்டும் எனவும் கேட்டுக் கொள்கிறேன்.

அன்பன்

(ஒப்பம்) வ.சுப.மாணிக்கம்

நாற்பதாண்டுகளுக்கு முன்னர், அதாவது, 16.10.74 அன்று அவர் கண்ட மாணிக்கக்கனவு அப்படியே ஆகாவிடினும், இன்று இப்பொழுது, அதன் நாற்பதாவது வயதில் பவள நனவாகிப் பயன்

தந்ததன் அடையாளம் இவ்வாய்வுத் தொகுப்பும், இருபெரும் உலகத் தமிழ் கம்பன் ஆய்வுக் கருத்தரங்குகளும். இதற்கான வித்தினையும் தன் காலத்திலேயே வளர்த்துவிட்டுப் போனவர் சா.க. அன்று அவர் கம்பன் அடிப்பொடி. இன்று அவர் கம்பன் அடிசூடி.

என்றுமுள தென்றமிழைக் கம்பன் மரபில் இன்றும் இசைத்துக் கொண்டு இடைவிடாது 76 ஆண்டுகள், தொடங்கிய காலத்து மரபுகள் பண்புகள் எதுவும் பழுதாகாமல் பேணி வளர்த்துப் பாதுகாத்தெடுத்துக் கொண்டு வர, வளர இதற்கென்றே தன்னை அர்ப்பணித்துக் கொண்டு இருப்பதால்தான் இருக்கிறது மட்டுமல்ல, இயங்கிக் கொண்டே இருக்கிறது இவ்வியக்கம். பிறந்த இடத்திலேயே இருந்து பயன்தரும் இலக்கிய அமைப்பாக மட்டுமன்றித் தக்க கல்வி நிறுவனங்களின் அழைப்பை ஏற்று, அங்கு சென்று கம்பனைத் தற்காலச் சூழலுக்கேற்ப, ஆய்வுக்கும் வாசிப்புக்கும் இரசனைக்கும் உட்படுத்தும் முயற்சியில் இறங்கியிருக்கிறது இம்மையம். தன்னை எப்போதும் முன்னிறுத்தாமல் கம்பனை மட்டுமே முன்னிறுத்திக் காத்துவரும் பேரியக்கத்தின் மூப்புறா இளமைக்கு இதுவே மூலம்.

1. காலத்தை ஒட்டி எழுந்த காவியம் ஆயினும், அந்தந்தக் காலத்தோடு பொருந்தி, முக்காலப் பரிணாமத்தோடும் தன் இருப்பைத் தமிழர்கட்கு உணர்த்தி நெறிகாட்டும் பாங்கு மற்றெந்தத் தமிழ் இலக்கியத்தைவிடவும் கம்பனுக்குள் இருக்கிறது என்பதால் பட்டி தொட்டியெங்கும் இக்காவியம் பரவவும் பயன்பெறவும் முடிந்திருக்கிறது.

2. தன் காலத்துச் சிக்கல்களை இக்காவியம் பேசினாலும், மனித குலத்திற்கு எக்காலமும் எழுகிற சிக்கல்களை இக்காவியம் எடுத்துரைப்பதால், அதற்கான தீர்வுகளைத் தருக்க முறையில் இலக்கிய, வாழ்வியல் நிலையோடு எடுத்துரைப்பதால், எளிதில் யாரும் இக்காவியத்தின் உள்நுழைந்து உள்வாங்கிக் கொள்ள இயலும் என்பதாலும் தன் சீரிளமை குன்றாமல் கன்னித் தமிழ்போலக் கம்பன் தமிழும் இருக்கிறது என்பதனால், கம்பன் புகழ் ஒவ்வொரு காலத்தின் புகழையும் தன்னுள் நிரப்பித் தனித் தெழும் (விசுவரூபப்) பாங்கு கொண்டிருக்கிறது.

இவ்வாறு கருதிப்பார்க்க எத்தனையோ கூறுகள் இருக்கின்றன என்றாலும் காலத்தின் தேவை கருதி, இக்கழகத்தின் திருப்பணிகளை,

கம்பன் புகழ்பரப்பவேண்டிய கட்டாயத்தினை விரிப்பதற்கான சில கருத்தியல்களை இக்கட்டுரையில் சொல்லி நிறைவுபடுத்தலாம்.

1. பல்துறை வளர்ச்சியில் வாழ்க்கை தனக்குரிய இயல்புகள் அனைத்தும் இழந்து வருகிற வேளையில் தானும் இயற்கையில் ஓர் உயிர் என்று மனிதர்க்கு மனிதத்தை உணர்த்த, மக்கள் இயக்கமாக, மக்கள் நெறிகாட்டும் அமைப்பாக, கம்பன் பணிகள் இருக்கக் கழகங்கள் உறுதி பூணவேண்டும்.

2. இந்தக் கழகத்தின் அடியொற்றி எழுந்து, எத்தனையோ முறைகளில் வழிகளில் தன்னை வளர்த்துக் கொண்ட கிளை இயக்கங்கள் இன்னும் முனைந்து இயங்க, கம்பநயம் கண்டு காட்டுதல். உரைத்தல், விழாக்கள் எடுத்தல். எப்போதும் போல, இருக்கட்டும். இயங்கட்டும்.

3. இனி அடுத்த தலைமுறைதான் இலக்கு. ஒருவனுக்கு ஒருத்தி எனும் கற்பொழுக்கம் இன்னும் கொஞ்சம் கருத்தியல் ரீதியாக இருக்கும் காலத்தில், ஒருத்திக்கு ஒருவன் என்பதை முன்னிறுத்தும், இக்காவிய ஒழுங்கின் பாவியம் பரவ அக் காலத்தில் இயங்கியதுபோல், இன்றைக்கு ஒரு குடும்பத்துக்கு ஒரு வாரிசு என்ற நிலையில் இருக்கும் குடும்பங்களில் பிறக்கும் குழந்தைகளுக்கு உணரவே முடியாது ஒழிந்த சகோதர உணர்வை, பாசத்தை ஊட்டி வளர்க்க, அதுவும் உலகு தழீஇய அளவில் இக்காவியத்தின் தேவை இப்போது மிக அதிகம். கணினியின் உதவியோடு இணையத் தலைப்பட்ட இந்தத் தலைமுறை, ஆப்பிரிக்கத்துக் குகனோடும், இலங்கை மண்டோதரியரோடும், ஆஸ்திரேலியத்து மக்களோடும் சகோதரத்துவம் பேண இது இன்று முக்கியத் தேவை.

4. எல்லாவற்றையும்விட, இப்போது இயற்கைசார் உறவையும் உணர்வையும் பேணி வளர்க்கிற, சூழலிய உணர்வு சங்க இலக்கியத்திற்குப் பின்னால், கம்பனில்தான் அதிகம் காண முடியும், கைக்கொள்ள வேண்டிய நெறிகளைப் பேண முடியும் என்பதால், கம்பன் கல்வி துறைகளில் அடிப்படையில் எல்லாப் பள்ளி, கல்லூரிப் பாடத்திட்டங்களோடும் இருந்தாதல் வேண்டும். இதனை வ.சுப.மா. அவர்கள் காட்டிய வழியில், கம்பன்அடிப்பொடி சுட்டிய மரபில் எடுத்துச் சென்றாதல் வேண்டும். இதற்கென்றே,

கம்பன் இயக்கங்கள் கல்விசார் அமைப்புகளைத் தூண்டிப் பணி செய்யத் துணையாக வேண்டும். திருவள்ளுவர் பெயரால் பாரதி, பாரதிதாசன், மனோன்மணீயனார் பெயர்களால் அமைந்திருக்கும் பல்கலைக்கழக வரிசையில் கம்பன் பெயரிலும் ஒரு பல்கலைக்கழகம் தமிழகத்திற்கு வேண்டும். அது தமிழ்ப்பல்கலைக்கழகத்தோடு தனித்தொடர்பு கொண்டு இயங்க வேண்டும். அதில் கம்பன் கருத்தாளர்கள் இருந்து கருத்துரைக்கச் சிறப்பிடம் வேண்டும். அதற்கென, துறைகள் தோறும் கம்பன் கவிகளைக் கொண்டு தக்க வல்லுநர்களுடன் கூடிப் பாடத்திட்டங்கள் வகுக்க வேண்டும். மதிப்பெண்கள் அடிப்படையில் இன்றி, விழுமிய அடிப்படையில் இக்கல்வி விளங்கவேண்டும்.

கம்பன் பிறந்த தேரழுந்தூரில் மண்டபம் எழுப்பியதோடு நின்றுபோ-யிருக்கிறது கம்பன் பணி. தாய்க்கழகமும் அவ்வூர்ச் சேய்க்கழகமும் இணைந்து நடத்திய விழாக்களும் நின்றுவிட்டிருக்கின்றன. அதனை மேலெடுத்துச் செல்ல, நிரந்தரமான திட்டப்பணிகள் தேவை. அதுபோல் கம்பன் பள்ளிப்படை கொண்ட நாட்டரசன் கோட்டையிலும்.

குறைந்த பட்சம் கம்பன் கழகம் நிலைகொண்டுள்ள காரைக்குடியில் இயங்கும் பல்கலைக்கழகத்தில் முதலில் ஒரு கம்பன் துறை அல்லது கம்பன் இருக்கையேனும் உடனடியாக உருவாக்கப்படவேண்டும். இன்று கம்பன்அடிப்பொடியார் இல்லை. அவ்வழி நிற்கும் கம்பன்அடிசூடி போன்றோர் இருத்தப்பெறல் வேண்டும். அல்லது புதுவைப் பல்கலைக் கழகத்துக் கம்பன் இருக்கையை அலங்கரித்த அறிஞர் தெ.ஞா. போன்றோர்கள் ஆலோசனைகளுடன் அது செயல்பட வேண்டும்

விருதுகள், பரிசுகள், பாராட்டுகள் இவற்றுக்கு அப்பால், வாழ்வியல் நிலையில் கம்பநெறி நின்றோர் பணிகளைப் பாராட்டி மக்கள் மத்தியில் கொண்டுசென்றால்தான் உண்மையான புரிதல் கம்பனைப் பற்றியும், இயக்கங்கள் பற்றியும் அந்நெறி நின்றோர் பற்றியும் உலகறியும். இனி, கம்பனை முன்னிறுத்தி நடத்தும் விழாக்களில் கம்பன் பணி யாற்றிக் களத்தில் நிலைத்த கல்வியாளர்களின் வரலாறுகள் சொல்லப் படவேண்டும்.

உலக சகோதரத்துவத்தை ஒற்றுமையை உணர்த்தும் கம்பனின் காப்பிய நோக்கை முன்னெடுத்துச் செல்லும் அனைத்துக் கம்பன் கழகங்களும்

தன் இருப்பை, இயக்கத்தைத் தாய்க்கழகத்தோடு முன்னிலும் பரிவுடன் - இப்போது புதுப்பித்துக் கொண்டு, கொண்டும் கொடுத்தும் இயங்கும் வழிகளை இனி மேற்கொள்ள வேண்டும். திட்டமிட்டு ஆண்டுதோறும் முன்தேதி சொல்லித் தொடங்கும் தாய்க்கழகத்தின் விழாக்களில் எல்லாக் கம்பன் கழகப் பிரதிநிதிகளும் கூடி, இந்த ஆண்டில் தத்தமக்கு இன்னின்ன பணிகள் என்று வகைப்படுத்திக் கொண்டு இணைந்து இயங்கினால் இன்னொரு தலைமுறையை எழுப்பி உயர்த்திக் கொள்ள இது வழிவகை செய்யும்.

இதற்காக, உலகஅளவில் கம்பநேயர்களை இன்னொரு முறை இணைத்து உலகத் தமிழ்க் கருத்தரங்கை எடுப்பித்திருக்கிறது. இனி உலக அளவில் கம்பன் மாநாடு ஒன்று உருவாகி, உலக இலக்கியங்களோடு கம்பனை ஆய்ந்து கடைப்பிடிக்கத் தக்க ஒழுங்குமுறைகளைக் காலத்திற்கேற்பக் கண்டு வடித்தெடுத்து வழங்கவேண்டியது இக்காலத் தேவை.

சொல்லில் இருந்து செயலுக்கும் செயலில் இருந்து வாழ்வுக்கும் கம்பனைக் காலந்தோறும் துறைதோறும் எடுத்துச் செல்லும் பெரு நோக்கோடு எழுந்த கம்பன் தமிழாய்வு மையத்தின் இரண்டாவது உலகக் கருத்தரங்கு இவ்வகையில் பயனுறக் கம்பனையும் கன்னித்தமிழையும் துணைக்கொள்வது காலத்தின் தேவை.

தனிமைக்குத் துணையாகும் கம்பனின் இராமாயணம்

சொ. அருணன்

உதவிப்பேராசிரியர். சித்தர் சிவஞானி கலை அறிவியல் கல்லூரி. பொம்மையபாளையம்

காப்பியத்தின் நாயகன் என்பதால் மட்டும் இராமன் புகழை ஏத்தாது. அவதாரப் பெருமை தொனிக்கவும் மிகாது. தன்தலைவனை 'காசுஇல் கொற்றத்தவனாக. மானுடம் வெல்ல வந்த நடையில் நின்றுயர் நாயகனின் தோற்றத்தைக் கம்பன் காட்டியவிதமே காப்பியத்தின் வெற்றிக்குக் காரணமாக அமைந்தது எனலாம்.

சோகத்தின் சுவை காட்டும் காப்பியம்

இராமனின் நடை எங்கு உயர்ந்திருந்தது? பாலகாண்டத்தில் துள்ளித் திரிந்தபோதிலா? விசுவாமித்திரரின் தேர்வுக்குள்ளாகி வில்லெடுத்துச் சென்று அரக்கர்களை அழிக்கப் புறப்பட்டபோதிலா? அங்கே தன் கால் பட்டு அகலிகையை உயிர்த்தெழுந்த போதிலா? காதலாள் சீதையின் கரம்பற்றப் புறப்பட்ட போதிலா? இளவரசுப் பட்டம் பெற்று அயோத்தி வீதிகளில் பவனிவந்த போதிலா? முன்னிரவில் பட்டம் என்றும் மறுநாளில் கானகம் என்றும் விதி உந்தித் தள்ள வெறுமையோடு அயோத்தி நகர்விட்டு நீங்கிய போதிலா? இல்லை இன்னும் பின்னால் சீதையை மீட்டு அயோத்திக்கு மீண்ட போதிலா? கம்பனின் இராமன் காப்பியத்தின் எப்போதில் தன்நடை உயர்ந்து நின்றான்?

இன்பம் வந்துற்றபோது எல்லாரும் மகிழ்வர். வீரம் செறிந்த பொழுதுகளில் யாவரும் களிப்பர். ஆனால். துன்பம் என்றொன்று வரும்போது அவரவர் தத்தம் நினைவுகளிலேயே மூழ்குவர். துக்க நிகழ்வில் புலம்புபவர்கள் தம் துக்கம் எண்ணியே புலம்புவதை இன்றும். என்றும் வாழ்வியல் முறைமையாகக் காண முடிகிறது.

கம்பனின் காப்பியத்தைப் படிப்பவர்கள் திருப்புமுனைக்கு உள்ளாவது இராமனின் சோகம் கேட்டுத்தான். அவன் காடுசென்றபோது கூடப் பொறுத்துக்கொள்வார்கள்; ஆனால். சீதையைப் பிரிந்தபோது தாமே தன் தாயைப் பிரிந்த நிலைக்கு ஆளாகும் தன்மைபோல இராமன் சீதையைப் பிரிந்து புலம்பிய கொடுமையைத் தன் காப்பியத்துக்குள் துன்பியல் நிகழ்வாகப் பதிவுசெய்திருக்கிறார். இராமனின் நடை அங்கு தான் உயர்ந்து நிற்கின்றது.

மகத்துவம் நிறைந்த மானுடக் காதல்

காப்பியத்தலைவி, தலைவனின் உயிர், பெண்ணின் பெருந்தக்காள் பிரிவு காப்பியத்தின் போக்கையே மாற்றிப் புரட்டுகிறது. குறிக்கோளிலாத வாழ்வில் பெருங்குறிக்கோள் வந்து இராமனை மலைக்கச் செய்கிறது. யாரொடும் பகை கொள்ளலம் என்று வாழ்ந்திருந்தவனுக்கு இப்போது உலகமே பகையாகத் தோன்றுகிறது.

ஓடி வந்தனன் சாலையில், சோலையின் உதவும்
தோடு இவர்ந்த பூஞ்சுரி குழலாள்தனைக் காணான்
கூடு தன்னுடையது பிரிந்து ஆர்உயிர் குறியா,
நேடி வந்துஅது கண்டிலது ஆம்என நின்றான் (3473)

உடலைத் தேடிவந்த உயிர் அதைக் காணாது நின்ற தன்மையாய் இராமனின் நடை முற்றுப்புள்ளிக்குப் பக்கத்தில் நின்றது. இனியென்ன ஆவான் இராமன்? யார் பொறுப்பு?

கண்ணதாசன் இந்த இடத்தின் அழகை எண்ணித்தான் பின்னாளில் 'கடவுள் மனிதனாகப் பிறக்க வேண்டும். அவன் காதலித்து வேதனையில் வாடவேண்டும். பிரிவென்னும் கடலினிலே மூழ்க வேண்டும். அவன் பெண்ணென்றால் என்னவென்று உணர வேண்டும்' என்று பாடியிருக்க வேண்டும். மானுடக் காதலுக்கு இணையானது வேறொன்றுமில்லை. மானுடத்தில் சிறந்தது யாதொன்றுமில்லை என்னும் கருத்தினை நிலை நிறுத்தவே கம்பன் தன் காப்பியத்தலைவனான இராமனை காப்பியம் முழுவதும் மானுடனாகவே காட்டியிருக்கிறான். அந்த மானுடன் துன்பத்தில் ஒளிர்கிறபோதினிலே காப்பியம் மிளிர்கிறது.

மண் சுழன்றது மால்வரை சுழன்றது மதியோர்
எண் சுழன்றது சுழன்றஅவ் எறிகடல் ஏழும்
விண் சுழன்றது வேதமும் சுழன்றது விரிஞ்சன்
கண் சுழன்றது சுழன்றது கதிரொடு மதியும்.

இப்புவியில் எல்லாம் சுழல, தான் மட்டும் சுழலாமல் தன்நடை குன்றாது மானுடன் ஒருவன் எவ்வாறு நிற்பது? யாரைச் சீறுவது?

என்தாரம் பற்றுண்ண ஏன்றாயை சான்றோயை
கொன்றானும் நின்றான் கொலையுண்டு நீகிடந்தாய்
வன்தாள் சிலைஏந்தி, வாளிக்கடல் சுமந்து,

நின்றேனும் நின்றேன்நெடு மரம்போல் நின்றேனே!

மானுடன் ஒருவன் தனித்திருந்து புலம்பும் புலம்பலின் ஓசை ஒவ்வொரு வாசகனுக்குள்ளும் புகுந்து தன்நெஞ்சத்துத் துன்பத்தையெல்லாம் ஒருங்குகூட்டிக் கிளப்புகிறது.

'ஒருவில், ஒருசொல், ஒருஇல்' என வாழ்ந்த மானுட உருவில் வந்த தெய்வம் இராமனுக்கு இப்போது அவையாவும் கசந்து போனது அழகான காட்சிப் புலப்பாடு.

வில்லை நோக்கி நகும் மிக வீங்கு தோட்
கல்லை நோக்கி நகும் கடைக்கால் வரும்
சொல்லை நோக்கித் துணுக்கெனும் - தொல்மறை
எல்லை நோக்கினர்

அவர்தம் எல்லைக்குத் தொலைந்துபோன இல்லாள்தானே குறியாகத் தெரிகிறாள் இப்போது. அவளை நோக்கி எப்படி நகுதல் தகும்?

நெஞ்சில் நிறைந்த காதலாள்தனை பாற்கடலை விட்டுக் கொடுங் கானகத்தில் தொலைத்து மானுட உருக்கொண்டு மாயையுள் சிக்கி மாயும் இராமனின் துயரம் கம்பனுக்கு எப்படித்தான் பாடுதற்கு வசப்பட்டதோ? கம்பனுக்குச் சங்க இலக்கியங்கள்தான் கரம் தந்திருக்க வேண்டும். தலைவியைப் பிரிந்த தலைவனின் உளப்பாங்கு ஒத்து வந்திருக்கலாம். ஆனால், தன் காப்பியத்துக்குத் துறையே வேறாயிற்றே... தலைவியைத் தொலைத்த தலைவனின் உளப்பாங்கன்றோ இராமாயணம். சீதையின் நினைவால் எழும் இராமனின் புலம்பல் வருத்தத்திற்குரியது எனினும், காப்பியத்திற்கு வலுச்சேர்க்கிறது. கம்பனின் வளமைக்குச் சான்றாகிறது.

பஞ்சு பூத்த விரல், பதுமம் பவளம் பூத்த அடியாள், என்
நெஞ்சு பூத்த தாமரையின் நிலையம் பூத்தாள், நிறம் பூத்த
மஞ்சு பூத்த மழைய அனைய குழலாள் கண்போல் மணிக் குவளாய்!
நஞ்சு பூத்ததாம் அன்ன நகையால் என்னை நலிவாயோ

என நெஞ்சு வெறுத்துப் புலம்பும் புலம்பல் இராமனின் துயரம் என்றாலும் கம்பனின் கவிவண்மை, காப்பியத்தின் உரம் இன்னும் மெருகேறுகிறது.

தருமத்தின் தனிமை தீர்ப்பான்

துன்பநேரத்தில் துணைக்கொருவர் இருந்துவிட்டால், கொஞ்சம்

மூச்சு விடலாம். யாரை உள்ளிழுப்பது? காற்றை, நல்ல காற்றை, உயிர்க் காற்றை உள்ளிழுத்து அடையும் சுகமாக இராமனின் மனத்துயரைப் போக்க வந்த நல்மூச்சாக வாயுமைந்தன் அனுமன் வந்து சேர்கிறான். பேருருக் கொண்டு நிற்கிறான். எப்படி?

மின்உருக் கொண்ட வில்லோர் வியப்புற, வேத நல் நூல்
பின் உருக்கொண்டது என்னும் பெருமை ஆம் பொருளும் தாழ,
பொன் உருக் கொண்ட மேரு, புயத்திற்கும் உவமை போதாத்
தன் உருக்கொண்டு நின்றான், தருமத்தின் தனிமை தீர்ப்பான்.

தருமம் இப்போது தனியாக நிற்கிறது. அதன் தனிமை தீர்க்கவென்றே பேருருக்காட்டி நிற்கிறான் அனுமன்.

அனுமனின் மூலமாகச் சுக்கிரீவன் கதைதெரிந்து தன்துயர் போன்ற அவன் துயர் நீக்கத் தலைப்படுகிறான் இராமன். கம்பனன்றோ நடத்து கின்றான். '**வில்லிடை வாளியின் வீட்டி, தலைமையோடு, நின் தாரமும் உனக்கு இன்று தருவென்**' என்று அவனுக்கு வாக்களிக்கிற போதிலே இராமன் தன் துயரை மெல்ல வெளியிடுகின்றான். மட்டுமின்றி, '**பொருந்துதன் மனைக்கு உரிய பூவையைப் பிரிந்துளாய்கொலோ நீயும் பின்**' என்று அவனிடம் கேட்கும்கேள்வி மானுடத்தின் கேள்வியாக இராமனிடமிருந்து வெளிப்படுவதைக் காணலாம்.

துன்பம் மேலும் துன்பமானால் இன்பத்திற்கு அங்கு என்ன வேலை? கம்பனின் காப்பியத்தில் மட்டும் அது இன்பமாகும்போலும்...! பிரிந்து வாடும் கொடிய நேரத்தில் இன்னும் இன்னும் வந்து துன்பம் பற்றுகிறது. சீதையின் அணிகலன்கள் அவளாகவே வந்து தோன்றத் துடிக்கிறான் மானுடக் காதலில் புதைந்த இராகவன்.

தெரிவுற நோக்கினன் தெரிவை மெய்அணி
எரிகனல் எய்திய மெழுகின் யாக்கைபோல்
உருகினன் என்கிலம் உயிருக்கு ஊற்றம்ஆய்ப்
பருகினன் என்கிலம் பகர்வது என்கொல்யாம்?

உயிர்க்கு ஊற்றமாய் அமைவது பிரிவின் நினைவுதானே? இருந்தும் துயரம் காணுமிடமெல்லாம் கண்ட பொருள்களில் எல்லாம் மறைந்து நின்று தன்னை அவனுக்கு வெளிப்படுத்த, தன்நடை மாறித் தடுமாறு கின்றான் இராமன்.

ஆயிற்று... வாலியை வீழ்த்தி, சுக்கிரீவனை அரியணையில் அமர்த்தி எல்லாம் ஆயிற்று. ஆனால், அடிமனத்து உற்ற துயரம் ஆறுமோ?

சுக்கிரீவன் தன்னொடு உறையக் கிட்கிந்தைக்கு அழைத்தபோது மறுத்துவிடுகிற காரணம் புரிகிறது. அவன் தனித்திருக்க விரும்புவதாக நினைத்தாலும், உடனிருப்பது சீதையின் நினைவன்றோ?

இராவணனுக்கு நஞ்சாகவும் இராமனுக்கு அமுதாகவும் விளங்கிய தேவியின் பிரிவு கதைப்படி நிகழ்ந்தாலும் இராமனின் ஆவியில் நின்று ஆளுகிறவளாகச் சீதை திகழ்கிறாள். தனிமைத்துயரின் பெருவெடிப்பாக, இராவண வதத்திற்குப் பின் சீரோடும் வந்த தன் தேவியைப் பார்த்து இராமன் வெடிப்பதுகூட தனிமைத்துயரில் உறைந்த கண்ணீரின் பேரழுத்தத்தால்தான்.

இன்றைக்குப் பல நெருக்கடிகள். பணிகள். இருப்பினும் வாழ்வில் நேர்கிற சோதனை போக்க, நாளும் படிக்கவேண்டியது சுந்தரகாண்டம் என்று இந்தியர்கள், தமிழர்கள் கருதுதற்கு என்ன காரணம்? முழுக்கப் படிக்க வேண்டிய இராமாயணத்தைச் சுருக்கிப் படிப்பதைவிடவும் அதில் உருக்கம் கொடுக்கிற சுந்தர காண்டத்தை ஏன் படிக்கவேண்டும்?

உயிருக்கு உற்ற துணை- கம்பராமாயணம்

எத்தனை துயர் வந்தாலும் எதிர் கொள்கிற ஆற்றலை அது பெற்றிருப்பதால்தான். மானிடனாகி வந்தால் இறைவனே ஆனாலும் இன்னல் எய்தத்தான் வேண்டும் என்று உணர்ந்து கொள்வதற்கும் நாம் படும்பாடு நமக்கான பாடன்று அறத்தைக் காப்பதற்கான அரும்பாடு என்று தெளிந்து கொள்வதற்கும் இந்தச் சோகக்கவிதைகள் துணை செய்யும். இன்றைக்கும் இனிவரும் காலத்திற்கும் கம்பனைப் படிப்பதற்குக் காரணம் இன்றைய நவீன வாழ்வியல்.

இன்று உலக அளவில், பொருளீட்ட உற்ற துணையையும் குடும்பத்தையும் பிரிந்து வாடுகிறார்கள் தலைவனும் தலைவியும். வாழும் நிலம் குறிஞ்சியோ முல்லையோ, நெய்தலோ ஆயினும் உரிப்பொருள் ஒன்றுதான். அது பாலை. இந்த நிலையில், தன்னறம் பிறழாமல் மனையறம் காத்துப் பொது அறம் பேணத் தனியுயிர்க்கு உற்ற துணை, கம்பன்தான். கம்பன் காட்டும் அயனம்தான். சரி. பாலைநிலத்தின் வெம்மையை எதிர்கொள்ள, விசுவாமித்திரன் இராம, இலக்குவருக்கு மந்திரம் சொல்லியபோல், கம்பன் இந்தத் தலைமுறைக்குக் காட்டிய மந்திரக் காப்பியம் கம்பராமாயணம். தன்னொழுக்கம் குறையாமல் உலக ஒழுக்கம் சிதையாமல், தன்னையும் சூழலையும் பேணிக்காத்துப் பெருவாழ்வு வாழக் கம்பனையன்றிக் கைத்துணை வேறுயார்?

கம்பனிலிருந்து...

முனைவர். **இரா.குறிஞ்சிவேந்தன்**
துணைப்பேராசிரியர், பாரதிதாசன் அரசினர் மகளிர் கல்லூரி, புதுச்சேரி.

கம்ப காவியத்தின் பாடுபொருளும், உள்ளமைக்கப்பட்டுள்ள வாழ்வியலும் கம்பரின் காலம் தொடங்கி இன்று வரை நமக்குத் தோன்றாத் துணையாகி நிற்கின்றன. அத்துடன் எதிர்காலச் சமூகத்திற்கும் சேர்த்துப் பல செய்திகளைத் தாங்கிக் கம்பர் தொடர்ந்து பயணிப்பதைச் சுட்டுவதே இக்கட்டுரையின் முக்கிய நோக்கமாகும்.

குடியாட்சித் தத்துவத்தின் தந்தை

இன்றைய இந்திய ஜனநாயகத்தின் மாபெரும் தூண்களாக எழுந்து நிற்பவை, அதன் குடியாட்சித் தத்துவங்கள். மனித வாழ்வின் மாண்புகளை மதிக்கும், அதே வேளையில் உயர்ந்த விழுமியங்களில் எடுத்துச்செல்லும் பண்புகள், உலகநாடுகளை இன்றும் கவர்ந்தீர்ப் பனவாக உள்ளன. அத்தத்துவங்களின் முன்னோடியாகக் கம்பர் எழுந்து நிற்கிறார். கம்பரின் உயிர்ச்சசங்கிலியில் மனிதர்களுக்கு மட்டு மின்றி பறப்பன, நடப்பன, ஊர்வன என எல்லா உயிரினங்களும் சேர்த்துக் கட்டப்பட்டுள்ளன. உயிர்கள் ஈடேறும் முறைமையை ஒவ்வொரு கட்டத்திலும் ஏதாவதொரு பாத்திரப்படைப்பின் வாயிலாக உணர்த்துவதே கம்பரின் போக்காக உள்ளது.

உயர்ந்தநெறிகளைப் பின்பற்றும் பாத்திரங்கள் மட்டுமல்லாமல், தீவினையின் வடிவாக விளங்கும் பாத்திரப்படைப்புகளும் கூட ஏதாவதொரு செய்தியின்மூலம் வாழ்க்கையைச் செதுக்கிச் செல்லும் பாங்கினைக் கம்பர் மிகத் தீவிரமாக வெளிப்படுத்துகின்றார். அவ்வாறு வெளிப்படும் கருத்துக்கள் இன்றைய நவீனக் குடியாட்சித் தத்துவங்களின் அடியுரமாகக் கரைந்து நிற்பதைத் தரிசிக்கும்போது, கம்பரின் கொடைத்திறம் புலனாகின்றது. அவ்வாறான கருத்துக்களைத் தலைமைப்பதவியில் இருப்போர் பின்பற்ற வேண்டிய அறங்கள் என்றும், தனிமனித வாழ்வில் பின்பற்ற வேண்டிய நெறிகள் என்றும் இருவகையாகப் பிரித்துக் காணலாம். இக்கூறுகள் வெளிப்படும் இடங்கள் பல. அவற்றில் நான்கினை இக்கட்டுரையில் காணலாம்.

கழுகரசனின் காவநீதி

இராவணனோடுப் போரிட்டுச் சீதையை எடுத்துச் செல்லாமல் தடுக்க முனைந்த போரில் வீழ்ந்த சடாயு, இராம - இலக்குவனோடு உரை நிகழ்த்தும் காட்சிகள் மிகவும் பொருள் மிக்கவை. அயோத்தியின் மைந்தனைச் சடாயு நெறிப்படுத்தும் இடங்கள் என்ற நிலையைத் தாண்டி, இப்பூவுலக நாடுகளின் தலைமைப்பீடத்தில் வீற்றிருக்கின்ற ஒவ்வொரு தலைவனும் சிந்திக்க வேண்டிய சிறப்புக்குரியன.

தன் மனைவியைக் கவர்ந்து சென்றது இராவணனே என்பதை அறிந்து இராமன் கொதிக்கின்றான். கோபத்தாலும், வெகுளியாலும் சொற்கள் அவனுடைய அம்புகளைக் காட்டிலும் வெம்மையாக வந்து விழுகின்றன. இக்கோபத்தைக் கண்டு உள்ளம் மகிழவில்லை, சடாயு. மாறாக, தன் குற்றம் எதுவென்று இராமனைச் சிந்திக்கத் தூண்டுகின்றான். அத்துடன் இராவணன் என்னும் பெருந்தீமையை எதிர்க்க வேண்டிய பொறுப்பில் உள்ளவர்கள் வாய்மூடி மௌனித்து இருக்கும் காட்சியைச் சடாயு காட்டுகின்றான்.

தாள் செய்ய கமலத்தானே முதலினர், தலை பத்து உள்ளாற்கு
ஆட்செய்கின் றார்க என்றி, அறம் செய்கின்றார்கள் யாரே?

(ஆரணியகாண்டம்:3625)

தாமரை மலரின் மீது வீற்றிருக்கும் பிரம்மனால் படைக்கப்பட்டவன், இராவணன். அப்பிரம்மனே, இராவணனின் குற்றத்தைப் பொறுத்துக் கொண்டும் கண்டும் காணாமல் வாழ்கின்றான். அத்துடன் பிரம்மன் முதலாகிய தேவர்களும் இராவணனுக்கு அஞ்சி அடிமைகளாகப் பணி செய்கின்றார்களே அன்றித் தம் கடமைகளை உணர்ந்து அறம் செய்வதற்கு யார் உள்ளனர்? என்று சடாயு கேட்கின்றான். அதாவது சடாயுவின் குரலில் நின்று கம்பன் ஒரு (சோழப்) பேரரசை எதிர்த்துப் பேசுமிடம் இது. இன்றும் நம் பெருமைமிக்கக் குடியாட்சி அமைப்பில் கொடுமைகளைக்கண்டுப் பொங்காமல், அதனோடு ஒத்துச்செல்லும் மனிதர்களைப் பார்த்துச் சடாயு கேட்பதாகவும் பொருள் கொள்ளமுடியும். அநீதியைத் தட்டிக்கேட்கும் இடத்தில் உள்ளவர்களின் மௌனம் ஜனநாயகத்தின் வேர்களை அரித்துத் தின்று விடக்கூடிய வல்லமை கொண்டது. கொடுமைகளைச் சகித்து வாழும் தலைமைமாந்தர்களைக் கடுமையான சொற்களால் கம்பர் சுடுகின்றார். பகைவரிடத்தில் வீரமிழந்து ஏவல்பணி செய்து

வாழும் வீரமிழந்த தலைமைப்பொறுப்பாளர்கள் என்னும் பொருள்பட "தெண்டிரையுலகந் தன்னிற் செறுநர் மாட்டேவல் செய்து" (3626) என்று கொதிக்கின்றார்.

இன்றைய நவீன இந்தியாவின் பின்னடைவுக்குக் காரணமான மாபெரும் செய்தியைச் சடாயுவின் வாயிலாகக் கம்பர் பேசியுள்ளார். ஒரு தேசத்தின் ஆன்மாவை நோக்கி எழுப்பும் குரலாகவும் இதைக் கொள்ளலாம். தேசத்தின் தலைமைப்பொறுப்புக்கு வரும் எவரும் கைக்கொள்ள வேண்டிய முக்கிய அரசநீதி இதுவன்றோ? பறவை பேசும் இந்நீதி பாராளும் வேந்தர்க்கும், மக்களின் மனம் அளக்கும் சான்றோர்க்கும் பொருந்தும் அறம் அல்லவா?

விலங்கு சொன்ன அறம்

இராமகாதையில் கிட்கிந்தாகாண்டத்தில் விலங்கினத்தரசனான வாலி இராமனிடம் பேசும் காட்சிகள் வலிமையான செய்திகளைப் பொதிந்து வெளிப்பட்டுள்ளன. தலைமைப்பொறுப்பில் வீற்றிருக்கும் ஒருவனுக்குத் தீமை நேரும்போது கைக்கொள்ள வேண்டிய அடிப்படை அற ஒழுங்கினை வாலி என்னும் குரங்கு வழியாகக் கம்பர் உணர்த்து கின்றார். எதிரியின் அடையாளம் அறிந்து அவனை வீழ்த்தும் நெறியே சிறந்தது. அதை விடுத்து எதிரியினை அழிக்க அறிமுகமே இல்லா தவனை வீழ்த்தும் அறம் தாழ்ந்தது என்றும், அது வீரமன்று என்றும் வாலி உணர்த்துகின்றான்.

அரக்கர் ஓர் அழிவு செய்து கழிவரேல் அதற்கு வேறு ஓர்
குரக்கு இனத்து அரசைக் கொல்ல மனுநெறி கூறிற்று உண்டோ?
இரக்கம் எங்கு உகுத்தாய்? என்பால் எப்பிழை கண்டாய் அப்பா!
பரக்கழி இது நீ பூண்டால் புகழை யார் பரிக்கற் பாலார்? (4125)

என்னும் பாடல் இக்கருத்தை ஆழமாகப் பேசுகின்றது. பதற்றத்தில் நீதி வழங்க முற்பட்ட பாண்டியன் நெடுஞ்செழியன் முதல் இராமன் வரையிலான எடுத்துக்காட்டுகளைக் கண்முன் கொண்டு வந்து நிறுத்தும் பாடலாக இதைக் கூறலாம். அத்துடன் எதிரி எவரென்ற இலக்கின்றி ஈராக் நாட்டின் மீது போர் தொடுத்த அமெரிக்கநாடு இன்றும் அங்கே தடுமாறி வரும் காட்சியையும் நினைவூட்டுகின்றது.

அத்துடன் அரசநீதி என்பது நன்மை-தீமை இரண்டின் இயல் பினையும் சீர்தூக்கிப் பார்த்து, யாவரும் ஏற்றுக் கொள்ளக்கூடிய தீர்ப்பினை வழங்குவதென்றும், அத்துடன் பிழை செய்தவனைப்

பொறுத்து அன்பினால் அவரைத் திருத்துவதும் கூட அரசநீதியே என்னும் கருத்தினையும் வாலி முன் வைக்கின்றான்.(கிட்.4131) பெரும் பிழைகளைச் செய்த குற்றவாளிகளுக்கும் மன்னிப்பினை நல்கச் செய்ய வேண்டிடும் அண்மைக்கால மனித உரிமைக்குரல்களின் முதற்குரலாகவே கம்பர் இதைப் பதிவு செய்துள்ளார். மெய்யான எதிரியை அடையாளம் காணுதல், நடுவுநிலைமை போற்றுதல், எக்குற்றத்தையும் அன்பினால் தண்டித்தல் என்னும் உயரிய நீதிகளை இன்றையத் தலைமை மாந்தர்களுக்கும், நாளைய பொறுப்பாளர்களுக்கும் சேர்த்துச் சிந்தித்த கம்பரை வியக்காமல் இருக்க முடியுமா?

அரக்கனின் தெளிவு

கம்பர் படைத்துள்ள கும்பகர்ணன் வெறும் பாத்திரம் மட்டுமன்று. அவன் மனசாட்சியின் பிரதிபிம்பம் என்றால் மிகையன்று. நன்றிப் பெருக்கு மிக்க பாத்திரமாகவும், உறக்கத்திற்கு ஓர் எடுத்துக் காட்டாகவும் மட்டுமே ஊடகச்சித்திரிப்புகள் கும்பனின் உயரத்தை அளந்து காட்டுகின்றன. ஆனால் அதற்கும் அப்பால், தெளிவும் வாழ்க்கையின் போக்கியல் குறித்த ஞானமும் நிறைந்த பாத்திரமாகவும் கும்பகர்ணனைக் கம்பர் படைத்துள்ளார். இது வீடணனோடுப் போர்க் களத்தில் அவன் உரையாடும் காட்சிகளில் புலப்படுகின்றது.

போகப்பூமியாகத் திகழும் இலங்கை மாநகரில் அரசக்குடும்பத்தில் தோன்றி சுகங்களில் திளைத்தவன், கும்பகர்ணன். அவனுக்கு வறுமையும், பசியும் இன்னதென்று தெரியாது. ஆனால் இன்ப வாழ்க்கையின் நிலையாமை குறித்த தெளிவான சிந்தனையை அவன் கொண்டிருந்தான்.

நீர்க்கோல வாழ்வை நச்சி நெடிதுநாள் வளர்த்துப் பின்னைப்
போர்க்கோலம் செய்துவிட்டாற்கு உயிர்கொடாதுஅங்குப் போகேன் (7553)

பாடல் இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டு. செல்வச்செழிப்பில் ஊறித் திளைத்த கும்பகர்ணனுக்கு இந்த வாழ்க்கை 'நீர்க்கோலம்' போன்ற தென்ற தெளிவு மிக உறுதியாக இருப்பதைக் கம்பர் வருணித்துள்ளார். நாட்டின் அரியணையிலும், பதவியிலும் அமர்ந்திருக்கும் எந்தத் தலைவரும் உணர்ந்து கொள்ள வேண்டிய அடிப்படைத் தருமம் இது வென்பதில் ஐயம் இருக்கவியலுமா? அரக்கனுக்கு தெரிந்த இந்த அரசியல் தர்மநீதி, ஆறறிவு,பகுத்தறிவு எல்லாவற்றுக்கும் மேலாகத் தொழில்நுட்ப அறிவும் படைத்த இன்றைய மனிதர்களுக்கு விளங்கா

விடில் அது விதியின் வண்ணமே.

அரியாசனம் என்பது எவ்வளவு பெரியசுமை என்பதையும் கும்ப கருணன் வீடணனுக்கு உணர்த்துகின்றான். இலங்கையின் அரசைத் தருவதாகக் கூறும் இராமனின் ஈகையையும் புறந்தள்ளி விடும் அரசியல் பக்குவம் கும்பனிடத்தில் மிகத் தெளிவாகப் படிந்திருந்தது. தனிமனித வாழ்க்கைக்கும் கும்பகருணன் உயர்ந்த கொள்கை ஒன்றை வடித்துக் கொடுக்கின்றான். எல்லாச் செயல்களும் வகுத்து வைத்துள்ளபடியே நடக்கும் என்பதை மிக அற்புதமாக வெளிப்படுத்துகின்றான்.

ஆகுவது ஆகும் காலத்து; அழிவதும் அழிந்து சிந்திப்
போதுவது; அயலே நின்று போற்றினும் போதல் திண்ணம் (7564)

என்னும் இப்பாடல் இப்பூமியில் தோன்றும் மனிதர் அனைவரும் அறிய வேண்டிய பாலப்பாடம். பக்கத்திலே நின்று காப்பாற்றினாலும் கூட அழிவது அழிந்தே தீரும் என்று கும்பன் வாயிலாகக் கம்பர் கூறுகின்றார். மனிதமனத்தைப் பக்குவப்படுத்தும் ஆழமான சிந்தனையும் கொள்கையுமாக இப்பாடல் எழுந்து நிற்கிறது என்பது தானே உண்மை!

நிறைவாக....

கம்பர்; காலத்தின் குரல்! இதை இராமகாதையின் ஒவ்வொரு பகுதியும் மெய்ப்பிக்கின்றது. கம்பகாவியத்தில் கடந்த காலத்தின் வேர்களைத் தேடும் அதே வேளையில் எதிர்காலத்தின் பிரதிபலிப்பையும் தரிசிக்க வியலும். கம்பர் வகுத்துக்காட்டிய தடத்தில் எல்லாக்காலத்திலும் மானுடம் கடந்து கொண்டேயிருக்கின்றது.